# அத்திமலைத் தேவன்

பாகம் 5



– காலச்சக்கரம் நரசிம்மா

வானதி பதிப்பகம்

# அத்திமலைத்தேவன்

## (பாகம் - ஐந்து)

'காலச்சக்கரம்' நரசிம்மா

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை—17.

முதற்பதிப்பு : டிசம்பர், 2019
© உரிமை : ஆசிரியருக்கு

வானதி வெளியீடு

விலை : ரூ. 600/-

- Title : ATHIMALAIDEVAN (PART-5)
- Author : 'Kalachakkaram' NARASIMMA
- Language : Tamil
- Subject : Historical Novel
- Edition : First Edition, December, 2019
- Pages 704
- Published By VANATHI PATHIPPAKAM
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai - 600 017.
  Ph: 2434 2810 / 2431 0769
  e-mail : vanathipathippakam@gmail.com
- Price : ₹ 600.00

Laser Typeset by: **SS Graphics,** Cell : 9843534436

Printed at: NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 28446166, 28446891

# பொருளடக்கம்


1. உனக்கு மட்டும் ரகசியம் சொல்வேன் 21
2. காயகல்பம் 38
3. ஆலய வாயிலில் ஒரு அமானுஷ்யன் 53
4. பாணபத்திரம் 69
5. பட்டத்து ராணி பார்க்கும் பார்வை.. 83
6. பழையாறை நிலவறை 103
7. முறை மாப்பிள்ளை.. குறை மாப்பிள்ளை 122
8. மருளுகின்றான் மருளகங்கன் 138
9. செல்வத்துள் எல்லாம் தலை 158
10. இரத்தினமும், மாணிக்கமும் 176
11. சிந்தனை செய், சிந்தூரா! 185
12. தென்திசை நோக்கிச் செல்லாதே 213
13. சொல்லக் கூடாதது, பெண்ணிடம் இரகசியம் 228
14. முருக்கத்திப் பாதை 240
15. மலையைச் சுமக்கும் மலையமான்! 252
16. பல்லவ பொம்மலாட்டம் •285
17. பிணவறையில் மணமாலைகள் 296
18. பாசமலர் பூத்தது 309
19. பொன்னாழி 315
20. ஒரு சதுரங்க மேடை 320
21. இந்த ராத்திரிக்கு சாட்சி இல்லை! 342
22. உன் குடுமி என்னிடம்! என் குடுமி உன்னிடம்! 355
23. பீடத்தில் ஒரு செய்தி 376
24. வலையில் சிக்கிய விரிஞ்சி 394
25. மீண்டும் அத்தி பூத்தது! 409
26. சுந்தர கண்டம் 420

**இ. ஆதித்த கரிகாலன் கொலையில் ஜீரணிக்க முடியாத தகவல்கள்** 427

27. யுகம் கடந்து விரட்டிய வினை 435

28. ஜெயம்கொண்ட சோழபுரம் 443

**ஈ. இராமானுஜ காஞ்சி 468**

29. தானே தோன்றிய சிலை 470
30. நலம் தரும் நாகமணி 486
31. மணசீர் பாகு 490
32. உறவை துறந்து.. துறவை உணர்ந்து 500
33. கங்கைகொண்ட சோழபுரம் 505
34. ஆத்ம பரிசோதனை 511
35. காற்றினிலே ஒரு குரல் 520
36. தங்க இரதம் வந்தது.. 528
37. புதிய பெட்டகம், பழைய பொக்கிஷம் 543
38. கோதண்டம், திரிதண்டம் 555
39. கரும தேசம் 564
40. வேர்விட்டவன், வார்த்தெடுக்கப்பட்டவன் 585
41. இனி வளர்பிறை, தேய்பிறை அல்ல! 595
42. பாய்கிறான் அனபாயன் 598
43. ததிபாண்டனின் தயிர் பானை 609
44. தாண்டவமாடும் சோழ கிருமி 632
45. தள்ளாடி திணறும் காஞ்சி 636

**உ. கோல்கொண்டா காஞ்சி 643**

46. உக்ரோதயம் பறிபோனது 645
47. அத்திக்கில் அத்தி, இத்திக்கில் இத்தாலி! 649
48. சத்திரத்தை கைப்பற்றிய சத்ரபதி 653

**ஊ. மொகலாயக் காஞ்சி 655**

49. வார்த்தெடுக்கப்பட்டவன் புறப்பட்டான் 657
50. அத்தனைத் தேடும் ஆத்தான் 662
51. புகலிடம் தேடும் பரமன் 668
52. வீரராம மலை 672
53. பொலிக.. பொலிக 679

**எ. (மன)நிறைவுப் பகுதி 685**

**ஏ. அத்தியோலைகள் 693**

**ஐ. சென்று வா அத்திமலைத்தேவா! 702**

# முன்னுரை

இதோ.. அத்திமலைத்தேவனின் இறுதி பாகத்திற்கு வந்துவிட்டோம். கடந்த 2018 ஜூன் மாதம், அத்திமலைத்தேவன் என்கிற சரித்திரப் புதினத்தைத் துவங்கினேன். முதல் பாகம் அக்டோபர் 2018 மத்தியில் வெளிவந்தது. சரியாக 2019 இறுதியில் ஐந்தாம் பாகத்துடன் புதினத்தை நிறைவு செய்கிறேன். இன்னமும் எழுதிக்கொண்டே போகலாம்.. நான் சேகரித்துள்ள தகவல்களைக் கொண்டு பன்னிரண்டு பாகங்கள் வரை எழுதலாம். ஆனால், 'ஐந்தோடு நிறுத்திக்கொள்' என்று அத்திமலைத்தேவனே உத்தரவு போட்டுவிட்டதால், இதையே இறுதி பாகமாகக் கொள்ளுகிறேன்.

கடந்த ஒரு வருடத்தில் நான் எங்கு சென்றாலும் அத்திமலைத்தேவனைப் பற்றி மட்டுமேதான் பேச்சு! பத்திரிகை விமர்சனங்கள், கலந்தாய்வுகள், twitter, முகநூல் கருத்துகள் என்று அத்திமலைத்தேவனைப் பாராட்டிக் கருத்துகள் வந்த வண்ணம் இருந்தன.

முதியவர்கள், மூதாட்டிகள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள், மாணவிகள் என்று அனைத்து தரப்பினரும் என்னுடன் தொடர்பு கொண்டு அத்திமலைத்தேவனைப் பற்றிப் பாராட்டினார்கள். ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் பதினைந்து அலைபேசி அழைப்புகளாவது வரும்.

பிரம்மாண்டமான படைப்பு அத்திமலைத்தேவன் என்று அனைவருமே ஏகோபித்த குரலில் என்னிடம் தெரிவித்தார்கள். உண்மைதான்! ஐந்து பாகங்களை நானா எழுதினேன் என்று எனக்கே மலைப்பாகத்தான் உள்ளது.

காஞ்சி எவ்வளவோ பெருமைகளைத் தன்னுள் கொண்டிருக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டிருந்தது போல ஒவ்வொரு கல்லும் சரித்திரம் பேசுகிறது.

சரித்திரம் படிப்பதையே நிறுத்திவிட்ட அடுத்த தலை முறையினர், தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த சோழர் களையும், பாண்டியர்களையும், பல்லவர்களையும் இழிவாகப் பேசி வருவது வருத்தத்திற்குரியது.

எனவேதான்-

வருங்காலத் தலைமுறையினர், சரித்திரத்தை புதினங்களின் வாயிலாகவாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் எனது எழுத்துப் பணியைத் துவக்கினேன். வானதி பதிப்பகம் டாக்டர் இராமநாதன் அவர்கள் தனது பதிப்பகத்தை சரித்திர இரதமாகவே மாற்றிவிட்டார். அந்த இரதத்தின் சாரதியாக அவரது நண்பர் திரு. சுந்தர் கிருஷ்ணன் அவர்கள் திகழ்கிறார். பல புதிய சரித்திர எழுத்தாளர்களை இவர்கள் இருவரும் அறிமுகம் செய்துவருகிறார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.

ஆங்கில இலக்கியம் பின்பாக ஓடிக்கொண்டிருந்த என்னை தமிழின்பால் திசை திருப்பிவிட்ட எனது தாய் கமலா சடகோபன் அவர்களை இந்தத் தருணத்தில் நினைக்கிறேன். சங்கதாரா, பஞ்சநாராயணக் கோட்டம் ஆகிய புதினங்களைப் படித்த உடனேயே, 'நீ சரித்திர எழுத்தாளன்' ஆகிவிட்டாய் என்று முதன்முதலாக என்னைச் சரித்திர எழுத்தாளராக அங்கீகாரம் தந்தது அவர்தான்.

அடுத்தபடியாக, வானதி திருநாவுக்கரசு அவர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். எனது முதல் நாவல் காலச்சக்கரத்தை அவரிடம் பிரசுரத்திற்காக கொடுத்த போது, எனது கைகள் நடுங்கின. பரமாச்சாரியார், வாரியார், ராஜாஜி, கல்கி, சாண்டில்யன், கண்ணதாசன் என்று ஜாம்பவான்களின் நூல்களை வெளியிடும் வானதி பதிப்பகத்தில் நுழைந்து எனது நாவலைத் தருகின்றோம் என்கிற அச்சம் என்னுள் படர்ந்தது.

மறுநாள் எனது தாய்க்கு போன் செய்தார், பெரியவர்.

"உங்கள் மகனின் முதல் நாவல் அமர்க்களம். நான் வெளியிடப் போகிறேன்!" என்று அம்மாவிடம் சொன்ன போது, வியப்பின் உச்சத்தில் நின்றேன்.

புத்தக வெளியீட்டு விழாவும் கோலாகலமாகக் கவிஞர் வாலியின் கையினால் நடந்தது. அன்று, வாலி அவர்களும், பெரியவர் வானதி திருநாவுக்கரசு அவர்களும் "ஒரு நல்ல எழுத்தாளரை அறிமுகம் செய்வதில் மகிழ்கிறோம்" என்று மேடையில் அறிவித்தனர்.

இந்தப் பெருமை ஒன்று போதாதா எனக்கு?

அதன் பிறகு, ரங்கராட்டினம், சங்கதாரா, குபேரவனக் காவல், பஞ்சநாராயணக் கோட்டம், கர்ணபரம்பரை, அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா என்று பல படைப்புகளை அளித்திருந்தாலும், அத்திமலைத்தேவன் புதினத்திற்காக ஆய்வுகளை மேற்கொண்ட போதும், பிறகு புதினமாக எழுதிய போதும் எனக்குக் கிடைத்த அனுபவங்கள் என்னை மெய்சிலிர்க்க வைத்தன.

தஞ்சையைச் சேர்ந்த விவசாயி குழந்தைவேலு என்பவர், என்னுடன் அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

"சரித்திரம் என்றாலே சோழம் அல்லது பாண்டியம் என்று பல எழுத்தாளர்கள் இன்னமும் எழுதி வருகின்றனர். நீங்கள்தான் முதன்முதலாகப் பல்லவத்தின் ஆழத்திற்குச் சென்று வந்திருக்கிறீர்கள்" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்.

உண்மை! பல்லவர்களின் வாழ்க்கை சோகமயமானது. சோழர்களைப் போன்று தங்களைப் பல்லவர்கள் முன்னிறுத்திக் கொள்ளவில்லை. தனிப்பட்ட வாழ்வில் பல துயரங்களைச் சந்தித்தவர்கள். துர்மரணங்கள், நம்பிக்கைத் துரோகங்களைச் சந்தித்தவர்கள். மொத்தத்தில் they were the unsung heroes of Tamil Nadu's history.

அத்திமலைத் தேவன் புதினத்தின் பெரும்பகுதி அவர்களது சரித்திரத்தையே சுற்றி வந்தது. இருப்பினும், சதவாகனர்களில்

துவங்கி, நந்த, மௌரிய, குப்த, ஆதி சோழர்கள், யவனர்கள், ஸ்வேத ஹூணர்கள், கல்யாணி சாளுக்கியர்கள், கங்கர்கள், சைந்தவர்கள், குந்தளர்கள், காம்போஜர்கள், வாதாபி சாளுக்கியர்கள், வைதும்பரர்கள், பாண்டியர்கள், சேரர்கள், விஜயநகர ஆட்சியாளர்கள், கோல்கொண்டா நவாபுகள், முகலாயர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சு, ஆற்காடு நவாபுகள் என்று அத்தனை ஆட்சியாளர்களையும் அத்திமலைத்தேவனில் அலசிவிட்டேன்.

பெரும்பாலான கதாபாத்திரங்கள் சரித்திரத்திலிருந்து அப்படியே எடுக்கப்பட்டவைதான். தலைக்கனம் பிடித்த துர்தரா, கவர்ச்சியைக் காட்டி மயக்கிய ஆம்ரபாலி, அடங்க மறுத்த அவந்திகா போன்ற பாத்திரங்கள் எல்லாமே உண்மையான பாத்திரங்கள்தான். துர்தரா கொலை செய்யப்பட்டது, சாணக்கியன் natural incubator மூலம் பிந்துசாரனை காப்பாற்றியது எல்லாம் உண்மை நிகழ்வுகளே.

நான்கு பாகங்களில் பல தகவல்களைத் திரட்டி அளித்திருந்தேன். ஆலயத்தைவிட்டு நீங்கிய அத்திமலைத்தேவன் கடலில் நழுவிச் சென்று, பிறகு மீண்டும் ஒரு இடத்தில் மறைக்கப்பட்டு, கடைசியில் எப்படித் தனது ஆலயத்திற்குத் திரும்பி வருகிறான் என்பதை இந்தக் கடைசி பாகத்தில் விவரித்து உள்ளேன்.

நான்கு பாகங்களிலும் பலரும், சாணக்கியன், துர்தரா, கரிகாலன், அவனிசிம்மன், மகேந்திரன், அவந்திகா, நரசிம்ம பல்லவன் என்று பல கதாபாத்திரங்களைச் சிலாகித்து இருந்தாலும், ஒட்டுமொத்த வாசகரின் அபிமானத்தைப் பெற்ற ஆண் கதாபாத்திரமாகப் பல்லவ இளவரசன் ஜெயவர்மன் என்கிற போதிதர்மாவையும், பல்லவ தளபதியான உதயச் சந்திரனையும், பெண் கதாபாத்திரமாக, புதிர்களை விடுவிக்கும் மதியூகியான ராஜஸ்ரீயையும்தான் குறிப்பிடுகிறார்கள். என்னையும் மிகவும் பாதித்தது ஜெயவர்மனின் தியாகம்தான்.

புதினத்தை நிறைவு செய்கிறேன் என்று ஒருபுறம் வேதனை இருந்தாலும், ஒரு வருடமாக நீண்ட பல்லவ பயணத்தை மேற்கொண்டேன் என்பது மனநிறைவைத் தருகின்றது.

ஒரு வருடமாக நிகழ் காலத்தில் இல்லாத என்னை பொறுத்துக் கொண்ட எனது குடும்பத்தினருக்கு முதலில் என் நன்றி. யாராவது எதையாவது என்னிடம் கூறினால், கண்கள் அவர்களை நோக்குமே தவிர கருத்து பல்லவ காலத்தில் இருக்கும். வானதி பதிப்பகத்தின் உரிமையாளர் டாக்டர் இராமநாதன் எனது புத்தகங்களை வெளியிட தனி கவனத்தைச் செலுத்தி வருகிறார். அவருக்கும் எனது விசேட நன்றி. திரு. சுந்தர் கிருஷ்ணன், திரு. சரவணன் ஆகியோர்களுக்கும் எனது நன்றி. எனது நாவல்களின் முகப்பு அட்டைப்படம் வரைந்த ஓவியர் ஷ்யாம், ஓவியர் வேதா, ஓவியர் ரேட் டாட் பவன் மெய்ப்புத் திருத்தம் பார்த்த டாக்டர் என். ஸ்ரீதரன், நாஞ்சில் பெ.மணி, மாரிமுத்து, அழகுற கணினி அச்சு செய்த எஸ்.எஸ்.கிராபிக்ஸ் செந்தில்குமார், வானதி பதிப்பக ஊழியர்கள் ஆகியோருக்கு எனது நன்றி.

எல்லாவற்றிற்கும் மேலாக, அத்திமலைத்தேவனுக்குப் பெரும் ஆதரவினை நல்கிய வாசகர்களுக்கும், நலம்விரும்பி களுக்கும், நண்பர்களுக்கும் மிக்க நன்றி.

அன்புடன்

**'காலச்சக்கரம்' நரசிம்மா.**

98417 61552

tanthehindu@gmail. com

## அ. நான்காம் பாகத்தில்

கடல்மல்லையின் ஆழிப்பேரலையில் தேவ உடும்பர அத்தி சிலை காணாமல் போக, அதனை அவனி சிம்மனுக்கும் சாளுக்கிய நாட்டியத் தாரகை வித்யுதாவுக்கும் பிறந்த குணபரன் என்கிற மகாமல்ல எதி கைப்பற்றி பிரவாள மாளிகையின் புகை போக்கியினுள் பதுக்கி வைக்கிறான். இலங்கையின் மன்னனாகப் பதவி ஏற்க இருந்த மானவர்மன், மல்லை கடற்கரையில் வந்து இறங்க, சாளுக்கியர்கள் சிலர் திருமால் சிலை ஒன்றுடன் வடக்கே செல்வதைக் காண்கிறான். நரசிம்ம பல்லவன் அத்தியூரானின் சிலையைத் தேட, மல்ல எதியை கைது செய்யும் எண்ணத்துடன் பிரவாள மாளிகைக்கு வர, அவனுக்கும் மல்ல எதிக்கும் கடும் சண்டை ஏற்பட, ஒரு கட்டத்தில், நரசிம்ம பல்லவனின் மார்பின் மீது ஏறி அமர்ந்து அவனைத் தனது குத்து வாளினால் கொல்வதற்கு முற்படுகிறான், மல்ல எதி. அங்கே பதுங்கியிருக்கும் மானவர்மன் தனது வாளினால் மல்ல எதியை வெட்டி வீழ்த்துகிறான்.

“அவன் அத்திமலையானின் சிலையைப் பதுக்கி இருக்கிறான். அந்தச் சிலை இருக்கும் இடத்தை அறிவதற்குள் அவனைக் கொன்றுவிட்டாயே. இப்போது சிலை எங்கே இருக்கிறது என்பதை எப்படி அறிவது?” என்று நரசிம்மவர்மன் குழம்புகிறான். தனது உயிரைக் காப்பாற்றிய மானவர்மனை இலங்கையின் மன்னனாக அமர்த்துகிறான்.

நரசிம்மவர்மனின் காலம் முடிய அவனது மூத்த மகன் இரண்டாம் மகேந்திரன் அரியணையில் அமர்கிறான்.

சற்றே மனப்பக்குவம் இல்லாத அவன், விலைமதிப்பில்லா உக்ரோதயத்தை அணிந்து ஸ்வர்ணமுகி காட்டிற்குச் செல்ல, அங்கே கங்க நாட்டு இளவரசியின் சதியால் உக்ரோதயத்தையும், உயிரையும் இழக்கிறான், மகேந்திரன். அவனது தம்பி பரமேஸ்வரன் ஆட்சிக்கு வருகிறான். தனது வீரத்தால் சாளுக்கியர்களை முறியடிக்க அவனது மகன் ராஜசிம்மன் கங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்று உக்ரோதயத்தைக் கேட்கிறான். கங்க நாட்டு மன்னன் மறுக்க, அவனது மகள் ரங்கபதாகையைச் சிறை பிடித்து வருகிறான் ராஜசிம்மன். பிறகு அவளையே மணந்து கொள்கிறான்.

ராஜசிம்மன் ஆட் சிக்கு வர, கைலாசநாதர் கோயிலைக் கட்டுகிறான். அ.னது ஆட்சியில் பெரும் பஞ்சம் ஏற்பட்டு பாலாறு முதன் முறையாக வற்றுகிறது. அதன் பிறகு பல்லவர்களின் ஆட்சி நசித்துப் போக, இரண்டாம் பரமேஸ்வரன் அரியணையில் ஏறுகிறான். சாளுக்கியர் களுடன் நிகழ்ந்த போரில் அவன் உயிரையும் இழக்க, பல்லவம் மன்னன் இல்லாத நாடாகத் திகழ்கிறது.

இரண்டாம் பரமேஸ்வரனுக்கு மகன் இல்லாத காரணத்தால், பல்லவர் குழாம் ஒன்று மன்னனைத் தேடி காம்போஜம் போகிறது. காம்போஜ மன்னன் இரண்யவர்மனின் நான்கு புதல்வர்களில் கடைசி மகன் பன்னிரண்டு வயது பல்லவ மல்லனை மன்னனாகத் தேர்ந்தெடுத்து அவனை நாகப்பட்டினக் கடற்கரைக்கு அழைத்து வருகிறார்கள். பாண்டியர்களால் பல்லவ மல்லனுக்கு ஆபத்து ஏற்பட, அவனை நந்திபுரத்தில் ஒளித்து வைக்கின்றனர் பல்லவர். அதையறிந்த சித்ரமாயன் என்கிற சாளுக்கிய பிரதிநிதியும், பாண்டியன் மாறவர்மனும், சேரன் வில்லாளன் கோதையும் சேர்ந்து நந்திபுரத்தை முற்றுகையிட, சலவைத் தொழிலாளி வேடத்தில் வரும் ஆலிநாடான் என்கிற திருமங்கை மன்னன் பல்லவ மல்லனைக் காப்பாற்றி உதயசந்திரன் என்கிற பல்லவ தளபதியிடம் ஒப்படைக்கிறார். பல்லவ

மல்லன் இரண்டாம் நந்திவர்மனாகப் பதவி ஏற்கிறான். முதலில் உதயசந்திரனின் நட்பைப் பெரிதாக மதிக்கும் நந்திவர்மன், பிறகு அவனது புகழிலும், வீரத்திலும் பொறாமை கொண்டு அவனை ஒதுக்குகிறான். உக்ரோதயத்தைக் கைப்பற்ற கங்க நாட்டின் மீது படையெடுக்க, அனுபவம் இல்லாததால், கங்க நாட்டிடம் தோல்வி அடையும் நிலை. கங்க நாட்டு மன்னன் நந்திவர்மனை விரட்டியபடி வர, உதயசந்திரன் அங்கே தோன்றி, கங்க நாட்டு மன்னனை வீழ்த்தி, உக்ரோதயத்தையும் மீட்டு நந்திவர்மனிடம் அளிக்கிறான். நந்திவர்மனைச் சுற்றி இருக்கும் காம்போஜர்கள், உதயசந்திரன் மன்னனாக முயல்கிறான் என்று கூறி அவனை நாடு கடத்தும்படி கூற, நந்திவர்மன், உதய சந்திரனை நாடு கடத்துகிறான். உதயசந்திரனும் அவனது மனைவி பீயுஷாவும் திருவெள்ளறையில் வசிக்கிறார்கள்.

கம்பவர்மன் என்கிற சோழ அமைச்சரின் ஆதரவுடன் அங்கே இருக்க, அப்போது ஸ்வஸ்திகா கிணறு ஒன்றை தனது மகன் இதயசந்திரனின் பிறந்த நாளில் அமைக்கிறான். கிணற்றினுள் தற்செயலாகத் திருமங்கை மன்னனின் சீடர் சாயாவக்ரரைச் சந்திக்க, அவரை பல்லவ நாட்டைக் காக்கும்படி வேண்டுகிறான் உதயசந்திரன்.

நந்திவர்மன் இறந்து அவன் மகன் தந்திவர்மன் அரியணையில் அமர்ந்திருக்க, அவரது ராஜகுருவாக நியமிக்கப்படுகிறார், சாயாவக்ரர். தந்திவர்மன், பஞ்ச பொய்கை க்ஷேத்திரம் என்கிற திருவல்லிக்கேணியில் பாடினி ஒருத்தியைச் சந்தித்து அவள் மீது மையல் கொள்கிறான். பிறகு தாய் ரேவா தேவியின் வலியுறுத்தலால், கடம்ப நாட்டு இளவரசி அக்கள நிம்மடியையும் மணந்து கொள்கிறான். அக்கள நிம்மடி தனது சக்களத்தி கோகிலவாணியையும் அவளது நான்கு மகன்களையும் வெறுக்க, அவர்கள் அரண்மனையை விட்டு வெளியேற்றப்படுகிறார்கள். பிரவாள

மாளிகையில் அவர்கள் தங்கியிருக்க, அந்த மாளிகைக்குத் தீ வைக்கப்பட, தனது மகன்களைத் தப்ப வைத்துவிட்டு, கோகிலவாணி தீக்கு இரையாகிறாள்.

தனது தாயின் கொலைக்குப் பழிவாங்கத் துடிக்கும் நான்கு மகன்களும் இலக்கியம், போர்க் கலை, ராஜதந்திரக் கலை மற்றும் மந்திரக் கலை ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று சதிசெய்து மூன்றாம் நந்திவர்மனைக் கொல்வதற்குத் திட்டமிட்டு, நந்திக்கலம்பகம் பாடி அவனைத் தீயிட்டுக் கொளுத்துகின்றனர்.

இறப்பதற்கு முன்பாக மூன்றாம் நந்திவர்மன் தனது பல்லவ ராஜ்யத்தை வட பல்லவம், தென் பல்லவம் என்று இரண்டாகப் பிரித்து தனது மகன்கள் கம்பவர்மன் மற்றும் நிருபதுங்கவர்மன் ஆகியோரிடையே பிரித்துத் தருகிறான்.

கம்பவர்மனின் மகன் அபராஜித பல்லவன் உறையூர் சோழன் மற்றும் உதயசந்திரன் வழி வந்த ஆதித்த சோழனிடம் நட்பு பூண்டு, அவன் உதவியோடு தனது அண்ணன், நிருபதுங்கவர்மனையும் அவன் மகள் கோதாவரியையும் விரட்டிவிட்டு, தென் பல்லவத்தையும் கைப்பற்றுகிறான். திருப்புறம்பியம் போரில் பாண்டியனை வெற்றி பெறும் அபராஜிதன் ஆதித்த சோழனுக்கு சோழப் பகுதிகளைப் பரிசாக அளித்துத் தஞ்சை சோழனாக அரியணையில் அமர்த்துகிறான். அபராஜிதன் தங்கை திரிபுவனமாதேவிக்கும், ஆதித்த சோழனுக்கும், இடையே விருப்பு-வெறுப்பு யுத்தம் நடைபெற, ஒரு கட்டத்தில் உக்ரோதயத்தைப் பார்த்து புத்தி பேதலித்து அபராஜிதனை கொன்றுவிட்டுப் பல்லவத்தைக் கைப்பற்றி, திரிபுவனியை கடத்திச் செல்கிறான், ஆதித்த சோழன். கடைசிப் பல்லவனான அபராஜிதன் மரணத்துடன் பல்லவ ஆட்சி முடிகிறது.

அபராஜிதன் கொல்லப்பட்டதும், அவன் மனைவி தனது மகளுடன் தப்பிச் சென்று கங்க நாட்டில் பதுங்கிக்

கொள்கிறாள். காலம் ஓடுகிறது. சோழர்கள் பலம் பெற, பராந்தகன், அரிஞ்சயன் காலம் முடிந்து சுந்தரன் ஆட்சிக்கு வருகிறான். தனது மகன் ஆதித்த கரிகாலனை வடபுல சேனைத் தலைவனாக நியமிக்க, அவன் காஞ்சியில் வசிக்க வருகிறான்.

ஒத்தாடை அரண்மனை மிகவும் வசதி குறைவாக அவனுக்குத் தோன்ற, பொன்னாழி என்கிற ஸ்வர்ண மாளிகை ஒன்றைக் கட்ட எண்ணி பிரவாள மாளிகையை இடித்துக் கட்ட நினைக்கிறான். புகை போக்கியின் உள்ளே பதுக்கப்பட்டிருந்த தேவ உடும்பர அத்திவரதரின் சிலை அவனுக்குக் கிடைக்கிறது.

இனி-

# ஆ. ஆதித்த கரிகாலனைப் பற்றிய ஒரு சிறு திருத்தம்

சரித்திர புதினம் எழுதுவது மிகவும் சிரமம். ஒரு மூன்று கதாபாத்திரங்களை உருவாக்கி அவர்களிடையே காதல் பிரச்னையை மையமாக வைத்து சரித்திரப் புதினங் களைக் கற்பனையில் எழுதிவிடலாம். இதற்கு ஆய்வுகளோ, குறிப்புகளோ தேவையில்லை. ஆனால் அத்திமலைத்தேவன் போன்ற தொடர் புதினத்தை எழுதும் போதுதான் பிரச்னை உருவாகிறது. அத்திமலைத் தேவன் என்கிற வரதனின் பிரதிமை கதையின் நாயகன். மகாபாரதக் காலத்திற்கு முன்பே உருவாகிய சிலை. மகாபாரதப் போர் முடிந்து காஞ்சி என்கிற அத்தியூருக்கு அஸ்வத்தாமா வந்ததிலிருந்து இந்தப் புதினம் தொடங்கியது. அதன்பின் தொடர் சரித்திரமாக எல்லா வம்சங்களையும் பற்றி எழுதி வருகிறேன். சரித்திரக் கல்வெட்டுகள், கோவிலொழுகு குறிப்புகள், செப்பேடுகள், தொல்லியல் கையேடுகள் என்று மிகவும் எச்சரிக்கை யுடன் ஆய்வு செய்துதான் எழுதி வருகிறேன். எனது ஒரு பாகம் கூறியதை மறுபாகம் மறுக்கக் கூடாது, எனது ஒரு புதினம் கூறியதை மற்றொரு புதினம் மறுக்கக் கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வுடன்தான் நீண்ட ஆய்வுகளைச் செய்தேன். ஆதித்த கரிகாலனைப் பற்றி மீண்டும் ஆய்வுகளில் இறங்கினேன்.

ஆதித்த கரிகாலனைப் பற்றித் தொடர்ந்து ஆய்வுகளைச் செய்த எனக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்து போனது. சரித்திரம் என்னும் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்து விட்ட குழந்தை அவன். அவனைப் பற்றிய உண்மைகளை

நாம் வெளியே எடுக்க முயலும் போதெல்லாம், அவன் இன்னும் ஆழத்துக்கு நழுவிவிடுகிறான். சங்கதாராவில் இயன்ற அளவுக்கு, அவனைப் பற்றிய மர்மங்களை விடுவிக்க முயன்றேன். ஆனால், இப்போது அத்திமலைத் தேவனில் அவனைப் பற்றி எழுதும் போது இதைத்தான் குறிப்பிடத் தோன்றுகிறது.

வடபுல சேனையின் மாதண்டநாயகன் என்கிற பதவியை ஏற்று ஆதித்த கரிகாலன் காஞ்சியில் வந்து தங்கியதே, தஞ்சையில் தனது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பதால்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

ஆதித்த கரிகாலன் கி.பி.940-ல் பிறந்திருக்கிறான். வானவன்மாதேவி தனது பிறந்த ஊரான திருக் கோவிலூர் மலையமான் மாளிகையில் அவனைப் பெற்றார். பாட்டனார் மலையமானின் அரவணைப்பில் தான் ஆதித்த கரிகாலன் வளர்ந்திருக்கிறான். கி.பி.969-இல் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டான். அவன் வாழ்ந்ததே 29 வருடங்கள்தான்.

சேவூர் போரில் வீரபாண்டியன் தலையைச் சீவி எறிந்து இடது காலினால் பந்தாடினான் ஆதித்த கரிகாலன். இது நடந்தது கி.பி.959-ல். காரணம், 957-ல் சுந்தர சோழன் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்துச் சென்று அவனை விரட்டி அடித்தான். ஒரு வருடத்திற்குத் தலைமறைவாக இருந்த வீரபாண்டியன் மீண்டும் மதுரையம்பதிக்கு வந்து, படைகளைத் திரட்டிப் போருக்குத் தயாராகி இருக்கிறான். அதனால் மீண்டும் கி.பி.959-ல் சேவூரில் சோழர்களும், பாண்டியர்களும் போரிட்டிருக்கின்றனர். அப்படியென்றால் கி.பி. 959-லேயே வீரபாண்டியனை, ஆதித்த கரிகாலன் கொன்றிருக்கிறான். அதன் பிறகு பத்து வருடங்கள் உயிரோடு இருந்திருக்கிறான். அதாவது கி.பி.969ஆம் ஆண்டில்தான் அவன் கொல்லப்பட்டான்.

பத்து வருடங்களுக்குப்பிறகு பாண்டிய ஆபத்துதவிகள் ஆதித்த கரிகாலனை பழி வாங்கக் கூடும் என்று வைத்துக் கொண்டாலும், உத்தம சீலனின் தலையை பாண்டியர்கள் வெட்டியதால்தான், பழிக்குப் பழி தீர்க்கும் வகையில் ஆதித்த கரிகாலன் வீரபாண்டியன் தலையை வெட்டி வீழ்த்தினான். உத்தம சீலனின் மரணத்தைப் பற்றி எந்த சரித்திர ஆசிரியரும் குறிப்புகளை எழுதவில்லை. "கல்கி" கூடப் பொத்தாம் போக்கில் உத்தம சீலனைப் பற்றி ஓரிரு வரிகளில் முடித்து விட்டார். பாண்டியர்களுக்கு ஆதித்த கரிகாலனை பழி வாங்க பத்து வருடங்களா தேவைப்பட்டிருக்க வேண்டும்?

சுந்தர சோழர் நோய் படுக்கையில் வீழ்ந்து, ஆதித்த கரிகாலன் சர்வ வல்லமை பொருந்திய மன்னனாக உருவாகி வருகிறான் என்பது தெரிந்த பிறகே அவன் கொல்லப்பட்டிருக்கிறான் என்பதைக் கவனிக்க வேண்டும்..

ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்டு யுகங்கள் ஆகிவிட்டன. இப்போது இந்தப் பிரச்னை எதற்கு என்று நீங்கள் கேட்கலாம்? ஆதித்த கரிகாலன் கொலை என்பது கண்களில் விழுந்த தூசியைப் போன்று, பல்லிடுக்கில் மாட்டிய உணவுத் துகளைப் போன்று உறுத்திக் கொண்டே இருக்கிறது. அதனைப் பற்றி ஆராயும் போது, பல சந்தேகங்கள் எழுகின்றன.

அத்திமலைத்தேவன் நான்காம் பாகத்தில் ஒரு சிறு தவறு செய்துவிட்டேன். காஞ்சியினுள் பிரவேசிக்கும் ஆதித்த கரிகாலனை பார்த்திபேந்திர பல்லவனும் வரவேற்கிறான். அப்போது வீரபாண்டியனின் தலையை வெட்டிய கத்தியை ஆதித்த கரிகாலன் வைத்திருப்பதாக எழுதி இருந்தேன். இது தவறுதான். காஞ்சிக்கு வந்த பிறகே, அவன் சேவூர் போரினில் வீரபாண்டியனின் தலையை வெட்டியிருக்கிறான். அந்தப் போரில் பார்த்திபேந்திர பல்லவனும் பங்கேற்றிருக்கிறான். உத்தம

*சீலனின் கத்தியைக் கொண்டுதான், வீரபாண்டியன் தலையை வெட்டியிருக்கிறான்.*

*எனவே, பார்த்திபேந்திர பல்லவனைக் காஞ்சியில் நுழையும் போது முதன்முதலாகச் சந்திக்கிறான் என்பதால், அவன் இன்னும் வீரபாண்டியன் தலையை வெட்டி தனது சபதத்தை நிறைவேற்றி இருக்கவில்லை. அதற்கு முன்பாகவே காஞ்சியில் வசிக்க வருகிறான் என்பதுதான் உண்மை. தவறுக்கு வருந்துகிறேன்.*

*இனி தொடருகிறது, அத்திமலைத்தேவனின் இறுதி பாகம்.*

## வாசகர் குறிப்பு

அவரவர் தாம்தாம் அறிந்தவாறேத்தி
இவையிவை உண்மை,
இவையிவை கற்பனையென
மனமிசை சார்த்திக் கொள்ளவும்.
உதிரிப்பூக்களாம் சரித்திரச் சம்பவங்களை
எனது கற்பனை நாரினில்
சரமாகத் தொடுத்துள்ளேன்,
அத்திமலையானுக்குச் சமர்ப்பிக்க!
உங்கள் செவிகளில் பூச்சுற்ற அல்ல..!

'காலச்சக்கரம்' நரசிம்மா.

# 1. உனக்கு மட்டும் ரகசியம் சொல்வேன்

பார்த்திபன் தனது கரிய குதிரையிலும், ஆதித்த கரிகாலன் தனது வெண்புரவியிலும் ஏறி காஞ்சியைச் சுற்றி வந்தார்கள். விடியற்காலையிலேயே புறப்பட்ட அவர்கள், முக்கூடல், அத்தியூர், மாலிருஞ்சோலை என்று பல இடங்களைக் கண்டுவிட்டு உச்சிவேளையில் ஒத்தாடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். ஆதித்த கரிகாலனுக்கு ஏமாற்றமாக இருந்தது. நகரேஷு காஞ்சி என்று போற்றப்படும் காஞ்சியில் மன்னர் வசிக்கத் தகுந்த மாளிகைகள் இல்லாமல் இருப்பது கூடப் பரவாயில்லை. புதிதாக ஒரு கனவு மாளிகையை எழுப்புவதற்குக் கூடவா இடமில்லை?

பசி வயிற்றைக் கிள்ளியதால், உணவு அருந்துவதற்காக ஒத்தாடை அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந் தனர்.

அப்போது-

ஆதித்த கரிகாலனின் உதவியாளனும், மெய்க்காவலனு மான குழலழகன் தனது புரவியில் இவர்களை நோக்கி விரைந்து வருவதைப் பார்த்தான். தனது கனவு மாளிகையை எழுப்புவதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடும்படி தனது ஆலோசகர் நேமியங்கையரையும், குழலழகனையும் அனுப்பியிருந்தான். அவன் வரும் வேகத்தைப் பார்த்தால் ஏதோ தகவலுடன் வருகிறான் போலும்.

தனது புரவியைத் தொலைவிலேயே நிறுத்திவிட்டு, அதன் மேலிருந்து குதித்து ஆதித்த கரிகாலனை நோக்கி ஓடிவந்து பணிந்தான்.

"இளவரசே! குரு நேமியங்கையர் தங்களை உடனே அழைத்து வரச் சொன்னார். தங்களது கனவு மாளிகையை எழுப்புவதற்கு அருமையான வனப்பகுதி ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்."

குழலழகன் கூறியதும், ஆதித்த கரிகாலனின் வயிற்றைக் கிள்ளிக் கொண்டிருந்த பசியை, மனதைக் கிள்ளத் தொடங்கிய ஆவல், விரட்டி அடித்தது.

"நண்பா! வா! சென்று பார்ப்போம்!" - ஆதித்த கரிகாலன் கூற, இருவரும் தொடர்ந்தனர்.

குழலழகன் தருமநகரத்தினுள் நுழைந்து ஆதி சரஸ்வதி ஆலயத்தின் அருகில் பாழடைந்து கிடந்த பிரவாள மாளிகையின் முன்பாக நிற்க, மர நிழலில் ஒதுங்கி இருந்த குரு நேமியங்கையர் ஆதித்த கரிகாலனை நோக்கி வந்தார்.

"இந்த இடிபாடுகளைப் பாருங்கள். ஒரு காலத்தில் பிரம்மாண்ட மாளிகையாக இருந்திருக்க வேண்டும். எவ்வளவு விஸ்தாரமான பகுதி என்பதைக் கவனியுங்கள். இந்த மளிகையில் துவங்கும் வனம் ஒத்தாடை வரை பரவியுள்ளது. தருமநகரத்தின் தெற்கிலும் தும்பவனம் என்கிற காட்டுப் பகுதி. ஒத்தாடை அரண்மனைக்கும், அத்திமலைக்கும் இடையே ஒதுங்கி நிற்கும் இந்தத் தருமவனத்தின் பிரவாள மாளிகை பல்லவ இளவரசி ஒருத்திக்காகக் கட்டப்பட்டதாம்!"-நேமியங்கையர் கூற, ஆதித்த கரிகாலன் பிரம்மிப்புடன் அந்த இடிபாடுகளைக் கவனித்தான்.

'உண்மையிலேயே ஒரு காலத்தில் பிரம்மாண்டமாகத் தான் இருந்திருக்க வேண்டும். சுற்றி அடர்த்தியான மரங்களும், செடிகளும் வளர்ந்திருந்தாலும், அந்தக் கல்தூண்களும், சுவர்களும் இன்னும் உறுதியாகத்தான் நின்றிருந்தன. இந்தப் பழைய மாளிகையை இடித்து விட்டு, இவனது கனவு மாளிகையை எளிதாக எழுப்பலாம். இவன் எழுப்பும் ஸ்வர்ண மாளிகைக்கேற்ப சுற்றிலும் வனங்களும் ஓடைகளும் கொண்ட பகுதியாக

தருமநகரம் உள்ளது. இந்த இடம் தகுதியான இடம் தான்!' - மனதில் திருப்தி தோன்ற, நேமியங்கையரை நன்றியுடன் நோக்கினான்.

"நல்ல காரியம் செய்தீர், குருவே. எனது மனதில் நான் எழுப்பிவரும் அந்தக் கனவு மாளிகை அமைக்கப் படுவதற்கு இதுவே தோதான இடம்!" என்று கூறியவன் பார்த்திபனை திரும்பி நோக்கினான்.

அவன் பிரவாள மாளிகையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன சொல்கிறாய் நண்பா? இந்த இடம் பொருத்த மானதுதானே?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்..

பார்த்திபன் அவனை யோசனையுடன் நோக்கினான்.

"அவசரப்படாதே ஆதித்தா! உனக்கோ, குருவுக்கோ, அல்லது குழலழகனுக்கோ இந்தப் பகுதியைப் பற்றி முழுவதுமாகத் தெரியாது. நானே இந்தப் பகுதிக்கு அதிகம் வந்ததில்லை. சிம்மவர்ம பல்லவன் தனது மகள் நவரத்னாவுக்காக ஆசையுடன் கட்டிய மாளிகை. அவள் மரணம் அடைந்த பிறகு யாருமே இங்கு வசிக்கவில்லை. பல பல்லவ மன்னர்கள் வாழ்ந்தும் மறைந்தும் விட்டார்கள். ஆனால் யாருமே இந்தப் பிரவாள மாளிகையில் வசிப்பதற்கோ, புதிப்பித்துக் கட்டுவதற்கோ விரும்பவில்லை. ஒருவரும் முயற்சி கூடச் செய்யவில்லை. காலம் காலமாக இந்தப் பகுதி மக்கள் இதனைப் பேய் மாளிகை என்றே அழைக்கின்றனர். இளவரசி நவரத்தின பல்லவி தற்கொலை செய்து கொண்டு நிம்மதியின்றி ஆவியாக அலைந்ததாகக் கூறுகிறார்கள். களப்பிரர் இங்கே பல அட்டூழியங்களைச் செய்திருக்கின்றனர். கொலைகள் பல இங்கே அரங்கேறியுள்ளன. நந்திவர்மரின் இரண்டாம் மனைவி கோகிலவாணி என்பாள் இங்கே எரித்துக் கொல்லப்பட்டதாகவும் கதைகள் உண்டு. மொத்தத்தில் ஒரு மன்னர் வசிக்க வேண்டிய இடமே இல்லை இது. எனவே உனது கனவு

மாளிகையை இங்கே எழுப்பும் எண்ணத்தை மாற்றிக் கொள்!" - பார்த்திபன் கூற, ஆதித்த கரிகாலன் சிரிக்கத் தொடங்கினான்.

"இம்மாதிரி நம்பிக்கைகளைக் கொண்டிருந்ததால்தான் பல்லவம் அழிந்துவிட்டது போலும். பேய் உலாவினால் பேயை விரட்டிவிட்டு அந்த மாளிகையை எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே. பேயை எதிர்த்துப் போர் புரிய முடியவில்லை என்றால் பெரிய போர்களை எப்படிப் பல்லவர்கள் தொடுத்தனர்? எனக்கு இந்த நம்பிக்கைகள் எல்லாம் கிடையாது. ஒருவேளை நவரத்தின பல்லவியின் ஆவி எனது கண்ணின் முன்பாக வந்து நின்றால், காணாமல் போன காஞ்சியின் பொக்கிஷம் எங்கே? என்று அதனிடமே கேட்பேன். எனக்கு இந்த இடம் மிகவும் பிடித்துள்ளது, நண்பா. இங்கேயே எனது கனவு மாளிகையை எழுப்பலாம். பிரவாள மாளிகையைத் தரைமட்டம் ஆக்கிவிட்டு, இந்தப் பகுதியைச் சுத்தம் செய்த பின்னர், நமது புதிய மாளிகையை எழுப்பும் வேலைகளைத் தொடங்குவோம். குழலழகா! உன்னிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறேன். இந்தப் பிரவாள மாளிகையைச் சுற்றி வளர்ந்துள்ள மரஞ்செடி கொடிகளை அகற்றி, பிரவாள மாளிகையை இடித்துவிட்டு, புதிய மாளிகையை எழுப்புவதற்கு வசதியாக இந்த இடத்தை மாற்றம் செய். குருநாதா! நீங்கள் குழலழகனை வழி நடத்துங்கள்!" என்று கூறிய ஆதித்த கரிகாலன், பார்த்திபனை நோக்கினான்.

"உனது யோசனையை நான் கேட்கவில்லை என்கிற வருத்தம் ஒன்றும் இல்லையே?"

ஆதித்த கரிகாலன் கேட்டதும், அவனை நோக்கிப் புன்னகைத்தான், பார்த்திபன்.

"துணிவுக்குப் பெயர் போனவன் நீ! புதிய மாளிகையை எழுப்பி, இந்தப் பகுதி மக்களின் நம்பிக்கை

மூடத்தனமானது என்று நீ நிரூபிக்கும் வல்லமை கொண்டவன். நான் ஏன் வருத்தப்படப் போகிறேன்? நீ புதிய மாளிகையில் வசித்தால், உனது நண்பன் எனக்கும் அதில் ஒரு அறை ஒதுக்கப்படும் அல்லவா? பின் நான் ஏன் வருத்தப்படப் போகிறேன்.?" என்றான், பார்த்திபன்.

இருவரும் சிரித்தபடி பிரவாள மாளிகையின் உள்ளே நடந்தனர். மாளிகையைச் சுற்றிப் பார்த்தபடி உப்பரிகைக்கு வர, அடுக்களையின் மீது நின்ற அந்தப் புகைபோக்கியினையும் அதன் உச்சியில் வட்டமாக அமைந்துள்ள மரப்பாலத்தையும் கண்டனர்.

"பார்த்திபா! என்ன அது? கோபுரம் போன்று மிக அழகாக இருக்கிறது?" - ஆதித்தன் கேட்டான்.

"அது ஒரு புகைபோக்கி. ஒத்தாடை அரண்மனையின் உப்பரிகையில் இருந்து பார்த்தால் இந்தப் புகைபோக்கி தெரியும். சிம்மவர்ம பல்லவர் தனது பிரிய மகள் நவரத்தின பல்லவி அன்றாடம் உணவு சமைத்து உண்கிறாளா என்பதைப் பார்ப்பதற்காக அமைக்கப் பட்ட புகைபோக்கி. வேடிக்கை என்னவென்றால், அவள் திருமணம் செய்து கொண்ட அன்றே தற்கொலை செய்து கொண்டாளாம்." - பார்த்திபன் கூறினான்.

"தற்கொலையா! எதற்கு?" - ஆதித்த கரிகாலன் திகைத்தான்.

"காணாமல் போன அத்திமலைத்தேவனின் பிரதிமையை அவள் பதுக்கி வைத்தாலும் வைத்திருக்கலாம். வசியக் கலையினை அறிந்த ஒரு புத்த சந்நியாசினி தன்னை வசியம் செய்து தகவலை அறிந்து கொண்டு விடப் போகிறாளே என்று தற்கொலை செய்து கொண்டாளாம்." - பார்த்திபன் கூறினான்.

"அந்தச் சிலை அவ்வளவு விலைமதிப்பற்றதா?"- ஆதித்தன் வியந்தான்.

"தேவ உடும்பர சிலை என்று நான் கேள்விப்பட்டிருக் கிறேன். உலகிலேயே அவ்வகை மரம் அது ஒன்றுதான்

உள்ளதாம். மிகவும் ஆற்றல் மிக்க சிலை. அதனைக் கொண்டு அஸ்வமேத யாகம் செய்யும் மன்னன் உலகையே வெல்வானாம்! சமுத்ரகுப்தன், புலிகேசி போன்ற மன்னர்கள் காஞ்சிக்குப் படையெடுத்து வந்தது அந்த தேவ உடும்பர சிலையைக் கைப்பற்றவே!" - பார்த்திபன் கூறினான்.

"நேமியங்கையர் என்னிடம் கூறியுள்ளார். ஒரு சிலைக்காக இவ்வளவு போராட்டங்களா!" - வியப்புடன் கேட்டான் ஆதித்த கரிகாலன்.

"ஆம் ஆதித்தா! காஞ்சியின் வித்து அந்தச் சிலைதான். நரசிம்ம பல்லவரால் கண்டெடுக்கப்பட்டு, பிறகு ஆழிப் பேரலையில் சிக்கிக் காணாமல் போனது. பல்லவர்களின் எதிரி மல்ல எதி என்பான் அதனைக் கைப்பற்றி மறைத்து வைத்ததாகக் கூறப்படுகிறது. அவனது உயிரும் பிரிந்துவிட, அந்தச் சிலை இருக்கும் இடம் தற்போது யாருக்கும் தெரியாது. ஒவ்வொரு பல்லவனும் அதைத் தேடிக் கண்டு பிடிப்பேன் என்று அரியணையில் அமர்ந்த அன்று சபதம் செய்வான். பிறகு மரணப்படுக்கையில், மகனிடம் அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சத்தியம் வாங்குவான். ஆனால் அத்திமலைத்தேவன் இன்னும் விளையாட்டு காட்டிக்கொண்டே இருக்கிறான்!" - பார்த்திபன் கூற, ஆதித்தன் தனது தோள்களை அலட்சியமாகக் குலுக்கிக் கொண்டான்.

"நான் எனது வீரத்தை மட்டுமே நம்புகிறேன். உலக சக்கரவர்த்தியாவதற்கு எனது பலமே போதும். அத்தி மலைத்தேவனின் சிலை எனக்குக் கிடைத்தாலும் அது எனக்குத் தேவையில்லை. அத்திமலை ஆலயத்திலேயே அதை வைத்துவிட்டு எனது பணிகளை நான் கவனிப்பேன். எனது ஆற்றலைக் கொண்டு நான் உலக சக்கரவர்த்தி ஆவேனே தவிர பல்லவ மன்னர்களைப் போன்று அத்திமலையானைத் தொந்தரவு செய்து கொண்டிருக்கமாட்டேன்!" என்றபடி ஆதித்த கரிகாலன் அந்தப் புகைபோக்கியையே நோக்கிக் கொண்டிருந்தான்.

அவன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த அத்திமலைத் தேவன், அவனைச் சோதிக்க முடிவு செய்துவிட்டான் போலும்.

மீண்டும் பிரவாள மாளிகையின் வெளியே வந்த ஆதித்தனும், பார்த்திபனும் அவர்களுக்காகக் காத்திருந்த நேமியங்கையரையும், குழலழகனையும் அணுகினர்.

"குழலழகா! நாளையே நமது குருவின் மேற் பார்வையில் இந்தப் பகுதி சுத்தம் செய்யப்பட வேண்டும். பழையாறையிலிருந்து நமது ஆட்களை வரவழைத்துப் பணியைத் துவக்கு. பிரவாள மாளிகையை இடித்து நிலத்தைச் சமன்படுத்து. புதிய மாளிகைக்குக் கடைக்கால் போட வேண்டும். பணிகள் விரைவாக நடக்க வேண்டும்!" என்றபடி புறப்பட்டான்.

நேமியங்கையர் நல்ல முகூர்த்தத்தில் பணிகளைத் துவக்க, பழையாறையிலிருந்து தருவிக்கப்பட்ட பணியாட்கள், முதலில் பிரவாள மாளிகையைச் சுற்றி அடர்ந்திருந்த மரஞ்செடி கொடிகளை அகற்றினர். இப்போது மாளிகையின் நுழைவாயிலில் இருந்தே அந்தப் பன்னிரண்டு அடி உயரப் புகைபோக்கி நன்கு புலப்பட்டது.

பிரவாள மாளிகையை இடிக்கும் பணிகளும் துவங்கியது. மூன்று நான்கு குழாம்களாகப் பிரிந்து மாளிகையை இடிக்கும் பணி துவக்கப்பட்டது. உயரமான புகைபோக்கியை மேலிருந்து இடித்து வர எண்ணி இரு பணியாட்கள் சுழலும் படிகளில் ஏறி உச்சிக்குச் சென்றார்கள். உச்சியைப் பெயர்த்தவர்கள், புகை போக்கியின் மேலிருந்து இடித்தபடி கீழே வர, ஒரு குறிப்பிட்ட பகுதியில் புகைபோக்கியின் ஒரு பெரிய பாகம் இடிந்து விழுந்தது. புகைபோக்கியின் வழியே அத்திமலையான் எழுந்தருளியிருந்த மரப்பெட்டகம் தென்பட்டது. பணியாட்கள் திகைப்புடன் மாளிகையின் முன்பகுதியில் பணிகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த, நேமியங்கையரையும், குழலழகனையும்

அழைத்தனர். அங்கே வந்து பெட்டகத்தைப் பார்த்த நேமியங்கையர், புகைபோக்கியை இடிக்கும் பணியை நிறுத்தினார்.

நீண்ட யோசனைக்குப் பிறகு புகைபோக்கியின் அடிப்பாகத்தை இடித்து நொறுக்க, ஒரு இரும்பு வளையத்தின் மீது பத்து அடிப் பெட்டகம் நிற்பதை அறிந்து கொண்டனர்.

"புகைபோக்கியை எச்சரிக்கையுடன் உடைத்துக் கொண்டிருங்கள். நான் சென்று இளவரசரை அழைத்து வருகிறேன்!" என்றபடி நேமியங்கையரும், குழலழகனும் ஒத்தாடைக்குக் கிளம்பினர்.

ஆதித்த கரிகாலன் வருகையை எதிர்பார்த்து ஆங்காங்கே தீபக்கப்பரைகளும், சுளுந்துகளும் ஏற்றப்பட்டன.

ஒத்தாடை அரண்மனை! சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருக்க, உப்பரிகையில் ஆதித்த கரிகாலனுடன் அளவளாவிக் கொண்டிருந்தான் உபேந்திர பார்த்திப பல்லவன். இருவருமே புரவிகளில் வந்து இறங்கிய நேமியங்கையரையும் குழலழகனையும் பார்த்தனர். அவர்கள் உப்பரிகைக்கு வரும்வரையில் தங்கள் உரையாடலைத் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

உப்பரிகை செல்வதற்காகப் படிகளில் ஏறிய நேமியங்கையர், சட்டென்று குழலழகனின் தோளினைப் பற்றி, அவனை நிறுத்தினார்.

"குழலழகா! பார்த்திப பல்லவன் முன்பாக, நாம் பிரவாள மாளிகை புகைபோக்கியில் கிடைத்த பெட்டகத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டாம். அவன் புறப்பட்டுச் சென்றதும் நாம் அதனைப் பற்றிக் குறிப்பிடலாம்!" என்று நேமியங்கையர் கூற, குழலழகன் தலையசைத்தான்.

"என்ன விஷயம், நேமியங்கையரே?" - ஆதித்த கரிகாலன் அவரை நோக்கினான்.

"பிரவாள மாளிகையை இடித்துத் தள்ளும் பணிகள் விரைவாக நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு முன்பாக சோழ நாட்டில் இருந்து ஒரு முக்கியமான தகவல் வந்திருக்கிறது. அதனைத் தங்களிடம் தெரிவிப் பதற்கே இங்கே வந்திருக்கிறோம்!" -நேமியங்கையர் கூற, அவரை வியப்புடன் நோக்கினான், ஆதித்த கரிகாலன்.

"என்ன விஷயம், கூறுங்கள்?" - வியப்புடன் அவரைப் பார்த்தான், ஆதித்த கரிகாலன்.

"அது சற்று ரகசியமான விஷயம்!" - தயக்கத்துடன் நேமியங்கையர் பார்த்திபனைப் பார்க்க, அவன் அவரது பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டு தனது நண்பனை நோக்கினான்.

"ஆதித்தா! சூரியன் மறைந்துவிட்டான். எனது தந்தை தர்மவர்மர் தனியாக இருப்பார். நான் புறப்படுகிறேன்!" என்றவன் ஆதித்தனின் பதிலுக்குக் காத்திராமல் உப்பரிகையிலிருந்து இறங்கத் துவங்கினான்.

அவனைத் தடுக்க முற்பட்ட ஆதித்தன், நேமியங்கையரின் சூசகக் கண்ணசைவைத் தற்செயலாக நோக்கினான். ஏதோ பார்த்திபனுக்குத் தெரியக்கூடாத மிக முக்கியமான தகவல் என்பதை உணர்ந்து கொண்டு பேசாமல் நின்றான்.

'பிரவாள மாளிகையைத் தரைமட்டம் ஆக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு சோழ நாட்டில் இருந்து என்ன இரகசியத் தகவல் வந்திருக்கும்?' யோசித்தபடி பார்த்திபன் தனது புரவியை நோக்கிச் சென்றான்.

பார்த்திபன் புரவியில் ஏறி தனது மாளிகையை நோக்கிப் புறப்படும்வரை நேமியங்கையர் பேசாமல் இருந்தார். அவனது புரவி அரண்மனையைவிட்டு வெளியேறியதும், கண்களில் ஆவல் கொப்பளிக்க, ஆதித்த கரிகாலனைப் பார்த்தார்.

"இளவரசே! உடனே பிரவாள மாளிகைக்குப் புறப்பட்டு வாருங்கள். புகைபோக்கியின் உள்ளே ஒரு பெட்டகம் கிடைத்துள்ளது. பன்னிரண்டு அடி உயர புகைபோக்கியில் பத்து அடி உயரத்திற்குப் பெட்டகம் நிற்கிறது." - நேமியங்கையர் கூற, அவர்களை திகைப்புடன் பார்த்த ஆதித்த கரிகாலன் எதுவும் கேட்காமல் உடனே அவர்களுடன் புறப்பட்டான்.

அவர்கள் தருமநகரம் செல்வதற்குள் இருள் சூழ்ந்துவிட்டது. புகைபோக்கியை இடிக்கும் பணி முழுவதுமாக நிறைவடைந்துவிட, பணியாட்கள் பெட்டகத்தை எடுத்து நிலத்தில் வைத்திருந்தனர்.

அந்த தேக்கு மரப் பெட்டகத்தை ஆதித்த கரிகாலன் வெறித்து நோக்கினான்.

"உள்ளே என்ன இருக்கிறது?" - பரபரப்பு அதிகமானது ஆதித்தனுக்கு.

"தெரியவில்லை இளவரசே! தங்களின் வருகைக்குத் தான் காத்திருக்கிறோம்!" - பழையாறையைச் சேர்ந்த செங்கம்பாடி சிந்தூரன் என்கிற கட்டடக்கலை விற்பன்னன் கூறினான். அவன்தான் ஆதித்தனின் கனவு மாளிகையை எழுப்பப் போகிறவன்.

"பெட்டகத்தைத் திறவுங்கள்!" - ஆதித்தன் கூறியதும், குழலழகன் பெட்டகத்தை மிகவும் சிரமப்பட்டுத் திறந்தான்.

உள்ளே-

நூற்றாண்டுகளை கடந்திருந்ததால், செம்மை வண்ண அத்திமலையான், கரிய நிறத்தில் காட்சி தந்து கொண்டிருந்தான். தேகமெங்கும் தூசியும் ஒட்டடையும் இருக்க, சிந்தூரன், தனது மேல் வஸ்திரத்தை எடுத்து, சிலையைத் துடைக்கத் துவங்கினான்.

இப்போது-

தேவ உடும்பர அத்திமலைத்தேவன் தனது வழக்கமான புன்முறுவலுடன் காட்சி தந்துகொண்டிருந்தான். சிம்மவர்மன் காலத்தில் குணம் குன்றத்தின் தண்ணீர்த் தொட்டியில் மறைந்திருந்து, நரசிம்மவர்மன் காலத்தில் வெளிவந்து, மீண்டும் ஆழிப்பேரலையில் கடலடியில் சென்று சயனித்து, மல்ல எதியால் கைப்பற்றப்பட்டு, பிரவாள மாளிகையில் ஐநூறு ஆண்டுகளாக நின்ற கோலத்தில் இருந்த அத்திமலைத்தேவன், இப்போது வெளிவந்திருந்தான்.

அத்திமலைத்தேவனின் கம்பீரமான திருமுகத்தை பிரமிப்புடன் நோக்கினான், ஆதித்த கரிகாலன்.

"இது யாருடைய சிலை?"

"இவர்தான் பல்லவர்கள் தேடிக்கொண்டிருக்கும் அத்திமலைத்தேவன்!" - கண்களில் பரவசம் பொங்க பிரதிமையை நோக்கினார், நேமியங்கையர்.

"இவர்தான் அத்திமலைத்தேவனா? அஸ்வமேத தெய்வம்! ஆற்றலின் மொத்த உருவம்!" - பிரம்மிப்பு நீங்காமல் அவரைப் பார்த்தான், ஆதித்த கரிகாலன்.

'எனது ஆற்றலைக் கொண்டே நான் உலகத்தை ஆளுவேன். எனக்கு அத்திமலைத்தேவனின் அருள் தேவையில்லை என்றாயே.. நான் கிடைத்தால் என்னைக் கோயிலுக்கு அனுப்பிவிடுவேன் என்றாயே.. இதோ நான் வெளியே வந்துவிட்டேன். என்னை எனது கோயிலுக்கு அனுப்பிவிடு!' என்று கூறுவது போன்று கிடந்த அத்திவரதனை வெறித்துப் பார்த்தபடி நின்றான், ஆதித்த கரிகாலன்.

'பல்லவர்களின் பொக்கிஷம், பல்லவர்களுக்குக் கிடைக்கவில்லை. காஞ்சி நகரின் இதயப்பகுதியான [illegible]நகரத்தின் பிரவாள மாளிகையிலேயே இத்தனை காலம் நின்றிருக்கிறான். அதனைப் பல்லவர்கள் அறியவில்லை. ஆனால் பேய் மாளிகை என்று கருதப்

பட்ட பிரவாள மாளிகையில் இவன் காலடி எடுத்து வைத்ததும் அத்திமலைத்தேவனே கிடைத்திருக்கிறான். பிரவாள மாளிகையைத் தன் பெயரில் அன்று காலை தான் சாசனத்தில் பதிவு செய்து கொண்டிருந்தான். தற்போது பிரவாள மாளிகை பல்லவரின் இருப்பிடம் அல்ல. இவனது தனிப்பட்ட சொத்து. அதில் கிடைத்த அத்திமலைத்தேவனும் இவனுடைய தனிப்பட்ட சொத்தாகிவிட்டார். நல்லவேளையாக, பார்த்திபன் இங்கே இல்லை. பணியாட்கள் அனைவருமே பழையாறையைச் சேர்ந்தவர்கள். சிலை கிடைத்த விஷயம் பல்லவர்களுக்குத் தெரியவே வேண்டாம்.'

"நல்ல காரியம் செய்தீர்கள்! பார்த்திபனின் முன்பாக அத்திமலையானின் சிலையைப் பற்றிக் குறிப்பிடாமல் இருந்தீர்களே! இப்போது என்ன செய்வது, நேமியங்கையரே? சிலையை அத்திமலைத்தேவனின் ஆலயத்தில் ஒப்படைக்க வேண்டுமா?"- ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"அது தங்கள் சித்தம். ஆனால் அதற்கு முன்பாக, இந்த அற்புத பொக்கிஷத்தின் தன்மையைத் தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். மகாபாரதக் காலத்திற்கு முன்பிருந்து இந்தச் சிலை அத்தியூர் என்கிற காஞ்சியில் கோயில் கொண்டுள்ளது. அஸ்வமேத யாகத்தின் வேள்வித்தீயில் இருந்து வந்தது. தேவ உடும்பர வகை அத்திமரத்தைத் தேர்ந்தெடுத்து விஸ்வகர்மா அவருக்குத் தேகம் சமைத்தான். உலகிலேயே தற்போது உள்ள ஒரே தேவ உடும்பர அத்தி இவரது தேகமே. இவரை வைத்து அஸ்வமேத யாகம் புரிந்தால், மன்னர்களின் மன்னர் களாகத் திகழலாம். சைத்ர மாத ஹஸ்த நட்சத்திரத்தில், ஸ்ரீதளமணி என்கிற ஆபரணத்தை இவருக்கு அணிவித்து, வேண்டுவதை கோரினால் அது உடனடியாக நிறைவேறும்!" - நேமியங்கையர் கூறினார்.

"இந்தத் தகவல்களை எங்கே சேகரித்தீர்?"-ஆதித்த கரிகாலனின் புருவங்கள் உயர்ந்தன.

"எனது தாய்வழி பாட்டனார், அபிஷேக சதகரணி, அத்திமலையில் அதிகாரியாக இருந்திருக்கிறார். அவர் இயற்றிய பேரருளாள தண்டகம் என்கிற கவிதையின் முன்கதையில் இந்தத் தகவல்களைப் படித்தேன்!"- நேமியங்கையர் கூறினார்.

"அப்படியானால், நாமும் இவரைக் கொண்டு அஸ்வமேத யாகம் செய்து அந்த ஆபரணத்தை அணிவித்து இவரிடம் நமது கோரிக்கையைப் பெறலாம். இப்பிரவாள மாளிகை தங்களுக்குச் சொந்தம் என்பதால், இந்தச் சிலையும் இப்போது தங்களுக்கே சொந்தம்!" - குழலழகன் கூறினான்.

ஆதித்த கரிகாலன் அமைதியுடன் நின்றான். ஒருகணம், தனது எதிர்காலத்தை நினைத்துப் பார்த்தான். சோழ சிம்மாசனம் இவனை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்தது. பராந்தக மன்னர் உயிருடன் இருக்கும் போதே அவரது மூத்த மகன் இராஜாதித்யன் தக்கோலம் போரில் உயிரை இழந்திருந்தான். அவருடைய கடைசி மகன் உத்தமசீலன் வீரபாண்டியனால் சிரச்சேதம் செய்யப்பட்டிருந்தான். இரண்டாவது மகன் கண்டராதித்ய தேவரோ 'மேற்கே சென்ற தேவர்' என்று காணாமல் போய்விட்டிருந்தார். மூன்றாவது மகன் அரிஞ்சயனும் மன்னராகப் பதவி ஏற்ற ஆறாம் மாதம் ஆற்றூர் போருக்குச் சென்றவர் தனது கூடாரத்தில் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்து, அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டு, இங்கே இரண்டு நாட்கள் உயிருக்குப் போராடி மரணம் அடைந்துவிட்டிருந்தார். அவருக்குப் பிறகு பதவி ஏற்றுள்ள சுந்தர சோழருக்கும் உடல் நிலையில் சற்றே பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. சோழ சிம்மாசனத்தை அடைய நினைப்பவர்கள் மரணத்தைத் தழுவுவார்கள் என்று மக்களிடையே அரசல்புரசலாகப் பேச்சுகள் புறப்பட்டுள்ளன. மேலும் தனது சிறிய பாட்டன் உத்தமசீலனது தலையை வெட்டிய வீரபாண்டியனின் தலையை வெட்டிக்

காலால் உதைப்பேன் என்று இவன் சபதம் வேறு செய்திருக்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக, பவிசுக்கார மடத்தில் இவனது ஜீவநாடியைப் படித்த பன்னகநத்தர் என்கிற ஜோதிடர் இவனுக்குப் பெரும் கண்டம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

அனைத்தையும் கருத்தில் கொண்டு, குழலழகன் கூறுவது போன்று அத்திமலைத்தேவனைக் கொண்டு அஸ்வமேத யாகம் செய்தால் என்ன? இவனுக்கு உள்ள கண்டம், சோழ சிம்மாசனத்திற்கு உள்ள சாபக்கேடுகள் அனைத்தையும் நீக்கி மன்னர்களுக்கு மன்னனாய் திகழ்ந்தால் என்ன? சோழ குடையின் கீழ் அனைத்து நாடுகளையும் கொண்டு வந்தால் என்ன?

ஆம்! அதுதான் செய்ய வேண்டும். பல்லவத்தின் பொக்கிஷம் இப்போது இவனது வசம். இவனுக்குத்தான் உரிமை என்கிற போது இவன் அஸ்வமேத யாகம் செய்வதில் என்ன தடை இருக்க முடியும்?

"அசோகன், புஷ்யமித்ரா, சமுத்ரகுப்தா, புலிகேசி என்று பல மன்னர்கள் இந்தச் சிலையைப் பெற முயற்சித்துத் தோல்வியுற்றனர், இளவரசே. ஆனால், அத்திமலைத்தேவனே உங்களைத் தேடி வந்திருக்கிறான். அவனைத் தங்கள் வசப்படுத்துங்கள்!"- நேமியங்கையர் கூற, அப்போதே அந்தச் சிலையைப் பத்திரப்படுத்துவது என்று தீர்மானித்தான் ஆதித்த கரிகாலன்.

"அத்திமலைத்தேவன் இனி என் வசம்தான் இருப்பான். அவனைப் பத்திரப்படுத்துவோம்!" - ஆதித்த கரிகாலன் கூறியதும், புன்சிரிப்புடன் திகழ்ந்த அத்திமலையானின் முகத்தில் சற்றே புன்னகை குறைந்தது.

'இந்த அரண்மனை வாசிகள் அனைவருமே, ஏன் ஒரே மாதிரியாகவே யோசிக்கிறார்கள். திருந்தவே, மாட்டார்கள் போலிருக்கிறதே! பல்லவர்களைப் போன்று சோழர்களும் அழிவுப்பாதையில் செல்கின்றனர். அரசியல் என்கிற சொல்லுக்குப் பொருள் பேராசை என்றே தோன்றுகிறதே!'

பெட்டகத்தின் உள்ளே இருந்தபடி, அத்திமலையான் யோசித்துக் கொண்டிருந்தான்.

"நேமியங்கையரே! நீர் குறிப்பிட்ட ஸ்ரீதளமணி என்கிற ஆபரணம் எங்கே உள்ளது?"

"அந்த ஆபரணம் சிம்மவர்மனின் கடைசி மகன் பீமவர்மனால் களவாடப்பட்டு, வடிவம் மாற்றியமைக்கப் பட்டு, உக்ரோதயம் என்று பெயரிடப்பட்டது. அபராஜித பல்லவனிடம் இருந்து ஆதித்த சோழன் அதனைப் பறித்துத் தனது கஜானாவில் பத்திரப்படுத்தி வைத்தான்!" - நேமியங்கையர் கூறினார்.

ஆதித்த கரிகாலனின் கண்கள் விரிந்தன.

"என்றால், அந்த உக்ரோதயம் நமது சோழ கஜானாவில்தான் இருக்கிறதா?" - ஆதித்த கரிகாலன் ஆர்வத்துடன் கேட்டான்.

"ஆம் இளவரசே! நம்மிடம்தான் இருக்க வேண்டும்!"

நேமியர் கூறியதும், மீண்டும் அந்தப் பெட்டகத்தில் இருந்த அத்திமலைத்தேவனின் சிலையையே வெறித்தான் ஆதித்த கரிகாலன்.

இதுவரை தஞ்சை அரண்மனையின் கஜானாவிற்கு ஆதித்தன் சென்றதே இல்லை. அங்குதான், அத்திமலைத் தேவனின் உக்ரோதயம் இருக்கிறதாம். அத்திமலைத் தேவனும், இவன் வசம். உக்ரோதயமும் இவன் வசம். அனைத்து நாடுகளும் விரைவில் இவன் வசம்.

உற்சாகமும், உத்வேகமும் அவனது மனதைக் கவ்விக் கொள்ள, குழலழகனை திரும்பி நோக்கினான், ஆதித்த கரிகாலன்.

"இந்தச் சிலை கிடைத்த விவகாரம் யாருக்கும் தெரியக் கூடாது. குறிப்பாக, பார்த்திபனுக்குத் தெரியவே கூடாது. சிந்தூரனையும் எச்சரித்து வையுங்கள். இந்தச் சிலையை நான் சொல்லும் இடத்தில் பத்திரப்படுத்தி வையுங்கள்!" - ஆதித்த கரிகாலன் கூறினான்.

"உத்தரவு இளவரசே!" - நேமியங்கையரும், குழலழகனும் பணிவுடன் தலையசைத்தனர்.

'பெருந்தேவி! இப்போதைக்கு நான் வருவேன் என்று எதிர்பார்க்காதே. மீண்டும் எனக்கு வனவாசமும், அக்ஞாதவாசமும் காத்திருக்கின்றன. நான் எப்போது நமது அத்திமலைக்கு வருவேன் என்று எனக்கே தெரியவில்லை' என்று கூறுவது போன்று அந்த பத்தடி மரப்பெட்டகத்தில் சயனித்திருந்தான், அத்திமலைத் தேவன்.

"நேமியங்கையரே! அத்திமலைத்தேவனின் சிலையை நான் குறிப்பிடும் இடத்தில் மறைத்துவிட்டு உடனடியாக, நீரும், குழலழகனும் தஞ்சைக்கு வாருங்கள். அங்கே நமக்கு மிகவும் அவசரமான பணி ஒன்றினைச் செய்ய வேண்டியுள்ளது. மிகவும் அவசியமானதும்கூட!" - ஆதித்த கரிகாலன் கூற, நேமியங்கையர் தலையசைத்தார்.

குழலழகன் பெட்டகத்தை மூட, மீண்டும் இருளில் மறைந்தார் அத்திமலைத்தேவன். பெட்டகத்தின் உள்ளே நிலவும் இருள்தான் தனது எதிர்காலமும் கூட என்பதை அப்போது ஆதித்த கரிகாலன் உணரவில்லை.

நடுநிசியில்-

அத்திமலையான் சயனித்திருந்த பெட்டகம் மாட்டு வண்டி ஒன்றில் வைக்கப்பட்டு, அதன் மீது தானிய மூட்டைகள், காய், கனி, கீரை வகைகள் அடுக்கப்பட்டன.

"பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் தளிக் குளத்தார் சன்னிதிக்கு உபகரணங்களும் திரவியங்களும் அனுப்பி உள்ளதாகக் கூறுங்கள்!" - ஆதித்த கரிகாலன் கூற நேமியங்கையரும், குழலழகனும் பணிவுடன் தலைகுனிந்து விடைபெற்றனர்.

மாட்டுவண்டி புறப்பட அதைப் பேருவகையுடன் நோட்டம்விட்டுக் கொண்டிருந்தான், ஆதித்த கரிகாலன்.

வண்டி இருளில் கலந்து மறைந்ததும், தருமவனத்தின் பிரவாள மாளிகையில் இருந்து ஒத்தாடைக்குப் புறப்பட்டான்.

அப்போது-

அமானுஷ்யங்கள் நடமாடும் அந்த வேளையில், அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய அந்த இருளில், அடி மேல் அடியெடுத்து வைத்தபடி ஒரு அமானுஷ்யம் மாளிகை இடிபாடுகளின் பின்பாக இருந்து வெளிப்பட்டு, பாதையில் வந்து நின்றது.

ஆதித்த கரிகாலன் சென்ற பாதையையும் மாட்டு வண்டி சென்ற திக்கினையும் மாற்றி மாற்றிப் பார்த்த அந்த அமானுஷ்யம், சற்று யோசித்தபடி நின்றுவிட்டு பிறகு தனது புரவியில் ஏறி ஆதித்த கரிகாலன் சென்ற திசையினில் பயணித்தது.

தென்திசை நோக்கிச் செல்லும் அந்த மாட்டு வண்டியில் பயணிக்கும் அத்திமலைத்தேவன் மீண்டும் ஒரு கண்ணாமூச்சி விளையாட்டிற்குத் தயாரானான்.. இப்போதைக்கு கண்களை மூடிக்கொள்வோம். அவன் எங்கே ஒளிந்து கொள்கிறானோ, மீண்டும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதுதான்.

மறுநாள் முதல் -

ஆயிரக்கணக்கான பணியாட்கள் அமர்த்தப்பட்டு, காஞ்சியின் தருமநகரத்தில் பிரம்மாண்டமான புதிய மாளிகை எழுப்பப்பட்டது. ஒத்தாடை அரண்மனையில் வசதிகள் குறைவாக உள்ளதால், சோழ இளவரசர் உடனடியாகத் தங்க வேண்டி, மாளிகை மிக விரைவாகக் கட்டப்பட வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டது. இரவும் பகலுமாக மாளிகைப் பணிகள் நடைபெற, விரைவிலேயே பிரவாள மாளிகை இருந்த இடத்தில் பிரம்மாண்டமான புதிய மாளிகை ஒன்று எழுந்தது.

## 2. காயகல்பம்

ஒத்தாடை அரண்மனையில் இருந்து வெளிவந்த உபேந்திர பார்த்திபன் தனது மாளிகையை நோக்கிச் செல்லாமல் அத்தியூரை நோக்கிப் பயணித்தான். இவனது தந்தை தர்மவர்மன் மருத்துவரின் அரவணைப்பில் பாதுகாப்பாகத்தான் இருக்கிறார். ஆதித்த கரிகாலனுடன் தாங்கள் தனிமையில் பேச வேண்டும் என்று நேமியங்கையரும், குழலழகனும் கூறியதாலேயே, தனது தந்தையைக் கவனிக்க வேண்டும் என்று காரணத்தைக் கூறி அங்கிருந்து புறப்பட்டிருந்தான். அவர்கள் ஆதித்தனுக்கு சுமந்து வந்த இரகசியம் என்னவாக இருக்கும்? யோசித்தபடியே, தனது புரவியை அத்தியூரை நோக்கிச் செலுத்தினான்.

இரவு படர்ந்துவிட, ஆங்காங்கே இருந்த தீபஸ்தம்பங்களில் எண்ணெய்க் கப்பரைகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. பார்த்திபன் அத்தியூர் சென்று இடமாகத் திரும்பி முக்கூடலை நோக்கிப் பயணித்தான். பாலாறு ஒருகாலத்தில் பொங்கிப் பாய்ந்ததாக சரித்திரம் படித்திருக்கிறான். இன்று பாலாறு மணலாறாகத்தான் உள்ளது. முக்கூடல் இன்று ஒரு வறண்ட சமவெளிதான். பெயருக்கு இங்கும் அங்குமாக மழைநீர்க் குட்டைகளாகத் தேங்கி இருக்கின்றதே தவிர, மூன்று ஆறுகள் சங்கமித்த இடமாகவா உள்ளது?

மாலிருஞ்சோலை மலையின் மீது தீபங்கள் ஒளிர்ந்து கொண்டிருக்க, மலையின் முன்பாகச் சற்று நின்று சிங்கப்பிரானை பிரார்த்தனை செய்தான். பிறகு வேங்கடவன் ஆலயத்தினை நோக்கிச் சென்றான். காரிருள் சூழ்ந்திருக்க, அந்த ஒத்தையடி பாதையில் தனது

புரவியைச் செலுத்தியபடி சென்றான். மனித சஞ்சாரமே இல்லாத அந்தப் பாதையில் தொடர்ந்து கொண்டிருந்த போதுதான் தொலைவில் நிழலாக ஒரு காட்சியைப் பார்த்தான். சுளுந்தினை ஏந்திய ஐவர், திடீரென்று வெளிப்பட்டு அந்தப் பாதையில் வந்து கொண்டிருந்த மூன்று பெண்களைச் சுற்றி வளைத்தனர். தன்னையும் அறியாமல் பார்த்திபனின் வலது கை தனது வாளினைப் பற்றியது. இருப்பினும், தனது புரவியை ஓரமாக நிறுத்தி அதன் மீது அமர்ந்தபடியே அந்தப் பெண்களைக் கவனித்தான். ஒருவேளை, அந்த மனிதர்கள் அந்தப் பெண்களின் பாதுகாவலர்களாக இருக்கலாம் அல்லவா?

பார்த்திபன் அந்தப் பெண்களைக் கவனித்தான். ஒருத்தி சற்றே வயது முதிர்ந்தவளாக இருந்தாள். அயற்சி யாலும், முதுமையாலும், முகம் சோர்வாகக் காணப்பட தனது சேலை முந்தானையால் தலையைப் போர்த்தி யிருக்க, அவளது நரைத்த குழல் அவளது வெளுத்த முகத்துடன் ஒன்றிக் கலந்திருந்தது. காண்பதற்கு முகம் எது, குழல் எது என்று தெரியாத வண்ணம் இருந்தது. போதாத குறைக்கு வெளிர்வண்ண சேலையை வேறு அணிந்திருந் தாள். தொலைவில் இருந்த அவளைக் கண்டால், பேய் ஒன்று உலவுகிறது என்றே பயணியர் பதைபதைத்து ஓடியிருப்பர்.

அடுத்ததாக நின்ற பெண் நடுத்தர வயதைக் கொண்டிருந்தாள்.. மங்கலச் சின்னங்கள் ஏதுமின்றி விதவையாகக் காட்சியளித்தாலும், முகத்தில் முதுமை இன்னும் தோன்றியிருக்கவில்லை.

ஆனால், மூவரில் கடைசியாக நின்றிருந்த அந்த இளநங்கை, பார்த்திபனின் உள்ளத்தில் பிரம்மிப்பினை தோற்றுவித்தாள்.

தேவலோக அரம்பைதான் விண்ணிலிருந்து மண்ணில் இறங்கியிருக்கிறாளோ? சிறுமிப் பருவத்திலிருந்து நங்கைப் பருவத்தில் நுழைந்திருந்த அந்தப் பெண் மிக அழகாக

இருந்தாள். அவளைச் சுற்றி வளைத்திருந்த கள்வர்களே, அவளது பேரழகைக் கண்டதும் வந்த நோக்கத்தை மறந்து, அவளையே வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

'ஆபரணங்கள் கிடைக்கும் என்று வழிமறைத்தால், பொக்கிஷமே கிடைத்திருக்கிறதே!' என்று அந்தக் கள்வர்கள் ஒவ்வொருவரும் மனதில் நினைத்தபடி அவளை முகத்தோடு நோக்க, அந்த நங்கை சற்றும் கலங்காமல் அவர்களை எதிர்கொண்டு நின்றாள்.

மெலிந்த ஆனால் உயரமான தேகம். சாமுத்ரிகா லட்சணங்கள் ஒன்று சேர்ந்து மனித உருவை எடுத்து வந்திருந்தது போன்ற உருவம். இப்படித்தான் ஒரு நங்கை தோன்ற வேண்டும் என்பதைக் குறிக்கும் பத்மினி வகை பெண். அகன்ற விழிகள். அடங்கிய செவிகள். எடுப்பான நாசி. சங்கு போன்ற கழுத்து. குவிந்த தோள்கள். பொற்கலசங்களாக மறைந்திருக்கும் தனங்கள். நூலாக இடை. வாழைத்தண்டை போன்ற கைகள், யானை துதிக்கையைப் போன்ற தொடைகள், மிருதுவான தாமரை மலர்களாகப் பாதங்கள் என்று பேரெழிலுடன் காட்சி தந்தாள். நிச்சயம் அந்தக் கயவர்களால் அவளது பெண்மைக்குப் பேராபத்து நிகழும் என்பதை யூகித்த பார்த்திபன், தனது வாளினை உருவியபடி, குதிரையிலிருந்து குதித்தான்.

"மற்ற இரு பெண்களையும் கொன்றுவிட்டு, இந்தப் பொக்கிஷத்தை நமது இருப்பிடத்திற்குத் தூக்கிச் செல்வோம்!" - ஒரு கள்வன் கூறுவது, பார்த்திபனின் செவியில் கேட்டது.

அவன் தனது நடையைத் துரிதப்படுத்துவதற்குள் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

அந்த நங்கையின் கரத்தில் திடீரென்று ஒரு வாள் தோன்றியது. தன்னைப் பற்ற வந்த ஒரு கள்வனின் கையை மின்னல் வேகத்தில் வெட்ட, அவனது கை துண்டித்து விழுந்தது. அந்தக் கள்வன் அதிர்ச்சியில் அலற,

மற்ற நால்வரும் அந்தப் பெண்ணைத் தங்களது வாளால் தடுக்க முயல, அடுத்தகணம், தனி ஒருவளாக அந்த நங்கை கள்வர்களுடன் மோதத் துவங்கினாள்.

அவளது வேகத்தை ரசிக்கத் துவங்கிய பார்த்திபன், தன்னை மறந்து அவளையே நோட்டம்விட, கள்வர்கள் அவளது வாள் வீச்சை சமாளிக்க இயலாமல் திணறினர். ஒரு கட்டத்தில், கை துண்டிக்கப்பட்ட கள்வன் தனது வாளை இடதுகரத்தினால் ஏந்தியபடி அந்தப் பெண்ணின் பின்பாக ஊர்ந்து வருவதைக் கண்டான், பார்த்திபன். அந்தப் பெண்ணை எச்சரிப்பதற்காகக் குரல் கொடுக்க நினைக்கையில்.. அந்தக் கள்வன் தனது வாளினால், அந்த நங்கையின் வாளை தட்டிவிட, திகைப்புடன் செய்வதறியாது நின்றாள், அந்த நங்கை. நிராயுதபாணியாக நின்ற அவளை எக்காளத்துடன் சிரித்தபடி சுற்றி வளைத்தனர் கள்வர்கள்.

"வலக்கையை இழந்தால், நான் இடதுகையைப் பிரயோகிப்பேன். நீ கற்பை இழக்கப் போகிறாய். உன்னிடம் அது ஒன்றுதானே உள்ளது!" என்று நகைத்தபடி கள்வர்கள் அவளைச் சூழ்ந்து கொள்ள, அந்த மூதாட்டி பயத்தில் அலற, கள்வர்கள் தலைவன் தனது சகாக்களுக்குக் கட்டளையிட்டான்.

"முதலில் அந்தக் கிழவியைக் கொன்றுவிடு!" என்றதும் ஒருவன் அந்த மூதாட்டியை நோக்கி வாளுடன் பாய, தக்க தருணத்தில் பிரவேசித்தான், பார்த்திபன். ஆனால் அதற்குள் அந்த மூதாட்டி மயங்கிச் சரிய, நடுத்தர வயது பெண்மணி அவளைத் தாங்கிப் பிடித்தாள். வாளுடன் பாய்ந்த பார்த்திபன், ஐந்து கள்வர்களையும் தனது பக்கமாக இழுத்து ஒவ்வொருவராக வெட்டி வீழ்த்தினான்.

கள்வர்கள் அனைவரும் செத்து விழுந்ததும், இரத்தம் படர்ந்திருந்த தனது வாளைத் துடைத்தபடி அந்தப் பெண்களை நெருங்கினான்.

"வாள் பயிற்சி அறிந்தவள் என்றாலும், காரிருளில் மனித சஞ்சாரம் இல்லாத பகுதியில், பெண்கள் தனியாக வரக்கூடாது!" - பார்த்திபன் கூறினான்.

"ஆண்களுக்குப் போர் புரிவது எளிது. நழுவும் முந்தானையைப் பற்றிய கவலைகள் ஆண்களுக்கு இல்லை. வீரம் நழுவாமல் பார்த்துக் கொண்டால் மட்டுமே போதும். பெண்களுக்கு வீரமும் நழுவக்கூடாது, முந்தானையும் நழுவக்கூடாது என்கிற கவனத்துடன் போர் புரிய வேண்டியிருப்பதால் மட்டுமே ஆண்களின் கை ஓங்குகிறது!" அந்த நங்கை அலட்சியத்துடன் கூறினாள்.

ஒருகணம் அவளது பதிலால் திகைத்துப் போன பார்த்திபன், அந்த மூதாட்டியைக் கவனித்தான். அவளது மயக்கம் இன்னும் நீங்கவில்லை.

"பாவம்! அந்த மூதாட்டி பயத்தால் மயங்கிவிட்டார். இளங்கன்று பயமறியாது. அம்மா! நீங்கள் கூறுங்கள்! இந்த வழியாக இந்த இரவில் எதற்காக வந்தீர்கள்?"- பார்த்திபன் அந்த நடுத்தர வயது பெண்மணியைக் கேட்டான்.

"ஐயா! நாங்கள் வேங்கடவன் ஆலயத்திற்கு தரிசனம் செய்ய வந்தோம். தக்கோலம் அருகே ஒரு கிராமத்தில் வசித்து வந்தோம். பிழைப்பு தேடி காஞ்சிக்கு வந்தோம். இறைவன் அருளுடன் காஞ்சியில் புது வாழ்க்கை துவங்குவோம் என்றுதான் வேங்கடவன் ஆலயத்திற்கு வந்தோம். காஞ்சி ராஜவீதியில் செங்கழுநீர் சத்திரம் என்கிற இடத்திற்குச் செல்கிறோம். வழியில் கள்வரிடம் சிக்கிக் கொண்டோம்!" - அந்த மூதாட்டி கூறினாள்.

"செங்கழுநீர் சத்திரமா? இரவில் தங்குவதற்கு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்தீர்கள்! இவர்களாவது காட்டில் திரியும் வழிப்பறிக் கள்வர்கள். செங்கழுநீர் சத்திரத்தில், சூதாடிகள், பெண்டாள நினைப்பவர்கள் என்று இன்னும் அதிகக் கயவர்கள் உள்ளனர். நீங்கள் அங்கு

செல்வதும் ஆபத்துதான்!" என்ற பார்த்திபன், அந்த இளநங்கையை ஓரக்கண்ணால் கவனித்தான்.

அவள் கள்வர்கள் கொண்டு வந்திருந்த சுளுந்தின் ஒளியில் தனது வாளினைத் தேடிக் கொண்டிருந்தாள். ஒரு புதரின் மறைவில் கிடந்த அவளது வாளைக் கவனித்த பார்த்திபன், நகர்ந்து சென்று அதனை எடுத்து வந்து அந்த நங்கையிடம் நீட்டினான்.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால், நீங்கள் மூவரும் எனது மாளிகையில் தங்கலாம். எனது மாளிகையில் நானும், எனது தந்தையும் மட்டுமே வசிக்கிறோம். ஆனால் எங்கள் மாளிகையில் பெண் தாதிகள் அனேகம் பேர் உள்ளனர். அவர்கள் உங்களைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வார்கள். நீங்கள் எனது விருந்தினராக எனது மாளிகையிலேயே தங்கலாம். உங்களுக்கென்று ஒரு வழி புலப்பட்ட பிறகு, நீங்கள் உங்கள் வழியே செல்லலாம்!" - பார்த்திபன் கூறினான்.

"உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்?"-அந்த இளநங்கை கூற, அவளைத் தனது கூர்மையான கண்களால் உற்றுப்பார்த்தான். சுளுந்தின் ஒளியில் தேவதையாக ஜொலித்தாள் அந்தப் பெண்.

"நீங்கள் என்னுடன் வரமறுத்து, கள்வர்களால் தாக்கப்பட்டால், நாளை நான் காஞ்சி நகர மக்களுக்குப் பதில் தர வேண்டிய சிரமத்தைச் சந்திக்கக் கூடும். அந்த சிரமத்தைக் காட்டிலும், நீங்கள் எனது மாளிகையில் தங்குவது எனக்கு எவ்வித சிரமத்தையும் அளிக்காது!"- கம்பீர குரலில் பார்த்திபன் கூற, அந்தப் பெண்ணின் உதட்டில் முதன்முறையாக ஒரு குறுநகை தோன்றி மறைந்தது.

"எனது பெயர் உபேந்திர பார்த்திப பல்லவன். பல்லவ வம்சத்தின் வாரிசு!" என்றதும் அந்த இரு பெண்களின் முகங்களும் இருண்டன. அந்த மூதாட்டி எதையும் உணரும் நிலையில் இல்லை.

"மன்னிக்க வேண்டும்! நாங்கள் உங்களுடன் வர இயலாது!" - இளநங்கை கூறியதும், திகைத்தான் பார்த்திபன்.

"ஏன்?"

"நீங்கள் குறிப்பிடும் ஆபத்துகள் உங்கள் மாளிகையிலும் எங்களுக்கு நிகழலாம்!" - அந்த இளநங்கை கூறியதும், குறுக்கிட்டாள் அந்த நடுத்தர வயது பெண்மணி.

"கல்பலதா! வாயை மூடு! இவரைப் பார்த்தால் மிகவும் நல்லவராகத் தெரிகிறது. பல்லவத்தின் குலக்கொழுந்து நமக்கு ஆதரவு தருகிற போது அதை ஏற்றுக்கொள்வதுதான் புத்திசாலித்தனம். நாம் போக வேண்டிய இடத்திற்குத்தான் போகிறோம்!" என்ற அந்தப் பெண்மணி, பார்த்திபனை நோக்கினாள்.

"தம்பி! இன்றிரவு உனது மாளிகையில் தங்கிவிட்டு, நாளை விடியற்காலையில் நாங்கள் புறப்பட்டு விடுகிறோம்!" - அந்தப் பெண்மணி கூற, கல்பலதா என்று அழைக்கப்பட்ட அந்த இளநங்கை பார்த்திபனை வெறுப்புடன் நோக்கினாள்.

"ஒரு இரவு கூட இவனது மாளிகையில் நாம் தங்கக்கூடாது!" - சீற்றத்துடன் கூறினாள், கல்பலதா.

அவளது திடீர்க் கோபத்திற்கான காரணம் தெரியாமல் பார்த்திபன் திகைத்தாலும், சமாதானம் செய்யும் எண்ணத்தில் அவளை நோக்கினான்.

"பெண்ணே! சோழர்கள் காஞ்சியைக் கைப்பற்றி யுள்ளனர். காஞ்சியின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. தனியே செல்லும் உன்னைப் போன்ற பேரழகிகளுக்கு நிறையவே ஆபத்து உண்டு. புரிந்து கொள்! உனது பாட்டியின் நிலைமையைப் பார். பசியாலும், தாகத்தாலும், மயங்கிக் கிடக்கிறார். இந்தத் தருணத்தில் உனது பிடிவாதங்களை விட்டு, எங்கள் மாளிகைக்கு வந்து தங்கு!" - பார்த்திபன் பேசி முடித்திருக்க மாட்டான்.

அவளது ஆத்திரம் எல்லையை மீற, கல்பலதா தனது வாளை ஓங்கி அவனது அகன்று பரந்து விரிந்திருந்த மார்பின் மையத்தில் பதித்தாள்.

"ஆஹா! எங்கள் மீது என்ன அக்கறை உனக்கு, நாங்கள் இப்படி நிர்க்கதியாக அலைவதற்குக் காரணமே நீயும், உனது தந்தையும், உனது மூதாதையர்களும்தானே!" என்று கல்பலதா கண்கள் சிவக்க ஆவேசத்துடன் கூறினாள்.

"கல்பலதா! என்ன இது!" அந்த நடுத்தர வயது பெண் பதைபதைக்க, அவளோ தனது கோபக் கண்களால் பார்த்திபனை எரித்துவிடுவது போன்று நோக்கினாள்.

"நீ சும்மா இரு, அம்மா! நீண்ட நாள் கணக்கினைத் தீர்க்கும் வேளை வந்துவிட்டது. இவனது உயிரை வாங்கினால்தான் எனது ஆத்திரம் அடங்கும்!" என்றவுடன் பார்த்திபனுக்கு கோபம் பொங்கியது.

உதவி புரிய வந்தவனிடம் இப்படியா நாகரீகம் இன்றி நடந்து கொள்வது? சிறு பெண்ணாயிற்றே என்று பார்த்தால், எல்லையை மீறுகிறாளே.

தனது மார்பில் உரசிக் கொண்டிருக்கும் வாளின் நுனியை அலட்சியம் செய்தான், பார்த்திபன்.

"பெண்ணே! நான் மட்டும் உனக்கு நிகழ இருந்த பேராபத்தை அலட்சியம் செய்து எனது வழியே சென்றிருந்தால், இந்த வேளையில் நீ சின்னாபின்னமாகி இருப்பாய். போனால் போகிறது என்று உதவ நினைத்தால், என்னை எதிரியாகப் பாவிக்கிறாய். எனது ஆத்திரத்தைக் கிளறாதே. பல்லவ குலத்தோன்றல் நான். எனது உக்கிரம் எல்லையை மீறினால், அந்தக் கள்வர்களைக் காட்டிலும் நான் கொடுமையானவனாக இருப்பேன்!" - பார்த்திபன் அவளை எச்சரித்தான்.

"நிருபதுங்கரின் வழியில் பிறந்தவர்கள்தானே! கொடூரத்திற்குக் கேட்கவா வேண்டும்? அதே பல்லவ

குருதிதான் எனது உடலிலும் ஓடுகிறது. என்னை யார் என்று நினைத்தாய்?" - கல்பலதா சீற, நிலைமை எல்லையை மீறுவதை உணர்ந்தாள், அந்த நடுத்தர வயது பெண்மணி. தன்னை மறந்து ஓடி வந்து பார்த்திபனின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"பார்த்திபா! கோபப்படாதே! அறியா சிறுமி அவள். நாங்கள் யார் என்பதை அறிந்தால் நீ இப்படியெல்லாம் பேசமாட்டாய்!" - அந்தப் பெண்மணி கூற, பார்த்திபன் வியப்புடன் அவளை நோக்கினான்.

"ஆம்! நாம் யார் என்பது தெரிந்தால், அவன் இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கமாட்டான். நம் மூவரையும் வெட்டி சாய்த்துவிடுவான்!" - கல்பலதா அவன் நெஞ்சிலிருந்து வாளை அகற்றாமல் தனது தாயை நோக்கிப் பேச, அந்தச் சந்தர்ப்பத்தைப் பிரயோகித்துக் கொண்ட பார்த்திபன், அவளது வாளைப் பற்றி அவளைத் தனது பக்கமாக இழுத்து அவளது கையை முறுக்கி பின்பாகப் பற்றினான். தனது வாளை உருவி, அவளது கழுத்தில் குறுக்காக வைத்தான்.

மலைப்பாம்பிடம் சிக்கிய முயலைப் போன்று அவள் தத்தளிக்க, அவன் தனது இரும்புக் கரத்தால் அவளது கரத்தை இன்னும் முறுக்கி அவளை நகர விடாமல் செய்தான்.

"அப்பா பார்த்திபா! எனது பெண்ணை ஒன்றும் செய்துவிடாதே. நாங்கள் மூவரும் அபராஜிதவர்ம பல்லவனின் வழித்தோன்றல்கள்!" என்றதும் பார்த்திபன் அதிர்ச்சியில் உறைந்து போக, அவனது பிடி தானாகவே தளர, அவனிடமிருந்து நழுவிய கல்பலதா, தனது வாளினை எடுத்துக் கொண்டு அவனை வெட்டி வீழ்த்த தாவி வர, பார்த்திபனும் தனது வாளால் அவளது முயற்சியை முறியடித்தான். இருவரும் வாட்களைக் கொண்டு மோதும் ஒலி அந்த இரவு வேளையின் அமைதியைக் குலைக்க, தனது தாய் கெஞ்சியும் கேளாமல்,

கல்பலதா பார்த்திபனுடன் தொடர்ந்து மோதிக் கொண்டிருந்தாள்.

ஒரு சமயத்தில், கல்பலதா தனது வாளினால் அவனது புஜத்தைக் கிழிக்க, பார்த்திபனின் கோபம் எல்லை மீறியது. கல்பலதாவின் காலை தனது காலால் இடறிவிட, அவள் நிலைதடுமாறி நிலத்தில் சரிய அவளது இரு கரங்களையும் பற்றி எழுப்பி, தனது மேல்துணியால் அவற்றைக் கட்டினான். அந்தத் துணியின் ஒரு பகுதியைக் கிழித்துப் பந்தாகச் சுருட்டி கல்பலதாவின் வாயில் அடைத்தவன், ஒரு மரத்தின் அடியில் அவளை உருட்டித் தள்ளினான்.

புஜத்தில் பெருகிய குருதியை அலட்சியம் செய்தவன், கல்பலதாவின் தாயை அணுகினான்.

"இப்போது கூறுங்கள்.. நீங்கள் அபராஜித பல்லவனின் வாரிசா? எங்ஙனம்?" - பார்த்திபன் கேட்டான்.

"இதோ மயங்கிக் கிடைக்கும் எனது தாய் கங்காவதிதான் அபராஜித பல்லவனின் பெயர்த்தி. அவருக்கும், சந்திராகாந்திக்கும் பிறந்த மகள். இருபாவதி தான் இவரது தாய். ஆதித்த சோழனால் அபராஜித பல்லவர் கொலை செய்யப்பட்ட போது, குழந்தை கிருபாவதியுடன் கங்கநாட்டில் அடைக்கலம் புகுந்தாள். கிருபாவதி வளர்ந்ததும் கங்க நாட்டு அமைச்சரின் மகன் குணதுர்கனை மணந்தாள். அவர்களுக்குக் கங்காவதி என்கிற மகள் பிறந்தாள். அவள்தான் இந்த மூதாட்டி. ஒரு கயவனால் தனது கற்பை இழந்த கங்காவதிக்கு பிறந்த மகள்தான் நான். எனது பெயர் சமந்தக பல்லவி. தைலபன்* என்கிற தாராவதி நாட்டு இளவரசன் என்னை மணந்தான். எனக்குக் கல்பலதா பிறந்தாள்.

* Tailapa II, a feudatory ruler from Tardavadi (modern Bijapur district), re-established the Chalukya rule by defeating the Rashtrakutas during the reign of Karka II. He timed his rebellion to coincide with the confusion caused by the invading Paramara of Central India to the Rashtrakutas capital in 973. (wikipedia)

தைலபன் குந்தளர் களுடன் மூண்ட போரில் இறந்துவிட, நாங்கள், தக்கோலம் அருகில் வசித்தோம். எனது தாய்க்கு உடல்நலம் பாதிக்க, மருத்துவ வசதிக்காகவும், பிழைப்பைத் தேடியும் காஞ்சி நகருக்கு வந்துள்ளோம்."-சமந்தக பல்லவி கூறினாள்.

விக்கித்துப் போய் நின்றிருந்தான், உபேந்திர பார்த்திபன். பல்லவ குலத்தின் எஞ்சியிருக்கும் ஒரே இரத்தம் தான் மட்டுமே என்று நினைத்திருக்க, இதோ, அபராஜிதனின் குடும்பம் எங்கிருந்தோ திடீரென்று முளைத்திருக்கிறதே! பார்த்திபன் ஐயத்துடன் சமந்தக பல்லவியை நோக்கினான்.

"உண்மையிலேயே நீங்கள் அபராஜிதனின் வாரிசுதான் என்பதற்கு ஆதாரம்?" - பார்த்திபன் கேட்டதும், தனது மேனியை இப்படியும் அப்படியும் அசைத்தபடி குரல் கொடுத்தாள், கல்பலதா.

"என் மகள் என்ன கேட்க நினைக்கிறாள், தெரியுமா? நிருபதுங்க பல்லவனின் வாரிசு என்று உன்னை எவ்வளவு உறுதியுடன் கூறுகிறாயோ, அதே உறுதியுடன் தான் நாங்களும் அபராஜிதனின் வாரிசு என்று கூறுகிறோம் என்கிறாள். இருப்பினும், உனது ஐயத்தைப் போக்குவது எனது கடமை!" என்ற சமந்தக பல்லவி, தனது தோளினில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்தத் துணிப் பையில் இருந்து ஒரு வஸ்திரத்தை எடுத்தாள். அதன் முடிச்சை அவிழ்த்து அதன் உள்ளே இருந்து ஒரு சுவடியை எடுத்தாள்.

"நாங்கள் அபராஜிதனின் வாரிசுதான் என்பதற்கு அடையாளம் அவரது மனைவி சந்திராகாந்தி வசம் சிக்கிய இந்தச் சுவடிதான்!" - சமந்தக பல்லவி அந்தச் சுவடியை பார்த்திபனிடம் நீட்டினாள்.

ஐயம்படுகை ஆலமரத்தின் அடியில் இருந்த சுமைதாங்கிக் குழியில் சந்திராகாந்திக்கு கிட்டிய அதே சுவடிதான் அது.

பார்த்திபன் அதனை வாசித்தான்.

மல்ல எதி என்கிற குணபரன், சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனுக்குத் தாரா என்கிற கிழவி மூலம் அனுப்பிய ஓலை. தான் தேவ உடும்பர அத்திவரதனின் சிலையைக் கடலின் அடியில் இருந்து மீட்டு, பிரவாள மாளிகையின் புகைபோக்கியில் பதுக்கிவிட்டு, தாரா மூலம் செய்தியை அனுப்ப, அவளும் ஐயம்படுகை சோதனைச் சாவடியில் சோதனை நடப்பதைக் கண்டு பயந்து, சுவடியை சுமைதாங்கியில் பதுக்கி வைக்க, சந்திராகாந்தியின் வசம் சிக்கிய அதே ஓலையைத்தான் பார்த்திபன் வாசித்துக் கொண்டிருந்தான்.

சுவடியைப் படித்து முடித்ததும், அவன் இனம் புரியாத உணர்ச்சிகளில் ஆழ்ந்திருந்தான். பல்லவத்தின் மற்றொரு கிளை இன்னமும் உயிருடன் வாழ்கின்றது. அவர்களிடம் எதிர்ப்பினைக் காட்டுவதா இல்லை உறவை புதுப்பித்துக் கொள்வதா?

யோசனையில் ஆழ்ந்தபடி அவன் நின்றிருந்தான். பிறகு அந்த ஓலையை சமந்தக பல்லவியிடமே நீட்டினான்.

"மூன்றாம் நந்திவர்மனின் இரண்டு மகன்களில் நான் நிருபதுங்கன் பரம்பரை. நீங்களோ கம்பவர்மனின் மகன் அபராஜிதன் பரம்பரை. சற்றே யோசித்துப் பாருங்கள். கம்பவர்மன் தம்பி. நிருபதுங்கன்தான் அண்ணன். அபராஜிதன் பெரியப்பனையும் அவனது மகளையும் நிராதரவாக விரட்டி அடித்துவிட்டு, தந்தையையும் புறக் கணித்துவிட்டு, ஆதித்தனுடன் சேர்ந்து அரியணையைக் கைப்பற்றினான். அவன் எனது தந்தைக்குச் செய்த துரோகத்திற்குத் துரோகத்தாலேயே மடிந்தான். சரித்திரம் இப்படி இருக்க, உங்கள் மகள் என் மீது பாய்கிறாளே.. நான்தான் உங்களை விரட்டி அடித்தது போன்று. எப்படியோ, அத்திமலையானின் அருளால் நாம் இன்று அனைவரும் ஒன்று கூடி இருக்கிறோம். நீங்கள் எனது தந்தைக்குச் சகோதரி ஆகிறீர்கள். எனக்கு நீங்கள் அத்தை

முறை. எனவே உங்களையும், பாட்டியாரையும் தக்க மரியாதைகளுடன் எனது மாளிகையில் தங்க வைக்கிறேன். உங்கள் மகள் என்னை விரோதித்துக் கொண்டதோடு, எனது புஜத்தில் காயத்தை ஏற்படுத்தி இருக்கிறாள். இந்தக் காயம் ஆறும் வரையிலாவது அவளுக்குச் சிறைவாசம் அளிக்க நினைக்கிறேன். அப்போதாவது நடத்தையில் இங்கிதம் ஏற்படுகிறதா என்று பார்ப்போம்!" கிண்டலாகக் கூறினான், பார்த்திபன்.

"பார்த்திபா! அபராஜிதனின் வழித்தோன்றல்கள் நாங்கள் அனைவரும் பெண்களே. நிருபதுங்கனின் வழித்தோன்றல் அனைவரும் ஆண்களே. இதுவே அத்தி மலையானின் சங்கல்பம்தான். நமது மூதாதையர் களிடையே நிகழ்ந்த பிணக்குகள் நீங்கட்டும். பெண் களாகிய எங்கள் பொறுப்பையும் பாதுகாப்பையும் நீ எடுத்துக்கொள். மீண்டும் பல்லவத்தின் நந்திக்கொடி காஞ்சியில் பறப்பதற்குச் செயலாற்று. நாங்களும் உறுதுணையாய் நிற்கிறோம்!" - சமந்தக பல்லவி கூறியதும், நெகிழ்ந்து போனான் பார்த்திபன். அபராஜிதன் மட்டும் அவசரப்படாமல் இருந்திருந்தால், பல்லவம் அழிந்தே இருக்காது. தங்களுக்குள் அரியணை சண்டையைப் பெரிதாக்கி, ஆதித்த சோழனுடன் சேர்ந்து பெரியப்பனையே கவிழ்த்தான். பிறகு அவன் கையாலேயே மாண்டும் போனான்.

"கவலைப்படாதீர்கள் அத்தை. இனி நாம் அனைவரும் ஒன்றாக எனது மாளிகையிலேயே வாழ்வோம். உங்களை நான் பார்த்துக் கொள்கிறேன் இனி.." என்றவனின் சிந்தையில் திடீரென ஒரு தீப்பொறி தோன்றியது.

"அத்தை! அந்தச் சுவடியைக் கொடுங்கள்!" என்று வாங்கிக் கொண்டவன், மீண்டும் அந்த ஓலையைப் படித்தான்.

'அத்திமலைத்தேவனின் சிலையை பிரவாள மாளிகையில் பதுக்கி வைத்திருக்கிறேன்' என்று மல்ல

எதி குறிப்பிட்டிருந்த வாக்கியத்தை மீண்டும் மீண்டும் படித்தான். அவனது கண்கள் யோசனையுடன் தொலைவில் பரவியிருந்த இருளையே வெறித்தன.

பிரவாள மாளிகையில் சிலை பதுக்கப்பட்டிருந்ததா? மாளிகையை இடிக்கும் பணிகள் நிறைவடைந்துவிட்டன என்று நேமியங்கையரும், குழலழகனும் வந்து சொன்னார்களே. சிலையைப் பற்றி ஒன்றுமே அவர்கள் குறிப்பிடவில்லையே. சோழ நாட்டில் இருந்து இரகசிய செய்தி வந்திருக்கிறது என்று தயங்கி நின்றார்களே. இவன் முன்பாகப் பேச அவர்கள் விரும்பவில்லையே! ஒருவேளை, சிலையை அவர்கள் கண்டெடுத்துவிட்டார் களோ? இவனுக்குத் தெரியாமல் மறைக்கின்றனரோ?

யோசித்துக் கொண்டே இருந்த பார்த்திபனின் சிந்தனையைக் கலைத்தாள், சமந்தக பல்லவி.

"பார்த்திபா! எனது தாயின் மூர்ச்சை தெளிந்து விட்டது!" என்று கூற, எழுந்து அமர்ந்த கங்காவதியை கரிசனத்துடன் நோக்கினான் பார்த்திபன்.

"பாட்டியாரே! நான் உங்கள் பெயரனாக வேண்டும்! முதன்முறையாகத் தங்களைச் சந்திக்கும் எனக்கு ஆசி கூறுங்கள்!" என்றவன், தனது இரு கரங்களால், கங்காவதியை சுமந்து கொண்டு சென்று குதிரையின் மீது அமர வைத்தான்.

"கிளம்புங்கள் அத்தை!" என்று சமந்தகியை நோக்கிக் கூற, அவள் திகைப்புடன் திரும்பி நோக்கினாள்.

"பார்த்திபா! எனது மகளை மறந்துவிட்டாயே!"- சமந்தகி கூற, கல்பலதாவை நோக்கி நடந்தான், பார்த்திபன்.

"உனது மகள் அல்ல. எனது.." என்று தனது வாக்கியத்தைக் கூறாமல் முடிக்க, கல்பலதா சினத்துடன் அவனை வெறித்தாள்.

“எனது கைதி என்று சொல்ல வந்தேன்!” என்றவன், அவளது புஜத்தைப் பற்றித் தூக்கி நிறுத்தினான்.

“எனது கைதியாகவே வா!” என்றவன் அவளது வாயில் திணித்திருந்த துணிப்பந்தை நீக்கினான். ஆனால், கைகட்டுகளை அவிழ்க்கவில்லை.

சற்று முன்பாக, அவனுடன் வாளேந்திப் போரிட்ட போது, அவனது புஜத்தைக் காயப்படுத்தியிருந்தாள் கல்பலதா. அதனால் அவனுக்குக் கோபம் உண்டாக, அவளை துவேஷத்துடன் நோக்கி இருந்தான், பார்த்திபன். ஆனால் இப்போது அவன் அவளை நோக்கிய போது, அந்தப் பார்வையில் கோபமோ, உக்கிரமோ, துவேஷமோ காணப்படவில்லை. ஆனால் அந்தப் பார்வை, கல்பலதாவுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. காரணம், அந்தப் பார்வையில் பார்த்திபனையும் மீறி ஒருவிதக் கனிவு பிறந்திருந்தது. அந்தக் கனிவைக் கண்டுதான், கல்பலதா அச்சப்பட்டாள். காதலுக்கு முதலடி கனிவுதானே.

# 3. ஆலய வாயிலில் ஒரு அமானுஷ்யன்

*பழையாறை வடதளி! சோழ அரண்மனையின் மதிலைக் கடந்து சென்று வலப்புறமாகத் திரும்பினால், தருமபுரீஸ்வரர் ஆலயத்தை அடைந்துவிடலாம். பழையாறையில் உள்ள சோமேஸ்வரரின் ஆலயத்தைக்* காட்டிலும் சிறியதுதான். ஆனால், அரண்மனையை ஒட்டியே இருந்ததால், சோழ குடும்பத்தின் மன்னர்களுக்கு மிகவும் உகந்த ஆலயமாகத் திகழ்ந்தது.*

---

* பழையாறை சோமேஸ்வரர் கோயில் அல்லது பழையாறை வடதளி- பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். அப்பர் பாடல் பெற்ற இச்சிவாலயம் தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ளது. அப்பர் உண்ணாவிரதமிருந்த தலமென்பதும் தொன்நம்பிக்கை (ஐதிகம்). காவிரி தென்கரைத் தலங்களில் 24ஆவது சிவத்தலமாகும். வடதளியில் சுவாமி, விமலநாயகி உடனுறை தருமபுரீசுவரராகவும், பழையாறையில் சுவாமி, சோமகமலாம்பிகை உடனுறை சோமேஸ்வரராகவும் காட்சி அளிக்கின்றனர்.

பழையாறை ஒரு தேவார வைப்புத்தலமாகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்த கும்பகோணம்-ஆவூர் சாலையில் உள்ள முழையூர் கிராமம் வழியாகப் பழையாறை-வடதளி தலத்தை அடையலாம். இக்கோயில், கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இது பழையாறை வடதளி, வடதளி என இரு திருவூர்களாக இருக்கின்றன. இவ்வூரின் தெற்கிலும் வடக்கிலும் முடிகொண்டான் ஆறும், திருமலைராயன் ஆறும் ஓடுகின்றன. முடிகொண்டான் ஆறு முற்காலத்தில் பழையாறு எனப்பட்டதால் அதன் கரையிலுள்ள ஊர் பழையாறை எனப்பட்டது; அதன் வடகரையில் உள்ள ஊர் பழையாறை வடதளி எனப்பட்டது. பல்லவ மன்னவர்க்கு அடங்கிச் சோழர்கள் சிற்றரசாக இருந்த காலத்தில் அவர்கள் வாழ்ந்த இடம் பழையாறை. பிற்காலச் சோழர் ஆட்சியில் இவ்வூர் இரண்டாவது தலைநகரமாயிற்று. சோழர் அரண்மனை

விமலநாயகி சந்நிதியில் கண்களை மூடி, மெய்ம்மறந்து தியானத்தில் இருந்தாள் ஆழ்வார் குந்தவை. சுந்தர சோழரின் அருமை மகள். ஆதித்த கரிகாலனின் தங்கை. பொதுவாகவே பெண்களுக்கு அரசியலில் ஆர்வம் அதிகம் இருக்காது. ஆனால் ஆர்வம் ஏற்பட்டுவிட்டால், ஆண்களைக் காட்டிலும் அதிவேகத்துடன் செயல்படு வார்கள். துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டிருப்பார் கள். இறைவனுக்கு அவ்வப்போது நினைவு மறதி ஏற்படுவது வழக்கம் போலும். இல்லையென்றால், குந்தவையைப் பெண்ணாகப் பிறக்கச் செய்திருப்பானா? அவள் மட்டும் ஆணாகப் பிறந்திருந்தால், உலகத்தையே ஆண்டிருப்பாளோ என்னவோ!

இயற்கையிலேயே ராஜதந்திரமும், சாணக்கியத்தனமும் கொண்டவள். ஆனால் மாவீரன் அண்ணன் ஒருவன்

---

இருந்த இடம் 'சோழ மாளிகை' என்னும் தனி ஊராக உள்ளது. தேவார காலத்தில் 1.முழையூர், 2.பட்டீச்சரம், 3.சத்திமுற்றம், 4.சோழ மாளிகை ஆகிய நான்கு ஊர்களும் சோழர்களின் நாற்படைகளாக விளங்கியுள்ளன. நந்திவர்மன் பதுங்கியிருந்து, பாண்டியர்களால் முற்றுகையிடப்பட்ட நந்திபுர விண்ணகரமும், பழையாறையும் ஒன்றே. இவ்வூர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பழையாறை நகர் என்றும், 8-ஆம் நூற்றாண்டில் நந்திபுரம் என்றும், 9, 10-ஆம் நூற்றாண்டில் முடிகொண்ட சோழபுரம் என்றும், 12-ஆம் நூற்றாண்டில் இராசபுரம் என்றும் வழங்கப்பெற்றுள்ளது.

பழையாறை நான்கு சிறு பிரிவுகளாகும்-

1.வடதளி: (தாராசுரத்திலிருந்து ஐந்து கி.மீ. தொலைவு, அப்பர் பெருமான் உண்ணாவிரதமிருந்த இடம். (தற்போது அதிக வீடுகளில்லை) 2.மேற்றளி, 3.கீழ்த்தளி (பழையாறை), 4.தென்தளி என்பன அந்நான்காகும். சம்பந்தப் பெருமான் 'அப்பரே' என்று திருவாய் மொழிந்த திருநாவுக்கரசரின் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம். இராசராச சோழனால் திருப்பணி செய்யப்பட்ட இக்கோயில் அவனுடைய இயற்பெயரால் அருண்மொழித் தேவேச்சரம் என்றழைக்கப் படுகிறது. குந்தவை பிராட்டி இவ்வூரில்தான் இராஜேந்திரனை வளர்த்தாள்.

பட்டத்து இளவரசனாகத் திகழும் போது அவளது திறமைகள் அனைத்துமே, கடலின் மீது பெய்யும் மழைக்கு ஒப்பானதுதானே. தான் ஆணாகப் பிறக்கவில்லையே என்கிற வருத்தம் எப்போதுமே குந்தவைக்கு உண்டு. தனது மனவருத்தத்தை, ஆலயங்களுக்குச் சென்று கழித்து வந்தாள். விமலநாயகி சந்நிதியில் அவள் தியானத்தில் இருந்த போது, ஓர் உருவம் ஆலயத்தை நோக்கி மெதுவாக நகர்ந்து வந்தது. குந்தவையின் இரதத்தை உறுத்து நோக்கிய அந்த உருவம், சற்றே யோசித்தபடி நின்றது. பிறகு ஆலய வாயிலில் கைகளைக் கட்டியபடி நின்று, ஆலயத்தின் உள்ளேயே நோக்கிக் கொண்டிருந்தது. விமலநாயகி சந்நிதியின் வெளியே நின்றபடி, ஆலயத்திற்கு வருவோரைக் கவனித்துக் கொண்டிருந்த தெட்டக்கனியின்* பார்வை, ஆலயத்தின் வாயிலில் நின்றிருந்த அந்த உருவத்தின் மீது படர்ந்தது. அவளுடைய முகம் பரபரப்படைந்தது. சரியாக, அந்த உருவத்தின் பார்வையும் தெட்டக்கனியின் பக்கமாக நகர, உடனே அந்த உருவத்தின் விழிகள் சுழன்றன.

'முக்கியமான தகவலுடன் வந்திருக்கிறேன். உடனே குந்தவையைப் பார்க்க வேண்டும்' என்கிற செய்தியினை அந்த சுழலும் விழிகள் தெரிவிக்க, தெட்டக்கனி, ஒருமுறை தனது கண்களை மூடித்திறந்து, செய்தியைத் தான் புரிந்து கொண்டுவிட்டதை அந்த உருவத்திற்கு உணர்த்திவிட்டு, சன்னிதியின் உள்ளே சென்றாள்.

அப்பர் உண்ணாவிரதமிருந்த பகுதியின் அருகே அமர்ந்தபடி தியானத்தில் இருந்த குந்தவையின் அருகே சென்று நின்றாள்.

குந்தவையின் முகத்தை ஒருமுறை கவனித்தாள், தெட்டக்கனி. அவளது முகம் நிஸ்ச்சலனமாக இருந்தது.

* குந்தவையின் உயிர்த்தோழி தெட்டக்கனி. இவளைப் பற்றிச் சங்கதாராவில் குறிப்பிட்டிருந்தேன்.

"இளவரசி! அமானுஷ்யம் வந்திருக்கிறது!" - கிசுகிசுத்த குரலில் தெட்டக்கனி கூற, குந்தவையின் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் இல்லை. அவளது முகத்தைத் தொடர்ந்து கவனித்தபடியே நின்றிருந்தாள், தெட்டக்கனி.

கொவ்வைப்பழங்களாகச் சிவந்திருந்த குந்தவையின் இதழ்கள்தான் முதலில் குறுநகையாக விரிந்தன. அதனால் அசைந்து செவிகளில் அசைவு ஏற்பட்டு, அவற்றில் ஊசலாடிக் கொண்டிருந்த தொங்கணங்கள் சற்றே அசைந்துக் கொடுத்தன. குறுநகை புரிந்த குந்தவையின் கன்னச் சதைப்பற்று சிறு மாங்கனி போன்று தோற்றமளிக்க, அவளது மேனி ஒருமுறை குலுங்கியது. பிறகு தாமரை மலர்களாக அவளது கண்கள் விரிந்தன.

தனது பார்வையை தெட்டக்கனியின் பக்கமாக வீசினாள்.

"எங்கே இருக்கிறான், அமானுஷ்யன்?" - குந்தவை கேட்க, ஆலயத்தின் வாயிலை நோக்கிக் கையை நீட்டினாள், தெட்டக்கனி.

இந்த வினாவைக் கேட்டிருக்க வேண்டிய அவசியமே குந்தவைக்கு இல்லை. அமானுஷ்யன் என்கிற அந்த மர்ம மனிதன் அரண்மனையின் உள்ளேயோ, ஆலயத்தின் உள்ளேயோ பிரவேசிக்கமாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். தனது கடமையை ஆற்றிவிட்டுப் போய்க் கொண்டே இருப்பான். அனாவசிய உரையாடல் அவனிடம் இருக்காது. நெஞ்சுரம் மிக்கவன். இதயத்தில் வன்மம், செயலில் வேகம், எதற்கும் அஞ்சாமை ஆகிய குணங்களைக் கொண்டிருப்பவன். அவனது உடலின் ஒவ்வொரு அணுவிலேயும் பல இரகசியங்கள் பதிவாகி உள்ளன. குந்தவையின்றி அமானுஷ்யனின் உடலில் ஓர் அணுவும் அசையாது. அதனால் எந்த இரகசியமும் வெளிப்படாது என்பது அவளுக்கும் தெரியும்.

சிவாச்சாரியார் நீட்டிய தீபாராதனையைக் கண்களில் ஒற்றிக்கொண்டவள், அவரை நோக்கிப் புன்னகைத்து

விட்டு ஆலயத்தின் வாயிலை நோக்கி நடந்தாள். நெடிய தேகமும், முறுக்கேறிய உடற்கட்டும், கம்பீர முகமும் கொண்டிருந்த அமானுஷ்யனை நோக்கிப் புன்னகைத்த படி நடந்தாள்.

அமானுஷ்யன் பதிலுக்குப் புன்னகைக்கவில்லை. இறுகிய முகத்துடன், தனது கைகளைக் கட்டியபடி, கோபுர வாயிலின் சுவரில் சாய்ந்திருந்தான். இளவரசி வருகிறாள் என்கிற பணிவு கூட அவனது முகத்தில் தென்படவில்லை. குந்தவை அருகே வந்ததும், மடித்திருந்த தனது கைகளை விடுவித்து மேலுங்கீழுமாக ஒருமுறை தலையை அசைத்தான். அதுதான் அவன் தனக்குச் செய்யும் பணிவான மரியாதை என்பது குந்தவைக்குத் தெரியும்.

அதற்கு மேல் பணிவினை அவனிடம் எதிர்பார்க்க முடியாது. இதயத்தைக் கல்லாக மாற்றி, மகா பாதகங்களைச் செய்யத் துணிந்தவர்கள், இங்கிதத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். கவலை கொள்ளவும் கூடாது.

நிழலாகச் செயல்பட்டு மானிடர்களால் இயலாத காரியங்களை அவன் செய்ததால் அவனுக்கு அமானுஷ்யன் என்று பெயரிட்டதே குந்தவைதான். தனது அரசியல் ஒற்றனாக, ஆபத்தான காரியங்களைத் துணிந்து செயலாற்றும் அவனது நம்பகத்தன்மையைக் குறித்து குந்தவைக்கு எவ்வித ஐயங்களும் இல்லை. அவள் அவனைப் பரிசோதிக்க வேண்டி நடத்திய அத்தனை சோதனைகளிலும் வெற்றி பெற்றிருந்தான்.

"அமானுஷ்யரே! என்ன விஷயம்? காஞ்சிக்கு சென்றீர்.. அதற்குள் வந்துவிட்டீரே?" - குந்தவை கேட்டாள்.

"முக்கியமான செய்திகள் உள்ளன. பல்லவத்தின் வாரிசான உபேந்திர பார்த்திபன் என்பவனைத் தனது நண்பனாகவும், ஆலோசகனாகவும் அங்கீகரித்திருக்கிறார்,

இளவரசர். இருவரிடையே கருத்தொருமித்து தூய்மையான நட்பு மலர்ந்துள்ளது. காஞ்சியில் தான் தங்குவதற்கு மாளிகை ஒன்றை எழுப்பத் திட்டமிட்டுள்ளார், இளவரசர். பல்லவர்களின் அரண்மனையான ஒத்தாடை மாளிகை மிகவும் சிறியதாக உள்ளது. தஞ்சை அரண்மனையின் பணியாளர் விடுதி கூட அதைவிடப் பெரியதாக உள்ளது என்று இளவரசர் கருத்து கூறினாராம். காஞ்சியின் தருமவனப் பகுதியில் இருக்கும் பாழடைந்த மாளிகை ஒன்றை இடித்து, அங்கே புதிய மாளிகையை எழுப்ப இருக்கிறார், இளவரசர். அவரது நண்பர் பார்த்திபன் அந்த யோசனைக்குத் தடை கூறினாராம். அந்தப் பாழடைந்த மாளிகையில் துராத்மாக்கள் ஆவிகளாக உலவுகின்றன. பல்லவர்களின் அழிவுக்கு அந்த மாளிகையும் ஒரு காரணம் என்று எச்சரித்தார். நமது இளவரசர் கேட்கவில்லை. தனக்கு அமானுஷ்யங்களில் நம்பிக்கை இல்லை என்று கூறியுள்ளார். நானும் அப்பகுதி மக்களிடையே பேசிப் பார்த்தேன். அவர்களின் கருத்தும் - அந்த மாளிகை ஆபத்தான இடம்; ராசியில்லாத மாளிகை என்றெல்லாம் கூறுகிறார்கள். இளவரசர் ஏன் அப்படி ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார் என்று பலரும் கேட்கிறார்கள்."

குந்தவையின் முகம் யோசனையில் ஆழ்ந்தது. "எனது அண்ணன் மிகவும் பிடிவாதக்காரன். ஒன்றை செய்யாதே என்று கூறினால், நிச்சயம் அதனைத்தான் செய்வான். அவனுக்கு அமானுஷ்யங்களில் நம்பிக்கை கிடையாது. எனக்கு உண்டு. அமானுஷ்யம் என்று பெயர் கொண்ட உன்னிடம் மட்டும் எனக்கு நம்பிக்கை உண்டு!" - குந்தவை சிரித்தாள்.

அமானுஷ்யனின் முகத்தில் சலனம் எதுவுமில்லை. குந்தவை பாராட்டுவது தனது செவிகளில் விழவில்லை என்பது போன்று இருந்தான்.

"அது கிடக்கட்டும்! காஞ்சியில் எனது அண்ணன் புதிய மாளிகையை எழுப்புவதற்காக இடம் ஒன்றைத்

தேடுகிறான் என்கிற செய்தியைத் தெரிவிப்பதற்காகவா மீண்டும் பழையாறைக்கு வந்தாய்? ஆதித்தனைவிட்டு எக்காலத்திலும் அகலக்கூடாது என்று உன்னிடம் கூறியிருந்தேன் அல்லவா?" - குந்தவை கூறினாள்.

"அவரைவிட்டு நீங்காமல்தான் பின்தொடர்ந்து கொண்டிருக்கிறேன். ஆதித்த கரிகாலரும், அவரது ஆலோசகர் நேமியங்கையரும், குழலழகனும் தஞ்சைக்கு வந்திருப்பதால்தான், நானும் அவர்களைப் பின் தொடர்ந்து இங்கே வந்திருக்கிறேன். தங்களிடம் செய்தியைக் கூறிவிட்டு நான் உடனே தஞ்சைக்குச் செல்ல வேண்டும்!" - அமானுஷ்யன் கூறியதும் வியப்புடன் அவனை நோக்கினாள், குந்தவை.

"இதென்ன! சென்ற புதுமதி நாளில் காஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றவன், நாளை நிறைமதி நாள் வருவதற்குள் எதற்காகத் தஞ்சைக்குத் திரும்பி வந்திருக்கிறான்?" - குந்தவை கேட்டாள்.

"தெரியவில்லை. ஆனால், தஞ்சைக்குத் திரும்பி வந்தவர், அரண்மனை அதிகாரி ஜம்புகேஸ்வரரையும், கஜானா அதிகாரி விரிஞ்சிநாதரையும் இரகசியமாகச் சந்தித்துப் பேசியுள்ளார்.. இன்றிரவு கஜானா அறைக்கு அவர்கள் செல்ல இருப்பதாகத் தெரிகிறது!"- அமானுஷ்யன் கூறினான்.

குந்தவை யோசனையில் ஆழ்ந்தாள்.

காஞ்சிக்குச் சென்ற ஆதித்த கரிகாலன் வடபுல சேனைத்தலைவராக வடஎல்லையைப் பலப்படுத்தாமல், எதற்காகப் புதிய மாளிகை ஒன்றை எழுப்ப வேண்டும்? சாளுக்கியர்களின் கொட்டத்தை அடக்க விசேட கவனத்தைச் செலுத்து என்கிற கட்டளையின் பேரில் தான் சுந்தர சோழர் அவனை வடபுல சேனைத் தலைவனாக நியமித்திருக்கிறார். காஞ்சிக்குச் சென்றவன் தனது பணிகளைக் கவனிக்காமல், எதற்காக மீண்டும்

தஞ்சைக்கு வர வேண்டும்? கஜானா அறையில் அவனுக்கு என்ன வேலை?

குந்தவை யோசித்தபடி நின்றாள்.

"இளவரசி! தஞ்சை அரண்மனையில் புகுந்து கஜானா அறையில் பிரவேசித்து வேவு பார்ப்பது என்பது மிகவும் சிரமமான செயல் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்களது திட்டங்கள் என்ன என்பதை அறிவதற்கு இன்னும் சற்றுத் தாமதமாகலாம். அவர்கள் இன்று தஞ்சைக்கு வந்திருக்கின்றனர் என்பதை அறிவிக்கவே நான் பழையாறைக்கு வந்தேன். எனக்கு விடை கொடுங்கள். நான் எனது பணிகளைத் தொடர மீண்டும் தஞ்சைக்குப் போக வேண்டும்!" என்ற அமானுஷ்யன், குந்தவையின் பதிலுக்குக் காத்திராமல், தொலைவில் நிறுத்தியிருந்த தனது புரவியை நோக்கி நடந்தான்.

அவன் போவதையே யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்த குந்தவை, தெட்டக்கனியுடன் தனது இரதத்தை நோக்கி நடந்தாள். இரதத்தில் ஏறி, குதிரையின் கடிவாளத்தைப் பற்றியவள், திடீரென்று தனது பின்பாக நின்ற தெட்டக்கனியை உற்றுப் பார்த்தாள்.

"தெட்டக்கனி! நாம் இப்போது நேராகத் தஞ்சை அரண்மனைக்குப் போகிறோம்!" என்ற குந்தவை, தேரினை புயல் வேகத்தில் செலுத்தத் துவங்கினாள்.

பால்யத்திலிருந்தே குந்தவையின் உயிர்த் தோழியாகத் திகழும் தெட்டக்கனிக்கு இது புதிதல்ல. குந்தவையின் சிந்தனைக்கு சவாலாக ஏதேனும் தோன்றிவிட்டால், அதன் பின்னணியில் மறைந்திருக்கும் மர்மத்தை விடுவிக்காமல் அவள் ஓயவேமாட்டாள். அந்தப் புதிரை விடுவிக்கும் வரை அவள் உறங்கக்கூடமாட்டாள்.

தெட்டக்கனி மௌனமாக, இருபுறங்களிலும் படர்ந்திருந்த மரம்செடி கொடிகளைப் பராக்குப் பார்த்தபடியே பயணித்தாள். அவள் அமைதியாகப்

பயணிக்கிறாள் என்றால், அவளது ஆருயிர் தோழி குந்தவை தீவிர யோசனையில் இருக்கிறாள் என்பது பொருள்.

குந்தவையின் தேவைகள், ருசிகள், விருப்பங்கள் அனைத்தையும் தெட்டக்கனி அறிவாள். குந்தவைக்கு பசி எடுத்தால் அவளுக்கு வெளியே கூறத் தெரியாது. தெட்டக்கனிதான் காலம் பார்த்து அவளுக்கு உணவை வரவழைப்பாள். குந்தவை அணிய வேண்டிய ஆடை ஆபரணங்களையும் தெட்டக்கனிதான் தீர்மானிப்பாள்.

தனது மனதைப் பிரதிபலிக்கும் கண்ணாடி தெட்டக்கனி என்று குந்தவை அடிக்கடி கூறுவாள். 'தெட்டக்கனி எனக்குத் தெவிட்டாக்கனி!' என்று வாய் ஓயாமல் கூறிக் கொண்டிருப்பாள். ஆனால், அந்தத் தெட்டக்கனிக்கே பிடிபடாத விஷயங்கள் சில குந்தவையிடம் உள்ளன. சமயத்தில் குந்தவையின் முகம் இறுகிப் போய்க் காணப்பட்டால், தன்னிடம் கூடத் தெரிவிக்க விருப்பமில்லாத செய்திகளை அவளது சிந்தையில் போட்டு, அலசிக்கொண்டிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொள்வாள், தெட்டக்கனி.

நெருங்கிய தோழி ஆயிற்றே! குந்தவைக்குப் பிடிக்கும், பிடிக்காதவை எவை என்பதை நன்கு அறிந்தவளாயிற்றே. குந்தவைக்கு இனிப்பு அதிகம் பிடிக்காது.

ஒருமுறை தஞ்சை அரண்மனை அடுக்களை சிப்பந்திகள் அவளது பிறந்த தினத்தன்று விசேடமாகப் பாகுபருப்பு செய்து கொண்டு வந்திருந்தனர்.

முந்திரி மற்றும் கடலையை உடைத்து பாகு வெல்லத்தில் நனைத்து, கரும்புச் சாற்றைக் கலந்து இனிப்பு ஒன்றைத் தயாரித்திருந்தனர். குந்தவையின் கோபுரக் கொண்டையின் வடிவில் அந்த இனிப்பினை வடிவமைத் திருந்தனர். அதன் ஆபரணங்களாக ஆங்காங்கே வண்ணக் கற்கண்டுத் துண்டங்களைப் பதித்து சிங்காரித்

திருந்தனர். ஆழ்வார்குந்தவை தேவியின் பிறந்ததின சிறப்புப் பணியாரமாகிய அதற்கு 'இளவரசியின் சிகையலங்காரம்' என்று பெயரிட்டு ஆர்வத்துடன் தஞ்சையிலிருந்து பழையாறைக்கு எடுத்து வந்திருந்தனர். வழியில் ஒரு தோப்பில் மாங்காய்கள் நிறையக் காய்த்துத் தொங்கு வதைக் கண்ட அந்தச் சிப்பந்திகள், கூடை நிறைய மாங்காய்களைப் பறித்து எடுத்துக் கொண்டனர். குந்தவை மாங்காய்களை மிகவும் விரும்பி ருசிப்பாள். மாங்காய் சிந்திக்கும் தன்மையை அதிகப்படுத்தும் என்பாள், குந்தவை. தீர்க்கமான முடிவுகளை விரைவுடன் எடுக்க ஏதுவாக மாங்காய்கள் அறிவை கூர்மைப்படுத்தும் என்பாள், குந்தவை. இதைத் தெரிந்து கொண்டுதான், அந்தச் சிப்பந்திகள் வழியில் மாங்காய்களைச் சேகரித்து வந்திருந்தனர்.

"இளவரசியின் சிகையலங்காரம்!" என்றபடி அடுக்களை சிப்பந்திகள் தனது முன்பாக வைத்த அந்தப் பண்டத்தைக் கவனித்தாள், குந்தவை.

"என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்" இவ்வளவு அழகான சிகையலங்காரத்தை எப்படிச் சிதைப்பது? இதை உடைத்து உண்பதற்கு எப்படி மனம் வரும்?" என்று கூறிய குந்தவையின் பார்வை கூடையில் வைக்கப்பட்டிருந்த மாங்காய்களின் மீது படர்ந்தது.

"இவ்வளவு பாடுபட்டு இனிப்புத் தின்பண்டத்தைச் செய்து எடுத்து வருவானேன்? ஒரு மாங்காய் கொடுத்தாலே போதும், எனது பிறந்ததினத்திற்குச் சிறந்த பரிசாக இருக்கும்!" என்றவள் அவர்கள் முன்பாகவே கூடையில் இருந்து ஒரு மாங்காயை எடுத்து தெட்டக் கனியிடம் நீட்டினாள்.

தெட்டக்கனி மாங்காயைக் கழுவி, அதைச் சிறு துண்டங்களாக நறுக்கி, மிளகு மற்றும் உப்பு அரைத்த விழுதை மாங்காயில் தடவி குந்தவையிடம் நீட்ட,

குந்தவை அந்த மாங்காய்த் துண்டுகளை ருசிக்கத் துவங்கினாள்.

"ஆஹா.. என்ன ருசி! என்ன ருசி! மாங்காயின் புளிப்புடன் மிளகின் காரம் சேரும் போது எப்படிச் சுவைக்கிறது தெரியுமா?" என்று சிலாகித்து உண்டாள்.

"இவர்களுக்குப் பரிசைக் கொடுத்து அனுப்பு!" என்று குந்தவை தெட்டக்கனியிடம் கூற, அடுக்களை சிப்பந்திகளுக்கு, வேட்டியும், சேலையும் பரிசளித்து அனுப்பிவிட்டு தெட்டக்கனி மீண்டும் குந்தவையின் அறைக்குள் நுழைந்த போது, அவள் ஆக்ரோஷத்துடன் 'இளவரசியின் சிகையலங்காரம்' என்கிற அந்தத் தின்பண்டத்தையே வெறித்து நோக்கிக்கொண்டிருந்தாள்.

"குந்தவை! அந்தச் சிப்பந்திகளுக்குப் பெருத்த ஏமாற்றம். அந்தத் தின்பண்டத்தை நீ ருசித்துப் பார்த்து அவர் களைப் பாராட்டுவாய். உனது கையாலேயே பரிசுகளை வழங்குவாய் என்று நினைத்தார்கள். நீயோ அந்தத் தின்பண்டத்தை ருசிக்கவும் இல்லை, தொட்டுப் பார்க்கவும் இல்லை! போயும் போயும், மாங்காயை ருசிப்பதில் ஆர்வத்தைக் காட்டினாய்!" - தெட்டக்கனி கூற, அவளை ஆற்றாமையுடன் நோக்கினாள், குந்தவை.

"நினைவிருக்கிறதா தெட்டக்கனி! துலா திங்கள் உத்திராடம் அன்று ஆதித்த கரிகாலனின் பிறந்த தினம். அன்று இதே சிப்பந்திகள் அவனுக்கும் இதே போன்று ஒரு இனிப்புத் தின்பண்டத்தைச் செய்திருந்தனர். அந்தத் தின்பண்டம் எதன் வடிவத்தில் அமைக்கப்பட்டது?"- குந்தவை கேட்டாள்.

சற்றே யோசித்த தெட்டக்கனி, பிறகு தயங்கியபடி கூறினாள், "சோழ மகுடம் போன்று வடிவமைக்கப் பட்டிருந்தது!" என்று.

"ஆம்! ஆதித்தனுக்கு சோழ மகுடம் வடிவில் தின்பண்டம். எனக்கு எனது சிகையலங்காரத்தின்

வடிவில் தின்பண்டம். ஆடை ஆபரணங்களில் எனக்கு நாட்டம் இல்லை என்பதை அறிந்திருந்தும், இத்தகைய பரிசினை எனக்கு அளித்திருக்கின்றனர். நான் அவர்களைப் பரிசு கேட்டேனா..?" என்று கூறியவள், கோபத்தோடு அந்த இனிப்புத் தின்பண்டத்தைச் சாளரத்தின் வழியாக வெளியே வீசியெறிந்தாள், குந்தவை.

பொதுவாகவே, குந்தவைக்கு இனிப்பு அதிகம் பிடிக்காது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு இனிப்புகளை அறவே ஒதுக்கினாள். வாய் எரிய காரவகைகளை உண்டுவிட்டு, 'புஸ் புஸ்' என்று மூச்சுவிட்டபடி கனிரசம் அருந்துவாள்.

அதன்பின் தெட்டக்கனி எச்சரிக்கை உணர்வைக் கொண்டாள். சர்ச்சைக்குரிய செய்திகளை அவளிடம் விவாதிப்பதைத் தவிர்த்தாள். குந்தவை கேட்ட போது மட்டும் யோசனைகளைச் சொல்லுவாள். மற்றபடி அவளது செயல்பாடுகள் குறித்து விமர்சனம் செய்வதைத் தவிர்த்தாள். எனவேதான், பல தோழிகளையும், சேடி களையும், தாதிகளையும் குந்தவை மாற்றிக் கொண்டே இருக்க, தெட்டக்கனி மட்டும் நிரந்தரத் தோழியாக வலம் வந்தாள். குந்தவையைக் கையாள, தெட்டக்கனியால் தான் முடியும் என்பதால், வானவன்மாதேவியே சில செய்திகளைத் தெட்டக்கனியின் மூலம்தான் எட்டவிடுவாள்.

குந்தவையின் அந்தப்புரப் பணிகள், பழையாறை அரண்மனையின் அன்றாட அலுவல்கள், குந்தவையின் காவல்படையுடன் ஆலோசனை செய்வது, பழையாறை அரண்மனையை ஒட்டியிருக்கும் சோமேஸ்வரர் மற்றும் தருமபுரீஸ்வரர் ஆலயங்களுக்குக் குந்தவையின் சார்பாகக் கைங்கர்யங்கள் செய்வது போன்ற பொறுப்புகளைத் தெட்டக்கனிதான் கவனித்து வந்தாள். இப்போது கூட, தருமபுரீஸ்வரர் ஆலயத்திற்கு முத்துக்களால் நெய்யப் பட்ட கவரிகளை அளிப்பதற்காகத்தான் வந்திருந்தார்கள்.

அமானுஷ்யனின் வருகை, அமைதியாக இருந்த குந்தவையின் மனதில் குழப்பங்களைத் தோற்றுவித்து விட்டது. எனவேதான், தஞ்சைக்குத் திடீர்ப் பயணம்.

‘இப்போதுதான் காஞ்சிக்குச் சென்றான். அதற்குள் எதற்காக மீண்டும் தஞ்சைக்கு வந்திருக்கிறான்?’- தனக்குள் குந்தவை கேட்டாலும், அவளது குரல் கேள்வியாக ஒலிக்க, பாதையைப் பராக்குப் பார்த்தபடி பயணித்துக் கொண்டிருந்த தெட்டக்கனி வியப்புடன் குந்தவையை நோக்கினாள்.

“புதிதாக வடபுல சேனைத்தலைவராகப் பதவி ஏற்று உள்ளார். ஒருவேளை, கஜானாவில் தான் அணிவதற்கு உகந்த ஆபரணங்கள் ஏதாவது இருக்கின்றதா என்பதைப் பார்வையிடுகிறாரோ என்னவோ?” - தெட்டக்கனி கூறினாள்.

“நமது விருப்பத்திற்கு கஜானா ஆபரணங்களை எடுத்து அணிந்து கொள்ள முடியுமா என்ன? அவரவர் களுக்கு இன்ன ஆபரணங்கள் என்பதைத் தனாதிகாரி, அரண்மனை அதிகாரி, கஜானா அதிகாரி ஆகியோர் கொண்ட சபை தீர்மானித்து அனுப்புவதைத்தானே அரசகுடும்பத்தினர் அணிகிறார்கள்? இளவரசி என்கிற முறையில் எனக்கு ஒதுக்கப்படும் நிதியில் நான் வாங்கிக் கொள்ளும் ஆபரணங்களைத்தானே நான் அணிகிறேன். இல்லையென்றால், எனக்குப் பரிசாகக் கொடுக்கப்படும் ஆபரணங்களை மட்டுமேதான் நான் அணிகிறேன். கஜானாவில் இருந்து எப்போது நான் ஆபரணங்களை எடுத்து அணிந்திருக்கிறேன்? ஒருமுறை எனது தாய் வானவன்மாதேவிக்காக அளிக்கப்பட்ட வைர கண்டிகையை அவர் எனது கழுத்தில் சூடிய போது கஜானா அதிகாரி அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வில்லையா? அவரவர்களுக்கு அளிக்கப்பட்ட ஆபரணங் களைத்தான் அவரவர்கள் அணிந்து கொள்ள வேண்டும் என்று கஜானா அதிகாரி சுற்றறிக்கை அனுப்ப

வில்லையா? அரசகுடும்பத்தில் பிறப்பதால் ராஜபோகம் என்று பலரும் நினைத்துக் கொள்கிறார்கள். அரச குடும்பத்தில் பிறப்பது பெரிய தண்டனை என்பதை அவர்கள் எங்கே அறிந்து கொள்ளப் போகிறார்கள்! விரும்பியதை பூட்டிக் கொள்ள முடியாது. சுவையான வற்றை ருசிக்க முடியாது. இளவரசி என்கிற பெயரில் அடிமை வாழ்க்கை! இது யாருக்குப் புரிகின்றது? சோழ இளவரசி என்கிற பெரும்பெயருக்கு ஒன்றும் குறைவில்லை. ஒரே ஒருமுறை, கஜானா அறையில் உள்ள பொக்கிஷங்களைப் பார்வையிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். கணக்கெடுக்கும் பணிகள் நடைபெறுகின்றன என்று கூறி அந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டனர். இன்னும் நான் அனுமதிக்காகக் காத்திருக்கிறேன். ஆனால், ஆதித்த கரிகாலன் கேட்டதும், உடனே அவனை கஜானா அறைக்கு ரத்ன கம்பளத்தை விரித்து அழைத்துச் செல்கிறார்கள். பட்டத்து இளவரசன் கேட்கிறான் என்கிற ஒரே காரணத்திற்காகத் தான் அவனது சொல்லுக்கு உடனே செவி சாய்க்கின்றனர்!" - மனம் வெதும்பினாள், குந்தவை.

தெட்டக்கனி மௌனம் சாதித்தாள். வழக்கமாக அவளது இதயத்தில் எதிரொலிக்கும் அந்தக் கேள்வி இன்றும் அவளது இதயத்தில் அலைமோதியது.

குந்தவைக்கு, தம்பி அருண்மொழிவர்மன் மீதுள்ள பாசம் ஏன் அண்ணன் ஆதித்த கரிகாலனின் மீது இல்லை? தம்பியைச் சிலாகித்துப் பேசுவது போன்று ஏன் அண்ணனை சிலாகித்துப் பேசுவதில்லை? தம்பிக்கு ஏற்ற பெண் இவள்தான் என்று அவனுக்கு மணமகளைத் தேடுவது போன்று அண்ணனுக்கு ஏன் பெண் தேடவில்லை? தம்பியின் பாதுகாப்பினைப் பற்றிக் கவலைப்படும் குந்தவை, ஏன் அண்ணனின் பாதுகாப்பினைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை? அடிக்கடி தம்பியின் ஜென்ம ஜாதகச் சுவடியை ஜோசியர்

களோடு அலசுகிறாளே தவிர, அண்ணனின் ஜாதகச் சுவடியைப் பற்றி என்றுமே கவலை கொண்டதில்லையே!

ஆதித்த கரிகாலனை ஏன் போட்டியாக நினைக்கிறாள்? அருண்மொழிவர்மனைப் பற்றிப் பேசும்போது பூரிப்பு அடையும் குந்தவையின் முகம், ஏன் ஆதித்த கரிகாலனின் பெயர் உச்சரிக்கப்பட்டதும் சுண்டி விடுகிறது? ஆதித்த கரிகாலனோடு கலந்து கொள்ளும் பொது விழாக்களில் குந்தவை கலகலப்பின்றி மௌன மாகவே இருப்பதைக் கவனித்திருக்கிறாள், தெட்டக்கனி. ஆதித்த கரிகாலனும் பெரும்பாலான நேரங்களில் குந்தவையைத் தவிர்த்தே வந்திருக்கிறான். அவளைக் காண வந்தாலும், "பணிகள் அதிகம் உள்ளன! நான் உடனே புறப்பட வேண்டும்!" என்று, சம்பிரதாயத்திற்கு உரையாடிவிட்டுக் கிளம்பிவிடுவான். இருவருக்கும் இடையே சிகை முடியை விழுங்கியது போன்றதொரு உறவு நிலவுவதைத் தெட்டக்கனி உணர்ந்திருந்தாள்.

அண்ணன் - தங்கையிடையே இன்று கருத்து வேறுபாடு மூளலாம். ஆனால் அதை நம்பி நாம் கருத்து சொல்லக் கூடாது. நாளையே அண்ணனும் தங்கையும் ஒன்றாகிவிடுவார்கள்... என்கிற கருத்தில் தெட்டக்கனி இது குறித்துக் குந்தவையிடம் எதையும் கேட்கவில்லை. ஆனால் அண்ணன் - தங்கை இடையே ஒரு இரும்புத் திரை எழுப்பப்பட்டிருப்பதை தெட்டக்கனி மட்டுமல்ல, பலரும் அறிந்திருந்தனர்.

"எதற்கு ஆதித்த கரிகாலன் தஞ்சை கஜானாவிற்குப் போகிறான் என்பதை எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டும்!" - தனக்குள் முணுமுணுத்தபடி குந்தவை இரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

ஒன்றுமில்லாத விஷயத்தைப் பெரிதாக நினைத்து குந்தவை தன்னை வருத்திக் கொள்வதாகத் தெட்டக் கனிக்குத் தோன்றியது.

"நீ வேண்டுமானால் பாரேன், குந்தவை. தனக்கு ஏற்ற தலைப்பாகை அல்லது ஆபரணத்தைத் தேர்ந்தெடுக்கவே இளவரசர் கஜானா அறைக்குச் செல்கிறார் போலும்!"- குந்தவையை சமாதானப்படுத்தும் எண்ணத்துடன் தெட்டக்கனி கூறினாள்.

"என்ன பெரிய ஆபரணங்கள்? பெண்ணாக இருந்தால் என்றாவது ஒருநாள் அமர்த்தி வைத்துக் கழற்ற வேண்டியவை. ஆணாக இருந்தால் என்றாவது ஒருநாள் படுக்க வைத்துக் கழற்ற வேண்டியவை! இதற்கு ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம்?" - குந்தவை சொற்களைக் கடித்துத் துப்பினாள்.

குந்தவை என்ன அர்த்தத்தில் இப்படிக் கூறினாளோ! ஆனால் 'ஆணாக இருந்தால் படுக்க வைத்துக் கழற்ற வேண்டியவைதானே ஆபரணங்கள்' என்று அவள் கூறியது, தெட்டக்கனியின் மேனியில் நடுக்க அலையைத் தோற்றுவித்தது. அவளது பிடரியில் மயிர்க்கூச்சம் தோன்ற, அச்சத்தால் தோன்றிய வியர்வை முத்துகள் கீழே அவளது முதுகில் இறங்கி, இறுக்கமாக அவள் அணிந்திருந்த மார்புக்கச்சையை நனைத்தன..

திடுக்கிட்டுப் போய், வாய் பிளந்து இரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்த குந்தவையின் முதுகையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள். தெட்டக்கனியின் பார்வை தனது தோளினைத் துளைப்பதை உணர்ந்தும், அதனைப் பொருட்படுத்தாமல் குதிரையின் முதுகைச் சாட்டையினால் பதம் பார்த்தாள் குந்தவை. குதிரை ஒருமுறை கனைத்துவிட்டு, தனது வேகத்தை அதிகரித்தது.

# 4. பாணபத்திரம்

செந்நெல் கவரி வீசும் சீர்மிகு சோழ நாடு, கரிய போர்வையினால் தன்னைப் போர்த்திக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்த நடுநிசி வேளை. ஐந்து புரவிகள் பழையாறை அரண்மனையின் வாயிலில் வந்து நிற்க, முதலில் வந்து நின்ற வெள்ளைப் புரவியின் மீதிருந்து கம்பீரமாக ஆதித்த கரிகாலன் கீழே குதித்தான். தனது குதிரையை இருமுறை பிரியத்துடன் தட்டிக் கொடுத்தான்.

"கருமுகிலா! இங்கேயே காத்திரு. விடிவதற்குள் மீண்டும் நாம் தஞ்சைக்குத் திரும்பி, உடனே காஞ்சிக்கு புறப்பட வேண்டும்." - ஆதித்த கரிகாலன் அந்தப் புரவியின் செவியில் முணுமுணுத்தான்.

வெண்குதிரைக்குக் கருமுகில் என்று பெயரா? ஆதித்த கரிகாலன் அப்படிதான்! எல்லோரும் ஒருவிதமாகப் பார்ப்பதை அவன் வேறுவிதமாகப் பார்ப்பான். நகைச்சுவைப் பிரியன். ஒரு நாள், வயலில் உழுது கொண்டிருந்த ஒரு முதியவரை தனது இரதத்தினில் வலுக்கட்டாயமாக ஏற்றி, தன்னுடன் பவனிவரச் செய்தான்.

"உங்களது ஏரோட்டம் இல்லை என்றால், எங்களது தேரோட்டம் ஏது?" என்று கூறி ஆர்ப்பாட்டம் செய்தான்.

"அப்படியெல்லாம் செய்யாதே, கரிகாலா! உனக்குப் பாதுகாப்பு பிரச்னைகள் ஏற்படலாம்!" சுந்தர சோழர், தனாதிகாரி பழுவேட்டரையர் மற்றும் தலைமை அமைச்சர் அநிருத்த பிரம்மராயர் அனைவருமே

கரிகாலனை எச்சரித்திருந்தனர். ஆனால் அவன் கேட்கவில்லை. திடீர் விளையாட்டுகளில் ஈடுபடுவான்.

பேரழகியான ஒரு பெண் காண்பதற்குச் சுமாராக இருக்கும் தனது தோழியுடன் எதிரே வருவாள். உடனே ஆதித்த கரிகாலன் தனது குதிரையை நிறுத்திவிட்டுக் கீழே குதித்து அவர்களை நோக்கிச் செல்வான். இளவரசன் தனது அழகில் சொக்கிப்போய்த் தன்னுடன் உரையாடுவதற்காக வருகிறான் என்கிற எதிர்பார்ப்பில் அந்தப் பேரழகி ஆவலுடன் காத்திருக்க, ஆதித்த கரிகாலன், வேண்டுமென்றே சுமாராக இருக்கும் அவளது தோழியிடம் சென்று பேசுவான்.

"நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்! குதிரையில் செல்லும் என்னைத் தொடர்ந்து செல்ல முடியாமல் தடுக்கிறது உனது அழகு!" என்று பாராட்டிக் கூறி, அந்த சுமாரான அழகு படைத்தவளை பிரம்மிப்பில் திக்கு முக்காடச் செய்வான். உடன்நிற்கும் பேரழகி திகைத்துப் போய் நின்றிருப்பாள்.

ஆலயங்களுக்குச் சென்றாலும் விளையாட்டுதான். பட்டத்து இளவரசன் வந்திருக்கிறானே என்று மற்றவர்களை ஓரமாகத் தள்ளிவிட்டு இவனுக்குச் சிறப்பாக உபசாரம் செய்வார்கள். இவனோ, எல்லாப் பக்தர்களையும் தன்னுடன் நிறுத்தி வைத்து அனைவருக்கும் சிறப்புத் தரிசனம் கிடைக்க வைப்பான்.

'மக்களின் இளவரசன் ஆதித்த கரிகாலன்' என்றுதான் அவன் அழைக்கப்பட்டான். தனக்குக் கிட்டும் போகங்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று நினைப்பான். எளிதாக நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வான். போரிடுவது என்றால் அவனுக்குப் பேரின்பம். தனது சிறிய பாட்டன் உத்தமசீலனைக் கொன்ற பாண்டியனின் தலையை வாங்கித் தனது இடக்காலினால் எட்டி உதைக்கும் வரை தனக்கு உறக்கம்

இல்லை என்று சபதமிட்டவன், அந்தச் சபதத்தை நிறைவேற்றுவதற்காகக் காத்திருக்கிறான்.

பாண்டியன் தலையை வாங்க வேண்டும் என்கிற வெறியில் ஏதாவது தவறாகச் செய்து அவர்களிடம் சிக்கிக்கொண்டுவிடப் போகிறானே என்கிற கவலையில் தான் பழுவேட்டரையரும், சுந்தர சோழரும் இரகசிய மாகப் பேசி அவனைக் காஞ்சியில் வடபுல சேனைத் தலைவனாக அனுப்பிவிடுவது என்று தீர்மானித் திருந்தனர். காஞ்சியில் இருந்தால், ஆதித்த கரிகாலனின் உக்கிரம் குறையும் என்று அவர்கள் நினைத்திருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே, காஞ்சியின் பிரம்மாண்டத்தில் பாண்டியர்களைச் சற்றே மறந் திருந்தான், ஆதித்த கரிகாலன். பிரவாள மாளிகையில் அத்திமலை சிலையைக் கண்டெடுத்தவுடன் அவனுக்கு உரிய உக்ரோதயத்தையும் கஜானாவில் இருந்து எடுத்து தனது வசப்படுத்தவேண்டும் என்கிற ஆவலில் பழையாறை கஜானாவிற்கு வந்திருந்தான்.

ஆதித்த கரிகாலனைத் தொடர்ந்து, நேமியங்கையரும், குழலழகரும் தத்தம் குதிரைகளில் இருந்து இறங்கி அவனது பின்பாக நின்றனர். அரண்மனை அதிகாரி ஜம்புகேஸ்வரரும் கஜானா அதிகாரி விரிஞ்சி நாதரும் முன்பாக நடக்க, அவர்களை ஆதித்த கரிகாலனும் மற்றவர்களும் பின்தொடர்ந்தனர்.

இருளில் இருந்து அப்போது ஓர் உருவம் திடீரென்று வெளிப்பட்டு, வருபவர்களை வரவேற்றது.. பழையாறை அரண்மனையின் கஜானா பொறுப்பாளன், கதிரா மங்கலன்தான் அவர்கள் முன்பாக நின்றிருந்தான்.

"கதிரா! ஏற்பாடுகளைச் செய்துவிட்டாயா?" - தஞ்சை கஜானா அதிகாரி விரிஞ்சி நாதர் கேட்டார்.

"எல்லாவற்றையும் தயார் செய்துவிட்டேன்!" - கதிராமங்கலன் கூறினான்.

“எனது இரகசிய விஜயத்தைப் பற்றி யாருக்கும் தெரியாதே?” - ஆதித்த கரிகாலன், கதிராமங்கலனைக் கேட்டான்.

‘குறிப்பாக எனது தங்கை குந்தவைக்கு?’ என்று கேட்க ஆசைதான். இருப்பினும் அண்ணன்-தங்கையான தங்களிடையே சில பேதங்கள் நிலவுவதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளக் கூடாது என்கிற இங்கிதத்துடன் தனது கேள்வியைப் பாதியிலேயே முடித்துக் கொண்டான்.

“இளவரசியார் குந்தவை பிராட்டியார், பழையாறையில் தற்போது இல்லை. அவர் தஞ்சைக்குச் சென்றிருக்கிறார்” - கதிரா கூறியதும், வியப்புடன் குழலழகனைத் திரும்பி நோக்கிய அவன் தனக்குள் முணுமுணுத்தான். “அதுவும் நன்மைக்குத்தான்!” என்றபடி ஜம்புகேஸ்வரரையும், விரிஞ்சி நாதரையும் தொடர்ந்தான்.

கையில் சுளுந்து ஒன்றை ஏந்தியபடி கஜானா அறையை நோக்கி கதிராமங்கலன் நடக்க, மற்றவர்கள் அவனது பின்பாக நடந்தனர். கதிரா இரும்புத் திறவுகோல் ஒன்றை எடுத்து கஜானா அறையின் கதவைத் திறக்க உள்ளே நுழைந்தனர். அதுவரை அந்த அறையில் நிலவிய கும்மிருள் நீங்கி, இப்போது வரிசையாக நிழல்கள் பூதாகாரமாக வியாபித்து நின்றன. அந்த அறையிலிருந்து மற்றொரு சிறிய அறைக்குள் அவர்கள் நுழைந்தனர். அந்த அறையின் மையத்தில் சதுரமாக நிலவறை ஒன்று தென்பட்டது. அதன் கதவு இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, அதன் வாயில் பெரிய பூட்டு ஒன்று காணப்பட்டது. தனது இடையில் தொங்கிக் கொண்டிருந்த திறவுகோல்களில் இருந்து மற்றொரு இரும்புத் திறவுகோலை எடுத்து அந்தப் பூட்டினுள் நுழைத்தான், கதிரா. அந்தப் பூட்டு உடனே திறந்து கொள்ள, நிலவறைக் கதவினை உயர்த்தி அப்பால் தள்ளினான்.

"பலமுறை பழையாறை வந்திருக்கிறேன். கஜானா அறைக்கே நான் வந்ததில்லை. இந்த அறையில் இப்படி ஒரு நிலவறை இருக்கிறது என்பது எனக்கு இதுவரை தெரியாது." - ஆதித்த கரிகாலன் கூற, விரிஞ்சி நாதர் சிரித்தார்.

"செல்வங்களைச் சேகரிப்பதோடு சரி. எந்த மன்னனும் கஜானாவிற்கு விஜயம் செய்வது கிடையாது. பராந்தக ரின் காலத்தில்தான் இந்த நிலவறை அமைக்கப் பட்டது!" - விரிஞ்சி நாதர் கூறினார்.

"அப்படியா? எதற்காக இந்த நிலவறை அமைக்கப் பட்டது?" - ஆதித்தன் வியப்புடன் கேட்டான்.

"அது ஒரு பெரிய கதை, இளவரசே! இப்போது நாம் வந்த வேலையைக் கவனிப்போம். உமக்குத் தேவை உக்ரோதயம்தானே. முதலில் அதனைப் பார்ப்போம்!"- ஜம்புகேஸ்வரர் கூறினார்.

நிலவறைக்குச் செல்ல மரப்படிகள் அமைக்கப் பட்டிருந்தன. முதலில் சுளுந்து ஒன்றை ஏந்திக்கொண்டு கதிராமங்கலன் இறங்க, அவனைத் தொடர்ந்து விரிஞ்சி நாதர், ஆதித்த கரிகாலன், ஜம்புகேஸ்வரர், நேமியங்கையர், ஆகியோர் இறங்க, இறுதியாகக் குழலழகன் நிலவறைக்குள் பிரவேசித்தான். நிலவறை விஸ்தாரமான ஒரு கூடமாகக் காட்சி தந்தது. நிலவறையில் சிறிதாகப் பல அறைகள். ஆதித்த கரிகாலனின் புருவங்கள் உயர்ந்தன.

"பழையாறையில் இப்படி ஒரு பிரம்மாண்டமான கஜானா இருக்கிறதா? தஞ்சை அரண்மனையில்தான் பெரிய கஜானா இருப்பதாக அறிந்திருக்கிறேன்?" - ஆதித்த கரிகாலன் கூறினான்.

"தஞ்சை கஜானாவில் ஆட்சியாளர்களுக்குத் தேவையான ஸ்வர்ண கட்டிகளும், செலுத்தப்பட்ட வரிகளும், வெள்ளி நாணயங்களும், அரசகுடும்பத்து ஆபரணங்களும், பாதுகாப்பு இல்லாத ஆலய

மூர்த்தங்கள், சுவடிகள், பத்திரங்கள் மற்றும் ஆபரணங்களும்தான் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பழையாறை கஜானாவில்தான், பொக்கிஷங்கள், போரில் கைப்பற்றப் பட்ட செல்வங்கள், விலைமதிப்பில்லா நவரத்தினங்கள், ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. உக்ரோதயம் வைக்கப் பட்டிருக்கும் அறை நான்காவதாக உள்ளது. வாருங்கள்!" - விரிஞ்சி நாதர் கூற, அனைவரும் நான்காவது அறையை நோக்கி நடந்தனர்.

சிறு திறவுகோல் ஒன்றை எடுத்து அந்த அறைக்கதவை கதிரா திறந்தான். அவன் பூட்டைத் திறக்கும் வரை காத்திருக்கப் பொறுமை இல்லாத ஆதித்த கரிகாலன் அவன் ஏந்தி இருந்த சுளுந்தை வாங்கிக் கொண்டு அந்தச் சிறிய அறைக்குள் முதல் நபராகப் பிரவேசித்தான். அறையின் மையத்தில் இருந்த மேஜையின் மீது வெள்ளியினால் செய்யப்பட்ட பெட்டகம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஆதித்த கரிகாலன் அந்தப் பெட்டகத்தையே உறுத்துப் பார்க்க, விரிஞ்சி நாதர், அந்தப் பெட்டகத்தின் மூடியைத் திறந்து உள்ளே இருந்த ஆபரணத்தை எடுத்தார்.

"இதுதான் உக்ரோதயம், இளவரசே!" என்று விரிஞ்சி நாதர் சுளுந்தின் ஒளியில் அந்த ஆபரணத்தைத் உயர்த்திக் காட்ட, ஆதித்தன் அதனை பிரம்மிப்புடன் நோக்கினான். வைரங்களைப் போன்று சுடர்விட்ட வெள்ளைக் கற்களின் நடுவே யட்ச நேத்திரங்களின் வடிவில் நீலக் கற்கள் ஜொலிக்க, தகதகத்த அந்த ஆபரணமே இருண்ட அந்த அறையில் ஒளியைப் பாய்ச்சுவது போன்று இருந்தது. ஒருகணம், தனது சுவாசத்தை இழுத்துப் பிடித்தான், ஆதித்தன்.

"நான் எத்தனையோ ஆபரணங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட தேஜஸுடன் விளங்கும் ஒரு ஆபரணத்தை நான் கண்டதில்லை!"- பிரம்மிப்பினால், ஆதித்த கரிகாலனின் குரல் கிசுகிசுப்பாக அந்த அறையில் ஒலித்தது.

"உண்மைதான் இளவரசே! இது வலிமை வாய்ந்த ஆபரணம்! அத்திமலை தெய்வத்திற்கு உரியது. முதன்முதலாகக் காஞ்சியில் பிரும்மன் அஸ்வமேத யாகம் செய்த வேளையில், யாகத்தீயில் தோன்றிய அத்திமலையானுக்குத் தேவ உடும்பர அத்திமரத்தில் தேகம் சமைத்துக் கொடுத்தானாம், விஸ்வகர்மா. குபேரன் அவருக்கு ஸ்ரீதளமணியான இந்த ஆபரணத்தை அணிவித்தான். சிவஸ்கந்தவர்மனின் மனைவி இதனை அணியப் பார்த்த போது மதம் பிடித்த யானையின் மீதிருந்து விழுந்து அரசனும், அரசியும் இறந்தனர். அதன் பிறகு சிம்மவர்ம பல்லவரின் காலத்தில் இளவரசர் பீமவர்மரால் களவாடப்பட்டு உக்ரோதயமாக மாறியது. முதலாம் நரசிம்மவர்ம பல்லவனின் மகன், மகேந்திரன் இதனை அணிந்து கொண்டு சுவர்ணமுகிக் காட்டிற்குப் போன போது கங்க இளவரசியால் இந்த ஆபரணம் அவனிடம் இருந்து பறிக்கப்பட்டது. அதன் பிறகு நந்திவர்ம பல்லவன் இந்த ஆபரணத்தைப் பறிப்பதற் காக கங்கர்களுடன் போரிட்டான். உதயசந்திரன் என்னும் பல்லவ தளபதிதான் அதனை மீட்டான். அதன் பிறகு பல்லவர் வசம்தான் உக்ரோதயம் இருந்தது. அபராஜிதவர்ம பல்லவன் நமது ஆதித்த சோழரால் வீழ்த்தப்பட்ட போது, காஞ்சியுடன் இந்த ஆபரணமும் நமது வசம் வந்தது. ஆதித்த சோழரின் மனைவி திரிபுவன மாதேவி, உக்ரோதயத்தைப் பல்லவர்களின் நினைவாகப் பொக்கிஷமாகப் பத்திரப்படுத்தினார். அவரது மகன் பராந்தகன் தனது தாயின் நினைவாக இந்த நிலவறை யைக் கட்டி, அதில் உக்ரோதயத்தை வைத்தார்." - விரிஞ்சி நாதர், உக்ரோதயத்தின் சரித்திரத்தைக் கூற, அதனை அனைவருமே ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். விரிஞ்சி நாதர் பேசி முடித்ததும், அறையில் நீண்ட அமைதி நிலவியது. பிறகு ஆதித்த கரிகாலன் அந்த மௌனத்தைக் குலைத்தான்.

"இந்த உக்ரோதயத்திற்கு உரியவன், எனக்குக் கிடைத்திருக்கிறான். அவனை ஒரு குறிப்பிட்ட இடத்தில்

பத்திரப்படுத்தி இருக்கிறேன். உக்ரோதயத்தை அவனுக்கு அணிவித்து, அஸ்வமேத யாகத்தைச் செய்தால், உலகிலேயே மிகவும் ஆற்றல் வாய்ந்த மன்னனாகத் திகழலாம் என்று நான் அறிந்தேன். போர்க்கள எல்லையில் பாண்டியர்கள் மீண்டும் திரளத் துவங்கி யுள்ளனர். போர்க்களக் கடவுள் அவன். அவனது அருள் பெற்று பாண்டியரின் கொட்டத்தை அடக்கி, வீரபாண்டியனின் தலையைச் சீவித்தள்ளி, எனது இடது காலினால் உதைத்துத் தள்ளப் போகிறேன்!" என்று ஆவேசத்துடன் கூறிய ஆதித்த கரிகாலன், உக்ரோ தயத்தைத் தனது கரத்தில் வாங்கி, மீண்டும் அந்த வெள்ளிப்பேழையில் வைத்தவன், அதனைப் பெட்டி யோடு எடுத்துக் கொண்டான்.

விரிஞ்சி நாதரும், கதிராமங்கலனும் கலவரத்துடன் அரண்மனை அதிகாரி ஜம்புகேஸ்வரரைப் பார்க்க, அவரும் பதற்றத்துடன் ஆதித்த கரிகாலனை நோக்கினார்.

"இளவரசே! தாங்கள் உக்ரோதயத்தைக் காண வேண்டும் என்றுதானே கூறினீர்கள். அப்படியிருக்க.."- வார்த்தைகளைத் தொடர்ந்து உதிர்க்க முடியாமல், ஜம்புகேஸ்வரர் மென்று விழுங்க, அவரை அலட்சியமாகப் பார்த்தான், ஆதித்த கரிகாலன்.

"இந்த ஆபரணம் அத்திமலைத்தேவனுக்கு உரியது என்பது உண்மைதானே?" - ஆதித்தன் கேட்டான்.

"ஆம்! அதில் எவ்வித சந்தேகமும் இல்லை!"- ஜம்புகேஸ்வரர் கூறினார்.

"அப்படியானால் இந்த ஆபரணம் சேர வேண்டிய வரைத்தான் சேர்ந்திருக்கிறது. வடபுல சேனைத் தலைவராக நியமிக்கப்பட்ட நான், காஞ்சியில் நான் தங்குவதற்கு ஒரு பிரும்மாண்ட மாளிகையை எழுப்ப இருக்கிறேன். பிரவாள மாளிகை என்கிற புராதனக் கட்டடத்தை வாங்கி அதனை இடித்தபோது

அத்திமலைத்தேவன் எனக்குக் கிட்டினான். அவன் இப்போது எனக்கு உரியவன். அவனது ஆபரணமும் இப்போது எனக்கு உரியது!" என்றபடி திரும்பியவனின் பார்வை, அந்த அறையின் முக்காலி ஒன்றின் மீது இருந்த மற்றொரு தந்தப் பேழையின் மீது படர்ந்தது.

"அந்தப் பேழையில் என்ன இருக்கிறது?" - ஆதித்த கரிகாலன் கேட்க, விரிஞ்சி நாதர், அந்தப் பேழையை நோக்கி நடந்து சென்று அதைத் திறந்தார்.

"உள்ளே ஏதோ சுவடிகள் உள்ளன, இளவரசே!"- சுவாரஸ்யம் இல்லாமல் கூறினார், விரிஞ்சி நாதர்.

"பொக்கிஷ அறையில் சுவடிகளா? எடுத்துப் படியுங்கள், நேமிநாதரே! என்ன சுவடிகள் என்று பார்ப்போம். உக்ரோதயத்தைப் பற்றி இன்னும் ஏதாவது தகவல்களாக இருக்கப் போகிறது?" - ஆதித்த கரிகாலன் கூறினான்.

"சோழ-கங்க பாணபத்திர ஒப்பந்தம்!" -நேமியங்கையர் சுவடிக் கட்டை பிரிக்காமல் சுவடி கட்டின் மீது பொறிக்கப்பட்டிருந்த எழுத்துகளை வாசித்துவிட்டு, ஆதித்த கரிகாலனை நோக்கினார்.

"ம்ம்! பிரித்துப் படியுங்கள்!" - ஆதித்தன் கட்டளை யிட்டான். நேமியங்கையர் தொடர்ந்து சுவடியைப் படித்தார்.

"கங்க மன்னனாகிய பிருத்விபதியும், சோழ மன்னராகிய பராந்தகரும் இணைந்து வாணர் ஆண்ட பெரும்பாணப்பாடி நாட்டை வீழ்த்தி அடிமைப்படுத்தி கங்க நாட்டிற்கு உரிமைப்படுத்தியமைக்குக் கைமாறாக, புங்கனூர், சிறும்பாணப்பாடி மற்றும் ஸ்வர்ணமுகி நதிக்கரையை ஒட்டிய கோலாகலபுரத்தின் ஸ்வர்ணமுகி ஆற்றின் தென்கரையில் உள்ள ஐந்து ஸ்வர்ண சுரங்கங் களை, சோழத்திற்குத் தாரைவார்த்து கங்க மன்னன் அளிக்கும் பாணபத்திரம்! சோழத்திற்கு உரிமையான இப்பகுதிகளை கங்க மன்னனோ அவனது மகன்

ஹூஸ்தி மல்லனோ எக்காலத்திலும் உரிமை கோரமாட்டார்கள்."

சுவடியை வாசித்த நேமியங்கையர், அந்த உடன் படிக்கையின் கீழ் சோழ பராந்தகனும், பிருத்விபதியும் பதித்திருந்த இலச்சினையை ஆதித்தனிடம் காட்டினார்.

ஆதித்த கரிகாலன் திகைப்புடன் ஜம்புகேஸ்வரரை நோக்கினான்.

"பராந்தகன் இப்படி ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறார் என்றால், ஏன் அந்தப் பகுதிகளை நாம் இன்னும் நமது ஆளுமையின் கீழ் கொண்டுவர வில்லை?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

சற்று அமைதியை கடைபிடித்தார், ஜம்புகேஸ்வரர். பிறகு கிசுகிசுத்த குரலில் பேசினார்.

"இளவரசே! இந்த உடன்படிக்கை பாணர்களின் குருதியால் எழுதப்பட்டது. பாணர்களும் நம்முடன் நட்புடன் இருந்த காலம் உண்டு. கங்கமும் நமது நட்பு நாடுதான். எதிர்பாராதவிதமாக, கங்க மன்னன் பிருத்வி பதிக்கும், பாணர் அரசன் விசயாதித்த பாணனுக்கும் காளத்தி* குறித்து எல்லை பிரச்னை மூண்டது. பராந்தகர் கங்க மன்னன் பிருத்விபதியை ஆதரித்துப் பாணர்களின் மீது படை எடுத்தார். பாணர்களை அடிமைப்படுத்தி கங்கர்களுக்கு அடிமையாக்கினோம்.

* சோழர்களுக்கு 'வில்லனாக' வீரநாராயண ஏரிக்கரையில் தனது குதிரையில் ஊர்ந்து வரும் வந்தியத்தேவனை கதாநாயகனாகக் காட்டியிருக்கிறது பொன்னியின் செல்வன். பொன்னியின் செல்வன் என்கிற 3D கண்ணாடி அணிந்தே மக்கள் இன்று வரை சோழ சரித்திரத்தைப் பார்த்து வருகிறார்கள். சோழ சரித்திரம் வேறு. பொன்னியின் செல்வன் வேறு. பாகுபலி மாதிரி ஒரு Fantasy புதினத்தைப் படைத்திருக்கிறார் கல்கி. அவ்வளவே. சோழர்கள் கங்க மன்னன் பிரித்விபதியுடன் சேர்ந்து பெரும்பாணப்பாடி நாட்டில் ஆற்றிய அக்கிரமங்களுக்குப் பழிதீர்க்கவே வந்தியத்தேவன் என்கிற வாணர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் குந்தள நாட்டில் இருந்து சோழ நாட்டிற்கு வந்தான்.

*அதற்கு நன்றிக்கடனாக இந்தப் பகுதிகளையும் ஸ்வர்ண சுரங்கங்களையும் நமக்கு அளித்து இந்தப் பாணபத்திரத்தை அளித்தார். ஆனால் இராஜாதித்யன் இறந்தது, உத்தமசீலன் பாண்டிய மன்னனால் தலை சீவப்பட்டது ஆகிய சம்பவங்களால் நிலைகுலைந்த பராந்தகர் பாணர்களின் சாபத்தால்தான் பிள்ளைகள்*

---

நான்காம் பாகத்திலேயே இதனைக் குறிப்பிட்டிருக்கிறேன். பெரும் பாணப்பாடி நாட்டை ஆண்ட விசயாதித்த பாணனுக்கும் கங்க மன்னன் பிருத்விபதிக்கும் காளஹஸ்தி தொடர்பாகப் பிரச்னை மூள, சோழர்கள் கங்கர்களை ஆதரித்தனர். கி.பி 915 காலகட்டத்தில் சோழர்களும், கங்கர்களும் சேர்ந்து பெரும்பாணப்பாடியைக் கைப்பற்றி, அதன் மக்களையும், பெண்களையும் அடிமைப்படுத்தி கங்கர்களுக்கு விற்றனர். மன்னன் விசயாதித்த வாணன் குந்தள மன்னன் கிருஷ்ணனிடம் அடைக்கலம் புகுந்தான். பராந்தகனின் கைப்பாவையாகத் திகழ்ந்த பிருத்விபதியின் மகன் ஹூஸ்திமல்லன் என்கிற கங்க மன்னன், பாணர் மக்களைச் சித்திரவதைக்கு உட்படுத்தி பெரும் துன்பத்தில் ஆழ்த்தினான். உதயேந்திர செப்பேடுகள் மற்றும் சோழசிம்மபுரக் கல்வெட்டுகள் இந்தப் பெரும்பாணப்பாடி வீழ்ச்சியை ஊர்ஜிதம் செய்கின்றன.

தங்கள் மங்கையரை நாசம் செய்து அவர்களது குழந்தைகளுக்கு யார் தகப்பன் என்று கூட அறியாமல் செய்த சோழர்களின் மீது கடும் பகைமை கொண்ட, விசயாதித்த பாணன் தனது மகன், பெயரன் ஆகியோரிடம் சோழர்களின் மீது பழிதீர்க்க வேண்டும் என்ற உறுதிமொழி பெற்றான். விசயாதித்த வாணனின் வழித்தோன்றல்தான் வாணன் வந்தியத்தேவன். பாலுக்குப் பூனையைக் காவல் வைப்பது போன்று ஆதித்த கரிகாலன் அவனிடம் சுந்தர சோழருக்கு ஓலை கொடுத்து அனுப்புவதாகப் பொன்னியின் செல்வனில் கூறப்பட்டிருக்கிறது. கல்கியின் கதாநாயகனான வந்தியத்தேவன் பத்து வருடங்களுக்குச் சிறையில் இருந்ததாக நந்திபுரத்து நாயகி புதினத்தில் விக்கிரமன் கூறியிருக்கிறார். குந்தவையின் கோரிக்கையின் பெயரில் அருண்மொழிவர்மன் அவனை விடுவிப்பதாகக் கூறியிருக்கிறார்.

வந்தியத்தேவன் எதற்காகச் சிறையில் இருந்தான்? பழிவாங்கத் துடிக்கும் வாணர் வழித்தோன்றல் என்கிற போது, அவனை எப்படி ஆதித்த கரிகாலனின் அருகில் விட்டார்கள்?

*இறந்தனரோ என்று எண்ணி, இந்தப் பாணபத்திரத்தில் குறிப்பிட்டிருந்த பகுதிகளைக் கைப்பற்றாமல் விட்டுவிட்டார்.”*

*“அதன் பிறகு சோழர்களுக்கு உரித்தான ஸ்வர்ண சுரங்கங்கள் கோலாகலபுரத்தில் உள்ளன என்றால் நாம் அதனை ஏன் இன்னமும் கைப்பற்றாமல் இருக்கிறோம்?” - திகைப்புடன் அவரைப் பார்த்தான் ஆதித்த கரிகாலன்.*

*“இளவரசே! காலங்கள் மாறிவிட்டன. பிருத்விபதி மன்னனாக இருந்த போது, அவருக்கும், பராந்தகருக்கும் இடையே எழுந்த ஒப்பந்தம். அதன் பிறகு கங்கர்களுக்கும் நமக்கும் இடையே பகைமை தோன்றிவிட்டது. நமது இராஜாதித்யரை கங்க மன்னன் பூதுகன்தான் விஷ அம்பினை எய்து கொன்றான். அவரது மகன் மருளகங்கன் நீதிமார்கன் சோழர்களின் மீது தற்போது*

---

‘வந்தி’ என்கிற சொல்லிற்கு தமிழ் அகராதியைப் பார்த்தால், வந்தி என்பதற்கு வந்தனை செய்பவன் என்று பொருள். மங்கலப் பாடலைப் பாடும் பாணனுக்கு வந்தி என்று பெயர். பாணர் மற்றும் வாணர் இருவரும் ஒன்றே. வீணை மீட்டிப் பாடுபவர் பாணர். வந்தனை பாடல் பாடுபவர் வாணர். வந்தியத்தேவன் என்கிற புனைப்பெயரோடு சோழர்களைப் பழி வாங்க வரும் விசயாதித்த பாணனின் வழித்தோன்றல் அவன்! கேள்விகள் அநேகம் புறப்படுகின்றன!

ஆனால் உண்மை சரித்திரத்தை அறிய முற்படும் போது, பொன்னியின் செல்வன் கதைக்கு எதிராக எழுத வேண்டிய கட்டாயம் பிறக்கிறது. கல்கியின் படைப்பான பொன்னியின் செல்வன் வேறு. உண்மையான சோழ சரித்திரம் வேறு என என்று புரிந்து கொள்ளப்படுகிறதோ அன்றுதான் உண்மைகள் புரியவரும். பொன்னியின் செல்வன் ஒரு பாண்டஸி ஸ்டோரி. ஆனால் அது சரித்திரம் அல்ல.

POLITICAL HISTORY OF ANCIENT SOUTH INDIA-CHAPTER II Uprooting of Banas: Page 33 (Parantaka who ruled for 45 years (907-953 AD) led many military campaigns. He attacked Cheras, western Gangas and kodumbalur. He was called Maduranthagan after defeating Pandiyas and capturing Madurai. In 915 AD he uprooted Banas. He also uprooted Vaidumbas of the Renadu country for supporting Banas and being their ally.

Sundara Chola died in Kanchi and his wife Vanavanmadevi committed Sati (Page 34, Chapter II, Political history of Ancient South India)

துவேஷம் கொண்டிருக்கிறான். இத்தருணத்தில் பாணபத்திரத்தைக் காட்டி எங்கள் பகுதிகளைக் கொடு என்றால் அவன் எங்ஙனம் ஒப்புக்கொள்வான்?" - ஜம்புகேஸ்வரர் தயக்கத்துடன் கேட்டார்.

"பாணபத்திரத்தில் இருப்பது பிருத்விபதியின் இலச்சினைதானே?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"அதில் இம்மியும் சந்தேகமில்லை, இளவரசே!"-விரிஞ்சி நாதர் கூறினார்.

"அப்புறம் என்ன? நமக்கு உரித்தானவற்றை வசப்படுத்துவோம்!" என்றபடி பாணபத்திர சுவடியை எடுத்து தனது அங்கியில் மறைத்துக் கொண்டான்.

"அவ்வளவுதானே? இனி புறப்பட வேண்டியது தானே?" - ஆதித்த கரிகாலன் குழலழகனை நோக்க, அப்போது அங்கே ஒரு மூலையில் மேஜை ஒன்றின் மீது வைக்கப்பட்டிருந்த ஸ்வர்ண பிடியுடன் கூடிய வாளினைக் கண்டான்.

"இந்த வாள் யாருடையது?" என்று கேட்டபடி அந்த மேஜையை நோக்கி நடந்தான். கதிராமங்கலன் பணிவுடன் முன்வந்து வாளினை எடுத்து ஆதித்த கரிகாலனின் கரத்தில் வைத்தான்.

"பராந்தகரின் கடைக் குட்டி மகன் உத்தமசீலனின் வாள். போர்க்களத்தில் மடிந்த அவரது நினைவாக அவரது வாளினைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம்!" - கதிரா கூறியதும், அந்த வாளினை உயர்த்தி அதையே உறுத்து நோக்கினான்.

ஆதித்தனின் முகம் கோரமாக மாறியது. "எனது சிறிய பாட்டனாரின் வாள். அவரது கொலைக்குப் பழிதீர்க்க காத்திருக்கும் நான், அவரது வாளினாலேயே வீரபாண்டியனின் தலையைச் சீவித்தள்ளி எனது இடது காலால் அவனது சிரசினைப் பந்தாடுகிறேன். அதுவரையில் இந்த வாள் எனது வசம் இருக்கட்டும்!" என்றபடி அந்த வாளையும் எடுத்துக் கொண்டான்.

உக்ரோதய ஆபரணம், பாணபத்திர சுவடி மற்றும் உத்தமசீலனின் வாள் ஆகியவற்றுடன், தனது கருமுகில் குதிரையில், நேமியங்கையரும், குழலழகனும் பின்தொடர, தஞ்சையைத் தவிர்த்து காஞ்சிக்குத் திரும்பிக் கொண்டிருந்தான் ஆதித்த கரிகாலன்.

'காஞ்சியில் வடபுல சேனைத்தலைவனாக நியமிக்கப்பட்டு நான் தங்குவதற்காக ஒரு பிரம்மாண்ட மாளிகையை எழுப்ப எண்ணி பிரவாள மாளிகையை இடிக்க, அதன் புகைபோக்கியில் பதுக்கப்பட்டிருந்த அத்திமலைத்தேவனின் பிரதிமை இவனுக்குக் கிடைத்த வேளைதான் மேலே மேலே நல்ல செய்திகள் கிடைக்கின்றன. ஸ்வர்ணமுகி காடுகளில் உள்ள தங்கச் சுரங்கங்கள் எனக்குக் கிடைக்க உள்ளன. உக்ரோதயம் ஆபரணமும் எனக்குக் கிட்டிவிட்டது. பாண்டியனின் தலையை வாங்குவதற்கு, உத்தமசீலனின் வாளும் என்னிடம் தயாராக உள்ளது. அத்திமலைத்தேவன் கிடைத்த வேளையில், நான் பலமிக்க சோழ அரசனாகத் திகழ்வதற்கு உரிய சமிக்ஞைகள் கிடைக்கத் துவங்கி இருக்கின்றன. உண்மையிலேயே நான் கொடுத்து வைத்தவன்தான்' என்று எண்ணியபடி உவகையுடன் பயணித்துக் கொண்டிருந்தான், ஆதித்த கரிகாலன்.

தஞ்சை அரண்மனையின் கஜானா அறை இருந்த மண்டபத்தின் இருள் சூழ்ந்த மூலையில் இருந்த ஒரு தூணின் பின்பாக அமர்ந்தபடி இரவெல்லாம் கஜானா அறையை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள், குந்தவை. இரவெல்லாம் உறங்காமல் வேவு பார்த்துக் கொண்டிருந்ததுதான் மிச்சம். ஆதித்த கரிகாலனோ, கஜானா அதிகாரியோ அங்கே வரவேயில்லை. 'கஜானா அறைக்கு ஆதித்தனும், கஜானா அதிகாரிகளும் வர இருப்பதாக அமானுஷ்யன் கூறி இருந்தானே.. அவர்கள் ஏன் வரவில்லை?' என்று யோசித்தபடி அமர்ந்திருந்தாள், குந்தவை. சூரியன் உதிக்க, ஏமாற்றத்துடன் தனது அறையை நோக்கி நடந்தாள், குந்தவை.

## 5. பட்டத்து ராணி பார்க்கும் பார்வை..

பல்லவ குலப்பெண்கள் மூவரையும் தனது மாளிகைக்கு அழைத்து வந்தான், பார்த்திபன். கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே மாளிகையின் முன்பாக நின்ற கல்பலதா, கண்களை உயர்த்தி அந்த மாளிகையை அருவருப்புடன் நோக்கினாள். அவளது பார்வையை லட்சியம் செய்யாமல், தங்களை நோக்கி ஓடி வந்த ஒரு காவலனைப் பார்த்தான், பார்த்திபன்.

"ஆலோலா! உடனே பணியாளர்களின் உதவியுடன் இந்தப் பெண்களை நமது அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல். எனது பாட்டியார் இவர்! மருத்துவர்களுக்குச் சொல்லி அனுப்பி, இவருக்கு தக்க சிகிச்சையை உடனே அளிக்கச் சொல்!" என்றான்.

ஆலோலன் கையசைக்க, பணியாளர்கள் சிலர், நாற்காலி ஒன்றுடன் வர, கங்காவதியை அதில் அமர்த்தி உள்ளே இட்டுச் சென்றனர். சமந்தக பல்லவியும் அவர்களைப் பின்தொடர்ந்தாள். இதழ்களை இகழ்ச்சியாகப் பிதுக்கியபடி, தனது தாயைப் பின்தொடர முற்பட்ட கல்பலதாவின் முன்பாகத் தனது வாளை நீட்டித் தடுத்தான், பார்த்திபன்.

"நீ எங்கே போகிறாய்? உனக்குத் தனியாக விசேடக் கவனிப்பு தரப்படும்!" என்றவன் மீண்டும் மாளிகைப் பக்கமாக திரும்பி, ஒரு பணிப்பெண்ணை அழைத்தான்.

"நீ சென்று லலாடிகாவை அழைத்து வா!" என்றான்.

ஆத்திரத்துடன் அவனது அகன்ற முதுகை உறுத்துப் பார்த்தாள், கல்பலதா. "சோழர்களைப் பற்றி நீ இன்னும் அறிந்து கொள்ளவில்லை. அவர்களை நம்பி நாசத்தைத்

தேடிக்கொள்ளாதே” - கல்பலதா வீறிட்டு அலறினாள். அவளது அலறல் தனது செவிகளில் விழாதது போன்று அமைதியாகத் தனது மாளிகையின் வாயிலைப் பார்த்தபடி நின்றான், பார்த்திபன்.

உயரமான ஒரு நங்கை, நளினமாக நடந்து வந்தாள். கல்பலதா அளவுக்கு அழகு இல்லை என்றாலும், பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருந்தாள். பால் வெண்மை நிறம், கருவண்டுகளைப் போன்ற கண்கள், குவிந்த தனங்கள், செதுக்கியது போன்ற நாசியும் இதழ்களும் என்று ஆணினத்தை சுவாசம் இழக்கச் செய்யும் பல அம்சங்களைக் கொண்டிருந்தாள். கோபுரக் கொண்டையில் இருந்து வழிந்திருந்த அவளது நீண்ட பின்னல் அவளது நளினமான நடையால் முன்பாக வந்து விழ, அதனை மீண்டும் அலட்சியமாகப் பின்பாகத் தள்ளியபடி வந்து நின்றாள்.

“லலாடிகா! இந்தப் பெண் நமது கைதி. இவளை நமது உப்பரிகை நந்தவன அறையில் அடைத்து வை. நாளை விசாரணைக்குப் பிறகு தண்டனையை உறுதிப் படுத்துவோம்!” - பார்த்திபன் கூறியவுடன், லலாடிகா என்ற அந்த நங்கை கல்பலதாவின் பின்பாக வந்து நின்றாள்.

கல்பலதா அவளை வெறுப்புடன் நோக்கிவிட்டு, மீண்டும் பார்த்திபனை நோக்கி அனல் பறக்கும் பார்வை ஒன்றை வீசினாள்.

“பெயரில் பல்லவத்தை வைத்திருக் கிறீர். பல்லவத்தின் பெருமைகளை அறிவீரா? அஸ்வத்தாமா ஈன்ற புலிவேமு தொடங்கி, எனது முப்பாட்டன் அபராஜிதவர்மர் வரை எவ்வளவு உன்னத மான மன்னர்கள் எல்லாம் ஆட்சி புரிந்திருக்கின்றனர். இப்படி சோழத்தின் சேவகனாக இருப்பதைக் காட்டிலும் ஒரு கைதியாக இருப்பதை நான் பெருமையாக நினைக்கிறேன்!”

தனது சொற்களால் அவனைக் காயப்படுத்த வேண்டும் என்றுதான் நினைத்தாள்.

'கடகட'வென்று நகைத்தான் பார்த்திபன். அவனது கம்பீரக் குரல் கல்பலதாவுக்கு இன்னும் அதிக எரிச்சலைக் கிளப்பியது.

"சோழர்களுக்கு சேவகமா? சரித்திரச் சுவடிகளைப் புரட்டிப் பார், கல்பா! என்னைவிட உனது முப்பாட்டன் அபராஜிதன் ஆதித்த சோழனுக்கு இன்னமும் அதிக ஊழியத்தைப் புரிந்திருக்கிறான். சோழர்களோடு சேர்ந்து, எனது முப்பாட்டன் நிருபதுங்கனையும், அவன் மகள் கோதாவரியையும் நாட்டைவிட்டு விரட்டி அடித்தான். பிறகு ஆதித்த சோழனின் கரத்தாலேயே மாண்டும் போனான். நிருபதுங்கனுக்குத் துரோகம் செய்தார். துரோகத்தாலேயே மடிந்தும் போனார்." - பார்த்திபன் கூற, கல்பா கண்கள் சிவக்க அவனை உறுத்துப் பார்த்தாள்.

"ஆதித்த சோழனைப் போலவே இவனும் ஆதித்த கரிகால சோழன். அபராஜிதனைப் போன்று உன்னையும் சதியால் தீர்த்துக் கட்டிவிடப் போகிறான். என்ன இருந்தாலும், நீயும் பல்லவ இரத்தம். அந்த அக்கறையில் தான் கூறினேன். மற்றபடி நீ எப்படிப் போனால் எனக்கு என்ன! சோழனுக்கு அடிமையாக இருந்து ஊழியம் செய்துதான் கிடப்பேன் என்று நீ விரும்பினால் நான் என்ன சொல்ல முடியும்? உனது விருப்பம்!" கல்பா எரிச்சலுடன் கூறினாள்.

"அது எனக்கும், கரிகாலனுக்கும் இடையே உள்ள தனிப்பட்ட பிரச்னை. நீ அது குறித்துக் கவலை கொள்ளத் தேவையில்லை!" என்று காட்டத்துடன் கூறிய பார்த்திபன், அவளது கண்களுக்குள் சற்று நேரம் உறுத்து நோக்கினான். அந்த உறுதியான பார்வையின் பின்பாக ஓர் உணர்வு தெரிந்தது.

'ஐயோ.. மீண்டும் அவனது கண்களில் கனிவு தென்படுகிறதா? ஒரு ஆடவனின் கண்களில் தென்படும் கனிவு ஆபத்தானதாயிற்றே' என்கிற அச்சத்துடன்

அவனது கண்களை நோக்க, அவள் நோக்கிக் கொண்டிருந்த போதே அந்த உறுதியான பார்வையின் பின்பாகத் தேங்கியிருந்த கனிவு இப்போது வேறு ஒரு உணர்வாக மாறிக் கொண்டிருந்தது. அந்த உணர்வும் மூன்றெழுத்துதான்! போர்க்கள வீரர்களுக்கு, தினவெடுத்து மீண்டும் களம் புக வேண்டும் என்கிற வெறி ஏற்படும் போது அதனைத் தடுக்க மயனால் தயாரிக்கப்பட்ட மருந்துதான் அந்த உணர்வு.

பார்த்திபனின் உறுதியான பார்வைக்குப் பின்பாகக் காணப்பட்ட கனிவு காதலாக வடிவெடுக்கத் துவங்க, அதனால், நடுநடுங்கிப் போனாள், கல்பலதா. ஆடவர்களின் வாளின் வீச்சைவிட, அவர்களது கதாயுதங்களின் தாக்குதலைவிட, அவர்களது வில்லில் இருந்து பாயும் அம்பினைவிட மிகவும் ஆபத்தான அஸ்த்திரம், அவர்களது கண்களில் இருந்து பாயும் காதல் என்கிற அஸ்த்திரம்தான். அது பெண்களின் மென்மையான இதயத்தைத் துளைத்து, அறுத்துக் காலமெல்லாம் அவர்களுக்கு அடிமையாகக் கிடக்கச் செய்துவிடும். எனவே, தவிர்க்க வேண்டியது ஆடவரின் காதல் அஸ்த்திரத்தைத்தான் என்று அவளது பாட்டி கங்காவதி முதல்முதல் பாடத்தைச் சொல்லிக்கொடுத்திருந்தாள்.

"எந்த ஆடவனின் கண்களையும் நோக்காதே. நிலத்தை மட்டும் உனது கண்களால் நோக்கு. காரணம் நீ ஒரு ஆடவனின் கண்களை நோக்கினால், நீ அவனுக்கு விடுக்கும் அழைப்பாகவே அதனைக் கருதுவான்!" தக்கோலம் ஆலயத்தில் போருக்குச் சென்று கொண்டிருந்த அரிஞ்சயனின் பார்வையையே வெறித்ததால், தனது வாழ்வு அவனால் சிதைக்கப்பட்ட அனுபவம் நினைவுக்கு வர, கங்காவதி இந்த எச்சரிக்கையைப் பெயர்த்தி கல்பலதாவுக்கு விடுத்திருந்தாள்.

உள்ளே உணவு தயாரித்தபடி தனது மகளுக்குத் தாய் விடுக்கும் எச்சரிக்கையைக் கவலையுடன் கேட்டுக் கொண்டிருந்தாள், சமந்தக பல்லவி. அபராஜித

பல்லவனின் வாரிசுகளான தாங்கள் இப்படி அனாதையாக அலைகிறோம். பெண்ணாக வேறு பிறந்து விட்டதால், இவர்களால் எப்படி மீண்டும் பல்லவத்தை நிலைநாட்ட முடியும் என்கிற கவலையில், கல்பலதாவுக்கு வீர உணர்ச்சிகளைப் புகட்டி வந்திருந்தாள். பெண்ணை வீராங்கனையாக வளர்த்திருக்க, ஏன் தனது அம்மா தனது மகளுக்கு இத்தகைய எச்சரிக்கை உணர்வுகளை அளிக்கிறாள் என்று முதலில் கோபம் கொண்டாள். பிறகு தன்னையே சமாதானம் செய்து கொண்டாள். ஜெயிக்க முடியாத பலமான பெண்களைக் காதலினால் தானே பல அரசர்கள் வீழ்த்தி இருக்கின்றனர். தனது மகள் வலுவான அரசியாகத் திகழ வேண்டுமென்றால், காதல் உணர்வுகளுக்கு ஆட்படாமல் இருக்க வேண்டும். எனவே, தாய் கூறும் அறிவுரைகள் அவளுக்குத் தேவைதான் என்பதை உணர்ந்தாள், சமந்தக பல்லவி.

எனவேதான், பார்த்திபனின் கண்களில் கனிவு காதலாக மாறுவதைக் கண்டு பதைபதைத்து கல்பலதா அவனது காதலை முளையிலேயே கிள்ளி எறிய நினைத் தாள். அதனை வளரவிட்டால், பிறகு கோடாலியால் கூட அதனை வெட்டுவதற்குச் சிரமமாக இருக்கும் அல்லவா? கடுமையாக எதையாவது கூறி, தகிக்கும் சொற்களால், அவனது ஆத்திரத்தைக் கிளப்பி அவனது காதலை பனி போல் மறையச் செய்துவிட வேண்டும் என்று நினைத்தாள்.

"நீதான் ஆதித்த கரிகாலனின் ஆலோசகன் மற்றும் மெய்க்காப்பாளனாமே. எனது முப்பாட்டன் அபராஜிதனின் தலையை வாங்கிய ஆதித்த சோழனின் குருதியில் தோன்றிய ஆதித்த கரிகாலனின் சிரசை நிலத்தில் உருளச் செய்வேன். அவனது மெய்க் காப்பாளனாக இருக்கும் நீ என்னைத் தடுக்க முயன்றால், உனது தலையும் நிலத்தில் உருளும்!" என்று ஆவேசத்துடன் கூறி அவனுள் மலரத் துவங்கிய காதலை நசுக்க முயன்றாள்.

தன்னுள் முளைவிட்டிருந்த காதல், பார்த்திபனையும் அச்சுறுத்தி இருக்க வேண்டும். தனது பார்வையைப் பலவந்தமாகக் கல்பலதாவிடம் இருந்து திருப்பியவன் லலாடிகாவை கவனித்தான்.

“லலாடிகா! கைதி என்று கூறிவிட்டேன். இன்னமும் ஏன் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்?” என்றவுடன், அவள் தனது கையை இருமுறை தட்ட காவலர் இருவர் அங்கே வந்தனர்.

“ம்ம்! இந்தப் பெண்ணை உப்பரிகை நந்தவன அறையில் சிறை வையுங்கள்.” தனது இனிமையான குரலால் லலாடிகா கூற, காவலர்கள் கல்பலதாவின் இருபுறமும் வந்து நிற்க, வேறு வழியின்றி கல்பலதா அவர்களுடன் நடந்தாள். பார்த்திபனின் மாளிகை உப்பரிகை மிகவும் விஸ்தாரமாக இருந்தது. உப்பரிகையின் ஒரு பகுதியில் அழகிய கண்ணாடி மண்டபம் ஒன்று இருக்க, அந்த மண்டபத்தைச் சுற்றி அழகிய நந்தவனம் அமைக்கப்பட்டிருந்தது. வண்ண மலர்கள் பூத்துக் குலுங்க, பவழமல்லிகை மற்றும் செண்பக மலரின் வாசம் உப்பரிகையையே மணக்க வைத்தது. நந்தவனத்தில் தென் மூலையில் ஒரு சிறிய அறை காணப்பட்டது.

அறைக்குள் நுழைந்த கல்பலதா சுற்றிலும் நோக்கினாள். நந்தவனச் செடிகளுக்கு நீர் பாய்ச்சும் கலயங்கள், மண்வெட்டி, சணல், பையில் எரு என்று ஒரு மூலையில் வைக்கப்பட்டிருக்க, அறையின் மையத்தில் ஒரு மஞ்சம் போடப்பட்டிருந்தது. பழைய பஞ்சணை ஒன்று அதில் விரிக்கப்பட்டிருந்தது. அருகே மண்கூஜாவில் நீர் வைக்கப்பட்டிருந்தது. அறையில் தீபம் எதுவும் ஒளிர்ந்து கொண்டிருக்கவில்லை. சாளரத்தின் வழியாகச் ‘சிலுசிலு’ என்று காற்று வீசிக் கொண்டிருந்தது. உப்பரிகைக் கண்ணாடி மண்டபத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த அலங்கார விளக்குகள் அந்த அறைக்கு

ஒளியைத் தந்து கொண்டிருந்தன. எரிச்சலுடன் அந்தப் பஞ்சணையில் சரிந்தாள்.

"மூடன்! இதனைப் போய்ச் சிறைவாசம் என்கிறான். இவர்கள் தக்கோலத்தில் வசித்த குடில் இதைவிடச் சிறியது. வசதிகளும் குறைந்தது என்பதனை பார்த்திபன் அறிவானோ?" - தனக்குள் முணுமுணுத்தவள் அசதியுடன் பஞ்சணையின் மீது அமர்ந்தாள்.

"பெண்ணே! கண்ணாடி மண்டபத்தில் இரவு பணிக்கென்று தாதி அமர்த்தப்பட்டிருப்பாள். இயற்கை உபாதைகள் ஏற்பட்டால் நீ அவர்களைச் சாளரத்தின் வழியாக அழைக்கலாம்!" என்ற லலாடிகா அவளது பதிலுக்குக் காத்திராமல், வெளியே சென்று, அந்த அறைக் கதவைப் பூட்டினாள்.

மஞ்சத்தில் சரிந்த கல்பலதா களைப்புடன் கண்களை மூடினாள்.. தக்கோலத்தில் இருந்து காஞ்சிக்கு நடந்தே வந்திருந்ததால், கால்கள் கெஞ்சின. சிலுசிலுவென்ற உப்பரிகை நந்தவனக் காற்று அவளைத் தாலாட்ட, உறக்கம் கண்களைத் தழுவின. எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமே, உறங்கினால் எப்படி? என்று அவளது சிந்தனை எச்சரிக்கை செய்ய, எதுவாக இருந்தாலும் நாளை பார்த்துக் கொள்வோம், இப்போது எனக்கு ஓய்வு தேவை என்று உடல் மறுத்து அவளது உணர்வுகளைக் கட்டிப்போட்டது. ஆழ்ந்த உறக்கத்தினுள் நழுவினாள், கல்பா.

பொழுது விடிந்தது. நந்தவனக் கண்ணாடி மண்டபத்தில் அமர்ந்தபடி பட்சிகள் இனிமையாகக் கூவ, தனது உறக்கத்திலிருந்து மீண்டாள் கல்பலதா. முதலில் தான் எங்கிருக்கிறோம் என்பதே புரியாமல் அந்த அறையின் கூரையையே வெறித்துக் கொண்டிருந்தாள். பிறகு முந்தைய நாளின் சம்பவங்கள் நினைவுக்கு வர, தான் பார்த்திபனின் கைதியாக உப்பரிகை நந்தவன அறையில் அடைக்கப்பட்டிருப்பது நினைவுக்கு வந்தது.

'அந்தமட்டும், பாட்டியையும், தாயையும் சிறையில் அடைக்காமல் இருக்கிறானே. ஒருவேளை, குரலில் இனிமையையும், நயத்தையும் காட்டி இருந்தால், இவளையும் கைதியாக நடத்தி இருக்கமாட்டானோ? தேவையில்லை.. யாருக்கு வேண்டும் இவனது வசதிகளும், மரியாதையும்? இவளது முப்பாட்டன் அபராஜிதனை சதியால் வெட்டிக் கொன்ற ஆதித்த சோழன் குலத்தில் பிறந்த ஆதித்த கரிகாலனுக்கு ஆலவட்டம் வீசிக் கொண்டிருக்கிறான், பார்த்திபன். அவனை நம்பக் கூடாது? ஆதித்த கரிகாலனிடம் அண்டிப் பிழைப்பவன். இவர்களைக் காட்டிக் கொடுத்து அதற்குரிய பரிசுகளையும் நிச்சயம் பெற்றுக் கொள்வான். அதற்குள், எப்படியாவது பாட்டியையும், தாயையும் இங்கிருந்து அழைத்துச் சென்றுவிட வேண்டும்.' மஞ்சத்தில் யோசித்தபடி கிடந்தவள் செவிகளில், இனிய சித்ரவீணையின் நாதம் கேட்டது. உடன் மிருதங்கம் இசைக்கப்பட்டது.

**"உப்பரிகை நந்தவனத்தில்**
**பல்லவக் குருதி பாயும் தடாகத்தில்**
**இரு தாமரை புஷ்பங்கள் மலர உள்ளன!**
**வண்டினங்களே மதுவருந்த**
**அவற்றை அணுகாதீர்!**
**அவை எமது பல்லவ அரசியின்**
**பேரெழில் வதனத்தில்**
**திகழும் தீட்சண்ய கண்கள்"**

என்று இனிய குரலில் இரு பெண்கள் பாடுவதும் கேட்டது. திகைப்புடன் மஞ்சத்தில் இருந்து எழுந்து சாளரத்தை நோக்கி நடந்தாள். சாளரத்தின் வழியாக வெளியே பார்த்தவள், திகைத்துப் போனாள்.

இவள் சயனித்திருந்த நந்தவன உப்பரிகை அறையின் வாயிலில் இருந்து இரத்தினக் கம்பளம் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. கம்பளத்தின் மீது வண்ண மலர்கள் பரப்பப்பட்டிருந்தன. அறைக்கு வெளியே சில

இசைக் கலைஞர்கள் அமர்ந்து பாடலை இசைத்துக் கொண்டிருந்தனர். வெள்ளித்தட்டுகளில் மங்கலப் பொருட்களுடன் தாதியர் நின்றிருக்க, இரு பணிப் பெண்கள் வெண்சாமரங்களுடனும் நிற்க, இன்னும் இரண்டு சேடியர் வெட்டிவேர் விசிறிகளுடன் நின்றிருந்தனர். ஒரு முதியவள் கரங்களில் கலயம் ஒன்றை ஏந்தியிருக்க, அதில் அகில் மற்றும் அருகம்பொடி கலந்த தூபப்புகை எழும்பிக் கொண்டிருந்தது.

'யாருக்கு இந்தப் பலமான வரவேற்பு. ஒருவேளை அரசி அல்லது இளவரசி யாராவது நீராட உப்பரிகை நந்தவனத்துக்கு வருகிறாளோ? பல்லவ அரசி என்று பாடு கின்றனரே! ஒருவேளை, பார்த்திபனுக்கு மணமாகி விட்டதா? இல்லை அவனுக்குச் சகோதரி யாராவது இருக்கிறாளா?' சாளரத்தின் வழியாக வெளியில் நிற்பவர்களைக் கல்பலதாவின் கண்கள் மேய, அவள் சாளரத்தின் அருகே வந்து நிற்பதைக் கண்ட லலாடிகா புன்முறுவல் ஒன்றை வெளியிட்டபடி, அந்த அறைக் கதவைத் திறந்தாள்.

"வெளியே வாருங்கள் கல்பலதா பல்லவிதேவி!"- பணிவுடன் லலாடிகா அழைக்க, திகைப்புடன், கல்பா வெளியே வந்து நின்றதுதான் தாமதம். அங்கிருந்த அத்தனை தோழியரும், இசைக்கலைஞரும், தாதியரும், முழங்காலிட்டு அவள் முன்பாக மண்டியிட, பிரம்மிப்பின் உச்சத்தில் நின்றாள், கல்பா.

"என்ன இது?" - கிசுகிசுப்பாக ஒலித்தது, கல்பாவின் குரல்.

"பல்லவத்தின் கடைசி மன்னர், அபராஜிதனின் வழித்தோன்றல், கல்பலதாவுக்கு, நிருபதுங்கவர்மரின் வழித்தோன்றல் பார்த்திபேந்திரர் அளிக்கும் வரவேற்பு. பல்லவம் இல்லையென்றாலும், அதன் அரசிக்கு உரிய மரியாதையைச் செலுத்தும்படி பார்த்திபேந்திரரின் கட்டளை. வாருங்கள் தேவி!" - லலாடிகா கூற, பிரமை பிடித்தவளைப் போன்று நின்றாள், கல்பா.

ஒரு மூதாட்டி, தனது கையில் இருந்த தட்டில் அவளுக்கு மங்கல நீரைச் சுற்றி, கன்னத்தில் ஒரு திருஷ்டிப் பொட்டினை வைத்தாள்.

'என்ன நடக்கிறது இங்கே?' என்கிற கேள்வி மட்டும் தான் கல்பாவின் இதயத்தில் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

"அஸ்வத்தாமாவின் குலதீப, அட்டபுயகரப் புஷ்ப வல்லி, காஞ்சிபுர பல்லவாங்கி, சீதளக் கோமளா, கனக ஆதிலலிதாங்கி அபராஜித சுதாவல்லி, கல்பலதா பல்லவ தேவி.. பராக்.. பராக்.. பராக்.."

கட்டியங்காரன் முழங்கியவுடன், கொம்பு வாத்தியம் ஒலிக்க, மேளங்களும், டமாரமும் முழங்க, அங்கிருந்து கல்பலதா அழைத்துச் செல்லப்பட்டாள். உப்பரிகையில் இருந்து இறங்கி, மாளிகையின் முதல் தளத்தில் ஒரு பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டாள், கல்பலதா.

"கல்பலதா தேவி! இனி இதுதான் தங்களது அந்தப்புரம்!" - அவளது செவியில் கிசுகிசுத்தாள், லலாடிகா.

"நேற்று வரை இங்கே யார் வசித்தார்கள்?"- திகைப்புடன் கேட்டாள், கல்பலதா.

"நேற்றுவரை பார்த்திப பல்லவர்தான் இங்கே தங்கியிருந்தார். தனது ஜாகையினைக் கீழ்தளத்திற்கு மாற்றிக் கொண்டார். அவரது தந்தை தருமவர்மரின் அறைக்குப் பக்கலில் உள்ள அறையை தான் எடுத்துக் கொண்டார். பல்லவ அரசிக்கு தனது மாளிகையின் முதல் தளத்தை ஒதுக்கியிருக்கிறார்!" - லலாடிகா கூறினாள்.

அயர்ந்து போய் நின்றாள், கல்பா. 'பார்த்திபனின் இந்தச் செய்கைக்கு என்ன பொருள்? உண்மையிலேயே அபராஜிதனின் வாரிசு என்பதற்காக இவளுக்கு இத்தகைய மரியாதையை அளிக்கின்றானா? அல்லது

அவனது கண்களில் நேற்று புறப்பட்ட அந்தக் காதல் உணர்வின் பிரதிபலிப்பாக இந்த உபசரிப்பைச் செய்கிறானா? அல்லது இவளை வளைத்து அடிமைப் படுத்துவதற்காக செய்யும் ஏமாற்று வேலையின் ஒரு அங்கமா.. இந்த வரவேற்பு?' எந்த முடிவுக்கும் வர இயலாமல் குழம்பினாள், கல்பலதா.

கல்பலதாவை அழைத்துக் கொண்டு மாளிகையின் முதல் தளத்திற்குச் சென்ற தோழிகள், அவளது அந்தப்புரத்திற்குள் நுழைந்தனர். இசைக்கலைஞர்களும், காவலர்களும், கட்டியங்காரனும் அறை வெளியே நிற்க, அறைக்கதவு மூடப்பட்டது.

தனது அந்தப்புரத்தை நோட்டம்விட்ட கல்பலதாவின் பிரமிப்பு இரண்டு மடங்காக அதிகரித்தது. அறை, மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அறை முழுவதும் வெண்மையை வாரி வழங்கியபடி வெண்பட்டு திரைச் சீலைகளும், விதானங்களும் கொண்டு அலங்கரிக்கப் பட்டிருந்தது. முந்தைய தினம் பழைய பஞ்சணையில் படுத்துறங்கியவளுக்கு, தந்தத்தினால் அமைக்கப்பட்ட சப்ரமஞ்சம் தயாராகக் காத்திருந்தது. பட்டுப் பஞ்சணையில், வண்ணப் பூக்களின் ஓவியங்களுடன் கூடிய விரிப்புகள், பட்டுத் திண்டுகள் என்று அமர்க்களப்படுத்தி இருந்தனர். சப்ரமஞ்சத்தின் மீது வண்ண, ரசகுண்டுகளும், இனிமையாகச் சப்தம் எழுப்பியபடி இருந்த சிறுசிறு மணிகளும் பிணைக்கப் பட்ட கூராளம்* ஒன்று காணப்பட்டது.

அந்தப்புரத்தின் தரையில் அழகிய இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. மஞ்சத்தின்

* ஆளம் என்பது துணி விரிப்பு. கூரையில் துணி விரிப்பைக் கட்டும் போது அது கூராளம். அந்தக் காலத்தில் ஜமா என்கிற நகைச்சுவை விவாதங்களை ஆளம் ஒன்றை விரித்து அதன் மீது அமர்ந்து தர்க்கம் செய்வார்கள். அந்தத் துணிக்கு ஜமுக்காளம் என்று பெயர். ஜமுக்காளம் என்பது ஜமா என்கிற பெர்சியன் சொல்லையும் ஆளம் என்கிற தமிழ்ச் சொல்லையும் இணைத்து உண்டான சொல்.

இருபுறமும் அம்சதூளிகா விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருக்க, அங்காங்கே அலங்காரத் தீபங்கள் வைக்கப்பட்டிருந்தன. தக்கோலத்தில் பாழடைந்த குடிலில் வசித்து வந்த இவளுக்கா இந்த அலங்காரங்கள்? கல்பலதாவால் தனது கண்களையே நம்பவே முடிய வில்லை. அந்த அறையைச் சுற்றி மலைப்புடன் நோக்கிக் கொண்டிருந்த கல்பலதாவின் கையை உரிமையுடன் பற்றிய லலாடிகா அவளை அறையின் பின்பாக இருந்த கதவை நோக்கி அழைத்துச் சென்றாள். அந்தக் கதவைத் திறந்ததும், அழகிய முற்றம் ஒன்று இருக்க, அதன் வழியே லலாடிகாவும், தோழியரும் கல்பலதாவை அழைத்துச் சென்றனர்.

முற்றத்தின் முடிவில் ஒரு வெட்டவெளி இருக்க, அதில் சிறிய குளம் ஒன்று இருந்தது. அதில் கல் யானை ஒன்று தனது துதிக்கையினால் குளத்தினுள் நீரைப் பாய்ச்சுவது போன்று அமைக்கப்பட்டிருக்க, கல்பலதாவை அந்தச் செயற்கைப் பொய்கையில் இறக்கி அவளை நீராட்டத் தொடங்கினர், தோழியர். மங்கலப்பொடிகளும், வாசனை மூலிகைகளும் கலந்த அந்தப் பொய்கை நீர் இதமான சூட்டில் அவளது தேகத்தைத் தாலாட்ட, கிறங்கிப் போனாள், கல்பலதா. இவள் தொடர்ந்து தகிக்கும் சொற்களைப் பார்த்திபனின் மீது ஏவிக் கொண்டிருக்க, அவனோ, இவளது தேகத்தையும், மனதையும் குளிர்விக் கின்றானே. மூலிகை வேரினால் அவளது பற்களைத் துலக்கி, மஞ்சள், மற்றும் சந்தனப் பொடிகளைத் தூவி, ராஜஉபசாரத்துடன் அவளை நீராட்டினர். தோழிகள்.

நீராடி முடிந்ததும் அவளது தலையைத் துவட்டி, அழகிய சிகையலங்காரம் செய்து, நறுமண மலர்களைச் சூட்டி, ஆபரணங்களைச் அணிவித்தனர். வெண் பட்டினில் ஸ்வர்ண நூலிழைகளால் நெய்யப்பட்ட சேலையை அணிவித்து அவளை நிலைக்கண்ணாடியின் முன்பாக நிறுத்தினர்.

இதுகாறும் வறுமையில் நாடோடியாகத் திரிந்ததாலும், பல்லவ வாரிசான தான் அனாதையாகத் தவித்ததனால் ஏற்பட்ட கசப்புணர்ச்சியாலும் கல்பலதாவுக்குத் தன்னை அழகு செய்து கொள்ளும் எண்ணமே இருந்திருக்க வில்லை. அதற்கான வாய்ப்பும் கிடைக்கவில்லை. இப்போது ஒரு முழு அரசிக்குரிய அலங்காரங்களுடன் நிலைக்கண்ணாடியின் முன்பாக நிறுத்தப்பட்டதும், தனது பேரெழிலைக் கண்டு ஒருகணம் திகைத்து நின்றாள். ஒய்யாரக் கொண்டையுடனும், கவர்ச்சியான ஆடையலங்காரத்துடனும், கண்ணாடியில் பிரதிபலித்த தனது உருவத்தைக் கண்டு தானே சொக்கிப் போனாள்.

'நான் இவ்வளவு பேரழகு வாய்ந்தவளா?' தன்னையே கேட்டுக் கொண்டாள், கல்பலதா. அலங்காரங்கள் முடிந்ததும், அந்தப்புரத்தில் இருந்து வெளிப்பட்டு, தனது தாயும், பாட்டியும் தங்கியிருந்த கீழ்தள அறையை நோக்கி நடந்தாள். பட்டுச்சேலை கட்டி, கம்பீர ராஜமாதாவாக அமர்ந்திருந்தாள், சமந்தக பல்லவி.

"வா மகளே! தேவலோக மங்கையைப் போன்று இருக்கிறாய். இப்படி உன்னைக் காண்பேனா என்று இவ்வளவு நாட்களாக மருகிக் கொண்டிருந்தேன். இப்படி எங்களை அனாதையாக அலைய வைக்கின்றாயே என்று அந்த அத்திமலைத்தேவனிடம் புலம்பாத நாட்கள் இல்லை. இன்று எனது வேண்டுதலுக்குச் செவி சாய்த்துவிட்டான்!" என்று கண்ணீருடன் மகளை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

பாட்டியார் கங்காவதியின் முகத்தில் இவ்வளவு நாட்களாகத் தென்பட்டிருந்த நோயின் கடுமை குறைந்தது போன்று காணப்பட்டாள். அவளது தேகத்தை வெந்நீரால் துடைத்து, புதிய ஆடைகள் அணிவித்து, சிகை சீவப்பட்டு, மருத்துவக் கவனிப்பும் தொடர்ந்து கிடைத்ததால், முகமெல்லாம் புன்னகை யுடன் மஞ்சத்தில் கிடந்தாள். பெயர்த்தியை வாழ்த்துவது போன்று கையை உயர்த்தினாள்.

“மகளே! முப்பது ஆண்டுகள் வாழ்ந்தாரும் இல்லை. முப்பது ஆண்டுகள் தாழ்ந்தாரும் இல்லை என்கிற வழக்கு கூறுவதைப் போன்று, நாம் பட்ட இன்னல்கள் தீர்ந்து இனி அரசபோக வாழ்க்கை கிட்டப் போகிறது. உபேந்திர பார்த்திப பல்லவன் நமக்கு அடைக்கலம் மட்டும் கொடுக்கவில்லை. உனக்குப் பல்லவ அரியணையையே தர இசைந்திருக்கிறான். அவனைக் கடிந்து பேசாதே! உனது பாட்டியார் மீதும், என் மீதும் எவ்வளவு மதிப்பும், மரியாதையும் செலுத்துகிறான் தெரியுமா? இன்றிரவு, தருமவர்மரும், அவர் மகன் பார்த்திபனும் நமக்கு விருந்தளிக்கிறார்கள். பார்த்திபன் என்னை மரியாதையுடன் பேசுவது போன்று, விருந்தில் நீயும் தரும வர்மரிடம் பணிவுடன் பேச வேண்டும். பழைய பல்லவ சரித்திரங்களை மனதில் கொண்டு அவரிடமும் வன்மத்தைக் காட்டாதே!” - இறைஞ்சும் குரலில் பேசினாள், சமந்தக பல்லவி.

அறையின் நுழைவாயிலின் அருகே நின்றிருந்த லலாடிகாவை திரும்பி நோக்கினாள்.

“பார்த்திப பல்லவர் எங்கே?” - கல்பலதா கேட்டாள்.

“அவரது அறையில் இருக்கிறார்?” - லலாடிகா கூற, கல்பலதா வெளியே நடந்தாள்.

“நான் அவரைச் சந்திக்க வேண்டும்!” - விறைப்பாகக் கூறிய கல்பலதா, கீழ்தளத்தில் இருந்த பார்த்திபனின் அறையை நோக்கிச் சென்றாள். லலாடிகா பார்த்திபனின் கதவை இருமுறை தட்டிவிட்டு, ஒதுங்கி நிற்க, “உள்ளே வரலாம்” என்று பார்த்திபனின் கம்பீரமான குரல் கேட்டது.

கல்பலதா உள்ளே நுழைந்து பார்த்திபனின் முன்பாக நின்றாள். லலாடிகா கதவை வெளிப்புறமாக மூடினாள். அலங்காரப் பதுமையாக முதன் முறையாகப் பேரெழிலுடன் நின்ற கல்பலதாவைக் கண்டு பார்த்திபன்

ஸ்தம்பித்துப் போயிருக்க வேண்டும். கல்தூணைப் போன்று, அவளையே வெறித்தபடி நின்றிருந்தான்.

முந்தைய தினம் வரை பார்த்திபனின் மீது வன்மத்தையும், வெறுப்பினையும், கனல் தெறிக்கும் கண்களால்தான் அவனை நோக்கி உமிழ்ந்துக் கொண்டிருந்தாள். ஆனால் இன்று தன்னையும், தனது தாய் மற்றும் பாட்டியையும் வாழ வைக்கும் ஒரு நல்ல உள்ளம் படைத்த வாலிபனாக அவன் அவளுக்குத் தெரிய, அவனது மனதின் அழகோடு, உடற்கட்டின் கம்பீரமும் அவளுக்குப் புலப்பட்டது. உயரமாகவும், கருத்திருந்து காட்சியளித்தாலும் தேகத்தைக் கட்டுக் கோப்புடன் வைத்திருந்தான். தீர்க்கமான நாசியும், அதன் கீழே மரவட்டையைப் போன்று படர்ந்திருந்த மீசையும், அகன்று வேலின் முனையைப் போன்ற கூர்மையான பார்வையும், பிடரியை மறைத்த சுருண்ட குழலும், கழுத்தின் கீழே காணப்பட்ட ஆழமான இரு குழிகளும், அதன் கீழே மலையைப் போன்று பறந்து விரிந்த மார்பும், மலையின் கீழே காணப்படும் பள்ளத்தாக்கினை போன்று ஒட்டிய வயிறும், இரு மலைப்பாம்புகள் மரத்திலிருந்து ஊசலாடுவது போன்ற பலமான கைகளையும் கண்டு திகைத்துப் போய் நின்றிருந்தாள்.

"குடும்பத்தில் ஒரு ஆண்மகன் இருந்திருந்தால், நமக்கு இத்தகைய இழிநிலை வந்திருக்குமா?" - பாட்டியாரும், தாயும் அடிக்கடி புலம்பிய போதெல்லாம், கல்ப லதாவுக்குக் கோபம் வரும்.

"ஆண்பிள்ளை இல்லை என்றால் என்ன? நான் இருக்கிறேனே. நானும் வாட்பயிற்சி பெற்றிருக்கிறேன் அல்லவா? ஒரு ஆண்மகனுக்கு இணையாகப் போரிட்டு உங்களைக் காக்கும் திறமையைக் கொண்டிருக்கிறேன். அப்படியிருக்க, ஆண்மகன் ஆண்மகன் என்று இல்லாத வனை நினைத்து ஏன் புலம்புகிறீர்கள்?" என்று கேட்டிருந்தாள்.

ஆற்றலும், வலிமையும் உடலில் பரவியிருக்க, பார்த்திபன் தனது முன்னால் கம்பீரத்துடன் நிற்பதைக் கண்டதும், முதன் முறையாகத் தனது மனதிலேயே ஒரு பாதுகாப்பு உணர்வு பரவுவதைக் கண்டு கொண்டாள். இந்த உணர்வு இல்லாததால்தான், பாட்டியாரும், தாயும், ஆண்மகன் குடும்பத்தில் இல்லையே என்று புலம்பினர் போலும்.

கல்பலதாவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபன், திடீரென அவள் சற்றும் எதிர்பார்த்திராத அந்தச் செயலைச் செய்தான்.

மேஜையின் மீதிருந்த தனது வாளை வேகமாக எடுக்க, அவன் தன்னை வெட்டுவதற்காகத்தான் அப்படி வாளை எடுக்கிறானோ என்று ஒருகணம் திகைத்துப் போனாள், கல்பலதா.

வாளைக் கையில் எடுத்த பார்த்திபன், அவளது முன்பாக மண்டியிட்டான். “பல்லவகுல நவமணி, நந்திதுவஜன் அபராஜிதவர்ம பல்லவரின் வழித் தோன்றல், பல்லவாங்கி கல்பலதா தேவியார் வாழ்க..” என்று கூறியபடி தனது வாளை அவளது பாதங்களின் முன்பாக வைத்தான்.

தன்னைவிட உயரமான அவன், தனது முன்பாகத் தனது தேகத்தைக் கூனிக் குறுகி மண்டியிட்டு அமர்ந்திருப்பதைக் கண்டதும், அவளது இதயத்தில் பல வருடங்களாக அடைத்து வைத்திருந்த உணர்வுகள் அனைத்தும் விடுதலை பெற்றன. என்ன உணர்வு என்று கூற இயலாத வண்ணம் சோகங்களும், வருத்தங்களும், துக்கங்களும், ஏக்கங்களும் ஒன்றாகக் கலந்து அழுகையாக வெடித்தன.

‘ஹோ’ என்று கதறத் துவங்கியவள், மண்டியிட்டு அமர்ந்திருந்த பார்த்திபனின் முன்பாகத் தானும் மண்டியிட்டு அமர்ந்தாள். தாள ‘முடியாத துன்பங்கள் கண்ணீராக வெளிப்பட, தனது முகத்தைக் கரங்களால்

மூடியபடி விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள் கல்பலதா.

பல்லவ சாம்ராஜ்யத்தின் குலக்கொழுந்து.. அடுத்த வேளை இன்ன அணிகலன்களை அணிந்து கொள்ள வேண்டும், இன்ன ஆடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும் என்று யோசிக்க வேண்டியவள், அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது என்றல்லவா இது நாள்வரை யோசித்துக் கொண்டிருந்தாள். தக்கோலத்தில் தரித்திரக் கோலத்தில் வாழ்ந்தவள், காஞ்சியில் காலடி வைத்ததும், காஞ்சிமணி அணிகலன்களை அணிந்து சப்ரமஞ்சத்தில் கிடக்கிறாள் என்றால் அதற்கு முழுக் காரணமும் பார்த்திபன் என்கிற இந்த வாலிபனின் விசால மனம்தானே? பல்லவத்தின் வாரிசு என்கிற எண்ணத்தில் இவளைக் கொன்றிருக்கலாம். அல்லது சோழர்களிடம் காட்டிக் கொடுத்திருக்கலாம். அதைச் செய்யாமல், இவளை அரசி என்று பணிந்து அமர்ந்திருக்கிறான். உணர்ச்சிக் கொந்தளிப்பில் செய்வதறியாது கல்பலதா கதறிக் கொண்டிருக்க, அவள் சற்று அழுது ஓயட்டும் என்பது போன்று வாளாயிருந் தான், பார்த்திபன்.

அழுகையின் நடுவே கேவல்களுடன் அவனை நோக்கிப் பேசினாள், கல்பா. "தங்களைக் கடும் சொற்களால் தாக்கி, அவமதித்த என் மீது ஏன் இவ்வளவு கருணை காட்டுகிறீர்கள்..? நான் இதற்குத் தகுதி பெற்றவள்தானா? ஆதித்த கரிகாலனின் தலையோடு தங்கள் தலையையும் வெட்டிச் சாய்ப்பேன் என்று கூறிய எனது முன்பாகப் போய் மண்டியிடுகிறீரே?"- கல்பலதாவின் கண்ணீர் அவளது வெண்பட்டு ஆடையை நனைத்து, மார்பின் மேல்பகுதியை புலப்படுத்தியது. அவளிடம் பேசுவதற்காகத் தனது கண்களை உயர்த்திய பார்த்திபன், அவளது மார்பகப் பகுதி ஈரமாக இருப்பதைக் கண்டதும், மீண்டும் கண்களைத் தாழ்த்தினான்.

*"கள்வர்களிடம் நீ போராடிய விதம், அதன் பிறகு என்னிடம் பேசிய கடும் சொற்கள் எல்லாமே எனக்கு ஒன்றைப் புரிய வைத்தன. ஆடவரிடம் நீ கடுமையாகப் பேசி நடந்து கொள்வதற்குக் காரணமே, அவர்களிடம் இருந்து உன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே! உண்மையில், ஒரு பல்லவகுல பெண்மணிக்கு உரிய அத்தனை நல்ல பண்புகளையும் நீ கொண்டவள் என்பதை யூகித்துவிட்டேன். ஒரு அரசிக்குரிய அத்தனை லட்சணங்களையும் நீ கொண்டிருக்கிறாய் என்பதையும் கண்டு கொண்டேன். எனவேதான், ஒரு அரசிக்குரிய அத்தனை மரியாதைகளோடு நீ எனது மாளிகையில் தங்க வேண்டும் என்பதற்காகவே உன்னைக் கைது செய்வதாக ஒரு நாடகத்தை நடத்தினேன். இன்று பல்லவத்தை மீண்டும் உருவாக்க ஒரு தலைமை கிடைத்துவிட்டது என்கிற பெருமையோடு உன்னை எனது அரசியாக ஏற்கிறேன்!" - பார்த்திபன் கூறினான்.*

*சற்றே அடங்கிய கல்பலதாவின் அழுகை, அவன் இவ்வாறு கூறியதும் மீண்டும் அதிகரித்தது. கல்பா மீண்டும் அழ, அவளது கண்களினுள் ஆழமாக நோக்கினான், பார்த்திபன்.*

*"கல்பலதா! நான் உனது முன்பாக வைத்திருக்கும் வாள் எனது வாள் அல்ல. ஆதித்த சோழனால் அநியாயமாக வெட்டிச் சாய்க்கப்பட்ட அபராஜித பல்லவனின் வீர வாள். போர்க்களத்தில் அபராஜிதனை ஆதித்த சோழன் சந்தித்திருந்தால், என்னால் அவனைக் காப்பாற்றி இருக்க முடியும். ஆனால், சயன அறையில் திடீரென்று தாக்கிக் கொன்றான். என்னால் அதனைத் தடுக்க முடியவில்லையே என்று அபராஜித பல்லவரின் வாள் என்னிடம் அன்றாடம் புலம்பிக் கொண்டுதான் இருக்கிறது. சோழர்களிடம் நான் ஊழியம் செய்ய வில்லை. நமது பல்லவம் அவர்களிடம் சிக்கி உள்ளது. அதனை மீட்பதற்கு எனது உள்ளத்தில் திட்டம் வகுத்து தான் வருகிறேன். ஆனால் சோழர்கள் பாணர்களைச்*

சித்ரவதை செய்து துன்புறுத்தி கங்கர்களுக்கு அடிமையாக விற்றது போன்று, நமது பல்லவர்களுக்குக் கெடுதிகளைச் செய்யக்கூடாது என்பதற்காகவே, ஆதித்த கரிகாலனிடம் நட்பு பாராட்டி, சோழத்திற்கு ஊழியம் செய்து வருகிறேன்!"-பார்த்திபன் கல்பலதாவுக்கு விளக்கம் கூறினாலும், குமுறலாக அவன் குரல் வெளிப் பட்டதைத் தனது அழுகையின் ஊடே உணர்ந்தாள், கல்பலதா.

அவளது அழுகை உடனே நின்றாலும், துக்கம் தாளாமல் அவ்வப்போது அவள் விசித்துக் கொண்டிருக்க, பார்த்திபன் அவளது கண்களினுள் ஆழமாக நோக்கினான்.

"கல்பா! அபராஜிதரின் வாளினைக் கையில் எடுத்து அதனை ஸ்பரிசித்துப் பார். உனது சோகங்களைவிட அபராஜிதனின் சோகம் இன்னும் பெரியது. நமது பல்லவ குலத்திற்கு சோகங்கள் தான் பொக்கிஷங்கள். அஸ்வத் தாமா தொடங்கி, நம் இருவர் வரை, சோகங்களைத்தான் எருவாக இட்டு, நமது பல்லவ மரத்தை வளர்த்து வந்திருக்கிறோம். ஆனால் அத்திமலையானின் கிருபையால், அபராஜிதனின் வாரிசான நீயும், நிருபதுங்கனின் வாரிசான நானும் இன்று இணைந்திருக்கிறோம். நாம் இருவரும் சேர்ந்து மீண்டும் காஞ்சியில் நந்திக்கொடியைப் பறக்கச் செய்வோம். மூன்றாம் நந்திவர்மன் பல்லவத்தை இருகூறாகப் பிரித்து அதனை நசித்துப் போகச் செய்தான். நாம் இருவரும் பல்லவத்தை இணைத்து மீண்டும் அதனைப் பொலியச் செய்வோம்! இந்தப் பெரும் செயலை புரிவதற்கு, நீ எனக்குப் பக்கத்துணையாக நிற்பாயா?" என்று கேட்டபடி பார்த்திபன் தனது கையை அவளை நோக்கி நீட்டினான்.

முறத்தை போன்று தனது முன்பாக விரிந்த அவனது உள்ளங்கையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்,

கல்பா. பிறகு தாமரைத் தண்டை போன்ற தனது மென்மையான கையைக் காய்த்துப் போயிருந்த அவனது உள்ளங்கையில் அடைக்கலமாக வைத்தாள்.

“வடபல்லவமும், தென் பல்லவமும் மட்டுமல்ல, நிருபதுங்க பல்லவனின் மகள் கோதாவரியின் வழி வந்த நீங்களும், கம்பவர்மரின் மகன் அபராஜித பல்லவனின் வழி வந்த நானும் வாழ்வில் இணைந்து, ஒருங்கிணைந்த பல்லவத்திற்குப் புதிய வடிவம் கொடுப்போம். நிருபதுங்கரின் மகள் கோதாவரியும், கம்பவர்மரின் மகன் அபராஜிதனும் சகோதர சகோதரிகள். கோதாவரியின் பெயரனின் பெயரன் நீங்கள். அபராஜிதவர்மனின் பெயர்த்தியின் பெயர்த்தி நான். முறையும் இருக்கிறது. மனநிறைவும் இருக்கிறது. பார்த்திபனைக் கண்ட எனது கண்கள் இனி மற்றொருவனைப் பார்க்காது. தங்களது கையில் எனது கையை மட்டுமல்ல, எனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒப்புவிக்கிறேன்!” என்று கூறினாள் கல்பலதா.

பார்த்திபன் உவகையுடன் அவளை நோக்கியபடி, தன்னுள் அடைக்கலமாகிய அவளது கையை மலைப்பாம்பு ஒன்று குறுமுயலை விழுங்குவது போன்று, பற்றித் தனது கைக்குள் அடக்கிக் கொண்டான். உள்ளே இரு மனங்களால் பல்லவத்தின் புதிய சகாப்தம் எழுதப்படுவது அறியாமல், லலாடிகா அவர்களின் வருகைக்காக அறையின் வெளியே காத்திருந்தாள்.

## 6. பழையாறை நிலவறை

இரவெல்லாம் உறக்கத்தைத் தொலைத்துவிட்டு, கஜானா அறையை வேவு பார்த்துக் கொண்டிருந்த குந்தவை, ஆதித்த கரிகாலன் வராத காரணத்தாலும், கண்கள் களைப்படைந்ததாலும், எரிச்சலுடன் தனது அந்தப்புரத்தினுள் நுழைந்தாள்.

தெட்டக்கனியிடம் சினத்துடன் முணுமுணுத்தாள். "வீணாகப் போன அந்த அமானுஷ்யம் கூறியதை நம்பி யிருக்கக் கூடாது. இரவெல்லாம் கண்விழித்து கஜானா அறையை நோட்டம்விட்டுக் கொண்டிருந்ததுதான் மிச்சம். யாரும் வரவில்லை. நான் சற்று உறங்கிவிட்டு வருகிறேன். யார் அழைத்தாலும் எனக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லிவிடு!" - தெட்டக்கனியிடம் கூறிவிட்டு, தனது சயன அறைக்குள் நுழைந்தாள், குந்தவை.

தெட்டக்கனி அவளுக்குப் பின்பாக அறைக்கதவை சாற்றிவிட்டு, குந்தவையின் அலங்காரத்திற்குத் தேவையான மலர்களைப் பறித்து வரலாம் என்று எண்ணி, பூக்குடலை ஒன்றை எடுத்துக்கொண்டு நந்தவனத்திற்குச் சென்றாள். விடியற்காலை என்பதால், தஞ்சை அரண்மனை நந்தவனத்தில் முன்னிரவு பெய்திருந்த பனி இன்னும் கதிரவன் உதிக்கவில்லை என்கிற துணிவில் மலர்களுடன் தனது கள்ள உறவை தொடர்ந்து கொண்டிருந்தது. மலர்களைப் பறித்துக் குடலையில் போட்டபடி, தெட்டக்கனி தான் மிகவும் விரும்பிய குறிஞ்சி ராகத்தில் பாடல் ஒன்றினை முணுமுணுக்கத் துவங்க, அப்போது அரண்மனைக்குள் குதிரைகளில் இருவர் நுழைந்தனர். குதிரைகளின்

குளம்படி ஒலியினைக் கேட்டு, திகைப்புடன் திரும்பி நோக்கினாள், தெட்டக்கனி.

'இந்த விடியலில் தஞ்சை அரண்மனைக்கு வருபவர்கள் யார்?' தெட்டக்கனி சட்டென்று அங்கிருந்த மகிழ மரத்தின் பின்பாக நின்று, வருபவர்களை நோட்டம் விட்டாள்.

அரண்மனை அதிகாரி ஜம்புகேஸ்வரரும், கஜானா அதிகாரி விரிஞ்சி நாதரும்தான் புரவிகளில் வந்து கொண்டிருந்தனர்.

'இவர்கள் எங்கே சென்றுவிட்டு வருகிறார்கள்?'- மனதிற்குள் கேள்வி பிறந்து விஸ்வரூபம் எடுக்க, அவர்களைத் தொடர்ந்து கண்காணித்தாள், தெட்டக்கனி.

நந்தவனத்தைக் கடந்து குதிரை இலாயத்தருகே குதிரைகளை நிறுத்திவிட்டு, தத்தம் ஜாகையை நோக்கி அவர்கள் செல்ல, இலாயத்திலிருந்த சிங்காரன் என்கிற குதிரை மேய்ப்பாளன் அந்தக் குதிரைகளை இலாயத்தினுள் இட்டுச் சென்றான்.

ஒரு யோசனை தோன்றியது. கையில் பூக்குடலையில் இன்னும் சிறிது மலர்களை நிறைத்துக்கொண்டு குதிரை இலாயத்தை நோக்கி நடந்தாள். சிங்காரனிடம் பேச்சு கொடுத்து, விவரத்தை சேகரித்து, குந்தவை துயில் நீங்கும் போது கூறி அவளைத் திகைப்பில் ஆழ்த்த வேண்டும் என்கிற முடிவுடன் இலாயத்தை நெருங்கினாள்.

"சிங்காரம்.. சிங்காரம்!" - குரல் கொடுக்க, அவன் இலாயத்திலிருந்து வெளியே வந்தான்.

"சிங்காரம்! மறந்தே போனேன். இன்று இளவரசியார் மீண்டும் பழையாறை திரும்புகிறார். நேற்றே உன்னிடம் சொல்லி குதிரையைத் தயார் செய்து தேரில் கட்டச் சொல்லியிருந்தார். இப்போது மலர்களைப் பறிக்கும் போதுதான் நினைவுக்கு வந்தது. மறக்காமல்

இளவரசியாரின் குதிரையைத் தயார் செய்துவிடு.” தெட்டக்கனி கீழ்க்கண்ணால் அவனை நோக்கியபடி இலாயத்தினுள் மண்ணில் புரண்டு கொண்டிருந்த அந்த இரு குதிரைகளையும் பார்த்தாள்.

“இதோ அந்த இரண்டு குதிரைகளையும் நீராட்டி விட்டு, உடனே இளவரசியாரின் குதிரையைத் தயார் செய்துவிடுகிறேன்!” என்றான், சிங்காரம்.

“அந்த குதிரைகள் யாருடையது? பாவம்.. வெகு தூரம் பயணித்துவிட்டு வந்திருக்கின்றன போலும். மிகவும் களைப்பாகக் காணப்படுகின்றனவே!” - சொற்களை மிகவும் எச்சரிக்கையுடன் கோர்த்தாள், தெட்டக்கனி.

“ஆம்! அரண்மனை அதிகாரியும், கஜானா அதிகாரியும் அவசரமாக நேற்று பழையாறைக்குப் புறப்பட்டுச் சென்றனர். அதனால்தான் குதிரைகள் சற்றே களைப்புடன் காணப்படுகின்றன. தினவு நீங்க அவை மண்ணில் புரண்டு கொண்டிருக்கின்றன. அவற்றை நீராட்டிவிட்டேன் என்றால், பிறகு இளவரசியாரின் புரவியை நீராட்டி இரதத்தினில் பூட்டிவிடுவேன்!” என்றான் சிங்காரம்.

“நல்லது! எப்படியும் பிற்பகலில்தான் இளவரசியார் பழையாறை புறப்படுவார்!” என்றபடி அங்கிருந்து நடையைக் கட்டினாள். தனக்குக் கிடைத்த தகவல் களைச் சிந்தைக்கு அனுப்பி அலசத் தொடங்கினாள், தெட்டக்கனி.

‘பட்டத்து இளவரசன் ஆதித்த கரிகாலனும், அவனது உதவியாளர்களும் தஞ்சைக்கு வந்திருப்பதாக, அமானுஷ்யன் தகவல் கூறியிருந்தான். எனவேதான், பழையாறை ஆலயத்திலிருந்து நேராகத் தஞ்சைக்கு வந்திருந்தாள், குந்தவை. ஆனால், சிங்காரன் கூறுவதைப் பார்த்தால், அரண்மனை அதிகாரியும், கஜானா அதிகாரியும், இரவு பழையாறை சென்றுவிட்டு வந்திருக் கிறார்கள் என்பது தெரிகிறது. இருவர் மட்டும்

போனார்களா, அல்லது காஞ்சியிலிருந்து வந்திருக்கும் இளவரசனையும் அழைத்துக்கொண்டு போனார்களா? ஆதித்த கரிகாலன் இன்னும் தஞ்சையில்தான் இருக்கிறானா?'

யோசித்தபடி நடந்தவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அரண்மனையின் மையப் பகுதியை நோக்கி நடந்தாள். அங்கே கீழ்தளத்தில்தான் பல்வேறு அதிகாரி களின் அறைகள் உள்ளன. அரண்மனையில் பணியாற்றும் தாதிகளின் பொறுப்பாளரும், தலைமைத் தாதியுமான நூபுரமணியின் அறைக்குச் சென்றாள். இரவு பணியில் இருந்த தாதியை விடுவித்து அனுப்பிவிட்டு, அப்போதுதான் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த நூபுரமணியின் முன்பாக நின்றாள், தெட்டக்கனி.

இளவரசி குந்தவையின் உயிர்த்தோழி தெட்டக் கனியைக் கண்டதும் பல்வேறு பகுதிகளுக்குத் தாதிகளை அனுப்பும் அதிகாரி நூபுரமணி, வியப்புடனும், பணிவுடனும் எழுந்து நின்றாள்.

"எனது வந்தனங்கள்!" நூபுரமணி கூறினாள்.

"வந்தனங்கள் நூபுரா! இன்று அநேகமாக இளவரசியார் பழையாறைக்குப் புறப்பட்டுவிடுவார். எனவே மதியத்திற்கு மேல் எங்களுக்குத் தாதிகளின் உதவி தேவையில்லை. அதைக் கூறிவிட்டுப் போகவே வந்தேன். அதோடு இன்னொரு விஷயம். தனது இருப்பிட மான பழையாறைக்குச் செல்வதற்குள், இளவரசியார், பட்டத்து இளவரசரைச் சந்திக்க நினைக்கிறார். அவர் எப்போது காஞ்சிக்குப் புறப்படுகிறார்? அதற்குள் குந்தவை தேவியார் அவரைச் சந்திக்க விரும்புகிறார்."

குந்தவையின் நெருங்கிய தோழி மற்றும் மதியூகி அல்லவா? இன்ன தகவல்களைப் பெற இன்ன வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும் என்பது தெரியவில்லை யென்றால், குந்தவையின் தோழியாக நீடிக்க முடியுமா?

தனக்கு முன்பாக கற்றையாக இருந்த சுவடிகளைப் பிரித்து, ஒரு குறிப்பிட்ட சுவடியைத் தேடி எடுத்தாள். "இளவரசர் நேற்றிரவே காஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்று விட்டாரே! இன்று அவருக்குத் தாதிகள் ஒதுக்கப்படவே யில்லையே!" - சுவடியை ஆராய்ந்தபடியே, நூபுரமணி கூறினாள்.

"பட்டத்து இளவரசர் புறப்பட்டுவிட்டாரா? சரி! நான் இளவரசியாரிடம் தெரிவித்துவிடுகிறேன்!" என்றபடி அங்கிருந்து நழுவினாள், தெட்டக்கனி.

'நேற்றுதான் காஞ்சியிலிருந்து வந்திருந்தவன், எதற்காக நேற்றிரவே காஞ்சிக்குத் திரும்ப போகிறான்? அரண்மனை அதிகாரியையும், கஜானா அதிகாரியையும் அழைத்துக்கொண்டு பழையாறை சென்றிருக்கிறான். அங்கிருந்து இளவரசர் நேராக காஞ்சிக்குச் சென்றுவிட இவர்கள் தஞ்சைக்குத் திரும்பியிருக்கிறார்கள்!' - தனக்குள் யூகித்த தெட்டக்கனி, குந்தவையின் அந்தப்புரத்தை நோக்கி நடந்தாள்.

★ ★ ★

**பி**ற்பகல் உணவருந்திவிட்டு, பெற்றோர் சுந்தர சோழரிடமும், வானவன்மாதேவியிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு குந்தவை தெட்டக்கனியுடன் பழை யாறைக்குப் புறப்பட்டாள். குந்தவை என்றுமே இரத சாரதியை அமர்த்திக்கொள்ளும் வழக்கம் கிடையாது. விரைவாக இரதத்தைச் செலுத்தினால்தான் அவளுக்குத் திருப்தி.

"நாம் தஞ்சை வந்ததே வீணாகிப் போனது. ஆதித்த கரிகாலன் கஜானாவிற்கு வரப்போகிறான் என்கிற அமானுஷ்யனின் தகவல் பொய்யாகிப் போனது!"- புலம்பியபடி இரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள் குந்தவை.

தஞ்சையின் எல்லையைக் கடந்து குடந்தை செல்லும் பாதையில் தனது இரதத்தை குந்தவை திருப்பும்வரை, மௌனமாகவே வந்த தெட்டக்கனி பிறகு, சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்துவிட்டு, மெல்லிய குரலில் பேசத் துவங்கினாள்.

"இளவரசி! உங்களிடம் ஒரு தகவலைக் கூற வேண்டும். அமானுஷ்யன் கூறிய தகவல் சரிதான். அவர் கூறியது போன்று பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர், அரண்மனை அதிகாரி ஜம்புகேஸ்வரர், கஜானா அதிகாரி விரிஞ்சி நாதர் அனைவருமே நள்ளிரவு கஜானாவுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சென்றது நமது பழையாறையில் உள்ள பொக்கிஷ நிலவறைக்கு. தஞ்சையில் உள்ள கஜானா அறைக்கு அல்ல!" - தெட்டக்கனி கூற, திடுக்கிட்டுப் போய், அவளைத் திரும்பிப் பார்த்தாள், குந்தவை.

"உண்மையாகவா? உனக்கு எப்படித் தெரியும்?" - தனது கண்களை விரித்துத் திகைப்புடன் குந்தவை கேட்க, தெட்டக்கனி அன்றைய விடியலில் நிகழ்ந்ததை விவரிக்கத் துவங்கினாள்.

"நந்தவனத்தில் மலர்களைப் பறித்துக் கொண்டிருந்த போது, ஜம்புகேஸ்வரரும், விரிஞ்சி நாதரும் தத்தம் புரவிகளில் வந்து இறங்கினர். இரவெல்லாம் பயணம் செய்திருந்தகளைப்பு, அவர்களிடமும், புரவிகளிடமும் தென்பட்டது. குதிரை இலாயத்தைப் பராமரிக்கும் சிங்காரம் என்பவனிடம், பேச்சு கொடுத்தேன். இருவரும் பழையாறைக்குப் போய்விட்டுத் திரும்பியதாக சிங்காரம் கூறினான். தாதிகளின் தலைவி நூபுரமணியிடம் பேச்சு கொடுத்தேன். நேற்றிரவே ஆதித்த கரிகாலர் காஞ்சிக்குப் புறப்பட்டுவிட்டதாகக் கூறி, அவருக்கு அன்று தாதிகள் நியமிக்கப்பட வேண்டியதில்லை என்று சுவடியில் இருந்து படித்து அறிவித்தாள். காஞ்சியில் இருந்து அவசரமாகத் தஞ்சைக்கு வந்தவர், நேற்றே ஏன் திரும்பிப்

போக வேண்டும். யோசித்துப் பார்த்தேன். அமானுஷ்யன் கூறியது போன்று, தஞ்சைக்கு வந்து, ஜம்புகேஸ்வரர் மற்றும் விரிஞ்சி நாதரையும் அழைத்துக்கொண்டு பழையாறை சென்றிருக்கிறார். அங்கிருந்து தனக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு காஞ்சிக்கு நேராகச் சென்றிருக்க வேண்டும். ஆக, அமானுஷ்யன் சரியாகத் தான் கூறியிருக்கிறார்.” - தெட்டக்கனி கூற, குந்தவை யோசனையுடன் இரதத்தை மெதுவாக ஓட்டினாள். அங்ஙனம் குந்தவை செலுத்தும் இரதம் மெதுவாக ஊர்ந்து சென்றால், அவள் தீவிரமாக யோசித்துக் கொண்டிருப்பதாகப் பொருள்.

“தெட்டக்கனி! நாம் முதலில் தலைச்சங்கத்திற்குச் சென்றுவிட்டுத்தான், பழையாறைக்குச் செல்கிறோம்!”- குந்தவை கூறினாள். தெட்டக்கனியின் உள்ளத்தில் சிறிது குழப்பம். இப்போது எதற்குத் தலைச்சங்க நாண் மதியத்திற்குச் செல்ல வேண்டும்? அங்கு என்ன வேலை இருக்கிறது?

ஆனால் அடுத்தகணமே, தெட்டக்கனிக்கு குந்தவையின் எண்ண ஓட்டங்கள் விளங்கிவிட்டன. சூடாமணி பண்டாரச்சாலைக்குப் போகின்றாள். தலைச்சங்க நாண்மதியப் பெருமாள் ஆலயத்தின் பக்கலில் ஆலயத்தை ஒட்டி ஒரு சிறு கட்டடம் உள்ளது. அதனை ஆலயத்தின் பண்டாரசாலையாக மாற்றி யிருந்தனர். புகார் நகரம் ஆதி சோழத்தின் தலைநகரமாக இருந்த போது, தலைச்சங்க நாண்மதியப் பெருமாளே அவர்களது குலதெய்வம். புரசைக் காட்டின் நடுவே உள்ள நாண்மதியப் பெருமாள் ஆலயத்தில்தான், தலைச் சங்கம் என்கிற சோழ மன்னர்கள் பட்டாபிஷேகத்திற்கு உரிய சங்கை வைத்திருப்பார்கள். மிகவும் தொன்மை வாய்ந்த இந்த ஆலயத்தின் பண்டாரசாலை மிகவும் புகழ் பெற்றது. இங்கே இல்லாத சுவடிகள் இல்லை. வேத உபநிஷதங்கள், மீமாம்ச உரைகள் என்று தேவ நாகரியிலும், சமஸ்க்ருதத்திலும் ஒரு பகுதி இருக்கும். தமிழ் இலக்கியம்

மற்றும் இலக்கணங்களைக் கொண்டது ஒரு பகுதி. பாலி நூல்கள், தாமரை சூத்திரம் என்று, சூடாமணி பண்டாரசாலையில் இல்லாத விவரங்கள் இல்லை.

பாஸ்கரசேதுவும் அவருடைய மனைவி நிரஞ்சனா தேவியும் பண்டாரசாலையின் பொறுப்பினை ஏற்ற பிறகு, இன்னும் வளர்ச்சியைப் பெற்றிருந்தது, பண்டாரசாலை. உளுத்துப்போன சுவடிகளை மிகவும் பத்திரமாகக் கையாண்டு, புதிய ஓலையில் அவற்றை மீண்டும் எழுதி வந்தனர், பாஸ்கரசேது தம்பதியர். அதோடு சித்தர் ஒருவரின் உதவியோடு சுவடிகள் நொறுங்காமல் இருப்பதற்கு ஒருவிதக் குழைவைத் தயாரித்துச் சுவடியின் மீது தடவிவரவே, சுவடிகள் உறுதியாக நிலைத்தன. பாஸ்கரசேதுவின் பணிகளால் மிகவும் ஈர்க்கப்பட்ட சுந்தர சோழர் அவருக்கு ஸ்வர்ணத்தால் வடிவமைக்கப் பட்ட தலைச்சங்கம் ஒன்றை அளித்து, ‘தலைச்சங்க சிகாமணி’ என்கிற பட்டத்தையும் அளித்திருந்தார்.

அதோடு பாஸ்கரசேதுவிடம் மற்றொரு பொறுப்பினையும் அளித்திருந்தார், சுந்தர சோழர். திருப்புறம்பியம் போர் முடிந்து, விஜயாலய சோழனும், ஆதித்த சோழனும் தஞ்சையில் மீண்டும் சோழ ஆட்சியை நிறுவியது தொடங்கி, சோழர்கள் ஈடுபட்டிருந்த போர், அவர்களது வீரதீர சரித்திரங்கள், போரில் வென்று கைப்பற்றிய பொக்கிஷங்கள், மன்னர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் சரிதைகள் அனைத்தையும் சுவடிகளில் பதிவு செய்யும் பணியை அளித்திருந்தார். பாஸ்கரசேதுவும், நிரஞ்சனா தேவியும் அந்தப் பணிகளில் மும்முரமாக ஈடு பட்டிருந்தனர். அவ்வப்போது பழையாறை மற்றும் தஞ்சை அரண்மனைகளின் கஜானாக்களில் உள்ள பொக்கிஷங்கள், கருவூல அறையில் உள்ள சுவடிகள் என்று ஆராய்ச்சி செய்யத் தம்பதிகள் அரண்மனை களுக்கு விஜயம் செய்வது வழக்கம். அவர்கள் பழையாறை வரும்போதெல்லாம் குந்தவையை மரியாதை நிமித்தமாகச்

சந்தித்துவிட்டுத்தான் மீண்டும் தலைச்சங்கத்திற்குத் திரும்புவார்கள்.

ஆதித்த கரிகாலனும், அவனது பரிவாரமும், நள்ளிரவில் பழையாறை கஜானாவிற்கு வந்து சென்றிருக் கிறார்கள் என்கிற தகவல் அவளுள் பெரும் குழப்பத்தை உண்டு செய்திருந்தது. பழையாறை கஜானாவில் இருந்து அவன் எதை எடுத்துச் சென்றிருப்பான்? அதனைக் கண்டுபிடிப்பதற்கு முன்பாக, கஜானாவில் உள்ள பொக்கிஷங்களைப் பற்றி அறிந்து கொள்வது நல்லது என்கிற எண்ணத்தில்தான் தலைச்சங்கத்துக்குச் சென்று கொண்டிருந்தாள். தலைச்சங்கத்திற்குச் செல்லும் போது மாலையாகிவிட்டது.

இளவரசி குந்தவை தெட்டக்கனியுடன் பண்டார சாலையினுள் நுழைவதைக் கண்டதும், பாஸ்கரசேதுவும், நிரஞ்சனாதேவியும் பரபரப்புடன் ஓடி வந்தனர்.

"வரவேண்டும் இளவரசியாரே! தகவல் அனுப்பி இருந்தால், வரவேற்புக்கு ஏற்பாடுகளைச் செய்திருப்பேன் அல்லவா?" - பாஸ்கரர் கூற, குந்தவை தலையசைத்தாள்.

"வரவேற்பு என்கிற பெயரில் நீங்கள் எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்துவிடக் கூடாது என்றுதான் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை. அறிவுபூர்வமாகத் தங்களுடன் சில தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பதாலேயே அவசர மாக இங்கு வந்திருக்கிறேன்!" - குந்தவை கூறியவுடன், அவளை அமர வைத்தார், பாஸ்கரர். தெட்டக்கனி குந்தவையின் பின்பாக இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

நிரஞ்சனா கொண்டு வந்து நீட்டிய இஞ்சி பானகத்தை இருவரும் அருந்திவிட்டு, குவளைகளை அவளது தட்டில் வைக்க, நிரஞ்சனா உள்ளே சென்றாள். பாஸ்கரர் குந்தவையின் எதிராக அமர்ந்து கொள்ள, நேராக விஷயத்திற்கு வந்தாள், குந்தவை.

"பாஸ்கரரே! எனது தந்தை சுந்தர சோழரின் பிறந்ததின வைபவத்தைக் கோலாகலமாகக் கொண்டாட பாட்டு, நடனம், நாடகம், இசை, பேருரை, திருவாசக வேள்வி என்று நிகழ்வுகளைத் திட்டமிட்டு வருகிறேன். பல்வேறு போர்களில், நிகழ்ந்த சோழரின் வீரதீர பிரதாபங்கள் குறித்தும், சோழர்களின் பொக்கிஷங் களையும் விருந்தினரின் கண்பார்வைக்குக் காட்சிப் பொருளாக வைக்கலாம் என்று எண்ணுகிறேன். பழையாறை அரண்மனையிலும், தஞ்சை அரண் மனையிலும் அப்படி ஒரு கண்காட்சி வைக்கலாம் என்று திட்டமிட்டு இருக்கிறோம். எனது தந்தைக்குக் கடைசி நிமிடத்தில் அதனைக் காட்டி அவரை வியப்பில் ஆழ்த்த எண்ணுகிறோம். தங்களைக் கேட்டால் நல்ல யோசனைகளைக் கூறுவீர்கள் என்று எனது தோழி தெட்டக்கனிதான் கூறி என்னை இங்கே அழைத்து வந்தாள்.. தஞ்சையில்தானே அனைத்துப் பொக்கிஷங் களும் வைக்கப்பட்டுள்ளன? பழையாறையில் என்ன இருக்கிறது?" - குந்தவை கேட்டாள்.

சோழ இளவரசியே தன்னிடம் யோசனை கேட்டு வந்திருப்பதை அறிந்ததும், பாஸ்கரசேதுவுக்குத் தலைகால் புரியவில்லை. குந்தவையின் கேள்விக்கு விரிவாகப் பதில் கூறத்துவங்கினார்.

"இளவரசி! பழையாறையில் என்ன இருக்கிறது என்று இவ்வளவு அலட்சியமாகக் கேட்டுவிட்டீர்களே!? பழையாறையில்தான் பெருமை வாய்ந்த பொக்கிஷங்கள் எல்லாமே உள்ளன. தஞ்சை கஜானாவில் உள்ளவை எல்லாம் ஆபரணங்களும், ஸ்வர்ண கட்டிகளும்தானே."

"பழையாறையில்தான் வசிக்கிறேன். இருப்பினும் கஜானா அறைக்குச் சென்றது கிடையாது?" - குந்தவை கூற, பாஸ்கரசேது அவளைச் சற்றே கர்வத்துடன் நோக்கினார்.

"உண்மைதான் இளவரசி! மன்னர் பெருமான், தனாதிகாரி, அரண்மனை அதிகாரி, கஜானா அதிகாரி

மற்றும் சுவடி வடிக்கும் நான் ஆகிய ஐவர் மட்டுமே கஜானா அறைக்குள் செல்ல முடியும். பட்டத்து இளவரசன் உள்பட அரச குடும்பத்தினர் கூட உள்ளே செல்வதற்கு அனுமதி கிடையாது!" - பாஸ்கரசேது கூறினார்.

'எனது அண்ணன் ஆதித்த கரிகாலன் பழையாறை கஜானாவிற்கு வந்து போனது இவருக்கும் தெரியாது போல இருக்கிறது!' என்கிற பொருளில் திரும்பி தெட்டக்கனியை நோக்கியவள், மீண்டும் பாஸ்கர சேதுவை பார்த்தாள்.

"'பாஸ்கரரே! நான் திட்டமிட்டுள்ள கண்காட்சியை நீர்தான் நடத்தித் தரவேண்டும். அதே சமயம் மன்னருக்கும் இதைப் பற்றித் தெரிய வரக்கூடாது. பழையாறை பொக்கிஷங்களை ஒவ்வொன்றாகக் காட்சியில் வைத்து, அவற்றின் பின்புலமாக உள்ள சரித்திரத்தை நாட்டிய நாடகமாக அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறேன். எனவே தாங்கள் சிரமத்தைப் பாராமல், என்னுடன் பழையாறைக்கு வந்து பொக்கிஷங்களைப் பற்றி விளக்கினால் எனக்கு பேருதவியாக இருக்கும்." - மிக அழகாகக் குந்தவை வலையினை விரிக்க, அதில் சிக்கினார், பாஸ்கரசேது

இளவரசியே தன்னை அழைப்பதைக் கண்டதும் அவருக்குப் பெருமை பிடிபடவில்லை. "அவசியம் விளக்குகிறேன், இளவரசி!" என்றவர், சற்றே யோசித்தார்.

"இப்போதே நாம் புறப்பட்டால்தான் இரவுக்குள் பழையாறையை அடைய முடியும்!" - குந்தவை கூற, பாஸ்கரசேது, தலையசைத்துவிட்டு புறப்படுவதற்கு தயாராகச் சென்றார்.

"எனக்குத்தான் கஜானா அறைக்குச் செல்ல அனுமதியில்லை. கஜானா அறையின் பொக்கிஷங்களைப் பராமரிப்பவர் என்கிற முறையில் பாஸ்கரசேதுவுடன் நான் உள்ளே நுழைவதை யாரும் தடுக்க முடியாது

*அல்லவா?" - குந்தவை தெட்டக்கனியிடம் முணுமுணுத்தாள்.*

*பழையாறை பொக்கிஷ அறைக்கு ஆதித்த கரிகாலன் எதற்காக வந்தான் என்பதை அறிந்து கொள்ளாமல் குந்தவைக்கு உறக்கம் வராது என்பது தெட்டக்கனிக்குத் தெரியும். ஆனால் காரணத்தைத் தெரிந்து கொண்டதும், வாளாயிருக்கமாட்டாள். அவன் எதற்காக வந்தான் என்று தனது சிந்தையைப் போட்டுக் குழப்பிக் கொள்பவள், அவன் கஜானாவில் இருந்து எதையாவது எடுத்துச் சென்றால், அவன் ஏன் அந்தக் குறிப்பிட்ட ஆபரணத்தை எடுத்துக்கொண்டு சென்றான் என்று யோசித்துக் கொண்டிருப்பாள்? அப்படி ஆதித்த கரிகாலன் எதையும் எடுத்துச் செல்லவில்லையென்றால், அவ்வளவு தொலைவில் இருந்த வந்த ஆதித்த கரிகாலன், ஏன் எதையும் எடுத்துக் கொள்ளாமல் சென்றான்? என்கிற வினாவை எழுப்பிக் கொண்டிருப்பாள். எப்படி இருந்தாலும், அன்றிரவு அவள் உறங்கப் போவதில்லை என்பது தெட்டக்கனிக்குத் தெரியும்.*

*பாஸ்கரசேதுவை அழைத்துக்கொண்டு குந்தவையும் தெட்டக்கனியும் பழையாறை வந்த போது ஊர் அடங்கிவிட்டது. பள்ளிகொண்டான்* மங்கலத்தருகே வரும் போது மழை பிடித்துக் கொள்ள, அவர்களது பயணம் சற்றே தடைபட்டது.*

*பழையாறை அரண்மனைக்குள் நுழையும் போது ஊர் அடங்கிவிட்டது. அரண்மனையில் ஆங்காங்கே தீபங்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. இரவு பணியில் அமர்த்தப் பட்டிருந்த தாதிகளும், காவலர்களும் மட்டுமே இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தனர். அன்றும் தனக்குச் சிவராத்திரிதான் என்பதை உணர்ந்தாள், தெட்டக்கனி.*

---

* தஞ்சை-குடந்தை மார்க்கத்தில் தற்போது பள்ளி அக்ரஹாரம் என்கிற பெயரில் சிறு கிராமமாக உள்ளது, பள்ளிகொண்டான் மங்கலம்.

"பாஸ்கரரே! நாம் உடனடியாக கஜானா அறைக்குச் செல்வோம். பொக்கிஷங்களைப் பற்றி நீர் விளக்கி விட்டால், நாளையே நான் நடனக் கலைஞர்களிடம் கூடிப் பேசி, பொக்கிஷங்கள் கதையைப் பற்றிக் கூறி, நாட்டிய நாடகம் ஒன்றைத் தயார் செய்துவிடுவேன்."- குந்தவை கூறினாள்.

"இளவரசி! மீண்டும் மீண்டும் நாட்டிய நாடகம் என்று கூறுகிறீர்களே, நாளை நாடகம் ஏன் நடக்கவில்லை என்று கேட்கப் போகிறார்?" - தெட்டக்கனி குந்தவையின் காதில் கிசுகிசுத்தாள்.

"இதென்ன பிரமாதம்! எனக்கு உடல்நிலை சரியில்லை. நான் நாடகம் போடும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டேன் என்று கூறிக் கொண்டால் போகிறது! இவருக்கெல்லாம் நான் சமாதானங்களைக் கூறி விளக்கிக் கொண்டிருக்க வேண்டுமா என்ன?" என்று தெட்டக்கனியின் காதில் கிசுகிசுத்துவிட்டு பாஸ்கரசேதுவை நோக்கிப் புன்னகைத் தாள்.

இளவரசி குந்தவை தன்னிடம் தோழமையுடன் பழகுவதைக் கண்டு அசந்து போயிருந்தார், பாஸ்கரசேது. தனது மாளிகையைத் தேடித் தலைச்சங்கம் வந்து, இவரைக் கையுடன் அழைத்து வந்து பொக்கிஷங்களின் சரித்திரங்களைக் கேட்கிறாள் என்பது இவருக்குப் பெரும் பெருமை அல்லவா? யார் கண்டார்கள்.. இளவரசியின் நட்பு தொடர்ந்தால், நாளை இவரது அரசியல் பதவி வேட்கைக்கு உதவியாக இருக்கும் அல்லவா? கஜானா தனாதிகாரி, அமைச்சர், தலைமை அமைச்சர் என்று உயர்ந்து கொண்டே போகலாம் அல்லவா? குந்தவையும், தெட்டக்கனியும், பின்தொடர பாஸ்கரசேது கஜானா அறையை நோக்கி நடந்தார். தனது புலி இலச்சினை யுடன் கூடிய கணையாழியை எடுத்துக் காட்டியதும், காவலர்கள் இருவரும் விலகினர்.

காவலர்களில் ஒருவனான காளமேகனின் கண்கள் சற்றே வியப்பை உமிழ்ந்தன. முந்தைய இரவுதான் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலன், அரண்மனை மற்றும் கஜானா அதிகாரிகளுடன் கஜானா அறைக்கு வந்திருந்தார். மறுநாள் இரவு, இளவரசி குந்தவையார், பொக்கிஷப் பாதுகாவலருடன் வருகிறார். ஒருவேளை, தங்களுக்குத் தேவையான ஆபரணங்களைத் தேர்ந்தெடுக் கின்றனரோ? அவனது பார்வையில் தொக்கி நின்ற வினாவை சட்டென்று உணர்ந்த குந்தவை, அவன் அருகே நின்ற தெட்டக்கனியை திரும்பிப் பார்த்தாள்.

“மன்னரின் பிறந்த நாள் வைபவத்திற்கு நாம் நடத்த இருக்கும் பொக்கிஷங்கள் கண்காட்சி மிகவும் இரகசியமாக இருக்க வேண்டும். உனது தோழிகளிடம் சொல்லி, அதனை அரண்மனை முழுவதும் பரவச் செய்தால் தெரியும் சேதி!” என்ற குந்தவை, தனது எச்சரிக்கையை முடிக்கும் முன்பே காளமேகத்தின் கண்களினுள் ஊடுருவிப் பார்த்தாள்.

அந்த எச்சரிக்கை தெட்டக்கனிக்கு விடுக்கப்பட்ட தல்ல, தனக்குதான் என்பதைப் புரிந்து கொண்ட காளமேகனின் முகம் மீண்டும் இறுகியது. தான் எதையுமே காணவில்லை என்கிற செய்தியை குந்தவைக்கு உணர்த்தும் வண்ணம், கண்கள் உணர்ச்சியற்று உறைந்தன.

கஜானாவினுள் நுழைந்த மூவரும், பொக்கிஷங்கள் வைக்கப்பட்டிருந்த நிலவறையின் முன்பாக நின்றனர். காவலர்களின் அருகே ஒளிர்ந்து கொண்டிருந்த சுளுந்து ஒன்றினைக் கையில் எடுத்துக் கொண்ட தெட்டக்கனி, அதனை ஏந்திப் பிடிக்க, மூவரும் நிலவறையினுள் இறங்கினர். குந்தவையும், தெட்டக்கனியும் பாஸ்கர சேதுவையே நோட்டம்விட்டபடி நிற்க, அவர் தனது வசம் உள்ள திறவுகோல்களின் உதவியோடு ஒவ்வொரு அறையாகச் சென்று பொக்கிஷங்களை ஆராய்ந்தபடி வர,

நான்காவது அறையினுள் நுழைந்தவர் வெளியே வந்த போது அவரது முகம் வெளிறிப் போயிருந்தது.

"இளவரசியாரே! என்ன இது? நான்காம் அறையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த மூன்று பொக்கிஷங்களைக் காணவில்லை. எங்கே மாயமாக மறைந்தன?" - திகைப்புடன் குந்தவையின் முன்பாக வந்து நின்றார்.

"பொக்கிஷங்களைக் காணவில்லையா? அவை என்ன வகை பொக்கிஷங்கள்?" - குந்தவை கேட்க, அவளது பரபரப்பு தெட்டக்கனியையும் தொற்றிக் கொண்டது.

"ஆம் இளவரசி! ஒன்று புராணகாலத்து பல்லவ பொக்கிஷம். மற்றொன்று பராந்தக மன்னருக்கு, கங்க மன்னர் பிருத்விபதி அளித்த பொக்கிஷம். கடைசியில் சுந்தர சோழரின் சிறிய தகப்பனார் உத்தமசீலரின் ஸ்வர்ண பிடியுடன் கூடிய வாள். சென்ற வாரம்தான் நான் இங்கே வந்திருந்து அவற்றையெல்லாம் துடைத்து, பட்டியலை சரிபார்த்துவிட்டுச் சென்றிருந்தேன்!" - குழப்பத்துடன் கூறினார், பாஸ்கரசேது.

'ஆக, ஆதித்த கரிகாலன் பழையாறையின் பொக்கிஷ நிலவறையிலிருந்து மூன்று பொக்கிஷங்களை எடுத்துச் சென்றிருக்கிறான்!' - தீர்மானத்திற்கு வந்தாள், குந்தவை.

"பாஸ்கரரே! அந்த பொக்கிஷங்களைப் பற்றிய தகவல்களை எனக்குக் கூறுங்கள்!" - குந்தவையின் குரல் கட்டளையாக ஒலிக்க, பாஸ்கரர் தலையைப் பணிவுடன் அசைத்துவிட்டு, முதலில் உக்ரோதயத்தைப் பற்றிக் கூற ஆரம்பித்தார்.

"அத்திமலைத்தேவன் யாகத்தில் ஆவிர்பவித்த போது, விஸ்வகர்மா அவருக்குத் தேவ உடும்பர அத்திமரத்தில் தேகம் சமைத்தான். குபேரன் அவருக்குத் திருமார்பு ஸ்ரீவத்ஸமாக ஸ்ரீதளமணி ஒன்றை அளித்தான். பீமவர்மன் என்கிற பல்லவ இளவரசன் அதனைக் களவாடி, உக்ரோதயம் என்கிற புதிய ஆபரணமாக அதை

மாற்றினான். அந்த உக்ரோதயத்தைச் சூழ்ச்சியால் பறித்துக் கொண்டனர், கங்கர்கள். நந்திவர்ம பல்லவன் போரிட்டு அதனை மீண்டும் கைப்பற்றினான். அத்தி மலைத்தேவனின் பிரதிமை காணாமல் போனதால் உக்ரோதயத்தைப் பல்லவ கஜானாவில் வைத்திருந் தார்கள். ஆதித்த சோழர் ஆட்சியில் பல்லவர்கள் வீழ்ச்சி அடைந்தவுடன், பல்லவ பொக்கிஷங்கள் நமது கைவசம் வந்த போது, உக்ரோதயமும் நம் வசம் வந்தது." - பாஸ்கரர் கூறினார்.

அத்திமலையானின் பிரதிமை எப்படிக் காணாமல் போனது?" - வியப்புடன் கேட்டாள், குந்தவை.

"சிம்மவர்மரின் காலத்தில் காணாமல் போனது. அதனைச் சிம்மவர்மரின் மகள் நவரத்னதேவி பதுக்கி வைத்தாள். மிகவும் ஆற்றல்மிக்க அத்திமரம். அஸ்வமேத யாகத்திற்கு மிகவும் அவசியமானது. எனவே மன்னர்களிடையே அந்தப் பிரதிமையைப் பெறுவதற்குப் போட்டி நடந்தது. உத்திரதேசத்து மன்னர்களும் அதனை அடைய முயற்சித்தனர். சமுத்திரகுப்தன், புலிகேசி ஆகியோர் காஞ்சியின் மீது படையெடுத்து வந்தனர். காணாமல் போன சிலையை, நரசிம்ம பல்லவன்தான் கண்டெடுத்தான். அதனைக் கடல்மல்லையில் ஸ்தாபிதம் செய்து ஆலயம் எழுப்பினான். அந்த ஆலயம் ஆழிப்பேரலையில் கடல் அடியே சென்றுவிட்டது. அதன் பிறகு, அந்தச் சிலையைப் பற்றித் தகவல் இல்லை. நரசிம்ம பல்லவனின் எதிரியான மல்ல எதி என்பான் அத்திமலையானின் சிலையைக் கடல் அடியில் இருந்து எடுத்து சாளுக்கியத்திற்குக் கடத்திச் சென்றுவிட்டதாக ஒரு தகவல். இல்லை.. அந்தச் சிலை இன்னும் காஞ்சியிலேதான் இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர்!"- பாஸ்கரன் கூற, ஆர்வத்துடன் அவரது விளக்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள், குந்தவை.

உக்ரோதயம் மற்றும் அத்திமலைத்தேவனின் சரித்திரத்தை பாஸ்கரர் கூறி முடித்ததும், குந்தவை தெட்டக்கனியை திரும்பிப் பார்த்தாள்.

குந்தவையின் கண்களில் பிரதிபலித்த ஆர்வத்தைக் கவனிக்கத் தவறவில்லை தெட்டக்கனி.

"உக்ரோதயம் கதையைக் கூறினீர்கள். அடுத்த பொக்கிஷத்தைப் பற்றிக் கூறுங்கள்!" - குந்தவையின் குரலில் பரபரப்பு அதிகரித்தது.

"பராந்தக மன்னருக்கு ஆருயிர் தோழர் கங்க மன்னர் பிரித்விபதி. காளஹஸ்தி என்கிற பகுதி குறித்துப் பாணத் தேசத்து மன்னன் விஜயாதித்த வாணருக்கும், பிரித்வி பதிக்கும் தகராறு மூண்டது. பராந்தகர் பிரித்விபதியை ஆதரித்தார். பிரித்விபதி மிகவும் சாமர்த்தியமாகப் பாணர்-கங்கர் போரினை சோழர்-பாணர் யுத்தமாக மாற்றினான். அதற்கு அவன் பிரயோகித்த திட்டம்தான் பாணப்பத்திர உடன்படிக்கை. தென் ஆறு காடுகளையும், (தென்னாற்காடு) ஸ்வர்ணமுகி காட்டில் இருந்த நான்கு தங்கச் சுரங்கங்களையும் சோழர்களுக்குப் பரிசாகக் கொடுக்கும் உடன்படிக்கை. இதனால் மகிழ்ந்து போன பராந்தகன், பாணர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அவர்களை வீழ்த்தினார். விஜயாதித்த வாணர் குடும்பத்துடன், குந்தள தேசம் தப்பிச் சென்றார். மன்னர் இல்லா வாணர்களைச் சித்ரவதை செய்து துன்புறுத்திய பராந்தகன், அவர்களை அடிமைப் படுத்தினார். பெண்களையும், குழந்தைகளையும் கங்கர்களுக்கு அடிமையாக விற்றார். கங்கர்களிடம் தங்களை அடிமைப்படுத்திய சோழர்களின் மீது மிகவும் வன்மம் கொண்டிருந்தனர், வாணர்கள். பராந்தகருக்கு தான் வாக்களித்திருந்தபடி, தென் ஆறு காடுகளையும், நான்கு தங்கச் சுரங்கங்களையும் அளித்துவிட்டான். அந்த உடன்படிக்கையின் பெயர் பாணப்பத்திரம். அதனைத் தான், உக்ரோதயம் வைக்கப்பட்டிருந்த அறையில்

பத்திரப்படுத்தி இருந்தோம். அந்தப் பாணப் பத்திரத்தையும் காணவில்லை." - பாஸ்கரரின் குரலில் கவலை தொனித்தது.

"நாம் ஏன் அந்தத் தங்கச் சுரங்கங்களைக் கைப்பற்ற வில்லை?" - குந்தவை கேட்டாள்.

"பாணர்களின் சாபமா, அல்லது இளங்கோபிச்சியின் சாபமா என்று தெரியாதபடி, பராந்தகனாரின் மகன்கள் அனைவருமே சோகமான முறையில் இறக்க, அவருக்கு அந்தச் சுரங்கங்களைக் கைப்பற்றும் எண்ணம் வரவே இல்லை. பாவப்பட்ட அந்த ஸ்வர்ணம் நமக்குத் தேவையில்லை. எனது மகன்களின் உயிரைக் குடித்த அந்த ஸ்வர்ணம் நமது எல்லைக்கு வராமல் இருப்பதே நல்லது என்றெல்லாம் புலம்பினாராம். எனவேதான் அந்த ஸ்வர்ணத்தை நாம் நாடவில்லை. பாணப் பத்திரமும் நமது பொக்கிஷ நிலவறையில்தானே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது, சென்ற வாரம் வரையில்!" என்று புதிருடன் பாணப்பத்திர சரித்திரத்தையும் கூறி முடித்தார்.

குந்தவை சடாரென்று தெட்டக்கனியை திரும்பி நோக்கினாள். அவளது கண்களில் ஒருவிதக் குளிர்ச்சி தென்பட, தெட்டக்கனிக்குப் பிடரியில் மயிர்க்கூச்சம் ஏற்பட்டது.

'பாணர்கள் சோழர்களின் பரம வைரியா?' என்று வியப்புடன் தனக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தவள், குந்தவையின் குளிர்ச்சியான கண்கள் தன்னை உறுத்து நோக்குவதைக் கண்டதும், கண்களைத் தாழ்த்தினாள். மற்றவர்கள் மனதில் நினைப்பதைக் கண்களாலேயே கணித்துவிடுவாள், குந்தவை.

"மூன்றாவது பொக்கிஷம் என்ன?" - இம்முறை குந்தவையின் குரலில் ஆர்வம் இல்லை. ஒருவிதக் கோபம் ஒலித்தது. பொக்கிஷங்களின் கதைகளை எல்லாம் தான்

இதுகாறும் அறியாமல் இருந்திருக்கிறோம் என்கிற கோபம் போலும்.

"பராந்தகரின் கடைக்குட்டி மகன் உத்தமசீலனின் ஸ்வர்ண வாள். பாண்டியனுடன் போர் புரிந்த அவரை எதிரிகள் சூழ்ந்து கொண்டு அவரது சிரத்தினைச் சீவி, பந்தாடியது உங்களுக்கு நினைவிருக்கலாம். அவரது வாளை மட்டும்தான் மீட்க முடிந்தது. அந்த வாளைத் தான் இங்கே பத்திரப்படுத்தி வைத்திருந்தோம்!" - பாஸ்கரர் கூற, அடுத்தகணம், குந்தவையின் கூரிய அறிவுக்கு அனைத்துமே புலப்பட்டது.

'தனது சிறிய பாட்டன் உத்தமசீலனின் கொலைக்குப் பழி வாங்க, தான் வீரபாண்டியனின் தலையை வெட்டி வீழ்த்திப் பந்தாடுவேன் என்கிற சபதத்தைச் செய்திருக் கிறான், ஆதித்த கரிகாலன். அவனது தலையை உத்தம சீலனின் வாளினாலேயே வெட்ட நினைக்கிறான். எனவே தான் உத்தமசீலனின் வாளை எடுக்கப் பழையாறை நிலவறைக்கு வந்திருக்கிறான். நியாயமான எண்ணம் தான். ஆனால் எதற்காக ஆதித்த கரிகாலன், உக்ரோதயத்தையும், பாணப்பத்திரத்தையும் உடன் எடுத்துச் சென்றிருக்கிறான்? யோசித்தபடி நான்கைந்து அடிகள் நடந்து சென்று மீண்டும் யோசித்தபடி நின்றாள், குந்தவை.

அதுவரை பாஸ்கரசேது மற்றும் தெட்டக்கனியுடன் நின்றிருந்ததால் குந்தவையின் நிழல் அவர்களுக்குச் சரிநிகராகக் காணப்பட்டது. அவள் நான்கைந்து அடிகள் நடந்து சுவரோடு நின்றதும், சுளுந்தின் ஒளியில் குந்தவையின் நிழல் விஸ்வரூபம் எடுத்து, நிலத்திற்கும், கூரைக்குமாக வியாபித்து நின்றது.

தெட்டக்கனி திகிலுடன் அவளது நிழலை வெறித்தாள்.

## 7. முறை மாப்பிள்ளை.. குறை மாப்பிள்ளை

**பா**ர்த்திபனின் மாளிகை தீப அலங்காரங்களுடன் ஜெகஜ்ஜோதியாகக் காட்சியளித்தது. ஆங்காங்கே தோரணங்கள், பூச்செடிகள், நீரூற்றுகள் என்று மாளிகை மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாளிகையில் பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்லவகுல அரசகுடும்பத்தினர் ஒன்று சேர்ந்ததைக் கொண்டாடுவதற்காகப் பார்த்திபன் அந்த விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான்.

கங்காவதி, சமந்தக பல்லவி, கல்பலதா தருமவர்மன் மற்றும் பார்த்திபன் ஆகியோர் அந்த வட்ட மேஜையைச் சுற்றி அமர்ந்து உணவை அருந்திக் கொண்டிருந்தனர். லலாடிகாவின் மேற்பார்வையில்தான் யவதி என்கிற தோழி அவர்களுக்கு விருந்தை பரிமாறிக் கொண்டிருக்க, அபர்ணாதேவி என்கிற கலைஞர் சித்ரவீணையை இசைத்துக் கொண்டிருந்தாள்.

தருமவர்மன் கண்கலங்க கங்காவதியைப் பார்த்தான். "அபராஜிதவர்மனின் கொலைக்குப் பிறகு அவர் மனைவி சந்திரகாந்தி குழந்தை கிருபாவதி தேவியுடன் தப்பிச் சென்றார் என்பது தெரியும். அவர் எங்கே சென்றார்? அதன்பின் என்ன நடந்தது?"

சமந்தக பல்லவி அவருக்குச் சந்திரகாந்தியின் துயரக் கதையைக் கூறினாள். அதைக் கேட்டு கண்கலங்கினார், தருமவர்மர்.

"எச்சரிக்கை பார்த்திபா! பராந்தகனின் மகன் பட்டத்து இளவரசன் இராஜாதித்யனைக் கொன்றவன் பூதுகன். அவனது மகன் குணதுர்கனின் மகள் இங்கே

நம்முடன் இருப்பது வெளியே தெரியக் கூடாது. தெரிந்தால் பழி வாங்குவார்கள். அபராஜிதனின் தலையை சூழ்ச்சியை செய்து சீவினான் ஆதித்த சோழன். அதன் பலன்தான் தனது மகன்களை இழந்தான். அதைக் கருத்தில் கொள்ளமாட்டார்கள் சோழர்கள். தொடர்ந்து சூழ்ச்சிகளை அரங்கேற்றுவார்கள். எனவே, கங்காவதி, சமந்தக பல்லவி மற்றும் கல்பலதா ஆகிய மூவரும் இங்கே தங்கியுள்ள விஷயம் சோழர்களுக்குத் தெரியவரக் கூடாது. அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக நம்மையும் சிறையில் தள்ளுவார்கள்!” - தருமவர்மர் கூறினார்.

“இதுவரையில் தெரியாது, தந்தையே. இனிமேலும் தெரியாது. நமது மாளிகையில் பணிபுரிபவர்கள் அனைவரும் விசுவாசம் கொண்ட பல்லவர்கள். ஒரு போதும், சோழர்களுடன் சேர்ந்து நமக்குத் துரோகம் புரியமாட்டார்கள்!” - பார்த்திபன் கூறினான்.

“இராஜாதித்யனைக் கொன்றது பூதுகன் இல்லை. அவன் தம்பி அரிஞ்சயன்தான்!” என்று நடுங்கும் குரலில் கங்காவதி கூற, தருமவர்மனும், பார்த்திபனும் திடுக்கிட்டு கங்காவதியை நோக்கினர்.

“என்ன சொல்கின்றீர், பாட்டியாரே!” - பார்த்திபன் கேட்டான்.

“கேளுங்கள் பார்த்திபரே! பல்லவத்திற்குச் சோழத்தால் இழைக்கப்பட்ட தொடர் அவமான சரித்திரத்தினை கேளுங்கள். உங்கள் மீது காரணம் இல்லாமல் நான் சினம் கொள்ளவில்லை. நீங்கள் ஊழியம் செய்யும் சோழ பட்டத்து இளவரசன் ஆதித்த கரிகாலன் எத்தகைய பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதனை நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்!” - குரோதத்துடன் கூறிய கல்பலதா, அதற்குப் பிறகு எதையும் உண்பதற்குப் பிடிக்க வில்லை என்பது போன்று தனது வெள்ளித்தட்டை

அப்பால் தள்ளினாள். அனைவரும் கங்காவதியின் துயரம் படிந்திருந்த முகத்தை நோக்க, சமந்தக பல்லவி மட்டும் தனது தாயின் புஜத்தை ஆதூரத்துடன் பற்றிக் கொண்டாள். கங்காவதி அந்தத் துயரச் சம்பவத்தை நினைவு கூர அவளது தேகம் நடுங்கியது.

"எனது தந்தை குணதுர்கன் போரில் இறந்ததும், எனது தாயும், நானும் கங்க அரண்மனையில் புறக்கணிக்கப் பட்டோம். என்ன இருந்தாலும், எனது தந்தை சாதாரண இளவரசன்தானே. பட்டத்து இளவரசன் கிடையாதே! வேறு வழியின்றி, அரண்மனையிலிருந்து என்னை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள், என் தாய். எங்களை யாரும் தடுக்கக் கூட இல்லை. பல்லவம் இல்லாது போன பிறகு பல்லவ இளவரசியான எனது தாய் கிருபாவதிக்கு என்ன மதிப்பும் மரியாதையும் இருக்கும்? அங்கிருந்து புறப்பட்டு, கால் போன போக்கில் நடந்து தக்கன் ஓலம் (தக்கோலம்) சென்றடைந்தோம். தக்கன் ஓலம்தான் எனது வாழ்வை அலங்கோலம் ஆக்கியது. நாங்கள் தக்கன் ஓலம் சென்று அங்கு வசிக்கத் துவங்கியதும், அதுவரையில் அமைதியாக இருந்த பகுதியில் போர் முரசம் ஒலித்தது. குந்தள அரசன் மூன்றாம் கோவிந்தன் சோழர்களின் மீது போர் தொடுத்தான். பராந்தக சோழன் தனது மகன் இராஜாதித்யனை போர்க்களத்திற்கு அனுப்பினான். யானையின் மீது நின்று போர் புரிந்த இராஜாதித்யன் கோவிந்தனை குறிவைக்கும் போதெல்லாம், கங்க மன்னன் பூதுகன் இடையில் புகுந்தான். பூதுகன் இருக்கும் வரையில் கோவிந்தனை தீர்த்துக்கட்ட முடியாது என்று தீர்மானித்த இராஜாதித்யன், தனது தம்பி அரிஞ்சயனுக்கு செய்தி அனுப்பினான். 'நீ போர்க்களம் வந்து பூதுகனை கவனித்துக் கொள். நான் கோவிந்தனை கொல்கிறேன்!' என்று ஓலை அனுப்ப, அரிஞ்சயனும் தக்கோலம் புறப்பட்டு வந்தான். அப்போதுதான் விதி அனைவரையும் பார்த்துச் சிரித்தது.

“தக்கோலத்தின் ஜலந்தீஸ்வரரின் ஆலயத்தில் நான் தரிசனம் செய்து கொண்டிருந்தேன். போர்க்களத்திற்குச் செல்லும் வழியில் ஆலயத்தைப் பார்த்த அரிஞ்சயனும், அதனுள் பிரார்த்தனை செய்ய வந்தான். என்னைக் கண்டதும், போர்க்களத்தை மறந்து போனான். பனி பெய்யும் அந்த இரவு நேரம், தனியாக நின்ற என்னைக் கண்டதும் அவனது மனம் பேதலித்திருக்க வேண்டும். என்னைக் குதிரையில் கடத்திச் சென்று காட்டில் என்னைச் சேதப்படுத்தினான். அதன் பிறகு உறங்கியும் போனான். சூரிய உதயத்தின் போதுதான் அவன் கண் விழித்தான். என்னை மீண்டும் ஜலந்தீஸ்வரர் ஆலயத்தின் முன்பாக விட்டுவிட்டு பிறகே போர்க்களம் புறப்பட்டுச் சென்றான். அவன் சென்று இராஜாதித்யனுக்கு உதவுவதற்குள், பூதுகன் அவன் மீது அம்பு எய்து இராஜாதித்யனின் கதையை முடித்தான். இப்போது சொல், தருமவர்மா! இராஜாதித்யனைக் கொன்றது பூதுகனின் அம்பா அல்லது அரிஞ்சயனின் பெண்ணாசையா?” - துக்கம் நெஞ்சை அடைக்கக் கேட்டாள் கங்காவதி.

என்ன சொல்வது என்று தெரியாமல் தந்தையும், மகனும் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தனர்.

கங்காவதி தொடர்ந்தாள்.

“நடந்ததைக் கேட்டதும் எனது தாய் கிருபாவதி துடிதுடித்தாள். அபராஜித பல்லவனின் பெயர்த்தியான ராஜகுடும்பத்தில் மருமகளாகப் போக வேண்டிய என்னை அரிஞ்சய சோழன் நாசம் செய்தான் என்பதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. ‘ஆதித்த சோழன் அபராஜிதன் உயிரை வாங்கி, எனது தாய் சந்திர காந்தியை நிர்க்கதியாக விரட்டினான் என்றால் அரிஞ்சயன் எனது மகளின் மானத்தை வாங்கினான். அதற்கு சோழர்கள் நன்கு அனுபவிப்பார்கள்’ என்று சபித்துக் கொண்டே இருந்தாள். சபிப்பதால் நான்

தூயவளாகிவிடுவேனா என்ன? அரிஞ்சயனின் வாரிசு எனது வயிற்றில் தோன்றியது. இதோ.. அரிஞ்சயன் என்னிடம் பெற்ற சமந்தக பல்லவி, என் மகள்!"- கங்காவதி கூற அவளது கண்களில் இருந்து பொலபொல வென்று கண்ணீர் பெருகியது. சமந்தக பல்லவியும் கண்கலங்க அவளது கரத்தைத் தட்டிக் கொடுத்தாள்.

மலைத்துப் போய் வேர்க்க விறுவிறுக்க அமர்ந் திருந்தனர், தருமவர்மனும், பார்த்திபனும். பல்லவர்கள் மீண்டும் ஒருங்கிணைந்ததைக் கொண்டாடும் வகையில் அந்த விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தான், பார்த்திபன். ஆனால் பல்லவர்களின் மீது சோழர்கள் கட்டவிழ்த் திருந்த சரித்திரத்தைக் கேட்டதும், பார்த்திபனின் இரத்தம் கொதித்தது. ஆதித்த கரிகாலனிடம் தான் ஊழியம் செய்வது எத்தகைய அவமானம் என்பதை உணர்ந்தவனாக, கல்பலதாவின் முகத்தைத் தவிர்த்தபடி, தனது நாற்காலியின் பின்பாகச் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான். அவனது முகத்தை நோக்கிய கல்பலதா அதில் படர்ந்திருந்தது துயரத்தின் சாயையா அல்லது வெறுப்பா என்பதை யூகிக்க முடியாமல் திணறினாள்.

தொடர்ந்து அங்கே நிலவிய அமைதியை கலைத்தான் தருமவர்மன்.

"பார்த்தாயா, பார்த்திபா! சோழர்களைக் கிருமி என்று கூறுமளவுக்கு என்ன செய்தார்கள் என்று என்னிடம் கேட்டாயே! இதற்கு என்ன பதிலைக் கூறப் போகிறாய்? அபராஜிதன் தலையைக் கொய்து, கிருபாவதியை நிர்க்கதியாக அலையவிட்டு, கங்காவதியின் கற்பையும் பறித்திருக்கிறார்கள், சோழர்கள். இன்று ஆதித்த கரிகாலனின் நெருங்கிய நண்பனாகத் திகழ்கின்றாய். பல்லவ இரத்தத்திற்காக உனது குருதி துடிக்கப் போகிறதா அல்லது உயிர் நண்பனாகச் சோழ இரத்தத்தைப் பாதுகாக்கும் பணியைத் தொடரப்

போகின்றாயா என்கிற மிகவும் சிரமமான வினாவுக்குப் பதிலைக் கூற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் நீ நிற்கிறாய்!" - தருமவர்மனின் குரல் காட்டத்துடன் ஒலித்தது.

"கேளுங்கள் மாமா! நான் ஏற்கெனவே தங்கள் மகனிடம் கேட்ட கேள்விதான் இது. இன்னும் எனக்கு அவர் பதில் கூறவில்லை!" - கல்பலதா கேலியுடன் கூறியதும், ஆக்ரோஷத்துடன் கண்களைத் திறந்தான், பார்த்திபன்.

"சீராகப் போய்க் கொண்டிருந்தது பல்லவம். இப்படி சோழர்களிடம் அடிமைப்பட்டதற்குக் காரணம் அபராஜித பல்லவன்தானே. ஆதித்த சோழனுடன் கைகோத்து வட பல்லவத்தை ஆண்டு கொண்டிருந்த எனது முப்பாட்டன் நிருபதுங்கவர்மனையும், அவன் மகள் கோதாவரியையும் விரட்டியடிக்கவே தானே பல்லவம் பலவீனம் அடைந்தது. பெரியப்பன் என்று கூடப் பாராமல் நிருபதுங்கருக்கு ஆதித்தனுடன் சேர்ந்து துரோகம் செய்தான். இறுதியில், அவன் தலையையே வாங்கினான், ஆதித்த சோழன். ஆதித்த சோழனுடன் அபராஜிதன் உறவாடியதால்தானே பல்லவத்திற்கு இந்த இழிநிலை. ஆதித்த கரிகாலனுடன் நான் கொண்டிருக்கும் நட்பினால் அல்ல!"- ஆவேசமாகப் பார்த்திபன் கூற, அனைவரும் திகைத்தனர்.

"ஆதித்தனை நம்பி அபராஜிதர் மோசம் போனது போன்று, ஆதித்த கரிகாலனை நம்பி நீங்கள் உயிரை இழக்கக்கூடாது என்கிற அக்கறையில்தான் நாங்கள் உங்களை எச்சரிக்கிறோம்!" - கல்பலதா கூற, பார்த்திபன் பதில் கூறவில்லை.

"எங்களால் உங்கள் நட்பு உடையத் தேவையில்லை, பார்த்திபா. எப்படியும் எனது தாயின் உடல்நிலை சீரடைந்ததும், நாங்கள் புறப்பட்டுவிடுகிறோம்!" - சமந்தக பல்லவி கூறினாள்.

"அத்தை! உங்களை அனாதையாகப் போகவிடுவதற்கா, நேற்று உங்கள் மகளை பல்லவ அரசியாக அங்கீகரித்து, மாபெரும் வரவேற்பு அளித்து, இப்போது விருந்தும் அளிக்கிறேன். மீண்டும் காஞ்சியில் நந்திக்கொடி பறந்து, சர்வவல்லமை பொருந்திய அரசியாகக் கல்பலதாவை அரியணையில் அமர்த்த முடிவு செய்திருக்கிறேன். சோழர்கள் செய்த முதல் அபராதம், அபராஜிதரைக் கொன்றது. இரண்டாவது அபராதம் தங்களைச் சேதப் படுத்தியது. எனவே, அபராஜிதனின் வழி வந்த கல்பலதாவை பல்லவ அரியணையில் அமர்த்த வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன்."- பார்த்திபன் கூறினான்.

"அத்தையின் மகள்தானே கல்பலதா. அவளை நீயே மணந்து கொண்டு, நிருபதுங்கரின் வாரிசாக நீயும், கம்பவர்மரின் மகன் அபராஜிதரின் வாரிசாகக் கல்பலதாவும் ஒன்றாகப் பல்லவத்தை ஆண்டால் என்ன?" - கங்காவதி திடீரென்று பார்த்திபனை நோக்கிக் கேட்டுவிட்டாள்.

"நல்ல யோசனை! பல்லவம் மீண்டும் தோன்றி உறுதியுடன் திகழ்வதற்கு ஏற்ற யோசனை. பார்த்திபா! உனது முடிவு என்ன?" - தருமவர்மனும் கூறினான்.

சமந்தக பல்லவி ஜாடையாகக் கல்பலதாவின் முகத்தை ஏறிட்டாள். அவளது முகத்தில் எவ்வித உணர்ச்சிகளும் இல்லை என்றாலும், அவளது சேலை முந்தானையை சுட்டு விரலில் சுற்றுவதும், பிறகு அதனை விடுவிப்பதுமாக அவள் இருப்பதைக் கண்டாள். பாட்டியின் யோசனை அவளுள் பதற்றத்தை உண்டாக்கிவிட்டது என்பதனை உணர்ந்தாள், சமந்தக பல்லவி.

தனது உறுதியான கரங்களால், உணவு மேஜையின் விளிம்பினைப் பற்றிக்கொண்டு தனது அகன்ற கண் களால் நிலத்தைையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்

தான், பார்த்திபன். என்ன பதில் கூறுவான்? கண்ட மாத்திரத்திலேயே அவனது கருத்தினை வசப் படுத்தியவள் கல்பலதா. முறை இருக்கிறது என்பதனை உணர்ந்ததும், மனதினுள் அவள் மீது ஒருவித நேசம் உண்டாகி இருந்தது. அதனை காதல் என்று அவசரப் பட்டுக் கூற அவன் விரும்பவில்லை. அவள் உள்ளேயும் பல்லவ இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதால் ஏற்பட்ட கவர்ச்சியாகக் கூட இருக்கலாம். ஆனால், நேசம் பாசமாகவும் மாறலாம் என்கிற போது அதனை காதல் என்று எப்படி முடிவு செய்வது? ஆனால் காதலையும் கடந்த ஒரு நிலைதானே திருமணம். அதற்கு இப்போதே தயாராகச் சொன்னால் எப்படி? முதலில் அவள் என்ன நினைக்கிறாள் என்பதை அறிய வேண்டுமே.

இரகசியமாகக் கல்பலதாவின் முகத்தை ஏறிட்டான். அவளுக்கு இந்த யோசனையில் விருப்பம் இருந்திருந்தால் முகத்தில் உற்சாகமும், நாணமும் காணப்படும். விருப்பம் இல்லையென்றால், சினமும் அருவருப்பும் நிறைந் திருக்கும். ஆனால் எதையோ சிந்தித்துக் கொண்டிருப் பவள் போன்று அவளது முகம் எவ்வித உணர்வுகளும் இன்றி நிர்மலமாக இருப்பதைக் கண்டதும் குழம்பினான், பார்த்திபன். அவளது மனநிலையை அறியாமல் இவன் எப்படித் தனது கருத்தைக் கூறுவான்.

"அபராஜிதரின் பெயர்த்தியை எப்படி மணந்து கொள்வது என்றுதான் யோசிக்கிறேன்!" எதையோ கூற வேண்டும் என்பதற்காகப் பதில் தந்தான், பார்த்திபன். சடாரென்று கல்பலதாவின் கண்கள் அவனை நோக்கி உயர்ந்தன. அதில் கோபம் தெரிந்தது.

"அபராஜிதரின் பெயர்த்தியாக என்னை மணக்க விருப்பம் இல்லை என்றால், உங்கள் ஆருயிர் நண்பன் ஆதித்த கரிகாலனின் பாட்டன் அரிஞ்சய சோழரின் பெயர்த்தியான என்னை மணந்து கொள்ளலாமே!"-

கல்பலதா கேட்க, தருமவர்மர் 'கடகட'வென்று சிரிக்கத் துவங்கிவிட்டார்.

அயர்ந்து போய் அமர்ந்திருந்தான், பார்த்திபன். 'அட.. ஆமாம்! கல்பலதாவின் உடலில் சோழ இரத்தமும் அல்லவா பாய்கிறது. அரிஞ்சயனின் பெயர்த்தியும் கூடதானே கல்பலதா!' தனது நகைப்பை சட்டென்று நிறுத்திய தருமவர்மர், கசப்புடன் பேசினார்.

"ஆம் உண்மை! பல்லவர்களின் முதுகில் குத்தியவர்கள் சோழர்கள். இருப்பினும் இருவருக்கும் இப்போது ஒரே இரத்தம். பாலாறும், செய்யாறும், வேகவதியும் முக்கூடலாகி இணைத்துவிட்ட பிறகு தனித்தனியே பாலாற்று நீர், செய்யாற்று நீர், வேகவதியின் நீர் என்று பிரித்துப் பார்க்க முடியுமா என்ன? தெரிந்தோ தெரியாமலோ, கல்பலதாவின் உடலில் பல்லவம், கங்கம் மற்றும் சோழத்தின் குருதியும் கலந்து ஓடுகிறது. அபராஜிதனின் பெயர்த்தியான கங்காவதி அரிஞ்சயனின் மனைவி. வைதும்பர கல்யாணிக்கும் அரிஞ்சயனுக்கும் பிறந்த சுந்தரனும், அவனுக்கும் பல்லவ கங்காவதிக்கும் பிறந்த நம் சமந்தக பல்லவியும் சகோதர சகோதரி. அதனால் நீயும், கல்பலதாவும் மாமன் மகள்-அத்தை மகள் என்பதால் நீங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வதில் தடை ஒன்றுமில்லை!" - தருமவர்மர் கூறினார்.

"தடை இருக்கிறது, மாமா! எங்கள் திருமணத்திற்குத் தடையாக நான் செய்த சபதம் ஒன்று இருக்கிறது. அபராஜிதன் தலையைக் கொய்த சோழர்களை, எனது பாட்டியின் வாழ்வை நாசம் செய்த அரிஞ்சயனை பழிதீர்க்கும் வகையில் சோழ பட்டத்து இளவரசன் ஆதித்த கரிகாலனைக் கொல்லுவேன் என்கிற சபதத்தைச் செய்திருக்கிறேன். எனது தாய் சமந்தக பல்லவியின் முன்பாகத் தக்கன் ஓலம் ஜலந்தீஸ்வரர் ஆலயத்தில் ஜலந்தீஸ்வரர் முன்பாக இந்த சபதத்தைச் செய்திருக்

கிறேன். இந்த சபதத்தை நான் செய்து முடிக்க வேண்டும். தனது நண்பர் ஆதித்த கரிகாலனை நான் கொல்வதற்கு தான் தடையாக இருக்கமாட்டேன் என்கிற உத்தர வாதத்தைப் பார்த்திபர் அளித்தால், நான் அவரை மணந்து கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்! பல்லவ அரசி கல்பலதா என்கிற அங்கீகாரத்தை அவர் எனக்கு அளித்திருப்பதால், நானும் அவருக்கு எனது கணவன் என்கிற அங்கீகாரத்தை அளிக்க விரும்புகிறேன்!"- கல்பலதா கூறினாள்.

பார்த்திபன் உறைந்து போனான். 'இதென்ன சோதனை! கல்பலதாவை மணந்துக் கொண்டால், நட்பிற்கும், இல்லறத்திற்கும் இடையே அல்லவா இவன் சிக்கிக் கொள்வான். தன்னைக் கொலை செய்யத் துடிக்கும் ஒருத்தி கல்பலதாவின் வடிவில் இருப்பதை அறிந்தால் ஆதித்த கரிகாலன் விட்டுவைப்பானா? அவளும் தனது ஆருயிர் நண்பனின் மனையாள் என்பதை அறிந்தால், நட்பை உடனே முறித்துக்கொள்ள மாட்டானா. அபராஜிதனின் வாரிசு இன்னும் உயிருடன் இருக்கிறது என்பதை அறிந்தால் சோழர்கள் சினம் கொள்வார்கள். இராஜாதித்யனை கொன்ற பூதுகனின் வழித்தோன்றல் என்றால் வெறியே கொள்வார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அரிஞ்சயன் பெற்ற சமந்தக பல்லவியின் மகள் என்பதை அறிந்தால், தங்கள் சோழ சிம்மாசனத்திற்கு அவளது வடிவில் பேராபத்து என்பதாக நினைத்து உடனே கல்பலதாவை தீர்த்துக் கட்டுவார்களே. அப்போது இவனது நிலை என்னவாக இருக்கும்?' பார்த்திபன் குழப்பத்துடன் தந்தையின் முகத்தை நோக்கினான்.

"தந்தையே! பல்லவ குலத்தின் எஞ்சிய குருதி நாம் ஐவரும்.. நாம் ஐவரும் ஒன்று கூடி இங்கே விருந்து அருந்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஆதித்த கரிகாலன் இதனை அறிந்தால், பல்லவர்கள் மீண்டும் கூடி சூழ்ச்சி செய்வதாகவே நினைப்பான். இந்நிலையில்,

நானும் கல்பலதாவும் திருமணம் செய்து கொண்டால் அது பல்லவ சூழ்ச்சியாகவே தெரியும். அதனால், இப்போதைக்கு நான் திருமணம் குறித்து ஏதும் சொல்வதற்கில்லை. ஆனால் கல்பலதாவின் கணவனாக அல்லாவிட்டாலும் மெய்க்காவலனாக, ஆலோசகனாக, அவளைப் பாதுகாப்பேன் என்கிற உத்தரவாதத்தைத் தருகிறேன். கண்டதும் அவள் மீது காதல் கொண்டு விட்டேன். எனக்கு அத்தை மகள் என்பதை அறிந்து அவள் எனக்கே உரிமை என்றும் முடிவு செய்து விட்டேன். திருமணம் என்பது ஒரு சடங்கு மட்டுமே. எனவே சடங்கை எப்போது செய்தால் என்ன! சோழர்களுடனான நமது உறவு இனி எப்படி திசை மாறுகிறது என்பதைப் பொறுத்து திருமண நாளை முடிவு செய்வோம். இப்போதைக்கு, கல்பலதா என்னும் ஒருத்தி காஞ்சியில் தங்கி இருக்கிறாள் என்பதை சோழர்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பதே உத்தமம்!" - உபேந்திர பார்த்திபன் கூறினான்.

தொலைவில் மெல்லிய திரைச்சீலைக்குப் பின்பாக சித்ரவீணையை இசைத்துக் கொண்டிருந்த அபர்ணா தேவி அவர்களை நோக்கிப் பணிந்துவிட்டு அறையை விட்டு வெளியேறினாள். தொடர்ந்து அவர்கள் உணவு அருந்திக் கொண்டிருந்தனர். அப்போது அறையின் வாயிலில் நிழலாடியது. அதனைக் கவனித்த லலாடிகா, அறையின் வாயிலை நோக்கி நடந்தாள். பணிப்பெண் ஒருத்தி அவளது செவியில் கிசுகிசுக்க, மீண்டும் ஒய்யாரமாக நடந்து வந்த லலாடிகா பார்த்திபனின் முன்பாக வந்து நின்றாள்.

"பல்லவ இளவரசே! சோழ இளவரசர் ஆதித்த கரிகாலர் தங்களைத் தேடி வந்திருக்கிறார்!" என்று லலாடிகா கூறியதும் அனைவரின் முகமும் மாறியது.

சடாரென்று பார்த்திபன் தனது நாற்காலியில் இருந்து எழுந்தான். "எச்சரிக்கை! பெண்கள் மூவரும் உங்களது ஜாகையில் சென்று பதுங்கிக் கொள்ளுங்கள். ஆதித்த

கரிகாலன் புறப்பட்டுச் செல்லும்வரை வெளியே வர வேண்டாம். லலாடிகா! அவர்களை அழைத்துச் செல்!"- பார்த்திபன் அவசரத்துடன் உத்தரவிட்டான்.

கங்காவதி தளர்ச்சியால் நாற்காலியில் இருந்து எழுந்து கொள்ள இயலாமல் தவிக்க, சமந்தக பல்லவி தனது தாய்க்கு உதவும் எண்ணத்தில் குனிந்து அவளது தோளினைப் பற்றிய வேளையில்..

தான் கொல்ல நினைக்கும் ஆதித்த கரிகாலனை அப்போதே சந்திக்க விரும்பாமல், கல்பலதா விருட்டென்று எழுந்து லலாடிகாவின் அருகில் சென்று நின்ற வேளையில்..

"எச்சரிக்கை பார்த்திபா!" என்று தருமவர்மர் ஆதித்த கரிகாலனை எச்சரித்த வேளையில்..

ஆதித்த கரிகாலனை வரவேற்பதற்காக அந்த அறையைவிட்டு நீங்குவதற்காக பார்த்திபன் திரும்பிய அதே வேளையில்..

"நண்பா! ஏன் இந்தப் பாராமுகம்? தஞ்சையில் இருந்து நான் திரும்பி வந்த சேதியைக் கேட்டதும் என்னைக் காண ஓடோடி வருவாய் என்று நான் காத்திருக்க, நீ இங்கே இருக்கிறாயே?" என்று தனது வெண்கலக் குரலில் கேட்டபடி அறையினுள் வந்து நின்றான் ஆதித்த கரிகாலன்.

அனைவரும் உறைந்து போய் நின்றிருந்தனர்..

'இதோ.. பல்லவர்களைச் சதியால் வீழ்த்தி காஞ்சியை அபகரித்துக் கொண்ட ஆதித்த சோழனின் வாரிசு!'- மனம் வெதும்பி ஆதித்த கரிகாலனைக் காணாதது போன்று தனது நாற்காலியில் அமர்ந்தபடி விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான், தருமவர்மன்.

'இதோ.. ஆலயத்திற்குச் சென்ற என்னைக் கடத்திச் சென்று துடிக்கத் துடிக்க சித்ரவதை செய்த அரிஞ்சயனின்

பெயரன் எனது முன்பாக நிற்கிறான்' என்று தனது இடுங்கிய கண்களால் அவனைச் சபிப்பது போன்ற பார்வையுடன் நின்றாள், கங்காவதி.

'ஐயோ! எனது மகள் பல்லவ அரசி என்பதை அறிந்தால் இந்த சோழனால் அவளுக்கு என்ன ஆபத்து நேருமோ!' என்கிற அச்சத்துடன் ஆதித்த கரிகாலனைப் பார்த்தபடி நின்றாள், சமந்தக பல்லவி.

சற்று முன்னர், தான் கொல்ல எண்ணியிருப்பதாகக் கூறப்பட்ட ஒருவன், குருதியும் சதையுமாகத் தனது முன்பாகப் பிரசன்னமானதைக் கண்டு அயர்ந்து போய் நின்றிருந்தாள், கல்பலதா.

கம்பீரமாக நின்ற ஆதித்த கரிகாலனைக் கண்டதும் கல்பலதா ஒருகணம் சுவாசிக்க மறந்தாள். 'இவன்தான் சோழ பட்டத்து இளவரசனா? சுந்தர சோழருக்குப் பிறகு அரியணை ஏறப்போகும் சோழ மன்னனா? அதற்குள் இவனைக் கொல்ல முடியுமா?' என்று யோசித்தபடி அவனை நோக்கிக் கொண்டிருந்தாள், கல்பலதா.

வினாவை எழுப்பியபடி அறைக்குள் வந்த ஆதித்த கரிகாலன், அங்கு குழுமியிருந்தவர்களை வியப்புடன் சுற்றிப் பார்த்தான். சுழன்று கொண்டிருந்த அவனது பார்வை கல்பலதாவின் மீது பதிந்ததும், அவனது கண்கள் நிலைகுத்தி நின்றன. புருவங்கள் உயர்ந்தன. அவனது கோபாவேசக் கண்கள் ஒருவித பிரமிப்பு நிலைகொண்டது.

'யார் இந்தத் தேவலோகப் பாவை?' என்பது போன்று கல்பலதாவின் பேரழகினால் ஈர்க்கப்பட்டு அவளையே வெறித்துக் கொண்டிருந்தான்.

நண்பனிடம் இருந்து எழப்போகும் வினாக் கணைகளை எப்படிச் சமாளிப்பது என்று யோசித்தபடி ஆதித்த கரிகாலனின் முகபாவங்களை நோட்டம்விட்டுக் கொண்டு நின்றிருந்தான், பார்த்திபன்.

"இவர்கள் அனைவரும் எனது உறவினர்கள்!" சுதாரித்துக் கொண்ட பார்த்திபன் கூறினான்.

"தந்தையே! இளவரசர் வந்திருக்கிறார்!" என்று தருமவர்மரின் செவியில் குனிந்து சொல்ல, அவர் இப்படியும் அப்படியும் நோக்கியபடி பேசினார். "எனது ஆசிகள், ஆதித்த கரிகாலா. இரவானால் கண்கள் தெரிவதில்லை. உங்களைக் காண முடியாததற்கு வருந்துகிறேன்!" என்று வேண்டா விருப்பாகப் பேச, அவரது கையைப் பற்றினான், ஆதித்த கரிகாலன்.

"பரவாயில்லை. சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் பார்த்திபனுடன் அவசரமாக வெளியே செல்ல வேண்டும்!" என்றான்.

"அப்படியா இளவரசே! இவள் எனது தங்கை கங்காவதி. தூரத்து சொந்தம். இவள் அவளது மகள். சமந்தகி. அத்திமலையானையும், ஒத்தாடையானையும் தரிசிப்பதற்காக நெகிழ்வலையில் இருந்து வந்திருக் கிறார்கள்!" என்று கூற, தலையசைத்தான், ஆதித்த கரிகாலன். ஆனாலும் அவனது கண்கள் அவ்வப்போது கல்பலதாவைத்தான் நோட்டம்விட்டுக் கொண்டிருந்தன. அவனது கண்கள் தன்னையே நோக்குவதை உணர்ந்த வளாக, கல்பலதா தனது பாட்டியை நோக்கி நடந்தாள்.

"'வாருங்கள்!" என்றபடி பாட்டியின் தோள்களைப் பிடித்து நடத்திச் சென்றாள்.

"ஆதித்தா! கங்காவதி பாட்டியையும் அவரது மகளையும் இன்று முழுவதும் ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லும் பணி இருந்தது. அவர்களுக்கு விருந்து வேறு தர வேண்டியிருந்தது. எனவேதான் உன்னைக் காண வர முடியவில்லை. நீ தஞ்சைக்குத் திடீர் என்று புறப்பட்டுச் சென்றுவிட்டாய் என்பது தெரியும். முக்கிய மான தகவல் என்றால் நீ என்னிடம் சொல்லாமல் இருக்கமாட்டாய் என்பதும் தெரியும். உனது தந்தையைப்

பார்க்கச் சென்றிருக்கிறாய் போலும் என்று யூகித்தேன்."- பார்த்திபன் கூறினான்.

"நான் உத்தரவு வாங்கிக் கொள்கிறேன், தருமவர்மரே!" என்று கூறிய ஆதித்த கரிகாலன், பார்த்திபனுடன் நடந்தான். "நான் தந்தையைப் பார்க்கப் போகவில்லை. பழையாறை கஜானாவிற்குச் சென்றேன். முக்கிய விஷயம் ஒன்றை உனக்குத் தெரிவிக்க வேண்டும். எனக்குப் பெரும் பொக்கிஷம் கிடைக்கப் போகிறது. அது குறித்த தகவலைப் பெறவே பழையாறைக்குச் சென்றிருந்தேன்!" என்ற ஆதித்த கரிகாலன், தனது அங்கியில் மறைத்திருந்த பாணப்பத்திரத்தை வெளியே எடுத்தான்.

"இதுதான் அந்தப் பொக்கிஷத்திற்கு ஆதாரம்!" - ஆதித்த கரிகாலன் கூறியதும், திகைப்புடன் நின்றான், பார்த்திபன்.

"என்ன ஓலைச்சுவடி இது?" - பார்த்திபன் ஆர்வத்துடன் கேட்டான்.

"கங்க நாடு சோழத்திற்கு அளித்திருக்கும் பாணப் பத்திரம். இந்த உடன்படிக்கையின்படி நான்கு ஸ்வர்ண சுரங்கங்களை சோழத்திற்குப் பரிசளித்திருக்கிறது, கங்கம். சுவடியில், அப்போதைய கங்க மன்னன் பிருத்விபதி மற்றும் அவன் மகன் ஹ¯ஸ்திமல்லனும் தங்களது இலச்சினையினை வைத்திருக்கிறார்கள். இதுவரை சோழர்கள் அதனை உரிமை கோரவில்லை. இப்போது நான் சென்று நமக்கு உரிய ஸ்வர்ண பொக்கிஷங்களை எடுக்கப் போகிறேன். அந்த ஸ்வர்ணத்தை வைத்து என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? பிரவாள மாளிகையை இடித்துவிட்டு நான் எழுப்பப் போகும் புதிய அரண்மனையை ஸ்வர்ணத்தால் எழுப்பப் போகிறேன். அந்த அரண்மனையே பொன்மாளிகையாக இருக்கும். நந்தவனங்களும், நீரூற்றுகளும், இங்கும் அங்கும் பறக்கும் பட்சியினங்களும், நடனமாடும் மயில்களும், இதோ இப்போது போனாளே உன் உறவுக்காரப் பெண்,

அவளைப் போன்ற பேரழகிகளும் உலவும் மாளிகையாக இருக்கும். அந்த மாளிகைக்குப் பொன்னாழி என்று பெயர் வைக்கத் திட்டமிட்டிருக்கிறேன்!" - கனவுடன் கூறினான், ஆதித்த கரிகாலன்.

'ஆதித்த கரிகாலன் வடபுல சேனைத்தலைவனாக காஞ்சிக்கு வந்திருப்பதே, பொக்கிஷங்களைக் கைப்பற்றத் தான்!' - தந்தை விடுத்த எச்சரிக்கை, பார்த்திபனின் செவிகளில் ரீங்கரித்தது. பிரவாள மாளிகையை இடித்துத் தரைமட்டம் ஆக்கிவிட்டானே, ஆதித்த கரிகாலன்.

கல்பலதா காட்டிய சுவடியில் மல்ல எதி என்பான் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனுக்கு அனுப்பிய தகவலில், தான் அத்திமலைத்தேவனின் சிலையைப் பிரவாள மாளிகையில் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறி இருந்தான். மாளிகையை இடிக்கும் போது நிச்சயம் அத்திமலைத்தேவனின் தேவ உடும்பர மேனி அவனுக்குக் கிடைத்திருக்கக் கூடும். பாணப்பத்திரத்தைப் பற்றி இவனிடம் கூறும் ஆதித்தன், அத்திமலைத்தேவனின் சிலையைப் பற்றி ஏன் தன்னிடம் கூறாமல் மறைக்கிறான்? அதைப் பற்றி அவனிடம் கேட்டு, நண்பனுக்குச் சங்கடம் உண்டாக்கத் தோன்றவில்லை. கல்பலதாவின் மீது அவன் ஒரு கண்ணை வைத்திருக்கிறான் என்பதும் புரிந்தது. அவளை எச்சரிக்கையாக இருக்கச் சொல்ல வேண்டும். என்ன இருந்தாலும் இருவருக்குமே அவள் முறைப்பெண் அல்லவா?

பல்லவ மாப்பிள்ளை இவன். சோழ மாப்பிள்ளை ஆதித்த கரிகாலன். ஆனால் கல்பலதாவை பொறுத்த வரை இவன்தான் முறைமாப்பிள்ளை. அவள் கொல்லத் துடிக்கும் ஆதித்தன் குறை மாப்பிள்ளைதான்.

"வா நண்பா! என்ன யோசனை!" என்றபடி பார்த்திபனின் கையைப் பற்றித் தரதரவென்று இழுத்துச் சென்றான், ஆதித்த கரிகாலன்.

# 8. மருளுகின்றான் மருளகங்கன்

ஸ்வர்ணமுகி காடுகள். பல்லவம், சாளுக்கியம், வைதும்பரம், குந்தளம் ஆகிய அனைத்து தேசங்களுக்கும் நடுநாயகமாகத் திகழ்ந்தது கங்க நாடு. எப்போதும் கோலாகலத்துடன் காட்சியளிக்கும் அதன் தலைநகரம் கோலாகல நகரம். அதனைச் சுற்றிப் படர்ந்திருக்கும் ஸ்வர்ணமுகி காடுகள். காடுகளின் ஊடே வைரக் கம்பியாகப் பாயும் ஸ்வர்ணமுகி ஆறு. ஸ்வர்ணமுகி காடுகளில் ஆங்காங்கே சிதறிக் கிடைக்கும் பொன் சுரங்கங்கள் கங்க நாட்டின் கீர்த்தியினை எண்திசையிலும் பரப்பியிருந்தன. சிறிய நாடாக இருந்தாலும் கங்கத்தின் கீர்த்தி பெரிதுதான். செல்வம் கொழிக்கும் கங்கத்தின் செல்வாக்கு மிகுந்த மன்னனாக நிம்மதியுடன் உறங்கிக் கொண்டிருந்தான், மன்னன் மருளகங்கன் நீதிமார்கன். அவன் உறங்கும் பொழுதினில் அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்த மனநிம்மதி சூரியோதயத்திற்குப் பிறகு தொலைந்து போக இருப்பதை அவன் அறியவில்லை.

நடுநிசியினில் ஸ்வர்ணமுகி காடுகளின் தென்பகுதி யினுள் ஆதித்த கரிகாலன், உபேந்திர பார்த்திப பல்லவன், நேமியங்கையர், குழலழகன் ஆகியோருடன் சோழ படையினர் நுழைந்து தங்களுக்கு உரிய தங்க சுரங்கங்களைத் தேடிக் கொண்டிருந்தனர். அடர்ந்த மரம் செடி கொடிகளிடையே மிகவும் சிரமப்பட்டுதான் சுரங்கங்களைத் தேடினர்.

பாணப்பத்திரம் பற்றி அப்போதைய கங்க மன்னனுக்குத் தெரியாது போலும். கோலாகல நகரைச் சுற்றி அடர்ந்திருக்கும் காடுகளில் மேற்கு மற்றும்

வடக்கில் உள்ள சுரங்கங்களில்தான் கங்கர்கள் பொன் கட்டிகளை வெட்டி எடுத்துக் கொண்டிருந்தனர் போலும். தெற்கு பகுதியில் உள்ள சுரங்கங்களை சோழர்களுக்கு அளித்துவிட்டதால் பிருத்விபதியும், அவன் மகன் ஹஸ்திமல்லனும் அவற்றை நாடாமல் இருந்திருக்க வேண்டும். பாணப்பத்திரம் பற்றி அறியாமல் நாளடைவில் அந்த நான்கு சுரங்கங்களைப் பற்றி கங்கர்கள் முற்றிலுமாக மறந்திருக்க வேண்டும்.

படையினரை நான்கு பிரிவுகளாகப் பிரித்து, ஆதித்த கரிகாலன் தலைமையில் ஒன்று, பார்த்திபன் தலைமையில் ஒன்று, நேமியங்கையர் தலைமையில் ஒன்று, குழலழகன் தலைமையில் மற்றொன்று என்று நால்திசையிலும் சுரங்கங்களைத் தேடத்துவங்கினர். பார்த்திபன் தனது வீரர்களுடன் கிழக்கே நகர்ந்தான். வீரர்கள் ஏந்தியிருந்த தீப்பந்தங்களின் ஒளி வழிகாட்ட, சிறிது தொலைவு நடந்ததும், ஸ்வர்ணமுகி ஆறு மேற்கி லிருந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். ஆற்றின் மறுகரையில் வரிசையாக ஐந்தாறு குன்றங்களைக் கண்டான். நடுநிசி என்பதால் சற்றே உறக்கம் மேலிட, முகத்தைக் கழுவிக் கண்களில் தவழ்ந்த தூக்கத்தை விரட்ட எண்ணி வீரர்கள் ஸ்வர்ணமுகி ஆற்றில் இறங்கி தண்ணீரை வாரி முகத்தில் அடித்துக் கொண்டிருந்தனர். அந்த நடுநிசியில் ஆற்று நீரை அவர்கள் சப்திக்கும் ஒலி மட்டும்தான் கேட்டது.

பார்த்திபனும் ஆற்றில் இறங்கி முகத்தில் தண்ணீரை அடித்துக் கொண்டான். அமைதியான அந்த இரவும், பூரண மதியும் அவன் மனதில் ஒருவித பரவசத்தை உண்டு பண்ண, தன்னையும் அறியாமல் கல்பலதாவை நினைத்தான்.

'கல்பலதா இப்போது உறங்கிக் கொண்டிருப்பாளா அல்லது ஆதித்த கரிகாலனை எப்படிக் கொல்வது என்று திட்டமிட்டுக் கொண்டிருப் பாளா?' - தனக்குள் கேட்டுக் கொண்டான், பார்த்திபன்.

படைவீரன் ஒருவன் நீட்டிய துவாலையால் முகத்தைத் துடைத்துக்கொண்ட, பார்த்திபன், துவாலையை நெற்றியிலிருந்து மெதுவாக கீழ் நோக்கி இறக்கியபடி யோசித்தான். நெற்றி, புருவம், கண்கள், நாசி என்று வதனத்தின் ஒவ்வொரு பகுதியாக வெளிப்பட்டு மீண்டும் கம்பீர பார்த்திபனின் முகம் தோன்றியது. அந்த துவாலை கண்களைக் கடந்து நாசியினில் இறங்கிய அந்தக் கணம், தற்செயலாக அவனது பார்வை வரிசையாக நின்ற அந்தக் குன்றங்களின் மீது படர்ந்தது. அவன் கண்ணில்பட்ட ஒரு குன்றத்தின் கற்பாறையில் இரு குத்துவிளக்குகளின் சிற்பம் வடிக்கப்பட்டிருந்தது. அதன் மீது ஒரு சக்கரமும், வேலும் வடிக்கப்பட்டிருந்தன. வியப்புடன் அதனைக் கவனித்தவன் தனது பார்வையை மற்ற குன்றங்களின் மீது பரவவிட்டான். அங்கிருந்த ஐந்தாறு குன்றங்களில், நான்கு குன்றங்களின் பாறை களில் குத்து விளக்குகளின் ஓவியம் சிற்பமாக வடிக்கப் பட்டிருந்தன. சக்கரம் மற்றும் வேல் கூடிய குத்து விளக்குகள் கங்க நாட்டின் சின்னம் அல்லவா? அந்தக் குன்றங்களில்தான் ஸ்வர்ண சுரங்கங்கள் இருக்கின்றன போலும். ஓவியமாகப் பெரிய அளவில் கற்பாறையில் பெரியதாக வரையப்பட்டிருந்தது. வியப்புடன் அந்த ஓவியத்தையே நோக்கிக் கொண்டிருந்தவன், வீரன் ஒருவனை அழைத்து ஆதித்த கரிகாலனையும், மற்றவர் களையும் உடனே அங்கே அழைத்து வரச்சொன்னான்.

விரைவில் ஆதித்த கரிகாலனும், மற்றவர்களும் அங்கே வந்து திரண்டனர்.

“பார்த்திபா! அவசரமாக அழைத்தாயே! பொற்சுரங் கங்களைப் பற்றித் தகவல் கிடைத்ததா?” - ஆவலுடன் கேட்டான், ஆதித்த கரிகாலன்.

“அதோ பார் கரிகாலா! ஸ்வர்ணமுகி ஆற்றின் அக்கரையில் வரிசையாக ஆறு குன்றங்கள். அவற்றில் நான்கு குன்றங்களைக் கவனி. அவற்றில் கங்கர்களின்

சின்னமான சக்கரம், வில் மற்றும் இரு குத்துவிளக்குகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. பொற்சுரங்கங்கள் எப்போதுமே மலைப்பகுதிகளில்தான் இருக்கும் அல்லவா! கங்கர்கள் சின்னம் பொறிக்கப்பட்ட அந்தக் குன்றங்களில்தான் பொற்சுரங்கங்கள் இருக்க வேண்டும் என நினைக்கிறேன்!" - பார்த்திபன் கூற, உற்சாகத்துடன் அவனை அணைத்த ஆதித்த கரிகாலன், பார்த்திபனை அலாக்காகத் தூக்கி சுற்றத்துவங்கினான்.

ஆதித்தனின் உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக் கொள்ள, அனைவரும் ஒருவரையொருவர் கைகளைக் குலுக்கிக் கொள்ளுவதும், மகிழ்ச்சியுடன் ஆடுவதுமாக இருந்தனர்.

ஆட்டம், பாட்டம் எல்லாம் முடிந்த போது பொழுது விடிவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. குணதிசையில் செம்மை படர, பறவைகள் தங்கள் கூட்டிலிருந்து வெளியேறி இனிமையாகக் கூவத்தொடங்கின. வீரர்கள் பலரும் இரவு தொலைத்திருந்த உறக்கத்தை இப்போது வலுக்கட்டாயமாக வரவழைத்து ஆங்காங்கே முடங்கி இருந்தனர். அரசமரம் ஒன்றின் அடியில் அமர்ந்திருந்த ஆதித்த கரிகாலன், பார்த்திபன், நேமியங்கையர் மற்றும் குழலழகன் மட்டுமே விழித்திருந்தனர். இரவெல்லாம் கண்விழித்திருந்ததால் சோர்வாகக் காணப்பட்டாலும், தொடர்ந்து இனி தாங்கள் செய்ய வேண்டியது குறித்து ஆலோசனை செய்து கொண்டிருந்ததால், நால்வருமே உறங்கவில்லை.

"இனி என்ன செய்வது?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"இளவரசே! பாணப்பத்திரம் நம்மிடம் உள்ளது. நமது உரிமையை எடுத்துக் கொள்வோம். யாரிடம் நாம் அனுமதி வாங்க வேண்டும்!" - குழலழகன் கூறினான்.

"அது முறையாகாது! மன்னன் மருளகங்கன் நீதி மார்கனிடம் பாணப்பத்திர ஓலையைக் காட்டி,

எங்களுக்கு உரிய சுரங்கங்களில் இருந்து பொன்னை வெட்டி எடுத்துக்கொள்கிறோம் என்று கூறிவிட்டு, பணிகளைத் துவங்குவோம்!" -நேமியங்கையர் கூறினார்.

"பராந்தகர் காலத்தில் ஏற்பட்ட உடன்படிக்கை. இப்போது மருளகங்கன் அதனை மதிப்பானா? சுரங் கங்கள் எங்களுக்குத்தான் சொந்தம் என்று வாதிட்டால் என்ன செய்வது?" - பார்த்திபன் கேட்டான்.

"கேட்கக் கூடியவன்தான்! மருளகங்கன் இப்போது சோழர்களுக்கு எதிரான மனநிலையைக் கொண்டிருக் கிறான். சாளுக்கியத்துடன் சல்லாபித்துக் கொண்டிருக் கிறான். நிச்சயம் பராந்தகர் மற்றும் பிரித்விபதி இடையே உருவான இந்தப் பாணப்பத்திரத்தை ஏற்கமாட்டான். போரில் அவனை வென்றுதான், நமது ஸ்வர்ண சுரங்கங் களைக் கைப்பற்ற வேண்டும். ஆனால், அவனுடன் போர் புரியாமல், இரகசியமாக ஸ்வர்ண சுரங்கங்களைக் கைப்பற்ற நினைக்கிறேன்!" - ஆதித்த கரிகாலன் கூறியதும், மற்றவர்களது முகத்தில் வியப்பு.

'ஏன்.. மருளகங்கனுடன் போர் புரிவதில் என்ன தயக்கம்?" - பார்த்திபன் வாய் திறந்து நண்பனைக் கேட்டேவிட்டான்.

"அதற்கில்லை, பார்த்திபா. போர் என்றால், தஞ்சையின் கட்டளைகளுக்குக் காத்திருக்க வேண்டும். நான் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டேன். இங்கே ஸ்வர்ணமுகி காடுகளில் எனக்குக் கிடைக்க இருக்கும் ஸ்வர்ணத்தை நான் சோழ கஜானாவுக்கு அனுப்பப் போவதில்லை. நான் காஞ்சியில் எழுப்பும் மாளிகை எந்தக் கட்டத்தில் உள்ளது, குழலழகா?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"அநேகமாகப் பூர்த்தியாகிவிட்டது, இளவரசே. இன்னும் பூச்சு வேலைகள் மட்டுமே மிகுதி உள்ளன.

எப்படியும் இன்னும் ஒரு திங்களில் நீங்கள் அதில் குடிபுகுந்துவிடலாம்!" - குழலழகன் கூறினான்.

"அவசரமில்லை. பணிகள் மெதுவாக ஆகட்டும். நான் எழுப்பும் புதிய மாளிகையைப் பொன்னால் வேய்ந்து அதனை ஸ்வர்ண மாளிகையாக எழுப்பப் போகிறேன்.. அது இந்திரலோகத்து மாளிகையாக இருக்கும்."- கண்களில் பரவசம் மின்ன, ஆதித்த கரிகாலன் கூறினான்.

"நாம் சுரங்கங்களில் இருந்து கைப்பற்றும் பொன்னை எதற்காக சோழ கஜானாவுக்கு அனுப்ப வேண்டும்? எனக்கு அதில் விருப்பமில்லை. ஸ்வர்ண சுரங்கங்களில் இருந்து வெட்டி எடுக்கும் பொன்னை காஞ்சிக்கு எடுத்துச் செல்லப் போகிறேன். நான் ஏற்கெனவே கட்டி வரும் அற்புத மாளிகையை பொன்னாழி என்கிற பொன் மாளிகையாக மாற்றப் போகிறேன். இம்மாதிரி அரண் மனை உலகத்திலேயே இல்லை என்று அனைவரும் கூற வேண்டும். எனவே சுரங்கத்திலிருந்து பொன் கட்டிகளை யாருக்கும் தெரியாமல் இரகசியமாகவே வெட்டி காஞ்சிக்கு எடுத்துச் செல்ல வேண்டும்!" - ஆதித்த கரிகாலன் கூறினான்.

'பொன்னை வெட்டி எடுத்து காஞ்சிக்கு எடுத்துச் செல்லப் போகிறானா? காஞ்சியில் பொன் மாளிகையை எழுப்பினால், தனாதிகாரி பழுவூர் அரசர் வாளா விருப்பாரா? கங்க சுரங்கங்களில் இருந்து கைப்பற்றிய பொன்னை சோழ கஜானாவில் ஒப்படைக்கும்படி கட்டளையிடமாட்டாரா?' - பார்த்திபன் திகைப்புடன் ஆதித்த கரிகாலனை பார்த்தான்.

"ஆதித்தா! அவசரப்படாதே.. நிதானம் தேவை. உன்னுடைய பொன் மாளிகைத் திட்டத்திற்குத் தனாதி காரி ஒப்புக்கொள்ள வேண்டுமே?" - பார்த்திபன் கேட்டான்.

“பராந்தகர் காலத்தில் இருந்து பாணப்பத்திரம் பழையாறை நிலவறையில் கேட்பாரற்றுக் கிடக்கிறது. பராந்தகருக்குப் பிறகு, கண்டராதித்யர், அரிஞ்சயர், எனது தந்தை சுந்தரர் என்று சோழ மன்னர்கள் மாறி விட்டார்கள். இருப்பினும் பாணப்பத்திரத்தை யாரும் செயல்படுத்தவில்லை என்கிற போது, நான் துணிந்து சுரங்கங்களைக் கைப்பற்றி ஸ்வர்ணத்தை வெட்டி எடுக்கிறேன். யாரும் முயற்சி செய்யாமல் இருந்துவிட்டு, நான் முயற்சியை மேற்கொண்டதும், ஓடி வந்து எனது திட்டத்திற்குத் தடை சொல்வார்களா என்ன? எனது பொன்மாளிகையை நான் எழுப்பியே தீருவேன். எனக்கு உடனடியாக ஸ்வர்ணம் தேவை. போரிட்டால் தஞ்சையில் அனைவருக்கும் தெரிய வரும். எனவே போரிடாமல், பொன் சுரங்கங்களைக் கைப்பற்ற எனக்கு ஒரு யோசனை சொல், பார்த்திபா!” - ஆதித்த கரிகாலன் கூறினான்.

பார்த்திபன் அவனை கவலையுடன் பார்த்தான். ஆதித்த கரிகாலன் தீர்மானித்துவிட்டான் என்றால், அதன் பிறகு அவன் மனதை யாரும் மாற்ற முடியாது என்பது தெரியாதா என்ன?

“சற்றே ஓய்வு எடு, ஆதித்தா! உறங்கி எழுந்தால் சிந்தனை தெளிவாகும். ஏதேனும் யோசனை தோன்றும்!” பார்த்திபன் ஆயாசத்துடன் கூறியபடி கண்களை மூட, அவன் கூறுவதும் நியாயமே என்பது போன்று ஆதித்த கரிகாலனும் அந்த அரசமரத்தின் மீது சாய்ந்தபடி தனது கண்களை மூடினான்.

ஒருவன் ஒன்றை அடைய வேண்டும் என்று பிரயத்தனப்படும் போது பாக்கியத் தேவதையானவள் தனது பணிப்பெண்ணான விதியை இன்னொருவன் மீது ஏவிவிடுவாள் போலும். முந்தைய தினம் தனது பிறந்த நாளுக்கு அமைச்சர் பெருமக்கள் பரிசாக அளித்திருந்த அரேபிய குதிரையில் ஸ்வர்ணமுகி காட்டிற்குச் சென்று

வேட்டையாடிவிட்டு வர வேண்டும் என்கிற எண்ணத்தோடு, தனது பிரிய நாயுடன் அந்த விடியற்காலையில் புறப்பட்டான் கங்க மன்னன் மருளகங்கன் நீதிமார்கனின் மகன், மாரசிம்மன் சத்யவாக்யன். முந்தையதினம் பரிசாகக் கிடைத்திருந்த புரவிக்கு தேஜரூபா என்று பெயர் வைத்திருந்தான். குதிரையின் மீது தாவி ஏறியவன் உற்சாகத்துடன் அதன் விலாவினில் உதைக்க, தேஜரூபா புயலெனப் பறந்தது.

ஸ்வர்ணமுகி காட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர் அனைவரும். வேகமாகச் செல்லும் புரவி ஒன்றின் குளம் பொலியைக் கேட்டு பார்த்திபன்தான் கண் விழித்தான். கண்களை ஒருமுறை துடைத்துக்கொண்டு அந்தக் குதிரையின் மீது அமர்ந்திருந்தவனை நோட்டம் விட்டான். குமாரனாக இருந்த அவன், ஸ்வர்ணமுகி ஆற்றின் கரைக்குக் குதிரையை இட்டுச்சென்று அதனை நீர் பருகச் செய்தான். பிறகு தானும் சிறிது நீரை பருகிவிட்டு முகத்தைக் கழுவிக் கொண்டான்.

பார்த்திபன் ஆதித்த கரிகாலனை உலுக்கி எழுப்ப, அவனும் எழுந்து அமர்ந்தான். மலங்க மலங்க விழித்த அவனது முகத்தை ஆற்றை நோக்கித் திருப்ப, ஆதித்த கரிகாலனின் கண்களில் மாரசிம்மன் சத்யவாக்யன் தென்பட்டான். அதற்குள் குழலழகனும் கண்விழிக்க, அவன் குரல் கொடுத்ததும், வீரர்கள் அனைவரும் உறக்கத்தை கைவிட்டு எழுந்து அமர்ந்தனர்.

குழலழகனின் குரல் மாரசிம்மனின் செவிகளில் கேட்டிருக்க வேண்டும். திகைத்துப் போய்த் திரும்பி நோக்கினான். படைவீரர்கள் அனேகம் பேர் அங்கே தங்கியிருப்பதைக் கண்டதும் அவனது முகம் மாறியது. தனது குதிரையின் மீது தாவி ஏறியவன், ஆதித்த கரிகாலனும் அவனது பரிவாரங்களும் தங்கியிருந்த இடத்தை நோக்கி வந்தான்.

"யார் நீங்கள்..? இந்தப் பகுதி எங்கள் கங்க நாட்டைச் சேர்ந்தது?" - சினத்துடன் கேட்டபடி மாரசிம்மன் அவர்களை நெருங்கினான்.

"இளங்குமரா! நீ கூறுவது தவறு! இந்தப் பகுதி உங்கள் கங்க மன்னன் பிருத்விபதியால் எங்கள் சோழர்களுக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. பாணர்களை வீழ்த்தி அவர்கள் நாட்டினை கங்கத்தோடு இணைத்து அவர்களை உங்களுக்கு அடிமையாக்கியதற்கு நன்றிக் கடனாகக் கங்க மன்னர் பிருத்விபதி எங்களுக்கு இப் பகுதியை அளித்திருக்கிறார். அதனை ஊர்ஜிதப்படுத்தும் அவர் அளித்த பாணப்பத்திரமும் எங்களிடம் உள்ளது!"- நேமியங்கையர் கூற, ஆதித்த கரிகாலன் மாரசிம்மனை உறுத்து நோக்கியபடி நின்றான்.

"இதென்ன புதுக்கதை?" - திகைத்தான் மாரசிம்மன்.

"புதுக் கதையல்ல. நீ பிறப்பதற்கு முன்பு நிகழ்ந்த பழைய சரித்திரம்!" - ஆதித்த கரிகாலன் அலட்சியமாகக் கூறினான்.

"என்னை யார் என்று நினைத்து இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? கங்க நாட்டின் மன்னன் மருளகங்கனின் மகன் மாரசிம்மன் நான். தந்தைக்குத் தெரிந்தால் உங்களைச் சின்னாபின்னம் ஆக்கிவிடுவார்!" - மாரசிம்மன் கூற, ஆதித்தன் சிரித்தான்.

"நீ மருளகங்கனின் மகன் என்பது உனது மருண்ட கண்களைப் பார்த்தாலே தெரிகிறது. சென்று உனது தந்தையிடம் சொல். சோழ பட்டத்து இளவரசன் ஆதித்த கரிகாலன் தனக்கு உரிய ஸ்வர்ண சுரங்கத்தில் இருந்து பொன்னை வெட்டி எடுத்துச் செல்ல வந்திருக்கிறான் என்பதைச் சொல்.. போ!" - ஆதித்த கரிகாலன் கூற, அப்போது பார்த்திபனுக்கு மின்னல் வெட்டியது போன்று சிந்தையில் ஒரு யோசனை பிறந்தது.

முன்னேறிச் சென்று ஆதித்தனின் செவியில் எதையோ கிசுகிசுக்க, ஆதித்தன் பிரமிப்புடன் அவனை நோக்கித்

திரும்பினான். ஆச்சரியத்தால் ஒரு வட்டமாக விரிந்திருந்த அவனது இதழ்கள், மெதுவாக ஒரு குறுநகையாக விரிந்து, முடிவில் பெரும் புன்னகையாக மிளிர்ந்தது.

"பலே பல்லவா! உனது கூரிய அறிவுத்திறன் யாருக்கு வரும்? போரில்லாமல் ஸ்வர்ணத்தைக் கைப்பற்றுவதற்கு ஒரு சிறந்த வழியைக் காட்டிவிட்டாய். நமக்கு உரிய அந்த நான்கு சுரங்கங்களில் உள்ள பொன்னைச் சேர்த்தாலும் உனது அறிவுத் திறனுக்கு ஈடாகாது. நீ சொன்னபடியே செய்கிறேன்" என்றவன் தனது காவல் படை தலைவன் கள்ளன் அமுதனை நோக்கினான்.

"அமுதா! குதிரையில் அமர்ந்து இறுமாப்புடன் பேசும் இந்தக் குமாரனைக் கைது செய்து மரத்தில் கட்டிப்போடு. நமது பணிகள் முடியும் வரை இவன் நமக்குப் பிணைக் கைதி. இவனது தந்தை நமக்கு ஏதேனும் இடையூறை ஏற்படுத்தினால், அடுத்தகணம் இவனது தலை நிலத்தில் புரள வேண்டும்!" என்று கூறியதும்தான் தாமதம்..

மாரசிம்மன் தனது குதிரையின் விலாவினை உதைத்தான். குதிரை புயலெனப் புறப்பட்டது. ஆனால் அதனை எதிர்பார்த்தவன் போல், குழலழகன் பாய்ந்து தனது வலுவான கரங்களால் மாரசிம்மனின் காலைப் பிடித்து இழுக்க, தேஜரூபா குதிரையின் மீதிருந்து நழுவி நிலத்தில் விழுந்தான், மாரசிம்மன். அவன் மீது பாய்ந்து, அவனது இரு கைகளையும் தனது கையினில் சிறைப்படுத்தி மரம் ஒன்றின் கீழே அவனை நிறுத்தி மரத்தோடு சேர்த்து அவனைப் பிணைத்தான்.

"இதற்காக நீங்கள் மிகவும் வருத்தப்படப் போகிறீர்கள்!" - அலறினான் மாரசிம்மன்.

"நாங்கள் ஏன் வருத்தப்படப் போகிறோம்? ஸ்வர்ண சுரங்கங்களைத் திறக்கப் போகிறோம் என்னும் போது, யாருக்காவது வருத்தம் தோன்றுமா?" என்றபடி சிரித்தான், ஆதித்தன்.

"மாரசிம்மா! உணவு உண்பதற்காக மட்டுமே நீ வாயைத் திறக்க வேண்டும். மற்றபடி உனது குரல் எழும்பினால் உனது தலை நிலத்தில் உருளும்!"- பார்த்திபன் அவனை எச்சரிக்கை செய்ய, உடனே அவனது வாய் மூடிக்கொண்டது. ஆதித்த கரிகாலன் ஆவலுடன் பார்த்திபனை நோக்கினான்.

"அடுத்தது என்ன, பார்த்திபா?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"நான் கங்க சபைக்குச் சென்று மருளகங்கனை சந்தித்துவிட்டு, பாணப்பத்திரத்தையும் காட்டி, நாம் ஸ்வர்ண புதையலை எடுக்கப் போவதை அறிவித்துவிட்டு வருகிறேன். அவன் பிரச்னை ஏதும் செய்யமாட்டான் என்று நம்புகிறேன்" - என்று கூறிய பார்த்திபன் மார சிம்மனை நோக்கிச் சென்று அவனது கழுத்தில் அணிந் திருந்த சந்திரஹாரத்தை அறுத்துப் பிடுங்கினான். மார சிம்மனின் நாயின் கழுத்தில் அதைப் பொருத்தியவன் அந்த நாயை வாரி எடுத்துக்கொண்டு தனது குதிரையின் மீது தாவினான்.

"அந்த நாயை எதற்குச் சுமந்து செல்கிறாய், பார்த்திபா?" - வியப்புடன் கேட்டான் ஆதித்தன்.

"மாரசிம்மனின் ஹாரத்தை அணிந்திருக்கும் அவனது நாய், அவன் நம்மிடம் பிணையக் கைதியாக இருப்பதை மருளகங்கனுக்கு உணர்த்தும்!" என்றபடி கோலாகல நகரை நோக்கிப் பறந்தான், பார்த்திபன்.

**பா**ர்த்திபன் நீட்டிய பாணப்பத்திரத்தை வாங்கிப் பார்த்த மருளகங்கனின் முகம் இருண்டது.

"பிருத்விபதிக்கும், பராந்தகனுக்கும் ஏற்பட்ட உடன் படிக்கை அவர்களது மரணத்தோடு காலாவதியாகி விட்டது. அப்போதைய வசதிக்காக அளிக்கப்பட்ட உடன்படிக்கையை இப்போது செயல்படுத்த முடியுமா என்ன? தலைமுறைகள் மாறிவிட்டன. தலையெழுத்தும்

மாறிவிடும் அல்லவா? உங்களது உரிமையை நீங்கள் அப்போதே பெற்றிருக்க வேண்டும். இப்போது எனது ஆட்சியில் வந்து கேட்டால் எப்படி? நான் ஒருபொழுதும் இதற்கு உடன்படப் போவதில்லை!" - காட்டத்துடன் கூறியபடி பார்த்திபனின் முன்பாக ஓலையை வீசி எறிந்தான், மருளகங்கன்.

"உண்மை.. தலைமுறைகள் மாறும் போது தலைவிதியும் மாறிவிடும். உனது அடுத்த தலைமுறையின் தலைவிதி எங்கள் கையில்" என்றவன், வெளியேறிச் சென்று, மாரசிம்மனின் பிரிய நாயை எடுத்து வந்தான்.

"இதோ உங்கள் மகனின் பிரிய நாய். அவன் அணிந்திருக்கும் ஹாரம் அதன் கழுத்தில். உங்கள் மகன் எங்களது பிணைக்கைதி. நாங்கள் கூறியபடி நீங்கள் செய்தால், உங்கள் மகன் உயிருடன் திரும்புவான். இல்லையேல் அவனது தலை மண்ணில் உருளும்!"- பார்த்திபன் கூறியதும் அவனை மருட்சியுடன் நோக்கினான், மருளகங்கன்.

"இப்போதுதான் உங்கள் பெயருக்கேற்ற முக பாவத்தைக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது! பாணப் பத்திரத்தில் கூறியபடி சோழர்களுக்கு உரிய நான்கு சுரங்கங்களில் இருந்து அவர்கள் பொன்னை வெட்டி எடுத்துக் கொள்ளலாம். கங்க மன்னனாகிய எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று ஓலையில் தங்கள் இலச்சினை பதித்து எங்களுக்கு அளிக்க வேண்டும். எங்கள் பணிகள் முடிந்ததும், உங்கள் மகன் மாரசிம்மன் பத்திரமாக அனுப்பி வைக்கப்படுவான், தலையுடன்.." பார்த்திபன் கூறினான்.

அவனது குரலில் தொனித்த உறுதியைக் கண்டு நடுநடுங்கிப் போனான், மருளகங்கன்.

பார்த்திபன் கூறியது போன்று ஓலையில் வடித்து, தனது இலச்சினையைப் பதித்து அளிக்க, ஓலையுடன்

மீண்டும் ஸ்வர்ணமுகி காட்டிற்கு வந்த பார்த்திபன், ஆதித்தனிடம் அதனை நீட்டினான்.

ஓலையை வாசித்ததும், ஆதித்த கரிகாலன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

"பார்த்திபா! நீ அருகில் இருந்தால் நான் உலகையே வெல்வேன்!" என்று உணர்ச்சியுடன் கூறினான்.

அன்றே ஆற்றைக் கடந்து, எதிர்க்கரையில் இருந்த குன்றங்களில் ஏறினார்கள். நாள் முழுவதும் அந்த நான்கு குன்றங்களில் ஏறி இறங்கியதுதான் மிச்சம். ஸ்வர்ண சுரங்கங்கள் எதுவும் கண்களில் தட்டுப்படவேயில்லை. ஏமாற்றத்துடன் மீண்டும் எதிர்க்கரைக்குச் சென்று வீரர்கள் அமைத்திருந்த கூடாரத்தில் இரவை கழித்தனர், ஆதித்த கரிகாலனும், பார்த்திபனும்.

"கிடைக்காது! உங்களுக்கு ஸ்வர்ணம் கிடைக்காது. அநியாயமாக எங்கள் பொக்கிஷங்களைக் கொள்ளை யடிக்க முயலும் உங்கள் எண்ணம் ஈடேறாது. நீங்கள் தேடி அலைந்து திண்டாட வேண்டியதுதான்!"- நடுஇரவின் குளிர் தாங்காமல், மாரசிம்மன் அலறிக் கொண்டே இருந்தான்.

மறுநாள் காலையில் எழுந்ததும் ஆதித்த கரிகாலனுக்குக் கடும் பசி. "கனிகள் ஏதாவது கிடைக்குமா பாருங்கள்!" வீரர்களுக்கு உத்தரவிட்டான். வீரர்களும் அலைந்து திரிந்து பார்த்தனர். கனிகள் எதுவும் கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர். அனைவருக்கும் பசி அதிகரித்துக் கொண்டே சென்றது.

அப்போது மரத்தின் மீதிருந்து வானரம் ஒன்று இறங்கி வந்தது. பார்த்திபன் அதனையே நோட்டம்விடத் துவங்கினான்.

எச்சரிக்கையுடன் சுற்றுமுற்றும் பார்த்த அந்த வானரம், தனது கரத்தினால் அங்கிருந்த மண்குவியலைத் தோண்டியது. மரத்தின் கீழ் பள்ளம் ஒன்று தென்பட

அதன் உள்ளே கைவிட்டு, ஒரு பலாச்சுளையை எடுத்து வாயில் கவ்விக் கொண்டு மரத்தின் மீது வேகமாக ஏறிச்சென்று அமர்ந்து அந்தப் பலாக்கனியின் சுளையைத் தின்னத் துவங்கியது.

"வீரர்களே, இந்த மரம் வேர்ப் பலா வகையைச் சேர்ந்தது. இதன் கனிகள் நிலத்தில் மறைந்திருக்கும். மண்மூடிப் போனதால் நமக்குக் கண்களில் புலப்பட வில்லை. மரத்தைச் சுற்றித் தோண்டி கனிகளை வெளியே எடுங்கள்!" - பார்த்திபன் கூற, வீரர்கள் அந்த மரத்தைச் சுற்றித் தோண்டினர்.

ஐந்தாறு கனிகள் கண்களில் தென்பட அவற்றைச் சேகரித்து ஆற்று நீரில் கழுவி வெட்டி, அனைவருக்கும் பகிர்ந்து அளித்தனர். கனிகள் மிகவும் சுவையாக இருந்தன. ஆதித்த கரிகாலன் மிகவும் திருப்தியுடன் ருசித்து உண்டான்.

"பார்த்திபா! கேட்டதைக் கொடுப்பவன் நீ! சிந்தைக்கு யோசனைகளையும் அளித்துச் சிந்தை பசியையும் தீர்க்கிறாய். வயிற்றுக்குக் கனிகளையும் அளித்துப் பசிப்பிணியையும் தீர்க்கிறாய். உன்னை நண்பனாக அடைந்தது நான் செய்த பேறு!" - பார்த்திபனிடம் ஆதித்த கரிகாலன் கூறினான்.

"உனது நன்றியை அதோ அந்த வானரத்திற்குக் கூறு. அதுதான் வேர்ப்பலா இருக்கும் இடத்தை எனக்கு உணர்த்தியது!" பார்த்திபன் நகைத்தான்.

"வானரமே! வேர்ப்பலா இருக்கும் இடத்தை உணர்த்தி எங்களது பசியைத் தீர்த்தது போன்று, ஸ்வர்ண சுரங்கங்கள் இருக்கும் இடத்தையும் எங்களுக்குக் காட்டக்கூடாதா?" - ஆதித்த கரிகாலன் கூற, அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

"நாம் கீழே இருப்பதால் அண்ணாந்து பார்க்கிறோம். வானரம் மேலே இருந்து கீழே பார்க்கிறது. நாமும்

வானரங்களைப் போன்று மரங்களின் மீது அமர்ந்து பார்த்திருந்தால், நமது கண்களுக்கு வேர்ப்பலா கனிகள் புலப்பட்டிருக்கும்" - நேமியங்கையர் நகைச்சுவையாகத் தான் கூறினார். ஆதித்த கரிகாலனும் மற்றவர்களும் சிரிக்கத் துவங்கினர்.

ஆனால், பார்த்திபனுக்கு சிரிப்பு வரவில்லை. நேமியங்கையர் கூறியது அவனுள் ஏதோ ஒரு பொறியை உண்டாக்கி இருந்தது. மரத்தின் மேலே கனி இருக்குமா என்று இவர்கள் தேட, நிலத்தின் அடியே மறைந்திருந்த கனிகளை வானரம் உணர்த்தியது. அதுபோன்று ஸ்வர்ண சுரங்கங்களைக் குன்றங்களின் மீதே தேடாமல் அவற்றின் அடிவாரங்களில் தேடினால் என்ன?

எழுந்து சென்று ஸ்வர்ணமுகி ஆற்றின் அக்கரையைக் கவனித்தான். அங்கே வரிசையாக நின்ற ஐந்தாறு குன்றங்களின் அடிப்பகுதிகளும் ஆற்றில் மூழ்கி இருந்தன. மரத்தின் அடியில் வேர்ப்பலா சிக்கியது போன்று, ஸ்வர்ண சுரங்கங்கள் ஆற்றில் மூழ்கி இருக்கும் குன்றங்களின் அடிப்பகுதியில் இருக்குமோ?

"ஆதித்தா!" - ஆற்றின் கரையில் நின்றபடி அழைத்ததும், சிரித்துக் கொண்டிருந்த ஆதித்த கரிகாலன் வியப்புடன் அவனைத் திரும்பி நோக்கினான்.

"அனைவரும் இங்கே வாருங்கள்!" - பார்த்திபன் பரபரப்புடன் கூற, அனைவரும் ஓடி வந்து அவன் பின்பாகத் திரண்டனர்.

"மரத்தின் அடியில் வேர்ப்பலா கிடைத்தது போன்று, குன்றத்தின் அடியில் ஸ்வர்ண சுரங்கங்கள் கிடைக்கக் கூடும். நாளை நாம் தேடிப் பார்ப்போம்!" - பார்த்திபன் கூறியதும், ஆதித்த கரிகாலனின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"பலே பார்த்திபா! உனது ஐயம் நியாயம்தான். அங்கே சுரங்கங்கள் இருக்கக் கூடும். ஆற்று வெள்ளத்தால் சுரங்கங்கள் நீரின் அடியில் மறைந்திருக்கக் கூடும். நாளை

சூரியோதயத்தில் தேடிப் பார்க்கலாம்." - ஆதித்தன் கூறினான்.

அனைவரும் அந்த அடவியில் ஆங்காங்கே படுத்துக் கொண்டனர். மேலே அடர்ந்திருந்த மரங்களின் ஊடே தென்பட்ட விண்மீன்களை நோட்டம் விட்டபடி கிடந்தனர், ஆதித்த கரிகாலனும், பார்த்திபனும். அந்த இரவின் அமைதியில், காட்டுப்பூச்சிகளின் முணுமுணுப்பைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது-

அவர்களது செவியில் திடீரென காற்றில் ஒலித்த மணியோசை கேட்டது. வியப்புடன் எழுந்து அமர்ந்தான், ஆதித்த கரிகாலன்.

"அருகே ஆலயம் ஏதாவது இருக்கிறதா?"

"சிறிது தொலைவில் தலக்காடு பாடலீஸ்வரர் என்கிற சிவாலயம் உள்ளது. அதன் கோயில் மணியோசைதான் கேட்கிறது." - நேமியங்கையர் கூறினார்.

"நானும் பார்த்திபனும் அங்கே சென்று தரிசித்துவிட்டு வருகிறோம்." எழுந்து கொண்டான், ஆதித்த கரிகாலன்.

"இன்று சிவாலயங்களில் அபிஷேகம் நடைபெறும்!"- நேமியங்கையர் கூறினார்.

"இந்த நடுநிசியிலா?" - வியப்புடன் எழுந்து அமர்ந்தான், பார்த்திபன்.

"விடியலில் நாரணன், பகலினில் பிரம்மன், மாலையில் துர்கை, இரவில் சிவன் என்றுதானே, அந்தந்த தெய்வங்களுக்கு காலம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிவனைத் தொழும் நேரம்தான். வா போகலாம்." - ஆதித்த கரிகாலன் கூறினான்.

"ஆலயம் திறந்திருக்குமா?" - ஐயத்தை எழுப்பினான், பார்த்திபன்.

"திறந்திருக்காமலா ஆலயமணி ஒலிக்கிறது?" என்ற ஆதித்தன், காவலர்களை நோக்கினான்.

"ஆலயத்திற்குச் செல்லும் வழி யாருக்கேனும் தெரியுமா?" - ஆதித்தன் கேட்க, ஒரு குதிரை வீரன் கையை உயர்த்தினான்.

"வா பார்த்திபா!" அந்தக் குதிரை வீரனைத் தொடர்ந்து இருவரும் புறப்பட்டனர்.

ஆலயத்தில் அபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இருவரும் பயபக்தியுடன் ஈசனைத் தொழுதனர்.

"நாளை அன்னாபிஷேகம். எனவே நாள் தொடக்கத்தின் போது ஒரு அபிஷேகம் நடைபெறும். நாளை நடுநிசியில் மீண்டும் அபிஷேகம் செய்யப்படும்"- அர்ச்சகர் விளக்கினார். இருவருக்கும் பிரசாதங்களை வழங்கிய போது, "நீங்கள் தேடும் அனைத்தும் உங்களுக்கு விரைவில் கிட்டும்" என்று ஆசீர்வாதம் செய்தார், அர்ச்சகர்.

ஆலய தரிசனம் முடிந்து வரும் போது, ஆதித்த கரிகாலன் வியப்புடன் கூறினான்.

"என்ன ஆச்சர்யம்? நான் ஸ்வர்ண சுரங்கங்கள் கிட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருந்தபோது, 'நீங்கள் தேடுவது கிடைக்கட்டும்' என்று அந்த அர்ச்சகர் ஆசி கூறினார். மனதுக்கு நிறைவாக இருந்தது. நீ என்ன வேண்டிக் கொண்டிருந்தாய், பார்த்திபா?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

அந்த தருணத்தில், 'ஈசனே! அத்திமலையான் மீண்டும் தனது ஆலயத்திற்குத் திரும்ப வேண்டும்' என்று வேண்டிக் கொண்டிருந்தான், பார்த்திபன்.

"நானும் ஸ்வர்ணம் கிடைக்க வேண்டும் என்றுதானே வேண்டிக் கொண்டிருந்தேன்!" என்று கூறி சமாளித்தான் பார்த்திபன்.

*மீண்டும் தாங்கள் தங்கியிருந்த ஸ்வர்ணமுகி ஆற்றின் கரைக்குச் சென்ற போது, நேமியங்கையர் விழித்திருந்தார். "தரிசனம் ஆனதா, இளவரசே?" - நேமியங்கையர் கேட்டார்.*

*"ஆஹா! அற்புதமான தரிசனம். இன்று அன்னா பிஷேகம் என்பதால் நள்ளிரவு அபிஷேகம் நடந்தது. அதைக் கண்குளிர தரிசித்தோம்!" என்றபடி பிரசாதங் களை அவருக்கும் வழங்கிவிட்டு, நண்பர்கள் இருவரும் படுத்துக் கொண்டார்கள். அப்படியே உறங்கியும் போனார்கள்.*

*மறுநாள்-*

*சூரியன் உதித்ததும் சுரங்கங்களைத் தேடும் படலம் துவங்கியது. ஆழ்நீச்சல் கற்றிருந்த வீரர்கள் ஸ்வர்ணமுகி ஆற்றின் அடியே நீந்திச் சென்றனர். ஏராளமான பாறைகள் நீரின் அடியில் மூழ்கியிருந்தன. இரட்டைக் குத்துவிளக்குகள் வடிக்கப்பட்டிருந்த நான்கு குன்றங்கள் அடியில் அவர்கள் தேடத்துவங்கினர். பிரம்மாண்டமான பாறை ஒன்றை வீரர்கள் அனைவரும் போராடித் தள்ள, குன்றத்தின் உள்ளே சுரங்கம் ஒன்று தென்பட்டது. சிறிது தொலைவு சுரங்கத்தில் இருந்த நீரில் நீந்திச் சென்றதும், சுரங்கத்தின் பாதை உயரத் தொடங்கியது. சுளுந்து ஒன்றைக் கொளுத்தி, அந்தப் பாதையில் ஆதித்தனும், பார்த்திபனும் மற்றவர்களும் நடக்க, ஒரு குறிப்பிட்ட இடத்தில் சுளுந்தின் ஒளியில் பொற்படிமங்கள் இருபுறமும் தகதகக்கத் துவங்கின. உயரே செல்லச் செல்ல, ஸ்வர்ண படிமம் ஏராளமாகக் காணப்பட்டது.**

---

* 'தங்கச் சுரங்கம்- தங்கம் பெரும்பாலும் நிலத்தடியில் தனி நிலையிலேயே ரேகை போலப் பாறைகளில் படர்ந்திருக்கும். தங்கம், சுரங்கங்கள் மூலம் தோண்டி எடுக்கப்படுகிறது. தற்போது பாறைகளில் வெடி வைத்துத் தகர்த்துத் தங்கத்தை இரசாயன (வேதியியல்) முறையில் பிரித்தெடுக்கிறார்கள். அதன்பின் மின்பகுப்பு முறையில் சுத்தம் செய்யப்படுகிறது. இந்தியாவில் கர்நாடகா மாநிலத்தில் கோலாகல நகரம் என்கிற கோலார் என்னுமிடத்திலும் தங்கம் கிடைக்கிறது.

ஆதித்த கரிகாலனின் முகம் சுளுந்தின் ஒளியில் பிரகாசமாக மாறுவதைக் கவனித்தான், பார்த்திபன்.

"இந்த ஒரு சுரங்கத்திலேயே இவ்வளவு பொன் கொட்டிக் கிடக்கிறது என்றால் மொத்தம் நான்கு சுரங்கங்கள் அல்லவா உள்ளது. பார்த்திபா! எல்லாச் சுரங்கங்களில் இருக்கும் ஸ்வர்ணத்தையும் வழித்து எடுத்து காஞ்சிக்கு எடுத்துச் செல்ல வேண்டும். பழை யாறையைச் சேர்ந்த கட்டட வல்லுநன் செங்கம்பாடி சிந்தூரனை உடனே பொன்னாழி பணிகளைத் துவக்கச் சொல்ல வேண்டும். காஞ்சியில் நான் எழுப்பும் பொன்னாழி மாளிகை தஞ்சை அரண்மனையைக் காட்டிலும் பெருமை வாய்ந்ததாக இருக்க வேண்டும்."- ஆதித்த கரிகாலன் உணர்ச்சி வசப்பட்டுக் குரலை எழுப்ப, சுரங்கத்தின் பொன் படிமங்கள் படிந்திருந்த சுவர்களில் மோதி அவனது குரல் எதிரொலித்தது.

ஸ்வர்ணமுகி கரையில் இருந்த அந்தக் குன்றங்களின் சுரங்கங்களில் இருந்து ஆதித்த கரிகாலன் பொன்கட்டி கள்ளைச் சேகரித்து ஒத்தாடை அரண்மனையில் பத்திரப் படுத்தினான். இனி வெட்டி எடுப்பதற்கு ஸ்வர்ணம் இல்லை என்பது தெரிந்த பிறகே மாரசிம்மனை விடுதலை செய்தான். ஸ்வர்ணம் போனால் என்ன, எனது மகன் உயிர் பிழைத்ததே போதும் என்று மருளகங்கன் நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.

நேமியங்கையர் குறித்த நன்னாளில், தரைமட்ட மாக்கப்பட்ட பிரவாள மாளிகை இருந்த இடத்தில் பொன்னாழி என்கிற பொன் மாளிகைக்குக் கடைக்கால் போடும் பணிகளைத் துவங்கினான், பழையாறையின் செங்கம்பாடி சிந்தூரன். நவரத்தினக் கற்களின் தரத்தை சோதித்துப் பார்க்கும் வல்லுநர், கோதண்டராயர்

இலங்கையிலுள்ள பூகொடை என்னுமிடத்தில் களனி ஆற்றுப் பகுதியில் ஆற்றுமண் படிவுகளில் தங்கம் அண்மை காலமாகப் பெறப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

ஸ்வர்ணமுகி காட்டுச் சுரங்கங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட பொன்னை சோதித்தார்.

"அற்புதமான பொன். அத்தனையும் ஆபரண ஸ்வர்ணம்!" - ராயர் கூற, ஆதித்த கரிகாலன் அவரை புன்னகையுடன் பார்த்தான்.

"ஆம் ராயரே! காஞ்சி அன்னைக்குப் பொன்னாழி என்கிற ஒரு பொன் ஆபரணத்தை அணிவிக்கப் போகிறேன். முழுவதும் ஸ்வர்ணத்தினால் அந்த மாளிகை எழுப்பப்பட உள்ளது!" என்றதும் கோதண்டராயர் பிரம்மிப்பினால் வாய் பிளந்தார்.

பொன்னாழி மாளிகையை எழுப்பும் பணிகள் தொடங்கின. இறுதிவரை பிரவாள மாளிகையில் மல்லதியால் பதுக்கப்பட்ட அத்திமலையானின் பிரதிமையை எங்கே மறைத்து வைத்திருக்கிறேன் என்று கூறாமல் இருந்த ஆதித்த கரிகாலனின் நெஞ்சழுத் தத்தைக் கண்டு மனதினுள் பொருமிக் கொண்டிருந்தான் பார்த்திபன். தந்தை தருமவர்மன் கூறியது போன்று, ஆதித்த கரிகாலன் காஞ்சிக்கு வந்ததே, பொக்கிஷங் களைக் கைப்பற்றத்தான் என்று எண்ணினான். கல்பலதா கூறியது போன்று, இவன் ஆதித்த கரிகாலனுடன் நட்பு பாராட்டுவது சரிதானா என்கிற எண்ணம் முதன் முறையாகத் தோன்றியது. எது எப்படி இருந்தாலும், கல்பலதாவை ஆதித்த கரிகாலனின் முன்பாக நடமாடவிடக் கூடாது என்று தனக்குள் முடிவு செய்தான், பார்த்திபன்.

## 9. செல்வத்துள் எல்லாம் தலை

பழையாறை அரண்மனை கஜானா அதிகாரி கதிராமங்கலன் தனது பணிகளை முடித்துவிட்டு, தனது ஜாகைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். சோழ மாளிகையிலிருந்து நந்திபுரம் செல்ல வேண்டும். நந்திபுரத்தில்தான் அவனது ஜாகை இருந்தது. அவனது தந்தை பழையாறை கஜானா அதிகாரியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருந்ததால், அவரது நன்னடத்தையைக் கருத்தில் கொண்டு, அவரது மகன் கதிராமங்கலனுக்கு கஜானா அதிகாரி பதவி வழங்கப்பட்டிருந்தது. பொதுவாகவே, இளவயதில் கஜானா அதிகாரி பதவி கிட்டுவது துர்லபம். வாலிபர்களுக்கு ஆசை அதிகம். அவர்களுக்கு ஆசை இல்லையென்றாலும், காதலிகள் அவர்களது ஆசைகளைத் தூண்டுவார்கள். எனவே, வயதானவர்களையே கஜானா அதிகாரிகளாக நியமிப்பார்கள். ஆனால் கதிராமங்கலன் மட்டும் விதிவிலக்கு. இப்போதுதான் அவனுக்குத் திருமணமே பேசி வந்தார்கள். கஜானா அதிகாரி என்பதால் உறவினர்களிடையே அவனுக்குப் பெண் தருவதற்குப் போட்டியே நிலவியது. கஜானா அதிகாரி என்கிற பதவிக்கே அவனுக்குப் பெண் கொடுக்கப் போட்டியைப் போடுகிறார்களே. ஆதித்த கரிகாலனுடன் கஜானாவின் நிலவறைக்குச் சென்று அவனுக்கு உக்ரோதயம், பாணபத்திரம் மற்றும் உத்தமசீலனின் வாள் ஆகிய பொக்கிஷங்களைக் கொடுத்த போது, அகமகிழ்ந்து ஆதித்த கரிகாலன் இவனிடம் கூறியதை அறிந்தால், இவனுக்குப் பெண் கொடுக்கத் துடிப்பவர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள்.

"கதிராமங்கலா! உன் போன்ற இளம் அதிகாரிகள்தான் எனக்குத் தேவை. நான் மன்னனாக மாறியதும், பழுவேட்டரையருக்கு உதவியாளனாக உன்னை நியமிக்கிறேன். எனது நெருங்கிய வட்டத்தில் உனக்கு என்றும் ஒரு இடம் உண்டு!" என்றெல்லாம் கூறி இவனை உற்சாகப்படுத்தி இருந்தானே.

கஜானா அறை காவலர்களைக் கண்களாலேயே எச்சரிக்கை செய்துவிட்டு, நந்திப்புரத்தை நோக்கி நடக்கத் துவங்கினான். இவனது தந்தை கஜானா அதிகாரியாக இருந்த போது மாட்டுவண்டியில்தான் பயணிப்பார். இவன் அந்தப் பதவிக்கு வந்தவுடன், அரண்மனைக் குதிரை ஒன்றை அளித்தார்கள். ஆனால் தந்தையைப் போன்று நல்ல பெயரை வாங்கி அனைவரையும் கவர வேண்டும் என்பதற்காக அரண்மனைப் பணிகளுக்கு மட்டும் குதிரையைப் பயன்படுத்தினான். அரண் மனைக்கு வரும் போதும், மீண்டும் இல்லம் செல்லும் போதும் நடந்துதான் செல்வான் கதிராமங்கலன்.

இரவு படர்ந்துவிட்டது. இங்கும் அங்குமாக மினுக் மினுக் என்று தீபங்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. கம்பீர வானத்தின் கரிய சேலையில் வைரங்களாக விண்மீன்கள் ஜொலிக்க, ஏழை பூமியின் கரிய சேலையில் இங்கும் அங்குமாகத் தீபப் பூக்கள் ஒளிர்ந்தன. பழையாறை அரண்மனையில் இருந்து வெளியேறி சோமேஸ்வரர் ஆலயத்தை நோக்கி நடந்தான். மறுநாள் அன்னா பிஷேகம் என்பதால் ஆலயத்தில் நள்ளிரவு அபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் ஆலயம் திறந்துதான் இருந்தது. சோமேஸ்வரர் ஆலயத்தின் இடப்புறம் திரும்பி, காட்டு வழியே நடந்தால், நந்திப்புர ஜகந்நாதர் ஆலயம் வரும். அந்த ஆலயத்தின் பின்பாக உள்ள வீதியில் இவனது இல்லம் உள்ளது. சோமேஸ்வரர் ஆலயத்தின் கோபுரம் கண்ணில் பட்டது கோபுரத்தின் உச்சியில் ஒளிர்ந்த தீபக்கப்பரையை நோட்டம் விட்டபடி

நடந்து கொண்டிருந்தவன், திடீரென்று எதன் மீதோ மோதினான். எதன் மீதோ அல்ல.. யார் மீதோ!

"மன்னித்துக் கொள்ளுங்கள். இருளில் கண் தெரியவில்லை" என்று சொன்ன போது சட்டென்று இரண்டு கைகள் அவனது குரல் வளையைப் பிடிக்க, திடுக்கிட்டான். அவனால் பேச முடியாமல், அவன் கழுத்தைப் பிடித்த கைகள் தனது பிடியை இறுக்க, கண்கள் பிதுங்க சுவாசத்திற்குத் திணறினான், கதிரா மங்கலன். அப்போது அவனது செவியின் அருகில் ஒரு குரல் கிசுகிசுப்பதை உணர்ந்தான்.

"எனது கேள்விகளுக்குப் பதில் கூறினால், உயிர் பிழைப்பாய். இளவரசர் ஆதித்த கரிகாலனுடன் கஜானாவின் நிலவறைக்குச் சென்றாய் அல்லவா? அவர் அங்கிருந்து என்னென்ன பொருள்களை எடுத்துக் கொண்டார். ம்ம்.. சொல்!" என்று அந்தக் குரல் கேட்டது.

கதிராமங்கலன் பதில் கூறுவதற்கு வசதியாக அந்த உருவம் தனது பிடியைத் தளர்த்தினாலும், அந்தக் கேள்வி கதிராவின் பீதியை அதிகரித்து அவனது கண்களை இன்னும் அதிகமாகப் பிதுங்க வைத்தது.

"இரகசியத்தைக் காப்பாற்றுகிறேன் என்று இளவரசருக்குச் சத்தியம் செய்திருக்கிறேன்!"- கதிராமங்கலனின் குரல் திக்கியது.

"இரகசியத்தை நீ காப்பாற்று. ஆனால் உன்னைக் காப்பாற்ற ஆதித்த கரிகாலன் இங்கே வரமாட்டார்."- மீண்டும் தனது பிடியை இறுக்கிய அந்த உருவம் தனது கூரிய நகங்களை அவனது கழுத்தில் இறக்கியது. வலியால் துடித்த கதிராமங்கலன், இரகசியத்தைக் காட்டிலும் தனது உயிர்தான் முக்கியம் என்பதை உணர்ந்தவனாகத் தலையை அசைத்தான்.

"உண்மையைச் சொல்லிவிடுகிறேன். ஆதித்த கரிகாலர், பல்லவர்களின் பொக்கிஷமான உக்ரோதயம், கங்க மன்னன் பிருத்விபதி பராந்தகருக்கு அளித்த பாண பத்திரம் மற்றும் பராந்தகரின் இளைய மகன் உத்தம சீலனின் வாள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டார். நான்தான் அவற்றை அவருக்கு அளித்தேன்!" என்று கூறி கெஞ்சும் விழிகளால் அந்த உருவத்தை நோக்கினான்.

காரிருளில் கரிய போர்வையை அணிந்து தன்னை மறைத்துக் கொண்டிருந்த அந்த உருவத்தை அவனால் காண முடியவில்லை. உண்மையைக் கூறியதும், அந்த உருவத்தின் பிடி தளர, 'அப்பாடா! உயிர் பிழைத்தோம்!' என்கிற நிம்மதியில் கதிராமங்கலன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்த வேளை..

திடீரென்று மீண்டும் அவன் கழுத்தை ஒரு கரம் சுற்றி வளைத்தது. "இதுநாள்வரை இரகசியத்தைக் காத்தது போன்று தொடர்ந்து காப்பாற்று!" என்று மீண்டும் கிசுகிசுத்த அந்தக் குரல், குத்துவாளால் அவனது நெஞ்சைப் பதம் பார்த்தது.

அலறக்கூட முடியாமல் நிலத்தில் சரிந்தாலும், அந்த இரவின் நிசப்தத்தில், அவனது உடல் நிலத்தில் மோதிய ஒலி பெரிதாகக் கேட்டது. இருளின் ஊடே ஓர் உருவம் அசைந்தாடி நடந்து செல்வது கடைசியாகக் கதிராவின் கண்களுக்குப் புலப்பட்டது. அந்த உருவம் இருளில் நடந்து செல்வது அமானுஷ்யமாகத் தோன்றியது. அதன்பின் கண்களை மூடிக்கொண்டான். இனி அவனது உறவினர்களிடையே அவனுக்குப் பெண் கொடுப்பதற்குப் போட்டி எழாது.

★ ★ ★

குந்தவையின் அந்தப்புரத்தை ஒட்டிய மாமரம் ஒன்றில் அமர்ந்திருந்தான் அமானுஷ்யன். உப்பரிகையில் நின்றபடி அவன் கூறுவதைச் செவிமடுத்துக் கொண்டிருந்தாள், குந்தவை.

"நீங்கள் எதிர்பார்த்தது போன்று, பழையாறை கஜானாவில் காணாமல் போன உக்ரோதயம், பாண பத்திரம் மற்றும் உத்தமசீலனின் வாள் ஆகியவை ஆதித்த கரிகாலன் வசம்தான் உள்ளன. அவற்றை எடுத்துக் கொடுத்த கதிராமங்கலன் சற்று முன்பாகத்தான் உண்மைகளைக் கூறிவிட்டு, பரலோகத்திற்குப் புறப்பட்டுச் சென்றான். பழையாறை கஜானாவில் இருந்து எடுத்துச் சென்ற பாணப்பத்திரத்தைக் கொண்டு, ஸ்வர்ணமுகி காடுகளில், சோழர்களுக்கு உரிமையான சுரங்கங்களில் இருந்து பொன்னை எடுத்துக் கொண்டான், ஆதித்த கரிகாலன். ஸ்வர்ணத்தை மீட்பதில் பார்த்திப பல்லவன் அவனுக்குப் பேருதவியாக இருந்தான். நான்கு சுரங்கங்கள் ஸ்வர்ணம் ஒத்தாடை அரண்மனையில் வைக்கப்பட்டிருக்கிறது. பிரவாள மாளிகை நின்ற இடத்தில் தனது கனவு மாளிகையை எழுப்புகிறான், ஆதித்த கரிகாலன். அந்த மாளிகைக்குப் பொன்னாழி என்று பெயரிடப்பட்டிருக்கிறது"- அமானுஷ்யன் கூற, குறுக்கிடாமல் அவன் கூறும் தகவல்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள், குந்தவை.

"மாளிகைக்குப் பெயரே வைத்துவிட்டானா?"- தனக்குள் முணுமுணுத்த குந்தவை, மாமரத்தில் மறைவாக அமர்ந்திருந்த அமானுஷ்யனின் குரல் ஒலித்த திக்கினை நோக்காமல், காய்த்துக் குலுங்கியிருந்த மாங்காய்களை வெறித்தபடி பேசினாள்.

"அமானுஷ்யரே! போதும் இனி உளவு பார்த்தது. செயலில் இறங்கும் வேளை நெருங்கிவிட்டது!" - குந்தவை கூறியதும் அங்கே மௌனம் நிலவியது. பிறகு அமானுஷ்யனின் கரகரப்பான குரல் மீண்டும் ஒலித்தது.

"இளவரசி! செயலில் இறங்க வேண்டுமென்றால், எனக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும். அங்கீகாரம் இல்லாமல் என்னால் சில காரியங்களை நிறைவேற்ற முடியாது!" என்றவுடன் உப்பரிகையின்

கைப்பிடி சுவரின் அருகே நின்றிருந்த குந்தவை திரும்பி நோக்கினாள். உப்பரிகையின் மறுகோடியில் தெட்டக்கனி பவழமல்லிகைகளைத் தனது சேலை முந்தானையில் சேகரித்துக் கொண்டிருந்தாள்.

"அங்கீகாரம் கிடைக்கும், அமானுஷ்யரே! நீங்கள் கேட்டவுடன் நான் கொடுக்க முடியாது. அதற்கான காலம், வேளை எல்லாம் வரும் போது நீங்கள் கேட்பது கிடைக்கும்! இப்போதைக்கு அமானுஷ்யமாக இருந்தது போதும். மானுஷ்யமாக மாறவும்!" என்றவள் அமானுஷ்யத்தின் பதிலுக்குக் காத்திராமல், தெட்டக்கனியை நோக்கி நடந்தாள்.

"தெட்டக்கனி! பழையாறை பவழமல்லிகையைப் பறித்தது போதும். தஞ்சைக்குச் சென்று மிகுதி பவழ மல்லிகையைப் பறித்துக் கொள்" என்றவுடன் அவளை வியப்புடன் நோக்கினாள், தெட்டக்கனி.

"இப்போதுதானே தஞ்சைக்குச் சென்று வந்தோம். மீண்டும் தஞ்சைக்குப் பயணமா?" - தெட்டக்கனி தான் சேகரித்திருந்த பவழமல்லிகையை மூட்டையாகக் கட்டினாள்.

"நடப்பது என்ன என்பதை அறிவதற்காக தஞ்சைக்குச் சென்றோம். நடப்பது என்ன என்பதை அறிந்து கொண்டபின் அதனைத் தடுப்பதற்காக இப்போது தஞ்சைக்குச் செல்கிறோம்!" - குந்தவை கூறினாள்.

"தஞ்சைக்கு அவசியம் செல்ல வேண்டுமா, இளவரசி? இன்று பழையாறை சோமேஸ்வரர் ஆலயத்தில் அன்னா பிஷேகம் வைபவத்தை நீங்கள்தானே முன்னின்று நடத்துகிறீர்கள்?" - தெட்டக்கனி நினைவுபடுத்தினாள்.

"அரசகுடும்பத்து பெண்களுக்கு வேறு பணிகள் இல்லாததால் ஆலயப்பணிகளில் ஈடுபடுகிறார்கள். எனக்கு வேறு நிறையப் பணிகள் இருப்பதால் அன்னாபிஷேகத்திற்கு நான் இல்லையென்றால்

பரவாயில்லை. நாம் தஞ்சைக்குப் போகிறோம்!" - குந்தவை கூறியதும், தெட்டக்கனி மெல்லிய குரலில் சிரித்தாள்.

"இதற்குத் தாங்கள் தஞ்சை அரண்மனையிலேயே வசிக்கலாம். எதற்காகப் பழையாறையில் தங்கிக் கொண்டு தஞ்சைக்கு அடிக்கடி பயணம் செய்ய வேண்டும்?"

"உனக்கு இதெல்லாம் புரியாது, தெட்டக்கனி. அரசியல் முக்கியத்துவம் இல்லாதவர்கள் கூட, காரணமின்றி தலைநகரத்திற்குப் பயணம் செய்வார்கள். பணிகளே இல்லையென்றாலும், அம்மாதிரி அவர்கள் பயணம் மேற் கொள்ளும் போது, ஏதோ முக்கிய அரசியல் நிகழ்வுக்காக அவர்கள் அம்மாதிரி பயணத்தை மேற்கொள்வதாக அனைவரும் எண்ணுவார்கள். தலைநகரம் சென்று அரண்மனையின் உள்ளே கூட நுழையாமல், 'அரண்மனையில் விருந்து உண்டேன். அருந்திவிட்டு, மன்னரை நான் சந்தித்தேன், அவருடன் ஆலோசித்தேன்' என்று கட்டுக்கதைகளை அவிழ்த்துவிடுவார்கள். ஆனால், எனது தஞ்சைப் பயணம் மட்டும் எப்போதும் விசேடமாகத்தான் இருக்கும். நான் தஞ்சைக்குப் பயணம் செய்தால், அரசியலில் பெரும் மாற்றம் வரும் என்பது பொருள்." - குந்தவை பவழமல்லிப் பந்தலின் கீழ் நின்று அண்ணாந்து பார்த்தாள். பிறகு கையை உயர்த்தி ஒரு பவழமல்லியைக் கையில் எடுத்தாள்.

தெட்டக்கனி அவளை பிரம்மிப்புடன் பார்த்தாள். "இளவரசி! மாற்றம் ஏதேனும் வருகிறதா என்ன?"

தெட்டக்கனியை அர்த்தத்துடன் நோக்கினாள், குந்தவை. "தெட்டக்கனி, அரசியல் என்பது இப்போது நீ பறித்த பவழமல்லியைப் போன்றதுதான். மலர் வெண்மையாக இருந்தாலும் அடியில் உள்ள அதன் காம்பு காஷாய வண்ணத்தில் உள்ளது. அது போலத் தான் மேலே புலப்படும் அரசியல் நிகழ்வுகள் பதவிகளில்

அமர்ந்திருப்பவர்களால் தீர்மானிக்கப்படுவது போன்று தோற்றமளித்தாலும், அடியில் என்னைப் போன்ற சில சூத்திரதாரிகள் அதனை இயக்குகின்றனர். தொடர்ந்து கேள்விகளைக் கேட்காதே. பதில் சொல்லும் நிலையில் நான் இல்லை. நமது பயணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்துவிடு. விடியலில் புறப்படுகிறோம்" என்றாள் குந்தவை.

★ ★ ★

**தாதி** தங்கத் தட்டில் கொணர்ந்த பழரசக் குவளை களைக் கையில் எடுத்த வானவன்மாதேவி பழுவேட்டரையருக்கும், அநிருத்த பிரம்மராயருக்கும் அளிக்க, அநிருத்தர் அதைக் கையில் வாங்கினார்.

"மன்னருக்குக் கிடையாதா?" - அநிருத்தர் கேட்டார்.

"இப்போதுதான் அருமை மகளுடன் பேசியபடி பழரசம் அருந்தினார்" - வானவன்மாதேவி கூறினாள்.

"ஒரே சமயத்தில் இரண்டு இனிப்பான பொருளை மன்னர் எங்ஙனம் ஏற்றார்! மகளுடன் அளவளாவுவது என்பது பழரசத்தைக் காட்டிலும் அவருக்கு இனிக்குமே!" - பழுவேட்டரையர் சிரித்தபடி முக்கனிச் சாற்றை அருந்தத் துவங்கினார்.

"மன்னருக்கு முக்கனிகள் இருந்தாலும், என்னதான் பழையாறை பலாவாக நான் இனிப்பை வாரி வழங்கினாலும், வாழையடி வாழையாக சோழத்தை வாழ வைக்கப் போகும் அண்ணனைக் கண்டால் போதும், பலாவை ஒதுக்கிவிடுவார்!" - கேலியாகப் பேசியபடி குந்தவை அங்கே பிரசன்னமானாள்.

"பழையாறையில் இருந்து எப்போது வந்தீர்கள் இளவரசி?" - அநிருத்தர் கேட்டார்.

"குந்தவையை யார் என்று நினைத்தீர்கள் அநிருத்தரே? அவள் சர்வ வியாபி. தூணிலும் இருப்பாள். துரும்பிலும்

இருப்பாள்." - பழுவேட்டரையர் கூற, சுந்தர சோழரும், வானவன்மாதேவியும் சிரித்தனர்.

"உண்மைதான் பழுவூர் அரசரே! சோழம் வலுவாக நிற்பதற்கு நானும் ஒரு தூணாக இருப்பவள்தான். ஆனால் அதே சமயம் என்னைத் துரும்பாக எண்ணிச் செயலாற்றுபவர்களின் திரை மறைவு வேலைகளை அனுமதிக்காதவள்." - குந்தவை கூற, உதட்டில் பதித்திருந்த பழரசக் குவளையை நீக்கிவிட்டு அவளைக் கேள்வியுடன் நோக்கினார், பழுவேட்டரையர்.

"வழக்கமாகப் பழரசத்தில் நான் மிளகுப்பொடியை தூவிதான் அருந்துவது வழக்கம். இந்தப் பழரசத்தைத் தயாரித்த பரிச்சாரகனுக்கு* இந்த விவரம் தெரியாது போலும். ஆனால், பழரசத்தில் மிளகுப்பொடி இல்லாத குறைக்கு, குந்தவை பொடியை நன்றாகவே தூவுகிறாள்" என்று சிரித்தார்.

"நான் பொடி ஒன்றையும் தூவவில்லை, பழுவூர் அரசே. வேறு சிலர்தான் சொக்குப்பொடி தூவி காரியமாற்றுகின்றனர்." - குந்தவை கூறினாள்.

"சொல்ல வருவதை நேரடியாகச் சொல், குந்தவை. மறைமுகச் சொற்கள் தேவையில்லை. தனாதிகாரி உனக்கு பாட்டனார் முறை. ஆகையால் நீ அவருடன் உரிமையுடன் பேசலாம். அநிருத்தர் நமது குடும்பத்தில் ஒருவர். எனவே தயக்கம் தேவையில்லை." - சுந்தர சோழர் கூறினார்.

"நேரிடையாகவே விஷயத்திற்கு வருகிறேன். நமது பழையாறை கஜானாவின் நிலவறைக்கு அண்ணன் ஆதித்த கரிகாலன் வந்திருக்கிறான். உக்ரோதயம் என்கிற ஆபரணம், பாணபத்திரம் என்கிற சுவடி மற்றும் சிறிய பாட்டனார் உத்தமசீலனின் வாள் ஆகியவற்றைத் தனது வசப்படுத்தி இருக்கிறான்!" - குந்தவையின் குரல் காட்டத்துடன் ஒலித்தது.

* பரிமாறுபவனுக்குப் பரிச்சாரகன் என்பது பெயர்.

"இவ்வளவுதானே! அவனுக்கு வேண்டியதை அவன் எடுத்துக் கொண்டான். தனாதிகாரியிடம் சொல்லி, உனக்கு வேண்டியதை நீ எடுத்துக்கொள்." - வானவன் மாதேவி அவளைச் சமாதானம் செய்தாள்.

"அவ்வளவுதானே என்று எளிதாகக் கூறிவிட்டாய் அம்மா. அந்தப் பாணபத்திரத்தின் பின்னால் பெரும் புதையல் உள்ளது. கங்க மன்னன் பிருத்விபதி நமது பராந்தகருக்கு அளித்த நான்கு ஸ்வர்ண சுரங்கங்களைக் குறித்த உடன்படிக்கைதான் பாணபத்திரம். அதனை எடுத்துச் சென்று சுரங்கங்களைக் கைப்பற்றி அந்த ஸ்வர்ணத்தை தனது காஞ்சி மாளிகையில் பத்திரப் படுத்தி இருக்கிறான். அந்த ஸ்வர்ணத்தைக் கொண்டு காஞ்சியில் பொன்மாளிகை ஒன்றை எழுப்பத் திட்ட மிட்டு இருக்கிறான்." - குந்தவை பொருமினாள்.

பழுவேட்டரையர் சிரித்தார். "குந்தவை! இதோ இந்தத் தாதி ஏந்தி நிற்கிறாளே தட்டு, இதுவே ஸ்வர்ணத்தி னால் வடிவமைக்கப்பட்டது. ஒரு தாம்பாளத்தை ஸ்வர்ணத்தில் செய்யும் போது, ஒரு மாளிகையை ஸ்வர்ணத்தில் செய்தால் என்ன?" - பழுவேட்டரையர் கூற, அவ்ரை அனல் பறக்கும் கண்களால் நோக்கினாள்.

"தட்டு ஸ்வர்ணம்தான். ஆனால் அதனைக் கையாள்பவர்கள் அடுக்களைப் பணியாளர்கள் மட்டுமே. சுமந்து வருபவள் இந்தத் தாதி. அரசகுடும்பத்தினர் யாரும் அதனைத் தொடுவது கூடக் கிடையாது. அப்படி யிருக்கச் சோழத்திற்கு உரிய நான்கு சுரங்க ஸ்வர்ணத்தை ஒருவன் மட்டுமே எடுத்து தனக்கு மாளிகை எழுப்பிக் கொள்வது என்ன நியாயம்? ஸ்வர்ணம் முழுவதும் சோழ கஜானாவைத்தானே சேர வேண்டும்?" - குந்தவை கேட்டாள்.

குந்தவை மிகவும் முக்கியமான விவகாரத்தைத்தான் கையில் எடுக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட பழுவேட்டரையர் தானே எழுந்து பழரசக் குவளையைத் தாதியின் தட்டில் வைத்தார்.

"உண்மைதான் குந்தவை! உனது கூற்றில் நியாயம் இருக்கிறது. பராந்தகன் பாணர்களை வீழ்த்தி அவர்களை கங்கர்களுக்கு அடிமைகளாக விற்றதற்குப் பிரதியுபகாரமாக அவர்களால் நமக்கு அளிக்கப்பட்ட ஸ்வர்ண சுரங்கங்கள்." - பழுவேட்டரையர் கூறினார்.

"இருக்கட்டுமே. நாம் அந்த ஸ்வர்ணத்தை எடுக்காமல் விட்டுவிட்டோம். பராந்தகன் தொடர்ந்து தனது மகன்கள் இறந்தும், காணாமலும் போனதால் விரக்தியில் உரிமையைக் கோராமல் விட்டுவிட்டார். அரிஞ்சயன் ஆட்சி செய்தது ஆறு திங்கள்கள் மட்டுமே. பழைய உடன்படிக்கையை வைத்து உரிமையைக் கோருவது நியாயமாகாது என்று நானும் வாளாயிருந்துவிட்டேன். ஆதித்த கரிகாலனுக்கு ஸ்வர்ணம் தேவைப்பட்டதால் தனது சாதுர்யத்தால் அதனைக் கேட்டு வாங்கியிருக்கிறான்.. அதனைக் கொண்டு அவன் மாளிகை ஒன்றை எழுப்பினால் நஷ்டம் என்ன? நாம் கூட அந்த மாளிகையில் சென்று தங்கலாமே!" - சுந்தரர் கூற, அவரை நோக்கி அனல் பார்வை ஒன்றை உதிர்த்தாள், குந்தவை.

"தந்தையே, காஞ்சி நமது சோழர் வசம் நிரந்தரமாக இருக்குமா? நாளையே பல்லவர்கள் பொங்கி எழுந்து மீண்டும் தங்கள் சாம்ராஜ்யத்தை நிறுவினால், நாம் காஞ்சியை மட்டுமா இழப்போம்? ஸ்வர்ண மாளிகையையும் சேர்த்துதான் இழப்போம்! ஸ்வர்ண மாளிகை எங்களுடையது. அனுமனைப் போன்று அந்த மாளிகையை மட்டும் நாங்கள் தூக்கிச் செல்கிறோம் என்று நாம் கேட்டாலும், அவர்கள் தருவார்களா?"- கேலியுடன் கேட்டாள், குந்தவை.

"மன்னா! குந்தவை மிகத் தெளிவாக இருக்கிறாள். அவளது வாதத்திறமைக்கு முன்பாக நம்மால் பேச இயலாது. எதற்கும் தங்கள் மகனை உடனே வரவழைத்து விளக்கம் கேட்பதுதான் நியாயம். உடனே தஞ்சைக்கு வந்து மன்னரைச் சந்திக்கும்படி ஆதித்த கரிகாலனுக்கு

ஓலை அனுப்புங்கள், அநிருத்தரே!" - பழுவேட்டரையர் கூற, அநிருத்தர் தலையசைத்தார்.

குந்தவை திருப்தியுடன் நிற்க, பழுவேட்டரையரும், அநிருத்தரும் அங்கிருந்து புறப்பட்டனர்.

★ ★ ★

ஒருவனுக்கு நேரம் கூடி வரும்போது அவனுக்கு மற்றவர்கள் செய்யும் பாதகங்களும் அவனுக்குச் சாதகமாகவே மாறும் என்பது வழக்கம்தான். மற்றவர்கள் ஏவும் கணைகள் அவன் மீது மலர்மாலைகளாகத் தானே விழும்! பாண்டவர்கள் விடுத்த கணைகள் எல்லாமே கர்ணனின் மீது மலர்மாலைகளாகத்தானே விழுந்தன. அவன் செய்த தர்மம் அவன் தலையைக் காத்தது. ஆதித்த கரிகாலனும் பாமர மக்களுக்குச் செய்த உதவியால் அவர்களது அபிமானத்தைப் பெற்று 'மக்களின் இளவரசன்' என்னும் பெயரைப் பெற்றிருந் தான். அவர்களின் வயிறும், மனமும் வாழ்த்தியதால்தான் ஒருவேளை அவனுக்கு எல்லாமே சாதகமாகப் போகின்றதோ? அத்திமலையானின் பிரதிமை பிரவாள மாளிகையில் அவனுக்குக் கிடைத்ததும், அவனுக்குச் சாதகமாகவே எல்லாம் நடக்கின்றன. புகழ்பெற்ற காஞ்சியின் வாசியாக அவன் மாறியதும், அத்திமலை யானும் அவனை நாடி வந்தான். உக்ரோதயமும் ஆதித்த கரிகாலனின் வசம் வந்துவிட்டது. பாணபத்திரமும் அவனைச் சேர்ந்து, நான்கு ஸ்வர்ண சுரங்கங்களின் அதிபதி ஆகிவிட்டான். பிரும்மாண்டப் பொன்மாளிகை ஒன்று காஞ்சியில் எழுப்பி வருகிறான். இன்னும் என்ன வேண்டும் ஆதித்த கரிகாலனுக்கு? விரைவில் மன்னனாகிவிட்டால், தான் மறைத்து வைத்திருக்கும் அத்திமலைத்தேவனின் பிரதிமையை வைத்து அஸ்வமேத யாகமும் செய்து உலகத்தையே சோழர்களின் குடையின் கீழ் கொண்டு வந்துவிடலாம். நேமியங்கையருடன் சேர்ந்து நீண்டகாலத் திட்டத்தைத் தயார் செய்து

விட்டான், ஆதித்த கரிகாலன். இன்னும் பார்த்திப னுக்குக் கூட சிலை அவன் வசம் உள்ளது தெரியாத போது, குந்தவைக்கு எங்ஙனம் தெரியக் கூடும்?

தஞ்சைக்கு வந்து உடனே மன்னரைச் சந்திக்க வேண்டும் என்று ஓலை வந்ததும், சற்றே குழம்பினான், ஆதித்த கரிகாலன். தஞ்சைக்குப் புறப்படுவதற்குத் தயார் செய்து கொண்டிருந்த வேளையில், நண்பன் பார்த்திபன் அவசரமாக வந்தான்.

"ஆதித்தா! பழையாறை நிலவறையிலிருந்து கொண்டு வந்த உத்தமசீலனின் வாளினை உடனே எடுத்துக் கொண்டு புறப்படு! உனது தந்தையிடம் தோற்று ஓடிய, வீரபாண்டியன் மீண்டும் படைகளைத் திரட்டிக் கொண்டு சோழ எல்லையை நோக்கி வருகிறானாம். உனது சபதத்தை நிறைவேற்ற நல்லதொரு வாய்ப்பு உன்னை நாடி வருகிறது." - பார்த்திபன் கூறியதும், உற்சாகத்துடன் துள்ளிக் குதித்தான், ஆதித்த கரிகாலன்.

"ஓ.. இதற்குத்தான் அநிருத்தர் ஓலை அனுப்பி இருக்க வேண்டும். இந்த முறை வீரபாண்டியனை விட மாட்டேன். அது சரி.. ஒரு ஆண்டிற்கு முன்பாக ஓடி ஒளிந்தவன், அதற்குள்ளாக எப்படி மீண்டும் படையைத் திரட்டினான்?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"இம்முறை ஈழம் அவனுக்கு உதவி செய்வதாகக் கேள்வி. அதைப் பற்றி உனக்கு என்ன? உனக்குத் தேவை அவன் தலை. அதைக் கொய்து பந்தாடிவிட்டு வா? அதற்குள் பொன்மாளிகை உனக்காகத் தயாராகக் காத்திருக்கும்!" - பார்த்திபன் கூற, களிப்புடன் ஆதித்த கரிகாலன் உத்தமசீலனின் வாளை எடுப்பதற்காகச் சென்றான்.

### சேவூர்-

கடும் போரில் பாண்டியர்கள் தோல்வியைத் தழுவினர். இம்முறை தப்பிச் செல்வதற்கும் முடியாது.

சோழர்களும் தன்னை மன்னிக்கத் தயாராக இல்லை என்பதை உணர்ந்தவனாக வீரபாண்டியன் பரிதாபமாக ஆதித்த கரிகாலனின் முன்பாக நின்றான். ஆதித்த கரிகாலன் தனது சிறிய பாட்டனார், உத்தமசீலனின் வாளின் மீது முத்தம் ஒன்றைப் பதித்தான்.

"சிறிய பாட்டனாரே! உங்களது வாளினாலேயே உங்கள் தலையைச் சீவிய வீரபாண்டியனின் தலையை நான் சீவுகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்றவன், அந்த வாளை ஓங்கி, வீரபாண்டியனின் தலையைச் சீவினான். நிலத்தில் உருண்ட தலையைத் தனது இடது காலினால் எட்டி உதைத்து தனது சபதத்தை நிறைவேற்றினான்.

"பலே.. ஆதித்த கரிகாலா! சொன்ன வண்ணம் செய்துவிட்டாயே!" - பார்த்திபன் பாராட்டினான். அவனை உற்சாகத்துடன் நோக்கிய ஆதித்த கரிகாலனின் புருவங்கள் உயர்ந்தன. பார்த்திபனின் பின்பாக ஒரு நெடிய மனிதன் நின்றிருந்தான். சற்றே கருமையாகக் காணப்பட்ட அவன் கம்பீரமாக நின்றான். முகத்தில் எதற்கும் துணிந்தவன் என்கிற மனோபாவம் காணப்பட்டது. யார் இந்தப் புதியவன் என்பது போன்று ஆதித்த கரிகாலன் பார்த்திபனை நோக்கினான்.

"சென்ற முறையைப் போலவே, இந்த முறையும் வீரபாண்டியன் சேவூர் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடப்பார்த்தான். அவனை ஓடிவிடாதபடி வழியை மறித்துத் தடுத்தது இந்த வீரன்தான். வாணர் குல வீரனாம்." - பார்த்திபன் கூற அவனை வியப்புடன் நோக்கினான், ஆதித்தன்.

அருளை வழங்கும் அத்திமலைத்தேவன் கிடைத்தான். உக்கிரத்தை உமிழ்ந்த உக்ரோதயமும் கூடவே கிடைத்தது. பாணர்களை கங்கர்களுக்கு அடிமைப்படுத்தியதற்கு நன்றிக்கடனாக நான்கு ஸ்வர்ண சுரங்கங்கள் கிடைத்தன. ஆனால் அதை அனுபவிப்பதற்கு முன்பாகவே,

பழிவாங்கத் துடிக்கும் பாணர் வீரன், விஜயாதித்த பாணனின் வழித்தோன்றல், பராக்கிரம பாணன் ஆதித்த கரிகாலனின் முன்பாக நின்றிருந்தான். நன்மையும், தீமையும் மாறி மாறிக் கிடைக்கும் போலும்.

“வீரரே! நல்ல காரியம் செய்தீர். உங்கள் உதவியை மறக்கமாட்டேன். தங்களது பெயர்..?” - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

பாணர் வீரரின் செவிகளில் அவனது கேள்வி விழவில்லை. சோழ வீரர்களின் கையில் சிக்கி சின்னா பின்னமாகிய தங்களது வாணர்குலப் பெண்களின் ஓலங்கள்தான் கேட்டன. எங்கள் வாணர் குடியை அழித்த சோழர் குடியின் அடுத்த மன்னனிடம்தான் பேசுகிறோம் என்கிற சினம் அவனுள் எழுந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு அவன், தனது உண்மையான பெயரான பராக்கிரம பாணன் என்பதை மறைத்தான்.

‘வந்தி’ என்கிற வந்தனைப் பாடல்களைப் பாடும் தனது வாணர்குலச் சான்றோரை நினைத்ததும் அந்தப் பெயர் அவனது சிந்தையில் உதித்தது. “எனது பெயர் வந்தியத்தேவன்..” என்றதும் ஆதித்த கரிகாலன், ஒரு கையைப் பார்த்திபன் தோளினிலும், மற்றொரு கையை வந்தியத்தேவனின் தோளினிலும் போட்டான்.

“பார்த்திபனைக் கண்டதும், ஒருவர் இருவரானோம். இப்போது வந்தியத்தேவனைக் கண்டதும், இருவர் மூவரானோம்” என்றபடி அவர்களை அணைத்தான்.

காலதேவதை அந்தக் காட்சியைப் பார்த்து நிச்சயம் சிரித்திருக்க வேண்டும். ஆதித்த சோழன் அபராஜித னிடம் நெருங்கிய நட்பு பாராட்டி வந்தவன்.. அவனைக் கொன்று, பல்லவத்தை அபகரித்தான். கங்கர்களை ஆதரிக்க வேண்டி, பராந்தகன் பாணர்களின் மீது படையெடுத்து, அப்பாவி மக்களைக் கொன்று,

அவர்களின் பெண்களை நாசம் செய்து, தங்கள் வயிற்றில் வளரும் கருவிற்குத் தந்தை யார் என்று அவர்களுக்குத் தெரியாத வண்ணம் வெறியாட்டம் ஆடி, அவர்களை கங்கர்களுக்கு அடிமையாக விற்றான். சோழர்களால் சீரழிக்கப்பட்ட பல்லவமும், பாணமும் இப்போது அடிமைகளாகத்தான் இருக்கின்றன. சோழர்களின் மீது வெறுப்பும், பழிவாங்கும் உணர்ச்சியும் கொண்ட உபேந்திர பார்த்திப பல்லவன் மீதும், வந்தியத்தேவன் என்கிற பராக்கிரம பாணன் மீதும் தனது கைகளைப் போட்டு அணைத்துக் கொண்டிருக்கிறான், ஆதித்த கரிகாலன். இதனைக் கண்டு காலதேவதை சிரிக்காமல் என்ன செய்வாள்? 'அரசியலில் நிரந்தர நட்பும் கிடையாது; நிரந்தர பகைமையும் கிடையாது' என்று காரியவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும் வேண்டுமானால் கூறலாம். ஆனால் தேசபக்தி உள்ளவர்களுக்கு, தங்கள் நாடு பாதிக்கப்பட்டால், இறுதி மூச்சு இருக்கும் வரை, தங்கள் நாட்டைச் சீரழித்தவர்களின் மீது கோபம் கனன்று கொண்டே இருக்கும். அத்தகைய கோபம் உள்ளவன்தான் பராக்கிரம பாணன். பெயரை மாற்றி வைத்துக்கொண்டால், சோழத்தின் மீது பாசம் பிறந்துவிடுமா என்ன?

தஞ்சை அரண்மனைக்கு சேவூர் வெற்றி வீரனாக வந்தான், ஆதித்த கரிகாலன். பாணபத்திர ஸ்வர்ணம் குறித்து அண்ணன் விசாரணைக்கு உட்படுத்தப் படுவதைக் காணும் ஆர்வத்துடன், தஞ்சையிலேயே தங்கியிருந்தாள், குந்தவை. ஆதித்தனுக்கு தஞ்சை மக்கள் மாபெரும் வரவேற்பினை நல்க, சுந்தர சோழர் அந்தக் காட்சியை ஆனந்தக் கண்ணீருடன் உப்பரிகையில் இருந்து கண்டார். சற்றுத் தொலைவில் நின்ற பழுவேட்டரையரையும், அநிருத்தரையும் அவசரமாகத் தனது அறைக்கு வரும்படி சைகை காட்டினார். மூடிய அறையில் அவசரமாக ஓர் ஆலோசனை நடைபெற்றது.

கொலுமண்டபத்தில் குந்தவை ஆவலுடன் காத்திருந்தாள். ஆதித்த கரிகாலன் கைப்பற்றியுள்ள ஸ்வர்ணத்தை கஜானாவில் ஒப்படைக்கும்படி மன்னர் உத்தரவிடப் போவதை காதுகுளிரக் கேட்க வேண்டும் என்று அமர்ந்திருந்தாள்.

வீரபாண்டியனின் தலையைக் கொய்ததற்கு ஆதித்த கரிகாலனுக்கு பாராட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டது. பாராட்டுப் பத்திரத்திற்குப் பிறகு பாணப்பத்திரம் வரும். ஸ்வர்ணத்தை ஒப்படைக்க வேண்டும் என்று மன்னர் கூறியதும், ஆதித்த கரிகாலனின் முகம் போகும் போக்கைக் கண்டு ரசிக்க வேண்டும் என்று குந்தவை காத்திருந்தாள்.

அநிருத்த பிரம்மராயர் எழுந்தார்.

“பராந்தக மன்னர் காலத்தில் கங்க மன்னன் பிருத்விபதி தங்களது ஸ்வர்ணமுகி காடுகளில் இருக்கும் நான்கு ஸ்வர்ண சுரங்கங்களை சோழர்களுக்குப் பரிசளித்தான். பாணர்களுக்கு எதிரான போரில் நாம் கங்கர்களை ஆதரித்ததால், இந்த சுரங்கங்களை நமக்கு நன்றிக்கடனாகத் தந்தான். இப்போது அந்தச் சுரங்கங்களில் இருந்து எடுக்கப்பட்ட ஸ்வர்ணம் இளவரசர் ஆதித்த கரிகாலர் வசம் இருப்பதாகத் தெரிகிறது!” - அநிருத்தர் மன்னரின் உரையைப் படிக்க, ஆதித்த கரிகாலன் குழப்பத்துடன் பார்த்திபனைப் பார்த்தான். அவனது குழம்பிய முகபாவத்தை ஓரக்கண்ணால் ரசித்துப் பார்த்தாள், குந்தவை.

“சேவூர் போரில் வீரபாண்டியனின் சிரத்தை அறுத்து உத்தமசீலரின் ஆன்மாவுக்கு அமைதியைப் பெற்றுத்தந்த, நமது பட்டத்து இளவரசர், வடபுல சேனைத்தலைவர், மன்னர் சுந்தர சோழரின் தலைமகன் ஆதித்த கரிகாலருக்கு, அவர் கைப்பற்றிய அந்த நான்கு சுரங்க ஸ்வர்ணமும் பரிசாக வழங்கப்படுகிறது. அவருக்கு உரிய அந்த ஸ்வர்ணத்தைக் கொண்டு அவர் காஞ்சியில்

எழுப்பும் ஸ்வர்ண மாளிகைப் பணிகளை இந்த மன்னரின் அரசு அங்கீகரிக்கிறது!" என்று அநிருத்தர் கூறி முடித்ததும், ஆதித்த கரிகாலனின் முகம் மலர்ந்தது. உடனே எழுந்து நின்று தனது நன்றியைத் தெரிவித்தான்.

"வீரபாண்டியன் தலையைக் கொய்தது பெரிய விஷயமில்லை. அதற்கு நீங்கள் எனக்கு அளித்திருக்கும் பரிசுதான் என்னைப் பொறுத்தவரையில் பெரிய விஷயம். எனது உயிர் உள்ளவரை, சோழத்திற்குப் பெருமை சேர்க்கும் நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்வேன். என்னால் சோழத்திற்கு இழுக்கு நேராமல் பார்த்துக்கொள்வேன். செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் என்பார்கள். என்னைப் பொறுத்தவரை செல்வத்துள் பெரும் செல்வம் நட்பே. பார்த்திபனும், வந்தியத்தேவனும் இல்லையென்றால் என்னால் வீரபாண்டியனின் தலையைக் கொய்திருக்க முடியாது.." என்று ஆதித்தன் கூறி முடித்ததும் சபையோர் கரவொலி எழுப்பினர்.

ஆயிரம் பேரிடிகள் தனது தலையில் விழுந்தது போன்று அதிர்ச்சியில் அமர்ந்திருந்த குந்தவையின் பார்வை வந்தியத்தேவனின் பக்கமாகத் திரும்பியது. வந்தியத்தேவனும் அவள் பக்கமாக நோக்க, இருவர் பார்வைகளும் கலந்தன. பாணர் வீரனும், சோழ வீராங் கனையும் தங்கள் பார்வையைப் பரிமாறிக் கொள்ள, அதை உப்பரிகை மாடத்தில் அமர்ந்திருந்த பெண்கள் பகுதியில் இருந்து நோக்கிய தெட்டக்கனியின் மேனியில் ஒருவித நடுக்க அலை பாய்ந்தது.

வந்தியத்தேவன்-குந்தவையின் பார்வைப் பரிமாற் றத்தை இன்னொருவனும் கவனித்துக் கொண்டிருந்தான். வந்தியத்தேவனின் அருகில் அமர்ந்திருந்த பார்த்திப பல்லவன்தான் அந்த இன்னொருவன்.

# 10. இரத்தினமும், மாணிக்கமும்

**நோ**ய்ப்படுக்கையில் விழுந்துவிட்டிருந்தனர், தருமவர்மனும் கங்காவதியும். முந்திக்கொள்ளப் போவது யார் என்று இருவரிடையே போட்டி எழ, ஒரு கட்டத்தில் கங்காவதியின் உடல்நிலை மோசமடைவதும் பிறகு அவளது நிலை சற்று முன்னேறி தருமவர்மரின் உடல்நிலை கவலையடைவதுமாக இருந்தது.

"நிருபதுங்கரும், கம்பவர்மரும் போன்று அரியணைக்காக இரு பல்லவர்கள் போட்டியிட்டால் பொருள் உண்டு. ஆனால் இப்படி மரணத்திற்காக இந்த இரு பல்லவர்களும் போட்டியிடுகின்றனரே!"- பார்த்திபன் கூற, கல்பலதா தன்னையும் மறந்து நகைத்தாள்.

கல்பலதா நகைத்து முதன் முறையாகப் பார்க்கின்றான் பார்த்திபன். எப்போதும் சினமும், சிந்தனையும் கலந்த முகபாவம். நெற்றியில் எப்போதும் நிலைத்திருக்கும் வேதனை சுருக்கங்கள். அலங்கரிக்கப்படாத சோகத்தை வாரி வழங்கும் அவளது வதனத்தையே அன்றாடம் பார்த்துப் பழகியிருந்த பார்த்திபனுக்கு, அவள் தனது குரலைவிட்டுச் சிரித்தது, வியப்பையும், உற்சாகத்தையும் அளித்தது.

"அத்திமலையானும், உக்ரோதயமும்தான் பல்லவத்தின் பொக்கிஷங்கள் என்று நினைத்தேன். இன்னும் கூடப் பொக்கிஷங்கள் இருக்கின்றன போல் இருக்கிறதே!"- கேலியாகக் கூறினான், பார்த்திபன்.

"இன்னும் பொக்கிஷங்கள் உள்ளனவா என்ன?"- வியப்புடன் கேட்டாள், கல்பலதா.

"ஆமாம்! உனது முத்துக்கள் போன்ற பல்வரிசையைக் குறிப்பிட்டேன். அதுவே முத்து ஹாரம் போன்று ஒரே சீராக, நீ சிரிக்கும் போது பளீரிடுகின்றது!" - பார்த்திபன் சிரித்தான்.

"இதற்குத்தான் நான் சிரிப்பதில்லை, குறிப்பாக ஆண்களின் முன்பாக! எனது பல்வரிசை புலப்பட்டால் போதும், உடனே தங்களின் பல்வரிசையைக் காட்டி விடுகிறார்கள். பல்லவத்தின் விடுதலையைத் தவிர எனது சிந்தனையில் வேறு எதுவுமே கிடையாது, பார்த்திபரே!"

"அம்மணி! அடியேனும் பல்லவத்தின் பிரஜைதான். உனக்கு இருக்கும் அதே விடுதலை வேட்கை எனக்கும் உண்டு. இருப்பினும், ஆதித்த கரிகாலனுடன் இருக்கும் நட்பைப் பயன்படுத்தி பல்லவ மக்களுக்கு என்னால் இயன்ற நல்ல காரியங்களைச் செய்கிறேன். உன் பாதையில் நானும் பயணித்தால், வாணர்களை சோழர்கள் துன்புறுத்தியதைப் போன்ற நிலைதான் பல்லவ மக்களுக்கும் ஏற்படும். அதற்காகத்தான் நான் பொறுமை காக்கின்றேன்!" - பார்த்திபன் கூறினான்.

"விடுதலையைக் காட்டிலும் பெரிய நன்மை மக்களுக்குக் கிடைக்கப் போகிறதா, என்ன? சோழர்கள் பல்லவர்களுக்கு இழைத்திருக்கும் எல்லையில்லா கொடுமைகளுக்கு அவர்கள் பதில் கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது, பார்த்திபரே! எனக்கு இந்த வரம் மட்டும் தாருங்கள். நீங்கள் ஆதித்த கரிகாலரின் நண்பன் ஆகையால் உங்களுக்கு இந்தச் சங்கடம் வேண்டாம். நானே எனது கையால் ஆதித்த கரிகாலனை கொல்கிறேன், அபராஜிதனை ஆதித்த சோழன் கொன்றதற்குப் பழிதீர்க்கும் விதமாக! உள்ளே சாகக் கிடக்கிறாள், எனது பாட்டி கங்காவதி. அவளது வாழ்வை அரிஞ்சயன் சீரழித்ததற்கும் பழிவாங்கும் விதமாக நானே அவனைக் கொல்கிறேன். எனது சபதத்தை நிறைவேற்ற அனுமதியுங்கள்!" - ஆவேசத்துடன் கூறினாள், கல்பா.

"அவசரப்படாதே கல்பா! உனது - சபதத்தை நிறைவேற்றுகிறேன் பேர்வழி என்று ஆதித்த கரிகாலனை நீ கொன்றுவிட்டால், பல்லவத்தின் பொக்கிஷங்களை மீட்கவே முடியாமல் போகும்..!"-பார்த்திபன் கூற, அவனை திகைப்புடன் நோக்கினாள் கல்பா.

"உனது பாட்டியின் வசம் ஓர் ஓலை இருந்ததே.. பல்லவ பொக்கிஷத்தை பிரவாள மாளிகையில் மறைத்து வைத்திருக்கிறேன் என்று, மல்ல எதி என்பான், சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனுக்கு அனுப்பிய ஓலை.. அந்த ஓலையில் குறிப்பிட்டிருப்பது உண்மை என்றால், பிரவாள மாளிகையைத் தரைமட்டமாக்கி, புதிய பொன்மாளிகையை எழுப்பிக் கொண்டிருக்கும் ஆதித்த கரிகாலனுக்கு அத்திமலைத்தேவனின் சிலை நிச்சயம் கிடைத்திருக்கும். அந்தச் சிலையை அவன்தான் எங்கோ பதுக்கி வைத்திருக்க வேண்டும். அந்தச் சிலை கிடைக்கும் வரையிலாவது, உனது சபதத்தை நிறைவேற்றாமல், சற்றே தள்ளிப் போடு, கல்பா." - பார்த்திபன் கூறினான்.

பிரம்மிப்புடன் அவனைப் பார்த்தாள் கல்பா.

"உண்மையாகவா? உங்கள் நண்பனிடம் கேட்டு விடுவதுதானே?"

"கேட்கலாம்! ஆனால் அதன் பிறகு என் மீதுள்ள நம்பிக்கை அவனுக்குப் போய்விடும். அவன் என்னிடம் தெரிவிக்காத விவரத்தைப் பற்றி நானே சென்று கேட்டால், நான் அவனைச் சந்தேகப்படுவதாக அவனுக்குத் தோன்றும். வேறு எந்த வகையிலாவதுதான் இந்த விவரத்தை அறிய வேண்டும். அதற்குத்தான் உன்னைப் பொறுத்துக் கொள்ளச் சொல்கிறேன்!"- பார்த்திபன் கூறினான்.

"பாட்டி எனக்கு அத்திமலைத்தேவனைப் பற்றிக் கதை கதையாகக் கூறியிருக்கிறாள். போர்க்காலத்தின் கடவுளாம் அத்திவரதன். அவனைக் கொண்டு

அஸ்வமேதம் செய்தால், எண்ணிலடங்கா ஆற்றலைத் தருவானாம் என்று அறிந்திருக்கிறேன். அத்தி மலையானிடம் ஸ்ரீதளமணி என்கிற விலைமதிப்பில்லாத ஆபரணம் உண்டு என்று பாட்டி கூறியிருக்கிறார்! அந்த மணியை உக்ரோதயம் என்கிற ஹாரமாக மாற்றினானாம் ஒரு பல்லவ இளவரசன். அந்த உக்ரோதயத்தைப் பறிப்பதற்காகத்தான் ஆதித்த சோழன் அபராஜிதனைக் கொன்றதாகவும் கூறியிருக்கிறார்." - கல்பாவின் குரலில் மீண்டும் கோபம் கொப்பளித்தது.

"உக்ரோதயமும் இப்போது சோழர்கள் வசம்தான் இருக்க வேண்டும். எனவே, நாம் விடுதலை பெறுவதற்கு முன்பாக, அத்திமலைத்தேவனின் பிரதிமையையும், உக்ரோதயத்தையும் மீட்க வேண்டும். பிறகே உனது சபதத்தை நீ நிறைவேற்ற வேண்டும்!" - பார்த்திபன் கண்டிப்புடன் கூறினான்.

"அதுவரையில் நான் என்ன செய்வது? உங்கள் மாளிகையில் பரிமாறப்படும் விருந்தை ருசித்துக் கொண்டும், சாளரத்தின் வழியாக நந்தவனக் குயில்கள் பாடுவதைக் கேட்டுக் கொண்டும், உறங்கிக் கொண்டும் இருக்க வேண்டுமா?" - கல்பா எரிச்சலுடன் கேட்டாள்.

"ஏன், பணிகளா இல்லை? ஒன்றுக்கு இரண்டு நோயாளிகள் உள்ளனர். அவர்களைக் கவனி. தோழிகளுடன் விளையாடு. சுவடிகளைப் படி. நந்தவனத்தில் உலவு. இவை எதிலும் உனக்கு விருப்பம் இல்லையென்றால், உனக்கு நான் ஒரு பெரிய பணியைத் தருகிறேன். அதனைச் செய்தால் உனக்கும் பொழுது போகும்; எனக்கும் உற்சாகமாக இருக்கும்!" - பார்த்திபன் கூற, அவனை வியப்புடன் பார்த்தாள், கல்பா.

"அதென்ன பெரிய பணி!" - கல்பா சந்தேகத்துடன் அவனைப் பார்த்தாள்.

"நீயோ எனக்கு அத்தை மகள் ரத்தினம். நானோ உனக்கு மாமன் மகன் மாணிக்கம். ரத்தினத்தையும், மாணிக்கத்தையும் காதல் என்னும் ஹாரத்தில் கோர்த்து அணிந்து கொள்வோம். நம்மைச் சூழ்ந்து இருக்கும் வெறுமை இதனால் நீங்கும். வெறுமை நீங்கினால், மனதினில் வலிமை தோன்றும். மனதினில் வலிமை தோன்றினால், நமது விடுதலை வேட்கையும் துரிதமாக தீரும். உன்னாலும் உனது சபதத்தை எளிதாக நிறைவேற்ற முடியும்!" - பார்த்திபன் கூறினான்.

மௌனமாக அவனை வெறித்தாள், கல்பா.

"ஏன் கல்பா, என்னை அப்படிப் பார்க்கிறாய்?"- பார்த்திபன் திகைத்தான்.

"உங்களைப் பற்றிய சந்தேகங்களை அதிகரிக்கச் செய்கின்றன, உங்களது பேச்சு. நிருபதுங்கவர்மரின் வாரிசு நீங்கள். நானோ அபராஜிதரின் வாரிசு. வடபல்லவத்தின் வாரிசு உரிமையைப் பிடுங்கிக் கொண்டு, நிருபதுங்கரையும் அவர் மகளையும் விரட்டியதால் அபராஜிதன் மீதும், அவருடைய வாரிசுகளின் மீதும் நீங்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டிருப்பீர்கள் அல்லவா? மேலும் ஆதித்த கரிகாலனின் ஆருயிர் நண்பர். காதல் பாடம் பேசி, எனது நோக்கத்தை உடைத்து, தங்கள் நண்பனைக் காப்பாற்ற நினைக்கின்றீர்களோ?" - கல்பா கூறினாள்.

"இதென்ன விபரீதம்! உனது நோக்கத்தை உடைப்பவனாக இருந்தால், நான் எதற்கு உன்னைப் பல்லவத்தின் அரசியாக அங்கீகரித்தேன். உனது காலடியில் எனது வீரவாளை வைத்து எதற்காக மண்டியிட்டேன்?" - திகைப்புடன் கூறினான், பார்த்திபன்.

"அதுவும் உங்களது திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தால்? எனக்கு அரசி என்கிற அங்கீகாரத்தைத் தந்து, என்னை இங்கேயே சிறை வைத்து, காதல் பாடம் பேசி, என்னைத் தங்களது கட்டுப்பாட்டினில் வைத்துக்

கொள்வது தங்கள் திட்டமாக இருந்தால்?" - கல்பலதா கேட்டாள்.

"இப்படிச் செய்வதால் எனக்கு என்ன லாபம்?"- பார்த்திபன் கேட்டான்.

"ஏன் இருக்காது.. நீங்கள் தந்த விருந்தன்று திடீரென்று வந்த ஆதித்த கரிகாலன் என்னைப் பார்த்த பார்வை..? நான் பல்லவ இளவரசி என்பதைத் தெரிந்து கொண்டவரைப் போன்றுதான் என்னை வெறித்தார்.. எனக்கு என்னவோ, என்னைப் பற்றிய அத்தனை தகவல்களையும் நீங்கள் ஆதித்த கரிகாலனிடம் கூறி இருக்கிறீர்கள். இருவரும் சேர்ந்துதான் ஏதோ நாடகமாடுகிறீர்கள். உங்களை ஆதித்த கரிகாலன் பல்லவ மன்னனாக நியமிக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் கபடவேடதாரியாக என்னை இங்கே தங்க வைத்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்." - கல்பலதா குற்றம் சாட்டினாள்.

முதன்முறையாகப் பார்த்திபனுக்குக் கோபம் பொங்குவதைப் பார்த்தாள், கல்பா. அவளது பேச்சினால் அவன் நொந்து போனான் என்பதை, அவனது சிவந்த முகத்தில் இருந்தே அவள் யூகித்தாள்.

"குற்றம் சாட்டுவது என்பது பெண்களுக்குத்தான் கைவந்த கலையாயிற்றே! எதிர்மறை திசையில் அவர்களது கற்பனைகள் அதிவேகத்தில் பாயும். நேர் மறை திசையில் ஒரு போதும் அவர்கள் பயணிக்க மாட்டார்கள் என்று அறிந்திருக்கிறேன். அதற்கு எடுத்துக் காட்டாக நீ இருக்கிறாய். என்ன பேசுகிறோம் என்பதை அறிந்துதான் பேசுகிறாயா? எனது பொறுமைக்கும் எல்லை உண்டு. பல்லவ அரியணை கிடைக்கும் என்பதற்காகவா ஆதித்த கரிகாலனுக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன். எப்படியாவது அத்திமலையானின் பிரதிமையை மீண்டும் அவனது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்கிற ஒரே எண்ணத்தில்தான் நான்

இன்னும் சோழர்களுடன் இணக்கமாக இருக்கிறேன். சிம்மவர்மரின் காலத்தில் காணாமல் போன பிரதிமை, நரசிம்மவர்மரின் அவசர செய்கையால் கடலடியில் சென்ற பிரதிமை, மல்ல எதி என்கிற பல்லவரின் எதிரியால் கைப்பற்றப்பட்ட பிரதிமை, தற்போது ஆதித்த கரிகாலனின் வசம் உள்ள பிரதிமையை மீட்டு மீண்டும் ஆலயத்தில் நிறுவிவிட்டு, உன்னை அரியணையில் அமர்த்திவிட்டு, நான் என் வழியே போகிறேன். அன்று வேங்கடவன் ஆலயத்தின் அருகே கள்வர்களிடம் சிக்கிய உன்னைக் கண்டதும் காதல் கொண்டேன். ஆனால் எனது உண்மைக் காதலை நீ கீழ்த்தரமாக விமர்சிப்பதைக் கண்டதும் இனி எனது காதலைப் பெறும் அருகதை உனக்கு இல்லை என்பதை உணர்கிறேன். நீ ஒன்றும் என்னைக் காதலிக்கத் தேவையில்லை. நானும் உன்னுடன் இனி காதலைப் பற்றிப் பேசப்போவ தில்லை!” என்று சீற்றத்துடன் திரும்பி நடந்தான்.

தான் அவனைப் பெரிதும் புண்படுத்திவிட்டோம் என்பதனைப் புரிந்து கொண்ட கல்பா, அவன் பின்பாகவே ஓடி, முந்திச்சென்று அவன் வழியை மறைத்தாள்.

இரு கைகளையும் விரித்து அவனது பாதையின் குறுக்காக நின்றவள், பிறகு அவனை நெருங்கி அவனது அகன்ற மார்பில் தனது கைகளைப் பதித்தாள்.

“நான் பிறந்ததில் இருந்தே ஒரு ஆணின் துணை இல்லாமல்தான் வாழ்கிறேன். தந்தையின் அரவணைப்பையோ, சகோதரர்களின் பாசத்தையோ இதுவரை காணாதவள். ஆண்களுடன் பழகி இராதவள். அவர்கள் அனைவருமே கொடியவர்கள் என்கிற எண்ணத்தை என்னுள் உண்டு செய்தது ஆதித்த சோழனும், அரிஞ்சய சோழனும்தான். ஆண்களையே வெறுத்து வந்தவள். எனக்குத் தெரிந்தவர்கள் எல்லாம் எனது பாட்டி கங்காவதியும், தாய் சமந்தக பல்லவியும்

தான். எங்களுக்கு அடைக்கலம் தந்த ஆண்கள் கூட, தனிமையில் என்னிடம் வேறுவிதமாகப் பழக முயல, நான் ஆண்களை எல்லையில் வைப்பதற்காகப் போர்க்கலைகளைக் கற்றேன். சோழர்களின் மீது நான் கொண்ட துவேஷம் ஆண் இனத்தையே வெறுக்கும்படி செய்துவிட்டது. முதன்முதலாக உங்களைச் சந்தித்த போது, எங்களை நிர்க்கதியாக அலைய வைத்த ஆதித்த சோழனின் வாரிசுக்கு ஊழியம் செய்த பல்லவன் என்பதால் உங்கள் மீது கோபம் கொண்டேன். ஆனால் எங்களுக்கு அடைக்கலம் தந்து என்னை நீங்கள் அரசியாக அங்கீகாரம் கொடுத்த போதே, நான் உங்களை நேசிக்கத் துவங்கிவிட்டேன். இருப்பினும் அதனை வெளிக்காட்டக் கூடாது என்று வீறாப்பாக இருந்து விட்டேன்.. எனது காதலைக் கேட்டு நீங்கள் இறைஞ்ச வேண்டியதில்லை. நான் உங்களுக்குத்தான் சொந்தம். நான் பல்லவத்தின் அரசியாக இருப்பதைக் காட்டிலும், பல்லவத்தின் அரசனாக இருக்கும் கம்பீரத்தையும், தகுதியையும் தாங்களே கொண்டிருக்கிறீர்கள்.. அறிவிலியாக நான் பேசிய பேச்சுக்களை மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். எனது வேதனைகளின் வெளிப்பாடே தவிர, தங்களைப் புண்படுத்த வேண்டும் என்று நான் அப்படிப் பேசவில்லை!" - அவளது அடிமனதிலிருந்து வந்த வருத்தங்கள் எல்லாம் கண்ணீராக வழியத்துவங்க, பார்த்திபனின் முகம் உடனடியாகக் கனிந்தது.

"நீ ஆண் துணை இல்லாமல் வளர்ந்ததைப் போன்று, நான் பெண்களின் ஆதரவு இல்லாமல் வளர்ந்தவன். எனக்கும் பெண்களிடம் பேசிப் பழக்கம் இல்லை. இதுதான் அத்திமலையானின் சித்தம் போலும். பெண்வழி பல்லவத்தையும், ஆண்வழி பல்லவத்தையும் ஒன்றுசேர வைத்துப் பல்லவத்தை மீண்டும் பலமாக்கு கின்றான் போலும். அத்திமலையானை மீட்கும் வரை எனக்கு வேறு பணி இல்லை என்றே நினைத்திருந்தேன்.

காதல், திருமணம் பற்றியெல்லாம் நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இனி வடபல்லவமும், தென்பல்லவமும் ஒரே பல்லவமாக மீண்டும் பயணிக்கும். அத்தை மகள் ரத்தினமும், மாமன் மகன் மாணிக்கமும், மங்கலநாணில் ஒன்றாகக் கோர்க்கப்பட்டு, உக்ரோதயத்தைப் போன்று அத்திமலையானின் ஆபரணமாகத் திகழப் போகிறது!" என்றபடி அவளை அணைத்துக் கொண்டான்.

"அதுதான் அத்திமலைத்தேவனின் சித்தம் என்றால் அங்ஙனமே நடக்கட்டும்!" - கல்பலதா கூறியபடி அவனது தோளினில் சரிந்தாள்.

"ததாஸ்து. தனது சித்தம் அதுதான் என்பதை ஏற்கெனவே உணர்த்திவிட்டான், அத்திமலைத்தேவன்!"- திடீரென்று குரல் ஒலிக்க, இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர். லலாடிகா அங்கே வந்து நிற்பதைக் கண்டு இருவரும் அவசரமாக விலகினார்கள்.

"என்ன விஷயம், லலாடிகா?" - பார்த்திபன் கேட்டான்.

"இறைவனின் திருவடியை அடைந்துவிட்டார்!"- லலாடிகா கூற, இருவரும் அமைதியாக அவளைப் பார்த்தனர்.

"யார் எனது பாட்டியா, அல்லது அவரது தந்தையா?"- கல்பா கேட்டாள்.

"வடபல்லவமும், தென் பல்லவமும் ஒன்றாக இணைந்துதான் மரணத்தை ஏற்றன. இங்கே மனங்கள் ஒன்றுபடுவதற்குச் சற்று முன்பாகத்தான் அங்கே சகோதரனும், சகோதரியும் ஒன்றாகப் புறப்பட்டுச் சென்றனர். இதுவும் அத்திமலையானின் சித்தம்தான் போலும்." - லலாடிகா கூறினாள்.

பார்த்திபனும், கல்பலதாவும் உறைந்து போய் நின்றனர்.

# 11. சிந்தனை செய், சிந்தூரா!

**பொ**ன்மாளிகையின் உச்சியில் நின்றிருந்த, பழையாறை செங்கம்பாடி சிந்தூரன் தனது கையில் ஏந்தியிருந்த ஸ்வர்ண செங்கல்லை உயர்த்திக் காட்டினான். கீழே குழுமியிருந்த கூட்டத்தினர், மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அந்த ஒரு ஸ்வர்ண கல்லைப் பதித்து விட்டால், பொன்னாழி என்கிற ஆதித்த கரிகாலனின் கனவு மாளிகையின் பணிகள் பூர்த்தியாகிவிடும். பிரவாள மாளிகை நினைவிருக்கிறதா? சிம்மவர்மன் தனது மகள் நவரத்ன பல்லவிக்குப் பரிசாக அளித்த மாளிகையின் உச்சியில் பன்னிரண்டு அடி உயரமுள்ள புகை போக்கியை வைத்திருந்தானே. அந்தப் புகைபோக்கியில் தானே பத்தடி பெட்டகத்தினுள் ஒன்பதடி அத்திமலையானின் சிலையைப் பதுக்கி இருந்தான், மல்ல எதி. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஆதித்த கரிகாலனிடம் வந்து சேர்ந்திருந்தார், அத்திமலைத்தேவன். அத்திவரதனை தன்னிடம் சேர்ப்பித்த அந்தப் புகைபோக்கியை ஆதித்த கரிகாலனால் மறக்க முடியவில்லை. அது போலவே தனது பொன்னாழி மாளிகையில் ஒரு கோபுரத்தை நிறுவும்படி சிந்தூரனிடம் கேட்டுக் கொண்டான். அந்தக் கோபுரத்தின் உச்சியில்தான் சிந்தூரன் இப்போது நின்று கொண்டிருந்தான்.

இதோ! அந்தக் கடைசி ஸ்வர்ண கல்லைப் பதித்துக் கொதிக்கும் ஸ்வர்ண குழம்பை, அதன் பக்கங்களில் வார்த்துவிட்டால், பொன்னாழி மாளிகை முற்றுப் பெறும். கீழே குழலழகனுடனும் நேமியங்கையருடனும் நின்றிருந்த ஆதித்த கரிகாலன், பரவசத்துடன்

அண்ணாந்து அந்தக் கடைசி ஸ்வர்ணக் கல்லை நோக்கிக் கொண்டிருந்தான். இவனுக்கு இன்னும் என்ன வேண்டும்? இவன் நினைத்ததெல்லாம் நடக்கின்றன. எல்லாம் அத்திமலைத்தேவன் பிரதிமை கிடைத்த வேளை. ஸ்வர்ணமுகி காட்டில் தங்கச் சுரங்கங்கள் இவனுக்குச் சொந்தமாயின. அந்த ஸ்வர்ணத்தைக் கொண்டு பொன்னாழி என்கிற தனது கனவு மாளிகையையும் எழுப்பிவிட்டான். வீரபாண்டியனின் தலையையும் வாங்கிவிட்டான். பாணப்பத்திரம் குறித்துப் பழுவேட்டரையரும், அநிருத்தரும், பிரச்னைகளை உண்டாக்குவார்களோ என்று எண்ணியிருக்க, அவர்களே, வீரபாண்டியனின் தலையை வாங்கியதற்குப் பரிசாக ஸ்வர்ணக் குவியலை இவனுக்குக் கொடுத்து விட்டார்கள். வளங்களை வாரி வழங்கும் அத்திமலைத் தேவனை இவனுக்கு மட்டும் உரிய இடத்தில் பத்திரப்படுத்திவிட்டான். இவனுக்கு ஒரு குறைவும் இல்லை.

“இளவரசே! உமக்கு இன்னும் என்ன குறை! அதோ அந்தக் கடைசி ஸ்வர்ண பில்லையைப் பதித்துவிட்டால், பிறகு உமது கீர்த்தி உலகமெங்கும் பரவும். பொன்னாழி மாளிகை உங்கள் புகழ் பாடப்போகிறது. ஒரு நல்ல மனைவியைத் தேடி மணந்து கொண்டு சோழ மன்னனாகப் பதவியையும் ஏற்றுக்கொண்டு உலகம் மெச்ச வாழப் போகிறீர்!” -நேமியங்கையர் கூற, ஆதித்த கரிகாலன் புன்சிரிப்புடன் அவரையும், குழலழகனையும் நோக்கினான்.

பார்த்திபன் மட்டும் இப்போது உடன் இருந்திருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். அவனது தந்தை இறந்து போனதால் அவருக்குரிய ஈமச்சடங்குகளைச் செய்து கொண்டிருக்கிறான் போலும். விருந்தினராகத் தங்கியிருந்த மூதாட்டி ஒருவரும் இறந்துவிட்டதாகத் தகவல் வந்ததே. ஒன்றுக்கு இரண்டு மரணங்கள் என்றால் ஈமப் பணிகள் அதிகமாகத்தான் இருக்கும். பார்த்திபனை

நினைத்த மாத்திரத்தில் அவனது மாளிகையின் உணவறையில் தான் பார்த்த கல்பலதாவின் முகம் ஆதித்தனின் மனக்கண்ணில் நிழலாடியது. எவ்வளவு பேரழகியாகத் தோன்றினாள் அந்தப் பெண். ஆனால் அவள் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவளா? அவளது பார்வையில்தான் என்ன கூர்மை! அவளது நடையுடை பாவனையில் ஒருவித ராஜகளை அல்லவா காணப்பட்டது!

"உங்களுக்கு ஏற்ற ஒரு நல்ல மனைவியைத் தேடிக் கொண்டு பொன்னாழியில் மன்னனாக வாழுங்கள்"- நேமியங்கையர் இவ்வாறு கூறியவுடனேயே அவனது சிந்தையில் தோன்றிவிட்டாள், கல்பலதா. பார்த்திபனிடம் அவளைப் பற்றித் தகவல்கள் கேட்டறிய வேண்டும். தகதகக்கும் இந்தப் பொன்னாழி மாளிகையில் அந்தப் பேரழகி வளைய வரவேண்டும். பொன்னாழிக்கு அழகு சேர்க்கும் பொன் ஆரணங்கு அவள்.

திடீரென்று கொம்பு வாத்தியங்களும், முரசுகளும், மங்கள வாத்தியங்களும் முழங்க, பிரம்ம தாளங்கள் ஒலியெழுப்ப, வேதியர் வேத கோஷம் எழுப்ப, சிந்தூரன் தான் கையில் ஏந்தியிருந்த ஸ்வர்ணக் கல்லை 'பொன்னாழி' என்று வடிக்கப்பட்டிருந்த பகுதியில் பதித்து, கொதிக்கும் ஸ்வர்ணக் குழம்பை அதன் பக்கங்களில் வார்த்தான். அந்தக் கல்லும் உறுதிபட சிந்தூரன், ஸ்வர்ணக் குழம்புக் கலயத்தைச் சாரத்தினில் வைத்துவிட்டு, ஆதித்த கரிகாலனை நோக்கிப் பணிவுடன் கைகூப்பிக் குனிந்தான்.

"பலே சிந்தூரா!" தனது பெருவிரலைக் காட்டி அவனைப் பாராட்டினான், ஆதித்த கரிகாலன். "எனது கனவு மாளிகைக்கு உயிர்கொடுத்துவிட்டாய். உலகிலேயே பொன்னாழி போன்ற ஒரு மாளிகை இல்லை என்று அனைவரும் பேசப் போகிறார்கள்!" - பேருவகையுடன் ஆதித்தன் கூறினான்.

பணியாளர்களுக்கு அன்று இரவு விருந்து வைத்தான், ஆதித்த கரிகாலன். செங்கம்பாடி சிந்தூரனுக்குத் தனது கையாலேயே உணவு பரிமாறி, பேசியதற்கு மேலாகவே வெகுமானம் கொடுத்து அவனுக்குப் பொன்னாடையைப் போர்த்தினான்.

"பொன்னாழி என்கிற பொன்மாளிகையை எழுப்பிய உனக்கு இந்தப் பொன்னாடை என்பது சிறிய விஷயம்தான். ஆனால் பொன்னாழி உள்ளவரை உனது பெயரும் நிலைத்து நிற்கும் என்பதை உனக்கு இந்தப் போர்வை உணர்த்திக் கொண்டே இருக்கும், சிந்தூரா!"- உணர்ச்சியுடன் கூறினான், ஆதித்த கரிகாலன்.

"இளவரசே! எனது முயற்சியால் மட்டும் இந்த மாளிகை எழவில்லை. பல்லவ இளவரசர், இரவு பகலாக எனக்குத் துணை நின்று இந்தப் பணியினைச் செய்ய உதவியுள்ளார். யோசனைகளைக் கூறியும், பணியாளர்களின் நலன்களையும் தேவைகளையும் கவனித்துக் கொண்டார். பணிகளின் போது உடல் நலம் பாதித்தவர்களையும், விபத்தில் சிக்கியவர்களையும் உடனுக்குடன் வைத்தியர்களைத் தருவித்துக் கவனித்துக் கொண்டார். பணியாளர்களுக்கான உணவுக்கூடமும், மருத்துவ வசதிகளும் நாள் முழுவதும் கிடைத்தன. தங்களுக்குக் கூட தெரியாது. பல இரவுகள் இங்கே எங்களுடன் தங்கி, மறுநாள் பணிகளைக் குறித்து விவாதித்து இருக்கிறார். அவர் தங்கள் மீது செலுத்தும் அன்பைக் கண்டு நாங்கள் திகைத்துப் போனோம். 'எனது நண்பன் ஆதித்த கரிகாலன் வசிக்கப் போகும் மாளிகை. அதில் குற்றம், குறைகள் இருக்கக்கூடாது' என்று எங்களை எச்சரித்துக் கொண்டே இருப்பார்!" - சிந்தூரன் கூறியதும், ஆதித்தகரிகாலன் நெகிழ்ந்து போனான்.

தனக்கென்று ஒரு நம்பிக்கையான இதயம் வேண்டும் என்றுதான் பார்த்திபனை நண்பனாக ஏற்றுக் கொண்டிருந்தான். அவன் பல்லவன் என்பதால்

அவனிடம் எச்சரிக்கையுடன் பழக வேண்டும் என்று குந்தவை கூட இவனைப் பலமுறை எச்சரித்திருக்கிறாள். ஆனால் பார்த்திபனுடன் பழகத் தொடங்கியதன் பின், இவனது இன்ப துன்பங்களைத் தனதாகக் கருதிய அவனது வெள்ளை மனதைக் கண்டு அவனிடம் லயித்துப் போனான். தனக்காக அவன் எடுத்துக் கொண்ட சிரமங்களைச் சிந்தூரனின் வாயிலாக அறிந்ததும், பார்த்திபனின் மீது அவன் கொண்டிருந்த அன்பு இன்னும் பன்மடங்காகியது.

"சிந்தூரா! நல்ல சமயத்தில்தான் நினைவுப் படுத்தினாய். பல்லவ காஞ்சியில் நான் பொன்னாழி மாளிகையை எழுப்பியுள்ளேன். அதற்குப் பல்லவனாக அவன் செய்த உதவிகள் ஏராளம். பொன்னாழி எழுப்பப்படுவதற்கு அவனும் ஒரு காரணம். உன்னைக் கௌரவித்தது போன்று நாம் அவனையும் கௌரவிக்க வேண்டும். அவன் இங்கே வரமுடியாத நிலை. நாம் அவன் மாளிகைக்குச் சென்று அவனை கௌரவிப்போம்!" என்று கூறி, உடனே புறப்படுவதற்கு ஏற்பாடு செய்தான். இரதத்தில் ஆதித்த கரிகாலன், நேமியங்கையர் மற்றும் சிந்தூரன் அமர, குழலழகன் இரதத்தினை செலுத்தினான்.

பார்த்திபனின் மாளிகையை அடைந்தார்கள். மாளிகையின் வாயிலில் காவல் புரிந்து கொண்டிருந்த காவலர்கள் ஆதித்த கரிகாலனைப் பார்த்ததும் பதறிப் போய் அப்போதுதான் இரவு உணவு உண்பதற்கு அமர்ந்திருந்த, பார்த்திபன், கல்பலதா மற்றும் சமந்தக பல்லவியின் முன்பாக நின்றனர்.

"சோழ இளவரசர் வந்திருக்கிறார்!" என்று காவலர்கள் கூறியதும், மூவரும் எழுந்து மாளிகையின் வாயில்புறம் நகர, அவர்களை லலாடிகா பின்தொடர்ந்தாள்.

"வரவேண்டும், ஆதித்தா!" - முகம் மலர அவனையும் மற்றவர்களையும் வரவேற்றான், பார்த்திபன்.

“நீ எனக்காக எடுத்துக் கொண்ட சிரமங்களைப் பற்றியெல்லாம் சிந்தூரன் இன்றுதான் தெரிவித்தான். உனது பல்லவ நாட்டில் எனது பொன்னாழியை எழுப்புவதற்கு அனுமதித்த உன்னை கௌரவிக்கவே வந்திருக்கிறேன்!” என்ற ஆதித்தன், தான் கொண்டு வந்திருந்த பதக்கத்துடன் கூடிய ஸ்வர்ண ஹாரத்தைப் பார்த்திபனுக்கு அணிவித்து, அவனுக்கு பட்டுப் போர்வை ஒன்றைப் போர்த்தினான்.

‘இந்த ஹாரத்திற்குப் பதிலாக அத்திமலைத்தேவனின் பிரதிமையை அளித்திருந்தால் மகிழ்ந்திருப்பேனே!’- மனதினுள் நினைத்தான், பார்த்திபன்.

அவனுக்குப் போர்வையைப் போர்த்தும் போது பின்பாகச் சற்றுத் தொலைவில் நின்றிருந்த கல்பலதாவின் மீது ஆதித்த கரிகாலனின் பார்வை பதிந்தது. அன்றைவிட இன்று இன்னும் பேரழகுடன் அவள் காட்சி தந்ததாகத் தோன்றியது. அவளுடைய அகன்ற கண்கள் காந்தங்களாக இவனது கண்களை ஈர்க்க, போர்வையைப் போர்த்திவிட்டு, பார்த்திபனை இறுக்கி அணைத்துக் கொண்டாலும், தனது பார்வையை கல்பலதாவின் மீதே பதித்திருந்தான், ஆதித்தன்.

அவனது பார்வை தன்னைத் துளைப்பதை உணர்ந்ததும், நகர்ந்து சென்று லலாடிகாவின் பக்கலில் நின்றாள், கல்பலதா. அவளது அந்த ஒரு அசைவில் மலைத்துப் போனான், ஆதித்த கரிகாலன்.

தேரின் சக்கரங்கள் உருண்டோட, அதனால் மேல்பாரத்தைத் தாங்காமல் தேரின் அடிப்புறம் அசைந்தாட, அதனால், அது அசையும் திக்கை நோக்கித் தேரின் அலங்கரிக்கப்பட்ட மேற்புறமும் அசைவது போன்று அவள் நடந்து சென்று லலாடிகாவின் பக்கம் நின்றதைக் கவனித்தான். உடனே, பேரெழில் வாய்ந்த லலாடிகாவின் அழகே சூரியனின் முன்பாக ஒளிர்ந்து கொண்டிருக்கும் அகல் விளக்காக மாற, அதனையும் கவனித்தான், ஆதித்த கரிகாலன்.

"பொன்னாழியின் பணிகள் நிறைவடைந்துவிட்டதா.. மெத்த மகிழ்ச்சி ஆதித்தா!" - பார்த்திபன் கூறினான்.

"முடிந்தது நண்பா! வரும் புதிய வளர்நிலவு தோன்றும் நாள் நான் பொன்னாழியில் குடியேறப் போகிறேன். நீ அன்று முழுவதும் என்னுடன்தான் இருக்க வேண்டும். எனது ஆலோசகனும் நண்பனுமான உனக்கு, பணி செய்யவும், ஓய்வெடுக்கவும் அறைகளை ஒதுக்கித் தருகிறேன். நீ பொன்னாழியில் கூடத் தங்கிக் கொள்ளலாம். நான் பொன்னாழி போகும் தினத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாட உள்ளேன். மன்னர் சுந்தர சோழர், எனது தாய், தங்கை குந்தவை, தம்பி அருண்மொழி, அநிருத்த பிரம்மராயர், பழுவேட்டரையர் இவர்களை சகோதரர்கள் என்று அனைவருமே வருகிறார்கள்.. இவர்களைத் தவிர, என்னை வளர்த்த எனது பாட்டனார் மலையமானும் திருக்கோவிலூரில் இருந்து வருகிறார். அனைவரும் ஒன்றுகூடப் போகிற இந்த வைபவத்தில் உனது தந்தை இல்லாததுதான் பெரும் குறை." - ஆதித்தன் கூற, பார்த்திபன் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தான்.

"எல்லா ஏற்பாடுகளையும் நேமியங்கையரும், குழலழகனும் செய்வார்கள். சிந்தூரா! பணிகள் முடிந்தது என்று நீ உடனே பழையாறைக்குப் புறப்பட்டுவிடாதே. பொன்னாழியில் சிறிது காலம் தங்கி, குறைகள் ஏதும் இல்லையா என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு, பிறகே நீ பழையாறை திரும்ப வேண்டும்!" என்று ஆதித்த கரிகாலன் கூற, சிந்தூரன் பணிவுடன் தலையசைத்தான்.

"நீங்கள் உணவருந்தும் சமயமிது என்று நினைக்கிறேன். நாம் பிறகு சந்திப்போம். எனக்கும் சற்று ஓய்வு தேவை. நான் ஒத்தாடை கிளம்புகிறேன்!" என்று புறப்பட, மற்றவர்களும் அவனைப் பின்தொடர, திடீரென்று எதையோ நினைத்தவனாக மீண்டும் திரும்பி பார்த்திபனை நோக்கி நடந்தான், ஆதித்த கரிகாலன்.

"பார்த்திபா! நீ பொன்னாழிக்கு வரும்போது அதோ நிற்கும் உனது உறவுப் பெண்ணையும் அழைத்து வா! அவளது பெயர் என்ன?" - ஆதித்த கரிகாலன் கேட்டதும், பார்த்திபனின் வாய் உலர்ந்து போனது. அவன் கல்பலதாவை பற்றித்தான் குறிப்பிடுகிறான் என்பதைப் புரிந்து கொண்டான்.

"கல்பலதா!" என்றான் பார்த்திபன்.

ஆதித்த கரிகாலனின் குறி கல்பலதாவின் மீது விழுந்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டான் பார்த்திபன். இனி அவனைச் சமாளிப்பதே கல்பலதாவுக்குப் பெரிய சவாலாகத்தான் இருக்கும். இதற்காகத்தான், கூடிய வரையில் கல்பா அவன் கண்களின் முன்பாக நடமாடக் கூடாது என்று நினைத்திருந்தான், பார்த்திபன். ஆதித்த கரிகாலன் தன்னை வெறித்துப் பார்த்ததால், அவன் மீது இன்னும் அதிகம் ஆத்திரம் கொண்டிருந்தாள் கல்பா.

"ஆதித்த கரிகாலனைக் கொல்வதற்கு முன்பாக அவனது இரு கண்களையும் பிடுங்கி எறிய வேண்டும்!"- சற்று உரத்த குரலிலேயே கல்பா முணுமுணுக்க, அவளை, சினத்துடன் உறுத்துப் பார்த்தான், பார்த்திபன்.

"அவனது கண்பார்வையில் படாதே என்று அன்றே உன்னை எச்சரித்தேன். நீதான் கேட்கவில்லை!"- அவளைக் கடிந்தான்.

"அடுக்களை வரை நுழையும் உரிமையைப் பெற்றிருக்கிறார் உங்களது ஆருயிர் நண்பன். நான் என்ன செய்யட்டும்? அதற்குத்தான் நான் அன்றே புறப்படு கிறேன் என்றேன்! நீங்கள்தான் கேட்கவில்லை."- கல்பலதா பொருமினாள்.

அதுவரை மௌனமான உணவு அருந்திக் கொண்டிருந்த சமந்தக பல்லவி, மகளை கோபத்துடன் பார்த்தாள்.

"என்ன இருந்தாலும் பார்த்திபன் உனது முறை மணமகன். அவனது குணமே பத்தரைமாத்து அபரஞ்சி பொன்னாக உள்ளது. வெளியே சென்று மற்ற ஆண்களிடம் பேசினால் உனக்குத் தெரியும், பார்த்திபன் எவ்வளவு நல்லவன் என்று. அவனுக்கே சினத்தை உண்டாக்குமளவுக்கு நீ பேசுகிறாய் என்பதைப் புரிந்து கொள், கல்பா. அவன் உனது முறைமாப்பிள்ளை என்பதை உணர்ந்து கொண்டு பேசு!" - மகளுக்குப் புத்தி உரைத்தாள், சமந்தகி.

"அவள் என்ன செய்வாள், அத்தை! நான் அவளுக்கு முறைமாப்பிள்ளை போன்று, ஆதித்த கரிகாலனும் முறைமாப்பிள்ளைதானே. அவனுக்கு மட்டும் இவளை வெறித்துப் பார்க்க உரிமை இல்லையா என்ன..? முறை மாப்பிள்ளைகள் என்றால் முறைத்துக் கொண்டுதான் இருப்பார்கள். நானே சமயத்தில் கல்பாவை முறைக்க வில்லையா?" - நகைச்சுவையாகத்தான் கூறினான், பார்த்திபன். ஆனால் ஆவேசம் கொண்டவளாக உணவுத் தட்டைத் தள்ளிவிட்டு, எழுந்து நின்றாள், கல்பலதா.

"ஏதேது! நண்பன் ஆதித்த கரிகாலனுக்காக நீங்களே எனது தாயிடம் பெண் கேட்பீர்கள் போல இருக்கிறதே?" - கல்பா வெகுண்டாள்.

பார்த்திபன் பொறுமையை இழந்தான். அவளை சமாதானப்படுத்த வேண்டும் என்றுதான் நினைத்தான். ஆனால் எல்லாவற்றையும் பொறுமையாக அணுகாமல், எடுத்தேன் கவிழ்த்தேன் என்பது போன்று உரையாடும் கல்பலதாவை சிறிது நேரம் அழவைக்க வேண்டும் என்று தோன்றிவிட்டது. அடியாத மாடு படியாது என்பது போன்று, இவளை காயப்படுத்திதான் வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று எண்ணினான்.

"ஆம்! அப்படி ஒரு நிலை வந்து, ஆதித்த கரிகாலன் உன்னைக் காதலித்தால், நான் அவன் சார்பாக உனது

தாயிடம் பெண் கேட்பேன். அவன் என் மீது வைத்திருக்கிற அன்பைக் கண்டாய் அல்லவா? தேடி வந்து என்னைக் கௌரவித்த அவனை நான் அப்படிதான் கௌரவிக்க முடியும்." - பார்த்திபன் சொல்ல, சமந்தகியே அதிர்ந்து போனாள்.

"இது என்னப்பா இப்படிப் பேசுகிறாய், பார்த்திபா? எனது தந்தை அரிஞ்சய சோழர். அவரது பெயரன் ஆதித்த கரிகாலன். அவரது பெயரனும், எனது மகளும் எப்படி மணக்க முடியும்?" - சமந்தகி குரல் உடைந்தது.

"அரிஞ்சயரின் மகன் சுந்தரனும், நீங்களும் அண்ணன் -தங்கை முறைதானே! அவ்வகையில் ஆதித்த கரிகாலனும் உங்கள் மகளுக்கு முறைமாப்பிள்ளை தான்!" - பார்த்திபன் கூற, வீறிட்டு அலறினாள், கல்பா.

"இந்த விவாதமே எனக்கு அருவருப்பினை ஏற்படுத்துகிறது. நீங்கள் என்னை மணக்க வேண்டாம். யாரை மணக்க வேண்டும் என்பதை நானே தீர்மானிக்கிறேன். இனியும் எனது திருமணத்தைப் பற்றி யாரும் பேசக் கூடாது!" என்றபடி அந்த அறையைவிட்டு வெளியேறியவள், சடாரென்று நின்று பார்த்திபனை திரும்பி நோக்கினாள்.

"விரைவில் நான் ஆதித்த கரிகாலனைக் கொல்லப் போகிறேன். அது குறித்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" - கல்பா வீறாப்புடன் கேட்டாள்.

"உனது முயற்சிகள் முறியடித்து, எனது உயிர் நண்பனைக் காப்பேன்!"-விடாப்பிடியாகப் பேசினான், பார்த்திபன்.

"நான் அவனை தனிமையில் சந்தித்து அவனைக் கொன்றால், உங்களால் என்ன செய்ய முடியும்?" - கல்பா கேட்டாள்.

"உன்னை அவனோடு தனிமையில் விட்டால்தானே? அவனை நீ அணுக முடியாதபடி நான் காவல் புரிவேன்?" - பார்த்திபன் கூறினான்.

"அப்படி ஒருவேளை, ஆதித்த கரிகாலன் என்னைக் காதலிக்கத் துவங்கி, என்னைப் பெண் கேட்டால், அதற்கு நானும் சம்மதித்தால், நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்? பள்ளியறையில் வந்து உங்கள் நண்பனுக்குக் காவல் புரிவீர்களா?" - அனல் பறக்கும் கண்களுடன் அவனை நோக்கிக் கேட்டுவிட்டு, அறையைவிட்டு வெளியேறினாள், கல்பா..

இந்தக் கேள்வியைப் பார்த்திபன் எதிர்பார்த்திருக்க வில்லை. அயர்ந்து போய் நின்றிருந்தான், பார்த்திபன்.

அன்றிரவு-

பார்த்திபனும், சமந்தக பல்லவியும் உறங்கச் சென்று விட்டனர்.

கல்பலதாவுக்குக் கோபமும், படபடப்பும் அடங்கவே வெகு நேரம் பிடித்தது. சாளரத்தின் அருகே சென்று வானத்து தாரகைகளை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந் தாள். அப்போது அவளது அறைக் கதவை யாரோ திறக்கும் ஒலி கேட்க, திரும்பிப் பார்த்தாள். லலாடிகா தான் சற்றே இறுக்கமான முகத்துடன் நின்றிருந்தாள்.

"எனக்கு இப்போது ஒன்றும் தேவையில்லை. நீ போகலாம்!" - எரிச்சலுடன் கூறினாள், கல்பா.

"உங்களது தேவையைக் கேட்பதற்காக நான் வரவில்லை. இன்று பல்லவ இளவரசரிடம் தாங்கள் பேசிய பேச்சு மிகையாக இருந்தது. அவர் மிகவும் புண்பட்டுப் போயிருக்கிறார். எனவே, அவரை இனியும் புண்படுத்தாதீர்கள் என்று வேண்டுகோள் விடுவதற்காக வந்திருக்கிறேன்." - லலாடிகா கூறினாள்.

"உனது எஜமான விசுவாசத்தைப் பாராட்டுகிறேன். ஆனால், உனது எஜமானர் ஆதித்த கரிகாலனுக்கு பரிந்து கொண்டு என்னைக் காயப்படுத்தினால் நான் அதைக் கேட்டுக் கொண்டு மௌனமாக இருக்க வேண்டுமா?

என்னிடம் தனது காதலைத் தெரிவித்து விட்டு, பிறகு ஆதித்த கரிகாலனுக்கு என்னைப் பெண் கேட்பேன் என்று கூறுவது எனக்குப் பெருத்த அவமானம் இல்லையா?" - கல்பலதா கேட்டாள்.

"பல்லவ இளவரசரின் பிரச்னையைத் தாங்கள் அறியவில்லை. ஆதித்த கரிகாலனின் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால், முதலில் விசாரணைக்கு உள்ளாவது அவர்தான். நீங்கள் மட்டும்தான் ஆதித்த கரிகாலனைக் கொல்வதற்குக் காத்திருப்பதாக எண்ணாதீர்கள்? இன்னும் பலரும் காத்திருக்கிறார்கள்!" - லலாடிகா கூறினாள்.

திகைப்புடன் அவளைத் திரும்பிப் பார்த்தாள், கல்பலதா.

"வேறு யாரெல்லாம் காத்திருக்கிறார்கள்?"

"ஒரு இரவுக்குள் அடங்காது அந்தப் பட்டியல். பாண்டியர்களின் ஆபத்துதவிகள் என்கிற போர்வையில் உள்நாட்டு எதிரிகளே அவரை குறிவைத்திருக்கிறார்கள். கொலை செய்வது யாராக இருப்பினும், அதற்கான பதிலைக் கூறும் நிலையில்தான் பார்த்திபன் இருக்கிறார். பல்லவ இளவரசர் பார்த்திபருக்கு சோழர்களால் அளிக்கப்பட்டிருக்கும் தண்டனையே ஆதித்த கரிகாலனின் நட்புதான். அவரது உடலில் ஒரு கீறல் விழுந்தாலும், அதற்கு முழுப் பொறுப்பும் பார்த்திபர் தான். அதனால்தான், உங்களது சபதத்தை நீங்கள் நிறைவேற்றக் கூடாது என்று நினைக்கிறார். ஆதித்த கரிகாலனை நீங்கள் கொன்றால், பார்த்திபனையும் சேர்த்து இழப்பீர்கள்! அதைத் தங்களிடம் சொல்ல முடியாமல், பார்த்திபன் தவிக்கிறார்!" - லலாடிகா கூறினாள்.

கல்பலதா அவளைச் சந்தேகத்துடன் நோக்கினாள். "தோழியான உனக்கு இதெல்லாம் எங்ஙனம் தெரிய

வந்தது? தனது மனவேதனைகளை உன்னிடம் இளவரசர் கூறுகிறாரா? அப்படியென்றால், உனக்கும் அவருக்கும்..” என்று துவங்கிய கல்பலதாவை இடைமறித்தாள், லலாடிகா.

“அவசரப்படாதீர்கள். உங்கள் கற்பனைக் குதிரை விபரீதமாகத் தறிகெட்டு ஓடுகிறது” என்றவள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, கல்பலதாவை நெருங்கி வந்தாள்.

“நான் பார்த்திபேந்திர பல்லவரின் சகோதரி. அவரது தந்தை தருமவர்மருக்கும், பவராகினி என்கிற பாடகிக்கும் பிறந்தவள். எனது தாயின் மரணத்திற்குப் பிறகு அடைக்கலம் தேடி தந்தையிடம் வந்தேன். அவரோ, என்னை ஏற்றுக் கொண்டாரே தவிர நான் யார் என்னும் உண்மையைத் தனது முதல் மனைவியிடமும், பார்த்திபனிடமும் கூறவில்லை. அவரது மனைவியின் மரணத் திற்குப் பிறகு இந்த மாளிகையின் முழுப்பொறுப்பும் என்னிடம் வந்து விட்டது. நான் அவரது தங்கை என்கிற விவரம் பார்த்திப பல்லவருக்குத் தெரியாது. எனது சகோதரன் படும் வேதனைகளைத் தொலைவில் இருந்து பார்த்துக் கொண்டு இருக்கிறேன். அவரை நெருங்கி ஆறுதல் கூட என்னால் கூற முடியாத நிலை. எனவே தான், நீங்கள் இன்று அவரை புண்படுத்திய போது என்னால் அதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை” என்ற லலாடிகாவின் கண்களில் நீர் தளும்ப, கல்பலதா அவளைத் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தான் ஒருவள்தான் உலகில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் இளவரசி என்று இதுகாறும் மனம் பொருமிக் கொண்டிருந்தாள். இந்த லலாடிகாவின் கதை இவளது வாழ்க்கையைவிடச் சோகமாக அல்லவா இருக்கிறது. இவளுக்காவது அம்மா, பாட்டி என்று அழைப்பதற்கு உறவுகள் இருந்தன. உறவுகள் இருந்தும் அவர்களை முறை சொல்லி அழைக்க முடியாத

நிலையில் அல்லவா லலாடிகா இருக்கிறாள். தனது நடத்தையை எண்ணி கல்பாவுக்கு அவமானமாக இருந்தது.

லலாடிகாவை நெருங்கி அவளது தோளில் ஆதூரத்துடன் கை வைத்தாள்.

"என்னை மன்னித்துவிடு லலாடிகா! நீயும் பல்லவ இளவரசிதான். எனது கடுமையான பேச்சுக்கும், ஆவேச நடத்தைக்கும் பல்லவ இளவரசரிடம் நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இனி உனக்கு அண்ணனும் உண்டு, அண்ணியும் உண்டு! நாம் இருவரும் இணைந்து பார்த்திப பல்லவரின் வாழ்க்கையில் மகிழ்ச்சியை உண்டு செய்வோம்!" என்று கூற, லலாடிகா புன்முறுவலித்தாள்.

"ஆனால்.. இளவரசி!" என்ற லலாடிகாவின் வாயை இறுக மூடினாள், கல்பா. "உனது சகோதரன் இல்லாத போது நீ என்னை அண்ணி என்றே அழைக்க வேண்டும்!" என்று கல்பா கட்டளையிட்டாள்.

"சரி அண்ணி! ஆனால் நான் அவரது தங்கை என்பது இப்போது அண்ணனுக்குத் தெரிய வேண்டாம். பிறகு, இருக்கும் வேதனைகள் போதாது என்று என்னைப் பற்றியும் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பார்." - லலாடிகா கூறினாள்.

"ஆதித்த கரிகாலனிடம் உனது அண்ணன் ஏன் இவ்வளவு தாழ்ந்து போகிறார்? சோழர்களை எதிர்த்துப் பொங்கி எழக்கூடாதா?" - கல்பா கேட்டாள்.

"காஞ்சியின் மக்களும் அதைத்தான் எதிர்பார்க்கிறார்கள், அண்ணி. உங்களுக்குத் தெரியுமா? ஆதித்த கரிகாலன் காஞ்சியில் நுழைந்த போது மக்கள் ஆரவாரம் செய்யவில்லை. அண்ணன் அவரை வரவேற்று அவருடன் கைகோர்த்து நின்ற போதுகூட, மக்கள் அமைதியாகவே இருந்தார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது, சோழர்களுக்கு எதிராக அண்ணன் பொங்கி எழுந்து

போர் புரிய வேண்டும் என்பதே. ஆனால், அண்ணன் ஏனோ பொறுத்துப் போகிறார். ஒருவேளை, அத்திமலைத் தேவனின் பிரதிமை ஆதித்த கரிகாலனிடம் சிக்கி யிருக்குமோ என்கிற கவலையில் அதை மீட்கும் வரை நட்பைக் கடைபிடிக்கின்றார் போலும்!" - லலாடிகா கூறினாள்.

"அத்திமலைத்தேவனின் பிரதிமை ஆதித்த கரிகாலனிடம்தான் இருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம்? நாங்கள் கொண்டு வந்த சுவடியில் பிரவாள மாளிகையில்தான் சிலை மறைக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருந்தது. நூற்றாண்டுகள் கழிந்து போன நிலையில், அந்தச் சிலை அங்குதான் இருந்ததோ, இல்லை களவாடப்பட்டதோ, இல்லை கிலமாகிப் போனதோ..?"- கல்பா கேட்க, லலாடிகா அவளது கூற்றை மறுப்பது போன்று தலையசைத்தாள்.

"பிரவாள மாளிகையில்தான் சிலை இருந்திருக்க வேண்டும். ஆதித்த கரிகாலன் வசம்தான் சிலை இருக்க வேண்டும் என்று அண்ணன் உறுதியாக நம்புகிறார்.. நீங்கள் மட்டும் அந்தச் சுவடியுடன் முன்னரே காஞ்சிக்கு வந்திருந்தால், ஆதித்த கரிகாலன் பிரவாள மாளிகையை இடித்துப் பொன்னாழியை எழுப்புவதற்கு முன்பாகவே அந்தச் சிலையைத் தேடி எடுத்திருக்கலாம்!" - லலாடிகா கூறினாள்.

"உனது அண்ணன் நிச்சயம் தனது நண்பனிடம் அந்தச் சிலையைப் பற்றிக் கேட்கமாட்டார். நாம்தான் ஏதாவது செய்து தகவலைப் பெற வேண்டும்!" - கல்பா கூறினாள்.

"அதற்கு ஒரு வழி இருக்கிறது. இன்று ஆதித்த கரிகாலனுடன் பொன்னாழி மாளிகையை எழுப்பிய செங்கம்பாடி சிந்தூரன் வந்திருந்தான் அல்லவா..? அவன்தானே பிரவாள மாளிகையை இடித்துத் தரை மட்டம் ஆக்கியவன். அத்திமலைத்தேவனின் சிலை அங்கே இருந்திருந்தால் நிச்சயம் அவனுக்குத்

தெரிந்திருக்கும். அவனிடம் கேட்டால் சிலை இப்போது எங்கே இருக்கிறது என்று தெரிய வரலாம்." - லலாடிகா கூறினாள்.

"நல்ல யோசனை! உனது அண்ணன் ஏன் இதனைச் சிந்திக்கவில்லை?" - கல்பா கேட்டாள்.

"சிந்தூரனிடம் பேசினால், அவன் ஆதித்த கரிகாலனிடம் விஷயத்தைக் கூறிவிடப் போகிறான் என்கிற அச்சம் காரணமாக இருக்கலாம். ஆனால் நாம் இருவரும் முயன்றால் ஒருவேளை, சிந்தூரனிடம் இருந்து தகவலைப் பெறலாம். அதற்கு உங்கள் உதவி தேவை."- லலாடிகா கூற, புருவத்தை உயர்த்தினாள், கல்பலதா.

"நான் இதில் என்ன செய்ய முடியும், லலாடிகா?"

"இன்று இரவு, ஆதித்த கரிகாலன் அண்ணனை கௌரவித்துவிட்டுப் புறப்படும்போது, வாயில்வரை சென்றவன், மீண்டும் வந்து அண்ணனின் செவியில் ஏதோ கிசுகிசுத்தான் அல்லவா? அதைத்தான் நமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளப் போகிறோம்." - லலாடிகா கூறினாள்.

"உண்மையில் ஆதித்த கரிகாலன் பல்லவ இளவரசரிடம் இரகசியமாகக் கூறியது என்ன?"-கல்பா கேட்டாள்.

"பெரிய விஷயம் ஒன்றுமில்லை. அவர் பொன்னாழியில் புகும் நாளை விமரிசையாகக் கொண்டாடப் போகிறார் அல்லவா? அந்த வைபவத்துக்கு உன்னையும் அழைத்துவரச் சொன்னாராம். பொன்னாழி மாளிகைக்கு நீ இன்னும் அழகு சேர்ப்பாய் என்றானாம், சோழ இளவரசன். இந்தத் தகவலை என்னிடம் கூறிய அண்ணன், உன்னிடம் பக்குவமாக விவரத்தைக் கூறும்படி சொன்னார்." - லலாடிகா கூறினாள்.

"அதுதானே பார்த்தேன். அந்த விவரத்தைக் கூறத்தான் இங்கே வந்திருக்கிறாய் போல இருக்கிறதே..?" மீண்டும் கல்பாவின் முகம் சிவந்தது.

"வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏற வேண்டாம். நான் வந்தது அதற்கில்லை. அத்திமலைத்தேவனைப் பற்றிய தகவலைப் பெறுவதற்கு ஒரு திட்டத்தோடு நான் வந்திருக்கிறேன்"- லலாடிகா கூறினாள்.

"அது என்ன திட்டம்?"- கல்பா ஆவலுடன் கேட்க, அவளது செவியில் தனது திட்டத்தை கிசுகிசுத்தாள், லலாடிகா.

"இந்நேரத்திலா பொன்னாழி செல்வது! யாராவது பார்த்துவிட்டால்?"- கல்பா கேட்க, லலாடிகா தைரியம் கூறினாள்.

"பொன்னாழி மாளிகையைக் காண வேண்டும் என்கிற ஆவலில் வந்தோம் என்று கூறிவிட்டால், ஆதித்த கரிகாலன் நம்புவான். தனது மாளிகையின் பெருமை களை அனைவரும் அறிய வேண்டும் என்கிற ஆவலில் இருக்கிறவன்! உனக்கு விசேஷ அழைப்பை வேறு தந்திருக்கிறான்!"- லலாடிகா கூற, சற்று யோசித்தவள் பிறகு ஒப்புக்கொண்டாள். பட்டு சால்வை ஒன்றை எடுத்துத் தன்னைப் போர்த்திக் கொண்ட கல்பா லலாடிகாவை பின்தொடர்ந்தாள். இருவரும் பார்த்தி பனின் மாளிகையைவிட்டு நீங்கி, ராஜவீதியில் நடக்கத் தொடங்கினர்.

தருமநகரம் அதிகத் தொலைவில் இல்லை. ராஜ வீதியின் திருப்பத்திலேயே தருமநகரம் தொடங்கிவிடும். ஆதிசரஸ்வதியின் கோயிலுக்கு முன்பாகவே பொன்னாழி மாளிகை வந்துவிடும். இருவரும் நடையைத் துரிதப் படுத்தி பொன்னாழியை அடைந்தனர்.

கல்பலதா உண்மையிலேயே பிரம்மித்து நின்று விட்டாள். அந்த இரவு வேளையிலும், பொன்னாழியைச் சுற்றி ஏற்றப்பட்டிருந்த தீபங்களின் ஒளியில் தகதகத்துக் கொண்டிருந்தது. மாளிகையைச் சுற்றி ஸ்வர்ணத்தால் ஒரு மதில் சுவர் எழுப்பப்பட்டிருந்தது. உள்ளே செல்வதற்கான நுழைவாயில் பூட்டப்பட்டிருந்தது. அந்த

ஸ்வர்ண மதில் சுவரைக் கடந்து அழகிய நந்தவனம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. நந்தவனத்தைச் சுற்றி உயர்ந்த கல்சுவர் ஒன்று எழுப்பப்பட்டிருந்தது. அந்தச் சுவரின் கீழ் பெரிய கூடாரம் ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. அதில்தான் செங்கம்பாடி சிந்தூரன் தங்கியிருந்தான்.

கட்டுமானப் பணியாளர்களுக்காக தருமவனத்தில் ஒரு சத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது.. சிந்தூரன் மட்டும் அவ்வப்போது வரும் அரசாங்க அதிகாரிகளிடம் ஆலோசனை செய்ய வேண்டும் என்பதற்காகக் கூடா ரத்தில் தங்கினான். மதிற்சுவரின் கூடாரத்தில் தீபம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. இன்னமும் சிந்தூரன் உறங்கச் செல்லவில்லை போலும். கல்பலதாவும், லலாடிகாவும் அந்தக் கூடாரத்தின் வாயிலில் சென்று நின்றார்கள்.

"ஐயா சிந்தூரரே!"- லலாடிகாதான் குரல் கொடுத்தாள்.

"யார்?"- வியப்புடன் குரல் கொடுத்த சிந்தூரன், கையில் விளக்குடன் கூடாரத்தைவிட்டு வெளியே வந்தான்.

"நாங்கள்தான்.. பார்த்திப பல்லவரின் மாளிகையில் தங்கியிருக்கும் தோழிகள்!"- லலாடிகா கூறியதும், தனது விளக்கை உயர்த்திப் பிடித்தான் சிந்தூரன். அவர்கள் இருவரையும் அன்று முன்னிரவு பார்த்திபனின் மாளிகையில் கண்டது நினைவுக்கு வந்தது.

"என்ன விஷயம் கூறுங்கள்?"- சிந்தூரன் அவர்களை வியப்புடன் பார்த்தான்.

"உண்மையிலேயே நீங்கள் எழுப்பிய பொன்னாழி அற்புதமாக இருக்கிறது. தருமநகரம் மட்டுமல்ல, காஞ்சியே உங்கள் கைவண்ணத்தால் அமரலோகமாக மாறிவிட்டது. பொன்னாழியைக் காண வந்த நாங்கள்

பரவசப்பட்டு நிற்கிறோம்!"- கல்பலதா கூறியதும் சிந்தூரனுக்கு உச்சி குளிர்ந்து போனது.

"இம்மாதிரி மாளிகை இதற்கு முன் இருந்ததும் இல்லை; இனிமேலும் இருக்கப் போவதும் இல்லை என்று சோழ பட்டத்து இளவரசரே மனமகிழ்ந்து பாராட்டினார்."- சிந்தூரன் பெருமையுடன் கூறினான்.

"அது குறித்து எங்கள் கவலையைத் தெரிவிக்கத்தான் இங்கே வந்திருக்கிறோம்!"- லலாடிகா கூற, திகைத்துப் போன சிந்தூரன், அவர்கள் இருவரையும் மாற்றி மாற்றிப் பார்த்தான். "என்ன சொல்கிறீர்கள்?" அவன் குரலில் சந்தேகம் தோன்றியது.

"பொன்னாழி போன்ற மாளிகை இதற்கு முன்பாக இருந்தது இல்லை என்று கூறுவது உங்களது திறமைக்குப் பாராட்டாகத்தான் தோன்றுகிறது. ஆனால் இனிமேலும் இருக்கப் போவதில்லை என்று கூறும்போது அதனைப் பாராட்டாக எடுத்துக் கொள்ள முடியாதல்லவா?"- லலாடிகா கூறினாள்.

"பெண்களே! நீங்கள் கூறுவது எனக்குப் புரியவில்லை?"- சிந்தூரன் கூறினான்.

"இன்று முன்னிரவு நீங்கள் ஆதித்த கரிகாலருடன் எங்கள் பார்த்திப பல்லவரை கௌரவிக்க வந்தீர்கள் அல்லவா?"- கல்பலதா கேட்டாள்.

"ஆம்!"

"நீங்கள் மீண்டும் புறப்படும் போது, வாயில் வரை வந்த ஆதித்த கரிகாலர், மீண்டும் உள்ளே வந்து பார்த்திப பல்லவரின் செவிகளில் ஏதோ கிசுகிசுத்தார் அல்லவா!" - கல்பா கேட்டாள்.

யோசித்துப் பார்த்த சிந்தூரனின் மனக்கண்ணில் ஆதித்த கரிகாலன் குனிந்து பார்த்திபனின் செவியில் கிசுகிசுக்கும் காட்சி தோன்றியது.

"ஆம்! அவர் ஏதோ இரகசியமாகக் கூறுவதை நானும் கவனித்தேன்."- சிந்தூரன் கூறினான்.

"பொன்னாழி போன்ற மாளிகை இதற்கு முன்பாக இருந்தது இல்லை; இனிமேலும் இருக்கக் கூடாது என்று உங்களிடம் கூறிய அதே வாக்கியங்களைத்தான் பார்த்திபரிடம் கூறினார்."- கல்பலதா கூறினாள்.

கல்பலதாவும், லலாடிகாவும் கூறியதைக் கேட்டதும் மலங்க மலங்க விழித்தான் சிந்தூரன். 'ஆதித்த கரிகாலன், பார்த்திபனின் செவிகளில் தன்னைப் பாராட்டிப் பேசியிருக்கிறான். அவ்வளவுதானே!'- சிந்தூரன் நினைத்தான்.

"இதில் என்ன இருக்கிறது..? என்னிடம் பாராட்டியதைத்தானே பல்லவ இளவரசரிடம் கூறியிருக்கிறார், சோழ இளவரசர்?"-சிந்தூரன் கேட்டான்.

"சற்றே சிந்தித்துப் பாருங்கள். பகிரங்கமாகக் கூறினால் அது பாராட்டு. இரகசியமாகச் செவியில் கிசுகிசுத்தால் அது பாராட்டாகுமா? இனியும் பொன்னாழி போன்று ஒரு மாளிகை எழும்பக் கூடாது என்றால், அதனை எழுப்பியவர் இருக்கக் கூடாது என்கிற பொருள் வரவில்லையா?"- லலாடிகா அவனை எச்சரிக்கையுடன் பார்த்தபடி கூற, சிந்தூரனின் வாய் உலர்ந்து போனது.

"ஐயோ! அப்படி ஒரு பொருள் வருகிறதா? என்னைப் பழையாறைக்கு உடனே புறப்பட்டுவிடாதே என்று வேறு கூறினாரே, இளவரசர்."- பதைபதைத்தான், சிந்தூரன்.

"அங்கேதான் உள்ளது சூட்சுமம். உங்களை இங்கேயே தங்க வைத்துவிட்டு, பார்த்திப பல்லவரிடம் உங்களைத் தீர்த்துக்கட்டச் சொல்லியிருக்கிறார், சோழ இளவரசர். நடுநிசியில் உங்கள் கூடாரத்தை நாடி வர இருக்கிறார், பார்த்திபன். ஸ்வர்ணத்தைக் களவாட வந்த கள்வர்கள் உங்களைக் கொன்றுவிட்டதாக நாளை அறிவிக்கப் போகிறார்கள்."- கல்பலதா கூறினாள்.

"என் மீது அதீத அன்பை செலுத்தினார், சோழ இளவரசர்!"- அழுகையாக உடைந்தது சிந்தூரனின் குரல்.

"உங்களுக்குத் தெரியாததா? உங்கள் மீது செலுத்தும் அன்பைக்காட்டிலும் பொன்னாழியின் மீது அவருக்கு இப்போது அதிக அன்பு உள்ளது!"- லலாடிகா ஜாடையாகக் கல்பலதாவை நோக்கி தனது கண்ணை அசைத்தாள்.

"நன்றாகத் தெரியுமா? பார்த்திபன் என்னைத்தான் கொல்ல வருகிறாரா?"- சிந்தூரன் புலம்பினான்.

"நான்தானே அவருக்கு அந்தரங்கத் தோழி. குத்து வாளை தனது அங்கியின் பைக்குள் மறைத்து வைப்பதை நானே பார்த்தேன். எனது மனம் கேட்க வில்லை. பொன்னாழி மாளிகை போன்ற அற்புதக் கட்டடத்தை எழுப்பியவரை ஒரே இரவில் தீர்த்துக் கட்டப் போகிறார்களே என்கிற வருத்தத்தில் இங்கு ஓடி வந்தேன். தயவு செய்து தப்பிச் செல்லுங்கள். மேலும் இன்னொரு விஷயமும் உள்ளது.."- லலாடிகா கூறினாள்.

கலவரத்துடன் அவளை நோக்கினான், சிந்தூரன். "என்ன அது?"

"பிரவாள மாளிகையை இடித்துத் தள்ளும்போது ஏதோ சிலை கிடைத்ததாம். அந்தச் சிலையைப் பற்றிய விவரம் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக அந்தச் சிலையை அப்புறப்படுத்தியவர்களை எல்லாம் கொன்றுவிடும்படி உத்தரவு. சிலை இரகசியத்தை யாரோ வெளியே உலவவிட்டிருக்கிறார்கள்."- லலாடிகா கூறினாள்.

பெண்கள் இருவரும் சிந்தூரனின் முகத்தையே உறுத்து நோக்கினர். கலவரத்தால் சிந்தூரனின் முகம் அந்தக் குளிர் இரவிலும் வியர்த்துக் கொட்டியது.

“ஐயோ.. நான் அந்த இரகசியத்தை யாரிடமும் சொல்ல வில்லையே? சிலையை அந்தப் புகைபோக்கியில் இருந்து எடுத்த இருபது பேரையுமா கொல்லப் போகிறார்கள்?”- ஓலமாக ஒலித்தது அவனது குரல்.

“சிலை விஷயம் எங்களுக்கு எப்படித் தெரியும். சோழ இளவரசரும், பல்லவ இளவரசரும் பேசுவதை ஒட்டுக் கேட்டதால் எங்களுக்குத் தெரிய வந்தது. எனவேதான் உங்களை எச்சரிக்க வந்தோம். எங்கள் உயிருக்கு ஆபத்து இருப்பினும், ஒரு கட்டட மேதையைக் காப்பாற்றவே வந்தோம். ஒருகால், நீங்கள் உயிர் தப்பினால், எங்களை யாருக்கும் காட்டிக் கொடுத்துவிடாதீர்கள்! பார்த்திப பல்லவர் வரும் சமயம். நாங்கள் புறப்படுகிறோம்..”- லலாடிகா கூறினாள்.

“ஐயோ! நான் என்ன செய்வேன்.. எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.”- சிந்தூரன் கூறினான்.

“கைகள் ஓடவில்லை என்றால் பரவாயில்லை. கால்கள் அவசியம் ஓடியே தீரவேண்டும். பொன்னாழி எழுப்பிய தற்கு சன்மானம் கிடைத்துவிட்டது அல்லவா? குடும்பத் துடன் பாண்டிய நாட்டிற்கு ஓடிவிடுங்கள். காலம் கனியும்போது திரும்பி வரலாம். யார் கண்டார்கள்!? பொன்னாழி போன்ற மாளிகையைப் பாண்டிய நாட்டில் கூட நீங்கள் எழுப்புவீர்களோ என்னவோ! திறமை இருப்பவர்களுக்கு, நாடு எதுவாக இருந்தால்தான் என்ன?”- லலாடிகா தனது பேச்சினால் சிந்தூரனை இன்னும் பதறடித்தாள்.

பெண்கள் இருவரும் அங்கிருந்து அகல, நடுங்கும் கைகால்கள் சிந்தூரனை செயலிழக்கச் செய்தன. வாய் உலர்ந்து போனது. பார்த்திபன் மாளிகையின் தோழிகள் எதற்காக இவனிடம் பொய் உரைக்கப் போகிறார்கள்?

அத்திமலைத்தேவனின் சிலை புகைபோக்கியில் கிடைத்த விவரம் தோழியருக்கு எப்படித் தெரிய வரும்? இவனுடன் புறப்பட்ட ஆதித்த கரிகாலன் மீண்டும்

உள்ளே சென்று பார்த்திபன் செவிகளில் இரகசியமாகப் பேசிய போதே இவன் சுதாரித்திருக்க வேண்டும். எத்தகைய நன்றிகெட்டத்தனம். பொன்னாழியை எழுப்புவதற்காக, இரவு பகல் பாராமல், கண் துஞ்சாமல், பசி தாகம் பாராமல், குடும்பத்தைவிட்டுப் பிரிந்து கடுமையாக உழைத்ததற்குத் தரப்படும் பலனா இது? துக்கத்துடனும், அச்சத்துடனும் தனது உடைமைகளைச் சேகரித்து மூட்டை கட்டியவன், ஆதித்த கரிகாலன் தனக்கு அளித்த பொன் நாணயங்களைச் சுருக்குப் பையில் நிறைத்து தனது அங்கியினுள் மறைத்துக் கொண்டான்.

'இனி அரச குடும்பங்களின் சங்காத்தமே வேண்டாம்!' என்கிற தீர்மானத்துடன் கூடாரத்தில் இருந்த விளக்கை ஊதி அணைத்தவன், கூடாரத்தைவிட்டு வெளியே வந்தான். அவனுக்கு இருந்த அச்சத்தில் பொன்னாழியைக் கடைசியாக ஒருமுறை பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் கூட எழவில்லை. கூடாரத்தைவிட்டு நான்கு அடிகள் நடந்தவன், திடுக்கிட்டுப் போய் நின்றான். ஓர் உருவம் பொன்னாழியை வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தது. இருளில் அந்த உருவம் மட்டும் தெரிந்ததே தவிர அதன் முகம் அவனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இவனைக் கொல்வதற்கு பார்த்திப பல்லவன் வந்துவிட்டானோ?

"யார்..?" சிந்தூரன் தடுமாற்றத்துடன் கேட்டான்.

அந்த உருவம் ஆடாமல் அசையாமல் பொன்னா ழியையே பார்த்தது.

'ஓடிச் செல்!'- சிந்தூரனின் மனம் எச்சரித்தது. ஆனால் அவன் கால்கள் நகர மறுத்தன. தனது துணிவைத் திரட்டிக்கொண்டு மீண்டும் அந்த உருவத்தைப் பார்த்தான்.

."யாரது?"- சிந்தூரன் கடுமையான குரலில் கேட்டதும், அந்த உருவம் திரும்பியது. அவனை வெறித்துப்

பார்த்ததும்தான் அந்த உருவத்தை அவன் இனம் கண்டு கொண்டான். சோழ இளவரசன் ஆதித்த கரிகாலன்தான் அங்கே நின்று கொண்டிருந்தான். அவனது வெறித்த பார்வை சிந்தூரனையே நோக்கிக் கொண்டிருந்தது.

'அந்த பெண்கள் கூறியது உண்மைதான்! இவனைக் கொல்ல ஆதித்த கரிகாலனே வந்துவிட்டான் போலும்! ஆதித்த கரிகாலன் இப்போது சிந்தூரனை நோக்கி நகர்ந்து வந்தான். வழக்கமாக இவனைக் கண்டதும் சினேகமாகப் பேசும் சோழ இளவரசன், இப்போது வெறித்த பார்வையுடன், பிரமை பிடித்தவனைப் போன்று நடந்து வருவதைக் கண்டதும், அவன் தன்னைக் கொல்வதற்குத்தான் வருகிறான் என்பதை யூகித்து விட்டான். பயத்தால் கால்கள் நகர மறுக்க, ஆதித்த கரிகாலன் அவன் முன்பாக வந்து நின்றான். அவனது கண்கள் சிந்தூரனின் கண்களுக்குள் ஆழமாக நோக்கின. மெதுவாகத் தனது மேலங்கியை நழுவவிட்ட ஆதித்த கரிகாலனின் கண்கள் சிந்தூரனின் கண்களைவிட்டு நீங்கவில்லை.

பொன்னாழி மாளிகையைவிட்டு நீங்கி, ராஜவீதியை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தனர், கல்பலதாவும், லலாடிகாவும்.

"உனது சாதுர்யத்திற்கு எனது பாராட்டுகள். ஆதித்த கரிகாலன் வசம்தான் அத்திமலைத்தேவனின் சிலை இருக்கிறது என்பதை நிரூபித்துவிட்டாய். பாவம் அந்தச் சிந்தூரன்! இவ்வளவு பிரம்மாண்டமான பொன் னாழியை எழுப்பிவிட்டு, கள்வனைப் போன்று இரவோடு இரவாக நாட்டைவிட்டு ஓடச் செய்து விட்டாயே!" - கல்பா கூறினாள்.

"என்ன செய்வது கல்பா! சிறு உண்மையை வரவழைப்பதற்குக் கூட, பெரிய பொய்களைக் கூற வேண்டியிருக்கிறது!"-லலாடிகா கூறிக் கொண்டிருக்கும் போதே, அந்த இரவின் அமைதியைக் குலைத்தபடி,

பொன்னாழி மாளிகையின் பக்கமாக ஒரு அலறல் சத்தம் கேட்டது.

விக்கித்துப் போய் நின்றவர்கள், திரும்பி மாளிகைப் பக்கமாக நோக்கினார்கள். இருளில் ஒன்றும் புலப்பட வில்லை.

"யாரோ அலறுகிறார்கள் போலிருக்கிறதே?" - கல்பலதா கேட்டாள்.

"நமது அச்சுறுத்தலைக் கேட்டு நடுநடுங்கிப் போன சிந்தூரன்தான் அலறியிருப்பான். காஞ்சியைவிட்டு ஓடிக்கொண்டிருப்பான்." - லலாடிகா கூறினாள்.

தருமநகரத்தின் பாதை முடிந்து ராஜவீதியின் திருப்பத்தில் ஒரு தீபஸ்தம்பம் நின்றது. நான்கு பாதைகள் சந்திக்கும் இடம். அங்குதான் அத்தியூர், தும்பவனம், தருமநகரம் மற்றும் ஒத்தாடைக்குச் செல்லும் பாதைகள் பிரியும். ராஜவீதியில் திரும்புவதற்காக இடதுபுறமாகத் திரும்பினர் பெண்கள்.

திரும்புவதற்கு முன்பாக தான் வந்த வழியை நோக்கினாள், லலாடிகா. தொலைவில் ஓர் உருவம் இவர்களை பின்தொடர்ந்து நடந்து வருவது தெரிந்தது. வெலவெலத்துப் போனாள், லலாடிகா.

"கல்பா! சீக்கிரம் இப்படி வா!" என்று கிசுகிசுத்த குரலில் கூறியவள், கல்பலதாவின் கையைப் பற்றி இழுத்தபடி, விரைவாக நடக்க, பாதையில் கிடந்த கல்லை கவனியாமல் லலாடிகா நடக்க, அந்தக் கல் அவளது காலை இடறியது. அவள் கீழே சரிய, அதனால் கல்பலதாவும் நிலைதடுமாறிக் கீழே விழுந்தாள்.

இருவரும் சுதாரித்துக் கொண்டு விரைவாக எழுவதற்குள், பின்பாகத் தொடர்ந்து வந்த அந்த உருவம் அவர்கள் விழுந்து கிடந்த பகுதியை வந்தடைந்தது. தீப ஒளியில் தங்கள் முன்பாக நின்ற அந்த உருவத்தைக் கண்டதும் இரு பெண்களும் ஸ்தம்பித்து, எழுவதற்குக்

கூடத் தோன்றாமல், ராஜவீதியின் திருப்பத்தில் அப்படியே அமர்ந்திருந்தனர்.

வந்து நின்ற உருவம் அவர்களை லட்சியம் செய்த தாகவே தெரியவில்லை. விறைப்பாகத் தீபஸ்தம்பத்தின் எதிரே வந்து நிலைக்குத்தி நின்ற அந்த உருவம் பின்பு இயந்திர கதியில் ராஜவீதியில் திரும்பி மெதுவாக நடந்து சென்று மறைந்தது. பெண்கள் இருவரும் உறைந்து போய் அமர்ந்திருந்து, அந்த உருவம் சென்ற திக்கையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"யார் என்று கவனித்தாயா, லலாடிகா?" - கிசுகித்தாள் கல்பா.

"கவனித்தேன்! இந்த இரவு நேரத்தில் எதற்காகப் பொன்னாழிக்குச் சென்றார்? அந்த ஓலத்தை எழுப்பியது இவர்தானா?" - லலாடிகாவும் திகைப்புடன் கூறினாள்.

"சரி புறப்படுவோம். இனியும் இங்கு இருப்பது உசிதம் அல்ல!" என்றபடி எழுந்த கல்பலதா, லலாடிகாவுக்குக் கை கொடுத்து எழுப்பிவிட, இருவரும் பார்த்திபனின் மாளிகையை நோக்கி நடந்தனர். ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்று உள்ளுணர்வு எச்சரித்தாலும், அதனை இரு பெண்களும் வெளியே கூறாமல் நடந்தனர். விரைவாக மாளிகையை அடைந்த கல்பாவும், லலாடிகாவும் தத்தம் அறைக்குள் நுழைந்து முடங்கிக் கொண்டனர்.

பொழுது இன்னும் விடியவில்லை. ஆனால் ஒத்தாடை அரண்மனையிலிருந்து பணியாள் ஒருவன் அவசரமாகப் பார்த்திபனின் மாளிகைக்கு வந்தான். வாயிலில் காவல் நின்றவர்களிடம் அவசரமாக ஏதோ கூற, காவலர்கள் உள்ளே விரைந்தார்கள். பார்த்திபனை எழுப்பி அரண்மனைப் பணியாள் வந்திருப்பதைக் கூற, பார்த்திபன், தனது அறையிலிருந்து வேகமாக வந்தான். பார்த்திபனின் காதில் ஏதோ தகவலைக் கூற, அவன் அதிர்ந்தான்.

தனது அறையில் உறங்காமல் யோசித்தபடி கிடந்த லலாடிகாவின் செவிகளில் மாளிகையின் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. வியப்புடன் தனது அறையில் இருந்தபடி வெளியே வந்தவள், உப்பரிகையில் இருந்தபடி கீழே நடப்பதை நோட்டம்விட்டாள். அரண்மனை பணியாளன் பார்த்திபனிடம் ஏதோ கூறுவதையும், அவன் முகம் வெளிறிப் போவதையும் கவனித்தாள். குழப்பத்துடன் உப்பரிகை படிகளில் விளிம்பில் வந்து நிற்க, புறப்படுவதற்குத் தயாராவதற்காக அவசரமாக மேலே வந்த பார்த்திபன், உச்சியில் நின்ற லலாடிகாவை தற்செயலாகப் பார்த்தான்.

"லலாடிகா! பொன்னாழியை எழுப்பிய செங்கம்பாடி சிந்தூரன் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறானாம். ஆதித்த கரிகாலன் உடனே வரும்படி எனக்குச் செய்தி அனுப்பியிருக்கிறான். நான் புறப்படுகிறேன்!" என்றபடி தனது அறையை நோக்கிச் சென்றான்.

லலாடிகா விக்கித்துப் போய் நின்றிருந்தாள். தாங்கள் இருவரும் முன்னிரவில் சிந்தூரனைச் சந்தித்து அவனை எச்சரித்துவிட்டு மாளிகைக்குத் திரும்புகையில், தங்களுக்குப் பின்பாக எழுந்த ஓலத்தையும், பின்னர் ஆதித்த கரிகாலன் தன்னைத் தொடர்ந்து வந்ததையும் நினைவு கூர்ந்தாள், லலாடிகா. சிந்தூரன் கொலை செய்யப்பட்டானா? அப்படியானால் கொலை செய்தது யார்? ஆதித்த கரிகாலனா? அவளுக்குச் சுவாசமே நின்றுவிடும் போல உணர்ந்தாள். ஒருகணம் முந்தைய இரவு நிகழ்ந்த சம்பவங்களைத் தனது அண்ணனிடம் கூறிவிடலாமா என்று நினைத்தாள். உடனே லலாடிகாவிற்கே உள்ள எச்சரிக்கை உணர்வு அவளைத் தடுத்தது.

இவள் அவனிடம் உண்மையைக் கூறி, அதை அவன் ஆதித்த கரிகாலனிடமே கேட்டுவிட்டால், அண்ணனுக்குப் பிரச்னைகள் உருவாகக் கூடும். எனவே

*அவரிடம் கூறிவிடலாம் என்கிற எண்ணத்தை உதறினாள். பார்த்திபன் புறப்பட்டுப் போகும்வரை உப்பரிகையிலேயே நின்றவள், அவன் பார்வையைவிட்டு மறைந்ததும், கல்பலதாவின் அறைக்கு ஓடிச்சென்றாள். அவளை எழுப்பி விஷயத்தைக் கூறியபோது, கற்சிலையாகச் சமைந்து அமர்ந்திருந்தாள், கல்பா.*

*"நாம் விளையாட்டாகக் கூறிய பொய் உண்மையாகிப் போனதே!" - கல்பா முணுமுணுத்தது அவளுக்கே கேட்டிருக்குமோ என்னவோ?*

# 12. தென்திசை நோக்கிச் செல்லாதே

உபேந்திர பார்த்திபன் தனது மாளிகையிலிருந்து புறப்பட்டு ஒத்தாடை மாளிகையை அடைந்த போது, ஆதித்த கரிகாலன் உப்பரிகையிலேயே நின்றிருந்தான். அவனது முகத்தில் குழப்பமும், வருத்தமும் ஒருங்கே நிலவின. பார்த்திபன் தனது குதிரையில் வந்து இறங்குவதைக் கண்டதுமே, ஆதித்தன் அவனை நோக்கிக் கையசைத்தான். உப்பரிகையை அடைந்து ஆதித்தனின் அறைக்குள் நுழைந்ததும்தான் தாமதம், பாய்ந்து சடாரென்று அறையின் கதவை மூடித் தாளிட்டான்.

“தகவலை அறிந்தாய் அல்லவா? நம் செங்கம்பாடி சிந்தூரன் இறந்து கிடந்தான். நேற்றுதான் அவனை உன்னுடைய மாளிகைக்கு அழைத்து வந்திருந்தேன். நான் பொன்னாழிக்குள் குடியேறிய பிறகு ஒரு திங்களுக்கு என்னுடனேயே தங்கி, பொன்னாழியில் குறை ஒன்றும் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்தபிறகே பழை யாறைக்கு அவன் திரும்ப வேண்டும் என்று கட்டளை யிட்டிருந்தேன். அவனும் அதற்கு ஒப்புக்கொண்டிருந் தான். நான் பொன்னாழிக்குள் நுழைவதற்குள்ளாகவே, அவனை வழியனுப்பிவிட்டார்களே, பாவிகள்!” - ஆதித்த கரிகாலனின் குரலில் அதிர்ச்சி தாண்டவமாடியது.

“போயும் போயும் சிந்தூரனைக் கொல்வானேன். அவனுக்கு யார் எதிரிகள்? ஒருவேளை, கள்வர்கள் பொன்னாழியில் இருந்து ஸ்வர்ணத்தைக் கொள்ளை யடிக்க வந்திருக்கலாம். அவர்களை அவன் தடுக்க, சிந்தூரனை அவர்கள் கொன்றிருக்கலாம்!” - பார்த்திபன் கூற, அதனை மறுப்பது போன்று தலையசைத்தான், ஆதித்தன்.

“அது சிந்தூரனின் பணி அல்ல! பொன்னாழியின் ஸ்வர்ண மதில் கதவுகள் உள்புறமாகப் பூட்டப்பட்டு, திறவுகோல், காவலர் தலைவர் வசம் இருந்தது. பத்து காவலர்கள் பொன்னாழியைச் சுற்றிக் காவலுக்கு நின்றிருந்தனர்.” - ஆதித்தன் கூறியதும் பார்த்திபனின் புருவங்கள் உயர்ந்தன.

“இது என்ன நண்பா, மர்மமாக இருக்கிறதே! ஒருவேளை, கட்டடப் பணியாளர்களிடையே தகராறு மூண்டு, அதனால் சிந்தூரன் கொலை செய்யப்பட்டிருப்பானோ? சன்மானத் தொகை விநியோகத்தில் பிரச்னைகள் உண்டாகி இருக்குமோ?” - பார்த்திபன் யோசித்தான்.

“நானும் அப்படித்தான் நினைத்தேன் நண்பா! ஆனால் காவலுக்கு நின்றிருந்தவர்களில் ஒருவனான சுந்தரவதனன் என்பவன் முன்னிரவில் இரண்டு பெண்கள் சிந்தூரனைச் சந்தித்துப் பேசுவதைப் பார்த்தானாம். இருளும், பனிபெய்வும் அதிகமாக இருந்த காரணத்தால், அவனால் தெளிவாகக் காண முடியவில்லை என்றான். இருந்தாலும், அவர்களது ஆடை அமைப்பைக் கொண்டு பெண்கள் என்பதை யூகித்திருக்கிறான். அந்தப் பெண்கள் புறப்பட்டுச் சென்றதும், ஓர் உருவம் நிற்பதைக் கண்டிருக்கிறான். அதன் பிறகே ஓர் ஓலம் கேட்டிருக்கிறது. உடனே காவலர் தலைவனிடம் அவன் தெரிவிக்க, அவன் சென்று அங்கே பார்க்க, கூடாரத்தின் அருகே சிந்தூரன் பிணமாகக் கிடந்திருக்கிறான்.” - ஆதித்த கரிகாலன் கூற, பார்த்திபன் அதிர்ந்து போய் நின்றிருந்தான்.

“பார்த்திபா! எனது மனம் குழம்புகிறது!” - ஆதித்த கரிகாலன் கூறிக் கொண்டிருக்கும்போதே, நேமியங்கையர் உள்ளே வந்தார்.

“இளவரசே! ஜோதிடர்களுடன் அமர்ந்து ஆராய்ந்து விட்டோம். வரும் சுக்ல தசமியில் தாங்கள்

பொன்னாழியினுள் குடிபுகுவது நல்லது. முன்னதாக மகாகணபதி ஹோமமும், நவக்கிரகச் சாந்தி ஹோமங்களும், அஷ்டதிக்பாலகப் பூசனைகளும் செய்வதற்கு நிச்சயித்திருக்கிறோம். எனவே, தசமி அன்று தாங்கள் பொன்னாழியினுள் குடிபுகலாம்."- நேமியங்கையர் கூறினார்.

"எப்படி பார்த்திபா.. நான் பொன்னாழியினுள் நுழைவேன்? அதை எழுப்பியவன் துர்மரணம் அடைந்தது எனக்கு என்னவோ அபசகுனமாகத் தோன்றுகிறது!" - ஆதித்த கரிகாலன் புலம்பினான்.

"இளவரசே! சாத்திரம் அறிந்த நான் கூறுவதைக் கேளுங்கள். யானையின் பாகனுக்கு யானையின் கையிலும், தேர்ப்பாகனுக்குத் தேர் சக்கரத்திலும் மரணம் என்பது போன்று, பொன்னாழியை எழுப்பியவனுக்குப் பொன்னாழியிலேயே மரணம் என்றுதானே கொள்ள வேண்டும். பிராணத் தியாகம் செய்திருப்பதால், இனி பொன்னாழியின் ஆன்மாவாகச் சிந்தூரன் இருப்பான் என்பதில் ஐயமில்லை. இதற்காகத் தாங்கள் குழம்ப வேண்டாம்." - நேமியங்கையர் கூறினார்.

"இல்லை நேமியங்கையரே! அன்றே எனது ஆருயிர் நண்பன் பார்த்திபன் எச்சரித்தான். பிரவாள மாளிகையில் துர்மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தருமநகர மக்கள் அதனை பேய் மாளிகை என்றே அழைத்து வந்திருக்கின்றனர். எனவே, நான் அவசரப்பட்டு விட்டேனோ என்று தோன்றுகிறது!"-ஆதித்த கரிகாலன் மனம் வெதும்பினான்.

பார்த்திபன் ஆதுரத்துடன் அவனது தோளினில் கைவைத்தான்.

"பாண்டியன் தலை கொய்தவன் இப்படிக் கலங்கலாமா? நான் கூறியது அப்போதிருந்த பாழடைந்த பிரவாள மாளிகையின் நிலையைக் கண்டு! இப்போது தேவேந்திரனே பொறாமை கொள்ளுமளவுக்குப்

பொன்னாழியை எழுப்பியிருக்கிறாய். சூரிய ஒளியில் உனது மாளிகை தகதகப்பதைக் காண கண்கோடி வேண்டும் அல்லவா? பல நாட்டு மன்னர்கள் உனது பொன்னாழியைக் கண்டு பிரம்மித்து நிற்கப் போகிறார்கள் பாரேன்.." - பார்த்திபன் கூறினான்.

"உனது ஆலோசனை என்ன நண்பா? நான் குறிப்பிட்ட நாளில் பொன்னாழியினுள் குடியேறலாமா?" - அவனைக் குழப்பத்துடன் நோக்கினான், ஆதித்தன்.

"அவசியம் குடியேறலாம். உமது பொன்னாழி திருமகளின் கோட்டையாக விளங்குகிறது. அழகிய நீரூற்றுகளுக்கும், நந்தவனங்களுக்கும் இடையே ஸ்வர்ண மாளிகை மின்னுவதை வாய் பிளந்து பார்க்கின்றனர் ஊர்மக்கள். காஞ்சியின் பெருமை அதன் ஆலயங்கள். ஆனால் அப்படிப்பட்ட காஞ்சியின் பெருமைகள் பட்டியலில் உனது பொன்னாழி மாளிகைதான் முதலில் நிற்கிறது என்றால் பார்த்துக் கொள்ளேன்!" - அவனை ஊக்குவிக்கும் வண்ணம் பேசினான், பார்த்திபன்.

"அப்படியானால் சரி! நேமியங்கையரே! பொன் னாழியில் நான் குடிபுகும் வைபவத்தை மிகவும் விமரிசையாகச் செய்ய வேண்டும். எனது தந்தை சுந்தர சோழர், எனது தாய் வானவன்மாதேவி, செம்பியன் மாதேவி, குந்தவை, பழுவூர் சகோதரர்கள், அநிருத்த பிரம்மராயர், கொடும்பாளூர் வேந்தர் என்று பலரும் வருகிறார்கள். தளிக்குளத்தான் ஆலய பிரசாதங்களுடன் தளிக்குள சித்தரும் வருகிறார். அவர்கள் அனைவரும் பொன்னாழியில் தங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுங்கள்." - ஆதித்த கரிகாலன் கூற, நேமியங்கையர் பணிவுடன் தலையசைத்தார்.

ஆதித்த கரிகாலன் அவரை உறுத்துப் பார்க்க, தன்னை அவன் புறப்படச் சொல்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு, அங்கிருந்து நழுவினார்.

"ஏன் இவ்வளவு பதற்றப்படுகிறாய், ஆதித்தா? நான் இருக்கும் போது ஏன் இவ்வளவு கவலை உனக்கு..? எல்லா ஏற்பாடுகளையும் நான் பார்த்துக் கொள்கிறேன்." - பார்த்திபன் கூறினான்.

"இல்லை.. இல்லை! உனக்கு வேறு ஒரு பணியைத் தரப்போகிறேன். உடனடியாகச் சிந்தூரனை கொலை செய்தவனை நீ தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். சிந்தூரன் கொலை செய்யப்பட்டது எதற்காக என்பதை நான் உடனே அறிய வேண்டும். என் மீதுள்ள வன்மத்தில் யாராவது சிந்தூரனை கொலை செய்துவிட்டார்களா என்பதை நான் அறிய வேண்டும்?" - ஆதித்தன் கூறியதும், திகைத்துப் போய் நின்றுவிட்டான், பார்த்திபன்.

"என்ன சொல்கிறாய், ஆதித்தா?" - திகைப்பினால் பார்த்திபனின் சொற்கள் விட்டுவிட்டு வெளிவர, அவனது கைகளைப் பற்றினான், ஆதித்த கரிகாலன்.

ஆதித்தன் அவனது கைகளைப் பற்றியதும், பார்த்திபனின் திகைப்பு இன்னும் பன்மடங்காகியது. ஆதித்த கரிகாலனின் கைகள் நடுநடுங்கிக் கொண்டிருந்தன.

வாய் பிளந்து நின்ற பார்த்திபனை அங்கிருந்த நாற்காலி ஒன்றின் மீது அமர்த்திய ஆதித்தன், நாற்காலியின் இரு கைப்பிடிகளிலும் தனது கையை ஊன்றி, பார்த்திபனின் கண்களினுள் உறுத்துப் பார்த்தான், ஆதித்த கரிகாலன். அந்த ஒரு பார்வை, பார்த்திபனின் பிடரியில் மயிர்க்கூச்சத்தை ஏற்படுத்தியது. தனது முகத்திற்கு அருகாமையில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஆதித்த கரிகாலன் கண்களின் வெண்படலத்தில் குருதியின் ரேகைகள் தெளிவாகப் புலப்பட்டன. அந்தக் கண்கள் தன்னை உறுத்து நோக்கிக் கொண்டிருந்தாலும், அதன் கருத்து வேறு எதன் மீதோ ஆழ்ந்திருந்ததைப் பார்த்திபனால் உணர முடிந்தது.

*"பார்த்திபா, நீ எனக்கு எப்போது அறிமுகமானாய்?"- கிசுகிசுத்தான் ஆதித்தன்.*

*"சேவூர் போருக்கு முன்பாக, நீ வடபுல சேனையின் மாதண்டநாயகனாகக் காஞ்சியில் பிரவேசம் செய்த அன்றுதான், நாம் முதன்முதலாக அறிமுகமானோம்!"- பார்த்திபன் கூறினான்.*

*"இப்போது எனது பிராயங்கள்* என்ன இருக்கும் என்று நினைக்கிறாய்?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.*

*"ஒரு இருபது இருக்குமா?" - பார்த்திபன் கேட்டான்.*

*"ஆம் பார்த்திபா! சரியாக யூகித்தாய். வரும் சுக்ல தசமி, அதாவது நான் பொன்னாழியினுள் நுழையும் அன்றுதான் எனது பிறந்த தினம். அன்று இருபது பிராயங்கள் பூர்த்தி ஆகின்றது! எனது பிறந்த நாள் பரிசாகத்தான் பொன்னாழியை இறைவன் எனக்கு அளிக்கின்றான்."-ஆதித்த கரிகாலன் கூறினான்.*

*"மெத்த மகிழ்ச்சி நண்பா!" - பார்த்திபன் கூறினான்.*

*"அது சரி! நான் யார் பார்த்திபா?" - நாற்காலியின் பிடிகளில் பதித்திருந்த தனது கரங்களை நீக்காமல் இன்னும் குனிந்தபடியே அவனது முகத்தை நோக்கிப் பேசிக் கொண்டிருந்தான், கரிகாலன்.*

*அவன் அங்ஙனம் தனது முகத்திற்கு மிக நெருக்கமாகக் குனிந்து பேசுவதைப் பார்த்திபன் சங்கடமாக உணர்ந்தான். ஆதித்தனின் சுவாசக் காற்று இவனது முகத்தில் அறைய, அதில் மதுபான நெடியை உணர்ந் தான். ஆதித்த கரிகாலன் மது அருந்தியிருக்கிறான் என்றால், அவன் மனதில் புயல் வீசிக் கொண்டிருக்கிறது*

---

* ஆதித்த கரிகாலன் பிறந்த ஆண்டு கி.பி.940. அவன் சேவூரில் வீரபாண்டியனின் தலையை வெட்டித்தள்ளிய ஆண்டு கி.பி.959. அதன் பிறகு 969-ல் தனது இருபத்து ஒன்பதாவது வயதில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டான்.

போலும். தான் வந்ததில் இருந்து அவன் பதறறத் துடனேயே காணப்பட்டதையும் உணர்ந்தான் பார்த்திபன். இந்த நிலையில் அவனைப் பேசவிட்டு, தான் கேள்விகளைக் கேட்காமல் இருப்பதே நலம் என்று நினைத்தான். அதே வேளையில், அவனது முகத்தை நோக்கிக் குனிந்தபடி பேசிக் கொண்டிருக்கும் அவனுக்கு, முதுகு வலிக்கப் போகிறதே என்கிற அக்கறையும் பிறந்தது.

"ஏன் நின்று கொண்டே பேசுகிறாய், கரிகாலா! அமர்ந்து பேசுவோம்!" - பார்த்திபன் கூறினான்.

"நாம் இப்படிப் பேசுவதால், நான் உதிர்க்கும் சொற்கள் இன்னொருவர் செவிகளில் விழாமல் உனது செவியை மட்டும் சென்றடையும் என்பதால்தான் இப்படிப் பேசுகிறேன். இந்த அறையில் எத்தனை செவிகள் பதிந்திருக்கும் என்பது எனக்குத் தெரியாது. அவை நேமியங்கையர், குழலழகன் என்று யாருடைய செவி யாகவும் இருக்கலாம். நீ பல்லவ நாட்டு இளவரசன்! நியாயமாக நீ என்னைப் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் உன் மீது பூரண நம்பிக்கை வைத்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். காரணம், உன்னை நம்புமளவுக்குக்கூட சோழ நாட்டில் எனது நம்பிக்கையைப் பெற்றவர் யாரும் இல்லை!"- ஆதித்த கரிகாலன் கூற, அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தான், பார்த்திபன்.

"நான் உன்னிடம் துவக்கத்தில் இருந்தே ஒரு கேள்வியை எதிர்பார்த்திருந்தேன், நண்பா! ஆனால் அந்தக் கேள்வியை நீ என்னிடம் கேட்கவேயில்லை. நான் யார் நண்பா?" - ஆதித்தனின் குரலில் ஒருவித பயம் புலப்பட்டதைக் கவனித்தான், பார்த்திபன்.

"இதென்ன கேள்வி, ஆதித்தா? இப்போது வடபுல சேனையின் மாதண்டநாயகன். சோழ நாட்டின் வருங்காலச் சக்கரவர்த்தி நீ."

“வருங்காலச் சோழ சக்கரவர்த்தி என்கிறாய். அப்படி யென்றால் வருங்காலத்தில் நான் எங்கே இருக்கப் போகிறேன்?” - கிணற்றுக்குள்ளிருந்து கேட்பது போன்று ஒலித்தது ஆதித்தனின் குரல்.

“ஏன்? தஞ்சைத் தரணியின் அரண்மனையில்தான் நீ வசிக்கப் போகிறாய்?”-புதிருடன் பேசும் நண்பனை குழப்பத்துடன் நோக்கினான், பார்த்திபன்.

“அப்படியென்றால் பாணப்பத்திரத்தின் மூலம் கிடைத்த ஸ்வர்ணத்தைக் கொண்டு நான் தஞ்சையில் தானே பொன்னாழியை எழுப்ப வேண்டும்! ஏன் காஞ்சியில் அதனை எழுப்புகிறேன் என்று ஒருகண மாவது சிந்தித்தாயா?” - ஆதித்தன் கேட்டதும்தான், பார்த்திபனுக்கு உறைத்தது.

‘அட... ஆமாம்! காஞ்சியில் நிரந்தரமாகத் தங்கப் போவதில்லை என்கிற போது எதற்காக இங்கே பொன்னாழி கட்டுகிறான் ஆதித்த கரிகாலன்?’ இது வரையில் இந்தக் கேள்வி அவனுக்கு உறைக்கவே யில்லையே? நண்பனை வியப்புடன் நோக்கினான், பார்த்திபன். ஆனால் கேள்வி எதனையும் கேட்காமல், அவனாகவே தனது மனக்கிடக்கையைக் கொட்டி விடட்டும் என்று காத்திருந்தான்.

“நான் பிறந்த நாள் முதலாகவே எனது வாழ்க்கையில் மர்மங்கள் சூழ்ந்துவிட்டன, நண்பா! தஞ்சையில் நான் கால் வைக்கக்கூடாது என்று பாட்டனார் மலைய மானின் கட்டளை. பிறந்த நாள் முதலாகவே நான் திருக்கோவிலூரில்தான் வளர்ந்து வருகிறேன். தஞ்சை சென்றாலும் தக்க பாதுகாப்புடன்தான் அனுப்புகிறார் பாட்டனார். இதுவரை தஞ்சையில் நான் வாழ்ந்ததே யில்லை. பட்டத்து இளவரசனான நான் திருக் கோவிலூர், காஞ்சி என்று எனது வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கிறேனே தவிர, தஞ்சையில் நான் என்றுமே

*தங்கக்கூடாது என்பது மலையமானின் உத்தரவு.*" - ஆதித்த கரிகாலன் கூறினான்.*

---

* எனது சங்கதாரா புதினத்தில் ஆதித்த கரிகாலனின் கொலை ஒரு உள்குத்து வேலை. பாண்டிய நாட்டு ஆபத்துதவி களுக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்திருந்தேன். ஆனால் ஆதித்த கரிகாலனின் கொலைச் சம்பவத்தை மட்டுமே ஆய்வு செய்திருந்தேன். கி.பி.940-ல் பிறந்த ஆதித்த கரிகாலன் அதன் பிறகு பாட்டன் மலையமானின் அரவணைப்பிலேயே வளர்ந்தான். பட்டத்து இளவரசனாக முடிசூடியும் அவன் திருக்கோவிலூரில்தான் இருந்தான். மதுரை, காஞ்சி, திருக்கோவிலூர் ஆகிய மூன்றும் தான் அப்போதைய தமிழகத்தின் பெருநகரங்கள்.

திருக்கோவிலூர் மேலையூர், கீழையூர் என்கிற இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கீழையூர் பகுதியில்தான் மலையமானின் அரண்மனை இருந்தது. மேலையூரில் மனமாசுகெடிகை (கடிகை அல்ல கெடிகை) மற்றும் கருடகுன்றம் என்கிற பகுதியும் திருக்கோவிலூரின் பகுதிகள். இப்போது கருடக்குன்றம்தான் அந்திலி நரசிம்மர் கோவிலாக விளங்குகிறது. மனமாசுகெடிகை இப்போது மனம்பூண்டி என்று அழைக்கப்படுகிறது. கெடிலம் நதிக்கரையில் இருந்ததால் கெடிகை என்று அழைக்கப்பட்டது. இப்போது கெடிலம் விழுப்புர மாவட்டத்தில் ஓடுகிறது. கருடகுன்றம் மற்றும் மனமாசுகெடிகை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஆபத்தான மனநோய் உள்ளவர்களை மனமாசுகெடிலத்தில் பத்திரப்படுத்தினார்கள் என்று அறிய முடிகிறது. சோழ பட்டத்து இளவரசனான ஆதித்த கரிகாலனை சோழத்திற்கு அனுப்பாமல், திருக்கோவி லூரிலேயே அவனைத் தங்க வைத்து மேற்பார்வையிட்டிருக் கிறார் மலையமான். சேவூர் போரின் போது கூட, பாண்டியன் தலையை வாங்கிவிட்டு, அவனை வடபுல மாதண்ட நாயகனாக்கி வடபுலத்திலேயே அவனை மடக்கிப் போட்ட காரணம் என்ன என்கிற கேள்வி நம்மிடையே எழுகிறது. கெடில நதிக்கரையைத் தாண்டி தெற்கே அவன் சென்றால், அவனுக்கு ஆபத்து நேரிடலாம் என்பதால் மலையமான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். (ராஜீவ்காந்திக்குக் கூடத் தெற்கே வரவேண்டாம் என்று ஒரு ஆன்மிகத் தலைவர் ஃபேக்ஸ் செய்தி அனுப்பியதாகவும், விசாகப்பட்டினத்தில் தங்கியிருந்த அவர், அதனை மீறி ஸ்ரீபெரும்பூதூர் பயணித்த தாகவும் ஒரு தகவல் உண்டு.) ஆதித்த கரிகாலனை திருக்

*'தங்கக் கூடாது என்பது பாட்டனார் மலையமான் கட்டளை' என்று கூறிய ஆதித்தனை அதிர்வுடன் நோக்கினான், பார்த்திபன்.*

*"என்ன சொல்கிறாய் நண்பா?"*

*"ஆம்! நான் பிறந்த போது எனது ஜாதகத்தில் குறைபாடுகள் இருப்பதைக் கவனித்தாராம். நான்கு கிரகங்கள் நீச்சமாக உள்ளனவாம். எனவேதான் திருக்கோவிலூரில் என்னைத் தங்க வைத்து கெடில நதிக்கரையைக் கடந்து நான் தெற்கே செல்லக் கூடாது என்று கட்டளை பிறப்பித்திருக்கிறார்."*

*"இதென்ன பிதற்றல், ஆதித்தா? சோழ மன்னனாக தஞ்சையில் அமர்ந்து ஆளாமல் இங்கே காஞ்சியில்*

---

கோவிலூரிலேயே மலையமான் மடக்கிப் போட்டதற்கு காரணம், அவனது ஜாதக ரீதியாகக் குறைபாடுகளும், அதனால் அவனுக்கு ஏதோ மனரீதியாக ஏற்பட்ட பிரச்னையும் காரணமாக இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. சுந்தர சோழரும், வானவன்மாதேவியும் மூத்த மகன் ஆதித்த கரிகாலனை திருக்கோவிலூர் மலைய மானிடமும், இளைய மகன் அருண்மொழியைக் குந்தவையின் பழையாறையிலும் தங்க வைத்துவிட்டு, பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படாமல் தஞ்சையில் இருந்தது ஏன் என்கிற கேள்வியும் எழுகிறது? ஒருவேளை, ஆதித்த கரிகாலனின் மனநிலைக்குத் திருக்கோவிலூர் ஏற்றது என்று வைத்துக் கொண்டாலும், அருண்மொழி என்னும் சேயை சிறுமி குந்தவையிடம் ஏன் தங்க வைத்தனர் என்கிற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. பொன்னியின் செல்வனில் கல்கி ஆதித்த கரிகாலனைக் கோபக்காரனாகவும், பிடிவாதக்காரனாகவும், மனரீதியாகப் பிரச்னைகளைக் கொண்டவனாகவும் சித்திரிக்கிறார். இது சரிதான் என்று தோன்றுகிறது. ஆனால் ஆதித்த கரிகாலனது கொலையைப் போலவே, அவனது மனப்பிரச்னையையும் இன்னும் ஆழமாகக் கையாளாமல், தனது கதையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு போய்விட்டார். நான் செய்த ஆய்வுகளின்படி மனரீதியாகப் பிரச்னை இருந்ததால்தான், அவனைத் தனது வசமே மலையமான் வைத்திருந்தார். எதனால் என்பதை வரும் அத்தியாயங்களில் காணலாம்.

இருந்தா ஆளப்போகிறாய்?" - பார்த்திபன் அவனை திகைப்புடன் நோக்கினான்.

"ஏன்.. தவறென்ன? சோழ கரிகாலனும், பல்லவ இளந்திரையனும் சேர்ந்து அமைத்த காஞ்சி நகர்தானே. இங்கே இருந்து ஆண்டால் என்ன தவறு? அதற்காகத் தான் இங்கே காஞ்சியில் பொன்னாழி என்கிற பொன் மாளிகையை எழுப்பினேன்!" - ஆதித்த கரிகாலன் கூறினான்.

பொன்னாழி என்றவுடன் பார்த்திபனுக்கு அத்தி மலைத்தேவனின் பிரதிமையைப் பற்றி நினைவு வந்தது. 'பிரவாள மாளிகையில் ஒளித்து வைக்கப்பட்ட அத்திமலையானின் பிரதிமையைப் பற்றிக் கேட்டு விடலாமா?' - ஒருகணம் சிந்தித்தான்.

அவனது மனவோட்டத்தைப் புரிந்து கொண்டவன் போன்று பதில் அளித்தான், ஆதித்தன். "பார்த்திபா! காஞ்சிக்கு வந்ததும் புத்துணர்வு கொண்டவனாக மாறிவிட்டேன். காஞ்சியின் சூழ்நிலை எனது மனதிற்கு இதமளிக்கிறது. உனது நட்பு கிடைத்திருக்கிறது. பொன்னாழி கிடைத்திருக்கிறது. வீரபாண்டியனின் தலை கிடைத்திருக்கிறது. நான் நினைப்பதெல்லாம் நடக்கிறது என்றால், இது எனக்கு மிகவும் ராசி மிகுந்த இடம்தான். பிரவாள மாளிகையை நான் கண்ட நேரம் நல்ல நேரமே!" - தன்னை மறந்து ஆதித்தன் பேச, ஒருகணம் அவன் சிலையைப் பற்றிக் கூறுவான் என்றே எதிர்பார்த்தான், பார்த்திபன்.

ஆனால், உடனே தன்னைச் சுதாரித்துக் கொண்ட, ஆதித்தன், நண்பனை நோக்கினான். "பார்த்திபா! சிந்தூரன் கொலையின் விசாரணையை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நான் திருக்கோவிலூர் சென்று பாட்டனார் மலையமானைச் சந்தித்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லி ஆதித்த கரிகாலன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தான். ஆனால், இடையிடையே அவனது

முகத்தில் பயத்தின் சாயை படருவதையும், மேனி நடுங்குவதையும் கண்டான், பார்த்திபன். உள்ளத்தில் அவனை ஏதோ பிரச்னை வாட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தான், பார்த்திபன்.

“நான் வேண்டுமானால் உன்னுடன் வரட்டுமா?”- பார்த்திபன் கேட்க, பதற்றத்துடன் அவனைத் தடுத்தான், ஆதித்த கரிகாலன்.

“தேவையில்லை, நண்பா. நான் மட்டும் சென்று விட்டு விரைவில் வந்துவிடுகிறேன். நீ சிந்தூரனின் விசாரணையைக் கவனி!” என்று சொல்ல, வேறு வழியின்றி, பார்த்திபன் அங்கிருந்து புறப்பட்டான்.

தனது மாளிகையினுள் பார்த்திபன் நுழைந்த போது, கல்பலதாவும், லலாடிகாவும் அவனுக்காக வாயிலிலேயே காத்திருந்தனர். “இளவரசே! சிந்தூரனை யார் கொன்றார்களாம்?” - லலாடிகா ஆவலுடன் கேட்டாள்.

“தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பை என்னிடம் தந்திருக்கிறான், ஆதித்த கரிகாலன். சுந்தரவதனன் என்கிற ஒரு காவலன், கொலை நிகழ்வதற்கு முன்பாக, முன்னிரவில், இரண்டு பெண்கள் சிந்தூரனுடன் பேசிக் கொண்டிருந்ததாகக் கூறினானாம். அதன் பிறகு ஓர் உருவம் அங்கே வந்து நின்றதாம். அந்த மர்ம மனிதன்தான் சிந்தூரனைக் கொன்றிருக்கக் கூடும்! சுந்தரவதனனை விசாரிக்க வேண்டும்!” என்று பார்த்திபன் கூறியதும், பெண்கள் இருவரும் திடுக்கிட்டு ஒருவரையொருவர் நோக்கினர்.

‘கூறிவிடலாமா?’ என்பது போன்று கல்பலதா நோக்க, லலாடிகா, ‘சரி’ என்னும் பாவனையில் தலையசைத்தாள்.

“பார்த்திபரே! இது குறித்து நீங்கள் அந்தக் காவலனை விசாரிக்கத் தேவையில்லை. அவன் குறிப்பிட்ட இரண்டு பெண்கள் நானும், லலாடிகாவும்தான்.” - கல்பலதா கூற, நாகத்தை மிதித்தவன் போன்று அவளை ஏறிட்டான் பார்த்திபன்.

"நீங்களா? எதற்காகச் சிந்துரரனைச் சந்தித்தீர்கள்?"

"பிரவாள மாளிகையை இடித்துப் பொன்னாழியை எழுப்பியது அவன்தானே. பிரவாள மாளிகையில் அத்திமலையானின் பிரதிமை கிடைத்திருந்தால், அவனுக்குத் தெரியாமல் இருக்காதே? அவனைச் சந்தித்துச் சற்றே அச்சுறுத்தினோம். ஆதித்த கரிகாலன், உங்களிடம் அவனைக் கொல்லும்படி கட்டளை யிட்டிருப்பதாகக் கூறினோம். நேற்று நம் மாளிகைக்கு வந்த ஆதித்த கரிகாலன் உங்கள் செவியில் ஏதோ இரகசியமாகக் கூறினான் அல்லவா? அதனை நினைவு படுத்தியதும், நடுங்கிப் போய் உண்மையை உரைத்து விட்டான். அத்திமலையானின் பிரதிமை பிரவாள மாளிகையின் புகைபோக்கியில் பதுக்கப்பட்டிருந்ததாம். ஆதித்த கரிகாலன்தான் அதை எங்கோ பத்திரமாகப் பதுக்கி வைத்திருக்கிறானாம். தெற்கேதான் எங்கோ எடுத்துச் செல்லப்பட்டதாம்." - கல்பா கூற, வாயடைத்துப் போய் நின்றான், பார்த்திபன்.

சிந்தூரன் கொலை செய்யப்படுவதற்கு முன்பாக, அவனைச் சந்தித்த இரண்டு பெண்கள், தனது மாளிகையில் தங்கியிருப்பவர்கள் என்பதை அறிந்ததும், பெரும் அதிர்ச்சிக்குள்ளானான், பார்த்திபன்.

சினம் பொங்க இரு பெண்களையும் மாற்றி மாற்றி நோக்கினான்.

"நீங்கள் இருவரும் பெரும் மேதாவிகள் என்கிற நினைப்போ? சிந்தூரன் பொன்னாழியை எழுப்பியவன். அவனது கொலை ஆதித்த கரிகாலனை பெருமளவில் பாதித்திருக்கிறது. கொலை செய்யப்படுவதற்கு முன்பாக அவனைச் சந்தித்த இரு பெண்கள், எனது மாளிகையில் தங்கி இருக்கும் பெண்கள் என்பதை அறிந்தால், ஆதித்த கரிகாலன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்?"- ஆவேசத்துடன் கத்தினான், பார்த்திபன்.

லலாடிகா நிதானமாக அவனைப் பார்த்தாள். "ஒன்றும் நினைக்கமாட்டார். சிந்தூரனைச் சந்தித்த பெண்கள் நாங்கள் என்பது அறிந்தால், அவர் தங்களிடம் அச்சப்படுவார்?" - லலாடிகா கூற, அவளை வியப்புடன் திரும்பிப் பார்த்தான். அவனது மனக்கண்ணின் முன்பாக ஆதித்த கரிகாலனின் அச்சம் கலந்த பார்வையும், நடுங்கும் தேகமும் தோன்ற, மீண்டும் இரு பெண்களையும் மாற்றி மாற்றி நோக்கினான்.

"அவன் ஏன் என்னிடம் பயப்பட வேண்டும்?"

"காரணம், நாங்கள் சிந்தூரனைச் சந்தித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்ட பின்னர், எங்கள் பின்பாக மரண ஓலம் ஒன்று கேட்டது. அந்த ஓலத்திற்கு உரியவன் சிந்தூரனாகத்தான் இருந்திருக்க வேண்டும். நாங்கள் விரைவாக அங்கிருந்து நடக்க, கால் இடறி விழுந்தோம். அப்போது எங்களைக் கடந்து சென்றது ஓர் உருவம். கொலை நிகழ்ந்த இடத்திலிருந்துதான் அந்த உருவமும் வந்தது. கீழே கிடந்த எங்களை அலட்சியம் செய்துவிட்டு, தான் பாட்டுக்கு நடந்து சென்றது அந்த உருவம். அது யார் தெரியுமா?" - லலாடிகா சுவாரஸ்யமான இடத்தில் நிறுத்த, பார்த்திபனின் முகத்தில் பரவியிருந்த சினம் விலகி, ஆர்வத்திற்கு வழி தந்தது.

"தெரியும். காவலன் சுந்தரவதனனும் நீங்கள் புறப்பட்டுச் சென்றதும், ஒரு மர்ம உருவம் வந்து நின்றதாகக் கூறினான். அந்த உருவம்தான் சிந்தூரனை கொலை செய்திருக்க வேண்டும் என்றும் கூறினானாம். நீங்கள் அந்த உருவத்தைப் பார்த்தீர்களா? யார் அவன்?"- பரபரப்புடன் கேட்டான் பார்த்திபன்.

"வேறு யார்! உங்கள் ஆருயிர் நண்பன் ஆதித்த கரிகாலன்தான், கொலை நடந்த இடத்தில் இருந்து வந்தவன்" - கல்பலதா கூறியதும், தனது இதயம் வாய்

வழியாக வெளியே வந்து விழுந்ததைப் போன்று உணர்ந்தான், பார்த்திபன்.

கலவரத்துடன் காணப்பட்ட ஆதித்த கரிகாலன் எதற்காகத் திடீரென்று பாட்டன் மலையமானைச் சந்திக்கச் சென்றான் என்று வரும்போது யோசித்துக் கொண்டிருந்தான், பார்த்திபன். இப்போது அதற்கான காரணம் என்ன என்பது மெதுவாகப் புரியத் தொடங்கியது.

## 13. சொல்லக் கூடாதது, பெண்ணிடம் இரகசியம்

பழையாறை அரண்மனை அடங்கிவிட்டிருந்தது. சோமேஸ்வரரின் ஆலயத்திற்குச் சென்று அதிக நாழிகைகளைக் கழித்திருந்ததால், மிகவும் களைத்துப் போயிருந்த குந்தவை அப்போதுதான் மஞ்சத்தில் சரிந்து தனது கண்களை மூடி இருந்தாள். சாளரக் கதவுகளை மூடி, திரைச்சீலைகளை இழுத்து விட்டுக் கொண்டிருந்த தெட்டக்கனியின் செவிகளில் யாரோ அறைக் கதவை மெதுவாகத் தட்டும் ஒலி கேட்க, வியப்புடன் திரும்பியவள், அறை வாயிலை நோக்கிச் சென்று கதவைத் திறந்து தலையை மட்டும் வெளியே நீட்டினாள்.

காவலன் ஒருவன் ஓலையுடன் நின்று கொண்டிருந்தான். "அம்மா! தஞ்சையிலிருந்து தூதன் வந்திருந்தான். இளவரசியார் வசம் உடனே அளிக்க வேண்டும்" என்று கூறியபடி அவன் ஓலையை நீட்டினான். ஓலையைப் பெற்றுக் கொண்டவள், மீண்டும் அறைக் கதவை மூடிவிட்டு குந்தவை உறங்கிக் கொண்டிருந்த மஞ்சத்தை நோக்கி நடந்தாள். கண்களை மூடி சயனித்திருந்த குந்தவையை ஏறிட்டு நோக்கினாள். குந்தவையை எழுப்புவதா வேண்டாமா என்பது போன்று தயங்கி நிற்க, கண்களைத் திறவாமலேயே திடீரென்று குரலை எழுப்பினாள், குந்தவை.

"என்ன விஷயம்? வந்தது யார்?"

தெட்டக்கனி மெல்லிய குரலில் கூறினாள். "தங்கள் தந்தையார்தான் ஓலை அனுப்பியிருக்கிறார்!"

"ஓலையைப் படி!" - இன்னமும் குந்தவை தனது கண்களைத் திறக்கவில்லை.

"அருமை மகளுக்கு, உனது தந்தை சுந்தர சோழரின் ஆசிகள். நாமெல்லோரும் காஞ்சி நகருக்குச் செல்ல இருக்கிறோம். உனது அண்ணன் பட்டத்து இளவரசனும், வடபுல மாதண்டநாயகனுமான ஆதித்த கரிகாலன் எழுப்பியிருக்கும் பொன்னாழி அரண்மனையின் பிரவேச விழா நடைபெற உள்ளது. உனது பாட்டன் மலையமான் பூசனைகளுக்கு ஏற்பாடு செய்துள்ளார். உன்னையும் அவ்சியம் அழைத்து வரும்படி ஓலை அனுப்பியிருக் கிறான், ஆதித்த கரிகாலன். நீ தஞ்சைக்கு வந்ததும், நாம் காஞ்சிக்கு புறப்பட வேண்டியது. எனவே, விடியலில் புறப்பட்டு தஞ்சைக்கு வந்துவிடு." - அன்பு தந்தை.

ஓலையைப் படித்து முடித்த தெட்டக்கனி, கண்களை உயர்த்தி குந்தவையின் முகத்தைப் பார்த்தாள். அவளது முகத்தில் எவ்வித சலனமும் இல்லை. கண்களைத் திறவாமலேயே கிடந்தாள்.

"பயணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்யட்டுமா, இளவரசி!" - தெட்டக்கனி கேட்க, பதில் கூறாமல் அமைதி காத்தாள்.. குந்தவையின் மனதில் என்ன ஓடுகிறது என்பதை அனுமானிக்க முயல்பவளைப் போன்று தெட்டக்கனி அவளது முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

திடீரென்று கண்களைத் திறந்து, தெட்டக்கனியை ஏறிட்டுப் பார்த்தாள்.

"நான் எதற்குக் காஞ்சிக்கு வர வேண்டும்? எனக்கும் அவன் எழுப்பியிருக்கும் பொன்னாழிக்கும் என்ன தொடர்பு? பாணர்களை அடிமைகளாக கங்கர்களுக்கு விற்று அதற்குக் கூலியாக நான்கு தங்கச் சுரங்கங்களைப் பெற்று, அவற்றில் கிடைத்த ஸ்வர்ணத்தில் காஞ்சியில் பொன்னாழி எழுப்பியுள்ளான். அதன் கொண்டாட்டத் திற்கு நான் போக வேண்டுமா? நான் தஞ்சைக்குப்

*போகப் போவதில்லை.” - குந்தவையின் குரலில் சினம் கொப்பளித்தது.*

*“சோழ மன்னரே அழைத்திருக்கிறார், இளவரசி. தாங்கள் போகவில்லையென்றால், அரசகுடும்பத்தில் சச்சரவு என்று வதந்தி பரவும். தாங்கள் பொன்னாழி கொண்டாட்டத்தில் கலந்து கொள்வது உசிதம் என்றே தோன்றுகிறது.”*

*“ஆதித்த கரிகாலன் எனக்கு அழைப்பு அனுப்ப வில்லை. நான் எப்படிக் காஞ்சிக்கு வருவேன்? தந்தையிடம் என்னையும் அழைத்து வா என்று சொல்லியிருக்கிறான். அவ்வளவு முக்கியத்துவம் இல்லாதவளா நான்?” - சயனித்திருந்த குந்தவை* சினத்துடன் எழுந்து அமர்ந்தாள்.*

* அனைவரும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய கட்டம் இது. பொன்னியின் செல்வனில் குந்தவைக்கும், ஆதித்த கரிகாலனுக்கும் பிரச்னைகள் இருப்பதாகத்தான் கல்கி எழுதி இருக்கிறார். அவர்கள் சந்தித்த கட்டங்கள் குறைவு. சந்தித்த ஒன்றிரண்டு கட்டங்களிலும் ஆத்மார்த்தமான உரையாடல் கிடையாது. இருவருக்கும் இடையே முடியை விழுங்கியது போன்று சங்கடமான ஒரு உறவுதான் நிலவியிருக்கிறது. சரித்திரம் எழுதும் ஒரு பிரபல எழுத்தாளரிடம் குந்தவைக்கும், ஆதித்த கரிகாலனுக்கும் இடையே என்ன பிரச்னை என்று கேட்டேன். ‘அதுதான் தெளிவாகக் கல்கியே கூறியிருக்கிறாரே.. நந்தினியுடன் பழகாதே என்று குந்தவை ஆதித்த கரிகாலனை எச்சரிக்க, அவன் பிடிவாதமாக அவளுடன் பழகி வந்ததால் அவர்கள் இருவரிடையே பிளவு ஏற்பட்டது’ என்றார் அவர். ‘நந்தினியும், ஆழ்வார்க்கடியானும் கற்பனைப் பாத்திரங்கள் என்று கல்கியே கூறியுள்ளாரே. அப்படி இருக்க, ஒரு கற்பனைப் பாத்திரம் தொடர்பாக ஒரு பட்டத்து இளவரசனுக்கும், அவன் தங்கைக்கும் எப்படிப் பிரச்னை எழும்?’ என்று கேட்டவுடன் அதிர்ந்தார், அவர். ‘இருவருக்கும் இடையே பிளவு ஏற்பட்டது உண்மை. காரணம் என்னவோ, நான் அறியேன்’ என்றார். ஒன்று மட்டும் உறுதி! தம்பி அருண்மொழிவர்மனை பழையாறையில் வளர்த்து, தனது கட்டுப்பாட்டில் அவனை

*தெட்டக்கனி அவளை நிதானமாக நோக்கினாள். "இளவரசி! நாளை உங்கள் அண்ணன் அரியணையில் சோழ மன்னராக அமர இருக்கிறார். அவரை விரோதித்துக்கொள்வது எனக்குச் சரியாகப்படவில்லை. நமக்குள் கோபதாபங்கள் இருந்தாலும், இம்மாதிரி சமயங்களில் அவற்றை வெளிக்காட்டாமல் இருப்பது தான் நல்லது. அவரது பொன்னாழி நுழைதல் வைபவத் திற்குத் தாங்கள் வரவில்லையென்றால், அனைவரது மனங்களிலும் 'ஏன்?' என்கிற குரல் எழலாம். பழு வேட்டரையர் வேண்டுமென்றே ஆதித்த கரிகாலரிடம், ஏன் குந்தவை வரவில்லை என்று கேட்டு, அவரது கோபத்தை அதிகப்படுத்துவார். கோபமும், ஆவேசமும் ஏற்பட்டால் உங்கள் சகோதரனின் நிலை என்ன என்பது உங்களுக்குத் தெரியாதா?" - தெட்டக்கனி கேட்க, அலட்சியமாகச் சூள் கொட்டியபடி மஞ்சத்தில் அமர்ந்து தனது கால்கள் இரண்டையும் வயிற்றோடு கைகளால்*

---

வைத்திருந்து, ஆதித்த கரிகாலனுக்குக் கூடப் பெண் பார்த்திராத சமயத்தில் கொடும்பாளூர் இளவரசி சிறுமி வானதியை அவன் மனைவியாகத் தேர்ந்தெடுத்து, அருண்மொழியைச் சுற்றியே தனது நடவடிக்கைகளை உருவாக்கிய குந்தவை எந்தக் காரணத்தினாலோ ஆதித்த கரிகாலனை வெறுத்திருக்கிறாள். பராந்தகனின் மாமனார் பெரிய பழுவேட்டரையர். பராந்தகனின் நேர் வாரிசான அரிஞ்சயனின் மகன் சுந்தரரின் செல்வங்களுக்கு எதிராகப் பழுவேட்டரையர்கள் உத்தம சோழன் (மகளின் சக்களத்தியின் வாரிசு) ஆதரித்ததாகக் கூறுவதும் நெருடுகிறது.

சோழர்களின் எதிரி நாடான பெரும்பாணப்பாடியை சூறையாடி, அவர்களை கங்கர்களுக்கு அடிமைப்படுத்திய பராந்தகனின் வாரிசுகளை வந்தியத்தேவன் எப்படி நண்பனாகவும், மனைவியாகவும் ஏற்றுக் கொண்டான்? பொன்னியின் செல்வனைப் பாகுபலி போன்று ஒரு 'ஃபாண்டஸி'யாக எடுத்துக் கொண்டால் பிரச்னை இல்லை. அதனை உண்மை சரித்திரமாக எடுத்துக் கொண்டால், ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. பாணர்களைச் சோழர்கள் அழித்த குறிப்புகள் சோழ சிங்கபுர கல்வெட்டு களிலும், உதயேந்திர செப்பேடுகளிலும் உள்ளன.

சேர்த்துப் பிணைத்து முன்னும் பின்னுமாக ஆடத்துவங்கினாள், குந்தவை. அப்படி அவள் செய்தால், மற்றவர்கள் கூறும் ஆலோசனைகளை மனதினில் எடைபோடுகிறாள் என்பது பொருள்.

'தனது பேச்சு அவளது மனதை அடைந்துவிட்டது என்பதைக் கண்ட தெட்டக்கனி அடுத்த ஆயுதத்தைப் பிரயோகித்தாள். குந்தவையை வழிக்குக் கொண்டு வருவதென்றால் லேசான காரியமா என்ன! சாம, தான, பேத, தண்டத்தைப் பிரயோகம் செய்ய வேண்டுமே.'

"அமானுஷ்யர் தெரிவித்த செய்திகளை மறந்து விட்டீர்களா, இளவரசி? பாணப்பத்திரம், உக்ரோதயம், உத்தமசீலரது வாள் மூன்றையும், நமது பழையாறை கஜானாவில் இருந்து எடுத்துச் சென்றார். பாணப் பத்திரத்தைக் கொண்டு நான்கு சுரங்க ஸ்வர்ணத்தைக் கைப்பற்றிப் பொன்னாழி மாளிகையை எழுப்பினார். உத்தமசீலரது வாளினால் வீரபாண்டியன் தலையைக் கொய்தார். அடுத்து உக்ரோதயத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறார் என்பதைக் காண வேண்டாமா? அதற்காக நாம் காஞ்சிக்கு அவசியம் போக வேண்டும்!" என்றதும் குந்தவையின் முகத்தில் மீண்டும் ஆர்வம் கொப்பளிக்கத் துவங்கியது.

"ஆம்! அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். பொன்னாழியையும் பார்க்க வேண்டும். உக்ரோதயத்தை வைத்து அவன் என்ன செய்யப் போகிறான் என்பதையும் காண வேண்டும். சரி! உன் வழிக்கே நான் வருகிறேன். நமது பிரயாணத்திற்கு ஏற்பாடுகளைச் செய். நாளை விடியலில் நாம் குடந்தை வழியாக தஞ்சைக்குச் செல்வோம். அப்பா அம்மாவுடன், நாளை காஞ்சிக்கு புறப்படுவோம்!" என்றவள் மீண்டும் மஞ்சத்தில் சரிந்து கொண்டாள். மறுநாள் பிரயாணத்திற்கான ஏற்பாடு களைச் செய்வதற்குச் சென்றாள் தெட்டக்கனி.

★ ★ ★

"தந்தையே! பராந்தகன் ஏன் பாணப்பத்திரத்தைக் கொண்டு கங்க நாட்டு மன்னன் பிருத்விபதி அளித்த தங்கச் சுரங்கங்களைக் கைப்பற்றவில்லை?" - தஞ்சை அரண்மனையில் தாய், தந்தையுடன் தனித்திருந்த போது, அவரைக் கேட்டுவிட்டாள், குந்தவை.

சுந்தர சோழரும், வானவன்மாதேவியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். வானவன்மாதேவி மகளை எச்சரித்தாள்.

"குந்தவை! உனது தந்தைக்கு உடல் நலம் சரியில்லை. கூடியவரையில் பழைய கதைகளைப் பேசி அவரது மனதை நோகடிக்காதே. பாணப்பத்திரம் வந்த வேளை தான் பராந்தகரின் நான்கு மகன்களும் சோகமான முடிவுகளை எதிர்கொண்டனர். மூத்தவன் இராஜாதித்யனும், கடையவன் உத்தமசீலனும் போர்க்களத்தில் கொல்லப்பட்டனர். அந்த வருத்தத்தில் இருந்த பராந்தகர் பாணப்பத்திரம் குறிப்பிட்டிருந்த ஸ்வர்ண சுரங்கங்களைக் கைப்பற்றவில்லை. பாணப்பத்திரத்தையே வெறுப்புடன் பழையாறை கஜானாவில் சேர்த்துவிட்டார். அதன் பிறகு பாணப்பத்திரத்தை அனைவரும் மறந்துவிட்டனர்." - வானவன்மாதேவி கூறினாள்

"பாணர்களை வீழ்த்தி அவர்களை கங்க நாட்டிற்கு அடிமைகளாக விற்றார் பராந்தகர். அதற்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது நான்கு ஸ்வர்ண சுரங்கங்கள். உங்கள் அனுமதி இல்லாமல், அண்ணன் பாணப்பத்திரத்தை எடுத்துச் சென்று அந்தச் சுரங்கங்களைக் கைப்பற்றி இருக்கிறான். அதுவும் தவறில்லை. ஆனால் அந்த ஸ்வர்ணத்தைக் கொண்டு காஞ்சியில் எதற்காகப் பொன்னாழி எழுப்ப வேண்டும்? இங்கே தஞ்சையில் பொன்மாளிகையைக் கட்டியிருந்தால், தாங்கள் கூட அல்லவா அதில் தங்கியிருக்கலாம். சோழத்திற்கு உரிய ஸ்வர்ணத்தைக் கொண்டு பல்லவ தலைநகரில் எதற்காகப் பொன்னாழியைக் கட்ட வேண்டும்? ஏன் பழையாறை அரண்மனையும், பூச்சுகளை இழந்து மிகவும் சீலமாக

இருப்பது யார் கண்ணிலும் படவில்லையா? இரவு வேளையில் எனது அறையின் கூரையில் ஆங்காங்கே ஓதம் பரவி உள்ளது. இதனால் எனது அறையே குளிர் எடுக்கிறது. எனக்குப் பழையாறையில் பொன் மாளிகையைக் கேட்கவில்லை. அந்தப் பொன்னில் சிறிது எடுத்து எனது பழையாறை அரண்மனையைச் செப்பனிட்டு இருக்கலாம் என்றுதான் கூறுகிறேன்."- தனது குரலில் ஒலித்த சீற்றத்தை குந்தவை கட்டுப்படுத்த நினைத்தாலும், அவளை மீறி சினம் கொப்பளித்தது. சுந்தர சோழர் மௌனமாக அமர்ந்திருக்க, குந்தவை தொடர்ந்தாள்.

"உபேந்திர பார்த்திப பல்லவன் இன்று அண்ணனுக்கு நண்பனாக இருக்கிறான். நாளையே புரட்சியை ஏற்படுத்தி மீண்டும் பல்லவ ராஜ்யத்தை அவன் அமைத்தால், பொன்னாழி மாளிகையை, உங்கள் மகன் தஞ்சைக்கு எடுத்து வருவானா என்ன? அப்போது நமக்கு உரித்தான தங்கம், பல்லவர்களிடம் சிக்கிக் கொள்ளும் அல்லவா? நீங்கள் எப்படிப் பொன்னாழி கட்டுவதற்கு அவனுக்கு அனுமதி தந்தீர்கள்? வீரபாண்டியன் தலையை எனது தோழி தெட்டக்கனி கூட வெட்டி வருவாள். அப்படி இருக்க, ஆதித்தனுக்கு நான்கு சுரங்க ஸ்வர்ணத்தைப் பரிசளிக்க வேண்டுமா என்ன?" .- குந்தவை பொங்கினாள்.

முதன்முறையாக வாய் திறந்து பேசினார், சுந்தர சோழர். அவரது கண்கள் அவளை கனிவாகப் பார்த்தாலும், அவற்றில் தேங்கி நின்ற சோகம், குந்தவையை உறுத்தியது.

"அம்மா குந்தவை! இப்படி வந்து அமர்ந்துகொள்! பொதுவாகப் பெண்களிடம் இரகசியங்களைச் சொல்லக் கூடாது என்பார்கள். உன்னை எனது பெண்ணாக நினைக்கவில்லை. மிகவும் வலுவுள்ள ஒரு ஆண் மகனாகவே நினைத்து ஒரு தகவலைக் கூறுகின்றேன்.

இதனை உனது இதயத்தில் ஆழ புதைத்துக் கொள். நான் இந்தத் தகவலை உன்னிடம் பரிமாறிக் கொண்டேன் என்று ஆதித்த கரிகாலனுக்குத் தெரிய வரக்கூடாது!"

பெரும் பீடிகையுடன் சுந்தர சோழர் துவக்க, குந்தவையின் கண்கள் வியப்பினால் விரிந்தன. சுந்தரர் தொடர்ந்தார்.

"நான் கூறுவதைக் கவனமாகக் கேள்! நன்றாக நிலைமையை யோசித்து நான் கேட்கும் வினாக்களுக்குப் பதில் கூறு. ஆதித்த கரிகாலனையும், உன்னையும் நாங்கள் பெற்றோமே தவிர, நீங்கள் இருவரும் என்னுடன் வசிக்கிறீர்களா? அருண்மொழியையும் நீதானே வளர்த்தாய். சிறுவயது முதல் ஆதித்த கரிகாலன் இங்கே ஏன் வளரவில்லை என்பதை யோசித்துப் பார்த்தாயா?" - சுந்தர சோழர் கேட்டதும் திகைத்துப் போனாள், குந்தவை.

"துவக்கம் முதலே அப்படித்தானே, நாங்கள் உங்களைவிட்டுப் பிரிந்தே இருந்திருக்கிறோம். எனது பாட்டனார் மலையமான், ஆதித்த கரிகாலனை நான் வளர்த்துக் கொள்கிறேன் என்று கூறியதால்தானே, அவன் அங்கு வளர்கிறான்!" - குந்தவை கூறினாள்.

"அப்படித்தான் நாங்கள் நாட்டு மக்களுக்குக் கூறி வருகிறோம். ஆனால் அதன் பின்பாகப் பெரிய விவகாரம் உள்ளது. ஆதித்த கரிகாலனுக்கே இந்த விவரம் தெரியாது. கெடில நதியைக்* கடந்து அவன் தெற்கே

---

* கெடிலம் நதி என்கிற கருட ஆறு பண்ருட்டி அருகே ஓடுகிறது. அதன் கரையில்தான் திருவதிகை வீரட்டாணேஸ்வரர் ஆலயம் உள்ளது. திருக்கோவிலூர் தென்பெண்ணை நதிக்கரையில் உள்ளது. தென்பெண்ணை ஆற்றின் ஒரு கிளை மலட்டாறாகத் தென்கிழக்கே பாய்ந்து கெடில நதியில் கலக்கிறது. (The Gadilam River, which starts in eastern part of Thirukoilur Taluk of Villupuram district flows through Cuddalore Taluk. In Cuddalore Taluk, Malattar joins it on the right and then it flows into the Bay of Bengal at a point, just north of Cuddalore.

வரக்கூடாது. எனவேதான், அவன் காஞ்சியில் பொன்னாழி கட்டுகிறேன் என்றவுடன் சம்மதித்தேன். அவன் காஞ்சியில் இருந்துதான் சோழ நாட்டை ஆளப்போகிறான்." - சுந்தர சோழர் கம்மிய குரலில் கூறினார்.

திடுக்கிட்டுப் போன குந்தவை அவரை உறுத்துப் பார்த்தாள். "இது எங்ஙனம் சாத்தியம், தந்தையே? சோழ நாட்டைப் பல்லவத்தின் தலைநகரிலிருந்து ஆளுவதா? எதற்காக இந்த ஏற்பாடு?" - குந்தவையின் குரல் அதிர்ச்சியால் கிறீச்சிட்டது.

"உனக்கு நமது சரித்திரங்களை அவ்வப்போது கூறி வந்திருக்கிறேன். உனக்கு நினைவிருக்கிறதா? ஆதித்த சோழன், குந்தள நாட்டு இளவரசி லக்ஷ்மணப்ரியா என்கிற இளங்கோபிச்சியை மணந்து கொண்டான் அல்லவா?"

"ஆம் கூறியிருக்கிறீர்கள். பின்னர் அபராஜித பல்லவனைக் கொன்று அவரது தங்கை திரிபுவன மாதேவியைக் கடத்தி வந்து திருமணம் செய்து கொண்டதாகவும் கூறியிருக்கிறீர்கள்!" - குந்தவை கூறினாள்.

"ஆம்! திரிபுவனமாதேவி, தன்னை ஆதித்த சோழன் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால், தனது மகன் பராந்தகனுக்குத்தான் அரியணையை அளிக்க வேண்டும் என்று சத்தியம் வாங்கிக் கொள்ள, ஆதித்த

---

The Thenpennai and the Gadilam are connected by a river course called 'the Malattar,' which serves to carry the surplus water from Thenpennai to Gadilam.) கெடில நதிக்கரையில் உள்ள வீரட்டாணேஸ்வரர் ஆலயத்தைக் கடந்து தெற்கே பயணிக்கக் கூடாது என்று மலையமான் தடுப்பதற்குக் காரணம், கருடக்குன்றம் தொடங்கிக் கருடன் என்கிற கெடில நதி வரை கருடனின் ஆதிக்கம் உள்ள பகுதி என்பதால் அவனது ஜாதகத்தில் உள்ள சர்ப்ப தோஷம் அவனை பாதிக்காது என்று நம்பினார், மலையமான்.

சோழனும் அதற்கு உடன்பட்டார். பட்டத்து அரசி இளங்கோபிச்சியையும் அவள் மகன் கன்னர தேவனையும் ஒதுக்கிவிட்டு பராந்தகனுக்கு அரியணை கொடுத்ததும், அவள் சோழத்தையே சபித்துவிட்டுச் சென்றாள்.

'மூத்த மகனான எனது மகனுக்குக் கிட்டாத அரியணை சோழத்தின் எந்த மூத்த மகனுக்கும் கிடைக்காது' என்று மண்ணை வாரி அரண்மனையை நோக்கித் தூற்றியபடி வீசினாள். சொல்லி வைத்தது போன்று, தக்கோலம் போரில் பராந்தகனின் மூத்த மகன் இராஜாதித்யன் இறந்து போனான். இரண்டாவது மகன் கண்டராதித்யன் காணாமல் போனான். இளைய மகன் உத்தமசீலனும் போரில் மாண்டு போனான். மிஞ்சிய ஒரே மகன், எனது தந்தை அரிஞ்சயர் பதவிக்கு வந்து ஆறாவது திங்களில் மறைந்தார். இளங்கோபிச்சியின் சாபம் மூத்த பிள்ளைகளை பாதிக்கிறது. எனவே, அவன் திருக்கோவிலூரிலேயே தங்கி காஞ்சியில் இருந்து ஆளட்டும். தஞ்சை அரண்மனையில் தங்கினால்தானே, இளங்கோபிச்சியின் சாபம் பலிக்கும் என்று மலையமான் கூறியதால், அவனை அங்கேயே விட்டு வைத்திருக் கிறோம்!" - சுந்தர சோழரின் குரல் தழுதழுத்தது.

"தந்தையே! அரிஞ்சயரின் மூத்த மகன்தானே தாங்கள். நீங்கள் நன்றாகத்தானே இருக்கின்றீர்?" - குந்தவை வியந்தாள்.

"நான் அரிஞ்சயரின் மூன்றாவது மனைவி கல்யாணிக்குப் பிறந்தவன். முதல் மனைவி வீமன் குந்தவையுடன் எனது தந்தை வாழவேயில்லை. இரண்டாவது மனைவி பூதி ஆதித்தகோதை பிடாரிக்கு இரண்டு மகன்கள் பிறந்தார்கள். ஆனால் இருவருமே வாழவில்லை. நான் மூன்றாவது மனைவிக்குப் பிறந்த மகன் என்பதால் தப்பினேன். ஆனால் ஆதித்த கரிகாலனை இளங்கோபிச்சியின் சாபம் பாதிக்கலாம்

*என்கிற கவலை எங்களுக்கு எழுந்துள்ளது.” - சுந்தர சோழர் கூறினார்.*

*“எதனால் இந்த சந்தேகம்?” - குந்தவை கேட்டாள்.*

*“அவன் பிறந்த காலத்தைக் கொண்டு ஜோதிடர்களை வைத்துக் கிரகச் சஞ்சார நிலையைக் கணித்த போது, அவனுடைய ஜாதகத்தில் நான்கு கோள்கள் நீச்சமாக உள்ளது. மந்த ஆட்டில் கருமந்தனும் மகர ஈராவதனில் நகராபொன்னனும் பாயும் நந்தியில் நாசநீலனும் கொட்டும் தேளினில் நஞ்சுநாகமும் உள்ளதாக ஜோதிடர்கள் தெரிவித்தனர். அவனுடைய ஜாதகத்தில் சர்ப்ப தோஷம்* இருப்பதாகக் கூறினார்கள். மரண*

* நமது வைதீக ஜோதிடப்படி, மனிதரின் ஜாதகங்களில் தோஷங்கள் புலப்படும். காலசர்ப்ப தோஷம் என்பது ராகு மற்றும் கேதுவுக்கு இடையே மற்ற கிரகங்கள் சிக்கும் போது ஏற்படும் நிலை. இதனால் திருமணம் தாமதிக்கலாம். அதற்குச் சிறு பரிகாரங்கள் செய்தால், தோஷம் நீங்கிவிடும். ஆனால் ஜாதகத்தில் சர்ப்ப தோஷம் இருந்தால் இதனால் பெரும் பிரச்னைகளை ஏற்படுத்தலாம். கால சர்ப்ப தோஷம் போலவே சர்ப்ப தோஷமும் ராகு கேதுவினால்தான் உண்டாகிறது. சர்ப்ப தோஷம் என்பது நாகத்தைக் கொல்வதால் ஏற்படும் பாவம் என்று பலரும் தவறாக நினைத்துக் கொள்கின்றனர். சர்ப்ப தோஷம் என்பது பெண்களின் சாபங்களால் ஏற்படும் நிலை. இளங்கோபிச்சி சோழர்களைச் சபித்தாள். கண்ணகியின் சாபம் மதுரையையே எரித்தது. பெண் பாவம் பொல்லாதது என்று கூறுவதே இந்த சர்ப்ப தோஷத்தை குறித்துதான். சர்ப்ப தோஷத்தால் உண்டாகும் பலன்கள்: இயற்கையாக அமையாத மரணம், கொலை, விபத்து, தற்கொலை, சரியாகத் தகனம் செய்யப் படாமை, உடல் அங்கம் அங்கமாகச் சிதறி மரணமடைதல், அனாதையாக மரணமடைதல் போன்றவை. பெண் சாபங்களைப் பெற்றவர்கள், பில்லி, சூனியம், ஏவல் போன்ற செயல்களில் ஈடுபட்டவர்களின் வாரிசுகள் ஆகியோரை சர்ப்ப தோஷம் பாதிக்கும். அபார்ஷன் செய்வது கூடச் சிசு கொலை என்கிறது ஜோதிடம். மனித விந்து நாக வடிவில் இருப்பதால், நாகத்தைப் போன்று நெளிந்து நெளிந்து முன்னேறுவதால் இந்த சாபங்களுக்கு சர்ப்ப தோஷம்

ரேகை ஓடுவதால், அவனுக்குத் துர்மரணம் சம்பவிக்கலாம் என்று எச்சரித்தார்கள். அதற்குப் பரிகாரமாக அவன் தென்திசை போகாமல் தவிர்த்தால், உயிர் வாழலாம் என்று கூறியதால் மட்டுமே, மலையமான் அவனது பொறுப்பினை எடுத்துக் கொண்டிருக்கிறார். அவனை கெடில நதியைக் கடந்து தெற்கே வருவதற்குத் தடை விதித்திருக்கிறார். அப்படி அவன் தஞ்சைக்கு வந்தாலும், மலையமான் தானே அவனை அழைத்து வந்து உடன் அழைத்துச் சென்றுவிடுவார்! அவன் காஞ்சியில் இருந்து சோழத்தை ஆள வேண்டும் என்பதற்காகத்தான், மலையமானின் யோசனைப்படி பொன்னாழியை அங்கே எழுப்பினான்!" - சுந்தரசோழர் சோகத்துடன் பேச, குந்தவை வாயடைத்துப் போய் நின்றாள்.

பெருமூச்சு ஒன்றை சிந்தியபடி எழுந்தாள், குந்தவை. "வருந்தாதீர்கள் தந்தையே. காரணங்களை அறியாமல் நான் மனதினுள் பொருமிக் கொண்டிருந்தேன். இப்போது காரணங்களை அறிந்து கொண்டேன். இனியும் இது குறித்து நான் தங்களுக்குப் பிரச்னைகளை உண்டு செய்யமாட்டேன். தங்களுடன் பொன்னாழி வைபவத்திற்குச் செல்ல ஆவலாக இருக்கிறேன்!" என்றவள் அறையைவிட்டு வெளியேற, பிரச்னை தீர்ந்த மகிழ்ச்சியில் சுந்தர சோழர், வானவன்மாதேவியைப் புன்னகையுடன் நோக்கினார்.

---

என்று பெயர். புத்தி வளராத குழந்தைகள், அங்க ஈனம் கொண்ட குழந்தைகள் என்று இவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கும் என்று வராகமிச்ரர் கூறுகிறார். சர்ப்பதோஷம் உள்ள பெண்களுக்கு, மலட்டுத் தன்மையும் ஆண்களுக்கு வீர்யமின்மையும் தோன்றும் என்கிறது ஜோதிடம். இதற்குத் தகுந்த பரிகாரத் தலமாகத் திருக்கோவிலூர்தான் சொல்லப்படுகிறது.

# 14. முருக்கத்திப் பாதை

மறுநாள் பொன்னாழி மாளிகையின் திறப்பு விழா. பூசனைகளும், ஹோமங்களும் செய்வதற்காகப் பொன்னாழி நந்தவனத்தில் பிரம்மாண்டப் பந்தல் ஒன்று போடப்பட்டிருந்தது. அரசகுடும்பத்தினரும் மந்திரிப் பிரதானிகளும் அமர்வதற்காக தனித்தனியே மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒத்தாடை அரண்மனையில் இருந்து, தருமநகரத்தின் பொன்னாழி வரைக்கும் தோரணங்களும், கற்சிற்பங்களும், பூச்செடிகளும் வைக்கப்பட்டிருந்தன. புதிய தீபஸ்தம்பங்கள் எழுப்பப் பட்டிருந்தன. பல நூற்றாண்டுகளாகப் பாழடைந்து பொலிவிழந்து கிடந்த பிரவாள மாளிகை நின்ற இடத்தில்தான் பொன்னாழி இப்போது தகதகத்துக் கொண்டிருந்தது. பல்லவ மன்னன் சிம்மவர்மன் தனது மகள் நவரத்தின பல்லவிக்காக எழுப்பிய மாளிகையைக் காட்டிலும் பிரம்மாண்டமாகக் காணப்பட்டது, பொன்னாழி. அதனைச் சுற்றிலும் பூத்துக்குலுங்கும் நந்தவனமும், நீரூற்றுகளும், தடவாவிகளும் அமைந்து பொன்னாழிக்கு அழகு சேர்த்தன. பொன்னாழியைச் சுற்றி அமைந்திருந்த நந்தவனத்திற்கு அப்பால் சிறிய ஸ்வர்ண மதில் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. ஸ்வர்ண மதில்கள் சந்திக்கும் நுழைவாயிலில், வெள்ளியினால் அமைக்கப்பட்டு ஸ்வர்ண முலாம் பூசப்பட்ட கதவுகளும், நின்றது. அதைக் கடந்து வெளியேறினால், பொன் னாழியைச் சுற்றி இருபுறமும் மரங்கள் அடர்ந்த ஒரு பாதை ஓடும். கோயிலைச் சுற்றி அமைந்த மாடவீதிகளைப் போன்று காணப்பட்ட அந்தப் பாதை அரச குடும்பத்தினர் உலாவுவதற்காக அமைக்கப்பட்டது போலும். சூரியனின் கதிர்கள் புகாத வண்ணம், அத்தி

மற்றும் பலச மரங்கள் பந்தல் அமைத்திருக்க, அவற்றில் பலவித பறவைகள் கூடு கட்டி, வசிக்கத் துவங்கி இருந்தன. தங்களது இனிய கூவல்களால் பொன்னாழி பகுதியை ரம்யமாக்கிக் கொண்டிருந்தன. அந்தப் பாதைக்கு முருக்கத்தி உலா என்று பெயரிடக் கட்டளை பிறப்பித்திருந்தான், ஆதித்த கரிகாலன்.

“இதென்ன பெயர், முருக்கத்தி உலா?” - வியப்புடன் கேட்டிருந்தான், பார்த்திப பல்லவன்.

“நண்பா! பல்லவத்தின் மூலவிதை அத்தி. இந்த ஊரே அத்திவனம்தானே. அதே போன்று எங்கள் சோழர்களின் விதை முருக்கமரம் என்கிற புரசை மரம். எனவேதான், பொன்னாழியைச் சுற்றி ஓடும் இந்தப் பாதையில் முருக்க மரங்களையும், அத்திமரங்களையும் நடச் சொன்னேன். அதோ பார்! அத்தி மரங்களும், புரசை மரங்களும் இணைந்து வானமே புலப்படா வண்ணம், பாதையின் மீது அடர்த்தியான பந்தலை அமைத்துள்ளன. இளந்திரையனும், கரிகாலனும் இணைந்து உருவாக்கிய நகரம். சோழ-பல்லவ நட்புக்கு அவர்கள் வலுவான அஸ்திவாரத்தினை அமைத்தார்கள். நீயும், நானும் இணைந்து அதன் மீது பொன்மாளிகையை எழுப்பி யுள்ளோம்!” பெருமிதத்துடன், நெகிழ்ந்து போய்க் கூறியிருந்தான், ஆதித்த கரிகாலன்.

உண்மையிலேயே ஆதித்த கரிகாலன் கலாரசிகன்தான். காஞ்சியில் அவன் எழுப்பியிருக்கும் பொன்மாளிகை மற்ற தேசங்களில் பெரும் பரபரப்பையும், தாக்கத்தையும் உண்டுபண்ணப் போகிறது. ஆலயங்களுக்குப் பெயர் போன நகரத்தில் முதன்முறையாகத் தேவலோக மயன் மாளிகையே பூமிக்கு வந்துவிட்டது எனும்படியாகத்தான், பொன்னாழி உருவாகி இருந்தது. காஞ்சிக்கு வரும் மற்ற தேசத்தவர், அத்தியூரான் மற்றும் ஒத்தாடையானை தரிசித்துவிட்டு, நேராகப் பொன்னாழியைக் காணத்தான் வருவார்கள். மாளிகையின் ஸ்வர்ண கோபுரங்களும், ஸ்வர்ண சிற்பங்களும், வெண்ணிலா முற்றங்களும்,

விஸ்தாரணமான உப்பரிகைகளும், முதன்முறையாகக் கண்டபோது, பார்த்திபன் ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டான். தான் காஞ்சியில்தான் இருக்கிறோமா, அல்லது இந்திரலோகம் வந்துவிட்டோமா என்பது போன்று, பொன்னாழி மாளிகையை விழுங்குவது போன்று பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு படர்ந்துவிட்டது. விடியலில், கும்பங்களை வைத்து ஹோமங்களைத் துவக்கிவிடுவதற்காக, பந்தலில் தங்கியிருந்த அந்தணர் குழாம் ஆங்காங்கே படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். பொன்னாழியைவிட்டு நீங்கி, நந்தவனத்தையும், ஸ்வர்ண மதில் நுழைவாயிலையும் கடந்து வந்த பார்த்திபன் அங்கு நின்ற காவலரிடம் தலை யசைத்துவிட்டு முருக்கத்தி உலாவினுள் நுழைந்தான்.

ஒருமுறை அந்தப் பாதையைச் சுற்றி நடந்து சென்றால் என்ன? உலா சென்றது போலவும் இருக்கும். மறுநாள் அரசகுடும்பத்தினர் அந்தப் பாதையில் உலா சென்றால், அவர்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டுமே. ஒருமுறை பாதையை சோதனை செய்துவிட்டுச் சென்றால் என்ன?

அத்திமரங்களும், முருக்கமரங்களும், பல்லவ, சோழ ஒற்றுமையை நிலைநாட்டுவது போன்று கைகோர்த்து நின்ற அந்தப் பாதையில் நடக்கத் துவங்கினான், பார்த்திபன். மரங்களின் கீழ் புற்கள் அடர்ந்திருக்க, இடப்புறம் கற்பாறைகளால் அமைக்கப்பட்ட மதில் சுவரும், வலப்புறம், ஸ்வர்ண மதிலும் காணப்பட, நடுவே, பளிங்குக் கற்களால் பாதை அமைக்கப்பட்டிருந்தது. அந்த இரவு வேளையிலும், தான் நடை போடும் பளிங்குக் கற்களின் வெண்மையை அவனால் காண முடிந்தது. விடியற்காலை வேளைகளில் பறவைகளின் கீதங்கள் நடுவே, மான்கள், மயில்கள் மற்றும் முயல்களின் துள்ளாட்டங்களின் நடுவே அந்தப் பாதையில் நடை போடுவது ஸ்வர்கானுபவமாக இருக்கும் என்பதை உணர்ந்தான். மனதினுள், ஆதித்த கரிகாலனை

பாராட்டாமல் இருக்க முடியவில்லை. புலிவேமு தொடங்கி, அபராஜிதன் வரை பல பல்லவ மன்னர்கள் காஞ்சிபுரியை ஆண்டிருக்கின்றனர். ஆனால், யாருக்குமே இப்படி ஒரு மயன் மாளிகையை உருவாக்கத் தோன்றவில்லை. விரைவில், தானும் கல்பலதாவும், இந்த மாளிகையில் வசிக்கும் முதல் பல்லவ அரசனாகவும், அரசியாகவும் திகழ்வோமா?

யோசித்தபடி நடைபோட்டுக் கொண்டிருந்த பார்த்திபனின் செவிகளில் திடீரென்று, தந்தை தருமவர்மனின் குரல் எச்சரிக்கையாக ஒலித்தது.

"உனக்கு ஏன் இந்த ஆசை மகனே? பிரவாள மாளிகையை பொன்னாழியாக மாற்றிவிட்டால் மட்டும், அதனை பீடித்த சாபம் மாறிவிடுமா? நவரத்ன பல்லவி வாழாத இடம்.. களப்பிரர் அட்டூழியம் செய்த இடம்.. சோமிலோமணி என்னும் அரசி எரித்துக் கொல்லப்பட்ட இடம்.. பல கொலைகளும், கொள்ளைகளும் நிகழ்ந்த இடம். இங்கே வசிக்கும் ஆசை உனக்கு ஏற்படக் கூடாது!"

பார்த்திபனுக்கு உள்ளூர அந்த சந்தேகம் இருந்தது.

"நண்பா! பிரவாள மாளிகை பல துர்மரணங்கள் நிகழ்ந்த இடம். இங்கு போய் உனது பொன்னாழி மாளிகையைக் கட்டுவானேன். ஒத்தாடை அருகிலேயே கட்டிக்கொள்!" என்று கூட யோசனை கூறினான். ஆனால் ஆதித்த கரிகாலன்தான் பிடிவாதமாகப் பிரவாள மாளிகையை இடித்துத் தரைமட்டம் ஆக்கிவிட்டு, இந்தப் பொன்னாழியை எழுப்பி இருந்தான். அவனுக்குச் சாதகமாக, ஸ்வர்ணமுகி காட்டின் தங்கச் சுரங்கங்கள் சமயத்தில் கிட்டின.

பாதையின் இடப்புறம், ஓங்கி உயர்ந்து நின்ற கற்பாறை மதில், வெளியுலகத்தை மறைக்க, வலப்புறம் நின்ற சிறிய ஸ்வர்ண மதில், பொன்னாழியைச் சுற்றி ஓடும் நந்தவனத்தை மறைத்தாலும், உயர்ந்த பொன்னாழி மாளிகையை அதனால் மறைக்க இயலவில்லை.

பொன்னாழி மாளிகையை வெறித்துப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தான்.

பாதையில் தொடர்ந்தவன், பொன்னாழியின் பின்புறத்தை அடைந்தவன், தற்செயலாக மாளிகையின் உப்பரிகையை நோக்கியவன், உறைந்து போய், ஆணி யடித்தது போன்று அப்படியே நின்றுவிட்டான்.

பொன்னாழியின் உப்பரிகையில் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. இருளில் அந்த உருவத்தை இனம் கண்டு கொள்ள முடியவில்லை என்றாலும், ஓர் உருவம் இப்படியும் அப்படியுமாக அசைந்து கொண்டிருப்பதைக் காண முடிந்தது. அந்த உருவம் நின்றிருந்த இடத்தையே உறுத்து நோக்கினான். அதன் பிறகு ஒன்றும் தென்பட வில்லை.

காவலன் யாராவது உப்பரிகையில் வலம் வந்திருக்கக் கூடும் என்று நிச்சயித்தபடி தொடர்ந்து நடந்தான். பாதையில் ஆங்காங்கே செம்மண் திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தன. உலாவரும் மன்னர்களுக்குப் பாதங்கள் வலித்தால், சற்றே சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம் என்கிற யோசனைதான். முருக்கத்தி உலா பாதையைச் சுற்றி வந்த பார்த்திபன் மீண்டும் நுழைவாயிலுக்கு வந்தான்.

"எச்சரிக்கை!" என்ற ஒரே சொல்லை காவலரை நோக்கி உதிர்த்துவிட்டு, தனது புரவியில் ஏறி பொன்னாழியைவிட்டு நீங்கினான். தருமநகரத்தைவிட்டு நீங்கி ராஜவீதியில் திரும்பிய போது, கல்பலதாவும், லலாடிகாவும் கூறியது நினைவுக்கு வந்தது.

'சிந்தூரன் கொலை செய்யப்பட்ட இரவு, அவன் தங்கியிருந்த கூடாரம் இருந்த பகுதியில் இருந்து, ஓர் உருவம் எங்களைத் தொடர்ந்து வந்தது. வேகமாக நகர முயன்ற நாங்கள் காலிடறி விழ, எங்களை அந்த உருவம் கடந்து போனது. அது உங்களது ஆருயிர் நண்பர் ஆதித்த கரிகாலன்தான்' என்றார்களே.

'தனது கனவு மாளிகை பொன்னாழியை எழுப்பிய சிந்தூரனின் மீது எவ்வளவு அபிமானத்தை வைத்திருந் தான். அவன் எதற்காகச் சிந்தூரனை கொலை செய்ய வேண்டும்? ஆனால் அந்த இரவு வேளையில் எதற்காகப் பொன்னாழி பக்கமாக வந்தான், ஆதித்த கரிகாலன்? ஒருவேளை, தான் எழுப்பிய மாளிகையைக் காண வந்தானோ? உலகிலேயே பொன்னாழியைப் போன்று அற்புதமான மாளிகை இருக்கக்கூடாது என்று அடிக்கடி கூறுவான். அதனால், பொன்னாழியைப் போன்று இன்னொரு மாளிகையைச் சிந்தூரன் எழுப்பக் கூடாது என்பதற்காக அவனைக் கொன்றுவிட்டானா?'

தனக்குள் யோசித்தபடி, ராஜவீதியினுள் நுழைந்த பார்த்திபன், தனது மாளிகையை நோக்கிப் புரவியைச் செலுத்தினான். வாயிலில் நின்றிருந்த காவலனை நோக்கி சமிக்ஞை செய்தான். அவன் அருகே ஓடி வந்தான்.

"நான் ஒத்தாடை அரண்மனைக்குச் சென்று ஆதித்த கரிகாலரைச் சந்திக்க வேண்டும். அவர் எனக்காகக் காத்திருக்கிறார். எனவே, நான் இன்றிரவு ஒத்தாடை அரண்மனையிலேயே தங்குகிறேன். எனக்காகக் காத்திருக்க வேண்டாம் என்று பெண்களிடம் கூறிவிடு!" என்றவன், மீண்டும் தனது புரவியை ஒத்தாடையை நோக்கிச் செலுத்தினான்.

ஒத்தாடை அரண்மனையில் ஆதித்த கரிகாலன் பார்த்திபனுக்காகக் காத்திருந்தான். "நண்பா! அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் செய்யப்பட்டுள்ளன. நேமியங்கையரும், குழலழகனும் பாராட்டுக்குரியவர்கள்! பொன்னாழி மாளிகை, நந்தவனங்கள் மற்றும் உனக்கு மிகவும் பிடித்த முருக்கத்தி உலா பாதை அனைத்தும் பிரமாதமாக உள்ளன. அங்கே வரும் அரசகுடும்பத்தினர் அசந்துவிடப் போகிறார்கள், பாரேன்" - பார்த்திபன் கூறினான்.

"உண்மை பார்த்திபா! எனக்கு ரசனைகள் கிடையாது; இங்கிதமும், மனிதநேயமும் இல்லாதவன் நான் என்பது

எனது குடும்பத்தில் சிலரது எண்ணம். அவர்களின் முகத்தில் கரியைப் பூசத்தான், பொன்னாழியை இவ்வளவு பிரம்மாண்டமாக அமைத்தேன்." - ஆதித்த கரிகாலன் கூறினான்.

'உனது குடும்பத்தினருக்கு கரியைப் பூசு. எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் எங்கள் குல கரிவரதனை உனது வசம் வைத்திருக்கிறாய். எங்களுக்கு உரியவனைப் பறித்து எங்கள் முகத்திலும் கரியைப் பூசாதே. எங்கள் அத்திமலைத்தேவனை எங்கே வைத்திருக்கிறாய்?'- தனக்குள் புலம்பினான், பார்த்திபன். ஒருவேளை, பொன்னாழியிலேயே அந்தச் சிலையை பதுக்கி இருக்கிறானோ?

தன்னை வெறித்துப் பார்த்தபடி நின்ற பார்த்திபனை கவனித்ததும், தன்னைச் சுதாரித்துக் கொண்டான், ஆதித்த கரிகாலன்.

"நண்பா! எனது கனவு மாளிகையினுள் நாளை புகுந்துவிடுவேன். விடியலில் இருந்து ஹோமங்களும், பூசனைகளும் செய்ய வேண்டி இருப்பதால், நாம் சீக்கிரம் உறங்கச் செல்ல வேண்டியது அவசியமாகிறது. நீ இன்றிரவு, இங்கே ஒத்தாடை மாளிகையில் தங்குவது எனக்கு எவ்வளவு பாதுகாப்பு உணர்வைத் தருகிறது தெரியுமா! நீயும் சென்று கண்ணுறங்கு. நாளை விடியலில் எழுந்து கொள்ள வேண்டும். மன்னரும், பரிவாரமும் வந்த பிறகு பூர்ணாஹுதி முடிந்து அனைவரும் மாளிகையினுள் பிரவேசிக்க வேண்டும் என்று நேமியங்கையர் கூறியிருக்கிறார்." - ஆதித்த கரிகாலன் கூறினான்.

தலையசைத்துவிட்டு தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையை நோக்கி நடந்தான், பார்த்திபன். ஒத்தாடை அரண்மனையில் அவனுக் கென்று இரண்டு அறைகளை அமைத்திருந்தான், ஆதித்த கரிகாலன். மாதண்ட நாயகனின் ஆலோசகன் என்பதற்காகப் பணிகளை ஆற்ற

ஒரு அறையும், ஓய்வு எடுக்க ஒரு அறையும் என இவனுக்கு இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

தனது ஓய்வு அறைக்குள் நுழைந்தவன், வாளையும், கேடயத்தையும் மேஜையின் மீது வைத்துவிட்டு, தனது தலைப்பாகையையும் அவிழ்த்தான். அவனது நீண்ட சுருண்ட குழல்கள் விடுதலை பெற்று அவனது தோள்களில் புரளத்தொடங்கின. தனது மேலங்கியை கழற்றியவன், மெல்லிய கும்மாயம் ஒன்றை அணிந்தபடி பாதங்களில் அணிந்திருந்த காலணிகளை உதறிவிட்டு, மஞ்சத்தில் சரிந்தான். அவனது படுக்கை அருகே நின்றிருந்த ஒரு பாவை விளக்கில் தீபம் ஒளிர்ந்து கொண்டிருக்க, அறையின் நுழைவாயிலில் இருந்த மாடத்தில் சிறிய விளக்கில் தீபம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. மஞ்சத்தில் சரிந்தவன், தனது கால்களை வசதியாக நீட்டிக்கொண்டு, இரு கைகளையும் தலையணையின் மீது வைத்து, தலையை அதன் மீது பதித்தபடி விட்டத்தை வெறித்துக்கொண்டு, யோசிக்கத் துவங்கினான்.

'ஆதித்த கரிகாலன் இவனிடம் பெரும் நம்பிக்கையை வைத்திருக்கிறான். அவனிடம் நட்பைப் பலப்படுத்திக் கொண்டு, அத்திமலைத்தேவன் சிலையை மீண்டும் பெற்று அத்திமலை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து விட்டால் இவனுக்குப் போதும். பல்லவத்தின் நீண்ட நாளைய களங்கத்தை இவன் துடைத்துவிடுவான். மீண்டும் பல்லவ சாம்ராஜ்யத்தை நிறுவ வேண்டும் என்கிற எண்ணமெல்லாம் இவனுக்கு இல்லை. பல்லவர்களுக்கு ஏற்பட்ட களங்கத்தை இவன்தான் துடைத்தான் என்று சரித்திரத்தில் பெயர் பெற வேண்டும். கல்பலதாவுக்குப் பாக்கியம் இருந்தால் அவள் அரசியாகப் பல்லவத்தை ஆளுவாள்.'

கல்பலதாவை நினைத்ததும், பார்த்திபனின் உள்ளத்தில் ஒருவகை மென்மையும், இனிமையும் பரவியது.

எவ்வளவு அழகாக இருக்கிறாள்? உண்மையிலேயே அவள் மீது அவனுக்கு நேசம் பெருகிக் கொண்டுதான் இருந்தது. ஆனால் அவளது உள்ளக்கிடக்கை என்ன என்பது தெரியவில்லை. ஆதித்த கரிகாலனின் மீது பெரும் துவேஷத்தைக் கொண்டிருக்கிறாள். இவனை அவள் மணக்க வேண்டும் என்றால், முதலில் அந்த துவேஷத்தை மனதில் இருந்து அகற்ற வேண்டும். இவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றால், ஆதித்த கரிகாலனை கொல்ல வேண்டும் என்கிற சபதத்தை அவள் கைவிட வேண்டும் என்கிற நிபந்தனையை இவன் விதிக்க வேண்டும். அப்போது என்ன முடிவு எடுக்கிறாள் என்பதைப் பார்க்க வேண்டும். யோசித்தபடி விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தவன், மெதுவாகக் கண்களை மூடி, உறங்குவதற்கு முயல, நித்ராதேவி அவனை ஆலிங்கனம் செய்து கொண்டாள்.

திடீரென்று-

ஒருவித அதிர்வுடன் கண்விழித்தான், பார்த்திபன்.

தான் உறங்கிப் போயிருந்தானா அல்லது உறங்க முற்படுவதற்குள் தூக்கம் விழித்துவிட்டதா என்பது போன்று மலங்க மலங்க விழித்தவனின் இடது செவி சட்டென்று ஏதோ ஓர் ஒலியை உள்வாங்கியது.

'சர்ரக்.. சர்ரக்..' என்று தூரத்தில் கேட்ட ஒலி, நெருங்கி வந்து இவனது அறையின் வாயிலில் நின்று போனது போன்ற ஓர் உணர்வு.

வெளியே யாரோ சணலினால் நெய்யப்பட்ட பாதரட்சைகள் ஒலிக்க நடந்து வந்து தனது அறை வாயிலில் நின்றிருக்க வேண்டும். சடாரென்று திரும்பி, அறைக்கதவின் வாயிலை நோக்கினான். அறையினுள் நுழைந்தவன், அதனைத் தாளிட மறந்திருந்தான். நுழைவாயிலின் அருகே ஒளிர்ந்து கொண்டிருந்த தீப ஒளியில், அறைக்கதவின் உள்பக்கக் குமிழ் சுழலுவதைக்

கண்டான். வெளியே யாரோ கதவைத் திறக்க முற்படுகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டான். கதவில் அமைக்கப்பட்டிருந்த குமிழ் சுழலுவதைப் பார்த்தவன், சட்டென்று மேஜை மேலிருக்கும் தனது வாளுக்கும், மஞ்சத்திற்கும் இடையே உள்ள தொலைவைக் கணக்கிட்டுக் கொண்டான். தூங்குவது போல பாவனை செய்து, வருபவன் யாராக இருந்தாலும் அவன் தன்னைத் தாக்குவதற்குள் பாய்ந்து சென்று வாளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சிந்தித்தபடி மீண்டும் சுழலும் அந்தக் குமிழையே நோக்கினான்.

இப்போது கதவு லேசாகத் திறக்க, இருளில் அந்த உருவம் உள்ளே வந்தது. தான் முருக்கத்தி பாதையில் நடந்த போது தென்பட்ட கரிய உருவமாக இருக்குமோ என்று நினைத்தான், பார்த்திபன்.

'யாராக இருந்தாலும், வருபவன் தன்னைத் தாக்குவதற்கு வருகின்றான். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்!' என்று நினைத்தவன் கண்களை மூடி உறங்குபவன் போன்று கிடக்க, அந்த உருவம் மஞ்சத்தின் அருகே வந்து நின்றது. பிறகு ஆடாமல் அசையாமல் வெறித்தபடி நின்றது. ஒரு கண்ணை மட்டும் லேசாகத் திறந்து பாவை விளக்கின் ஒளியில் அங்கே வந்து நின்றவனைப் பார்த்தான், பார்த்திபன். அவனது சப்த நாடியும் ஒடுங்கியது. அங்கே வந்து நின்று கொண்டிருந்தது ஆதித்த கரிகாலன்தான். பரபரப்புடன் எழுந்து மஞ்சத்தில் அமர்ந்தான், பார்த்திபன்.

"உறங்கப் போகவில்லையா, ஆதித்தா? ஏதாவது தேவையா?" - பார்த்திபன் கேட்டான்.

ஆனால் ஆதித்த கரிகாலன் அவன் கேள்வியைச் செவியினில் வாங்கியதாகவே தெரியவில்லை. பார்த்திபனின் மஞ்சத்தின் அருகே நின்று தொலைவில் இருந்த சாளரத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந் தான். அவனது கண்கள் இரண்டும் திறந்திருந்தாலும்,

விஸ்தாரமான அவனது மார்பு சுவாசத்தால் ஏறி இறங்கியபடி இருந்தது. சுவாசத்தினிடையே அவனது குரல் உறுமுவது போன்று ஒலிக்க, திகிலுடன் அவனையே நோக்கிக் கொண்டிருந்தான், பார்த்திபன்.

"ஆதித்த கரிகாலா!" - கிசுகிசுத்தான், பார்த்திபன்.

ஆனால் அவனது அழைப்பை உணராதவனாக, முகத்தில் எவ்வித சலனமும் இன்றி நின்றிருந்தான். என்ன செய்வது என்று பார்த்திபன் யோசித்துக் கொண்டே இருக்கையில், திடீரென்று விறைப்புடன் திரும்பிய ஆதித்த கரிகாலன், இயந்திர கதியில் மீண்டும் தான் வந்த வழியே நடக்கத் துவங்கினான். அப்போதுதான் பார்த்திபனுக்கு சிறிது சந்தேகம் தோன்றியது.

'என்ன இவன்? இவனது அறைக்குள் வந்துவிட்டு, இவனிடம் ஒன்றும் பேசாமல் திரும்பிச் செல்கிறான்' என்று நினைத்தவனுக்கு, ஒருவேளை அவன் உறக்கத்தில் உலாவுகின்றானோ என்கிற அந்த ஐயம் பிறந்தது. உறக்கத்தில் நடப்பவர்களைப் பற்றி இவன் கேள்விப் பட்டிருக்கிறான். இருப்பினும், அப்படி ஒருவனை இதுவரை இவன் சந்தித்ததில்லை. முதன் முறையாக உறக்கத்தில் நடப்பவனை இவன் காண்கிறான். தனது நண்பனும், சோழ பட்டத்து இளவரசனுமான ஆதித்த கரிகாலன் உறக்கத்தில் நடப்பவன்தான் என்பதைக் காண பார்த்திபனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

சட்டென்று அவனது சிந்தையில் ஒன்று உறைக்க, அவன் முகத்தில் வியர்வை பெருகத் துவங்கியது. சிந்தூரன் கொலை செய்யப்பட்ட இரவு, கொலை நடந்த இடத்திலிருந்து ஆதித்த கரிகாலன் நடந்து சென்றதையும், கீழே விழுந்து கிடந்த கல்பலதாவையும், லலாடிகா வையும் கண்டு கொள்ளாமல் சென்றதையும் அந்த இரு பெண்களும் கூறியிருந்தனர். ஒருவேளை, இப்போது போலவே அப்போதும் ஆதித்த கரிகாலன் உறக்கத்தில் நடந்திருப்பான் போலும்!

மஞ்சத்தில் இருந்து எழுந்த பார்த்திபன், ஆதித்த கரிகாலனை பின்தொடர்ந்தான். அவனோ, தனது அறைக்குள் நுழைந்து மீண்டும் தாழிட்டுக் கொண்டான்.

'சிந்தூரனைக் கொன்றது ஆதித்த கரிகாலன்தானா? தன்னையும் அறியாமல் உறக்கத்தில் அவனைக் குத்திக் கொன்றுவிட்டானா?'

உறைந்து போய், மூடி இருந்த ஆதித்த கரிகாலனின் அறைக் கதவை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தான், பார்த்திபன்.

# 15. மலையைச் சுமக்கும் மலையமான்!

காஞ்சியின் மக்கள், நகரின் எல்லையில் துவங்கி, ஒத்தாடை அரண்மனை வரை, இரு மருங்கிலும் கூடி நின்றனர். சோழ அரசகுடும்பம் நகரின் உள்ளே பிரவேசித்துக் கொண்டிருந்தது. பலத்த ஆரவாரங்களும் இல்லை. அதே சமயம் அவமதிக்கும் வகையில் கூக்குரல்களும் இல்லை. பல்லவத்தை ஆளும் சோழர் களுக்கு உரிய மரியாதையைச் செலுத்தும் வகையில் கடமை உணர்வுடன் நின்று கொண்டிருந்தனர். உள்ளுக்குள் பல்லவம் மீண்டும் விடுதலை பெற்று உபேந்திர பார்த்திப பல்லவன் மன்னனாகப் பதவி ஏற்கக் கூடும் என்கிற சிறு நப்பாசையும் அவர்களது இதயத்தில் நிலவியது. அபராஜிதனின் வழித்தோன்றல் ஒருத்தியை பார்த்திபன் சிறைபிடித்து அரண்மனையில் அடைத்து வைத்திருக் கிறான், என்கிற செய்தியும் இரகசியமாக மக்களிடையே கசிந்திருந்தாலும், இது வரையில் யாரும் அந்த இளவரசியைப் பார்த்ததில்லை. எனவே அதனை ஒரு வதந்தியாகவே எண்ணியிருந்தனர். இந்நிலையில் ஆதித்த கரிகாலன் காஞ்சியில் பொன்னாழி என்கிற ஸ்வர்ண மாளிகையை எழுப்பியதைக் கண்டு காஞ்சிவாசிகள் பரவசமும், பிரம்மிப்பும் அடைந்திருந்தனர்.

ஆலயங்களுக்கு மட்டுமே பெயர் போன காஞ்சியில் பொன்மாளிகை ஒன்று எழும்பி நிற்பதைக் கண்டு உற்சாகமடைந்தனர். அதன் திறப்பு விழாவுக்கு வரும் சோழ மன்னன் சுந்தரரையும் அவனது குடும்பத்தையும், இதர பரிவாரங்களையும் வரவேற்பதற்குத்தான் அங்கே திரண்டிருந்தனர்.

சோழ பரிவாரம் காஞ்சியினுள் நுழைந்தது. ஒருவன் பிரம்மாண்ட புலிக்கொடி ஒன்றை ஏந்தி குதிரையில் வர, அவனைத் தொடர்ந்து, பதினாறு காளைகளின் மீது முரசுகளை ஒலித்தபடி சோழ வீரர்கள் நடக்க, அதனைத் தொடர்ந்து கொம்பு வாத்தியங்களை முழக்கிக் கொண்டு சிலர் வந்தனர்.

பழுவேட்டரையர் சகோதரர்கள் இருவரும் தத்தம் புரவிகளில் முன்வர, அவர்களைத் தொடர்ந்து அநிருத்தரின் இரதம் வந்தது. பிறகு மலையமானின் இரதம் வர, இறுதியில் சுந்தர சோழரும், வானவன் மாதேவியும் அமர்ந்திருந்த இரதம் வந்தது. இறுதியாகத் தனது இரதத்தைச் செலுத்தியபடி குந்தவை வந்தாள். பதினான்கு பிராயச் சிறுவனாக அருண்மொழி அமர்ந்திருக்க, அவனருகில் தெட்டக்கனி அமர்ந்திருந் தாள். பரிவாரம் ஒத்தாடையினுள் நுழைந்ததுமே ஒத்தடையான் ஆலயத்தின் முன்பாக சுந்தர சோழர் இரதத்தை நிறுத்தி தனது கைகளைக் கூப்பி, இறைவனைத் தொழுதார். குந்தவையின் பார்வை ஒத்தாடை அரண்மனையின் மீது பதிந்தது.

"இதுவா பல்லவர்களது அரண்மனை? புறாக்கூண்டு போன்று இருக்கிறதே! இப்போது புரிகிறது ஏன் எனது அண்ணன் பொன்னாழி என்கிற ஸ்வர்ண மாளிகையை எழுப்பினான், என்று!" - குந்தவை குதர்க்கத்துடன் கூறினாள்.

மீண்டும் பரிவாரம் தொடர்ந்து சென்று அரண் மனையில் நுழைந்தது. ஆதித்த கரிகாலன், பார்த்திப பல்லவன், நேமியங்கையர், குழலழகன் மற்றும் பிரதானிகள் அரசரை வரவேற்கத் திரண்டிருந்தனர். சுந்தர சோழர் வானவன்மாதேவியுடன் இரதத்தைவிட்டு இறங்க, அவர்களது பின்புறமாக வந்து நின்ற குந்தவையையும், அருண்மொழியையும் நோக்கி ஆதித்த கரிகாலன் புன்முறுவல் செய்தான். குந்தவையும் அவனை நோக்கிப் புன்னகைத்தாள்.

அரசகுடும்பம் ஒன்று சேர்ந்து நிற்க, தனது கண்களை பம்பரமாகச் சுழலவிட்டபடி குந்தவையின் பின்பாக வந்து நின்ற அந்த நெடிய வாலிபனைக் கண்டதும் ஆதித்த கரிகாலனும், பார்த்திபனும் தலையை அசைக்க, அவனும் தனது தலையைத் தாழ்த்தி வந்தனங்களைச் செய்தான். சேவூர் போரில் வீரபாண்டியன் தப்பிச் செல்ல முடியாதபடி தடுத்து, ஆதித்த கரிகாலனின் சபதத்தை நிறைவேற்ற உதவிய அந்த வாணர் குல வீரன் வந்தியத்தேவன்தான் அங்கே நின்று கொண்டிருந்தான்.

அரசகுடும்பத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வளையம் ஒன்றை அமைத்திருக்கிறான் போலும். வேளாள படையைக் கடந்து வந்தியத்தேவனின் பாதுகாப்பு வளையத்தைக் கடந்துதான் யாராலும் மன்னர் குடும்பத்தை நெருங்க முடியும்.

"அனைவரும் உள்ளே வந்து சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். அனைவருக்கும் அறைகள் ஒதுக்கப் பட்டுள்ளன. ஏதாவது பிரச்னைகள் என்றால் எனது ஆருயிர் நண்பன் பார்த்திபனை நாடுங்கள். உடனே தீர்த்து வைப்பான்" என்று ஆதித்தன் கூறியதும், குந்தவையின் கண்கள் பார்த்திபனின் பக்கமாகத் திரும்பின. அவனையே அவளது கண்கள் உறுத்து நோக்க, பார்த்திபனின் கண்களும் தற்செயலாக அவளை நோக்கித் திரும்பின.

'நீர்தான் பார்த்திபனோ..! ஆதித்த கரிகாலனுக்குச் சகலமும்!' என்பது போன்று அந்தப் பார்வை அவனை வெறித்துக் கொண்டிருந்தது. பார்த்திபன் தனது பார்வையை உடனே திருப்பிக் கொண்டாலும், குந்தவை தன்னை இன்னும் உறுத்து நோக்கிக் கொண்டிருப்பதை அவனால் உணர முடிந்தது.

சுந்தர சோழர் தனது மனைவியுடன் உள்ளே செல்ல, அனைவரும் அவர்களைப் பின்தொடர்ந்தனர்.

அன்றிரவு -

அனைவருக்கும் விருந்து ஏற்பாடாகி இருந்தது. தனது ஓய்வு அறையில் விருந்துக்குத் தயாராகிக் கொண்டிருந் தான், பார்த்திபன். அவனது அறைக் கதவு திறக்க, ஆதித்த கரிகாலன் உள்ளே வந்தான். மிகவும் கம்பீரமாகக் காட்சி அளித்தான், ஆதித்த கரிகாலன். வெண்பட்டு வேட்டியின் மீது, சந்தன வண்ணத்தில் மேலங்கி அணிந் திருந்தான். கோமேதகம் மற்றும் புஷ்பராக ஹாரங்களைப் பூட்டியிருந் தான். அவனது பட்டுத் தலைப்பாகையி லிருந்து ஊசலாடிக் கொண்டிருந்த உயர்ரக முத்துத் தொங்கல்கள், உயரத்திலிருந்து பாயும் அருவியைப் போன்று அசைந்து கொண்டிருந்தன.

"பார்த்திபா! இன்னுமா நீ தயாராகவில்லை? குழலழகன் பொன்னாழி காவலன் சுந்தரவதனனை தருவித்திருக்கிறான். நீ அவனிடம் விசாரணையை இப்போதே முடித்து அனுப்பிவிடு! விசாரணை நடப்பது வந்தவர்களுக்குத் தெரிய வேண்டாம். பொன்னாழியை எழுப்பியவன், மர்மமான முறையில் மரணம் அடைந்தான் என்பது தெரிந்தால், எனது பெற்றோர் கலங்குவார்கள்! எனது பாட்டன் மலையமானிடம் மட்டும் தகவலைக் கூறியிருக்கிறேன். அவர் எனது பெற்றோரிடம் தெரிவிக்கமாட்டார். விசாரணையை முடித்துவிட்டு நேராக விருந்துக்கு வந்துவிடு!" என்றவன், மீண்டும் அறைக் கதவை தனது பின்பாகச் சாற்றிக் கொண்டு வெளியேறினான்.

என்ன செய்வது என்று தோன்றாமல் ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தான், பார்த்திபன். கல்பலதாவும், லலாடிகாவும், சிந்தூரன் கொலை நடந்த இடத்தில் இருந்து வந்தது ஆதித்த கரிகாலன் என்றுதான் கூறினார்கள். அதனை ஊர்ஜிதம் செய்வது போன்று, ஆதித்த கரிகாலன் உறக்கத்தில் நடைபோடுபவனாக இருக்கிறான். உறக்கத்தின் ஊடே சிந்தூரனைக் கொன்று விட்டானோ என்னவோ! சுந்தரவதனனை என்ன என்று விசாரிப்பது?

அவசரமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்ட பார்த்திபன், ஒத்தாடை அரண்மனையின் வாயிலுக்குச் சென்றான். நுழைவாயில் அருகே இருந்த காவலர் அறை ஒன்றில் அமர்ந்திருந்தான், சுந்தரவதனன். பார்த்திபனை பார்த்ததும் பரபரப்புடன் எழுந்து நின்றான்.

“நீதான் சிந்தூரன் கொலை செய்யப்பட்ட அன்று பொன்னாழியில் காவல் புரிந்து கொண்டிருந்தாயா?”- பார்த்திபன் கேட்டான்.

“ஆமாம், பல்லவ இளவரசே! வழக்கமாக ஒத்தடையில் தான் எனக்கு இரவு பணி. ஆனால் அன்று என்னைப் பொன்னாழியின் காவலுக்கு அனுப்பினார்கள். காவல் புரிந்த பதினாறு பேரில் என்னைப் பொன்னாழியின் நந்தவனப் பகுதியில் நிற்க வைத்தார்கள். அங்கிருந்த படியேதான் காவல் புரிந்தேன்!” - சுந்தரவதனன் கூறினான்.

“சிந்தூரன் கூடாரத்தின் அருகே நீ பார்த்த காட்சியை விவரி?” - பார்த்திபன் கேட்டதும், சுந்தரவதனனின் தேகம் விறைத்தது. கண்கள் நிலைகுத்தின. எச்சரிக்கை யுடன் சொற்களைக் கையாள முயல்வது போன்று நிதானமாக யோசித்துப் பதில் கூறலானான்.

“இளவரசே! பனிப்பொழிவு அதிகமாக இருந்தது. இருப்பினும் அதன் ஊடே என்னால் தெளிவாகக் காண முடிந்தது. இரு பெண்கள் சிந்தூரனின் கூடாரத்தின் வாயிலில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.”

“நீ அவர்களது முகத்தைக் கண்டாயா?” - ஜாக்கிரதை யாக அவனது முகத்தை ஆராய்ந்தபடி கேட்டான், பார்த்திபன்.

“இல்லை இளவரசே! அவர்கள் தங்கள் முதுகினை எனக்குக் காட்டியபடி பேசினார்கள். என்னால் சிந்தூரனின் முகத்தை மட்டுமே கவனிக்க முடிந்தது. ஆனாலும் அவனது முகபாவங்கள் எனக்குத் தெரியவில்லை.” - சுந்தரவதனன் கூறினான்.

நல்லவேளை! பெண்கள் இருவரும் தங்களது முகத்தைப் பொன்னாழி பக்கம் திருப்பாமல் பேசியிருக்கின்றனர். இல்லையேல் பிரச்னையில் சிக்கியிருப்பார்கள்.

"யார் அந்தப் பெண்கள் என்பதை உன்னால் யூகிக்க முடியுமா?"-பார்த்திபன் கேட்க, அவன் தலையசைத்தான்.

"இல்லை இளவரசே! அவர்கள் புறப்பட்டுச் சென்றவுடன் சிந்தூரனும் கூடாரத்தினுள் பிரவேசித்தான். அப்போதுதான் அந்த உருவம் வந்து நின்றது. நமது பொன்னாழியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது." - சுந்தரவதனன் கூறினான்.

"அந்த உருவத்தின் முகத்தை நீ பார்த்தாயா?"- பார்த்திபன் கேட்டான்.

"இல்லை இளவரசே! அந்த உருவத்தின் முகத்தை நான் பார்க்கவில்லை." - அவனது உடலில் தோன்றிய நடுக்கமும், குரலில் ஒலித்த கலக்கமும் பார்த்திபனுக்கு எதையோ உணர்த்தியது. சுந்தரவதனனையே உறுத்துப் பார்த்தான்.

"உனது கலக்கமும், தயக்கமும், அச்சமும், நீ அந்த உருவத்தின் முகத்தைப் பார்த்திருக்கிறாய் என்றே கூறுகின்றன. அச்சப்படாதே! நீ பார்த்ததைக் கூறு!"- பார்த்திபன் வினவ, சுந்தரவதனன் திகிலுடன் அவனைப் பார்த்தான்.

"பல்லவ இளவரசே! நான் பல்லவத்தின் விசுவாசமான பிரஜை. எனது குடும்பத்தினர் காலம்காலமாக அரண்மனையில் காவல் புரிந்து வந்திருக்கிறோம். என்னால் எனது குடும்பத்திற்கும் களங்கம் வந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன். நான் கண்ட காட்சியை விவரித்தால் எனது உயிர் பறிக்கப்படும். எனவே, இது குறித்துத் தொடர்ந்து நீங்கள் என்னை எதுவும் கேட்க வேண்டாம்!" - சுந்தரவதனனின் குரலில் பதற்றம் தெரிந்தது.

"சுந்தரா! கவலைப்படாதே! நீ யாரைப் பார்த்தாய் என்பதை மட்டும் எனது செவியில் சொல். உனது உயிருக்கு நான் உத்தரவாதம். உனது மகன் மட்டுமல்ல, உனது பெயரனும் அரண்மனையில் ஊழியம் புரிவான். அதனை நீயும் காண்பாய்!" - பார்த்திபன் கூற, சுந்தரவதனனின் முகம் சற்றே அமைதியடைந்தது. சுற்றுமுற்றும் பார்த்த சுந்தரன், தங்கள் அருகே யாரும் இல்லை என்பதை நிச்சயித்துக் கொண்டான்.

"இளவரசே! சிந்தூரனின் கூடாரத்தருகே பொன்னாழியை வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த உருவம், நமது சோழ இளவரசர் ஆதித்த கரிகாலர்தான்" என்றவன், பார்த்திபனின் முகத்தில் அதிர்ச்சியைத் தேடினான். ஆனால் எதிர்பார்த்திருந்த தகவல் என்பதாலோ என்னவோ, பார்த்திபனின் முகம் நிச்சலனமாக இருந்தது.

"சரி! சுந்தரா! இந்தத் தகவலை இத்துடன் மறந்துவிடு. யார் என்ன கேட்டாலும், பனிப்பொழிவினால் அந்த உருவம் யார் என்று தெரியவில்லை என்றே கூறு!" என்றவன், அவனைத் திரும்பிப் பாராமல் விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்த கூடத்தை நோக்கி நடந்தான்.

அவன் சென்ற திசையை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான், சுந்தரன்.

★ ★ ★

**சு**ந்தர சோழர், வானவன்மாதேவி இருவரும் அருகருகே அமர்ந்திருக்க, வானவன்மாதேவியின் அருகில் குந்தவையும், அருண்மொழியும், சுந்தர சோழரின் அருகே ஆதித்த கரிகாலனும் அமர்ந்திருக்க விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. அநிருத்தரின் இரு பக்கங்களிலும் பழுவேட்டரையர் சகோதரர்கள் அமர்ந்திருக்க, தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் கண்டன்

அமுதனார் அருகே திருக்கோவிலூர் மலைய மான் அமர்ந்திருந்தார். பரிசாரகன் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் பலாக்கனி பாலன்னம் கொண்டு வந்து வைக்க, அதைக் கவனித்த அநிருத்த பிரம்மராயர், பழுவேட்டரையரை கேலியுடன் நோக்கினார்.

"நமது தனாதிகாரிக்கு மிகவும் பிடித்த கனி பலாக் கனிதான். ஒருமுறை நாங்கள் இருவரும் மலையமானைச் சந்தித்துவிட்டு, தஞ்சைக்குத் திரும்பிய போது, வழியில் பலாத்தோப்பு ஒன்றைக் கண்ட பழுவேட்டரையர், தனது புரவியுடன் தோப்பினில் நுழைந்து ஒரு பலாக்கனியைப் பறித்து, தனது வாளினால் அதனை வெட்டி, சுளைகளை உண்ட பிறகே, பயணத்தைத் தொடர்ந்தார்!" என்றதும் அனைவரும் நகைக்க, ஆதித்த கரிகாலன் எழுந்து, பரிசாரகன் கொண்டு வந்து வைத்த கிண்ணத்தில் இருந்து பலாக்கனி பாலமுதத்தைப் பழுவேட்டரையரின் தட்டில் பரிமாறினான்.

"நானே தங்களுக்குப் பரிமாறுகிறேன், தனாதிகாரியே. ருசித்துப் பருகுங்கள்!" என்றபடி ஆதித்தன் பரிமாற, அதனைச் சுவைத்த பழுவேட்டரையர் கண்டன் அமுதனார், ஆதித்த கரிகாலனை பரவசத்துடன் நோக்கினார்.

"ஆஹா! என்ன ருசி! பாண்டியன் தலையைக் கொய்த உனது வீரக் கைகளால் இதனைப் பரிமாறுவதால் ஏற்பட்ட ருசி போலும். இதனைப் பரிமாறிய உனது கைகளுக்கு ஸ்வர்ண கடாவை அணிவிக்க வேண்டும்!"- பழுவேட்டரையர் கூறினார்.

"தனாதிகாரியே! நீர் அணிவிக்கும் ஸ்வர்ண கடாவிற்குத்தான் எனது அண்ணன் காத்திருக்கிறானா என்ன? பொன்னாழியை எழுப்பி இருக்கிறான். பாணப்பத்திரத்தைக் கொண்டு நான்கு சுரங்கத் தங்கத்தை வென்றவனுக்கு, நீர் போடும் ஸ்வர்ண கடா ஒரு பொருட்டாக இருக்குமா என்ன?" குந்தவை நகைச்சுவை

யாகத்தான் அப்படிக் கூறினாளோ, அல்லது தனது ஆற்றாமையைத்தான் அங்ஙனம் வெளியிட்டாளோ.. ஆனால் அவள் கூறியதை பலரும் இரசிக்கவில்லை. பழுவேட்டரையரின் முகம் சிறுத்துக் காணப்பட்டது.

ஆதித்த கரிகாலனின் முகத்திலும் சினம் தோன்றியது. கலகலப்பாகத் துவங்கிய விருந்து குந்தவையின் பேச்சால் ரசாபாசமாகிவிடுமோ என்று அனைவரும் அச்சப்பட்டு அமைதியைக் கடைபிடிக்க, விருந்து அறையில் பரிபூரண மௌனம் நிலவியது. பரிசாரகர்கள் கிண்ணங்களையும் கரண்டிகளையும் கூட ஒலியெழுப்பாமல் கையாள, அப்போது உள்ளே பிரவேசித்தான் பார்த்திப பல்லவன்.

“வா பார்த்திபா! உனக்காகத்தான் உண்ணாமல் காத்திருந்தேன்! இப்படி எனது பக்கத்தில் உட்கார்!” என்று கூறிய ஆதித்தன், குந்தவையின் பக்கம் திரும்பியும் நோக்காமல், பார்த்திபனுடன் மும்முரமாகப் பேசத் துவங்கினான்.

சுந்தரவதனனிடம் விசாரணை செய்துவிட்டு வந்த பிறகு, பார்த்திபனால், ஆதித்த கரிகாலனிடம் சகஜமாகப் பேச இயலவில்லை. சிந்தூரனைக் கொன்றுவிட்டு, உண்மையிலேயே அதைப்பற்றி அறியாமல் இருக்கிறானா, இல்லை அதுவும் ஒரு நடிப்பா?

அவனது தந்தை தருமவர்மன் மரணம் அடையும்வரை பார்த்திபனை எச்சரித்துக் கொண்டேதான் இருந்தார். “சோழர்களை நம்பாதே! உடனிருந்து கொல்லும் கிருமிகள் அவர்கள். அபராஜிதன் ஆதித்தனை நம்பி மோசம் போனது போதும். நீ ஆதித்த கரிகாலனிடம் எச்சரிக்கையாக இரு!’ - என்கிற அவரது குரல் அவனது செவிகளில் இன்னும் ரீங்கரித்துக் கொண்டேதான் இருக்கின்றது. தலைவிதியே என்று தோன்றியதை பேசிக் கொண்டு விருந்தை உண்டு கொண்டிருந்தான், பார்த்திபன். அவனுக்கு எதுவும் சாப்பிடப் பிடிக்க வில்லை. கனிகளை எடுத்துக் கொறித்துக் கொண்டிருந் தான்.

"நண்பா! பலாக்கனி பாலமுதம் மிகச் சுவையாக உள்ளது. நீ அவசியம் ருசிக்க வேண்டும்!" - ஆதித்த கரிகாலன் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு, பார்த்திபனுக்குப் பரிமாற வந்தான்.

"வேண்டாம் நண்பா! எனக்குப் பலாக்கனி அவ்வளவாகப் பிடிக்காது?" - பார்த்திபன் கூறினான்.

அவன் கூறியதைக் கேட்டதும் தான் அமர்ந்திருந்த நாற்காலியிலிருந்து முன்பாகச் சாய்ந்து பார்த்திபனை எட்டிப்பார்த்தாள், குந்தவை.

"பார்த்திபரே! என்ன வார்த்தை கூறினீர்? பல்லவராக இருந்து கொண்டு பலாக்கனி பிடிக்காது என்று கூறினால் எப்படி? மூவேந்தர்கள் போல முக்கனிகள் ஆயிற்றே! வாழை பாண்டியம், மாங்கனி சோழம் என்றால் பலாக்கனி பல்லவம் ஆயிற்றே! ஒருவேளை, தங்களுக்குப் பலாக்கனி பிடிக்காததால்தான், பல்லவம் வலுவிழந்து இருக்கிறதோ?" - மீண்டும் குந்தவையின் பேச்சு அதிகமாக இருப்பதாக அனைவருக்குமே பட்டது.

பழுவேட்டரையர் குந்தவையை சற்றே எரிச்சலுடன் நோக்கினார். ஆனால் பார்த்திப பல்லவன் அசரவில்லை.

"சோழ இளவரசியாரே, மா, பலா வாழை முக்கனிகள் தான். ஆனால் சில சமயங்களில் இந்தப் பழங்கள் இணைந்து பஞ்சாமிர்தமாகத் திகழ்கின்றன.. என்றாலும், அந்தந்தக் கனிக்கென்று தனித்தன்மை இருப்பது போன்று, சோழத்துடன் இணைந்தாலும், பல்லவத்திற்கு இன்னும் தனித்தன்மை இருக்கத்தான் செய்கிறது. எனது ஆருயிர் நண்பன் பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலருக்கு காஞ்சி மிகவும் பிடித்துப் போனது. இல்லையென்றால், நான்கு சுரங்க ஸ்வர்ணங்களை இழைத்துப் பொன் னாழியைத் தஞ்சையில் எழுப்பாமல் காஞ்சியில் எழுப்பு வாரா?" - பார்த்திபன் நிதானமாக பதில் கூறினாலும், அவனது பார்வை குந்தவைக்கு எச்சரிக்கை விடுப்பது போல இருந்தது.

'"பலே நண்பா! எனது தங்கையின் வாய் வலிமைக்கு யாராலும் ஈடு கொடுக்க முடியாது என்று நினைத்திருந்தேன். அவளுக்குத் தக்க பதிலைக் கொடுத்து சக்கை போடு போட்டுவிட்டாய்!"

குந்தவையின் மீது இருந்த எரிச்சலில், பார்த்திபனை புகழ்ந்து தள்ளினான், ஆதித்த கரிகாலன். அவன் அவ்வாறு கூறியது, தன்னைச் சிறுமைப்படுத்துவது போலத் தோன்ற, பார்த்திபனை சினத்துடன் வெறித்தாள்.

"எங்கள் தஞ்சையில் வசதியான அரண்மனைகள் உண்டு. எனது பழையாறை அரண்மனை மிகவும் விஸ்தாரமாக உள்ளது. எங்கள் தஞ்சை பணியாளர் விடுதியே, உங்கள் ஒத்தாடை அரண்மனையைவிடப் பெரியது தெரியுமா? உங்கள் பல்லவத்தில் வசதியான அரண் மனை இல்லாத காரணத்தால்தான் பொன்னாழியைக் காஞ்சியில் எழுப்பினான். பாருங்களேன்! இந்த ஒத்தாடை அரண்மனை எவ்வளவு புழுக்கமாக இருக்கிறது?" - தனது சேலை முந்தானையினால் விசிறியபடி கூறினாள், குந்தவை.

"ஒத்தாடை புழுக்கமாக இருக்கலாம், இளவரசி. ஆனால் பல்லவர்களின் மனதில் புழுக்கம் கிடையாது. ஒத்தாடையான் ஆலயம் அருகில் இருக்கிறது. அதன் கோபுரத்தைவிட உயரமாகப் பல்லவர்கள் அரண் மனையை எழுப்பமாட்டார்கள். எங்கள் அரண்மனை வசதியில்லாமல் இருந்தாலும், நாங்கள் எழுப்பும் ஆலயங்கள் விஸ்தாரமாக இருக்கும். எப்படி இருந்தாலும், ஒரு இரவு பொறுத்துக் கொள்ளுங்கள். நாளை எனது நண்பன் எழுப்பியிருக்கும் பொன்னாழியைக் கண்டதும், உலகிலேயே அப்படி ஒரு மாளிகை இருக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்வீர்கள். எனது நண்பன் ஆதித்த கரிகாலன், எப்படிப்பட்ட கலாரசிகன், வாழ்க்கையை எப்படி அனுபவிக்க வேண்டும் என்கிற

இரகசியத்தை அறிந்தவன் என்பதையெல்லாம் புரிந்து கொள்வீர்கள்!" என்றான்.

குந்தவையின் முகம் சிறுத்துப் போனது. அதன் பிறகு மௌனமாகவே உணவருந்தினாள். விருந்து முடிந்ததும், அரசகுடும்பத்தினர் அவரவர் ஜாகைக்குத் திரும்ப, ஆதித்த கரிகாலன் பார்த்திபனைத் தேடி வந்தான்.

"பலே பார்த்திபா! குந்தவைக்குத் தக்க பாடம் புகட்டினாய். தனக்கு எல்லாம் தெரியும் என்கிற இறுமாப்பு அவளுக்கு. தான் இன்றி அணுவும் அசையாது என்கிற எண்ணம் அவளுக்கு. பொன்னாழி எழுப்பு வதற்கு அவளது ஆலோசனையை நான் நாடவில்லையே என்கிற கோபம் கூட உண்டு." - ஆதித்த கரிகாலன் கூற, தனது கைகளைக் கட்டியபடி அவனையே உறுத்து நோக்கிக் கொண்டு நின்றான், பார்த்திபன்.

"நண்பா! சிந்தூரனை கொலை செய்தது யாராம்? சுந்தரவதனனிடம் பேசினாயா?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"பேசினேன் நண்பா! அவன் கூறுவதைப் பார்த்தால், கள்வன் ஒருவன் ஸ்வர்ண மதிலில் இருந்து தங்கத்தைக் களவாட வந்திருக்கிறான் போலும். அதனை சிந்தூரன் பார்த்து அவனைத் தடுக்க, தொடர்ந்து நடந்த கைகலப்பில் கள்வன் சிந்தூரனைக் கொன்றிருக்கிறான் என்று தெரிகிறது."-அவனது முகபாவத்தை ஓரக் கண்ணால் கவனித்தபடி கூறினான், பார்த்திபன்.

"அப்படித்தான் இருக்க வேண்டும்!" - அமைதியாகக் கூறிய ஆதித்த கரிகாலன், திடீரென நினைவுக்கு வந்தவன் போல் கூறினான்.

"பார்த்திபா! நாளை பொன்னாழிக்குள் நுழைந்த பிறகு அனைவரும் ஒத்தாடை மற்றும் அத்தியூர் ஆலயங் களுக்குச் செல்கிறோம். நீயும் வருகிறாயா?" - ஆதித்தன் கேட்க, பார்த்திபன் தலையசைத்தான்.

“இல்லை நண்பா! நீ சென்று வா. நான் எனது மாளிகைக்குச் சென்று எனது குடும்ப நிலவரங்களைக் கவனிக்க வேண்டும். எனது பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும். எனது மாளிகைக்குச் சென்று இரண்டு நாட்களாகிறது!” - பார்த்திபன் கூற, தலை யசைத்துவிட்டு வெளியேறினான், ஆதித்த கரிகாலன்.

★ ★ ★

மறுநாள் விடியலில் அனைவரும் பொன்னாழிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். தருமநகரத்தினுள் நுழையும் போதே தொலைவில் தெரிந்த பொன்னாழியின் ஸ்வர்ண கோபுரத்தைக் கண்டு பிரம்மித்துப் போனாள், குந்தவை. பார்த்திபன் முந்தைய இரவு நிகழ்ந்த விருந்தின் போது கூறியது மிகையே இல்லை. இப்படி ஒரு பிரம்மாண்ட மாளிகையை அவள் இதுவரையில் கண்டதில்லை. தஞ்சை மட்டுமல்ல, பழையாறை அரண்மனைகூட இந்தப் பிரம்மாண்டத்தின் முன்பாக நிற்க முடியாது!

சூரியன் உதித்து, ‘பார்.. எனது பெயரைக் கொண்ட ஆதித்தன் எழுப்பியிருக்கும் ஸ்வர்ண மாளிகையை, என்று பெருமையுடன் காட்டியபடி, தனது கிரணங்களை பொன்னாழியின் மீது பரவச் செய்ய, அதனால் தகதகக்கத் துவங்கியது, பொன்னாழி. முருக்கத்தி பாதை மரங்களில் கூடுகளை அமைத்திருந்த பலவித பறவைகள், புறப்பட்டுக் கூட்டங்கூட்டமாகப் பொன்னாழியின் நந்தவனத் தடவாவிகளின் நீரில் விளையாடத் துவங்க, அவற்றின் கூவல்கள் அந்தக் காலைப் பொழுதை ரம்மியமாக மாற்றின. அந்தணர்களின் வேத கோஷங்கள், பறவைகளின் கூவல்கள், மயில்கள் இங்கும் அங்கும் பறந்து தத்தம் தோகைகளை விரித்தாடுவதும், மான்கள் துள்ளி ஓடுவதும், அன்னங்கள் .நீரில் நீந்துவதுமாக இருக்க, பொன்னாழியின் அந்தக் காலைப் பொழுது காண்போரைச் சிலையாக நிற்க வைத்தது.

ஆதித்த கரிகாலனின் மீது குந்தவைக்கு கோபம் பொங்கியது. பராந்தக சோழர் செய்த தவறு! கங்க மன்னர் பிருத்விபதி பரிசாக அளித்திருந்த ஸ்வர்ணமுகி காட்டின் தங்கச் சுரங்கங்களை அப்போதே வசப்படுத்தியிருந்தால், தஞ்சையிலேயே பொன்னாழி போன்ற பிரும்மாண்ட மாளிகையை எழுப்பி இருக்கலாமே. இன்று அத்தனை ஸ்வர்ணமும் ஆதித்த கரிகாலனின் வசம் சென்று விட்டதே.

"இளவரசி! அத்தனையும் சொக்க தங்கம்தானா?"- மலைப்புடன் பொன்னாழியை அண்ணாந்து பார்த்தாள், தெட்டக்கனி.

"அத்தனையும் கோலாகலப்புரத்து அபரஞ்சி தங்கமடி, தெட்டக்கனி", என்றவள் அப்போதுதான் தங்களுக்குப் பின்பாக வந்து நின்ற வந்தியத்தேவனின் முகத்தைக் கவனித்தாள். வந்தியத்தேவன் பொன்னாழி மாளிகையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன வாணர்குல வீரரே? எப்படி இருக்கிறது, எனது அண்ணன் எழுப்பிய பொன்னாழி?" - குந்தவை கேட்டாள்.

'எனது கண்களில் பொன்னாழி தெரியவில்லை, இளவரசி. எங்கள் வாணர்குல மக்களின் பிணங்களால் எழுப்பப்பட்ட மாளிகையாகத்தான் தோன்றுகிறது. தடவாவிகளில் வாணர் மக்களின் குருதி நிறைந்திருப்ப தாகத்தான் உணருகிறேன். அந்த வேதியரின் மந்திர கோஷங்களை, வாணர் மக்களின் வேதனை ஓலமாகத் தான் கருதுகிறேன். பறவைகளின் இனிமையான கூவல்களை, எங்கள் வாணர்குலப் பெண்கள் சித்திர வதை செய்யப்பட்ட போது எழுப்பிய கதறல்களாகத் தான் உணருகிறேன். பராந்தகன் எங்களைக் கங்க மன்னனிடம் அடிமையாக விற்றதற்கு பிரதிபலனாகப் பெற்ற ஸ்வர்ணத்தில் கட்டப்பட்ட பொன்னாழி!'- குந்தவையிடம் கூறுவதற்குத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டான், வந்தியத்தேவன்.

அமைதியாக அவளை நோக்கினான். “மண்ணுலகில் தேவலோகத்தை அமைத்திருக்கிறார், தங்கள் சகோதரர்!” என்று மட்டும் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான், வந்தியத்தேவன்.

“வாருங்கள் இளவரசி! உள்ளே செல்வோம்!”- தெட்டக்கனி அழைக்க, குந்தவை ஆவலுடன் நடந்தாள். பூசனைகள் தொடர்ந்து நடக்க, அரசகுடும்பத்தினர், மையப் பந்தலின் கீழ் அமர்ந்து ஹோம நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்த வேளை, இரதம் ஒன்று வந்து நிற்க, அதன் பின்பாக பார்த்திப பல்லவன் தனது புரவியில் இருந்து குதித்து இறங்கினான்.

கல்பலதாவும், லலாடிகாவும்தான் இரதத்தினில் வந்திருந்தார்கள். இரதத்தினில் இருந்து இறங்கியதும் இருவரும் தயங்கி நிற்க, பார்த்திபன் அவர்களைத் தன்னைப் பின்தொடருமாறு சைகை செய்ய, பெண்கள் அமர்ந்திருந்த பகுதியில் அவர்களை அழைத்துச் சென்றான்.

குந்தவையின் கண்கள் பார்த்திபனையும், அவன் பின்பாக வந்த பெண்களையும் நோட்டம்விட்டன. யார் இந்தப் பேரழகி? கல்பலதாவை ஏற இறங்க குந்தவை பார்க்க, அவளோ அதைக் கவனியாதவள் போல, பந்தலின் பின்பாக இருந்த இருக்கைகளை நோக்கி நடந்தாள். கல்பாவும், லலாடிகாவும் இருக்கைகளில் வந்து அமர்ந்ததை ஆதித்த கரிகாலனும் கவனித்தான்.

கல்பலதாவைக் கண்டதும் அவனது கண்கள் மலர்ந்தன. அவன்தானே பார்த்திபனின் மாளிகைக்குச் சென்றபோது அவனது செவிகளில் கிசுகிசுத்திருந்தான். ‘அந்த அழகிய ஆரணங்கை பொன்னாழி புகுதல் வைபவத்திற்கு அழைத்து வா. பொன்னாழியின் அழகுக்கு இவள் அழகு சேர்ப்பாள்!’ என்று கூறியிருந் தானே. இதோ அந்த அழகிய நங்கை வந்துவிட்டாள். தகதகக்கும் பொன்னாழிக்கு மெருகு சேர்த்துவிட்டாள்.

புரோகிதர்கள் எழ, பொன்னாழிக்குள் நுழையும் தருணம் நெருங்கிவிட்டது. ஆதித்த கரிகாலன் எழ, முன்பாக ஒரு பசுவை ஓட்டிச் சென்றார், ஒரு புரோகிதர். ஆதித்த கரிகாலன் முன்செல்ல அனைவரும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

பொன்னாழியின் வாயிலில் நின்றது அந்தப் பசு. வேதியர் மந்திரங்களை உச்சரித்தபடி பசுவை உள்ளே ஓட்டிச் செல்ல முயல, பசு திடீரென்று திமிரத் தொடங்கியது. வேதியர் அதன் வேகத்தைச் சமாளிக்க இயலாமல் தடுமாறினார். வீரர்கள் இருவர் கயிற்றைப் பற்றி இழுக்க, பசு பிடிவாதமாக உள்ளே நுழைய மறுத்தது. பசுவின் கண்களில் ஒருவித மிரட்சி தென்பட்டது. அதன் பார்வை உள்ளே இருந்த ஒரு பொருளின் மீது அச்சத்துடன் பதிந்தது. பலர் முயற்சி செய்தும், பசு உள்ளே நுழைய மறுத்தது.

'இதென்ன அபசகுனம்!' - மனதிற்குள் நினைத்த மலையமான் மெதுவாகப் பசுவை நெருங்கி, அதன் கழுத்துப் பகுதியை வருடிக்கொடுத்து, பிறகு அதனைத் தட்டிக்கொடுத்து, தட்டில் இருந்து ஒரு வாழைக் கனியை அதன் வாயினில் திணித்தார். ஆனால் தனது முகத்தைத் திருப்பிய அந்தப் பசு, மீண்டும் உள்ளே நோக்கிவிட்டு, மிரட்சியுடன் தனது பார்வையைத் திருப்பிக் கொண்டது.

அனைவருமே குழப்பத்துடன் ஒருவரையொருவர் பார்க்க, அந்தணர்கள் குழப்பத்துடன் நின்றனர்.

'பசு உள்ளே நுழையாமல், மாளிகை புனிதம் அடையாதே. கோமாதா உள்ளே நுழைய மறுக்கிறது என்றால், உள்ளே துர்சக்தி ஏதோ இருக்கிறது போலும்!' மனதிற்குள் எண்ணிய தலைமைப் புரோகிதர், தானே ஒருமுறை பசுவை உள்ளே இட்டுச்செல்ல முயன்றார். பசு பிடிவாதமாக நகர மறுத்தது.

ஆதித்த கரிகாலன் சங்கடத்துடன் பார்த்திபனை பார்க்க, அவன் முன்வந்து பசுவின் வாலைப் பற்றி

அதனை முறுக்கி, அதனை உள்ளே அனுப்ப முயன்றான். பசு இம்மியும் நகர மறுத்தது. இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கல்பலதா, தனது பார்வையைப் பொன்னாழியின் உள்ளே திருப்பினாள். பொன்னாழி யின் நுழைவாயிலைக் கடந்து அமைந்திருந்த விஸ்தார மான வரவேற்புக் கூடத்தின் மையத்தில் பொன்னாழி யின் நுழைவாயிலை நோக்கி, உள்பகுதிக்கு முதுகை காட்டியபடி, இரண்டு பெரிய சிலைகள் நிறுவப்பட் டிருந்தன. வலப்புறத்தில் கரிகால சோழ பெருவளத் தானின் சிலையும், இடப்புறத்தில் அவனது தம்பி பல்லவன் இளந்திரையனின் சிலையும் நின்றிருந்தன. காஞ்சி நகரை இணைந்து உருவாக்கிய சகோதரர்களின் சிலைகளைப் பொன்னாழியின் முன்பாக வைத்து, ஆதித்தன் சோழ-பல்லவ ஒற்றுமையை நிலைநாட்ட எண்ணுகிறான் போலும்.

பொன்னால் வடிக்கப்பட்ட அந்தச் சிலைகளின் முன்பாகப் பளிங்குக் கல்லினால் ஆன திண்ணை அமைக்கப்பட்டிருக்க, அந்தத் திண்ணையின் மீது, உத்தமசீலனின் வாள் நிறுத்தப்பட்டிருந்தது. சேவூர் போரினில் வீரபாண்டியனின் தலையைச் சீவி அறுப்பதற்கு ஆதித்த கரிகாலன் பிரயோகப்படுத்தியிருந்த அதே வாள். வீரபாண்டியனின் காய்ந்த இரத்தக்கறை இன்னும் வாளில் படிந்திருந்தது. பொன்னாழி மாளிகைக்கு வருவோருக்கும், போவோருக்கும் ஆதித்த கரிகாலனின் வீரத்தை பறைசாற்றியவாறு அங்கே நின்று கொண்டிருந்தது, அந்த வாள்.

இரத்தக்கறை படிந்த அந்த வாள்தான் பசுவின் மிரட்சிக்குக் காரணம் என்பதனை யூகித்தாள் கல்பலதா. அந்த வாளை எடுத்துத் தன்னை வெட்டுவதற்காகத்தான் உள்ளே அழைத்துச் செல்கிறார்களோ என்று அந்தப் பசு நினைத்திருக்கக் கூடும். கம்பீரமாக நின்ற கரிகாலப் பெருவளத்தான் சிலையைக் கடந்து பசு உள்ளே செல்ல வேண்டும் என்றால், அந்த வாளை அப்புறப்படுத்தியே

ஆக வேண்டும். பார்த்திப பல்லவனை நோக்கி நகர்ந்தவள், அவனது செவிகளில் தனது யூகத்தைக் கிசுகிசுக்க, அவன் வியப்புடன் அந்தக் கத்தியை நோக்கி நடந்து அதனை அங்கிருந்து அப்புறப்படுத்தினான்.

இப்போது புரோகிதர் மீண்டும் பசுவை உள்ளே இழுக்க, பசுவின் பார்வையில் மிரட்சி இப்போது நீங்கியிருந்தது. உள்ளே நுழைந்தது பசு. ஆதித்த கரிகாலன் வியப்புடன் கல்பலதாவை வெறிக்க, அவனது பார்வையைத் தவிர்த்தபடி லலாடிகாவின் பின்பாகப் பதுங்கிக் கொண்டாள்.

ஆதித்த கரிகாலன், பிரம்மிப்புடனும், மலைப்புடனும், கல்பலதாவை திரும்பி நோக்கினான்.

பொன்னாழி புகுதல் வைபவம் மிகச் சிறப்பான முறையில் நடந்து முடிந்தது. மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட, ஆதித்த கரிகாலனை பின்தொடர்ந்து அனைவரும் உள்ளே சென்றனர்.

உள்ளே நுழைந்த குந்தவை ஒருமுறை சுவாசத்தை இழுத்துப் பிடித்தாள். அண்ணாந்து பார்த்த போது கூரை எங்கோ உயரே இருக்க, பல வடிவங்களில் பொன்னால் செய்யப்பட்ட சிற்பங்கள் கூரையை அலங்கரித்துக் கொண்டிருந்தன. மாளிகையின் மையத்தில் ஒரு பெரிய நீரூற்று. உப்பரிகைக்குச் செல்ல அகன்ற படிகள்.. எவ்வளவு அறைகள் உள்ளன என்று கணக்கெடுக்கவே முடியாத வண்ணம் ஏராளமான அறைகள். உண்மையிலேயே ஆதித்த கரிகாலன் பாக்கியசாலிதான். பழையாறை கஜானாவிலேயே பாணப்பத்திரம் இருந்தும், இவளுக்கு இந்த யோசனை தோன்றாமல் போனதே. தான் ஆதித்த கரிகாலனை முந்திக் கொண்டு தங்கத்தைக் கைப்பற்றி இருந்தால், பழையாறை அரண்மனையையே ஸ்வர்ணத்தால் இழைத்திருக்கலாமே. மனம் வெதும்பிய படி தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையை நோக்கி தெட்டக்கனி பின்தொடர நடந்தாள்.

அனைவரும் ஒத்தாடை ஆலயம் மற்றும் அத்திமலை ஆலயத்திற்குப் புறப்பட, அவர்களை வழியனுப்ப பொன்னாழியின் வாயிலுக்கு விரைந்தான், பார்த்திபன். பார்த்திபனைக் கண்டதும் ஆதித்த கரிகாலன் அவனை நெருங்கி வந்து அவனது செவியில் கிசுகிசுத்தான்.

"எனது பாட்டனார் திருக்கோவிலூர் மலையமான் உன்னைச் சந்திக்க ஆவலாய் இருக்கிறார். நீ அவரை அவசியம் சந்திக்க வேண்டும்!" என்றவன் தனது இரதத்தை நோக்கி நடந்தான்.

அரசகுடும்பம் ஆலயங்களுக்குப் புறப்பட்டதும், பொன்னாழியினுள் நுழைந்த பார்த்திபன், மலையமான் தங்கியிருந்த அறையை நோக்கி நடந்தான். அறைக்கதவை இருமுறை தட்டிவிட்டுக் காத்திருந்தான்.

"உள்ளே வரலாம்!" - மலையமான் குரல் கொடுக்க, பார்த்திபன் உள்ளே நுழைந்தான்.

"வா பார்த்திபா! உன்னிடம் நான் நிறையப் பேச வேண்டும். ஆனால் நீ பொன்னாழி வைபவத்திற்காக பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாய். உனக்கு பேசுவதற்கு அவகாசம் இல்லை. என்னாலும் உன்னைத் தனிமையில் நெருங்க முடியவில்லை. உன்னிடம் பேச வேண்டும் என்பதற்காகத்தான் அவர்களுடன் ஆலயத்திற்குச் செல்லாமல், உன்னை என்னிடம் அனுப்பச் சொல்லி ஆதித்தனிடம் தெரிவித்தேன்!" - மலையமான் வாஞ்சையுடன் அவனைப் பார்த்தார்.

"பாட்டனாரே! தாங்கள் ஒரு வார்த்தை தெரிவித் திருந்தால் நானே தங்களைச் சந்திக்க ஓடோடி வந்திருப்பேனே!" - பார்த்திபன் கூறினான்.

"இல்லையப்பா! நாம் இருவரும் பேசினால் பல புருவங்கள் உயரும். ஆதித்த கரிகாலனின் நலம் விரும்பிகள் நாம் இருவர் மட்டும்தான் என்கிற போது, நமது சந்திப்பு கூர்ந்து கவனிக்கப்படும். எனவேதான்

தனிமையில் இருக்கும் போது நாம் சந்திக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தேன். இப்படி வந்து அமர்ந்துகொள்!" தான் அமர்ந்திருந்த மஞ்சத்தின் எதிரே இருந்த நாற்காலியைச் சுட்டிக்காட்டினார், மலையமான்.

பார்த்திபன் அமர்ந்ததும், அவனையே உறுத்துப் பார்த்த மலையமான், திடீரென்று கேட்டார். "ஆதித்த கரிகாலனைப் பற்றி என்ன நினைக்கிறாய், பார்த்திபா?"- மலையமான் கேட்க, பார்த்திபன் யோசித்தான்.

"என்ன நினைக்கிறேன் என்று கூறுவதைவிட, எப்போதும் அவனைத்தான் நினைக்கிறேன் என்று எளிதாகக் கூறிவிடுவேன், பாட்டா! அவன் காஞ்சியில் காலடி வைத்த நாள் முதலாக, நான் என்னைப் பற்றி எண்ணுவதையே மறந்துவிட்டேன். அவனைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நினைத்ததைச் செய்து முடிக்கும் அவனது ஆற்றலை எண்ணி மலைப்பாகவும் உள்ளது. அச்சமாகவும் உள்ளது."

"அச்சமாக உள்ளதா.. ஏன்?" - மலையமான் வியந்தார்.

"இதோ, இந்தப் பொன்னாழி இருந்த இடத்தில் எங்கள் பல்லவ இளவரசி ஒருத்திக்காக எழுப்பியிருந்த பிரவாள மாளிகை இருந்தது. அந்த இளவரசி துர்மரணம் அடைந்தாள். அதன் பிறகு இங்கே யாருமே வசிக்க வில்லை. பாழடைந்து கிடந்த அந்த மாளிகையை இடித்து இங்கே பொன்னாழியைக் கட்டியிருக்கிறான் ஆதித்தன். நான் கூட இந்த இடம் ராசியில்லாத இடம் என்று கூறினேன். அவன் ஒப்புக்கொள்ளவில்லை. சில விஷயங் களில்! எனது! நண்பன் காட்டும் பிடிவாதம்தான் என்னை அச்சப்பட வைக்கிறது." - பார்த்திபன் கூறினான்.

மலையமான் தனது நரைத்த தாடியை ஒருமுறை நீவியபடி கண்களை மூடி யோசித்தார். பிறகு கண்களைத் திறந்து பார்த்திபனின் கண்களுக்குள்ளாக நோக்கினார்.

"பார்த்திபா! ஒரு மனிதனை மதம் கொண்ட யானை ஒன்று துரத்துகிறது. அவன் ஒரு மரத்தின் மீது ஏறிக் கொள்ள மரத்தின் உச்சியில் இருக்கும் கரடி ஒன்று அவனைப் பார்த்து இறங்கி வருகிறது. மரத்தின் கீழே ஒரு பள்ளம் இருக்க, அதனுள் குதிக்க நினைக்கிறான் அந்த மனிதன். அதனுள் ஒரு மலைப்பாம்பு இருக்கிறது. அவன் பற்றியிருக்கும் கிளையோ உடைந்து கொண்டே வருகிறது. உயரத்தில் கரடி, நிலத்தில் மதயானை, பள்ளத்தில் மலைப்பாம்பு என்று மரணம் அவனைச் சூழ்ந்து நிற்க, உடைந்து கொண்டிருக்கும் மரக்கிளையில் இருந்த தேன்கூடு ஒன்று சிதறி அதில் சேகரிக்கப் பட்டிருந்த தேன் வழிந்து அவனது வாயினுள் சிந்துகிறது. அந்த மரணாவஸ்தையிலும், அந்த மனிதன் தேனை ருசிக்கிறான். அது அவனுக்கு ஒரு துளி இன்பத்தைத் தர, அந்த இன்பத்தில் துன்பங்களை மறக்கிறான். அந்தத் தேன்துளியைப் போன்றுதான் ஆதித்த கரிகாலனுக்குக் கிடைத்திருக்கிறது உனது நட்பு. மற்றபடி அவனை முழுவதுமாகச் சூழ்ந்திருக்கிறது ஆபத்து. மரணம் எந்தச் சமயத்திலும் அவனை ஆலிங்கனம் செய்து கொள்ளக் கூடும்!" - மலையமானின் குரல் தழுதழுத்தது

பார்த்திபன் திகைத்துப் போனான்.

"என்ன சொல்கிறீர், பாட்டனாரே? ஆதித்த கரிகாலனுக்கு என்ன ஆபத்து காத்திருக்கிறது?"

"மந்த ஆட்டில் கருமந்தனும் மகர ஈராவதனில் நகராபொன்னனும் பாயும் நந்தியில் நாசநீலனும் கொட்டும் தேளினில் நஞ்சுநாகமும்* ஆகியவை அவனது ஜாதகத்தில் உள்ளன. இதனால் அவனுக்கு சர்ப்ப தோஷம் இருப்பதாகத் தெரிந்தது. ஜோதிடர்களை ஆலோசித்ததில், திருக்கோவிலூர் கருடக்குன்றம்

* குரு மகர ராசியிலும், சனி மேஷத்தில், ராகு ரிஷபத்திலும் மற்றும் கேது விருச்சிகத்திலும் நீசமாக இருப்பதாகப் பொருள்.

*தொடங்கி கெடில நதி பாயும் திருவதிகை வரை கருடனின் ஆதிக்கம் உள்ள பகுதி என்பதால், இங்கே வசித்தால் சர்ப்ப தோஷத்திலிருந்து அவனைக் காக்கலாம் என்று கூறப்பட்டது. எனவேதான் பிறந்ததிலிருந்து அவனை திருக்கோவிலூரிலேயே வைத்துக் கொண்டேன். கெடில நதியைத் தாண்டி அவன் தெற்கே செல்லக் கூடாது. தெற்கில்தான் அவனுக்கு மரண கண்டம் உள்ளது என்று கூறினார்கள், ஜோதிடர்கள். சோழ அரசனாக அவன் பதவி ஏற்றால் தஞ்சைக்குத் தானே அவன் போக வேண்டியிருக்கும். எனவேதான் காஞ்சியில் அவனை வசிக்கச் சொன்னேன். காஞ்சியில் இருந்து சோழ தேசத்தை ஆளட்டும் என்கிற யோசனையைக் கூறியதே நான்தான். அவன் கெடிலத்திற்கு வடக்கே உள்ளவரை அவன் உயிருக்கு ஆபத்து இல்லை. சர்ப்ப தோஷம் அவனுக்குத் துர் மரணத்தைக் கொடுக்கப் போகிறது என்று அறிந்துதான் சுந்தர சோழர் தனது ஆருயிர் மகனை எனது வசம் விட்டு வைத்திருக்கிறார். நான் அவனது பாதுகாப்பு என்கிற பெரும் மலையைச் சுமந்து கொண்டு நிற்கிறேன்.. இந்தப்*

---

* ஆதித்த கரிகாலன் வளர்ந்தது திருக்கோவிலூரில் உள்ள கீழையூர் அரண்மனை. மலையமானின் பாதுகாப்புடன் தஞ்சைக்குச் சென்றுவிட்டு உடனே திருக்கோவிலூருக்கு வந்துவிடுவது அவன் வழக்கம். கெடில நதி பண்ணுருட்டி என்கிற பண்ருட்டியில் உள்ள திருவதிகை வழியாகப் பாயும் கெடில நதி வங்காளக் கடலில் கலக்கிறது. இந்த நதியைக் கடந்து ஆதித்த கரிகாலன் செல்லக் கூடாது. துரதிருஷ்ட வசமாகக் கொலை செய்யப்பட்ட அவனது உடல் சிதம்பரம் அருகே உள்ள காட்டுமன்னார் கோயிலில் இருந்து ஐந்து கி.மீ. தொலைவில் உள்ள கடம்பூர் மாளிகையில் கண்டு எடுக்கப்படுகிறது. தற்போது கடம்பூர் மேல்கடம்பூர் என்று அழைக்கப்படுகிறது. கெடில நதியைக் கடந்து தெற்கே போகக்கூடாது என்று மலையமான் பலமுறை எச்சரித்தும் அவன் ஏன் தெற்கே சென்றான்? அவனை வரவழைத்தது யார்? என்கிற கேள்விக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

பெரும் பாரத்தை யார் தோளிலாவது சுமத்த வேண்டும் என்று காத்திருக்கிறேன். அதற்கு நீதான் பொருத்த மானவன் என்பது எனக்கும், ஆதித்த கரிகாலனுக்கும் எண்ணம்!" - சோகத்துடன் கூறினார் மலையமான்.

பார்த்திபன் அதிர்ந்து போய் அவரைப் பார்த்தான். காஞ்சியில் பொன்னாழி எழுப்பியதற்கு இதுதான் காரணமா?

"பாட்டனாரே! நான் ஒரு விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர நினைக்கிறேன்?"

'என்ன அது?' என்பது போன்று புருவத்தை உயர்த்தினார், மலையமான். அவரை எச்சரிக்கையுடன் நோக்கினான், பார்த்திபன்.

"உங்கள் பெயரனுக்குச் சில குறைபாடுகள் உள்ளன. தேகத்திலா, மனதிலா என்பது தெரியவில்லை. ஆனால் இரவு நேரங்களில் அவன் உறக்கத்தில் உலா வருகிறான். எனது அறைக்கே வந்து வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான். நான் அழைத்தும் பதில் இல்லை. அவன் உறக்கத்தில் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண் டேன். பிறகு தனது அறைக்குச் சென்று உறக்கத்தைத் தொடர்ந்தான்." - பார்த்திபன் கூறியதும், மலையமான் தலையை அசைத்து ஆமோதித்தார்.

"உண்மை பார்த்திபா! சிறு வயது முதல் அவனிடம் இந்தக் குறைபாடு உண்டு. பாதுகாப்பு கருதி சிறுவனாக இருக்கும் போது அவன் என்னுடன்தான் உறங்குவான். ஒரு இரவு, எனக்குத் தற்செயலாக உறக்கம் விழித்த போது மஞ்சத்தில் அவனைக் காணவில்லை. தேடிச் சென்றேன். உப்பரிகை கைப்பிடி சுவரில் அமர்ந்திருந்தான். பதை பதைத்துப் போனேன். அவனைச் சுமந்து வந்து மஞ்சத்தில் கிடத்தினேன். உண்மை! அவனுக்கு உறக்கத்தில் உலா வரும் பழக்கம் உள்ளது. நான் உன்னை வேண்டுவதும் அதுதான். இனி வருங்காலத்தில் நீ பொன்

னாழியிலேயே அவனுடன் தங்கி அவனைக் கண்கொத்தி பாம்பை போன்று கவனிக்க வேண்டும். குறிப்பாக, இரவு வேளைகளில் அவன் உறங்கும் போது அவனைக் கண்காணிக்க வேண்டும். உறக்கத்தில் நடக்கிறானே தவிர, அவனால் மற்றவருக்கு ஆபத்து இல்லை. அவனுக்கே அவன் ஆபத்தை விளைவித்துக் கொள்வானோ என்றுதான் உன்னை வேண்டுகிறேன்!"-மலையமான் கூறினார்.

அவனால் மற்றவருக்கு ஆபத்து இல்லையா? சிந்தூரனின் முகம் பார்த்திபனின் கண் முன்பாக நிழலாடியது.

"பாட்டனாரே! சிந்தூரனைப் பற்றி அறிவீரா?"-பார்த்திபன் தயக்கத்துடன் கேட்டான்.

"யார்? பொன்னாழியை எழுப்பியவன்தானே? ஸ்வர்ணத்தை அபகரிக்க முயன்ற சில கள்வர்களைத் தடுக்க முயன்ற போது அவர்கள் அவனைக் கொன்றுவிட்டதாக ஆதித்த கரிகாலன் கூறினான். அதனால் மிகவும் வருத்தத்துடன் காணப்பட்டான்."-மலையமான் கூறினார்.

"சிந்தூரன் கொலை செய்யப்பட்டது உண்மை. கள்வர்களால் அவன் கொலை செய்யப்பட்டான் என்று ஆதித்த கரிகாலனிடம் கூறியது நான்தான். ஆனால் சிந்தூரன் கொலை செய்யப்பட்ட இடத்தில் ஆதித்த கரிகாலன் உறக்கநிலையில் நின்றிருந்தான். சோழ இளவரசன்தான் சிந்தூரனைக் கொன்றான் என்பதைப் பார்த்த சாட்சி ஒன்று இருக்கிறது. விவகாரம் மறைக்கப்பட்டது என்றாலும், ஆதித்த கரிகாலனின் நிலை எனக்கு கவலையை அளிக்கிறது. அவனுக்குச் சிகிச்சை ஏதேனும் தரப்படுகிறதா?" - பார்த்திபன் கேட்டான்.

நீண்ட பெருமூச்சு ஒன்றை சிந்தியபடி, பதில் தந்தார் மலையமான். "பார்த்திபா! ஆதித்த கரிகாலன் அடிக்கடி திருக்கோவிலூருக்கு வருவதற்குக் காரணம் எதுவாக இருக்கும் என்று நீ நினைக்கிறாய்? திருக்கோவிலூரின் மேலையூர் பகுதியில் மனமாசுகெடிகை என்கிற வைத்தியசாலை உள்ளது. மனநோய் உள்ளவர்கள் அங்குதான் சிகிச்சை பெறுகிறார்கள். அங்கு பகிரண்ட காயகல்பர் என்கிற சித்தர்தான் ஆதித்தனுக்கு சிகிச்சை அளித்து வருகிறார். சிறுவயதில் அவனுக்குக் கை கால்* இழுப்பும் ஏற்படும்." - மலையமான் கண்களை மூடிக்கொண்டு சற்று அமைதி காத்தவர், திடீரென்று முன்வந்து பார்த்திபனின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

"பிறந்தது முதல் ஆதித்த கரிகாலன் சுகப்படவே யில்லை, பார்த்திபா. உடல் ரீதியாக, மன ரீதியாக பல பிரச்னைகள். என்ன செய்வது? பட்டத்து இளவரச னாகப் பிறந்துவிட்டானே. அவனை நல்லபடியாக ஆளாக்கி, மன்னனாக அரியணையில் அமர்த்த வேண்டும் என்று எனது மருமகன் சுந்தர சோழன் எனது கையைப் பற்றிக்கொண்டு கண்ணீர் சிந்தினார். என்னால் முடிந்த அளவு, அவனை ஒரு மனிதனாக்கி இருக்கிறேன். அவனது உடல்நிலையால்தான், கோபம், மூர்க்கம், பிடிவாதங்களைக் கொண்டிருக்கிறான். ஆனால் நீ குறிப்பிடுவது போன்று கொலை செய்யுமளவுக்கு அவன் ஆபத்தானவன் அல்லன். சிந்தூரனின் மீது மிகவும் அபிமானம் கொண்டிருந்தான். உறக்கத்தில் கூட அவனைக் கொலை செய்திருக்கமாட்டான். ஆதித்த கரிகாலனைப் பற்றிய எனது கவலைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. எனவேதான், உன்னிடம் யாசகமாகக் கேட்கிறேன். நீதான் அவனை பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். சுந்தரசோழர், திருக்

* கால் + கை இழுப்பு என்பதுதானே இப்போது காக்காய் வலிப்பு என்று மாறிவிட்டது.

கோவிலூரைவிட்டு என்னைக் காஞ்சியில் வசிக்கச் சொல்கிறார். என்னால் எப்படி இயலும்? எனவேதான் உன்னிடம் இறைஞ்சுகிறேன்!"-பார்த்திபனின் கைகளை இன்னும் இறுக்கமாகப் பிடித்தார், மலையமான்.

"கவலைப்படாதீர்கள்! கண்ணை இமை காப்பது போன்று அவனைப் பார்த்துக் கொள்கிறேன். தற்போது அவனது உடல்நிலை என்ன?" - பார்த்திபன் கேட்டான்.

"இப்போது கை கால் இழுப்பு நோய் வருவதில்லை. ஆரோக்கியத்துடன் இருக்கிறான். ஆனால் உறக்கத்தில் நடப்பது மட்டும்தான் இன்னும் தொடர்கிறது!"- மலையமான் கூறினார்.

"நான் இனி அவனைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் திருக்கோவிலூரரில் நிம்மதியாக இருங்கள்!" - பார்த்திபன் கூற, அவனை நன்றியுடன் நோக்கினார், மலையமான். எழ முயன்ற பார்த்திபனின் தோள்களைப் பற்றி, மீண்டும் அமர்த்தினார், மலையமான்.

"என்ன அவசரம், பார்த்திபா? நாம் பேச வேண்டியது இன்னும் நிறைய இருக்கிறது!" என்றவர், பார்த்திபனின் கண்களுக்குள் நோக்கினார்.

"கல்பலதா என்பவள் யார்?" - மலையமான் கேட்டதும், துணுக்குற்றான், பார்த்திபன்.

"ஏன்! எனது மாளிகையில் வசிக்கும் பெண். எனது தூரத்து உறவினள்."

"யார்.. இன்று காலையில் பொன்னாழிக்குள் கோமாதா நுழைய மறுத்த போது அதற்கான காரணத்தை உன்னிடம் உரைத்த அந்தப் பெண்ணா?" - மலையமான் கேட்க, பார்த்திபன் தலையசைத்தான்.

"அழகும், குணமும் கொண்டிருக்கிறாள்! நமது ஆதித்த கரிகாலனுக்குப் பொருத்தமானவள். அவள் மீது ஆதித்தன் அபிப்பிராயம் கொண்டிருக்கிறான். முதல்

தடவையாக, ஒரு வாலிபனுக்குரிய ஆசைகள் அவனுள் எழுந்திருப்பதை எண்ணி நான் குதூகலிக்கிறேன். நான் எதற்கு உன்னிடம் இந்த விஷயத்தைத் துவக்குகிறேன் என்றால், உனக்கும், அவளுக்கும் இடையே..? உனக்கு அவள் முறைப்பெண்ணாக இருக்கக் கூடுமோ என்றுதான் முன்பே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்?"- மலையமான் கேட்க, குழம்பினான், பார்த்திபன்.

'எனக்கு மட்டும் அவள் முறைப்பெண் அல்ல. ஆதித்த கரிகாலனுக்கும் அவள் முறைப்பெண்தான்!' - மனதினுள் கூறிக் கொண்டான், பார்த்திபன்.

'அரிஞ்சய சோழனால் தாயாக்கப்பட்ட ஒரு அபலையின் பெயர்த்தி. சுந்தர சோழனின் தங்கை மகள்!' என்று மனதிற்குள் கூற முடிந்ததே தவிர, பார்த்திபனால் வெளியே சொல்ல முடியவில்லை.

"பாட்டனாரே! எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் இடையே ஒன்றும் இல்லை. எனக்கு முறைப்பெண்தான். ஆனால் நாங்கள் இருவரும் அப்படிப் பழகவில்லை. எனவே இதில் ஒன்றும் சிக்கல் இருக்காது என்று நினைக்கிறேன்!" என்றதும் உற்சாகத்துடன் எழுந்தார், மலையமான்.

"பலே பார்த்திபா! எனது தோளினில் நான் சுமக்கும் மலை ஆதித்த கரிகாலன். உனது தோளில் நான் அதனைச் சுமத்துகிறேன். நீ அந்தப் பெண் கல்பலதாவின் தோளில் சுமத்திவிடு. நம்மைவிடப் பெண்கள் தங்கள் கணவனை பத்திரமாகப் பார்த்துக் கொள்வார்கள்!"- புன்னகையுடன் கூறினார்.

பார்த்திபனின் மனக்கண்ணில் கல்பலதாவின் முகம் நிழலாடியது. இதற்கு அவள் சம்மதிப்பாளா?

"ஆனால் நானாக உன்னிடம் இந்த விஷயம் குறித்துப் பேசியதாக யாருக்கும் தெரிய வேண்டாம். கல்பலதாவை

ஆதித்த கரிகாலன் விரும்பும் விஷயம் உனக்கும் எனக்கும் மட்டும் தெரிந்த இரகசியமாக இருக்க வேண்டும். காரணம், இந்த விஷயம் வெளியே பரவினால், ஆதித்த கரிகாலனுக்கு நேர இருக்கும் ஆபத்து கல்பலதாவுக்கும் நேரலாம். நான் எப்போதெல்லாம் ஆதித்த கரிகாலனின் திருமணத்தைக் குறித்துத் திட்டமிடுகிறேனோ, அதனை யாரோ பின்பாக இருந்து குலைக்கிறார்கள். அருண் மொழிக்குக் கூடக் கொடும்பாளூர் பெண் வானதியை நிச்சயித்துவிட்டார்கள். ஆனால் மூத்தவனான ஆதித்த கரிகாலனின் திருமணப் பேச்சைக் குறித்து யாரும் கவலைப்படுவதில்லை. நான் ஏதாவது பிரயத்தனங் களைச் செய்தாலும் அதனைக் கெடுக்கிறார்கள். பழுவேட்டரை யர்கள் சம்புவரையர் குலப் பெண்ணை அவனுக்கு மணமுடிக்க முயன்றும், விஷயம் இழுத்துக் கொண்டே இருக்கிறது. இந்நிலையில், அவனாகவே கல்பலதாவை ஆசைப்பட்டிருக்கிறான். எனவே, இந்த விவகாரத்தை மிகவும் இரகசியமாகக் கையாள வேண்டும். ஆதித்த கரிகாலன் கல்பாவை காதலிக்கும் விவகாரம் ஆதித்தன், நான், நீ மூவரும் மட்டும் அறிந்த இரகசியமாக இருக்க வேண்டும்." - மலையமான் கூறியதும், தலையசைத் தான், பார்த்திபன்.

"கவலைப்படாதீர்கள், திருக்கோவிலூராரே! நிச்சயம் நான் யாரிடமும் கூறமாட்டேன்! உங்கள் எண்ணங்கள் அனைத்துமே நிச்சயம் ஈடேறும். உங்கள் பெயரன் சோழ மன்னனாக அரியணையில் அமர்ந்து உலகம் போற்ற ஆட்சி புரியப் போகிறான். அதனை நீங்களும் பார்க்கத் தான் போகிறீர்கள்" என்றபடி அறைக் கதவை நோக்கி நடந்தான்.

"பார்த்திபா! உனக்கு மகிழ்ச்சிகரமான சேதி ஒன்றை சொல்ல விரும்புகிறேன். அதையும் கேட்டு விட்டுப் போ. ஆதித்த கரிகாலனின் ஜாதகத்தில் சர்ப்ப தோஷத்தை கணித்த ஜோதிடர்கள், அவன் மன்னனாக அஸ்வமேத

யாகத்தைச் செய்தால் தோஷம் நீங்கும் என்று கூறினார்கள். ஆதித்த கரிகாலன் மன்னனாகப் பதவி ஏற்றதும், அவனது தோஷங்கள் நீங்கி, அவன் ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடன் வாழவும் அஸ்வமேத யாகம் செய்யத் தீர்மானித்திருக்கிறோம். நாங்கள் அதைத் தீர்மானித்த பிறகுதான், பிரவாள மாளிகையை இடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அப்போது அந்த மாளிகையின் புகைபோக்கியினுள், தேவ உடும்பர அத்திமலையானின் சிலை கிடைத்திருக்கிறது. அதனை அத்திமலையான் கோயிலுக்குக் கொடுத்துவிடப் போவதாக ஆதித்த கரிகாலன் என்னிடம் தெரிவித்தான். 'அஸ்வமேத யாகம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தவுடன், அஸ்வமேத யாகத்தின் தெய்வமான தேவராஜன் கிடைத்திருக்கிறான். எனவே அதனைப் பத்திரமாக உனது பாதுகாப்பிலேயே வைத்துக்கொள். நீ அரியணையில் அமர்ந்ததும், அவனைக் கொண்டு அஸ்வமேதத்தைச் செய்துவிட்டு, பிறகு ஆலயத்தில் வைக்கலாம்' என்று நான்தான் அவனுக்கு ஆலோசனை கூறினேன். எனவே, உனது பல்லவத்தின் பொக்கிஷத்தைப் பற்றி நீ கவலைப்படாதே. ஆதித்த கரிகாலன் மன்னனாக அஸ்வமேதம் செய்து முடித்தவுடன், சிலை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படும்!" - மலையமான் கூறினார். விக்கித்துப் போய் நின்றிருந்தான், பார்த்திபன்.

ஆக, இவனது எல்லாக் கனவுகளும் கானல் நீராகவே உள்ளன. கல்பலதாவை மணக்க வேண்டும் என்கிற இவனது ஆசைக்கும் தடையாக இருக்கிறான் ஆதித்த கரிகாலன். அத்திமலைத்தேவனை மீட்க வேண்டும் என்கிற சபதத்தை நிறைவேற்றவிடாமல், ஆதித்த கரிகாலன்தான் சிலையைக் கைப்பற்றி இவனுக்குத் தடையாக இருக்கிறான். எல்லாவிதத்திலும் இவனுக்குத் தடையாக இருக்கும் ஆதித்த கரிகாலனை இவன்தான் காப்பாற்ற வேண்டும். என்ன விந்தை இது!?

"திருக்கோவிலூராரே! அத்திமலையான் சிலையை ஆதித்த கரிகாலன் எங்கே வைத்திருக்கிறான், தெரியுமா?"

"அது எனக்கே தெரியாத இரகசியம்? ஆனால் சிலை பத்திரமாக உள்ளது. ஆதித்த கரிகாலன் மன்னனாக அஸ்வமேதம் செய்ததும், தனக்கு உரிய இடத்திற்கு அத்திமலைத்தேவன் வருவான்!" - மலையமான் கூற, ஆயாசத்துடன் தனது முகத்தைத் தொங்கப் போட்டான்.

"நீங்கள் கூறுவதைப் பார்த்தால், அத்திமலையான் எனது பணயக் கைதி. நல்லபடியாக, ஆதித்த கரிகாலன் மன்னனாகப் பதவி ஏற்றால்தான், அத்திமலையான் அவனது ஆலயத்தை அடைவான் என்று கூறுவது போன்று உள்ளதே." - பார்த்திபன் கூறினான்.

"பரவாயில்லையே, பார்த்திபா! நீ சூட்சுமங்களை நன்கு அறிந்தவன். உண்மை! தேங்காயை உடைப்பது போன்று பிரச்னையை மிக அழகாக விளக்கிவிட்டாய். கண்ணனின் பால்ய லீலைகளைப் பற்றிய பாகவதத்தைப் படிக்கும் போது, அதில் ததிபாண்டன் கதை வருமே.. படித்திருக்கிறாயா?" - மலையமான் கேட்டார்.

"எனது தாய் பாகவதம் படித்துக் காட்டியிருக்கிறார். ததிபாண்டன் சரித்திரத்தை நான் அறிவேன்!"- பார்த்திபன் கூறினான்.

"அது போன்று நான் ததிபாண்டனாக இப்போது திகழ்கிறேன், பார்த்திபா. யசோதா தன்னைத் துரத்தி வருவதைக் கண்டு, கண்ணன் ததிபாண்டன் பானையினுள் ஒளிந்து கொண்டான். அதன் மீது அமர்ந்துவிட்ட ததிபாண்டன், யசோதாவை திசை திருப்பிவிட்டு, கண்ணனைக் காப்பாற்றினான். பிறகு கண்ணனிடம் தனக்கு மோட்சம் கிடைத்தால்தான் அவனை பானையிலிருந்து விடுவிப்பேன் என்று நிபந்தனை விதித்தான் அல்லவா! அதே போன்று, கண்ணனைப் போன்று தானாகவே எங்களிடம் வந்து

சிக்கிக் கொண்டான், அத்திமலைத்தேவன். ததிபாண்டன் பானையில் ஒளித்து வைத்தது போன்று ஆதித்த கரிகாலன் அவனை மறைத்து வைத்திருக்கிறான். ஆதித்த கரிகாலனின் ஜாதகத்தில் மரண கண்டம் ஓடுகிறது.. அதிலிருந்து அவனைக் காப்பாற்றி, அவனை மன்னனாக அமர வைத்தால்தான், அத்திமலைத்தேவனை விடுவிக்கப் போகிறேன். எனவே, நான் ததிபாண்டன். ஆதித்த கரிகாலனை துரத்தி வரும் மரணம்தான் எனக்கு யசோதா.. ஆதித்த கரிகாலன் மன்னனாக அமர்வதில் தான் எனக்கு மோட்சம் பிறக்கும். அவனை மன்னனாக அமர்த்தும் பொறுப்பு அத்திமலைத்தேவனுக்கு உள்ளது. அவன் அதைச் செய்தால்தான் அவனுக்கு விடுதலை!"- மலையமான் கூறினார்.

அவரை கலவரத்துடன் நோக்கினான், பார்த்திபன். "அப்படி ஒருவேளை ஆதித்த கரிகாலனால் மன்னன் ஆக முடியாவிட்டால்?" - பார்த்திபன் அவரைச் சற்று காட்டமாகவே கேட்டான்.

"இப்படிப் பேசுவதற்கு என்னை மன்னித்துவிடு, பார்த்திபா! ஆதித்த கரிகாலனின் உயிரைக் காப்பாற்று வதற்கு எனக்கு வேறு வழி தெரியவில்லை. அவன் நல்லபடியாக உயிர் வாழ்ந்து, சோழ அரியணையில் மன்னனாக அமர்ந்து, அஸ்வமேதம் செய்யும்வரை, அத்தி மலையானுக்கு விடுதலை இல்லை. ததிபாண்டனிடம் கண்ணன் சிக்கியது போன்று, எங்களிடம் அத்திமலைத் தேவன் சிக்கியிருக்கிறான். ஆதித்த கரிகாலனைக் காப்பாற்றி மன்னனாக அமர்த்தி, பிறகு உனது அத்தி மலைத்தேவனை மீட்டுக் கொள்ள, உனக்குப் போடும் நிபந்தனை இது." - மலையமான் நிபந்தனை விதிக்க, உறைந்து போய் நின்றான்.

'இந்த ஒரு நிபந்தனையின் மூலம், மலையமான் எவ்வளவு மாங்காய்களை ஒரு கல்லினால் வீழ்த்துகிறார். ஆதித்த கரிகாலனின் முழு பாதுகாப்பும், பார்த்திப

னுடையது. இவனுடைய மனத்துக்கினியாளான கல்பலதாவை ஆதித்த கரிகாலனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க வேண்டும். இருவரையும், சோழ அரியணையில் அமர்த்த வேண்டும். எல்லாம் முடிந்த பிறகு, நடைப் பிணமாக இருக்கப் போகும் இவனுக்கு அத்திமலைத் தேவனின் சிலை கிட்டும். அதனை இவன் அத்தி மலையில் ஸ்தாபிக்க வேண்டும்.

சே! எதற்காக மன்னர் குலத்தினில் பிறந்தோம்? இப்படி ராஜ்யத்தையும் இழந்து, விருப்பமானவற்றை எல்லாம் இழந்து மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கா?' நொந்து போய் அறைக் கதவை திறந்து கொண்டு வெளியேற முற்பட்டவனுக்குத் திடீரென்று ஒரு பொறி தட்டியது. கதவை பற்றியபடி மலையமானைத் திரும்பி நோக்கினான்.

"திருக்கோவிலூராரே! ஆதித்தனின் தேகரீதியான குறைபாடுகள், அவனது ஜாதக ரீதியான பிரச்னைகள் அனைத்தும் யாருக்கும் தெரியாது அல்லவா?"- பார்த்திபன் கேட்டான்.

"இல்லை! மிகவும் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆதித்த கரிகாலனுடைய பெற்றோர், நான் மற்றும் பகிரண்ட காயகல்ப சித்தர் எங்கள் நான்கு பேருக்கு மட்டுமே தெரியும். இப்போது உனக்குத் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது!" - மலையமான் கூறினான்.

"வேறு யாருக்கும் தெரிய வேண்டாம், திருக் கோவிலூராரே! அவன் உறக்கத்தில் உலாவரும் போது அவனை எளிதாகக் கொல்வதற்கு வாய்ப்புகள் உள்ளன! எனவே, நாம் விவாதித்த எந்த விஷயங்களும், வெளியே போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள், உங்கள் வசம் உள்ள அத்திமலைத்தேவன் உள்பட!" - விரக்தியுடன் கூறினான், பார்த்திபன்.

மலையமான் சிரித்தார். "நமது சிகையை ஏன் நாமெல்லாம் குடுமியாக முடிகிறோம் தெரியுமா.. மனசாட்சியின் உச்சிக் கோபுரம்தான் மனிதனின் குடுமி. உனக்கு மிகவும் இன்றியமையாத அத்திவரதனின் சிலை ஆதித்தனிடம் இருப்பதை நான் யாரிடமும் தெரிவிக்கமாட்டேன். அதேபோல் நீயும், ஆதித்தன் உறக்கத்தில் உலாவரும் விஷயத்தையோ, அவன் கல்பலதாவை காதலிப்பதையோ யாரிடமும் தெரிவிக்கக் கூடாது. எனது குடுமி உனது கையில். உனது குடுமி எனது கையில்" என்றார் மலையமான்.

பதில் கூறாமல் அறையைவிட்டு நகர்ந்தான். தனக்குப் பின்பாக அறைக் கதவை மூடிக்கொண்டு வெளியேறினான்.

# 16. பல்லவ பொம்மலாட்டம்

**பொ**ன்னாழியில் மலையமானைச் சந்தித்துவிட்டு தனது புரவியை நோக்கி பார்த்திபன் நடந்தான். அவனது மனதில் பெரும்புயல் வீசிக் கொண்டிருந்தது.

'அத்திமலைத்தேவனே! உன்னை உன் இருப்பிடத்தில் சேர்ப்பதற்காக மகேந்திர பல்லவன் காலத்தில் இருந்து பல்லவர்களாகிய நாங்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். பல்லவம் அழிந்தாலும் பரவாயில்லை. உன்னை உனது இருப்பிடத்தில் சேர்க்க வேண்டும் என்றுதானே நானும் பாடுபடுகிறேன். இப்படி எனக்கு சோதனை மேல் சோதனைகளைத் தருகிறாய். நான் ஆட்சி செய்ய அரியணையைக் கேட்டேனா, அல்லது அதிகாரத்தைத்தான் நாடினேனா? உன்னைக் கைப்பற்றுவதற்காகத்தானே சோழர்களிடம் கைகட்டி ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன். எங்களிடம் வந்து சேராமல், சோழர்களிடம் சென்று சேர்ந்துவிட்டு, அவர்கள் மூலமாக எனக்கு இப்படி தொடர்ந்து இன்னல்களை தருகிறாயே? நான் உன்னிடம் என்ன கேட்டேன்? உனது ஆலயத்திற்குத் திரும்பி வா! என்றுதானே வேண்டுகோள் விடுத்தேன். இப்போது உன்னைப் பணயமாக வைத்து, நான் ஆதித்த கரிகாலனின் உயிருக்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்கிறார்களே. நான் நேசிக்கும் கல்பலதாவையும் ஆதித்த கரிகாலன் பறித்துக் கொள்வான் போல இருக்கிறதே! என்னை ஏன் அனைவரும் சித்ரவதை செய்கின்றனர். அஸ்வத்தாமா உருவாக்கிய குலத்திற்கு இப்படி ஒரு இழி நிலை தோன்ற வேண்டுமா?' - தனக்குள் குமுறியபடி குதிரையை செலுத்திக் கொண்டிருந்தான்.

ஒருகணம்தான்! எதுவுமே எனக்குப் பொருட்டல்ல! நடப்பது நடக்கட்டும் என்று எங்கேயாவது ஓடி விடலாமா? அத்திமலைத்தேவனாவது, கல்பலதாவாவது, ஆதித்த கரிகாலனாவது! என்று கூட நினைத்துவிட்டான்.

தன்னுடைய எதிர்காலம் இனி ஆதித்த கரிகாலனுடன் பிணைக்கப்பட்டுவிட்டது என்பதை ஜீரணிக்க முடியாமல், ராஜவீதியில் இருந்த தனது மாளிகையை நோக்கி விரைந்தான். அவனது மாளிகையின் வாயிலில் பரபரப்புடன் சிலர் குழுமி இருப்பதைத் தொலைவில் இருந்தே கவனித்துவிட்டான். தனது குதிரையின் விலாவில் லேசாக உதைக்க, அது விரைவாக போய் அவனது மாளிகையின் முன்பாக நின்றது. குதிரையி லிருந்து பாய்ந்து இறங்கியவனை அவனது பணியாள் ஒருவன் அவசரமாக நெருங்கினான்.

“இளவரசே! ராஜமாதா ஷ்யமந்தக பல்லவியார் உப்பரிகை படிகளில் தடுமாறி விழுந்து மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார். அவரது கபாலம் உடைந்து குருதி பெருகிக் கொண்டே இருக்கிறது. வைத்தியர்கள் அவரைக் காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கிறார்கள்!” என்றதும், திகைத்துப் போன பார்த்திபன், உள்ளே விரைந்தான்.

இதயம் கொந்தளித்துக் கொண்டிருக்கையில், அதனை மறப்பதற்கு வேறு ஒரு பெரிய துயரச் சம்பவம் நிகழ்ந்தால், அதன் வருத்தத்தில், பழைய துயரங்களை மறக்கலாம் என்பது போன்று, தனது மனதை ஏற்கெனவே அழுத்திக் கொண்டிருந்த பிரச்னைகளை ஓரம் ஒதுக்கிவிட்டு, நடந்தான்.

சமந்தக பல்லவியின் அறை வாயிலில், கலக்கத்துடன் அமர்ந்திருந்த கல்பலதாவை பார்த்தான். அவள் அழவில்லை என்றாலும் முகத்தில் கலக்கம் பரவியிருந்தது.

"என்ன நடந்தது, கல்பா?" - பார்த்திபன் கேட்டதும், கண்கள் பனிக்க, அவனைப் பார்த்தாள்.

"நான் நந்தவனத்தில் மலர் பறித்துக் கொண்டிருந்தேன். நான் உப்பரிகை நந்தவனத்தில் இருப்பதாக நினைத்துப் படிகளில் ஏறி இருக்கிறார். நான் கீழேதான் இருக்கிறேன் என்று குரல் கொடுத்தேன். அவசரமாகத் திரும்பியவர், நிலை தடுமாறி அப்படியே சரிந்து தலைகுப்புற விழுந்து விட்டார். தலையில் பெருத்த காயம். குருதி பெருகிக் கொண்டே இருந்தது. லலாடிகாதான் விரைந்து சென்று மருத்துவர்களைத் தருவித்தாள்." - கல்பலதாவின் கண்களில் முதன்முறையாக நீர் உருண்டோடியது.

அவளது கண்ணீர் அவனது மனதை என்னவோ செய்தது. "கவலைப்படாதே, கல்பா! உனது அம்மாவுக்கு ஒன்றும் ஆகாது. நல்லபடியாக எழுந்து நடமாடுவார்!" - அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே மருத்துவர் ஒருவர் வெளியே வந்தார்.

பார்த்திபன் அவரை நெருங்கி, அவரது கண்களினுள் நோக்கினான். அவரது பார்வையைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனுக்குப் புரிந்து போனது. ஷ்யமந்தகப் பல்லவி பிழைப்பது மிகவும் துர்லபம் என்பது தெரிய வர, பரிதாபத்துடன் கல்பலதாவை நோக்கினான்.

"அதிக இரத்தப் போக்கு நிகழ்ந்துவிட்டது. இப்போதைக்கு ஒன்றுமே கூற முடியாது. அவருடன் நிறையப் பேசுங்கள். அவருக்கு விருப்பமானதை எல்லாம் செய்யுங்கள். மனநிறைவு ஏற்பட்டால் உயிரும் பிழைக்கலாம். இல்லை நிம்மதியாகக் கண்மூடலாம். இப்போதைக்கு மனநிறைவுதான் அவருக்கு நல்ல சிகிச்சையாக இருக்கும்!" - தனது பணி அதோடு முடிந்துவிட்டது என்பது போல மருத்துவர் நழுவ, கல்பலதா அறைக் கதவை திறந்து கொண்டு உள்ளே விரைந்தாள். பார்த்திபனும், லலாடிகாவும் அவளை பின்தொடர்ந்தனர்.

உதிரப்போக்கை நிறுத்தும் பச்சிலை மூலிகை கலவையை ராஜமாதாவின் தலை முழுவதும் வைத்துத் துணியால் தலை கட்டப்பட்டிருந்தது. ஆனால், கண் களைத் திறந்து, வந்தவர்களை ஏறிட்டுப் பார்த்தபடிதான் கிடந்தாள்.

"கல்பலதா! உனக்கு ஒரு வழியை ஏற்படுத்தாமல், நான் புறப்பட்டுவிடுவேனோ?" - மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, புலம்பினாள், ஷ்யமந்தக பல்லவி.

"இப்போது ஏனம்மா அதைப் பற்றி நினைக்கிறாய்? நீ நல்லபடியாக நடமாடினால் போதும்!" - தனது குரல் உடையாத வண்ணம் கட்டுப்படுத்திக் கொண்டாள், கல்பலதா.

"இல்லை கல்பா! நான் எனது தாய் கங்காவதியின் மரணப்படுக்கையில் இதே தேறுதல் வார்த்தைகளைத் தான் கூறினேன். எனவே, என்னை நீ தேறுதல் படுத்தாதே. பார்த்திபன்.. எங்கே..? பார்த்திபனை கூப்பிடு!" - ஷ்யமந்தகப் பல்லவி பரிதவித்தாள்.

"அத்தை! இங்கேதான் இருக்கிறேன்!" - பார்த்திபன் முன் வந்து, ராஜமாதாவின் கையைப் பற்றினான்.

"பார்த்திபா! எனது மகளுக்கு யாருமே கிடையாது. அபராஜிதனின் வாரிசாக அவளும், நிருபதுங்கனின் வாரிசாக நீயும்தான் இருக்கிறீர்கள். வேறு வழியில்லை. உன்னிடம் ஒரு யாசகம் கேட்கிறேன். அதனை நீ செய்து முடிப்பாயா?" - ராஜமாதா கதறினாள்.

"சொல்லுங்கள் அத்தை! செய்து முடிக்கிறேன்!"- பார்த்திபன் கூறினான்.

"பார்த்திபா! பல நூற்றாண்டுகளாக நமது பல்லவத்தில் ஒரு நம்பிக்கை உண்டு. பல்லவத்திற்கும் பெண் குழந்தைகளுக்கும் ராசி இல்லை என்பார்கள். பல்லவத்தின் பெண்ணாகப் பிறந்த யாருமே சுகப்பட வில்லை. சிம்மவர்மர் மகள் நவரத்ன பல்லவி, ராஜவர்மர்

மகள் ஜெயஸ்ரீ, எனது தாய் கங்காவதி என்று தற்கொலை செய்து கொண்டவர்களும், துன்பப்பட்டவர்களும் தான் உண்டு. என்னுடைய துரதிர்ஷ்டம், நானும் பெண்ணையே பெற்றிருக்கிறேன். கல்பலதாவின் எதிர்காலத்தை நினைத்துக் கவலையாக இருக்கிறது. நானும் இறந்துவிட்டால் அவள் கதி?" - சற்றே சுவாசத்தை வாங்கினாள் ராஜமாதா.

அந்த இடைவெளியில் அவளுக்கு ஆறுதல் கூறினான், பார்த்திபன்.

"கவலைப்படாதே அத்தை! உனது மகளை ஒரு நல்ல இடத்தில் மணமுடித்து வைக்கிறேன். ஒரு பெரிய தேசத்தின் மகாராணியாக அவள் திகழ்வாள்! நான் உத்தரவாதம் அளிக்கிறேன்!" - பார்த்திபன் கூறினான்.

மலையமான் தக்க தருணத்தில்தான் ஆதித்த கரிகாலனுக்குக் கல்பலதாவை பெண் கேட்டிருக்கிறார். மனதினுள் நினைத்தான், பார்த்திபன்.

"தேசமும் வேண்டாம், அரசி பதவியும் வேண்டாம், பார்த்திபா! என் மகள் கல்பா நீண்ட ஆயுளுடன், கண் நிறைந்த கணவனுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தால் போதும். எனவேதான் உன்னிடம் ஒரு யாசகத்தைக் கேட்கிறேன்!" - ராஜமாதா கூற, கல்பா தனது தாயை துக்கத்துடன் வெறித்தாள்.

"அத்தை! யாசகம் என்று பெரிய வார்த்தை எல்லாம் கூறாதீர்கள். கட்டளை இடுங்கள். அதனைச் செய்து முடிக்கிறேன்."

"எனது மகள் அபராஜிதனின் வாரிசு மட்டுமல்ல, அரிஞ்சய சோழனின் வாரிசும் கூட. தகவல் தெரிந்தால், சோழர்களால் எனது மகளின் உயிருக்கு ஆபத்து உண்டாகலாம். மேலும், அவளது திருமணத்தை நான் பார்த்துவிட்டு மரணம் அடைய வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனது உயிரைக்

கையில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கேட்கிறேன். நீயே எனது மகளை மணந்து கொள். இன்றே. இப்போதே. அதைக் கண்குளிரப் பார்த்துவிட்டு நான் இறக்கிறேன்!"- ராஜமாதா கூற, உறைந்து போனான், பார்த்திபன்.

அன்று மாலைதான் மலையமான் கல்பாவை ஆதித்த கரிகாலனுக்குப் பெண் கேட்டிருக்கிறார். சூரியன் அஸ்தமனத்திற்குப் பிறகு கதையே மாறுகிறதே.

"அத்தை! இன்று மாலைதான், திருக்கோவிலூர் மலையமான், ஆதித்த கரிகாலனுக்கு நமது கல்பலதாவை பெண் கேட்டார்! நானும் உங்களைக் கேட்டுவிட்டுச் சொல்கிறேன் என்று கூறியிருக்கிறேன்."

ஆத்திரத்துடன் பார்த்திபனை நோக்கிப் பேச முற்பட்டாள், சமந்தக பல்லவி.

"பார்த்திபா! சோழர்களின் சங்காத்தமே வேண்டாம். உறவாடி கெடுத்தவர்கள் அவர்கள். எனது பெண்ணிற்கும் நாளை கெடுதல் செய்வார்கள். உன்னைப் பார்த்த அன்றே, நான் உன்னை எனது மருமகனாகத் தீர்மானித்து விட்டேன். எனது மகளும் உன்னைக் கணவனாக வரித்துவிட்டாள். எங்கள் மனதை மாற்ற முயலாதே. உடனே நீ எனது மகளைத் திருமணம் செய்துகொள். உனது மாமியாக நான் கண்ணை மூடுவதைத்தான் விரும்புகிறேன். உனது அத்தையாக அல்ல!" - ஷ்யமந்தகப் பல்லவியின் குரலில் தீவிரம் வெளிப்பட, திகைத்துப் போய் கல்பலதாவை நோக்கினான், பார்த்திபன்.

"என்ன பார்க்கிறீர்கள்! அம்மாவின் விருப்பத்தை நிறைவேற்றுங்கள். உடனடியாகத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்!" - கல்பா கூற, பார்த்திபன் தயங்கினான்.

"கல்பலதா! எதற்கும் ஆதித்த கரிகாலனிடம் ஒருமுறை.." என்றவனை இடைமறித்தாள், கல்பலதா.

"ஆதித்த கரிகாலனை நான் வெறுக்கிறேன். அவனை தனிமையில் சந்தித்தால், அவனை கொலை செய்து விட்டு நானும் என்னை மாய்த்துக் கொள்வேன். நான் நன்றாக, மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். நீங்கள் என்னை மணம் செய்து கொண்டால், எனது தாயும் நிம்மதியாகக் கண் மூடுவார். நானும் நிம்மதியாக வாழ்வேன். நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ள மறுத்தால், நானும் என் தாயுடன் புறப்பட்டுச் செல்கிறேன்!" - கல்பலதாவின் குரலில் உறுதி தொனித்தது.

பார்த்திபன் தனது விதியை நொந்து கொண்டான். இவனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வையும் மற்றவர்கள்தான் நிர்ப்பந்தம் செய்து தீர்மானிக்கிறார்கள். இவனால் எந்த ஒரு முடிவையும் தன்னிச்சையாக எடுக்க முடியவில்லை. மற்றவர்களின் கட்டாயத்திற்குத்தானே இவன் கீழ்ப்படிய வேண்டி இருக்கிறது.

மரணப்படுக்கையில் ஒரு ஜீவன் யாசகமாக ஒரு வேண்டுகோளை வைக்கிறது. இவனால் அதனை எப்படி மறுக்க முடியும்? இவன் நேசிக்கும் கல்பலதாவை மணந்து கொள் என்றுதானே கேட்கிறாள். கரும்பு தின்பதற்குக் கூலி தேவையா என்ன? ஆனால் அத்திமலையானின் சிலை ஆதித்த கரிகாலனின் வசம் இருக்கும் நிலையில், அவன் விரும்பும் கல்பலதாவை இவன் மணந்து கொண்டால், அவனது நட்பை இழப்பதோடு, அத்திமலையானின் சிலையையும் அல்லவா இழப்பான்? ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறதே! என்ன செய்வது?

"இன்னும் என்ன யோசனை செய்கிறீர்கள், பார்த்திபரே? எனது தாய் மரண வேதனையில் துடிப்பது உங்கள் கண்களில் படவில்லையா? யோசிப்பதால் பயன் ஒன்றும் இல்லை. ஒன்று நாம் இருவரும் மணமாலை சூட வேண்டும். இல்லையேல் நானும் எனது தாயும்

பிணமாலை சூடிக்கொள்கிறோம்!" - கல்பலதா விரக்தியுடன் கூற, பார்த்திபன் செய்வதறியாது திகைத்துப் போய் நின்றான்.

அதுவரை மௌனமாக இருந்த லலாடிகா, முதன்முறையாக வாய் திறந்தாள்.

"இளவரசே! உங்கள் தந்தை தருமவர்மர் உங்களிடம் வைத்த கோரிக்கையை மறந்துவிட்டீர்களா? தாங்கள் கல்பலதா தேவியை மணந்து கொள்ள வேண்டும் என்று உங்கள் கைகளைப் பிடித்து இறைஞ்சினாரே. இந்தத் திருமணத்தைச் செய்து கொள்வதன் மூலம் பலரது விருப்பங்களை நிறை வேற்றலாம். அத்திமலைத்தேவனும் மீளுவான். பல்லவமும் மீளும். உங்கள் வாழ்வும் சிறக்கும். யோசிக்க வேண்டாம். இந்தத் திருமணத்திற்கு உடனே ஒப்புக்கொள்ளுங்கள்." - லலாடிகா கூற, தனது தந்தை தருமவர்மனின் கோரிக்கையைப் பற்றி அவள் குறிப்பிட்டதும் துலாக்கோல் முள்ளினை போன்று தடுமாறிக் கொண்டிருந்த பார்த்திபனது இதயம் நிலைபெற்றது.

"லலாடிகா! நீ சென்று உடனடியாக நமது மாளிகை அதிகாரி விஜயமேதாபதியை அழைத்து வா. அத்தை! இன்றே கல்பலதாவை மணந்து கொள்கிறேன். இன்று மாலையே நீங்கள் எனது மாமியார் ஆகக்கடவீர்" என்று பார்த்திபன் கூற, ஷ்யமந்தகப் பல்லவியின் முகம் மலர்ந்தது. விரைந்து வந்த விஜயமேதாபதியிடம் உடனடியாகத் திருமணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்யச் சொல்ல, அவர் பணியாட்களை அனுப்பித் திருமணத்திற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்யத் துவங்கினார்.

விடியலில் பொன்னாழியினுள் பிரவேசித்த போது அன்று மதியமே தாங்கள் இருவரும் புது வாழ்க்கையில் பிரவேசிக்கப் போகிறோம் என்பதைப் பார்த்திபனும், கல்பலதாவும் அறிந்திருக்கவில்லை. மணப்பெண்

சிங்காரமெல்லாம் தேவையில்லை என்ற கல்பாவிடம், லலாடிகா மறுத்துப் பேசினாள்.

"மரணப்படுக்கையில் கிடக்கும் உனது தாய் உன்னை மணக்கோலத்தில் காண விழைகிறார். அவருக்கு நீ அந்த மகிழ்ச்சியைத் தர வேண்டும். எனவே நீ உன்னை அலங்கரித்துக் கொள்ளத்தான் வேண்டும்!" என்று கூறி அவளை அவசரமாகத் திருமணத்திற்குத் தயார் செய்தாள்.

பார்த்திபனும் நீராடிவிட்டு, பட்டாடை அணிந்து, விரைவாகத் தயாராகித் தனது அறையிலிருந்து வந்தான். அதற்குள் விஜயமேதாபதி திருமணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட, ஷ்யமந்தகப் பல்லவி படுத்திருந்த அறையிலேயே பார்த்திபன், கல்பலதாவின் கழுத்தினில் மங்கல நாணைச் சூட்டினான்.

ஒரே நாளில் பொம்மலாட்டம் நடப்பது போன்று எத்தனை நிகழ்வுகள். பொன்னாழி புகுதல் வைபவத்தில் துவங்கி, மலையமான் கல்பலதாவை பெண் கேட்க, தனக்கும், அவளுக்கும் இடையே ஒன்றும் இல்லை என்று இவன் மலையமானிடம், கூற, ஆனால் அன்று மாலையே கல்பலதாவை தனது மனைவியாக ஏற்றுக் கொண்டிருந்தான்.

வரும்போது அத்திமலையானைச் சினந்ததால் அவன் மேலும் இவனைச் சோதிக்கிறான் போலும். திருமணம் முடிந்ததும் தனிமையில் இருந்தபோது கல்பாவிடம் மனம்விட்டுப் பேசினான், பார்த்திபன்.

"கல்பலதா! இன்றைய நிகழ்வுகளுக்குப் பிறகு எனக்கு ஒன்று தெளிவாகத் தெரிய வருகிறது. நமது பல்லவத்திற்கு ஏன் இந்தக் கதி என்று பலமுறை சிந்தித்திருக்கிறேன். அனைத்துமே நமது விருப்பப்படியோ, நமது திட்டங்களின்படியோ நடப்பதில்லை. அனைத்தையும் அத்திமலைத்தேவன்தான் நடத்திச் செல்கிறான். இன்று காலை பொன்னாழி பிரவேசத்தின்

போது நாம் இன்று தம்பதிகளாவோம் என்று கனவிலும் நினைக்கவில்லை. மலையமான் இன்று ஆதித்த கரிகாலனுக்காக உன்னைப் பெண் கேட்டார். நானும் முயன்று பார்க்கிறேன் என்று கூறிவிட்டேன். ஆனால், இன்று உனது தாய்க்கு விபத்து நடந்து, உடனேயே நமது திருமணத்தை நடத்தி வைத்துவிட்டார். நமது திருமணத்தை மலையமானும், ஆதித்த கரிகாலனும் எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் எப்படி எடுத்துக் கொண்டால் அதைப் பற்றி நமக்கென்ன என்று நீ கேட்கலாம். என்னால் அப்படி கேட்க முடியாது. அத்திமலைத்தேவன் சோழர்களிடம் பணயமாக இருக்கிறான். ஆதித்த கரிகாலனின் உயிருக்குக் கண்டங்கள் இருப்பதால் அவனைப் பத்திரமாகப் பாதுகாத்து அவனைச் சோழ மன்னனாக அமரவைத்து, அவன் அஸ்வமேத யாகம் செய்த பிறகுதான் நமக்கு அத்திமலைத்தேவன் கிடைப்பான். அவனை எங்கே பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதும் தெரியாது. எனவே அவனது பாதுகாப்பு எனது கையில். அத்திமலைத் தேவனுக்காக நான் அவனை பாதுகாத்து தான் தீர வேண்டும். அடுத்தபடியாக, ஆதித்த கரிகாலன் விரும்புவதோ உன்னை!... உன்னை நான் மணந்து கொண்டு விட்டேன் என்பதை அறிந்தால், அந்தக் கோபத்தில் அத்திமலைத்தேவன் சிலையை நமக்குக் கொடுக்க அவன் மறுக்கலாம். நாம் இத்தனை காலம் பட்ட சிரமங்கள் எல்லாமே வீணாகிவிடும். எனவே, சிறிது காலத்திற்கு நமக்கு நடந்த திருமணம் இரகசிய மாகவே இருக்கட்டும். பொன்னாழியில் யாருக்கும் தெரிய வேண்டாம்" என்றதும் தலையசைத்தாள், கல்பா.

"உண்மை! நமது வாழ்க்கையில்தான் எவ்வளவு வினோதத் திருப்பங்கள்! மீண்டும் பல்லவத்தை மலரச் செய்ய வேண்டும் என்றால், நமக்கு அத்திமலைத்தேவன் தேவை. அத்திமலைத்தேவன் கிடைக்க வேண்டும் என்றால், நீங்கள் ஆதித்த கரிகாலனை பாதுகாத்து அவனைச் சோழ மன்னனாக அமர வைக்க வேண்டும்.

அவனைச் சோழ மன்னனாக அமர வைக்க வேண்டும் என்றால், அவனது அரசியாக நான் இருக்க வேண்டும் என்று மலையமான் விரும்புகிறார். நானோ இன்று உங்கள் மனைவி. சாதாரண மனைவி அல்ல. நீங்கள் பாதுகாக்க விரும்பும் ஆதித்த கரிகாலனை கொல்வேன் என்று சபதம் பூண்டிருக்கும் மனைவி. உண்மை! நாமெல்லாம் பல்லவத்தின் பொம்மைகள்தான். அத்திமலைத்தேவன்தான் நம்மை ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறான்."

"ஆதித்த கரிகாலனின் நட்பு இருக்கும்வரைதான், அத்திமலைத்தேவன் பத்திரமாக இருப்பான் என்று எனது உள்மனது எச்சரிக்கிறது, கல்பா. எனவே, அவனது நட்பை இழக்காமல், அவனுக்கு விருப்பம் இல்லாத செயல்களில் ஈடுபடாமல், அவனை நல்ல மனநிலையில் வைத்திருக்க வேண்டும். மூர்க்கன்! பிடிவாதக்காரன்! சினம் கொண்டால் என்ன செய்வான் என்பது தெரியாது. எனவேதான், நமது திருமண விஷயத்தைச் சிறிது காலம் மறைப்பது நல்லது என்று தோன்றுகிறது!"- பார்த்திபன் கூறினான்.

"மறைப்போம், பல்லவ அரசே! ஆனால் அதற்காக நாம் கணவன் - மனைவியாக வாழக்கூடாதா என்ன? இலை மறைவு காய் மறைவாகக் குடும்பம் நடத்துவோம். உங்கள் ஆதித்த கரிகாலன் மன்னனாவதற்கு என்று நாம் காத்திருந்தால், நான் செம்பியன்மாதேவி போன்று திருநீறு பூசி ஆலயம் ஆலயமாகச் சென்று பதிகங்களைப் பாட வேண்டியதுதான்!" - கல்பலதா கூற, பார்த்திபன் சிரித்தான்.

"கல்பா!" - குரல் கேட்க, இருவரும் திரும்பி நோக்கினர்.

"தங்களது திருமணத்தை நடத்தி முடித்த மனநிறைவில், ஷ்யமந்தகப் பல்லவியார் இறைவனின் நிழலில் இளைப்பாறுவதற்கு புறப்பட்டுவிட்டார்!" என்று லலாடிகா கூறியவுடன், புதுமணத் தம்பதியர் அதிர்வுடன் அவளது அறையை நோக்கிச் சென்றனர்.

## 17. பிணவறையில் மணமாலைகள்

அத்தியூர் ஆலய தரிசனம் முடிந்து சோழ அரச குடும்பத்தாரும், பழுவேட்டரையர்கள் மற்றும் அநிருத்தர் ஆகியோர் ஸ்ரீவரம் என்கிற மாலிருஞ்சோலை, வேங்கடவன் ஆலயம் மற்றும் முக்கூடல் சென்றுவிட்டுத் திரும்புகையில் மாலை படர்ந்துவிட்டது. அஸ்தமன சூரியனின் கிரணங்கள் பொன்னாழி மாளிகையின் உப்பரிகை மற்றும் அதன் உச்சியில் வேயப்பட்டிருந்த ஸ்வர்ண ஓடுகளைத் தகதகக்கச் செய்ய, அதன் நுழைவாயிலிலும், நந்தவனத்தில் ஆங்காங்கே நின்றிருந்த தீபஸ்தம்பங்களின் மீது ஒளிர்ந்து கொண்டிருந்த தீபக்கப்பரைகளும், பொன்னாழி மாளிகையை ஜொலிக்கச் செய்தன.

முருக்கத்திப் பாதையில் பந்தலமைத்திருந்த மரங்களில் இருந்து தங்களது கூடுகளுக்குத் திரும்பும் பறவைகள் எழுப்பிய இனிய ஒலி, அந்த மாலை வேளைக்கு ரம்மியத்தைக் கூட்ட, அழகிய நீரூற்றுகள் எழுப்பிய ஓசை, மனதிற்கு இதத்தை அளித்தது. பொன்னாழியை அந்த மாலை வேளையில் முதன்முறையாகப் பார்த்த சோழ பரிவாரங்கள் சொக்கிப் போயின.

"ஆஹா..! எனது மகன் ரசனையைப் பார்த்தீர்களா, பழுவேட்டரையரே! ஸ்வர்க பூமியை பூலோகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறான்!"-பெருமிதத்துடன் கூறினார், சுந்தர சோழர்.

வானவன்மாதேவி தனது பங்கிற்கு மகனை பாராட்டினாள். "திருமகள் வாசம் செய்யும் மாளிகை என்றால் அது இதுதான். எவ்வளவு அழகாக இருக்கிறது? எனது மகனுக்கு என்ன குறை? அவனைக் கவனித்துக்

கொள்ள ஒரு மனைவி வந்துவிட்டால் அதன் பிறகு நான் நிம்மதியாக இருப்பேன்!" - வானவன்மாதேவி கூறினாள்.

அநிருத்தர் சுந்தர சோழரைப் பார்த்து சிரித்தார். "அரசே! நீங்கள் அனுமதி தந்தால் இப்போதே, எனது தலைமை அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு, இந்தப் பொன்னாழியில் அமர்ந்து, ஆதித்த கரிகாலனின் கணக்கு வழக்குகளைப் பதிவு செய்யும் கணக்கனாக இந்தப் பொன்னாழியிலேயே தங்கிவிடுகிறேன். இங்கே தங்குவதற்கு பாக்கியம் செய்திருக்க வேண்டும்."- அநிருத்தர் கூறியதும், பழுவேட்டரையர் பொய்க் கோபத்துடன் அவரைப் பார்த்தார்.

"அநிருத்தரே! தலைமை அமைச்சர் நீங்கள் கணக்கெழுத அமர்ந்தால், தனாதிகாரியான நான் என்ன செய்வதாம்? நான் வேண்டுமானால் பொன்னாழியின் பாதுகாப்பு அதிகாரியாக இருக்கிறேன்!"-பழு வேட்டரையர் கூறினார்.

"நீங்கள் இருவரும் பொன்னாழிக்கு வந்துவிட்ட பிறகு, எனக்குத் தஞ்சையில் என்ன வேலை? நானும், வானவன் மாதேவியும் கூட, பொன்னாழிக்கு வந்துவிடுகிறோம். இந்த ரம்யமான சூழ்நிலை எனது உடல்நிலைக்கு நல்லதுதான்." - சுந்தரர் கூற, குந்தவைக்கு அந்தப் பேச்சுக்கள் எரிச்சலைத் தந்திருக்க வேண்டும்.

"நன்றாக இருக்கிறது.. பிறகு தஞ்சையின் கதி என்ன? பொன்னாசையில் மண்ணாசையை இழந்துவிட்டீர்களா என்ன?"-குந்தவை குதர்க்கமாகக் கேட்க, அந்த நகைச்சுவை பரிமாற்றங்கள் சட்டென்று நின்றன.

ஆதித்த கரிகாலன் சடாரென்று குந்தவையின் பக்கமாகத் திரும்பி அவளை உறுத்து நோக்கினான். "அதனால் என்ன, குந்தவை! எல்லாம் தெரிந்த, சோழ நாட்டிலேயே மிகவும் திறமைசாலியான நீ தஞ்சையில்

இருக்கிறாயே. தந்தையின் அரசர் பதவி, தாயின் அர்சியார் பதவி, அநிருத்தரின் தலைமை அமைச்சர் பதவி மற்றும் பழுவேட்டரையரின் தனாதிகாரி பதவி என்று அனைத்து பதவிகளையும் நீயே நிர்வகித்து ராஜதந்திரியாகக் கோலோச்சமாட்டாயா என்ன? இந்த பொன்னாழியை ஒன்றுமில்லாமல் செய்துவிடும், நீ எழுப்பும் மண்ணாழி." - ஆதித்த கரிகாலன் நகைச் சுவையாகக் கூறுவது போன்று தோன்றினாலும், அவனது சொற்களில் பிரதிபலித்த அந்தக் காட்டம் அனைவரையுமே துணுக்குறச் செய்தது..

குந்தவையின் முகம் சிறுத்தது. அவனுக்குத் தக்க பதிலாக என்ன கூறலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கையில், நல்லவேளையாக மலையமான் வாயிலுக்கு வந்து அவர்களை வரவேற்றார்.

"ஆலய தரிசனங்கள் எல்லாம் நன்கு ஆனதா? நமது சோழ நாட்டு ஆலயங்களைப் போன்று அல்லாமல், தொண்டை நாட்டு ஆலயங்கள் மிகவும் பிரம்மாண்ட மாக இருப்பதைக் கவனித்தீர்களா?" - மலையமான் கேட்டார்.

"நமது நாட்டிலும் பிரம்மாண்டமான ஆலயங்கள் உள்ளன. ஆனால் நமது அரண்மனைகளின் பிரம் மாண்டத்தில் அவை சிறுத்துவிடுகின்றன, இல்லையா குந்தவை?" - பழுவேட்டரையர் கேட்க, அவர் தன்னை கேலி செய்கிறாரோ என்கிற ஐயம் எழுந்தது குந்தவைக்கு.

"ஆம் பழுவூர் அரசரே! தொண்டை நாட்டில் ஆலயங்கள் பிரம்மாண்டமாக இருக்கும். அரசர்களும், அதிகாரிகளும் அடக்கமாக இருப்பார்கள். நமது நாட்டில் ஆலயங்கள் அடக்கமாக இருக்கும். அதிகாரிகள் தான் பிரும்மாண்டத்தைக் கடந்தது போன்று ஆர்ப்பாட்டம் செய்வார்கள்!" - குந்தவை கூற, சுந்தர சோழர் தர்மசங்கடத்துடன் பழுவேட்டரையரை பார்த்தார்.

ஆதித்த கரிகாலன் தனது பாட்டன் மலையமானை நோக்கி, "பார்த்திபன் எங்கே?" என்று கேட்டான்.

"அவனது உறவினள் கல்பலதா என்கிற பெண்ணின் தாய் ஷ்யமந்தகப் பல்லவி, உப்பரிகைப் படிகளில் தவறி விழுந்து, காலமாகிவிட்டாளாம். அதனால்தான் பிற்பகலில் சென்ற அவன் இன்னும் வரவில்லை போலும்!" - மலையமான் கூற, திடுக்கிட்ட ஆதித்த கரிகாலன் தனது புரவியை நோக்கி நடந்தான்.

"தந்தையே! நீங்கள் அனைவரும் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் விரைவில் வந்துவிடுகிறேன்!" என்றபடி தனது புரவியில் ஏறி, பார்த்திபனின் மாளிகைக்கு விரைந்தான்.

குதிரையில் விரைந்து கொண்டிருந்த ஆதித்த கரிகாலனையே வெறுப்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள், குந்தவை. அவளது அந்தப் பார்வை, சற்று அப்பால் நின்று கொண்டிருந்த தெட்டக்கனிக்கே அச்சத்தை உண்டு பண்ணியது.

பார்த்திபனின் மாளிகையின் முன்பு தனது குதிரையை நிறுத்திய ஆதித்த கரிகாலன், உள்ளே விரைந்த போது, மாளிகையே அமைதியாக இருந்தது. லலாடிகாதான் ஆதித்த கரிகாலனை பணிவுடன் வணங்கிவிட்டு, உப்பரிகையில் இருந்த பார்த்திபனை அழைக்க முற்பட்டாள்.

"கவலைப்படாதே! நானே அவனது அறைக்குச் செல்கிறேன்!" என்றபடி ஆதித்த கரிகாலன் உப்பரிகைப் படிகளில் ஏறத்துவங்கினான்.

லலாடிகா கவலையுடன் படிகளில் ஏறும் அவனை நோக்கினாள். 'மேலே தனி அறையில் புதுமணத் தம்பதிகள் ஏகாந்தத்தில் இருக்கின்றனர். மரணத்தின் சாயை மாளிகையில் படிந்திருக்க, அவர்கள் சல்லாபிக்கமாட்டார்கள் என்றாலும், ஆறுதலைத் தேடும்

வகையிலாவது கல்பா பார்த்திபனை நெருங்கி யிருக்கலாம். அதனை ஆதித்த கரிகாலன் கண்டு விட்டால்..? ஆதித்த கரிகாலனை எப்படி தடுப்பது' என்று குழம்பிய லலாடிகா ஒரு யுக்தியை கடைபிடித்தாள்.

"சோழ இளவரசே!" என்று குரலைப் பெரிதாக்கி அழைத்தாள். நிச்சயம் அறையில் இருக்கும் தம்பதிகளுக்கு அவளது குரல் கேட்டிருக்கும்.

என்ன என்பது போன்று வியப்புடன் படிகளில் நின்று லலாடிகாவை வியப்புடன் நோக்கினான்.

"தங்களுக்குப் பால் கொண்டு வரலாமா?" - லலாடிகா கேட்க, 'இதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் அழைத்தாய்' என்பது போன்று அவளை நோக்கினான், ஆதித்த கரிகாலன்.

"அவசியமில்லை!" என்று அலட்சியமாகக் கூறினான், ஆதித்தன்.

"அதற்கில்லை இளவரசே! காலை முதல் கல்பலதா தேவியார் ஒன்றுமே அருந்தவில்லை. தங்களுக்குப் பால் கொண்டு வரும் போது, அவருக்கும் சேர்த்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் இருந்தால், அவரை பாலை அருந்த வைக்கலாம்!" - சாதுர்யத்துடன் பேச, ஆதித்தன் அவளை வியப்புடன் நோக்கினான்.

தனது மனதை கவர்ந்தவளைப் பால் அருந்த வைக்க வேண்டும் என்கிற அக்கறை தோன்ற, லலாடிகாவை நோக்கித் தலையசைத்தான். "கொண்டு வா! நான் அவளை பாலருந்த வைக்கிறேன்" என்றபடி மிகுதிப் படிகளில் ஏறினான்.

லலாடிகாவின் திட்டம் நன்றாகவே பலிதம் ஆனது. தனது தாயின் மரணச் செய்தியை ஜீரணிக்க இயலாமல் கதறி அழுத கல்பலதா தன், தாயின் உடலைப் பார்த்துக் கொண்டே இருந்தால் அவளது துக்கம் அதிகமாகிக்

கொண்டே போகும் என்கிற எண்ணத்தில், பார்த்திபன் அவளை வேறு அறைக்கு அழைத்துச் சென்றிருந்தான். அவனது பரந்த மார்பில் அடைக்கலமாகி, கல்பா அழுது கொண்டிருக்க, அவளது இடையைத் தனது இடக் கரத்தால் அணைத்து, வலது கரத்தினால் அவளது சிகையை வருடிக் கொண்டிருந்த சமயத்தில்தான் ஆதித்த கரிகாலன் படிகளில் ஏறிக் கொண்டிருந்தான்.

படிகளில் ஆதித்தனின் காலணி எழுப்பும் ஒலியும், 'சோழ இளவரசே' என்ற லலாடிகாவின் கூப்பாடும் வருவது யார் என்பதை அவர்களுக்கு உணர்த்த, சட்டென்று அவர்கள் விலகிக் கொண்டார்கள். அங்கிருந்த நாற்காலியில் ஓடிச்சென்று கல்பா அமர்ந்து கொள்ள தனது மஞ்சத்தில் சரிந்து கொண்டான், பார்த்திபன்.

ஆதித்த கரிகாலன் அந்த அறையில் நுழைந்த போது, கல்பலதாதான் பேசிக் கொண்டிருந்தாள்.

"பார்த்திபரே! எனது தாயும் இறந்துவிட்டார். இவ்வளவு நாட்கள் எங்களுக்கு அடைக்கலம் கொடுத்ததற்கு நன்றி. இனியும் நான் தங்களுக்கு பாரமாக இருக்க விரும்பவில்லை. எனது தாயின் இறுதிச் சடங்குகள் முடிந்ததும், நான் எனது வழியே செல்கிறேன். நான் இனியும் உங்கள் மாளிகையில் தங்குவது நன்றாக இருக்காது. ஊர் தவறாகப் பேசக்கூடும்!" - மிக அழகாகச் சொற்களைக் கோர்த்து கல்பா பேச, ஓரக்கண்ணால், ஆதித்தனின் முகத்தை அளந்தான், பார்த்திபன்.

ஆதித்தனின் கண்கள் கல்பாவையே வெறித்துக் கொண்டிருந்தன. அவளது பேச்சு அவனது இதயத்தை உருக்கி இருக்க வேண்டும். அவளது பேச்சுக்கு ஏற்ப அவனது முகபாவத்தில் ஏற்ற இறக்கங்கள் தோன்றின. கண்களில் கருணையுடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“பார்த்திபா! உனது அத்தை ஷ்யமந்தக தேவியார் காலமாகிவிட்டதாக எனது பாட்டன் கூறினார். உடனே பதைபதைத்துப் போய் இங்கு வந்தேன்.” - ஆதித்த கரிகாலன் கூற, அப்போதுதான் அவனைக் கவனிப்பது போன்று இருவரும் அவசரமாக எழுந்து நின்றனர்.

“ஆம் நண்பா! திடீரென்று நிகழ்ந்த விபத்து! உனக்குத் தெரிவிக்க முடியவில்லை. நீயும் உனது குடும்பத்தாருடன் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பாய் என்று கல்பலதாதான் உன்னிடம் தெரிவிக்க வேண்டாம் என்று கூறினாள்!” - பார்த்திபன் கூற, மீண்டும் கல்பாவின் பக்கமாகத் தனது பார்வையைத் திருப்பினான், ஆதித்தன்.

‘எனது தாய் இறந்ததற்கு உனக்கேன் பதைபதைப்பு, அரிஞ்சயனின் பெயரனே!’ - மனதினுள் எரிச்சலுடனும், அருவருப்புடனும் எண்ணிய கல்பா, அவன் மீண்டும் தனது பக்கமாகப் பார்வையைத் திருப்புவதைக் கண்டதும், சேலைத் தலைப்பினால் கண்களைத் துடைத்துக் கொள்வது போன்று பாவனை செய்தாள்.

சென்றமுறை ஆதித்த கரிகாலனைச் சந்தித்த போது கூட இவ்வளவு அருவருப்பு தோன்றவில்லை. ஆனால், பார்த்திபனின் மனையாளாக அவன் முன் நின்ற போது, அவன் தன்னை வெறித்து நோக்குவது அவளுக்குக் கேவலமாகத் தோன்றியது. பார்த்திபன் சூடியிருந்த மங்கல நாணை மறைப்பதற்காக, போர்த்தியிருந்த சால்வையை வீசி எறிந்து, ‘என்னை அப்படிப் பார்க்காதே! இதோ பார்! பார்த்திபன் எனக்கு அணிவித்திருக்கும் மங்கல நாண்!’ என்று அதனை எடுத்துக்காட்டத் தோன்றிய துடிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

“கல்பலதா! காலையில் இருந்தே ஒன்றும் அருந்தவில்லையாமே. உனது தோழிப்பெண் பாலைக் கொண்டு வருவாள். நீ அதனை அருந்த வேண்டும்!” உரிமையுடன் சொல்ல, கல்பா கோபத்துடன் பார்த்திபனை வெறித்தாள்.

'எனக்காக அவன் பேச்சைப் பொறுத்துக் கொள்!' என்பது போன்று அவளை இறைஞ்சலுடன் நோக்கிய பார்த்திபன், ஆதித்த கரிகாலனின் தோளின் மீது கைபோட்டான்.

"வா ஆதித்தா! ஷ்யமந்தகத் தேவியாருக்கு அஞ்சலி செய்துவிட்டு வரலாம்" என்றபடி கீழே இருந்த ஷ்யமந்தகப் பல்லவியாரின் அறைக்கு அவனை அழைத்துச் சென்றான்.

அவர்கள் அறையைவிட்டு வெளியேறியதும், தனது கையால் ஓங்கி நெற்றியில் அடித்துக் கொண்டு, கல்பா எரிச்சலுடன் நாற்காலியில் சரிந்தாள்.

"கொலை செய்ய நினைத்தவன் கொஞ்சிப் பேசுகிறான். அதைக் கேட்டுக் கொண்டு பேசாமல் இருக்க வேண்டி யிருக்கிறதே! இதென்ன வேதனை?" என்று முணுமுணுத்தபடி அமர்ந்திருக்க, சரியாக உள்ளே தட்டில் பால் குவளைகளுடன் வந்தாள், லலாடிகா.

"எங்கே அவர்கள்? - லலாடிகா வினவினாள்.

"பல்லிளிக்கும் பல்லவமும், சோழ ப்ரம்மஹத்தியும் தோளோடு தோள் உரசியபடி மாமியாருக்கு மரியாதை செய்யச் சென்றுள்ளது. ஒன்றுக்கு உண்மையான மாமியார். மற்றொன்றுக்கு கற்பனை உலக மாமியார்."- கல்பா வெறுப்புடன் கூற, பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள், லலாடிகா.

"இறந்தது உனது தாய்! மரண வீட்டில் துக்கச் சூழ்நிலையை மறந்து நான் சிரித்தால் அதற்கு நீதான் பொறுப்பு!" - லலாடிகா கூறினாள்.

"என்ன செய்வது? அப்படிப் பேச வைத்துவிட்டான், அத்திமலைத்தேவன். நான் தலைகீழாக நின்று, எனது காதலை ஏற்றுக்கொள் என்று பார்த்திபரிடம் கெஞ்சிய போதெல்லாம் எனக்கு மசியாதவர், எனது தாய் தலைகுப்புற விழுந்ததும் திருமணத்திற்குச் சம்மதித்து,

அதனை நிறைவேற்றியும்விட்டார். திருமணத்தை முடித்துவிட்ட திருப்தியில், எனது தாய் மூட்டைகட்டிக் கொண்டு புறப்பட்டுவிட்டார். நான்தான், அடுத்தது என்ன என்று தெரியாமல் விழிக்கிறேன்!"

"எல்லாம் நல்லவிதமாகவே நடக்கும். நீ ஒரு பால் குவளையை எடுத்துக் கொள். நான் சென்று இளவரசர்களைக் கவனிக்க வேண்டும்!" - லலாடிகா கூற, வேண்டாவிருப்பாக ஒரு குவளையை எடுத்துக் கொண்டாள், கல்பலதா.

ஷ்யமந்தகப் பல்லவியின் சடலத்திற்கு கைகளைக் கூப்பி அஞ்சலி செலுத்தினான், ஆதித்த கரிகாலன். தற்செயலாக அவனது பார்வை சுவரில் இருந்த ஆணியில் ஊசலாடிக் கொண்டிருந்த இரு மலர்மாலைகள் மீது படர்ந்தது.

"அங்கே இரு மாலைகள் உள்ளனவே!"

ஆதித்தனின் பார்வை தானும், கல்பலதாவும் மாற்றிக் கொண்ட மணமாலைகளின் மீது விழுவதைக் கண்ட பார்த்திபனின் தேகம் சில்லிட்டது. பிறகு தன்னைச் சுதாரித்துக் கொண்டு பதிலளித்தான். "ஒன்று கல்பலதா சூடியது. மற்றொன்று நான் சூடியது. ஏற்கெனவே அணிவித்தாகிவிட்டது. எனது அத்தையாரின் உடலை நீராட்ட வேண்டும் என்பதற்காக அதனை நீக்கி விட்டிருக்க வேண்டும்" என்றபடி ஆதித்தனை அழைத்துக் கொண்டு அறையைவிட்டு நீங்கினான். சரியாக லலாடிகா அவர்களது முன்பாக வந்து பால் குவளைகளை நீட்டினாள்.

"கல்பலதா பால் அருந்தினாளா?" என்று கேட்டபடி தட்டில் இருந்து ஒரு குவளையை எடுத்துக் கொண்டான், ஆதித்த கரிகாலன்.

"லலாடிகா! அறையில் இருக்கும் மாலைகளை அப்புறப்படுத்திவிடு!" - பார்த்திபன் அர்த்தத்துடன் லலாடிகாவை நோக்க அவள் புரிந்து கொண்டு தலையசைத்தாள்.

பாலைப் பருகிவிட்டுக் காலி குவளையை லலாடிகா நீட்டிக் கொண்டிருந்த தட்டில் இருவரும் வைக்க, அவள் அங்கிருந்து அகன்றாள். தனது வாயை நாசுக்காகத் துடைத்துக் கொண்டு ஆதித்தன் பார்த்திபனை நோக்கினான்.

"பார்த்திபா, மலையமான் உன்னைச் சந்திக்க வேண்டும் என்று கூறினாரே! அவரைப் பார்த்துப் பேசினாயா?" - ஆதித்தன் கேட்டான்.

"சந்தித்துப் பேசினேன், ஆதித்தா! என்னிடம் சில கோரிக்கைகளை முன்வைத்தார். அந்தக் கோரிக்கைகளை நான் ஏற்றால், கால ஓட்டத்தில் எனக்குக் கிடைக்கும் நல்ல பலன்களைப் பற்றியும் கூறினார். யோசித்துக் கூறுகிறேன் என்றேன்!" - பார்த்திபன் பொதுவாகவே பேசினான்.

அவனை ஆர்வத்துடன் நோக்கினான், ஆதித்தன். "யோசித்தாயா நண்பா?"

"யோசிக்க எங்கே அவகாசம் இருந்தது, ஆதித்தா? உனது பாட்டனாரைச் சந்தித்துவிட்டு வரும் வழியிலேயே எனது அத்தை உப்பரிகையில் இருந்து தவறி விழுந்து ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தகவல் வந்தது. நான் எனது மாளிகைக்கு வந்த போது ஒரே களேபரமாக இருந்தது. என்னால் யோசிக்க இயலாதபடி, தொடர்ந்து எதிர்பாராத சம்பவங்கள்.. என்னை மீறி நிகழ்வுகள் நடக்க, யோசிக்க அவகாசமே இல்லாத நிலை!"-பார்த்திபன் விரக்தியுடன் கூற, அவனது தோளில் தட்டிக் கொடுத்தான், ஆதித்த கரிகாலன்.

"புரிகிறது நண்பா! மெதுவாக சிந்தித்து முடிவெடு. ஆனால் எனது பங்குக்கு நானும் சில விஷயங்களைத் தெளிவுபடுத்துகிறேன். இன்று எனது குடும்பத்தார் என்னுடன் பொன்னாழியில் இருக்கின்றனர். நாளை அவர்கள் தஞ்சைக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுவார்கள். பிறகு பிரும்மாண்டமான பொன்னாழியில் நான்

ஒருவன் மட்டுமே தனியாக வசிக்கப் போகிறேன். பொன்னாழியை பராமரிப்பதற்கு யார் இருக்கிறார்கள்? கல்பலதா பொன்னாழிக்கு வந்தால், பொன்னா பரணத்தில் வைரக்கல்லை பதித்தது போன்று இருக்காதா? அவள் வந்து எனது மாளிகையின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவளைக் கண்டதும் அவள் மீது காதல் கொண்டுவிட்டேன். நான் உனது அறையினுள் நுழைந்து கொண்டிருந்த போது அவள் பேசுவதைக் கேட்டேன். இனியும், அவள் உனக்கு பாரமாக இருக்க விரும்பவில்லை. தனது வழியை தான் பார்த்துக் கொண்டு போக இருப்பதாகக் கூறினாளே! அவளை பொன்னாழிக்கு அனுப்பி வை, பார்த்திபா. எனது வாழ்வுக்குப் பொருள் பிறக்கும்!"-உணர்ச்சியுடன் கூறினான் ஆதித்தன்.

'அத்திமலைத்தேவா! இதென்ன சோதனை! கணப்பொழுதில் கல்பலதாவையும், என்னையும், திருமணப் பந்தத்தில் பிணைத்துவிட்டு, பின்பாகவே ஆதித்த கரிகாலனை வரவழைத்து எங்களுடன் சதுரங்கம் விளையாடுகிறாயா? நான் கைப்பிடித்தவளை காதலிப்ப தாக என்னிடமே கூறுகிறான். இல்லை.. இல்லை.. இப்போது அவள் எனது மனைவி என்று அவனிடம் கூறினால், அதனை அவன் எப்படி எடுத்துக் கொள்வான்? நட்பை முறித்துக் கொள்வானோ? அவனது நன்மதிப்பை இழந்துவிட்டால், அவன் வசம் உள்ள உனது சிலையை எப்படி மீட்பது?' குழப்பத்துடன் ஆதித்த கரிகாலனை வெறித்தான்.

"உனக்குத் தயக்கமாக இருந்தால், நானே கல்ப லதாவிடம் பேசட்டுமா?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"தேவை இல்லை, நண்பா! கல்பலதாவின் முழுப் பொறுப்பினையும் என்னிடம்தான் அவளது தாய் தந்திருக்கிறாள். அவளது சுக, துக்கங்கள், எதிர்காலத்

திட்டங்கள் அனைத்தையும் நான்தான் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அவள் தாய் என்னிடம் வாக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார். எனவே அவள் தொடர்பான முடிவுகளை நான்தான் எடுக்க வேண்டும். கவலைப்படாதே! கல்பலதா பொன்னாழிக்கு வருவாள். நான் யோசிப்பது அதுவல்ல! லலாடிகாவும், கல்ப லதாவும் உயிர் சிநேகிதிகள். தன்னுடன் லலாடிகாவும் வரவேண்டும் என்று கல்பலதா எதிர்பார்ப்பாளோ என்று ஐயமாக உள்ளது!" - தனது மனவோட்டத்தை மறைக்க, லலாடிகாவின் பெயரை உபயோகப் படுத்தினான் பார்த்திபன்.

உற்சாகத்துடன் அவனை நோக்கினான், ஆதித்த கரிகாலன். "லலாடிகா என்ன? உனது மாளிகையில் பணிபுரியும் அத்தனை பணியாளர்களையும் கூட அவள் அழைத்து வரலாம்? பொன்னாழி அனைவரையும் தாங்கும்!" - ஆதித்த கரிகாலன் கூறினான்.

"நண்பா! இன்னொரு கோரிக்கையையும் உனது பாட்டனார் கூறினார். உனது ஜாதகத்தில் உள்ள தோஷத்தைப் பற்றியும், நீ கெடில நதியைக் கடந்து தெற்கே பயணிக்கக் கூடாது என்பதையும், உன்னை நோக்கி ஆபத்துகள் நகர்ந்து வருவதையும், கூறி, கண்களை இமை காப்பது போன்று, ஒருகணப் பொழுதும் உன்னைவிட்டுப் பிரியாமல் இருந்து காக்க வேண்டும் என்று வாக்கு கேட்டார். எனவே, நான் உன்னுடன் பொன்னாழியில்தான் வசிக்க வேண்டும் என்றும் கேட்டார். நான் இதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும் என்றால், ஒரு நிபந்தனை!" - பார்த்திபன் தனக்கு எழுந்துள்ள இக்கட்டான நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான்.

"என்ன நிபந்தனை, நண்பா?" - வியப்புடன் அவனை நோக்கினான், ஆதித்தன்.

"நானும், கல்பலதாவும், லலாடிகாவும் பொன் னாழியில் வசிப்பதற்குச் சம்மதிக்கிறோம். ஆனால் நீ முழுவதுமாக எனது கட்டுப்பாட்டில்தான் இயங்க வேண்டும்!" - பார்த்திபன் கூற, ஆதித்தன் புன்முறு வலித்தான்.

"உனது ஆதங்கம் புரிகிறது. கரும்பு தின்னக் கூலியா? எனது தேகத்திற்குப் பாதுகாப்பு நீ. எனது மனதுக்குப் பாதுகாப்பு கல்பலதா. நீங்கள் இருவரும் எனது இரு கண்கள். முழுவதுமாக உன் கட்டுப்பாட்டினுள்தான் நான் இயங்குவேன். இந்த உறுதியை நானே தருகிறேன்!"- ஆதித்த கரிகாலன் கூற, பார்த்திபனின் மனம் சற்றே நிம்மதியடைந்தது.

'ஆதித்த கரிகாலனை முழுப் பாதுகாப்பில் வைத்திருந்து, அவனுடைய நன்மதிப்பை முழுவதுமாகப் பெற்று, அவனை மன்னனாக்கிவிட வேண்டும். சமயம் வரும்போது, கல்பலதாவிற்கும், தனக்கும் திருமணம் முடிந்த சூழ்நிலையை விளக்கி, அத்திமலையானை அவனது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்துவிட்டு, பிறகு கல்பாவுடன் நிம்மதியாக வாழ வேண்டும்!' என்று தீர்மானித்தான் பார்த்திபன்.

ஆதித்த கரிகாலன் கிளம்பிச் செல்ல, அடுத்து கல்பலதாவை சமாளிப்பதற்காகத் தங்கள் அறையை நோக்கிச் சென்றான், பார்த்திபன்.

## 18. பாசமலர் பூத்தது

**பொ**ன்னாழியில் தங்குவதற்கு கல்பலதாவுக்கு இம்மியும் விருப்பமில்லை.

"நான் ஏன்தான் திருவேங்கடவன் ஆலயத்திற்குச் சென்றேனோ? அங்கே போகவேதானே, கள்வர்களிடம் சிக்கினேன். கள்வர் களிடம் சிக்கியதால்தானே உங்களைக் காண நேர்ந்தது. உங்களைக் கண்டதால் தானே, காதல் கொண்டேன். உங்களைச் சந்திக்காமல் இருந்திருந்தால், ஆதித்த கரிகாலனை கொல்வேன் என்கிற எனது சபதத்தை இவ்வேளையில் நிறைவேற்றி யிருப்பேன். சரி! அவன் எப்படியோ தொலைந்து போகட்டும். உங்களை மணந்து கொண்டு நிம்மதியாக வாழலாம் என்று நினைத்தால், கிளியை வளர்த்து பூனையிடம் தருவது போன்று, என்னைக் கொண்டு சென்று பொன்னாழியில் வைக்கப்போகிறீர்கள்! அவனைக் கண்டாலே எனக்கு அருவருப்பாக இருக்கிறது" என்றாள் கல்பலதா.

"எனக்கு மட்டும் ஆசையா என்ன? யார் எப்படிப் போனால் எனக்கு என்ன என்று உன்னை அழைத்துக் கொண்டு எங்காவது சென்றுவிடலாம் என்று மனதினுள் துடிக்கிறேன். தந்தைக்குச் செய்த சத்தியத்திற்காகத்தான் இப்படிச் சோழர்களுக்கு ஊழியம் செய்துகொண் டிருக்கிறேன். மீண்டும் பல்லவத்தை நிறுவி, மன்னனாகத் திகழவேண்டும் என்கிற ஆசை எனக்கில்லை. அத்தி மலையானை அவனுக்குரிய இடத்தில் கொண்டு சேர்த்துவிட்டு, பல்லவத்திற்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க எண்ணுகிறேன். அவ்வளவே!" - கல்பாவிடம் இறைஞ்சினான், பார்த்திபன்.

"நான் எப்படிப் பொன்னாழி மாளிகையில் இருப்பேன்? நான் யார் என்பதை அறிந்தால், எனக்கு அங்கே ஆபத்து நேராதா?" - கல்பா கேட்டாள்.

"உனக்கு ஒரு ஆபத்தும் வராது. லலாடிகாவும், நானும் எப்போதும் உனக்குப் பாதுகாப்பாக பொன்னாழியில் தானே இருப்போம்!" - பார்த்திபன் கூற, முகம் மலர்ந்தாள், கல்பா.

"லலாடிகா வருகிறாளா? அப்படியென்றால் கவலை யில்லை. எனக்கு யானை பலத்தைத் தருவாள், அவள்"- கல்பலதா குதூகலித்தாள்.

"எனக்கே அவள்தான் பலத்தைத் தருகிறாள். பல பிரச்னைகளை அவள்தான் தீர்த்திருக்கிறாள். எனது தந்தைக்குப் பிறகு, எனக்குத் தாயாக, தமக்கையாக, தாதியாகத் திகழ்கிறாள். உன்னைச் சந்திப்பதற்கு முன்பாக எனக்கு இருந்த ஒரே உறவு, லலாடிகாதான். யார் பெற்ற பெண்ணோ.. எனக்கு, 'வாராது வந்த மாமணி'யாக வந்து சேர்ந்திருக்கிறாள்." - சற்றே உணர்ச்சியுடன் கூறினான், பார்த்திபன்.

அதற்கு மேல் கல்பாவுக்குப் பொறுக்கவில்லை. அவனது தந்தையின் ஆசைநாயகிக்குப் பிறந்தவள்தான் லலாடிகா என்னும் விவரத்தைச் சொல்லிவிட வேண்டியதுதான் என்கிற துடிப்பில் கணவனை ஏறிட்டாள்.

"தாயாக, தமக்கையாக என்று கூறினீர்கள். அதற்குப் பிறகு தாதியாக என்று சொன்னீர்களே, அது தவறான பிரயோகம். அவளைத் தாதி என்று எப்போதும் நீங்கள் நினைக்கக் கூடாது!" - கல்பா கூற, குழப்பத்துடன் அவளைப் பார்த்தான், பார்த்திபன்.

"லலாடிகா யார் என்கிற உண்மை உங்களுக்குத் தெரியாது?" - கல்பா கூறினாள்.

"யார் அவள்? அவளது தாய் பல்லவ அரண்மனையில் வெகு காலம் பணிபுரிந்தாள் என்று தந்தை கூறியிருக்கிறார்."

"அத்திமலை தெய்வத்தை மீட்க வேண்டும் என்று உங்களிடம் சத்தியம் வாங்கிக் கொண்ட உங்கள் தந்தைக்கு, உங்களது தங்கையான லலாடிகாவுக்கு நல்ல எதிர்காலம் அமைத்துத் தா என்று சத்தியம் வாங்கத் தோன்ற வில்லையே. அரண்மனை பாடகியான லலாடிகாவின் தாயை உங்களது தந்தை ஆசைநாயகியாக்கிக் கொண்டதை வேண்டுமானால் உங்களிடம் சொல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் மரணப் படுக்கையில் உங்களது தந்தை அதைத் தங்களுக்கு அவசியம் தெரிவித்திருக்க வேண்டும்." - கல்பலதா கூறியவுடன், விக்கித்துப் போன பார்த்திபன் நிலை குலைந்து போய் மஞ்சத்தில் சரிந்து அமர்ந்தான்.

இடி மேல் இடியாக இவனது வாழ்க்கையில் ஏன் திருப்பங்கள் நிகழ்கின்றன? இவ்வளவு காலம் இவனுக்கு ஊழியம் செய்த லலாடிகா இவனது தங்கையா? எத்தனை முறை இவனது காலணிகளை நீக்கி இவனது பாதங்களை வெந்நீரில் குளிப்பாட்டி இருக்கிறாள்! சேவூர் போரின் போது இவனுக்கு மார்பில் இரணங்கள் ஏற்பட, அன்றாடம் களிம்பைத் தடவி, இவனுக்கு சிஸ்ருஷை செய்திருக்கிறாள்! பார்த்திபனின் கண்கள் கலங்கின. கல்பலதா கேட்பது நியாயம்தானே. பல்லவம் என்கிற ராஜ்யமே இல்லாத போது, மகுடம் தரிக்காத போது, இவனது தந்தை தருமவர்மனுக்கு ஆசைநாயகி ஒரு கேடா என்ன? ஒரு பெண் குழந்தையைப் பெற்றுவிட்டு, அதன் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல், அத்திவரதன் சிலையை மீட்க வேண்டும் என்று சத்தியம் வாங்க மட்டும் தெரிந்ததே. மன்னர்கள் மன்னர்களாக இல்லாமல் இருந்தால், எப்படி அத்திமலையான் ராஜ்யத்தினுள் வருவான்?

தந்தை மீது உருவான கோபம், தனது கையாலாகாத் தனத்தை எண்ணி தன் மீதே மாறியது.

"அவரவர்கள் தங்கள் சுயநலப்படி வாழ்கின்றனர். தாங்கள், தங்களது சுகங்கள் ஆகிய ஒன்றும் குறையக்கூடாது. நான் மட்டும் அனைத்தையும் துறந்துவிட்டு, மற்றவர்களின் சபதங்களை நிறைவேற்ற ஒரு கருவியாகச் செயல்பட வேண்டும். என்ன வாழ்க்கை இது? எங்கே அந்த லலாடிகா?"-அலறினான், பார்த்திபன்.

"லலாடிகா!" - அடித்தொண்டையிலிருந்து குரலை வெளிக்கொணர்ந்தான், பார்த்திபன்.

கையில் ஒரு பூச்சாடியுடன் படிகளில் ஏறிக் கொண்டிருந்த லலாடிகா, பார்த்திபன் தன்னை அழைப்பதை உணர்ந்து, அவசரமாக அவனது அறைக்கு விரைந்தாள்.

"அழைத்தீர்களா இளவரசே!" என்று வந்த அவளை உக்கிரத்துடன் பார்த்த பார்த்திபன், அவளது கரத்தில் ஏந்தியிருந்த பூச்சாடியைப் பிடுங்கி சாளரத்தின் வழியாக வெளியே வீசி எறிந்தான்.

"போதும், நீ சேடியாக நடித்தது.." என்றவன் ஓங்கி அவளது கன்னத்தில் அறைந்தான்.

"நீ எனது தங்கை என்கிற விவரத்தை ஏன் என்னிடம் மறைத்தாய்? என்னைக் கொடிய அண்ணனாக உலகத்திற்கு காட்ட வேண்டும் என்கிற எண்ணமா உனக்கு?" என்றவன், அவளை தனது மார்பில் சரித்துக் கொண்டு, கண் கலங்கினான்.

"எனக்கு யாருமே இல்லை என்று மனதினுள் மருகிக் கொண்டிருக்கிறேன், லலாடிகா. நீ எனது சகோதரி என்று முன்பே கூறியிருந்தால், உன்னை இளவரசியாக வாழ வைத்திருப்பேன். எனது பணிப்பெண்ணாக உன்னைத் திகழ வைத்துவிட்டாயே. நான் என்ன பாவம்

செய்தேன்?" - உருக்கத்துடன் கூற, அவனது தோளில் பதிந்திருந்த தனது தலையைத் திருப்பி கல்பலதாவை நோக்கினாள் லலாடிகா.

'ஏன் சொன்னாய்?' - என்கிற கேள்வி லலாடிகாவின் பார்வையில் தொக்கி நின்றது.

"இதுநாள்வரை நான் உனது தோழி. அதனால் உண்மையை இளவரசரிடம் கூறாமல் இருந்தேன். நேற்று முதல் நான் உனது அண்ணி. நீ எனக்கு நாத்தி. நான் பார்த்திபரின் மனைவி. அவருக்குத் தெரியாமல் எந்த இரகசியங்களும் எனது மனதில் இருக்கக் கூடாது. அதனால், அவரிடம் உண்மையைக் கூறிவிட்டேன்!" - சாதுர்யமாக விளக்கமளித்தாள், கல்பலதா.

"இப்போது முதல் லலாடிகா இந்த நாட்டின் இளவரசி. எனக்கு தரப்படும் அத்தனை மரியாதைகளும் அவளுக்கும் தரப்பட வேண்டும். அரண்மனை அதிகாரி விஜயமேதாபதியை அழையுங்கள்" - வாயிற்கதவை நோக்கிக் கூவினான், பார்த்திபன்.

"நான் போகிறேன் இளவரசே!" என்று நகர முயன்ற லலாடிகாவின் தலையில் நறுக்கென்று குட்டினான்.

"நகராதே! இனி நீ ஆணையிட வேண்டும். நான் செய்கிறேன்!" என்றான்.

வெளியே காவலுக்கு இருந்தவன், மாளிகையின் அதிகாரி விஜயமேதாபதியை அழைத்து வந்தான்.

"மேதாபதி அவர்களே, எனது தந்தை தருமவர்மனுக்கும், எனது சிற்றன்னைக்கும் பிறந்த லலாடிகா எனது தங்கையாக, பல்லவ இளவரசியாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும். நான், எனது மனைவி கல்பலதா மற்றும் தங்கை லலாடிகாவுடன் பொன்னாழி மாளிகையில் வசிக்கப் போகிறேன். நீர்தான் எனது இந்த மாளிகையை பார்த்துக் கொள்ள வேண்டும். இன்னொரு விஷயம், எனக்கும், கல்பலதாவுக்கும் நிகழ்ந்த

திருமணத்திற்கு நீங்களும், பணியாள் தனஞ்செயனும் தான் சாட்சி. இந்தத் தகவல் வெளியே கசியக் கூடாது. குறிப்பாகச் சோழர்களுக்கு தெரியவரக் கூடாது. புரிந்ததா?" - பார்த்திபன் எச்சரிக்கும் குரலில் கூற, மேதாபதி தலையசைத்தார்.

"தனஞ்செயன் எங்கே? அவனையும் வரவழையுங்கள். அவனை நானே எச்சரிக்கிறேன்!" - பார்த்திபன் கூறினான்.

"மன்னிக்க வேண்டும் இளவரசே! தற்போது தனஞ்செயன் எதையும் கேட்கும் நிலையில் இல்லை. தலைகுப்புற விழுந்து கிடக்கின்றான். நினைவு அறவே இல்லை." - மேதாபதி கூறினார்.

"ஏன்.. அதிகமாக மது அருந்தினானா?" - பார்த்திபன் வியப்புடன் கேட்டான்.

"இல்லை இளவரசே! சாளரத்தின் வழியாகப் பறந்து வந்து அவன் தலையில் ஒரு பூஜாடி விழுந்தது. அதனால் மயங்கிச் சாய்ந்தவன், இன்னும் எழுந்து கொள்ளவில்லை! எழுந்தாலும், தங்களது திருமணம் பற்றிய நினைவு இருக்கும் என்பதை உறுதியாகச் சொல்வதற்கில்லை." - சிரிக்காமல் கூறினார், மேதாபதி.

குற்ற உணர்வுடன், கல்பலதாவையும், லலாடிகா வையும் பார்த்து விழித்தான், பார்த்திபன்.

பீறிட்டு வந்த சிரிப்பை அடக்கமாட்டாமல், இரு பெண்களும் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கத் துவங்கினர்.

## 19. பொன்னாழி

திங்களன்று பொன்னாழியின் பிரவேச வைபவம் சிறப்பாக முடிந்த நிலையில், காஞ்சியின் ஆலய தரிசனங்களுக்காக ஒரு நாள் தங்கிவிட்டு, புதன் கிழமை காலை பழுவேட்டரையர் சகோதரர்கள், கண்டன் அமுதனார், காலாந்தகன், மற்றும் தலைமை அமைச்சர் அநிருத்த பிரம்மராயர் ஆகியோர் தஞ்சைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்க, அனைவரும் அவர்களை வழியனுப்பிக் கொண்டிருந்தனர்.

"வரும் வெள்ளியன்று நானும், வானவன்மாதேவியும், தஞ்சைக்குத் திரும்பி விடுவோம். குந்தவை வேண்டு மென்றால், இன்னும் சிறிது நாட்களுக்குப் பொன் னாழியில் தங்கிவிட்டு வரட்டும்." - சுந்தரர் கூறினார்.

"இல்லை தந்தையே. இந்தப் பொன்னாழி எனக்குச் சலிப்பினைத் தருகிறது. எங்கு நோக்கினும் கங்க நாட்டு ஸ்வர்ணம்தான் கண்களில் தென்படுகிறது. ஏதோ கங்க நாட்டுச் சிறையில் இருப்பது போன்று ஒரு எண்ணம். வாணர்களின் குருதியில் எழும்பிய இந்தப் பொன் னாழியை நான் ரசிக்கவில்லை. எனது பழையாறை அரண்மனைக்கு ஈடு இணை எதுவு மில்லை. கற்சுவரால் சூழப்பட்டாலும், பழைமையாகக் காட்சியளித்தாலும், ஓதம் கொண்ட கூரைகளை கொண்டிருந்தாலும், சோழ மண்ணின் மணத்தைப் பழையாறையில்தான் நுகர முடியும். நானும் உங்களுடன்தான் புறப்படத் தீர்மானித் திருக்கிறேன்." - குந்தவை கூறியதும், ஆதித்த கரிகாலனுக்கு மனதில் 'அப்பாடா' என்றிருந்தது. குந்தவை பொன் னாழியில் இருக்கும் வரை, இவனுக்கு பொன்னாழி ஒரு முட்படுக்கை போன்றுதான் இருக்கப் போகிறது.

அன்று பிற்பகல் மதிய உணவின் போது மலையமான் நிதானமாகப் பேச்சைத் துவக்கினார்.

"சுந்தர சோழரே! ஆதித்த கரிகாலன் இனி பொன்னாழியில்தான் வசிக்கப் போகிறான் என்கிற நிலையில் நான் இங்கே அடிக்கடி திருக்கோவிலூரில் இருந்து பயணித்து அவனை மேற்பார்வை இடுவது என்பது சாத்தியம் இல்லை. ஆனால் என்னைவிட கண்ணும் கருத்துமாகவும், பாதுகாப்பாகவும் அவனை பராமரிப்பதற்கு ஒருவரை அடையாளம் கண்டிருக்கிறேன். அவனும், அவனது உறவுக்கார பெண்ணும், இந்தப் பொன்னாழியை பராமரித்து ஆதித்த கரிகாலனை கண்களை இமை காப்பது போன்று பாதுகாப்பார்கள்!" - மலையமான் கூறினார்.

"யார் அவர்கள்?" - வானவன்மாதேவி கேட்டாள்.

"உபேந்திர பார்த்திப பல்லவனும், அவனது உறவுப் பெண் கல்பலதா தேவி என்பவளும்தான் பொன்னாழியிலேயே தங்கி அவனைப் பார்த்துக் கொள்ளப் போகிறார்கள். நான் இது குறித்துப் பார்த்திபனுடன் பேசிவிட்டேன். அவனும் அதற்கு ஒப்புக்கொண்டு விட்டான்." - மலையமான் கூறினார்.

தனது மனிதர்கள் தன்னுடன் பொன்னாழியில் வந்து தங்க உள்ளார்கள் என்கிற நினைப்பு உற்சாகத்தைத் தர, ஆதித்த கரிகாலன் ஆர்வத்துடன் பாட்டனையே கவனித்துக் கொண்டிருந்தான்.

குந்தவை ஒருமுறை ஆதித்தனை ஏறிட்டு நோக்கிவிட்டு, பாட்டன் மலையமானை நோக்கினாள், "பாட்டா! எனக்கு என்னவோ இது புத்திசாலித்தனமாகத் தோன்றவில்லை. அபராஜித பல்லவனைக் கொன்று காஞ்சியைக் கைப்பற்றிய ஆதித்த சோழருக்கு பின் பல்லவம் நமக்கு அடிமையாகவே இருந்து வருகிறது. மீண்டும் சோழத்திடம் இருந்து விடுதலை பெற்று,

தன்னாட்சி பெற்றிட பல்லவர்கள் முயன்று வருவது நம் அனைவருக்குமே தெரியும். இந்நிலையில் வருங்காலச் சோழ மன்னனான ஆதித்த கரிகாலனின் பாது காவலராக, பராமரிப்பாளராக பல்லவர்களை நியமிப்பது விவேகமற்ற செயல். எனது அண்ணனின் உயிருக்கு உலை வைத்துவிட்டு, தன்னையே மன்னனாக மீண்டும் பிரகடனப்படுத்திக் கொள்ள எவ்வளவு காலம் ஆகும், பார்த்திபனுக்கு? இன்னும் சொல்லப் போனால், ஆதித்தன் காஞ்சியில் தங்குவதே பைத்தியக்காரத்தனம். நமது தஞ்சையில்தானே பட்டத்து இளவரசனாகிய அவன் தங்க வேண்டும்..?" - குந்தவை கூறினாள்.

மலையமான் சற்றே எரிச்சலுடன் குந்தவையை உறுத்துப் பார்த்தார்.

"சாளுக்கியர்களின் கொட்டத்தை அடக்க அவனை வடபுல மாதண்டநாயகனாக நியமித்துக் காஞ்சிக்கு அனுப்பியது சோழ மன்னரின் அமைச்சரவை. உனக்குத் தோன்றும் கேள்விகள் அமைச்சரவைக்குத் தோன்றாமல் இருக்குமா, குந்தவை? பல்வேறு காரணங்களைக் கருத்தில் கொண்டுதான் உனது அண்ணனை காஞ்சிக்கு அனுப்பி யிருக்கிறார், மன்னர். பார்த்திப பல்லவனைக் காட்டிலும் ஆதித்த கரிகாலனை பொறுப்புடன் கவனித்துக் கொள்ள வேறு யாராவது இருந்தால் கூறு. நான் அவரையே நியமிக்கிறேன்." - மலையமான் கூறினார்.

குந்தவையின் அதிகப்பிரசங்கித்தனத்தை அவர் சிறிதும் ரசிக்கவில்லை என்பது அவரது முகத்திலேயே தெரிந்தது.

"ஏன்? எங்களது பாதுகாப்புக்காக, ஆதித்த கரிகாலன் ஒருவரைத் தேர்ந்தெடுத்து தஞ்சைக்கு அனுப்பினானே.. வாணர்குல வந்தியத்தேவர்! அவரைவிடவா ஆதித்தனை பார்த்துக் கொள்ளுவதற்கு பொருத்தமான மனிதர் தேவை?"

மலையமான் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கத் துவங்கினார். "பலே! கலயம் கொதிக்கிறது என்று எரியும்

கொள்ளிக்குள் குதிக்கச் சொல்கிறாயே.. பராந்தகர் பெரும்பாணப் பாடியை சூறையாடி கங்கர்களுக்கு பாணர்களை அடிமையாக விற்ற சரித்திரம் ஜகத்ப்ர ஸித்தியாயிற்றே. குந்தள தேசத்தில் அடைக்கலம் புகுந்த விஜயாதித்த வாணன் சோழர்களைப் பழிவாங்க துடித்ததை யாரால் மறக்க இயலும்? அவனையா இங்கே ஆதித்த கரிகாலனுக்கு பாதுகாப்பாக வைக்கச் சொல்கிறாய்? இதைவிட பாலுக்குப் பூனையைக் காவல் வைக்கலாம் என்று சொல்லியிருக்கலாம்" - மலையமான் கூறினார்.

ஆதித்த கரிகாலனும் தனது தங்கையை உறுத்துப் பார்த்தான்.

"ஏன் நீதானே, சற்று முன்பாக வாணர்களின் குருதியில் தோன்றிய இந்தப் பொன்னாழி மாளிகையை இரசிக்கவில்லை என்றாய்.. உனக்கே இரசிக்கவில்லை என்றால் வாணர்குல வீரனான வந்தியத்தேவனுக்கு இம்மாளிகை எங்ஙனம் இரசிக்கும்? மேலும், எனது பாதுகாப்புக்கு யார் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டியது நான்.. தந்தையே! இன்று பிற்பகலுக்கு மேல், பார்த்திபனும், கல்பலதாவும் பொன்னாழிக்கு குடிபெயருகிறார்கள். அவர்களது வசம் பொன்னாழி ஒப்படைக்கப்படும் என்பதில் மாற்றம் இல்லை!" - ஆதித்தன் கூறியதும், தனது தோள்களைக் குலுக்கியபடி, அவனை அலட்சியமாக பார்த்தாள், குந்தவை.

"உனது இடம்.. உனது ஸ்வர்ணம்.. உனது நண்பர்கள்.. உனது விருப்பம். இதில் நான் ஏன் தலையிடப் போகிறேன்? நீ தேக ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து மன்னனாகப் பதவியேற்க வேண்டும் என்று அன்றாடம் பழையாறை சோமேஸ்வரரை வேண்டி வருகிறேன். மற்றபடி எனக்கும் இதற்கும் தொடர்பு இல்லை!" என்று கூறியபடி தனது இருக்கையைவிட்டு எழுந்தாள், குந்தவை.

ஆதித்த கரிகாலன் அவள் போவதையே சுருங்கிய முகத்துடன் நோக்கிக் கொண்டிருந்தான். "எல்லா வற்றிலும் எதிர்மறையான கருத்துகளையே கூறி வருகின்றாளே உங்கள் மகள். அவளைக் கண்டிக்க மாட்டீர்களா?" ஆதித்த கரிகாலன் கேட்டதும், சுந்தர சோழர் அவனை சமாதானம் செய்தார்.

"சிறு வயது முதல் அவளுடைய குணம் உனக்கு தெரியும். உன்னிடம் எப்போதும் அவளுக்கு போட்டி உண்டு. அதனையேன் லட்சியம் செய்கிறாய்? நீ விரும்பியது போல், பார்த்திபனை பாதுகாப்புக்கு வைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் பொன்னாழியில் வாழ்ந்து வா! மாமா! பார்த்திபனிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டோம் என்று நீங்கள் பேசாமல் இருந்துவிடாதீர்கள். அவ்வப்போது ஆதித்த கரிகாலனை கவனித்து வாருங்கள்!" என்றார் சுந்தர சோழர்.

உணவை அவசரமாக முடித்துக் கொண்டு குந்தவை புறப்பட்டுச் சென்றதற்குக் காரணம் உண்டு. தொலைவில் நின்று தெட்டக்கனி அவளுக்கு சைகை காட்டியிருந்தாள்.

"தெட்டக்கனி! எதற்காக என்னை அழைத்தாய்?"- குந்தவை கேட்டாள்.

"இளவரசி! நந்தவனத்தைக் கடந்து முருக்கத்தி பாதையில் அமானுஷ்யர் தங்களுக்காகக் காத்திருக் கிறார்!" என்று தெட்டக்கனி கூறியதும், குந்தவை பரபரப்புடன் பொன்னாழியைவிட்டு நீங்கி முருக்கத்தி பாதையை நோக்கி நடந்தாள்.

# 20. ஒரு சதுரங்க மேடை

**பா**ர்த்திபன் தனது புரவியில் முன்னே செல்ல, இரதத்தினில் அவனைப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர், கல்பலதாவும், லலாடிகாவும். தொலைவில் சூரிய ஒளியில் தகதகத்துக் கொண்டிருந்த பொன்னாழி கண்களில் தெரிந்த உடனேயே கல்ப லதாவுக்கு மேனியெல்லாம் எரியத் தொடங்கிவிட்டது. தனது முப்பாட்டன் அபராஜித பல்லவனை வஞ்சகத் தாலும், சூழ்ச்சியாலும் கொன்ற ஆதித்த சோழனின் வழித்தோன்றல், அதே பெயருடைய ஆதித்த கரிகாலன் வாழ்ந்து கொண்டிருக்கும் பொன்னாழி அதோ! ஆலயத்திற்குச் சென்று கொண்டிருந்த பாட்டியார் கங்காவதியை கடத்திச் சென்று, அவரது வாழ்வை நாசமாக்கிய அரிஞ்சய சோழனின் பெயரன் ஆதித்த கரிகாலன் பெருமிதத்துடன் எழுப்பியிருக்கும் பொன்னாழி அதோ!

அவளுள் மறைந்திருந்த துவேஷமும், குரோதமும் மீண்டும் தலைதூக்கின. பால்யத்தில் தங்குவதற்கு இடமில்லாமல், பாட்டியார், அம்மா மற்றும் தான் அனைவராலும் அலட்சியப்படுத்தப்பட்ட காலம் நினைவில் எழ, அவளது முகம் ஆத்திரத்தால் சிவந்தது. கணவன் பார்த்திபன் இவளிடம் தாங்கள் பொன்னாழியில் வசிக்க வேண்டும் என்று கூறிய போது அதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தாள். தான் பொன்னாழியில் காலை வைக்கப் போவதில்லை என்று கூறிய போது, அவளது பிடிவாதத்தைக் கண்டு திகைத்து நின்றிருந்தான், பார்த்திபன். பிறகு லலாடிகாதான் அவளைத் தனியே அழைத்துச் சென்று சமாதானம் செய்தாள்.

"சோழ இளவரசனை வஞ்சம் தீர்ப்பேன் என்கிற சபதத்தைச் செய்தவள் நீ. அருகில் சென்றால்தான் அதற்கு வாய்ப்பு கிட்டும். அவனைச் சந்திக்கமாட்டேன்.. அவன் மாளிகையில் காலடி எடுத்து வைக்கமாட்டேன் என்று கூறிக் கொண்டிருந்தால் அவனை பழி வாங்குவதற்கு வாய்ப்பு எப்படிக் கிட்டும்? நான்தான் உன்னுடன் வரப் போகிறேனே. உனக்கு எந்தப் பிரச்னையும் ஏற்படாது" என்று கூறி கல்பாவை சம்மதிக்க வைத்திருந்தாள்.

ஆனால் பொன்னாழியைக் கண்டவுடனே பழைய துவேஷம் அவளை மீண்டும் பற்றிக் கொண்டது. பார்வையைப் பொன்னாழிக்கு அப்பால் இருந்த ஆதிசரஸ்வதி ஆலயத்தின் பக்கமாகத் திருப்பினாள்.

'கலைமகளே! என்னையும், எனது கணவரையும், சோழர்களின் வஞ்சகத்தில் இருந்து நீதான் காப்பாற்ற வேண்டும். எதிரியின் கோட்டையில் நான் எனது கணவருடனும், எனது நாத்தியுடனும் வசிக்கப் போகிறேன். அனாதி காலமாக இந்தத் தருமநகரத்தில் நீதான் வசித்துக் கொண்டிருக்கிறாய். உனது ஆலயம் சிறு கட்டடமாக இருக்க, தனக்குப் பிரம்மாண்ட ஸ்வர்ண மாளிகையை எழுப்பிக் கொண்டிருக்கிறான் ஆதித்த சோழன். ஆலயங்களின் நகரம் காஞ்சியில் அவமானச் சின்னமான இந்தப் பொன்னாழி நிலைக்கக் கூடாது. அதற்கும் நீதான் அருள் புரிய வேண்டும்.'

மனம்போன போக்கில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த, கல்பலதா, இரதம் பொன்னாழிக்குச் செல்லும் பாதையில் திரும்புவதைக் கண்டு சற்றே நடுக்கத்துடன் லலாடிகாவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள். அவளும் தைரியம் சொல்லுவது போன்று கல்பாவின் கரத்தைப் பற்றி அழுத்தினாள். அவர்களது இரதம் பொன்னாழியின் முன்பாகச் சென்று நின்றது.

மலையமான், ஆதித்த கரிகாலன், நேமியங்கையர் மற்றும் குழலழகன் ஆகியோர் அவர்களை வரவேற்க வாயிலிலேயே காத்திருந்தனர். பார்த்திபன் தனது

புரவியில் இருந்து குதித்து இறங்க, ஆதித்தன் அவனைத் தாவி அணைத்துக் கொண்டான். பெண்கள் இருவரும் இரதத்தைவிட்டு நீங்கி, தங்களுக்கு முன்பாகப் பிரம்மாண்டமாகப் பரந்து விரிந்திருந்த பொன்னாழி மாளிகையை அண்ணாந்து நோக்கினர்.

சரியாக இருவரது பார்வையும் மேலே உப்பரிகை மாடத்தில் நின்றபடி தங்களை நோட்டம்விட்டுக் கொண்டிருந்த இரு பெண்களின் மீது படர்ந்தது. குந்தவையும், தெட்டக்கனியும்தான் அங்கே நின்றபடி, இரதத்தில் இருந்து இறங்கிய அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர். குந்தவை தன்னை கவனிப்பதைக் கண்டதும், கல்பா எரிச்சலுடன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

'பொன்னாழி பிரவேச வைபவத்திற்கு வந்த குந்தவை இன்னுமா இங்கே இருக்கிறாள்?'

"வரவேண்டும்! உங்களது வருகை பொன்னாழிக்கு மெருகேற்றும்!" யாரை வரவேற்கிறான் என்பது தெரியாத படி பொதுவாகப் பேசினான், ஆதித்த கரிகாலன்.

மலையமானிடம் பெண்கள் ஆசி வேண்ட, அவர் அவர்களது சிரசில் கைவைத்து ஆசி கூறினார்.

"ஆதித்த கரிகாலனையும், பொன்னாழியையும் பொறுப்பான மனிதர்களிடம் ஒப்படைத்திருக்கிறேன் என்கிற நிம்மதியை அளித்துள்ளீர்கள். உங்களது அத்திமலைத் தேவன் எந்தக் குறையுமின்றி உங்களைப் பார்த்துக் கொள்வான்." - மலையமான் கூறினார்.

கல்பா சடாரென்று திரும்பி பார்த்திபனை நோக்கினாள். 'பெரியவர் திருக்கோவிலூர் மலையமான் ஆசி கூறுகிறாரா அல்லது நீங்கள் ஒழுங்காகக் கடமையை ஆற்றினால்தான் உங்களது அத்திமலையான் உங்களுக்கு மீண்டும் கிடைப்பார் என்று எச்சரிக்கின்றாரா?' என அந்தப் பார்வை கேட்டது.

குழலழகன் தலையசைக்க, பணியாளர்கள் வந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டு, அவர்களது உடைமைகளை பின்பாக வந்திருந்த பெட்டி வண்டியில் இருந்து இறக்கத் தொடங்கினர்.

"வாருங்கள்!" என்றபடி மலையமானும், ஆதித்த கரிகாலனும் முன் நடக்க, மற்றவர்கள் அவர்களைப் பின்தொடர்ந்தனர். பொன்னாழியின் முன்பாக இருந்த பெரிய முற்றத்தின் நடுவே, ஸ்வர்ண தாமரை மலருடன் கூடிய நீரூற்று நிற்க, அதிலிருந்து பன்னீர் மணத்துடன் கூடிய நீர் பாய, அதன் சாரல் இவர்களது மீது தெளித்தது.

ஆதித்த கரிகாலன் சிரித்தான்.

"முக்கிய மனிதர்கள் வரும்போது, வழக்கமாகச் சேடிகள் பன்னீர் தெளிப் பார்கள். எனது பொன் னாழியில்தான் அனைத்தும் புதுமையாயிற்றே! சேடிகள் செய்யும் வேலையை நீரூற்று செய்கின்றது!"

"ஆம்! முதலில் பன்னீர் தெளிப்பீர்கள். பிறகு குருதியைக் கொப்பளிக்கச் செய்வீர்கள். நீங்கள் இருக்கு மிடத்தில் நீரூற்றும் உண்டு; வஞ்சகத்தின் ஊற்றும் உண்டு!" - லலாடிகாவின் செவிகளில் கேட்கும்படியாக மட்டும் முணுமுணுத்தாள், கல்பா.

"உஷ்! இன்னும் பொன்னாழியினுள் காலே வைக்கவில்லை. அதற்குள் சிறைச்சாலை செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யத் துவங்காதே, அண்ணி!"- கல்பாவை அடக்கினாள், லலாடிகா.

கல்பாவும், லலாடிகாவும் கரிகாலன் மற்றும் இளந்திரையனின் சிலைகளைத் தொழுதுவிட்டு, அந்த விஸ்தாரமான கூடத்து கூரையின் வேலைப்பாடுகளைப் பிரம்மிப்புடன் கவனித்துக் கொண்டிருக்க, ஆதித்த கரிகாலனும், பார்த்திபனும், முன்பாகச் சென்று விட்டனர். பெண்கள் இருவரும் நிதானமாக உப்பரிகைப்

படிகளை கடந்த போது, மேலிருந்து நல்ல உயரமும், கம்பீரமும் கொண்ட வாலிபன் ஒருவன் படிகளில் இறங்கி வந்தான். அவன் கறுத்துக்காணப்பட்டாலும், முகத்தில் பொலிவும் துறுதுறுப்பும் நிறைந்திருந்தன.

அந்நிய வாலிபன் ஒருவன் வருகிறானே என்று பெண்கள் ஒதுங்க, லலாடிகாவின் நீண்ட தாவணி கல்பலதாவின் காலணியில் சிக்கிக் கொள்ள, அதைக் கவனியாமல் கல்பலதா தொடர, கால் இடறி அப்படியே பின்புறமாகச் சரிந்தாள்.

'வீல்' என்று அலறியபடி நிலை தடுமாறி அவள் பின்புறமாக சரிய, நல்லவேளையாக அந்த நெடிய வாலிபன் ஒரே எட்டில் தாவி, தனது நீண்ட கைகளால், அவளது புஜங்களைப் பற்றி இழுத்தான். அவன் இழுத்த வேகத்தில் அவனது அகன்ற மார்பினை நோக்கி இவள் விழ, அந்நிய புருஷனின் மார்பில் சரியக்கூடாது என்கிற உள்ளுணர்வு அவளை எச்சரிக்க, கைகளால் தனது முன்னேற்றத்தை கல்பா தடுத்தாள்.

அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்டவனாக அந்த வாலிபன் அவளை சரித்து, படிகளில் அமர்த்தினான். ஆனால் அதற்குள், தன்னையும் அறியாமல் அவளது கரம் அந்த வாலிபன் அணிந்திருந்த பதக்கத்துடன் கூடிய தங்கச் சங்கிலியைப் பற்றி இழுக்க, சங்கிலி அவளது கையோடு வந்தது.

"எச்சரிக்கை அம்மணி! இந்தப் பிரும்மாண்ட படிகளில் உருண்டு விழுந்தால் என்ன ஆவது? பொன்னால் வேயப்பட்ட படிகளில் உருண்டு விழுவது பெருமைதான் என்றாலும், உயிர் பொன்னைவிட விலைமதிப்பான தல்லவா?" - சிரித்தபடி நின்றான் அந்த வாலிபன்.

அதற்குள் கல்பலதாவின் அலறல் ஒலிகேட்டு ஓடி வந்த ஆதித்த கரிகாலனும், பார்த்திபனும், உருண்டு விழ இருந்த கல்பலதாவை அந்த வாலிபன் காப்பாற்றியதைக் கண்டனர்.

"சபாஷ் வந்தியத்தேவா! நல்லவேளையாக கல்பலதாவை பிடித்துக் கொண்டாய்!" என்று பாராட்டினான், ஆதித்தன்.

'ஓஹோ! இவன்தான் வந்தியத்தேவனா!' என்பது போன்று அவனை வியப்புடன் பார்த்தனர், பெண்கள் இருவரும்.

அப்போதுதான் தனது கரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் அவனது தங்கச் சங்கிலியைக் கவனித்தாள், கல்பலதா.

"ஐயோ! தங்களது ஸ்வர்ண சங்கிலியை அறுத்து விட்டேனே! என்னை மன்னித்துவிடுங்கள்!" - பதறினாள் கல்பலதா.

"கிடக்கிறது.. விடுங்கள்" என்றான் வந்தியத்தேவன்.

"இந்த பொன்னாழி மாளிகையே சூரியனைப் போன்று தகதகக்க, அதன் முன் அகல் விளக்கு எரிவது போன்று, இந்த ஸ்வர்ண சங்கிலியை நான் அணிந்திருந்தேன். பரவாயில்லை" என்று படிகளில் இறங்கத் துவங்கினான்.

"நான் அதை மீண்டும் கோர்த்து தங்களிடம் சேர்ப்பித்துவிடுகிறேன்!" என்று கூற, அவன் சிரித்தபடி அங்கிருந்து அகன்றான்.

"லலாடிகா! இந்தச் சங்கிலி உனது பொறுப்பு. அதனைச் செப்பனிட்டு, வந்தியத்தேவரிடம் சேர்த்துவிடு" என்று அதை நீட்ட, லலாடிகா அதனைப் பெற்றுக் கொண்டாள். அதன் பிறகு அனைவரும் தொடர்ந்து படியேறினர்.

"படிகளின் பின்பாகச் செல்லும் பாதையில் தொடர்ந் தால், பணியாளர்கள் அறை, காவலர்கள் ஓய்வு அறை, வஸ்திரக் கொட்டடி, ஆபரண கஜானா, அடுக்களை, வைத்திய சாலை, ஆயர்கள், தேரோட்டிகள், புரவி மேய்ப்பாளர்கள் ஆகியோர் தங்கும் அறை என

அனைத்தும் உள்ளன.” - கரிகாலன் பெருமிதத்துடன் கூறியபடி படிகளில் அவர்களை வழிநடத்தினான்.

படிகள் ஒரு குறிப்பிட்ட உயரத்தில் பிரிந்தன. அங்கு படிகள் தென்பகுதி, மேற்கு பகுதி, மற்றும் வடக்குப் பகுதி என்று மூன்றாகப் பிரிந்தன. படிகள் பிரியும் இடத்தில் நின்ற ஆதித்த கரிகாலன், அவர்களுக்கு விளக்கினான்.

“இதோ நேரே மேற்காகச் செல்லும் படிகள் எனது ஜாகைக்குச் செல்லும். அங்கேதான் எனது அந்தப்புரம், ஆலோசனை மண்டபம், எனது தேகப்பயிற்சி செய்யும் இடம், விளையாட்டுக் கூடம் எல்லாம் உள்ளது. இதோ, தென்புறம் செல்லும் ஜாகையில்தான் விருந்தினர் தங்கும் பகுதி உள்ளது. தற்போது சோழ மன்னர் தங்கியுள்ளார். இதோ.. வடதிசை செல்லும் படிகள்தான் உங்கள் ஜாகைக்குச் செல்லும் வழி. நீங்கள் அங்குதான் தங்கப் போகிறீர்கள்” என்றவன், பணியாளர் களுக்கு வழி காட்ட, கல்பா மற்றும் லலாடிகாவின் உடைமைகள் வடக்குப் பகுதியில் உள்ள ஜாகைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. பார்த்திபனது உடைமைகள் நேராக மேற்கு பகுதியில் இருந்த ஆதித்த கரிகாலனின் ஜாகைக்கு எடுத்துச் செல்லப்பட, கல்பா திகைத்தாள்.

“அவை.. இங்கே எங்களுடைய வடக்கு பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்..” - கல்பா பதற்றத் துடன் சொல்ல, ஆதித்த கரிகாலன் அவளைப் புன்னகை யுடன் பார்த்தான்.

“சரியாகத்தான் எடுத்துச் செல்கின்றனர். எனது நண்பன் பார்த்திபன் என்னுடைய ஜாகையில் தங்கு வான். அவனுக்காக மூன்று அறைகள் அங்கே ஒதுக்கப் பட்டுள்ளன” என்றதும் கல்பா சினத்துடன் பார்த்திபனை நோக்க, அவன் பரிதாபமாக அவளைப் பார்த்தான்.

வேண்டாவிருப்பாக வடதிசையில் இருந்த தங்களது பகுதிக்கு லலாடிகாவுடன் நடந்தாள்.

"எனது பாட்டி கங்காதேவியார், அதுதான், அரிஞ்சயனின் மனம் கவர்ந்தவர், அடிக்கடி ஒரு பழமொழியைக் கூறுவார். 'அரசமரத்தைப் பிடித்த பேய் அதன் கீழே இருந்த பிள்ளையாரையும் பிடித்தது போல' என்பார். உங்கள் அண்ணனைப் பிடித்த சோழப் பேய் என்னையும் இங்கே கொண்டு வந்துவிட்டதே! நான் என்னதான் செய்யப் போகிறேன்!" - லலாடிகாவிடம் மெல்லிய குரலில் புலம்பியபடி நடந்தாள்.

அவர்கள் தங்க இருந்த பகுதியை குழலழகன் காட்டினான். அந்தக் கோபத்தின் நடுவே கூட தன்னுள் எழுந்த பிரம்மிப்பை கல்பலதாவினால் மறைக்க முடியவில்லை.

"நம் இருவருக்கா இவ்வளவு பெரிய பகுதி?" - மலைத்துப் போனாள் கல்பா. வடதிசை சென்ற படிகளின் முடிவில் ஒரு நீண்ட பாதை தென்பட்டது. அந்தப் பாதையின் முடிவில் ஒரு வட்டமான கூடம். கூடத்தில் ஆறு அறைகள் காணப்பட்டன.

"இங்குதான் நீங்கள் தங்க வேண்டும். இந்த ஆறு அறைகளும் தங்களது உபயோகத்திற்காக ஒதுக்கப் பட்டுள்ளது." - குழலழகன் கூறிவிட்டு, பணியாளர்கள் சுமந்து வந்த உடைமைகளை மையத்தில் இருந்த ஒரு அறையில் ஒழுங்குபடுத்தி வைக்கத் துவங்கினான்.

"ஒரு காலத்தில் தங்குவதற்கு இடமில்லாமல், பாட்டி, அம்மா, நான் ஆகியோர் ஒரு ஆலயத்தின் மடப்பள்ளியில் கூடத் தங்கியிருக்கிறோம், தெரியுமா?" - துக்கம் நெஞ்சை யடைக்கக் கூறினாள் கல்பலதா.

"அதனால்தான் இன்று சோழ இளவரசன் பொன்னாழி ஒன்றை எழுப்பி, அதில் உனக்குப் பெரிய இடத்தை ஒதுக்கியிருக்கிறான் போலும்!" - லலாடிகா கூறினாள்.

"பிதற்றாதே. இதற்கெல்லாம் மயங்குபவளா நான்? இராமன் இருக்குமிடம் சீதைக்கு அயோத்தி என்பது

போன்று, எனது பார்த்திபன் இருக்கும் இடத்தில் நான் இருக்கிறேன்.” - கல்பா கூறினாள்.

“அண்ணி! வட்டமான இந்தக் கூடத்தில் இடப் புறத்தில் இருக்கும் முதல் அறையை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். எனது அண்ணன் வருவதற்கும், போவதற்கும் மிகவும் வசதியாக இருக்கும். நான் உங்கள் அறைக்கு நேரே இருக்கும் கடைசி அறையை எடுத்துக் கொள்கிறேன். உங்கள் அறைக்கு வருவோர் போவோரின் மீது ஒரு கண்ணை வைத்துக்கொள்வதற்கு எளிதாக இருக்கும்!” -சொல்லியபடி லலாடிகா கடைசி அறையை நோக்கி நடக்க, கல்பலதா, முதல் அறையினுள் பிரவேசித்தாள்.

“கடைசி அறையில் நுழையும் அந்த நெடிய பெண் யார், குந்தவை?” -தெட்டக்கனி கேட்டாள்.

“அவள் பெயர் லலாடிகா! பார்த்திபனுக்குக் கிடைத்த திடீர் தங்கை!”-குந்தவை அலட்சியமாகக் கூறினாள்.

“அதென்ன லலாடிகா? பெயர் விசித்திரமாக இருக்கிறதே!” -தெட்டக்கனி வியந்தாள்.

“லலாடிகா என்றால் ஆபரணப் பதக்கம் என்று பொருள். பல்லவர்கள் பொதுவாகப் பெண்களுக்கு ஆபரணங்களின் பெயரைத்தான் வைப்பார்கள். ஒரு காலத்தில் நவரத்ன பல்லவி என்கிற பெயரில் ஒரு பல்லவ இளவரசி, இதோ நாம் இருக்கும் பொன்னாழி மாளிகையில் வசித்தாளாம். அப்போது இந்த மாளிகையின் பெயர் பிரவாள மாளிகை. அந்த நவரத்ன பல்லவி தற்கொலை செய்து கொண்ட பிறகு இங்கு யாரும் வசிக்கவில்லை என்கிறார்கள். இங்கே தங்கிய களப்பிரர்கள் பல கொலைகளையும் கொள்ளைகளையும் புரிந்தார்களாம். வழிப்பறிகளைச் செய்தவர்கள் தாங்கள் கொல்லும் மனிதர்களின் உடல்களை இங்கே பிரவாள மாளிகையில்தான் புதைப்பார்களாம். அதன் பிறகு இங்கே பல துர்மரணங்கள் நிகழ்ந்ததால், பல்லவர்கள்

இந்த இடத்தை அப்படியே விட்டுவிட, இந்த மாளிகை பாழடைந்து போய்விட்டதாம்!" - குந்தவை கூறினாள். அவளுடைய பார்வை இன்னும் மூடியிருந்த கல்ப லதாவின் அறைக் கதவையே வெறித்துக் கொண்டிருந்தது.

"அப்படிப்பட்ட மாளிகையிலா, நம் இளவரசர் பொன்னாழியைக் கட்டியிருக்கிறார்?"

"நான் குழலழகனையே கேட்டேன், ஏன் ஒரு பேய் நடமாடும் மாளிகையைப் போய் ஆதித்த கரிகாலனுக்கு பரிந்துரை செய்தீர்கள் என்று? நேமியங்கையர்தான் இந்த இடத்தைக் கண்டு பிடித்தாராம். பார்த்திபன் கூட வேண்டாம் என்று நண்பனை தடுத்திருக்கிறான். ஆனால் எனது அண்ணன்தான் 'பேய், பைசாசங்களில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது' என்று கூறி இங்கே பொன்னாழியை எழுப்பியிருக்கிறான்!" - குந்தவை கூறினாள்.

"ஐயோ! ஏன் குந்தவை இந்தத் தகவலை எல்லாம் என்னிடம் கூறினாய்.. இன்று இரவு நான் இந்த மாளிகையில் எப்படி நிம்மதியாக உறங்குவேன்?" - தெட்டக்கனி நடுங்கினாள்.

"அப்படி பேய் வந்தால், நான் குந்தவையின் நெருங்கிய தோழி என்று கூறு. உன்னை ஒன்றும் செய்யாது?" - சிரித்தபடி கூறிய குந்தவையின் பார்வை அப்படியே நிலைகுத்தி நின்றது.

கீழே மூடியிருந்த அறைக் கதவை தட்டியபடி ஆதித்த கரிகாலன்தான் நின்றிருந்தான். தெட்டக்கனியும் ஆதித்த கரிகாலன் வந்து நிற்பதைப் பார்த்ததும் சட்டென்று தனது தலையை மாடத்திலிருந்து இழுத்துக் கொண்டாள். ஒருவேளை, கரிகாலன் தற்செயலாக அண்ணாந்து பார்த்து இவர்களைக் கவனித்துவிட்டால், குந்தவை அவனுக்குத் தங்கை என்கிற முறையில் நிலைமையைச் சமாளித்துவிடுவாள். ஆனால் இவள் வெறும் தோழிதானே. இவளைக் கொண்டு ஆதித்த கரிகாலன்

குந்தவையைப் பழிவாங்க முயல்வான்.. அதற்கு இவள் இடம் கொடுக்கக் கூடாது.

"பாரேன்! அந்தக் கல்பலதாவுக்கு வந்த யோகத்தை. எனது பாட்டன் பராந்தகன் பாணர்களை அழித்து, கங்கர்களுக்கு அடிமைகளாய் விற்றதற்குப் பரிசாகக் கோலாகல நகரின் ஸ்வர்ண சுரங்கங்கள் கிடைத்தன. அந்த ஸ்வர்ணத்தை வழித்தெடுத்து பொன்னாழியைக் கட்டியுள்ளான் ஆதித்த கரிகாலன். சோழ இளவரசியான நான் விருந்தினரைப் போன்று பொன்னாழியில் தங்கியிருக்க, ஊர் பெயர் தெரியாத பெண்ணை இளவரசியைப் போன்று தங்க வைக்கிறான். இதுதான் காலத்தின் கோலம் என்று கூறுவார்கள் போலும்!" என்றவள் சினத்தினால் முகம் சிவக்க, மாடத்திலிருந்து தனது தலையை நீக்கியவள், உப்பரிகையில் இருந்து தனது ஜாகையை நோக்கிச் சென்றாள். தெட்டக்கனி அவளைப் பின்தொடர்ந்தாள்.

தனது அறைக்கதவு தட்டப்படுவதைக் கேட்டு, கல்பலதா கதவைத் திறக்க, ஆதித்த கரிகாலன் வெளியே நிற்பதைக் கண்டு திகைத்தாள். வேர்த்து விறுவிறுத்துப் போன அவள், எதிரே இருந்த லலாடிகாவின் அறைக் கதவை நோக்கினாள். அவளது அறைக் கதவு மூடியிருந்தது.

"உனது அறை வசதியாக இருக்கிறதா, கல்பா?" - ஆதித்த கரிகாலன் முகத்தில் ஆர்வமும், மென்மையும் ஒருங்கே காணப்பட, ஆயிரம் முட்களால் தனது மேனி துளைக்கப்படுவது போன்று, அவனது பார்வை தன்னை நோக்குவதை உணர்ந்தாள், கல்பா.

அசோகவனத்தில் இராவணன் வரும்போதெல்லாம் சீதை எப்படி எல்லாம் துடித்திருப்பாள் என்பதை உணர்ந்தவளாக, அவனை எப்படி சமாளிப்பது என்கிற குழப்பத்துடன் நின்றாள். பிறகு தன்னைச் சுதாரித்துக் கொண்டவள், கதவை அகலமாகத் திறந்தாள். "மன்னித்துக் கொள்ளுங்கள் இளவரசே! நான் இன்னும்

பிரம்மிப்பினில் இருந்து மீளவில்லை. பார்த்திபர் தனது மாளிகையில் இடம் கொடுத்த போதே நான் அதனை சொர்க்கபுரியாகத்தான் நினைத்தேன். இப்போது வருணிக்க சொற்கள் இல்லாமல் தவிக்கிறேன். பொன்னாழியைப் போன்றதொரு மாளிகையை நான் இதுவரையில் கண்டதே இல்லை!" - பரவசத்துடன் பேசுபவளை போன்று குரலில் மலைப்பினைக் காட்டினாள், கல்பலதா.

தனது மனம் கவர்ந்தவளை மலைக்க வைத்துவிட்ட திருப்தி அவன் முகத்தில் தெரிந்தது.

"நாளைக் காலை விடியலில் எழுந்து பார், கல்பா. கூவும் பறவைகளும் ஆடும் மயிலினங்களும், துள்ளும் மான்களும், பாயும் முயல்களும், அமைதியாக நீந்திச் செல்லும் அன்னங்களும் பொன்னாழியை இன்னும் அழகாகக் காட்டும். எல்லாவற்றையும்விட, நீயும் வந்துவிட்டதால், இந்தப் பொன்னாழி இன்னமும் ஜொலிக்கும்!" என்றான்.

கல்பலதா திணறினாள். நல்லவேளையாக, லலாடிகா தனது அறைக் கதவைத் திறந்து கொண்டு வர, ஆதித்த கரிகாலன் கல்பாவை காதலுடன் பார்த்துக் கொண்டே அங்கிருந்து அகன்றான்.

ஓங்கி இரு கைகளாலும் தனது நெற்றியில் மாற்றி மாற்றி அடித்துக் கொண்டு மஞ்சத்தில் விழுந்தாள் கல்பா.

"என்ன நடந்தது?" - பின்பாக வந்து நின்ற லலாடிகா கேட்டாள்.

"அசோகவன சீதையாக நான் இருக்க, இராவணன் தனது முதல் விஜயத்தை முடித்துவிட்டு போகிறான்!"- வெறுப்புடன் கூறினாள், கல்பலதா.

"கவலைப்படாதே! இராமனும் அசோகவனம் வந்து விட்டான். உன் கூடவே அனுமானும் இருக்கிறான்" என்றாள்.

"அது யார் அனுமான்?" - வியந்தாள் கல்பா.

"ஏன்? நான்தான் அனுமான்!" - என்று லலாடிகா தனது வாயை அனுமனைப் போன்று வைத்துக் கொள்ள, கல்பா நகைத்தாள்.

அன்று முழுவதும், பார்த்திபனுக்கு நிறைய அலுவல்கள் இருந்திருக்க வேண்டும். கல்பலதாவைக் காண அவன் வரவேயில்லை. ஒருவேளை இரவு பார்த்திபன் அவளைத் தேடி வருவான் என்று காத்திருந்தாள். இவள் உறங்கச் செல்லும்வரை அவன் வரவேயில்லை. லலாடிகாதான் உறங்கப்போவதற்கு முன்பாகக் கல்பலதாவைத் தேடி வந்தாள்.

"வந்தியத்தேவரின் பொற்சங்கிலியை தாதியிடம் கொடுத்து அரண்மனைப் பொற்கொல்லரிடம் செப்பனிட்டு வரச்செய்தேன். இதோ பார்!" என்று சங்கிலியை உயர்த்திக் காட்டினாள், லலாடிகா.

கல்பாவின் பார்வை அந்தச் சங்கிலியின் பதக்கத்தில் பதிந்தது. புலிநகங்களைப் போன்ற கற்கள் இழைத்த ஸ்வர்ண பதக்கம் அது. புலிநகங்கள் என்றுதான் அவன் கழுத்திலிருந்து சங்கிலியைத் தவறுதலாக பறித்த போது அவள் நினைத்திருந்தாள். ஆனால் இப்போது அருகே உற்று நோக்கிய போது அந்தப் பதக்கம் மீன் வடிவில் காணப்பட்டது. அந்தக் கல்லிழைத்த பதக்கத்தின் மையத்தில் அழகிய வீணையின் உருவம் பதிக்கப் பட்டிருந்தது.

"பதக்கம் மிக அழகாக இருக்கிறது. ஆமாம்! எதற்காக வீணை சின்னத்தைப் பொறித்திருக்கிறார், வந்தியத் தேவன்?" - கல்பா கேட்டாள்.

"அவர் பெரும்பாணப்பாடி நாட்டவர்தானே? பெரும் பாணப்பாடியின் சின்னம் வீணைதானே. பாணர்கள் வீணையை மீட்டித்தானே பாடுவார்கள்!" - லலாடிகா கூற, அதை ஆமோதித்தபடி தலையசைத்தாள், கல்பலதா.

அன்றிரவே குழலழகன் மூலமாக அந்தச் சங்கிலியை வந்தியத்தேவனுக்கு அனுப்பினாள், கல்பலதா.

கல்பலதாவிடம் அளவளாவிவிட்டு, தனது அறைக்கு உறங்கப் போவதற்கு முன்பாக அவளது செவியில் கிசுகிசுத்தாள். "கதவைத் தாளிடாதே, அண்ணி. பிறகு அண்ணன் வந்து திண்டாடப் போகிறார்!"

"நாளெல்லாம் அவர் என்னைத் திண்டாட வைத்திருப்பது உன் கண்களில் படவில்லை. அண்ணன் திண்டாடக்கூடாது என்று எனக்கு அறிவுரை கூறுவதில் மட்டும் குறைச்சல் இல்லை!" - கேலியாகக் கூறிய கல்பலதா, தனது அறைக் கதவை மூடிவிட்டு, அதன் தாளினைப் போடாமல், மஞ்சத்தில் சென்று சரிந்தாள்.

நடுநிசி-

'இந்தப் பார்த்திபன் விரைவாக வரக்கூடாதா? இந்த இரவில் என்ன பணிகள் இருக்க முடியும்?' - எரிச்சலுடன் அறையில் நடந்து கொண்டிருந்தவள், எழுந்து குவளையில் இருந்த நீரைப் பருகிவிட்டு, சாளரத்தின் அருகே சென்று நின்றாள். சிலுசிலுவென்று நந்தவனக் காற்று அவளை உரச, கொதித்துக் கொண்டிருந்த மனதிற்கு அது இதத்தை அளித்தது. இதமான காற்றை அனுபவித்தபடி நின்றவள், மீண்டும், மஞ்சத்தை அடைந்து, அப்படியே அதன் மீது சரிந்தாள்.

யோசித்தபடி விட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள் உறங்கிப் போனாள். பொன்னாழி அடங்கி விட்டது. எங்கும் அமைதி தாண்டவமாடியது. முருக்கத்திப் பாதையில் மரங்களில் கூடுகளைக் கட்டியிருந்த பறவைகளின் குஞ்சுகள் இயம்ப, அவற்றைத் தனது இறக்கைகளால் மூடின, தாய் பறவைகள். இரவில் நடமாடும் ஆந்தைகளுக்கு குரல் எழுப்பி, நாம் இருக்கும் இடத்தைக் காட்டி கொடுத்து விடாதீர்கள் என்று குஞ்சுகளை எச்சரிப்பது போன்று இருந்தன, தாய் பறவைகளின் அந்தச் செய்கை.

நந்தவன தீபஸ்தம்பத்தில் தீபக்கப்பரை ஒளிர்ந்து கொண்டிருக்க, பொன்னாழி மனித நடமாட்டம் இன்றி இருந்தது. மனித நடமாட்டம் மட்டும் அல்ல.. பகலில் காணப்பட்ட தகதகப்பும், மினுமினுப்பும் இன்றி, இருளில் மறைந்திருந்தது பொன்னாழி. காற்றாட உப்பரிகை மாடத்தில்தான் படுத்திருந்தாள், தெட்டக்கனி. குந்தவை உறங்கியதும், அவளது அறையைவிட்டு நீங்கி, உப்பரிகை மாடத்திற்கு கையில் விரிப்பு மற்றும் தலையணையுடன் வந்துவிட்டாள். குந்தவை பலமுறை அவளைத் தனது அறையிலேயே தங்கச் சொல்லியிருக்கிறாள். ஆனால் தெட்டக்கனி அதற்கு இசைவு தெரிவிக்க மறுத்து விட்டாள். பொதுவாக நம் மீது மிக அன்பு செலுத்தும் மனிதருடன், ஒன்றாக உணவு உண்பதோ, அல்லது படுப்பதோ தவறு. உண்ணும் போதும், உறங்கும் போதும் முகத்திலும், மேனியிலும் தோன்றும் விகாரங்கள் நம் மீது அன்பு செலுத்துபவர்களின் நன்மதிப்பை குறைக்கும். எனவேதான், குந்தவையின் அறையில் உறங்குவதைத் தவிர்த்தாள். குந்தவைக்கு உடல்நலம் பாதிக்கப்பட்ட போது நாளெல்லாம் அவளது அறையில் உறங்காமல் தங்கியிருந்தாள். எனவே, தனது அறையில் தங்கச் சொன்னால் அவள் உறங்கமாட்டாள் என்பதால், குந்தவையும் அவளை அதன் பின் வற்புறுத்தவில்லை.

உப்பரிகையில் அன்று மாலை குந்தவையும், இவளும் நின்றிருந்த இடத்தில் ஒரு திண்ணை அமைந்திருந்தது. அங்கு சென்றுதான், துணியை விரித்துத் தலையணையை அதன் மீது வைத்து, உறங்குவதற்கு முற்பட்டாள். ஆனால் கரிய நிழலாக ஓங்கி வளர்ந்திருந்த பொன்னாழி கோபுரங்கள் அவளுக்குத் திகிலை ஏற்படுத்த, உறக்கம் பிடிக்கவில்லை. கண்களால் இப்படியும் அப்படியும் நோக்கியபடி கிடந்தாள். கோட்டான் ஒன்று, எங்கோ அலற, அவ்வளவுதான்.. அவளது கட்டுப்பாடு தளர்ந்தது. ‘ஆ’ என்று பயத்துடன் அலறியபடி எழுந்து அந்தத் திண்ணையில் அமர்ந்தாள்.

அன்று மாலையில் தானும், குந்தவையும் தலையை நீட்டி ஆதித்த கரிகாலனை பார்த்த மாடம் அருகில்தான் இருந்தது. அந்த மாடத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். பொன்னாழி மாளிகை, இரவு வேளைகளில் பிரவாள மாளிகையாக மாறுகிறதோ என்னவோ? குந்தவை அந்த மாளிகையைப் பற்றிக் கூறிய தகவல்களைக் கேட்ட பின்னர், உப்பரிகையில் தனியாக வந்து படுத்தது தவறோ? உறக்கம் வராமல் சிந்தித்தபடி அந்த மாடத்தையே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

கீழே சுளுந்து ஒன்று எரிந்து கொண்டிருக்க வேண்டும். அதனால் மாடத்தில் மங்கிய ஒளி பரவியிருந்தது அந்த உப்பரிகையின் இருளில், மாடத்தின் வழியாக தென்பட்ட ஒளி சற்றுத் தைரியத்தை தரவேதான், தெட்டக்கனி அந்த மங்கிய ஒளியையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தாள்.

திடீரென்று உப்பரிகையின் கூரை வரை ஓங்கி வளர்ந்து ஒரு மனித உருவத்தின் நிழல் கடந்து செல்வது மாடத்தின் வழியாக தெரிந்தது. கீழே யாரோ நடந்து செல்கிறார்கள். இந்த நடுநிசியில் யார் செல்வது? தெட்டக்கனி தான் படுத்திருந்த திண்ணையைவிட்டு நீங்கி, மாடத்தின் உள்ளே தலையை நீட்டி கீழே கவனித்தாள்.

பாதுகாப்பிற்காக பொன்னாழியின் தென்பகுதி, மேற்குப்பகுதி மற்றும் வடக்கு பகுதிகளைக் கண் காணிப்பதற்காக அந்த மாடங்கள் அமைக்கப் பட்டனவோ அல்லது காற்று புகுவதற்காகவோ தெரியாது. ஆனால் இப்போது தெட்டக்கனி கீழே நடப்பதை நோட்டம் விடுவதற்கு வசதியாக இருந்தது அந்த மாடம்.

மூன்று பாதைகள் சந்திக்கும் இடத்தில் சுளுந்து ஒன்று ஒளிர்ந்து கொண்டிருப்பதை தெட்டக்கனி கண்டாள். அதன் ஒளிதான் உப்பரிகையில் படுத்திருந்த இவளுக்குத்

தெரிந்திருக்கிறது. இப்போது அந்தச் சுளுந்தினை ஓர் உருவம் கடந்து கொண்டிருந்தது. அந்த உருவத்தின் நிழல் அந்தப் பகுதியைக் கடக்கும் போது, ஓங்கி வளர்ந்ததால் இவளது கண்களுக்கு புலப்பட்டிருக்கிறது.

விறைப்பாக நடக்கும் அந்த உருவத்தை கவனித்தாள். அவளுக்கு மயிர்க்கூச்சம் எடுத்தது. ஆதித்த கரிகாலன் தான் மேற்குப் பகுதியில் இருந்த தனது ஜாகையில் இருந்து வெளிப்பட்டு, வடக்குப் பகுதியின் பாதையில் திரும்பிக் கொண்டிருந்தான்.

'இந்த நடுநிசி வேளையில், இளவரசர் எதற்காக வடக்குத் திசை ஜாகைக்குப் போகிறார்?' ஆதித்த கரிகாலனை வியப்புடன் அவள் பார்த்துக் கொண்டிருக்க, அவன் வடக்குப் பாதையின் முடிவில் இருந்த வட்டக்கூடத்தை அடைந்து கல்பலதாவின் அறையின் முன்பாக நின்றான். அறைக் கதவை அவன் தள்ள, அது திறந்து கொண்டது. உள்ளே நுழைந்த ஆதித்த கரிகாலன் கதவை சாற்றினான்.

தெட்டக்கனி வெலவெலத்துப் போனாள். இந்த நடுநிசியில் பார்த்திபனின் உறவுக்கார பெண்ணின் அறைக்குள் இளவரசர் செல்கிறாரே.. அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. குந்தவையை எழுப்பி இந்தக் காட்சியை அவள் காணச் செய்வது நல்லது என்று தோன்ற, குந்தவையின் அறையை நோக்கி ஓடினாள், தெட்டக்கனி.

கல்பலதாவின் அறைக்குள் நுழைந்த ஆதித்த கரிகாலன் அவளது மஞ்சத்தின் முன்பாக அப்படியே உறைந்து போய் நின்றிருந்தான். திறந்திருந்த அவனது கண்கள், மஞ்சத்தில் துயில் செய்து கொண்டிருந்த கல்ப லதாவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. கல்பலதா மஞ்சத்தில் உறங்கிக் கொண்டிருக்க, அருகே நின்றபடி உறங்கிக் கொண்டிருந்தான், ஆதித்த கரிகாலன்.

பொதுவாக ஆண்களைக் காட்டிலும், பெண்களுக்கு உள்ளுணர்வு அதிகம். கன்னிப் பெண்களைக் காட்டிலும்

மணமான பெண்களுக்கு உள்ளுணர்வு இன்னும் அதிகம். ஆண்களின் தன்மைகளான துணிவு, வீரம், வேகம் மற்றும் ஆளுமை என்கிற நான்கும், 'நம்மை யார் என்ன செய்துவிட முடியும்' என்கிற எண்ணத்தை ஏற்படுத்தி, உறக்கத்திலும், உள்ளுணர்வை மீறிய ஒரு தன்னம்பிக்கை காணப்படும். அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு ஆகிய நான்கு வகைத் தன்மைகளைக் கொண்ட பெண்களுக்கு உறக்கத்திலும் யாரும் நம்மை நெருங்கிவிடக் கூடாதே என்கிற உள்ளுணர்வு இருக்கும். ஆனால் திருமணம் ஆன பெண்களுக்கோ, இந்த நான்கு வகைக் குணங்களைத் தவிர, பதிபக்தி என்கிற தன்மையும் சேர்ந்திருக்கும். உறக்கத்திலும் 'அவனுக்குரியவள் நான்' என்கிற எண்ணம் மேலோங்கியிருக்கும். உறக்கத்திலும், 'அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்' என்கிற எண்ணங்கள்தான் நிலவும். அதுவும், கணவன் அருகில் இல்லாத போது, அவனைப் பற்றிய எண்ணங்கள் உள்ளுணர்வாக ஓடிக் கொண்டிருக்கும்.

கணவன் பார்த்திபன் அருகில் இல்லையே என்கிற வருத்தத்துடன் உறங்கச் சென்றவளுக்கு, 'இதோ மஞ்சத்தின் அருகில் யாரோ நிற்கிறார்கள்' என்று உள்ளுணர்வு தெரிவிக்க, கல்பலதாவின் புருவங்கள் நெளிந்தன. பிறகு மெதுவாகத் தனது நேத்திரங்களைத் திறந்தாள்.

"வந்துவிட்டீர்களா?" - மஞ்சத்தின் அருகில் நிழலாகத் தெரிந்த அந்த உருவத்தைக் கவனித்ததும், பரபரப்புடன் மஞ்சத்தில் எழுந்து அமர்ந்தாள். கலைந்திருந்த தனது குழல்களைச் சமன்படுத்திக் கொண்டாள். தனது கேள்விக்குப் பதிலளிக்காமல் ஆடாமல், அசையாமல் நின்ற அந்த உருவத்தை வியப்புடன் நோக்கினாள்.

மஞ்சத்தின் அருகே இருந்த அம்சதூளிகா விளக்கில் எண்ணெய் குறைந்துவிட்டபடியால், மங்கலாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. அதன் ஒளியில் அந்த உருவத்தின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். அவளது இதயமே வாய்

வழியாக வெளியே வந்து விழுந்துவிடுவது போன்று உணர்ந்தாள். ஆதித்த கரிகாலன்தான் அங்கே நின்று கொண்டிருந்தான். அவனது கண்கள் திறந்து கொண்டிருந்தனவே தவிர, அவற்றில் உணர்வில்லை. ஆதித்த கரிகாலன் உறக்கத்தில் உலா வருபவன் என்பதை அறிந்திருந்தவள்தான். முன்பொருநாள், இவளும், லலாடிகாவும் ராஜவீதியில் விழுந்து கிடந்த போது, அவர்களைக் கவனியாமல் அவன் நடந்து சென்றதை பார்த்திருந்தவர்கள்தான். இருப்பினும், திருமணமான தனது அறையில், நடுநிசியில் அந்நிய புருஷனைக் கண்டதும், அவள் கலவரப்பட்டுப் போனாள். விழிகள் திகிலுடன் விரிய, தன்னையும் அறியாமல் அலறுவதற்காக வாயைத் திறந்தாள், கல்பலதா.

அப்போது அவளது வாயை பலமிக்க முரட்டுக் கை ஒன்று பொத்தியது. இன்னொரு கை அவளது முதுகைத் தட்டி ஆசுவாசப்படுத்தியது.

"பயப்படாதே கல்பா! நான் பார்த்திபன்தான். ஆதித்த கரிகாலன் வழக்கம் போல் உறக்கத்தில் உலா வந்திருக்கிறான். ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறான். அலறி அவனை எழுப்பி அரண்மனையில் களேபரத்தை உண்டு செய்துவிடாதே. ஒன்றும் செய்யமாட்டான். தானாக விலகிச் சென்றுவிடுவான்" என்று கூறியபடி அவளை தனது மார்போடு அணைத்துக் கொண்டான்.

கல்பா தனது கண்களை இறுக்க மூடிக்கொண்டு பார்த்திபனின் தோளினில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளை அணைத்தபடி மஞ்சத்தில் அமர்ந்திருந்த பார்த்திபன், ஆதித்த கரிகாலனின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தான்.

'பிறந்தது முதலாகவே பல பிரச்னைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறான், ஆதித்த கரிகாலன். ஜாதகத்தில் உள்ள சர்ப்ப தோஷத்தால் மரண கண்டம், உடல் ரீதியாக நரம்புத் தளர்ச்சி, மன ரீதியாக அழுத்தம் என்று

பல துன்பங்களை அனுபவித்து வருகிறான். அவனைச் சோழ அரியணையில் அமர்த்தும்வரை எச்சரிக்கையுடன் அவனைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவன் சோழ மன்னனாக அமர்ந்து அத்திமலைத்தேவனை வைத்து அஸ்வமேத யாகம் செய்தால், அவனது தோஷம் நீங்கிவிடும். அதன் பிறகு அத்திமலைத்தேவனை உன் வசம் ஒப்படைக்கிறேன்!'- மலையமான் கூறியது செவிகளில் ஒலித்தது.

ஆதித்த கரிகாலனின் முகத்தை கவலையுடன் பார்த்தான். இவன் பிரச்னைகள் தீருமா? நல்லபடியாக இவன் மன்னனாக அமர்ந்தால்தானே, அத்தி மலையானை இவன் அடைய முடியும்.

திடீரென்று, ஆதித்த கரிகாலனிடம் இருந்து குறட்டை ஒலி எழ, அதைச் செவியுற்ற கல்பலதாவின் மேனி நடுங்கியது. ஆதித்த கரிகாலன் நிதானமாகத் திரும்பி வந்த வழியே நடந்தான். உடனே, பார்த்திபன் கல்பலதாவை தனது பிடியில் இருந்து விடுவித்துவிட்டு, மஞ்சத்தில் இருந்து தாவிச் சென்றான்.

அறையின் கதவு ஒருக்களித்து இருக்க, அதனைத் திறந்தபடி அறையைவிட்டு வெளியேறினான், ஆதித்த கரிகாலன். ஆதித்த கரிகாலன் வெளியேறியதும், சடாரென்று அறைக் கதவைத் தாளிட்டான், பார்த்திபன்.

கல்பலதாவின் அறையில் இருந்து ஆதித்த கரிகாலன் வெளியே வருவதை, உப்பரிகை மாடத்தில் இருந்து குந்தவையும், தெட்டக்கனியும் கவனித்துக் கொண் டிருந்தனர். குந்தவை அதிர்ந்து போய் நின்றாள். ஆதித்த கரிகாலன் கல்பாவின் அறைக்குள் நுழைவதைக் கண்டு, குந்தவையை எழுப்ப தெட்டக்கனி ஓடிச்சென்ற போது தான், பார்த்திபனும் அந்த அறையினுள் நுழைந்திருந் தான். உள்ளே இருந்து பார்த்திபன் கதவைத் தாளிடும் ஒலி கூட அந்த நடுநிசி வேளையில் துல்லியமாக மாடத்தில் நின்ற அவர்களுக்கு கேட்டது.

தனது மேற்கு ஜாகையினுள் ஆதித்த கரிகாலன் திரும்பி நடந்து செல்லும் வரையில் அங்கேயே நின்றாள், குந்தவை. கல்பலதாவின் மூடிய அறைக் கதவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள், தெட்டக் கனியை திரும்பி நோக்கினாள்.

"நல்லவேளையாக என்னை உறக்கத்தில் இருந்து எழுப்பினாயே. இதனை வளரவிடக்கூடாது!" - குந்தவையின் குரலில் தீவிரம் தெரிந்தது.

மீண்டும் மஞ்சத்தை நோக்கி நடந்தான், பார்த்திபன்.

"வேண்டாம், பார்த்திபரே! இந்த விஷப்பரீட்சை தேவையில்லை. நாம் நமது மாளிகைக்கே சென்று விடுவோம். அன்றாடம் இவன் இப்படி வந்து நிற்பானோ என்று எனக்கு அச்சமாக உள்ளது." - கல்பா அவனது செவிகளில் கிசுகிசுத்தாள்.

"சிறிது காலம்தான் கல்பா. சுந்தர சோழர் மிகவும் பலவீனமாகக் காணப்படுகிறார். அவரது காலம் முடிந்ததும், ஆதித்த கரிகாலன் மன்னனாக அமர்ந்து விடுவான். அதன் பிறகு அத்திமலையானை மீட்டுக் கொண்டு நாம் நம் வழியே செல்லலாம். யார் கண்டார்கள்? அபராஜிதனுக்கு ஆதித்தன் இழைத்த கொடுமைக்கு அவன் பெயரைக் கொண்ட இந்த ஆதித்தனே பரிகாரம் செய்வானோ என்னவோ.. நமது பல்லவத்தை நண்பனாகிய என்னிடமே கொடுப்பதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன. என்னிடம் பல்லவத்தின் மணிமுடி வந்ததும், அதனை உன்னிடம் கொடுத்து விடுகிறேன். நீதானே, நியாயப்படி அரசாள வேண்டியவள்?"

"வேண்டாம் பார்த்திபரே! பல்லவத்திற்கு பெண் ராசி இல்லை என்று எனது பாட்டியார் கூறியுள்ளார். நீங்களே மன்னராகப் பல்லவத்தை ஆளுங்கள். எனக்கு மணிமுடி தேவை இல்லை" - என்றாள் கல்பா.

"பின் உனக்கு என்னதான் தேவை?" - பார்த்திபன் கேலியுடன் அவளைக் குனிந்து நோக்கினான்.

"மூன்றாம் நந்திவர்மன் செய்த பிழையை இப்போதே நீங்கள் திருத்த வேண்டும்!" - கல்பா கூறினாள்.

மூன்றாம் நந்திவர்மன் என்ன பிழை செய்தான்? யோசித்த பார்த்திபனின் இதழ்களில் குறுநகை பிறந்தது. மூன்றாம் நந்திவர்மன் செய்த பிழை, பல்லவத்தை வடபல்லவம், தென்பல்லவம் என்று இரண்டு கூறாகப் பிரித்து நிருபதுங்கவர்மனுக்கும், கம்பவர்மனுக்கும் தனித்தனி நாடுகளாக அளித்ததுதான். அவன் செய்த பிழையை இவன் எப்படிச் சரி செய்ய முடியும்? முடியும்! கம்பவர்மனின் மகன் அபராஜிதவர்மனின் வழித் தோன்றலான கல்பலதாவும், நிருபதுங்கவர்மனின் வழித் தோன்றலான இவனும் இணைந்தால், மூன்றாம் நந்திவர்மன் செய்த பிழை சரிசெய்யப்படும். தனது தேவையை எவ்வளவு அழகாக உணர்த்திவிட்டாள் கல்பா.

"புரிந்து கொண்டேன், கல்பா. இன்று மஞ்சத்தில் இணையும் இரு பிரிவு பல்லவமும் இனி ஒருங்கிணைந்த பல்லவமாகப் பொலியும்!" என்றபடி அவளைத் தன்னுடன் சேர்த்து சரித்துக் கொண்டு மஞ்சத்தில் விழுந்தான்.

தேவ உடும்பர அத்திமரத்தை நாசம் செய்ய முடியாது. அதனை வேறு ஒரு மரத்தில் விதைத்தாலும் அது வளரும். பல்லவ சாம்ராஜ்யமே தேவ உடும்பர அத்தியை வித்தாகக் கொண்டதுதானே. அபராஜிதனின் கொலை மூலம் நாசமாக்கப்பட்ட பல்லவத்தை மீண்டும் கல்பலதாவும், பார்த்திபனும் விதைத்திருக்கிறார்கள். மீண்டும் பல்லவம் துளிர்க்குமா என்பதை அத்தி மலையானே தீர்மானிப்பான்.

## 21. இந்த ராத்திரிக்கு சாட்சி இல்லை!

ஆதித்த கரிகாலன் தனது அறையில் மலையமானுடன் அளவளாவிக் கொண்டிருந்தான்.

"ஆதித்தா! நாளை விடியலில் நான் திருக்கோவிலூருக்கு புறப்படுகிறேன். அங்கே எனக்குப் பணிகள் அதிகம் உள்ளன. இந்தத் திங்களில் நீ மனமாசுகெடிலத்திற்கு வந்து சிகிச்சை முடித்துக் கொள்ளவே இல்லை. பகிரண்ட காயகல்பர் என்னிடம் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறார். மூன்று நாளைக்கு நீ தொடர்ந்து சித்தர் கொடுத்த சகடகாக்கை* லேகியத்தை அருந்த வேண்டும். ஆனால் இந்த திங்களுக்கு உரிய சிகிச்சையை நீ இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. பொன்னாழி பிரவேசம்தான் முடிந்து போனதே. நாளை நீயும் என்னுடன் திருக்கோவிலூருக்கு வந்து உனது சிகிச்சையைத் தொடரலாம் அல்லவா?" - மலையமான் வாஞ்சையுடன் கேட்க, அவரைப் புன்னகையுடன் நோக்கினான், ஆதித்தன்.

"பாட்டா! இனி எனக்கு எவ்வித சிகிச்சையும் தேவையில்லை. எனது மன அழுத்தங்கள் குறைந்து வருவதைப் போன்று உணர்கிறேன். கல்பலதாவின் வருகைக்குப் பிறகு என்னுள் புதிய உத்வேகம் பிறந்திருக்கிறது. உற்சாகமாக உணர்கிறேன்."

"நல்லது ஆதித்தா! மனதுக்கு உகந்த பெண் கிடைத்துவிட்டால், வாழ்க்கை முறையே மாறும். உனது மனக்குழப்பங்கள் தீரும். நான் பார்த்திபனிடம் கல்பலதா

---

* சகடகாக்கை மூலிகை நரம்புத் தளர்ச்சிக்கு உகந்தது. தளர்வுற்ற நரம்புகளையும், நாடிச்சக்கரங்களையும் பலப்படுத்தும்.

குறித்து ஏற்கெனவே பேசிவிட்டேன். உனக்காக அவளை பெண் கேட்டேன். பார்த்திபனும் தனக்கு இதில் ஆட்சேபம் இல்லை என்று தெரிவித்துவிட்டான். சமயம் வரட்டும்! நான் உனது பெற்றோரிடம் பேசி திருமணத்தைச் செய்து வைக்கிறேன். அதற்குள் திருக்கோவிலூர் வந்து மிகுதி சிகிச்சையையும் செய்து கொள்!" என்று கூறிய மலையமான், தனது இருக்கையை விட்டு எழுந்தார்.

ஆதித்த கரிகாலன் உணர்ச்சியுடன் பாட்டனின் கரத்தைப் பற்றினான்.

"பாட்டா! நீங்கள் மட்டும் இல்லையென்றால், நான் இந்நேரம் என்ன ஆகியிருப்பேனோ? சங்கிலியால் பிணைக்கப்பட்ட மனநோய்க்காரனாக பழையாறை அரண்மனையின் இருட்டு அறை ஒன்றில் கிடந் திருப்பேன். என்னை முழு மனிதனாக்கி, இன்று காஞ்சியில் பொன்னாழியை எழுப்பி அதில் வசிக்கிறேன் என்றால், எனது மனதுக்கு இனியவளையும் அடையாளம் கண்டு கொண்டேன் என்றால், அதற்கு முழுக்காரணம் தாங்கள்தான்." - குரல் தழுதழுத்து ஆதித்த கரிகாலன் பேச, அவனது முதுகை வாஞ்சை யுடன் தட்டிக்கொடுத்தார், மலையமான்.

"ஆதித்தா! கவலைப்படாதே! பாண்டியன் தலையைக் கொய்த நீ, பெரும் கீர்த்தியுடன் சோழ பல்லவத்தை ஆளப்போகிறாய். சாளுக்கியத்தையும் அடக்கி உனது வசப்படுத்தப் போகிறாய்! எதற்கும் கலங்காதே. இங்கே பார்த்திபன் உன்னைப் பாதுகாப்பான். நானும் சமயம் கிடைக்கும் போதெல்லாம், காஞ்சிக்கு வருகிறேன். சரி! நீ உறங்கச் செல்!" என்றபடி மலையமான் ஆதித்தனின் அறையைவிட்டு நீங்கினார்.

ஆதித்தனின் பார்வை தனது அறைக் கதவின் மீது படர்ந்தது. அதில் தங்கப்பூண் போட்ட வெள்ளிக் குமிழ் ஒன்று காணப்பட்டது. அந்த வெள்ளிக்குமிழை

இடப்புறம் திருகினால் அறைக் கதவு திறக்கும். வலப்புறம் திருகினால் தாள் மூடிக்கொள்ளும். அந்தக் குமிழை வலதுபுறமாகத் திருகிவிட்டு, தனது மஞ்சத்தை நோக்கி நடந்தான். மஞ்சத்தில் சயனித்தவன், அருகில் இருந்த வெள்ளிக் கூஜாவில் இருந்து நீரைக் குவளையில் வார்த்து பருகினான். பிறகு மஞ்சத்தின் அருகில் ஒளிர்ந்து கொண்டிருந்த தீபத்தின் திரியை வெள்ளி குச்சியினால் எண்ணெயில் அவன் மூழ்கடிக்க, தீபம் அணைந்தது. அறை நுழைவாயிலின் அருகே ஒரு தீப்பந்தம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. இருண்ட அறையில் அது மட்டுமே வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

பால்யத்தில் இவனுக்கு ஏற்பட்டிருந்த பிரச்னைகள் ஒவ்வொன்றாக நீங்கி வருகின்றன. மனக்குழப்பங்களால் சிறு வயதில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவன், இன்று சேவூர் போரில் பெரும் கீர்த்தியை அடைந்து, பாணபத்திரத்தின் மூலம் கங்க நாட்டு ஸ்வர்ண சுரங்கங்களைக் கைப்பற்றி, பொன்னாழியை எழுப்பி அதில் வசிக்கிறான். அதுமட்டுமா! வளங்களைத் தரும் அத்திமலைத்தேவன், அவனுடைய விலைமதிப்பில்லாத ஆபரணமான உக்ரோதயம், அனைத்தையும் பெற்றிருக் கிறான். பார்த்திப பல்லவனின் நட்பும் கிடைத்துவிட்டது. கல்பலதாவிடம் இதயத்தைப் பரிமாறிக் கொண்டால் போதும். இவனது வாழ்க்கை பூரணத்துவம் அடைந்து விடும். இவ்வளவு அழகான பொன்னாழியை எழுப்பிய செங்கம்பாடி சிந்தூரன் மட்டும் கொலை செய்யப் படாமல் இருந்திருந்தால், எல்லாமே நன்றாக இருந் திருக்கும்.. அவனை யார் கொலை செய்திருப்பார்கள்? - யோசித்தபடியே தனது மஞ்சத்தில் படுத்திருந்தான்.

சாளரத்தின் வழியாகக் குளிர்ந்த காற்று அறைக்குள் நுழைந்து அவனது மேனியை வருட, அந்தச் சுகத்தினால், சற்றே கண்களை மூடி அந்தக் குளிர்ச்சியைப் பரவசத் துடன் அனுபவித்த போதுதான், திடீரென்று அறைக் கதவு குலுங்குவதைப் போன்ற ஒலி எழுந்தது. சற்று

முன்பாக வீசிய காற்றில் கதவுகள் குலுங்குகிறதோ? அறைக் கதவையே வெறித்துப் பார்க்க, அவனது கண்கள் நிலைகுத்தி நின்றன.

அவனது அறைக் கதவின் உட்புற வெள்ளிக்குமிழ் இடப் புறமாகத் திரும்பிக் கொண்டிருந்தது. வெளியில் இருந்து யாரோ அறைக் கதவைத் திறக்க முயல்கிறார்கள். ஆதித்த கரிகாலன் திகைப்புடன் அந்தக் குமிழையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"யாரது? அறைக் கதவின் வெளியே கதவைத் திறக்க முற்படுவது?" - குரலில் அதிகாரத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டான்.

சட்டென்று அந்த வெள்ளிக்குமிழ் சுழல்வது நின்றது. மீண்டும் அந்தக் குமிழ் சுழல்கிறதா என்று வெறித்துப் பார்த்த ஆதித்த கரிகாலன், மேஜையின் மீது இருந்த தனது வாளினை எடுத்துக்கொண்டு அறைக் கதவை நோக்கி நடந்தான். அந்தக் குமிழினில் கையை வைத்து மெதுவாக இடப்புறம் திருகினான். ஆனால் கதவைத் திறவாமல் நிதானித்தான். வெளியே யாரேனும் நிற்கின்றனரா என்பதை யூகிப்பது போன்று காத்திருந்தவன், குனிந்து திறவுகோல் செலுத்தும் துளையின் வழியாக வெளியே நோக்கினான்.

வெளியே யாரும் இல்லை என்பது தெரிய, கதவை மெதுவாகத் திறந்துக் கொண்டு வெளியே சென்று நின்றான். அவனது அறையின் நேர் எதிராக ஒரு நீண்ட இடைக்கழி உண்டு. அந்த இடைக்கழியின் முடிவில்தான் பொன்னாழியின் மூன்று பகுதிகளையும் இணைக்கும் உப்பரிகைப் படிகள் அமைந்திருந்தன. ஆதித்த கரிகாலன் அறையின் இடப்புறமும், வலப்புறமும் செல்லும் இடைக்கழிகள் அனைத்துமே அவன் உபயோகிக்கும் அறைகள்தான். வலப்புறம் உள்ள அறைகளில், அவனது உடைமைகள், தேகப்பயிற்சி அறை போன்றவை உண்டு.

இடப்புற இடைக்கழியின் கடைசி மூன்று அறைகளை, பார்த்திபனின் உபயோகத்திற்காக அளித்திருந்தான்.

தனது அறையைவிட்டு வெளியே வந்து நின்ற ஆதித்த கரிகாலன் முதலில் அறையின் எதிரே இருந்த நீண்ட இடைக்கழியை ஏறிட்டான். அந்தப் பாதையின் முடிவு வரை உறுத்து நோக்கினான். அங்கே யாருமே இல்லை. பிறகு வலப்புறம் மற்றும் இடப்புற இடைக்கழிகளை மாற்றி மாற்றிப் பார்க்க, அங்கும் யாரையும் காணவில்லை. யார் வந்திருப்பார்கள்? இவனது அறைக் கதவின் குமிழ் சுழல்வதை இவன் கவனித்திருந்தானே. ஒருவேளை பார்த்திபன் இவன் உறங்கிவிட்டானா என்பதை ஊர்ஜிதம் செய்ய வந்திருப்பானா? மீண்டும் தனது பார்வையை நேர் இடைக்கழியை நோக்கித் திருப்பினான். தொலைவில் தெரிந்த உப்பரிகைப் படிகளின் கைப்பிடித் தண்டு மட்டும்தான் புலப்பட்டது. யாரும் இல்லை என்று முடிவு செய்து திரும்புவதற்காக எத்தனித்த போதுதான், அந்த உருவம் வந்து உப்பரிகை கைப்பிடியில் சாய்ந்து கொண்டு இவனை நோக்கி நின்றது.

முழுவதும் கறுப்பு அங்கியால் முகம் உள்பட தன்னை மறைத்துக் கொண்டிருந்தது. கண்கள் இருக்கும் இடத்தில் மட்டும் இரு துளைகள். அலட்சியமாக உப்பரிகை கைப்பிடியில் சாய்ந்தபடி தனது கைகளைக் கட்டிக்கொண்டு இவனையே வெறித்துப் பார்த்தது அந்த உருவம்.

சுத்த வீரன்தான் ஆதித்த கரிகாலன். ஆனால், நடுநிசியில் இப்படித் திடீரென்று ஒரு கரிய உருவம் தோன்றி இவனையே வெறித்துப் பார்த்தால், இதயம் படபடக்கத்தானே செய்யும்? தன்னைச் சுதாரித்துக் கொண்டு கையில் இருந்த வாளை உயர்த்தினான்.

"யாராடா நீ? எனது மாளிகையில் என்ன செய்கிறாய்?" - சினத்துடன் கேட்டான், ஆதித்த கரிகாலன்.

தொலைவில் இருந்து நோக்கும் போது, அந்தக் கரிய உருவத்தின் தேகம் குலுங்குவதை இவனால் உணர முடிந்தது. அந்த உருவம் நகைத்துக் கொண்டிருப்பதை அறிந்ததும், சுருக்கென்று கோபம் எழ, அவனை நோக்கி தனது வாளை உயர்த்தி அந்த உருவத்தை அச்சுறுத்தினான்.

அந்த உருவமும் சற்றும் அசரவில்லை. தனது அங்கியில் மறைத்து வைத்திருந்த குத்துவாளை எடுத்து அவனை நோக்கிக் குத்திவிடுவேன் என்பது போன்று சைகை காட்ட, ஆதித்த கரிகாலனின் கோபம் எல்லை மீறியது.

தனது வாளை ஓங்கியபடி அந்த உருவத்தை நோக்கி விரைவாக நடைபோட்டான். அந்த நீண்ட இடைக் கழியின் முக்கால் பகுதியை அவன் கடக்கும் வரை அந்த உருவமும் அவனை எதிர்நோக்கிக் காத்திருப்பதைப் போன்று விறைப்பாக நின்றது. அதன்பின் அவன் நெருங்கி வருவதை உணர்ந்ததும், அந்த உருவம் நகர்ந்து சென்று இருளில் கலந்து மறைந்தது.

ஆதித்தன் உப்பரிகைப் படிகளின் கைப்பிடியை அடைந்ததும் சுற்றிலும் நோக்கினான். அடர்ந்து பரந்திருந்த இருளில் அந்த உருவம் எங்கு சென்றது என்றே தெரியவில்லை. வெறுப்புடனும், குழப்பத் துடனும், தனது அறையை நோக்கி நகர்ந்தவன், நிகழ்ந்த சம்பவத்தை பார்த்திபனிடம் சொல்லுவோம் என்று அவனது அறையை நோக்கி நடந்தான்.

ஆதித்தன் உறங்கிவிட்டிருப்பான் என்கிற யூகத்தில், கல்பலதாவைக் காணச் செல்லலாம் என்று தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்த பார்த்திபன் தனது அறைக் கதவு தடதடவென்று பதற்றத்துடன் தட்டப்படுவதை அறிந்ததும் வியப்புடன் கதவைத் திறந்து தலையை மட்டும் வெளியே நீட்டி எட்டிப்பார்த்தான். ஆதித்தன்

அங்கே நிற்பதைக் கண்டதும் அவனது புருவங்கள் உயர்ந்தன.

"நண்பா! என்ன நடந்தது? உறங்கச் செல்ல வில்லையா?"

ஆதித்தனுக்கு பார்த்திபனைக் கண்டதும் சற்றே பதற்றம் குறைந்தது.

"யாரோ எனது அறைக் கதவைத் திறக்கப் பார்த் தார்கள். நான் குரல் கொடுத்ததும் நகர்ந்து சென்று விட்டனர். கதவைத் திறந்து பார்த்தால், உப்பரிகைப் படிகளின் அருகே ஒரு கரிய உருவம் என்னை நோக்கி வெறித்தபடி நின்றது. நான் எனது வாளைக் காட்டியதும், அது தனது குத்துவாளை உயர்த்தி என்னைக் கொன்றுவிடுவேன் என்று அச்சுறுத்தியது. நான் விரட்டிச் சென்றதும், இருளில் தப்பி ஓடிவிட்டது."

பார்த்திபன் பரபரப்படைந்தான்.

'ஆதித்தனுக்கு மரண கண்டம் உள்ளது. நீதான் அவனைக் கண்களை இமைகள் காப்பது போன்று காக்க வேண்டும்'- மலையமானின் குரல் அவனது செவிகளில் ரீங்கரிக்க, நண்பனை ஆதரவுடன் நோக்கினான்.

"நண்பா! நீ சென்று அறையில் நிம்மதியாக உறங்கு. நான் அவனைத் தேடிப் பிடிக்கிறேன்" என்றவுடன் ஆதித்த கரிகாலன் தனது அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

பார்த்திபன் வடபகுதிக்குச் சென்று, கல்பலதாவின் அறைக் கதவைத் தட்ட, அவள் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

"கல்பா! அறைக் கதவைத் தாழிட்டுக்கொண்டு உறங்கு. யாரோ ஒரு மர்மமனிதன் மாளிகையினுள் நுழைந்திருக் கிறான்." - கல்பலதாவை எச்சரித்துவிட்டு ஆதித்தன் குறிப்பிட்டிருந்த அந்த மர்ம உருவத்தைத் தேடிச் சென்றான் பார்த்திபன்.

அன்றொரு நாள் முருக்கத்திப் பாதையில் நடந்து சென்ற போது பொன்னாழியின் உப்பரிகையில் தான் பார்த்திருந்த அந்தக் கரிய உருவம் பார்த்திபனின் மனக்கண்ணில் ஆடியது. பொன்னாழியின் வடக்குப் பகுதி, தென் பகுதி மற்றும் உப்பரிகையெங்கும் அந்தக் கரிய உருவத்தை வலைவீசித் தேடினான். பிறகு உப்பரிகைப் படிகளில் இறங்கி நுழைவாயிலின் புறமாகச் செல்ல, கரிகாலப் பெருவளத்தான் மற்றும் பல்லவ இளந்திரையனின் பொற்சிலைகளின் இடதுபுறமாக இருந்த அலுவலக அறையில் தீபங்கள் ஒளிர்ந்து கொண்டிருக்க, உள்ளே சென்றான், பார்த்திபன்.

குழலழகனும், இரு பணியாளர்களும் மலையமானின் உடைமைகளை மறுநாள் பிரயாணத்திற்காக கள்ளிப்பெட்டிகளில் அடுக்கிக் கொண்டிருந்தனர்.

"குழலழகா! இப்படி வா!" - பார்த்திபன் அழைக்க, குழலழகன் அவனை நோக்கி வந்தான்.

"என்ன நடக்கிறது இங்கே?" - பார்த்திபன் கேட்டான்.

"நாளை விடியலில் மலையமான் திருக்கோவிலூர் புறப்படுகிறார். நாளை மறுநாள் காலை சோழ அரசர் தஞ்சைக்கும், இளவரசியார் பழையாறைக்கும் புறப்படு கிறார்கள். அவர்களது உடைமைகளை பெட்டிகளில் அடுக்கி அவரவர்களது வண்டிகளில் பணியாளர்கள் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியை மேற் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறேன்!" - குழலழகன் கூறினான்.

"பணியாளர்கள் அந்தப் பணிகளைச் செய்வார்கள். உனக்கு ஒரு முக்கியமான பணி காத்திருக்கிறது. நமது இளவரசரின் அறைக்குள் ஒரு கரிய உருவம் நுழைய முயன்றிருக்கிறது. நமது இளவரசர் அதனை விரட்டிச் செல்ல, அந்த உருவம் தப்பிச் சென்றுவிட்டது. நான் இளவரசரின் அறையருகே காவல் புரிகிறேன். நீ சென்று

நந்தவனத்திலோ அல்லது, முருக்கத்திப் பாதையிலோ அந்த உருவம் பதுங்கியிருக்கிறதா என்று பார்!"- பார்த்திபன் கட்டளையிட, குழலழகன் முகம் திகைப்பில் ஆழ்ந்தது.

"நான் உடனே சென்று பார்க்கிறேன்!" என்ற குழலழகன் தனது வாளை எடுத்துக்கொண்டு நந்தவனத்தை நோக்கிச் சென்றான்.

பார்த்திபன் ஆதித்தன் அறைக்கு முன்பாக இருந்த இடைகழியில் நடைபோட்டுக் கொண்டிருந்தான். அவனது கண்கள் பம்பரமாகச் சுழன்று சிறு அசைவையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன. அப்போது அவனது பின்பாக நூபுரங்களின் இனிய ஒலி..

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.. தனது ஜாகை இருந்த வடக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதிக்கு திரும்பிய பாதையில் பதற்றத்துடன் வந்து கொண்டிருந் தாள், கல்பலதா.

"என்ன ஆனது, கல்பா? ஏன் இந்தப் பதற்றம்?" - பார்த்திபன் பரபரத்தான்.

"எனது அறைச் சாளரத்தின் அருகே இருந்த மரத்திலிருந்து ஓர் உருவம் எனது அறையின் உள்ளே குதித்தது. நான் பயந்து வெளியே ஓடி வந்துவிட்டேன்."- அச்சத்தால் கண்கள் விரிய அவள் ஓடி வந்து பார்த்திபனின் புஜத்தைப் பற்றினாள். அவளது மேனி நடுங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

"பயப்படாதே. நான் இருக்கிறேன்!" - பார்த்திபன் அவளுக்கு ஆறுதல் கூறியபடி, கல்பலதாவின் ஜாகையை நோக்கி நடந்தான். எதிரே லலாடிகாவின் அறைக் கதவைத் தள்ளிப்பார்த்தான். உட்புறம் தாழிடப் பட்டிருந்தது. உறங்குகிறாள் போலும்.

"லலாடிகாவைப் பார்! நிம்மதியாக உறங்குகிறாள். உனக்கு மட்டும்தான் பிரச்னை. உள்ளே யாரும் இருக்கமாட்டார்கள். மர்ம உருவம் வந்தது என்று நான் கூறியதால் உனக்கு வீண் மனப்பிரமை! இளவரசனுக்குக் காவல் புரியவிடாமல், தொல்லை கொடுக்கிறாய்!"- முணுமுணுத்தபடி கல்பலதாவின் அறைக் கதவைத் தள்ளினான்.

"லலாடிகாவுக்கும் ஒரு திருமணம் செய்து வையுங்கள். பிறகு அவள் நிம்மதியாகத் தூங்குகிறாளா என்று பார்ப்போம்? ஏன்தான் இந்தப் பேய் மாளிகைக்கு வந்தோமோ?" - சலித்தபடி அறைக்குள் நுழைந்த பார்த்திப பல்லவனைப் பின்தொடர்ந்தாள்.

அவன் உள்ளே நுழைந்ததும்தான் தாமதம். தனது அறைக் கதவை சடாரென்று தாளிட்டாள். தனது சேலைக்குள் பதுக்கியிருந்த அறையின் திறவுகோலினால் கதவைப் பூட்டி, அங்கிருந்த பூச்சாடியினுள் அவன் காணாத வண்ணம் திறவுகோலைப் போட்டுவிட்டாள். அறையில் இருந்த பகுதிகளை நோட்டம் விட்டுக் கொண்டிருந்த பார்த்திபனின், கழுத்தில் தனது கரங்களை மாலையாகக் கோர்த்து அவனைக் கிறக்கத்துடன் பார்த்தாள்.

அறையில் யாரும் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு கல்பலதாவின் முகத்தை கேள்வி யோடு நோக்கியவனுக்கு, அவளது கிறங்கும் கண்கள் சேதியை உரைக்க, அவளை எரிச்சலுடன் நோக்கினான்.

"இதற்கா அழைத்தாய்? நல்ல சமயத்தைத் தேர்ந் தெடுத்தாய் சல்லாபிக்க?" - பார்த்திபனின் குரலில் சினம் கொப்பளித்தது.

"நடுநிசியில் அழைக்காமல், உச்சி வெய்யிலில் உப்பரிகையிலா சல்லாபிப்பார்கள்? தெரிந்தோ, தெரியா மலோ நீங்கள் எனக்குக் கணவன் ஆகிவிட்டீர்கள். இரவு

வேளைகளில் மனைவியுடன் இருப்பது உங்கள் கடமை!" - கல்பா கூறினாள்.

"ஆதித்த கரிகாலனின் உயிரைப் பாதுகாப்பது அதைவிட முக்கியமான கடமை. நான் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறேன். விலகு!" என்றபடி அறைக் கதவை நோக்கி நடக்க, "பல்லவ அரசி நான் கட்டளையிடுகிறேன். பார்த்திபரே! எனது கட்டளையை மீறினால் உமக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும். மேலும், இப்போது அறையின் கதவு திறக்காது. திறவுகோலைக் கொண்டு அதனைப் பூட்டியிருக்கிறேன். திறவுகோலையும் பதுக்கிவிட்டேன். என்னுடன் இரவை பகிர்ந்து கொண்டால் மட்டுமே கதவுகள் திறக்கும். இல்லையேல், இந்தக் கதவுகள் நிரந்தரமாகத் திறக்காது."- கல்பலதா காட்டத்துடன் கூறினாள்.

கதவை இழுத்துப் பார்த்த பார்த்திபன், அது தாளிடப்பட்டிருப்பதை உணர்ந்து திரும்பி, எரிச்சலுடன் அவளை நோக்கினான்.

"என்ன விளையாட்டு இது, கல்பா..? ஆதித்த கரிகாலனின் தலையின் மீது எப்போதும் கத்தி ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அவனுக்கு ஏதாவது நேர்ந்தால், நானல்லவா பதில் கூற வேண்டும்?"- பார்த்திபன் கேட்க, கல்பா அவனை மஞ்சத்தை நோக்கி இழுத்தாள்.

"இதுவும் கடமைதான். உங்களைக் கடமையைத்தான் ஆற்றச் சொல்கிறேன்" - என்றபடி மஞ்சத்தில் இருவரும் சரிய, வேறு வழியின்றி, கையில் இருந்த வாளினை மேஜையின் மீது வைத்தான்.

கல்பலதா கதவைத் தாளிட்ட அதே சமயம், ஆதித்த கரிகாலனின் அறைக் கதவு திறந்தது. உள்ளிருந்து ஆதித்த கரிகாலன் வெளிப்பட்டான். இரவு ஆடையில் இருந் தான் அவனது வலுவான தேகத்தை நீண்ட வெள்ளைக்

குப்பாயம் ஒன்று மறைத்திருந்தது. பகல் நேரங்களில் அவன் அணியும் மகுட வளையம் இப்போது காணப்பட வில்லை. தனது அடர்த்தியான குழல்களை, வாழை நாரினால் முடிந்திருந்தான். அவனது கண்களில் உணர்வில்லை. வழக்கம் போல் ஆழ்ந்த உறக்கத்தில் உலா செல்வதற்காகப் புறப்பட்டிருந்தான். தனது அறையில் இருந்து வெளிப்பட்டவன், நேராக நடந்து சென்று உப்பரிகைப் படிகளில் இறங்கி, பொன்னாழியின் நுழை வாயிலை நோக்கி நடந்தான். கரிகால் பெருவளத்தான் மற்றும் இளந்திரையனின் சிலைகளுக்கு முன்பாக நின்றவன், நந்தவனத்தில் இறங்கி முருக்கத்தி பாதையை நோக்கி நடந்தான்.

குழலழகனும் முருக்கத்தி பாதையில்தான் நடந்து கொண்டிருந்தான். கரிய உருவத்தைத் தேடி பொன் னாழியைச் சுற்றி வலம் வந்தவன், ஒரு சுற்று முடிந்து ஸ்வர்ண மதிலின் வாயிலுக்கு வந்த போதுதான், ஓர் உருவம், பொன்னாழியில் இருந்து வெளிவந்து முருக்கத்திப் பாதையில் திரும்பிச் செல்வது நிழலாகத் தெரிந்தது.

'பார்த்திபன் குறிப்பிட்ட உருவம் அதுவாக இருக்குமோ?' என்று மனதினுள் கேள்வி எழ, அந்த உருவத்தை நோக்கி ஓடிச்சென்றான், குழலழகன். தனது வாளை நீட்டிய குழலழகன், விறைப்பாக நடந்து சென்ற அந்த உருவத்தைத் தடுக்க முயன்றான். அந்த உருவமோ நடந்து சென்று கொண்டே இருந்தது. திகைப்புடன் அந்த உருவத்தின் முகத்தைக் கவனித்தான்.

"இளவரசே.. தாங்களா? இந்த நடுநிசியில் எதற்காக முருக்கத்தி பாதையில் செல்கிறீர்கள்?"

ஆதித்த கரிகாலன் மௌனமாக நின்றான். அவனது முகத்தில் எவ்வித அசைவும் இல்லை. திடீரென்று, குழலழகனின் கழுத்து வளைத்து பிடிக்கப்பட்டது. அவனது தொண்டைக் குழியில் கூரிய குத்துவாள்

இறங்கியது. அலறல் கூட எழுப்பாமல், பிணமாக விழுந்தான், குழலழகன். ஆதித்த கரிகாலன் தொடர்ந்து நடந்தான்.

மறுநாள் காலை-

பார்த்திபனின் அறைக் கதவு தடதடவென்று தட்டப் பட்டது. உறக்கம் தெளியாத கண்களுடன் கதவைத் திறந்தான் பார்த்திபன். சூரிய ஒளி கண்களைக் கூச, கண்களைச் சுருக்கிக் கொண்டு சிறு இடைவெளியின் வழியாக நோக்கினான், பார்த்திபன். ஆதித்த கரிகாலன்தான் கலவரத்துடன் நின்று கொண்டிருந்தான்.

"நண்பா! முருக்கத்தி பாதையில் குழலழகன் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டான்!" - ஆதித்த கரிகாலன் கூற, உறைந்து போய் நின்றான், பார்த்திபன்.

## 22. உன் குடுமி என்னிடம்! என் குடுமி உன்னிடம்!

"குழலழகனின் கொலை வழக்கையும் சேர்த்து நீதான் விசாரணை செய்ய வேண்டும்" - ஆதித்த கரிகாலன் அவனிடம் கட்டளையிட்டுவிட்டு மீண்டும் தனது அறைக்குள் நுழைந்து கொண்டான்.

இரவு அலுவலறையில் பணியாளர்கள் மலையமான், மற்றும் சுந்தர சோழரின் உடைமைகளைக் கள்ளிப் பெட்டிகளில் அடுக்கிக் கொண்டிருக்க, அதனை மேற் பார்வை செய்து கொண்டிருந்தவனை வலுக்கட்டாயமாக முருக்கத்தி பாதைக்கு அனுப்பி அவனது மரணத்திற்கு தானே காரணமாகிவிட்டோம் என்கிற குற்ற உணர்வு நெஞ்சை உறுத்த, குழலழகனின் உடலைக் கைப்பற்றி அதனை ஒத்தாடை அரண்மனை கிடங்கிற்கு அனுப்பினான்.

மலையமான் திருக்கோவிலூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் புறப்பட்டுச் சென்றதும் விசாரணையைத் துவக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தான். தனது இரதத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மலையமான், திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவராக பார்த்திபனை நோக்கி வந்தார்.

"எச்சரிக்கை, பார்த்திபா! நேற்று நடைபெற்ற கொலையைப் பற்றி நான் அறிவேன். விசாரணையை நீதான் செய்யப் போகிறாய் என்பதையும் அறிந்தேன். உனது மூன்றாவது கண்ணைத் திறந்து வைத்துக்கொள். காரணம், உனது ஊனக்கண்களால் காண்பதும் மாயை,

செவிகளால் கேட்பதும் மாயை. தீரவிசாரிப்பதே நலம். இந்தப் பொன்னாழியைச் சுற்றி பனித்திரை ஒன்று படர்ந்துள்ளது. அதனை உனது ஞானச் சூரியனால் விரட்டிவிட்டு விசாரணையை நடத்து. தெளிவு பிறக்கும்." - மலையமான் கூறினார்.

"திருக்கோவிலூரராரே! சிந்தூரன் கொலை நடந்த போதும் சரி, நேற்று குழலழகனின் கொலை நிகழ்வதற்கு முன்னரும் சரி, உறக்கத்தில் நடக்கும் ஆதித்த கரிகாலன் சம்பவங்கள் நடந்த இடங்களில் இருந்திருக்கிறான் என்கிற உண்மையை எப்படிக் கையாளுவது என்று தெரியாமல் குழம்புகிறேன்?"

"அவன் உறக்கத்தில் நடப்பது எனக்கும், உனக்கும், சுந்தர சோழருக்கும் மட்டுமே தெரியும். வேறு யாருக்காவது தெரிந்திருந்தால், அதனைச் சாதமாக ஆக்கிக் கொண்டு அவனது பெயரில் கொலைகளைச் செய்யலாம் அல்லவா?" - மலையமான் கேட்டார்.

"அப்படிச் செய்வதால் யாருக்கு என்ன லாபம்?"- வியந்தான் பார்த்திபன்.

"நீ ஒன்றை மறந்துவிட்டாய். ஆதித்த கரிகாலன் வசம் இப்போது என்னவெல்லாம் இருக்கிறது? பல்லவத்தின் அத்திமலைத்தேவன் இருக்கிறான். உக்ரோதயம் ஆபரணம் இருக்கிறது. பிரும்மாண்டமான இந்தப் பொன்னாழி இருக்கிறது. இவை அனைத்திற்கும் மேலாகச் சோழ மகுடம் இருக்கிறது."

பார்த்திபன் அவரையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"பல்லவனான நீ எதற்காகச் சோழத்திற்குக் கைகட்டி ஊழியம் செய்து கொண்டிருக்கிறாய்? எதையோ பெறு வதற்குத்தானே! எதையோ என்ன! உங்கள் குலவித்தான அத்திமலைத்தேவனையும் அவனது ஆபரணமான உக்ரோதயத்தையும் பெறுவதற்குத்தானே? அதைப்

போன்று மற்றவர்களுக்கும் சில தேவைகள் இருக்கலாம் அல்லவா? அவர்கள் உன்னைப் போன்று நேர்மையான பாதையைக் கடைப்பிடிக்காமல் சூழ்ச்சிகளை மேற்கொள்ளலாம் அல்லவா?"-மலையமானின் குரலில் சற்றே சினம் தெரிய அவரை வியப்புடன் நோக்கினான், பார்த்திபன்.

"ஈசனுக்குப் பூசனை செய்யும் வேளையிலே முதலில் கணபதிக்கு பூசனை செய்ய வேண்டும் என்கிற நியதி இருப்பது போன்று, ஆதித்தனின் உயிருக்கு ஆபத்து விளைவிக்க எண்ணுபவர்களால், பூர்வாங்க பலிகள் வாங்கப்படுகின்றதோ என்கிற எண்ணம் ஏற்படுவதை என்னால் தவிர்க்க முடியவில்லை, பார்த்திபா! நீ எச்சரிக்கையாக இரு. உனக்கு ஒரு ஆலோசனை கூறுகிறேன். கொலை செய்யப்பட்ட செங்கம்பாடி சிந்தூரன், குழலழகன் ஆகியோர் ஆதித்த கரிகாலனுடன் எவ்வகையில் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்று ஆய்வு செய்து பார். கொலை முடிச்சுகளின் துவக்கத்தை அறியலாம்!" - மலையமான் கூறிக் கொண்டிருக்கும் போதே, கொம்பு வாத்தியம் முழங்கியது.

"அதோ.. சுந்தர சோழரும், எனது மகள், குந்தவை மற்றும் பரிவாரங்கள் என்னை வழியனுப்ப வந்து கொண்டிருக்கிறார்கள். இனி நாம் பேச முடியாது. இருப்பினும், ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் கூறிவிடுகிறேன். ஆதித்த கரிகாலனின் சாதகச் சுவடியைப் படித்த சித்தர் 'அவன் கயற்கதறும் வேளையிலே நமன்தமர் வாயிலில் நுழைவான்' என்று கூறியிருக்கிறார். கயல் என்றால் மீன் என்று தெரிகிறதே தவிர அந்த பாடலின் பொருள் விளங்கவில்லை. உனக்கு ஏதாவது புலப்படுகிறதா என்று பார். கயல் தொடர்புடைய எதுவும் அவனை அணுகாமல் பார்த்துக்கொள். அவனுக்கு உணவில் கூடக் கயல் சேர்க்கப்படுவதை நான் அனுமதிக்கவில்லை. ஆதித்த கரிகாலன் ஒரு சிறு குழந்தை. அவனை உன் கையில் பத்திரமாக ஒப்படைத்து

விட்டு நான் புறப்படுகிறேன். ஜாக்கிரதை பார்த்திபா! உனது குடுமி என்னிடம்! எனது குடுமி உன்னிடம்!"- மலையமான் கடைசியாக எச்சரித்தார்.

அதே சமயம், மன்னர் சுந்தர சோழரும், வானவன் மாதேவியும் குந்தவை பின்தொடர வருவதைக் கண்டதும், மலையமான் அவசரமாக விலகிச் சென்று அவர்களை எதிர்கொண்டார். பார்த்திபன் மனதெல்லாம் குழப்பத்துடன், சுந்தர சோழரை நோக்கித் தலை பணிந்தான். மலையமான் புறப்பட்டுச் சென்றதும், குந்தவையின் பார்வை அங்கு நின்ற பார்த்திபனின் மீது விழுந்தது. தந்தை சுந்தர சோழரின் செவியில் எதையோ கூற, அவர் புன்னகையுடன் பார்த்திபனை நோக்கி சைகை செய்தார்.

"பார்த்திப பல்லவா! எனது மகள் குந்தவை உன்னை எனது பிறந்த நாள் வைபவத்திற்கு அழைக்க நினைக்கிறாள். அவள் அழைப்போலையுடன் உன்னைச் சந்திக்க வருவாள். நீ அவசியம் எனது பிறந்த நாள் வைபவத்தில் கலந்து கொள்ள, உனது உறவினர்களுடன் வர வேண்டும்" என்றதும், பணிவுடன் தலையசைத்தான், பார்த்திபன்.

சோழ அரசகுடும்பம் தங்களது தெற்கு ஜாகைக்குச் சென்ற பின்னர், பொன்னாழியின் நுழைவாயில் அலுவலகத்திற்கு விரைந்தான், பார்த்திபன். முந்தைய இரவு, கள்ளிப்பெட்டிகளில் மலையமான் உடைமைகளை அடுக்கிக் கொண்டிருந்த பணியாளர்கள், இன்னமும் அங்குதான் இருந்தனர்.

அவர்களை கேள்வியுடன் பார்த்தான், பார்த்திபன்.

தங்கள் பணிகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த குழலழகன் திடீரென்று கொல்லப்பட்டது அவர்களுக்குக் கலவரத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். பணிகள் முடிந்து உறங்கச் செல்லாமல் வெளிறிய முகத்துடன் அங்கேயே நின்றிருந்தனர்.

"நேற்று குழலழகனை நான் நந்தவனத்திற்கு அனுப்பியதும் என்ன நடந்தது?" - பார்த்திபன் கேட்டான்.

"இளவரசே! குழலழகர் தனது வாளை எடுத்துக் கொண்டு நந்தவனத்தை நோக்கிச் சென்றார். தாங்கள் உப்பரிகைக்கு படியேறிச் சென்றீர்கள். ஒரு நாழிகைக்குப் பிறகு, படிகளில் யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்க, நாங்கள் எட்டிப்பார்த்தோம். நமது இளவரசர், படிகளில் இறங்கி நந்தவனத்தை நோக்கிச் சென்றார். அதன் பிறகு நாங்கள் எதையும் காணவில்லை" - பணியாளர்கள் கூற, பார்த்திபனின் குழப்பம் அதிகரித்தது.

'ஆதித்த கரிகாலன் உறக்கத்தில் தன்னை மறந்த நிலையில் கொலைகளைச் செய்கிறானா?'

பார்த்திபனுக்கு கல்பலதாவின் மீது ஆத்திரம் பொங்கி வழிந்தது. ஆதித்த கரிகாலனின் அறையின் முன்பாகக் காவலுக்கு இருந்த இவனை, தனது அறையில் மர்ம உருவம் தெரிந்ததாகப் பொய் கூறி, அழைத்துச் சென்று இவனை திசைதிருப்பியதால்தானே, ஆதித்த கரிகாலன் உறக்கத்தில் வெளியே சென்றிருந்தான். அவனை இவன் கண்காணித்திருந்தால், நடந்ததை அறிந்திருக்கலாம் அல்லவா?

★ ★ ★

தனது அலுவல் அறையில் பார்த்திபன், மிகவும் மும்மரமாகப் பணிகளைச் செய்து கொண்டிருந்தான். இடையிடையே, சிந்தூரன், மற்றும் குழலழகன் கொலை குறித்த விசாரணைகளையும் மேற்கொண்டிருந்தான். ஆதித்த கரிகாலனின் குரு நேமியங்கையர் விசாரணைக் காக வந்திருந்தார். குழலழகனின் உதவியாளன் பாரி வேளும் விசாரணைக்காகத் தருவிக்கப்பட்டிருந்தான். பார்த்திபன் நேமியங்கையரை உள்ளே அழைத்த அதே சமயம், சுந்தர சோழர் சொன்னது போன்று, குந்தவை

தனது தோழி தெட்டக்கனியுடன் பார்த்திப பல்ல வனைத் தேடி வந்தாள். குந்தவை உள்ளே நுழைவதைப் பார்த்த நேமியங்கையர் அறையிலிருந்து நழுவ, பார்த்திபன் குந்தவையை வரவேற்றான்.

"உங்கள் பணிகளின் இடையே குறுக்கீடு செய்வதற்கு வருந்துகிறேன், பார்த்திபரே! அவசியம் தாங்கள் எனது தந்தையின் பிறந்ததின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு எங்களைப் பெருமைப்படுத்த வேண்டும். அடுத்த வெள்ளிக்கிழமை அன்று தஞ்சையில் கோலா கலமாக வைபவம் நடக்கின்றது. தங்கள் உறவுப் பெண் களையும் அழைத்துக்கொண்டு அவசியம் வர வேண்டும்!" - குந்தவை கூறினாள்.

"அவசியம் வருகிறேன். இளவரசர் வரும்போது நாங்களும் வருகிறோம்!" - பார்த்திபன் கூற, சடாரென்று திரும்பி தெட்டக்கனியை நோக்கினாள், குந்தவை. அவளது பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட வளாக, அறையைவிட்டு நீங்கினாள், தெட்டக்கனி.

குந்தவை தன்னிடம் தனிமையில் பேச விரும்புகிறாள் என்பதை புரிந்து கொண்ட பார்த்திபன், தன்னை எச்சரிக்கைப்படுத்திக் கொண்டான். மிகவும் கூரிய அறிவு படைத்தவள் குந்தவை என்று ஆதித்த கரிகாலன் கூறியிருக்கிறான். ஆணாகப் பிறந்திருந்தால் உலகத்தையே தனது குடையின் கீழ் கொண்டு வந்திருப்பாள் என்றெல்லாம் ஆதித்த கரிகாலன் இவளைப் பற்றிக் கூறியிருக்கிறான். அத்தகைய ஆற்றல் படைத்தவளிடம், இவன் எச்சரிக்கையுடன் அல்லவா உரையாட வேண்டும்!

"பார்த்திபரே! ஆதித்த கரிகாலன் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வருவானா என்பது எனக்குத் தெரியாது. காரணம், இந்த வைபவத்தை நடத்துபவள் நான். உமக்குத் தெரியுமா அல்லது தெரியாதது போன்று பாவனை செய்கின்றீரா? ஆதித்த கரிகாலனுக்கும்

எனக்குமிடையே அவ்வளவாக நெருக்கம் கிடையாது. அவன் என்னுடன் நெருங்கிப் பழகவும் இல்லை. நானும் அவன் மீது விழுந்து பேசியது கிடையாது. எங்களுள் பாச பரிமாற்றம் இல்லாத நிலையில், நான் நடத்தும் வைபவத்திற்கு அவன் வருவானா என்று எனக்குத் தெரியாது. ஆனால் காட்டு யானையை வசப்படுத்த பக்குவப்பட்ட யானையை அனுப்புவது போன்று, கட்டுப்பாடற்ற, பக்குவமற்ற ஆதித்த கரிகாலனை தாங்கள்தான் அழைத்து வர வேண்டும் என்பதற்காக தங்களை நேராக அழைக்கிறேன். தங்கள் இருவருக்கும் இடையே நிலவும் நட்பை அவன் பெரிதும் மதிக்கிறான் என்பது எனக்குத் தெரியும்." - குந்தவை கூற, பார்த்திபன் அவளைக் கூர்ந்து நோக்கினான்.

"நீங்கள் கூறுவதைப் பார்த்தால், 'அழைப்பு உனக் கில்லை. எனது சகோதரன் ஆதித்த கரிகாலன்' பிறந்த நாள் வைபவத்திற்கு வரவேண்டும். நீ வந்தால்தான் அவன் வருவான் என்பதால் உன்னை அழைக்கிறேன், என்று கூறுவது போன்று உள்ளது, இளவரசி. அதுதான் தங்களது நோக்கம் என்றால் அதற்கு அவசியமில்லை. நான் ஆதித்த கரிகாலனை மட்டும் கொண்டாட்டங் களுக்கு அனுப்பி வைக்கிறேன்."-பார்த்திபன் கூறினான்.

"தவறாக புரிந்து கொண்டீர்கள், பார்த்திபரே! உங்களுக்கும், எனது அண்ணனுக்கும் இடையே உள்ள நட்பு அபராஜித பல்லவருக்கும் ஆதித்த சோழருக்கும் இடையே உள்ள நட்பாக இருந்திருந்தால், நானும் அப்படித்தான் நினைத்திருப்பேன். ஆனால் தங்கள் இருவரின் இடையே உள்ள நட்பு கரிகால் பெருவளத் தாருக்கும், பல்லவ இளந்திரையனுக்கும் இடையே உள்ள நட்பினைப் போன்று உறுதியானது. பொன்னாழி மாளிகையின் வாயிலில் சிலைகளாக இருக்கும் அவர் களைப் போன்று உங்கள் இருவரின் நட்பும் பொன்னால் பொறிக்கப்பட வேண்டியது என்பதால்தான், பிறந்த நாள்

கொண்டாட்டத்தில் விருந்தினர் பட்டியலில் உங்கள் குடும்பத்தாரின் பெயர்களை முதலில் சேர்த்தேன். மேலும், உங்கள் உறவுப் பெண் கல்பலதா வருங்காலச் சோழ அரசியாகவும் திகழப் போகிறாள் என்று நினைக்கிறேன். எனவேதான், வருங்கால சம்பந்தியான உங்களுக்கும் அழைப் போலையைத் தந்தேன்." - குந்தவை அவனை ஊடுருவும் கண்களால் பார்க்க, பார்த்திபன் ஸ்தம்பித்துப் போனான்.

'இதென்னடா ரோதனை? கிணறு வெட்ட பூதம் கிளம்புகிறதே? மலையமான் இவனிடம் கல்பலதாவை பெண் கேட்டுவிட்டு யாரிடமும் இந்தத் தகவலைக் கூறாதே, எனக்கும், உனக்கும், ஆதித்தனுக்கு மட்டுமே இரகசியமாக இருக்க வேண்டிய விஷயம் என்று கூறி விட்டு, குந்தவையிடம் தானே விவரத்தைக் கூறிவிட்டாரா?'

பார்த்திபன் கலங்கிப் போனான். 'இல்லை, கல்பலதா எனது முறைப்பெண். அவளை நான் மணந்து கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறேன். சில காரணங்களுக்காக அதனை இன்னும் ஆதித்தனிடம் கூறாமல் இருக்கிறேன் என்கிற உண்மையைக் குந்தவையிடம் கூறிவிடலாமா? இல்லை.. இப்போது கூறவேண்டாம். திருமணப் பேச்சை ஆதித்தன் எடுக்கும் போது அப்போது அவனிடம் உண்மையைக் கூறிவிடலாம். குந்தவைக்கு எதற்கு விளக்கங்களைத் தர வேண்டும்?'

பார்த்திபன் மட்டும் அப்போதே குந்தவையிடம் நிலைமையை விளக்கியிருந்தால், ஆதித்த கரிகாலனின் கொலையைக் கூடத் தவிர்த்திருக்கலாமோ என்னவோ? ஆனால் விதி' வெறியாட்டம் ஆட நினைத்திருக்கும் போது மதியை பேசவும் அனுமதிக்குமா என்ன?

"இளவரசி! அப்படி ஒரு எண்ணம் இருப்பதாக இளவரசர் என்னிடம் கூடச் சொல்லவில்லையே!

தங்களுக்கு யார் இதனைக் கூறினார்கள்?" - ஆவலுடன் கேட்டான் பார்த்திபன்.

"பார்த்திபரே! கண்கள் மனிதனின் முக்கியமான அவயம் என்று சொல்வார்கள். ஆனால் அவை நமது தேகத்தின் வெறும் சாளரங்கள்தான். மனம் அதன் வழியாக தன்னைச் சுற்றி நடப்பதைக் கவனிக்கிறது. மனம் சுட்டிக்காட்டும் இடத்தில்தான் கண்கள் தங்களைப் பொருத்திக் கொள்கின்றன. உங்களது போர் மொழியில் கூறுவது என்றால், மனம் என்னும் தளபதி சுட்டிக்காட்டும் திசையில் பாய்கின்ற குதிரைப்படை வீரர்களே கண்கள். எனது தமையன் என்னிடம் நெருக்கமாக இல்லாவிட்டாலும், அவனது பாதுகாப்பு கருதி எனது கண்கள் அவனை நோக்கிக் கொண்டுதானே இருக்கும். நான் பழையாறையில் இருந்தாலும், எனது கண்கள் அவனை நோக்கிக் கொண்டேதான் இருக்கின்றன - அவன் திருக்கோவிலூரில் இருந்த போதும் சரி, இப்போது இங்கே காஞ்சி பொன்னாழியில் இருக்கும் போதும் சரி!" - சொல்லிக்கொண்டே தனது இருக்கையில் இருந்து எழுந்த குந்தவை, அறையில் இருந்த சாளரத்தை எதிர்நோக்கி நின்றாள்.

திடீரென்று திரும்பி பார்த்திபனை நோக்கினாள். "ஆதித்த கரிகாலன் தங்களிடம் தனது மனதை இன்னமும் திறந்து காட்டவில்லையா, பார்த்திபரே? அதற்கு அவசியமும் இருக்கிறதா என்ன? பராந்தக சோழருக்கு உரிய கங்க நாட்டு ஸ்வர்ணத்தைக் கொண்டு தஞ்சையில் பொன்னாழியை எழுப்பாமல், இங்கே பல்லவ தலைநகர் காஞ்சியில் பிரம்மாண்டமாகப் பொன்னாழியை எழுப்பி, அதில் தனது நண்பனின் உறவுக்கார பெண்ணைக் குடி அமர்த்துகிறான் என்றால், அவன் மனதினுள் என்ன இருக்கிறது என்பதை ஆராயவும் வேண்டுமா?"

குந்தவை மனதினுள் தன்னை நோக்கிச் சிரிப்பது போன்று உணர்ந்தான், பார்த்திபன். அவனுள் சினம் தலைதூக்கியது.

"இளவரசி! மனம் என்பது பல திக்குகளில் அலைபாயலாம். அதன் கட்டளைப்படி கண்களும் காட்சிகளைத் தவறாகச் சித்தரிக்கலாம். ஆனால் அதற்குத்தான் அறிவு என்னும் சாட்டையைக் கொண்டு மனதைச் செலுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆதித்த கரிகாலனின் பாதுகாப்பு முழுவதும் எனது வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை எனக்கு அளித்தவர் மலையமான்தான். அவரை நாள் முழுவதும் கண்காணிக்கும் பணியில் நான் இருப்பதால் பொன்னாழியிலேயே தங்குவது எனக்கு அவசியமாகிறது. கல்பலதா எனது முறைப்பெண். அவளது முழுப் பாதுகாப்பும் எனது கையில். என்னை நம்பி அடைக்கலமாக வந்திருக்கிறாள். எனவே அவளை எனது வசத்தில் பொன்னாழியில் வைத்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், பொன்னாழியில் அவள் தங்க மறுத்தாள். நான்தான் ஆண் துணை இல்லாமல் அவள் தனியே வசிக்கக்கூடாது என்று பொன்னாழியில் தங்க வைத்திருக்கிறேன்." - பார்த்திபனின் குரலில் உஷ்ணம் அதிகரித்தது.

"ஓ.. இருக்கலாம். நடுநிசியில் கல்பலதாவின் அறைக்குச் சென்று அவள் பாதுகாப்புடன் இருக்கிறாளா என்று ஆதித்த கரிகாலன் பார்த்துவிட்டு வருவது உங்களுக்குத் தெரியுமா?" - குந்தவை ஏளனமாகக் கேட்டதும், நாகத்தை மிதித்தவன் போன்று மருண்டான், பார்த்திபன்.

"அன்றொரு நாள் உப்பரிகை மாடத்தில் இருந்து நான் கவனித்துக் கொண்டிருந்தேன். நடுநிசியில் ஆதித்த கரிகாலன் கல்பலதாவின் அறையினுள் கதவைத் தள்ளிக் கொண்டு நுழைவதைக் கவனித்தேன். அவர்கள் இருவரின் மனமும் காதல் பாதையில் பயணிக்கவில்லை

யென்றால், கல்பலதாவின் அறைக் கதவின் தாள் நடுநிசியில் பூட்டித்தானே இருக்க வேண்டும்?" - குந்தவை அவனை கேள்வியுடன் பார்த்தபடி நின்றாள்.

பார்த்திபனின் கால்கள் துணியாக போயின. கல்பலதா எனக்காகத்தான் தனது அறைக் கதவைத் தாளிடாமல் வைத்திருந்தாள் என்பதைக் கூற முடியாமல் தவித்தான், பார்த்திபன்.

'அன்றொரு நாள் உறக்கத்தில் உலா வருகையில் கல்பலதாவின் அறைக்குள் அவன் நுழைந்துவிட்டான். நான் அவளது அறையில்தான் இருந்தேன்!' கல்பலதா வுக்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடக் கூடாது என்கிற பரிதவிப்பில் அப்போதே அனைத்து உண்மைகளையும் சொல்லிவிடத் தீர்மானித்தான்.

"இளவரசியாரே..!" - என்றவனை மலையமானின் கிசுகிசுத்த குரல் தடுத்தது. 'பார்த்திபா! உனது குடுமி எனது கையில், எனது குடுமி உனது கையில்..'

அப்போதைக்குக் குந்தவையிடம் எந்த உண்மையையும் கூறத் தேவையில்லை என்று தீர்மானித்த பார்த்திபன், மனதினுள் கல்பலதாவிடம் மன்னிப்பு கோரினான். பொன்னாழிக்கு வரமாட்டேன் என்று அடம் பிடித்தவளை பலவந்தப்படுத்தி இவன்தான் அழைத்து வந்திருந்தான். மங்கலநாண் பூட்டி இவனது மனைவியாக அவளை ஏற்றிருந்தும், அந்நிய புருஷனுடன் அவளைத் தொடர்புபடுத்தி குந்தவை பேசுவதைத் தடுக்க முடியாத தனது கையாலாகாத்தனத்தை எண்ணி மனம் நொந்தான், பார்த்திபன்.

"இளவரசியாரே..!" என்று மிடறு விழுங்கியவன், பிறகு நிதானமாக வார்த்தைகளைச் சிதறவிட்டான்.

"இளவரசியாரே! தங்களுக்குத் தெரியாததா? கண்ணால் காண்பதும் பொய். செவியால் கேட்பதும் பொய். தீரவிசாரிப்பதே மெய். மனம் என்னும் அடங்கா

குதிரை கண்கள் என்னும் சாளரங்களின் வழியாக நோக்கி, யூகங்களைச் செய்கின்றது. அப்போதெல்லாம் பாதை மாறுகிறது. அந்தச் சமயங்களில்தான் அறிவு என்னும் சாட்டையால் அதனை அடித்துத் திருத்தி மீண்டும் நேரான பாதைக்கு அழைத்து வரவேண்டும். கல்பலதா எனக்கு முறைப்பெண். அவளைப் பற்றி நான் நன்கு அறிவேன். அவள் முறைதவறி நடக்கக் கூடியவள் அல்ல. மேலும், எனது நண்பன் ஆதித்த கரிகாலனையும் நன்கு அறிவேன். அவனும் அப்படிப்பட்டவன் அல்ல."

"அப்படியென்றால், கல்பலதாவின் அறைக்குள் நடுநிசியில் ஆதித்த கரிகாலன் போய்வருவது தங்களுக்குத் தெரியுமா?" - வியப்புற்றவளைப் போன்று தனது இமைகளைப் பாதி மூடி பாதி திறந்து, அந்த இடைவெளியின் வழியாகப் பார்த்திபனை நோக்கினாள், குந்தவை.

"இளவரசி! நீங்கள் குறிப்பிட்ட அன்று ஆதித்த கரிகாலனைத் தாக்குவதற்கு ஒரு கரிய உருவம் பொன்னாழிக்குள் புகுந்திருந்தது. நானே அந்தக் கரிய உருவத்தைப் பார்த்திருக்கிறேன். பாதுகாப்பு கருதி, நானும் ஆதித்தனும், பொன்னாழியில் அந்த உருவத்தைத் தேடிக் கொண்டிருந்தோம். ஒருவேளை, கல்பலதாவின் அறைக்குள் அவன் அந்த உருவத்தைத் தேடிப் போயிருக்கலாம். மற்றபடி அங்கே வேறு தவறுகள் நடைபெற வாய்ப்பே இல்லை." - பார்த்திபன் கூறினான்.

"மர்மமனிதன் மாளிகையில் நடமாடுகிறான் என்பது உண்மையானால், அரண்மனைப் பெண்கள் தங்கள் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டுதானே உறங்க வேண்டும், பார்த்திபரே! அறையின் உள்ளே, தவறு நடந்தது என்று நான் கூறவில்லை. தவறு நடந்தாலும் என்றாவது ஒரு நாள் தெரியவரும். ஆனால், நான் கூற வருவது அதுவல்ல. நடுநிசியில் ஆதித்த கரிகாலனை அம்மாதிரி பெண்களின் அறைக்குள் நுழையவிடுவதால்

அந்தப் பெண்களின் உயிருக்கு ஆபத்து என்பதைத்தான் நான் கூற வந்தேன். மற்றபடி, கல்பலதாவின் தனிப்பட்ட ஆசாபாசங்கள் குறித்து நான் ஏன் கவலைகொள்ள வேண்டும்?" - குந்தவை கேட்டாள்.

பார்த்திபனுக்கு இரத்தம் கொதித்தது. தன்னைப் பெரும் மேதாவியாகக் கருதிக்கொண்டு மற்றவரின் குண நலன்களைப் பற்றித் தீர்மானிக்க இவள் யார்? தந்தையின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு அழைக்க வந்திருப்பதாக ஒரு தோற்றத்தைத் தந்து ஏற்கெனவே குழம்பியிருக்கும் இவனது குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கின்றாளே?

"இளவரசி! நமது பாதுகாப்பில் பெண்கள் இருக்கும் போது, அவர்கள் பத்திரமாக இருக்கிறார்களா என்று அவர்களது அறைகளில் புகுந்து பார்ப்பதில் தவறில்லை. தங்களது மெய்க்காவலராகத் திகழும் வந்தியத்தேவன் கூட, தங்களது அறையில் பிரச்னை என்றால் உள்ளே வருவதற்கு அவருக்கு உரிமை உண்டு. பாதுகாவலர்களின் செயல்களுக்கு அர்த்தம் கண்டுபிடிக்க முடியாது. பாதுகாவலர்கள் தங்கள் பாதுகாப்பில் உள்ள பெண்களைப் பற்றிய அக்கறையை வெளிக்காட்டினால், அதைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது!" - காட்டத்துடன் கூறினான் பார்த்திபன்.

பொறுமையாகச் சொற்களைத் தேடி பார்த்திபன் பதில் தந்தாலும், 'மெய்க்காவலன் என்று சதாசர்வ காலமும், வந்தியத்தேவன் பின்தொடர நடமாடிக் கொண்டிருக்கும் நீ, மற்ற பெண்களைப் பார்த்து சிரிக்கிறாயா?' என்கிற கோபம் அவனது பேச்சில் பிரதிபலித்தது.

அந்தக் கோபத்தையும் குந்தவை உணர்ந்தாள். பார்த்திப பல்லவன் சாதாரணமானவன் கிடையாது என்பதைப் புரிந்து கொண்டவளாக, குரலை நைச்சியமாக மாற்றிக் கொண்டாள்.

"பல்லவர் அன்றோ? அதுதான் வாய் மீது பல்லிட்டு உரையாற்றுகின்றீர். நீங்கள் எனது பேச்சைத் தவறாகவே புரிந்து கொள்கின்றீர். நீங்கள் கூறினீர்கள் அல்லவா? பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் பாதுகாப்பில் இருக்கும் பெண்களிடம் அக்கறையுடன் செயல்பட்டால் அதில் தவறு கிடையாது என்று! உண்மைதான்! ஆனால் உங்கள் முறைப்பெண் கல்பலதாவின் குணத்திற்கு நான் அப்பழுக்கு கற்பிக்கவில்லை. அவளது உயிருக்கு ஆதித்த கரிகாலனால் ஆபத்து நேரிடக்கூடாது என்றுதான் எச்சரிக்கிறேன்." - குந்தவை கூறினாள்.

"என்ன கூறுகிறீர்கள்..?" - அவளை வியப்புடன் நோக்கினான், பார்த்திபன்.

"இவ்வளவு அழகான பொன்னாழியை எழுப்பிய சிந்துரனுக்கு, நீங்களோ அல்லது நானாக இருந்தால், என்ன செய்திருப்போம்? அவனது பாதங்களைத் தங்கத் தாம்பாளத்தில் அபிஷேகம் செய்து, மலர்களைத் தூவி, அவனுக்கு வெண்சாமரம் வீசியிருக்கமாட்டோமா? ஆனால் நடந்தது என்ன? அவனது பிணம் பொன் னாழியின் முன்பாகவே கண்டெடுக்கப்பட்டது. நீங்கள் குறிப்பிடும் அதே அக்கறையைத்தான் சிந்துரனிடமும் ஆதித்த கரிகாலன் கொண்டிருந்தான். எங்கள் பழை யாறை சோமேஸ்வரர் கோயிலில் சிற்பப் பணிகளைச் செய்து கொண்டிருந்தவனை, பொன்னாழி எழுப்ப வேண்டும் என்று காஞ்சிக்கு அழைத்துச் சென்றான். பொன்னாழியும் எழுந்தது. கூடவே காலனும் எழுந்தான், அவனைச் சுமந்து செல்ல! பொருத்தமாகத் தான் அவனது பெயர் காலன் என்று முடிகிறது."

குந்தவையின் குரலில் தோன்றுவது என்ன? பார்த்திபன் அயர்ந்து போய் நின்றான்.

"இளவரசி! தாங்களா இப்படிப் பேசுவது?"

"தங்க ஊசி என்பதால் கண்களைக் குத்திக் குருடாக்கிக் கொள்ள முடியுமா? காஞ்சியினுள் நுழைந்த

பின்தான் அவன் உங்களுக்கு ஆருயிர் நண்பன். சிறிய வயதில் இருந்தே நான் அவனை அறிவேன். பெயர்தான் ஆதித்தன். ஆனால் பிறைமதியாகத்தான் அவன் இருக்கிறான். பாதி நாட்கள் வளரும் நிலா. பாதி நாட்கள் தேயும் நிலா. வளரும் நிலாவாக இருக்கும் போது உறவுகளை வளர்ப்பான். தேயும் நிலாவாக இருக்கும் போது உறவுகளை அழிப்பான். எதற்குச் சொல்கிறேன் என்றால், எனது தந்தையின் மற்றொரு தாரமான தேவி அம்மனாரின் மகள் அரண்மனை நந்தவனத்து தடாகத்தில் பிணமாக மிதந்தாள். அவளுடன் இறுதியாக விளையாடிக் கொண்டிருந்தது ஆதித்த கரிகாலன்தான். அவள் மீதும் அவன் என்னைவிட அதிக அக்கறை செலுத்திக் கொண்டிருந்தான். ஏன், இப்போது நீங்கள் விசாரிக்கும் குழலழகனை எடுத்துக் கொள்வோம். அவன்தான் ஆதித்த கரிகாலனுக்கு குதிரையேற்றப் பயிற்சி செய்வித்தவன். அவனது எதிர்காலம் மீதும் மிகவும் அக்கறை செலுத்திய கரிகாலன் அவனைத் தனது மெய்க்காவலனாக அமர்த்திக் கொண்டான். இப்போது அவனும் மோட்சத்திற்குச் சென்றுவிட்டான். அதென்னவோ தெரியவில்லை, ஆதித்த கரிகாலன் யார் மீதெல்லாம் அக்கறை செலுத்துகின்றானோ, அவர்கள் எல்லோருக்கும் மோட்சம் கிடைத்துவிடுகிறது. எனவே தான் கல்பலதாவின் மீது ஆதித்தன் அக்கறை செலுத்துவது எனக்குக் கவலையைத் தருகிறது!" - குந்தவை எச்சரிக்கையுடன் அவனைப் பார்த்தாள்.

பார்த்திபன் அவளை எரிச்சலுடன் நோக்கினான்.

"இளவரசி! சிந்தூரன் மற்றும் குழலழகனின் கொலை வழக்குகளை விசாரித்து வருபவன் நான். ஆதித்த கரிகாலன்தான் கொலைகாரன் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் என்னிடம் கிட்டவில்லை. இந்நிலையில் அவனைக் குறித்து நீங்கள் குறிப்பிடும் கருத்துகள் வழக்குகளை திசை திருப்பக்கூடும் என்று நினைக்கிறேன்! எனவே அவன்தான் கொலைகாரன் என்பது போன்ற

கருத்தை எனது மனதில் விதைக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்."-பார்த்திபன் உஷ்ணத்துடன் கூறினான்.

"இந்த வழக்கை முதற்கண் உங்களிடம் ஒப்படைத்திருப்பதே சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. அவனுடைய ஆருயிர் நண்பன் நீங்கள். பல்லவ இளவரசர் ஆதித்த கரிகாலனிடம் பல காரியங்கள் ஆக வேண்டியுள்ளது உமக்கு. அனைத்திற்கும் மேலாக, உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் பொன்னாழியில் இடமளித்திருக்கிறான். இந்தக் கொலைகளில் அவன் தொடர்பு கொண்டிருந்தாலும், நீங்கள் அவனைக் காப்பாற்றுவீர்கள் என்பது தெரிந்துதான் உங்களிடம் ஒப்படைத்திருக்கிறான். கொலை நடந்த இடங்களில் இளவரசர் நடமாடியிருக்கிறார். அந்த ஆதாரங்கள் கிடைத்தால் என்ன செய்யப் போகிறீர்கள்?" - குந்தவை கேட்க பார்த்திபன் மலைத்துப் போய் நின்றான்.

"ஒருவேளை, ஆதித்த கரிகாலன்தான் இந்தக் கொலைகளைச் செய்திருக்கிறான் என்கிற ஆதாரங்கள் தங்களுக்குக் கிடைத்தால் என்ன செய்வதாக உத்தேசம்?" - அவனை நேராகக் கண்களினுள் நோக்கினாள் குந்தவை.

"ஆதாரங்கள் கிடைத்தால், குற்றவாளி யார் என்கிற உண்மையை அறிக்கையாக மன்னரிடமும், இளவரசரிடமும் சமர்ப்பிப்பேன். முடிவினை அவர்கள் கையிலேயே விட்டுவிடுவேன்!" - தீர்மானத்துடன் கூறினான், பார்த்திபன்.

"ஆதாரங்கள் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறதா? சிந்தூரன் வழக்கு, குழலழகன் வழக்கு என்று தனித்தனியாக ஆதாரங்களைத் தேடாதீர்கள். ஒரு யானையின் சித்திரத்தை வரைந்து அதனைக் கிழித்துத் தனித்தனி துண்டுகளாகக் காட்டி, இது என்ன என்று கேட்டால், குழந்தைகளுக்கு பதில் கூறத் தெரியாது. சில பாகங்களை இணைத்தாலே அது யானையின் உருவம் என்பதை அவர்கள் யூகித்துவிடுவார்கள். உங்களிடம் இரு

பாகங்கள்தான் இருக்கின்றன. இன்னுமொரு பாகத்தை நான் தருகிறேன். உங்களுக்கு நிலைமை புரியும்" என்றவள் சிறிய இடைவெளியைத் தந்தாள்.

"பார்த்திபரே! கதிராமங்கலன் என்பவரை அறிவீரோ?" - குந்தவை கேட்க, குழப்பத்துடன் தலையசைத்தான், பார்த்திபன்.

"கதிராமங்கலன் என்பான், எங்கள் பழையாறை அரண்மனை கஜானாவின் அதிகாரி. ஆதித்த கரிகாலன் உங்கள் காஞ்சிக்கு வந்ததும் தான் தங்குவதற்கு ஒரு மாளிகையைத் தேடினான், அல்லவா? உங்கள் ஒத்தாடை அரண்மனை சிறியதாக இருந்ததால், இங்கிருந்த பாழடைந்த மாளிகையை வாங்கி அதனை இடித்து, இந்தப் பொன்னாழியை எழுப்பும் பணிகளைத் துவங்கினான். அப்போது அவனுக்கு உங்களது பல்லவத்தின் பொக்கிஷம் கிடைத்தது. அதுதான் அத்தி மலைத்தேவனின் பிரதிமை. அதனைக் கொண்டு அஸ்வமேத யாகம் செய்தால், அவனது ஜாதகத்தில் உள்ள தோஷம் நீங்கும் என்று மலையமான் கூற அவன் அதனைப் பதுக்கி வைத்திருக்கிறான். அத்திமலைத் தேவனுக்கு உரிய உக்ரோதயம் என்கிற ஆபரணம், பழையாறை கஜானாவில் இருப்பது அவனுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உடனே பழையாறைக்குத் தனது நெருங்கியவர்களோடு வந்திருக்கிறான். அத்தி மலைத்தேவனின் சிலை கிடைத்த விவரம், ஆதித்த கரிகாலனின் நெருங்கிய நண்பனான உங்களிடம் மறைக்கப்பட்டிருக்கிறது. தான் பழையாறைக்குச் செல்லும் விவரத்தையும் எனது அண்ணன் உங்களிடம் சொல்லவில்லை. உங்கள் இருவரிடையே ஒளிவு மறைவு இல்லை என்றுதானே கூறினீர்கள்?" - குந்தவை பார்த்திபனை ஏளனமாக நோக்கினாள்.

பார்த்திபன் பதில் கூற இயலாமல் திணறினான். குந்தவை தொடர்ந்தாள்.

"சிந்தூரன், குழலழகன் ஆகியோர் அத்திமலையான் சிலையை எங்கோ பதுக்கி வைத்தனர். உங்களைத் தவிர்த்து, தனது நெருக்கமானவர்களோடு ஆதித்த கரிகாலன் பழையாறை வந்திருக்கிறான். கஜானா அதிகாரி கதிராமங்கலன் உதவியுடன் பாணபத்திரம், உக்ரோதயம் மற்றும் உத்தமசீலரது வாள் ஆகியவற்றைக் கைப்பற்றி இருக்கின்றான். உத்தமசீலரது வாளினைக் கொண்டு வீரபாண்டியனது தலையைக் கொய்தான். அந்த வாள் பொன்னாழியின் வாயிலில் நிறுத்தப் பட்டிருக்கிறது. பாணப்பத்திரத்தைக் கொண்டு ஸ்வர்ணமுகி காட்டில், கங்க மன்னன் பிருத்விபதி பராந்தகருக்கு அளித்த நான்கு சுரங்க ஸ்வர்ணத்தைக் கொண்டு தான் ஆளப்போகும் தஞ்சையில் பொன் னாழியை எழுப்பாமல், இங்கே காஞ்சியில் எழுப்புகிறான். காரணம் அவனது மனம்கவர் காதலி இங்கே இருக்கிறாள்.

"தற்போது, அத்திமலைத்தேவன், பொன்னாழி, ஆருயிர் காதலி, உக்ரோதயம் அனைத்தும் அவன் வசம். இன்னும் மகுடம் ஒன்றுதான் மிகுதி. அதுவும் கிடைத்துவிட்டால், அஸ்வமேத யாகத்தை நடத்தி ஜாதக தோஷத்தையும் நிவர்த்தி செய்து, உலகையே ஆளலாம். இதுதான் அவனது திட்டம். எனக்கு தெரியும். அவனது இந்தத் திட்டத்தில் பங்கேற்றவர்கள் அனைவரையும் ஒவ்வொரு வராகக் கொலை செய்து வருகிறான். முதலில் கதிராமங்கலன் கொலை செய்யப்படுகிறான். அவனது சடலம் பழையாறை சோமேஸ்வரர் ஆலயத்தின் முன்பாகக் கண்டெடுக்கப்படுகிறது. ஆலயத்தின் எதிரே கதிராமங்கலனின் சவம் கிடந்ததால், அன்று நடக்க இருந்த அன்னாபிஷேகம் வைபவம் பாதிக்கப்பட்டு மாலையில்தான் தொடங்கியது. பிறகு, சிந்தூரன், குழலழகன் என்று ஒவ்வொருவராகக் கொல்லப் படுகின்றனர். எதற்கும், வாயிலில் விசாரணைக்காகக் காத்திருக்கும் நேமியங்கையரையும் உடனே விசாரித்து

விடுங்கள். அவரே எனது அண்ணனின் அடுத்த குறியாக இருக்கலாம்!" - குந்தவை கூறினாள்.

குந்தவையின் அறிவுக் கூர்மையை எண்ணி மலைத்துச் சிலையாக அமர்ந்துவிட்டான், பார்த்திபன். ஆதித்த கரிகாலனுடன் இருக்கும் இவனே கூடக் கவனியாத விவரங்களையெல்லாம் அடுக்குகின்றாளே!

"எனக்குப் புரியவில்லை இளவரசி!" - பிரம்மிப்பு கலந்த ஆயாசத்துடன் முணுமுணுத்தான், பார்த்திபன்.

"என்னவென்று?" - குந்தவை அவனை விசித்திரமாகப் பார்த்தாள்.

"பாண்டியர்களுடன் நிகழ்ந்த போரில் ஈழ வேந்தன் பாண்டியனுக்கு ஆதரவாகச் சோழர்கள் மீது படையெடுத்து வர, அவர்களைத் தடுத்து நிறுத்தி விரட்டியடித்த கொடும்பாளூர் வேந்தர் தனது இன்னுயிரை தியாகம் செய்தார். அவரது தியாகத்தை மெச்சி, அப்போது பத்தே வயது நிரம்பிய சிறுமி வானதியை பதினான்கு வயது நிரம்பிய உங்கள் தம்பிக்கு மணம் பேசி நிச்சயித்துவிட்டீர்கள். காலம் கனியட்டும் என்று அவர்களும் காத்திருக்கிறார்கள். ஆனால் இன்று இருபத்தி எட்டு பிராயங்கள் பூர்த்தியாகி, திருமண வயதைக் கடந்து நிற்கும், உங்கள் அண்ணன் ஆதித்த கரிகாலனின் திருமணப் பேச்சை விடுங்கள். அவன் காதலிப்பது கூட பாவம் என்பது போன்று பேசுகிறீர்கள். அவனது மனநிலை மற்றும் உடல்நிலை குறித்த ஐயங்களை எழுப்புகிறீர்கள். நேரில் கண்டது போன்று, அவன்தான் கொலை செய்திருக்கிறான் என்கிறீர்கள். தம்பி மீதுள்ள பாசம் ஏன் அண்ணன் மீது எழவில்லை? ஏன் இந்தப் பாரபட்சம்?" - பார்த்திபன் திகைப்புடன் கேட்டான்.

கலகலவென்று சிரிக்கத் துவங்கினாள் குந்தவை. பிறகு அவள் பேசியபோது, அவளது கண்கள் சாளரத்தின் வழியாக வெளியே நோக்கின.

"தாய், தந்தை, அண்ணன், தம்பி, ஏன் இறைவன் மீது கூட எனக்குப் பாசம் இல்லை. எனக்குச் சோழ நாட்டின் மீது மட்டுமே பாசம்!" என்று விறைப்புடன் கூறியவள் எழுந்தாள்.

"அவசியம், கல்பலதா மற்றும் உங்கள் தங்கையுடன் தந்தையின் பிறந்ததின கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வாருங்கள்!"

குந்தவை அறையின் நுழைவாயிலை நோக்கி நகர்ந்து, கதவைத் திறக்க முற்பட்டவள், திடீரென்று திரும்பி பார்த்திபனை நோக்கினாள்.

"பார்த்திபரே! நமது தலையின் உச்சியில் எதற்காகச் சிகையை குடுமியாக முடிகிறோம் தெரியுமா? தேகம் என்னும் கோயிலின் கருவறைதான் மனசாட்சி. அந்த மனசாட்சிக்கு அடையாளமாகத்தான் சிகையைக் குடுமியாகக் கட்டுகிறோம். உங்கள் மனசாட்சி என்னிடம், எனது மனசாட்சி உங்களிடம் என்பதைக் குறிக்கத்தான், எனது குடுமி உங்களிடம், உங்களது குடுமி என்னிடம் என்கிற வழக்குத் தோன்றியது. எனவே எச்சரிக்கையுடன் இருப்போம். 'உங்கள் குடுமி என்னிடம்.. என்னுடைய குடுமி உங்களிடம்!" என்று கூறிவிட்டு, தனக்குப் பின்பாக அறைக் கதவை சாற்றிவிட்டு வெளியேறினாள் குந்தவை.

பார்த்திபன் வாய் பிளந்து நின்றுக் கொண்டிருந்தான். மலையமான் தன்னிடம் கூறிய வார்த்தைகளை அப்படியே அட்சரம் பிழறாமல் குந்தவையும் பேசியிருக்கிறாள் என்பதைக் கண்டு அதிசயித்தான். குந்தவைக்குத் தெரியாமல் உலகத்தில் ஒன்றுமே நடக்காதா? இவன் இரகசியமாக அறிந்திருந்த அத்தனை விவரங்களையும் தேங்காய் உடைப்பது போன்று கூறிவிட்டுச் சென்றிருக்கிறாளே!

ஆதித்த கரிகாலன் உறக்கத்தில் உலா வருவதைப் பற்றியும், கல்பலதா அரிஞ்சய சோழனுக்கும், கங்காவதிக்கும் பிறந்த ஷ்யமந்தகப் பல்லவிக்குப் பிறந்த மகள் என்பதையும் பற்றிக் குந்தவை பார்த்திபனிடம் குறிப்பிடவேயில்லையே! குந்தவை அதைப் பற்றி அறிவாளா? அவள் அறிவாளா என்பது தெரியாது. ஆனால் எப்போது, எதனை, எங்கே, எவ்விதத்தில் யாரிடம் பேச வேண்டும் என்கிற கலையை நன்கறிந்தவள் அவள் என்பதை மட்டும்தான் தற்போது உறுதியாகக் கூற முடியும்.

# 23. பீடத்தில் ஒரு செய்தி

சோழ மன்னர் சுந்தர சோழரும், வானவன் மாதேவியும், தஞ்சைக்குப் புறப்பட்டுப் போக, குந்தவையும், தெட்டக்கனியும் இரதத்தில் பழை யாறைக்குப் புறப்பட, வந்தியத்தேவன் ஒரு புரவியில் அவர்களைப் பின்தொடர்ந்தான்.

அவர்கள் புறப்பட்டுச் சென்ற பிறகு, விசாரணைக்கு நேமியங்கையரை மீண்டும் வரச்சொல்லியிருந்தான், பார்த்திபன். அன்று குந்தவை இவனிடம் உரையாடி விட்டுச் சென்ற பிறகு, பார்த்திபனுக்கு இருந்த மனநிலையில், நேமியங்கை யரிடம் விசாரணை நடத்தத் தோன்றவில்லை. ஆதித்த கரிகாலன் தன்னை மறந்த நிலையில் கொலைகளைச் செய்கிறான் என்கிற சந்தேகம் பார்த்திபனிடத்தில் ஏற்கெனவே தோன்றியிருக்க, அதனை ஊர்ஜிதப் படுத்துவது போன்று குந்தவை இவனிடம் ஐயங்களை எழுப்பியிருந்தாள். எனவேதான் அந்த மனநிலையில் நேமியங்கையரை விசாரிக்காமல் விட்டிருந்தான்.

ஆதித்த கரிகாலனின் குரு நேமியங்கையரை குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தான், பார்த்திபன். "குழலழகனும், நீங்களும், ஆதித்த கரிகாலனுக்கு இரு கண்கள் போல என்று அறிந்திருக்கிறேன். சிந்தூரன், குழலழகன் என்று அவனுக்கு நெருங்கியவர்கள் எல்லாம் குறிவைக்கப்பட்டுள்ளதை காணும் போது நீங்களும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது" - பார்த்திபன் துவக்கத்திலேயே இப்படிக் கூற, நேமியங்கையரின் முகம் இருண்டது. அவரது தேகம் நடுங்க, கலக்கத்துடன் பார்த்திபனை நோக்கினார்.

அச்சுறுத்தலுடன் விசாரணையைத் துவக்கினால், அவர் மறைக்காமல் உண்மைகளைக் கூறக் கூடும் என்பதால்தான் அவன் அந்த அச்சுறுத்தலைச் செய் தாலும், அவர் தொடர்ந்து கூறிய பதில் பார்த்திபனையே நிலைகுலையச் செய்தது.

"உண்மை! நானும் அதை எண்ணித்தான் மனதினுள் குமைந்து கொண்டிருக்கிறேன். ஏன்தான் இளவரசரின் ஆசானாக இருக்கச் சம்மதித்தேனோ..! மலையமானின் வற்புறுத்தலினால் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். அது எனது உயிருக்கே உலை வைக்கும் என்று அப்போது நான் நினைக்கவில்லை. முன்பொரு நாள் இளவரசரும், நானும், குழலழகனும் பழையாறை கஜானாவிற்குச் சென்றிருந்தோம். இளவரசர் பாணபத்திரம் மற்றும் உத்தமசீலரின் வாள் ஆகியவற்றை கொண்டு வந்தார். இந்த விவரங்கள் வெளியே தெரியக்கூடாது என்பதற்காகத்தான் இளவரசர் இந்தக் கொலைகளைச் செய்கிறாரோ என்னவோ.. மனநிலை அழுத்தத்தைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டு கொலைகளைச் செய்கிறாரோ என்று எனக்கு ஐயமாக இருக்கிறது." - நேமியங்கையரின் குரல் நடுங்கியது.

"ஆதித்த கரிகாலன்தான் இந்தக் கொலைகளைச் செய்வதாக எதனை வைத்து அனுமானிக்கின்றீர்?"- பார்த்திபன் அதிர்ந்தான்.

"சிறிய வயதிலிருந்தே அவருக்குக் கல்வி புகட்டும் ஆசானாக நான் இருந்திருக்கிறேன். நானும் திருக் கோவிலூரரைச் சேர்ந்தவன்தான். கருட குன்றம்தான் எனது கிராமம். மலையமான்தான் ஆதித்த கரிகாலருக்கு என்னை ஆசானாக நியமித்தார். அப்போதே இளவரசருக்கு உடல்ரீதியாகவும், மனரீதியாவும் பிரச்னைகள் உண்டு. அவற்றில் இருந்து மீண்டு வந்தார் என்று நிம்மதியாக இருந்த வேளையில் அண்மை காலங்களில் பழைய மூர்க்கத்தையும், உக்கிரத்தையும்

இளவரசர் கொண்டிருக்கிறார். தாங்கள் யாரிடமும் கூறாமல் இருந்தால், ஒரு விஷயத்தைத் தெரிவிக்கிறேன்..” என்று நேமியங்கையர் சுற்றுமுற்றும் பார்த்தார்.

“ஏற்கெனவே, இளவரசர் ஒரு கொலையைச் செய்திருக்கிறார்..”

நேமியங்கையர் கூறியதும், திடுக்கிட்டான், பார்த்திபன்.

“சேவூரில் வீரபாண்டியனின் தலையைக் கொய்ததைத் தானே கூறுகிறீர்கள்?” - பார்த்திபன் கேட்டான்.

“அது கொலை இல்லை. போரின் முடிவு. நான் சொல்வது மனநிலை பாதிப்பினால் செய்த கொலை!”- நேமியங்கையர் கூறினார்.

“சற்று விரிவாகக் கூறுங்கள்!” - திகைப்பின் உச்சத்தில் இருந்தான், பார்த்திபன். சிந்தூரனின் கொலை நடந்த இடத்திலும் ஆதித்த கரிகாலனைப் பார்த்ததாக, கல்பாவும், லலாடிகாவும் கூறியிருக்கிறார்கள். அதனை ஒரு காவலனும் ஊர்ஜிதம் செய்திருக்கிறான். நேற்று நள்ளிரவிலும் முருக்கத்திப் பாதையில் அவன் உறக்கத்தில் உலாவியதாகக் காவலர்கள் கூறுகின்றனர். அவன் உலாவிய அதே சமயத்தில்தான் குழலழகனும் கொல்லப் பட்டிருக்கிறான். இப்போது நேமியங்கையர் வேறு பெரும் இடியை தலையில் போடுகிறார்.

நேமியங்கையர் தொடர்ந்தார்:

“திருக்கோவிலூரில் இருந்த போது, மலையமானின் மாளிகையில் தங்கித்தான், நான் இளவரசருக்குக் கல்வியை போதித்தேன். மனரீதியாகப் பிரச்னைகள் சிறு வயதில் அதிகம் இருந்தாலும், மனமாசுகெடிலத்தில் பகிரண்ட காயகல்பர் என்கிற சித்தரிடம் சிகிச்சை செய்து கொண்ட பிறகு, பூரணக் குணமடைந்தார். கல்வி பாடங்களில் மிகவும் ஆர்வத்துடன் இருப்பார். திருக்கோவிலூரில் இருக்கும்வரை உற்சாகமாக இருப்பார். ஆனால் தனது பெற்றோரின் வற்புறுத்தலைத் தொடர்ந்து

தஞ்சைக்குச் சென்று அங்கே தங்கிவிட்டு மீண்டும் திருக்கோவிலூர் வரும்போது பழைய உக்கிரத்தையும், குழப்பத்தையும் கொண்டிருப்பார். என்னையே ஒருமுறை கோபத்தில் வாளை எடுத்து வெட்ட வந்தார். மலையமானின் மூதாதையரின் குடும்ப வீணையைக் கீழே போட்டு சுக்குநூறாக உடைத்தார். எப்போதெல்லாம் தஞ்சைக்குச் சென்றுவிட்டு வருகிறாரோ, அப்போது உக்கிரம் அதிகமாகும். எனவே, மலையமான் அவரை கெடில நதிக்கரையைக் கடந்து போகக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார். பிறகு அவர் தஞ்சைக்குப் போகாமல் இருக்கவே, மீண்டும் அவரது குணத்தில் சாத்வீகம் தோன்றியது. இப்போது இளவரசரின் முகத்தில் பழைய உக்கிரத்தையும், குழப்பங்களையும் முன்போல் காண்கிறேன்!" - கிசுகிசுத்த குரலில் கூறினார், நேமியங்கையர்.

"எப்போது முதல் இந்த மாற்றத்தை உணருகிறீர்?"- பார்த்திபன் அவரை உன்னிப்பாக கவனித்தான்.

"இளவரசர் காஞ்சியில் காலடி வைத்தபோது கூட மிக நன்றாகத்தான் இருந்தார். ஆனால் ஒரு நாள் இரவு நான், குழலழகன் மற்றும் கதிராமங்கலன் என்னும் பழையாறை கஜானாவின் அதிகாரி ஆகிய மூவரும் இளவரசருடன் பழையாறை கஜானாவிற்குச் சென்றோம். அதன்பிறகுதான் இளவரசரின் குணத்தில் மாறுதல் ஏற்பட்டது. தாங்கள் யாரிடமும் கூறாமல் இருந்தால், ஒரு விஷயத்தைத் தெரிவிக்கிறேன்.." என்ற நேமியங்கையர் சுற்றுமுற்றும் பார்த்தார். "அதன் பிறகு ஒரு நள்ளிரவு, இளவரசர் அந்தக் கதிராமங்கலனைத் தேடிச் சென்று கொன்றுவிட்டார். அவனது பிணம், சோமேஸ்வரர் ஆலயத்தின் முன்பாகக் கிடைத்ததாம்." -நேமியங்கையர் கூறினார்.

"உங்களுக்கு யார் கூறினார்கள்?" - பார்த்திபன் கேட்டான்.

"எனக்குக் குழலழகன்தான் கூறினான். பழையாறை முழுவதும் பேசிக்கொள்கிறார்கள் என்று வேறு கூறினான்."

பார்த்திபனுக்குச் சட்டென்று ஏதோ உறுத்தியது. குந்தவை கூறியதை நேமியங்கையரும் ஊர்ஜிதப்படுத்து கிறார். சிந்தூரன் மரணம் அடைவதற்கு முன்பாக ஆதித்த கரிகாலனை அவனது கூடாரத்தின் முன்பாகக் கல்பலதாவும், லலாடிகாவும் பார்த்திருந்தனர். குழலழகனின் கொலைக்கு முன்பாக முருக்கத்தி பாதையை நோக்கி ஆதித்த கரிகாலன் செல்வதை பொன்னாழியின் பணியாளர்கள் பார்த்திருந்தனர். அதே போன்று கதிராமங்கலன் கொலை செய்யப்பட்ட அன்று ஆதித்த கரிகாலனைப் பார்த்திருந்தவர்கள் யாராவது உண்டா?

பார்த்திபனின் சிந்தையில் உறுத்தல் அதிகமானது. குந்தவை இவனிடம் கூறிய தகவல்களில் ஏதோ ஒன்று இவனுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது.

"நேமியங்கையரே! பொன்னாழி பிரவேசத்திற்கு முன்பாகச் சிந்தூரன் கொலை செய்யப்பட்டான். நேற்று குழலழகன் கொலை செய்யப்பட்டான். கதிராமங்கலன் எப்போது கொல்லப்பட்டான்? தங்களுக்கு நினை விருக்கிறதா?" - பார்த்திபன் கேட்க, நேமியங்கையர் தலையசைத்தார்.

"தெரியவில்லை இளவரசே! தஞ்சை கஜானா அதிகாரி விரிஞ்சி நாதர்தான் கதிராமங்கலனின் கொலையினை பற்றிய அதிகாரப்பூர்வ தகவலை சோழ மன்னருக்குத் தெரிவித்தார். விரிஞ்சி நாதரை கேட்டால்தான் விவரம் தெரிய வரும்." - நேமியங்கையர் கூறினார்.

பார்த்திபன் யோசித்துக் கொண்டே இருந்தான். குந்தவை தன்னிடம் பேசிய போது அளித்திருந்த ஒரு தகவல், எல்லாக் கேள்விகளுக்கும் விடையை அளித்து

குழப்பங்களையும் தீர்த்துவிடும். ஆனால் அவன் சிந்தையின் ஒரு மூலையில் அந்தத் தகவல் கனன்று கொண்டிருக்கிறது. எவ்வளவு யோசித்தும், கொழுந்து விட்டு எரிய மறுக்கிறது.

அன்று இரவே தஞ்சைக்குப் பயணமாகி விரிஞ்சி நாதரைச் சந்தித்துவிட்டு வந்தால் என்ன?

உடனேயே கல்பலதாவிற்குக் கொடுத்திருந்த வாக்கு நினைவுக்கு வந்தது. வாரம் ஒரு இரவு அவளது அறைக்கு இரகசியமாக விஜயம் செய்வதாக கூறியிருந்தான், அவன். இன்று அவன் வரவை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருப்பாள். என்ன செய்வது?

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவும் அவளைச் சந்திக்க வருவதாக வாக்களித்திருந்த நிலையில், மனம் அன்று வெள்ளிக்கிழமை என்பதை அவனுக்கு நினைவு படுத்திக் கொண்டேதான் இருந்தது. காதல் மனைவியைச் சந்திக்கப் போகிறோம் என்கிற குதூகலம் இருந்தாலும், அப்போதைக்கு கல்பலதாவின் மீது ஒருதலையாகக் காதல் கொண்டிருக்கும் ஆதித்த கரிகாலனுக்கு தெரியாமல் அவளுடன் உறவாட வேண்டும் என்கிற எச்சரிக்கை உணர்வில்தான் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அவளைச் சந்திக்க வருவதாகக் கூறி இருந்தான். இன்று தஞ்சைக்குச் சென்று விரிஞ்சி நாதரைச் சந்தித்தே தீரவேண்டும் என்கிற உத்வேகம் அதிகரிக்க, கல்பலதாவிடம் இன்று தான் விஜயம் செய்யப் போவதில்லை என்கிற தகவலை அனுப்பிவிட வேண்டியதுதான். மனதினுள் நிச்சயித்தான், பார்த்திபன். 'தான் வர முடியாத நிலையில் இருக்கிறேன்' என்று ஓலை அனுப்பிவிட்டு அவளைச் சந்திக்காமலே தஞ்சைக்குப் புறப்படத் தீர்மானித்தான். அவளைச் சந்திக்கச் சென்றால், இவனைப் போகவேவிடமாட்டாள்.

'பிரிய கல்பா,

இன்று உன்னை ஏமாற்றத்திற்கு உள்ளாக்குகிறேன். பொன்னாழியில் நிகழ்ந்து வரும் கொலைகளின் தொடர்பாக ஒரு விசாரணைக்காக அவசரமாகத் தஞ்சைக்குச் செல்கிறேன். கைப்பிடித்த மனைவியைச் சந்திப்பதற்குக் கூட இரகசியமாகச் செயலாற்ற வேண்டியிருக்கிறதே என்று வருத்தமாகத்தான் இருக்கிறது. எத்தனை நாட்களுக்கு இந்த நாடகத்தை அரங்கேற்ற வேண்டும் என்கிற உனது பொறுமையின்மை புரிகிறது. இருப்பினும், நாம் எதிர்பார்க்கும் காரியங்கள் நடக்க வேண்டும் என்றால் நாம் இருவரும் தம்பதிகள் என்கிற உண்மை யாருக்கும் தெரியாமல் இருப்பதே நலம். மேலும், ஆதித்த கரிகாலனின் உடல் மற்றும் மனநிலையைக் கருதி இன்னும் சில நாட்களுக்கு நாம் இந்த இரகசியத்தைக் கட்டிக் காத்துதான் ஆக வேண்டும். உன்னைச் சந்தித்த பிறகு அவன் உற்சாகமாக இருப்பதாக மலையமான் கூறிவரும் நிலையில், நாம் தம்பதிகள் என்கிற உண்மை அவனுக்குத் தெரிந்தால், அவனது மனநிலை பாதிக்கப்படலாம். எனவே, சற்றே பொறுமையாகக் காத்திரு. நான் தஞ்சையிலிருந்து திரும்பி வந்ததும் நேராக உன்னைச் சந்திக்க வருகிறேன். காத்துக்கிடப்பதில்தான் தாம்பத்யம் செழிக்கும். அமைதியாக உறங்கு.' - பிரிய நாயகன், பார்த்திபன்.

அவளைச் சந்திக்காமல் ஓலையை அவள் வசம் சேர்ப்பித்துவிடலாம். மறுநாள் அவளைச் சந்திக்கும் போது சமாதானம் செய்து கொள்ளலாம், என்று நினைத்தான்.

இரவு படர்ந்தது.

தான் தஞ்சைக்குப் பயணிக்கும் வேளையில், பொன்னாழியில் பொறுப்பான ஒருவர் இருக்க வேண்டியது அவசியம் என்று நினைத்தவன், தனது பழைய ராஜவீதி மாளிகையில் வசித்து வரும் விஜயமேதாபதிக்கு அவசரமாகத் தகவல் அனுப்பினான்.

உறக்கத்தில் உலா வரும் ஆதித்த கரிகாலனையும், பெண்களையும் தனியேவிட்டுச் செல்ல அவனுக்கு விருப்பமில்லை.

விஜயமேதாபதி வந்து சேர்ந்த போது இரவு படர்ந்து, காஞ்சி அடங்கத் துவங்கிவிட்டது. இரவு காவலர்கள் தங்கள் பணிகளைத் துவக்க, சேடிகள், ஒன்றிரண்டு தீபங்களைத் தவிர்த்து மற்றவற்றை அணைத்துக் கொண்டிருந்தார்கள்.

தனது முன்பாக வந்து நின்ற விஜயமேதாபதியை நோக்கினான்.

"மேதாபதி! அவசரமாகத் தஞ்சைக்குச் செல்கிறேன். நீர் இன்று பொன்னாழியிலேயே தங்கிவிடுங்கள். அனைவரின் மீதும் ஒரு கண் இருக்கட்டும். பொன் னாழியைச் சுற்றி காவலர்களை நிற்க வைத்துள்ளேன். மாளிகையின் உள்ளே யாரும் நுழையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று கூறியபடி தனது உறையில் வாளைச் சொருகினான். குத்துவாள் ஒன்றையும் இடைக் கச்சையினில் சொருகிக் கொண்டவன், கல்பலதாவுக்கு வரைந்திருந்த ஓலையை விஜயமேதாபதியிடம் கொடுத்து அவளிடம் சேர்ப்பித்துவிடும்படி கூற நினைத்தான்.

அப்போது-

சாளரத்தின் வழியாக நந்தவன தீபஸ்தம்பத்தின் அருகே லலாடிகா உலாவிக் கொண்டிருப்பது தெரிந்தது. விஜயமேதாபதியிடம் ஓலையைக் கொடுத்து கல்பலதாவிடம் சேர்த்தால், அவளுக்குச் சினம் அதிகமாகும். லலாடிகாவிடம் ஓலையைக் கொடுத்து கல்பாவிடம் சேர்க்கச் சொன்னால், அவள் நைச்சியமாக உரையாடி, அவளைச் சமாதானம் செய்து ஓலையை அளிப்பாள் என்று நினைத்தவன், ஓலையை அங்கியில் மறைத்துக் கொண்டு புறப்பட்டான்.

நந்தவன தீபஸ்தம்பத்தின் அருகே நடந்து கொண்டிருந்த லலாடிகா, தன்னை நோக்கி பார்த்திபன் வருவதைக் கண்டு நின்றாள்.

“அண்ணா, இந்நேரத்தில் எங்கே புறப்பட்டுவிட்டாய்?” - லலாடிகா வியந்தாள்.

“அவசரமாக தஞ்சைக்குப் போக வேண்டி இருக்கிறது, லலாடிகா. சிந்தூரன் மற்றும் குழலழகன் கொலைகள் நிகழ்வதற்கு முன்பாக ஆதித்த கரிகாலன் அங்கே நடமாடியிருப்பதால், அனைவரது சந்தேகமும் அவன் மீது உள்ளது. அவன்தான் உறக்கத்தில் உலா வரும்போது தன்னை மறந்த நிலையில் கொலைகளைச் செய்கிறான் என்று அனைவரும் கூறுகின்றனர். அவனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே அந்த எண்ணம் உள்ளது. உண்மையிலேயே அவன்தான் செய்கிறானா அல்லது அவனது நிலையை அறிந்தவர்கள் யாரோ, கொலைகளைச் செய்துவிட்டு அவன் மீது பழிபோடு கிறார்களா என்பதை முதலில் அறிய வேண்டும். பழையாறையில் நிகழ்ந்த ஒரு கொலைக்கும் ஆதித்த கரிகாலனின் மீது பழி எழுந்துள்ளது. அதைப் பற்றி விசாரிக்கத்தான் நான் தஞ்சைக்குச் செல்கிறேன். ஜாக்கிரதை! மேதாபதியை இன்றிரவு இங்கே தங்கச் சொல்லியிருக்கிறேன். நீ எனக்குத் தங்கை இல்லை, தம்பி. நீ இருக்கும் தைரியத்தில்தான் இளவரசரையும், கல்பலதாவையும் உனது பொறுப்பில் விட்டுப் போகிறேன்.” - பார்த்திபன் கூறினான்.

“நீ கவலைப்படாமல் சென்று வா, அண்ணா! நான் பார்த்துக் கொள்கிறேன். இம்மாதிரி சவால்களைச் சந்திப்பது எனக்குத் தான் மிகவும் பிடிக்குமே!” - லலாடிகா சிரித்தாள்.

“ஆம் தெரியும். அதற்குத்தான் இன்னுமொரு சவாலையும் நீ சந்திக்கும்படி செய்யப் போகிறேன்” என்றவன் கல்பாவிற்கு தான் வரைந்திருந்த ஓலையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"இன்று வருகிறேன் என்று நான் அவளுக்கு வாக்கு தந்திருந்தேன்.. அந்த வாக்கினை மீறுவதற்கான மன்னிப்பு ஓலை இது. இதை அவளிடம் சேர்த்துவிடு." - சிரித்தான், பார்த்திபன்.

"மிகவும் கடினமான சவால்தான்! மாலையே நீராடும் போது என்னிடம் கூறிவிட்டாள். 'பொறுத்திருந்து பாரேன்! உனது அண்ணா இன்றிரவு வரப்போவ தில்லை. சமாதானம் சொல்லி அனுப்புவார். காணாமல் போன அத்திவரதனுக்காக பெருந்தேவி ஆலயத்தில் காத்திருப்பது போன்று உனது அண்ணனுக்கு நான் காலமெல்லாம் காத்திருக்க வேண்டியதுதான்' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்." - லலாடிகாவும் நகைத்தாள்.

"அவளிடம் சொல்! பெருந்தேவியும், அத்திமலைத் தேவனும் மிக விரைவில் ஒன்று சேர்வார்கள். அதனை இரண்டு தம்பதிகள் கண்டு களிப்பார்கள். ஒன்று கல்பலதாவும், அவள் கணவனாகிய நானும். மற்றொன்று லலாடிகாவும் அவள் கணவனும்." - பார்த்திபன் கூறினான்.

"தவறு அண்ணா! என்னை உனது தம்பி என்றுதானே கூறினாய். எனவே இரண்டாவது தம்பதி பார்த்திபனின் தம்பியும் அவனது மனைவியும்!" என்று கூற, இருவரும் அந்த இரவு வேளையில் நகைத்தது, தொலைவில் குதிரை இலாயத்தின் வாயிலில் நின்ற குதிரை காப்பாளனுக்கு மட்டுமல்ல, பொன்னாழி மாளிகையின் நுழைவாயிலில், கரிகால் பெருவளத்தானின் பொற்சிலையருகே நின்றிருந்த மேதாபதிக்கும் கேட்டது.

"நான் புறப்படுகிறேன்!" என்று குதிரை மேய்ப் பாளனை நோக்கிக் கையசைக்க, அவன் புரவியைக் கொண்டு வந்து நிறுத்தினான். அதன் மீது தாவி ஏறிய பார்த்திபன், லலாடிகாவை நோக்கிக் கையசைத்துவிட்டு தஞ்சையை நோக்கி விரைந்தான்.

ஓலையைக் கையில் வைத்துக் கொண்டு மீண்டும் உலாவத் துவங்கினாள், லலாடிகா. பார்த்திபனின் மாளிகையில் தோழியாக இருந்தபோது அன்றாடம் அதிகப் பணிகள் இருந்ததால் அவளுக்கு உடற்பயிற்சிக்கு தேவை இல்லாமல் இருந்தது. படுத்தவுடன் உறங்கிப் போவாள். ஆனால் அவள் தனது தங்கை என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு, பார்த்திபன் அவளை ஒரு இளவரசியாகவே நடத்தினான். அவளை எவ்விதப் பணியைச் செய்யவும் அனுமதிக்கவில்லை. எப்போதும் ஓய்வு நிலையிலேயே அமர்ந்திருந்ததால், தனது மேனி ஒரு சுற்று பெருத்துவிட்டதாக உணர்ந்த லலாடிகா, அன்றாடம் இரவில் நந்தவனத்திலும், காலையில் முருக்கத்தி பாதையிலும் உலா வருவது வழக்கம்.

உலா வந்தபடியே லலாடிகா பொன்னாழியை நோக்கினாள். பிரம்மாண்டமான பொன்னாழி, இப்போது இருளில் மூழ்கி இருந்தது. நுழைவாயிலில் மட்டும் இரு சுளுந்துகள் எரிந்து கொண்டிருந்தன.

நுழைவாயிலின் அருகே இரு காவலர்கள் நின்று கொண்டிருந்ததையும், அவர்களிடம், விஜயமேதாபதி பேசிக் கொண்டிருப்பதையும் கண்டாள். தொடர்ந்து பொன்னாழியை நோட்டம்விட்டபடி உலாவிக் கொண்டிருந்தாள், லலாடிகா.

தனது அறையில் நிதானமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள், கல்பலதா. இப்போதைக்கு பார்த்திபன் வரப்போவதில்லை. ஆதித்த கரிகாலன் உறங்கிய பிறகுதான் வருவான். இன்னமும் உலாவச் சென்ற லலாடிகாவும் திரும்பி வரவில்லை. அன்றாடம் உலாவிவிட்டு வந்து, உறங்கப் போவதற்கு முன்பாக, இவளைச் சந்தித்து பேசிவிட்டுத்தான் செல்வாள். லலாடிகாவிற்காகக் காத்திருந்தபடி சிறிது சந்தனமும், குங்குமப்பூவும் சேர்த்து அரைத்திருந்த கலவையை முகத்தில் பூசத் தொடங்கினாள்.

நுழைவாயிலில் நின்றிருந்த மேதாபதியின் கண்களை உறக்கம் தழுவியது.

"எச்சரிக்கை!" - காவலர்களிடம் கூறிவிட்டு, அருகில் இருந்த அலுவல் அறையினுள் நுழைந்தார். அங்கிருந்த நாற்காலியில் சரிந்தபடி உறங்கத் துவங்கினார்.

பொன்னாழியின் நுழைவாயிலில் காவலர்கள் இருவரும் ஆடாமல் அசையாமல் நின்றனர். வாயிலில் ஒளிர்ந்த இரு சுளுந்துகளும், தொலைவில் நந்தவனத்தில் லலாடிகா உலாவிக் கொண்டிருந்த பகுதியில் நின்ற தீபஸ்தம்பத்தின் உச்சியில் ஒளிர்ந்த தீபக்கப்பரையும் மட்டுமே ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன. மற்றபடி இருளும், அமைதியும் போட்டி போட்டுக் கொண்டு பொன்னாழியைத் தங்கள் வசப்படுத்தி இருந்தன.

அவ்வப்போது சுளுந்துகளில் இருந்து வெடித்துப் புறப்படும் தீப்பொறியின் ஒலிதான் கேட்டுக் கொண்டிருந்தது. காவலர்கள் தங்கள் செவிகளைத் தீட்டி மற்ற ஒலிகளை உள்வாங்க முயன்று கொண்டிருந்த சமயம் -

உப்பரிகையில் மேற்குப் பகுதியில் இருந்த ஆதித்த கரிகாலனின் சயன அறைக் கதவு திடீர் என்று திறந்தது. ஆதித்த கரிகாலன் விறைப்புடன் வெளியே வந்து நின்றான். அவனது கண்கள் விரிந்திருந்தாலும் அவற்றில் உயிரோட்டம் இல்லை. ஆழ்ந்த உறக்கத்தில் அவன் இருப்பதற்கு அடையாளமாக, அவனிடம் இருந்து சீரான சுவாசம் வெளிப்பட்டது. வேட்டியை கச்சமாக உடுத்தி, இரவு சயனிக்கும்போது அணியும் நீண்ட வெள்ளை அங்கியை மேலே அணிந்திருந்தான். இடையில் கரிய வண்ணத்தில் ஒரு பட்டையை அணிந்திருக்க, அதில் ஒரு குத்துவாளைச் சொருகியிருந்தான். அவனது சுருள்குழல் களைக் குவித்து உச்சியில் குடுமியாக முடிந்து, வாழை நாரினால் கட்டியிருந்தான்.

அறையைவிட்டு வெளியே வந்தவன், படிகளுக்குச் செல்லும் நேர்பாதையில் விறைப்பாக நடந்தான். படிகளை அடைந்தவன், ஒவ்வொரு படியாக எண்ணி அளப்பவன் போன்று மெதுவாக இறங்கத் துவங்கினான். படிகளைக் கடந்து, கரிகால் பெருவளத்தான் மற்றும் இளந்திரையனின் சிலைகளைக் கடந்து நுழைவாயிலை அடைந்தான்.

காவலர்கள் இருவரும் ஓரக்கண்களால், ஆதித்த கரிகாலன் தங்களைக் கடந்து செல்வதை வியப்புடன் கண்டனர். இரவு அங்கியில் அவன் எங்கே செல்கிறான்? ஒருவேளை உலாவச் செல்கிறானோ? அவர்களது கண்கள் அவனது அங்கியின் பட்டையில் சொருகப் பட்டிருந்த குத்துவாளை திகைப்புடன் நோக்கின.

பணிவுடன் அவனை நோக்கி தலையை அசைத்தனர், காவலர்கள்.

ஆனால் அதனை அங்கீகரிக்கும் நிலையிலா அவன் இருக்கின்றான்?

ஆதித்த கரிகாலன் நந்தவனத்தின் தீபஸ்தம்பத்தை நோக்கி நடந்தான். தீபஸ்தம்பத்தின் அருகே நடை போட்டுக் கொண்டிருந்த லலாடிகா, மங்கிய ஒளியில் அந்த அசைவினைக் கண்டு திகைப்புடன் திரும்பி நோக்கினாள். ஆதித்த கரிகாலன்தான் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

லலாடிகா துணிவான பெண்தான். இருப்பினும், அந்த வேளையில் ஆதித்த கரிகாலனைக் கண்டதும் அவளது இதயம் திகிலினால் துள்ளியது. சோழ இளவரசன் உறங்குகின்றானா அல்லது விழித்திருக்கின்றானா? ஆனால் அவனது விறைப்பான நடையைக் கவனித்தால், அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போலல்லவா இருக்கிறது?

நுழைவாயிலின் அருகே காவலர்கள் இருப்பதால், சற்றே துணிவை திரட்டிக் கொண்டு அவனை எதிர்நோக்கி நின்றாள்.

ஆதித்த கரிகாலனின் கண்கள் நிலைகுத்தி இருக்க, தீபஸ்தம்பத்தின் அருகே வந்து நின்றான். அவனையே தயக்கத்துடன் நோக்கிக் கொண்டிருந்த லலாடிகா, கிசுகிசுத்த குரலில் "இளவரசே..!" என்று அவனை அழைக்க, அவனது முகத்தில் எவ்வித உணர்வுகளும் இல்லை.

அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த லலாடிகாவின் வாயை இரும்புக் கரம் ஒன்று பொத்தியது. முறம் போன்ற அந்தப் பெரிய கை, அவளது சிறிய வாயை மட்டுமல்லாமல், நாசி, கன்னம், முகவாய் என்று அவளது பெரும்பான்மையான முகத்தையே தனக்குள் அடக்கிக் கொண்டது. திகிலினால் விரிந்த லலாடிகாவின் கண்களும், கூனற்பிறை நெற்றியும்தான் வெளியே புலப்பட்டன.

ஆதித்த கரிகாலனின் இடையில் சொருகப்பட்டிருந்த குத்துவாள் உருவப்பட்டு, லலாடிகாவின் குரல்வளைக்கு மேலாக ஆழமாக ஒரு கோடு போடப்பட்டது. மதகுகளைத் திறந்ததும், பாயும் நதியைப் போன்று உடனே குருதி பொங்கி, லலாடிகாவின் ஆடையில் வழியத் துவங்கியது. அடுத்தகணம் தனது பிடியை தளர்த்தியது அந்தக் கரம்.

இரத்தக்கறையுடன் விளங்கிய அந்தக் குத்துவாள் மீண்டும் ஆதித்த கரிகாலனின் இடைப்பட்டையில் சொருகப்பட்டது. ஆதித்த கரிகாலனின் வெள்ளை அங்கியிலும் லலாடிகாவின் இரத்தக்கறை ஒட்டிக் கொண்டது.

இப்போது அவளது வாயைப் பொத்தியிருந்த தனது கைப்பிடியை தளர்த்த, லலாடிகா பலம் கொண்ட மட்டும் தனது கைகளைப் பின்பாக வீச, அவளது கையில் ஒரு பொருள்.. சிக்கியது. அதை பலமாக இழுக்க, அந்தப் பொருள் அவளது கைகளில் சிக்கியதை அறியாமல், ஒரு கரிய உருவம் அங்கிருந்து நகர்ந்தது.

ஒரு கையில் பார்த்திபன் கொடுத்த ஓலையும், மற்றொரு கையில் தன்னைத் தாக்கியவனிடமிருந்து பறித்த பொருளுமாகப் பொன்னாழியை நோக்கி ஓடினாள், லலாடிகா.

இரத்தம் ஆறாகப் பெருக, லலாடிகா ஓடிவருவதைக் கண்ட காவலர்கள் திகைத்தனர்.

"பிடியுங்கள்..!"

அவர்களிடம் கதறியபடி லலாடிகா பொன்னாழியினுள் நுழைய யாரைப் பிடியுங்கள் என்று அவள் சொல்கிறாள் என்பது தெரியாமல், காவலர்கள் நந்த வனத்தை நோக்கி ஓட, கரிகாலன் மற்றும் இளந்திரையனின் பொற்சிலைகள் அமைந்திருந்த திண்ணையின் மீது விழுந்தாள், லலாடிகா. தனது கழுத்தில் கைவைத்து கையைக் குருதியில் நனைத்தவள், பிறகு கரிகாலனின் சிலையின் பீடத்தில் தகவல் எதையோ எழுதினாள்..

உறக்கம் நீங்காமல், வந்த வழியே நடந்து வந்த ஆதித்த கரிகாலன் சிலைகளின் அருகே நின்றான்.

ஆதித்த கரிகாலனைப் பார்த்த லலாடிகா தனது கிழிந்த குரல்வளையைப் பொருட்படுத்தாமல் கடைசியாக ஒருமுறை 'வீல்' என்று அலற, அந்த அலறலோடு சேர்ந்து அவளது உயிரும் உடலைவிட்டு வெளியேறியது.

இரவு நிசப்தத்தை கிழித்துக் கொண்டு கிளம்பிய அவளது அலறல் அலுவலறையில் உறங்கிக் கொண்டிருந்த விஜயமேதாபதியை மட்டுமல்ல, தனது அறையில் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த கல்பலதாவை மட்டுமல்ல, உறக்க நிலையில் உலா வந்து கொண்டிருந்த ஆதித்த கரிகாலனையும் எழுப்பியிருக்க வேண்டும். காரணம், தன்னிலை உணர்ந்து சுற்றுமுற்றும் பார்த்தவன், தனது இடையில் சொருகியிருந்த குருதி படிந்த குத்துவாளையும், தனது வெள்ளை அங்கியில்

பரவியிருந்த இரத்தக்கறையையும் கண்டான். கீழே சவமாகக் கிடக்கும் லலாடிகாவையும் கண்டான். அவனது முகம் வெளிறியது. கலவரத்துடன் அவளது சடலத்தையே பார்த்தவன், அவளது கரத்தில் இருந்த ஓலையை நோக்கினான். செய்வதறியாமல் ஓலையைக் குனிந்து எடுத்தவன் அந்த ஓலையை இடையில் குத்துவாளின் பக்கலில் சொருகிக் கொண்டான். சரியாக அலுவல் அறையில் இருந்து வெளிவந்த மேதாபதியையும், உப்பரிகைப் படிகளில் தடதட என்று இறங்கி வரும் கல்பலதாவையும் பார்த்தான் ஆதித்த கரிகாலன்.

தனது கண்களை ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போன்று நிலைகுத்தி நிற்க வைத்து, விறைப்புடன் படிகளில் ஏறத்துவங்கினான், ஆதித்த கரிகாலன்.

'நாம்தான் லலாடிகாவை கொன்றுவிட்டோம்!' என்கிற குற்ற உணர்வுடன் ஆதித்த கரிகாலன் படியேற, காவலர்கள் உள்ளே வந்து, பரிதாபத்துடன் லலாடிகா வின் சடலத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றனர்.

"என்ன நடந்தது? யார் லலாடிகா தேவியைக் கொலை செய்தது?" - மேதாபதி கேட்டார்.

"நாங்கள் யாரையும் காணவில்லை. தேவியார் உலாவிக் கொண்டிருந்தார். அப்போது இளவரசர் அவரை நோக்கிப் போனார். பிறகு தேவியார் இரத்தம் பெருக ஓடி வந்து இங்கே விழுந்தார்." - காவலர்கள் கூறினர்.

அதுவரை அவளது உடலைப் பார்த்து ஸ்தம்பித்த கல்பலதா திகைப்புடன் படியேறிச் செல்லும் ஆதித்த கரிகாலனை வெறித்துப் பார்த்தபடி நின்றாள். பிறகுதான் சூழ்நிலையின் விபரீதத்தை உணர்ந்து, லலாடிகாவின் உடலைப் பார்த்துக் கதறத் துவங்கினாள்.

"இளவரசரா..?" - விஜயமேதாபதி வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறினார்.

“அவர் ஆழ்ந்த உறக்க நிலையில் நடமாடிக் கொண்டிருக்கிறார். தனது நிலையில் அவர் இல்லை. உறக்கத்தில் என்ன செய்கிறோம் என்பதை அவர் அறியமாட்டார்.” - கண்ணீர் விட்டபடி கல்பலதா கூற, விஜயமேதாபதி சோகத்துடன் லலாடிகாவின் பிணத்தைப் பார்த்தார்.

“எவ்வளவு நல்ல பெண்.. துணிவும், அன்பும் நிறைந்தவள். லலாடிகா! நீ பார்த்திப பல்லவரின் தோழி பெண்ணாகவே இருந்திருக்கக் கூடாதா? பார்த்திபரால் தங்கை என்று அறியப்பட்டு, பல்லவ இளவரசி என்று அங்கீகரிக்கப்பட்டாயே? அதனால்தான் உனக்கு இந்த முடிவோ? பல்லவத்திற்குப் பெண் ராசி கிடையாது என்பது மீண்டும் நிரூபணம் ஆகிவிட்டதே!” மேதாபதி புலம்ப, அவரை விக்கித்துப் போய் பார்த்தாள், கல்பலதா.

லலாடிகாவின் உயிரற்ற உடலையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்கள் அவளது கைவிரல்களைக் கவனித்தன. இரத்தக்கறையுடன் கூடிய அவளது சுட்டுவிரல் கரிகால் பெருவளத்தான் பொற்சிலையின் பீடத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தது.

கல்பலதாவின் பார்வை அந்தச் சிலையின் பீடத்தைக் கவனித்தது.

பீடத்தில் தனது குருதியைக் கொண்டு ஏதோ தகவலை எழுதியிருந்தாள், லலாடிகா.

கல்பலதா அதனைக் கூர்ந்து கவனித்தாள்.

“இவரல்ல..” என்று பீடத்தில் எழுதியிருந்தாள், லலாடிகா.

அதனை வாசித்ததும் அவளது கண்கள் திகைப்பினால் விரிந்தன.

“விஜயமேதாபதி அவர்களே! பல்லவ இளவரசியின் தேகத்தைப் பூரண மரியாதையுடன், பொன்னாழியின்

வாயிலில் கிடத்துங்கள். பார்த்திபர் எங்கே சென்றார் என்று தெரியவில்லை. அவருக்குத் தகவலைத் தெரிவியுங்கள்!" என்றபடி தனது அறைக்குச் செல்வதற்காகப் படிகளில் ஏறினாள்.

ஐந்தாறு படிகள்தான் ஏறியிருப்பாள்.

"இளவரசியாரே!" என்று மேதாபதி அழைப்பது கேட்டது.

திரும்பி நோக்கினாள். அலுவல் அறையில் இருந்து ஒரு சாய்வு நாற்காலியைக் கொண்டு வந்து அதில் லலாடிகாவின் தேகத்தைக் கிடத்திக் கொண்டிருந்தனர், காவலர்கள். மேதாபதி லலாடிகாவின் இடக்கையைப் பற்றியிருந்தார்.

"இளவரசியாரே! லலாடிகா தேவியார் கையில் ஏதோ ஒரு பொருளை வைத்திருக்கிறார்.." என்றபடி அவளது கையை விரித்து அந்தப் பொருளை கல்பலதாவின் முன்பாக எடுத்துக்காட்டினார்.

அதனைக் கண்டதும், கல்பலதா கலவரத்தால் உறைந்து போய் நின்றாள். அவளுக்கு அனைத்துமே புரிவது போன்று தோன்றியது.

## 24. வலையில் சிக்கிய விரிஞ்சி

**பொ**ழுது புலர்ந்தது.

தனது குல மன்னர்கள் ஆளும் தஞ்சைத் தரணியின் மீது தனது கிரணங்களைப் பெருமிதத்துடன் பொழிந்து கொண்டிருந்தான், கதிரவன். நீராடிவிட்டு, தூய ஆடைகளை அணிந்து தனது மாளிகைத் தோட்டத்தில் சூரியனைத் தொழுதுக் கொண்டிருந்தார், விரிஞ்சி நாதர்.

"இருதயத்தின் தெய்வமே, ஒளிக்கடவுளே, கண்ணுக்குப் புலப்படும் தெய்வமே, எமது மன்னர் சுந்தர சோழரின் நோயைக் குணப்படுத்தி அவரை மீண்டும் நல்லவிதமாக நடமாட வைக்க வேண்டும்!" என்று பிரார்த்தித்தபடி நின்றார்.

அவர் அமர்ந்து கொள்வதற்காக தர்ப்பைப் புல் பாயை நிலத்தில் விரித்துக் கொண்டிருந்த போதுதான் சரியாகத் தனது புரவியில் அவரது தோட்டத்தினுள் பிரவேசித்தான், பார்த்திபன்.

குதிரையின் குளம்படி சத்தத்தைக் கேட்டு வியப்புடன் நிமிர்ந்த விரிஞ்சி நாதர், பார்த்திபனைக் கண்டு திகைத்தார். பிறகு தன்னைச் சுதாரித்துக் கொண்டு, பரபரப்புடன் அவனை வரவேற்றார்.

"வரவேண்டும் பல்லவ இளவரசே! அனைவரும் நலமா? சோழ இளவரசர் நலமா?" என்றபடி நிற்க, தனது குதிரையில் இருந்து தாவி இறங்கிய பார்த்திபன், சிவப்பழமாக நின்ற அவரை பணிந்தான்.

"யாவரும் நலமே. ஒரு முக்கியப் பணியாக நான் இங்கே வந்திருக்கிறேன், விரிஞ்சி நாதரே. உங்களது காலை

நியமங்கள் என்னால் பாதிக்கப்படுவதை எண்ணி வருந்துகிறேன்." - பார்த்திபன் கூற, அவனை மதிப்புடன் நோக்கினார், விரிஞ்சி நாதர்.

"பல்லவனைப் பார்த்தால் பரந்தாமனைப் பார்ப்பது போன்று என்று எனது தந்தை கூறுவார். யோகி அஸ்வத்தாமா துவக்கிய குலம். பரத்வாஜ குலம். பல்லவத்தின் வித்தான அத்திமலைத்தேவனின் ஆசி பெற்ற வம்சம் என்று பல்லவர்களைக் கூறுவார். இந்த விடியலில் ஒரு பல்லவனைத் தரிசிக்கும் பாக்கியத்தை நான் பெற்றேன் என்றுதான் நான் கூற வேண்டும்!"- விரிஞ்சி நாதர் கூறிவிட்டு, பார்த்திபனை தனது மாளிகையினுள் அழைத்துச் சென்றார்.

"இரவெல்லாம் நீர் பயணம் செய்திருப்பது, களைத்த உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது, பல்லவ இளவரசே. நீராடிவிட்டு வருகிறீர்களா? *பால போஜனம் செய்யலாம்" என்று பார்த்திபனை கொல்லைப்புறத்திற்கு அழைத்துச் சென்றார்.

பார்த்திபன் நீராடிவிட்டு வருவதற்குள், தனது பூசனையை முடித்துவிட்டு, கையில் ஒரு கிண்ணத்தில் அன்னத்துடன், கிணற்றங்கரைக்கு வந்தார். "ஹோய், ஹோய்" என்று குரல் கொடுக்க, சில காக்கைகள் வந்து கிணற்றங்கரையில் அவர் வைத்த அன்னத்தைக் கொத்தித் தின்னத்துவங்கின.

"அன்றாடம், காக்கைகளுக்கு அன்னம் வைத்துவிட்டுத் தான் நான் புசிப்பேன். அன்னம் என்பது நமது

---

* அன்றைய உணவு உட்கொள்ளும் வழக்கம்
பால போஜனம்-Breakfast நாஷ்தா (சூரியோதயத்திற்குப் பிறகு)
குமார போஜனம்-early lunch முற்பகல் உணவு. (சூரியன் உச்சி வானில் ஏறும் போது)
பூரணப் போஜனம்-Lunch பிற்பகல் உணவு. (சூரியன் இறங்கும் போது)
(சூரியன் மறைந்த பிறகு இரவு வேளையில் போஜனம் கிடையாது. பால், கனிகள் மட்டுமே.)

மூதாதையர்களையும், நம்மையும் இணைக்கும் ஒரு பாலம் என்பார்கள். வாருங்கள் பார்த்திபரே!”

பார்த்திபனை உள்ளே அழைத்துச் சென்றார். அவரது பூசையறையே ஒரு ஆலய கருவறையைப் போன்று இருந்தது. லிங்கம், சாளக்கிராமம், ஐம்பொன் சிலை என்று பல்வேறு உருவங்களில் தெய்வங்கள். பார்த்திபன் பக்தியுடன் கண்களை மூடி பிரார்த்தனை செய்தான். அகில் தூபத்தின் மணமும், மலர்களின் வாசமும், அரைக்கப்பட்ட சந்தனத்தின் மணமும் அவனது மனதைக் கிறங்கச் செய்தன. அவனுக்காக ஒருமுறை ஆரத்தியைச் சுற்றிவிட்டு விரிஞ்சி நாதர் வேகமாகத் திரும்பும் போது கீழே இருந்த மணையைக் கவனிக்காமல் விரிஞ்சி நாதர் காலை வைக்க, தடால் என்று இடறி விழுந்தார். அவரது கரத்தில் இருந்த தீபாராதனை விளக்கு கீழே விழுந்து அணைந்தது.

பதறிப்போன பார்த்திபன் அவரைப் பற்றி எழுப்பினான்.

“பலமாக அடிபட்டதா? காயமொன்றுமில்லையே, விரிஞ்சி நாதரே?”

“இல்லை இளவரசே! இதுவரை இம்மாதிரி நிகழ்ந்ததே இல்லை. இதுதான் முதன்முறை. இம்மாதிரியான சகுனத்தடை நிகழும் அளவுக்கு என்ன நிகழ்ந்ததோ தெரியவில்லை.” - மனம் கலங்கினார், விரிஞ்சி நாதர்.

“கவலைப்படாதீர்கள், விரிஞ்சி நாதரே! கலங்குவதற்கு நாட்டில் பெரிய விவகாரங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தீபம் அணைந்துவிட்டதே என்கிற சிறு பிரச்னைக்கு நாம் மனம் கலங்கத் தேவையில்லை!” என்று பார்த்திபன் சொன்னவுடன்தான், அவன் எதனையோ முக்கியமாக விவாதிப்பதற்கு வந்திருக் கிறான், என்பதனைப் புரிந்து கொண்டார், விரிஞ்சி நாதர்.

"நல்லது! நாம் காலை உணவை உண்டு கொண்டே பேசுவோம்," என்றவர் பார்த்திபனை உணவுக் கூடத்திற்கு அழைத்துச் சென்றார். மேஜையில் வெள்ளித்தட்டுகளில் தாமரை இலைகள் பரப்பப்பட்டிருக்க, அவற்றில் எள்ளும், சீரகமும் கலந்த நெய் அன்னமும், பனை வெல்லம் சேர்க்கப்பட்ட கேழ்வரகுக் கஞ்சியும் பரிமாறப்பட, இருவரும் தங்களது பாலபோஜனத்தைத் துவக்கினர்.

"விரிஞ்சி நாதரே! இப்போது பழையாறை கஜானாவை யார் பார்த்துக் கொள்கிறார்கள்?" - நேராக விஷயத்தை துவக்கினான், பார்த்திபன்.

அவனை வியப்புடன் நோக்கிய விரிஞ்சி நாதர், வாயில் மென்று கொண்டிருந்த அன்னத்தை விழுங்கிவிட்டு, அவனுக்குப் பதிலளித்தார்.

"இளவரசே! கதிராமங்கலனின் மரணத்திற்குப் பிறகு இன்னும் அந்தப் பதவி நிரப்பப்படாமல்தான் இருக்கிறது. இப்போதைக்கு நான்தான் பழையாறை கஜானாவையும் சேர்த்துப் பார்த்துக் கொள்கிறேன். சிரமமாகத்தான் இருக்கிறது. அவன் திடீரென்று இப்படிக் கொலை செய்யப்படுவான் என்று யார் கண்டார்கள்?" - விரிஞ்சி நாதர் சிறிது தண்ணீரை அருந்திவிட்டுத் தொடர்ந்து உண்டார்.

"கதிராமங்கலனின் கொலையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" - பார்த்திபன் கேட்டதும், சட்டென்று திரும்பி பணியாளர்களை நோக்கினார், விரிஞ்சி நாதர். அவரது பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட அவர்கள் உணவுக் கூடத்தைவிட்டு வெளியேறினர்.

"பல்லவ இளவரசே! தஞ்சையில் தந்திரமாகப் பேச வேண்டும். பழையாறையில் பக்குவமாகப் பேச வேண்டும். சோழ அரசகுடும்பத்திற்கு ஊழியம் செய்யும் கஜானா அதிகாரிகள் கஜானாவைப் பூட்டும் போது

தங்களது வாய்க்கும் சேர்த்து பூட்டு போட வேண்டும். கதிராமங்கலனுக்கு பாவம், அனுபவம் போதாது!"- விரிஞ்சி நாதர் கேழ்வரகுக் கஞ்சியை சுவைத்தபடி கூறினார்.

"கதிராமங்கலனை யார் கொன்றிருக்கக் கூடும்?"- பார்த்திபன் கேட்டான்.

"இளவரசே! ஜம்புகேஸ்வரர், நான், நேமியங்கையர், குழலழகன், கதிராமங்கலன் ஆகியோர் ஒன்றாகப் பழையாறை கஜானாவிற்குள், சோழ இளவரசருடன் சென்றோம். எங்களில் கதிராமங்கலனும், குழலழகனும் மட்டுமே கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஜம்புகேஸ்வரர், நான், நேமியங்கையர் மூவரும் மட்டும் பிழைத்திருக் கிறோம். இதிலிருந்து என்ன தெரிகிறது?" - பார்த்திபனை கேள்வியுடன் பார்த்தார், விரிஞ்சி நாதர்.

பார்த்திபன் அவரைக் கூர்ந்து கவனித்தான். "நேமியங்கையரும், தனது உயிருக்கு ஆபத்து நேருமோ என்று கவலைப்படுகிறார்" - பார்த்திபன் கூறினான்.

"இல்லை! அவரது உயிருக்கு ஆபத்து நேராது. அது அவருக்குத் தெரியும். உங்களது கேள்விகளைத் தவிர்ப்பதற்காக அவர் உயிருக்குப் பயப்படுவது போன்று பாவனை செய்கிறார். இதற்கு மேல் நாம் உப்பரிகையில் எனது அறையில் பேசலாம்!" என்றவர் எழ, பார்த்திபனும் உணவை முடித்துக் கொண்டு எழுந்தான். கையைப் பணியாளர்கள் நீட்டிய கலயங்களில் கழுவிக் கொண்டு இருவரும், உப்பரிகைக்குச் சென்றனர். தனது அறைக்குள் பார்த்திபன் நுழைந்தவுடன் கதவைத் தாளிட்டார், விரிஞ்சி நாதர்.

"நம்பிக்கைதான் பிரதானம், பல்லவ இளவரசே! அரசகுடும்பத்துடன் தோளினை உரசுபவர்கள், கத்தியின் மீது நடப்பதை போன்று எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். நம்பிக்கையைப் பெறாதவர்கள்தான்

கதிராமங்கலனைப் போலவும், குழலழகனைப் போலவும், விட்டில் பூச்சிகளாக மடிகிறார்கள். எங்களைப் போன்ற நம்பிக்கையைப் பெற்றவர்கள் சமாளித்துக் கொண்டு நீடிக்கிறார்கள். மன்னர் என்று ஒருவர் இருக்கும்போது அவருக்கு விசுவாசமாக இருப்பது ஒவ்வொருவரின் கடமை. ஆனால் அந்த விசுவாசத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் போதுதான் பிரச்னை மூளுகிறது. மன்னருக்கு அளிக்கும் விசுவாசத்தை அடுத்து யாருக்குத் தரப்போகிறீர்கள் என்று அரண்மனையில் பணியாற்றும் ஒவ்வொருவனும் கேட்கப்படுவான். காற்று எப்பக்கம் வீசுகிறதோ அப்பக்கம் என்று சொல்லி விட்டால் பிரச்னை இல்லை. நான் இவர் பக்கம், அவர் பக்கம் என்று சொல்லும் போது, இம்மாதிரி கொலைகள் நிகழத்தான் செய்யும். பொன்னாழியை எழுப்பிய செங்கம்பாடி சிந்தூரனே பரலோகம் போகவில்லையா? இவர்கள் மூவருமே காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை ஆய்வு செய்யாமல், தாங்கள் யார் பக்கம் என்கிற முடிவுகளை அறிவித்து விட்டதால் அப்புறப் படுத்தப்பட்டு இருக்கிறார்கள்."-விரிஞ்சி நாதர் கூறினார்.

"விரிஞ்சி நாதரே! காரணமாகத்தான் உங்களைச் சந்திப்பதற்காக நான் காஞ்சியில் இருந்து வந்திருக்கிறேன். மிகவும் சங்கடமான கேள்வி, ஆனால் கேட்கப்பட வேண்டிய கேள்வி. கதிராமங்கலனின் கொலைக்குப் பின்பாக யார் இருக்கிறார்கள்?" - பார்த்திபன் அவரை உன்னிப்பாகக் கவனித்தான்.

"ஒருமுறை மரணம் நடந்தால் அது விபத்து. இருமுறை மரணம் நிகழ்ந்தால் அது தற்செயல். மூன்று முறை நடந்தால்..? கதிராமங்கலன் சிந்தூரன் மற்றும் குழலழகன் மூவருமே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மூன்று கொலைகளையும் விசாரணை செய்து பார்த்தால், மூன்றிற்கும் தொடர்புடைய விஷயம் ஏதாவது இருக்கும்." விரிஞ்சி நாதரின் கண்கள் விட்டத்தை வெறித்தன.

சட்டென்று பார்த்திபனுக்கு அந்த எண்ணம் தோன்றியது. அவர் தனது கண்களை ஏனோ தவிர்க்கிறார் போலும்.

“விரிஞ்சி நாதரே! அதைத் தெரிந்து கொள்ளத்தான் நான் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். சிந்தூரன் மற்றும். குழலழகன் கொலைகள் நடப்பதற்கு முன்பாக அந்த இடங்களில் இளவரசர் ஆதித்த கரிகாலர் நடமாடி இருக்கிறார். அவரே தன்னை மறந்த நிலையில் இந்தக் கொலைகளைச் செய்திருக்கலாம் என்கிற கருத்து நிலவுகிறது!” - அவரை எச்சரிக்கையுடன் பார்த்தான், பார்த்திபன்.

விருட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்தார், விரிஞ்சிநாதர்.

“அது எனக்குத் தெரியாது! ஆனால் கதிராமங்கலன் கொலை செய்யப்பட்ட அன்று ஜம்புகேஸ்வரரும், நானும் சோமேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்றோம். நள்ளிரவில் ஆலயத்தை நோக்கி நாங்கள் இருவரும் சென்ற போது கதிராமங்கலன் நந்திபுர விண்ணகரத்தில் உள்ள தனது மனையை நோக்கிச் செல்வதைக் கவனித்தோம். அவன் கோயிலின் எதிராக சென்ற வீதியில் திரும்பிய போது, ஓர் உருவம் அவன் மீது பாய்ந்து அவனை வெட்டிச் சாய்த்ததைக் கவனித்தோம். பதறிப் போய் நாங்கள் விரைந்து செல்ல, தன்னை மறந்த நிலையில் இளவரசர் ஆதித்த கரிகாலர் நடந்து சென்றார். கோயிலுக்குச் செல்லாமல் மீண்டும் பழையாறை அரண்மனைக்குத் திரும்பினோம். உடனே கதிராமங்கலனின் உடலை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்தோம்” - விரிஞ்சி நாதர் கூறினார்.

“நள்ளிரவில் எதற்காகப் பழையாறை ஆலயத்திற்குச் சென்றீர்கள்?”

“அன்று நள்ளிரவு பழையாறை சோமேஸ்வரருக்கு அபிஷேகம் நடைபெற இருந்தது. அதற்காகத்தான்

நாங்கள் ஆலயத்திற்கு வந்தோம். அப்போதுதான் இந்தக் கொலையைப் பார்த்தோம். மறுநாள் அன்னாபிஷேகம் நடைபெற இருந்ததால் நள்ளிரவு அபிஷேகம் நடந்தது. அன்னாபிஷேகத்திற்கு முன்பாக நாள் தொடங்கும் போதும், அந்த நாள் முடியும் வேளையிலும் அபிஷேகம் செய்ய வேண்டும் என்பது நியதி." - விரிஞ்சி நாதர் கூறியதும்தான் தாமதம்..

சிறு பொறியாகப் பார்த்திபனின் சிந்தையில் கனன்று கொண்டிருந்த தீ, குபீரென்று பெரும் நெருப்பாகப் பரவி அவனது எண்ணங்களை மூடியது. ஆஹா! இதையே தான் இளவரசி குந்தவையும், அன்று இவனது பணியறையில் கூறியிருந்தாள்.

'கதிராமங்கலன் நடுநிசியில் பழையாறை சோமேஸ்வரர் ஆலயத்தின் முன்பாகக் கொல்லப்பட்டதால், மறுநாள் அன்னாபிஷேகம் துவங்குவதற்குத் தாமதம் ஆனது என்று குந்தவையும் கூறியிருந்தாளே! நேமியங்கையரும் அதையேதான் கூறினார். இப்போது விரிஞ்சி நாதரும் அதையேதான் கூறுகிறார். ஆனால் அன்னாபிஷேகம் நடைபெற்ற அன்று, ஆதித்த கரிகாலனும், பார்த்திபனும் ஸ்வர்ணமுகி காட்டில்தானே இருந்தார்கள். அங்கே இருந்த பாடலீஸ்வரர் ஆலயத்தில்தானே இருவரும் இரவு தரிசனம் செய்தனர். ஆதித்த கரிகாலனை பழையாறை சோமேஸ்வரர் ஆலயத்தில் பார்த்ததாக எங்ஙனம் விரிஞ்சி நாதர் கூறுகிறார்? நேமியங்கையருக்குக் கூட ஆதித்த கரிகாலனும், இவனும் பாடலீஸ்வர் ஆலயத்திற்குச் சென்று வந்தது தெரியுமே. தரிசனம் ஆனதா என்று கூடக் கேட்டாரே?'

பார்த்திபன் விரிஞ்சி நாதரையே வெறித்துப் பார்த்தான். அவரை இத்தகைய பொய்யை உரைக்கச் சொன்னது யார்?

"அன்று உண்மையிலேயே நீங்கள் ஆதித்த கரிகாலனைப் பார்த்தீரா?" - பார்த்திபன் அவரை சந்தேகத்துடன் ஏறிட்டான்.

அவனது உறுதியான பார்வையைக் கண்டதும் விரிஞ்சி நாதர் அவனை சங்கடத்துடன் பார்த்தார்.

"நானும், ஜம்புகேஸ்வரரும் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் இளவரசரைப் பார்த்தோம்!" - இம்முறை அவரது குரலில் சுரத்து இல்லை.

"விரிஞ்சி நாதரே! யார் உத்தரவின் கீழ் இங்ஙனம் கூறுகிறீர்? அன்னாபிஷேகம் அன்று நான், நேமி யங்கையர், குழலழகர் மற்றும் படைகளுடன் ஸ்வர்ணமுகி காடுகளில் தங்கியிருந்தோம். நடுநிசியில் பாடலீஸ்வரர் ஆலயத்தில் அபிஷேகத்தைச் செய்தோம். சாட்சிகளுடன் நான் மன்னரிடத்தில் தெரிவித்தால், உமது கதி என்ன என்பதை அறிவீரா?"

வெலவெலத்துப் போனார் விரிஞ்சி நாதர். "பல்லவ இளவரசே! என்னை மன்னித்துவிடுங்கள். சோழ இளவரசரின் உடல்நிலை மற்றும் மனநிலை குறித்தும் வதந்திகளைக் கிளப்பிவிடும் பணிகளை சிலர் செய்து வருகின்றனர். எனக்கும் அந்தப் பணி அளிக்கப்பட்டது. தயை கூர்ந்து இதற்கு மேல் என்னிடம் எதுவும் கேட்காதீர்கள். நான் பெரிய இக்கட்டில் மாட்டிக் கொண் டிருக்கிறேன்" என்றவர் எழுந்து அவனை நோக்கிக் கைகளைக் குவித்தார்.

"என்னை மன்னித்துவிடுங்கள் பல்லவ இளவரசே! சோழ இளவரசரை அன்று நான் பார்க்கவில்லை."- விரிஞ்சி நாதர் தலைகுனிந்து நின்றார்.

"உங்களுக்கு இந்தப் பணியை யார் கொடுத்திருக் கிறார்கள் என்கிற கேள்வியை நான் கேட்கமாட்டேன். உங்கள் வீட்டில் உணவு அருந்தியதற்காக வெட்கப் படுகிறேன். இந்தச் சதியின் பின்பாக இருப்பவர்களை

நான் விரைவில் அடையாளம் காட்டுகிறேன்! நாம் இருவரும் சந்தித்தது பற்றி யாரிடமும் சொல்லாதீர்கள். பிறகு, உங்களை எமலோகத்தில் எமனின் கஜானாவைக் கவனிக்க அனுப்பிவிடுவார்கள். நீங்கள் ஊழியம் செய்யும் சதிகாரர்கள்" என்றபடி கோபத்துடன் விரிஞ்சி நாதரின் மாளிகையிலிருந்து வெளியேறி தனது புரவியை நோக்கி நடந்தான்.

ஜம்புகேஸ்வரர், விரிஞ்சிநாதர் ஏன், நேமியங்கையர் உள்பட அதிகாரத்தில் இருப்பவர்களை யாரோ இயக்குகிறார்கள். தங்கள் வழிக்கு வரமாட்டார்கள் என்கிற நிலையில் கதிராமங்கலன், சிந்தூரன் மற்றும் குழலழகனை கொலை செய்து, அந்தப் பழியையும் ஆதித்த கரிகாலன் மீது சுமத்தி, உறக்கத்தில் உலா வரும் போது அவன் செய்யும் கொலைகளாகச் சித்தரித்துள்ளனர். ஏன் இவனையும் கூட அவர்கள் குறிவைக்கலாம். இவனைக் கொன்றுவிட்டு, ஆதித்தனின் மீதே கூடப் பழி சுமத்தலாம். ஒரு பட்டத்து இளவரசனின் மீது எதற்காக இவ்வளவு வன்மம் கொண்டிருக்கிறார்கள்? வேறு என்ன! சேவூர் போரில் வீரபாண்டியனின் தலையைக் கொய்து மக்களின் அமோக ஆதரவு பெற்றிருக்கும் அவனது செல்வாக்கைக் குறைத்திடும் முயற்சிதான். அவனது மனப்பிரச்னைகளையும், அவனது கொலைவெறியையும் பெரிதுபடுத்தி அவனுக்கு அரியணை கிடைக்காமல் செய்துவிட வேண்டும் என்கிற எண்ணமாக இருக்கும். ஆதித்த கரிகாலன் தன்னைச் சுற்றி நடக்கும் மர்மமான நிகழ்வுகளால் குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறான். அதைத்தானே எதிர்பார்க்கின்றனர், சதிகாரர்கள்.

மலையமான் கூறியது சரிதான். ஆதித்த கரிகாலனின் கையைக் கொண்டே அவனது கண்களைக் குத்த முயல்கிறார்கள். யார் அந்தச் சதியாளர்கள்? உடனே ஆதித்த கரிகாலனையும், மலையமானையும் எச்சரிக்க வேண்டும்? ஆதித்த கரிகாலனை இனி தனியாக விடுவதும் ஆபத்து. மன்னர் சுந்தர சோழருக்கு இந்த விவகாரமெல்லாம் தெரியுமா?

யோசித்தபடியே காஞ்சிக்குப் பயணித்துக் கொண்டிருந்த பார்த்திபன், பொன்னாழியை அடைந்த போது மாலையாகிவிட்டிருந்தது.

பொன்னாழியின் நந்தவனத்திலேயே பெருந்திரளாகக் கூட்டம் கூடியிருக்க, கரிகால் பெருவளத்தான் சிலையருகே அலங்காரங்களுடன் பிணமாகக் கிடத்தப் பட்டிருந்தாள், லலாடிகா.

துடித்துப் போனான், பார்த்திபன்.

“ஐயோ.. என்ன நடந்தது எனது தங்கைக்கு?” - அலறிய படியே லலாடிகாவின் சடலத்தின் அருகே மண்டியிட்டுச் சரிந்தான்.

“இரவு உலா சென்ற போது, மர்ம உருவத்தால் கொல்லப்பட்டார், லலாடிகா தேவியார்.” - மேதாபதி கூற, தலையில் இரு கைகளால் அடித்துக்கொண்டு கதறினான்.

“ஐயோ! எனக்கு யாரும் இல்லையே என்று தவித்த வேளையில் வாராத மாமணியாய் எனக்குக் கிடைத்தாள் என்று மகிழ்ந்திருந்தேனே. இப்போது அவளும் போய் விட்டாளே! தங்கையைப் பணிப்பெண்ணாக நடத்திய எனக்கு மன்னிப்பே கிடையாது. பல்லவத்திற்குப் பெண் ராசி இல்லை என்பதை நீயுமா நிரூபிக்க வேண்டும்?” - பார்த்திபன் அரற்ற, அவனது தோளினைப் பற்றி அவனது செவியை நோக்கிக் குனிந்தாள், கல்பலதா.

“இறப்பதற்கு முன்பாகவும் தங்களுக்குப் பெரிய உதவியைச் செய்திருக்கிறாள், உங்கள் தங்கை. ஆதித்த கரிகாலரின் பெயரில் கொலைகளை அரங்கேற்றிய கரிய உருவ மனிதனை அடையாளம் காட்டியிருக்கிறாள்!”- கல்பலதா கூற, கண்கலங்க அவளை நோக்கினான், பார்த்திபன்.

“ஆதித்த கரிகாலன் எங்கே?” - பார்த்திபன் பரபரப்புடன் எழுந்தான்.

"உப்பரிகையில் அவரது அறையில் இருக்கிறார். தான் தான் லலாடிகாவைக் கொன்றுவிட்டதாக மேதாபதியிடம் புலம்பிக் கொண்டிருந்தார்."

பார்த்திபன் உப்பரிகைக்கு விரைந்தான். ஆதித்தனின் அறைக்கு முன்பாக நின்ற வீரர்கள் பணிவுடன் ஒதுங்க, கதவைத் திறந்து கொண்டு பார்த்திபன் உள்ளே விரைந்தான்.

"நண்பா! உனது சகோதரியை நான்தான் கொன்றுவிட்டேன். நந்தவனத்தில் என்னைத் தவிர வேறு யாரும் இல்லை. சிந்தூரன், குழலழகன், ஏன் கதிராமங்கலன் அனைவரையுமே நான்தான் கொலை செய்திருக்கிறேன் போலும். உறக்கத்தில் உலாவரும் நான், என்னை மறந்த நிலையில் கொலைகளைச் செய்கிறேன் என்று உலவி வரும் வதந்தி உண்மைதான் போலிருக்கிறது!"- பார்த்திபனின் கைகளைப் பிடித்துக்கொண்டு 'ஹோ' என்று அழத்துவங்கினான், ஆதித்த கரிகாலன்.

"இல்லை நண்பா! உன் மீது எந்தக் குற்றமும் இல்லை. உனக்கும் இந்தக் கொலைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை ஆதாரங்களுடன் நிரூபிக்கப் போகிறேன். அதற்காகத்தான் தஞ்சைக்கு சென்றேன். உனக்கு எதிராக அரசியல் சூழ்ச்சியைச் சிலர் செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் சதித்திட்டங்களைத் தவிடுபொடியாக்கி, உன்னை அரியணையில் அமர்த்துகிறேன். உனக்கு உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் குழப்பங்களை விளைவித்து அரியணையில் அமர நீ லாயக்கற்றவன் என்று மக்களிடையே வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். உன்னைக் கொலைவெறியனாகச் சித்தரித்து சேவூர் போரில் நீ பெற்றுள்ள கீர்த்தியை கெடுத்து உன்னை செல்வாக்கில்லாதவனாகத் திகழ வைக்க முயல்கிறார்கள். விடமாட்டேன்!" - பார்த்திபன் கோபத்துடன் சீற, அவனை தாவி அணைத்தான், ஆதித்த கரிகாலன்.

"பார்த்திபா! எனது வயிற்றில் பாலை வார்த்தாய்! வதந்திகளைக் கேட்டு, நானே உடைந்து போனேன். மற்றவர்கள் கூறுவது எல்லாம் உண்மைதானோ என்று எனது சித்தமே கலங்கிவிட்டது. நீ கூறுவது என்னுள் புதிய உத்வேகத்தைக் கொடுக்கிறது. உன்னை எனது நண்பனாகக் கொடுத்த அந்த அத்திமலைத்தேவனுக்கு எனது கோடான கோடி நன்றிகள். நான் சொல்வதைக் கேள், பார்த்திபா. நான் பதவி ஏற்றதும் அஸ்வமேத யாகத்தைச் செய்துவிட்டு, பல்லவத்தின் விடுதலையை அறிவித்து உன்னை காஞ்சியின் அரியணையில் அமர்த்தி, அத்திமலைத் தேவனை அவனது ஆலயத்தில் நாம் இரு வரும் பிரதிஷ்டை செய்வோம். அவனது உக்ரோதயத்தை யும் அவனுக்கு அணிவிப்போம். இளந்திரையன் - கரிகால் பெருவளத்தான் போலவே, நானும், நீயும் இங்கே பொன்னாழியில் காலத்திற்கும் சிலைகளாக நிற்கப் போகிறோம்." - உணர்ச்சியுடன் கூறினான், ஆதித்த கரிகாலன்.

"ஓர் இளவரசிக்கு உரிய முழு மரியாதையுடன் லலாடிகாவின் இறுதிச் சடங்குகள் செய்யப்பட வேண்டும்" என்று கூறி, அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித் தான்.

லலாடிகாவின் தகனம் முடிந்தது. அன்றிரவு, பார்த்திபனை அழைத்துக்கொண்டு பொன்னாழியின் நுழைவாயிலுக்குச் சென்றாள், கல்பலதா.

கரிகால பெருவளத்தானின் பொற்சிலை பீடத்தில் தனது குருதியால் லலாடிகா எழுதியிருந்த தகவலைக் காட்டினாள்.

"இவரல்ல!" என்கிற அந்தச் சொல்லையே வியப்புடன் நோக்கினான், பார்த்திபன்.

"இதில் என்ன தகவல் அடங்கியிருக்கிறது? எனக்குப் புரியவில்லையே?" - பார்த்திபன் கேட்டான்.

"யோசித்துப் பாருங்கள்! புரியவில்லையா?"-கல்பா கேட்டாள்.

"யோசிக்கும் நிலையில் நான் இல்லை. நீயே கூறு!"- பார்த்திபன் ஆயாசத்துடன் கூறினான்.

"நான் கூறுவதைக் கவனியுங்கள். நந்தவன தீபஸ்தம்பத்தின் அருகே லலாடிகா உலாவிக் கொண்டிருக் கிறாள். அப்போது திடீரென்று உங்கள் நண்பர் ஆதித்த கரிகாலர் உறக்கத்தில் உலாவியபடி நந்தவனம் வருகிறார். இடையில் குத்துவாள் உள்ளது. லலாடிகா இளவரசரையே கவனித்துக் கொண்டிருக்க அப்போது அந்த மர்ம மனிதன் கொலைவெறியுடன் அவளை மடக்குகிறான். உங்கள் நண்பரின் குத்துவாளை எடுத்து லலாடிகாவின் குரல்வளையைக் கிழிக்கிறான். அவனுடன் போராடு கிறாள், உங்கள் தங்கை. பிறகு தனது மரணம் உறுதி என்று தெரிந்ததும், பொன் னாழியின் நுழைவாயிலுக்கு ஓடி வருகிறாள். அங்கே இளந்திரையன் மற்றும் கரிகால் பெருவளத்தானின் சிலைகள் உள்ளன. முதலில் உள்ள இளந்திரையனின் சிலையைப் புறக்கணித்துவிட்டு, இரண்டாவதாக உள்ள கரிகால் பெருவளத்தான் சிலையின் பீடத்தில் 'இவரல்ல' என்று தனது குருதியால் எழுதுகிறாள். அதன் பொருள் கரிகாலன் அல்ல! கொலை செய்தது கரிகாலன் அல்ல என்கிறாள்." - கல்பலதா கூறியதும் அவளை வெறித்தான், பார்த்திபன்.

"இறக்கும் தருவாயில் கூட எவ்வளவு சமயோசிதத் துடன் செயல்பட்டிருக்கின்றாள், எனது தங்கை! பல்லவத்திற்கு வேண்டுமானால் பெண் ராசி இல்லாமல் இருக்கலாம். ஆனால் பல்லவகுலப் பெண்கள் அற்பாயுளில் இறந்தால் கூட, நன்மையைச் செய்து விட்டுத் தான் சென்றிருக்கிறார்கள். அத்திமலைத்தேவன் பிரதிமையைச் சீன சித்தினி பிரக்ஞுதாரா கடத்திச் செல்லாமல், நவரத்ன பல்லவிச் சிலையை மறைத்து வைத்தது போன்று, எனது தங்கை லலாடிகா வருங்கால மன்னனின் பெயரைக் காப்பாற்றிவிட்டாள்" -

பார்த்திபன் பெருமிதத்துடனும், வேதனையுடனும் கூறினான்.

“அது சரி! கொலைகாரன் யார் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா?” - கல்பலதா கேட்க, அவளை ஆவலுடன் நோக்கினான்.

“யார் அந்தக் கொலைகாரன்?” - பார்த்திப பல்லவன் கேட்டான்.

தனது சேலை முந்தானையில் முடிந்திருந்த அந்தப் பதக்கத்துடன் கூடிய தங்கச் சங்கிலியை அவனுக்கு முன்பாக ஆட்டினாள். புலி நகம் போன்ற வடிவில் காணப்பட்ட ஸ்வர்ண மீன் பதக்கத்தில், ஒரு வீணையின் வடிவம் பொறிக்கப்பட்டிருந்தது.

“நினைவிருக்கிறதா? முதன்முதலாக நான் பொன்னாழிக்குள் காலடி எடுத்து வைத்த போது, விழ இருந்த என்னை ஒருத்தர் தாங்கிப் பிடிக்க, இந்தச் சங்கிலி எனது கையோடு வந்ததே. இந்தச் சங்கிலிக்கு உரியவர்தான் ஆதித்த கரிகாலர் பெயரில் கொலைகளைச் செய்து வந்தவர். இளவரசருக்கு கொலைகாரர், மனநிலை பாதிக்கப்பட்டவர் என்கிற பெயரை ஏற்படுத்த வேண்டி யாராலோ வெப்பட்டு இரவு வேளைகளில் அமானுஷ்யமாக உலவிய இந்த சங்கிலிக்கு உரியவர்தான் சிந்தூரன், கதிராமங்கலன், லலாடிகா, குழலகன் ஆகியோரை கொலை செய்தவர்!” - கல்பலதா கூற, பார்த்திபன் திகைத்துப் போய் நின்றுவிட்டான்.

## 25. மீண்டும் அத்தி பூத்தது!

சுந்தர சோழரின் பிறந்ததினக் கொண்டாட்டங் களுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தனர், ஆதித்த கரிகாலன், பார்த்திப பல்லவன் மற்றும் கல்பலதா.

“எனக்குத் தஞ்சை வருவதற்குச் சற்றும் விருப்ப மில்லை. அந்த அதிமேதாவி குந்தவையின் பார்வையும், பேச்சும் எனக்கு இரசிக்கவில்லை. வேண்டாமே! நான் பொன்னாழியிலே இருக்கிறேன். எனக்குத் துணையாக விஜயமேதாபதியின் மகள் வாகீஸ்வரி இருக்கிறாள்.”- கல்பலதா பார்த்திபனிடம் இறைஞ்சினாள்.

லலாடிகாவின் மறைவுக்குப் பிறகு, பார்த்திபன் விஜயமேதாபதியிடம் கூறி, அவரது மகள் வாகீஸ்வரியை கல்பலதாவின் தோழியாக அமர்த்தியிருந்தான்.

“இந்த முறைதான் இறுதியாக வைத்துக்கொள், கல்பா! இனி நான் உன்னை வற்புறுத்தமாட்டேன். சுந்தர சோழர் பிறந்த நாள் வைபவங்கள் முடிந்ததும், கடம்பூர் மாளிகையில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு ஆகியிருக்கிறது. அநேகமாக அங்கே சம்புவராயர் குலப்பெண்ணை ஆதித்த கரிகாலனுக்குப் பேச பழுவேட்டரையர் நிச்சயித் திருப்பதாகத் தெரிகிறது. நான் அதற்குள் நமக்கு திருமணம் நடந்து முடிந்துவிட்டது என்கிற உண்மையை ஆதித்த கரிகாலனிடம் தெரிவித்துவிடப் போகிறேன். அதன் பிறகு நாம் இலைமறைவு காய்மறைவு வாழ்க்கையினை வாழ வேண்டிய அவசியம் இல்லை.”- ஆதூரத்துடன் கூறினான் பார்த்திபன்.

“அது கிடக்கட்டும்! விழாவுக்கு மலையமான் வருகிறாரா?” - கல்பா கேட்டாள்.

பார்த்திபன் அவளை வியப்புடன் நோக்கினான்.

"மலையமான் கொண்டாட்டங்களுக்கு வருவதில் உனக்கென்ன அவ்வளவு ஆர்வம்?"

"அதற்கில்லை.. மலையமான் வந்தால் உங்கள் நண்பர் பெரும்பாலான சமயங்களில் தனது பிரிய பாட்டனாரோடு பொழுதை கழிப்பார். உங்களுக்கு ஓய்வு கிடைக்கும். நாம் இருவரும் ஏகாந்தத்தில் இருக்கலாம் என்கிற சுயநலம்தான்." - கல்பா கூற, பார்த்திபன் நகைத்தான்.

"இல்லை! மலையமான் வரப்போவதில்லை. அவருக்கு உடல்நிலை சரியில்லை. இன்னும் சொல்லப் போனால் ஆதித்த கரிகாலன் கொண்டாட்டங்களுக்கு போவதைக் கூட அவர் விரும்பவில்லை. இப்போது தெற்கே செல்ல வேண்டாம் என்று செய்தி அனுப்பி யிருக்கிறார். ஆனால் தந்தையின் பிறந்த நாள் வைபவங்களை ஆதித்த கரிகாலன் கலந்து கொள்ளாமல் தவிர்த்தால், அதனை இவனுக்கு எதிராகத் திருப்பி விடுவார்களோ என்று அஞ்சுகிறான். மன்னரின் பிறந்த நாள் வைபவங்களில் பட்டத்து இளவரசர் கலந்து கொள்ளவில்லை என்றால் மக்களே தவறாக நினைத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறான். எனவே, அவன் தஞ்சைக்குச் சென்றே ஆக வேண்டும். அவனது பாதுகாப்புக்கு நானும் சென்றே ஆக வேண்டும். எனக்காக நீயும் தஞ்சைக்கு வந்தே ஆக வேண்டும்." - பார்த்திபன் கூறினான்.

"நீங்களே தஞ்சம் என்று வந்துவிட்ட பிறகு, உங்களுடன் தஞ்சைக்கா வரமாட்டேன்?" - என்றவளின் முகம் சோகமாகியது.

"லலாடிகா இருந்திருந்தால், பயணம் எவ்வளவோ சுவைப்பட்டிருக்கும்."

பார்த்திபனும் கலங்கினான்.

"நான்கு கொலைகள் நடந்தேறி இருக்கின்றன! அனாவசியமாக பட்டத்து இளவரசனை சந்திக்கு இழுத்தார்கள். அந்த வாணர்குல வாலிபனை என்ன செய்வதாக உத்தேசம்?" - கல்பா கேட்டாள்.

"எனக்கும் புரியவில்லை, கல்பா. தகுந்த சாட்சிகளுடன் பழுவூர் சகோதரர்களிடமும், அநிருத்தரிடமும் அனைத்தையும் நானும், ஆதித்தனுக்கு விளக்கிவிட்டோம். ஆனால் அவன் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லை." - பார்த்திபன் கூறினான்.

"ஏன் அப்படி?" - கல்பலதா வியந்தாள்.

"இளவரசி குந்தவையாரும், அவனும் காதலிக்கின்றனராம்" - பார்த்திபன் கூற, கல்பா திடுக்கிட்டாள்.

"பெரும்பாணப்பாடி நாட்டைப் படை எடுத்துச் சென்று சீரழித்த பராந்தகனாரைக் கொல்வேன் என்று குந்தள நாட்டில் அமர்ந்து சூளுரைத்தவன், விஜயாதித்த வாணன். காட்டு வழியே செல்லும் சோழ வீரர்களையும், பயணிகளையும் சித்ரவதை செய்து கொன்று வருவது வாணர் புரட்சிப் படையின் வழக்கமல்லவா? இதெல்லாம் தெரிந்திருந்தும், சோழ தேசத்தினைக் காதலிக்கும் குந்தவை எப்படி ஒரு வாணர்குல வீரனைக் காதலிக்கிறாள்?"

"எப்போதும் பெண்களுக்கு எதிரிகளின் மீதுதான் காதல் பிறக்குமாம். காதல் பிச்சை கேட்கும் நண்பர்களைத் திரும்பியும் நோக்கமாட்டார்களாம்!"-கேலியுடன் கூறினான்.

"எப்படியாவது போகட்டும் சோழமும், குந்தவையும். நமது பல்லவத்தையும், அத்திமலைத்தேவனையும், உக்ரோதயத்தையும் மீட்டுக் கொண்டு நமது வழியே போய்க் கொண்டே இருப்போம்" - என்றாள் கல்பலதா.

இரதத்தில் கல்பலதாவும், வாகீஸ்வரியும் அமர்ந்திருக்க, காவல் வீரர்கள் இரதத்தைச் சுற்றி புரவிகளில் வந்தனர்.

முன்பாக, ஆதித்த கரிகாலனும், பார்த்திபனும் பேசியபடி தஞ்சைக்குப் பயணித்துக் கொண்டிருந்தனர்.

சரியாகக் கெடில நதியைக் கடந்து கொண்டிருந்தனர். கெடிலம் ஆற்றில் தண்ணீர் நுரைத்துக்கொண்டு பாய, அதனை வேடிக்கை பார்த்தபடி சென்றனர், பார்த்திபனும், ஆதித்தனும்.

"இதோ.. கெடிலத்தைக் கடக்கிறோம். இதனைக் கடந்து தெற்கே போகக்கூடாது என்று எனது பாட்டனார் மலையமான் தடை விதித்திருந்தார். ஒவ்வொரு முறை இதனைக் கடக்கும் போதும் திரும்பி உயிருடன் வருவேனா என்கிற அச்சம் தோன்றும். ஆனால் இந்த முறை நீ இருக்கிறாய் என்கிற துணிவு தானாக பிறக்கிறது. இனி நான் எதற்கும் கவலைப்படப் போவதில்லை. ஆயிரம் சதிகாரர்கள் வந்தாலும், எல்லாச் சதிகளையும் முறியடித்து, அரியணையில் அமர்வேன் என்கிற நம்பிக்கை தோன்றிவிட்டது. அத்தகைய தன்னம்பிக்கை தோன்றியதற்குக் காரணமே, நீயும், கல்பலதாவும்தான்.." என்று கூறியவன், ஆவலுடன் திரும்பி நோக்கினான்.

"நீ என்ன நினைக்கிறாய், பார்த்திபா? கல்பலதா என்னுடன் அரசியாக அரியணையில் அமர்ந்தால் பொருத்தமாக இருக்குமா?" - ஆதித்த கரிகாலன் கேட்க, மிடறு விழுங்கினான், பார்த்திபன்.

"இப்போதுதானே கெடிலத்தைக் கடக்கிறோம். இன்னும் கொள்ளிடம், காவிரி என்று ஆறுகளைக் கடக்க வேண்டும். காவிரியின் வெள்ளத்தைப் பற்றிக் கெடிலத்தைக் கடக்கும் போது கவலைப்படுவானேன்"- நகைச்சுவையாகப் பேசுவது போன்று ஆதித்த கரிகாலனை திசை திருப்பினான், பார்த்திபன்.

அதன் பிறகு அமைதியாகவே பயணம் செய்தார்கள்.

தஞ்சையை அடைந்ததும், காஞ்சிவாசிகளுக்கு தனியாக அறைகள் ஒதுக்கப்பட்டன. அன்று மாலையி

லிருந்தே கொண்டாட்ட நிகழ்வுகள் தொடங்கின. பாட்டு, நடனம், தர்க்கம், ஆன்மிக உரைகள், நாடகங்கள் என்று நிகழ்வுகள் நடக்க, பார்த்திபன் வற்புறுத்திய சில நிகழ்வுகளுக்கு மட்டும் சென்று வந்தாள், கல்பலதா.

வடபுலத்திலிருந்து வந்திருந்த நாடகக் குழு ஒன்று சாகுந்தலம் நாடகத்தை அரங்கேற்ற, துஷ்யந்தனின் சபையில் சகுந்தலா தான் அவனது காதல் மனைவி என்று மன்றாட, அவனோ தான் அவளைப் பார்த்ததே இல்லை என்று கூறும் கட்டம் நடித்துக் காட்டப்பட, நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த குந்தவை, பின்பாக அமர்ந்திருந்த தெட்டக்கனியைத் திரும்பி நோக்கினாள்.

“தெட்டக்கனி! ஒருவேளை துஷ்யந்தன் உறக்கத்தில் உலா செல்லும் வேளையில் சகுந்தலாவின் குடிலுக்குச் சென்றானோ?” - குந்தவை சிரிக்காமல் கேட்க, தெட்டக்கனி சிரித்துவிட்டாள்.

அந்த நாடகத்திற்கு கல்பலதாவும் வந்திருந்தாள். குந்தவையும் அவளது தோழியும் தன்னை வெறித்துப் பார்ப்பதும், பிறகு சிரிப்பதுமாக இருப்பதை கல்பலதாவும் கவனித்தாள்.

மறுநாள், கொண்டாட்டம் எல்லாம் ஓய்ந்து, அனைவரும் அரண்மனையில் விருந்தில் கலந்து கொண்டிருந்தனர். சுந்தர சோழரும், வானவன் மாதேவியும் மையத்தில் அமர்ந்திருக்க, பழுவூர் சகோதரர்கள், அநிருத்தர், ஜம்புகேஸ்வரர். விரிஞ்சி நாதர், குந்தவை, ஆதித்த கரிகாலன், பார்த்திபன், கல்பலதா என்று வரிசையாக அமர்ந்திருந்தனர். ஆதித்த கரிகாலனுக்கும், பார்த்திபனுக்கும் இடையே கல்பலதா அமர்ந்திருக்க, நேர் எதிரே, குந்தவை, அருண்மொழி மற்றும் வந்தியத்தேவன் அமர்ந்திருந்தனர்.

பழுவேட்டரையரும், சுந்தரரும் சிரித்துப் பேசிக் கொண்டிருக்க, பரிசாரகர்கள் உணவைப் பரிமாறிக் கொண்டிருந்த நேரம். அனைவருக்கும் தேங்காய்ப் புட்டு பரிமாறப்பட்டது.

திடீரென்று-

கல்பலதாவிற்கு அந்த உணர்வு. தேங்காய்ப் புட்டின் மணம் அவளது நாசியைத் தாக்கி அவளது வயிற்றைப் புரட்டிப் போட, விருந்தின் போது வாயிலெடுத்து விடுவோமோ என்கிற அச்சத்தில் அவள் அவசரமாக எழ, தலை 'கிர்'ரென்று சுற்றி அப்படியே பின்பாக சரிந்தாள்.

கல்பலதா மயங்கிச் சரிய, நல்லவேளையாக பார்த்திபன் அவளைத் தாங்கிப் பிடித்தான்.

"ஐயோ! பல்லவ இளவரசிக்கு என்ன ஆனது? யாரங்கே!" - வானவன்மாதேவி கூப்பாடு போட, பார்த்திபன் மயங்கிக் கிடந்த கல்பாவை அவளது அறைக்கு சுமந்து சென்றான். மருத்துவச்சி தருவிக்கப் பட்டு, அவள் கல்பா இருந்த அறைக்குள் சென்றாள்.

விருந்து தொடர்ந்து நடந்து கொண்டிருக்க, பார்த்திபனும், வாகீஸ்வரியும் மட்டுமே அந்த அறையின் வாயிலில் நின்றனர்.

வெளியே வந்த மருத்துவச்சி மலர்ந்த முகத்துடன் பார்த்திபனை நோக்கினாள்.

"கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை, இளவரசே! பல்லவ இளவரசியார் தாயாகப் போகிறார்!" என்றதும் தான் தந்தை ஆகிவிட்டோம் என்கிற உணர்வு பார்த்திபனை ஆனந்தம் கொள்ளச் செய்தது. உற்சாகத்துடன் திரும்பியவனின் முகம் சட்டென்று உறைந்து போனது.

'ஐயோ! இந்தத் தகவலை ஆதித்த கரிகாலன் எப்படி எடுத்துக்கொள்வான்? அவன் இன்னமும் கல்பலதாவை காதலித்து வருகிறான் அல்லவா?'

யோசித்துக் கொண்டிருந்த வேளையில், குந்தவை தெட்டக்கனி பின்தொடர, அங்கே வந்தாள். மருத்துவச்சியை ஏறிட்டு நோக்கினாள்.

"என்ன விஷயம், வசந்தம்மா? பல்லவ இளவரசி ஏன் விருந்தின் போது மயங்கினார்?" - குந்தவை கேட்க, மருத்துவச்சி பணிவுடன் பதில் தந்தாள்.

"இளவரசியாரே! பல்லவ இளவரசியார் கருவுற்றிருக் கிறார். விரைவில் தாய்மை அடையப் போகிறார்!" - மருத்துவச்சி கூற, குந்தவை அலட்சியமாக பார்த்திபனைப் பார்த்தாள்.

பார்த்திபன் அவளை அங்கே எதிர்பார்த்திருக்க வில்லை. யாருக்குத் தகவல் தெரியக்கூடாதோ அவளுக்கு முதலில் தெரிந்துவிட்டதே!

குந்தவை பார்த்திபனை ஏறிட்டு நோக்கினாள்.

"பார்த்திபரே! உறக்கத்தில் உலா வருபவர்களால் உயிர்களை வாங்க முடியாது என்று நீங்கள் கூறினீர்களாம். உயிர்களை வாங்க முடியாது என்பது சரி. உயிரை உருவாக்கக் கூடவா முடியாது?" என்று கூறியவள், நமட்டுச் சிரிப்புடன் அங்கிருந்து நகர்ந்து சென்றாள்.

பார்த்திபன் உறைந்து போய் நின்றான். குந்தவை கூறியதற்கு என்ன பொருள்? அன்றொரு நாள் உறக்கத்தில் ஆதித்த கரிகாலன் கல்பலதாவின் அறைக்குள் நுழைவதை தான் பார்த்ததாகக் கூறினாளே.. அதற்கும், இதற்கும் முடிச்சு போடுகின்றாளா? அடக்கடவுளே! நான் கல்பலதாவின் கணவன். அவளும் நானும் பெற்ற குழந்தை என்று நான் இனி அனைவருக்கும் விளக்க வேண்டியிருக்கும் போல

இருக்கிறதே. கல்பலதாவிற்குத் தீராத அவமானத்தை நான் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டேனே. இனி அவளது முகத்தில் எப்படி விழிப்பது? 'பொன்னாழியில் தங்க வரமாட்டேன், நான் ஆதித்த கரிகாலனை கொல்வேன்' என்று தீவிரமாக இருந்தவளை பொன்னாழியில் தங்க வைத்து, அவளையும் ஆதித்த கரிகாலனையும் சம்பந்தப் படுத்தி எழும் பேச்சுகளுக்கு நானே காரணமாக இருந்துவிட்டேனே! - உண்மையிலேயே மனம் நொந்து நின்றிருந்தான், பார்த்திபன்.

அத்திமர குலமான பல்லவத்தில் மீண்டும் அத்தி பூத்திருக்கிறது. கல்பலதாவின் வயிற்றில் வளரும் அந்த வித்து மரமாக வளர்ந்து மீண்டும் பல்லவத்தைச் செழிக்க வைக்குமா? என்கிற கேள்வி பார்த்திபனின் இதயத்தில் எதிரொலித்தது.

★ ★ ★

**“எ**ன்னை மன்னித்துவிடு நண்பா!” - ஆதித்த கரிகாலனின் கைகளைப் பற்றிக்கொண்ட பார்த்திபன் வேதனையுடன் கூறினான்.

“எனது அத்தையார் சமந்தகப் பல்லவி இறந்த அன்றே, கல்பலதாவிற்கும், எனக்கும் திருமணம் நடந்துவிட்டது. காலம் கனியட்டும் அந்த விவரத்தை உன்னிடம் சொல்லலாம் என்று நான் நினைத்தது எவ்வளவு பெரிய மடமை என்பதை உணர்கிறேன். இப்போது கிணறு வெட்ட பூதமாகி அந்தப் பூதமும் விஸ்வரூபம் எடுத்து விட்டதை எண்ணி மிகவும் வேதனைப்படுகிறேன்.”- பார்த்திபன் கூறினான்.

“நீ ஒரு தவறும் செய்யவில்லை, பார்த்திபா. கல்பலதாவிற்கு அடைக்கலம் கொடுத்தாய். அவள் உன்னையே மணந்து கொண்டாள். உனது முறைப்பெண் உன்னை மணந்து கொண்டதில் என்ன தவறு இருக்க முடியும்? நான்தான் அவள் மீது நேசத்தை வளர்த்துக்

கொண்டு தவறு செய்துவிட்டேன். நீதான் என்னை மன்னிக்க வேண்டும். உறக்கத்தில் உலா வரும் நான் கல்பலதாவின் அறைக்குள் சென்று அவளுக்கு அபவாதத்தை ஏற்படுத்திவிட்டேன். நீங்கள் இருவரும் என்னை மன்னிக்க வேண்டும்." - ஆதித்த கரிகாலன் கூறினான்.

"இதற்குத்தான் கல்பலதா பொன்னாழியில் வந்து தங்குவதற்கு யோசித்தாள், ஆதித்தா! உறக்க நிலையில் நீ கல்பலதாவின் அறைக்குள் நுழைந்ததை உனது சகோதரி குந்தவையும் அவளது தோழியும் பார்த்திருக்கிறார்கள். எனவே, எனது குழந்தையைத் தப்பான கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். உன்னை மறந்த நிலையில் நீதான் அவளது அறைக்குச் சென்று தவறு செய்துவிட்டாய் என்று கருதுகிறார்கள்."

"அவள் அங்ஙனம் கருதுவது மிகவும் ஆபத்து, பார்த்திபா! குந்தவையை நீ சாதாரணமாக எடை போடாதே. அவளுக்கு அரசியல் செய்வது மிகவும் பிடிக்கும். பார்த்திபேந்திர பல்லவன் தனது மாளிகையில் மூன்று பெண்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறான் என்கிற தகவல் வந்ததுமே, அவள் அவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க ஆரம்பித்துவிட்டாள். கல்பலதா உனக்கு மட்டும் முறைப்பெண் அல்ல! எனக்கும் அவள் முறைப்பெண்தான் என்பதை முதலில் என்னிடம் கூறியவளே குந்தவைதான்.. தக்கோலம் போரின் போது அரிஞ்சய சோழர் உறவு கொண்டு கங்காவதி பல்லவியின் பெயர்த்தி கல்பலதா என்பதை எனக்கு முன்பே அவள் அறிந்து கொண்டாள்." - ஆதித்தன் கூற, பார்த்திபன் திகைத்துப் போனான்.

"இளவரசிக்கு இது எப்படித் தெரியும்?" - பார்த்திபன் கேட்டான்.

"உனது மாளிகையில் ஆலோலன் என்கிற பணியாளன் இருந்தான் அல்லவா?" - ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"ஆம் இருந்தான். நான் பொன்னாழியில் தங்கப் போகிறேன் என்றதும், பணியிலிருந்து விலகிக் கொண்டான்." - பார்த்திபன் கூறினான்.

"விலகவில்லை. குந்தவை அவனை விலைக்கு வாங்கி விட்டாள். உனது மாளிகையில் நிகழ்ந்த அத்தனை சம்பவங்களையும் அவன் குந்தவைக்கு விவரித்து இருக்கிறான்." - ஆதித்தன் கூற, பார்த்திபன் கல்லாய் சமைந்து நின்றான்.

"குந்தவைக்குத் தெரியாமல் ஒரு அணுவும் அசையாது. காற்றுகூடப் புகாது. எனவேதான் நண்பா, இனி என்னைப் போன்று நீயும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்." - ஆதித்தன் கூறினான்.

'நான் ஏன் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்' என்பது போன்று நண்பனைப் பார்த்தான், பார்த்திபன்.

ஆதித்த கரிகாலன் மஞ்சத்தில் சரிந்தபடி, பார்த்திபனை நோக்கினான்.

"எனக்கு மரண கண்டம் உள்ளது. உனது குழந்தை எனது மகவாகக் கருதப்படுவதால், அதற்கும் மரண கண்டம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. வயிற்றில் இருக்கும் குழந்தையை அப்புறப்படுத்த வேண்டும் என்றால்.. அதன் தாயோடு சேர்த்துதான் அனுப்ப வேண்டும் என்றால், கல்பலதாவுக்கும் மரண கண்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. நண்பா! என்னுடன் நெருங்கி இருந்ததன் பலன், உனது குடும்பம் சீரழியும் நிலைக்கு வந்துவிடக் கூடாது. உடனடியாக கல்பலதாவை பத்திரப்படுத்து. அவளை உடனடியாகப் பொன்னாழிக்கு அனுப்பிவிடு. அவள் தஞ்சையில் இருப்பது ஆபத்து. என்னைக் கேட்டால், நீயே பொறுப்பாக அவளைக் கொண்டு பொன்னாழியில் விட்டுவிட்டு, கடம்பூருக்கு வந்துவிடு. அங்கே நடக்கும் விருந்தில் சம்புவராயர் மகளை மணப்பதற்கு நான் சம்மதம் தெரிவிக்கப் போகிறேன்!" என்றான் ஆதித்த கரிகாலன்.

பார்த்திபனுக்கு அந்த யோசனை உசிதமாகத் தோன்றியது.

"நான் கல்பலதாவை பொன்னாழியில் மேதாபதியின் பொறுப்பில் விட்டுவிட்டு, நேராகக் கடம்பூர் வந்து விடுகிறேன். எச்சரிக்கையுடன் இரு!" - பார்த்திபன் கூறிவிட்டு, அறைக் கதவை நோக்கி நடந்தான். கதவைத் திறந்து கொண்டு வெளியேற முயன்ற சமயம், ஆதித்த கரிகாலன் அவனை அழைத்தான்.

"பார்த்திபா!"

வியப்புடன் திரும்பிப் பார்த்தவனை நோக்கி ஆதித்த கரிகாலன் கூறினான்.

"நண்பா! எல்லாவற்றிற்கும் நன்றி! உனக்கு உரித்தான அத்திமலைத்தேவனின் பிரதிமையும், உக்ரோதயமும் தக்க சமயத்தில் உன்னை வந்தடையும். பத்திரமாகப் போய் வா! பிழைத்துக் கிடந்தால் கடம்பூரில் சந்திப்போம்!"- ஆதித்த கரிகாலன் கூறினான்.

அவனையே வெறித்துப் பார்த்தபடி நின்றான், பார்த்திபன். ஏனோ அவனது அடிவயிற்றில் இன்னதென்று தெரியாத உணர்வு ஆட்கொண்டது.. ஆதித்தனின் கம்பீரமான குரலை அவன் கேட்பது அதுவே கடைசி முறை என்பதை உள்ளுணர்வு தெரிவித்ததாலோ, என்னவோ அவனது வயிற்றில் அந்தச் சங்கடம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

# 26. சுந்தர கண்டம்

பட்டத்து இளவரசன், வடபுல சேனையின் மாதண்ட நாயகன், வீரபாண்டியனின் தலையைக் கொய்தவன், கங்க நாட்டு ஸ்வர்ண சுரங்கங்களைக் கைப்பற்றியவன், பொன்னாழியை எழுப்பியவன், வருங்கால சோழ சக்கரவர்த்தி ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்டு இறந்து போனான். யார் கொலை செய்தார் என்பது தெரியாமல், அவனது உடல் கடம்பூர் மாளிகையில் கண்டெடுக்கப்பட்டது. கடம்பூரில் இருந்து கசிந்த தகவல், சோழநாடு, பல்லவநாடு என்று பரவி மக்களை ஸ்தம்பிக்கச் செய்தது.

"பல்லவத்திற்குத்தான் சாபக்கேடு என்று நினைத்தால், சோழத்தின் தலையெழுத்து அதைவிடக் கொடூரமாக இருக்கின்றதே!" காஞ்சி மக்கள் ஆங்காங்கே குழுமி நின்று பேசினர்.

"சம்புவராயர்கள்தான் காரணம்" என்று ஒரு புரளி பரவ, ஒருவன் அதனை மறுத்தான்.

"ஏனய்யா! சம்புவராயர்கள்தான் கொலை செய்தார்கள் என்றால் தங்கள் மாளிகையிலேயே உடலை வைத்திருப்பார்களா? அவர்கள் மீது பழியைத் திருப்ப யாரோ செய்திருக்கிறார்கள்." - அந்த மனிதன் கூவ, பலரும் அதனை ஆமோதித்தபடி நின்றனர்.

பார்த்திபன் நிலைகுலைந்து போனவனாக பொன்னாழிக்கு வந்தான். யார் கொன்றார்கள் என்கிற கேள்வியைவிட, சதியால் ஒரு சுத்த வீரனை அழித்து விட்டார்களே என்கிற ஆதங்கம் அவனுள் பொங்கிக் கொண்டிருந்தது.

அனைத்துக்கும், காரணம் சுந்தர சோழர்தான். ஒரு மன்னனாகத் தனது ஆளுமையைச் செலுத்தாமல், சதாசர்வகாலமும் உடலில் நோயைச் சாற்றிக்கொண்டு அந்தப்புரத்தில் மனைவியின் பணிவிடைகளை ஸ்லாகித்துக்கொண்டு இருந்ததால், ஆங்கங்கே சிறு தீவுகளாக அதிகார மையங்கள் தோன்றிவிட்டன. அரசன், அவனுக்குப் பிறகு பட்டத்து இளவரசன் என்கிற அதிகாரத்தைச் சுற்றிதான் அரசாட்சி சுழல வேண்டும். புதிய அதிகார மையங்கள் அதிகாரத்தைக் கவர நினைக்கின்ற, போது, இம்மாதிரி அரசியல் கொலைகள் தவிர்க்க முடியாமல் போகின்றது.

வீரபாண்டியனின் தலையை ஆதித்த கரிகாலன் கொய்ததால் பாண்டிய ஆபத்துதவிகள் அவனைக் கொன்றுவிட்டனர் என்று அதிகாரபூர்வமாக அறிவித்து வழக்கை அவசரமாக முடித்துவிட்டார்களே.

மனம் நொந்து மஞ்சத்தில் சரிந்தான், பார்த்திபன். பாண்டியர்கள் மீது பழி சுமத்துவதுதான் எளிதான வழி என்று அதனைச் செய்திருக்கிறார்கள். சேவூர் போர் நிகழ்ந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டன. சுந்தர சோழரின் இரண்டாவது மகன் பாண்டியர்களின் நட்பு நாடான ஈழத்திலே தங்கியிருந்தான். கொல்வதென்றால் அவனையும் அல்லவா எளிதாகக் கொன்றிருக்கலாம்? ஆனால் சேவூர் போர் முடிந்து பத்து ஆண்டுகள் கழிந்த நிலையில் திடீர் என்று எதற்காக ஆதித்த கரிகாலனைப் பழிவாங்க வேண்டும்? கைது செய்யப்பட்டிருக்கும் ரவிதாச பிரம்மாதிராயன்தான் கொலையைத் திட்டமிட்டான் என்கிறார்கள். பிரம்மாதிராயன் என்கிற சோழ நாட்டு பட்டத்தை எதிரி நாடான பாண்டிய நாட்டானுக்கு எப்படி வழங்குவார்கள்?

பாணர்களை அடிமைகளாக கங்க நாட்டு மன்னன் பிருத்விபதிக்கு விற்றான், பராந்தக சோழன். அதனால் கிடைத்த ஸ்வர்ணத்தைக் கொண்டு காஞ்சியில்

பொன்னாழியை எழுப்பினான் ஆதித்த கரிகாலன். இதனால் வாணர் குலத்தவர் அவன் மீது வெறுப்பு கொண்டிருந்தது திண்ணம். அது குறித்து ஏன் யாரும் விசாரிக்கவில்லை?

பார்த்திபன் மகாபாரதம் படித்திருக்கிறான். அபிமன்யு பத்மவியூகத்தை உடைக்கக் கற்றிருந்தானே தவிர அதனைவிட்டு வெளியேறும் விதத்தை அறியவில்லை. இருப்பினும் அவனை வியூகத்தை உடைக்க அனுப்பினர் என்றால், கௌரவர்களுடன் சேர்ந்து பாண்டவர்களும் அவனைக் கொன்றவர்களாகத்தானே கருதப்படுவர்?

பார்த்திபனுக்கு அனைத்துமே வெறுத்துவிட்டது. பல்லவம் என்ன, சோழம் என்ன, கர்ப்பிணி மனைவியுடன் எங்காவது கண்காணாத காட்டிற்குச் சென்று நிம்மதியாக வாழ்ந்தால் போதும் என்றாகிவிட்டது.

"கல்பலதா! நான் தீர்மானித்துவிட்டேன். இன்றே நாம் பொன்னாழியைவிட்டு நீங்குகிறோம். இனி சோழத்துடன் நமக்கு ஒட்டுதலோ, உறவோ கிடையாது. அத்திமலைத் தேவன் அவனது ஆலயத்திற்குத் திரும்புகிறானா இல்லையா என்கிற கவலையெல்லாம் இனி நான் படப் போவதில்லை. நாம் இருவரும் எங்காவது சென்று நிம்மதியாக வாழ்வோம்!" - பார்த்திபன் கூறினான்.

"நீங்கள் கூறுவது நல்ல யோசனை. ஆனால் உங்கள் நண்பர் கொலை செய்யப்பட்ட உடனேயே நாம் கண் காணாமல் சென்றால், நாளைய உலகம் பல்லவர்கள் தான் சதி செய்து ஆதித்த கரிகாலனைக் கொன்று விட்டதாகக் கூறும். நமக்கு அந்த அவப்பெயர் ஏற்படக் கூடாது. பொறுத்திருப்போம்! காலம் கனியும் போது புறப்பட்டுச் செல்வோம்!" - கல்பலதா அவனை சமாதானப்படுத்தினாள்.

ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்ட பதினைந்தாம் நாள். காஞ்சிப் பொன்னாழியின் முன்பாக

ஓர் இரதம் வந்து நின்றது. அதிலிருந்து சுந்தர சோழரும், வானவன்மாதேவியும் நடைப்பிணங்களாக இறங்கினர்.

அவசரமாக அவர்களை வரவேற்க விரைந்தனர், பார்த்திபனும், கல்பலதாவும்.

"எனது ஆருயிர் மகன் ஆதித்த கரிகாலன் வசித்த மாளிகை. இனிமேல் நான் இங்குதான் வசிக்கப் போகிறேன். எனது அருமை மருமகளே, கல்பா! ஆதித்தனின் குழந்தை உனது வயிற்றில் வளர்வதாக அறிந்தேன். இனி நீயும், உனது குழந்தையும்தான் எனது எதிர்காலம். நானும், மலையமான் மகளும் இனி உனது பெற்றோர்கள். நீ நல்லபடியாகக் குழந்தையைப் பெற்றுக் கொடு. எனது மகன் ஆதித்த கரிகாலனை என்னிடம் திருப்பிக் கொடு!" 'ஹோ' என்று கதறியபடி சுந்தர சோழரும், வானவன்மாதேவியும் கல்பலதாவை அணைத்துக் கொள்ள, அவள் திடுக்கிட்டு பார்த்திபனை பார்க்க, அவன் செய்வதறியாது நின்றான்.

"மன்னரே! தாங்கள் காஞ்சிக்கு வந்திருப்பது, பழுவேட்டரையர் மற்றும் அநிருத்தருக்குத் தெரியுமா?" பார்த்திபன் மெல்லிய குரலில் கேட்டான்.

"அதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. இனி நான் சோழ மன்னன் இல்லை. யார் வேண்டு மானாலும் சோழத்தை ஆளட்டும். நான் ஆதித்த கரிகாலனின் தந்தை மட்டுமே. அவனது இருப்பிடம்தான் இனி எனது இருப்பிடம்! நான் சற்று ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்!" என்றபடி மஞ்சத்தில் அமர்ந்தார் சுந்தரசோழர்.

அன்று மாலையே பழுவூர் அரசர்கள், அநிருத்தர் மற்றும் அமைச்சர்கள் வந்து இறைஞ்சியும், மீண்டும் தஞ்சைக்குத் திரும்ப மறுத்துவிட்டார், சுந்தர சோழர். சிறிது நாட்களுக்குக் காஞ்சியில் ஓய்வு எடுப்பார், மன்னர் சுந்தர சோழர் என்று அறிக்கை விட்டு நிலைமையைச் சமாளித்தார், அநிருத்த பிரம்மராயர்.

கடைசியில் குந்தவைதான் சமாதானம் பேச வந்தாள். ஆனால் குந்தவையைப் பார்க்க கூடச் சம்மதிக்கவில்லை, சுந்தர சோழர். கணவனும், மனைவியும் அறைக் கதவை தாழிட்டுக் கொண்டு குந்தவை புறப்பட்டுப் போகும் வரை வெளியே வரவில்லை.

ஏமாற்றத்துடன் புறப்பட்ட குந்தவையை வெறித்துப் பார்த்தான், பார்த்திபன்.

"இளவரசியாரே! யார் என்ன நினைத்து, எதனைச் செயல்படுத்த சதி செய்து ஆதித்த கரிகாலனைக் கொன்றார்களோ? பாண்டியர்களோ, சம்புவராயர்களோ, பழுவூர் அரசர்களோ, யாராக இருந்தாலும், அவர்களைக் காட்டிலும் பெரும்புகழோடு ஆதித்த கரிகாலன் வருங்காலத்தில் வாழப் போகிறான். மன்னராகத் திகழ்ந்து சரித்திரத்தில் இடம் பெறுவது பெரிய சாதனையல்ல. மன்னராகத் திகழாமலேயே, ஆதித்த கரிகாலன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வாழப் போகிறான். சதி செய்தவர்கள் செய்யும் சாதனைகளை விட, அவனது சாதனைகள்தான் இன்னும் அதிகமாகப் பேசப்படும். போற்றப்படும்! ஆதித்த கரிகாலனை நினைத்து சோழர் களாகிய நீங்கள் பெருமைப்படுகிறீர் களோ இல்லையோ, பல்லவர்களாகிய நாங்கள் அவன் காஞ்சிப் பொன்னாழியில்தானே தங்கி இருந்தான் என்பதை எண்ணிப் பெருமைப்படுகிறோம். சுந்தர சோழர் இனி இங்கிருந்து தஞ்சையில் காலடி வைப்பார் என்று நினைக்கவில்லை. ஆருயிர் மகனைப் பற்றிய நினைவுகளில் இங்கேயே காலத்தைக் கழித்து மரணத்தை ஏற்க நிச்சயித்துவிட்டார். வானவன்மா தேவியும் இதே கருத்தைத்தான் பிரதிபலித்தார். அவர்கள் தங்களைச் சந்திக்க விரும்பவில்லை!" - பார்த்திபன் கூற, குந்தவை மௌனமாகப் புறப்பட்டுச் சென்றாள்.

அதன் பிறகு சில தினங்களிலேயே, சுந்தர சோழரின் உடல்நிலை மோசமடைந்தது. ஆதித்த கரிகாலனின் பெயரை உச்சரித்தபடி மயக்கநிலையில் கிடந்தார்.

ஒரு நாள் நினைவு திரும்பியதும், பார்த்திபனையும் கல்பலதாவையும் அருகே அழைத்தார்.

வானவன்மாதேவி அவரிடம் ஒரு பெரிய வெள்ளிப் பெட்டகத்தை நீட்டினாள். அழகிய வேலைப்பாடு களுடன் கம்பீரமாகக் காணப்பட்டது அந்தப் பெட்டி. அதன் மீது சங்கு, யானை மற்றும் புலியின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

"இந்தப் பெட்டகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆதித்தன் தனது உண்மையான நண்பர்களுக்கு இறுதியாக தந்த பரிசு இது. தக்க சமயத்தில் இதனை உங்களிடம் கொடுக்கச் சொன்னான்!" - சுந்தர சோழரின் கண்களில் அருவியாக நீர் வழிந்தது.

பார்த்திபன் பெட்டகத்தைத் திறந்தான். அத்திமலைத் தேவனின் உக்ரோதயம் அதில் வைக்கப்பட்டிருந்தது. அத்திமலைத்தேவனின் ஆபரணமான உக்ரோதயம் இதோ கிடைத்துவிட்டது. அத்திமலைத்தேவனின் பிரதிமை எங்கே? பிரம்மிப்புடனும், ஆவலுடனும் நின்றிருந்தான் பார்த்திபன்

சுந்தர சோழர் அது குறித்து ஏதேனும் சொல்லுவாரா? அவரிடம் ஆதித்த கரிகாலன் எதையாவது கூறியிருப் பானா?

ஆனால் அதன் பிறகு மீண்டும் நினைவை இழந்தார், சுந்தர சோழர். பிறகு நினைவு திரும்பாமலேயே உயிர் நீத்தார்.

சுந்தர சோழர் இறந்தார் என்கிற செய்தி சென்றதும், தஞ்சையிலிருந்து அனைவரும் திரண்டு வந்தனர். உடலை தஞ்சைக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று அவர் எழுதியிருந்த சாசனத்தைப் பார்த்திப பல்லவன் எடுத்துக் காட்ட, காஞ்சியிலே அவரை தகனம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

பொதுவாகத் தாங்கள் ஈன்ற செல்வங்களில் ஒன்று இறக்கும் போது பெற்றோர்கள் மற்ற செல்வங்களின்

முகத்தைப் பார்த்து ஆறுதல் அடைவார்கள். ஆனால் சுந்தர சோழரும், வானவன்மாதேவியும், ஆதித்த கரிகாலன் இறப்புக்குப் பின் தஞ்சையைவிட்டு வெளியேறி காஞ்சியின் பொன்னாழியில்தான் வசித்தார்கள். சுந்தர சோழர் இறந்ததும், வானவன் மாதேவி உடன்கட்டை ஏறப்போவதாக அறிவித்தாள். குந்தவையும், அருண் மொழியும் தங்களது தாயின் முடிவை மாற்ற முயற்சித்தனரா என்று கூட சரித்திரத்தால் பதிவு செய்ய முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. ஆதித்த கரிகாலனின் கொலையால் மனம் வெறுத்து தஞ்சையை விட்டு காஞ்சிக்கு வந்து தங்கியவர்கள் அதன் பிறகு தஞ்சைக்கும் திரும்பவில்லை. மற்ற குழந்தைகளுடன் உறவாடவும் இல்லை. இறந்த கணவனின் உடலுடன் உடன்கட்டை ஏற விரும்பினாளே. தவிர, மற்ற குழந்தை களுடன் வாழ வேண்டும் என்று விரும்பவில்லை. சோழ குலத்திற்கே இல்லாத வழக்கமாக உடன்கட்டை ஏறினாள், மலையமான் மகள்.

எதற்காக?

மன்னர் தம்பதியரை மனம் வெறுத்துப் போகச் செய்தது எது?

தஞ்சையின் சக்கரவர்த்தி எதற்காகத் தஞ்சையைவிட்டு நீங்கி, காஞ்சியில் வாழ்ந்து அங்கேயே மடிந்தார்.

செம்பியன்மாதேவி போன்ற அரசிகள் கணவன் மறைந்த பிறகு, இறைபணியில் கவனம் செலுத்த, மலையமானின் மகள் மட்டும் எதற்காகச் சோழரிடம் இல்லாத உடன்கட்டை என்கிற சடங்கை மேற் கொண்டாள்?

உண்மையான சோழ சரித்திரங்கள் இந்தக் கேள்விக்கு விடை கூறவில்லை.

ஒன்று மட்டும் உறுதி. ஆதித்த கரிகாலன் கொலையின் பின்னணி சுந்தர சோழரையும், வானவன்மாதேவியையும், சோழ குடும்பத்தையே வெறுக்கச் செய்துவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மை.

## இ. ஆதித்த கரிகாலன் கொலையில் ஜீரணிக்க முடியாத தகவல்கள்

சங்கதாரா புதினத்தை எழுதிய போதே ஆதித்த கரிகாலன் கொலையில் நிலவி வரும் பல குழப்பங்களை எடுத்துரைத்திருந்தேன். அதனை பாண்டிய ஆபத்துதவி களின் செயல் என்று மிகவும் சாதாரணமாகக் கூறி வழக்கை முடித்துவி'ட்டனர் என்பதே எனது கருத்து.

உதயேந்திர செப்பேடுகள் மற்றும் சோழ சிம்மபுரத்துக் கல்வெட்டுகள் அனைத்துமே, பெரும்பாணப்பாடி நாட்டு வாணர்களை வீழ்த்தி அவர்களை கங்கர்களுக்கு அடிமையாக விற்றான் பராந்தக சோழன் என்று கூறுகின்றன.

1. விஜயாதித்த வாணன் மகனுடன் குந்தள வேந்தன் கிருஷ்ணனிடம் அடைக்கலம் புக அங்கிருந்து பழி வாங்கும் உணர்வுடன் புறப்படுபவன், பராக்கிரம பாணன் என்கிற வீரன். சோழர்களுக்கு அவன் வில்லன். ஆனால் வீரநாராயணபுரத்து ஏரிக்கரையில் அவன் கதாநாயகனாகச் சித்தரிக்கப்படுகிறான். (சந்தேகம் இருந்தால், பண்டாரத்தார் மற்றும் நீலகண்ட சாஸ்திரி களின் பராந்தகன்-பாணர் போர் நிகழ்வுகளைப் படித்துப் பாருங்கள்)

பண்ணுருட்டி என்றால் வீணை இசைத்துப் பாடும் பாணர்கள். வீணை இசைக்காமல் 'வந்தி' என்கிற வந்தனை பாடல்களைப் பாடுபவர்கள் வாணர்கள். வாணரின் வழித்தோன்றலாகத் திகழும் வந்தியத்தேவன் எதிரி என்பதை ஆதித்த கரிகாலன் அறியாமல் போக லாம். பழுவேட்டரையரும், அநிருத்த பிரம்மராயரும்

அறியாமல் போகலாம். கல்கி ஏன் அதை உணரவில்லை? அவன் மூலமாகவே சுந்தர சோழருக்கு ஓலை கொடுத்து விடுகிறான் ஆதித்த கரிகாலன்.

'நந்திபுரத்து நாயகி' புதினத்தில் வந்தியத்தேவன் பத்து வருடங்கள் சிறையில் இருந்ததாகச் சித்தரிக்கப்பட்டிருக் கிறது. அவன் எதற்காகச் சிறையில் இருந்தான்? வந்தியத் தேவனின் இயற்பெயர் என்ன? குந்தள நாட்டில் அடைக்கலம் புகுந்த வாணர் நாட்டு மன்னன் விஜயாதித்த வாணனின் பெயரன் பராக்கிரம வாணன். சோழர்களைப் பழிவாங்கத் துடிக்கும் பராக்கிரம வாணன் திடீரென்று காணாமல் போகிறான். அதன் பிறகு வீரநாராயண ஏரியில் வந்தியத்தேவனாகத் தென்படு கிறான். வந்தியத்தேவன் என்கிற பெயரின் பொருளைக் கவனித்துப் பாருங்கள். வந்தி என்றால் வந்தனை என்று பொருள். தெய்வங்களை வந்தனை செய்பவர்கள் வாணர்கள். தான் வாணன் என்பதை மறைக்க அவன் பெயரை மாற்றி வர, ஒரு கட்டத்தில் அவனை வாணர் தலைவன் என்றே அறிவித்திருக்கிறார், கல்கி. அவன் வாணன் என்பது தெரிந்தால் சோழர்கள் அவனை எச்சரிக்கையுடன் கையாண்டிருப்பார்கள் அல்லவா?

2. சரி! சோழ நாட்டிற்காக அனைத்தையும் அர்ப் பணித்து சோழ எல்லையைக் கடக்கமாட்டேன் என்று கூறும் குந்தவை, எப்படி வாணர் தலைவனை மணந்து கொள்ளச் சம்மதித்தாள்?

குந்தவைக்கும் வாணர் வீரன் வந்தியத்தேவனுக்கும் திருமணம் எப்போது நடைபெற்றது? உத்தம சோழர் வந்தியத்தேவனைச் சிறையில் இருந்து விடுவித்த பிறகு பத்து வருடங்கள் கழித்துதான் குந்தவை திருமணம் செய்து கொள்கிறாள் என்றால் அண்ணனின் மரணத் திற்காகச் சிறைதண்டனை அனுபவித்தவனையா திருமணம் செய்து கொள்கிறாள்?

அதுமட்டுமா? வாணர்களுடன் நட்புறவு பாராட்டி அவர்களுக்கு ஆதரவும் அடைக்கலமும் நல்கிய வைதும்பர நாட்டை எதிரிகளாக நினைத்துக் கொண்டிருந்த சோழர்கள், அவர்கள் மீது போர் தொடுத்து, அரிஞ்சயன் வைதும்பர இளவரசி கல்யாணியை கடத்தி வந்தான். வாணர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக வைதும்பர நாட்டைத் தண்டித்த சோழர்கள் ஒரு வாணர் வீரனை எப்படி ஆதித்த கரிகாலனுக்கு நண்பனாகவும், குந்தவைக்குக் கணவனாகவும் ஏற்றார்கள்?

3. சுந்தர சோழரும் வானவன்மாதேவியும் ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்டதும், எதற்காகக் காஞ்சிக்கு வந்து இறக்கிறார்கள். தஞ்சை மன்னர் ஏன் காஞ்சியில் வாழ்ந்தார்?

4. பராந்தகனுக்கே பெண் கொடுத்தவர் பழுவேட்டரையர். மூத்தவர் இருவர் இராஜாதித்யனும், கண்டராதித்யனும் கோக்கிழான் அடிகள் என்கிற பராந்தகனின் பட்டத்து அரசிக்குப் பிறக்க, அரிஞ்சயனும், உத்தமசீலனும் பழுவேட்டரையர் மகளுக்குப் பிறக்கின்றனர். மூத்தவர் இருவரும் இல்லாத நிலையில், பழுவூர் அரசியின் மகன் அரிஞ்சயன் அரியணை ஏறுகிறான். அவன் மகன் சுந்தர சோழன். அவர் வாரிசு ஆதித்த கரிகாலன். அந்த வகையில் பழுவேட்டரையருக்கு ஆதித்த கரிகாலன் கொள்ளுப்பேரன். அவனுக்கு எதிராகவே எதற்காகப் பழுவூர் அரசர்கள் சதி செய்ய வேண்டும்? பொன்னியின் செல்வனில் தனது நேர் வாரிசு சுந்தரரின் மக்களுக்கு எதிராகத் தனது மகளின் சக்களத்தியின் மகன் கண்டராதித்யரின் மகன் உத்தம சோழனை பழுவேட்டரையர் ஆதரிப்பது போன்று சித்தரிக்கப்பட்டுள்ளதை ஜீரணிக்க முடியவில்லை. அரிஞ்சயன் பல மனைவிகளைக் கொண்டிருந்தான். வீமன் குந்தவையுடன் அவன் வாழ்க்கை நடத்தவில்லை. வைதும்பர நாட்டின் இளவரசி கல்யாணியைப்

பலவந்தமாகக் கடத்தி வந்து அவள் மூலமாகத்தான் சுந்தர சோழரைப் பெற்றிருந்தான். வைதும்பர நாட்டில்தான் வாணர்கள் அடைக்கலம் புகுந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

5. முக்கியமான கேள்வி ஒன்று உள்ளது.

ஆதித்த கரிகாலனுக்கும் குந்தவைக்கும் இடையே என்னதான் பிரச்னை நிலவியது? என்று ஒரு புகழ் பெற்ற அன்றைய சரித்திர எழுத்தாளரைக் கேட்டேன்.

"பிரச்னை ஒன்றுமில்லை. நந்தினியுடன் பழகக்கூடாது என்று குந்தவை கூறினாள். ஆதித்த கரிகாலன் கேட்க வில்லை. அவர்களுக்குள் அதுதான் பிரச்னை" என்றார்.

"அது எப்படிச் சாத்தியம்? நந்தினியும் ஆழ்வார்க் கடியானும், கற்பனைப் பாத்திரங்கள் என்று கல்கியே குறிப்பிடுகிறார். அப்படியிருக்க, நந்தினி பொருட்டு எப்படி ஆதித்த கரிகாலனும், குந்தவையும் விவாதித் திருக்க முடியும்? அவர்கள் இருவருக்கும் இடையே வேறு ஏதோ ஒரு பிரச்னை. அண்ணனை மீறி, தம்பியை மன்னனாக்க அவள் விருப்பப்படுகிறாள் என்றால், நிச்சயம் அவர்களிடையே பெரும் பிரச்னை இருந் திருக்கும்" என்றேன். அந்த எழுத்தாளர் நழுவிவிட்டார்.

நந்தினிக்காக அவர்கள் இருவரும் மோதி இருக்க முடியாது. அரியணைக்காக அவர்கள் மோதியிருக்கலாம் என்பது எனது யூகம்.

6. ஆதித்த கரிகாலனுக்கு ஏன் திருமணம் செய்யப்பட வில்லை? அனைத்து விவகாரங்களிலும் மூக்கை நீட்டியவள் குந்தவை. ஈழத்து வேந்தனால் கொலை செய் யப்பட்ட கொடும்பாளூர் வேந்தன் மகள் கொடும் பாளூர் இளவரசி வானதி என்னும் பத்து வயது சிறுமியை பதினான்கு வயது தம்பி அருண்மொழிக்கு நிச்சயிக்கிறாள். ஆனால் பட்டத்து இளவரசனாகிய ஆதித்த கரிகாலன் வயது இருபத்து ஒன்பது. திருமண

வயதைக் கடந்தும் அவனுக்கு ஏன் திருமணமே செய்யப் படவில்லை? இராஜராஜ சோழனுக்கு மொத்தம் பதினொரு மனைவிகள். உலகமாதேவி என்கிற தந்திசக்தி விடங்கிதான் பட்டத்து அரசி. சோழமாதேவி, திரைலோக்யமாதேவி, பஞ்சவன்மாதேவி, அபிமான வல்லி, இலாடமாதேவி, பிரித்விமாதேவி, மீனவன் மாதேவி, வீரநாராயணி, வில்லவன்மாதேவி, வானதி என்கிற பதினோரு மனைவிகள். பதினொரு பெண்களை மணந்து கொள்வதற்குத் தம்பி அருண்மொழி என்கிற இராஜராஜ சோழனுக்கு அனுமதி தந்த குந்தவை, ஏன் அண்ணன் ஆதித்த கரிகாலன் ஒரு திருமணத்தைச் செய்து கொள்வதற்குக் கூட முனைப்பு காட்டவில்லை? பதினான்கு வயதிலேயே தம்பிக்குப் பெண் பேசத் துவங்கிய குந்தவை அண்ணனனுக்கு ஏன் பெண் பார்க்கவில்லை?

7. பாடல்பெற்ற தலங்கள் அனைத்தும் பத்திரமாக இருக்க, கண்டராதித்த தேவர் நாயகி பாவத்தில் ஒன்பதாம் திருமுறையில் பாடிய தளிக்குளத்தார் ஆலயம் மட்டும் காணவில்லை. அந்த இடத்தில்தான் தஞ்சை பெரிய கோயில் நிற்கிறது. எதற்காகப் புராதன ஆலயத்தை நீக்கிவிட்டு, புதிய கோயிலைக் கட்ட வேண்டும்? தேவாரத்தில் திருவீழிமிழலை பதிகத்தில் தளிக்குள பெரிய கோயில் என்று அப்பர் பாடியிருக்கிறார். தளிக்குளத்தார் என்கிற பெரிய கோயிலை இடித்துவிட்டு, ராஜராஜேஸ்வரம் என்கிற தனது புகழ் பாடும் கோயிலைக் கட்டியிருக்கிறான், இராஜராஜன். புகழ் பெற்ற கோயிலை இடித்து ஏன் தன் பெயரில் கோயிலைக் கட்டினான் இராஜராஜன்?

இன்னும் கேள்விகள் நிறைய எழுகிறது. பொன்னியின் செல்வன் என்பது பாகுபலி திரைப்படம் போன்று ஒரு நல்ல fantasy. அதுவேதான் சோழர் சரித்திரம் என்கிற

*மனநிலையைவிட்டு உண்மையான சோழர் சரித்திரத்தை மக்கள் படிக்க வேண்டும்.*

*இனியும் ஆதித்த கரிகாலனை யார் கொன்றார்கள் என்கிற கேள்வியைக் கேட்காமல் வந்தியத்தேவன்தான் அவனை கொலை செய்தான் என்கிற தீர்ப்பை வழங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.*

*காரணம், காளஹத்தி (காளஹஸ்தி) யாருடைய பகுதி என்பது குறித்துப் பெரும்பாணப்பாடி நாட்டிற்கும், கங்க நாட்டிற்கும் பிரச்னை மூண்டது. தனது நண்பனான கங்க நாட்டு மன்னன் பிருத்விபதிக்கு உதவும் பொருட்டு, கி.பி.911-12 ஆண்டுகளில் பெரும்பாணப்பாடி நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அழித்த பராந்தகன், வாணர் மக்களை அடிமைப்படுத்தி கங்க நாட்டு மன்னன் பிருத்விபதிக்கு அடிமைகளாக விற்றான். பெண்கள் சோழ வீரர்களால் கற்பிழந்து தங்கள் குழந்தைகளுக்குத் தகப்பன் யார் என்பதைக் கூட அறியாமல் இருந்தனர். வாணர்குல வேந்தனாகிய இரண்டாம் விஜயாதித்த வாணனும், அவனது மகன் இரண்டாம் விக்கிரம வாணனும் இராஷ்டிரகூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ண தேவனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். (ஆதாரம்: தி.வை. சதாசிவ பண்டாரத்தார் - சோழர் வரலாறு ஆய்வு)*

*சோழர்களைப் பழி வாங்குகிறேன் என்று சபதம் செய்து பராக்கிரம பாணன் சோழ நாட்டிற்குள் நுழைகிறான். வீராணம் ஏரி அருகே ஒரு புரவியில் செல்லும் அவன் அமரர் கல்கியால் கதாநாயகனாகக் காட்டப்படுகிறான். அவனது சதிகள் குந்தவையின் திட்டங்களுக்கு அனுகூலமாக இருப்பதால் இருவரும் சேர்ந்துகொள்கின்றனர். பழிவாங்கத் துடிக்கும் வாணர் குலத்தவனை மதியூகம் படைத்த குந்தவை மணந்து கொள்கிறாள். முடிவில் வீரபாண்டியனின் தலையைக் கொய்து, காஞ்சியில் பொன்மாளிகை எழுப்பியவன் சதியால்*

கொல்லப்படுகிறான். கொலைப்பழியைப் பாண்டிய ஆபத்துதவிகள் சுமக்கிறார்கள். துரோகிகளான ரவிதாசன் பிரம்மாதிராயன் என்று உடையார் கோயில் கல்வெட்டு கொலைகாரர்களை வர்ணிக்கிறது. பிரம்மாதிராயர் என்பது சோழ நாட்டு அந்தணர்களுக்கு அளிக்கப்படும் பட்டம். (அநிருத்த பிரம்மாதிராயர்தானே தலைமை அமைச்சர்) பாண்டிய நாட்டு ஆபத்துதவியான ரவிதாசனுக்கு எப்படி பிரம்மாதிராயர் பட்டம் கிடைத்தது? மேலும், அந்தக் கல்வெட்டு துரோகிகளான ரவிதாசன் என்கிறது. வெளிநாட்டிலிருந்து வரும் கொலைகாரர்களை உடையார் கோயில் கல்வெட்டு 'எதிரிகளான ரவிதாசன்' என்றுதானே குறிப்பிட வேண்டும். 'துரோகிகளான' என்று குறிப்பிடுவதால், கொலைகள் சோழ நாட்டினராலேயே திட்டமிடப் பட்டிருத்தல் வேண்டும்.

மகன் ஆதித்த கரிகாலன் இறந்த துக்கத்தில், சுந்தர சோழரும், மலையமான் மகள் வானவன்மாதேவியும் காஞ்சி பொன்மாளிகையில் தங்கிவிட, தஞ்சையை யார் ஆண்டு வந்தார்கள்? எப்படி இருந்தாலும் வாணர்குல வீரன் வந்தியத்தேவன் என்கிற பராக்கிரம பாணன்தான் ஆதித்த கரிகாலனைக் கொன்றிருக்கிறான் என்பதில் இம்மியும் சந்தேகமில்லை. குந்தவையும் அதனைத் தடுக்கவில்லை என்கிற காரணத்தால்தான் சுந்தர சோழர் தனது குடும்பத்தையே வெறுத்துக் காஞ்சியில் சென்று தனது இறுதிக் காலத்தைக் கழித்தார். மற்ற பிள்ளை களைப் பற்றிக் கவலைப்படாமல், தனது கணவன் இறந்ததும், தஞ்சைக்குத் திரும்பாமல், காஞ்சியிலே வானவன் மாதேவி உடன்கட்டை ஏறினாள். இதுவே உண்மையான சரித்திரம்.

எல்லாவற்றிலும் மூக்கை நீட்டும் குந்தவைக்கு ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்படப் போவது தெரியாமல் இருக்குமா? அவனது கொலை தனது எதிர்காலத் திட்டங் களுக்குச் சாதகமாக இருக்கும் என்பதைத் தெரிந்து

கொண்டதால் தம்பியின் முழுக்கட்டுப்பாட்டைத் தன்னிடம் வைத்திருந்த அவள், அண்ணனின் கொலையைத் தடுக்கவில்லை என்பது எனது முடிவு.

குந்தவையை போய் சதிகாரியாக நினைத்துப் பார்க்க முடியவில்லை என்று கூறுபவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பட்டத்து இளவரசன், வீர பாண்டியனின் தலையைக் கொய்த சுத்த வீரன் ஆதித்த கரிகாலனை அழித்தது யாரோ சில ஆபத்து தவிகள் என்று கூறுகிறார்கள். கி.பி.959-ம் ஆண்டு சேவூர் போரில் வீரபாண்டியன் தலையைக் கொய்தான் ஆதித்த கரிகாலன். ஆனால் அவன் கொலை செய்யப்பட்டது கி.பி.969-ல். பழிவாங்குவதற்கு பாண்டிய ஆபத்துதவிகள் பத்து ஆண்டுகளாகவா காத்திருந்தார் கள்? ஒரு சுத்த வீரனை அனாசியமாக பாண்டியர்கள் தேடி வந்து கொலை செய்வார்கள் என்பதையும் நம்மால் நினைத்துப் பார்க்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

## 27. யுகம் கடந்து விரட்டிய வினை

"சுந்தரரும், மலையமான் மகளும் மறைந்து போனார்கள். இனி நாம் பொன்னாழியில் தங்குவது தவறு. நமது மாளிகைக்கே போகலாம்!" - பார்த்திபன் கூற, இருவரும் ராஜவீதியில் இருந்த தங்கள் மாளிகைக்குத் திரும்பினர்.

"இந்த உக்ரோதயத்தை அத்திவரதனின் ஆலயத்திலேயே சமர்ப்பித்துவிடுவோம். அவன் எப்போது மீண்டு வந்து அதை அணிகின்றானோ, அவனது விருப்பம்"- பார்த்திபன் கூற, கல்பலதா அந்த வெள்ளிப் பெட்டகத் தைத் திறந்து உக்ரோதயத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அருமையான வேலைப்பாடுகளுடன் எவ்வளவு அழகாக இருக்கிறது. அத்திமலைத்தேவன் இதை அணிந்து பார்த்தால் இன்னமும் அழகாக இருக்குமோ?" - கல்பலதா ஆர்வத்துடன் கேட்டாள்.

"எத்தனையோ தடவை பிரவாள மாளிகை பக்கமாகச் சென்றிருக்கிறேன். அங்கேயேதான் அத்திமலைத்தேவன் புகைபோக்கியின் உள்ளே இருந்திருக்கிறான். ஆனால் ஆதித்த கரிகாலன் செய்த பாக்கியத்தை நான் செய்ய வில்லை. அவனுக்குக் காட்சி தந்தவன் எனக்கு இன் னமும் காட்சி தராமல் இருக்கிறான். ஆதித்த கரி காலன் உக்ரோதயத்தை அளித்தவன், அத்திமலையானின் சிலையை எங்கே வைத்திருக்கிறேன் என்று சொல்லாமல் போய்விட்டானே!" மிகவும் நொந்து போனவனாகக் கூறினான், பார்த்திபன்.

பெண்புத்தி பின்புத்தி என்பார்கள். அதாவது ஒரு பொருளைக் கையாளும் போது அதன் பின்பாக உள்ளது

என்ன என்று ஆராயும் புத்தி பெண்களுக்குத்தான் உண்டு. ஆண்கள் ஒரு பொருளை வாங்கினால் கூட என்ன ஏது என்று விசாரிக்காமல், தெரிவிக்கப்பட்ட விலைக்கு அதனை வாங்கிச் செல்வார்கள். அப்படிப் பட்ட கூர்மையான புத்தியை உடைய கல்பலதா அந்த வெள்ளிப்பெட்டகம் ஆழமாக இருப்பதையும், உக்ரோதயம் பட்டுத்துணியின் மீது வைக்கப்பட்டிருப் பதையும், அந்தப் பட்டுத்துணியைக் கிழித்துப் பார்த்திருந் தால், அதன் கீழே இரகசியப் பகுதியில் சுவடி ஒன்றை ஆதித்த கரிகாலன் பதுக்கியிருந்ததையும் அவர்கள் பார்த்திருப்பார்கள். தான் அத்திமலைத் தேவனின் சிலையை பதுக்கியிருந்த இடத்தை விவரமாக அந்தச் சுவடியில் கூறியிருந்தான் என்பது அவர்களுக்கு எப்படி தெரியும்?

**'காளையும், புலியும் உரசுமிடத்தில்**
**ததிபாண்டனின் தயிர் பானையில்**
**பச்சை மாமலை போல் மேனியன்**
**அத்திமலையான் ஏழுமலையானாக நிற்கிறான்..'**

என்கிற செய்தியைக் கூறும் பட்டோலை ஒன்று அந்த வெள்ளிப்பெட்டகத்தின் பட்டுத்துணியின் கீழே மறைக்கப்பட்டிருக்கிறது. அது எவர் கண்களிலும் புலப் படாத வண்ணம் பட்டுத்துணியால் தைக்கப்பட்டிருக் கிறது. அந்தத் துணியைக் கிழித்துப் பார்த்தால், அடியில் உள்ள தகவல் தெரிய வரும். ஆனால் கல்பலதாவோ, பார்த்திபனோ, யோசிக்கும் சூழ்நிலையிலா இருந்தனர்?

"இந்த உக்ரோதயத்தை பெருந்தேவி தாயாருக்கு சாற்றிவிடலாம்!" என்ற பார்த்திபன் அன்று மாலையே கல்பலதாவுடன் அத்திமலையானின் ஆலயத்திற்குச் சென்றனர். உக்ரோதயம் வைக்கப்பட்டிருந்த வெள்ளிப் பெட்டகத்தைச் சுமந்தபடி, விஜயமேதாபதியின் மகள் வாகீஸ்வரிதான் அவர்களுடன் பயணித்தாள்.

பார்த்திபனும், கல்பலதாவும் பக்தியுடன் பெருந்தேவி தாயாரை தொழுதுவிட்டு உக்ரோதயத்தை அவளுக்குச் சாற்றினார்கள்..

அந்த அர்ச்சகரும், குபேரன் அத்திமலைத்தேவனுக்குச் சாற்றிய ஸ்ரீதளமணிதான் வேறு வடிவில் உக்ரோதய மாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியாமல் அதனை பெருந்தேவி தாயாருக்குச் சாற்றினார்.

அனுமன் அளித்த இராமனின் கணையாழியைக் கண்டு சீதை எப்படிக் குதூகலித்திருப்பாள் என்பதை அன்று பெருந்தேவியின் முகத்தைப் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். தனது நாதன் அத்திமலைத்தேவன் திரும்பி வரப்போவதற்குக் கட்டியம் கூறும் அந்த உக்ரோதயத்தை மனமுவந்து ஏற்றாள் பெருந்தேவி.

அன்று இரவு மீண்டும் உக்ரோதயத்தைப் பார்த்திபன் அளித்திருந்த வெள்ளிப்பெட்டியிலேயே வைத்து ஆலய கஜானாவில் பூட்டினார், ஆலய அதிகாரி..

உக்ரோதயத்தை சாற்றிவிட்டு, தங்கள் ராஜவீதி மாளிகைக்குத் திரும்பிய பார்த்திபனும், கல்பலதாவும் உறைந்து போய் நின்றனர். இவர்களது மாளிகை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. வெளியே தாளிடப்பட்டிருந் ததால், பணியாட்களும், சேடிப்பெண்களும் தீயில் கருகி மாண்டிருந்தனர்.

தங்களுக்காக வைக்கப்பட்ட குறியில் பணியாளர்கள் சிக்கினார்கள் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாதா என்ன?

"இனியும் நாம் காஞ்சியில் இருப்பது ஆபத்து. நாம் வேழூலத்திற்குச் சென்றுவிடுவோம். எனது நண்பன், சஞ்சீவ சதகரணி அருகே நகரத்தலைவனாக இருக்கிறான். அவன் நமக்கு அடைக்கலம் தருவான். சோழர்கள் நம்மை இனி நிம்மதியாக வாழவிட மாட்டார்கள். நீ அரிஞ்சய சோழனின் வாரிசு. அபராஜிதனின் வாரிசு. வயிற்றில் வேறு எனது வாரிசை சுமந்து கொண்டிருக் கிறாய். அது ஆதித்த கரிகாலனின் வாரிசு என்று தவறாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. எவ்வகையில் பார்த்தாலும், நாம் உயிருடன் இருப்பதை அவர்கள்

விரும்பமாட்டார்கள். எனவே இன்றே நாம் வேழூலம் புறப்படுவோம்!" - பார்த்திபன் கூற, கல்பலதா தலையசைத்தாள்.

"மேதாபதி அவர்களே! கல்பலதா கர்ப்பிணி என்பதால் அவள் பயணம் செய்வதற்கு சிவிகை ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள். நான் புரவியில் பயணிக்கிறேன். காவலர்கள் மற்றும் சிவிகை தாங்கிகளுக்கு ஏற்பாடு செய்துவிடுங்கள்!" - பார்த்திபன் கட்டளையிட்டான்.

மேதாபதி பார்த்திபனை சோகத்துடன் பார்த்தார். "பல தலைமுறைகளாக உங்கள் பல்லவத்திற்கு ஊழியம் செய்து வந்த குடும்பம் எங்களுடையது. உங்களை இப்படி நிர்க்கதியாக அனுப்புவதற்கு மனம் மிகவும் வேதனைப் படுகிறது. நானும் தங்களுடன் வேழூலத்திற்கு வந்து பல்லவ இளவரசர் பிறக்கும் வரையிலாவது உங்களுக்குக் கைங்கர்யம் செய்ய விரும்புகிறேன்" என்று கண்கலங்கக் கூறினார்.

பார்த்திபன் விரக்தியுடன் சிரித்தான்.

"விஜயமேதாபதி அவர்களே! கடைசி பல்லவ இரத்தம் நான், என் மனைவி, என் குழந்தைதான். நாங்கள் பல்லவ இரத்தம் என்பதை யாரும் இனம் காண முடியாத இடத்திற்குப் போக விரும்புகிறோம். நீங்கள் வந்து எனக்கு ஊழியம் செய்தால், நாங்கள் மன்னர் பரம்பரை என்கிற உண்மை தெரியவரும். எனவே, நீங்கள் எங்களுடன் வரவேண்டாம்!" - பார்த்திபன் கூற, மேதாபதியின் முகம் சூம்பியது. ஏமாற்றத்தில் கல்பலதாவைப் பார்க்க, அவளுக்கு அவரைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

"பார்த்திபரே! அவரும் வரட்டும்! நமது மகனுக்குத் தக்க குருவாகப் பல்லவத்தின் பெருமையைப் போதிக் கட்டும்!" - கல்பலதா கூறினாள்.

"மகன்தான் என்று தீர்மானித்துவிட்டாயா?"- சிரித்தான் பார்த்திபன்.

"வேண்டாம் இளவரசே! பட்ட துன்பங்கள் எல்லாம் போதும். இனி பல்லவத்திற்குப் பெண்ணே வேண்டாம்!" - மேதாபதி கூறினார்.

சிவிகை தாங்கிகள் சிவிகையைச் சுமந்து செல்ல, காவலர்கள் சிவிகையைச் சூழ்ந்தபடி நடந்தனர். முன்பாகப் பார்த்திபனும், பின்பாக மேதாபதியும் குதிரைகளில் சென்றனர்.

அப்போது, ஒரு குதிரை வீரன் வேகமாக வந்து பார்த்திபனை நோக்கிப் பணிந்தான்.

"பல்லவ இளவரசே! மலையமான் மரணப் படுக்கையில் இருக்கிறார்! தங்களிடம் முக்கியமாக ஏதோ தகவலைத் தெரிவிக்க வேண்டும் என்று துடிக்கிறார். தாங்கள் உடனே புறப்பட வேண்டும்!" - அந்த வீரன் கூற, பார்த்திபன் திரும்பி கல்பலதாவை அழைத்தான்.

சிவிகையிலிருந்து எட்டிப்பார்த்தாள் கல்பலதா.

"மலையமான் அவசரமாக அழைக்கிறார். நீ மேதாபதியுடன் தொடர்ந்து செல். நான் உங்களுடன் வந்து சேர்ந்துக் கொள்கிறேன். மேதாபதி அவர்களே! ஒருவேளை நீங்கள் முன்னதாகவே சென்றால், சஞ்சீவ சதகரணியின் மாளிகைக்குச் சென்று காத்திருங்கள். நான் வந்து சேர்ந்துக்கொள்கிறேன். இந்தக் கணையாழியை சதகரணியிடம் காட்டுங்கள்!" என்றான்.

விஜயமேதாபதி இப்போது முன்பாகச் செல்ல, சிவிகை அவரைத் தொடர்ந்தது. சிவிகையிலிருந்து தலையை வெளிநீட்டி கையாட்டிக் கொண்டே இருந்தாள் கல்பலதா. சிவிகை பார்வையிலிருந்து மறைந்ததும், திருக்கோவிலூருக்கு விரைந்தான், பார்த்திபன்.

இவனுக்காக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காத்திருந்தார், மலையமான்.

"அப்பா பார்த்திபா! ஆதித்த கரிகாலன் இரகசியத்தை வெள்ளிப் பெட்டகத்தில்.. வைத்திருக்கிறான்.. பொக்கிஷத்தை எடுத்துக்கொள்.." என்றார்.

“பெட்டகத்தை சுந்தர சோழர் என்னிடம் கொடுத்து விட்டார். அதனை நான் பெருந்தேவி தாயாருக்குச் சாற்றிவிட்டேன்!” என்றதும், அவனையே நிலைகுத்திப் பார்த்தபடி நின்றது, மலையமானின் கண்கள். தனது பிரிய பெயரனை நாடிச்சென்றது அவருடைய உயிர்.

உடனேயே மனைவியுடன் சேருவதற்காக வேமூலத்தை நோக்கி விரைந்தான். இனி அவனுக்கு சோழத்தில் மட்டுமல்ல, பல்லவத்திலும் ஒன்றும் இல்லை.

வேமூலத்தை நோக்கிப் புயலெனப் பறந்தது அவனது குதிரை. வேங்கடத்தைக் கடந்து மலைக்காடுகளில் நுழைந்த போது இருள் பரவிவிட்டிருந்தது. தனது மனைவியும், பரிவாரமும் ஒருவேளை இரவை எங்காவது கழிக்க எண்ணிக் கூடாரம் அமைத்திருப்பார்களோ என்று எண்ணியபடி, இருளில் உன்னிப்பாகக் கவனித்த படி சென்றான்.

தொலைவில் சிறு புள்ளியாக ஒரு வெளிச்சம் தென்பட்டது.

கல்பலதாதான் அங்கே தங்குகிறாளோ என்னவோ.. குளிரை விரட்ட நெருப்பை மூட்டியிருக்கலாம். உடனே அவளைக் காண வேண்டும் என்கிற ஆர்வம் பற்றிக் கொள்ள, தனது குதிரையின் விலாவில் உதைக்க அந்த ஒளியை நோக்கிப் பாய்ந்தது குதிரை.

ஒளிர்ந்து கொண்டிருந்த அந்தத் தீ, சிறு புள்ளியாய் துவங்கி, விரைவில் பெரிய தீக்கொழுந்தாய் எழுந்தது. அருகே சென்றதும்தான் பார்த்திபனின் இதயமே வாய் வழியாக வெளியே வந்து விழுந்தது போல் ஆனது.

கல்பலதா அமர்ந்திருந்த சிவிகைதான் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. மேதாபதியின் மார்பில் ஈட்டிப் பாய்ந்திருந்தது. சிவிகை ஆட்களும், காவலர்களும் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்தனர்.

“கல்பலதா..!” அலறியபடி சிவிகையை நோக்கிப் பாய்ந்தான். இனி பிரயோசனம் இல்லை என்பது

போன்று சிவிகையின் கதவுகள் மூடப்பட்டு வெளிப் புறத்தில் தாளிடப்பட்டிருந்தது.

அந்த வனமே அதிரும் வண்ணம் அலறினான், பார்த்திபன்.

"இளவரசே!" - குற்றுயிரும், குலையுயிருமாகக் கிடந்த மேதாபதி கண்ணீருடன் அவனை அழைத்தார்.

"இளவரசே! என்னை மன்னித்துவிடுங்கள். இளவரசியாரை என்னால் காப்பாற்ற முடியவில்லை"- கதறினார், மேதாபதி.

"இந்த அக்கிரமத்தை யார் செய்தது?" - பார்த்திபன் ஓலமிட்டான்.

"சோழ கிருமிதான் இதைச் செய்தது!"-ஒரே வரியில் பதில் அளித்த மேதாபதி அத்துடன் தனது உயிரை விட்டார்.

அபராஜிதனைக் கொன்ற அதே கிருமி..

கங்காவதியின் பெண்மையைச் சூறையாடிய அதே சோழ கிருமி..

நண்பன் ஆதித்த கரிகாலனைக் கொன்ற அதே சோழ கிருமிதான், இதோ இவனது மனைவியையும், அவளது கருவில் இருந்த சிசுவையும் பொசுக்கியது.

"சோழர்களுடன் நட்பு கொள்ளாதே. அவர்களுடன் தோளினை உரசாதே! உயிரைத்தான் இழப்பாய்!" - தந்தை தருமவர்மர் எச்சரித்தது செவியில் ஒலித்தது.

இனி இவனுக்கு என்ன இருக்கிறது..? தேசமும் இல்லை. மனைவியும் இல்லை, குடும்பமும் இல்லை. இவனது தெய்வம் அத்திமலையானும் இல்லை. இவன் மட்டும் இருந்து என்ன பயன்?

பார்த்திபன் திரும்பி, எரியும் சிவிகையை நோக்கினான். கண்களில் வழிந்த நீர் திடீரென்று நின்றது.

“அத்திமலையானே! உனக்குத் திருவுள்ளம் இருந்தால் உனது கோயிலுக்குச் செல். ஆனால் உன்னை வரவேற்க காத்திருந்த கடைசிப் பல்லவனான நான் நீ வரும் போது இருக்கமாட்டேன். ஏன், பல்லவம் என்கிற பெயரே இருக்காது!” என்றவன் விடுவிடுவென்று நடந்து சென்று அந்தச் சிவிகையின் மீது தனது உடலைக் கிடத்தினான்.

பல்லவம் வேழூலத்தில்தான் துவங்கியது. அதே வேழூலக் காட்டில்தான் கடைசிப் பல்லவனான உபேந்திர பார்த்திப பல்லவனும் மனைவி கல்பலதா வுடன் தீயில் பொசுங்கி சாம்பலானான்.

சிவிகை எரிந்து கொண்டிருக்க, தாடி வைத்த ஓர் உருவம் அங்கே தோன்றியது. அதன் கண்களில் கண்ணீர் திரண்டிருந்தது. சிரஞ்சீவியாகக் கருதப்படும் அஸ்வத்தா மாதான் கண்களில் நீருடன் எரியும் சிவிகையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“கூடாரத்தில் உறங்கும் உபபாண்டவரை எரித்துக் கொன்றேன். அப்போது நான் மூட்டிய தீவினை, யுகத்தைக் கடந்து வந்து எனது வம்சத்தின் கடைசி வித்தையே எரிக்கின்றதே. பாண்டவர்கள் மனம் குமைந்து அழுதபோது நான் சிரித்தேன். இப்போது எனது குலத்தின் அழிவைப் பார்த்து நான் தனியாக அழுகிறேன்..” என்றபடி மீண்டும் வந்த வழியே நடந்தான். அஸ்வத்தாமா இன்றும் இமாலயத்தில் தவம் செய்கிறான் என்கிறார்கள். இமாலய மலை முகடுகளில் காற்று வந்து முட்டும் போது, ஓலமாக ஒரு குரல் உடன் கேட்கிறதே. ஒருவேளை, தனது பல்லவ குலம் அழிந்ததை எண்ணிக் கதறும் அஸ்வத்தாமாவின் குரலாக இருக்குமோ?

இப்போது அத்திமலையான் எங்கே இருக்கிறான்?

அவனது மனைவி பெருந்தேவியிடம்தான் அதற்கான விடை இருக்கிறது.

## 28. ஜெயம்கொண்ட சோழபுரம்

பல்லவத்தின் கடைசி சொட்டு இரத்தமான உபேந்திர பார்த்திப பல்லவன், தனது மனைவி கல்பலதாவுடன் தீயில் கருகி பிராண தியாகம் செய்தவுடன், காஞ்சிக்கும், பல்லவத்திற்கும் இருந்த தொடர்பு முழுவதுமாக அறுந்தது. என்றாவது ஒரு நாள் பல்லவம் மீண்டும் துளிர்க்கும் என்கிற நம்பிக்கையுடன் வளைய வந்து கொண்டிருந்த காஞ்சி வாசிகள் அந்த நம்பிக்கையை இழந்தனர். ஆதித்த கரிகாலனின் கொலையின் மூலம், தங்களில் ஒருவனை சோழர்கள் அப்புறப்படுத்தி விட்டதாகவே அவர்களை நினைக்கத் தூண்டியது. ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்டதும், பொன்னாழியில் வந்து தங்கிய சுந்தர சோழன் தன்னைக் காஞ்சியின் வாசியாகவே பிரகடனப்படுத்திக் கொண்டான். கி.பி.969-ல் ஆதித்த கரிகாலன் கொல்லப் பட்டான். உடனே காஞ்சியில் வந்து தங்கிய சுந்தர சோழன் அடுத்த ஆண்டே, அதாவது கி.பி.970-ல் காஞ்சியிலே இறக்க, அங்கேயே அவன் தகனம் செய்யப்பட்டான். அவன் மனைவி - மலையமானின் மகள், வானவன்மாதேவியும் உடன்கட்டை ஏறினாள்.

சுந்தர சோழர் பதின்மூன்று வருடங்களே ஆண்டார். மகனின் கொலை அவரைப் பெரிதும் பாதித்துவிட்டது, தஞ்சையிலேயே இனி காலடி வைக்கமாட்டேன் என்று அறிவித்துவிட்டுத்தான் காஞ்சிக்குக் குடிபெயர்ந்தார்.

கி.பி.970-ல் அவரது பெரியப்பன் கண்டராதித்தரின் மகன் உத்தம சோழன் அரியணையில் அமர்ந்தான். பதினைந்து ஆண்டுகள் குந்தவை பொறுமையுடன் காத்திருந்தாள். உத்தம சோழன் கி.பி.985-ல் இறக்க,

குந்தவை நெடுநாளாகக் கண்டிருந்த கனவு அந்த ஆண்டு பலித்தது.

அவளது ஆருயிர் அருண்மொழி அரியணையில் அமர்ந்தான். தம்பியாகக் கருதினால் என்ன? இல்லை மகனாகக் கருதினால்தான் என்ன? அவளது உலகமே அருண்மொழியாக இருந்ததால், உறவு எதுவாக இருந்தாலும் அவளுக்கு இலட்சியம் இல்லை.

வையகமே அருண்மொழியின் புகழைப் பாட வேண்டும் என்று விரும்பினாள். ஆனால் காஞ்சி இன்னும் ஆதித்த கரிகாலனின் புகழ்தான் பாடிக் கொண்டிருந்தது. அவன் எழுப்பியிருந்த பொன்னாழி ஆதித்த கரிகாலனின் புகழை இன்னும் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

குந்தவைக்கு இது உறுத்தலாகவே இருந்தது. சோழத்தின் பகுதியாகத் திகழ்ந்தும் இன்னும் தாங்கள் பல்லவர்கள் என்கிற எண்ணத்துடன் வாழ்ந்த காஞ்சியைக் குந்தவை வெறுத்தாள்.

பல்லவம் எங்கே இருக்கிறது? பார்த்திப பல்லவனும், கல்பலதாவும் போன இடத்தில் புல் முளைத்தாகி விட்டது. இன்னும் பல்லவம் என்கிற ஜம்பம் எதற்கோ?

தந்தை சுந்தர சோழர் இறக்கும் தருவாயில் அவரை காண்பதற்காக காஞ்சியின் பொன்னாழிக்குச் சென்ற போது அவர் இவளைக் காண மறுத்திருந்தார். அவளுடைய தாய் வானவன்மாதேவியும் அல்லவா இவளைக் காண மறுத்திருந்தாள்? அப்போது பார்த்திப பல்லவன் இவளிடம் கூறியிருந்த கடுமையான சொற்களை இவள் இன்னும் மறக்கவில்லை.

"மன்னனாக அரியணையில் அமர்ந்து புகழ் பெறுவது என்பது பெரிய சாதனை அல்ல! மன்னனாகப் பதவி ஏற்கவில்லை என்றாலும், வீரபாண்டியனின் தலையைக் கொய்து, காஞ்சியில் பொன்னாழியை எழுப்பிய ஆதித்த

கரிகாலனின் புகழ் மற்ற சோழ மன்னர்களைக் காட்டிலும், பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்திருக்கும்!"- என்று அகம்பாவத்துடன் கூறியிருந்தானே.

உண்மைதான்! சோழ பட்டத்து இளவரசனாக இருந்தும், தங்களுள் ஒருவனாகவே ஆதித்த கரிகாலனைக் கருதிய காஞ்சி மக்கள், இன்னமும் அவனது வீரத்தைச் சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்தனர். காஞ்சியின் மைந்தன் ஆதித்த கரிகாலன் என்கிற மெய்க்கீர்த்திப் பாடல் ஒன்று காஞ்சியின் பட்டிதொட்டிகளில் எல்லாம் பிரபல்யமானது. நீண்ட காலம் புகழுடன் ஆட்சி செய்த மன்னர்களுக்கு பாடப்படும் மெய்க்கீர்த்தி, பட்டத்திற்கே வராத ஆதித்த கரிகாலனுக்கு கிட்டியது குறித்துப் பலரும் வியந்து பேச, அதை குந்தவையால் ஜீரணிக்க முடிய வில்லை. எனவே, அருண்மொழியின் புகழை வைய மெங்கும் பரப்ப வேண்டும் என்கிற உத்வேகம் அவளுள் எழுந்தது. இந்த எண்ணங்களுடன் உறங்கப் போனதாலோ என்னவோ, அன்று நள்ளிரவில் ஆதித்த கரிகாலன் வந்தான்.

கனவில் தனது தலையைத் திருகி எடுத்து நீட்டுகிறான். அந்தத் தலை சோழ மகுடமாக மாறுகிறது.

"இதற்காகத்தானே நீ காத்திருந்தாய்? என்னிடம் கேட்டிருந்தால் நானே கொடுத்திருப்பேன் அல்லவா? என்னைக் கடந்து தம்பியை அரியணையில் அமர்த்து வதற்குத் துடித்தாயே? பார்! இன்னும் நான்தான் புகழோடு இருக்கிறேன்!" என்று எக்காளமிட்டான்.

உடல் தூக்கிவாரிப் போட எழுந்து அமர்ந்தாள் குந்தவை. அதன் பிறகு அவளுக்கு உறக்கமே வரவில்லை. நீண்ட நேரம் யோசித்தபடி அமர்ந்தவளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்து போனது. அருண் மொழி தன்னைத் தேடிவரும் வரையில் கூட அவளுக்குக் காத்திருக்கப் பொறுமையில்லை. தெட்டக்கனியை உடனே அனுப்பி, அருண்மொழியை தன்னை உடனே வந்து சந்திக்கும்படி கட்டளையிட்டாள்.

"அக்கையாரே அழைத்தீர்களா?" - அருண்மொழி பணிவுடன் வந்து நின்றான்.

"எனக்கு ஒரு ஆசை! அதை நிறைவேற்றுவாயா?" - குந்தவை கேட்டாள். அந்தக் கேள்விக்கு அவசியமே இல்லை என்பது இருவருக்குமே தெரியும். அவளது ஆசைகள்தான் அவனுக்கு இடப்படும் கட்டளைகள். அக்கையாரின் ஆசைகளை நிறைவேற்றுவதே அவனது குறிக்கோள்கள். குந்தவை எள் என்று கூறி முடிப்பதற்குள் அருண்மொழி எண்ணெயாகத் தன்னையே வார்ப்பான் என்பது அவளுக்குத் தெரியாதா என்ன? இவ்வேளையில் ஆதித்த கரிகாலனாக இருந்தால், இவள் என்ன என்று கேட்பதற்குள் 'வள்' என்று வேட்டை நாயாகக் குரைத்திருப்பான்.

எனவேதான், இவள் அரும்பாடுபட்டு, கவனத்துடன், எச்சரிக்கையுடன் திட்டமிட்டு, தனக்கென்று ஒரு மன்னனாக, தனது அபிலாஷைகளை நிறைவேற்றும் ஒரு ஆட்சியாளனாக, எப்போதும் இவளது பெருவிரல் கீழ் வாசம் செய்யும் வேந்தனாக அருண்மொழியைத் தயார் செய்திருந்தாள்.

"அருண்மொழி! காஞ்சி இப்போது சோழத்தின் ஒரு பகுதி. பல்லவம் என்கிற சாம்ராஜ்ஜியம் அழிந்து விட்டாலும், காஞ்சி மக்கள் இன்னமும் தங்களைப் பல்லவர்கள் என்று கூறி வருவது துரதிர்ஷ்டவசமானது. காஞ்சி என்கிற பெயர் இருக்கும் வரையில், காஞ்சி வாசிகள் தங்களைப் பல்லவர்கள் என்றுதானே அடையாளப்படுத்திக் கொள்வார்கள். எனக்கு ஒரு யோசனை! காஞ்சி என்கிற பெயரை மாற்றிவிட்டால், மக்களும் தங்களைப் பல்லவர்கள் என்று கருத மாட்டார்கள் அல்லவா? எனவே காஞ்சியின் பெயரை நீ மாற்றியாக வேண்டும்!" - குந்தவை கூறினாள்.

"நல்ல யோசனை, அக்கையாரே! தாங்களே ஒரு நல்ல பெயரை அறிவியுங்கள்!" - அருண்மொழி அவளை

பணிவுடன் பார்த்தான். அவனைப் பொறுத்தவரை, அக்கையாரின் சொல்லே, ஆண்டவனின் சொல் ஆகும்.

குந்தவை சாளரத்தின் வழியாகத் தளிக்குளத்தார் ஆலயத்தின் கோபுரத்தை வெறித்தாள்.

நகரேஷு காஞ்சி என்று போற்றப்படும் தங்கள் புராதன நகரத்தை வென்று கைப்பற்றிச் சோழர்கள் வசப்படுத்தி உள்ளனர் என்பதை எப்போதும் காஞ்சிவாசிகள் உணரும் வண்ணம் ஒரு பெயரைத் தேர்ந்தெடுக்க நினைத்தாள், குந்தவை. உடனே அவளுக்கு ஒருபெயர் மனதில் தோன்றியது.

"ஜெயம்கொண்ட சோழபுரம்! இதுதான் காஞ்சியின் புதுப் பெயர். இந்தப் பெயரை அறிவித்துவிடு. இந்தப் புதிய பெயரை வலியுறுத்தும் விதமாகக் காஞ்சியில் ஒரு சிவாலயத்தை எழுப்பு!" - குந்தவை கட்டளையிட்டாள்.

இனி வரும் நாட்களில் இம்மாதிரி பல கட்டளைகளை அன்றாடம் இடப்போகின்றாள், குந்தவை. பழு வேட்டரையரின் பெயரில் உள்ள கோபத்தைத் தீர்க்க, தளிக்குளத்தார் ஆலயத்தை இடித்துவிட்டு, இராஜ ராஜனின் பெயரில் அங்கே பிரம்மாண்ட ராஜ ராஜேஸ்வரத்தை எழுப்பப் போகிறாள். ஸ்ரீவிஜயத்தின் மீது படையெடுத்துச் சென்று அந்த நாட்டைப் பழிவாங்கப் போகிறாள்.

அருண்மொழி குந்தவையின் விருப்பத்தை உடனே பூர்த்தி செய்தான்.

"இனி காஞ்சியின் பெயர் ஜெயம்கொண்ட சோழபுரமாக மாற்றப்படுகிறது. காஞ்சி மக்கள் தங்கள் நகரத்தை அந்தப் பெயரில்தான் அழைக்க வேண்டும். ஜெயம்கொண்ட சோழபுரம் என்கிற பெயர் மாற்றத்தைக் குறிக்க, காஞ்சியில் ஜெயம்கொண்ட கச்சபேஸ்வரம் என்கிற சிவாலயம் எழுப்பப்படும்" என்று அறிவித்தான், இராஜராஜன்.

காஞ்சியின் மக்கள் இந்த அறிவிப்பினைக் கேட்டு கொந்தளித்தார்கள். பிரம்மனால் அஸ்வமேதயாகம் செய்யப்பட்டு, அத்திவரதன் தோன்றியதால் அத்தியூர் என்று பெயர்பெற்று, இளந்திரையனும், கரிகால் பெருவளத்தானும் இணைந்து, முக்கூடல், மாலிருஞ் சோலை, அத்தியூர், தருமநகரம் மற்றும் ஒத்தாடை என்கிற ஐந்து பகுதிகளை இணைத்து உருவாக்கிய காஞ்சி நகரத்தை ஒரே இரவில் 'ஜெயம்கொண்ட சோழபுரம்' என்று மாற்றிவிட்டார்களே. சோழன் உருவாவதற்கு முன்பாகவே இருந்த நகரத்தை சோழபுரம் என்று பெயரிடுவதா? ஆங்காங்கே மக்கள், கூட்டம் கூட்டமாக நின்று தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தனர்.

கச்சபேஸ்வரர் ஆலயத்திற்குத் திருப்பணிகளைத் துவக்குவதற்காக இராஜராஜன் வரும் பாதையில் வழிமறித்து நின்று தங்களது அதிருப்தியைத் தெரிவித்தனர்.

ஜெயம்கொண்ட சோழபுரம் என்கிற பெயரை மாற்றி மீண்டும் பழையபடி காஞ்சி என்றே வைக்க வேண்டும் என்று மன்றாடினர். இராஜராஜன் மறுத்துவிட்டான்.

"நீர் அது வார்க்கப்படும் கலயத்தின் உருவத்தைப் பெறுவது போன்று, குடிமக்கள் அதனை ஆளுமை செய்யும் ராஜ்யத்தின் தன்மையைப் பெற வேணும். இன்னமும் நீங்கள் பல்லவர்கள் என்கிற எண்ணத்தை மறந்து, சோழ நீரோட்டத்தில் கலக்க வேண்டும் என்பதற்காக ஜெயம்கொண்ட சோழபுரம் என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறோம். நாமெல்லாம் சோழர்கள் என்கிற மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்"- இராஜராஜன் கூற, திகைத்துப் போய் நின்றனர், காஞ்சி வாசிகள்.

"மாவீரர் ஆதித்த கரிகால சோழனார் புகழ் ஓங்குக!"- என்றபடி கூட்டத்தினர் கலைந்து செல்ல, இராஜ ராஜனின் முகம் இறுக்கமாகக் காட்சியளித்தது.

கச்சபேஸ்வர ஆலயத் திருப்பணிகளோடு காஞ்சி காமாட்சி ஆலயத்தின் திருப்பணிகளையும் செய்தான். என்ன திருப்பணிகளைச் செய்தும், காஞ்சி மக்களிடையே தாங்கள் பல்லவர்கள் என்கிற எண்ணம் தொடர்ந்து நிலவிக் கொண்டுதான் இருந்தது.

அப்போதுதான் குந்தவைக்கு அந்த விபரீத எண்ணம் தோன்றியது.

அப்பர் பாடியிருந்த தஞ்சை தளிக்குளத்தானின் சந்நிதியை இடித்துத்தள்ளிவிட்டு அங்கே ராஜ ராஜேஸ்வரம் என்கிற பிரம்மாண்ட ஆலயத்தை எழுப்ப வேண்டும் என்கிற தனது கோரிக்கையை விடுக்க, இராஜராஜனும் அதனை ஏற்றுக் கொண்டான். தனது குருவான கருவூர் தேவரை உடனேயே வரச் சொன்னான்.

"குருவே! தளிக்குளத்தானின் ஆலயத்தை இடித்து விட்டு, அங்கே ஒரு பிரகதீஸ்வரம் என்கிற பிரம்மாண்ட ஆலயத்தை எழுப்ப நிச்சயித்துள்ளேன். நீர்தான் அதனை பொறுப்பேற்று நடத்த வேண்டும்!" - இராஜராஜன் கூற உறைந்து போனார், கருவூர் தேவர்.

"என்ன விபரீத யோசனை, அரசே? உமக்கு யார் இந்த யோசனை கூறினார்களோ, அவர்கள் சோழத்திற்கு பெரும் கேடு விளைவிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் போலும். அப்பர் பாடிய தளிக்குளத்தானின் ஆலயத்தை நீக்கிவிட்டு, புதிய ஆலயம் ஒன்றை எழுப்பலாம் என்கிற உமது சிந்தனை தவறானது. காலம்காலமாக தளிக்குளத்தான் இங்கே கோயில் கொண்டிருக்கிறான். பாடல் பெற்ற அவனது திருத்தலத்தை நீக்கிவிட்டு, புதிய ஆலயத்தை நாம் எழுப்புவது மிகவும் தவறு!"- கருவூர் தேவர் கூற, அவருக்கு இராஜராஜன் பதில் கூறுவதற்கு முன்பாகவே, அங்கே தோன்றிவிட்ட குந்தவை, கருவூர் தேவரை உறுத்துப் பார்த்தபடி வந்தாள்.

"நாம் என்ன ஆலயத்தை நீக்கிவிட்டு, அங்கே வசந்த மாளிகையையா எழுப்பச் சொன்னோம்? பழைய

ஆலயத்தை நீக்கிவிட்டு புதிய ஆலயம் ஒன்றை எழுப்பத்தானே சொல்கிறோம். இறைவனை இன்னும் பிரம்மாண்ட, வசதிமிக்க ஆலயத்தில் வைக்க எண்ணு கிறோம். தளிக்குளத்தானின் கருவறை சிறியதாக உள்ளது. மன்னரும் பரிவாரங்களும் தொழுவதற்கு சற்று விசால மான கருவறையை எழுப்ப நினைக்கிறார். கருவறையை அகலமாக்குவதை கருவூராருக்கு ஏன் பிடிக்கவில்லை?" - குந்தவை கேட்டாள்.

"இளவரசி! மன்னர்களைக் காட்டிலும் அதிக அதிகாரங் களை உடையது ஆலய ஆகமங்கள். மன்னன் ஆளுவ தற்கு காலம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆகமங்கள் நித்யமானவை. அவற்றுடன் விளையாடவே கூடாது. தயைகூர்ந்து, இந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்." - கருவூர் தேவர் இறைஞ்சினார்.

"இல்லை.. பிரகதீஸ்வரம் எழும்பும். அதனை பொறுப்பேற்று நடத்திடப் போகின்றவர் நீங்கள்தான். இது எனது கட்டளை..!"- இராஜராஜன் கட்டளையிட்டு விட்டுத் திரும்பி நடக்க, அவரை சற்று ஏளனமாகப் பார்த்துவிட்டு, இராஜராஜனை பின்தொடர்ந்தாள், குந்தவை.

இந்த அனர்த்தங்கள் எங்கே கொண்டு சென்று விடப்போகின்றனவோ..?

"தளிக்குளத்தான் ஆலயத்தை இடிக்கும் பணி தொடங்கும்.." என கருவூர் தேவர் அறிவிக்க, ஆலய சிவாச்சாரியார்கள் அதிர்ந்தனர்.

"கருவூர் தேவரே! அனைத்தும் அறிந்த தாங்களே இப்படி அறிவிக்கலாமா? தளிக்குளத்தானின் ஆலயத்தை நீக்கிவிட்டு மன்னர் பெருமையைப் பாடும் ஒரு ஆலயத்தை எழுப்புவது ஆகமத்திற்கு எதிரானது அல்லவா? தாங்கள் எப்படி இதனை அனுமதித்தீர்..?"- சிவாச்சாரியார்கள் கொதித்தெழுந்தனர்.

"இது மன்னரின் கட்டளை!" என்று மட்டுமே முணு முணுக்க முடிந்தது கருவூர் தேவரால்.

"நாங்கள் தளிக்குளத்தானின் ஆலயம் இடிக்கப் படுவதற்கு அனுமதியோம்!"-சிவாச்சாரியார்கள் போராடியபடி ஆலயத்தின் முன்பாக அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

"அவர்களை அடித்து விரட்டுங்கள்!" - குந்தவை உத்தரவிட, குதிரை வீரர்கள் கைகளில் சவுக்கு ஏந்தி வந்து, அமர்ந்திருந்த சிவாச்சாரியார்களை சாட்டையால் அடிக்கத்துவங்கினர். இந்தக் காட்சியைக் கண்ட கருவூர் தேவரால் தனது கண்களை மூடிக்கொள்ளத்தான் முடிந்தது.

அப்போதுதான் அந்த விபரீதம் எழுந்தது.

பிரம்மதாச சிவாச்சாரியார் என்பவர், விடுவிடு வென்று தளிக்குளத்தான் ஆலய கோபுரத்தின் மீது ஏறியவர், தனது தலையில் எண்ணெயை ஊற்றி தனது தேகத்திற்குத் தீ மூட்டிக்கொண்டார்.

கோபுரத்தின் உச்சியில் இருந்து கீழே பார்த்து அலறினார்.

"தளிக்குளத்தார் ஆலயத்தை இடித்துவிட்டு, புதிதாக எழுப்பப்படும் பிரகதீஸ்வரத்தில் காலடி எடுத்து வைக்கும் மன்னர்கள் மாண்டு போவார்கள்" என்று கர்ஜனை செய்தபடி பிரம்மதாச சிவாச்சாரியார் கோபுரத்தில் இருந்து கீழே பாய்ந்தார்.

அதைக்கண்டு மற்ற சிவாச்சாரியார்கள் அதிர்ந்து போய் அலறினார்கள். அவர்களது இறைஞ்சல், அச்சுறுத் தல், போராட்டம் எதுவுமே செல்லுபடியாக வில்லை. ஒரு குறிப்பிட்ட நாளில் தளிக்குளத்தானின் ஆலயத்தை இடிக்கும் பணிகள் துவங்கின.

"புதிய ஆலயத்தில் நாங்கள் கைங்கர்யம் செய்ய மாட்டோம்! பிரம்மதாச தீட்சிதரின் சாபம் பலிக்

கட்டும்!” என்றபடி குடந்தை திருவீழிமிழலைக்கு தங்கள் குடும்பத்துடன் குடிபெயர்ந்தனர், தளிக்குளத் தானின் ஆலய சிவாச்சாரியார்கள்.

பிரகதீஸ்வரமும் மிக பிரம்மாண்டமாக எழுந்தது. ஆலயப் பணிகள் முடிவடைந்து, கும்பாபிஷேகத்திற்கு நாளும் குறிக்கப்பட்டுவிட்டது.

“பிரகதீஸ்வர ஆலயத்து நிழல் நிலத்தில் விழக்கூடாது. அந்த நிழலை மிதிப்பவர்கள், உனது பெருமைகளை மிதிப்பதற்கு சமானம்!” என்று கூறி, கோபுர நிழல் நிலத்தில் விழாதவண்ணம் ஆலயத்தை எழுப்பக் கூறியிருந் தாள் குந்தவை. கருவூர் தேவரும் அவளது கோரிக்கையை ஏற்று மிகவும் எச்சரிக்கையுடன் ஆலயத்தை எழுப்ப ஏற் பாடுகளைச் செய்திருந்தார்.

மறுநாள் காலை, கும்பாபிஷேகத்திற்காக பந்தற்கால் நடும் நிகழ்வுக்கு, மன்னரும், குந்தவையும், ஏனைய குடும் பத்தாரும் வருவதாக இருந்தது. ஏற்பாடுகளை ஒருதரம் மேற்பார்வையிட நினைத்த கருவூரார், தனது கூடாரத் தில் இருந்து வெளியே வந்தார்.

நள்ளிரவு-

ஸ்தபதிகளும், பணியாளர்களும், தங்களது கூடாரங் களில் சரித்திரப் புகழ்பெற்ற ஒரு ஆலயத்தை எழுப்பி யிருக்கிறோம் என்கிற மனநிறைவுடன் ஆழ்ந்த உறக் கத்தில் இருந்தனர்.

கருவூர் தேவர் ஆலயத்தில் நுழைந்து மூல சன்னிதியை நோக்கி நடந்தார். பிரம்மாண்ட நந்தி தொலைவில் இருந்தே புலப்பட்டது. ஆலயம் இருளில் மூழ்கி இருந் தாலும், கருவறைக்கும் நந்திக்கும் இடையே ஒரு தீபக்கப்பரை ஒளிர்ந்து கொண்டிருந்தது.

கருவறையை நோக்கி நடந்து கொண்டிருந்தார் கருவூர் தேவர். சில்லென்று வீசிய காற்று அந்த நள்ளிரவு வேளையில், சுகானுபவத்தைத் தரவில்லை. அதன்

குளிர்ச்சி இவரது பிடரியில் ஒருவிதக் கூச்சத்தை ஏற்படுத்த, திடீரென்று அந்த உணர்வு அவரை ஆட்கொண்டது.

யாரோ கலகலவென்று சிரித்தது போன்று அந்த ஒலி அவருக்குக் கேட்டது. கருவூர் தேவர் திகைப்புடன் சுற்றிலும் நோக்கினார். இந்த முறை சிரிப்பொலி இன்னும் நீண்ட நேரம் கேட்க, அப்படியே உறைந்து போய் நின்றார். நந்தியின் மீது யாரோ அமர்ந்திருப்பது போன்ற தொரு உணர்வு. தயக்கத்துடன் நந்தியை நோக்கி நடக்க, நந்தியிலிருந்து இறங்கி தண்டைகள் ஒலிக்க யாரோ வேகமாக ஆலயத்தின் பின்புறமாக ஓடுவதைக் கண்டார். கரிய உருவம் மட்டுமே புலப்பட்டது. கையில் ஒரு ஈட்டியை ஏந்தியிருந்தது அந்த உருவம்.

கருவூர் தேவர் திகைத்தார்.

"யாரங்கே?" - குரல் கொடுத்தார் கருவூர் தேவர்.

நடுநிசியின் அமைதியில் அவரது குரலே ஆலயக் கற்சுவரில் மோதி அமானுஷ்யமாக ஒலித்தது.

"யாரங்கே?" - மீண்டும் குரல் கொடுத்தார்.

பதிலில்லை. மெதுவாக ஆலயத்தின் பின்பாக நடந்தார். வடுக பைரவரின் துதியை மனதில் தியானித்தபடி, சுற்றும்முற்றும் பார்த்துக்கொண்டே ஆலயத்தின் பின்புறத்தை அடைந்தார், கருவூர் தேவர்.

"யாரங்கே?" - மீண்டும் ஒருமுறை குரலைக் கொடுத்தார்.

அப்போது, அண்டமே அதிரும்படியாக இடி-இடியென நகைப்புக் குரல் ஒன்று எழுந்தது. ஆலயம் முழுவதும் அந்த நகைப்பொலி எதிரொலிக்க, கருவூர் தேவர் திடுக்கிட்டுப் போய் சுற்றிப் பார்த்தார்.

"அண்ணாந்து பார், கருவூரா! மகுடம் அணிந்த மன்னர்களால்தான் மேலே காண முடியாது. மேலே

பார்த்தால், மகுடம் நழுவிவிடும். அனைத்தும் அறிந்த சித்தன் நீ. உன்னால் உயரே காண முடியாதா என்ன? உயரே நோக்கு, கருவூரா!" - கடுமையான குரல் ஒன்று கேட்க, கருவூர் தேவர் அண்ணாந்து நோக்கினார்.

கரிய உருவம் ஒன்று கையில் ஈட்டியுடன் கம்பீரமாகக் கோபுரத்தின் உச்சியில் அமர்ந்திருந்தது. அந்த கரிய உருவத்தின் பின்பாகக் கோபுரத்தின் ஸ்வர்ண கலசம் மின்னுவதை இவரால் கீழே இருந்து காண முடிந்தது.

அந்த உருவம் அமர்ந்திருந்த விதமே சித்தரான அவருக்கே அச்சத்தைத் தோற்றுவித்தது.

"தாங்கள் யார்?" - சற்றே அச்சத்தைவிட்டு, குரலை எழுப்பினார், கருவூர் தேவர்.

"பரவாயில்லை! பணிவுடன் கேட்கிறாய். உனது அரசனாக இருந்திருந்தால், யார் நீ என்று என்னை ஒருமையில் கேட்டிருப்பான்! கருவூராரே! நான்தான் சோழ கிருமி. இளங்கோபிச்சியின் சாபத்தால் உயிர் பெற்றேன். அரிஞ்சயன், குந்தவை என்று உங்கள் சோழ குடும்பத்தினரின் நடவடிக்கைகளால், ஆதித்த கரிகாலனின் அநியாயக் கொலையால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பலம் பெற்றேன். தளிக்குளத்தானின் ஆலயம் இடிக்கப்பட்டு, இதோ உனது மன்னன் புகழ் பாடும் பிரகதீஸ்வரத்தின் கோபுர உச்சியில் எனக்கு ஆசனம் இட்டு அமர்த்தி விட்டது, உங்கள் சோழத்தின் பேராசை!"-கடுமையான குரலில் கூறியது அந்த உருவம்.

"சோழ கிருமியா?" - உறைந்து போனார், கருவூர் தேவர்.

"சோழ கிருமி! சோழ பிரும்மஹத்தி! சோழரின் வினை! - எப்படி என்னை அழைத்தாலும், நான் இதோ விஸ்வரூபம் எடுத்து அமர்ந்திருக்கிறேன் என்பதுதான் உண்மை."

"எதற்காக வந்திருக்கிறாய்?" - கருவூராரின் குரல் அவருக்கே கேட்கவில்லை.

"அத்தியானின் சாபத்தால் பல்லவம் பரிதவித்தது.

"குளத்தானின் கோபத்தால் சோழகுடி கெடப் போகிறது.

"சோழ குடும்பம் செய்த வினைகளை அறுவடை செய்யும் காலம் விரைவில் வரப்போகிறது. இதோ உயரத்தில் இருந்து எனது கண்களுக்கு நன்றாகத் தெரிகிறது. துறவி ஒருவனின் சாபத்தால் குரல்வளை புழுத்து ஒரு சோழன் சாகப்போகிறான். அவனது புழுத்துப் போன கழுத்தில் அமர்ந்து நான் சோழத்தின் முடிவுரையை எழுதப்போகிறேன்!" - வன்மத்துடன் கூறியது அந்த உருவம்.

திடுக்கிட்டுப் போனார், கருவூர் தேவர்.

"சோழ கிருமியே! இதற்கு விமோசனம் கிடையாதா?" - கருவூர் தேவர் கேட்டார்.

"ஏன்? பிரம்மதாச தீட்சிதனை போன்று என்னையும் இந்தக் கோபுரத்தின் உச்சியில் இருந்து குதிக்கச் சொல்கிறாயா? கிருமியான நான் சோழத்தின் முழுவதும் பரவி இருக்கிறேன். சோழம் வாழ வேண்டுமென்றால், நான் அடியோடு கரைய வேண்டும். நான் கரைவதற்கு உங்கள் அரசகுடும்பம் சதிகளைச் செய்யாமல் நற்பணிகளைச் செய்ய வேண்டும். முதலில், இங்கே இருந்து நீக்கப் பட்ட தளிக்குளத்தானுக்கு மீண்டும் ஆலயத்தை எழுப்பச் சொல். ஆதித்த கரிகாலனை சதி செய்து கொன்றதற்குப் பிராயச்சித்தமாக, அவனுக்கு நீதி கிடைக்கச் செய். ஆதித்த கரிகாலனின் இறுதி ஆசைகளை நிறைவேற்றச் சொல். நான் காற்று.. கரைந்து போவேன். இதைச் செய்ய மறுத்தால், நான் இன்னும் விஸ்வரூபம் எடுத்துச் சோழத்தை விழுங்குவேன். எனது கோரைப் பற்களில் சிக்கி, சோழ அரசகுடும்பம் சின்னா பின்னமாவதை நீ காண்

பாய்!" - இம்முறை சோழ கிருமி சிரித்த போது, அதன் கோரைப் பற்கள் புலப்படுவதைக் கண்டார், கருவூர் தேவர்.

மறுநாள் காலையில் மன்னரும், குந்தவையும் ஆலயத்தில் தனித்திருந்த போது, பெரிய கோயிலில் தனக்குச் சோழ கிருமியால் ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை விவரித்தார், கருவூரார்.

கலவரத்துடன், இராஜராஜன் குந்தவையைப் பார்த்தான். அவளோ, சோழ கிருமி அமர்ந்திருந்ததாகக் கூறப்பட்ட கோபுர உச்சியினை வெறித்து நோக்கினாள்.

"தம்பி இராஜராஜா! கோபுரத்தின் நிழல் நிலத்தில் விழாத வண்ணம்தானே கோபுரத்தை எழுப்பி யுள்ளோம். அப்படியிருக்க, அதன் உச்சியில் அமர்ந்திருக்கும், கிருமியின் நிழல் எப்படி நமது சோழ பூமியில் படியும். நமது கருவூர் தேவர் இந்த ஆலயம் எழுப்புவதற்காக மிகவும் கடுமையாக உழைத்திருக்கிறார். ஆலயம் நிறைவடைந்த மனநிறைவில் நேற்று ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்க வேண்டும். ஆழ்ந்த உறக்கத்தில்தானே கனவுகள் தோன்றும்!" என்ற குந்தவை அலட்சியமாகக் கருவறையை நோக்கி நடந்தாள்.

பெருவுடையார் கோயில் கும்பாபிஷேகம் விமரிசையாக நடந்தேறிய பெரிய கோயிலின் தலைமை சிற்பி குஞ்சர மல்லன் இராஜராஜ ராமப்பெருந்தச்சனுக்கு இராஜராஜன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துப் பொற்கிழி ஒன்றை அளித்ததோடு, சிற்பங்கள் செய்ய தனியொரு கிராமத்தையே அவனுக்குப் பரிசளித்தான்.

இராஜராஜனும், குந்தவையும் சோழ கிருமியை அலட்சியம் செய்தாலும், கருவூர் தேவருக்கு அவ்வப் போது தான் சந்தித்த கிருமியை எண்ணிக் கவலைப் படுவது வழக்கமாகிப் போனது. ஆலயப் பணிகள் முடிந்து கருவூர் தேவரும் தனது இடத்திற்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்.

கும்பாபிஷேகம் நிறைவடைந்து இரண்டு வருடங்களில் மரணப்படுக்கையில் விழுந்தான், இராஜராஜன்.

நினைவின்றிக் கிடந்த இராஜராஜனுக்குத் திடீரென ஒரு நாள் விழிப்பு வந்தது.

குந்தவைதான் அருகே அமர்ந்திருந்தாள்.

"அக்கையாரே! நான் எனது மகன் இராஜேந்திரனை உடனே காண வேண்டும்!" - சுவாசத்தை விட இயலாமல், இராஜராஜன் திணற, அவனை கவலையுடன் நோக்கினாள், குந்தவை.

"எதுவாக இருந்தாலும், என்னிடம் சொல் அருண்மொழி! நான் இராஜேந்திரனிடம் தெரிவிக்கிறேன்!" - குந்தவை கூற, தலையசைத்து மறுப்பு தெரிவித்தான், இராஜராஜன்.

"இல்லை அக்கையாரே! இது மகனுக்கும், தந்தைக்கும் இடையே நிகழப் போகும் இறுதி உரையாடல். அவனுடன் தான் நான் பேச வேண்டும்!" - பிடிவாதமாக இராஜ ராஜன் கூற, திகைத்துப் போனாள், குந்தவை. முதன் முறையாக இவளது சொற்களை மறுத்துப் பேசுகிறான், அருண்மொழி.

வேறு வழியின்றி, குந்தவை அறையின் வாயிலுக்குச் சென்று எட்டிப்பார்த்தாள். மாடத்தின் அருகே நின்றிருந்த தெட்டக்கனியை அருகே சைகை காட்டி அழைத்தாள்.

"இளவரசர் இராஜேந்திரனை உடனே அழைத்து வா! அரசர் காண வேண்டுமாம்!" - கட்டளையிட்டுவிட்டு, தனது சிரசை அறையின் உள்ளே இழுத்துக் கொண்டாள். இராஜேந்திரனை தேடிச்சென்று, அரசர் அழைப்பதாகத் தெட்டகக்கனி கூற, அவன் உடனே விரைந்து வந்தான்.

நெடிய உருவம் கொண்ட இராஜேந்திரன் தனது நீண்ட கால்களால் நடந்து சென்றாலும், அவன் தாவி ஓடுவது போன்றே தோன்றியது.

தந்தையின் அறைக்குள் நுழைந்தவன், தனது கைகளைப் பணிவாகக் கட்டிக்கொண்டு, "தந்தையே!" என்றான்.

"வாப்பா இராஜேந்திரா! தந்தையின் அருகில் அமர்ந்து அவனது கரத்தை பிடித்துக் கொள்!"-குந்தவை கட்டளை யிட்டபடி தனது இருக்கையில் சாய்ந்து அமர்ந்தாள்.

அத்தை சொன்னது போன்று செய்ய, அவனது ஸ்பரிசம் பட்டதும், தனது கண்களைத் திறந்தான், இராஜராஜன். அவனது விழிகள் மகனை வாஞ்சையுடன் நோக்கின.

"இராஜேந்திரா!" என்று கண்கள் பனிக்க அவனை நோக்கியவன், தனது ஓரக்கண்களால் குந்தவை அங்கே அமர்ந்திருப்பதைக் கண்டான்.

சட்டென்று அவனது கண்களில் ஒரு எச்சரிக்கை யுணர்ச்சி பிறந்தது.

"அக்கையாரே! எனது மகனுடன் நான் தனிமையில் உரையாட வேண்டும்!" என்றபடி அவளை உறுத்துப் பார்த் தான்.

குந்தவை திகைத்தாள். எத்தனையோ முறை, "நான் எனது தம்பியுடன் ஏகாந்தத்தில் உரையாட வேண்டும். நீங்கள் சற்றே வெளியே காத்திருங்கள்" என்று இராஜ ராஜனின் மனைவி, மக்களை விரட்டியிருக்கிறாள், குந்தவை. ஆனால் முதன்முறையாக அவளையே வெளியே நிற்கச் சொல்கிறான், அவளது ஆசைத்தம்பி அருண்மொழி.

தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்ற குந்தவை, வேண்டாவெறுப்பாக அறையின் வாயிற்கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.

"இராஜேந்திரா! கதவைத் தாளிட்டுவிட்டு வா! நாம் பேசப்போவது மிகவும் இரகசியமான தகவல்கள்."-

திக்கியபடி இராஜராஜன் கூற, இராஜேந்திரன் அறைக் கதவைத் தாளிட்டுவிட்டு வந்தான்.

"மகனே!" என்றபடி அவனது இரு கைகளையும் தனது கைகளுக்குள் அடக்கிக் கொண்டான், இராஜராஜன்.

"நான் சொல்லப் போவதை மிகவும் கவனமாகக் கேள். நான் கடந்த இருபத்தியேழு ஆண்டுகளாக மன்னனாக கோலோச்சிவிட்டேன். இனி நீ மன்னனாக ஆட்சி செய்வதற்கு வேளை பிறந்துவிட்டது. எனக்குச் சில கடைசி ஆசைகள் உள்ளன. அவற்றை நீதான் நிறைவேற்ற வேண்டும்!" இராஜராஜனின் கண்களில் நீர் ததும்பியது.

"சொல்லுங்கள் தந்தையே. செய்யக் காத்திருக்கிறேன்!" - இராஜேந்திரன் தந்தையை பரிவுடன் நோக்கினான்.

"நீ மன்னனாக அரியணையில் அமர்ந்ததும், தஞ்சையில் தங்காதே. உனது தலைநகரை மாற்றிக்கொள். தஞ்சையில் மட்டும் நீ இருக்க வேண்டாம்!" - இராஜ ராஜன் கூற, திடுக்கிட்டான், இராஜேந்திரன்.

"தந்தையே! இதென்ன விபரீத கோரிக்கை?"

"காரணமாகத்தான் சொல்கிறேன். பெரிய கோயிலின் கும்பாபிஷேகத்திற்கு முன்பாகக் கருவூர் தேவர், தான் கண்டதாகக் கூறிய சோழ கிருமியின் கொடிய உருவத்தை நான் எனது கண்களால் கண்டேன். சோழ தலைநகர் தஞ்சையைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கிறது அந்தக் கிருமி. சோழத்தை மீண்டும் உருவாக்கிய ஆதித்த சோழரின் மனைவி இளங்கோபிச்சி இட்ட சாபத்தின் மூலம் உருவெடுத்த அந்தக் கிருமி, ஆதித்த கரிகாலனின் கொலையால் விஸ்வரூபம் எடுத்துள்ளது. தளிக்குளத் தானின் ஆலயத்தை இடித்துப் பெரிய கோயில் கட்டியதால், இப்போது பன்மடங்கு கொடிய உருவத்தைப் பெற்றுள்ளது, அந்தச் சோழ கிருமி. வேண்டாம் இராஜேந்திரா! உன்னை அந்தக் கிருமி தாக்கக்கூடாது. நீ தஞ்சையிலேயே இருக்க வேண்டாம்.

உனது தலைநகரை பழையாறைக்கோ, காஞ்சிக்கோ மாற்றிக்கொள்!" - இராஜராஜன் கூற, இராஜேந்திரன் அமைதியாகத் தனது தந்தையைப் பார்த்தான். மரணத்தின் நிழல் இராஜராஜனின் முகத்தில் படர்ந்து கொண்டே வருவதை உணர்ந்தான், இராஜேந்திரன்.

"நமது சோழம் ஒரு பெரும் ஆபத்தை எதிர்நோக்கி இருக்கிறது, இராஜேந்திரா. அழிவை நோக்கி நகர்ந்து செல்லும் சோழத்தை நீதான் காப்பாற்ற வேண்டும், மகனே!" - இராஜராஜனின் குரலில் இருந்த அச்சமும், சோகமும், இராஜேந்திரனை உலுக்கியது.

"என்ன சொல்கிறீர்கள், தந்தையே. நமது சோழத்தை அழிக்க நினைப்பவர் யார்?" - திகைப்புடன் கேட்டான்.

"யாரும் இல்லை, இராஜேந்திரா! நாம் செய்த வினைகள் சோழ கிருமியாக வடிவெடுத்து நிற்கிறது. கும்பாபிஷேகத்திற்கு முன்பாக நமது கருவூர் தேவரின் கண்களுக்குப் புலப்பட்டது சோழ கிருமி. நாம் செய்த வினைகளின் மொத்த உருவம்தான், அந்தக் கிருமி. பரவி நிற்கும் அது, நாம் செய்யப்போகும் பிராயச்சித்தங்களால் தான் கரையும் என்றார், கருவூர் தேவர். உனது அத்தையார் அவர் கூறியதை ஏற்க மறுத்தார். இப்போது மரணப் படுக்கையில், அதனைக் குறித்து நான் அஞ்சுகிறேன். என் சார்பாக நீதான் அந்தச் சோழ கிருமியைக் கரைக்க வேண்டும். இதனை யாருக்கும் தெரியாமல் செய்ய வேண்டும்."-இராஜராஜன் நீட்டிய கையைப் பற்றிக் கொண்டான், இராஜேந்திரன்.

"செய்து முடிக்கிறேன் தந்தையே! நான் என்ன செய்ய வேண்டும்?" - இராஜேந்திரன் தந்தையின் முகத்தை உன்னிப்பாகக் கவனித்தான்.

"மன்னர்கள் சுயசிந்தனையைக் கொண்டிருக்க வேண்டும். பெண்ணொருத்தியின் முந்தானையினில் ஒரு மன்னன் சிக்குண்டால், அவன் என்னைப் போன்று பல

தவறுகளைப் புரிய நேரிடும். நான் அவ்வகையில், எனது அக்கையாரின் பேச்சுக்கு செவிமடுத்து சுயசிந்தனை இல்லாத மன்னனாகப் பல தவறுகளை இழைத்திருக்கிறேன். மரணப்படுக்கையில், அந்தத் தவறுகள் விஸ்வரூபம் எடுத்து எனது நெஞ்சை இப்போது சுட்டெரிக்கின்றன. அந்தத் தவறுகளுக்குப் பிராயச்சித்தங்களைச் செய்ய மனம் துடிக்கிறது. இனி நான் மீண்டு எழுந்து அவற்றைச் செய்வேன் என்று தோன்றவில்லை. எனவே, நான் செய்த தவறுகளை நீதான் நிவர்த்தி செய்ய வேண்டும்!" - சோகத்துடன் கூறினான், இராஜராஜன்.

"கட்டளை இடுங்கள் தந்தையே! உடனே செய்கிறேன்."

"ஆதித்த கரிகாலன் உயிருடன் இருந்திருந்தால், எனக்குப் பதிலாக அவன்தான் மன்னனாகத் திகழ்ந்திருப்பான். சோழத்தின் சாபம், மூத்த பிள்ளைகள் அரசாட்சிக்கு வருவதில்லை என்பது நிரூபணம் ஆகி வருகிறது. கன்னரதேவன், இராஜாதித்யன், ஆதித்த கரிகாலன் என்று மூன்று தலைமுறையாக மூத்த மகன்களுக்கு அரியணை கிடைக்கவில்லை. ஆதித்த கரிகாலன் இருந்திருந்தால், நானும், நீயும் மன்னர்களாகத் திகழ்ந்திருக்க முடியாது." - மீண்டும் சுவாசத்திற்குத் திணறினான், இராஜராஜன்.

"இரண்டு காரியங்களை நீ எனக்காகச் செய்ய வேண்டும். கங்கை நீரால் எனது பாவத்தைக் கழுவும் வண்ணம் நீ தளிக்குளத்தானின் லிங்கத்திற்குப் புதிய ஆலயம் ஒன்றை எழுப்பி, அந்த ஆலயத்தில் பணிபுரிந்த சிவாச்சாரியார்களை அங்கே பணியில் அமர்த்த வேண்டும். இது எனது முதல் கோரிக்கை."

"செய்து முடிக்கிறேன், தந்தையே! அடுத்த கட்டளை.." - இராஜேந்திரன் கூற, கலங்கிய கண்களுடன் மகனை நோக்கினான், இராஜராஜன்.

"உனது பெரியப்பன் ஆதித்த கரிகாலன், நான் அரியணையில் அமர வேண்டும் என்பதற்காக அப்புறப்

படுத்தப்பட்டான். தெரிந்தோ, தெரியாமலோ, அவனது மரணத்திற்கு நானும் காரணமாகிவிட்டேன். எனது நெஞ்சத்தை இது உறுத்துகிறது. அவனது ஆன்மாவுக்கு அமைதி கிடைக்க வேண்டும். அவனது கடைசி ஆசை அரியணையில் அமர்ந்ததும், தனது வசம் உள்ள அத்திமலைத்தேவனின் சிலையைக் கொண்டு அதற்கு உக்ரோதயம் என்கிற ஆபரணத்தை அணிவித்து, அஸ்வமேத யாகம் செய்ய வேண்டும் என்பதுதான். அதற்காகவே அரியணையில் அமர வேண்டும் என்று காத்திருந்தான். அதற்குள் அவனது கொலை நிகழ்ந்து விட்டது. திருக்கோவிலூர் மலையமானின் இரண்டாவது மகள், எனது சிற்றன்னை அந்திமாதேவியிடம் இது குறித்து மலையமான் கூறிவிட்டுத்தான் இறந்தார். அந்திமாதேவி அக்கையாரிடமும், என்னிடமும் இந்தத் தகவலைக் கூறினார். ஆனால் அக்கையார் இதனை அலட்சியம் செய்துவிட்டார். இப்போது மரணப் படுக்கையில் உன்னிடம் இறைஞ்சுகிறேன். எனக்காக, அந்தச் சிலையைக் கண்டுபிடித்து அஸ்வமேத யாகத்தைச் செய்து நமது சோழத்தை காப்பாற்று. அந்த யாகம் செய்தால், சோழ கிருமி நீங்கிவிடும் என்று ஜோதிடர்கள் கூறுகிறார்கள். இதனை யாரிடமும் தெரிவிக்காமல், நீ செய்து முடிக்க வேண்டும்" என்றான் இராஜராஜன்.

"அவசியம் செய்து முடிக்கிறேன், தந்தையே. தளிக்குளத்தானுக்கு ஒரு பிரம்மாண்ட ஆலயத்தை நிறுவுகிறேன். பெரிய தந்தை ஆதித்த கரிகாலனாரின் இறுதி ஆசையை நிறைவேற்றுகிறேன்!" - தந்தை இராஜ ராஜனின் கையை அழுத்தி வாக்களித்தான், இராஜேந்திரன்.

இரண்டே தினங்களில், மகனால் தனக்கு விமோசனம் பிறக்கும் என்கிற நம்பிக்கையுடன் தனது கண்களை மூடினான், இராஜராஜன்.

கி.பி.1012-

இராஜராஜன் இறக்க, அவனது மகன் இராஜேந்திர சோழன் அரியணை ஏறினான். இராஜேந்திரனும் குந்தவை வளர்த்தவன் என்றாலும், அவளது பெரு விரலின் அடியில் அவன் தனது தந்தையைப் போன்று அடைக்கலம் புகவில்லை. ஆலோசனைகளைக் கேட்பானே தவிர, தானே முடிவுகளை எடுப்பதில் சமர்த்தனாகத் திகழ்ந்தான். தனது தந்தையின் இரு கோரிக்கைகளை அவன் மறக்கவில்லை. அரியணை ஏறிய ஆறாம் ஆண்டு அதனை நிறைவேற்ற எண்ணி, கங்கைக் கரைக்குப் போக நிச்சயித்தான்.

கி.பி.1018-

கங்கைக்கரையைக் கடந்து வங்க நாட்டைக் கைப்பற்றும் எண்ணத்துடன் தஞ்சையைவிட்டுப் புறப் பட்டான், இராஜேந்திரன். குந்தவை உடல்நலம் குன்றி மரணப்படுக்கையில் கிடந்தாள். அவளிடம் ஆசி வாங்கு வதற்காக இராஜேந்திரன் அவளைக் காண வந்திருந்தான்.

"சிறிது காலம் காஞ்சியில் தங்கிவிட்டு, அங்கிருக்கும் ஆலயங்களைத் தரிசித்துவிட்டு, பிறகே கங்கைக்கரைக்குப் படையெடுத்துப் போகிறேன்!" - குந்தவையிடம் கூறியதும், அவளது முகத்தில் மகிழ்ச்சி. இராஜேந்திரனின் பின்பாக நின்றிருந்த வீரமாதேவியைப் பார்த்தாள். இராஜராஜ சோழனின் அமைச்சரான பிரம்மதேவ சேனாதிபதி மது ராந்தகப் பரகேசரி மூவேந்தர் வேளானின் தங்கை வீரமா தேவி. குந்தவையின் கண்கள் தன்னை நோக்குவதைக் கண்டதுமே, அவர் தன்னிடம் எதையோ பேச விரும்பு கிறார் என்பதை புரிந்து கொண்டாள்.

இராஜேந்திரன் புறப்பட்டுச் சென்றதும், கிழிந்த நாராக மஞ்சத்தில் கிடந்த குந்தவையின் கைகளைப் பற்றியபடி அவளது அருகில் அமர்ந்தாள், வீரமாதேவி.

"வீரமாதேவி! இராஜேந்திரன் காஞ்சிக்குச் செல்லப் போகிறான் என்று அறிகிறேன். நீயும் அவசியம்

அவனுடன் சென்று பொன்னாழி மாளிகையில் தங்கு. எனது அண்ணன் ஆதித்த கரிகாலனின் வசம் அத்திமலைத்தேவன் மற்றும் உக்ரோதயம் போன்ற பொக்கிஷங்கள் இருந்தன. அவற்றை அவன் எங்கோ பதுக்கி வைத்திருந்தான். அவை இருக்கும் இடத்தைப் பற்றிய தகவல்களை எனது பெற்றோரின் மூலமாகத் தனது ஆருயிர் காதலி கல்பலதாவுக்கு அனுப்பியிருக் கின்றான்.. அவள் அதைப் பொன்னாழியில்தான் பதுக்கி வைத்திருக்க வேண்டும். கல்பலதா இறந்துவிட்ட நிலையில், அந்த இரகசியங்கள் யாருக்கும் தெரியாமல் பொன்னாழியிலேயே இருக்கின்றன. நீ அவற்றைத் தேடி எடுத்து, நமது சோழத்திற்கு உரித்தாக்கிக்கொள். அதிமேதாவியான உன்னால் நிச்சயம் அவற்றைத் தேடிக்கண்டு பிடிக்க இயலும். உனது கணவன் கங்கைகரைக்குச் சென்றுவிட்டு, திரும்பி வரும் வரை உனக்கு அவகாசம் நிறைய உள்ளது. எனக்காக நீ இதனைச் செய்து முடிக்க வேண்டும்!" - குந்தவை மிகவும் சிரமத்துடன் பேசி முடிக்க, அவளது கையை அழுத்தி நம்பிக்கை தெரிவித்தாள், வீரமாதேவி.

"செய்து முடிக்கிறேன் பாட்டியாரே! பொன்னாழியில் அந்த இரகசியங்களைத் தேடி எடுக்கிறேன்!" வீரமாதேவி குந்தவைக்கு உத்தரவாதம் தந்தாள்.

இராஜேந்திர சோழன் வீரமாதேவியோடு காஞ்சிக்குச் சென்று பொன்னாழியில் தங்கினான். ஒத்தாடையான் ஆலயத்திற்குச் சென்ற அவனை, காஞ்சி மக்கள் சந்தித்து ஜெயம்கொண்ட சோழபுரத்தை மீண்டும் காஞ்சி என்று பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைக்க, இராஜேந்திரன் யோசனையுடன் வீரமாதேவியைப் பார்த்தான்.

"வீரமாதேவி! காஞ்சி மக்கள், ஜெயம்கொண்ட சோழபுரத்திற்கு காஞ்சி என்கிற பழைய பெயரையே மீண்டும் வைக்க வேண்டும் என்று வேண்டுகிறார்கள்.

ஜெயம் கொண்ட சோழபுரம் என்பது குந்தவை தேவியாரும் எனது தந்தையாரும் சேர்ந்து வைத்த பெயர். என்ன செய் வது? நீயே ஒரு நல்ல யோசனையைக் கூறு!" என்றான் இராஜேந்திரன்.

மதியூகியான வீரமாதேவி அவனை புன்சிரிப்புடன் பார்த்தாள்.

"பல்லவத்தின் விருப்பத்தையும் சோழத்தின் விருப்பத்தையும் ஒருங்கிணைத்தாலே போதும், மன்னா! நகரத்திற்கு ஒரு நல்ல பெயர் கிடைத்துவிடும். காஞ்சியுடன் சோழபுரத்தின் பிற்பகுதியான 'புரத்'தைச் சேர்த்துவிடுங்கள். இந்த நகரை காஞ்சிபுரம் என்று அழைக்கலாம்!" - வீரமாதேவி கூறியதும், இராஜேந்திரன் அவளை பரவசத்துடன் பார்த்தான்.

ஒரு ஆண்மகனுக்கு மனைவி அமைவது பெரிதல்ல. அந்த மனைவியே மதியூக மந்திரியாக இருந்துவிட்டால்? வீரமாதேவி புகழ் பெற்ற மந்திரியின் சகோதரி அல்லவா?

"இனி இந்த நகரம் காஞ்சிபுரம் என்று அழைக்கப் படட்டும்!" - இராஜேந்திரன் கூறியதும், கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

"மன்னர் இராஜேந்திர சோழன் வாழ்க!" - காஞ்சி வாசிகள் கோஷமிட்டனர்.

ஜெயம்கொண்ட சோழபுரம் மீண்டும் காஞ்சியாகப் பெயர் பெற்றது. 'இராஜேந்திர சோழன் காஞ்சி மக்களின் கோரிக்கையை ஏற்று மீண்டும் அந்நகருக்கு காஞ்சி என்று பெயர் சூட்டினான்!' என்பதுதான் குந்தவையின் செவியில் கடைசியாக விழுந்த தகவல்.

குந்தவை பிராட்டி காலமாகிவிட்டார் என்கிற செய்தி வர, இராஜேந்திரனும், வீரமாதேவியும் உடனே தஞ்சைக்குப் புறப்பட்டனர். அவரது இறுதிச் சடங்கு

களில் கலந்து கொண்டுவிட்டு, இருவரும் மீண்டும் காஞ்சிக்குத் திரும்பினர்.

கங்கைக்கரைக்குப் படையெடுத்துச் செல்ல, மீண்டும் நாள் குறிக்கப்பட்டது. வங்க நாட்டை நோக்கிப் புறப் படுவதற்கு முன்தினம் மாலை, அத்திமலையானின் ஆலய த்திற்குச் சென்ற இராஜேந்திரனும், வீரமாதேவியும் பெருந் தேவியின் சன்னிதியில் முதலில் தொழுதார்கள்.

அன்று பெருந்தேவிக்கு உக்ரோதயத்தைச் சாற்றி இருந்தார்கள், பட்டர்கள்.

இராஜேந்திரன் கண்களை மூடி, தனக்குப் போரில் வெற்றியைத் தரும்படி பிரார்த்தித்துக் கொண்டிருக்க, வீரமாதேவி பெருந்தேவியையே பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'தேவி! குந்தவை பிராட்டி எனக்குத் தெரிவித்த பொக்கிஷங்களைப் பற்றிய தகவல்கள் கிடைக்கும்படி நீதான் அருள் புரிய வேண்டும். ஆதித்த கரிகாலர், அத்தி மலைத்தேவன் சிலையையும், உக்ரோதயத்தையும் வைத் திருக்கும் இடத்தை நான் அறிய வேண்டும்' என்று வேண்டிக் கொண்டிருக்க, பெருந்தேவி நகைப்பை அடக்கிக் கொண்டவளாக அருள் பாலித்துக் கொண் டிருந்தாள்.

ஆதித்த கரிகாலன் கல்பலதாவிற்கு அளித்திருந்த அந்த வெள்ளிப்பெட்டகம் சன்னிதியின் ஒரு மூலையில், அரச தம்பதிகளின் கண்ணெதிரேதான் வைக்கப்பட்டிருந்தது. தனது பெரியப்பன் ஆதித்த கரிகாலன் கல்பலதாவுக்கு அளித்திருந்த பெட்டகம் அதுதான் என்பதை இரா ஜேந்திரன் அறிந்திருக்கவில்லை. இறக்கும் தருவாயில் குந் தவை தன்னிடம் தெரிவித்த பொக்கிஷங்களைப் பற்றிய முக்கியக் குறிப்பு அந்த வெள்ளிப்பெட்டகத்தில் இருப் பதை வீரமாதேவியும் அறியவில்லை. தான் தேடும்

உக்ரோதயத்தைத்தான் பெருந்தேவி தனது மார்பில் அணிந்து கொண்டிருக்கிறாள் என்பதையும் வீரமாதேவி அறியவில்லை.

மறுநாள் விடியலில், இராஜேந்திர சோழன் படைகளுடன் புறப்பட்டுச் சென்றான். அவனை வழி அனுப்பினாள் வீரமாதேவி.

கணவன் புறப்பட்டுச் சென்ற பிறகு, பொன்னாழியில் குந்தவை குறிப்பிட்டிருந்த பொக்கிஷங்களைப் பற்றிய குறிப்புகளைத் தேடும் முயற்சியில் இறங்கினாள், வீரமாதேவி..

# ஈ. இராமானுஜ காஞ்சி

கங்கைக்கரையைக் கடந்து வங்க நாட்டைக் கைப்பற்றிய வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந் தான், இராஜேந்திரன். கங்கையைக் கடந்து தான் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதற்காக கங்கைகொண்ட சோழபுரம் என்கிற ஒரு நகரத்தையே, ஜெயம்கொண்டான் அருகே உருவாக்கிக் கொண்டிருந்தான். கங்கைகொண்ட சோழபுரத்தின் நடுவே, தனது தந்தை தஞ்சையில் எழுப்பியிருந்த பிரகதீஸ்வரர் ஆலயத்தைப் போன்றே ஒரு ஆலயத்தை எழுப்பத் தீர்மானித்திருந்தான். ஆலயத்தின் முதல் கல்லை கடல்மல்லையில் இருந்து ஒத்தாடை கோயிலுக்கு, தனது பட்டத்து யானையின் மீது வைத்து எடுத்துச் சென்று கொண்டிருந்தான். ஒத்தாடை ஆலயத்தில் அதற்கு பூசனைகள் செய்யப்பட்டு, கங்கை கொண்ட சோழபுரத்திற்கு எடுத்துச் செல்லத் திட்டமிட் டிருந்தான் இராஜேந்திர சோழன்.

மக்கள் வெற்றி கோஷங்களை எழுப்ப, யானையின் மீது அமர்ந்து, முதல் கல்லை இரு கைகளாலும் பற்றிய படி காஞ்சியினுள் பிரவேசித்துக் கொண்டிருந்தான், இராஜேந்திரன்.

அதேசமயம்-

பதினாறு பிராயங்களே நிரம்பிய வைணவ வாலிபன் ஒருவன் காஞ்சியினுள் பிரவேசித்துக் கொண்டிருந்தான். அவனது பின்பாக சிறிது இடைவெளிவிட்டு, அவனது மனைவி நடந்து கொண்டிருந்தாள். இராஜேந்திரனின் படைகளை நோக்கியபடி அந்த வாலிபன் அத்திமலைத் தேவனின் ஆலயத்தை நோக்கி நடக்க, மன்னனையோ,

அவனது படைகளையோ சிறிதும் லட்சியம் செய்யாமல், தனக்கு முன்பாகச் சென்று கொண்டிருந்த தனது கணவனையே வெறித்தபடி நடந்தாள், அவனது மனைவி..

அந்த வாலிபனைக் காட்டிலும் நாமெல்லாம் அவனது மனைவிக்குத்தான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். அவள்தான் மாபெரும் தியாகத்தைச் செய்து, தனது கணவனை பாரத தேசத்திற்காக அர்ப்பணிக்கப் போகிறாள்.

அந்தப் பெண்ணின் பெயர் ரக்ஷா என்கிற தஞ்சம்மாள்.

அவளது கணவனின் பெயரைக் குறிப்பிட்டால், அனைவருக்கும் உடனே புரிய வரும். அந்த வைணவ வாலிபனின் பெயர் இளையாழ்வார் என்கிற லட்சுமண முனி. வருங்காலத்தில் விசிஷ்டாத்வைதத்தை நிலை நாட்டிய இராமானுஜாசார்யனாகத் திகழப் போகிறவன் தான் அந்த வாலிபன்.

‘நாதன் அத்திமலையானை மீட்பதற்கு இனி மன்னர்களை நம்பிப் பிரயோஜனம் இல்லை. ஆச்சார்யர்களை நம்புவோம்’ என்பது போன்று இளையாழ்வாரின் வருகைக்காகக் காத்திருந்தாள், பெருந்தேவி.

## 29. தானே தோன்றிய சிலை

**கி**.பி.1033-

வேங்கடமலையைச் சுற்றிலும் பரந்திருந்த காடுகளில் ஆங்காங்கே சிதறிக்கிடந்த கிராமங்களில் இரு குன்றுகளிடையே அமைந்திருந்தது திருமங்கைபுரம்.* திருவேங்கடவனையும் அவனது மனைவி அலர்மேல் மங்கையையும் தவிர வேறு எதுவுமே அறியாதவர்கள் வசிக்கும் கிராமம்.

கிராமத்தின் மையத்தில் சிறு ஆலயத்தில் கோயில் கொண்டிருந்தாள் அலர்மேல்மங்கை. உயர்ந்த மலையில் கணவனை ஏற்றி, வையமெல்லாம் அவன் புகழ் பாடுவதை செவிகுளிரக் கேட்டு, கண்மலர பெருமிதத்துடன் கண்டு கொண்டிருந்தாள்.

மங்கைபுர ஆலயத்தின் எதிரே அழகான வீதி. அதில் குடிகொண்டிருந்த வைணவர்களின் வரிசையான மனைகளில் செம்மண்கலவை பூசியிருந்த இரு பெரிய திண்ணைகளைக் கொண்ட மனை, கோனேரி வராக ஸ்வாமிக்கு உரியது. அவர்தான் மங்கைபுர ஆலயத்தின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஆலயப் பணிகளை முடித்துக் கொண்டு இன்னும் அவர் தனது மனைக்கு திரும்பவில்லை.

மங்கைபுரவாசிகள் தங்களது நீர்த்தேவைக்கு ஆலயக் கிணற்றைத்தான் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆலயப்பணிகளுக்கே அதிக நீர் தேவைப்பட்டதால், ஊர் மக்களின் தேவைக்கு வேறு ஏதாவது ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று ஊர் பெரியவர்கள் ஒன்றுகூடி

---

* தற்போதைய திருச்சானூர்.

பேசிய போதுதான், கோனேரி சுவாமிக்கு அந்த யோசனை தோன்றியது.

ஊரின் வடக்கே சேஷமலை காட்டுப் பகுதி இருந்தது. அதன் முடிவில் சேஷாத்திரி என்கிற நாகமலை இருந்தது. நாகமலையிலிருந்து நழுவி ஓடிய காட்டாற்று கிழக்கு நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது. அதன் நீர் வீணாக ஓடுவதால், அதனை ஊர் பக்கமாகத் திருப்பி ஒரு குளத்தினை வெட்டி, அதில் அந்தக் காட்டாற்று நீரை நிரப்பலாம் என்கிற திட்டத்தைத் தீட்டினார், கோனேரி சுவாமி. ஊர் மக்களுக்கு அந்த யோசனை மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அதற்குத் தடையாக இருந்தது சேஷமலை காடுதான். சேஷமலைக்குச் செல்லும் காட்டு வழி மிகவும் ஆபத்தானது. கொடிய விஷ நாகங்கள் மலிந்திருந்தது. காட்டாற்று நீரைக் கிராமத்தை நோக்கித் திருப்புவதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு, அந்த வழியைத்தான் உபயோகப்படுத்த வேண்டியிருக்கும். வழியெங்கும் ஊர்ந்து கொண்டிருக்கும் நாகங்களிடம் கடிபடாமல், எப்படி சேஷமலைக்குப் போவது என்பதுதான் கிராமத்து மக்களின் முன்பாகத் தொக்கி நின்ற பிரச்னை.

நாகபூஜை ஒன்றை செய்துவிட்டுப் பணிகளைத் துவங்குவோம் என்று பெரியவர் ஒருவர் யோசனை கூற, நாகபூஜை செய்துவிட்டு, பணிகளைத் துவக்கினார்கள். நாகபூஜை செய்துவிட்டதால், நாகங்களால் பிரச்னை தீர்ந்தது என்று ஊர்மக்கள நினைத்துவிட்டாலும், கோனேரி சுவாமி அப்படி நினைக்கவேயில்லை. திருமலையிலிருந்து மிகவும் திறமையான ஒரு பாம்புக்கடி வைத்தியரை வரவழைத்து பணியாளர்களோடு அவரையும் சேஷமலைக்கு அனுப்பினார். அவரது பணியே பாம்பு தீண்டியவர்களை சிகிச்சை செய்து காப்பாற்றுவதுதான். அந்த வைத்தியரும், பன்னகபச்சை என்கிற மூலிகையை நிறையப் பறித்துக்கொண்டு அவர்களுடன் சென்றார். பன்னகபச்சையின் மணம்,

நாகங்களை அப்பால் நிறுத்திவிடும். கருடனின் உடலில் வீசும் வாசம் இந்த மூலிகையிலும் வீசும் என்பது மூலிகைச் சித்தர்களின் வாதம். அது உண்மையோ இல்லையோ, வைத்தியர்கள் இந்த மூலிகையைப் பாம்புக்கடிக்கு மருந்தாக உபயோகித்தார்கள். இந்த இலைகளைக் காற்றில் அசைத்தால், நாகங்கள் விலகிப் போவது கண்கூடு.

சேஷமலை காட்டாற்று நீரை நிரப்ப மங்கைபுர ஆலயத்தின் பின்பாக ஒரு குளம் வெட்டப்பட்டது. காட்டு வழியே சென்று சேஷமலையிலிருந்து நீரோடை ஒன்றை அமைக்கும் பணியைத் துவக்கினார்கள். பெரிய பள்ளம் ஒன்றை அமைத்து, காட்டாறு அதனுள் பாய்ந்து அந்தப் பள்ளத்திலிருந்து ஓடையாகத் தொடர வேண்டும் என்கிற திட்டத்துடன், ஆழமான பள்ளம் ஒன்றை கிராமத்து மக்கள் தோண்டிக் கொண்டிருந்த போதுதான், 'நங்' என்கிற சத்தம் கேட்க, பள்ளத்தைத் தோண்டிக் கொண்டிருந்தவர்கள், திகைப்புடன் பணியை நிறுத்தினார்கள்.

"மிகவும் கவனத்துடன் தொடர்ந்து தோண்டுங்கள்" என்று கோனேரி சுவாமி எச்சரிக்கைவிட, அந்தப் பகுதியை மிகவும் கவனத்துடன் தோண்டினார்கள். அழகிய வேங்கடவனின் கற்சிலை ஒன்று அந்தப் பள்ளத்திலிருந்து வெளிப்பட்டது. ஐந்தடிக்கு நீண்டிருந்த அந்தச் சிலையில்* கை வழக்கமாகக் கீழ் நோக்கி வைக்கப் படாமல், அபய ஹஸ்தமாகக் காட்சி தந்தது. அந்தச்

* தற்போது இந்த சிலைதான் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேஸ்வர சுவாமியாகத் திருப்பதி அருகே காட்சி தருகிறார். சித்தூர் மாவட்டத்தில், திருப்பதியில் இருந்து பதினாறு கி.மீ. தொலைவில், அப்பலயக்குண்டா என்கிற இடத்தில் இவரது ஆலயம் உள்ளது. அபயஹஸ்தத்துடன் காணப்படும் இவரது சிறிய ஆலயத்தை கி.பி.1232-ல், ஸ்ரீவேங்கட பெருமாள்ராஜூ ப்ரஹ்மதேவ மகரன் என்னும் அரசன் பெரிதாக எழுப்பினான். 1988-ம் வருடம் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த ஆலயத்தைத் தனது வசப்படுத்திக் கொண்டது.

சிலையைப் பள்ளத்தில் இருந்து எடுத்து அருகே ஒரு மணல்மேட்டினில் நிறுத்தினார்கள். தானாகத் திடீர் என்று பிரசன்னமாகிய அந்தப் பெருமாள் சிலைக்கு. *பிரசன்ன வெங்கடேசன் என்று பெயரிட்டார், கோனேரி சுவாமி.

திடீரென்று தானாகத் தோன்றிய பிரசன்ன வேங்கடவனுக்குப் பூசனைகளைச் செய்துவிட்டு, அன்றைய பணிகளை நிறுத்திக் கொண்டு, அவனைப் பற்றிச் சிலாகித்துப் பேசியபடியே ஊர்மக்கள் தங்கள் மனைகளுக்குத் திரும்பினர்.

"நல்ல சகுனம் தோன்றியது. இன்று நாங்கள் தோண்டிய பள்ளத்தில் இருந்து வேங்கடவன் பிரசன்னமானான். அவனது ஐந்தடி சிலையை அங்கே சேஷமலையின் அடியில் நிற்க வைத்திருக்கிறோம். விரைவில் அவனை கிராமத்திற்கு கொண்டு வந்து ஒரு சிறு ஆலயம் கட்ட வேண்டும்."

கோனேரி சுவாமியின் இல்ல வாசலில் பெரிய திண்ணையில் அமர்ந்தபடி ஊர் பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்க, உள்ளே மறுநாள் ஆராதனைக்காக, பவழ மல்லிகைகளைச் சரமாகத் தொடுத்துக் கொண்டிருந்த ரக்ஷாவின் கைகள் சட்டென்று நின்றன. தனது செவிகளைக் கூர்மை செய்து, வாசல் திண்ணையில் அமர்ந்திருந்த பெரியவர்கள் பேசுவதை உள்வாங்கினாள்.

'வேங்கடவன் சிலை கிடைத்திருக்கிறதாமே. அபூர்வ மாக அபய அஸ்தத்துடன் காட்சி அளிக்கின்றானாமே! நாமும் போய்ப் பார்த்தால் என்ன?'

அவசரமாக மிகுதி பூக்களைத் தொடுத்தவள், அதனை ஈரத்துணியில் சுற்றி மண்பானையில் வைத்துவிட்டு, வாசல் பக்கமாக விரைந்தாள், ரக்ஷா.

இவள் வாசலுக்குப் போவதற்கும், பெரியவர்களின் கூட்டம் முடிவதற்கும் சரியாக இருந்தது.

"அப்பா! அந்த வேங்கடவன் சிலையைத் தரிசிக்க வேண்டும். பார்த்துவிட்டு, ஓடோடி வந்துவிடுகிறேன்!" என்று ரக்ஷா இறைஞ்சலுடன்அவரை நோக்கினாள்.

"வேண்டாம் தஞ்சம்மா!"

அவரது தாயாரின் பெயர் தஞ்சம்மா. அதனையே மகளுக்கும் அவளது பெயராக வைத்தார். தனது தாயின் பெயரை மனைவி வேங்கடி அழைக்க முடியாதே என்பதற்காக மகளுக்கு ரக்ஷா என்றும் பெயர் வைத்தார், கோனேரி சுவாமி.

ரக்ஷாவின் கோரிக்கை உள்ளேஅடுக்களையில் இருந்து வெளிவந்த வேங்கடிக்கும் கேட்டிருக்கும். கையில் அகப்பையுடனே வேகமாக வெளியே வந்தாள்.

"நன்றாக இருக்கிறது, ரக்ஷா! வேங்கடவன் சிலையைப் பார்ப்பதற்கு நல்ல சமயத்தைத் தேர்ந்தெடுத்தாய். சூரியன் அஸ்தமித்து விட்டான். பகலிலேயே நாகங்களின் உபத்திரவம் தாங்காது. இருள்வேளை.. எல்லாம் நாளை காலையில் பார்த்துக் கொள்ளலாம்." - அகப்பையை ஆட்டியவாறு பேசினாள் வேங்கடி.

"அம்மா! அதிகத் தொலைவு இல்லையே! இதோ காட்டைக் கடந்தால் மலையடிவாரம். வேங்கடவன் சிலையைப் பார்த்துவிட்டு, ஓடி வந்துவிடுகிறேன். பன்னகப்பச்சையைக் கையில் எடுத்துக்கொண்டு போகிறேன்!" - தாயை ஆவலுடன் நோக்கினாள்.

"முடியவே முடியாது! உனக்கு விவாகம் நிச்சயமாகி விட்டது. இன்னொருவர் வீட்டுக்கு மருமகளாகப் போகப் போகிறாய். இப்போதே ஆசைகளை அடக்கிக் கொள்ளக் கற்றுக்கொள். போகுமிடத்தில் மற்றவர்களின் விருப்பத்திற்கேற்பதான் நீ நடக்க வேண்டும் என்பதை உணர்ந்து இப்போதே பெற்றோர் சொல்வதைக் கேட்டு நட!" - வேங்கடி கூற, அதை ஆமோதிப்பது போன்று தலையசைத்தார், கோனேரி சுவாமி. வேங்கடி போன்று

அதட்டிப் பேசவில்லை என்றாலும், நைச்சியமாகவே பெண்ணுக்கு அறிவுரை கூறினார்.

"ஆம் ரக்ஷா! திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் நீ இப்படியெல்லாம் தனியாக அலையக் கூடாது. உன்னைப் பார்த்தவுடனேயே அவர்களுக்குப் பிடித்து விட்டது. நல்ல ஆசூரி குலத்திற்கு நீ மருமகளாகப் போகப்போவது, நீ செய்த பாக்கியம். நானும் பெரும்பூதூருக்குப் போய் மணமகனைப் பார்த்துவிட்டு வந்தேன். மாப்பிள்ளை இளையாழ்வார்* லட்சணமாக இருக்கிறார். மேதாவியாக இருக்கிறார். தர்க்க ஞானம் அறிந்தவர். அவர்கள் குடும்பத்திடம் உன்னை ஒப்படைக்கும் வரையில் நாங்கள் உன்னை பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே, இப்போது போக வேண்டாம். நாளை காலையில் நானே அழைத்துப் போகிறேன்!" - கோனேரி வராக சுவாமி கூறினார்.

"ஆமாம்! நான் மங்கைபுரத்தில் இருக்கப் போவதே இன்னும் சிறிது நாட்களுக்குதான். அப்புறம் எங்கே வேங்கடவனையும், மலர்மங்கையையும் காண்பது? இனி கணவன் நில் என்றால் நின்றாக வேண்டும், உட்காரென்றால் அமர வேண்டும். கிட என்றால் கிடக்க வேண்டும்! அவர் பெயரென்ன.. அதைக் கூட இன்னமும் சரியாக நீங்கள் கூறவில்லை!" - சற்றே எரிச்சலுடன் கூறினாள் ரக்ஷா.

"நீ என்னவோ அவர் பெயரை உச்சரிக்கப் போவதில்லை. அவர் பெயரைத் தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய்? - வேங்கடி கேலியாகச் சிரித்தாள்.

"அவரது பெயர் லக்ஷ்மணமுனி. இளையாழ்வார் என்று அழைக்கிறார்கள். திருஆருத்ரா நட்சத்திரக்காரரர்.

* இளையாழ்வான்தான் பிற்காலத்தில் விசிஷ்ட்டாத்வைத தத்துவத்தை நிலைநாட்டிய இராமானுஜர்.

நீண்ட ஆயுள், கீர்த்தி, பரமனின் அருள் அனைத்துமே சிறு வயதிலேயே கிட்டிவிடும். அவர் பெயரை நீ உச்சரிக்க வில்லை என்றால் என்ன, ரக்ஷா. உலகமே அவரது பெயரை உச்சரிக்கப் போகிறது!" - கோனேரி சுவாமி கூறினார்.

"உங்களைச் சொல்லித் தவறில்லை, தந்தையே! இந்தத் திருமலைப் பகுதியின் மண் ராசி அப்படி. மருமகனை மலை மீது உயர்த்தி வைப்பீர்கள். பெற்ற மகளை அடிவாரத்திலேயே நிறுத்தி வைப்பீர்கள். தெருக் கோடியில் அலர்மங்கையையே அமர்த்தியிருக்கும் தாங்கள், என்னை எங்கே உயர்த்தி வைக்கப் போகிறீர்கள்?" - சற்றே காட்டத்துடன் கூறியபடி, சினத்துடன் திண்ணையில் ஏறி அமர்ந்தாள்.

"அவளை விடுங்கள். நீங்கள் நீராடிவிட்டு வாருங்கள். உங்கள் மாலை ஆராதனைகளைத் துவக்குங்கள்!"- வேங்கடி கூற, கோனேரி சுவாமி தனது வீட்டினுள் நுழைந்தார்.

ரக்ஷா திண்ணையில் அமர்ந்து அலர்மங்கையின் ஆலயக்கோபுரத்தையே வெறித்து நோக்கிக் கொண்டிருந் தாள். அவளது எண்ணங்கள் தனது வருங்கால நாதனைச் சுற்றி வலம் வந்தன..

வேங்கடவனையும், அலர்மேல்மங்கையையும் தவிர இவள் யாரையுமே தொழுததில்லை. இவளது பொழுது அலர்மங்கைக்கு மலர்மாலைகளைத் தொடுப்பதிலேயே கழிந்து கொண்டிருந்தது. பெரும்பூதூரில் ஒரு மாலவன் ஆலயம் இருப்பதாகத் தந்தை கூறியிருந்தாலும், அலர்மேல்மங்கையின் ஆலயம் போன்று வருமா? தனது மாலவன் பக்திக்கு பதிசேவை இடையூறாக இருக்குமோ? இவளது மனதை புரிந்து கொள்வாரா, இவளது கணவன்? மாலவன் துதியைத் தவிர நர துதியை செய்யமாட்டேன் என்கிற இவளது வைராக்கியத்தை ஏற்பாரா? மலையோனை தொழுதேத்தும் கரங்களை துயிலோனை

நோக்கியும் குவிக்கமாட்டேன் என்று உரைத்தால், லக்ஷ்மணமுனி ஒப்புக்கொள்வாரா? கணவனைத் தவிர அந்நிய புருஷர்களுக்கு பணியாற்றமாட்டேன் என்கிற இவளது உறுதியை அங்கீகரிப்பாரா?

ஆயிரம் கேள்விகள் மனதில் எதிரொலிக்க, தனது இல்லத் திண்ணையில் அமர்ந்திருந்தாள் ரக்ஷா.

அப்போது எட்டுப் பிராயங்களே நிறைந்திருந்த பக்கத்து வீட்டு, சிறுவன் கோதண்டராமன் வாயிலுக்கு ஓடி வந்து அவள் முன்பாக நின்றான்.

"தஞ்சக்கா! சேஷமலை அடிவாரத்தில் வேங்கடவன் சிலை கிடைத்திருக்கிறதாமே? எனது அப்பா அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். வருகிறாயா? நாம் இருவரும் பார்த்துவிட்டு வரலாம்!"

கோதண்டம் கேட்கத் துணுக்குற்றாள், ரக்ஷா.

அதுவரை, தன்னை வேங்கடவனைக் காண அனுமதிக்காத பெற்றோரிடம் எரிமலையாக வெடித்தவள், அந்த எட்டு வயது பாலகன் வேங்கடவனைக் காண வேண்டும் என்கிற ஆவலை வெளிப்படுத்தியவுடன், எச்சரிக்கை அடைந்தாள்.

கோதண்டராமனை அவனது பெற்றோர்கள் தவமாய்த் தவமிருந்து பெற்றிருந்தனர். திருமணமாகி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் பிள்ளை வரம் கிட்டாமல், ஒரு மண்டலம் திருமலைக்கு ஏறி அவனிடம் மடிப்பிச்சை கேட்டு, நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு பிறந்த ஒரே மகன். கோதண்டராமனின் கர்ப்பத்தைத் தாங்கக்கூடிய வலு அவனது தாயின் கர்ப்பப்பைக்கு இல்லை என்பது தெரிந்தும், 'நான் இறந்தாலும் பரவாயில்லை. மலடியாக சாக விரும்பவில்லை' என்கிற உறுதியுடன் தனது உயிரைப் பணயம் வைத்து பெற்ற மகன், கோதண்டராமன். ரக்ஷாவைத் தவிர வேறு யாரையும் அவனை அண்டவிடுவதில்லை, அவனது பெற்றோர்.

கண்ணின் கருமணியாகத் தங்களது குழந்தையை அவர்கள் வளர்க்க, நாகங்கள் திரியும் காட்டுப்பாதையின் வழியே இருள் படர்ந்து வரும் இந்தச் சமயத்தில் அழைத்துப் போக விரும்புவாளா என்ன?

"இப்போது வேண்டாம், கோதண்டம்! நாளை காலை போகலாம்!" - ரக்ஷா கூறினாள்.

"இதோ பார், தஞ்சக்கா! பை நிறைய பன்னகபச்சை இலைகளை வைத்திருக்கிறேன். நாகங்கள் அருகேயே வராது. போய்ப் பார்த்துவிட்டு வரலாம், வா!"- கோதண்டம் கெஞ்ச, ரக்ஷா தலையசைத்து மறுத்தாள்.

"வேண்டாம் ராமா! எனது பெற்றோர் என்னைப் போகக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். நான் வரவில்லை!" - ரக்ஷா கூறினாள்.

"அப்படியென்றால் நான் போகிறேன்!" என்றபடி அவன் நகர, திடுக்கிட்டுப் போன ரக்ஷா அவனைத் தடுப்பதற்காகத் திண்ணையில் இருந்து குதித்தாள். சிட்டாகப் பறந்து சென்ற கோதண்டத்தின் பின்பாக ரக்ஷா விரைந்தாள் .

"ராமா! இரு ஓடாதே! நானும் உன்னோடு வருகிறேன்!" - ரக்ஷாஅலறியபடியே அந்தச் சிறுவனின் பின்பாக ஓடினாள். காட்டின் எல்லைவரை ஓடி அதன் பிறகே கோதண்டராமன் நின்றான்.

ரக்ஷா யோசித்தாள். எப்படியும் இவளது தந்தை ஆராதனையை முடித்துச் சுந்தர காண்டம், பாகவதம், பகவத் கீதை மற்றும் விஷ்ணு சஹஸ்ரநாமம் ஆகிய வற்றைப் பாராயணம் செய்து முடிக்கத் தாமதம் ஆகும். அதற்குள் வேங்கடவன் சிலையைப் பார்த்துவிட்டு வந்து விடலாம், என்கிற எண்ணத்தில் கோதண்டராமனுடன் காட்டு வழியே நடந்தாள். கோதண்டராமன் தனது கையில் இருந்த பன்னகப்பச்சை இலைகளை ஆட்டிக் கொண்டே வர, வழியில் ஊர்ந்து கொண்டிருந்த

நாகங்கள் அப்பால் விலகின. விரைவாக நடந்தவர்கள், சேஷமலையின் அடிவாரத்தை அடைய, அங்கே மணல்மேட்டினில் நின்ற வேங்கடவனின் சிலை அவர்கள் கண்களில் பட்டது. பரவசத்துடன் அதனைத் தொழுது சுற்றி வந்து, சிலையை வருடி கண்களில் ஒற்றி, தங்களது ஆவல் தீர, வேங்கடவனுடன் பொழுதைக் கழித்தார்கள்.

"ராமா! போதும், வேங்கடவனுடன் சீராடியது. தாமதம் ஆகிவிடப் போகிறது. அகத்திற்குப் போகலாம் வா!" என்றபடி இருவரும் புறப்பட்டனர்.

காட்டு வழியில் மீண்டும் நுழைந்ததும்தான், "அய்யயோ" என்று அரற்றினான், ராமன்.

"என்ன கண்ணா?" - வியப்புடன் கேட்டாள், ரக்ஷா.

"பன்னகப்பச்சையை வேங்கடவன் அருகேயே மறந்து வைத்துவிட்டேன். இப்போது என்ன செய்வது?"- கோதண்டராமன் கேட்டான்.

"இதற்காக திரும்பிச் செல்ல வேண்டாம். தாமதமாகி விடும். ஒன்று செய். நான் முன்பாக நடக்கிறேன். நீ எனது பின்பாக வா!" - என்றபடி பாதையில் நாகங்கள் ஏதேனும் இருக்கின்றதா என்று பார்த்தபடி முன்பாக ரக்ஷா நடக்க, அவளைப் பின்தொடர்ந்து வந்தான், கோதண்டராமன்.

இருள் படர்ந்து கொண்டே இருக்க, பார்வை சரியாகத் தெரியவில்லை. காய்ந்த இலையில் உராயும் நாகங்களின் 'சர சர' ஒலியைக் கொண்டுதான் எச்சரிக்கையுடன் அடிமேல் அடிவைத்து நடந்தாள். வேங்கடவனைக் காணும் ஆவலில் இருவரும் ஓடி வந்திருந்தனரே தவிர, இருள் சூழ்ந்த காட்டில், ஒளிக்கு என்ன செய்வோம் என்பது குறித்து யோசிக்கவில்லை.

சிறிது தொலைவே நடந்திருப்பார்கள். திடீரென்று மிக அருகே 'சரசர' ஒலி கேட்க, "தஞ்சக்கா..!" என்கிற

கோதண்டராமனின் அலறல் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினாள்.

நிலத்தில் சுருண்டு கிடந்த அவனது பாதத்தின் பக்கமாக ஒரு சர்ப்பம் வேகமாக ஊர்ந்து செல்வதைக் கண்ட ரக்ஷா உடல் அதிர்ந்தது.

"என்ன நடந்தது, கோதண்டராமா?" - பதறினாள் ரக்ஷா.

"என்னை சர்ப்பம் தீண்டிவிட்டது." - ஈனஸ்வரத்தில் கூறினான், கோதண்டம்.

'ஐயோ! தவமிருந்து பெற்ற பிள்ளையல்லவா, கோதண்டம். அவனது தாய் தந்தைக்குப் பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு திருமலையில் நேர்ந்து பெற்றவனாயிற்றே. அவனுக்கு ஏதாவது நேர்ந்தால், இவளையல்லவோ அனைவரும் பழிப்பார்கள். கோதண்டத்திற்கு ஏதாவது நேர்ந்தால் அவனது பெற்றோர்கள் பிராண தியாகம் செய்து கொள்வார்களே!'

கைகளைப் பிசைந்தபடி பரிதவித்த ரக்ஷா, கோதண்டத்தைப் பார்த்தாள்.

"கண்ணா! நீ இங்கேயே பத்திரமாக இரு. நான் ஓடோடிப் போய், வேங்கடவன் சிலையருகே நீ வைத்திருந்த பன்னகப்பச்சை மூலிகையைக் கொண்டு வந்து விடுகிறேன். சர்ப்பத்தின் விஷத்தை உடனே முறித்து விடும், பன்னகப்பச்சை" என்று கூற, கோதண்டராமன் வீறிட்டு அலறத் துவங்கினான்..

"என்னை இங்கே தனியாக விட்டுப் போகாதே. இன்னும் நிறைய சர்ப்பங்கள் என்னைத் தீண்டிவிடும்!" என்று அவளது சேலையைப் பற்றிக்கொண்டு கோதண்டராமன் அழ, செய்வதறியாது திகைத்தாள், ரக்ஷா.

"வேங்கடவா! உன்னைக் காண வந்ததற்கு இந்த சோதனையைத் தருகிறாயா? நீதான் கோதண்டராமனை

எப்படியாவது காப்பாற்ற வேண்டும்." - தன்னை மறந்து கதறினாள், ரக்ஷா.

"வேங்கடவா! நான் புலம்புவது உனது செவிகளில் விழவில்லையா? கோதண்டராமனை காப்பாற்று. நீ என்ன கேட்டாலும் தருகிறேன், எனது உயிர் உள்பட. இந்தக் குழந்தையைக் காப்பாற்று!" - கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருக ரக்ஷா அரற்றிக்கொண்டிருந்த அதே நேரம், இவர்கள் வந்த பாதையில் ஒரு அசைவு. சிறு புள்ளியாகத் தெரிந்த வெளிச்சம் விரைவாக இவர்கள் இருந்த பக்கமாக வர, நம்பிக்கையுடன் முன்னேறிவரும் அந்த ஒளியைப் பார்த்தாள்.

மலைவாசி ஒருவன் தலையில் கூடை ஒன்றை கவிழ்த்தபடி, கையில் சுளுந்து ஒன்றுடன், தோளினில் துணிமூட்டையுடனும் நடந்து வந்து கொண்டிருந்தான்.

"ஐயா.. காப்பாற்றுங்கள்!" ரக்ஷா குரல் கொடுக்க ஓடோடி வந்தான், அந்த மலைவாசி.

"என்ன.. பாம்பு தீண்டிடுச்சா?" என்றபடி தோளில் கிடந்த பையினை எடுத்தபடி, சுளுந்தை ரக்ஷாவிடம் நீட்டினான்.

"இதைப் பிடிச்சுக்கத் தாயி!" என்றவன் கோதண்டத்தின் பாதத்தை எடுத்து தனது மடியில் இருத்திக்கொண்டு கடிபட்ட இடத்தை ஆராய்ந்தான். பிறகு துணிமூட்டையில் இருந்து ஒரு கத்தியை எடுத்துக் கடிபட்ட இடத்தைக் கிழித்தான். கோதண்டம் அச்சத்தில் கண்களை இறுக மூட, ரக்ஷா குனிந்து சுளுந்தைக் காட்டி அந்த மலைவாசி சிகிச்சை செய்வதற்கு வசதியாகத் தாழ்த்திப் பிடித்தாள்.

கோதண்டராமனின் கிழிபட்ட பாதத்தில் இருந்து குருதியை உறிஞ்சி அருகில் இருந்த புதரில் துப்பினான், அந்த மலைவாசி. மூன்று முறை அங்ஙனம் செய்து, முடிவில் தன்னிடம் இருந்த பன்னகப்பச்சையை வைத்துக் கட்டினான்.

"இனிமேல் பயமில்லை தாயி. குழந்தை பிழைச்சுக்கு வான். இந்த இருட்டு நேரத்துல இந்தப் பக்கம் குழந்தையை அழைச்சுக்கிட்டு வரலாமா, தாயி?"- பரிவுடன் கேட்டான், அந்த வனவாசி.

"வேங்கடவன் சிலை ஒன்று பூமியின் அடியில் இருந்து கண்டெடுத்து இருக்கிறார்கள். அதனைக் காண்பதற்காக வந்தோம். இருட்டிவிட்டது!" - ரக்ஷா கூறினாள்.

"வேங்கடவன் சிலையைப் பார்க்க வந்தீங்களா? நல்லவேளை, அவன்தான் என்னை இந்தப் பக்கமா அனுப்பி வச்சான்! இல்லேனா.."- என்றவன் கோதண்ட ராமனை அர்த்தத்துடன் பார்க்க, ரக்ஷாவுக்கு உடல் தூக்கிவாரிப் போட்டது.

'எவ்வளவு பெரிய அபவாதத்தில் இருந்து இவளைக் காப்பாற்றி இருக்கிறான். இந்த மலைவாசிக்கு எவ்வளவு நன்றி கூறினாலும், போதாது.'

"ஐயா, குழந்தையைக் காப்பாற்றியதற்கு மிக நன்றி. என்னால் தங்களுக்குக் கொடுக்க முடிந்தது இதுதான். இதை வாங்கிக் கொள்ளுங்கள்!" - தனது கையில் இருந்த ஸ்வர்ண வளையலைக் கழற்றி அவனிடம் நீட்டினாள், ரக்ஷா.

அவளுக்குத் திருமணம் நிச்சயம் ஆனதும், அவளது தந்தை கோனேரி சுவாமி அவளுக்குப் புதிய வளையல் களை வாங்கி அணிவித்துவிட்டார். மணப்பெண் அல்லவா? அந்தப் புதிய வளையல்களில் ஒன்றைத்தான் அந்த மலைவாசியிடம் நீட்டினாள், ரக்ஷா.

"சொக்கத் தங்க வளையல். புத்தம் புதுசா இருக்கு. உனக்குத் திருமணம் நடக்கப் போகுதா? அதைப் போயி எனக்குத் தர்றியே! நான் உன்னை ஒண்ணுமே கேட்கலையே! பிள்ளையை அழைச்சுக்கிட்டுப் பத்திரமா புறப்பட்டுப் போ தாயி.." என்றபடி பச்சிலை மற்றும் கத்தியை மூட்டையினுள் வைத்தபடி எழுந்தான், அந்த மலைவாசி.

"அய்யா! குழந்தை உயிரைக் காப்பாற்றி இருக்கிறீர்கள். அந்தக் குழந்தைக்கு ஏதாவது ஆகி இருந்தால், நானும் என்னை மாய்த்துக் கொண்டு இருப்பேன். அதன் பிறகு, எனது பெற்றோரும், இந்தக் குழந்தையின் பெற்றோரும் கூட தங்களை மாய்த்துக் கொண்டு இருப்பார்கள். இந்தப் பையனையும் சேர்த்து ஆறு உயிர்களைக் காப்பாற்றி இருக்கிறீர்கள். நீங்கள் இதை வாங்கிக் கொண்டுதான் தீரவேண்டும்!" - ரக்ஷா இறைஞ்சினாள்.

அவள் நீட்டிய வளையலையே பார்த்தவனின் கண்களில் லேசான வியப்பு.

"தாயி! கையைக் காட்டு" என்றான்.

ரக்ஷா திகைத்துப்போனாள்.

எதற்காகக் கையை நீட்டச் சொல்கிறான் என்பது புரியாமல், தனது இடக்கையை நீட்டினாள், ரக்ஷா.

சுளுந்தை தாழ்த்திப் பிடித்தான், அந்த மலைவாசி.

அவளது கையை கூர்ந்து கவனித்தவன், திடீரென்று பாடத்துவங்கினான்.

**"பதிமூன்றாம் தாரகைக்குப் பத்தாம் நாளில்,**
**சதி நண்ணீறும் வேளையில், பொன் பரவும் சமயமதில்**
**ஆதி நாகமணி ஒன்று இக்கையில் வந்து சேரும்..**
**எதி ராருமில்லாத, விலையேதுமில்லாத ஒப்புயர்**
**கதி காட்டும் மணியை அரவணையில்**
**துயில்வோனுக்குத் தா.."**

என்று கண்களில் பரவசத்துடன் ரக்ஷாவின் கையையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஐயா! நீங்கள் கூறியது புரியவில்லை!" - ரக்ஷா விழித்தாள்.

"இன்னையிலிருந்து பத்தாம் நாள் உன்னோட கைக்கு ஒரு நாகமணி கிடைக்கப் போகுது. அதனை நீ வேங்கடவனுக்கு அர்ப்பணம் செய்துவிடு. நான் இந்தப்

பையனின் உயிரை காப்பாற்றியதற்கு விலை அதுதான்."- அந்த மலைவாசி கூறினான்.

"அவசியம் கொடுக்கிறேன், ஐயா. அந்த நாகமணி எனது கைக்கு வந்ததும், அதனை அப்படியே வேங்கடவனிடம் சமர்ப்பித்து விடுகிறேன்!" - உறுதியுடன் கூறினாள், ரக்ஷா.

"இப்ப சொல்லறே தாயி. அப்புறம் மனசு மாறிடுவே. நாகமணியை பார்த்ததும் மனசுல ஆசை பொறக்கும்!" - மலைவாசி கூறினான்.

"மனம் மாறவே மாட்டேன். எனது கைக்குக் கிடைக்கும் நாகமணியை நானே மாலவனிடம் அனுப்பி விடுவேன்." - ரக்ஷா கூறினாள்.

"பாப்போம்!" - கலகலவென்று சிரித்தபடி மலைவாசி புறப்பட, ரக்ஷா அவனை விசித்திரமாகப் பார்த்தாள்.

"ஐயா, சுளுந்தை மறந்து விட்டுச் செல்கிறீர்களே?" - ரக்ஷா கேட்க, அவன் மீண்டும் சிரித்தான்.

"ஒளிக்காட்டப் போறவன் பத்தாம் நாள்தான் வரப்போறான். அதுவரையில் வெளிச்சத்துக்கு என்ன செய்வே, தாயி. நீ அதை எடுத்துக்கிட்டு போ. எனக்கு இந்தப் பகுதியெல்லாம் அத்துப்படி. இருட்டுல இன்னும் வேகமாவே நகருவேன்." - அந்த மலைவாசி ஓடத்து வங்கினான்.

'இந்த இருளிலும் எப்படி இடறி விழாமல், பாதையை உணர்ந்து ஓடுகிறான்..!'

கடைசியாக அவனை நோக்கிக் கேட்டாள், ரக்ஷா.

"அய்யா! உங்கள் பெயர் என்ன?"

"மலையன்.. மாமலையன்!" என்று குதித்தபடி இவளை நோக்கித் திரும்பி பதிலளித்துவிட்டு, இருளில் கரைந்து போனான், அந்த மலைவாசி.

இருவரும் தங்கள் குடில்களுக்குப் போய்ச் சேர்ந்த போது அப்போதுதான் அவர்களது பெற்றோர்கள் அவர்களைத் தேடத்துவங்கி இருந்தனர் போலும்.

"எங்கே போனீர்கள்?" - தந்தை கேட்க,

"வேங்கடவனின் சிலையைக் காண!" என்று கூறிவிட்டுக் குடிலுக்குள் சென்றாள் ரக்ஷா.

அன்று இரவு முழுவதும் உறங்காமல் அந்த மலைவாசி கூறிய நாகமணி எப்போது கைக்கு வரும் என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

## 30. நலம் தரும் நாகமணி

'நாகமணி ஒன்று உனக்குக் கிடைக்கும்' என்று மாமலையான் கூறிய நாளில் இருந்து பத்தாம் நாள், இளையாழ்வாருக்கும் ரக்ஷாவுக்கும் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாணிக்ரஹணம் என்கிற தம்பதிகள் கைப்பிடிக்கும் சமயம் வந்தது.

இளையாழ்வாரை ஆர்வத்துடன் நோக்கினாள் ரக்ஷா.

'எவ்வளவு செம்மையாக இருக்கிறார். அழகிய முகவெட்டு, அகலமான தோள்கள். முகத்தில்தான் எவ்வளவு சாத்வீகம். சிரித்த முகம்.'

"மாப்பிள்ளை மிக லட்சணமாக இருக்கிறார். உன்னை உள்ளங்கையில் ஏந்தி தாங்குவார் பாரேன்! அவருடைய தாயார் தகப்பனார் அவரைவிட இன்னும் சாத்வீகமாக இருக்கிறார்கள்." - அம்மா வேங்கடி அவளது பூமாலையைக் குனிந்து சரி செய்வது போன்று அவளது காதில் கிசுகிசுத்தாள்.

ரக்ஷா மணப்பந்தலில் முன்பாக அமர்ந்திருந்த தனது மாமன் - மாமியாகிய கேசவ ஆசூரியையும், பூமி பிராட்டி என்கிற காந்திமதி அம்மங்காவையும் நோக்கினாள்.

'உண்மைதான்! குடும்பமே சுத்த சத்வமாகத்தான் இருக்கிறார்கள். மாப்பிள்ளையின் மாமன் பெரிய திருமலை நம்பி திருமணத்திற்கு வந்திருந்தார். உடன் இளையாழ்வாரின் சிற்றன்னை, கமலா அம்மங்கா தனது கணவர் கமலநயனபட்டருடனும், மகன் கோவிந்த னுடனும் வந்திருந்தாள்.

'அந்த மாமலையான் கூறியபடி இன்றுதான், இவளது கையில் நாகமணி ஒன்று வந்து சேரும்! எப்போது வரும்?

*திருமணம் முடிந்த பிறகு வருமா? ஒருவேளை, திருமணப் பரிசாக யாராவது நாகமணியைத் தருவார்களோ?'*

*"பாணிக்கிரஹணம் சமயம் இது!" - புரோகிதர் கூற, தம்பதியர் எழுந்து நின்றனர்.*

*இளையாழ்வார், கவிழ்க்கப்பட்ட தனது வலது கையினால் ரக்ஷாவின் வலதுகையில் உயர நிமிர்ந்து நின்ற பெருவிரலின்* மேல்பாகத்தைப் பற்றிக்கொள்ள, இருவரின் பெருவிரல் நிமிர்த்தப்பட்ட நிலையிலேயே நின்றது.*

*புரோகிதர் மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார்.*

**★"க்ரும்ணாமி தே சுப்ரஜா:த்வய ஹஸ்தம்**
**மயா பாத்தியா ஜாதஷ்டி: யதா அஸ:**
**பகே அர்யமா சவிதா புரந்தி: மக்யம்**
**த்வா அது: கார்ஹபத்யாயா தேவா!**"**

---

* ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென்றால், பெண்ணின் பெருவிரலை மட்டுமே மணமகன் தனது அனைத்து விரல்களாலும் பற்ற வேண்டும் என்றும், பெண் குழந்தை வேண்டுமென்றால் மணப்பெண்ணின் பெருவிரலை தவிர மற்ற விரல்களை மணமகன் பற்ற வேண்டும் என்றும் ஒரு சாத்திரம் கூறுகிறது. நான்கு மந்திரங்களை உச்சரிக்கும் வரை மணமகன் மற்றும் மணமகள் கையைப் பற்றி இருக்க வேண்டும் என்றும், இடையில் மேடையில் புகுந்து வாழ்த்து சொல்ல வருபவர்களுக்குக் கைகளைக் கொடுத்தால் அவர்கள் கைகள் விலகுவதால் வாழ்க்கையில் தடைகள் ஏற்படும் என்றும் கூறுகிறார்கள்.

** 'ஹே கன்னிகையே! நல்ல சந்ததிகள் எனக்கு உண்டாவதாக. என்னுடன் இணை பிரியாது முதிய பருவம் வரை, சுகமாக வாழ்வதற்காக நான் உனது கரத்தை பிடிக்கிறேன். பகன், அர்யமா போன்ற தேவர்கள் யாவரும் எனது கிரகஸ்தாஸ்ரமத்தை அமைத்துக் கொடுப்பதற்காக உன்னை அளித்திருக்கின்றனர். இந்தத் தேவர்களின் சாட்சியாக உனது கரம் பற்றுகிறேன்' என்பதுதான் இந்த மந்திரத்தின் பொருள். மாங்கல்யதாரணத்தைக் காட்டிலும் பாணிக்கிரகணம் என்கிற இந்தச் சடங்குதான் திருமணங்களில் மிகவும் முக்கியச் சடங்காகக் கருதப்படுகிறது.

சப்தபதி எடுத்து வைத்து அனைத்து வைபவங்களும் முடிந்து தம்பதிகள் பெரியவர்களிடம் ஆசி வாங்கினர். பிள்ளை வீட்டாரும், தம்பதிகளும் விருந்து உண்டனர்.

"தஞ்சம்மா! நீ உனது கணவருக்கு வெற்றிலையே மடித்துத் தரவேண்டாம். அவரது வாய் செம்மையாகவே உள்ளது." - கோதண்டராமனின் தாய் கேலி செய்தாள்.

'செங்கண்மாலை வாயால் வாழ்த்திக் கொண்டே இருப்பதால், அவரது வாய் செம்மையாக இருக்கின்றதோ?' - மனதினுள் நினைத்தாள், ரக்ஷா.

இரட்டை மாடுகள் பூட்டிய வண்டியில் தாய் தந்தையருடனும், புது மனைவியுடனும் இளையாழ்வார் பெரும்பூதூருக்குப் பயணித்துக் கொண்டிருந்தான்.

"எங்களுக்கு வெகு காலமாகக் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது, தஞ்சம்மா. கைரவிணி என்கிற திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதியை வேண்டிக் கொண்டு புத்திரகாமேஷ்ட்டத்தைச் செய்தோம். அவன் அருளால், இராமனுக்குத் தம்பியை போன்று பிறந்த எனது மகனை இளையாழ்வான் என்று அழைத்து வருகிறோம். எனது கண்மணியை இனி நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும். லட்சுமணன் எப்படி ஆதிசேஷனின் அவதாரமோ, ஆருத்திரா நட்சத்திரத்தில் பிறந்த எங்கள் இளையாழ்வானும் ஆதி நாகமணியாக எங்களுக்குக் கிட்டியிருக்கிறான்." - காந்திமதி கூறியதும், தஞ்சம்மாவின் குருதி உறைந்து போனது.

'எங்கள் இளையாழ்வார் நாகமணியைப் போன்று எங்களுக்குக் கிட்டியிருக்கிறான்' - காந்திமதியின் குரல் மீண்டும் மீண்டும் அவளது செவிகளில் எதிரொலித்தது.

உடனேயே, பத்து நாட்களுக்கு முன்பாக சேஷமலை காட்டில் இவளது கையைப் பார்த்துவிட்டு பாடிய பாட்டும் ரீங்கரித்தது.

**'பதிமூன்றாம் தாரகைக்குப் பத்தாம் நாவில்,**
**சதி நண்டூறும் வேளையில், பொன் பரவும் சமயமதில்**
**ஆதி நாகமணி ஒன்று இக்கையில் வந்து சேரும்..**
**எதி ராருமில்லாத, விலையேதுமில்லாத ஒப்புயர்**
**கதி காட்டும்மணியை அரவணையில்**
**துயில்வோனுக்குத் தா..'**

*பதின்மூன்றாம் தாரகை என்கிற அஸ்த நட்சத்திரத்தின் பத்தாம் நாளான திருவோண நட்சத்திரத்தில், நண்டூறும் வேளை என்கிற கடகலக்கினத்தில், பொன் என்கிற குரு ஹோரை பரவும் நேரத்தில் ஆதி நாகமாமணி ஒன்று உன் கையில் வந்து சேரும் என்றானே.*

*சரியாக அந்த வேளையில்தான் இவள் இளையாழ்வாரின் கைகளைப் பற்றியிருந்தாள். இவளது உள்ளங்கையில் வந்த நாகமணி இவளது கணவனா?*

*ஒப்புயர்வு இல்லாத ஆதிநாகமணியான இவளது கணவனையா மாலவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்?*

*கலக்கத்தில், விக்கித்துப் போய் அமர்ந்திருந்தாள், தஞ்சம்மா.*

*தனக்கு நலத்தைத் தருவதற்காக வந்திருக்கும் நாகமணியை எப்படி மாலவனுக்கு அர்ப்பணிப்பது? நெஞ்சில் எழுந்த வினா, அவளை சித்திரவதை செய்யத் துவங்கியது.*

# 31. மணசீர் பாகு

குரு யாதவப்ரகாசனின் ஆஸ்ரமம். சீடர்கள் சிலர், பெரிய கங்காளத்தில் வெந்நீரைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தனர். இளையாழ்வாரின் தம்பி கோவிந்தன், வாசனை திரவியங்களை குரு ஸ்நானம் செய்யப் போகும் நீரில் சேர்ப்பதற்காக, அவற்றை அம்மியில் அரைத்துக் கொண்டிருந்தான். இளையாழ்வார் தனது வலுவான கைகளால், யாதவப்ரகாசனின் தோள்களை அனல் பறக்கத் தேய்த்துக் கொண்டிருந்தான்.

யாதவப்ரகாசன் தனது அபிமான சீடனான பிநாகபாணியை நோக்கிக் கண்ணசைத்தான். உடனே பிநாகபாணி இளையாழ்வானை ஒரு கேலிச்சிரிப்புடன் நோக்கிவிட்டு, தனது குருவை நோக்கினான்.

"குருவே! தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ என்கிற பதத்திற்கு விளக்கம் கூற முடியுமா?" - பிநாகபாணி கேட்டதுமே, அவர்கள் இருவரும் தன்னைத்தான் குறிவைக்கிறார்கள் என்பது இளையாழ் வாருக்குப் புரிந்து போனது.

'பொறுமை.. பொறுமை!' - தனக்குள் கூறிக் கொண்டான், இளையாழ்வார். தனது மனைவி தஞ்சம்மாவுக்கு மிகவும் நன்றி சொல்ல வேண்டும். இவனது பொறுமைக்குச் சோதனையாகத்தான் மனைவி வந்து சேர்ந்திருக்கிறாள். காரணம் எதுவுமின்றி கடுகடுத்துப் பேசுவது, மாமியார் காந்திமதியுடன் பிரச்னை செய்வது என்று தஞ்சம்மா இளையாழ்வாரின் பொறுமையை மிகவும் சோதித்துதான் வருகிறாள். ஆனால், இவருக்கு பணிவிடை செய்வதில் தவறினாள்

இல்லை. மனைவியிடம் சகிப்புத்தன்மை காட்டுவதால் குருவின் அடாவடித்தனங்களையும் அதே சகிப்புத் தன்மையோடு எதிர்கொள்ள முடிகிறது. அவ்வகையில் தஞ்சம்மாவுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்.

“மகனே, மணமாகி மூன்று திங்கள் கடந்துவிட்டன. குலக்கொழுந்து ஒன்றை எங்கள் மடியில் எப்போது தவழவிடப் போகிறாய். உனக்காக நாங்கள் தவம் செய்தது போதாதா? உன் மகனுக்காக வேறு நாங்கள் காத்திருக்க வேண்டுமா? அல்லிக்கேணிக்குச் சென்று பார்த்தசாரதியை பிரார்த்தித்து வா. உன்னைப் போன்று எங்களுக்கு இன்னும் ஒரு நாகமணி பெயரனாக வாய்க்கட்டும்!”-சாந்திமதி, கூற, மாமியாரின் வேண்டுகோள் தஞ்சம்மாவை உசுப்பிவிட்டது.

‘நாகமணியாம்! இருக்கும் நாகமணியையே மாலவனுக்கு அளித்துவிட வேண்டும் என்கிற கட்டாயத்தில் அவள் இருக்கும் போது இன்னுமொரு நாகமணி வேண்டுமாமே, கிழவிக்கு. ஏன்? அதனையும் மாலவனுக்கு அர்ப்பணிக்க வேண்டுமா என்ன?’- தஞ்சம்மாவுக்குச் சினம் கொப்பளித்தது.

“அதெல்லாம் ஒரு மணியும் வேண்டாம். எங்கள் மங்கைபுரத்தில் எங்கே பார்த்தாலும் நாகத்தைப் பற்றிய பேச்சு என்று இங்கே வந்தால், இங்கேயும் நாகமணி வேண்டும், நாகப்பழம் வேண்டும் என்று நாகத்தின் பிரதாபம்தான். எப்போது பார்த்தாலும் இதேதான் பேச்சா..? மாலவன் நாமத்தை உரைத்துக் கொண்டு திண்ணையில் கிடப்பதுதானே?” - தஞ்சம்மா இரைந்தாள்.

“எனது பெற்றோர்கள் என்று கருத வேண்டாம், தஞ்சம்மா! முதியவர்கள் திவ்ய தம்பதிகள் என்பதை மறந்தாயா? அவர்களிடம் இன்சொற்களைப் பேசலாம் அல்லவா?” - இளையாழ்வார் கூற, அவனைக் கோபத்துடன் நோக்குவாள்.

"அவர்கள் இம்சை சொற்களை உச்சரிக்கும் போது என்னால் எப்படி இன்சொற்களைப் பேச முடியும்?" என்று சீறுவாள். ஆனால் தஞ்சம்மாவின் உள்ளத்தில் ரக்ஷா கதறிக்கொண்டிருப்பாள்.

'என்னை மன்னித்துவிடுங்கள், சுவாமி! உம்மை மாலவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதற்காக எனது மனதைக் கல்லாக்கிக் கொண்டு அரக்கியாக நடமாடிக் கொண்டிருக்கிறேன். நான் பிரேமையுடன் தங்களிடம் உறவாடினால், தங்களுக்கு என்மீது வெறுப்பு தோன்றாது. என்னைவிட்டுப் பிரிந்து செல்லவும் தோன்றாது' என்று கதறிக் கொண்டு இருப்பாள்.

தனிமையில் தனது செய்கைகளை எண்ணிக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருப்பாள். ஆனால் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து தவறாமல் இருந்தாள். மேலோட்டமாக, இளையாழ்வாரின் வெறுப்பினை ஈட்டுவதற்கு உரிய அத்தனை முயற்சி களையும் மேற்கொண்டிருந்தாள். இதனை அறியாமல், இளையாழ்வார், தஞ்சம்மாவின் நடவடிக்கைகளால் மனம் நொந்து பொறுமையைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்தான். அதனால் மிகவும் சகிப்புத்தன்மை கொண்டவனாகத் திகழ்ந்து, குரு யாதவப்ரகாசனின் கேலிகளை, பொறுமையுடன் தாங்கிக் கொண்டிருந்தான்.

பிநாகபாணி கேட்டதும், ஓரக்கண்களால், தனது தோளினில் இடமும் வலமுமாக இயங்கிக் கொண்டிருந்த இளையாழ்வாரின் கைகளைப் பார்த்தான், யாதவப்ரகாசன்.

புண்டரீகம் என்பதற்கு வேண்டுமென்றே தவறான பொருளை உரைத்தான், யாதவப்ரகாசன்.

"மாலவன் தனது கண்களைத் திறக்க, அவனது நேத்திரங்கள் செம்மையாகக் காட்சியளித்தன. எப்படி என்றால், வானரத்தின் புட்டத்தைப் போன்று செம்மை

வண்ணத்தைக் கொண்டிருந்தன!" - யாதவப்ரகாசன் கூறியதும் துடிதுடித்துப் போனான் இளையாழ்வார்.

அவனது கண்களில் திரண்ட நீர், சூடாக குரு யாதவப்ரகாசனின் தோளினில் சிந்தின. திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினான், யாதவப்ரகாசன்.

"இளையாழ்வாரே! எதற்காகக் கண்ணீர் உகுக்கின்றாய்?" - யாதவப்ரகாசன் கேட்டான்.

"புண்டரீகம் என்பதற்குத் தவறாகப் பொருள் கொள்கின்றீரே, ஆசானே! புண்டரீகம் என்றால் கமலம் அல்லவோ? அன்றலர்ந்த கமலத்தைப் போன்றல்லவா திருமாலவனின் கண்கள் உள்ளன என்று அந்தப் பதம் உரைக்கின்றது. அன்றாடம் மரங்களில் தாவி விளையாடிப் புணரும் குரங்குகளின் புட்டத்தைக் கவனியாமல், நீர் நிர்மலமான தடாகங்களில் மலரும் தாமரைகளைக் கவனித்திருந்தால் சரியான பொருளை உரைத்திருப்பீர்கள்?"

புண்பட்ட மனதை ஆற்ற வேண்டி, சற்று மிகையாகவே இளையாழ்வார் பேசிவிட, சினத்துடன் துள்ளி எழுந்தான், யாதவப்ரகாசன்.

"அடேய்! நீ பெரிய மேதாவி என்று நினைப்போ? குருவுக்கே அறிவுரை கூறுமளவுக்கு வளர்ந்துவிட்டாயா? நீ ஒன்றும் எனக்குத் தைலலேபனம் செய்ய வேண்டாம். போ! எனது கண்முன் நிற்காதே. பிநாகபாணி! நீ எனக்கு நீர்விடு!" என்றவன் அங்கிருந்த மணை ஒன்றில் அமர்ந்து கொள்ள, பிநாகபாணி அவர் தலையில், கொதிக்கும் நீரில், சற்றுக் குளிர்ந்த நீரைச் சேர்த்து, விளாவி, அவரது தலையில் சேர்த்தான்.

கனத்த இதயத்துடன், தனது மனைக்கு புறப்பட்டான், இளையாழ்வார். இது அன்றாடம் நடைபெறும் கூத்துதான். மாலவனை யாதவப்ரகாசன் நிந்திப்பதும், அதனை எதிர்த்து இளையாழ்வார் குரல் கொடுப்பதும், மற்ற சீடர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்தது.

குருவின் சினம் தணியும் வரை அவரது கண்களில் இளையாழ்வார் படக்கூடாது என்பதற்காகவே அகத்துக்குப் புறப்பட்டான்.

தான் அரைத்த வாசனைத் திரவியங்களைத் திரட்டிக் கொதிக்கும் நீரில் சேர்த்தான், கோவிந்தன். கண்களை மூடி அமர்ந்திருந்த யாதவப்ரகாசன், கோவிந்தன் அங்கே இருப்பதை உணரவில்லை. பிநாகபாணியும் கோவிந்தனுக்கு முதுகை காட்டியபடி குருவுக்குப் பணி விடை செய்து கொண்டிருந்ததால், அவனைக் காண இயலவில்லை.

"அடேய் பிநாகபாணி. அத்வைத பொருளை எதிர்த்து இளையாழ்வார் அளிக்கும் பதங்கள் எனது கோபத்தை அதிகரிக்கச் செய்கின்றன. இனியும் அவனை உலவ விடுவது ஆபத்து. எனது புகழுக்கே களங்கத்தை ஏற்படுத்துவான். நாம் புறப்பட இருக்கும் கங்கைக்கரை யாத்திரையின் போது, அவனை கங்கையில் மூழ்கடித்து விட்டு, வந்துவிடலாம். ஆற்றோடு போய்விட்டதாக அவனது குடும்பத்தாரிடம் கூறிவிடுவோம், என்ன?"- யாதவப்ரகாசன் கூற, தலையசைத்தான், பிநாகபாணி. கோவிந்தன் இளையாழ்வாரை தேடி வந்து தகவலை தெரிவித்தான்.

"அவ்வளவு தூரம் என்னை வெறுத்துவிட்டாரா, நமது ஆசான்!" - வேதனையுடன் கூறிய இளையாழ்வார், பிறகு நீண்ட பெருமூச்சு ஒன்றை சிந்தினான்.

"இதுதான் தெய்வ சங்கல்பம் என்றால், அப்படியே நடந்துவிட்டுப் போகட்டும்!" - தனக்குள் முணுமுணுத் தான்.

"அண்ணா! அவசரப்பட்டு முடிவை எடுக்காதீர்கள். தத்துவங்களை உலகத்திற்கு விளக்கி உண்மையான கருத்துகளை போதிக்க, நீவீர் வருங்காலத்திற்கு வேண்டும் அல்லவா? எனவே நீர் குருகுல வாசம் செய்தது போதும். நீங்கள் தப்பிச் செல்லுங்கள். காலம் வரும் போது மீண்டும் இணைவோம்!" - கோவிந்தன் கூறினான்.

"என் மீதுள்ள கோபத்தில் உன்னை ஏதாவது செய்துவிடப் போகிறார், குரு!" - இளையாழ்வார் கவலைப்பட்டான்.

"அதை தங்களுக்காகப் பெருமையுடன் ஏற்பேன்!"- கோவிந்தன் அண்ணனைப் பணிய, அவனை ஆதூரத்துடன் அணைத்த இளையாழ்வார், தனது வழியே நடந்தான்.

அவனுக்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது தெரிந்துவிட்டது. தனது பெற்றோர் தனது மனைவியிடம் படும் பாட்டை அறிந்திருந்த அவன் அதற்கு ஒரு முடிவு கட்ட எண்ணினான். தான் போகும் இடத்திற்குத் தனது மனைவியையும் உடன் அழைத்துச் சென்று விட்டால், தனது பெற்றோரை தமக்கையரும் மழலைமங்கல* சிற்றன்னையும் கவனித்துக் கொள்வார்கள் என்று நம்பினான்.

'மனைவியை அழைத்துக்கொண்டு எங்கே போவது?' யோசித்தபடியே ஒரு மரத்தின் அடியில் அமர்ந்தான், இளையாழ்வார். அப்படியே மரத்தின் மீது சாய்ந்து அமர்ந்தவர், களைப்பினால் உறங்கியும் போனான்.

அப்போது-

"ஸ்வாமி!"

யாரோ ஒருவர் தனது தோளினைப் பற்றி உலுக்கி எழுப்புவதைக் கண்டு கண்விழித்தான், இளையாழ்வார்.

ஒரு வைணவர் எதிரே நின்றிருந்தார். இலையில் எதையோ வைத்து அவரிடம் நீட்டிக் கொண்டிருந்தார்.

இளையாழ்வார் கண்களைத் திறந்ததும், அந்த வைணவர் அவனை புன்சிரிப்புடன் நோக்கினார்.

"சுவாமி! மிகவும் களைப்புடன் உறங்கிக் கொண்டிருந்தீர். உமது செம்மையான முகம் பசியினால்

* மழலைமங்கலம் இப்போது காஞ்சிக்கு அருகில் மதுரமங்கலம் என்று அழைக்கப்படும் கிராமம்.

வாடி இருந்தது. எனவேதான் தங்களை உறக்கத்திலிருந்து எழுப்பினேன். இந்தாருங்கள்! இதனை அருந்துங்கள்!"- அந்த வைணவர் கூறினார்.

"தாங்கள் யார்? இவை என்ன?" - இளையாழ்வார் வியப்புடன் கேட்டான்.

"எனது பெயர் மணப்பாக்க சுத்தசத்வ நம்பி. இவை அத்திமலையானும், பெருந்தேவியும் அமுது செய்த பிரசாதங்கள். அவனது ஆலயத்திலிருந்து எனது கிராம மான மணப்பாக்கத்துக்குச் சென்று கொண்டிருக்கும் வழியில்தான் தங்களைப் பார்த்தேன்."-சுத்தசத்வ நம்பி கூறினார்.

அத்திமலையான் அமுது செய்த அந்த மிளகோரையை ஆவலுடன் உண்டான், இளையாழ்வான். மிள கோரையின் காரலுக்குச் சுத்தசத்வ நம்பி கொடுத்த ஒரு இனிப்பு மிகவும் இதமாக இருந்தது. அதன் சுவை ,இளையாழ்வாரை மிகவும் ஈர்த்தது.

"இது என்ன வகை இனிப்பு? மிகவும் அமிர்தமாக இருக்கிறதே?" - இளையாழ்வார் கேட்டான்.

"இதன் பெயர் மணசீர் பாகு.* அத்திமலையான், பெருந்தேவி, திருமண வைபவம் நடைபெறும் பங்குனி உத்திரம் அன்று நாங்கள் இதனை செய்து பெருந்தேவிக்குத் திருமணச் சீராகச் சமர்ப்பிக்கிறோம். எங்கள் கிராமம் மணப்பாக்கம். அதன் திருமகளாகப் பெருந்தேவியைக் கருதுகிறோம். அவளது திருமணத்தை

* மணசீர் பாகு என்பது என்ன என்று தெரிந்தால் அனைவரும் வியப்படைவீர்கள். இன்றைய மைசூர் பாகுதான் அன்றைய மணசீர் பாகு. மைசூர் பாகு பிறந்த கதை தெரியுமா?

சென்னை ராமாவரம், மற்றும் மாங்காடு இடையே உள்ள கிராமம்தான் மணப்பாக்கம். இந்த ஊரைச் சேர்ந்தவர்கள் தங்களைக் காஞ்சி வரதராஜர் கோயிலில் குடி கொண்டிருக்கும் பெருந்தேவி தாயாரின் பரம்பரையில் உதித்தவர்கள் என்று கூறிக் கொண்டனர். இவர்கள்தான் பெருந்தேவியின் திருமண வைபவத்தை ஒவ்வொரு வருடமும்

*நாங்கள் நடத்துவோம். திருமணத்திற்கு முதல் நாள் மணசீர் பாகு கிளறி, அதனைக் கோபுர வடிவில் செய்து, சீர் பாடல் பாடிக்கொண்டே காஞ்சிக்குப் போவோம். திருமணம் முடிந்து மறுநாள் ஹஸ்த நட்சத்திரம் அன்று கந்தகப்பொடி உற்சவத்தை நடத்திவிட்டு, ஊருக்குத் திரும்புவோம். எனது ஊர்க்காரர்கள் முன்பே*

பங்குனி உத்திரம் அன்று நடத்தும் உரிமையைப் பெற்றவர்கள். திருமணத்திற்கு முன்பாகத் தங்கள் கிராமத்தின் சார்பாகச் சீர் கொண்டு செல்வார்கள். அரிசி, அட்சதை, நவதானியங்கள், கனிகள், தேங்காய், பீதாம்பரம், புடவை, அணிகலன், புஷ்பம், மஞ்சள், துளசி, குங்குமம், வளையல், கொலுசு ஆகியவற்றோடு, சீர்ப்பாகு என்று ஒரு இனிப்பு வகையை எடுத்துச் செல்வார்கள். திருமணச் சீராகக் கருதப்படும் இந்தச் சீர்பாகு மணசீர் பாகு எனப்படும். சீர் பாடல்களைப் பாடிக் கொண்டே ஊர்வலமாக மணப்பாக்கத்துப் பிரஜைகள் காஞ்சிபுரம் சென்று தங்கள் பெருந்தேவிக்கு சீரை ஒப்படைப்பார்கள். இந்தச் சீர்ப்பாகு பங்குனி உத்திரத்தில் மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கும்.

மணப்பாக்கத்து சுத்தசத்வ நம்பி இராமானுஜரால் ஈர்க்கப்பட்டு அவருடன் அரங்கத்திற்குச் சென்ற போது அங்கு மணசீர் பாகினை அறிமுகம் செய்தார். குலோத்துங்கனின் கொடுமைகளைத் தாளாமல், இராமானுஜர் மேல்கோட்டை சென்ற போது, அவருடைய சீடர்களால் மேல்கோட்டையில் மணசீர் பாகு அறிமுகம் செய்யப்பட்டது. மேல்கோட்டை யதுகிரியின் திருமணத்தில் மணசீர் பாகு செய்யப்பட்டது. மைசூர் மகாராஜா கிருஷ்ணராஜ வோடேயாரின் (1884-1940) தலைமை சமையல்காரர் காகாசுர மாடப்பா என்பவர் மேல்கோட்டைக் கோயிலுக்கு ஒருமுறை வந்திருந்தார். மணசீர் பாகை சுவைத்த அவர், அதன் சுவையில் மயங்கி, அதன் செய்முறையைக் கற்றுக் கொண்டு சென்றார். மைசூர் அரண்மனையான அம்பா விலாச சமையலறையில் மணசீர் பாகினை செய்து மன்னருக்குப் பரிமாறினார். அதன் சுவையில் மகிழ்ந்து போன மன்னர், அதன் பெயரைக் கேட்க, காகாசுர மாடப்பா மணசீர் பாகு என்று சொல்ல இயலாமல் தடுமாற, தனக்குப் பிடித்த அந்த இனிப்பை, மைசூர்பாகு என்று பெயரிட்டார், கிருஷ்ணாராஜ வோடேயார். நமது மணசீர் பாகு மைசூர் பாகாக வடிவெடுத்தது இப்படித்தான்.

*சென்றுவிட்டனர். நான் ஆலயப்பணிகளை முடித்து விட்டு இதோ எனது கிராமத்திற்குச் செல்கிறேன்"- சுத்தசத்வ நம்பி கூறினார்.*

*"மிகச் சுவையாக இருக்கின்றது, மணசீர் பாகு!"- இளையாழ்வார் கூறினான்.*

*"அத்திமலையான் அருந்திய இனிப்பே இவ்வளவு சுவை என்றால், அவன் இன்னும் எவ்வளவு சுவையாக இருப்பான்?" - சுத்தசத்வ நம்பி கூற, கண்கள் ஆர்வத் துடன் மின்ன, அவரை நோக்கினான், இளையாழ்வார்.*

*"காஞ்சிக்கு நடந்து சென்று கல்யாண வைபவத்தை நடத்தி வருகிறீர்களா? உங்களது நெஞ்சுரம் எனக்குப் பிரம்மிப்பை தருகிறது!" - இளையாழ்வார் கூறினான்.*

*"இதென்ன பிரமாதம்! கஜேந்திரதாசர்* என்னும் திருமாலடியார் அன்றாடம் பூவிருந்தவல்லியில்** இருந்து காஞ்சிக்குச் சென்று அத்திமலையானுக்கு ஆலவட்ட*

---

ஆதாரம்: இன்றும் வைணவ திருமணங்களில் பிரதான இனிப்பாகச் செய்யப்படுவது மணசீர் பாகு.

பாகு என்கிற சொல் தூய தமிழ்ச் சொல். கன்னடத்தில் பாகு என்கிற சொல்லே கிடையாது. பாக்கம் என்கிற சமஸ்கிருத மொழிச் சொல்லை சாதம் என்பதற்குப் பிரயோகிக்கின்றனர், கன்னடர்கள்.

மண்டியா, மைசூர் ஆகிய பகுதிகளில் மட்டுமே பிரபல்யம் அடைந்த மைசூர் பாகு, வடகன்னடத்தில் அறிமுகம் ஆகவில்லை.

சீர் பாடல், சீர் பாகு என்பதெல்லாம் தமிழ் வைணவரின் பழக்கங்கள். குலோத்துங்கன் தொல்லைக்கு அஞ்சி இராமானுஜர் ஹொய்சளம் சென்ற போது அவருடன், மணசீர் பாகு கர்நாடகா சென்றிருக்க வேண்டும்.

* கஜேந்திரதாசர் பிற்காலத்தில் திருக்கச்சி நம்பி என்கிற வைணவ ஆசானாகத் திகழ்ந்தார்.

** பூவிருந்தவல்லிதான் இன்றைய பூந்தமல்லி

கைங்கர்யம் செய்கிறார், தெரியுமா?" - மணப்பாக்கத்து சுத்தசத்வ நம்பி கூற, இளையாழ்வார் பிரமித்து நின்றான்.

"நான் அவரைக் காண முடியுமா?"

"அன்றாடம் ஸ்ரீபெரும்பூதூர் வழியாகத்தான் காஞ்சிக்குச் செல்கிறார். நீங்கள் அவரைக் காணுவது ஒன்றும் பெரிய விஷயமல்ல. எப்போதும் கையில் ஆலவட்டம் என்கிற விசிறியை ஏந்தி இருப்பார்!"- மணப்பாக்கத்து சுத்தசத்வ நம்பி கூறினார்.

"அடுத்தது என்ன என்கிற ஆயாசத்துடன் இங்கே கிடந்தேன், சுவாமி. எனக்கு நல்ல வழியைக் காட்டினீர்! நாளையே நான் அவரைச் சந்திக்கிறேன்!" என்ற இளையாழ்வார் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தனது மனையை நோக்கி நடந்தான்.

'கஜேந்திரதாசரைச் சந்தித்து காஞ்சிக்குச் செல்ல வேண்டும்!' தீர்மானத்துடன் நடந்தான் இளையாழ்வார்.

மணக்கால் நம்பி என்கிற ஆசான் பச்சைக்கீரை வாங்கித்தந்து சிற்றரசன் யாமுனன் என்பவனை வைணவத்திற்கு இழுத்தது போன்று, மணசீர் பாகின் சுவைதான் காஞ்சியை இளையாழ்வாருக்கு உணர்த்தியது. இளையாழ்வார் என்கிற நாகமணி துறவி இராமானுஜராக மாலவன் மார்பை அலங்கரிக்கும் வேளை நெருங்கிக் கொண்டிருந்தது.

மாமலையான் என்கிற மலைவாசி கூறியது போன்று, தனது கைக்குக் கிடைத்த நாகமணியை மாலவனுக்குச் சமர்ப்பிக்க வேளை நெருங்கிக் கொண்டிருந்ததை அறியாமல், அடுக்களையில் பணிகளைச் செய்து கொண்டிருந்தாள், ரக்ஷா என்கிற தஞ்சம்மா.

## 32. உறவை துறந்து.. துறவை உணர்ந்து

**கா**ஞ்சியை நோக்கி நடந்து கொண்டிருந்தனர், இளையாழ்வாரும், தஞ்சம்மாவும். தனக்கு முன்பாக யோசனையுடன் நடந்து கொண்டிருந்த கணவனைப் பரிதாபத்துடன் நோக்கினாள், தஞ்சம்மா.

'என்னை மன்னித்துவிடுங்கள் ஸ்வாமி! உங்களை மாலவனுக்கு சமர்ப்பணம் செய்துவிடுவதாக சபதம் செய்துவிட்டேன். உங்களுக்குப் பணிவிடை செய்து கொண்டு, காலம் முழுவதும் பதியை ஆராதித்து வரவேண்டும் என்று நானும் நினைத்தவள்தான். ஆனால் வேங்கடபதி என்னைச் சோதித்து உங்களைத் தனக்குத் தரும்படி கேட்டுவிட்டதால்தான், நான் உங்கள் வாழ்வை நரகமாக்கி விட்டேன். நீங்கள் என்னைவிட்டு விலகி வருகிறீர்கள் என்பதை என்னால் யூகிக்க முடிகிறது. நீங்கள் என்னைவிட்டு நீங்கியதும், நான் மீண்டும் மங்கைபுரம் சென்று உமது நினைவுகளிலேயே இறுதி வரை வாழ்வேன்.' - தனக்குள் அவள் சோகத்துடன் கூறிக் கொண்டாள்.

அந்த அத்திவனத்தினுள் பிரவேசித்த இளையாழ் வாரும், தஞ்சம்மாவும், சற்றே ஒரு மரத்தடியில் அமர்ந்து இளைப்பாறினார்கள்.

"வெகுதூரம் என்னை நடக்க வைத்துவிட்டீர்களே ஸ்வாமி. இன்னமும் எவ்வளவு தொலைவு போக வேண்டும்?"

"அத்திவனத்தினுள் நுழைந்துவிட்டோம். இந்த அடவியைக் கடந்ததும், காஞ்சி நகரம் வந்துவிடும். கஜேந்திரதாசர் நாம் தங்குவதற்கு ஜாகையைத் தயார்

செய்து வைக்கிறேன் என்று கூறியிருக்கிறார். அத்தியூர் ஆலயத்தில் பெருமாளுக்குத் திருமஞ்சனத்திற்குத் தீர்த்தம் கொண்டு வரும் பணியை எனக்கு அளித்திருக்கிறார்கள். நான் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும்?"- இளையாழ்வார் கூறினான்.

"ம்ம். நான்கூட எங்கள் அலர்மேல்மங்கையின் சன்னிதியை அன்றாடம் அலம்பிக் கோலமிடுவதைப் பாக்கியமாகத்தான் கருதி வந்தேன்.. சிறு வயது முதல் பெண்கள் தரிசிக்கும் தெய்வங்களைக் கூடத் திருமணம் ஆனதும் மாற்ற வேண்டி இருக்கிறது அல்லவா?"

"ஏன்? காஞ்சியில் பெருந்தேவி இருக்கிறாளே? அவளது சன்னிதியில் நீ கோலமிடலாமே?"

"எங்கள் அலர்மேல்மங்கையின் முகத்தில் ததும்பும் காருண்யம் உங்கள் பெருந்தேவி முகத்தில் இருக்குமோ?" - அலட்சியமாகக் கேட்டாள், தஞ்சம்மா.

இளையாழ்வார் மௌனம் சாதித்தான்.

"உங்களுக்கு நான் ஒரு பொருட்டே இல்லை. தாங்களாகவும் பேசமாட்டீர்கள். நான் கேட்டாலும் பதிலுரைக்கமாட்டீர்கள்.."

அவனைக் கோபத்துடன் உறுத்துப் பார்த்த தஞ்சம்மா, அதன் பிறகு ஒன்றும் பேசாமல் எழுந்து நடக்கத்துவங்க, அவள் போவதைக் கண்டு அவரும் எழுந்தார். கோபத்தில் தஞ்சம்மா தவறான திசையில் செல்ல, அதைக் கவனியாமல் இளையாழ்வாரும் அவளைப் பின்தொடர்ந்தான்.

சிறிது தொலைவு சென்றதும்தான் தாங்கள் திசை மாறி காஞ்சிக்குச் செல்ல வேண்டிய பாதையைத் தவறவிட்டது புரிந்தது. என்ன செய்வது என்று இளையாழ்வார் யோசித்துக் கொண்டே இருந்த போது, யாரோ பாடிக் கொண்டே அந்தப் பக்கமாக வருவது கேட்டது. ஒரு

குறவர் தம்பதியர் சென்று கொண்டிருப்பதை அவர் பார்க்க அவர்களை நோக்கி விரைந்தார்.

"அப்பா! காஞ்சிக்குப் போக வேண்டும். வழி தெரிய வில்லை. உன்னால் வழி கூற முடியுமா?"-இளை யாழ்வார் கேட்க, அவன் அவரை ஏற இறங்கப் பார்த்தான்.

"நான் அங்கேதான் போகிறேன், சாமி. வேண்டு மானால் என்னோடு வா! நான் ஊர் எல்லைக்குக் கொண்டு விடுகிறேன்."

அந்த மலைக்குறவனும், அவன் மனைவியும் நடக்க, இளையாழ்வாரும் தஞ்சம்மாவும் அவர்களுடன் வெகு தொலைவு நடந்தார்கள். இரவு படர்ந்து போனது.

"இதற்கு மேல என்னால் நடக்க முடியாது!" அந்த மலைக்குறவனின் மனைவி அங்கேயே ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டாள். "நாங்க பெண்டுங்க.. இங்கேயே இருக்கிறோம். நீங்க போய் குடிக்கத் தண்ணீர் கிடைக்குமான்னு பார்த்துட்டு வாங்க."

இளையாழ்வார் மலைக்குறவனுடன் நடக்க, தஞ்சம்மா அந்த மரத்தின் கீழேயே அமர்ந்தாள். தனது முந்தானையால் விசிறியபடி அவள் அமர்ந்திருக்க, அருகில் இருந்த மலைக்குறவரின் மனைவி அவளை ஆர்வத்துடன் பார்த்தாள்.

"காஞ்சிக்குப் போறீங்களா?" - அந்தப் பெண் கேட்டாள்.

இவளுடன் என்ன பேச்சு என்பது போன்று அந்தப் பெண்ணைப் பார்த்தாள் தஞ்சம்மா.

"பாசி மணி வேணுமா? பவழமணி இருக்கு.. போட்டுக் கறீங்களா? அந்தப் பவழத்தை போட்டுக்கிட்டாலே முகத்துல காருண்யம் ததும்பும் தெரியுமா?"

"ஒரு மணியும் வேண்டாம்! சும்மாகிட!" - தஞ்சம்மா எரிந்து விழுந்தாள்.

"ஏம்மா! இருக்கிற ஒரு நாகமணியையும் தானம் கொடுக்கப் போறீயே. பதிலுக்கு நான் தர பாசிமணியை வாங்கிப்பியோன்னு நினைச்சேன். பெருந்தேவி முகத்துல காருண்யம் இருக்கான்னு கேட்டியே! உன் முகத்துல கொஞ்சம் கூடக் கருணையே இல்லையே?" - அந்த மலைக்குறத்தி கேட்க, தேகமெல்லாம் நடுங்கிப் போக, அந்தப் பெண்ணையே உறுத்துப் பார்த்தாள், தஞ்சம்மா.

"உன்னோட புருஷன் பெரிய நிலைக்குப் போகப் போறாரு. அவர் உன்னைவிட்டு வெகு விரைவுல போயிடுவார். நீ செய்யற தியாகம் வீண் போகாது தாயி. இந்தா! இந்த பவழ மாலையை வச்சுக்க!" என்று அவள் மாலையை நீட்ட, பிரம்மிப்புடன் சென்று அதை வாங்கிக் கொண்டாள்.

"அம்மா! உன் பெயர் என்ன?" - தஞ்சம்மாவுக்கு அவளது முகம் எதையோ உணர்த்தியது.

"என்னம்மா! என்னைத் தெரியலை? மங்கைபுர மங்காவும் நான்தான். அத்தியூர் பெருந்தேவியும் நான்தான்!" - அந்தப் பெண் கூற, அயர்ந்து போய் அமர்ந்திருந்தாள், தஞ்சம்மா.

மீண்டும் அவள் கண் திறந்து பார்த்த போது தான் அமர்ந்திருந்த மரத்தில் சாய்ந்தபடி உறங்கிவிட்டிருந்ததை உணர்ந்தாள். இளையாழ்வார் தான் அவளை உலுக்கி எழுப்பியிருந்தார்.

"தஞ்சம்மா! உண்பதற்கு கனிகளைப் பறிக்கலாம் என்று மரத்தில் ஏறினேன். அங்கிருந்து அத்தியூரானின் ஆலய கோபுரம் தெரிந்தது. நாம் காஞ்சியை நெருங்கிவிட்டோம். ஆனால் மரத்தில் இருந்து இறங்கி வந்த போது அந்தக் குறவரை காணவில்லை." - இளையாழ்வார் கூற,

பரபரப்புடன் தஞ்சம்மா தன்னைச் சுற்றிப் பார்த்தாள். அந்தப் பெண்ணையும் எங்கும் காணவில்லை.

சட்டென்று குனிந்து தனது கரத்தைப் பார்த்தாள்.. அவளது உள்ளங்கையில் அந்தப் பெண் அளித்த பவழ மாலை மட்டும் பத்திரமாக இருந்தது.

மறுநாள் விடியலில், இளையாழ்வாரும், தஞ்சம்மாவும் காஞ்சியில் காலடி எடுத்து வைத்த அதே நேரம், திருக்கடல்மல்லையில் கங்கைகொண்ட சோழபுரத்தினை எழுப்புவதற்கான முதல் கல்லைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு யானை மேல் பவனி வந்துக் கொண்டிருந்தான், இராஜேந்திர சோழன். யானையின் பின்பாகச் சிவிகையில் வீரமாதேவி வந்து கொண்டிருந்தாள்.

# 33. கங்கைகொண்ட சோழபுரம்

*கி.பி.1035-*

*இராஜராஜன் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றி விட்டான், அவன் மகன் இராஜேந்திரன். தளிக்குளத் தானின் லிங்கத்தைக் கங்கைகொண்ட சோழபுரத்தில் பிரதிஷ்டை செய்து, இரண்டாம் பிரகதீஸ்வரர் ஆலயத்தை கட்டுவித்ததோடு, கங்கைகொண்ட சோழபுரத்தை தனது தலைநகரமாகவும் அறிவித்தான்.*

*கங்கைகொண்ட சோழபுரத்தின் ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.*

*உத்தரலாட மன்னன் மகிபாலன் தனது தோளில் இருந்த தங்கக் குடத்தில் கங்கை நீரைச் சுமந்து வந்து இராஜேந்திரனிடம் நீட்ட, அவன் அதைப் பெற்றுக் கொண்டு புரோகிதர்களிடம் வழங்கினான். அந்தப் புனித நீரில்தான் கங்கைகொண்ட சோழபுரத்தின் கும்பாபி ஷேகம் நடைபெற இருந்தது.*

*கங்கையைக் கடந்து சென்று உத்தரலாட நாட்டைக் கைப்பற்றி இருந்தான் இராஜேந்திரன். கடல் அலைகளாக ஆர்ப்பரித்த கங்கை நதியைக் கண்டு சோழ வீரர்கள் திகைத்து நின்றிருந்தனர்.*

*இந்த மகாநதியைக் கடந்து சென்று எப்படி உத்தரலாட மன்னன் மகிபாலனை வெல்ல முடியும்? கங்கை நதியைக் கடப்பது எங்ஙனம்?*

*இலங்கைக்குச் செல்ல முடியாமல் தவித்த ராமனைப் போன்று இராஜேந்திரன் யோசித்து நின்றான். அப்போது மின்னலென மனதில் ஒரு யுக்தி தோன்றியது.*

தனது யானைப் படைகளை ஏவிவிட்டான். யானைகள் கங்கை நதியில் வரிசையாக நிற்க, அவற்றின் மீது பலகைகளை அடுக்கி, அந்தக் கஜசேதுவின் மீது தனது படைகளை அணிவகுத்துச் சென்று உத்தரலாட மன்னன் மகிபாலனை வென்று அவனது தோளில் கங்கை நீரைக் கொணரச்செய்து, தனது ஆலயக் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.

இராஜேந்திரன் தனது தந்தை இராஜராஜனை நினைத்தான். 'தந்தையே! நீங்கள் கூறியபடி தளிக்குளத் தானுக்குப் புதிய ஆலயம் எழுப்பிவிட்டேன். மற்றொரு பிரகதீஸ்வரனாக இதோ இங்கே கோயில் கொண்டிருக் கிறான். சோழத்தின் தலைநகரை கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றிவிட்டேன். இதுவும் நீங்கள் இட்ட கட்டளைதானே. தஞ்சையில் தங்காதே என்று கூறினீர்களே! தளிக்குளத்தான் ஆலய சிவாச்சாரியார் களுக்கு இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்கிற கிராமத்தை வழங்க முடிவு செய்துள்ளேன்.. நீங்கள் கூறிய பரிகாரங்களை ஒவ்வொன்றாகச் செய்து வருகிறேன். நீங்கள் குறிப்பிட்ட அந்தச் சோழ கிருமி நான் செய்த பரிகாரங்களினால் குறைந்திருக்கும் என்று நம்புகிறேன்!'

புரோகிதர்கள், கங்கை நீரை ஆலய கோபுரத்தின் கலசத்தில் வார்க்க, இத்துடன் சோழ கிருமி அழியட்டும் என்று மனதார வேண்டிக் கொண்டான், இராஜேந்திரன்.

பெரியகோயிலின் தலைமைச் சிற்பி குஞ்சர மல்லன் இராஜராஜ ராமப்பெருந்தச்சனை பொன்னாடை போர்த்திக் கௌரவித்துப் பொற்கிழி ஒன்றை அளித்ததோடு, சிற்பங்கள் செய்யத் தனியொரு கிராமமே அவனுக்குப் பரிசளித்தான் இராஜராஜன்.

பெருந்தச்சனின் மகன் குஞ்சரமல்லன் சோமாஸ்கந்த பெருந்தச்சன் கங்கைகொண்ட சோழபுரத்தின் சிற்பி. கும்பாபிஷேகம் முடிந்த கையோடு சோமாஸ்கந்தனை கௌரவித்தான், இராஜேந்திர சோழன்.

"பெரியகோயிலை எழுப்பிய உனது தந்தை ராமதச்சனுக்குக் குறைவில்லை உனது பணிகள். உனது தந்தை ஆலயத்தை மட்டும்தான் எழுப்பினார். நீ ஆலயத்துடன் மாடமாளிகைகளையும் எழுப்பித் தலைநகரத்தையே சிருஷ்டித்துவிட்டாய். தேவேந்திரனின் அமரபட்டினம் போன்று உள்ளது நீ உருவாக்கிய நகரம். உனது புகழ் வையகமெங்கும் பரவட்டும்" என்று சோமாஸ்கந்தனை பெருமையுடன் அணைத்துக் கொண்டான்.

சோமாஸ்கந்தனுக்கு உச்சி குளிர்ந்து போனது.

அன்றிரவு-

முழு நிலா வானில் வட்டமிட்டுக் கொண்டிருக்க, பூரண நிலவொளியில் தனது படைப்பு எப்படி இருக்கிறது என்பதை ரசித்துப் பார்க்க எண்ணி, சோமாஸ் கந்தன், கங்கைகொண்ட சோழபுர ஆலயத்தினுள் நுழைந்தான். செந்நிறக் கற்கள் நிலவொளியில் ஜொலிப்பதைக் கண்டு அகமகிழ்ந்தான்.

'பாட்டுடைத் தலைவன் தளிக்குளத்தானுக்கும் ஆலயம் அமைத்துக் கொடுத்தேன். மகுடமேந்திய தலைவனுக்கும் அரண்மனை அமைத்துக் கொடுத்தேன். தலைமை அமைச்சருக்கு மாளிகை அமைத்துக் கொடுத்தேன். சோழ மக்களுக்கும் தலைநகரத்தை அமைத்துக் கொடுத்தேன். நான்கு தலைகளும் தங்குவதற்கு ஜாகை அமைத்துக் கொடுத்த நான் ஒரு நான்முகன். எனது உளி, பிரம்மாவின் படைப்புத் தண்டம்.' - தனக்குள் நினைத்தபடி ஆலயத்தின் பின்பாகச் சென்றான்.

நிலவொளியில் ஆலயத்தின் பின்பாக ஒரு கரிய உருவம் கையில் ஈட்டியுடன் உலாவிக் கொண்டிருந்தது. திகைப்புடன் அந்த உருவத்தைக் கவனித்தான். அந்த உருவமும் இவனைக் கண்டதும் அவனை நோக்கி ஊர்ந்து வந்தது.

முழுவதுமாகக் கரிய உருவம். செக்கச் சிவந்த கண்கள். உடலெங்கும் சீழ் மற்றும் புண்கள். உருவத்தின் மர்மஸ்தானத்தில் குருதி பொங்கிக் கொண்டிருந்தது. முதுகில் ஒரு குத்துவாள் சொருகியிருக்க, அதிலிருந்து குருதி பெருகிக் கொண்டிருந்தது. அதன் மார்பகங்கள் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. கையில் ஏந்தியிருந்த ஈட்டியுடன் சோமாஸ்கந்தனை வழி மறித்தது.

"நான்தான் சோழ கிருமி. ஆலயத்தை நீ எழுப்பி யிருக்கலாம். ஆனால் இப்போது அது எனக்குச் சொந்தம். எனது அனுமதியின்றி நீ எப்படி உள்ளே வரலாம்?" என்று ஈட்டியை அவனது நெஞ்சுக்கு நேராக நீட்டியபடி அந்த உருவம் முன்னேற, இரத்தமாக வாயிலிருந்து கக்கிய படி அலறிக்கொண்டு விழுந்தான், சோமாஸ்கந்தன்.

சோமாஸ்கந்தன் உயிருக்கு ஆபத்தான நிலையில் கிடக்கிறான் என்பதை அறிந்து ஓடோடி வந்திருந்தான், இராஜேந்திரன்.

"அரசே! நள்ளிரவில் நிலவொளியில் நான் எழுப்பிய ஆலயத்தைக் காணச் சென்றேன். அப்போது மிகப் பயங்கரமாகக் காட்சியளித்த சோழ கிருமி என்று தன்னை அழைத்துக் கொண்ட உருவம் ஒன்று என்னைத் தாக்க வந்தது!" என்று கூறிய போதே மீண்டும் இதயம் வெடிக்க, அவன் வாயிலிருந்து குருதி பெருகியது.

"அரசே..!" என்று அலறியபடிதான் இராஜேந்திரனின் கண்முன்பாக மரணம் அடைந்திருந்தான், சோமாஸ் கந்தன்.

செய்வதறியாது திகைத்து நின்றிருந்தான், இராஜேந்திரன்.

தனது மைத்துனனும், கங்கைகொண்ட சோழபுரத்தில் நகரத் தலைவராகவும் திகழ்ந்த மதுராந்தகன் பரகேசரி சேனாபதி வேளாளனை அவசரமாக அழைத்தான்.

*பரகேசரி இராஜராஜனின் அமைச்சரவையின் அங்கம் வகித்தவர். வீரமாதேவியின் அண்ணன்.*

*"தளிக்குளத்தானை ஆராதனை செய்து வந்த சிவாச்சாரியார்களை சமாதானம் செய்யத் தீர்மானித்துள்ளேன். அவர்கள் தங்குவதற்கென்று ஒரு கிராமத்தை ஏற்படுத்தித் தருகிறேன். அவர்களை எங்கிருந்தாலும், தேடிக் கண்டுபிடியுங்கள். தளிக்குளத்தானின் ஆலயக் கோபுரத்திலிருந்து குதித்துப் பிராண தியாகம் செய்த பிரம்மதாசரின் நினைவாக நான் அமைக்கப்போகும் கிராமத்தில் ஒரு சிவாலயத்தை எழுப்பித் தருகிறேன்."- இராஜேந்திரன் கூற, பரகேசரி சேனாபதி வேளான் உடனே அந்தச் சிவாச்சாரியார்களைத் தேடிக் குடந்தைக்குப் புறப்பட்டான். குடந்தை அருகே, திருவீழிமிழலையில் அவர்களைச் சந்தித்தான்.*

*சோழ மன்னன் இராஜேந்திரன், தனது தந்தையின் செயலுக்கு மன்னிப்பு கேட்பதோடு, அவர்களுக்கு ஒரு*

* தாங்கள் பலகாலமாக ஆராதித்த தளிக்குளத்தான் ஆலயம் இராஜராஜனால் தகர்க்கப்பட்டதைக் கண்டு மனம் நொந்து சாபமிட்டுவிட்டு, திருவீழிமிழலை என்கிற இடத்திற்குக் குடிபுகுந்தனர், இந்தச் சிவாச்சாரியார்கள். இராஜராஜனின் காலத்திற்குப் பிறகு அவனது மகன், இராஜேந்திர சோழன், இந்த சிவாச்சாரியார்களை சமாதானம் செய்து, தாமிரபரணி ஆற்றங்கரையில் இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்னும் கிராமத்தை நன்கொடை அளித்து அங்கிருக்கும் கைலாய நாதர் கோயிலில் ஆராதனை செய்யும் உரிமையை அவர்களுக்கு அளித்தான். சுமார் 450 சிவாச்சாரியர்களை அவன் இங்கே குடியேற்றினான். அம்பாசமுத்திரம் வட்டத்தில் தற்போது பிரம்மதேசம் என்கிற பெயரில் புகழ் பெற்று விளங்குகிறது இந்தக் கைலாச நாதர் ஆலயம். இந்த ஆலயத்தால் மிகவும் ஈர்க்கப்பட்ட இராஜேந்திர சோழன் தனது பள்ளிப்படையை இங்கேதான் அமைக்க வேண்டும் என்று சாசனம் எழுதி வைத்திருந்தான். அவனது மரணத்திற்குப் பிறகு அவன் இங்குதான் தகனம் செய்யப்பட்டான். அவனது ஐந்து மனைவிகளில் அவனுக்கு

*கிராமத்தை அளிப்பதாக அறிவித்திருப்பதை அறிந்து சிவாச்சாரியார்கள் பரகேசரியுடன் புறப்பட்டனர். பிரம்மதேச இராஜராஜ சதுர்வேதி மங்கலம்* என்கிற கிராமத்தின் உரிமைப் பட்டயத்தை இராஜேந்திரன் அவர்களிடம் வழங்கினான்.*

---

மிகவும் பிரியமான, வீரமாதேவி அவனுடன் உடன்கட்டை ஏறினாள். மாபெரும் அறிஞரும், புலவருமான வீரமாதேவி, இராஜராஜ சோழனின் அமைச்சரான பிரம்மதேவ சேனாதிபதி மதுராந்தகப் பரகேசரி மூவேந்தர் வேளான் என்பவரின் தங்கையாவாள். இவளைத் தவிர, முக்கிழாண்டிகள், அரிந்தவன்மாதேவி, வானவன்மாதேவி மற்றும் பஞ்சவன்மாதேவி என்கிற இன்னும் நான்கு மனைவிகளும் இராஜேந்திரனுக்கு உண்டு. ஆனால் வீரமாதேவி மட்டுமே அவனுடன் உடன்கட்டை ஏறினாள்.

## 34. ஆத்ம பரிசோதனை

அன்றிரவு-

கங்கைகொண்ட சோழபுரத்தில் பலத்த மழை பெய்து கொண்டிருந்தது.

தனக்காக எழுப்பியிருந்த சிறு மாளிகையின் உப்பரிகை மண்டபத்தில் மழையை வேடிக்கை பார்த்தபடி இராஜேந்திரன் யோசனையுடன் அமர்ந்திருக்க, அவனது இருபக்கங்களிலும், வீரமாதேவியும், பரகேசரியும் அமர்ந்திருந்தனர்.

"தஞ்சையில் இருக்காதே. தலைநகரை மாற்று!"- இராஜராஜன் தனது இறுதி கோரிக்கையாக முன் வைத்திருந்ததையும் நிறைவேற்றி இருந்தான். ஆனால் தஞ்சையில் இருந்து கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகரமாக மாற்றியிருந்ததை மக்கள் இரசிக்கவில்லை என்பதை நன்றாக அறிந்திருந்தான்.

'இதென்ன ஆணவம்? தந்தை இராஜராஜனை அதற்குள் மிஞ்சிவிட்டதாக நினைப்போ? பெரிய கோயில், பெரிய பிரகதீஸ்வரன், பெரிய அரண்மனை என்று இருக்கும் தலைநகர் தஞ்சையைவிட்டு தான் எழுப்பி இருக்கும் கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகராக அறிவிப்பானேன்?' என்று அரசல்புரசலாக அதிகாரிகளும், மக்களும் பேசி வருவதை இராஜேந்திரன் அறிந்திருந்தான்.

கங்கையை வென்று மன்னன் மகிபாலனின் தோளினில் கங்கை நீரைக் கொண்டு வந்த பெருமை யெல்லாம், தலைநகரை மாற்றிய அவனது செய்கையால், மறைந்து போனது என்று அவனது தலைமை அமைச்சரே

குறைபட்டுக் கொண்டதாகத் தகவல் வந்த போது, இராஜேந்திரன் அதனைப் பொருட்படுத்தவில்லை. தனது தந்தையின் கோரிக்கையை நிறைவேற்றுகின்றான். யார் என்ன நினைத்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை.

"பரகேசரி! எனது தந்தை இராஜராஜனின் கோரிக்கைகளைப் பெருமளவு நிறைவேற்றிவிட்டேன். அவர் அஞ்சிய சோழ கிருமியை பெருமளவில் கரைத்துவிட்டேன். தளிக்குளத்தானுக்கு ஆலயம் எழுப்பி, அவன் இருக்கும் கங்கைகொண்ட சோழபுரத்தையே எனது தலைநகரமாகவும் அறிவித்துவிட்டேன். எனது தந்தை குறிப்பிட்டிருந்த சோழ கிருமி சற்றே குறைந்திருக்கும் என்று நினைக்கிறேன்." - இராஜேந்திரன் கூற, பரகேசரி தனது தங்கை வீரமாதேவியை வியப்புடன் பார்த்தார்.

"சோழ கிருமியா? அப்படியென்றால்?" - பரகேசரி கேட்டான்.

"சோழர்கள் செய்த வினைகள் கிருமியாக வடிவெடுத்துள்ளதாக எனது தந்தையிடம் கருவூர் தேவர் கூறினாராம். பெரிய கோயிலின் கும்பாபிஷேகத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக ஒரு கரிய கோர உருவம் கையில் ஈட்டியை ஏந்தியபடி ஆலயக் கோபுரத்தின் உச்சியில் அமர்ந்திருந்ததைக் கருவூர் தேவர் பார்த்திருக் கிறார். அதனுடன் உரையாடவும் செய்திருக்கிறார். இதனை எனது தந்தையிடம் தெரிவித்து அதனைக் கரைப்பதற்கு ஆவன செய்யும்படி கூறியிருக்கிறார். அத்தையார் குந்தவை தேவியார் அதனை நம்ப மறுத்தார்."

"சோழ கிருமி எதனால் உண்டானது?" - வீரமாதேவி கேட்டாள்.

"ஒரு செயலில் உருவான கிருமிதான் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்திருக்கிறது.

அபராஜித பல்லவனுடன் நட்பு பாராட்டி, பாண்டியர்களை வென்றார், ஆதித்த சோழர். அவருக்குத் தன்வசம் உள்ள அனைத்துச் சோழப் பகுதிகளையும் கொடுத்து, தஞ்சையில் இருந்து முத்தரையர்களை விரட்டி, புதிய சோழத்தை உருவாக்க எல்லா உதவிகளையும் செய்தான், அபராஜிதன். ஆனால் அந்த நண்பனைக் கொன்று அவனது பொக்கிஷமான உக்ரோதயத்தைப் பறித்தார், ஆதித்த சோழர். அதுமட்டுமா? அவனது தங்கை திரிபுவனையைக் கடத்தி வந்து பலவந்தமாக திருமணம் செய்து கொண்டார். அண்ணனைக் கொன்று, தன்னை மணந்த ஆதித்த கரிகாலன் மீது வன்மம் கொண்ட திரிபுவனை, தனது மகனுக்கு அரியணையைக் கேட்டு வாங்கிப் பெற்றுக் கொண்டாள். இதனால் மனம் நொந்த சோழ அரசி இளங்கோபிச்சி, எனது மகன் கன்னரதேவனுக்குக் கிடைக்காத அரியணை இனி வரும் எந்த மூத்த பிள்ளைக்கும் கிடைக்காமல் போகட்டும் என்று சபித்தாள். முறையில்லாமல், கன்னரதேவனைப் புறக்கணித்துவிட்டு அரியணையில் ஏறிய ஆதித்த சோழரின் மகன் பராந்தகன் என்ன சுகத்தை அனுபவித்தார்?" - இராஜேந்திரன் கேள்வியுடன் சற்று இடைவெளிவிட்டான்.

"உண்மை! தக்கோலம் போரில் தம்பி அரிஞ்சயனிடம் உதவி கேட்டார். ஆனால் யானை மீது போரிட்டபடியே மடிந்தார். இரண்டாவது மகன் கண்டராதித்த தேவர் மேற்கே சென்று மறைந்த தேவர் என்கிற பெயருடன் காணாமல் போனார். அரிஞ்சயன் ஆற்றூர் போர்க் களத்தில் நோய்வாய்ப்பட்டு ஆறே மாதங்களுக்கு ஆட்சி செய்துவிட்டு மறைந்தார். நான்காவது மகன் உத்தமசீலன் பாண்டியர்களால் தலை கொய்யப் பட்டார்." - வீரமாதேவி கூறினாள்.

"முதல் தலைமுறையைச் சேர்ந்த கன்னரதேவனுக்கு அரியணை மறுக்கப்பட்டது. இரண்டாம் தலை

முறையைச் சேர்ந்த பட்டத்து இளவரசன் இராஜாதித்யன் தக்கோலம் போரில் இறந்தான். மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த ஆதித்த கரிகாலனால் மட்டும் மன்னனாக முடிந்ததா?" - இராஜேந்திரன் கேட்க, திகைத்தான், பரகேசரி.

"உண்மைதான்!" என்று தங்கையை வியப்புடன் பார்த்தபடி இராஜேந்திரனின் கூற்றை ஆமோதித்தான்.

மெத்த சரித்திர அறிவைக் கொண்டிருந்த வீரமாதேவியும், தனது கணவனை யோசனையுடன் பார்த்தாள்.

"எனது பெயரைக் கொண்ட அரிஞ்சயரின் மனைவி, குந்தள மன்னன் மூன்றாம் கோவிந்தனை திருமணம் செய்து கொண்டார் அல்லவா? பெண்மோகம் கொண்ட அவர், தனது மைத்துனர் அரிஞ்சயரையும் பெண் பித்தனாக மாற்றி, ஊரில் உள்ள பெண்களின் பாவங்களையெல்லாம் சேர்த்துக் கொண்டார் அல்லவா? தக்கோலம் போரில் பிருத்விபதி, கிருஷ்ணன், பூதுகன் என்று மூவரின் தாக்குதலை ஒரே சமயத்தில் சமாளிக்க இயலாமல் இராஜாதித்யர் அரிஞ்சயரை உதவிக்கு அழைக்க, அரிஞ்சயர் உடனே போர்க்களம் புகாமல், தான் கண்ட ஒரு அழகிய பெண்ணுடன் சல்லாபித்துக் கொண்டு பொழுதை கழித்ததாலேயே இராஜாதித்யர் உயிரை இழக்க வேண்டி இருந்தது. அரிஞ்சயர் வேறு சோழத்திற்குப் பெண்களின் சாபங்களைப் பெற்றுத் தந்தார்!" - வீரமாதேவியின் குரலில் வருத்தம் இழையோடியது.

"எனது தந்தையை இறுதி நாட்களில் அதிகம் வாட்டியது, தனது அண்ணன் ஆதித்த கரிகாலனின் கொலைதான். தான் அரியணையில் அமர வேண்டும் என்பதற்காகத் தனது நலவிரும்பிகளில் யாரோதான் ஆதித்த கரிகாலனைக் கொன்றுவிட்டார்கள் என்று

எனது தந்தை மனம் வெதும்பிக் கூறினார். பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் ஆதித்த கரிகாலனைக் கொன்றிருந்தால் எனது பாட்டனார் சுந்தர சோழர் எதற்காகக் காஞ்சியில் சென்று இறக்க வேண்டும்? எனது பாட்டியார் எதற்காகத் தனது மற்ற குழந்தைகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல், உடன்கட்டை ஏறவேண்டும். ஆதித்த கரிகாலனாரின் மறைவுக்குப் பிறகு அவர்கள் ஏன் தஞ்சையில் காலடி வைக்காமல் இருக்க வேண்டும்? இரகசியமாக, தஞ்சையில் தங்காதே, தலைநகரை மாற்று! என்று கூறுமளவுக்கு அல்லவா தஞ்சையை வெறுத்திருந்தார், இராஜராஜன்."

"மன்னரே! உண்மையில் ஆதித்த கரிகாலனைக் கொன்றது யார்?" - பரகேசரி கேட்டார்.

"சேவூர் போர் நிகழ்ந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அவனது கொலை நிகழ்ந்திருக்கிறது. பத்து வருடங்களா பாண்டியர்கள் காத்திருந்தார்கள் என்கிற கேள்வியும் எழுகிறது. அவர்கள் மீது பழியைச் சுமத்தினால் யாரும் கேள்வி கேட்க இயலாது என்று அவர்கள் மீது பழி சுமத்தப்பட்டிருக்கிறது. சோழத்தின் மூத்த பிள்ளைகளுக்கு அரியணை கிடைக்காது என்கிற இளங்கோ பிச்சியின் சாபமும் கொலைகாரர்களுக்கு வசதியான காரியமாக இருந்திருக்கிறது. எனவே பழியைப் பாண்டியர்கள் மீதும், காரணத்தை இளங்கோபிச்சியின் சாபத்தின் மீதும் போட்டுவிட்டு, யாரோ எனது பெரிய தந்தையைக் கொலை செய்திருக்கிறார்கள். அவர் நீக்கப்பட்டால் யாருக்கு அதிக லாபம் என்பதை யோசித்தால், எனது தந்தைதான் அவரது மரணத்தால் பெரிய லாபத்தை அடைந்துள்ளார். இல்லையென்றால் அவருக்கு அரியணை கிட்டுவது எப்படி? எனது தந்தையோ தன்னிச்சையாக முடிவுகளை எடுக்காதவர் என்பது மிகவும் தெரிந்த விஷயம்தானே!" என்று கூறிய இராஜேந்திரன், சட்டென்று மௌனமானான்.

அங்கே அர்த்தமுள்ள மௌனம் தொடர்ந்தது. அங்கே நிலவிய நீண்ட மௌனத்தை, இராஜேந்திரனே கலைத்தான்.

"தளிக்குளத்தானுக்கு ஆலயம் அமைத்தேன். தலைநகரை மாற்றினேன். இப்போது எனது தந்தையின் கோரிக்கைகளில் இன்னும் ஒன்றைத்தான் நான் நிறைவேற்ற வேண்டும்!" - யோசனையுடன் கூறினான் இராஜேந்திரன்.

"என்ன அது, அரசே?" - பரகேசரி ஆர்வத்துடன் கேட்டான்.

"ஆதித்த கரிகாலனுக்கு மனநிம்மதி கிடைக்க வேண்டும் என்பது எனது தந்தையின் மற்றொரு கோரிக்கை." - இராஜேந்திரன் கூறினான்.

"அதை எப்படிச் செய்வது?" - வீரமாதேவி கேட்டாள்.

"எனது தந்தை என்னிடம் கூறிய தகவலை உங்களிடம் தெரிவிக்கிறேன். மிக இரகசியமாக வைத்திருங்கள். எனது பெரிய தந்தை வடபுல சேனையின் மாதண்ட நாயகராக நியமிக்கப்பட்டுக் காஞ்சியில் வாசம் செய்ய முடிவு செய்தார். கெடில நதியைக் கடந்து அவர் தெற்கே சென்றால் அவர் உயிருக்கு ஆபத்து என்பதால் எனது பாட்டி வானவன்மாதேவியின் தந்தை அவரை தஞ்சைக்கு அனுப்ப மறுத்தாராம். தான் காஞ்சியில் இருந்தபடியே சோழத்தை ஆள நிச்சயித்துக் காஞ்சியில் ஒரு பெரிய அரண்மனையைத் தேடியிருக்கிறார், ஆதித்த கரிகாலர். பல்லவர்களின் அரண்மனை ஒத்தாடை மாளிகை மிகவும் சிறியதாக இருந்ததால், புதிய மாளிகை ஒன்றை எழுப்பத் திட்டமிட்டிருக்கிறார். அப்போது பிரவாள மாளிகை என்கிற பாழடைந்த மாளிகை ஒன்று தட்டுப்பட, அதனை இடித்துக் கட்ட முடிவு செய்திருக்கிறார். சரியாக கங்க மன்னன் பிருத்விபதி பரிசாக அளித்த பாணபத்திரம் கிடைக்க, அதன் மூலம் தங்கச் சுரங்கங்களைக் கைப்பற்றி, அந்த ஸ்வர்ணத்தைக்

கொண்டு காஞ்சியில் பொன்னாழியை எழுப்பினார், ஆதித்த கரிகாலர். பிரவாள மாளிகையை இடித்த போது, பல்லவர்களின் பொக்கிஷமான அத்திமலைத்தேவனின் சிலை கிடைத்திருக்கிறது. அதற்குரிய உக்ரோதயம் என்கிற ஆபரணமும் பழையாறை கஜானாவில் இருந்திருக்கிறது. உக்ரோதயத்தை அணிவித்து அத்திமலையானைக் கொண்டு ஒரு மன்னன் அஸ்வமேத யாகத்தைச் செய்தால், உலகையேவெல்லலாம் என்று அறிந்த எனது பெரிய தந்தை ஆதித்த கரிகாலன், அந்தச் சிலையையும், உக்ரோதயத்தையும் கைப்பற்றிப் பதுக்கினார். தான் மன்னனாக அரியணையில் அமர்ந்ததும் அஸ்வமேதம் செய்ய வேண்டும் என்று காத்திருக்க, கடம்பூரில் அவனது பிணம் கிடைக்கிறது. தான் கொலை செய்யப்படுவோம் என்று எதிர்பார்த்திருந்த ஆதித்த கரிகாலன், பல்லவ பொக்கிஷங்களைப் பொன்னாழியில் பதுக்கி வைத்திருக்க வேண்டும். அவற்றைக் கைப்பற்றி நாம் அஸ்வமேதம் செய்தால், நம்மைப் பிடித்த சோழ கிருமியும் நீங்கும். ஆதித்த கரிகாலனுக்கு மன அமைதி கிட்டும்!" - இராஜேந்திரன் கூறினான்.

வீரமாதேவி திகைத்தாள். குந்தவை தனது மரணப் படுக்கையில் இதே கோரிக்கையைத்தானே விடுத்திருந்தாள்.

"மன்னரே! குந்தவை பிராட்டியாரும், என்னிடம் இதே கோரிக்கையைத்தான் தனது மரணப்படுக்கையில் இருந்த போது விடுத்திருக்கிறார்."

"இருக்கலாம். ஆனால் எனது தந்தை விடுத்த கோரிக்கையின் நோக்கமும் எனது அத்தையார் விடுத்த கோரிக்கையின் நோக்கமும் வேறாக இருக்கும். அஸ்வமேதம் செய்தபின் அத்திமல்லைத்தேவனின் சிலையையும், உக்ரோதயத்தையும் மீண்டும் காஞ்சி அத்திமலையானின் ஆலயத்தில் ஒப்படைக்க வேண்டும்

என்பது ஆதித்த கரிகாலனின் விருப்பம். அதைத்தான் எனது தந்தை தெரிவித்திருந்தார். எனது அத்தையார் இந்த எண்ணத்தைப் பிரதிபலித்தாரா?" - இராஜேந்திரன் கேட்டான்.

"இல்லை!" - தலையசைத்தாள், வீரமாதேவி.

"பூதாகரமாக வளர்ந்து இருக்கும் சோழ கிருமியை நீக்க வேண்டும் என்பதற்காக நான் பாடுபடுகிறேன். வருங்கால நமது சந்ததியினர் நல்லபடியாக வாழ வேண்டும் என்றால், இனி சோழ மண்ணில் சூழ்ச்சிகள் அரங்கேறக் கூடாது. சூழ்ச்சிகளால்தான் சாபங்கள் திரளுகின்றன. போரில் சோழர்கள் செய்யும் கொலைகள் போதும். சூழ்ச்சி கொலைகள் இனி தேவையில்லை. எனவே, அத்திமலையானின் சிலையைக் கண்டெடுத்து அஸ்வமேதம் செய்து ஆதித்த கரிகாலரின் மனதைக் குளிர்வித்துவிட்டு, பிறகு நாம் அதனை அத்திமலை யானின் ஆலயத்தில் சேர்ப்போம்." - இராஜேந்திரன் கூறினான்.

"பொன்னாழியில் நான் நன்றாக அலசித் தேடி விட்டேன், அரசே. அங்கே பொக்கிஷங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை." - வீரமாதேவி கூறினாள்.

"எங்கிருந்தாலும் அதனைத் தேடிக் கண்டுபிடிப்போம். பரகேசரி! உமக்கு இந்தப் பொறுப்பைத் தருகிறேன். எப்பாடுபட்டாவது, அத்திமலைத்தேவன் சிலையைக் கண்டு பிடிக்க வேண்டும். எனது பெண் மங்கையின் புதல்வன், அனபாய இராஜேந்திரன்* மற்றும் எனது மனைவி வீரமாதேவி இருவரும் உங்களது தேடுதல்

* இராஜராஜ சோழனின் புதல்வியும், முதலாம் இராஜேந்திரனின் தங்கையுமான குந்தவி வேங்கி நாட்டு மன்னன் விமலாதித்தனை மணந்து கொண்டாள். அவர்களது மகன் இராஜராஜ நரேந்திரனுக்குத் தனது மகள் அம்மங்கையை மணமுடித்தான். அவர்களுக்குப் பிறந்த

*வேட்டைக்கு உதவியாக இருப்பார்கள்!" - இராஜேந்திரன் கூற, பரகேசரியும், வீரமாதேவியும் தலை பணிந்தனர்.*

*"இதனை உடனடியாக நாம் செய்து முடிக்க வேண்டும். காரணம், சோழ கிருமி பூதாகரமாக வளர்ந்து கொண்டே போகிறது. கருவூர் தேவர் அதனைப் பார்த்த போது இல்லாத உக்கிரம் நேற்று அதனிடம் தெரிந்திருக்கிறது. அந்தக் கிருமியைக் கண்ட சிற்பி பெருந் தச்சனார் சோமாஸ்கந்தர் அதிர்ச்சியில் மரண மடைந்தார்." - இராஜேந்திரன் கூற, வீரமாதேவி அச்சத்துடன் தனது தமையன் பரகேசரியை நோக்கினாள்.*

*"உடனே பணியில் இறங்குகிறோம்!"-பரகேசரி கூறினார்.*

*சோழ கிருமியை ஒழிக்க வேண்டும். இனி சூழ்ச்சிகள் சோழத்தில் நிகழக்கூடாது என்று உறுதிபடக் கூறியுள்ளான், இராஜேந்திரன். தனது பெரியப்பன் ஆதித்த கரிகாலன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டதால் தான் சோழ கிருமி வளர்ந்துள்ளதாக நினைக்கிறான். அந்தக் கிருமியை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறான். ஆனால் அந்தக் கிருமி நீங்குமா? தஞ்சை பெரிய கோயிலில் கருவூர் தேவர் கண்டிருந்த ஈட்டியுடன் அலையும் அந்தக் கரிய உருவத்தைக் கொண்ட சோழ கிருமி நீங்குமா.. என்பது போகப் போகத்தான் தெரியும்?*

---

மகன்தான் அனபாய இராஜேந்திரன். இவன் தனது தாத்தா முதலாம் இராஜேந்திரன் மாளிகையில்தான் வளர்ந்தான். சோகம் என்னவென்றால், முதலாம் இராஜேந்திரனுக்கு நான்கு மகன்கள் இருந்தும் அவர்கள் யாராலும் நிலையான ஆட்சியைக் காண முடியாமல், இராஜேந்திரனின் பெயரன் அனபாயன்தான் முதலாம் குலோத்துங்கனாகப் பதவி ஏற்கிறான்.

# 35. காற்றினிலே ஒரு குரல்

பூவிருந்தவல்லியைச் சேர்ந்த கஜேந்திரதாசர் அத்திமலைத்தேவனின் பேரருளைப் பெற்றவர். வைணவர்கள் அவரை திருக்கச்சி நம்பிகள் என்று பணிவுடன் அழைத்தனர். அத்திமலையானுக்கும் திருவாலவட்டம் என்கிற விசிறி வீசும் பணியை பக்தி சிரத்தையுடன் செய்து வந்தார். அவ்வாறு ஆலவட்ட கைங்கர்யம் செய்யும் போது அவர் தன்னை மறந்து விடுவார். சூழ்நிலையை மறந்து போவார். தனது முன்பாக இருக்கும் அத்திவரதனைத் தவிர அவருக்கு வேறு எந்த உணர்வும் இருக்காது. அன்றாடம் விடியலில் பூவிருந்தவல்லியைவிட்டு நீங்கி, காஞ்சிக்குச் சென்று தனது கைங்கர்யத்தை முடித்துவிட்டு மீண்டும் இரவு திரும்புவார். உடனே விடியலில் காஞ்சிக்குப் புறப்பட்டு விடுவார்.

பெரும்பூதூர் வழியாக நம்பி செல்லும் போதுதான், இளையாழ்வார் தன்னை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டார்.

"குருகுல வாசத்தை ஏன் முடித்துக் கொண்டீர்?"- திருக்கச்சி நம்பி கேட்டதும், யாதவப்ரகாசனுக்கும், தனக்கும் இடையே நிகழ்ந்த சச்சரவைப் பற்றிக் கூறினார்.

"கமல நயனங்களை வானர புட்டம் என்று கூறும், சிந்தைக்கு நான் எப்படித் தொண்டாற்றுவது?"- இளையாழ்வான் கேட்ட்தும், ஒருகணம் அவனையே உறுத்துப் பார்த்தார், திருக்கச்சி நம்பி.

"இதோ ஒரு வைணவ சூரியன் புறப்படுகிறான். அவனுக்கு உன்னால் முடிந்த பரோபகாரங்களைச்

செய்!" என்று அத்திமலையானின் குரல் தனது காதில் ஒலித்தது போன்று தோன்றியது, கஜேந்திரதாசருக்கு.

"நான் ஏற்பாடுகளைச் செய்து வைக்கிறேன். அங்கே ஆலயத்தில் தீர்த்த கைங்கர்யம் செய்ய ஆள் தேவைப் படுகிறது. நீர் வாரும். உங்களுக்கு தங்குவதற்கு ஜாகை முதற்கொண்டு அனைத்து ஏற்பாடுகளையும் நான் செய்கிறேன்!" என்று வாக்குக் கொடுத்துவிட்டுத்தான் காஞ்சிக்கு தொடர்ந்து சென்றிருந்தார், கஜேந்திரதாசர்.

அதன் பின்னர்தான், இளையாழ்வார் பெற்றோரிடம் விடைபெற்றுக் கொண்டு, தஞ்சம்மாவையும் அழைத்துக் கொண்டு காஞ்சிக்குப் புறப்பட்டிருந்தான்.

"கஜேந்திரதாசருடனேயே காஞ்சிக்குச் செல்லலாமா ரக்ஷா?" - இளையாழ்வார் கேட்டான்.

"ஏன்? அவரது ஆலவட்டத்தைச் சுமந்து வர ஆள் தேவைப்படுகிறதோ?" காட்டத்துடன் தஞ்சம்மா கேட்க, அவளையும் உடன் அழைத்துச் சென்று, அவள் திருக்கச்சி நம்பியை அவமதித்துவிட்டால் என்ன செய்வது என்கிற கவலையில், அந்த எண்ணத்தைக் கைவிட்டான், இளையாழ்வார்.

மறுநாள் விடியலில் புறப்பட்ட அவர்கள், அந்தக் குறவர் தம்பதியைச் சந்தித்துப் பெரும் திகைப்பில் ஆழ்ந்திருந்தனர். அத்திவரதனும், பெருந்தேவியும்தான் தங்களுக்கு வழிகாட்ட வந்திருந்தனர் என்பதை இருவருமே உணர்ந்திருந்தனர் என்றாலும், மனைவி அதனை நம்பமாட்டாளோ என்கிற எண்ணத்தில் இளையாழ்வாரும், கணவர் அதனால் நெகிழ்ந்து போய் அப்போதே வரதனுக்குத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டுவிடுவாரோ என்கிற அச்சத்தில் தஞ்சம்மாவும், அதனைப் பற்றித் தொடர்ந்து எதுவுமே பேசாமல் இருந்தனர்.

கணவன் தன்னைப் பிரியும் நேரம் விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அந்தக் குறவப் பெண்மணி உணர்த்தியதில் இருந்தே தஞ்சம்மா மிகவும் வேதனை அடைந்திருந்தாள். இன்னும் சிறிது காலமே, தனது கணவனுடன் இவள் சேர்ந்திருக்கப் போகிறாள்.

அன்று மட்டும் இவள் வேங்கடவன் சிலையைக் காண கோதண்டரமனுடன் செல்லாமல் இருந்திருந்தால், இன்று கணவனைப் பிரிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்குமா?

காஞ்சியில் இருவரும் நுழையும் போது, சரியாகத் திருக்கடல்மல்லையில் இருந்து இராஜேந்திர சோழன் பட்டத்து யானையின் மீது முதல் கல்லை எடுத்துச் சென்று கொண்டிருந்தான்.

இன்று இவர்கள் காஞ்சிக்கு வந்து ஐந்தாண்டுகள் ஆகிவிட்டன. கங்கைகொண்ட சோழபுரம் சோழர்களின் தலைநகரமாகக் கூட மாறிவிட்டது.

அத்திமலைத்தேவன் ஆலயத்தின் கிழக்கு வாசல் முன்பாகவே இவர்களுக்குப் பெரிய ஜாகை கிடைத்து விட்டது. நீண்ட இரண்டு கட்டுமனை. முழுவதும் இவர்கள் இருவர் மட்டும்தான்.

அகத்தைச் சுற்றிக் காட்டிய கஜேந்திரதாசரிடம், "நம்பிகளே! எங்கள் இருவருக்கு எதற்காகக் கடல் போன்ற இவ்வளவு பெரிய மனை?" - இளையாழ்வார் கேட்டான்.

'பாற்கடலில் இருந்து பெருகும் காருண்யத்தை மக்களுக்கு வாரி வழங்கப்போகின்ற தங்களுக்குக் கடலைப் போன்ற மனை அவசியம்தான்!' - மனதிற்குள் கூறிக் கொண்டார், திருக்கச்சி நம்பி.

"சற்று இப்படி வாருங்கள்!" - தஞ்சம்மா தனது கணவனை அழைத்தாள்.

அவள் பெரிதாக என்ன கூறிவிடப் போகிறாள்? இளையாழ்வாருக்கு மட்டுமல்ல, திருக்கச்சி நம்பிக்கும் தஞ்சம்மா கூற விரும்புவது என்னவாக இருக்கப் போகிறது என்பதை யூகிக்க முடிந்தது.

"இதோ பாருங்கள்! முதற்கட்டில் நீங்கள் தங்கிக் கொண்டு உங்கள் ஆலவட்டத் திருப்பணியைச் செய்து கொள்ளுங்கள் என்று தாராள தர்மபிரபுவாக யோசனை கூறாதீர்கள். வரதனுக்கு விசிறி வீசுகிறார் என்பதற்காக நான் அடுப்படியில் அவருக்காக வெந்து கொண்டிருக்க முடியாது. பிறகு எனக்கு யார் விசிறி வீசுவார்கள்?" - தஞ்சம்மா முணுமுணுத்தாள். தவறு.. இளையாழ்வாரை துறவறத்திற்குத் தயார் செய்து கொண்டிருந்தாள்.

புன்னகையுடன் அதனைக் கேட்டபடி நின்றிருந்தார், திருக்கச்சி நம்பி. எது எது எப்போது எப்படி நடக்க வேண்டுமோ, அப்படிதான் அதனை நடத்திக் கொண்டிருக்கிறான், அத்திமலைத்தேவன்.

மெதுவாக வாயிலில் இருந்த திண்ணையில் சரித்திருந்த தனது திருவாலவட்டத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார், திருக்கச்சி நம்பி.

அவர் பின்பாக இளையாழ்வார் விரைந்தான்.

"திருமஞ்சனம் நடைபெற உள்ளது, இளையாழ்வாரே! நான் ஆலவட்டம் கைங்கர்யம் ஆற்ற வேண்டும்!" என்றவர், சற்றே யோசனையுடன் நின்று, இளையாழ்வாரை திரும்பி நோக்கினார்.

"இளையாழ்வாரே! திவ்ய பிரபந்தங்களை, அதன் பதங்களை அறிவீரோ?"

இளையாழ்வார் சற்றே வெட்கத்துடன் அவரை பார்த்தான். "இல்லை நம்பிகளே. யாதவப்ரகாசனின் குருகுலத்தில் பயின்ற வரை அதற்கான வாய்ப்பு கிட்ட வில்லை. இனிமேல்தான் எனது ஆசான் பெரியநம்பிகள்

*எனக்குத் திருவிலச்சினை* பதித்துப் பிரபந்தங்களைக் கற்றுத் தருவதாக வாக்களித் திருக்கிறார்." - இளையாழ்வார் கூறினான்.*

*"அப்படியென்றால், அவரை உங்கள் மனையின் முதல்கட்டுப் பகுதியில் தங்க வைத்து, பிரபந்தங்களை அன்றாடம் கற்றுக்கொள்ளுங்கள்!" - திருக்கச்சி நம்பி அவரிடம் கூறிவிட்டு அகன்றார்.*

*இளையாழ்வாருக்கு அது நல்ல யோசனையாகப் பட்டது. திருவரங்கத்தில் இருந்து பெரியநம்பியை வரவழைத்து, மதுராந்தக ராமனின் ஆலயத்தில் திருவிலச்சினை பதிப்பித்துக் கொண்டு, அவரையும், அவரது மனைவி, விரஜை அம்மங்காவையும் தனது மனையின் முன்கட்டில் தங்க வைத்தார். அன்றாடம் திவ்யப் பிரபந்தங்களைக் கற்று அறிந்தார்.*

*விடியலில் எழுந்து நீராடி, பெரியநம்பியிடம் பிரபந்தங்களைக் கற்றுக் கொண்டு வரதனின் ஆலயத்திற்கு நீர் கொண்டு செல்வது அவரது வழக்கம். அவரது மனையின் வாயிலிலேயே கிணறு** இருந்தது.*

*இளையாழ்வார் தனக்கு அளிக்கப்பட்ட தீர்த்தம் சேகரிக்கும் பணிகளை அன்றாடம் சிரத்தையுடன் செய்து*

---

* திருவிலச்சினை என்பது சங்கு சக்கர முத்திரை. பெரிய நம்பியின் பெயர் மஹாபூர்ணர். இவர்தான் இராமானுஜரின் ஆசான். அவருக்குப் பிரபந்தங்களைக் கற்றுத் தந்தவர். மாறநேரி நம்பி என்கிற ஒதுக்கப்பட்ட குடியைச் சேர்ந்த தொண்டருக்கு இறுதிச் சடங்குகளைச் செய்து பரபரப்பை ஏற்படுத்தி, இராமானுஜரின் அபிமானத்தைப் பெற்றவர். இறுதியில், இரண்டாம் குலோத்துங்க சோழனால் கைது செய்யப்பட்டு, கண்களையும், உயிரையும் பறிகொடுத்தவர், பெரியநம்பி. நூற்றுஐந்து ஆண்டுகள் வாழ்ந்தார், பெரியநம்பி.

** இன்றும் சாலைக் கிணறு என்று இராமானுஜர் வாழ்ந்த மனையின் வாசலில் அந்தக் கிணறு இருக்கிறது. வரதர் கோயிலின் கிழக்குக் கோபுரத்தின் எதிரே உள்ள வீதியில் நுழைந்ததும், இடப்புறம் அந்தக் கிணறு உள்ளது.

கொண்டிருந்தார். பெரியநம்பியிடம் கற்கும் பிரபந்தங்களும், திருக்கச்சி நம்பியுடன் ஏற்பட்ட நெருக்கமும், இளையாழ்வாரின் மனதினுள் உறங்கிக் கொண்டிருந்த இராமானுஜனை தட்டி எழுப்பின.

தனது கணவனிடம் ஏற்படும் மாற்றங்களைத் தஞ்சம்மா உணராமல் இல்லை. தான் மாலவனுக்குத் தருகிறேன் என்று வாக்களித்திருந்த தன்னுடைய நாகமணி தன்னைவிட்டு முழுவதுமாக நீங்கப் போகின்றது என்பதை உணர்ந்தாள். அந்தக் கோபமெல்லாம், தனது கணவனுக்குத் தமிழ்ப் பாசுரங்களைப் போதித்துக் கொண்டிருந்த பெரியநம்பியின் மீதும், கைங்கர்ய சுகத்தைப் பற்றிப் பெருமை பேசும் திருக்கச்சி நம்பியின் மீதும் பாய்ந்தது.

"ஆலவட்டம் கைங்கர்யத்திற்கு ஈடு இணை கிடையாது, இளையாழ்வாரே! சொர்க்க பதவி கிட்டினாலும் எனக்கு வேண்டாம். இந்தக் கைங்கர்யம் போதும்?" - திருக்கச்சி நம்பி கூறிக் கொண்டிருக்க, கிணற்றுக்கு நீர் சேந்தப்போன தஞ்சம்மாவின் செவிகளில் இது விழுந்துவிட்டது.

"உமக்கு மணமாகிவிட்டதா? அகத்தில் மனைவி இருக்கிறாளா?" -நையாண்டியாகத் திருக்கச்சி நம்பியை கேட்டாள், தஞ்சம்மா.

"இல்லையம்மா! நான் திருமணம் செய்து கொள்ள வில்லை! பகவான் சேவைக்கே என்னை அர்ப்பணித்து விட்டேன்!" - திருக்கச்சி நம்பி கூறினார்.

"அதுதான் பிரச்னை. காலாகாலத்தில் திருமணம் செய்து கொண்டிருந்தால், உமது மனையாளை விசிறிக் கொண்டிருப்பீர். இப்படிக் கல்யாணம் ஆன கிரகஸ்தர்களின் மனதில் வீணான ஆசைகளை விசிறிக் கொண்டு இருந்திருக்கமாட்டீர். அவரது மனதில் கைங்கர்ய ஆசைகளை மூட்டி, அதனை விசிறிவிடாதீர். அவரை நம்பி நான் ஒரு ஜீவன் இங்கே இருக்கிறேன்!"

என்று தஞ்சம்மா விடுவிடுவென்று சொல்லிவிட்டுச் செல்ல, இளையாழ்வான் பதறிப் போய்த் திருக்கச்சி நம்பியை நோக்கிக் கைகளைக் குவித்தார்.

திருக்கச்சி நம்பி அவரை அமைதியாகப் பார்த்தார்.

"கைகேயியின் கொடுஞ்சொற்களால் ராமாம்ருதம் பிறந்தது..

திரௌபதியின் கொடுஞ்சொற்களால் கீதாம்ருதம் பிறந்தது..

மதனியின் கொடுஞ்சொற்களால்.. பார்ப்போம் என்ன அமுதம் கிட்டப் போகிறது என்று?" என்றபடி திண்ணையை விட்டு நீங்கினார்.

தெருக்கோடியை அடைந்து ஆலயத்தின் கிழக்கு வாயிலினுள் நுழைந்தார். சரியாகக் கோபுரத்தைக் கடக்கும் போது அப்போதுதான் ஆலயத்தில் இருந்து கிழக்கு வாசல் வழியாகத் தனது மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்த பெரியநம்பியும் கிழக்குக் கோபுரத்தைக் கடந்து கொண்டிருந்தார்.

இரண்டு நம்பிகளும் ஒருவரையொருவர் கண்டதும் கரங்களைக் கூப்பி நிற்க, அப்போது எங்கிருந்தோ குளிர்ந்த காற்று வீச, அந்தக் காற்றின் நடுவே கிசுகிசுப்பான குரல் ஒன்று கோபுரத்தின் அடிபாகத்தில் ஒலித்தது. இரண்டு நம்பிகளின் செவிகளும் அந்த கிசுகிசுத்த குரலை உணர்ந்து உள்வாங்கினர்.

**"மதனியின் கொடுஞ்சொற்களால் இராமானுஜமுதம்**
**கிட்டப் போகிறது."**

மெய்சிலிர்த்துப் போய், இரண்டு நம்பிகளும் அப்படியே உறைந்து போய் நின்று கொண்டிருந்தனர்.

அத்திமலையானின் குரல்தானே அது? குரல்விட்டு பேசுபவன் ஏன் தான் இருக்கும் இடத்தைக் கூறாமல் ஒளிந்து கொண்டிருக்கிறான்? கலியின் விளையாட்டு

என்னும் நாடகத்தை அவன் அரங்கேற்றி அதில் அவனே கதாநாயகனாக நடிக்கிறான். கதாநாயகன் இறுதியில்தான் வெல்வது வழக்கம். அவன் எப்படி மீண்டும் தனது ஆலயத்திற்கு வரப்போகிறான்.. எப்போது வரப் போகிறான்.. என்பதெல்லாம் அவன் எழுதிய நாடகத்தில் ஏற்கெனவே குறிக்கப்பட்டுவிட்டன. அந்தக் காட்சிகள் அரங்கேறும் வரை, அனைவரும் காத்திருக்க வேண்டியது தானே.

# 36. தங்க இரதம் வந்தது..

**கி.**பி.1044-

அதிரவைக்கும் இரு பெரிய நிகழ்வுகள் நடந்த ஆண்டு.

இராஜேந்திர சோழன் காஞ்சியின் பொன்னாழியிலும், இளையாழ்வார் அத்திமலையானின் ஆலயத்துக் கிழக்கு வாயில் சன்னிதி வீதியிலும் ஒரே சமயத்தில் தங்கி இருந்த காலம்.

இராஜேந்திரன், இளையாழ்வார் இருவருமே திருவாதிரையில் பிறந்தவர்கள். மார்கழி திருவாதிரையில் இராஜராஜ சோழனுக்கும், திரிபுவனமாதேவிக்கும் பிறந்த இராஜேந்திரன், சோழ-பல்லவத்தின் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்து கங்கையை வென்று, கங்கைகொண்ட சோழபுரத்தில் செங்கோல் ஏந்திக் கோலோச்சி நின்றவன்.

சித்திரை மாத திருவாதிரையில் கேசவ ஆசூரிக்கும் காந்திமதிக்கும் பிறந்த இராமானுஜர், வைணவத்தின் தலைவனாக மாலவனது தரிசனத்தின் சக்கரவர்த்தியாகத் திருவிலச்சினைக் கோல் ஏந்திக் கோலோச்சி நின்றார்.

கங்கையைக் கடந்து இராஜேந்திரனின் புகழ் பரவியது என்றால், காஷ்மீரம் வரை இராமானுஜரின் கீர்த்தி வியாபித்து நின்றது.

தஞ்சையைவிட்டு விலகி கங்கைகொண்ட சோழ புரத்தை தலைநகராக மாற்றினான், இராஜேந்திரன்.

இராமானுஜரோ துறவறம் ஏற்று, அரங்கனின் விருப்பத்தை நிறைவேற்ற காஞ்சியைவிட்டு நீங்கி, வைணவரின் தலைநகரமாம் திருவரங்கத்திற்குத் தனது ஜாகையை மாற்றிக் கொண்டிருந்தார்.

தஞ்சம்மாவை விட்டுத் துறவறம் ஏற்கும் எண்ணம் இளையாழ்வாருக்கு ஏற்பட்ட அதே சமயத்தில், இராஜேந்திரனுக்கு உலக வாழ்க்கையின் மீது முழுவதுமாகப் பற்றுதல் நீங்கியது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து, மனைவி வீரமாதேவியுடனும், மைத்துனன் பரகேசரி சேனாபதி வேளான், தனது மகள் அம்மங்கையின் மகன் அனபாயன் ஆகியோரோடு காஞ்சி பொன்னாழி மாளிகைக்கு வந்திருந்தான். இராஜேந்திரனின் தங்கை குந்தவி, அவளது மகன் ராஜநரேந்திரன் மற்றும் அம்மங்கை மூவரும் இராஜேந்திரனிடம் வளரும் மகன் அனபாயனைக் காண்பதற்காகப் பொன்னாழிக்கு வந்திருந்தனர்.

சூரியன் மேற்கு வானில் அஸ்தமித்துக் கொண்டிருந்த சமயம்... அனைவரும் அன்று நந்தவனத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கப் பணியாளர்கள், தீபங்களை ஏற்றி, பரவிக் கொண்டிருந்த இருளை விரட்டிக் கொண்டிருந் தனர். அரசகுடும்பத்தினர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த பகுதியில் இருந்த தீபஸ்தம்பத்தில் ஒரு தீபக்கப்பரையைக் கொண்டு வைத்தான் ஒரு பணியாளன்.

பொன்னாழியின் வாயிலில் காம்போஜ நாட்டில் இருந்து தூதுவர்கள் வந்து இறங்கினர்.

"பல்லவர்களின் பங்காளிகள் வருகிறார்கள்!" - சிறிய குந்தவை கூறினாள்.

"ஒருவேளை, பல்லவர்களின் பொக்கிஷங்களான அத்திமலைத்தேவன் மற்றும் உக்ரோதயத்தைத் தங்கள் வசம் அளிக்கும்படி கேட்க வந்திருக்கிறார்களா?" - அம்மங்கை கேட்டாள்.

"அவர்கள் எதற்கு வருகிறார்களோ? நீ ஏன் அதைப் பற்றி இப்போது நினைவுபடுத்துகிறாய்?" - சிரித்தபடி கூறிய இராஜேந்திரன், அவர்களை வரவேற்றான்.

"வேந்தே வணக்கம்!" என்று காம்போஜர்கள் தலை வணங்க, அவர்களை நோக்கிக் கையசைத்தான், இராஜேந்திரன்.

"வரவேண்டும். சோழ பல்லவம் உங்களை வரவேற்பதில் பெருமை கொள்கிறது. என்ன விஷயம்?"- இராஜேந்திரன் நந்தவனத்திலேயே அவர்களுக்கும் இருக்கை போட வைத்தான்.

"நான் காம்போஜத்தின் அமைச்சர். ஹரிநாராயண வாஜபேயன். பல்லவர்களின் சகோதரர்கள் நாங்கள். எங்கள் காம்போஜ இளவரசர் பல்லவமல்லர் என்கிற நந்திவர்மன் பல்லவத்தை நீண்ட காலம் ஆண்டது தங்களுக்கு நினைவிருக்கலாம். பல்லவர்களும், நாங்களும் ஒரே குருதியைக் கொண்டவர்கள். தற்போது பல்லவத்தை நீங்கள் ஆள்வதால், எங்கள் மன்னர் சூரியவர்மன், உங்களைத் தனது சகோதரராகக் கருதி உங்களுக்கு ஒரு பரிசினை அனுப்பியுள்ளார். அதனைத் தாங்கள் ஏற்று எங்கள் மன்னரை பெருமைப்படுத்த வேண்டும்." - ஹரிநாராயண வாஜபேயன் கூற, அனைவரின் பார்வையும் நந்தவனப் பாதையில் பதிந்தது.

செம்மை வர்ணப் போர்வையால் மூடப்பட்டிருந்த ஒரு பெரிய பொருள் அந்த நந்தவனப் பாதையில் ஊர்ந்து வந்தது. இரு யானைகள் அந்தப் பொருளை இழுத்து வந்தன. வீரமாதேவி இராஜேந்திரனின் அருகில் வந்து நின்று ஆவலுடன் அந்த யானைகள் இழுத்து வரும் பொருளை நோட்டம்விட்டாள். இராஜேந்திரனும் குடும்பத்தாரும் குழுமியிருந்த பகுதிக்கு வந்ததும் யானைகள் நிற்க, நான்கு காம்போஜர்கள் அந்தப் பொருளைச் சுற்றி நின்றனர்.

ஹரிநாராயண வாஜபேயர் தனது தலையை அசைக்க, அவர்கள் நால்வரும் அந்தச் சிவப்புப் போர்வையை நீக்கினார்கள்.

உள்ளே...

*இராஜேந்திரன் பிரமித்துப் போய் எழுந்து நின்றுவிட்டான். அரசகுடும்பத்துப் பெண்கள் சுவாசிக்க மறந்து மலைத்துப் போய் நின்றனர்.*

*அங்கே நின்றது ஒரு ஸ்வர்ண இரதம்.* நவமணிகளும், பதிப்பித்து மிகவும் ஆடம்பரமாக அமைக்கப்பட்டிருந்த தேர். முற்றிலும் ஸ்வர்ணத்தைக் குழைத்து உருவாக்கப் பட்டிருந்த அந்தத் தேரின் கம்பங்களில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தது. அதன் சக்கரங்கள் வெள்ளியால் அமைக்கப்பட்டு அதில் ஸ்வர்ணக் குழைவு பூசப் பட்டிருந்தது. தேரின் உச்சியில் காம்போஜர்களின் குல தெய்வமான அத்திமலை தேவராஜனின் சிலை வடிக்கப்பட்டிருந்தது.*

*"இது தேரா அல்லது புஷ்பக விமானமா?" - வீரமாதேவி அதிர்ந்து போய்க் கேட்டாள்.*

---

* கம்போடியா என்று அழைக்கப்படும் காம்போஜத்தின் மன்னன் சூரியவர்மன் கி.பி.1044-ல் காஞ்சி பொன்னாழியில் தங்கியிருந்த இராஜேந்திரனுக்கு தங்க இரதம் ஒன்றை தனது அன்பின் கையுறையாகப் பரிசாக அனுப்பி, இராஜேந்திர சோழனின் நட்பைப் பெற்றுக் கொண்டான். இதனை விவரிக்கிறது திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கல செப்பேடு. இராஜேந்திர சோழனின் தாய் திரிபுவனமாதேவி. அவளுக்கும் இராஜராஜ சோழனுக்கும் மார்கழி திருவாதிரையில் பிறந்தவன், இராஜேந்திர சோழன். தனது தாயின் மீது மிகவும் அன்பு கொண்டிருந்த இராஜேந்திரன், சோழ மண்டலத்தின் ஐம்பத்தோரு ஊர்களை இணைத்து திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலம் என்கிற ஒரு தொகுதியாக்கி, அதில் அந்தணர்களை வசிக்க வைத்தான். திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலச் செப்பேட்டில் அவ்வப்போது தனது ஆட்சியில் நடைபெறும் நற்காரியங் களைப் பதிவு செய்து வந்தாள். ஆண்டுதோறும் இராஜேந்திரன் வழங்கிய நெல் 51050 கலம், காசு 32 1/ 2ஆகும் என்று செப்பேடுகள் கூறுகின்றன. கி.பி.1044-ல் காம்போஜ மன்னன் இராஜேந்திர சோழனுக்கு பரிசாகத் தந்த தங்க இரதத்தைப் பற்றியும் செப்பேடுகள் விவரிக்கின்றன.

ஹரிநாராயணர் பணிவுடன் இராஜேந்திரனை பார்த்தார்.

"எங்கள் மன்னர் சூரியவர்மர் கொடுத்ததைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்!"

அந்தத் தங்க இரதத்தின் நேர்த்தியை மனதினுள் இரசித்தபடி அவரை நோக்கிப் புன்னகைத்தான், இராஜேந்திர சோழன்.

"தங்களது மன்னரிடம் எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவியுங்கள். மிகவும் சிறப்பாக உள்ளது அவரது பரிசு. எனது நட்பும் நல்லாதரவும், காம்போஜ மன்னருக்கு எப்போதும் கிடைக்கும் என்பதாக நான் தெரிவித்ததாகக் கூறுங்கள்." - இராஜேந்திரன் கூறினான்.

"உத்தரவு மன்னா! பல்லவத்தைத் தாங்கள் ஆளுகின்றதால், தங்களது நட்பு எங்களுக்கு மிகவும் அவசியம், மன்னா! எங்கள் குலதெய்வமான தேவராஜன் அத்திமலையில் காலம்காலமாக எழுந்தருளி இருக்கிறான். அவனது தேவ உடும்பர அத்தி சிலை பல்லவர்களைப் போலவே, எங்கள் காம்போஜத்திற்கும் புனிதமானது. இப்போது பல்லவம் அழிந்துவிட்ட நிலையில் அந்தச் சிலை மீண்டும் கிடைத்தால், அதனை நாங்கள் எங்கள் ஐராவத மலையில் பிரதிஷ்டை செய்ய நினைக்கிறோம். அதற்குத் தங்களது ஆதரவு வேண்டும். எங்கள் குலதெய்வ சிலை எங்காவது கிடைத்தால் அதனை எங்கள் வசம் ஒப்புவிக்க வேண்டுகிறோம்!" - ஹரிநாராயண வாஜபேயர் கூற, திகைத்துப் போன இராஜேந்திர சோழன் ஜாடையாகப் பரகேசரியை பார்த்தான்.

'நாம் இரகசியமாக மீண்டும் சிலையைத் தேடும் விஷயம் எப்படிக் காம்போஜம் வரையில் கசிந்தது?' - மன்னரது பார்வையில் தொக்கி நின்ற கேள்வியைப் புரிந்து கொண்டார் பரகேசரி.

'பல்லவத்தின் அரசகுடும்பம்தான் அழிந்து போனது. பல்லவத்திற்கான ஆதரவு இன்னமும் இருக்கின்றது. சோழத்தின் மீது பாசத்தைக் காட்டுவதைவிட, தங்களது பங்காளிகளான காம்போஜர்கள் மீது பாசம் கொண்ட பலர் காஞ்சியில் இருக்கின்றனர் போலும்' என்னும் பொருள்பட மன்னரை நோக்கினார், பரகேசரி.

"நல்லது ஹரிநாராயணரே! சிலையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அத்திமலையானின் ஆலயத்திற்கு சொந்தமான அந்தச் சிலையை அந்த ஆலயத்திலேயே பிரதிஷ்டை செய்ய நினைக்கிறோம். காஞ்சியின் பொக்கிஷமான அதற்கு, பல்லவம், காம்போஜம், சோழம் என்று அனைவரும் உரிமை கொண்டாடலாம். இருப்பினும், அத்திமலைத்தேவனின் ஆலயத்திலேயே அதனை வைத்து, உங்கள் நந்திவர்மன் காலத்தில் காம்போஜர்களுக்கு வழங்கப்பட்ட அத்தனை சலுகைகளையும் உங்களுக்கு அளிக்கிறோம். இதற்கு மேல் என்னால் எந்த உறுதியும் அளிக்க முடியாது. அத்தி மலையானுக்குப் பதிலாக இந்தத் தேரை நீங்கள் எனக்கு அளிப்பதென்றால், இந்தத் தேரை நீங்கள் திருப்பி எடுத்துச் செல்லலாம். காரணம், இந்த இரதம் அலங்கார இரதமாகக் காட்சி அளிக்கிறது. அழகிய அரசிகள் இதில் பயணிக்கலாமே தவிர, வீர மன்னர்கள் போர்க்களத்தில் வேகமாகப் பாய்ந்து போரிடுவதற்கு இது தோதுப்படாது. எனவே இந்த இரதத்தினால் எனக்குப் பிரயோஜனம் இருப்பதாகத் தோன்றவில்லை!" - இராஜேந்திரன் கூறியதும், ஹரிநாராயணர் பதறினார்.

"இந்தப் பரிசுக்கும், நான் எழுப்பிய அத்திமலைத் தேவனின் சிலை குறித்த பிரச்னைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. எங்கள் மன்னர் சூரியவர்மர் நீட்டும் அன்புக்கரத்தின் அடையாளம் இது. அவ்வளவே!" என்றவர் மன்னரிடம் விடைபெற்றார். காம்போஜ தூதர்கள் புறப்பட்டுச் சென்றதும், அம்மங்கை கூறினாள்.

"பார்த்தீர்களா? அவர்கள் அத்திமலைத்தேவனின் சிலையைக் குறிவைத்தே வந்திருக்கிறார்கள்!"

"வாருங்கள்! நாம் இந்தத் தங்க இரதத்தில் பவனி வருவோம்." - இரதத்தில் குதிரைகள் பூட்டப்பட, குடும்பப் பெண்களுடன் நந்தவனத்தில் பவனி வந்தான், இராஜேந்திரன்.

எவ்வித அதிர்வுமின்றி, எவ்வித அரவமுமின்றி அந்த இரதத்தினில் பயணம் செய்வது, சுகமான அனுபவமாக இருந்தது.

"பொன்னாழி சோலையில் ஸ்வர்ண இரதம் ஒன்று செல்ல, தங்க மனதைக் கொண்ட பரமபுருடன் அதனைச் செலுத்துகிறான்"- கவிநயத்தில் தனது தந்தையைப் போற்றி அம்மங்கை பாடினாள்.

அவளை நோக்கிச் சிரித்தான் இராஜேந்திரன்.

"'பொன்னெழில் பூத்த சோழ மங்கையர் உடன்வர, என்று இன்னுமொரு வரியைச் சேர்த்துக்கொள், அம்மங்கா!" - இராஜேந்திரன் கூற, பெண்கள் கலகல என்று தங்க நாணயங்களைச் சிதறவடித்தது போன்று சிரித்தனர்.

அன்று இரவு-

அனைவரும் உணவை அருந்திவிட்டு, தத்தம் ஜாகைக்குச் செல்வதற்கு முன்பாக நுழைவாயிலில் இருந்த கரிகால் பெருவளத்தானின் சிலைக்கு முன்பாக நின்றனர்.

"எவ்வளவு அருமையாக உள்ளது இந்தப் பொன்னாழி! இதில் வாழ்வதற்குக் கொடுத்து வைக்காமல் போய் விட்டாரே, நம் பெரிய தந்தை." - குந்தவி ஆதித்த கரிகாலனை நினைத்து வருந்தினாள்.

அனபாயன் கரிகாலனின் சிலையை உறுத்துப் பார்த்தபடி குந்தவியைக் கேட்டான்..

"பாட்டி! இவர்தான் ஆதித்த கரிகாலரோ?"

"இல்லை அனபாயா! இது சோழரின் மூதாதையர். கரிகால் பெருவளத்தான். கல்லணையை எழுப்பியவர். நான் பேசுவது எனது பெரிய தந்தை ஆதித்த கரிகாலரைப் பற்றி. எனது தந்தை, இராஜராஜ சோழருக்கும் எனது அத்தை குந்தவைக்கும் மூத்தவர். பட்டத்து இளவரசராக இந்த பொன்னாழியை எழுப்பி இங்கே வசித்தவர். துரதிர்ஷ்டவசமாக அவர் மன்னராவதற்கு முன்பே கொலை செய்யப்பட்டவர்." - சிறிய குந்தவை கூறினாள்.

"குந்தவை! இப்போது பழைய கதையெல்லாம் எதற்கு? காற்று மிக இதமாக வீசுகிறது. நந்தவனத்தில் நடப்போமா?" - இராஜேந்திரன் கேட்டான்.

அனைவரும் நந்தவனத்தில் உலாவத்துவங்கினர்.

"தந்தையே!" அம்மங்கை அழைக்க, யோசனையுடன் நடந்து கொண்டிருந்த இராஜேந்திரன் அவளை வியப்புடன் நோக்கினான்.

"ஆதித்த கரிகாலர் எழுப்பிய இந்தப் பொன்னாழியில் அவருக்குச் சிலை இல்லையே? பல்லவ இளந்திரை யருக்குக் கூடச் சிலை இருக்கிறது!" அம்மங்கை கூறினாள்.

"சோழ-பல்லவ நட்பைக் குறிப்பதற்காக அங்ஙனம் இருவரின் சிலையும் நிறுவப்பட்டது. ஆனால் நீ கூறுவது நல்ல யோசனை. ஆதித்த கரிகாலன், குந்தவை அத்தையார் மற்றும் நமது தந்தை இராஜராஜ சோழனார் என்று மூவரின் சிலையையும் இங்கே அமைக்க வேண்டும்"

இராஜேந்திரன் பேசி முடித்திருக்கமாட்டான்.

திடீரென்று-

பொன்னாழியே அதிரும்படி பெருத்த இடியோசை கேட்டது. மின்னல் வெட்டத்துவங்க, அப்போது வீசிய

பேய்க்காற்றில் மரங்கள் பயங்கரமாக ஆடத்துவங்கின. சடசட வென்று மழை பொழியத் துவங்கியது.

“அனைவரும் அவரவர் ஜாகைக்குத் திரும்புங்கள்!”- இராஜேந்திரன் அவசரமாகக் கட்டளையிட்டபடி பொன்னாழியை நோக்கி ஓட, குடும்பத்தினர் அவனைப் பின்தொடர்ந்தனர்.

ஆதித்த கரிகாலன் வசித்த மேற்குப் பகுதியில்தான் தங்கியிருந்தான், இராஜேந்திர சோழன். குந்தவியும், அம்மங்கையும், அனபாயனும் வடக்குப் பகுதியில் இருந்த தங்களது ஜாகைக்குச் சென்றனர். முன்பு கல்பலதாவும், லலாடிகாவும் தங்கியிருந்த அதே வடக்குப் பகுதி.

தெற்கு ஜாகையை நோக்கி பரகேசரியும், இராஜேந்திரனின் நான்கு மகன்கள், இராஜாதிராஜன், இராஜேந்திரன், இராஜமகேந்திரன் மற்றும் வீரராஜேந்திரன் ஆகியோர் சென்றனர்.

மழை பலமாகப் பெய்து கொண்டிருந்தது. அவரவர் அறைகளில் அனைவரும் ஒடுங்கிக் கொண்டனர். பிரதான வாயிலில் காவலர்கள் நிற்க, தீபங்களை அணைக்க வேண்டிய அவசியமின்றி வீசிய பெருங் காற்றில் விளக்குகள் தாமாகவே அணைய, அவற்றிலிருந்து புறப்பட்ட புகை அந்த மாளிகையில் படர்ந்தது. பொன்னாழியின் இருளில் மிதந்த புகை அந்தச் சூழ்நிலையை அமானுஷ்யமாகக் காட்டியது.

மூன்று பகுதிகளையும் இணைக்கும் பாதையில் துவங்கிய படிகளில் நின்றிருந்த சந்தனா என்கிற பணிப்பெண் அந்தப் புகையைக் கண்டு சற்றே பயந்து உடன் இருந்த பொய்கை என்கிற மற்றொருவளிடம் கூறினாள்:

“மன்னர் குடும்பம் வந்திருப்பதால் நாம் இம்மாதிரி மழை பெய்யும் இரவில் இந்தப் பேய் மாளிகையில் நடமாட வேண்டியிருக்கிறது. இல்லையென்றால், நிம்மதி யாக ஒத்தாடை அரண்மனையிலேயே இருந்திருக்கலாம்!”

- சந்தனா கூற, பொய்கை அவளை கேள்வியுடன் பார்த்தாள்.

"சோழ மன்னர் அடிக்கடி பொன்னாழியில் வந்து தங்குகிறார். இங்கே ஆதித்த கரிகாலரின் ஆன்மா அலைவது அவருக்குத் தெரியுமா?"

"அவர்கள் எல்லாரும் சுத்த வீரர்கள். ஆவி, பேய்களில் நம்பிக்கை இல்லாதவர்கள். நம்மைப் போலவா? இருளைக் கண்டாலே பயப்படுவதற்கு?" - சந்தனா கூறினாள்.

"என்னைக் கேட்டால், மழை பெய்யும் இந்த இரவில் அரசகுடும்பத்தினர் நன்றாக உறங்குவார்கள். நாமும் நமது ஜாகைக்குச் சென்று நன்கு உறங்குவோம். தேவை இருந்தால், அவர்கள் நம்மை எழுப்பட்டும். நானும் நீயும் மாற்றி மாற்றி உறங்குவோம். என்ன சொல்கிறாய்?"- கொட்டாவி விட்டபடி பொய்கை கூற, சந்தனாவுக்கும், அந்தக் குளிர் இரவில் கதகதப்பான பஞ்சணையின் சுகம் கேட்டது. இருவரும் உறங்குவதற்குத் தங்கள் ஜாகையை நோக்கிச் சென்றனர்.

பொன்னாழி மாளிகை 'ஹோ' என்று ஆளரவமின்றி அமைதியாக இருந்தது. வெளியே பலத்த ஒலியுடன் பெய்யும் மழையில் நனைந்த நுணல்கள் ஆனந்தக் கூச்சல் போட, அது பொன்னாழியின் உள்ளேயும் எதிரொலித்தது.

படுத்ததும் உறங்கிப் போனான், இராஜேந்திரன். வீரமாதேவி தீபங்களை மலர்பந்தினால் அணைத்து விட்டு, அவனருகில் சயனித்தாள். கண்களை மூடிப் படுத்தவள் வெளியே பொழியும் மழையின் ஓசையையும், அவ்வப்போது இடிக்கும் இடியோசையையும், மின்னல் வெட்டு பாய்ச்சும் ஒளியையும், நுணல்களின் ஆர்ப்பரிப்பையும் கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு உறங்கிப் போனாள்.

உறங்கிக் கொண்டிருந்த வீரமாதேவி, திடீரென்று கண்விழித்தாள். அப்போதுதான், அந்த ஒலி கேட்டது. இரதம் ஒன்று ஓடும் ஒலி.

வியப்புடன் தலையை மட்டும் உயர்த்தி அந்த ஒலியை உள்வாங்கினாள். மழை இரைச்சலின் இடையே சன்னமாக இரதம் ஒன்று ஓடும் ஒலி. இரதத்தின் சக்கரங்கள் உருண்டோடும் ஒலி சிறிது சிறிதாகப் பெரிதாகி, இப்போது அருகாமையில் கேட்டது.

கணவனை நோட்டம் விட்டவள் அவன் ஆழ்ந்து உறங்குவதைக் கண்டு வியப்புடன் எழுந்து அமர்ந்தாள். அங்கிருந்தபடியே சாளரத்தின் வழியாக நந்தவனத்தை நோக்கினாள். இருளில் மழை பெய்வது கூடத் தெரியவில்லை. ஒலியை மட்டும் வைத்தே மழை பெய்து கொண்டிருக்கிறது என்பதை உணர முடிந்தது.

மெதுவாக எழுந்து நின்றவள், சாளரத்தை நோக்கி நடந்தாள். இந்த இரவில் யார் இரதத்தை ஓட்டுவது?

சாளரத்தின் அருகேயே நின்றாள். விளக்கு ஒன்று கையில் ஏந்தி அதனை உயர்த்திப் பிடித்தபடி நந்தவன இருளை நோக்க, இப்போது அந்தத் தீபத்தின் ஒளியில் மழை வைர ஊசிகளாகப் பெய்து கொண்டிருப்பது தெரிந்தது. தனது பார்வையை நந்தவனத்தின் மீது பரவவிட்டாள்.

அப்போது-

காம்போஜ மன்னன் அன்று மாலை இராஜேந்திரனுக்குப் பரிசளித்திருந்த அந்த ஸ்வர்ண இரதம், இவர்கள் மாலை சென்ற அதே பாதையில் ஓடிக் கொண்டிருந்தது. இவர்கள் மாலை அதில் பயணித்த போது அதிர்வே ஏற்படவில்லையே. ஆனால் இப்போது இரதம் ஓடும் ஒலியுமல்லவா கேட்கிறது. சப்த நாடியும் ஒடுங்கிப் போனது, வீரமாதேவிக்கு.

ஸ்வர்ண இரதத்தை யார் ஓட்டுவது? இராஜேந்திரனின் பிள்ளைகள் நால்வரில் யாராவது

இருக்குமோ? இல்லை மங்கையின் புதல்வன் அனபாயனாக இருக்குமோ? யாராக இருந்தாலும், இந்தப் பேய்மழையில் இவ்வளவு விரைவாகவா இரதத்தைச் செலுத்துவது?

கணவன் இராஜேந்திரனின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

"மன்னரே! எழுந்திருங்கள்! கொட்டும் மழையில் யாரோ ஸ்வர்ண இரதத்தைச் செலுத்திக் கொண்டிருக் கிறார்கள். யார் என்ன என்பதை விசாரியுங்கள்!"- வீரமாதேவி கூற, வியப்புடன் எழுந்த, இராஜேந்திர சோழன், தனது கண்களைக் கசக்கிக் கொண்டு சாளரத்தின் அருகே சென்று நின்றான்.

தனது கரத்தை சாளரத்தின் வெளியே நீட்டி, மழைநீரை உள்ளங்கையில் ஏந்திக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவனது உறக்கம் கலைய, இப்போது தெளிவான பார்வையுடன் நந்தவனத்தைக் கவனித்தான். திடீரென்று வானத்திலிருந்து பொன்மயமான ஒளி பொன்னாழியின் மீதும், அதன் நந்தவனத்தின் மீதும் படர்ந்தது. அந்த ஒளியில் நந்தவனத்தில் ஓடிக் கொண்டிருந்த அந்த ஸ்வர்ண இரதத்தைப் பார்த்தான்.

திகைத்துப் போன, இராஜேந்திரன், தனது அறையை விட்டு நீங்கி, வேகமாகப் படிகளில் இறங்கினான். வரவேற்புக்கூடத்தில் உள்ள கரிகால் பெருவளத்தானின் சிலையைக் கடந்து நந்தவனத்தில் இறங்கினான். காவலர்கள் அவனை வியப்புடன் நோக்கினர். அவர்களைத் திரும்பிப் பார்க்காமல், நேராக முருக்கத்தி பாதையை நோக்கி நடந்தான்.

அதோ-

ஸ்வர்ண இரதம் தொலைவில் முருக்கத்திப் பாதையின் திருப்பத்தில் சென்றுகொண்டிருந்தது. அதன் பின்பாகவே நடந்தான். பொன்னாழியைச் சுற்றிக் கொண்டு மீண்டும் அந்த ஸ்வர்ண இரதம் இவன் பின்பாகவே வருமோ..

தேர் சக்கரங்கள் உருண்டோடும் ஒலி கேட்கிறது. தனக்குப் பின்பாகத் திரும்பி நோக்கினான்.

இதோ-

ஜொலித்தபடி கிழக்கு முருக்கத்தி பாதையில் திரும்புகிறது ஸ்வர்ண இரதம். இவனை நோக்கி வேகமாகப் பாய்ந்து வருகிறது. கட்டுக்கு அடங்காமல் குதிரைகள் திமிறிக்கொண்டு ஓடி வருகின்றன. அதன் வேகத்திற்குக் குலுங்கியபடி வருகிறது இரதம். யாரோ சிறு புள்ளியாக இரதத்தில் அமர்ந்து அதனைச் செலுத்திக் கொண்டு வருகிறார்கள்?

யார்.. யார்.. அது?

இராஜேந்திர சோழனின் இதயமே அவனது வாய் வழியாக நழுவி விழுந்துவிட்டதைப் போன்று வாய் பிளந்து செய்வதறியாது நிற்கிறான்.

முழுவதுமாகக் கரிய உருவம். செம்மையான அனல் பறக்கும் கண்கள். வாயின் ஓரத்தில் இருந்து கோரைப் பற்கள். ஆணா அல்லது பெண்ணா என்று கூற முடியாத படி ஒரு முகம். அறுந்து தொங்கும் இரு மார்பகங்கள். மர்ம உறுப்பினுள் பெருகிப் பாயும், இரத்தம். முதுகில் சொருகப்பட்ட குத்துவாள்.. என்று காண்பதற்கே மிகவும் அச்சத்தையும் அருவருப்பையும் தோற்றுவிக்கும் ஓர் உருவம்.

தேரின் உச்சியில் ஆதித்த கரிகாலனின் தலை சொருகி யிருக்கிறது. அதன் நான்கு கம்பங்களில் இவனுடைய நான்கு மகன்களான, இராஜாதிராஜன், இராஜேந்திரன், இராஜமகேந்திரன் மற்றும் வீர ராஜேந்திரனின் தலைகள் தொங்கிக் கொண்டிருக் கின்றன.

இரதத்தைச் செலுத்திக்கொண்டு அந்த கரிய உருவம் அமர்ந்திருக்கிறது. அதன் சிவந்த கண்கள் இராஜேந் திரனையே வெறித்துப் பார்க்கின்றன. அவனை நோக்கிக் கோரமாகச் சிரிக்க அதன் கோரைப் பற்களைக்

காண்கிறான் இராஜேந்திரன். இவனைப் பார்த்து இடிஇடியென சிரிக்கிறது அந்த உருவம்.

"யார் நீ?" - இராஜேந்திரன் அலறுகிறான்.

"நான்தான் சோழ கிருமி! உனது தந்தை சொல்லியிருப்பாரே? கருவூர் தேவர் பெரிய கோயிலில் கண்ட சோழ கிருமி நானேதான். அப்போதைக்கு இப்போது நான் இன்னமும் உயரமாக வளர்ந்திருக்கிறேன்.. பார்!"- சிரித்தபடி சோழ கிருமி கூறியபடி தேரைச் செலுத்த, இரதம் மீண்டும் கிழக்குப் பாதையைக் கடந்து தெற்கினில் திரும்பியது. மீண்டும், இரதம் சுற்றி வருவதற்கு அறிகுறியாக அதன் சக்கரங்களின் தடதட ஒலி அருகாமையில் கேட்டது. மீண்டும் அந்தக் காட்சியைக் காண்பதற்குத் திராணி இல்லாமல் இராஜேந்திர சோழன் "ஆ.." என்று குரல்விட்டு அலறினான். அவனது நினைவை இருள் மூடியது.

மறுநாள் காலை-

கொட்டும் மழையில் பொன்னாழி நந்தவனத்தில் நினைவில்லாமல் மயங்கிக் கிடந்தான், இராஜேந்திர சோழன். பள்ளியறையில் உறங்கிக் கொண்டிருந்த இராஜேந்திரன், நந்தவனத்திற்கு எப்போது சென்றான்?

மன்னன் உறக்கத்தில் நடந்து சென்றதை அறியாமல் அவன் ஏதோ முக்கியப் பணி நிமித்தம் சென்றதாகக் காவலர்கள் விசாரணையில் தெரிவித்தனர்.

"நீதானே என்னை எழுப்பி நந்தவனத்திற்குச் சென்று தங்கத் தேரை யார் செலுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கச் சொன்னாய்!" - மயக்கம் தெளிந்து எழுந்ததும் சொன்ன கணவனைக் குழப்பத்துடன் நோக்கினாள், வீரமாதேவி. அவள் கணவனை உறக்கத்தில் இருந்து எழுப்பியதாக நினைவே இல்லையே.

"சோழ கிருமிதான் தேரைச் செலுத்திக்கொண்டு சென்றது!"- மீண்டும் மீண்டும் இராஜேந்திரன் சொல்லிக் கொண்டிருக்க, பிடரியில் வியர்த்தது, வீரமாதேவிக்கு.

*அவசரமாகத் தனது அண்ணன் பரகேசரியை வரவழைத்தாள்.*

*“கருவூர் தேவரின் கண்களுக்குப் புலப்பட்ட கிருமி, இராஜராஜனின் கண்களுக்குப் புலப்பட்ட கிருமி இப்போது இராஜேந்திரனுக்கும் புலப்பட்டிருக்கிறது என்றால்..? கருவூர் தேவரும், இராஜராஜனும் கிருமியைக் கண்ட உடனேயே மரணப்படுக்கையில் விழுந்தார்கள். அப்படியென்றால்..” - வீரமாதேவியின் மேனி நடுங்க, தங்கையின் கரத்தை ஆதூரத்துடன் தட்டிக்கொடுத்தார், மதுராந்தகன் பரகேசரி.*

*அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தார்.*

*பிரம்மதேசத்து பரசிகாமணி கொங்காழ்வாரிடம்* இராஜேந்திரனை அழைத்துச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார். அதுவே இராஜேந்திரனின் கடைசிப் பயணம் என்பதை அப்போது பரகேசரி அறிந்திருக்க வில்லை.*

---

* இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்னும் கிராமத்தை அமைத்து, தளிக்குளத்தார் ஆலய சிவாச்சாரியார் களை அங்கே குடிவைத்தான், இராஜேந்திரன். அதன் மிக அருகே இருந்த ஆலயம்தான் பிரம்மதேசம். தளிக்குளத்தாரின் கோபுரத்தில் இருந்து தனது தேகத்தைத் தீ வைத்துக் கொண்டு குதித்த பிரம்மதாசரின் நினைவாக எழுப்பப்பட்ட கோயில். தற்போது பிரம்மதேசம் அம்பா சமுத்திரம் அருகே உள்ளது. இதன் இறைவன் கைலாய நாதர். சோகம் என்னவென்றால் இந்தப் பிரம்மதேசத்தில் வந்து தங்கிய போதுதான் இராஜேந்திரன் திடீர் என்று மரணம் அடைந்தான். அவன் மனைவி வீரமாதேவி அந்தத் துக்கத்தில் உடன்கட்டை ஏறினாள்.

## 37. புதிய பெட்டகம், பழைய பொக்கிஷம்

**வெ**ள்ளிக்குடத்தை சாலைக் கிணற்றினுள் நழுவ விட்டார்.. இளையாழ்வார். அன்று காலையில் பெரியநம்பியிடம் பயின்றிருந்த பெரியாழ்வாரின் பாசுரங்களை மனதினுள் உச்சரித்துக் கொண்டிருந்தார். அவரது மனமோ ஆசான் பெரியநம்பி உரைத்த பாசுரங்களின் பொருளைப் பற்றி பரவசத்துடன் நினைத்துக் கொண்டிருந்தது.

'மனிதர்களாகப் பிறந்து இறைவனை உணர்ந்து அவனுக்குத் தொண்டாற்றி வருகிறோம் என்கிற ஆணவத்துடன் நாம் அலைய, பண்டங்களை வைப்பதற்கன்றி, சிந்திப்பதற்கு நெஞ்சும், திருநாமங்களைக் கூற நாவும், விழுந்து பணிய திருமேனியும் இல்லாத அசித் என்னும் ஜடப்பொருளாக இருக்கின்ற ததிபாண்டன் என்கிற பானை வியாபாரியின் மண்பாண்டம் கூட அல்லவா மோட்சத்தை அடைந்தது? ஆனால், நெஞ்சும், நாவும், உடலும் உள்ள நமக்கெல்லாம் எளிதில் மோக்ஷம் கிடைக்காது இருக்கிறதே. இது எதனால்?' - தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தார், இளையாழ்வார்.

'இராமன் பிறந்த அயோத்தியிலே புல், எறும்பு ஆகிய அனைத்துமே நற்கதி பெற்றன' என்று அன்று காலை கற்றிருந்த நம்மாழ்வார் பாசுரத்தை விளக்கிய அவரது ஆசான் பெரியநம்பி கூறியிருந்தார்.. அது போலக் கண்ணனின் தரிசனமும், கண்ணனின் ஸ்பரிசமும் பெற்ற ததிபாண்டனும், அவனது தாழியும் மோக்ஷம் பெற்றதில் அதிசயமென்ன? கிருஷ்ண தரிசனம், கிருஷ்ண கைங்கர்யம் இவற்றைச் செய்தவுடனேயே

ததிபாண்டனுக்கு மோட்சம் உறுதியாகிவிட்டது. கிருஷ்ண ஸ்பரிசம் ஏற்பட்ட உடனேயே தாழிக்கும் நற்கதி கிடைத்துவிட்டது. ததிபாண்டன் அதைக் கேட்டுப் பெறுவதற்கு அவசியமே இல்லை. இருந்தாலும் ஏன் வாய் திறந்து மோட்சத்தைக் கேட்டான்? அதற்கு முக்கியக் காரணம் கிருஷ்ணனின் அந்த எளிமை, பக்தர்களுக்கு அருள்புரியும் அந்த மேலான குணத்தை, உலகத்திற்கு எடுத்துக் காட்டவேதான் போலும்.

கிணற்றில் நழுவவிட்டிருந்த வெள்ளிக்குடத்தை வெளியே எடுக்க வேண்டும் என்பதைக் கூட உணராமல், ஆழ்வாரின் பாசுரங்களையே நினைத்தபடி பரவசத்துடன் நின்றிருந்தார், இளையாழ்வார்.

கண்கள், எதிரே ஓங்கி உயர்ந்து நீண்ட அத்திமலை யானின் ஆலய கிழக்கு கோபுரத்தையே வெறித்துக் கொண்டிருந்தன.

'பழுதே பல தினங்களும் போயினவே! இந்தப் பாசுர அமுதத்தில் மூழ்காமல் ஆட்டின் தாடி போன்ற எதற்கும் உதவாத தத்துவார்த்தங்களைக் கற்றுக் கொண்டிருந் தேனே!' கோபுரத்தைப் பார்த்தபடி, பிரம்மித்துப் போய் நின்றிருந்தார். ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு ஒப்புண்டா? ததிபாண்டனின் அனுபவம் ஒன்று போதுமே - மோட்ச சாதனத்தின் மகத்துவத்தைப் புரிய வைப்பதற்கு!

திடீரென்று-

தெற்கிலிருந்து வீசிய குளிர்காற்று இளையாழ்வாரின் மேனியை வருடியது. சுகமான காற்றை அவர் நாசியின் வழியாக உள்வாங்கிய அதே சமயம், கிசுகிசுத்த குரல் ஒன்று செவிகளில் அலைமோதியது.

"ததிபாண்டனின் தயிர் பானையில்தான் எனது பச்சை மாமலை போல் மேனி சிறைப்பட்டிருக்கிறது. என்னை மீட்டுச் செல்..!"

கண்களை மூடி தென்றல் காற்றை அனுபவித்துக் கொண்டிருந்த இளையாழ்வார் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தார்.

"யார்?" - தன்னைச் சுற்றிலும் நோக்கினார்.

யாருமே இல்லை. காலையில் பெரியநம்பியிடம் பெற்றிருந்த உபதேசத்தில் திளைத்துப் போயிருந்ததால், ததிபாண்டனின் அனுபவம் மீண்டும் மீண்டும் மனதில் எழும்பிக் கொண்டே இருக்கிறது போலும். தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்டவர், குடத்து நீரைத் தோளினில் சுமந்து கொண்டு ஆலயத்தை நோக்கி நடந்தார்.

வழியில், மடைப்பள்ளியில் அமுது தயாரிக்கும் நீர்வண்ணரைப் பார்த்தார்.

"நீர்வண்ணரே! இன்று மோட்ச சாதனத்தை விளக்கும் பாசுரங்களை அனுபவித்தேன். திகட்டாத பாசுர அமுதத்தை எனக்கு வழங்கிய எனது ஆசான் பெரிய நம்பிக்கு வாய் மணக்க அக்காரஅடிசிலையும், தயிரன்னத்தையும் வழங்க வேண்டும். எனக்காகப் பிரசாதங்களைத் தயாரித்து எனது அகத்துக்கு அனுப்பி விடுங்கள். அதற்கான திரவியங்களை நான் தங்களுக்கு அளித்துவிடுகிறேன்." - இளையாழ்வார் கூறினார்.

"அதற்கென்ன சுவாமி! இப்போதே தயாரித்து வரதனுக்குச் சமர்ப்பித்து தங்கள் மனைக்கு அனுப்பி விடுகிறேன்!" - நீர்வண்ணன் கூற, மனநிறைவுடன் வரதனின் சந்நிதியை நோக்கிச் சென்றார்.

அங்கே ஆலவட்டத்துடன் நின்ற திருக்கச்சி நம்பியை பார்த்ததும், அவரது முகம் மலர்ந்தது.

"நம்பிகளே! எனக்கு வீடும் பார்த்துக் கொடுத்து, முன்கட்டில் ஆசானையும் தங்க வைக்கும் யோசனையைத் தந்து, அவரிடம் அன்றாடம் திவ்யப்

பிரபந்தங்களைக் கற்க வைத்த உமக்கு, தலையல்லால் கைமாறிலனே. இன்று மோட்சம் குறித்த நம்மாழ்வாரின் பாசுரங்களைக் கற்றேன். பொருளுரைத்து என்னைப் பரவசத்தில் ஆழ்த்திய எனது ஆசான் பெரியநம்பியை கௌரவிக்கும் பொருட்டு, வரதன் அமுது செய்த பிரசாதங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அவசியம் தாங்களும் வந்து பிரசாதங்களை அருந்தி என்னைக் கௌரவிக்க வேண்டும்!" - இளையாழ்வார் கூற, திருக்கச்சி நம்பி புன்னகைத்தார்.

"கரும்பு தின்ன வா! கூலி எவ்வளவு வேண்டும்? - என்று கேட்பது போன்று உள்ளது, நீர் என்னை அழைப்பது. ஒரு ஆசானைச் சீடன் கௌரவிக்க, அதைக் காண்பதே அணுக்கனுக்கு கண்கொள்ளாக் காட்சி அல்லவோ! அவசியம் வருகிறேன்." - திருக்கச்சி நம்பி கூறினார்.

அப்போது சன்னிதியில் இருந்து வரதனின் மணப்பாக்கம் சுத்தசத்வ நம்பி வெளியே வந்தார்.

குடத்து நீருடன் திருக்கச்சி நம்பியுடன் பேசிக் கொண்டிருந்த இளையாழ்வாரைப் பார்த்தார்.

"இளையாழ்வாரே! உங்களை ஆலய அதிகாரி அப்பண்ண சதகரணி உடனே தன்னைச் சந்திக்கும்படி கூறினார்." - சுத்தசத்வ நம்பி கூறினார்.

"இதோ போகிறேன். சுத்தசத்வம் நம்பிகளே, இன்று எனது அகத்தில் வரதன் அமுது செய்த பிரசாதங்களைத் தருவித்திருக்கிறேன். நீர் அவசியம் சென்று சாப்பிட வேண்டும். நான் அனுப்பினேன் என்று கூறுங்கள். எனது மனைவி தங்களுக்குப் பிரசாதங்களைப் பரிமாறுவாள்."- இளையாழ்வார் கூற, அவரும் தலையசைத்துவிட்டு நகர்ந்தார்.

குடத்து நீரை சன்னிதியில் வைத்துவிட்டு, ஆலய அதிகாரி அப்பண்ணாவை சந்திக்கச் சென்றார், இளையாழ்வார்.

"வாருங்கள்! உங்களுக்காகத்தான் காத்திருந்தேன். இன்று நமது ஆலயத்திற்குப் புதிதாக திருவாபரண போஷணப் பெட்டி ஒன்றைத் தருவித்திருக்கிறோம். இரும்பினால் ஆனது. மிகவும் பாதுகாப்பானது. ஆலயத்தின் அத்தனை ஆபரணங்களையும் அந்தப் பெட்டகம் தன்னில் அடக்கிக் கொண்டுவிடும். இதனால் ஆபரணங்களை சிதறாமல் எடுத்து வைக்க முடியும். போஷணப் பெட்டியில் பல அறைகள் உள்ளதால் கற்கள் பதித்த ஆபரணங்கள், ஸ்வர்ண ஆபரணங்கள், கிரீடங்கள் என்று தனித்தனியாக வைக்க முடியும். மதியம் சந்நிதி கைங்கர்யப் பணிகள் முடிந்ததும் நீங்கள் கஜானா அறைக்கு வந்து உதவ வேண்டும். அரண்மனை அதிகாரி கோபிநாத ராயர், நான், தலைமைப் பட்டர், அரவிந்த லோச்சன அத்தங்கி மற்றும் நீங்கள் ஆகியோர் கலந்து கொண்டால் போதும். நாங்கள் கணக்கு பார்த்த ஆபரணங்களை நீர் பெட்டகத்தில் வைக்க வேண்டும். அவ்வளவே!" - சதகரணி கூற, பேரானந்தத்துடன் தலையசைத்தார், இளையாழ்வார்.

'வரதனின் ஆபரணங்களைத் தொட்டுப் பெட்டகத்தில் வைக்கும் பேற்றை நான் பெறுகிறேனா? காலையில்தான் கிருஷ்ண ஸ்பரிசம் மோட்சத்தைக் கொடுக்கும் என்று கூறியிருந்தார், பெரியநம்பி. அப்படியிருக்க, அவனது ஆபரணங்களை ஸ்பரிசித்தால் மோட்சம் சித்திக்காதா என்ன? ததிபாண்டன் அனுபவத்தை அறிந்த அன்றே, வரதனின் ஆபரணங்களை ஸ்பரிசிக்கும் தகுதி கிட்டிவிட்டதே!'

"அவசியம் வருகிறேன் ஸ்வாமி. இதைவிட வேறு வேலை எனக்கு என்ன!" என்றவர் மீண்டும் சன்னிதிக்குச் சென்றார்.

சுத்தசத்வ நம்பி தனது மணப்பாக்க கிராமத்திற்குப் புறப்பட்டார்.

"எனது தங்கை மகனுக்கு எனது பெண்ணை நிச்சயிக்கப் போகிறேன். எனவே நான் மாலை கைங்கர்யத்திற்கு

வரமாட்டேன்!" - சுத்தசத்வ நம்பி இளையாழ்வாரிடம் கூற, அவர் தலையசைத்தார்.

"குழந்தைகளுக்கு எனது ஆசிகள். ஒரு எட்டு எனது அகத்துக்குச் சென்று பிரசாதங்களை அருந்திவிட்டுச் செல்லுங்கள். இப்போதுதான் நீர்வண்ணர் பெருமாள் அமுது செய்த பிரசாதங்களை எனது அகத்துக்கு எடுத்துச் சென்றான்." - இளையாழ்வார் கூறினார்.

"அவசியம் போகிறேன், சுவாமி!" - என்றபடி இளையாழ்வாரின் அகத்துக்குச் சென்றார்.

"மதனி!" - வாயிலில் இருந்து குரல் கொடுத்தார், சுத்தசத்வ நம்பி.

"யார்?" - என்றபடி வாயிலுக்கு வந்தாள் தஞ்சம்மா.

"உங்கள் கணவர் என்னைப் பிரசாதம் அருந்திவிட்டுப் போகச் சொன்னார்." - திண்ணையில் அமர்ந்தார் சுத்தசத்வ நம்பி.

"அப்படியா! என்னிடம் எதுவும் சொல்லவில்லையே! ஆலயப் பிரசாதங்களை நான் தயார் செய்வதாக யார் கூறினார்கள்?"

"இல்லை மதனி! அண்ணா இன்று மோட்சத்திற்குப் போகும் பாசுரங்களைக் கற்றதால் அதைக் கொண்டாட பிரசாதங்களைத் தருவித்திருப்பதாகக் கூறினார்."

"மோட்சத்திற்குப் போகும் பாசுரங்களா? ஒருவேளை உங்களுக்கு மோட்சம் கிட்டினால் பிரசாதம் கிட்டுமோ என்னவோ!" - தஞ்சம்மா கூற, துடிதுடித்துப் போய் எழுந்தார், மணப்பாக்கம் நம்பி.

'மகளின் திருமண நிச்சயத்தை எண்ணியபடி, இறைவனின் பிரசாதத்தை அருந்தலாம் என்று ஆவலுடன் வந்தால் இப்படி அபசகுனமாகப் பேசுகின்றாளே, மதனி.'

"பரவாயில்லை! பிரசாதங்கள் இல்லையென்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்.. அண்ணாவிடம் சொல்லுங்கள்!" - தனது நாசியைத் தாக்கிய அக்காரஅடிசில் மற்றும் தயிரன்னத்தின் மணத்தை உள்வாங்கியபடி திண்ணையில் இருந்து எழுந்து நடந்தார் மணப்பாக்கத்து நம்பி. அவர் மனம் வெறுத்துப் போவதை முதல்கட்டில் நின்று கொண்டிருந்த பெரியநம்பியின் மனைவி விரஜை பிராட்டி பார்த்துக் கொண்டே இருந்தாள்.

"ஸ்வாமி! இப்படி வாரும்!" - தனது முதல்கட்டுப் பகுதியைக் கடந்து சென்று கொண்டிருந்த சுத்தசத்வ நம்பியை அழைத்துத் தனது அடுக்களையில் அமர வைத்து தாமரை இலையைப் போட்டு ஒரு குவளையில் நீரை வைத்தாள். தனக்கு வழங்கப்பட்டிருந்த பிரசாதங்களில் இருந்து ஒரு பகுதியை அவரது இலையில் பரிமாறினாள்.

"மனதில் எவ்வித வருத்தமும் இல்லாமல் அருந்துங்கள். பகவான் நம் மனதில் இருக்கிறான் எனும்போது மற்றவர்கள் நமது மனதைப் புண்படுத்தினால், நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும்..? அந்த மனதுக்கு உரியவன் இறைவன்தான்." விரஜை பிராட்டி கூற, சுத்தசத்வ நம்பிக்குக் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது.

சாப்பிட்டுவிட்டு நீர் அருந்தியவர், புறப்பட்ட போது, வீதியில் நின்றிருந்தாள், தஞ்சம்மா.

சுத்தசத்வ நம்பி வாயைத் துடைத்துக் கொண்டு போவதையும், விரஜை பிராட்டி தாமரை இலையை வாயிலில் வந்து வீசுவதையும் கண்டு திகைத்தாள்.

"சீடன் மனையில் அருந்துவதைக் காட்டிலும், அவருக்கு வழிகாட்டும் ஆசானின் மனையில் பிரசாதங்களை அருந்துவது இன்னும் பெருமை அல்லவா!" - பொதுவாகக் கூறியபடி மணப்பாக்கம் நம்பி புறப்பட, தஞ்சம்மாவின் முகம் சிறுத்தது.

சற்று பொறுத்து, திருக்கச்சி நம்பி இளையாழ்வார் அகத்தின் வாயிலில் வந்து நின்றார்.

"அம்மங்கா! உங்கள் கணவர் என்னைப் பிரசாதம் அருந்திவிட்டுப் போகச் சொன்னார். அவருக்கு கஜானாவில் வேலை வந்துவிட்டதால், அவரால் வர இயலவில்லை." - திருக்கச்சி நம்பி கூறினார்.

"அப்படியா! புழக்கடை முற்றத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். இதோ வருகிறேன்!" என்ற தஞ்சம்மா, ஒரு தாமரை இலையில் பிரசாதங்களை அள்ளி வைத்துவிட்டு, அதனைக் கொண்டு சென்று முற்றத்தில் வைத்தாள்.

"இதனை அருந்திவிட்டு, இலையை நீங்களே எடுத்துப் போட்டு, இடத்தைச் சுத்தம் செய்துவிடுங்கள்." - தஞ்சம்மா கூற, அவள் கூறுவது அடுத்தக் கட்டில் அடுக்களையில் வேலையாக இருந்த விரஜையின் செவியில் விழுந்தது. திருக்கச்சி நம்பிக்கு இந்த அவமானம் என்றால் இளையாழ்வார் எப்படித் தாங்குவார்?

மனம் நொந்த திருக்கச்சி நம்பி அங்கிருந்து நேராக கால் போன வழியே சென்று திருமலையை நோக்கி புறப்பட்டார்.

அன்று பிற்பகல் விரஜை பிராட்டி சாலைக்கிணற்றில் நீர் சேந்திக் கொண்டிருக்க, தஞ்சம்மாவும் குடத்துடன் வந்தாள்.

தஞ்சம்மா தனது குடத்தைக் கயிற்றில் கட்டிவிட, அதே சமயம் விரஜை தனது குடத்தை வெளியில் இழுக்க, இருவரின் குடங்களும் மோதின.

"என்ன.. உனது குடம் கூட எனது குடத்திற்கு ஆசானா என்ன? திருவிலச்சினை வைக்கின்றதே.. நான் தண்ணீர் சேந்துவது வரையில், உனது குடம் காத்திருக்காதா என்ன?" - தஞ்சம்மா சினத்துடன் விரஜையைப் பார்த்தாள்.

"நான்தான் முதலில் கிணற்றினுள் குடத்தைச் செலுத்தினேன். நான் வெளியே இழுக்கும் வரையில் நீதான் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்." - விரஜை வெடித்தாள்.

"அகண்ட காவிரிக்கரையல்ல இது, விருப்பம் போல் தண்ணீர் எடுக்க. இது ஆலயக் கிணறு. எனது கணவர் தீர்த்தக் கைங்கர்யம் செய்பவர். அவருக்கே முதல் உரிமை."-தஞ்சம்மா கூறினாள்.

"உனது கணவன் எனது கணவரின் சீடன். விஷயங் களையும், அனுபவங்களையும் எனது கணவனின் சிந்தையில் இருந்து பணிவுடன் சேந்துவது போன்று நீயும் நீரைப் பணிவுடன் சேந்துதல் வேண்டும்." - விரஜை கூற, தஞ்சம்மாவின் கோபம் எல்லையை மீறியது.

"அந்த சுத்தசத்வத்திற்குப் பிரசாதம் இல்லை என்று கூறி விரட்டினேன். அவனை அமர வைத்துப் பிரசாதம் தந்தாய். அவன் முன்பாக என்னை அவமானம் செய்ய வேண்டும் என்றுதானே செய்தாய்..? எல்லாம் எனது கணவனைச் சொல்ல வேண்டும். நம்பி வந்த என்னை விட்டுவிட்டு, பெரியநம்பி, கச்சி நம்பி என்று ஊரில் இருக்கும் நம்பிகளையெல்லாம் தலையில் வைத்துக் கொண்டாடுகிறார். உங்களையெல்லாம் யார் அழைத் தார்கள்.. அரங்கத்திலேயே கிடக்க வேண்டியது தானே!" என்று பொரிந்து தள்ள, வாயிற்புறம் வந்த பெரிய நம்பிகளின் செவிகளில் இது விழுந்தது.

உள்ளே வந்த விரஜையிடம் கூறிவிட்டார்.

"போதும் நமக்குக் காஞ்சி வாழ்க்கை. நமது அரங்கத்திற்கே திரும்பிச் செல்வோம். நிற்கும் பெருமாள் சன்னிதியில் தலைகுனிந்து நிற்பதைவிட கிடக்கும் பெருமாள் சன்னிதியில் தலை நிமிர்ந்து நிற்போம்!" என்று கூறி, மனைவியுடன் உடனே புறப்பட்டுவிட்டார்.

கஜானா அறையில் திருவாபரணங்களைக் கணக்கு பார்க்கும் பணி நடந்துக் கொண்டிருந்தது. அர்ச்சகர்

அரவிந்த லோச்சனர் அத்தங்கி ஒவ்வொரு ஆபரணப் பெட்டியாக எடுத்துத் தர, அப்பண்ணா ஆபரணத்தை வெளியே எடுத்துக்காட்ட, அரண்மனை அதிகாரி அந்த ஆபரணத்தைத் தனது புத்தகத்தில் விவரிக்க, பிறகு அந்த ஆபாரணத்தை இளையாழ்வார் வசம் தர, அதனைப் பட்டுச் சுருக்குப்பையில் வைத்துப் போஷணப் பெட்டகத்தில் அடுக்கிவைக்கும் பொறுப்பினை ஏற்றார்.

மூங்கில் கூடைகள், மரப்பெட்டிகள், வெள்ளி சம்புடங்கள் என்று வைக்கப்பட்டிருந்த ஆபரணங்கள் அனைத்துமே பட்டுச் சுருக்குப்பைகளில் வைக்கப்பட்டு, போஷணப் பெட்டிகளில் வைக்கப்பட்டன. கிரீடங்கள், பதக்கங்கள் என்று தனித்தனியாகப் பெட்டகத்தில் அடுக்கப்பட்டன.

இறுதியாக அரவிந்த லோச்சன அத்தங்கி ஒரு வெள்ளிப்பெட்டியைக் கையில் எடுத்தார். அந்த வெள்ளிப் பெட்டகம் காலச் சுழற்சியால் மிகவும் கறுத்துப் போய், வெள்ளி என்று யூகிக்க முடியாதபடி இருந்தது. அதன் மீது பொறிக்கப்பட்டிருந்த யானை, புலி மற்றும் சங்கு சின்னங்கள் தெளிவாகவே இல்லை. ஆதித்த கரிகாலன் கல்பலதாவுக்கு காதல் பரிசாக சுந்தர சோழரின் மூலம் அளித்திருந்த வெள்ளிப்பெட்டிதான் அது. உக்ரோதயம் என்கிற அத்திமலையானின் ஸ்ரீதளமணி வைக்கப்பட்டிருந்த அதே பெட்டகம். ஊரெல்லாம் சுற்றி, பீமவர்மனால் உக்ரோதயமாக மாற்றப்பெற்று, சந்திரகிரி, கங்க நாடு என்றெல்லாம் சுற்றி, உதயசந்திரனால் மீட்கப்பட்டு மீண்டும் பல்லவர்களை அடைந்து, ஆதித்த சோழனால் அபராஜித பல்லவனிடம் இருந்து அபகரிக்கப்பட்டு, இறுதியில் ஆதித்த கரிகாலனால், தனது மானசீகக் காதலி கல்பலதாவுக்குக் காதல்பரிசாக வெள்ளிப் பெட்டகத்தில் வைக்கப்பட்டு சுந்தர சோழர் மூலம் அளிக்கப்பட்டது. உக்ரோதயத்தைப் பெருந்தேவிக்கு சமர்ப்பித்தவர்களே பார்த்திப பல்லவனும், கல்பலதாவும்தானே. புராணம், சரித்திரம்

என்று காலங்களை எல்லாம் கடந்து பயணித்திருந்த ஸ்ரீதளம் என்கிற உக்ரோதயத்தை, அர்ச்சகர் அரவிந்த லோச்சன அத்தங்கி கையில் எடுத்து வைத்து இப்படியும், அப்படியும் பார்த்தார்.

ஸ்ரீதளம், உக்ரோதயம் என்கிற சரித்திர பெயரெல்லாம் நாற்பதே பிராயங்களைத் தாண்டாத அந்த அர்ச்சகருக்கு எப்படி தெரியும்? மேலும், கீழும் அந்த ஹாரத்தைத் திருப்பிப் பார்த்த, அத்தங்கி "நீல நவரத்னக்கல் ஹாரம்" என்று கூற, அதனை அரண்மனை அதிகாரி தனது சுவடியில் பதிவு செய்துக் கொண்டார். அதனைப் பட்டுச் சுருக்குப்பை ஒன்றில் வைத்த இளையாழ்வார், அதனை போஷணப் பெட்டகத்தில் வைத்தார். உக்ரோதயம் வைக்கப்பட்டிருந்த அந்த வெள்ளிப் பெட்டகத்தை அலட்சியமாக ஓரம் தள்ளினார், அர்ச்சகர் அரவிந்த லோச்சன அத்தங்கி.

தான் தேவ உடும்பர அத்திமலைத்தேவனின் சிலையைப் பதுக்கியிருக்கும் இடத்தை அந்தப் பெட்டகத்தின் நைந்து போன பட்டுத்துணியின் அடியே ஓலையில் குறிப்பிட்டு வைத்திருக்கிறான் ஆதித்த கரிகாலன் என்பதை அந்த அர்ச்சகர் அறிந்திருந்தால் அப்படி அலட்சியம் காட்டியிருப்பாரா? அத்தி மலைத்தேவன் என்கிற சிலையைப் பற்றி அறியாத தலை முறையைச் சேர்ந்தவர் அவர் என்பதால் அவரையும் குற்றம் சொல்ல முடியாது.

திருவாபரணங்கள் அனைத்துமே பாதுகாப்புப் பெட்டகத்தில் அடங்கிவிட, அப்பண்ணா சதகரணி பெரிய பூட்டு ஒன்றை எடுத்து போஷண பெட்டகத்தை மூடினார். அரண்மனை அதிகாரி புறப்பட, அரவிந்த லோச்சன பட்டரும் சன்னிதிக்குப் புறப்பட்டார். இளையாழ்வார் தனது மனைக்குப் புறப்படத் தயாராக, அப்பண்ணா சதகரணி அவரை அழைத்தார்.

"இளையாழ்வாரே! மிகச் சிறப்பாகச் செய்து முடித்தீர். அருளாளனின் ஆபரணங்களைப் பத்திரப்படுத்துவதில்

பெரும் பங்காற்றி உள்ளீர். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!" என்றவரின் பார்வை, கம்பளத்தில் கிடந்த திருவாபரணப் பெட்டகங்கள் மீது பதிந்தது. குனிந்து உக்ரோதயம் வைக்கப்பட்டிருந்த அந்த வெள்ளிப்பெட்டியை எடுத்தார்.

அதனை இளையாழ்வாரின் கரத்தில் வைத்தார்.

"வைத்துக் கொள்ளுங்கள். உங்களது கைங்கர்யத்திற்கு மனம் உகந்து அத்திமலையான் தரும் பரிசு" - அப்பண்ணா நீட்டினார்.

"கைங்கர்யம் என்று சொல்லும் போது, அதற்குப் பரிசு வாங்குவது நியாயமா ஸ்வாமி?" - இளையாழ்வார் கூறினான்.

"புதிய திருவாபரணப் பெட்டகம் வந்துவிட்டது. இனி கஜானா அறையை அடைத்துக்கொண்டு இவையெல்லாம் எதற்கு? நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். பெரிதாக இருக்கிறது. சுவடிகள், நீங்கள் ஆராதிக்கும் பெருமாள்கள் ஆகியவற்றை வைத்துக் கொள்ளலாம்." - சதகரணி கூற, பெட்டகத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டு, தனது மேல்துணியால் அதனை மூடிக்கொண்டு தனது அகத்துக்குப் புறப்பட்டார், இளையாழ்வார்.

மன்னர்களிடம் சிக்கியிருந்த தன்னைப் பற்றிய இரகசியம் முதன்முதலாக ஒரு பொறுப்பான கைக்குச் சென்றதை நினைத்தோ என்னவோ, அத்திமலையில் நின்றிருந்த ஸ்ரீவரம் வரதநாராயணன் முகத்தில் அன்று அதிகமான புன்சிரிப்பு. ஒருவேளை, அத்திமலையான் திரும்பி வருவதற்கான அறிகுறிகள் அவனுக்குத் தென்படுகிறதோ என்னவோ..? விரைவில் தான் தனது இருப்பிடமான ஸ்ரீவரத்திற்குச் சென்றுவிடுவோம் என்று நினைக்கிறானோ என்னவோ?

## 38. கோதண்டம், திரிதண்டம்

கஜானா அறையைவிட்டுப் புறப்பட்ட இளையாழ்வான் தனது மனையை நோக்கி நடந்தார். கையில் அப்பண்ணா சதகரணி பரிசாக அளித்திருந்த அந்த வெள்ளிப் பெட்டகம் கனத்தது. அந்தக் கால ராஜாங்க காரியங்களில் உபயோகப்படுத்தும் பெட்டி என்பது நன்கு தெரிந்தது. காலத்தின் சுழற்சியில் பெட்டகம் கருமை அடைந்திருந்தது. மேலே பொறிக்கப்பட்டிருந்த சங்கு, புலி மற்றும் யானை சின்னங்கள் அடையாளம் தெரியாமல் கருத்திருந்தன. ஆதித்த கரிகாலன், தான் பதுக்கி உள்ள அத்திமலைத்தேவனின் பிரதிமையைப் பற்றிய இரகசியக் குறிப்பு அந்தப் பெட்டகத்தின் பட்டுத்துணியின் அடியில்தான் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது என்பது அவருக்குத் தெரியாது. உக்ரோதயம் வைக்கப்பட்ட அந்தப் பெட்டகத்தைப் பெருந்தேவிக்குப் பெட்டகத்துடன் சமர்ப்பித்திருந்த பார்த்திப பல்லவனுக்கும், கல்பலதாவுக்குமே விவரம் தெரியாத போது, இளையாழ்வானால் எப்படி அதனை யூகிக்க முடியும்?

தனது சாளக்ராம மூர்த்தங்களை அதில் பத்திரப்படுத்தலாம் என்கிற எண்ணத்தில் அதனைத் எடுத்துக்கொண்டு ஆலயத்தின் கிழக்கு வாயில் வழியாக வெளியே நடந்தார்.

ஆலயத்தைவிட்டு வெளிவந்ததும், சாலைக்கிணறு தென்பட்டது. அன்று காலை அத்திவரதனுக்காகக் குடத்தில் நீர் சேந்திய போது தனது செவியில் ஒலித்த அந்தக் கிசுகிசுத்த குரலை எண்ணினார்.

"ததிபாண்டன் தயிர்ப்பானையில் பச்சைமாமலை போல் மேனி கொண்ட நான் பத்திரமாக இருக்கிறேன்.." என்று அந்தக் குரல் ஒலித்ததே. அது தனது மனப்பிரம்மையா? மீண்டும் ஐயம் எழ, இது நிச்சயம் ததிபாண்டனின் அனுபவத்தை நினைத்ததால் எழுந்த பிரம்மையே என்று நிச்சயித்துக்கொண்டு தனது மனையை நோக்கி விரைந்தார்.

வீட்டை நெருங்கும் போதே மனதில் சிறு நெருடல். அவருடைய குரு பத்தினி விரஜை அம்மங்கா சந்தியா காலத்திற்கு முன்பாகவே வீட்டு வாயிலில் வரிசையாகத் தீபங்களை ஏற்றுவது வழக்கம். அதைத் தொலைவிலிருந்து காணும் போதே மனதிற்கு இதமாக இருக்கும். ஆனால் இன்று ஏன் குரு பத்தினி விளக்குகளை ஏற்றவில்லை? வீடே இருளில் மூழ்கிக் கிடக்கிறதே. ஆசானுக்கு உடல்நிலை சரியில்லையா என்ன?

விரைவாக முதல்கட்டைக் கடந்தவர் திகைத்தார். பெரியநம்பி வசித்த பகுதி இருளில் மூழ்கி இருந்தது. இருவரும் எங்கே போனார்கள்?

குழப்பத்துடன் தனது இரண்டாம் கட்டிற்குள் நுழைந்தார். அவரது மனைவி தஞ்சம்மா அவரைப் பார்த்ததும் எழுந்து அடுக்களைக்குச் சென்றாள்.

"எனது ஆசானும், அம்மங்காரும் எங்கே சென்றுள்ளனர்? அவர்களின் குடியிருப்பு இருளில் மூழ்கி இருக்கிறதே..?" - இளையாழ்வார் குழப்பத்துடன் கேட்டார்.

"யாருக்குத் தெரியும்! முற்பகல் இருவரும் புறப்பட்டுத் தம்பதியாக எங்கோ சென்றார்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அது கிடக்கட்டும்.. உங்கள் கையில் இருப்பது என்ன?" - அவளது பார்வை வெள்ளிப் பெட்டகத்தின் மீது பதிந்தது.

“உனக்கு உதவக் கூடியவை ஒன்றுமில்லை. சுவடிகள், திருவிலச்சினைக் கோல்கள் போன்றவற்றை வைப்பதற்கு பெட்டகம் கொண்டு வந்திருக்கிறேன்!”-இளையாழ்வார் கூறினார்.

“பிரசாதங்களை அருந்த இலை போடட்டுமா?”-தஞ்சம்மா கேட்டாள்.

“திருக்கச்சி நம்பி அமுது செய்த இலையைப் போடு. அதில் பிரசாதங்களைப் பரிமாறு. சாப்பிடுகிறேன்.”-வெள்ளிப் பெட்டகத்தைப் பத்திரப்படுத்திவிட்டு, கை கால்களை அலம்பிக்கொண்டு வந்தார், இளையாழ்வார்.

அடுக்களையில் நுனிவாழையிலை ஒன்று புதிதாக விரிக்கப்பட்டிருக்க, அருகே ஒரு குவளையில் நீர் வைக்கப்பட்டிருந்தது.

“திருக்கச்சி நம்பி அமுது செய்த இலையைப் போடச் சொன்னேனே?” - தனது கைகளை மேல்துணியால் துடைத்தபடி மனைவியைப் பார்த்தார், இளையாழ்வார்.

“அந்த எச்சில் இலையை நான் தீண்டுவேனா என்ன? அவரை முற்றத்திலே அமரவைத்து இலைபோட்டு சாப்பிடச் சொன்னேன். அவரே சாப்பிட்டதும், இலையை வீசிவிட்டு, தான் உண்ட இடத்தைச் சுத்தப் படுத்திவிட்டுச் சென்றார்.” - தஞ்சம்மா அலட்சியமாகக் கூற, அதிர்ந்து நின்றார், இளையாழ்வார்.

“என்ன காரியம் செய்தாய்? அவர் உண்ட இலையில் நான் பிரசாதங்களை அருந்தி, திருவாலவட்டம் கைங்கர்யம் செய்யும் அவரது தயையைப் பெறலாம் என்றிருந்தேனே. எனது ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டாயே!” - துடித்துப் போனார், இளையாழ்வார்.

“இதென்ன இப்படி ஒரு ஆசை? கணவன் உண்ட இலையில் மனைவி உணவு உண்ண விரும்புவாள் என்று அறிந்திருக்கிறேன். யாரோ விசிறி வீசுபவரின் இலையில்

நீங்கள் சாப்பிடுவதா? பேசாமல் உட்காருங்கள். நான் பிரசாதங்களைப் பரிமாறுகிறேன்." - தஞ்சம்மா கூறினாள்.

அவளை சந்தேகத்துடன் நோக்கினார், இளையாழ்வார்.

"இன்னும் என்னவெல்லாம் காரியங்களைச் செய்திருக்கிறாய்? மணப்பாக்கத்து சுத்தசத்வ நம்பியை பிரசாதம் அருந்த அனுப்பினேனே. வந்தாரா?"- இளையாழ்வான் கேட்டார்.

"பெயர்தான் சுத்தசத்வம். சுத்தமாகச் சத்வகுணமே இல்லாதவர். நான் கைக்காரியமாக இருக்கும் போது பிரசாதம் கேட்டு வந்தார். சற்றுப் பொறுங்கள் என்றேன். அதற்குள் உங்கள் மகா குருபத்னி விரஜை பிராட்டி தங்களது அகத்தில் பிரசாதத்தைப் பரிமாறிவிட்டாள். அந்தச் சுத்தசத்வம் என்னை மதிக்காமல், 'ஆசான் மனைவி கையால் பிரசாதம் அருந்துவது இன்னும் சிலாக்யம்' என்று கூறிவிட்டுச் சென்றான். எனக்கு எவ்வளவு பெரிய அவமானம் தெரியுமா? பிற்பகல் நீர் சேந்த கிணற்றுக்கு வந்தாள். பிராட்டியைப் புரட்டி எடுத்துவிட்டேன். அழுது கொண்டே உள்ளே போனாள். அதன்பின் கணவனுடன் எங்கே சென்றாளோ?"- தஞ்சம்மா கூற, பதறித் துடித்தார், இளையாழ்வார்.

"சர்வநாசம்! நீ பெண்ணா.. பேயா?" - என்று அரற்றியபடி, முன்கட்டிற்கு ஓடினார்.

"ஆசானே!" அங்கிருந்த பெரியநம்பியின் பாத ரக்ஷையைத் தலையில் வைத்துக்கொண்டு அரற்றினார்.

"வாருங்கள் சாப்பிடலாம்!" என்று அழைத்த தஞ்சம்மாவை திரும்பிப் பாராமல், பெரியநம்பியின் அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

இளையாழ்வானாக அறையின் உள்ளே நுழைந்து தாழிட்டுக் கொண்டவர் மறுநாள் விடியலில் இராமானுஜனாகத்தான் வெளியே வரப்போகிறார்.

இரவெல்லாம் கண்ணுறங்காமல் அவர் வெளியே வரக்கூடும் என்று காத்திருந்தாள், தஞ்சம்மா. முற்றத்துத் தூணில் தலை சாய்த்தபடி அமர்ந்திருந்த தஞ்சம்மாவுக்குத் தெரியாது, மறுநாள் காலை தனது நாகமணி கைநழுவிச் செல்லப் போகிறது என்று. இரவெல்லாம் அப்படியே அமர்ந்திருந்தாள்.

பொழுது விடிந்தது.

கண்கள் மூடியிருந்தாலும், தஞ்சம்மாவின் செவிகள் முன்னறையின் தாழ் மீது பதிந்திருந்தது போலும். தாழ் நீக்கும் ஒலி கேட்டவுடனேயே பாய்ந்து எழுந்து முன்கட்டு அறையின் முன்பாக நின்றாள் தஞ்சம்மா.

கதவு திறந்தது. இளையாழ்வான் இராமானுஜராக வெளியே வந்தார். தஞ்சம்மாவின் நாகமணி இனி தஞ்சம் அடைவோரை அரவணைக்கப் போகும் சேஷமணியாக அந்த அறையைவிட்டு வெளியே வந்தது.

அவரது சிவந்த மேனியை இன்னும் அதிகச் செம்மையாக எடுத்துக்காட்டும் காஷாயம் அணிந்திருந்தார். பன்னிரு புண்டரங்களைச் சாற்றி, மேனியெங்கும் துளசி மற்றும் தாமரை மாலைகளை அணிந்திருந்தார். முன்னிரவு தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த வெள்ளிப்பெட்டகத்தை எடுத்துக்கொண்டு தனது ஆராதனை அறைக்குச் சென்றார். தான் ஆராதித்த விக்கிரகங்கள், மற்றும் சாளக்ராம மூர்த்திகள் அனைத்தையும் அந்த வெள்ளிப்பெட்டகத்தில் பத்திரப் படுத்திக்கொண்டு வெளியே வந்தார்.

நேராக வாயிலுக்கு வந்தவர், தனது மோதிரத்தைக் கழற்றித் திண்ணையில் வைத்தார். தஞ்சம்மாவின் தந்தை கோனேரி சுவாமி, திருமணத்தின் போது இவருக்கு அணிவித்திருந்த மோதிரம். அதில் பொறிக்கப்பட்டிருந்த வேங்கடவனின் உருவத்தை வெறித்துப் பார்த்தபடி பேசினார், இராமானுஜர்.

**"அழிஞ்சிலாக விழுந்தாய். வேர்தனில் இணையவில்லை.**
**ஊசியாகத் துளைத்தாய். காந்தமதை கவரவில்லை.**
**கொடியாக வளர்ந்தாய். கொழுகொம்பில் படரவில்லை.**
**நதியாகப் பாய்ந்தாய். கடல்தனில் கலக்கவில்லை.**
**விரதைபாய் நின்றும், பதியின்பால் பத்தியில்லை..**
**துறவு பூண்டு இனி நான் அழிஞ்சிலாக,**
**ஊசியாக, கொடியாக, நதியாக,**
**விரதையாக பரத்துவத்தில் லயிப்பேன்.*"**

---

* **அழிஞ்சிலாக விழுந்தாய். வேர்தனில் இணையவில்லை:** அழிஞ்சில் மரம் என்று ஒன்று உண்டு. இதன் விதைகள் மரத்தில் இருந்து உதிர்ந்து கீழே நிலத்தில் விழும். சில மணி நேரத்திலேயே மண்ணோடு மண்ணாக ஆகிவிடாமல், அந்த மரத்தின் அடிப்பாகத்தோடு சென்று ஒட்டிக் கொண்டு அப்படியே அதோடு கலந்துவிடுமாம். அழிஞ்சில் விதையைப் போன்று ஒரு பெண் கணவனுடன் ஊடல் கொண்டு பிரிந்தாலும் உடனே சேர்ந்துவிட வேண்டும்.

**ஊசியாகத் துளைத்தாய். காந்தமதை கவரவில்லை:** இரும்பு ஊசி காந்தத்தை எங்கே கண்டாலும் போய் ஒட்டிக் கொண்டுவிடும். ஒரு பெண்ணும் கணவனின் இழுப்புக்கு உடனே ஊசி போல அவனோடு ஒட்டிக் கொண்டுவிட வேண்டும்.

**கொடியாக வளர்ந்தாய். கொழுகொம்பில் படரவில்லை:** தாவரக் கொடி வகைகள் அழகாக அருகில் வளர்ந்திருக்கும் மரத்தைப் பற்றிக் கொண்டு மேலேறத் தொடங்கிவிடும். இது மரத்தைப் பற்றிக் கொள்வதைப் போல், ஒரு பெண்ணின் மனம் கணவனை நாட வேண்டும்.

**நதியாகப் பாய்ந்தாய். கடல்தனில் கலக்கவில்லை:** நதியின் சங்கமம் சமுத்திரத்தில்! ஆனால் சில காட்டாறுகள் கடலில் கலக்காமல் வலுவிழந்து நிலத்திலேயே வற்றி போகும். ஒரு குணவதியான பெண் கணவன் என்கிற சமுத்திர ராஜனை அடைய வேண்டும். குணம் கெட்ட பெண்கள் வறண்டு போகும் காட்டாற்றுக்கு ஒப்பானவர்கள்.

**விரதையாய் நின்றும், பதியின்பால் பத்தியில்லை:** தஞ்சம்மாவுக்குக் கணவன்தான் உலகம். என்றாலும் அவரது மனதைக் குளிர்விக்கத் தெரியவில்லை.

தஞ்சம்மா நடுநடுங்கிப் போனாள். "மன்னித்து விடுங்கள் சுவாமி! நீர் என்னைப் பிரிய முடியாமல் சிரமப்படப் போகின்றீரே என்று சற்று குணம் கெட்டவளாக நடித்தேன்!"

"கோதண்டம் உயிரைக் காக்க என்னைத் திரிதண்டம் ஏற்க வைக்க வேண்டும் என்கிற உனது நோக்கம் உயர்வானது. வீணே அதற்கு நீ போலியாக நடித்து பலரைப் புண்படுத்தியிருக்க வேண்டாம். எத்தனை பேரின் மனங்களை நீ புண்ணாக்கிவிட்டாய். இதனால் உனது உயர்ந்த நோக்கம் வீணாகிப் போனதே!"

கண்களில் கண்ணீருடன் நின்ற தஞ்சம்மாவை நோக்காமல் தொடர்ந்து மோதிரத்தில் நின்ற வேங்கடவனையே வெறித்தார்.

"திருமணத்திற்கு முதல் நாள், கோதண்டராமன், சேஷமலை காட்டில் தன்னை நாகம் தீண்டியதையும், அவனைக் காப்பாற்ற நீ மாலவனுக்கு உனக்குக் கிடைக்கும் நாகமணியை அர்ப்பணிப்பதாகக் கூறியதையும் உனது தாய்க்குக் கூற, அவள் என்னிடம் தெரிவித்துவிட்டாள். திருமண நாள் முதலே, உனது நோக்கம் எனக்குப் புரிந்தாலும், நீ மேற்கொண்ட பாதை தவறானது.

'செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம், அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்' என்கிற குலசேகரனின் திருமொழி போல, நான் பரமன்

---

இந்த ஐந்து உதாரணங்களிலும் ஓர் ஆச்சரியம் என்னவென்றால், அழிஞ்சில் விதையோ, இல்லை ஊசியோ, அதுவுமில்லை கொடியோ, நதியோ- யோசித்து எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற திராணியற்றவை இவை. யோசிக்கும் திராணி இருந்தும் பதிவிரதையானவள், 'நான் அப்படித்தான். உலகத்தில் கணவனைத் தவிர வேறொன்றும் அறியேன்' என்று அவனுக்காகத் தன்னையே அர்ப்பணம் செய்து கொள்வாள். மற்ற நான்கைக் காட்டிலும் குணவதியான பெண்ணே சிறந்தவள் என அறியலாம்.

அருள் ஒன்றிற்கு மட்டுமே கட்டுப் படுவேன். தாமரை சூரியனின் வெப்பத்துக்கு மட்டுமே மலரும், அக்னியின் வெப்பத்துக்கு மலருமா? அதே போன்று, நீ என்னை அன்புடன் கவனித்துக் கொண்டிருந்தாலும், இன்முகத்துடன் பணிவிடை செய்திருந்தாலும், நான் துறவறம் மேற்கொண்டுதான் இருப்பேன். இப்போது கூட, உன் மீதுள்ள சினத்தினால் நான் துறவறம் ஏற்றுக் கொள்கிறேன் என்று நினைக்காதே. மனைவி சரியில்லாத தால், இராமானுஜன் துறவறம் ஏற்றான் என்று கூறினால், நாளை உலகம் என்னை நையாண்டி செய்யும். மனைவியை அடக்க இயலாதவன் எப்படிப் புலன்களை அடக்குவான் என்று கேட்கும். இராமன் மனம் விரும்பிக் கானகம் போனது போன்று, அவனது அனுஜன் நான் மனம் விரும்பித்தான் துறவறம் ஏற்கிறேன். கைகேயி தசரதனிடம் வன்சொல் பேசி, வரம் வேண்டி இராமனைக் காட்டிற்கு அனுப்பாமல், இராமனை அன்புடன் அரவணைத்து, 'இராமா, காட்டுக்குச் சென்று அரக்கர்களை அழித்து விட்டு பதினான்கு வருடங்கள் கழித்து வா' என்று சொன்னாலும் இராமன் நிச்சயம் வனத்திற்குப் புறப்பட்டிருப்பான். நீயும் என்னை நல்லவிதமாகவே துறவறத்திற்குத் தயார் செய்திருக்கலாம்! தஞ்சம்மா என்று பெருமாளின் திருவடியே நமக்குக் கதி என்பதை உணர்த்தும் பெயரை வைத்துக்கொண்டு நீ வஞ்சத்தோடு நடந்தது தவறு. சரி போகட்டும். இனியாவது திருமங்கைபுரம் சென்று உனது தந்தை அகத்தில் புத்தியுடன் நடந்து கொள்!" என்றபடி இராமானுஜர் வீதியில் இறங்கி மேற்கே நடந்தார். தெருக்கோடியை அடைந்ததும், வடக்காகத் திரும்பி தஞ்சம்மாவின் பார்வையிலிருந்து மறைந்தார்.

கண்களில் நீர் வழிய, கைகளைக் கூப்பியபடி அவர் பார்வையிலிருந்து மறையும் வரை நின்று கொண்டிருந் தாள், தஞ்சம்மா. அவளுடைய நாகமணி மாலவனை நோக்கிச் சென்றுவிட்டது. மாமலையான் என்கிற

மலைவாசிக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றி விட்டாள்.

தஞ்சம்மாவின் நாகமணி மக்களுக்குத் தஞ்சமளிக்கும் ஆதிசேஷமணியாகப் பொலியப் போகிறது. தஞ்சம்மா குணவதியாக நடந்திருந்தாலும், இராமானுஜர் துறவறத்தை ஏற்றிருப்பார் என்கிற நிலையில் தஞ்சம்மாவின் நடத்தையை யாரால் குற்றம் கூற முடியும்? கோதண்டராமன் என்கிற சிறுவனின் உயிர் அப்போதைக்கு அவளுக்கு முக்கியமாகப் பட்டதால், தான் கண்டிராத கணவனை மாலவனுக்கு அர்ப்பணம் செய்வதாக வாக்களித்திருந்தாள். தனது வாக்கை நிறைவேற்ற முடியாமல், கணவன் தன்னிடம் அன்பு கொண்டுவிடப் போகிறாரே என்கிற அச்சத்தில் கூட அவள் அங்ஙனம் குணம் கெட்டவளாக நடந்திருக்கலாம். எப்படி இருந்தாலும், இராமானுஜரை மாலவனுக்கு அர்ப்பணித்து தனது வாழ்க்கையை அவள் தியாகம் செய்து இருந்ததால், இராமானுஜரை நினையும் போதெல்லாம், ரக்ஷா என்கிற தஞ்சம்மாவுக்கும் ஒரு கைகூப்பு செய்கையைச் செய்யலாமே.

# 39. கருமை தேசம்

பிரம்மதேசம் கயிலாய நாதர் ஆலயத்தின் முன்பாக இருந்தது, பரசிகாமணி கொங்காழ்வாரின் மாளிகை. கோயிலில் அதிகக் கூட்டம் இல்லையென்றாலும், அந்த வீதியில் நாலைந்து இரதங்களும், புரவிகளும் நிற்பதைக் கண்டு மன்னரின் குடும்பம் வந்திருப்பதை அறிந்த மக்கள் அந்த வீதியில் திரள, அவர்களைத் தெரு முனையிலேயே தடுத்து நிறுத்தி கயிற்றைக் குறுக்காகக் கட்டி, அவர்கள் உள்ளே நுழையாதபடி காவல் புரிந்தனர், காவலர்கள். மாளிகையின் ஆலோசனை அறையில் பிரம்மதேசத்து பரசிகாமணி கொங்காழ்வார் தனது முன்பாக அமர்ந்திருந்த இராஜேந்திர சோழரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். மன்னரின் முகத்தில் நிலவிய கம்பீரத்தைக் கடந்து, அவரது கண்களில் ஒருவித அச்சம் படர்ந்திருந்ததை அவரால் யூகிக்க முடிந்தது. இராஜேந்திர சோழனின் கண்களைச் சுற்றிப் படர்ந்திருந்த கருவளையங்கள் அவன் இரவு வேளைகளில் நிம்மதியாக உறங்குவதில்லை என்பதனை புலப்படுத்தின.

வீரமாதேவி மன்னரின் அருகே கவலையே உருவாக அமர்ந்திருந்தாள். மன்னரின் பின்பாக மதுராந்தகன் பரகேசரி மூவேந்தர் வேளான் அமர்ந்திருந்தான். இராஜேந்திரனின் நான்கு மகன்கள், இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரன், இராஜமகேந்திரன் மற்றும் வீரராஜேந்திரன் ஆகியோர் ஒருபுறம் அமர்ந்திருக்க, இராஜேந்திரனின் இரு மகள்கள், அருண்மொழி தேவியும், அம்மங்கையும், அனபாயனோடு அமர்ந்திருந்தனர்.

பிரம்மதேசத்து பரசிகாமணி கொங்காழ்வார் மிகவும் கோபக்காரரர் என்று புகழ் அடைந்தவர். யாராக

இருந்தாலும், உள்ளதை உள்ளபடியே அவர்கள் செய்த தவறுகளைக் கொண்டே, அவர்களை ஆட்டி வைக்கும் ஊழ்வினையை அடையாளம் கூறிவிடுவார். தாங்கள் செய்த தவறுகளை மறைத்துப் பொய்யுரைத்தாலும் கண்டுபிடித்து அவர்களை எழுந்து போகச் சொல்லி விடுவார். அதே போன்று, அவரை ஜோதிடர் என்று அழைத்தாலும் சினம் கொள்வார். ஊழ்வினையைப் படிக்க அதிக ஆற்றல் வேண்டும். தனது மேதாவிலாசத் தால் மனிதனின் நாடிச்சக்கரங்களைப் படித்து அவர்கள் செய்த ஊழ்வினையைக் கண்டுபிடிக்கும் தனது திறமையை மெச்சாவிட்டாலும் மன்னித்துவிடுவார். ஆனால் கோள்களின் சுழற்சியைக் கொண்டு எதிர் காலத்தை கணிக்கும் ஜோதிடர்களுடன் அவரை ஒப்பிட்டால் அவருக்குக் கடும் சினம் தோன்றும். ஊழ்வினையைப் படிப்பவன் ஒரு மருத்துவனுக்குச் சமானம் என்பார்.

பரிகாரங்கள் செய்து ஊழ்வினையைக் கழிக்க முடியும் என்பதை பரசிகாமணி கொங்காழ்வார் ஒப்புக்கொள்ள வில்லை. அப்படியென்றால், அனைவரும் எல்லாத் தவறுகளையும் செய்துவிட்டுப் பரிகாரம் செய்யலாம் அல்லவா? மன்னிப்பு, பரிகாரம், தோஷ நிவர்த்தி அனைத்துமே பொருள் ஈட்ட விரும்புபவர்களால் ஏற்பட்டது என்பார், கொங்காழ்வார்.

"பிரச்னையைக் கூறுங்கள் மன்னா?" பரசிகாமணி கொங்காழ்வார் வினவினார்.

இராஜேந்திரனின் விழிகள் ஒருமுறை பம்பரமாகச் சுழன்று, ஓரங்களைக் கவனித்து, பிறகு பரிதாபத்துடன் கொங்காழ்வாரை கவனித்தது.

"அண்மையில் காஞ்சியில் எனது பெரிய தந்தை எழுப்பிய பொன்னாழி மாளிகையில் தங்கியிருந்தேன். எனது தங்கை குந்தவி வேங்கியிலிருந்து தனது பெயரன்

அனபாயனைப் பார்ப்பதற்கு வந்திருந்தாள். நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்த போது மழை பெய்ததால் அனைவரும் அவரவர் அறைக்குத் திரும்பி விட்டோம். நடுநிசியில் என்னை வீரமாதேவி எழுப்பினாள். நந்தவனத்தில் யாரோ இரதத்தை விரைவாகச் செலுத்துகிறார்கள் என்றாள். நானும் உடனடியாகச் சென்று பார்த்தேன். நந்தவனத்தில் இறங்கி, கொட்டும் மழையில்..” சிறிது இடைவெளிவிட்ட இராஜேந்திரன், அந்தக் கிருமியின் உருவத்தை வருணிக்கத் தொடங்கினான்.

“அந்த சோழ கிருமியின் உருவத்தை நான் விவரிக்கிறேன் கேளுங்கள்!” என்ற இராஜேந்திரனை தனது கையை உயர்த்தி தடுத்தார். “அந்த உருவம் எப்படி இருக்கும் என்பதை நானே கூறுகிறேன்!” என்ற பரசிகாமணி கொங்காழ்வார் தனது உதவியாளனை அழைத்தார்.

“விடங்கா! ஒரு கரும்பலகையும், சுண்ணாம்புக் கட்டிகளையும் கொண்டு வா!” என்றவர், அவன் சென்றதும் இராஜேந்திரனை நோக்கித் தலையசைத்தார்.

“சோழ கிருமி அந்தத் தேரைச் செலுத்தியபடி விரைவாகச் சென்று தெற்கில் திரும்பி எனது பார்வையில் இருந்து மறைந்தது. ஆனால் மீண்டும் எனது பின்னால் இரதம் வரும் ஒலி கேட்க, அந்தக் காட்சியை மீண்டும் காணத் திராணி இல்லாமல் அலறிக் கொண்டே விழுந்தேன். காலையில் கொட்டும் மழையில் நந்தவனத்தில் நான் மயங்கிக் கிடந்ததாக காவலர்கள் கூறினார்கள். இரவு நான் அவர்களைக் கடந்து சென்றதையும் பார்த்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கண்களில் தேர் ஓடும் காட்சி தென்படவில்லை. காம்போஜ மன்னன் எனக்குப் பரிசளித்த அந்த இரதம், இலாயத்தில் பத்திரமாக நிற்கவைக்கப்பட்டிருந்தது என்கிறார்கள், அதிகாரிகள். எனக்கு ஒன்றுமே

புரியவில்லை. நான் கண்டது கனவா, இல்லை நினைவா?" - இராஜேந்திரன் கூறினான்.

"கனவாகத்தான் இருக்க வேண்டும், கொங்காழ்வாரே! ஏனென்றால், நடுநிசியில் நான் மன்னரை எழுப்பியதாகக் கூறுகிறார். நான் அவரை எழுப்பியதாக எனக்கு நினைவில்லை." - வீரமாதேவி கூறினாள்.

"கனவாக எப்படி இருக்க முடியும்?"

இராஜேந்திரன் மேனி நடுங்கியதை பார்த்தார், கொங்காழ்வார்.

"ஏன் கனவாக இருக்கக்கூடாது, அரசே?"- கொங்காழ்வார் கேட்டார்.

"கனவென்றால், நான்கு பேருக்கு எப்படி ஒரே உருவம் தோன்ற முடியும்? தஞ்சை பெரிய கோயில் கும்பாபிஷேகத்திற்கு இரண்டு நாள் முன்பாகக் கருவூர் தேவரின் முன் இதே போன்று ஓர் உருவம் தோன்றியது. கோபுரத்தின் உச்சியில் அமர்ந்திருந்த அந்தக் கரிய உருவம், தன்னை சோழ கிருமி என்று அறிமுகம் செய்து கொண்டது. கையில் ஒரு ஈட்டியை ஏந்திக்கொண் டிருந்தது. அதே உருவத்தை எனது தந்தை பார்த்தார். அதனைப் பார்த்த கையோடு மரணப்படுக்கையில் விழுந்தவர், அதன் பிறகு மீளவே இல்லை!" - இராஜேந் திரன் வேதனையுடன் கண்களை மூடித்திறந்தான்.

"வேறு யார் அந்தக் கிருமியைப் பார்த்தனர்?-பரசிகா மணி கொங்காழ்வார் தனது தாடியை நீவியபடி கண்களை மூடி யோசித்தார்.

"பெரிய கோயில் சிற்பி குஞ்சரமல்லன் இராம பெருந்தச்சரின் மகன் சோமாஸ்கந்தன்தான் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஆலயப் பணிகளை மேற்பார்வை யிட்டான். முழுநிலவன்று ஆலயத்திற்குச் சென்ற போது கிருமி அவனைக் கொல்ல வந்ததாம்.

அந்த அதிர்ச்சியில் இதயம் வெடித்து இறந்தான். இப்போது நானும் பொன்னாழி மாளிகையில் அந்தக் கிருமியைப் பார்த்துவிட்டேன். மனம் சஞ்சலப்படுகிறது. எனவேதான் தங்களது ஆலோசனையைக் கேட்க வந்தேன்."-இராஜேந்திரன் கூறினான்.

"மன்னரே! கிருமி என்பது சோழ அரசகுடும்பத்திற்கு மட்டும் உண்டானதல்ல. எல்லாக் குடும்பங்களிலும் கிருமிகள் தோன்றும். எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் ஒவ்வொரு தலைமுறையிலும் பலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். பல்லவத்தில் பெண் ராசி கிடையாது என்பார்கள். பிறந்த பெண்களும் தற்கொலை செய்து கொள்வார்களாம். எனவே கிருமி இல்லாத குடும்பங்களே கிடையாது. ஒவ்வொரு குடும்பத்தில் சித்தம் கலங்கிய மனிதர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் இருக்கின்றனர். இதையெல்லாம் கேட்பதற்கு வேடிக்கையாகத் தோன்றும். ஆனால் ஊழ்வினை என்பது ஒவ்வொரு குடும்பத்திலும் விஸ்வரூபம் எடுத்து வளரும். ஐந்து தலைமுறைக்கு முன்பாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் செய்யும் கொலை, அதன் ஐந்தாம் தலைமுறையைக் கூட பாதிக்கும்" என்றதும் இராஜேந்திரன் கவலையுடன் வீரமாதேவியை நோக்கினான்.

"அதுதான் எங்களுக்குக் கவலையாக இருக்கிறது. ஆதித்த கரிகாலனார் எழுப்பிய பொன்னாழியில் தங்கியிருந்த போதுதான், மன்னர் அந்தச் சோழ கிருமியைக் கண்டிருக்கிறார். எனவேதான் தங்களை நாடி வந்தோம்!" - வீரமாதேவி கூறினாள்.

மௌனமாக யோசித்தபடி அமர்ந்திருந்த கொங்காழ்வார் திடீரென்று அந்த அறையில் குழுமி இருந்தவரை நோக்கினார்.

"மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வந்திருக்கிறீர்களா?"

அவர் கேட்டதும், தலையசைத்தார்கள், அரச குடும்பத்தினர்.

"நான் ஒரு சிறு பரிசோதனையைச் செய்யப் போகிறேன். நான் ஒரு இரத்தினக் கம்பளத்தை விரிக்கப் போகிறேன். அதில் மன்னரும், அரசியாரும் முதலில் அமர வேண்டும். அவர்கள் பின்பாக நான்கு மகன்கள் அமர வேண்டும். அவர்கள் பின்பாக மன்னரின் இரண்டு மகள்கள் அமர வேண்டும். மன்னர் குடும்பத்தைச் சேராத மற்றவர்கள் தனியாக அமர வேண்டும்!" என்று கொங்காழ்வார் கூறினார்.

தரையில் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டது. அந்தக் கம்பளத்தில் மன்னரின் குடும்பம் அமர்ந்தது. பரகேசரியும், அனபாயனும் இருக்கைகளில் மற்ற பெண்களோடு அமர்ந்தனர். கொங்காழ்வாரின் முன்பாக கரும்பலகை ஒன்றைக் கொண்டு வந்து வைத்தான், அவரது உதவியாளன் விடங்கன். கிண்ணத்தில் சுண்ணாம்புக் கட்டிகளையும் கொண்டு வந்து வைத்தான்.

"இது ஒரு சிறு பரிசோதனை. சோழ ஊழ்வினை பற்றிய ஒரு ஆய்வு என்றும் கூறலாம். சோழ மன்னர் சோழ கிருமியின் உருவத்தைக் கண்டிருக்கிறார். அவர் மட்டுமல்ல, கருவூர் தேவர், மன்னர் இராஜராஜ சோழர், சிற்பி சோமாஸ்கந்தன் ஆகிய மூவரும் இந்த உருவத்தைக் கண்டிருக்கின்றனர். ஒன்று நன்றாகப் புரிகிறது. கருவூர் தேவர் அதனைக் கண்ட போது அதற்கு இல்லாத உக்கிரம், சோமாஸ்கந்தன் கண்ட போது அதற்கு இருந்திருக்கிறது. அதனால்தான் ஈட்டியைக் கொண்டு அவனைக் கொல்ல வந்திருக்கிறது. சோழர்கள் செய்யும் ஊழ்வினைகள்தான் சோழ கிருமியாக வடிவெடுத்துள்ளது. எனவே இப்போது ஒரு சிறு பரிசோதனை. மன்னர் கண்ட சோழ கிருமியின் உருவத்தை நான் இதுவரை கண்டதில்லை. நான் காணாத அந்த

உருவத்தை இப்போது வரையப் போகிறேன். இந்தப் பரிசோதனையில் கம்பளத்தில் அமர்ந்திருக்கும் மன்னர் குடும்பம் மட்டுமல்ல, மற்றவர்களும் இதில் கலந்து கொள்ளலாம். சோழம் செய்த தவறுகள் அனைத்தையும் ஒவ்வொருவராகப் பட்டியலிடலாம். அந்தத் தவறுக்கு ஏற்ப நான் இந்தக் கரும்பலகையில் ஓர் உருவம் வரைவேன். இன்ன ஊழ்வினைக்கு இன்ன அடையாளம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒவ்வொரு ஊழ்வினையாக ஒப்புக்கொள்ள வேண்டும். அதன்படி இந்த உருவம் வளர்ச்சி பெறும். சோழத்தின் ஊழ் வினைகளாக நீங்கள் கருதுபவற்றை ஒன்றையும் ஒளிக்காமல் கூற வேண்டும். முடிவில் அந்த ஓவியம் முற்றுப்பெறும் போது, காணப்படும் ஓவியம், மன்னர் கண்ட சோழ கிருமியை ஒத்திருக்கிறதா என்று மன்னர் கூற வேண்டும். ஒத்திருந்தால்தான் அடுத்தக்கட்டத்தை நாம் யோசிக்க முடியும்!"-பரசிகாமணி கொங்காழ்வார் கூற, அரசகுடும்பமே அவரை விசித்திரமாகப் பார்த்தது.

அரசகுடும்பம் கொங்காழ்வாரின் எதிரே விரிக்கப் பட்டிருந்த கம்பளத்தில் அமர்ந்திருந்ததால் அவர் கரும்பலகையில் வரைந்த ஓவியத்தை அவர்களால் காண முடியவில்லை. சுண்ணாம்புக் கட்டியைக் கையிலெடுத்த கொங்காழ்வார், கண்களை மூடி தியானித்தார். பிறகு கண்களைத் திறந்து மன்னரை நோக்கினார்.

"நானே முதலில் துவங்குகிறேன். அப்பர் பெருமான் மற்றும் கண்டராதித்தர் நாயகி பாவத்தில் பாடிய தளிக்குளத்தானின் சன்னிதிக்கு எதிராகச் சூழ்ச்சியை அரங்கேற்றி அந்த ஆலயத்தை இடித்துத் தள்ளியதை பெரிய ஊழ்வினையாக நான் கருதுகிறேன்!" - என்று கூறிய கொங்காழ்வார் இரத்தின மண்டபக் கோபுரத்தை வரைந்தார். அதன் பிறகு இராஜேந்திர சோழனை நோக்கினார்.

"அரசே! நீங்கள் துவக்குங்கள். சோழத்தின் மிகப்பெரிய ஊழ்வினையாக எதனைக் கருதுகின்றீர்கள்?"-

கொங்காழ்வார் தனது கையில் இருந்த சுண்ணாம்புக் கட்டியைக் கரும்பலகையில் வைத்தார்.

இராஜேந்திரன் சிந்தித்தான். பிறகு அவரை உறுத்து நோக்கினான். "எனது பெரிய தந்தை ஆதித்த கரிகாலனாரின் கொலைதான் சோழத்தில் நிகழ்ந்த பெரிய ஊழ்வினையாகக் கருதுகிறேன். பட்டத்து இளவரசன், வீரபாண்டியனின் தலையை வாங்கியவன், சாளுக்கியர்களை நடுங்க வைத்தவன் என்றெல்லாம் போற்றப்பட்ட ஆதித்த கரிகாலனை, பாண்டிய ஆபத்துதவிகள் மிக எளிதாகக் கொன்றுவிட்டார்கள் என்று கூறுவதை ஜீரணிக்க இயலவில்லை. மாபெரும் வீரனான எனது பெரிய தந்தை விழிப்புடன் இருந்திருந்தால் அவரைக் கொன்றிருக்கவே முடியாது. அவர் தன்னை மறந்த நிலையில் இருக்கும் போது அவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று எனது பாட்டனார் சுந்தர சோழரும் பாட்டியார் வானவன் மாதேவியும் புலம்பியதை நான் கேட்டிருக்கிறேன்!"- இராஜேந்திரன் கூறினான்.

"பாண்டியர்கள் சேவூர் போரில் தங்கள் மன்னன் தலையைக் கொய்ததற்குதானே பழி வாங்கினார்கள் என்று கூறப்பட்டது?" - கொங்காழ்வார் கேட்டார்.

"பத்து வருடங்கள் கழித்து வந்தா பழி வாங்குவார்கள்? சிறிய பாட்டனார் உத்தமசீலனின் தலை வாங்கப் பட்டதற்குத்தான் ஆதித்த கரிகாலன் சபதம் செய்து பழி வாங்கினார். எனவே இதில் வேறு ஏதோ சூழ்ச்சி இருப்பதாக அப்போது பேசப்பட்டது. ஆதித்த கரிகாலனின் கொலையால் இலாபம் அடைந்தவர்கள் பாண்டியர்கள் அல்லவே. அவனது மரணத்தினால் இலாபம் அடைந்தவர்கள் யாரோ அவரைத்தான் மக்கள் சந்தேகித்தனர்." - இராஜேந்திரன் கூறினான்.

"உத்தம சோழன் அரியணை ஏறியதால் அவரைச் சந்தேகித்தனர்" - வீரமாதேவி கூறினாள்.

"அப்படி என்றால் அவரை ஊழ்வினை தொடர்ந்திருக்க வேண்டும் அல்லவா? ஊழ்வினை தொடர வேண்டுபவர்களுக்கு, அதனை அனுபவிப்பதற்காக வாவது பிள்ளைச் செல்வங்கள் பிறக்க வேண்டுமே? உத்தம சோழருக்கு பிள்ளை இருந்ததா?" - கொங்காழ்வார் கேட்டார்.

"இருந்தார்!" பரகேசரி மிடறு விழுங்கினார்.

"அவருக்கு என்ன ஆனது?" - கொங்காழ்வார் கேட்டார்.

"உத்தம சோழருக்கு மதுராந்தகக் கண்டராதித்தர் என்கிற மகன் இருந்தார். மன்னர் இராஜராஜ சோழரின் அமைச்சரவையில் அறநிலையத்துறையைக் கவனித்து வந்தார். அறநிலையத்துறையை மேற்பார்வையிட ஐவர் குழு ஒன்றை அமைத்தார். அந்தக் குழுவில் நானும் இடம்பெற்றிருந்தேன்." - பரகேசரி கூறினார்.

"அவருக்கு என்ன ஆனது?" - கொங்காழ்வார் கேட்டார்.

"அறநிலையத்துறையில் அநேக சீர்கேடுகள் நிகழ்வதாகக் குற்றம் சாற்றப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். பிறகு அவர் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டார் என்று அந்த வழக்கு முடிக்கப்பட்டது." - பரகேசரி கூறினார்.

"அந்த தற்கொலையும் சூழ்ச்சிக் கொலையாக இருக்கலாம். அவன் போட்டி ஆட்சியாளனாக வந்து விடக்கூடாது என்பதும் அவனது கொலைக்குக் காரணமாக இருக்கலாம். மொத்தத்தில் ஆதித்த கரிகாலனின் கொலைதான் மிகப் பெரிய ஊழ்வினையாக இருக்கிறது என்பது சரியான யூகம். எனவேதான் சோழ இரதத்தின் உச்சியில் அவனது தலை சொருகப் பட்டிருந்தது. இடிஇடியென அந்தச் சோழ கிருமி சிரித்ததற்குக் காரணம், சோழத்தை பார்த்து தெய்வம்

சிரிக்கிறது. அறநிலையத்துறையைக் கையாண்ட இரண்டாம் கண்டராதித்தரின் மரணம் அதனை நிரூபிக்கின்றது." - கொங்காழ்வார் கூறியபடி, அடுத்து வீரமாதேவியை நோக்கினார்.

"நீங்கள் கூறுங்கள், அரசியாரே!"

"சோழ கிருமிக்கு முழுக் காரணமாக நான் அரிஞ்சய சோழரைத்தான் சொல்வேன். குந்தள மன்னன் மூன்றாம் கோவிந்தனின் சகவாசத்தால் பெண் பித்தராக மாறினார். சாளுக்கிய அரசி வீமன் குந்தவையை மணம் செய்து கொண்டாலும், அவளுடன் மனம் ஒத்து வாழாமல் அவளைச் சித்திரவதைகள் செய்தார். வைதும்ப இளவரசி கல்யாணியைப் பலவந்தமாக அவனது காதலனிடம் இருந்து பறித்து வந்து மணந்து கொண்டார். அவருக்குப் பிறந்த சுந்தரரை பட்டத்து இளவரசராக முடி சூட்டினார். பெண்களைக் கடத்தி வந்து தனது அந்தப்புரத்தில் அடைத்து வைத்தார். தக்கோலம் போரில் உதவிக்கு அழைத்த அண்ணன் இராஜாதித்யனுக்கு உதவுவதற்காகப் படைகளுடன் சென்றவர், வழியில் ஒரு பெண்ணுடன் சல்லாபித்து விட்டு, காலந்தவறி போர்க்களம் சென்றதால், பட்டத்து இளவரசரான இராஜாதித்யன் யானை மேல் துஞ்சிய தேவர் என்கிற பெயருடன் வீரமரணம் அடைந்தார். பல பெண்களின் சாபங்களைப் பெற்ற அரிஞ்சயர்தான் சோழ கிருமி தோன்ற காரணம்." - வீரமாதேவி கூறினாள்.

"நான் அப்படிக் கூறமாட்டேன்!" - அருண்மொழிதேவி கூறினாள்.

"பராந்தக சோழர்தான் இதற்கு முழுக் காரணம். பெரும்பாணப்பாடி நாட்டைக் கைப்பற்றி, பாணர் பெண்களையும், குழந்தைகளையும் அடிமைப்படுத்தி கங்க நாட்டு மன்னனுக்கு விற்றாரே, அவரால்தான் கிருமி தோன்றியிருக்க வேண்டும்."

வீரமாதேவி அரிஞ்சயரைப் பற்றிக் கூறியதைக் கேட்டதும், தான் வரையும் ஓவியத்தின் மர்ம உறுப்பில்

குருதி பெருகுவது போன்று வரைந்தார். பிறகு அருண்மொழிதேவி கூறியதை செவியுற்றதும், அந்த உருவத்தின் உடலில் சீழ்வடியும் புண்களை வரைந்தார்.

"அடுத்து யார்?" கொங்காழ்வார் கேட்க, இராஜேந்திரனின் இரண்டாவது மகள் அம்மங்கை தயக்கத்துடன் பேசினாள். அவளது மகன் அனபாயன் வியப்புடன் தனது தாயைக் கவனித்தான்.

"எனது கருத்து, எல்லா ஊழ்வினைகளுக்கும் காரண கர்த்தாவாக விளங்குவது, திருப்புறம்பியம் போரின் நாயகன் ஆதித்த சோழன்தான். தனது ஆருயிர் நண்பன் அபராஜிதனைக் கொன்று பல்லவத்தையும், உக்ரோதயத்தையும் கைப்பற்றியதுதான் பல்லவத்தில் பெரிய நம்பிக்கைத் துரோகமாகக் கருதப்பட்டது." - அம்மங்கை கூற, கொங்காழ்வார் தான் வரையும் ஓவியத்தின் முதுகில் ஒரு குத்துவாளைச் சொருகினார்.

கொங்காழ்வார் சுண்ணாம்புக் கட்டியைக் கிண்ணத்தில் வைத்தார்.

"ஓவியம் முற்றுப்பெற்றது என்று நினைக்கிறேன்!" என்றவர் மன்னரைப் பார்த்தார்.

"மன்னா! இப்போது அந்தச் சோழ கிருமியின் ஓவியத்தை வர்ணிக்கலாம்!" -கொங்காழ்வார் கூற, தான் பொன்னாழியில் கண்ட சோழ கிருமியின் உருவத்தை மனக்கண் முன்பாக நிறுத்தி அதனை வர்ணிக்கத் தொடங்கினான், இராஜேந்திரன். அதன் உருவத்தை மனக்கண் முன்பாக நிறுத்தியதும், அவனது தேகம் நடுங்கியது..

"என்னை வீரமாதேவி உறக்கத்தில் இருந்து எழுப்பினாள். நான் கொட்டும் மழையில் முருக்கத்தி பாதை வரை சென்றேன். தொலைவில் அந்த இரதம் தெற்குத் திசையில் திரும்புவது தெரிந்தது. பிறகு மீண்டும் வடக்கிலிருந்து கிழக்குப் பாதையில் திரும்பி எனது

பின்பாக வந்தது. நான் திரும்பி நோக்கியபடி நின்றேன். என்னை நெருங்கியது, அந்த இரதம். அந்த ஸ்வர்ண இரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்தது ஒரு கரிய உருவம். அதுதான் சோழ கிருமி! முற்றிலும் கருமை நிறம். ஆனால் கண்கள் இரண்டும் தீப்பிழம்பாக என்னை வெறித்தன. ஆணா அல்லது பெண்ணா என்று இனம் கூற இயலாத முகம். உடம்பெங்கும் சீழ் வடிந்து கொண்டிருந்தன. வாயில் இரண்டு கோரைப் பற்கள். இரண்டு மார்பகங்கள் கிழிந்து தொங்கிக் கொண் டிருந்தன. முதுகில் ஒரு குத்துவாள் பாய்ந்து அதில் இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. அந்த உருவத்தின் மர்ம உறுப்பிலும் இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. மிகவும் கோரமாகவும், அருவருப் பாகவும் காணப்பட்ட அந்த முகம் என்னை நோக்கி கோரமாக சிரித்தபடி தேரைச் செலுத்திச் சென்றது. அதன் கையில் ஒரு ஈட்டியை ஏந்திக் கொண்டிருந்தது. தேரின் உச்சியில், ஆதித்த கரிகாலனின் தலை சொருகப் பட்டிருந்தது. தேர் மண்டபத்தின் நான்கு கம்பங்களிலும் எனது நான்கு மகன்களின் தலைகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. நான் அந்தக் கோரமான காட்சியைக் கண்டு ஸ்தம்பித்து நின்றேன்" - இராஜேந்திர சோழன் சொல்லியபடியே கவலையுடன் கொங்காழ்வார் தனது கரத்தில் பற்றியிருந்த கரும்பலகையையே நோக்கினான்.

"மன்னா! இதுதானே நீங்கள் கண்ட உருவம்?"- பலகையில் தான் வரைந்திருந்த ஓவியத்தைக் காண்பித்தார், கொங்காழ்வார்.

அந்தக் கோர உருவத்தைக் கண்டு அனைவருமே திகைத்து நின்றனர்.

"கனகச்சிதமாக நான் கண்ட உருவத்துடன் உங்கள் ஓவியம் பொருந்துகிறது!" ஈனஸ்வரத்தில் முணுமுணுத் தான், இராஜேந்திரன். அவனால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை.

“இது எப்படி சாத்தியம், கொங்காழ்வாரே? நான் பார்த்த உருவத்தை அப்படியே நேரில் கண்டதைப் போன்று வரைந்திருக்கிறீர்கள்?” - அதிசயித்தான், இராஜேந்திரன்.

“தேரின் உச்சியில் ஆதித்த கரிகாலனின் தலை- காரணம் எல்லா ஊழ்வினைகளுக்கும் உச்சம் அவரது கொலை. அபராஜிதனை ஆதித்த சோழன் முதுகில் குத்தினான். எனவே சோழ கிருமியின் முதுகில் குத்துவாள். அரிஞ்சயன் பெண்களைக் கொடுமைப் படுத்தினான். எனவே கிருமியின் மர்ம உறுப்பில் குருதி பெருகுகிறது. சோழ பெண்கள் தாங்கள் விரும்பிய வனுக்கு அரியணை கிடைக்க வேண்டும் என்பதற்காக மூத்த பிள்ளைக்குத் துரோகம் இழைத்தார்கள். இளங்கோபிச்சி தனது மகன் கன்னரதேவனுக்குப் பராந்தகனால் அரியணை மறுக்கப்படவேதான் சோழத்தை சபித்தாள். அவள் வாரித்தூற்றிய மண்தான் சோழ கிருமியாக வடிவெடுத்தது. பெண்கள் செய்த சூழ்ச்சியை உணர்த்தும் வகையில் அந்தக் கிருமியின் மார்பகங்கள் அறுந்து தொங்குகின்றன. வாணர் குலப் பெண்களை அடிமைப்படுத்தி அவர்களை போர் வீரர்களுக்கு விருந்தாக்கி விற்றதால் சோழ கிருமியின் உடலெங்கும் சீழ் வடியும் புண்கள். தெய்வம் சிரிப்பதால் அதன் இடிஇடியெனச் சிரிக்கும் குரல். சோழ இரத்தம் ஒன்றையொன்று சதி செய்து அழிக்க நினைப்பதால் அதன் சிவந்த கண்கள்..” - விவரித்தார் கொங்காழ்வார்.

அவர் கூறி முடித்ததும், அங்கே நீண்ட மௌனம் நிலவியது. கொங்காழ்வார் வரைந்திருந்த அந்த ஓவியத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த இராஜேந்திரனுக்குத், திடீரென்று அந்த மாறுதலை உணர்ந்தான். தான் பார்த்த சோழ கிருமியின் உருவத்திற்கும், கொங்காழ்வாரின் ஓவியத்திற்கும் இடையே வித்தியாசம் இருந்தது.

"கொங்காழ்வாரே! உமது ஓவியத்தில் ஒரு குறைபாடு உள்ளது. நான் சோழ கிருமியின் உருவத்தில் கண்ட ஒரு அடையாளம் உங்கள் ஓவியத்தில் இல்லை."- இராஜேந்திரன் பரபரப்புடன் கூறினான்.

தான் வரைந்த ஓவியத்தின் வாயை கவனித்தார், கொங்காழ்வார். அந்த உருவம் சிரிப்பது போன்று வரைந்திருந்தார். ஆனால் மன்னர் கூறுவது போன்று ஓரங்களில் கோரைப் பற்கள் இல்லை.

"குறைபாடு என்னிடம் இல்லை. யாரோ ஒருவர் ஒரு முக்கியமான தகவலை மறைத்துள்ளார். ஒரு பெரிய தவறு என்னிடம் மறைக்கப்பட்டு உள்ளது. இரு கோரைப் பற்கள் என்பதால் இருவர் குறித்த தகவல் என்று நினைக்கிறேன். அந்த ஊழ்வினைச் செயலை ஒப்புக் கொண்டு என்னிடமும் தெரிவிக்காத வரையில், ஓவியம் முழுமை பெறாது. யார் என்னிடம் ஒரு முக்கியத் தகவலை மறைத்திருக்கிறீர்கள்..? என்னிடம் உண்மையைக் கூறுங்கள்." - சற்று காட்டமாகவே கொங்காழ்வார் கூறினார்.

அரசகுடும்பத்தினர் ஒருவரையொருவர் திகைப்புடன் நோக்கினர். எங்கும் அமைதி நிலவ, கொங்காழ்வார் தனது பார்வையை அறையைச் சுற்றி மேயவிட்டார். சுவாசத்தைக்கூட விடமறந்து அனைவரும் அமர்ந்திருக்க, திடீரென்று ஒரு கை மட்டும் உயர்ந்தது.

அந்தக் கைக்கு உரியவரை அனைவரும் திடுக்கிட்டுப் போய் நோக்கினர்.

வீரமாதேவியின் அண்ணன் மதுராந்தகப் பரகேசரி மூவேந்தர் வேளான்தான் கையை உயர்த்தியிருந்தான்.

"பல்லவ இளவரசன் பார்த்திபன் மற்றும் அவனது மனைவி கல்பலதாவின் மரணங்களுக்கு நான்தான் காரணம். கர்ப்பிணியான கல்பலதா சென்ற சிவிகையையும், அவளுடன் பயணித்த விஜயமேதாபதி,

வீரர்கள் மற்றும் சிவிகை தாங்கிகளைக் கொன்று, சிவிகையுடன் கல்பலதாவை எரித்தது நான்தான். எனக்கு இட்ட கட்டளையின்படி நானும், அமானுஷ்யர் என்பவரும் சேர்ந்து இந்தக் கொலைகளைச் செய்தோம்.."- பரகேசரி கூறினார்.

"யார் கட்டளையிட்டது?" -கொங்காழ்வார் கேட்டார்.

"கட்டளையிட்டவர்கள் தற்போது உயிருடன் இல்லை!" - சாதுர்யமாகப் பதில் தந்தார், பரகேசரி.

மீண்டும் சுண்ணாம்புக் கட்டியை எடுத்து அந்த ஓவியத்தின் வாயின் ஓரங்களில் இரு கோரைப் பற்களை வரைந்தார். "இரு பல்லவர்கள் அழிக்கப்பட்டதை சூசகமாக இரண்டு கோரைப் பல் உணர்த்துகின்றன. இப்போது ஓவியம் முழுமை பெற்றுவிட்டதா மன்னா?"- கொங்காழ்வார் கேட்க, இராஜேந்திரன் கலவரத்துடன் அந்த ஓவியத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"எனது நான்கு மகன்களின் தலைகள் தேர் மண்டபத்தின் நான்கு தூண்களில் ஊசலாடுகின்றனவே. அந்தக் காட்சியை நீங்கள் வடிக்கவில்லையே?" -மெல்லிய குரலில் கூறினான், இராஜேந்திரன்.

"நடைபெற்ற ஊழ்வினைகளை மட்டுமே நான் வரைந்துள்ளேன். உனது நான்கு மகன்களும் இதோ இங்கே எனது முன்பாக அமர்ந்திருக்கிறார்கள். சோழ இரதம் விரைந்து சென்று கொண்டிருப்பதை உனது காட்சி உரைக்கின்றது. அந்தத் தேர் மண்டபத்தில் உனது மகன்களின் தலை ஊசலாடுவதும், அல்லது அவர்களது உடலிலேயே தங்குவதும் உமது கையில்தான் இருக்கிறது அரசே!"-கொங்காழ்வார் கூறினார்.

"அதனைத் தவிர்க்க நான் என்ன செய்ய வேண்டும், கூறுங்கள்?" - பரபரப்புடன் இராஜேந்திரன் கேட்க, வீரமாதேவியும், நான்கு மகன்களும் உன்னிப்பாக அவரை கவனித்தனர்.

"சுருக்கமாகச் சொன்னால் பாவ புண்ணியங்கள் அதாவது கர்மவினைக்கு யாரும் விதிவிலக்கல்ல! ஆனால் பாவச் செயல்கள் செய்பவர்கள் சிலர் அதன் பலனை ஏன் அனுபவிப்பதில்லை? நன்றாக வாழ்வது ஏன்? என்ற கேள்வி நம் அனைவரையும் குடைந்தெடுக்கிறது. நாமும் ஏன் பாவம் செய்யக் கூடாது என்ற வினாவும் எழுகிறது. ஊழ்வினை என்பது புவியீர்ப்பு விசை போன்றது. அது உயரே வீசிய பொருட்களை ஈர்த்தே தீரும். ஒரு பந்தை ஒரு அடி உயரம் எறிந்தால் உடனே கண்ணிமைக்கும் வேளையில் அது தரையை நோக்கி வரும். அதே பந்தை ஆயிரம் அடி உயரே எறிந்துவிட்டு அதனைப் பார்த்துக் கொண்டே நின்றால், அது உயரே போய்க் கொண்டே இருப்பதாகத் தோன்றும். அது அதிக உச்சத்தை அடைந்து கீழே வரத்தொடங்கும். ஆனால் நாம் நகர்ந்து அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டால் அந்தப் பந்து கீழே வருவதை நாம் பார்க்க முடிவதில்லை! நாம் அந்தப் பந்து மேலே மேலே போவதாக எண்ணிக் கொள் கிறோம்! அதேபோல்தான் மிக அதிகமான பாவச்செயல் செய்பவர்கள் நம் கண் முன்னே மேலே மேலே போவதைப் பார்க்கிறோம்! நம் வாழ்நாளின் அளவு கண்ணிமைக்கும் வேளை போல! அதற்குள் தீயவர் சிறப்பாக வாழ்வதாக சட்டென்று தீர்மானித்து விடுகிறோம்! அவர்களின் சரிவைக் காண நமக்கு ஆயுள் இல்லை. காலத்தைக் கடந்த ஞானிகள் பாவத்தால் அல்லது புண்ணியத்தால் ஒரு ஆன்மா எப்படித் துடிக்கிறது, அல்லது மகிழ்கிறது என்பதைப் பல பிறவிகள் தாண்டிக் காண்பவர்கள். நம்மால், அது இயல்வதில்லை! மொத்தத்தில் சுருங்கச் சொன்னால் மிக மிகக் கொடுமையான பாவ வாழ்வு.. அதன் பலனைத் தர நாளெடுக்கும்! 'தெய்வம் நின்று கொல்லும்' என்பதன் பொருள் இதுவே! சிறிய சிறிய பாவங்கள் உடனே பலனைக் கொடுக்கும்! சோழ கிருமி தற்போது உயரே உயரே சென்று கொண்டிருக்கும் பந்து. உயரே செல்லச்

செல்ல அதன் வீர்யம் அதிகமாகிறது. அது கீழே வரும்போது அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் என்பதைத்தான் தேர் மண்டபத்தில் ஊசலாடும் உனது மகன்களில் தலைகள் உரைக்கின்றன. மேலே சென்ற பந்தின் வீரியமும், வேகமும் குறைந்தால் கீழே வராமல் அந்தக் கர்மவினைப் பந்து காற்றில் அப்படியே கரைந்துவிடக்கூடும்! ஒன்றைச் செய்தால், சோழ கிருமி கரையும்!" - கொங்காழ்வார் கூற, அனைவரும் அவரை பிரம்மிப்புடன் நோக்கினர்.

"என்ன செய்ய வேண்டும், கொங்காழ்வாரே?"

"அஸ்வமேதம் செய்த மன்னர் குலம் அனைத்து ஊழ்வினைகளையும் கழித்து கீர்த்தியுடன் உலகையே ஆளும் என்று கூறப்பட்டிருக்கிறது. தேவ உடும்பர அத்திமரத்தை வைத்து அஸ்வமேதம் செய்தால், எல்லாப் பாவங்களும் அகலும். உலகையே உனது குடையின் கீழ் கொண்டு வரலாம். காஞ்சியில் அத்தகைய மரத்தினால் வடிக்கப்பட்ட சிலை ஒன்று உண்டு. அதனைக் கொண்டு அஸ்வமேதம் செய். பிரம்மனே தனது ஸ்ருஷ்டி தண்டத்தைத் தொலைத்துவிட்டு, காஞ்சியில் அஸ்வ மேதம் செய்து அதனை மீட்டுக்கொண்டான். அந்தச் சிலையைக் கொண்டு உடனே அஸ்வமேதம் செய்!" - கொங்காழ்வார் கூறினார்.

"கடைசியாக அந்தச் சிலையை ஆதித்த கரிகாலர்தான் பிரவாள மாளிகை என்கிற அரண்மனையில் கண் டெடுத்தார். அந்த மாளிகையை இடித்துப் பொன் னாழியை எழுப்பினார். அந்தப் பொன்னாழியில் அந்தச் சிலையைத் தேடிக் கொண்டிருக்கிறோம்."-வீரமாதேவி கூறினாள்.

"விரைவில் கண்டு பிடித்து அஸ்வமேதம் செய்தால், சோழ கிருமி கரையும்!" - கொங்காழ்வார் கூற, அனைவரும் புதிய உத்வேகத்துடன் எழுந்தனர்.

அனைவரும் எப்படியும் அத்திமலைத்தேவனின் பிரதிமையைக் கண்டு பிடித்து அஸ்வமேதம் செய்துவிட வேண்டும் என்று பேசியபடி அந்த அறையைவிட்டு வெளியேற, கடைசியாக வெளியேற முயன்ற இராஜேந்திரனின் மகள் அம்மங்கையைச் சைகை காட்டி நிறுத்தினார், கொங்காழ்வார்.

"அம்மங்கை பிராட்டியே! உங்களுக்கு ஒரு வார்த்தை!" என்று அழைக்க, அவளுடன் வெளியேறிக் கொண்டிருந்த வீரமாதேவியும், அருண்மொழிநங்கை தேவியும் வியப்புடன் நின்றனர்.

"அரசியாரே! அந்த ஒரு வார்த்தை அம்மங்கை பிராட்டியின் செவிக்கு மட்டுமே!" - கொங்காழ்வார் பணிவுடன் கூற, அவர்கள் இருவரும் குழப்பத்துடன் வெளியேறினார்கள்.

அம்மங்கை தயக்கத்துடன் அவரை நோக்கி வந்து நின்றாள்.

"கூறுங்கள் கொங்காழ்வாரே! எனக்கு என்ன வார்த்தை கூறப் போகிறீர்கள்?" - அம்மங்கை அவரை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"தேவி! நான் கூறப்போவது தங்களுக்குக் கெட்ட செய்தியா, நல்ல செய்தியா என்பது தெரியாது? ஆனால் உங்கள் மகன் அனபாயனுக்கு சோழ அரியணை கிடைக்கப் போகிறது. உங்கள் மகன் அனபாயன்தான் சோழ மன்னனாக ஆட்சி செய்யப் போகிறான்."- கொங்காழ்வார் கூற, அதிர்ந்தாள், அம்மங்கை.

"கொங்காழ்வாரே! இது என்ன கூத்து? எனது தந்தை இராஜேந்திரனுக்கு நான்கு மகன்கள் இருக்கின்றனர். எனது சகோதரர்கள் இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரன், இராஜமகேந்திரன் மற்றும் வீரராஜேந்திரன் என்று நான்கு பேர்கள் இருக்கிறார்கள். எனது அண்ணன் இரண்டாம் இராஜேந்திரனுக்கு ஆறு

மகன்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் கடந்து எனது மகன் அனபாய இராஜேந்திரனுக்கு எப்படிச் சோழ அரியணை கிடைக்கும்..?" - அம்மங்கைக்குக் கோபம் பீறிட்டது.

"அதுதான் நான் வரைந்து காட்டிய ஊழ்வினைக் கிருமியின் திட்டமாக இருந்தால் நாம் என்ன செய்ய முடியும்?" - கொங்காழ்வார் கேட்டார்.

"நான் உங்கள் ஊழ்வினைப் பாடத்தை ஏற்கவில்லை, கொங்காழ்வாரே. எனது தந்தைக்கு மனசாந்தி கிடைத்தால் போதும் என்பதற்காக நான் வந்தேன். எனது மாமியார் இராஜராஜனின் புதல்வி குந்தவி தேவியார் மிகவும் துணிவானவர். அவர் வேங்கி விமலாதித்தரின் மனைவியானதும் துணிவுடன் பல அரிய செயல்களைச் செய்தவர். அவரது மகன் இராஜராஜ நரேந்திரனின் மனைவி நான். இராஜராஜ நரேந்திரருக்குப் பிறகு எனது மகன் அனபாயனுக்கு வேங்கி நாட்டு அரியணை காத்திருக்கிறது. அப்படியிருக்க, சோழ நாட்டை எதற்காக என் மகன் ஆள வேண்டும்..?" - அம்மங்கை காட்டத்துடன் கேட்டாள்.

"ஏன் எதற்கு என்று இப்போது கேளுங்கள்.. பரவாயில்லை தேவி! ஆனால் நான் கூறியது நிகழ்ந்ததும், எப்படி முன்பே கூறினீர்கள் என்று மட்டும் கேட்காதீர்கள்! நான் கூறியதுதான் நடக்கப் போகிறது."- கொங்காழ்வார் கூற, அம்மங்கை அதிர்ந்தாள்.

"அப்படியென்றால், எனது நான்கு சகோதரர் மற்றும் அவர்கள் மக்களின் கதி?" - மங்கையின் தேகம் சில்லிட்டது.

"ஒரு சூழ்ச்சியால் ஆண்குலம் ஆண்ட சோழத்தை பெண்குலம் ஆள வழி செய்யப்பட்டுள்ளது. உங்கள் இரண்டாம் அண்ணனின் பெண் மதுராந்தகிக்கு உங்கள் மகன் அனபாயன் விருந்தளிப்பான் என்பது திண்ணம்.

அனபாயனின் சிரசில் சோழ மகுடத்தை இப்போதே காண்கிறேன்." - கொங்காழ்வார் கூற, பிரமை பிடித்தவளாய் அவரிடம் விடைபெற்றுச் செல்லக்கூடத் தோன்றாமல், விருட்டென்று கோபத்துடன் திரும்பி நடந்தாள், அம்மங்கை.

"இளவரசி!" - எச்சரிக்கையுடன் ஒலித்த கொங்காழ்வாரின் குரல் கேட்டு, சற்றே நிதானித்து, அவரைத் திரும்பி நோக்கினாள், அம்மங்கை.

"நீங்கள் போகும் வேகத்தைக் கண்டு, இப்போதே தங்கள் மகனுக்கு பட்டாபிஷேக ஏற்பாடுகளைச் செய்யப் போகிறீர்களோ என்று நினைத்தேன். நான் கூறுவதை முழுவதுமாகக் கேட்டுவிட்டுச் செல்லுங்கள்."

அம்மங்கை சங்கடத்துடன் தனது சேலை முந்தானையைக் கைவிரல்களில் சுற்றியபடி அவரையே வெறித்தாள்.

"சோழத்தில் பல சூழ்ச்சிகள் நடந்திருக்கலாம். அண்ணனுக்கு எதிராகத் தம்பி, அண்ணனுக்கு எதிராகத் தங்கை, தந்தைக்கு எதிராகப் பிள்ளை, நண்பனுக்கு எதிராக இன்னொரு நண்பன் என்று அரசியல் சூழ்ச்சிகளுக்கு எல்லாம் விடிவு உண்டு. நம்பிக்கைத் துரோகம், போட்டி பொறாமை, ஏன், தளிக்குளத்தாரின் ஆலயத்தை இடித்ததற்குக் கூட இறைவனைச் சமாதானம் செய்துவிடலாம். உங்கள் மகன் அரியணை ஏறியவுடன் துறவிகளுடன் மோதாமல் இருக்கச் சொல்லுங்கள். காரணம், துறவியுடன் மோதும் போது சோழம் முழுவதுமாக அழியும்!" - கொங்காழ்வார் கூற, தனது பிடரியில் சிலிர்ப்பினை உணர்ந்த அம்மங்கை. திரும்பி நடந்தாள்.

அறைக்கு வெளியே ஆவலுடன் காத்திருந்தனர். வீரமாதேவியும், அருண்மொழிநங்கையும்.

"கொங்காழ்வார் உன்னிடம் என்ன கூறினார்?"- அருண்மொழிநங்கை ஆவலுடன் கேட்டாள்.

*என்ன கூறுவாள், அம்மங்கை! எனது மகன்தான் சோழத்தை ஆளப்போகிறான் என்றா கூற முடியும்?*

*எதையோ சமாளிக்க நினைத்து, அம்மங்கை வாய் திறந்த வேளை வெளியே 'ஹா' என்கிற அலறலை பலர் எழுப்புவது கேட்டது. மூன்று பெண்களும் பரபரப்புடன் வாயிலை நோக்கி ஓட, மன்னர் இராஜேந்திர சோழன் தனது நெஞ்சைப் பிடித்துக்கொண்டு நிலைகுலைந்து சாய்ந்து கிடப்பதைப் பார்த்தனர்.*

*"உடனே மருத்துவர்களை வரவழையுங்கள்!"- வீரமாதேவி வீறிட்டாள். ஆனால் கர்ம பாடத்தைக் கற்பதற்குப் பிரம்மதேசம் வந்திருந்த இராஜேந்திர சோழன் பிரம்மதேசத்திலேயே தனது இன்னுயிரை விட்டிருந்தான்.**

* கங்கைகொண்ட சோழபுரத்தை எழுப்பிய இராஜேந்திர சோழன் கி.பி.1012ஆம் ஆண்டில் சோழ அரியணையில் ஏறி முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆட்சி புரிந்து பிரம்ம தேசத்தில் சுற்றுப்பயணம் செய்த போது கி.பி.1044-இல் மரணம் அடைந்தான். பிரம்மதேயம் கைலாசநாத ஆலயத்தின் வாயிலில் மரணம் அடைந்த அவனை ஆலயத்தின் பின்பாகவே தகனம் செய்தனர். அவன் ஆருயிர் மனைவி வீரமாதேவி அவனுடன் உடன்கட்டை ஏறினாள். காஞ்சியில் உடன்கட்டை ஏறிய வானவன்மாதேவிக்குப் பிறகு உடன்கட்டை ஏறிய இரண்டாவது சோழ அரசி வீரமாதேவி. பிரம்மதேயம் என்கிற அந்த ஊரில் காணப்படும் கல்வெட்டு இதனை ஊர்ஜிதம் செய்கிறது. இராஜேந்திர சோழன் மற்றும் வீரமாதேவி ஆகியோரின் உயிர்கட்கு நீர்வேட்கையைத் தணிக்க, வீரமாதேவியின் அண்ணன் மதுராந்தகப் பரகேசரி மூவேந்த வேளான் தண்ணீர்ப் பந்தல் ஒன்றை அமைத்தான் என்று அந்தக் கல்வெட்டு கூறுகிறது.

# 40. வேர்விட்டவன், வார்த்தெடுக்கப்பட்டவன்

'துறவிகளுடன் மோத வேண்டாம்! என்று துறவிகளுடன் சோழம் மோதுகின்றதோ அப்போது அது அடியோடு அழியும்!' என்ற எச்சரிக்கையினை கொங்காழ் வார் அம்மங்கை பிராட்டிக்கு விடுத்துக் கொண்டிருந்த அதே வேளையில், முறைப்படி துறவறத்தை பூண்டிருந்த இராமானுஜர், கையில் திரிதண்டத்துடன் அத்தி மலைத்தேவனின் ஆலயக் கிழக்கு வாயில் அருகே இருந்த பொற்றாமரைக் குளத்தின் கரையில் பாறை ஒன்றின் மீது அமர்ந்திருந்தார்.

சிம்மவர்மனின் மகள் நவரத்ன பல்லவி அமர்ந்து கவிதைகளை இயற்றிய அதே இடம். அவள் பிறந்ததின வைபவத்தின் ஒரு பகுதியாக எழுப்பப்பட்டிருந்த நவரத்ன மண்டபம் தற்போது இடிந்து தரைமட்டமாக, அதன் தூண்கள் இங்கும் அங்குமாகச் சிதறிக் கிடந்தன. அந்த மண்டபத்திலிருந்து பெயர்ந்திருந்த பாறையின் மீதுதான் இராமானுஜர் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். அவருக்கு மிகவும் நெருங்கிய திருக்கச்சி நம்பி, பேரருளாளன் வரதனுக்குத் திருவாலவட்டம் கைங்கர்யம் செய்வதற்காகச் சென்றிருந்தார்.

இராமானுஜர் இளையாழ்வானாக இருந்த போது தஞ்சம்மாவின் அலட்சியப் போக்கால் மனம் நொந்து திருமலைக்குச் சென்ற திருக்கச்சி நம்பி, அவர் துறவியானதை அறிந்தும், காஞ்சிக்கு ஓடோடி வந்துவிட்டார். மீண்டும் இருவரிடையே சிநேகம் தொடர்ந்தது. காலையில் இருவரும் ஒன்றாகத்தான் ஆலயத்திற்குள் நுழைந்தார்கள். அப்போது இருவரும் பேசிக் கொண்டிருந்த போது, இராமானுஜர் திடீரென்று திருக்கச்சி நம்பியை கேட்டார்.

"நம்பிகளே! நீங்கள் அன்றாடம் தேவப்பெருமாளுடன் உரையாடி வருவதாக அனைவரும் சொல்கிறார்களே. உண்மையாகவா?"- இராமானுஜர் கேட்க, திருக்கச்சி நம்பி சிரித்தார்.

"ஆம்! அப்படித்தான் சொல்கிறார்கள். பேசுவதில் என்ன விந்தை இருக்கிறது, இராமானுஜரே?" - நம்பி கேட்டார்.

"நீர் பேசுவதில் விந்தை எதுவும் இல்லை. ஆனால், அவன் பதில் தருகிறான் என்பதுதான் ஆச்சரியமான விஷயம். எவ்வளவு பெரிய பாக்கியத்தைப் பெற்றிருக் கின்றீர்!" - இராமானுஜர் கூறினார்.

"சுவாமி! தாய் குழந்தையை நீராட்டும் போதும், உணவு ஊட்டும் போதும் அதனோடு பேசுவதில்லையா? அப்படித்தான் நானும் தேவப்பெருமாளுடன் உரையாடி வருகிறேன். இதில் ஆச்சரியம் எதுவும் இல்லை." - நம்பி கூறினார்.

அப்போது இராமானுஜருக்கு அந்த யோசனை தோன்றியது. "நம்பிகளே! இன்று திருவாலவட்டம் கைங்கர்யம் செய்யும் போது நான் கேட்கும் இரு கேள்விகளை வரதனிடம் கேட்டு அதற்கான விடைகளைப் பெற்று வர முடியுமா?" - இராமானுஜர் கூறியதும், நம்பி வியப்புடன் நின்றுவிட்டார்.

"இராமானுஜரே! சோதனை எனக்கா, இல்லை.. வரதனுக்கா?" நம்பி சிரித்தார்.

"சோதனை அல்ல நம்பிகளே.. நமது வேதனையைத் தீர்க்கத்தான் வழி கேட்கிறேன். உம்முடன் பேசும் 'வரதன்' ஏன் தனது தேவ உடும்பர அத்திமரப் பிரதிமை பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் கூறமாட்டேன் என்கிறான். அந்தப் பிரதிமை இருக்கும் இடத்தைக் கேளுங்கள். அவன் விடை கூறினால், அதனைக் கண் டெடுத்து, ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து ஆராதிக்கலாம் அல்லவா" - இராமானுஜர் கேட்டார்.

"யோசனை நன்றாகத்தான் உள்ளது. ஆனால் இராமானுஜரே, நான் அவனிடம் அன்றாடம் ஐந்து கேள்விகளை மட்டும்தான் கேட்கிறேன். அதற்கு மட்டும் அவன் விடைகளைத் தருகிறான். வேறு எதையும் நான் கேட்பதில்லை." - நம்பி கூற, இராமானுஜர் வியப் படைந்தார்.

"அந்த ஐந்து கேள்விகள் என்ன என்பதை அடியேன் தெரிந்து கொள்ளலாமா? - இராமானுஜர் கேட்டார்.

"காற்று இதமாக வருகிறதா? இன்னும் பலமாக வீசட்டுமா? சற்று மெதுவாக வீசட்டுமா? குளிருகிறதா? எனது தொண்டில் திருப்தி உள்ளதா? என்கிற இந்த ஐந்து கேள்விகளை மட்டுமே நான் மாற்றி மாற்றிக் கேட்பேன். அவனும் ஆம் இல்லை என்று பதில் தருவான். இந்தக் கேள்விகளைத் தவிர நான் வேறு எதையும் அவனிடம் கேட்பதில்லை." - நம்பி கூற, இராமானுஜர் மலைத்து நின்றுவிட்டார்.

எவ்வளவு உயர்ந்த குணம். தனக்காக ஒன்றும் கேட்காமல், தான் செய்யும் தொண்டு வரதனுக்குத் திருப்தி அளிக்கிறதா என்று கேட்கும் இவரைவிட உயர்ந்த மனிதர் இவ்வையகத்தில் இருப்பார்களா என்ன? இராமானுஜர் நம்பியை பெருமையுடன் நோக்கினார்.

"நம்பிகாள்! நமக்காக நான் அவனிடம் ஒன்றும் வேண்டுவதில்லை. அவனது பிரதிமை எங்கோ அல்லாடிக் கொண்டு இருக்கிறது. அதனை உரிய இடத்தில் சேர்ப்பித்து, அதற்குரிய ஆராதனைகளைச் செய்ய நாட்டம் கொண்டுள்ளோம். நான்முகன் ஆராதித்த தேவப்பெருமாள், அவனது ஆலயத்தில் இருப்பதுதானே நியாயம். அரசியல் பேராசை மிக்கவர் களால், அவனது ஆலயத்தைவிட்டு அவன் நீங்கி விட்டான். நம்மைப் போன்றவர்கள் அவனை மீண்டும் உரிய இடத்தில் கொண்டு வைப்பதுதானே நியாயம்? அதற்காகவன்றோ நம்மை அத்தியூரில் வாழச்

செய்திருக்கிறான். நீர் எனக்காக இந்த இரண்டு கேள்வி களை அவனிடம் கேட்டு, விடையைத் தெரிந்து கொண்டு வாரும். நான் உமது வருகைக்காக இங்கே பொற்றாமரைக் குளத்தின் கரையிலேயே அமர்ந்திருக்கிறேன்!" - இராமானுஜர் கூறினார்.

"அவனிடம் என்னை என்ன கேட்கச் சொல்லுகின்றீர், இராமானுஜரே?" - திருக்கச்சி நம்பி தனது ஆலவட்டத்தை மகிழ மரத்தின் மீது சாய்த்து வைத்தார்.

"அத்திவரதனின் பிரதிமை எங்கு இருக்கிறது என்றும் அதனை எப்படி மீட்பது என்றும் கேளும்? அத்தி வரதனின் ஆபரணமான ஸ்ரீதளமணி எங்கு உள்ளது என்றும் கேளும்? இந்த இரு கேள்விகளுக்கான விடை களை நீர் வாங்கிக்கொண்டு வந்தால் போதும்!"- இராமானுஜர் கூறினார்.

சரியாக சன்னிதியில் மணியோசை ஒலிக்கத் துவங்கியது. மரத்தில் சரித்திருந்த திருவாலவட்டத்தைக் கையில் எடுத்தார், நம்பி.

"அதோ ஆராதனை துவங்கிவிட்டது. நான் சென்று ஆலவட்ட கைங்கர்யத்தைத் துவக்க வேண்டும். இராமானுஜரே! அவசியம் நீர் கேட்ட கேள்விகளை அவனிடம் கேட்கிறேன். பிரயத்தனம் செய்து பதில் களுடன் வருகிறேன். நீர் இங்கேயே காத்திரும்!" என்று கூறிவிட்டுச் சென்றிருந்தார். அவருக்காகத்தான், இராமானுஜர் பொற்றாமரைக் குளத்தின் பாறையில் அமர்ந்து காத்திருக்கிறார்.

தான் கேட்ட கேள்விகளுக்கான விடைகள், அப்பண்ணா சதகரணி தனக்குப் பரிசாகக் கொடுத்த அந்த வெள்ளிப்பெட்டகத்தின் பட்டுத்துணியின் அடியே வைக்கப்பட்டிருப்பதை இராமானுஜர் இன்னும் அறிந்திருக்கவில்லை. ஆதித்த கரிகாலன், கல்பலதாவுக்கு அளித்த பெட்டியில் வைத்திருந்த ஸ்ரீதளமணி என்கிற

உக்ரோதயம் ஏற்கெனவே ஆலயத்திற்குச் சமர்ப்பிக்கப் பட்டது யாருக்குமே தெரியாத போது, இராமானுஜருக்கு எங்ஙனம் தெரிய வரும்? தான் எழுப்பிய கேள்விகளுக்குத் திருக்கச்சி நம்பி விடைகளுடன் வரக்கூடும் என்கிற ஆவலில் காத்திருந்தார், இராமானுஜர்.

இதே இடத்தில்தானே, சிம்மவர்மன் காலத்தில், அசோகனின் மகன் மகிந்தாவும், அமரஜோதி என்கிற புத்த பிக்குவும், தேவசேனா என்கிற இலங்கை வீரனும், தேவ உடும்பர இரகசியத்தை அறிவதற்காக மரத்தில் ஏறி காத்திருந்தனர். அப்போது வீரகொசுவனின் வெறி யாட்டத்தினால் நிகழ்ந்த விபரீதத்தை யாரால் மறக்க இயலும்! கையில் வாளுடன், கடும் உக்கிரத்துடன் ஆட்டம் ஆடி வந்த வீரகொசுவனின் வெறியாட்டம் இப்போதெல்லாம் நடைபெறுவதில்லை. கால ஓட்டத்தில் பல வழக்கங்கள் நின்று போயின. அவற்றில் வீரகொசுவனின் வெறியாட்டமும் அடங்கும்.

அதோ.. சாந்தமே உருவாக, ஆலவட்டத்தைச் சுமந்தபடி தனது காலடிகளை அளந்தபடி திருக்கச்சி நம்பி வந்து கொண்டிருந்தார். நெடிய அவரது உருவம், கம்பீரத்தை இன்னும் அதிகப்படுத்திக் காட்டியது. அவர் நிதானமாக எவ்வித பரபரப்பும் இன்றி வருவதைக் கண்டதும், ஒருவேளை வரதன் பதில் கூறவில்லையோ என்று நினைத்த இராமானுஜர் மனம் துவண்டார். எப்பாடுபட்டாவது அத்திவரதனின் பிரதிமையைக் கண்டெடுத்து அத்திமலையில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்கிற ஆவல் அதிகரிக்கவேதான், திருக்கச்சி நம்பியிடம், வரதனிடமே கேள்விகளைக் கேட்டு விடையைப் பெறச் சொல்லியிருந்தார். ஆனால், நம்பியால் விடைகளைப் பெற இயலவில்லை போன்று இருக்கிறதே.

மீண்டும் திருவாலவட்டத்தை மகிழ மரத்தின் மீது சரித்த நம்பி, இராமானுஜர் அமர்ந்திருந்த பாறையை நெருங்கி அவர் அருகே அமர்ந்தார். எவ்வித உணர்வை

யும், நம்பியின் முகம் பிரதிபலிக்கவில்லை. தனது நெற்றிப் புண்டரம் அழியாமல், மேல்துணியால் முகத்தை ஒற்றி எடுத்தார்.

“என்ன நடந்தது நம்பிகளே?” - இராமானுஜர் பரபரப்புடன் கேட்டார்.

“எனது கைங்கர்யம் நன்றாக நடந்தது!” - திருக்கச்சி நம்பி சிரித்தார்.

“கேள்விகளைக் கேட்டீரா?” - இராமானுஜர் கேட்க, நம்பி தலையசைத்தார்.

“கேட்டேன்! பதில்களும் கிடைத்தன!”

“பதில்கள் கிடைத்தனவா! அப்படியிருந்துமா நீர் நிதானமாக நடந்து வந்தீர்..? விடைகளைக் கூற அடியேனை நோக்கி ஓடி வர வேண்டாமா? என்ன கூறினார் தேவப்பெருமாள்?”

“இராமானுஜரே! நமது பெயர் ராசி அப்படி! நீர் லட்சுமண முனி. ஆதிசேஷனின் வேகமும் வீரியமும் உம்மிடத்தில் இருக்கும். எனது பெயர் கஜேந்திரதாசர்! யானையின் நிதானம் எனது நடையில் இருக்கும்” என்று சிரித்தவர், பிறகு இராமானுஜரை ஆர்வத்துடன் நோக்கினார்.

“நீர் கேட்ட கேள்விகளைக் கேட்டேன். அத்திமலை யூரான் எங்கே இருக்கிறான் என்று கேட்டேன். அதற்கு அவன் கூறிய பதில் இது. ‘ததிபாண்டனின் தயிர் பானையில், பச்சைமாமலை போல் மேனியைக் கொண்டவனாகிய நான் பத்திரமாக இருக்கிறேன்’ என்றான்.”

இராமானுஜர் திடுக்கிட்டுப் போய், தான் அமர்ந்திருந்த பாறையில் இருந்து எழுந்து நின்றார். அந்தத் திகைப்பிலும் அவரது வலது கை திரிதண்டத்தை உறுதியாகப் பற்றியிருந்தது.

அன்றொருநாள் பெரியநம்பியிடம் ததிபாண்டன் அனுபவத்தை விவரிக்கும் பாசுரத்தைக் கற்ற அன்று, கண்ணனின் ஸ்பரிசம் மோட்சத்தைத் தரும்; எனவேதான் ததிபாண்டனுடன் கண்ணன் ஒளிந்திருந்த பானைக்கும் மோட்சம் கிடைத்தது... என்று பெரியநம்பி கூறிய நாளில், கிணற்றடியில் இவர் தண்ணீர் சேந்திக் கொண்டிருந்தாரே. அப்போது வீசிய சுகமான தென்றல் காற்றின் ஊடே ஒரு குரல் கிசுகிசு என ஒலித்ததே. 'ததிபாண்டனின் தயிர் பானையில் பச்சை மாமலை போல் மேனிகொண்ட நான் பத்திரமாக இருக்கிறேன்' என்றானே. அத்திமலையான்தான் இவரிடம் அந்தத் தகவலைக் கூறினானா? இராமானுஜருக்குத் தேகமெல்லாம் புல்லரித்தது.

அவர் எழுந்து நிற்பதை வியப்புடன் நோக்கிய நம்பி தொடர்ந்து பேசினார்.

"அடுத்த கேள்வியாக, அவனை எப்படி மீட்பது என்று கேட்டேன். அதற்குத் தேவப்பெருமாள் கூறிய பதில் இதுதான்: 'வார்த்தெடுத்தவன் சென்று வேர் விட்டவனை அழைத்து வருவான்'"

"உமக்கு இந்த இரண்டு பதில்களில் ஏதாவது புரிகிறதா?" - இராமானுஜர் கேட்டார்.

"இல்லை!" என்ற நம்பி தொடர்ந்து மூன்றாவது பதிலையும் கூறினார்.

"ஸ்ரீதளமணி எங்கே என்று கேட்டேன்? அதற்கு அவன், 'எனது மார்பை உற்றுக் கவனியுங்கள்' என்றான். நானும் அவனது மரபை உற்று நோக்கினேன். ஒன்றும் புலப்படவில்லை!" - நம்பி கூற, இராமானுஜர் யோசித்தார்.

'ததிபாண்டனின் தயிர் பானையில் பச்சை மாமலை போல் மேனியைக் கொண்ட நான் பத்திரமாக உள்ளேன். வார்த்தெடுக்கப்பட்டவன் சென்று வேர்விட்டவனை

அழைத்து வருவான். எனது மார்பை உற்று கவனித்தால், ஸ்ரீதளமணியைப் பற்றிய தகவல் கிடைக்கும்.' - இராமானுஜர் யோசித்தார்.

மூன்று பதில்களையும் தொடர்பு செய்து பார்த்தார். எவ்விதத் தகவலும் கிட்டவில்லை. அந்த மட்டும், அத்திமலையான் தான் இருக்குமிடத்தைப் பற்றி மூன்று குறிப்புகளைக் கொடுத்தானே என்கிற நிம்மதியோடு, இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

அன்று வெள்ளிக்கிழமை ஆதலால், பெருந்தேவி உக்ரோதயத்தை அணிந்திருந்தாள். ஸ்ரீதளமணி என்கிற புராணப் பெயரோ, உக்ரோதயம் என்கிற சரித்திரப் பெயரோ மறைந்து, 'நீலக்கல் ஹாரம்' என்று ஆலய கஜானாவில் குறிக்கப்பட்டிருந்ததால் அர்ச்சகர்கள் உக்ரோதயத்தை அந்தப் பெயரிட்டே அழைத்து வந்தனர். கஜானாவில் பெட்டகத்தில் தனது கையால் பத்திரப்படுத்திவைத்த அந்த நீலக்கல் ஹாரம்தான் யட்ச நேத்திரக் கற்கள் பதிக்கப்பட்ட ஸ்ரீதளமணி என்கிற உண்மையை இராமானுஜர் அறிந்திருக்கவில்லை.

"எனது மார்பை உற்றுக் கவனியுங்கள்" என்று சூசகமாக தேவப்பெருமாள் கூறியிருந்ததைச் சற்றே ஆழமாக யோசித்திருந்தால், அன்றே உக்ரோதயத்தைக் கண்டு பிடித்திருக்கலாம். வரதனின் மார்பில் உறைபவள் பெருந்தேவித்தானே. அவளது சந்நிதியில் சென்று பார்த்திருந்தால், உக்ரோதயம் அவளது கழுத்தில் ஜொலிப்பதை அவர்கள் இருவரும் கண்டிருக்கலாம்.

அத்திமலைத்தேவன் இன்னும் எப்படியெல்லாம் தனது விளையாட்டுகளை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறான். இன்னுமொரு புதிய விளையாட்டு விரைவில் தொடங்கியது. அரங்கத்தில் கிடந்தவனுக்கும், அத்திமலையில் நின்றவனுக்கும் இடையே ஒரு சிறிய போட்டி. 'இராமானுஜ அமுதத்தை நீரே அனுபவித்துக் கொண்டிருந்தால் எப்படி.. எனக்கும் சிறிது அனுப்பி

வையும்' என்று அரங்கன் கேட்டு அனுப்பியதால், இராமானுஜன் திருவரங்கத்திற்கு தனது ஜாகையை மாற்ற ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். திருக்கச்சி நம்பிக்கு அவரைவிட்டுப் பிரிய மனமில்லை தான். ஆனால் தனது ஆலவட்ட கைங்கர்யத்தைவிட்டு, எங்கும் செல்ல விரும்பவில்லை.

மணப்பாக்கத்து சுத்தசத்வ நம்பி உறுதியுடன் கூறி விட்டார். "இராமானுஜனுடன் இருப்பது, இராமனுடன் இருப்பது போல! நீர் போகுமிடமெல்லாம் நானும் வந்து தொண்டாற்றுவேன்!" என்று கூறிவிட்டார்.

ஆதித்த கரிகாலன் கொடுத்த வெள்ளிப்பெட்டகத்தில், இராமானுஜரின் சுவடிகள், திருவிலச்சினை இடும் சங்கு சக்கர, கோல்கள், ஆகியவற்றை வைத்து, அந்தப் பெட்டகத்தைத் துணியில் மூட்டை கட்டினார். இறுதியாக, திருவரங்கத்திற்குப் புறப்படுவதற்கு முன்பாகப் பெருந்தேவியின் சந்நிதிக்குச் சென்றார், இராமானுஜர்.

"திருமகளே! அஸ்வமேத யாகத்தில் தோன்றியவன், விஸ்வகர்மாவினால் தேகம் சமைக்கப்பட்டவன், ஆற்றல் மிக்க அத்தியூரானை என்றாவது தரிசிப்பேன் என்கிற நம்பிக்கையில் காத்திருந்தேன். அவன் தனது ஆலயத்தைத் தேடி வருவான். இந்த ஜன்மா கழிவதற்குள் அவனைத் தரிசித்துவிட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அவனைக் காணாமலேயே திருவரங்கம் செல்கிறேன். அவன் எப்போது வருவானோ? அவன் வரும்போது நான் இருப்பேனோ? ஒருவேளை எனது காலத்திற்குப் பிறகு அவன் வந்தால், என்னைப் பற்றி அவனிடம் கூறு. அவனைக் காணத் துடித்த ஒரு ஆத்மா அவனைக் காணாமலேயே சென்றுவிட்டது என்பதைக் கூறு? வேங்கடவனைக் கண்டேன். அரங்கனையும் காணப் போகிறேன். அத்திவரதனைத்தான் நான் காணவில்லை. அந்தக் குறையோடு புறப்படுகிறேன், தாயே!" கண்களில் நீர் மல்க திருவரங்கத்திற்குப் புறப்பட்டார், இராமானுஜர்.

*அரங்கமா நகரை நோக்கித் தனது பரிவாரங்களுடன் நடைபோட்டார் இராமானுஜர். அவரது சிற்றன்னை மகன் கோவிந்தன் தற்போது எம்பார் என்கிற பெயரோடு அவரது பரிவாரத்தில் இணைந்திருந்தார்.*

*இராமானுஜர் காஞ்சியைவிட்டுப் புறப்பட்ட அதே சமயம், அத்திவரதனின் பிரதிமையைப் பற்றிய தகவலைத் தேடி பிரம்மதேசத்திலிருந்து காஞ்சியை நோக்கி வந்து கொண்டிருந்தான், வேங்கி நாட்டு பட்டத்து இளவரசன், அனபாய இராஜேந்திரன், வருங்காலத்தில் முதலாம் குலோத்துங்க சோழனாக அரியணையில் அமர உள்ளவன். துறவியிடம் மோதாதே என்று கொங்காழ் வார் விடுத்த எச்சரிக்கையை, அம்மங்கைப் பிராட்டி தனது மகன் அனபாயனிடம் மறக்காமல் கூறுகின்றாளா என்பதைப் பார்க்க வேண்டும்.*

# 41. இனி வளர்பிறை, தேய்பிறை அல்ல!

பிரம்மதேச ஆலயத்தின் பின்புறம் அமைந்திருந்த மூங்கில் காட்டில் தகன மேடை அமைக்கப்பட்டிருந்தது. இராஜேந்திர சோழனின் நான்கு மகன்களும் அவனது உடலைச் சுமந்தபடி மேடையேறி சிதையின் மீது வைத்தனர். அகில் மற்றும் சந்தனக் கட்டைகளால் அமைக்கப்பட்டிருந்த சிதையை நோக்கி நடந்தாள், வீரமாதேவி. வாழ்க்கையில் எக்கணமும் கணவனை விட்டுப் பிரிந்ததில்லை. மரணத்தில் மட்டும் பிரிவானேன் என்றுதான் உடன்கட்டை ஏறப்போவதாக அறிவித்தாள்.

பிள்ளைகளும், மகள் அம்மங்கையும், அருண்மொழியும் வேண்டாம் என்று தடுத்தும் கேட்கவில்லை. சோழ கிருமி அவரவர் ஊழ்வினைக்கேற்ப எடுத்த வடிவையேதான் எடுக்கும். அதனால்தான் சரித்திரம் திரும்புகிறது என்று அனைவரும் கருதுகின்றனர் என்றாரே, பரசிகாமணி கொங்காழ்வார். அவர் கூற்றுப்படிதான் நடக்கிறது. வானவன்மாதேவி சுந்தர சோழனுடன் உடன்கட்டை ஏறினாள். இவள் இராஜேந்திர சோழனுக்காக உடன் கட்டை ஏறுகிறாள். இதோ இராஜாதிராஜன் சிதைக்குத் தீ மூட்டுவதற்காகத் தீப்பந்தத்துடன் மேடை ஏறுகிறான். இவளும் தான் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து எழுந்து மேடையை நோக்கி நகர்ந்தாள். அரசகுடும்பத்தினர் மட்டுமல்லாமல் மக்களும் அவளது நெஞ்சுரத்தைக் கண்டு திகைத்தனர்.

எரியும் தீயை நோக்கி நடந்தவள், இராஜேந்திரனின் தலைப்பக்கமாகச் சென்று நின்றாள். கண்களை மூடி கைகூப்பி நின்றவள், திடீரென்று கண்களைத் திறந்து தீப்பந்தத்துடன் நிற்கும் மகனைப் பார்த்தாள்.

“இராஜாதிராஜா! சோழத்தை கிருமியிடம் இருந்து காப்பாற்று. அத்திமலைத்தேவனின் சிலையை எப்படி யாவது கண்டுபிடித்து அஸ்வமேதம் நடத்து. எச்சரிக்கை யுடன் நடந்து கொள்ளுங்கள். எந்தத் துறவியிடமும் சாபங்களைப் பெறாதே. ‘என்று துறவிகளால் சபிக்கப் படுகிறோமோ அப்போது சோழம் அழியும்’ என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சோழம் ஆல் போல் தழைக்கும் என்கிற உத்திரவாதத்தை உனது தந்தையின் சிதையில் நீ வைத்த அக்னிக்கு முன்பாக எனக்குக் கையிலடித்து வாக்கு கொடு!” - கணவனின் சிதையின் முன்பாக வீரமாதேவி கைநீட்ட, அவளது கை மேல் தனது கையை வைத்தான், இராஜாதிராஜன்.

“நல்லது மகனே! நான் உனது தந்தையுடன் புறப்படு கிறேன். உடன்கட்டை ஏறியவுடன் உனக்கு நல்ல தகவல் வந்து சேரும். நான் எனது கணவருக்கு உண்மையான வளாக நடந்து கொண்டு தொண்டாற்றியது உண்மை யானால், நான் உடன்கட்டை ஏறப்போகும் எனது கணவரின் சிதையில் மூட்டப்பட்ட அக்னி அணை வதற்குள் அத்திமலைத்தேவனைப் பற்றிய தகவல் எனது மகனுக்குக் கிட்டும்!” என்றபடி சிதையில் ஏறி, கணவனின் தலையைத் தனது மடியில் இருத்திக் கொண்டாள்.

கொழுந்துவிட்டெரிந்த தீயை அனைவரும் கண்ணீருடன் பார்க்க, தீயின் நாக்குகள் வீரமாதேவியை மூடிய அதே சமயம்.. அனபாயன் இராஜாதிராஜன் பின்பாக வந்து நின்றான்.

“அத்திமலைத்தேவனைப் பற்றிய ஒரு முக்கியத் தகவல் கிடைத்திருக்கிறது!” - அனபாயன் கூறியவுடன், திகைத்துப் போய் அவனைத் திரும்பிப் பார்த்தவன், மீண்டும் சிதையைப் பார்த்த போது அதிலிருந்து கரும்புகை புறப்பட்டுக் கொண்டிருந்தது.

"அனபாயா! நானும் எனது சகோதரர்களும் ஈமக்கிரியைகள் முடியும்வரை பிரம்மதேசத்திலிருந்து கிளம்ப முடியாது. நீ உடன் புறப்பட்டுச் சென்று அந்தத் தகவலைக் குறித்து விசாரி!" - இராஜாதிராஜன் கூற, தலையசைத்துவிட்டு, தனது புரவியின் மீது தாவி ஏறினான், அனபாயன். இராஜாதிராஜன் எரியும் சிதையின் அருகிருந்து குரல் கொடுத்தான்.

"எச்சரிக்கை அனபாயா! இனி சூழ்ச்சி, வஞ்சம், கொலை, நம்பிக்கைத் துரோகம் இல்லாத அரசியலை நடத்த வேண்டும். இது எனது தந்தையின் இறுதி விருப்பம். எனவே உயிர் பலி வாங்காமல் விசாரணையை நடத்து. இனியும் சோழ கிருமி வளர்பிறையாக இருக்கக் கூடாது. தேய் பிறையாகவே இருக்க வேண்டும்."-இராஜாதிராஜன் கூற, அனபாயன் தலையசைத்துவிட்டு, தனது புரவியின் விலாவில் உதைக்க அது காஞ்சியை நோக்கிப் பறந்தது.

# 42. பாய்கிறான் அனபாயன்

கீழைச்சாளுக்கிய மன்னன் ராஜநரேந்திரனுக்கும், சோழ இளவரசி அம்மங்கை தேவிக்கும் பிறந்த அனபாயனுக்குத் தொட்டிலில் இடப்பட்ட பெயர் விஷ்ணுவர்தனன். அவன், நகரேஷு காஞ்சி, புருசேஷு விஷ்ணு என்கிற புலவன் பாரவி வாக்குப்படி பார்ப் பதற்கு மிக அழகாக இருக்க, அவனுக்கு விஷ்ணுவர்தனன் என்று பெயர் சூட்டியது, இராஜராஜனின் புதல்வி குந்தவி. வேங்கி நாட்டு விமலாதித்தனின் பெயரனான விஷ்ணுவர்தனின் அழகைக் கண்டு பிரம்மிக்காதவர் கிடையாது. அவரவர் தங்களது விருப்பமான பெயர்களை யெல்லாம் குழந்தைக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள். அம்மங்கை தனது தந்தையின் பெயரான இராஜேந்திரன் என்று குழந்தைக்கு பெயரிட்டாள். ஜெயதரன், ஜெயதுங்கன், கரிகாலன், ராஜநாராயணன், உலகுய்ய வந்தான், மனுகுலதீபன் என்றெல்லாம் அவனுக்குப் பெயரிட்டனர்.

தனது பெயரனைக் காண வந்த சோழ மன்னர் இராஜேந்திரன் அவனது அழகைக் கண்டு பிரம்மித்தான். இராஜேந்திரன் தொட்டிலினுள் எட்டிப்பார்த்தபோது தனது கையைத் திருமாலின் அபய அஸ்தம் போன்று குழந்தை காட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு மலைத்து, அவனுக்கு அத்தியூர்வரதனின் பெயரையும் சேர்த்து அனவரத அபயன் என்று பெயரிட்டான், இராஜேந்திரன். அனவரதமும் அனைவருக்கும் அபயமளிக்கப் போகிறவன் என்கிற பொருளில் இராஜேந்திர சோழன் வைத்த பெயர் சுருங்கி விஷ்ணுவர்தனனின் பெயர் அனபாயன் என்று சுருங்கியது.

அவனது அழகை இரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த இராஜேந்திரன், இராஜராஜ நரேந்திரனிடமும், மகள் அம்மங்கையிடமும் ஒரு வேண்டுகோள் விடுத்தான். தனது பெயரனை தான் கங்கைகொண்ட சோழபுரத்தில் வளர்த்து வருவதாகக் கூற, அவர்களும் சம்மதித்தனர். குழந்தைப் பருவத்தில் இருந்தே, அனபாயன் கங்கை கொண்ட சோழபுரத்தில்தான் வளர்ந்தான். வேங்கி நாட்டின் பட்டத்து இளவரசனாகப் பட்டம் சூடிக் கொண்டு மீண்டும் பாட்டனார் அரண்மனைக்கு வந்து விட்டான்.

குழந்தை பருவத்தைவிட்டு குமரப் பருவத்தை எட்டிப் பிடித்திருந்த அனபாயனின் தேகத்தை யௌவனம் ஆக்ரமித்துக் கொள்ளத் தொடங்கியிருந்தது. மெல்லிய மீசை அவனது தடித்த உதட்டின் மேல்புறத்தில் தோன்ற, அவனது வெண்மையான முகத்திற்கு அது அழகு சேர்த்தது.

இராஜேந்திரனின் நான்கு குமாரர்களுடன் அவன் நெருங்கிப் பழகினாலும், இராஜ மகேந்திரன் என்கிற மூன்றாவது மாமன் அவனுக்கு மிகவும் ஆருயிர் நண்பனாகத் திகழ்ந்தான்.

பிரம்ம தேசத்தில் திடீரென்று பாட்டன் இராஜேந்திர சோழன் இறந்தது அனபாயனை மிகவும் பாதித்து விட்டிருந்தது. பெரிய மாமன் இராஜாதிராஜன் அடுத்த மன்னனாகப் பதவி ஏற்க இருந்த நிலையில், தான் இன்னமும் சோழ நாட்டில் இருப்பதா, அல்லது வேங்கி நாட்டிற்குத் திரும்பிச் செல்வதா என்று யோசித்தபடி தனது புரவியைக் காஞ்சியை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தான்.

பாட்டனார் இராஜேந்திரன் கேட்டுக் கொண்டதால் மட்டுமே இவன் கங்கைகொண்ட சோழபுரத்தில் வாழ்ந்தான். இனி அவன் அங்கு தங்குவதை மற்றவர்கள் விரும்புவார்களா என்பது தெரியவில்லை. இவனுக்கு வேங்கி நாட்டு மகுடம் காத்திருக்கிறது என்கிற நிலையில்,

இவன் வேங்கிக்குச் செல்வதுதான் முறை. தான் வேங்கிக்கு செல்வதற்குள், பாட்டனார் இராஜேந் திரனின் கடைசி ஆசையை நிறைவேற்ற வேண்டும். அத்தி வரதனின் சிலையைக் கண்டுபிடித்து அஸ்வமேத யாகம் செய்து, சோழ கிருமியை அழிக்க வேண்டும்! அதனை உடனே செய்து முடிக்க வேண்டும். பாட்டனாரின் அந்திமக் கிரியைகளை முடிப்பதற்குள் நல்ல தகவல்களைச் சேகரித்து மாமன் மக்களை உற்சாகப் படுத்த வேண்டும் என்கிற உத்வேகத்தோடு சென்று கொண்டிருந்தான்.

கரிய புரவியில், பதினாறு பிராயங்களே நிரம்பிய அந்தக் குமரன் கம்பீரமாகப் பயணிப்பதைப் பாதையில் செல்பவர்கள் நின்று வியப்புடன் கவனித்தனர். குமரிகள் ஓரக்கண்ணால் அனபாயனை நோட்டம்விட்டு, “யார் இந்த அழகன்..?” என்று தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டிருந்தனர்.

தனது புரவியைக் காஞ்சிக்குச் செலுத்தாமல் புறவார் பனங்காட்டூர் என்கிற சைவ சன்னிதியை நோக்கிச் செலுத்தினான். அங்கிருக்கும் சிவதர்ம* மடத்திற்குத்தான் அனபாயன் சென்று கொண்டிருந்தான்.

---

* தென்னாற்காடு ஜில்லாவில் உள்ளது புறவார் பனங்காட்டூர். தற்போதைய பெயர் தெரியவில்லை. அங்கிருக்கும் சிவாலயத்தின் அருகே சிவதர்ம மடம் என்கிற மிகப்புகழ் பெற்ற மடத்தைக் கண்டராதித்த தேவரும், அவருடைய மனைவி செம்பியன் மாதேவியும் திறந்து வைத்துச் சிவதர்மத்தைப் பரப்பச் செய்தனர்.

சதானந்தன் என்கிற தேரோட்டி வெகுகாலமாகப் பார்த்திப பல்லவனுக்கு தேரோட்டியாகத் திகழ்ந்தான். பார்த்திப பல்லவனின் தந்தை தருமவர்மன் காலத்தில் சிறுவனாக அரண்மனைப் பணியில் சேர்ந்தவன் தேரோட்டுவதைக் கற்று அதில் சமர்த்தனாக இருந்தான். அவனையே தனது தேரோட்டியாக நியமித்துக் கொண்டான், பார்த்திபன். சேவூர் போரில் பார்த்திபனின் இரதத்தைச் செலுத்தி வீரபாண்டியன் தப்பி ஓடாமல் செய்ததில் சதானந்தனுக்குப் பெரும் பங்கு உண்டு. பார்த்திபன் இறந்ததும், அரண்மனைப் பணியைவிட்டு, புறங்காட்டூர் சிவதர்ம மடத்தில் சேர்ந்து சைவ திருப்பணியை ஆற்றிக் கொண்டிருந்தான்.

சிவதர்ம மடத்தின் வாயிலில் புரவியில் இருந்து இறங்கிய அனபாயன் மடத்தினுள் பிரவேசித்தான். திருநீற்றின் மணமும், அகில் தூபத்தின் புகை என அந்தச் சூழ்நிலை மிகவும் ரம்மியமாகக் காட்சி தந்தது. தான் சதானந்த சிவனடியாரைச் சந்திக்க வந்திருப்பதாக அனபாயன் கூறியதும், அவனை ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

மிகவும் தளர்ந்து மஞ்சத்தில் கிடந்த அந்த முதியவர் வியப்புடன் அனபாயனைப் பார்த்தார்.

“நான் வேங்கி இளவரசன் அனபாயன். இராஜேந்திர சோழரின் பெயரன். அவர் மரணம் அடைந்துவிட்ட நிலையில் ஒரு முக்கியப் பணியாகத் தங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்!” - அனபாயன் கூறினான்.

இருமியபடி அவனை நோக்கி அமரும்படி சைகை செய்தவர், பாக்குமரக் குவளையொன்றில் நீர் அருந்தி விட்டு தனது காவித்துண்டினால் வாயை ஒற்றிக் கொண்டார்.

“முதலாம் இராஜேந்திரர் இறந்ததை எண்ணி வருந்துகிறேன். நான் அவரது தந்தை இராஜராஜனை சிறு வயதில் பார்த்திருக்கிறேன். குந்தவை பிராட்டி பொன்னாழியில் வந்து தங்கிய போது பார்த் திருக்கிறேன். ஆதித்த கரிகாலனை நான் பல தடவை சந்தித்திருக்கிறேன். எப்போதெல்லாம் அவரது நண்பர் பார்த்திப பல்லவர் ஆதித்த கரிகாலனைச் சந்திக்கப் போவாரோ, அப்போதெல்லாம் நானும் உடன் செல்வேன். அவர் மட்டும் கொல்லப்படாமல் இருந்திருந் தால், சோழ நாட்டை உன்னத நிலைக்கு இட்டுச் சென்றிருப்பார்! என்ன செய்வது? விதியை மதியால் வெல்ல முயல்வதற்குள், சதி மதியை வென்றுவிடுகிறது!”- பெருமூச்சு ஒன்றைச் சிந்தினார், சதானந்தர்.

“நானும் பார்த்திபருடன் இறந்திருக்க வேண்டியது. அன்று அவர் இரதத்தில் செல்லாமல் புரவியில்

சென்றதால் நான் அவருக்குத் தேவைப்படவில்லை. அவர் இறந்ததும், எனக்குக் காஞ்சியில் இருக்கவே பிடிக்கவில்லை. பல்லவத்தின் கடைசி வித்து அழிந்ததும், நான் சிவதர்ம மடத்திற்கு வந்துவிட்டேன்." - சதானந்தர் கூறினார்.

"ஐயா! அத்திமலைத்தேவன் சிலையை மீண்டும் ஆலயத்தில் வைத்தால், சோழத்திற்குக் கேடுகள் நீங்கும் என்று கொங்காழ்வார் என்கிற ஊழ்வினை படிப்பவர் கூறியிருக்கிறார். எனவே, அந்தச் சிலையைப் பற்றிய தகவலைத் தேடிக் கொண்டிருக்கிறோம். பிரவாள மாளிகையில் அந்தச் சிலை கண்டெடுக்கப்பட்டதாகவும், ஆதித்த கரிகாலர் அதனைப் பொன்னாழியில் பதுக்கி வைத்ததாகவும் கூறுகிறார்கள். உங்களுக்கு அது குறித்து ஏதாவது தெரியுமா?" - அனபாயன் கேட்டான்.

"ஆதித்த கரிகாலருக்கு அந்தச் சிலை கிடைத்ததா என்பது எனக்குத் தெரியாது. அவர் அதனைப் பதுக்கி வைத்தாரா என்பது பற்றியும் எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு இரவு, பார்த்திப பல்லவரின் தங்கை லலாடிகாவும், பல்லவ இளவரசி கல்பலதாவும், எனது தேரில் முக்கூடல் வேங்கடவன் ஆலயத்திற்குச் சென்ற போது, பல்லவ பொக்கிஷங்கள் ஆதித்த கரிகாலன் வசம் இருப்பதாக அறிந்தேன். பார்த்திப பல்லவருக்கும் தெரியாமல் அந்தப் பொக்கிஷங்களைப் பதுக்கி இருந்ததாக அறிந்தேன். ஆதித்த கரிகாலரை காதலிப்பது போன்று நடித்து அந்தப் பொக்கிஷங்களை வாங்கிவிட வேண்டும் என்று லலாடிகா, இளவரசி கல்பலதாவுக்கு யோசனை கூடச் சொன்னார். ஆனால் அதன் பிறகு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் வாகீஸ்வரிக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்."

"அது யார் வாகீஸ்வரி?" - அனபாயன் வியப்புடன் கேட்டான்.

*"பார்த்திப பல்லவரின் ஆலோசகர் மற்றும் அரண்மனை அதிகாரி விஜயமேதாபதியின் மகள். பார்த்திப பல்லவரும், கல்பலதா தேவியும் இறப்பதற்கு முதல் நாள் மாலை, அத்திமலை ஆலயத்திற்குச் சென்றனர். நான்தான் இரதத்தைச் செலுத்தினேன். வாகீஸ்வரியும் அந்த இரதத்தில் வந்தாள். 'வாகீஸ்வரி! ஆதித்த கரிகாலர் அளித்த வெள்ளிப்பெட்டகத்துடன் நீயும் ஆலயத்திற்கு வா.' என்று கல்பலதா தேவி அழைக்க, வாகீஸ்வரி அந்த வெள்ளிப்பெட்டகத்தைச் சுமந்தபடி ஆலயத்திற்கு வந்தாள். அந்தப் பெட்டகத்தினுள் ஏதோ முக்கியப் பொருள் இருந்ததாக அவர்கள் பேசிக் கொண்டார்கள். வாகீஸ்வரியைக் கேட்டால், அந்தப் பெட்டகத்தில் என்ன இருந்தது என்பது தெரிய வரும்!"- சதானந்தர் கூறினார்.*

*"வாகீஸ்வரி எங்கே இருக்கிறாள்?" - அனபாயன் பரபரப்புடன் கேட்டான்.*

*"பார்த்திபன், கல்பலதா தேவியுடன், விஜய மேதாபதியும் கொல்லப்பட்டார். அதனால், அவள் மனம் வெறுத்து, மணிமங்கலத்தைச் சேர்ந்த வைர வியாபாரியை மணந்து கொண்டு அங்கேயே வசித்து வந்தாள். தற்போது விதவையாகி, அங்கேயே உள்ள ராஜகோபால பெருமாள்* ஆலயத்தின் அருகில் வசித்து வருகிறாள். சென்ற வாரம் இங்கே சிவாலயத்திற்கு விஜயம்*

* வாதாபி புலிகேசியை மணிமங்கலத்தில் வெற்றி கொண்டதற்கு அடையாளமாக அங்கிருந்த வைகுண்டப் பெருமாள் ஆலயத்தின் அருகே ராஜகோபாலர் ஆலயம் ஒன்றை எழுப்பினான், நரசிம்ம பல்லவன். கங்கைக் கரைக்குப் படை எடுத்துச் சென்ற, முதலாம் இராஜேந்திரன் காஞ்சியில் இருந்து மணிமங்கலம் வழியாகச் செல்லும் போது ராஜகோபாலர் ஆலயத்தைப் பார்த்துவிட்டு, தனது படையெடுப்பு வெற்றி பெற்றால் ராஜகோபாலர் ஆலயத்தை விஸ்தாரமாகக் கட்டித்தருவதாக வேண்ட, உத்தரலாட மன்னன் மகிபாலனை வென்றான். மீண்டும் காஞ்சிக்கு வந்தவன், ராஜகோபால ஸ்வாமி ஆலயத்தைப்

*செய்த போது அவளைச் சந்தித்தேன். வயது முதிர்ந்து விட்டாலும், நினைவுகள் பசுமையாக உள்ளன. நான் இங்கு இருப்பதை அறிந்து என்னை வந்து சந்தித்தாள்!" - சதானந்தர் கூறினார்.*

*"நீங்கள் இங்கே இருப்பதைப் பற்றி மதுராந்தகப் பரகேசரி மூவேந்தர் வேளாளர்தான் கூறினார். அவர் எனது பாட்டனார் இராஜேந்திரனுக்கு மைத்துனர்."- அனபாயன் கூறினான்.*

*"தெரியும்! நான்தான் நான் இங்கு இருப்பதை அவரிடம் தெரிவிக்கச் சொன்னேன். மிகவும் தொன்மை யான அத்திமலைத்தேவனின் சிலை உலகிற்குப் பயன்பட வேண்டும். மழையையும், ஆற்றலையும் கொடுக்க வல்ல அந்தச் சிலை, ஆதித்த கரிகாலரால் எங்கோ பதுக்கப் பட்டிருக்கிறது. எங்கள் பல்லவத்தின் பொக்கிஷமான அந்தச் சிலை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்கிற நல்ல செய்தியைக் கேட்டுவிட்டு நாங்கள் இறக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அந்தச் சிலையைப் பற்றி அறிந்த கடைசிப் பல்லவர்களாக நானும், வாகீஸ்வரியும் மட்டுமே உள்ளோம். எங்கள் காலம்*

---

பெரிதாகக் கட்டினான். இன்றும் மணிமங்கலத்தில் (தாம்பரத்தில் இருந்து 12 கி.மீ.) ராஜகோபாலர் மற்றும் வைகுண்டப் பெருமாள் ஆலயங்கள் உள்ளன. ராஜகோபாலர் இடது கையில் சக்கரமும், வலது கையில் சங்கும் வைத்துக் கொண்டு வித்தியாசக் கோலத்தில் காட்சி தருகிறார். காஞ்சியில் இருந்து திருவரங்கம் புறப்பட்ட இராமானுஜர் மணிமங்கலம் ராஜகோபாலர் ஆலயத்தில் இரவு தங்கியதாகக் குறிப்புகள் கூறுகின்றன. இங்கேதான் அனபாயனும் இராமானுஜரை முதன்முதலாகச் சந்தித்தார். வருங்காலத்தில் அனபாயன் முதலாம் குலோத்துங்கனாக அரியணை ஏறப்போவதும் அவனது பெயரன் இரண்டாம் குலோத்துங்கன் இராமானுஜருடன் மோத, அதனால் அவர் ஹொய்சளம் சென்றதும், சரித்திரங்கள். இன்றும் மணிமங்கலத்தில் ராஜகோபாலரின் கோயில் உள்ளது. அங்குதான் விஜயமேதாபதியின் மகள் வாகீஸ்வரி கணவன் விஸ்வம்பரர் என்கிற வைர வியாபாரியோடு வாழ்ந்தாள்.

முடிவதற்குள் அந்தச் சிலை கோயிலை சென்று அடைய வேண்டும். எனவேதான் பரகேசரியாருக்கு தகவல் அனுப்பினோம்!" - சதானந்தர் கூறினார்.

"உங்களது நல்லெண்ணத்திற்கு நன்றி! நான் சென்று வாகீஸ்வரி அம்மையைச் சந்திக்கிறேன்!" - அனபாயன் எழுந்தான்.

"இளவரசே! எப்பாடுபட்டாவது அத்திவரதனின் சிலையை மீண்டும் அத்திமலையிலேயே வைத்து விடுங்கள். கலி முற்றுங்காலத்தில் கலிவரதன்தான் மக்களுக்கு அபயம் தரப் போகிறான். அத்தியானே அனவரத அபயம் ,அளிக்கப் போகிறான்." - சதானந்தர் கூறினார்.

அனபாயன் புன்னகைத்தான். "அனவரத அபயன் என்பதுதான் எனது பெயர். எனது பாட்டனார்தான் அந்தப் பெயரை வைத்தார்." - அனபாயன் கூற, அவனது தலையில் கைவைத்து அவனுக்கு ஆசி கூறினார்.

அனபாயன் மணிமங்கலத்திற்குச் சென்ற போது, வாகீஸ்வரி தனது வீட்டில் இல்லை. ராஜகோபாலர் ஆலயத்திற்குச் சென்றிருக்கிறார் என்று பணிப்பெண் கூறினாள். அவளுக்காகக் காத்திராமல், ஆலயத்திற்குச் சென்ற அனபாயன், அங்கு மக்கள் கூட்டம் திரண்டிருப்பதைக் கண்டு திகைத்தான்.

"காஞ்சியிலிருந்து திருவரங்கம் செல்லும் துறவி இராமானுஜர், மணிமங்கலம் ராஜகோபாலர் சந்நிதியில் இரவை கழிக்க உள்ளார்" என்று அனபாயனுக்கு கூறப்பட, அவன் கூட்டத்தினுள் நுழைந்து முன்பாக நின்றான்.

சிவந்த தேகத்துடன், காஷாயம் அணிந்திருந்த இராமானுஜர், மலர்ந்த முகத்துடன் மக்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்தார். இடது கையில் திரிதண்டத்தையும், வலது கையால் மக்களுக்குத் துளசி

மற்றும் மலர்களை வழங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு மிக அருகில் ஒரு வெள்ளிப்பெட்டகம் வைக்கப் பட்டிருந்தது. அதில் இராமானுஜர் ஆராதிக்கும் சாளக்ராம மூர்த்திகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மீது பரத்தியிருந்த துளசியை எடுத்து ஆசி கோரிய மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் வாகீஸ்வரி அம்மையை எங்கே தேடுவது?

"வாகீஸ்வரி அம்மை எங்கே இருக்கிறார்?" - அர்ச்சகர் ஒருவரைக் கேட்டான், அனபாயன்.

"அதோ.. சுவாமி இராமானுஜர் பின்பாகக் கைகூப்பி நிற்கின்றவர்தான் வாகீஸ்வரி!" அவர் கூற, அந்தப் பெண்மணியை நோக்கினான், அனபாயன்.

வயது முதிர்ந்திருந்தாலும், கண்களில் ஒளி குறையவில்லை. பக்தியுடன் இராமானுஜரையே நோக்கியபடி கைகுவித்து நின்றிருந்தாள். காவி வண்ணத்தில் சேலையும், கழுத்தில் துளசி மாலையும் அணிந்திருந்தாள்.

அவளை நெருங்கியவன், மெல்லிய குரலில் அழைத்தான்.

"வாகீஸ்வரி அம்மா!"

திடுக்கிட்டுத் திரும்பிய வாகீஸ்வரி, அவனை வியப்புடன் நோக்கியவள், மெதுவாக நகர்ந்து அவனை நெருங்கினாள்.

"யார் வேண்டும்?"

"நான் மன்னர் இராஜேந்திர சோழனின் பெயரன். சென்ற வாரம் அவர் இறந்துபோனது தங்களுக்குத் தெரியும் அல்லவா? அத்திமலையானைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொறுப்பினை நான் ஏற்றிருக்கிறேன். சிவதர்ம மடத்திற்குச் சென்று சதானந்தரைச் சந்தித்தேன்.

அவர்தான் நீங்கள் இங்கு இருக்கும் விவரத்தைச் சொன்னார். தங்களுக்குத் தெரிந்த தகவலைக் கூறினால் உதவிகரமாக இருக்கும்." - அனபாயன் கூற, தங்களது உரையாடல் இராமானுஜருக்குத் தொந்தரவாக இருக்கக்கூடாது என்று சற்று நகர்ந்து வந்தாள் வாகீஸ்வரி.

இராமானுஜர் மூர்த்தங்களை வைத்திருந்த வெள்ளிப்பெட்டியின் அருகே நின்று வாகீஸ்வரியும், அனபாயனும் பேசினர்.

"எப்படியாவது கண்டெடுத்து சிலையை ஆலயத்தில் சேர்த்துவிடுங்கள், இளவரசே. உங்கள் பணி வெற்றி யடைய இராமானுஜர் அனுக்கிரகிப்பார். பார்த்திப பல்லவர் மற்றும் இளவரசி கல்பலதா இருவரும் சென்று ஆதித்த கரிகாலர் இளவரசிக்குப் பரிசாகத் தந்த உக்ரோதயம் என்கிற ஹாரத்தைப் பெருந்தேவிக்குச் சமர்ப்பித்தனர்.." வாகீஸ்வரி கூறினாள்.

"அத்திமலைத்தேவன் சிலை வைக்கப்பட்டிருக்கும் இடம் குறித்து ஏதாவது தகவல் வெள்ளிப்பெட்டகத்தில் இருந்ததா?" - அனபாயன் கேட்க, வாகீஸ்வரி தலையசைத்தாள்.

"அந்த வெள்ளிப்பெட்டகத்தில் வேறு என்ன வைக்கப்பட்டிருந்தது என்பது, எனக்குத் தெரியாது. மிகவும் கனமான பெட்டகம்! யானை, புலி மற்றும் சங்கின் ஓவியம் பெட்டகத்தின் மூடியில் பொறிக்கப் பட்டிருந்தன! அதுமட்டும்தான் எனக்குத் தெரியும். நீங்கள் அத்திமலைத்தேவன் ஆலயத்திற்குச் சென்று அந்தப் பெட்டகத்தைப் பெற்றுச் சோதித்துப் பாருங்களேன். ஏதாவது தகவல் கிடைக்கலாம்!" - வாகீஸ்வரி கூற, தலையசைத்தான் அனபாயன்.

இராமானுஜரின் அருகே இருந்த அந்த வெள்ளிப் பெட்டகத்தின் மூடி திறந்திருந்தது. அப்படியே மூடியிருந்தாலும் கறுத்துப் போன யானை, புலி மற்றும்

*சங்கின் அடையாளங்களை வாகீஸ்வரி அடையாளம் கண்டிருப்பாளா என்பது நிச்சயம் இல்லை. பார்த்திப பல்லவன், கல்பலதாவுடன் சுமந்து சென்ற பெட்டகம் தனது கைக்கு எட்டும் தொலைவில் இருக்கிறது என்பதை அவள் உணரத் தவறிவிட்டாள்.*

*தனது செல்வாக்கைக் கொண்டு, அனபாயனை இராமானுஜரின் முன்பாக நிறுத்தினாள். "வேங்கி இளவரசர், அனபாயர்!" என்று இராமானுஜரிடம் கூறினாள்.*

*"விஷ்ணுவர்தன அனவரத அபயன் எனது பெயர். நான் போகும் பணி வெற்றியுடன் நிறைவேற தங்களது நல்லாசியைக் கோருகிறேன்!" - அத்திமலையானின் ஆலயத்திற்குப் புறப்படுவதற்கு முன்பாக இராமானு ஜரிடம் ஆசி கோரினான், அனபாயன்.*

*ஆதித்த கரிகாலனின் வெள்ளிப்பெட்டியிலிருந்து ஒரு துளசி தளத்தை எடுத்து அனபாயனின் கரத்தில் போட்டு ஆசி கூறினார், இராமானுஜர்.*

*அனபாயன் வாகீஸ்வரியிடம் விடைபெற்றுக் கொண்டு அத்திமலை ஆலயத்திற்குப் புறப்பட்டான்.*

## 43. ததிபாண்டனின் தயிர் பானை

காஞ்சியிலிருந்து திருவரங்கம் புறப்பட்ட இராமானுஜர், மணிமங்கலத்தில் தங்கியிருந்தார்.

தன்னிடம் ஆசி கோரிய அனபாயனை வாழ்த்திவிட்டு, மணிமங்கலம் ராஜகோபாலனையும், வைகுண்ட நாதனையும் தரிசித்துவிட்டு, அன்றிரவை ராஜ கோபாலனின் சன்னிதியில்தான் கழித்தார். மனம் பெரும் வேதனையில் ஆழ்ந்திருந்தது.

வேங்கடவன், அரங்கன் என்று அனைத்து எம் பெருமான்களையும் இந்தப் பிறவியில் தரிசித்துவிட முடியும். ஆனால் பிரம்மன் ஆராதித்த அஸ்வமேத அத்திவரதனை இந்தப் பிறவியில் தரிசனம் செய்ய முடியாது என்கிற எண்ணம் இராமானுஜரின் வேதனையை அதிகமாக்கியது. இந்தப் பிறவியில் அத்திவரதனை தரிசனம் செய்தால், பிறவியறுக்கலாம் என்கிற தீர்மானத்தில் இருந்தார். ஆனால் அத்திமலையானை தரிசிக்காமல் எங்ஙனம் பிறவி அறுப்பது?

"அத்திமலை தெய்வமே! நீ எங்கிருக்கிறாயோ? நீ கூட வரவேண்டிய தேவையில்லை. நீ இருக்கும் இடத்தை எனக்கு உணர்த்து! நான் வந்து உன்னை தரிசிக்கிறேன். இரகசியமாக எனக்குத் தரிசனம்கொடு. இந்த இராமானு ஜனுக்கு நீ தரிசனம் கொடுத்ததை நான் இரகசியமாக வைத்துக் கொள்கிறேன். யாரிடமும் நீ இருக்கும் இடத்தைக் கூட உரைக்கமாட்டேன். எனக்காகத் தயை காட்டி உனது தரிசனத்தைக் கொடு!" - இராமானுஜர் மனதினுள் வேண்டினார்.

விடியலில் திருவரங்கத்திற்குப் புறப்பட்டிருந்தார். அவரது வெள்ளிப்பெட்டகத்தை வேட்டியில் வைத்து மூட்டைகட்டி அதனைத் தலையில் சுமந்தபடி இராமானுஜரை பின்தொடர்ந்தார், சுத்தசத்வ நம்பி. நீர்வண்ணன் இராமானுஜரின் உடைமைகளைச் சுமந்து கொண்டு செல்ல, கோவிந்தன் தாழம்பூ குடை ஒன்றை இராமானுஜருக்கு பிடித்தபடி சென்றார்.

அனைவருக்கும் முன்பாகத் தடி ஒன்றை ஏந்தியபடி சென்று கொண்டிருந்தான், தேவராஜநம்பி, மணப் பாக்கத்து சுத்தசத்வ நம்பியின் பெயரன். கட்டிளங் காளையாகக் காட்சியளித்த அவன் வீர விளையாட்டு களில் சமர்த்தன். மல்யுத்தம், சிலம்பம் என்று பயிற்சி செய்து தனது தேகத்தை இரும்பாக்கி வைத்திருந்தான். நல்ல ஆகிருதியும், வனப்பும் கொண்டிருந்த அவன், தனது பாட்டன் சுத்தசத்வ நம்பி இராமானுஜருடன் திருவரங்கம் செல்லப் போவதை அறிந்து தானும் பாதுகாப்புக்கு அவர்களுடன் வருவதாகக் கூறிவிட்டான். வழித்துணையாக இருக்கட்டும் என்று சுத்தசத்வ நம்பியும் இராமானுஜரிடம் அனுமதி கோரி அவரது சம்மதத்தையும் பெற்றிருந்தார்.

தனது சிலம்பத்தைத் தோளினில் சாய்த்து கம்பீரமாக நடக்கும் அந்தக் குமரனை நோக்கிய இராமானுஜரின் இதழ்களில் குறுநகை மிளிர்ந்தது.

“அப்பனே! தேவராஜநம்பி! எனது தோளிலும் ஒரு தண்டம் சாய்ந்திருக்கிறது. உனது தோளிலும் ஒரு தண்டம் சாய்ந்திருக்கிறது. இரண்டும் தண்டம்தான். ஆனால் இரண்டிற்கும் இடையேதான் எவ்வளவு வேறுபாடு?” - இராமானுஜர் சிரித்தார்.

“ஸ்வாமி! உங்கள் திரிதண்டத்தைக் காப்பதற்கே எனது சிலம்பம் வந்து கொண்டிருக்கிறது.”-தேவராஜநம்பி, கூறினான்.

"எனது தண்டத்தின் உச்சியில் சமாதான வெள்ளைத் துணி பறக்கிறது. உனது தண்டத்தின் நுனியில் கூரிய ஆணிகள் பதிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன். எனது தண்டம் திரிதண்டம். உனது தண்டம் புரிதண்டம்!"- இராமானுஜர் கூற, சிரித்தபடி நடந்தான், தேவராஜநம்பி.

கானகத்தின் வழியே நடந்து சென்றனர், இராமானுஜரும் அவரது பரிவாரமும். மாலை நெருங்க, சூரியன் மேற்கில் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். கோவிந்தன் தேவராஜநம்பியை நோக்கிக் குரல் கொடுத்தார்.

"தேவராஜா!" என்றதும் திரும்பி அவரை நோக்கினான், நம்பி.

"சந்தியா காலம் துவங்கிவிட்டது. சந்தியா காலக் கடமைகளை ஆற்ற வேண்டும். எங்கேயாவது நீர்நிலை இருக்கிறதா என்று பார். இரவையும் அங்கேயே கழித்துவிட்டு காலை ஆராதனையை முடித்துக்கொண்டு திருவரங்கம் புறப்படுவோம்!" - கோவிந்தன் கூற தலையசைத்தான், தேவராஜநம்பி.

சிறிது தொலைவு நடந்த போது, "ஹாய்.. ஹாய்" என்று குரல் கேட்க, குரல் வந்த திக்கில் நோக்கினான், நம்பி. மாடு மேய்ப்பவன் ஒருவன், சாயும் காலம் வந்து விட்டதால், வனத்தில் மேய்ந்து கொண்டிருந்த தனது மாடுகளைக் குரல்விட்டு அதட்டி, ஒன்று திரட்டிக் கொண்டிருந்தான். அவனை நோக்கி நடந்தான், தேவராஜநம்பி.

"ஐயா! இங்கு நீர்நிலை, ஏதாவது இருக்கிறதா? நாங்கள் இரவைக் கழிக்க வேண்டும். துறவி இராமானுஜரின் பரிவாரம் நாங்கள். திருவரங்கத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம்!" என்றான்.

அந்த மாடு மேய்ப்பவன் இவர்களை வியப்புடன் நோக்கினான்! "வசதியான இடம் ஒன்று உள்ளது.

ஆனால் மலையேறிச் செல்ல வேண்டும். அதனைப் பச்சைமலை என்று அழைப்பார்கள். அங்கே வெள்ளாறு, கள்ளாறு என்று இரு ஆறுகள் பாய்கின்றன. யாரும் அங்கே செல்வதில்லை. துறவிகள் தங்குவதற்கு ஏற்ற இடம். அமைதியாக இருக்கும்" என்றான்.

அவன் கூறியது இராமானுஜரின் செவிகளில் கேட்டது. துறவிகள் தங்குவதற்கு ஏற்ற இடமா? சென்று பார்த்தால் என்ன?

"உனக்கு எனது ஆசிகள். எங்களுக்கு வழிகாட்டிய உனது பெயர் என்ன?" - இராமானுஜர் கேட்டார்.

"எனது பெயர் ஏழுமலை வேங்கடவன்!" - அந்த மனிதன் கூற, இராமானுஜர் புன்சிரிப்புடன் தனது பரிவாரத்தை நோக்கினார்.

"பார்த்தீர்களா! எனக்கு வழிகாட்டும் நாமங்கள் அனைத்துமே மாலவனின் நாமங்கள்தான். நான் எங்கு சென்றாலும் என்னை வழிநடத்த மாலவனின் நாமம் வந்துவிடுகிறது. அல்லிக்கேணியின் கீதாச்சார்யன் சந்நிதியில் புத்திர காமேஷ்டி செய்து என்னை எனது பெற்றோர் ஈன்றனர். வேங்கடவன் எனது கிரகஸ்தாஸ்ரமத்தை துவங்கினான். மதுராந்தக ராமன், எனக்கு ஆசான் பெரியநம்பியை தந்தான். அத்திமலையான் துறவறத்தைத் தந்தான். இப்போது திருமலை வேங்கடவன் எனக்குத் தங்குவதற்கு இடமளிக்கிறான்" என்று கூறினார்.

பிறகு ஏழுமலையானைப் பார்த்து சிரித்தபடி "ஏனப்பா! திருமலை வேங்கடவனின் பெயரை வைத்திருக்கிறாய். திருமலைக்குச் சென்றிருக்கிறாயா?" - இராமானுஜர் கேட்டார்.

"சுவாமி! நான் திருமலைக்குச் சென்றதில்லை. ஆனால் எனது ஏழுமலை வேங்கடவன் என்கிற பெயர் திருமலை வேங்கடவனைக் குறித்து ஏற்பட்டதல்ல. இங்கே

*பச்சைமலையில் ஏழுமலை வேங்கடவன் கோயில்* கொண்டிருக்கிறான். அவன் எங்கள் குலதெய்வம். அவனைக் குறித்துதான் எனக்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது" என்று ஏழுமலை கூறியதும், இராமானுஜர் வியந்தார்.*

* ஒரு ஆச்சரியமான தகவல். கிழக்குத் தொடர்ச்சி மலையின் பகுதியாகப் பச்சைமலைத் தொடர் ஒன்று திருச்சிக்கு அருகே உள்ளது. அந்தப் பகுதி மிகவும் பசுமையாகக் காட்சி அளித்ததால், அதனைப் பச்சைமலை என்று அழைத்தார்கள். பச்சைமலை, பவள மலை, பெருமாள் மலை, பழ மலை, குறிச்சி மலை, கணவாய் மலை, பனைமலை என்று ஏழு மலைகள் இங்கே உள்ளன. காலப்போக்கில் எல்லா மலைகளையும் பச்சைமலை என்று அழைக்கத் துவங்கினர்.

1. **பச்சைமலை:** கள்ளாறு மற்றும், வெள்ளாறு பாயும் மிகப் பசுமையான மலை. சமஸ்கிருதத்தில் இந்த ஆறுகளுக்கு ஸ்வேத நதி, அம்ரித நதி என்று வழங்கப்பட்டன. தமிழக அரசு இந்த மலைத்தொடரை சுற்றுலாத் தலமாக அண்மையில் அறிவித்தது. கொறையார் அருவி, மங்கலம் அருவி மற்றும் மயில் ஊற்று அருவி என்று மூன்று அருவிகள் இங்கே பாய்கின்றன. இங்கே வீரராமர் அணை என்று ஒரு அணை கட்டப்பட்டுள்ளது. மலைத்தொடரைச் சுற்றி உள்ள கிராமங்கள் செம்புலிச்சம்பட்டி, மணலோடை, சின்னாலும்பூர், ராமநாதபுரம், டாப் செங்காட்டுப்பட்டி, செம்பூர், பெரியபாக்கலம், பெரியநாகூர், மையம்பாடி ஆகியவை. இங்கே வசிக்கும் குடிமக்களை மலையாளிகள் என்கிறார்கள். கேரள மலையாளிகள் அல்ல! பலாக்கனிகளை வளர்த்து அருகில் உள்ள ஊர்களில் விற்கிறார்கள். டாப் செங்காட்டுப் பட்டிதான் இந்த மலைத்தொடரின் முக்கிய கிராமம். துறையூர், ஈசனை, உப்பிலியாபுரம், எளம்பலூர், பெரம்பலூர், கங்காவல்லி, தம்மம்பட்டி, அரும்பாவூர், மலையாலம்பட்டி, தேடவூர், ஆறரை ஆகிய பெரிய ஊர்களில் இருந்து பச்சை மலைக்குப் போகலாம். பெரம்பலூர், திருச்சி மாவட்டங்களில் இருக்கிறது பச்சைமலைத் தொடர். திருச்சியில் இருந்து ஸ்ரீரங்கம் வழியாகத் துறையூர்- திருச்சி முக்கியச் சாலையில் சுமார் 86 கிலோ மீட்டர் தொலைவில் கொப்பம்பட்டி அடுத்து அமைந்துள்ளது பச்சைமலை பிரதேசம். பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகளால் அறியப்படாமல் உள்ள இந்தப் பச்சைமலையைச் சுற்றிலும் டாப் செங்காட்டுப்பட்டி, பேலூர்

*இராமானுஜர் தனது பரிவாரத்தை வியப்புடன் நோக்கினார்.*

---

பாதுகாக்கப்பட்ட காடுகள், கேக்கரை என இன்னும் ஏராளமான அம்சங்கள் உள்ளன. தமிழ் திரைப்படப் பாடல்களில் இளையராஜா இசையமைத்த பாடல்களில் பச்சைமலையைப் பற்றி நிறையக் குறிப்புகள் வரும். (பச்ச மலப் பூவு, நீ உச்சி மலத் தேனு-ன்னு இளையராஜா பாடியிருப்பார்.) உச்சி வகிர்ந்து எடுத்துப் பிச்சி பூ வச்ச கிளி பச்சைமலை பக்கத்துல மேயுதுனு சொன்னாங்க) என்கிற பாடல்களில் குறிக்கப்படும் மலைதான் பச்சைமலை. பெயருக்கு ஏற்ற மாதிரியே பசுமை நிறைந்த வனக்காடுகளைக் கொண்டுள்ளது இந்த மலை. திருச்சி, பெரம்பலூர், சேலம் என்று மூன்று பக்கத்திலும் 3 மாவட்டங்களை இணைத்து, நடுவில் ஒரே ஒரு வாகனம் செல்லும் அகலத்தில் சாலை. அதிகாலை அல்லது அந்திசாயும் நேரம் இங்கு மலையேற்றத்தில் ஈடுபட்டால் அழகான மான்கள் கூட்டம் கூட்டமாகச் சுற்றித் திரிவதைக் கண்டு ரசிக்கலாம். ஜஸீம் ஹம்சா (Jazim Hamza) என்கிற இருபுறமும் மரங்களால் சூழ்ந்த இயற்கையான பசுமைச் சாலை இங்கே உள்ளது. உப்பிலியாபுரம் முக்கியச் சாலையில் இருந்து சோபனாபுரத்தைக் கடந்தால் ஒரு சில மீட்டரில் மலையேற்றம் துவங்கிவிடும். பின் இருபுறங்களிலும் குளுகுளுவென்று காற்றை வாரியிறைக்கும் பச்சைக் காடுகள் தான். அடுத்தடுத்து வரும் 14 கொண்டை ஊசிமுனைச் சாலைகள், பச்சைமலை மேதகம் காட்சிமுனை எனச் சாலையின் சிறப்புகளையே அடுக்கிக் கொண்டு போகலாம். டாப் செங்காட்டுப்பட்டி பச்சைமலைக்கு முன்னதாக வரும். இதற்கு ஒரு சில கிலோ மீட்டருக்கு முன் ஆங்கிலேயர்கள் காலத்தில் கட்டப்பட்ட சுற்றுலா விடுதி ஒன்றும் உள்ளது. அங்கிருந்து பார்த்தால் மலையில் சிதறிக்கிடக்கும் பாறை களும், பசுமைப் புல்வெளிகளும் அவ்வளவு ரம்மியமாகக் காட்சியளிக்கும். டாப் செங்காட்டுப் பட்டியில் இருந்து பச்சைமலை நோக்கிப் பயணிக்கும் இடைப்பட்ட தொலைவில் உள்ளது எருமைப்பள்ளி அருவி. பெரியமங்கலம், சின்னமங்கலம் மலைக் கிராமங்களைக் கடந்து சுமார் 150 அடி மலைச் சரிவில் இறங்கினால்தான் இதனைப் பார்க்க முடியும். பிற அருவிகளைப் போல் எவ்வித சத்தமுமின்றிப் பாயும் இந்த அருவி மழைக் காலத்தில் ஆபத்து நிறைந்ததாகவும் இருக்கும். கோரையாறு அருவி சுமார்

*"திருவரங்கம் செல்லும் வழியில் ஒரு சப்தகிரி உள்ளதே. அங்கு ஏழுமலை வேங்கடவன் எழுந்தருளி இருக்கிறானாமே. உங்களுக்கு இந்தத் தகவல் தெரியுமா*

---

25 அடி உயரத்திலிருந்து ஆர்ப்பாட்டத்துடன் கொட்டும். கொறையார் அருவிக்குச் செல்லும் பாதைகள் சற்று கடினமானது. வனத்துறையினரின் அனுமதியின்றி யாரும் செல்லக்கூடாது. அவர்கள் அனுமதிப்பதும் அரிதே. பெரம்பலூரி லிருந்து கிருஷ்ணாபுரம் வழியாகத் தொண்டமாந் துறையை அடைந்து அங்கிருந்து அய்யர்பாளையம் வழியாகப் பச்சைமலை அடிவாரத்திலுள்ள கொறையார் கிராமத்திற்குச் செல்ல வேண்டும். அங்குதான் இந்த அருவி அமைந் துள்ளது. திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து துறையூர், சோமனபுரம் பேருந்துகள் மூலம் செல்லலாம். சோமனபுரத்திலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவு மூலப் பகுதியில் செல்ல பிரத்யேக வாகனம் வேண்டும். துறையூரிலிருந்து மூலக்காடு வழியாகவும் பச்சைமலைக்குச் செல்லலாம்.

2. **பவள மலை:** தென்வடலாக (தெற்கு வடக்கு நீளவாக்கில்) அமைந்துள்ள ஒரு மலைத்தொடர். பச்சைமலைத் தொடரின் கிழக்குமுனையுடன் இது இணைந்து தொடர்கிறது. இணையும் பகுதியில் மூலைக்காடு என்னும் பெயர் பெற்றுள்ளது.

3. **குறிச்சி மலை:** பவள மலையின் தெற்கு முனையில் குறிச்சிமலை உள்ளது.

4. **கணவாய் மலை:** பவள மலையின் ஒரு சிறு பகுதி கிழக்கிலும் நீள்கிறது. இப்பகுதி மலையின் பெயர் கணவாய் மலை. கணவாய்மலையில் வடபாலகணவாய், அம்மாப்பாளையம், லாடாபுரம் முதலான ஊர்கள் உள்ளன.

5. **பழமலை:** பச்சைமலையின் முகட்டு நிலப்பரப்பில் சின்ன-பழமலை, பெரிய-பழமலை என்னும் ஊர்கள் உள்ளன. இவ்வூர்களில் மலையாளிகள் என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பெரிய-பழமலையில் 'பழமலையான் கோயில்' எனப்படும் காட்டுத்தெய்வக் கோயில் ஒன்று உள்ளது. இதில் 8 அடி உயரம், 12 அடி நீளம் கொண்டதாய் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட வேங்கை உருவமும் நடப்பட்ட வேல்களும் உள்ளன. 12 அடி நீளம் கொண்ட அளவு

*என்ன?"- மற்றவர்கள் தலையை அசைத்து இல்லை என்று கூற, இராமானுஜர் பரவசத்தில் ஏழுமலையை நோக்கினார்.*

*"நீ குறிப்பிடும் ஏழு மலைகளின் பெயர்கள் உனக்குத் தெரியுமா?"*

*"எனது பாட்டன் கூறியிருக்கிறார், சுவாமி! பச்சைமலை, பவள மலை, குறிச்சி மலை, கணவாய் மலை, பழ மலை, பெருமாள் மலை மற்றும் பச்சைமலை உச்சியில் பனை மலை என்று ஏழு மலைகள் இங்கே உள்ளன.*

*"அப்பனே! மாடுமேய்க்கும் நீ எங்களுக்குப் புதிய தகவலை அளித்திருக்கிறாய். அவசியம் திருவரங்கம் செல்வதற்கு முன்பாக நாங்கள் ஏழுமலை வேங்கட*

---

காலடிக்கு 16 அடியாகும்.

6. **பெருமாள் மலை:** துறையூர்-பெரம்பலூர் சாலையில் அமைந்துள்ள பெருமாள் மலை ஏழு மலைகளில் முக்கியமான மலை. கரிகால் பெருவளத்தான் கட்டிய கோயிலில் உள்ள ஏழுமலை வேங்கடவனின் கரத்தில், கரிகாலன் வழங்கிய செங்கோல் ஒன்று உள்ளது. 960 அடி உயரம் கொண்ட இந்த மலையில் ஏறுவதற்கு 1532 படிகள் உள்ளன. இந்தக் கோயிலில் சப்தஸ்வர தூண்கள் உள்ளன. இராமானுஜர் இங்கே தங்கியிருக்கிறார்.

7. **பனை மலை:** பச்சை மலை, பவள மலை, பழ மலை, கணவாய் மலை, குறிச்சி மலை, பெருமாள் மலை ஆகிய ஆறு மலைகள் இருந்தாலும், ஏழாவது மலை பச்சை மலையின் மீது தனியொரு குன்றாக உள்ளது. இந்த மலையின் பெயர் பனை மலை. மருந்துக்குக் கூடப் பனைமரங்கள் இல்லாத இந்த மலைக்கு ஏன் பனை மலை என்று பெயர் வந்தது? இங்கேதான் நமது அத்திமலைத் தேவனின் சூட்சுமம் அடங்கியுள்ளது. அது என்ன என்பது விரைவில் புரிய வரும். இராமானுஜர் பெருமாள் மலைக்குச் செல்லும் வழியில் பச்சைமலை, பனை மலையைக் கடந்துதான் திருவரங்கம் சென்றிருக்கிறார்.

வனைத் தொழுதுவிட்டுச் செல்கிறோம்!" என்று கூறிவிட்டு, அனைவரும் பச்சைமலையில் ஏறத் துவங்கினர்.

சூரியன் மறைய, வழியில் புறப்பட்ட மயில் ஊற்று அருவியில் சந்தியாகாலக் கடமைகளை முடித்துக் கொண்டு, தொடர்ந்து பச்சைமலை ஏறினார்கள். இருள் படர்ந்துவிட, தேவராஜநம்பி, இரண்டு சுள்ளிகளை உடைத்து அவற்றில் எண்ணெய்-யில் தோய்த்த துணியைச் சுற்றி, தீ மூட்டினான். எரியும் சுளுந்துகளின் ஒளி வழியைக் காட்ட, அவர்கள் பச்சைமலையின் உச்சியை அடைந்தார்கள். பெருத்த ஒலியுடன் இரு ஆறுகள் ஓடிக்கொண்டிருந்ததை அவர்கள் கவனித்தார்கள்.

ஒரு பெரிய குன்று மலையின் உச்சியில் நிற்க, மேற்கிலிருந்து வந்த ஒரு ஆறு பெருத்த ஒலியுடன் அந்தக் குன்றின் வலதுபுறமாக விரைந்து கொண்டிருந்தது. சற்றே செம்மையாக அதன் நீர் காணப்பட்டது. மற்றொரு ஆறு வடக்கிலிருந்து ஓடி வந்து அந்தக் குன்றின் இடதுபுறமாக எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்தது. அதன் நீர் வெண்மை நிறத்தில் இருந்தது. அந்தக் குன்றின் வலப்புறமாகப் பாயும் செம்மை வண்ண ஆறு கள்ளாறாக இருக்க வேண்டும். குன்றின் இடப் புறமாகப் பாயும் பால் போன்ற நீரை உடைய ஆறு வெள்ளாறாக இருக்க வேண்டும். இரு ஆறுகளும் சிறிது தொலைவு தனித்தனியாக ஓடி சங்கமிக்க, இடையில் நீண்ட அந்தப் பெரிய குன்றம் ஒரு தீவாகக் காட்சி யளித்தது.

அனைவரும் அந்தக் குன்றத்தையும், அதன் இருபுறமும் பெருகி ஓடும் ஆறுகளையும் கவனித்துக் கொண்டிருக்க, சுத்தசத்வ நம்பி அந்தக் குன்றின் அடிபாகத்தை உற்று நோக்கினார். தனது பெயரன் தேவராஜநம்பியை அழைத்தார்.

"நம்பி! சற்றே சுளுந்தை உயர்த்திப் பிடி!"

தனது பாட்டன் கூறியதும் சுளுந்தினை உயர்த்திப் பிடித்தான், நம்பி. அந்தக் குன்றத்தின் கீழே இயற்கையான குகை ஒன்று இருந்தது. அதனைச் சுட்டிக்காட்டினார், சுத்தசத்வ நம்பி.

"அதோ பாருங்கள். ஒரு மலைக்குகை தென்படுகிறது. அந்தக் குகையில் இரவை கழிக்கலாம்!" - அவர் சுட்டிக் காட்டிய அந்தக் குகையை நோக்கினார், இராமானுஜர்.

"அது குகையல்ல. இரு ஆறுகளும் ஒரு காலத்தில் அந்தக் குன்றை மூடிக்கொண்டு ஓடியிருக்க வேண்டும். அப்போது நீர் அரிப்பால் அந்தப் பள்ளம் உண்டாகி இப்போது குகையாகக் காட்சி தருகிறது. எப்படி இருந்தாலும், நாம் தங்குவதற்குத் தோதான இடத்தைப் பரமன் காட்டியிருக்கிறான். அங்கேயே தங்குவோம்."- இராமானுஜர் கூறினார்.

"ஆம்! தீயினை மூட்டிவிட்டால், துஷ்ட மிருகங்கள் ஆற்றைக் கடந்து எதிர்புறம் வராது" - கோவிந்தன் கூறினார்.

அனைவரும் வெள்ளாற்றைக் கடந்துச் சென்றனர். முழங்கால் வரையில்தான் நீர் ஓடிக்கொண்டிருந்தது. கரையேறுவதற்கு முன்பாக அனைவரும் உடைமைகளை பாறைகளில் வைத்துவிட்டு, அப்படியே ஆற்றில் மூழ்கி நீராடிவிட்டுத்தான் குன்றத்தின் மீது ஏறினர்.

நீர்வண்ணன் மட்டும் உடனே அடுப்பை மூட்டி இரவு உணவிற்கு பொங்கலை சமைக்கத் துவங்கினார். கோவிந்தன் இராமானுஜரின் இரவு ஆராதனைக்கு ஏற்பாடுகளைச் செய்ய, சுத்தசத்வரும், தேவராஜனும் சற்றே ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர். மணி மங்கலத்தில் இருந்து புறப்பட்டது முதலாக ஓய்வின்றிப் பயணம் செய்திருக்கின்றார்கள்.

*இராமானுஜர் ஒரு பாறையின் மீது ஏறி குகையை நோக்கி அமர்ந்து தனது தியானத்தைத் தொடங்கினார். மாலவனின் கருணை முகத்தை மனதில் இருத்தி, கண்களை மூடி, ஆழ்ந்த நிலைக்கு நழுவினார். அந்தத் துறவியின் தியானத்தைக் குலைக்க விரும்பாதது போன்று, மிகவும் ஆர்ப்பாட்டத்துடன் ஓடிக்கொண்டிருந்த கள்ளாறு தனது நீரோட்டத்தைக் குறைத்துக் கொண்டு, அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்தது. இரவு பறவைகளும் கூவாமல் மௌனத்தைக் கடைபிடித்தன.*

*பச்சைமலையின் குளிர் காற்று எங்கும் பரவியிருக்க, அனைவருமே அங்கு நிலவிய அமைதியைத் தங்கள் சுவாசக்குழாயின் வழியாக இதயத்தில் நிரப்பிக் கொண்டிருந்த வேளையில், பலத்த காற்று வீசியது. இராமானுஜரின் மேனியை அந்த இதமான காற்று தழுவியது.*

*"ததிபாண்டனின்* தயிர் பானையில் பச்சை மாமலை போல் மேனியைக் கொண்ட நான் பத்திரமாக இருக்கிறேன்." - கிசுகிசுத்த குரல் இராமானுஜரின் செவிகளில் அந்தக் காற்றின் ஊடே ஒலித்தது.*

---

* அத்திமலைத்தேவனின் ஐந்தாம் பாகத்தில் ததிபாண்டன் அனுபவம் அடிக்கடி இடம்பெறுவதை வாசகர்கள் உணரலாம். ததிபாண்டனின் கதை என்ன? வெண்ணை திருடிய கண்ணனைத் தண்டிக்க அவனது தாய் யசோதா துரத்தி வர, அவன் பானை வியாபாரி ததிபாண்டனின் கடைக்குள் சென்று தன்னை ஒளித்து வைக்கச் சொல்கிறான். ததிபாண்டனும் குழந்தை கண்ணன் மீது பெரிய பானையால் மூடிவைத்து தான் அதன் மேல் அமர்ந்திருக்கிறான். யசோதை சென்ற பிறகு கண்ணன் ததிபாண்டனிடம் தன்னை விடுவிக்கச் சொல்ல, அவனோ தனக்கும் தனது பானைக்கும் மோட்சம் தந்தால்தான் விடுவேன் என்று கூற, வேறு வழியின்றி கண்ணன் அவனுக்கும், பானைக்கும் மோட்சம் தருகிறான். கோவர்த்தன மலையைத் தூக்கிய கண்ணனுக்கு ஒரு பானையைத் தூக்கி தன்னை விடுவித்துக் கொள்வதா பெரிய விஷயம்? கண்ணனின் ஸ்பரிசத்தின் பெருமையை உரைக்க இந்த லீலைகள் தேவைப்பட்டன.

*திடுக்கிட்டு தனது கண்களைத் திறந்தார், இராமானுஜர். அன்றொரு நாள், அத்திமலைத்தேவனின் கிழக்கு கோபுர சந்நிதி சாலையில் உள்ள கிணற்றில் இவர் நீர் சேந்திக் கொண்டிருந்த வேளையில் இவரது செவிகளில் கிசுகிசுத்த அதே குரல்! ததிபாண்டனின் அனுபவத்தை விளக்கிக் கொண்டிருந்த ஆசான் பெரியநம்பி, கண்ணனின் ஸ்பரிசம் ததிபாண்டனுக்கு மட்டுமல்லாமல் அவன் பானைக்கும் நற்கதியை வழங்கியது என்று கூறிய போது இராமானுஜர் ஒரு கேள்வி கேட்டிருந்தார்.*

*"ஆசானே! கண்ணனின் ஸ்பரிசம் நற்கதியை தருமென்றால், கொடுஞ்செயல்கள் செய்தவர்கள் கூட அவனைத் தொட்டுவிட்டு நற்கதியை அடையலாம். எதற்காக அவனிடத்தில் பக்தி செலுத்த வேண்டும்?"- இராமானுஜர் கேட்க, பெரியநம்பி சிரித்தார்.*

*"நற்கதியை அடையப் போகின்றவர்கள்தான் அவனைத் தொட முடியும். கண்ணன் ஓடியது யசோதைக்குப் பயந்தல்ல, ததிபாண்டனுக்கு நற்கதியை அளிக்க. காரணம் இல்லாமல் அவன் எதையும் கூறமாட்டான், செய்யவும் மாட்டான்" என்றாரே பெரியநம்பி.*

*அத்திமலையில் ததிபாண்டன் அனுபவத்தை உரைத்தவன், எதற்காகப் பச்சைமலையில் மீண்டும் அதனைக் கூறுகிறான்?*

*இராமானுஜர் யோசித்தபடி வெள்ளாறும், கள்ளாறும் சங்கமிக்கும் இடத்தையே வெறித்துக் கொண்டிருந்தார். இரவு ஆராதனையை முடித்துவிட்டு, பொங்கலை*

---

**பார்த்திப பல்லவன் திருக்கோவிலூர் மலையமானை சந்திக்கச் செல்ல, அவர் அத்திமலைத்தேவன் ஆதித்த கரிகாலன் என்கிற ததிபாண்டனிடம் சிக்கியிருக்கிறான். தயிர் பானையில் அவன் பத்திரமாக இருக்கிறான் என்று சொன்னதை வாசகர்கள் நினைவில் கொண்டிருப்பார்கள்.**

அருந்திவிட்டு, அனைவரும் தீயை மூட்டி அதனைச் சுற்றி அமர்ந்து கொண்டனர்.

"சுத்தசத்வ நம்பிகளே! தியானம் செய்த போது எனது செவியில் ஒரு குரல் ஒலித்தது. அந்தக் குரல் கூறியதை சுவடியில் பதிவு செய்து கொள்ள நினைக்கிறேன். நீர் அந்த வெள்ளிப்பெட்டகத்தில் இருந்து ஒரு சுவடியையும் எழுத்தாணியையும் கொண்டுவாரும்!" - இராமானுஜர் சொல்ல, சுத்தசத்வ நம்பி எழுந்து சென்று வெள்ளிப் பெட்டகத்தைத் திறந்தார். சுவடிகள் திருவிலச்சினை கோலின் கீழே சிக்கிக்கிடக்க, அதனை இழுத்தார். கோலின் மறுபுறம் அந்தப் பெட்டகத்தின் பட்டுத் துணியில் சிக்கியிருக்க, அதனைச் சுத்தசத்வர் வேகமாக இழுத்தார். பட்டுத்துணி 'டர்' என்கிற ஒலியோடு கிழிபட, அதன் அடியில் வைக்கப்பட்டிருந்த பட்டோலை தெரிந்தது. வியப்புடன் அதனைக் கையிலெடுத்த சுத்தசத்வ நம்பி, அந்தப் பட்டோலையை எடுத்துக் கொண்டு இராமானுஜரிடம் விரைந்தார்.

"ஸ்வாமி! பெட்டகத்தின் அடியில் இந்தப் பட்டோலை வைக்கப்பட்டிருந்தது!" இராமானுஜரிடம் நீட்ட அவர் வியப்புடன் அதனை வாங்கிப் பார்த்தார். அத்திமலைத்தேவன் ஆலய அதிகாரி அப்பண்ணா சதகரணி அவருக்கு அளித்த பெட்டகத்தின் அடியில் ஒரு பட்டோலை உள்ளது என்கிற தகவல் அவருக்கு வியப்பை அளித்தது. இராமானுஜர் ஓலையைத் தேவராஜ நம்பியிடம் கொடுத்து அதனை வாசிக்கச் சொன்னார்.

சுளுந்தின் ஒளியில் நம்பியும் அந்தப் பட்டோலையை உரக்க வாசித்தார்.

"பல்லவ இளவரசி கல்பலதா, உன்னைத் தவறாகப் புரிந்து கொண்டதற்கு மன்னித்துவிடு. நீ பார்த்திப பல்லவனின் மனையாள் என்பது தெரியாமல் உன்னை மணந்து கொள்ள முயற்சித்தேன். எனது தவறை உணர்ந்தேன். உனது பல்லவத்தின் பொக்கிஷங்கள்

*எனது வசம்தான் இருந்தது. ஸ்ரீதளமணி என்கிற உக்ரோதயத்தை இத்துடன் அனுப்பியுள்ளேன். அதனை நான் தரும் பரிசாக ஏற்றுக்கொள்வாய் என்று நம்புகிறேன். அதோடு அத்திமலையான் இருக்கும் இடத்தையும் நான் உனக்குத் தெரிவிக்கிறேன். நீயும், பார்த்திபனும் அதைத் தேடி எடுத்து உங்கள் ஆலயத்திலேயே வைத்துவிடுங்கள். சூழ்ச்சியாளர்கள் என்னைக் கொல்லத் திட்டமிட்டுள்ளனர். அவர்கள் கையில் சிலை கிடைக்கக்கூடாது என்பதால் இந்த இரகசியக் குறிப்புடன் வெள்ளிப்பெட்டகத்தை உனக்கு அனுப்பியுள்ளேன்.*

*'காளையும், புலியும் உரசுமிடத்தில் ததி பாண்டனின் தயிர் பானையில் பச்சை மாமலை போல் மேனிகொண்ட அத்திமலையான் ஏழுமலை யானாக நிற்கிறான்.' - ஆதித்த கரிகாலன்.*

*"ஆஹா! என்ன அதிசயம் இது! சற்றுமுன் எனது காதில் ஒலித்த அதே குறிப்பை இந்த ஓலை கொண்டிருக்கிறதே. அத்திமலை ஆலய சாலைக் கிணற்றில் நான் நீர் சேந்திக் கொண்டிருந்த போதும், இதே குறிப்புதான் எனது காதில் ஒலித்தது. அத்தி மலையான்தான் சூசகமாக ஏதோ கூற முயல்கிறான்!" - பரவசத்துடன் கூறினார், இராமானுஜர்.*

*"சோழ பட்டத்து இளவரசன் ஆதித்த கரிகாலன், பல்லவ இளவரசிக்கு எழுதிய கடிதம். பாவம்! அரியணை ஏற வேண்டியவர் துர்மரணத்தைச் சந்தித்துவிட்டார்."- கோவிந்தன் கூற, இராமானுஜர் சிந்தனையுடன் தம்பியை நோக்கினார்..*

*"என்ன செய்வது கோவிந்தா! ஆன்மிகம் மனிதனை அவன் பிறந்த நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது. ஆனால் அரசியல் அந்தத் தெளிவை மறைத்து மனதில் பேராசையை உண்டாக்குகின்றது" - என்றவர், அந்தப் பட்டோலையையே வெறித்துக் கொண்டிருந்தார்.*

திடீரென்று அவரது சிந்தையில் ஒரு தெளிவு. அண்ணாந்து தாங்கள் தங்கியிருந்த அந்தக் குன்றத்தின் அடிபாகத்தைப் பார்த்தார்.

"இந்த ஓலையைப் படித்ததும் எனக்குள் ஒரு தெளிவு பிறக்கின்றதே!" தனக்குள் கூறிக் கொண்டார்.

'அதோ அந்தப் பாறையில் அமர்ந்து நான் தியானம் செய்து கொண்டிருந்த வேளையில் எனக்குள் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் எனது செவியில் ஒரு குரல் ஒலித்தது. அந்தக் குரல் கூறியதையே இந்தப் பட்டோலையும் கூறுகிறது என்றால், இங்கு ஏதோ ஒரு அதிசயம் நிகழப்போகிறது.' - இராமானுஜர் நினைத்தார்.

அன்றிரவு அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தனர்.

இராமானுஜர் மட்டும் உறக்கம் பிடிக்காமல் குகையை விட்டு வெளியே வந்து காற்றாடப் பாறையில் அமர்ந்தார்.

ஆற்று நீரின் சலசலப்பு ஒலியும், இரவுப் பறவைகளின் கூவல்களும் நீலாம்பரியாக ஒலிக்க அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர்.

இராமானுஜர் பெட்டகத்தில் கிடைத்த சோழ இளவரசன் பல்லவ இளவரசிக்கு எழுதிய ஓலையைப் பற்றி நினைத்தார். 'ஓலையில் இருந்த குறிப்பு எனது எண்ணத்தை ஊர்ஜிதம் செய்தது. ததிபாண்டனின் தயிர் பானை என்கிற பதம் எனது செவியில் சில காலமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. ததிபாண்டம் என்றால், தயிர் பானையல்லவோ.

யோசித்துக் கொண்டே இருந்தவர், மீண்டும் வெள்ளாற்றில் இறங்கி நீர்க்கரையில் சென்று நின்றார். இப்போது அந்தக் குன்றமும், அதனை ஒட்டிப் பாயும் வெள்ளாறும், அதன் மறுபக்கம் ஓடும் கள்ளாறும் அவருக்கு நன்கு புலப்பட்டன. இராமானுஜர் வெள்ளாற்று நீரைக் கவனித்தார்.

வெண்மையான பாலைப் போன்று பெருகும் ஸ்வேத ஆறு என்கிற வெள்ளாறு, குன்றத்தைக் கடந்ததும், கள்ளாற்றின் நீருடன் கலந்து, அதன் தன்மை மாறுவதை உணர்ந்தார். வெள்ளாறு நுரை பொங்கிக் கொண்டு உறுதியாகக் காணப்படுகிறது. பாலில் உறை சேர்த்ததும், தயிராகிப் போவது போன்று கள்ளாறு வெள்ளாற்றுடன் கலந்த பின் தண்ணீரின் தன்மை தயிரைப் போன்று நுரையுடன் பெருகுகிறது. இரண்டு ஆறும் கலக்கும் இடத்தில் இருக்கும் ததிபாண்டனின் பானையாக இந்தக் குன்று விளங்குகிறது. குன்றின் வடிவத்தைப் பார்த்தார்.. இரு ஆறுகளின் மையத்தில் ஒரு பானையைப் போன்ற வடிவத்தில் அந்தக் குன்று இருந்தது. குன்றின் உச்சியில் இருக்கும் கல்லும், அதன் கீழ் முளைத்திருக்கும் புல்லும் பானையின் வாய்ப் பகுதியை மூடியுள்ளது போன்று காணப்பட்டது.

முந்தையதினம் கோவிந்தன் வெள்ளிப்பெட்டகத்தில் கண்டெடுத்த அந்த சோழ இளவரசனின் பட்டோலையை மீண்டும் ஒருமுறை நினைவு கூர்ந்தார்.

'காளையும், புலியும் உரசுமிடத்தில் ததிபாண்டனின் தயிர் பானையில் பச்சை மால்மலை போல் மேனியைக் கொண்ட அத்திமலையான் ஏழுமலையானாக நிற்கிறான்.'

இராமானுஜர் கிழக்கு நோக்கி நின்றார். தனக்குள் கூறிக் கொண்டார்.

"நான் குணதிசையை நோக்கி நிற்கிறேன். எனது இடதுபுறம் அதாவது வடதிசையில் பல்லவ ராஜ்யம் உள்ளது. அதன் சின்னம் நந்தி. எனது வலப்புறம் அதாவது தெற்கில் சோழ நாடு உள்ளது. அதன் சின்னம் புலி. காளையும், புலியும் உரசுமிடம்தான் இந்த எல்லைப் பகுதியான பச்சைமலை. அதைத்தான் அந்தப் பட்டோலை உணர்த்துகிறது. பச்சை மாமலை என்று பச்சைமலையைத்தான் அந்த இளவரசன் குறிப்பிடு

கிறான். நான் காஞ்சியில் இருந்த போது பல்லவர்கள் காலத்தில் பச்சை சாற்றுதல் என்கிற வைபவம் அத்திமலையானுக்கு நடைபெற்றதாக அறிந்திருக்கிறேன். அந்தப் பட்டோலையின் கடைசி வரி அதனைத்தான் உணர்த்துகிறது போலும்.."

அத்திமலையான் ஏழுமலையானாக நின்றிருக்கிறான் என்கிற பதத்தைச் சொல்லிப் பார்த்தார்.

"ஏழுமலை வேங்கடவன் ஆலயம் இந்த மலைத் தொடரில் உள்ளது. பச்சைமலை, பவள மலை, குறிச்சி மலை, கணவாய் மலை, பழ மலை, பெருமாள் மலை மற்றும் இதோ நமது முன்பாகத் தோன்றும் பனை மலை என்று ஏழு மலைகள் இங்கே உள்ளன என்றான் அந்த மாடு மேய்ப்பவன். இந்த மலையின் பெயர் பானை மலை என்று இருந்து பிறகு பனை மலையாக மருவியிருக்க வேண்டும். எனவே இந்தப் பானை மலையினுள்தான் அத்திமலையான் இருக்கக்கூடும்.." இராமானுஜர் தனக்குள் கூறிக் கொண்டார். தனது கண்டுபிடிப்பு அவருக்கே பிரம்மிப்பை கொடுத்தது.

பரவசத்துடன் அந்தக் குன்றை நோக்கி கைகுவித்தார்.

இராமானுஜர், அடிவாரக் குகையைவிட்டு நீங்கி கள்ளாற்றில் இறங்கினார். குன்றின் ஓரமாகவே நீரில் நடந்து செல்ல, குன்றின் மறுமுனை வந்ததும் மீண்டும் கரையேறினார். பிறகு மீண்டும் வெள்ளாற்றில் இறங்கி, குன்றின் ஓரமாகவே நடந்து, மீண்டும் தங்கள் குகையின் புறம் கரை ஏறினார். இரண்டு முறை சுற்றி வந்தும் குன்றினுள் நுழைவதற்கு வழி தென்படவில்லை.

கவலையுடன் மீண்டும் பாறையில் அமர்ந்தார்.

திடீரென்று அவர் முன்பாக ஓர் உருவம் வந்து நின்றது. தேவராஜ நம்பிதான் பரபரப்புடன் நின்றிருந்தான்.

“உறங்கிக் கொண்டிருந்த என் மீது நாகம் ஏறிச் சென்றதால் உறக்கம் கலைந்து எழுந்தேன். அந்த நாகம் ஒரு துவாரத்தின் வழியாக உள்ளே சென்றது. நான் அந்தப் பாறையை நெம்பிப் பார்த்தேன். உள்ளே தவழ்ந்து செல்லுமளவுக்கு ஒரு வழி கிடைத்தது. குன்றின் உள்பகுதிக்குச் செல்லும் வழியோ என்னவோ. வாருங்களேன்.. சென்று பார்ப்போம்!”

கையில் சுளுந்து ஒன்றை ஏந்திக் கொண்டு அவன் அழைக்க இராமானுஜர் பிரம்மிப்புடன் எழுந்து அவனது பின்பாக நடந்தார்.

குகைக்குள் நுழைந்த தேவராஜ நம்பி மீண்டும் கடைசியில் இருந்த பாறையை மற்றவர்களின் உறக்கம் கலையாமல் தனது தடியால் நெம்ப, பாறையின் அடியில் இறுக்கமாகத் தங்கியிருந்த மணல் விட்டுக் கொடுக்க, அந்தப் பாறை நகர்ந்தது.. சிறு வழி ஒன்று தோன்ற, ஒருவர் தவழ்ந்தபடி அதன் உள்ளே செல்லலாம் என்பதை உணர்ந்தார்கள். தேவராஜன் சுளுந்தினை ஏந்திக் கொண்டு முன்னே ஊர்ந்து செல்ல, அவனை இராமானுஜர் தொடர்ந்தார்.

சிறிது தொலைவு தவழ்ந்து கொண்டே சென்ற இருவரும், ஒரு விஸ்தாரமான சமவெளிக்கு வந்தனர். குன்றத்தின் உள்ளே தாங்கள் வந்துவிட்டோம் என்பதை உணர்ந்த நம்பி சுளுந்தை உயர்த்திக் காட்டினான். குன்றத்தின் உச்சிக்கூரை எங்கோ இருந்தது. எங்கு நோக்கினும் பாறைதான். உச்சிக்கூரையிலிருந்து எங்கோ தண்ணீர் பீறிட்டுக் கொண்டு, கீழே குட்டையாகத் தேங்கிக் கொண்டிருக்க, அந்த நீர் ஒரு சிறு ஓட்டையின் வழியாக வெளியே பாயும் ஆற்று நீரோடு கலந்து கொண்டிருந்தது. மேலே எங்கேயாவது சுனை ஒன்று இருக்க வேண்டும் போலும்.

தன்னிடம் இருந்த சுளுந்தினை உயர்த்திப் பிடித்தான் நம்பி. குட்டையின் மறுபுறத்தில் அகலமானதொரு

பாறையின் மீது சயனக்கோலத்தில் கிடத்தப் பட்டிருந்தார், அத்திமலையான். குன்றின் கூரைப் பகுதியிலிருந்து பொழிந்த தண்ணீர் குட்டையில் விழ, அது அத்திமலையானின் சிலையின் மீது சாரலடித்து அதனால் அவரது பிரதிமை ஈரமாகக் காணப்பட்டது.

"அதோ அத்திமலைத்தேவன்!" - நம்பி அலறினான். அவனது குரல் 'ஹோ' என்று குன்றத்தின் சுவர்களில் மோதி எதிரொலித்தது.

"அத்திமலைத்தேவனே! இந்த வனாந்தரத்தில் யாரும் இல்லாமல் தனியாக இருக்கின்றீர்! உமக்கா இந்தக் கதி! பெருந்தேவி அங்கே உமக்காகக் காத்திருக்க, இங்கே இப்படி அனாதையாகச் சயனித்திருக்கின்றீரே..?"- ஹோவென்று இராமானுஜர் கதறினார்.

இவ்வளவு விரைவில் தனக்கு அத்திமலையானின் தரிசனம் கிட்டும் என்று அவரே எதிர்பார்க்கவில்லை. ததிபாண்டனின் தயிர் பானையில் இருக்கிறேன் என்று கூறியதன் பொருள் இப்போது விளங்குகிறது. பானை மலையில்தான் தான் இருக்கிறேன் என்று கூறியிருக்கிறார். தான் இருக்கும் இடத்தைக் காட்டி தனக்குத் தரிசனம் கொடுத்திருக்கிறார். கைகூப்பி நின்றார், இராமானுஜர். இருவரும் அந்தக் குட்டையில் இறங்கி மறுபுறம் சென்று அத்திமலையான் கிடத்தப்பட்டிருந்த பாறையில் ஏறினார்கள்.

மன அழுத்தத்திற்கு மனமாசுகெடிகையில் சிகிச்சை பெற்று வந்த ஆதித்த கரிகாலனை மருத்துவர் காயகல்ப சித்தர் பச்சைமலைக்கு அழைத்து வருவது வழக்கம். பனைமலை கீழ் உள்ள குகையில்தான் சித்தர் அவனுடன் தங்கியிருந்தார். மூலிகை படுக்கையில் அவனைக் கிடத்தி பிறகு ஆற்றில் குளிக்க வைப்பார். காலையில் வெள்ளாற்றிலும், மாலையில் கள்ளாற்றிலும் அவன் நீராடுவது வழக்கம். அப்போது ஒருமுறை அவன் வந்த போது பானை மலையின் உள்ளே இருந்த சமவெளிப்

பகுதியைத் தற்செயலாகக் கண்டிருக்கிறான். பட்டத்து இளவரசனாக, வடபுல சேனை மாதண்டநாயகனாக நியமிக்கப்பட்டுக் காஞ்சிக்கு வந்தவன், பிரவாள மாளிகையை இடித்த போது அதன் புகைபோக்கியில் அத்திமலைத்தேவனின் சிலை கிடைக்க, மலையமானிடம் யோசனை கேட்டான். அவனது வாழ்வில் உள்ள மரணகண்டத்தைப் போக்குவதற்கு அந்தச் சிலையை வைத்து அஸ்வமேத யாகம் செய்யலாம் என்று அவர் யோசனை கூற, அந்தச் சிலையை பானை மலையின் உள்ளே பதுக்கி இருந்தான். எனவேதான், பார்த்திப பல்லவன் மலையமானைச் சந்திக்க வந்த போது அவர் ததிபாண்டன் கதையை அவனுக்குக் கூறியிருக்கிறார்.

இராமானுஜர் பரவசத்துடன் அத்திமலையானின் சிலையைப் பார்த்துக் கொண்டே இருக்க, திடீரென்று தேவராஜ நம்பி, அந்தக் கேள்வியை எழுப்பினான்.

"சுவாமி! சிலையைப் பார்ப்பதற்கு ஒன்பது அடியைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறதே. அவர் ஏந்தியிருக்கும் சங்கும் சக்கரமும், அகலமாக இருக்க, இந்தச் சிலையை எப்படிக் குன்றின் உள்ளே கொண்டு வந்தனர். நாம் வந்த வழியில் நிச்சயம் இந்தச் சிலையைக் கொண்டு வந்திருக்க இயலாது. நாமே அந்தத் துவாரத்தின் வழியாகக் குன்றின் உள்ளே வருவதற்குப் படாதபாடுபட வேண்டியிருந்தது. ஒருவேளை, உள்ளே வருவதற்கு வேறு வழி இருக்கலாம், அல்லவா?"

இராமானுஜர் அண்ணாந்து குன்றின் உச்சியைப் பார்த்தார்.

"அதோ.. இந்தப் பானை மலையின் உச்சியைக் கவனி. அதன் வாய்ப் பகுதியைப் பாறையைக் கொண்டு மூடியிருக்கிறார்கள். அதன் கீழே புற்களும் முளைத் திருந்ததை நாம் வெளியில் நின்ற போது பார்த்தோம் அல்லவா. அந்தப் பாறையைத் தள்ளிவிட்டால், குன்றின் பெரிய வாய் திறக்கும். அதன் வழியே கயிற்றைக் கட்டி

பானையினுள் அத்திவரதனை இறக்கியிருக்கலாம்."- இராமானுஜர் கூறினார்.

"காலையில் மற்றவர்களை இங்கே அழைத்துவந்து அத்திமலை வரதனை காட்டுவோம்!" - இராமானுஜர் உற்சாகத்துடனே கூறினார்.

திடீரென்று மலையின் உட்புறம் முழுவதும் எதிரொலிப்பது போன்று ஒரு கிசுகிசுத்த குரல், இராமானுஜரின் செவியில் ஒலித்தது.

"கலாபம் முடியவில்லை. வார்த்தெடுத்தவன் வேர்விட்டவனைக் கூட்டிச் செல்வான். அதுவரை பொறுத்திரும்! வேறு யாருக்கும் நான் இருக்கும் இடம் தெரிய வேண்டாம்."

அன்றொரு நாள் திருக்கச்சி நம்பியிடம் கேட்ட கேள்விக்கு அவர் வரதனிடம் கேட்டுத் தெரிவித்த பதில் இராமானுஜருக்கு நினைவுக்கு வந்தது

'வார்த்தெடுத்தவன் வந்து வேர்விட்டவனை மீட்டுச் செல்வான்!' - இராமானுஜர் திகைத்தார். அதன் பொருள் என்ன?

தேவராஜ நம்பியை பார்த்தார்.

"நம்பி! ஓடிச்சென்று வெள்ளிப்பெட்டகத்தில் இருந்து ஒரு சுவடி, எடுத்துக்கொண்டு வா. எழுத்தாணியையும், பெட்டகத்தில் உள்ள எனது மைகுழைவையும் எடுத்து வா. அப்படியே வெளியில் இருக்கும் அத்தியிலை ஒன்றைப் பறித்து வா." - இராமானுஜர் கூற, நம்பி வந்த வழியே விரைந்தான்.

தேவராஜ நம்பி கொண்டு வந்த ஓலையில் எழுத்தாணியால் வடிக்கத் தொடங்கினார்.

'இந்த சிலை அத்திகிரி அருளாளனின் சிலை. காஞ்சி அத்திமலையானின் சந்நிதிக்கு உரியது' என்று எழுதி அத்திமலைத்தேவன் சிலையின் திருவடியில் வைத்து, அதனை ஒரு நாரால் பிணைத்தார்.

‘பச்சையோலை இடுகிறேன், அத்திவரதா! இராமானுஜன் கோரிக்கை. விரைவில் நீர் உமது சன்னிதிக்குத் திரும்பி வரவேண்டும்!’ என்று அத்திமலையில் எழுதிக் கண்களை மூடி அத்தியிலையில் தியானித்துக் குட்டை நீரில் விட்டார். குட்டை நீரில் மிதந்த இலை, நீரின் வழியாகச் சென்று ஆற்றை அடைந்தது.

மீண்டும் அத்திவரதனை நமஸ்கரித்த இராமானுஜர், குகைக்குத் திரும்பினார்.

மறுநாள் நீராட ஆற்றுக்குச் செல்லும் போது தனக்குக் காவலாக வந்த நம்பியிடம் இரகசியமாகக் கிசுகிசுத்தார்.

“நேற்றிரவு, எனக்கு ஏற்பட்ட பரவசத்தில், உனக்கு நன்றியைக்கூட நான் தெரிவிக்கவில்லை. அத்திமலைத் தேவனை எனக்குக் காட்டியதற்கு நன்றி!” - இராமானுஜர் கூற, தேவராஜ நம்பி திகைத்தான்.

“சுவாமி! நேற்றுதான் பல நாட்களுக்குப் பிறகு நான் நன்றாகத் தூங்கினேன். நீங்கள் கூறுவது எதுவும் எனக்குப் புரியவில்லை. நான் தங்களை வந்து அழைக்கவேயில்லை. நீங்கள் அத்திவரதனையே நினைத்துக் கொண்டிருந்த தால், உங்களுக்கு அவன் கனவில் காட்சி தந்திருக் கிறான்.” - தேவராஜ நம்பி கூற, இராமானுஜரின் முகம் வாடியது.

‘நான் அத்திமலை வரதனைக் கண்டது கனவா?’- சோகத்துடனும், ஏக்கத்துடனும் அந்தக் குன்றை நோக்கினார்.

‘என்னை இப்படி ஏமாற்றலாமா?’ என்று தன்னையே நொந்தபடி ஆற்றில் இறங்கி நீராடத் துவங்கினார்.

கிழக்காக நின்று நீரை அள்ளி கதிரவனுக்கு அர்ப்பணிக்க, மூன்றாவது முறை நீரை அள்ளிய போது கையில் கிட்டியது ஒரு அத்தி இலை.

வியப்புடன் அதைப் பார்க்க, அதில் அழியா மைக்கலவையைக் கொண்டு எழுதியிருந்த இவரது கையெழுத்து புலப்பட்டது.

பரபரப்புடன் அதனை வாசித்தார்.

'பச்சையோலை இடுகிறேன், அத்திவரதா! இராமானுஜன் கோரிக்கை! விரைவில் நீர் உமது சன்னிதிக்குத் திரும்பி வரவேண்டும்!'



இவர் அத்திவரதனின் முன்பாக இட்ட பச்சை யோலைதான் அது.

நேற்று வந்தது சுத்தசத்வ நம்பியின் பெயரன் தேவராஜன் அல்ல. சுத்தசத்வம் அத்திவரதன். தேவராஜன் என்பதும் அவன் பெயர்தானே.

## 44. தாண்டவமாடும் சோழ கிருமி

பிரம்மதேசத்தில் இராஜேந்திர சோழன் இறந்த பிறகு, அவனது மனைவி வீரமாதேவியும் அவனுடன் உடன்கட்டை ஏறினாள்.

"உனது மகன் வேங்கி இளவரசன் அனபாயன்தான் சோழ நாட்டின் அரியணையில் ஏறப்போகிறான் என்கிற கொங்காழ்வாரின் ஆரூடத்தை அம்மங்கைப் பிராட்டி யாரிடமும் சொல்லவில்லை.

கி.பி.1044-ல் தனது தந்தை இராஜேந்திர சோழனுக்குப் பிறகு அரியணையில் அமர்ந்த இராஜாதிராஜன், கி.பி.1054ஆம் ஆண்டு கிருஷ்ணா ஆற்றங்கரையில் இருந்த கொப்பம் என்கிற பகுதியில் சாளுக்கியர்களுடன் போரில் இறங்கினான். சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனுக்கும், இராஜாதிராஜனுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. போரில் இராஜாதிராஜன் கை சற்றே வலுவிழக்க, தம்பி இரண்டாம் இராஜேந்திரனை உதவிக்கு அழைத்தான். படைகளுடன் புறப்பட்ட இரண்டாம் இராஜேந்திரன் அண்ணனின் உதவிக்குப் போகாமல் போர்க்களத்தைத் தவிர்த்தான்.

இராஜாதிராஜன் போர்புரிந்த யானையையும், இராஜாதிராஜனையும் சேர்த்து ஆகவமல்லன் கொன்றான். பராந்தகன் மகன் இராஜாதித்யன் அரிஞ்சயனை உதவிக்கு அழைக்க, அவன் பெண் ணொருத்தியுடன் சல்லாபித்துக் கொண்டு போர்க் களத்திற்குக் உரிய காலத்தில் வராததால் இராஜாதித்யன் உயிர் பிரிந்தது. இராஜாதித்யன் போலவே இராஜாதி ராஜனின் உயிரும் யானையின் மீதுதான் பிரிந்தது.

கொங்காழ்வார் கூறியது போலவே, பராந்தகனைப் போன்றுதான் இராஜேந்திரனின் தலைவிதியும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது போலும்.

இராஜாதிராஜனுக்குப் பிறகு அரியணை ஏறினான் இரண்டாம் இராஜேந்திரன். இவனுக்கு ஆறு மகன்கள் மற்றும் ஒரே ஒரு மகள். மகன்கள் இராஜேந்திர சோழன், முகைய விழலங்க சோழன், முடிகொண்ட சோழன், சோழ கேரளன், கடாரம்கொண்ட சோழன், வீரராஜேந்திரன் என்று அறுவர் மகன்களாகத் திகழ்ந்தும் அரியணைக்காக ஒருவரையொருவர் அழித்துக் கொண்டனர் போலும். மகள் மதுராந்தகியை அனபாய இராஜேந்திரனுக்கு மணமுடித்தான், இரண்டாம் இராஜேந்திரன்.

அண்ணனுக்கு உதவாத இர்ண்டாம் இராஜேந்திரன் சாளுக்கியர்களுடன் மீண்டும் மோதி ஆகவமல்லனை தோற்கடித்தான். எட்டு வருடங்களே இவன் ஆண்டான்.

இரண்டாம் இராஜேந்திர சோழன் இறந்த பிறகு, அவனது தம்பி இராஜமகேந்திரனுக்கு சோழ அரியணை அளிக்கப்பட அவன் அதனை நிராகரித்து திருவரங்கப் பெருமாளுக்குத் தொண்டாற்றினான். இராஜமகேந்திரன் வீதி என்று இன்றும் அரங்கத்தில் அவனது பெயரில் வீதி உள்ளது. கண்டராதித்தன் போலவே இவன் ஆன்மிகத்தில் இறங்கினான்.

இராஜமகேந்திரன் அரியணையை ஏற்க மறுக்க, இராஜேந்திர சோழனின் கடைசி மகன் வீரராஜேந்திரன் அரியணை ஏறினான். ஏழு வருடங்கள் மட்டுமே ஆட்சி செய்தபின் இவனது மகன் அதிராஜேந்திரன் பதவி ஏற்றான்.

பதவி ஏற்ற சில தினங்களிலேயே அதிராஜேந்திரன் கொல்லப்பட்டான். இவன் மேலை சாளுக்கிய வேந்தனாகிய ஆறாம் விக்கிரமாதித்தனின் தங்கையை

மணந்தான். விக்கிரமாதித்தனின் வாழ்க்கையை நூலாக எழுதிய வடமொழிப் புலவர் பில்ஹணர் சோணாட்டில் நடந்த உள்நாட்டுச் சதியில் அதிராஜேந்திரன் கொல்லப்பட்டான் என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

கொங்காழ்வார் கூறியது போன்று சோழ கிருமி வளர்ந்து கொண்டே போக, அதன் கோரத் தாண்டவத்தில் வரிசையாகச் சோழ மன்னர்கள் காணாமல் போனார்கள்.

அதிராஜேந்திரனின் திடீர் கொலைக்குப் பிறகு சில தினங்களில் வேங்கி நாட்டு இளவரசன் அனபாயன் விஷ்ணுவர்தன் இராஜேந்திரன் முதலாம் குலோத்துங்க சோழனாக அரியணையில் அமர்ந்தான். அவன் சோழ மன்னனாகப் பதவியேற்ற சில தினங்களில் வேங்கி நாட்டை ஆண்ட அவனது தந்தை ராஜநரேந்திரன் இறக்க, இரண்டு அரியணைகளையும் ஒரே சமயத்தில் ஏற்க முடியாது என்கிற காரணத்தினால் தனது சிற்றப்பன் விஜயாதித்தனை தனது சார்பாக வேங்கி அரியணையில் ஏற்றினான்.

இவனுக்கு ஒரு மகன் விக்கிரம சோழன். இவன் காலத்தில் சைவ - வைணவ சச்சரவுகள் தோன்ற, கி.பி.1133-ல் அரியணை ஏறிய இரண்டாம் குலோத்துங்கன் இராமானுஜருடன் மோதினான்.

கொங்காழ்வார் அம்மங்கையிடம் ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தார். துறவிகளுடன் மோதும் போது சோழம் முற்றிலும் அழியும் என்று. அதனை அம்மங்கை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை போலும். இரண்டாம் குலோத்துங்கன் கிருமி கண்ட சோழனாக இறக்க, அதற்குப் பின் சோழ அரசர்கள் வீர்யம் குறைந்தவர்களாக ஆண்டனர்.

கி.பி.1279-ல் கடைசி சோழனான மூன்றாம் இராஜேந்திர சோழன் இறக்க, வாரிசு இல்லாத அவனுடன் சோழம் முற்றுப்பெற்றது.

சோழ கிருமி முழுவதுமாகச் சோழத்தை விழுங்கியது.

பல்லவம், சோழம் என்று இரு பெரும் பரம்பரைகள் அழிந்து போக, காஞ்சியில் தடி எடுத்த அனைவருமே தண்டல்காரர்களாகத் திகழ்ந்தனர்.

# 45. தள்ளாடி திணறும் காஞ்சி

**கி.**பி.1218-

மூன்றாம் குலோத்துங்க சோழன் மரணப்படுக்கையில் கிடந்தான்.

இரண்டு வருடங்களுக்கு முன்பாகத்தான் பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டிருந்த மூன்றாம் இராஜராஜ சோழன் தனது அந்தப்புரத்தில் ராஜ நர்த்தகியின் நடனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“தந்தை இறந்ததும் வந்து கூறுங்கள். முடிசூட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்” என்று தனது அந்தப்புரத்திலேயே கிடந்தான்.

“மூன்றாம் குலோத்துங்கன் இறந்து கொண்டிருக்கிறான். அவன் மகன் ஒரு உதவாக்கரை. நமது நீண்ட நாள் கணக்கு வழக்குகளைத் தீர்த்துக் கொள்ள இதுவே தக்க தருணம்!” - பாண்டிய தளபதி கூற, மாறன் சுந்தரபாண்டியன் படைகளைத் திரட்டத்துவங்கினான்.

மூன்றாம் குலோத்துங்கன் இறந்த உடனே மூன்றாம் இராஜராஜ சோழன் அரியணை ஏறினான். ஆனால் மாறன் சுந்தரபாண்டியன் பெரும்படைகளுடன் சோழ நாட்டை நோக்கி வருவதாகத் தகவல் வந்தது. மாறன் சுந்தரபாண்டியன் அறிவாற்றல்களில் சிறந்த பெரு வீரன். தனது முன்னோர்களாகிய பாண்டிய மன்னர்கள் சோழர்களுக்கு அடிமை செய்து திறை செலுத்தும் குறுநில மன்னர்களாகத் திகழ்ந்ததைப் பெருத்த அவமானமாகக் கருதினான். அந்தக் களங்கத்தைத் துடைத்தே தீரவேண்டும் என்கிற வெறியில் இருந்தான். குறிப்பாக,

மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்து புரிந்த தாக்குதல்களை அவன் மறக்கவில்லை. அதற்குப் பதிலடியாகச் சோழ நாட்டில் அதே வன்முறைகளை நிகழ்த்த வேண்டும் என்கிற எண்ணத்தைத் தனது படை வீரர்களிடையே தோற்றுவித்தான்.

மூன்றாம் குலோத்துங்கன் இறந்ததும், சோழத்தை கைப்பற்ற அதுவே தக்க தருணம் என்று படைகளுடன் புறப்பட்டு வந்து கொண்டிருந்தான்.

கி.பி.1219-ன் துவக்கத்தில் மார்கழி மாதத்தில் சோழ நாட்டைக் கைப்பற்றினான். சோழர்களுக்கு அந்த மார்கழி மாதம் பீடை மாதமாகத் திகழ, பாண்டியர் களுக்குப் பீடுடைய மாதமாக மாறியது.

பாண்டியர்கள் வெறியுணர்வுடன் சோழர்களைப் பழி தீர்த்தனர்.

சோழத்திற்கு தகுந்த தலைமையைக் கொடுக்க இயலாத மூன்றாம் இராஜராஜ சோழன் வடக்கே தப்பி ஓடுகையில், காடவ அரசன் கோப்பெருஞ்சிங்கனிடம் சிக்கினான். அவனை சேந்தமங்கலம் சிறையில் அடைத் தான் கோப்பெருஞ்சிங்கன். மாறன் சுந்தரபாண்டியனின் ஆணையின் பெயரில் பழைய தலைநகரங்களான பழையாறை, தஞ்சை மற்றும் உறையூர் ஆகியவை தீக்கு இரையாக்கப்பட்டன. பல மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், மணிமண்டபங்களும் இடிக்கப் பெற்றன. நீர் நிலைகளில் நஞ்சு கலக்கப்பட்டது. கரிகால் பெருவளத்தான் தன்னைப் பாராட்டி பட்டினப்பாலை பாடிய ருத்திராட்சர் என்கிற உருத்திரங் கண்ண னாருக்குப் பரிசாக வழங்கியிருந்த பதினாறுகால் மண்டபத்தைத் தவிர மிகுதி எல்லாக் கட்டடங்களும் இடிக்கப்பட்டதாகத் திருவெள்ளறை ஆலயத்தில் பாடல் வடிவத்தில் மாறன் சுந்தரபாண்டியனைப் போற்றும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. இதன் மூலம் மாறன் சுந்தர

பாண்டியன் பெரும் வன்முறையை சோழ நாட்டில் கட்டவிழ்த்தான் என்பது நிரூபணம் ஆகிறது. விஜயாலய சோழன் காலத்தில் இருந்து துவங்கி, வெற்றிகளையே கண்டு பழக்கப்பட்டிருந்த சோழர்கள், முதன்முறையாகச் சொல்லொண்ணா துன்பங்களுக்கு உள்ளானார்கள். பெரும்பாணப்பாடி பெண்களைப் பராந்தக சோழனின் வீரர்கள் எப்படி நாசம் செய்தனரோ, அப்படி பாண்டியர்கள் வசம் சிக்கி, சோழ மகளிர் அழிந்தனர்.

இதை மனதில் கொண்டுதான் வாணர்கள் தக்க சமயத்தில் சோழர்களுக்கு எதிராகப் பாண்டியர்களுடன் கைகோர்த்தார்கள். சோழ நாட்டு மாப்பிள்ளை என்று கதாநாயகனாக வருணிக்கப்பட்ட வந்தியத்தேவனின் வாரிசுகள் பாண்டியர்களுடன் கைகோர்த்தனர்.

இதற்கு ஆதாரமாகத் திகழ்கிறது திருவெள்ளறை கல்வெட்டு. முதல் இராஜராஜனை மாறன் சுந்தர பாண்டியன் வென்ற போது அவன் கைப்பற்றிய சோழ நாட்டின் ஒரு பகுதியைத் தனக்கு உதவி புரிந்த மகதையர்கோனாகிய வாணாதிராயனுக்கு வழங்கியதை இந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. சோழ நாட்டின் தென் பகுதியில் புதுக்கோட்டை பக்கங்களில் காணப்படும் வாணர்களின் கல்வெட்டுகள் இதனை உறுதிப்படுத்து கின்றன.

பராந்தகன் வாணர்களை அழித்து அவர்களை கங்க மன்னன் பிருத்விபதிக்கு அடிமைகளாக விற்க, குந்தள தேசத்தில் பதுங்கி இருந்த விஜயாதித்த வாணனும் அவன் வழித்தோன்றல் பராக்கிரம வாணனும் சோழர்களை அழிப்போம் என்று சபதம் செய்தனர். அதனைச் செயல்படுத்த வந்த வந்தியத்தேவனை சோழ நாட்டின் கதாநாயகனாகச் சித்தரித்து அவனே ஆதித்த கரிகாலனுக்கு பாதுகாப்பு கொடுப்பான் என்று எப்படிச் சோழர்கள் எதிர்பார்த்தனர்?

வாணர்களும், பாண்டியர்களும் இணைந்துதான் சோழர்களைப் பழி தீர்க்கின்றனர்.

பின்னர் ஹொய்சள மன்னன் வீரநரசிம்மன் காடவ அரசன் கைது செய்து சேந்தமங்கலம் சிறையில் அடைத்திருக்கும் மூன்றாம் இராஜராஜனை மீட்டு அவனுக்கு பாதி ராஜ்யத்தைத் தரும்படி மாறன் சுந்தரபாண்டியனிடம் கேட்க, வாணர்களுக்குக் கொடுத்தது போக மிகுதி உள்ள சோணாட்டுப் பகுதியை மூன்றாம் இராஜராஜனுக்கே அளித்தான், மாறன் சுந்தரபாண்டியன். இந்தத் தகவல் ஹொய்சள நாட்டு கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டிருக்கிறது. சோழ ராஜ்ய ப்ரதிஷ்டாச்சரய்யன், சோழ ரட்சகன் ஆகிய தலைப்புகள் வீரநரசிம்மனுக்கு அளிக்கப்பட்டதாக ஹொய்சள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சோழ இளவரசியை வீரராமநாதன் என்கிற ஹொய்சள இளவரசன் மணந்து கொண்டிருந்ததால் அவர்களிடையே இந்த நட்பு காணப்பட்டது (ரங்கராட்டினம் புதினம்).

பாண்டியர்கள் சோழ நாட்டைக் கைப்பற்றிய போது காஞ்சி ஹொய்சளர்களின் வசம் இருந்தது. கி.பி.1230 வரை வீரசோமேசன் காஞ்சியிலும், சமயபுரம் என்னும் கண்ணனூரிலும் மாறி மாறித் தங்கி ஹொய்சளத்தை ஆண்டான்.

கி.பி.1258ஆம் ஆண்டு சோழ நாட்டைத் தங்கள் முழுக் கட்டுப்பாட்டினில் கொண்டு வந்திருந்த பாண்டியர்கள் காஞ்சியைக் குறிவைத்தனர். அவர்களது இலக்கு ஆதித்த கரிகாலன் எழுப்பியிருந்த பொன்னாழி மாளிகை. பொன்னாழியை முற்றுகையிட்ட அவர்கள், அதன் ஸ்வர்ணத்தைச் சுரண்டி எடுத்து மதுரைக்கு எடுத்துச் சென்றனர். கி.பி.1311 வரை காஞ்சி பாண்டியர்களின் வசம் இருந்தது.

இந்த சமயத்தில்தான் கலாப காலம் தொடங்கியது. தட்சிண பிரதேசத்து ஆலயங்களின் செல்வங்களைப்

பற்றிச் கேள்விப்பட்ட மொகலாயர்கள், கோல்கொண்டா நவாப்கள், பாமினி சுல்தான்கள் என்று இஸ்லாமியப் படைகளின் கவனம் தெற்கே திரும்பியது. பெரும் படைகளுடன் மாலிக்காபூர் தெற்கே வருகிறான் என்றதும் காஞ்சி நகரம் குழப்பத்தில் திண்டாடியது. காஞ்சிதானே தட்சிணத்தின் நுழைவாயில். குழப்பத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்ட சம்புவரையர் காஞ்சியைத் தங்கள் வசம் கொண்டு வந்தனர்.

அவர்களிடமிருந்து வேணாடு (தற்போது கொல்லம்) ரவிவர்மன் குலசேகரன் காஞ்சியைக் கைப்பற்ற, அவனிடம் இருந்து காகதீய மன்னன் பிரதாபருத்ரன் காஞ்சியை வசப்படுத்தினான். இங்ஙனம், காஞ்சி நகரம் பல ஆட்சியாளர்களிடையே கைமாறிக் கொண்டே இருக்க, அதன் ஆலயங்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாயின. தொடர்ந்து காஞ்சியைக் கைப்பற்றிய ராஜ்ஜியங்கள் கோயில் செல்வங்களைக் கொள்ளையடிக்க, ஆலயங்களை நடத்துவதே பெரும்பாடாக இருந்தது.

கி.பி.1361-ல் மதுரை சுல்தானியர்களை விரட்டிய விஜயநகர மன்னரின் தளபதி குமார கம்பண்ணா செஞ்சி மலையின் சந்திரகிரியில் மறைந்திருந்த திருவரங்கம் நம்பெருமாளை மீண்டும் திருவரங்கம் கொண்டு சென்றார். அதேபோன்று அவர் காஞ்சியின் அத்தி வரதரையும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று காஞ்சி கோயிலின் அதிகாரிகள் அவரிடம் கோரிக்கை விடுக்க, தொடர் கலாபங்களால் அத்திவரதரைப் பற்றியும், உக்ரோதயத்தைப் பற்றியும் மறந்திருந்தவர்கள், மீண்டும் அதனைத் தேடத் தொடங்கினர். தலைமுறைகள் மாறிப்போனதால், அத்திவரதரைப் பற்றி அநேகம்பேர் அறிந்திருக்கவில்லை.

விஜயநகர ஆட்சியாளர்கள் ஆலயச் செயல்பாட்டினை சீர்படுத்தினார்கள். கி.பி.1361முதல் கி.பி.1645 வரை காஞ்சி விஜயநகர ஆட்சியாளர்கள் வசம் இருந்தது. வரதராஜர்

ஆலயத்தில் இன்றும் குமார கம்பண்ணாவைப் பற்றிய கல்வெட்டுகள் உள்ளன. கைலாசநாதர் ஆலயத்திலும் *விஜயநகர ஆட்சியாளர்கள் செய்த திருப்பணிகளைப் பற்றி கல்வெட்டுகள் உள்ளன. சுல்தான் படைகளால் ஆலயத்தில் நின்று போயிருந்த திருவிழாக்களை குமார கம்பண்ணா மீண்டும் துவக்கி வைத்ததை வரதராஜ பெருமாள் மற்றும் கைலாசநாதர் கோயில்களின் கல்வெட்டுகளும் கூறுகின்றன.

---

* Inscriptions of the Vijayanagar kings Harihara II, Deva Raya II, Krishna Deva Raya, Achyuta Deva Raya, Sriranga I, and Venkata II are பௌந்து in the city. [13] Harihara II endowed grants in favour of the Varadaraja Perumal Temple. [13]In the 15th century, Kanchipuram was invaded by the Velama Nayaks in 1437, the Gajapati kingdom in 1463-1465 and 1474-75 and the Bahmani Sultanate in about 1480. [13] A 1467 inscription of Virupaksha Raya II mentions a cantonment in the vicinity of Kanchipuram. [13] In 1486, Saluva Narasimha Deva Raya, the governor of the Kanchipuram region, overthrew the Sangama Dynasty of Vijayanagar and founded the Saluva Dynasty Like most of his predecessors, Narasimha donated generously to the Varadaraja Perumal Temple. Kanchipuram was visited twice by the Vijayanagar king Krishna Deva Raya, considered to be the greatest of the Vijayanagar rulers, and 16 inscriptions of his time are found in the Varadaraja Perumal Temple. The inscriptions in four languages - Tamil, Telugu, Kannada, and Sanskrit - record the genealogy of the Tuluva kings and their contributions, along with those of their nobles, towards the upkeep of the shrine. His successor, Achyuta Deva Raya, reportedly had himself weighed against pearls in Kanchipuram and distributed the pearls amongst the poor. Throughout the second half of the 16th and first half of the 17th centuries, the Aravidu Dynasty tried to maintain a semblance of authority in the southern parts after losing their northern territories in the Battle of Talikota. Venkata II (1586-1614) tried to revive the Vijayanagar Empire, but the kingdom

குழப்பங்களும், கலவரங்களும் அதிகரித்துக் கொண்டே போக, அத்திமலைத்தேவனை காஞ்சி முற்றிலும் மறந்தே போனது.

அப்போது கி.பி.1688-ன் துவக்கத்தில் காஞ்சிக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டது. கோல்கொண்டா மன்னன் ஜாம்ஷெத்தின் தளபதி மிர்ஜூம்ஷா பெரும்படை களுடன் காஞ்சியை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனது குறி தேவப்பெருமாளின் ஆபரணங்கள். குறிப்பாக உக்ரோதயம் என்கிற ஸ்ரீதளமணி.

relapsed into confusion after his death and rapidly fell apart after the Vijayanagar king Sriranga III's defeat by the Golconda and Bijapur sultanates in 1646. [13]After the fall of the Vijayanagar Empire, Kanchipuram endured over two decades of political turmoil]

# உ. கோல்கொண்டா காஞ்சி

பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்தில் குதுப் உல் முல்க் என்கிற இளைஞன் பாரசீகத்திலிருந்து (இன்றைய ஈரான்) அல்லாகுலி என்கிற சிற்றப்பனுடனும் மற்ற உறவினர்களுடன் தில்லிக்கு வந்தான்.

தெற்கே வந்த முல்க் அங்கே பாமினி சுல்தான் முகம்மது ஷாவுக்கு போர்ப்படை தளபதியாகத் திகழ்ந்தான். பாமினி ஆட்சி வீழ்ந்ததும் குதுப்-உல்-முல்க் கோல்கொண்டாவை கைப்பற்றினான். தனது பெயரை குதுப்ஷா என்று மாற்றிக் கொண்டு குதுப்ஷாஹி பரம்பரையைத் தோற்றுவித்தான்.

கி.பி.1543-

தனது கொலுமண்டபத்திற்குத் தனது மகன் ஜாம்ஷெத்துடன் சென்று கொண்டிருந்த சுல்தான் குதுப்ஷாவை அவனது மகன் ஜாம்ஷெத் திடீரென்று தனது வாளினால் வெட்டிக் கொன்றுவிட்டு தன்னையே சுல்தானாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான்.

தனது தந்தையைக் கொன்று அரியணையைக் கைப்பற்றிய ஜாம்ஷெத் அதிக நாள் ஆளவில்லை. ஐந்தே வருடங்களில் புற்றுநோய் வந்து அவன் மரணமடைய, அவனது மகன் சுல்தானாகப் பதவியேற்றான். பதவியேற்ற அவன் என்ன ஆனான் என்று தெரியாத நிலையில் காணாமல் போனான். அதன்பின் சுல்தான் இல்லாத கோல்கொண்டாவிற்கு மூத்த அதிகாரிகள் கூடி ஒரு சுல்தானை தேர்ந்தெடுத்தனர். அவன் பெயர் இப்ராஹிம் குல்.

இப்ராஹிம் குல் பொக்கிஷங்களின் மீது ஆசை கொண்டவன். ஆலயங்களில் உள்ள ஆபரணங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டே இருப்பான்.

தனது ஆலோசகர்களாக இரு இந்துக்களை நியமித்தான், இப்ராஹிம் குல். அவர்களின் பெயர் மாதண்ணா மற்றும் அக்கண்ணா. இவர்களின் பணியே ஆலயங்களில் உள்ள செல்வங்களைப் பற்றி இப்ராஹிமுக்கு எடுத்துச் சொல்வதுதான். அப்படி ஒரு நாள் இரவு, சுல்தான் இப்ராஹிமுடன் பேசும் போது தான் அத்திமலைத்தேவனின் ஆபரணமான ஸ்ரீதள மணியைப் பற்றிக் கூற, சுல்தானின் கண்கள் பேராசையினால் விரிந்தன.

## 46. உக்ரோதயம் பறிபோனது

கி.பி.1648-

"'யட்ச நேத்திர கண்கள்' என்கிற இந்தப் பூமியில் கிடைக்காத கற்களால் செய்யப்பட்டது அந்த ஸ்ரீதளமணி. மிகவும் விலைமதிப்பில்லாதது. எங்கள் கடவுளான அத்திமலைத்தேவனுக்கு குபேரன் என்கிற செல்வத்துக்கு அதிபதியான தேவன் அணிவித்தான். அந்த ஆபரணத்திற்காக ஒரு போர் நடைபெற்றிருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். பல ராஜ்யங்களைச் சுற்றி கடைசியில் மீண்டும் ஆலயத்திற்கு வந்து சேர்ந்துவிட்டது என்று அண்மையில்தான் கண்டுபிடித் திருக்கிறார்கள்." - மாதண்ணா கூற, இப்ராஹிம் குல் வியப்பின் உச்சத்திற்கே போனான்.

"நீ அந்த ஆபரணத்தைப் பார்த்திருக்கிறாயா?"- சுல்தான் கேட்க, தக்கண்ணா தலையசைத்தான்.

"எனது மனைவி காஞ்சியைச் சேர்ந்தவள்தான். சென்றமுறை பார்த்த போது, பெருந்தேவி அம்மனின் கழுத்தில் சூட்டியிருந்தார்கள். நீலக்கல் ஹாரம். அந்தக் கல் மட்டுமே கருநீலத்தில் ஒரு திலகத்தின் வடிவில் இருக்கும். மிக அழகாக இருக்கும். பார்க்கும் போதே கண்ணைப் பறிக்கும்." - தக்கண்ணா கூறினான்.

சுல்தானின் இதயத்தை உற்சாகம் கவ்வியது. அவனது பொழுது போக்கே விலைமதிப்பற்ற வைரங்களையும், வைடூரியங்களையும், பொக்கிஷங்களையும் வசப் படுத்துவதுதான். ஸ்ரீதளமணி என்கிற உக்ரோதயத்தைப் பற்றித் தெரிந்து கொண்டுவிட்ட பிறகு அதைக் கைப்பற்றாமல் இருக்க முடியுமா என்ன?

"மிர்ஜுூம்ஷாவை அழைத்து வாருங்கள்!" - தனது ஏவலாளிடம் கூற, கோல்கொண்டா தளபதி மிர்ஜுூம்ஷா சுல்தானின் முன்பாக நின்றான்.

"படைகளுடன் காஞ்சிக்குப் புறப்படு! உனது இலக்கு ஆலய ஆபரணங்கள். குறிப்பாக வரதராஜ ஆலயத்தில் உள்ள ஸ்ரீதளமணி. அதன் இன்னொரு பெயர் உக்ரோதயம். மிகவும் விலைமதிப்பில்லாத நீலக்கல் ஹாரம். அதனை எப்படியாவது கைப்பற்றி வா!"- சுல்தான் இப்ராஹிம் குல் கட்டளையிட, பணிவுடன் விடைபெற்றான், மிர்ஜுூம்ஷா.

வலுவிழந்திருந்த விஜயநகர வீரர்களை எளிதாக வென்று முதலில் பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டை கைப்பற்றியவன், அங்கிருந்து காஞ்சிக்குப் படையெடுத்தான்.

வரதராஜர் ஆலயம் அன்று கலகலப்புடன் காணப்பட்டது. கார்த்திகை மாதம் என்பதால் பெருந்தேவியைத் தரிசிக்கத் திரளாகப் பெண்கள் வந்திருந்தனர்.

திடீரென்று ஆலய வாசலில் பரபரப்பு.

"கோல்கொண்டா படைகள் ஆலயத்தை நோக்கி வருகின்றன." - யாரோ அலறினார்கள்.

ஆலயத்தின் கிழக்கு வாயில் கதவுகள் மூடப்பட்டன. பின்னர் மேற்கு வாயில் கதவுகளும் அவசரமாக மூடப்பட்டன. பெண்கள் அனைவரும் திட்டிவாசல் வழியாக வெளியேற்றப்பட்டனர். பட்டர்கள் எல்லோரும் அவசரமாக ஆராதனை விக்கிரகங்களைப் பத்திரப்படுத்தத் தொடங்கினர்.

நேராக ஆலயத்தின் கிழக்கு வாயில் முன்பாகத் தனது புரவியில் வந்த மிர்ஜுூம்ஷா ஆலயக் கதவுகளைத் தகர்க்கத் துவங்க, கதவுகள் பெயர்ந்து விழுந்தன. அவனது படைகள் ஆலயத்தினுள் நுழைந்தன. கிழக்கு வாயில்

மகாமண்டபத்தை இடித்துத் தரைமட்டமாக்கிய மிர்ஜூம்ஷா ஆலய அதிகாரிகளை வரச்சொன்னான்.

ஆலய அதிகாரிகளும், முக்கிய பட்டர்களும் மிர்ஜூம்ஷாவின் முன்பாக அச்சத்துடன் நின்றனர்.

அவர்களை அலட்சியமாக நோக்கினான், மிர்ஜூம்ஷா.

"எனது நோக்கம் இரத்தக்களரி அல்ல. ஆலயத்திற்கோ உங்கள் ஆராதனை தெய்வங்களுக்கோ என்னால் பிரச்னை ஏற்படாது. ஆனால் உங்கள் ஆலயத்தில் உள்ள ஆபரணங்களை ஒன்றுவிடாமல் திரட்டி என்னிடம் ஒப்படைத்துவிட வேண்டும். மறுத்தீர்களானால் உங்களை வெட்டிக் கொல்வோம். எனவே, உங்களது உயிரைப் பொக்கிஷமாகக் கருதப் போகிறீர்களா.. அல்லது ஆலய ஆபரணங்களையா?" - மிர்ஜூம்ஷா கேட்டான்.

'அத்திமலை தெய்வமே? ஏன் எங்களுக்கு இத்தொடர் சோதனை?' - மனதினுள் அழுது கொண்டிருந்த ஆலய அதிகாரி, ஜெயதீர்த்தர் தனது கஜானா அதிகாரியைப் பார்த்து தலையசைத்தார்.

தொடர்ந்து கஜானாவில் பாதுகாக்கப்பட்டிருந்த அத்தனை ஆபரணங்களும் மிர்ஜூம்ஷாவின் முன்பாக வைக்கப்பட்டன. அனைத்தையும் வைத்துவிட்டு, கையைக் கட்டி நின்றார் கஜானா அதிகாரி.

"அனைத்து ஆபரணங்களும் இங்கே உள்ளனவா?"- மிர்ஜூம்ஷா கேட்டான்.

"அனைத்தும் உள்ளன!" - ஜெயதீர்த்தர் கூறினார்.

"இவற்றில் ஸ்ரீதளமணி என்கிற நீலக்கல் ஹாரத்தை எனக்கு எடுத்துக் காட்டுங்கள்?" - மிர்ஜூம்ஷா கேட்டான்.

*பட்டர் ஒருவர் முன்வந்து உக்ரோதயத்தை எடுத்து மிர்ஜூம்ஷாவிடம் நீட்ட அதை வாங்கிப் பார்த்த மிர்ஜூம்ஷாவின் கண்கள் வியப்பில் விரிந்தன.*

*"உங்கள் உயிரைவிட இது பெருத்த பொக்கிஷமாக இருக்கிறதே. நானாக இருந்தால், எனது உயிரைத்தான் தருவேன். இந்தப் பொக்கிஷத்தைத் தரமாட்டேன்!" என்றவன், அந்த் ஸ்ரீதளமணியை எடுத்து தனது பையில் பத்திரப்படுத்திக் கொண்டான்.*

*"பாஸ்லுல்லாஹ்!" - தனது துணைத்தளபதியை அழைத்தான்.*

*"காஞ்சியில் இனி கோல்கொண்டாவின் பிரதிநிதியாக நீ ஆட்சி செய்வாய். நமது படைகளில் ஒரு பகுதி இங்கே இருக்கும்" என்று கூறிவிட்டு, தான் கொள்ளையடித்த ஆபரணங்களோடு மீண்டும் கோல்கொண்டாவுக்குத் திரும்பினான், மிர்ஜூம்ஷா.*

## 47. அத்திக்கில் அத்தி, இத்திக்கில் இத்தாலி!

எலிசபெத் பார்நஸே நிலைக்கண்ணாடியில் தன்னையே பார்த்துக் கொண்டாள். இந்த அழகுக்கு ஏற்றவன் தானா, தனக்கு மணம் பேசப்பட்டிருக்கும் ஸ்பெயின் மன்னர் ஐந்தாம் பிலிப்.

"மாட்ரிட் நகருக்கு வந்து எங்கள் மன்னரை மணந்து கொள்ளுங்கள்" - ஸ்பெயின் நாட்டின் இத்தாலியத் தூதுவர் கார்டினல் அல்பிரியோனி வேண்டுகோள் விடுத்தார்.

"எனது பேரழகைக் கவனித்தீர்கள் அல்லவா! நான் மாட்ரிட் நகரம் வந்து உங்கள் மன்னரை மணந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்குத் தக்கவாறு என்னை அலங்கரிக்க ஆபரணங்கள் வேண்டும். உங்கள் ஸ்பெயின் நாட்டு அரசிகள் யாருமே இதுவரை அணியாத ஆபரணங்களை எனக்கு அணிவித்தால்தான் நான் ஸ்பெயின் தலைநகரம் மாட்ரிடுக்கு வந்து உங்கள் பிலிப்பை மணந்து கொள்வேன்." - பிடிவாதத்துடன் கூறினாள் எலிசபெத் பார்நஸே.

இத்தாலி இளவரசி பார்நஸேயின் நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டான், பிலிப். ஆனால் திருமணத்தை செய்து கொள்வோம். நான் உலகிலேயே விலைமதிப்பில்லாத ஆபரணங்களை உனக்குச் சூடிய பிறகு, நீ மாட்ரிட் நகர் வந்தால் போதும்" என்றான் பிலிப். எலிசபெத்தின் பேரழகை வேறு எந்த நாட்டு மன்னராவது அள்ளிக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது என்கிற கவலையில் இந்த யோசனையைச் செய்தான், பிலிப்.

செப்டம்பர் 16, 1714 பிலிப்புக்கும், எலிசபெத் பார்நஸேவுக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு மணமகன் பிலிப் வரவில்லை. அவரது தூதுவர் ஒருவர் மாப்பிள்ளை ஸ்தானத்தில் நின்றார்.

பார்மா என்கிற இத்தாலிய நகரத்தில் திருமணம் நடந்தது. பார்மாவின் இத்தாலியத் தூதர், கார்டினல் அல்பரியோனி, இளவரசி அரசின்ஸ், பார்மா மேயர் அல்-பாலசியோ ஆகியோர் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது.

எலிசபெத் பார்நஸே தனது மனைவியாகிவிட்டாள் என்பது தெரிந்ததும் அவளுக்காகப் பல ஆபரணங்களை வாங்கி அனுப்பினான். எந்த ஆபரணமும் அவளைக் கவரவில்லை. பிறகு இந்தியாவில் கோல்கொண்டா ராஜ்யத்தின் வைரங்களைப் பற்றி அறிந்து, அங்கே அபூர்வ வைரக்கற்கள் வாங்குவதற்குத் தூதுக்குழுவை அனுப்பினான். தனக்கு அறிமுகமாகி இருந்த கிழக்கிந்திய கம்பெனி நண்பர்கள் மூலம், ஏலத்திற்கு வந்த கோல்கொண்டா நகைகளைத் தனது மனைவி எலிசபெத் பார்நஸேவுக்காக வாங்கினான். அதனைத் தவிர பல விலைமதிப்பில்லா வைரங்களை வாங்கினான், பிலிப்.

அதில் ஒரு நீலக்கல் ஹாரம் அவனை மிகவும் கவர்ந்தது. அத்திமலையானுக்குக் குபேரன் அளித்த ஶ்ரீதளமணி, உக்ரோதயமாக மாறி, பிறகு நீலக்கல் ஹாரமாகப் பார்த்திப பல்லவனாலும் கல்பலதாவாலும் பெருந்தேவிக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, மிர்ஜும்ஷாவால் கொள்ளையடிக்கப்பட்டு, இப்போது ஸ்பெயின் மன்னர் ஐந்தாம் பிலிப்பால் தனது ஆசை மனைவிக்குத் திருமணப் பரிசாக வாங்கப்பட்டது. அதற்கு 'ராயல்ப்ளூ பார்நஸே' என்று தனது மனைவியின் பெயரை வைத்தான், பிலிப்.

அத்திமலையானுக்கு அணிவிக்கப்பட்ட ஶ்ரீதளமணி, உக்ரோதயமாக மாறி, பிறகு நீலக்கல் ஹாரமாக மாறி,

இப்போது ராயல்ப்ளூ பார்நஸேவாக ஸ்பெயின் மன்னர் ஐந்தாம் பிலிப் கையில் தவழ்ந்தது.

மனைவி எலிசபெத் பார்நஸேவை அசத்தி அவளை மாட்ரிட் வரவழைக்க நினைத்த பிலிப் பன்னிரண்டு கப்பல்கள் முழுவதும், தான் உலகில் இருந்து தருவித்திருந்த பொக்கிஷங்களையும், ஆபரணங்களையும் நிறைத்து, தனது மனைவி எலிசபெத் பார்நஸேவுக்கு அனுப்பினான். ஒரு அழகிய பெண்ணை முதல் கப்பலில் அமரவைத்து அவளது கையில் ராயல்ப்ளூ பார்நஸே வைக்கப்பட்டிருக்கும் தங்கப்பெட்டகத்தைக் கொடுத்தான்.

'எனது மனைவ்க்கு எனது அன்பளிப்பு!' என்கிற வாசகம் அந்தப் பெட்டகத்தில் பதிக்கப்பட்டது.

உக்ரோதயத்தின் வீர்யம் பாவம் பிலிப்புக்கு எப்படி தெரியும்?

கேப்டன் ஜெனரல் ஆண்டோனியோடே எச்செவேர்ஸ் வே ஜுபீசா மற்றும் கப்டன் டான் ஜுவான் எஸ்டாபென்டே உபிலா என்கிற இரண்டு கப்பல் தலைவர்களின் தலைமையில் பன்னிரண்டு கப்பல்களும் இத்தாலி புறப்பட்டன. மூன்று வருடங்களாக இந்தக் கப்பல்களில் பொக்கிஷங்களை நிறைத்து வந்தான், பிலிப். கப்பல்கள் ஸ்பெயின் நாட்டிலிருந்து புறப்பட்ட ஆண்டு மாட்ரிட் நகரே திரண்டு வந்து கப்பல்களை வழியனுப்பியது.

ஜுலை முப்பது, பன்னிரண்டு கப்பல்களும் கடலில் பயணம் செய்து கொண்டிருந்தன. அன்று ஹஸ்த நட்சத்திரமாக இருந்திருக்க வேண்டும். ஒருவேளை ஸ்ரீதளமணியின் யட்ச நேத்திரங்கள் கண்களைத் திறந்ததோ.. ஒரு கடுமையான சூறாவளி பன்னிரண்டு கப்பல்களையும் தாக்க, எல்லாக் கப்பல்களும் கடலினில் மூழ்க, அனைத்துப் பொக்கிஷங்களும் நீரடியில்

மறைந்தன. வேறோ பீச், ப்ளோரிடா என்கிற பகுதியில் இந்த விபத்து நடந்தது.

அதன் பிறகு ஸ்ரீதளமணி என்கிற உக்ரோதயம் உலகத்தின் பார்வையில் இருந்து மறைந்து போனது.

உக்ரோதயத்தை இழந்த காஞ்சி, அத்திவரதனை எப்படி மீட்டது என்பதை வருங்காலம் கூறும்.

---

* THE FARNESE BLUE - A historic 6.16 carat pear shaped fancy dark grey-blue diamond bought by King of Spain Philip V at an estimate CHF3. 5-5 MILLION ($3, 650,000- $5,220,000), gifted in 1715 to an Italian princess, Elizabeth Farnese to mark her marriage to the King of Spain.

## 48. சத்திரத்தை கைப்பற்றிய சத்ரபதி

**கி.**பி.1676-

ஷியா பிரிவைச் சேர்ந்த கோல்கொண்டா படைகளுக்கும், சன்னி பிரிவைச் சேர்ந்த பீஜப்பூர் சுல்தான்களுக்கும் கடும் போர் மூண்டது. பீஜப்பூர் சுல்தானின் படைகள் காஞ்சியைப் படையெடுத்து வந்து முற்றுகையிட்டனர். அவர்களைக் கோல்கொண்டா சுல்தானால் சமாளிக்க இயலவில்லை.

வேறுவழியின்றி, சத்ரபதி சிவாஜியின் உதவியை நாடினார், கோல்கொண்டா சுல்தான். தனது மராட்டிய படைகளுடன் காஞ்சிபுரம் வந்த சத்ரபதி சிவாஜி கோல்கொண்டா ஆட்சியைக் கைப்பாற்றி, ஆட்சியை ஸ்திரப்படுத்தினார்.

அப்போது-

அத்தியூர் வரதராஜரின் ஆலயத்திற்குச் சென்றவர், அதன் பிரம்மாண்டத்தைக் கண்டு மலைத்தார். தனது படையினரைக் கொண்டு ஆலயத்தைத் தூய்மை செய்தவர் வரதனை தொழுதுவிட்டு, அங்கிருந்து செஞ்சி மலைக்கோட்டைக்குச் சென்றார். பாரத பூமியிலே தான் கண்ட கோட்டைகளிலேயே சிறந்தது செஞ்சிக்கோட்டை என்று பாராட்டி மகிழ்ந்தார்.

பல்லவருக்குப் பின் சோழர், பின் பாண்டியர், ஹொய்சளர், வேணாடு மன்னர், காகதியர், சம்புவராயர், கோல்கொண்டா, பீஜப்பூர் என்று போக, வரும் ராஜ்யங்களுக்கெல்லாம் புகலிடம் அளித்த காஞ்சி ஒரு

சத்திரமாகவே திகழ்ந்தது. சத்ரபதி சிவாஜி காஞ்சியைக் கைப்பற்றி மீண்டும் கோல்கொண்டா ஆட்சியை ஸ்திரப்படுத்தியதும், நிலையான ஆட்சி அமையும் என்று எதிர்பார்த்தார்கள் காஞ்சி மக்கள். ஆனால் அவர்களை அதிர்ச்சி அடையச் செய்யும் செய்தி ஒன்று விரைவிலேயே வந்தது.

## ஊ. மொகலாயக் காஞ்சி

காஞ்சியில் அத்திமலை சிலை ஒன்று உள்ளது. மிகவும் ஆற்றலைத் தரும் சிலை அது. காஞ்சி ஆலயங்களில் எல்லா சிலைகளும் ஸ்வர்ணத்தால் வடிக்கப்பட்டது என்கிற தகவல்களைக் கேள்விப்பட்ட மொகலாய மன்னன் அவுரங்கசீப் தனது படைகளைக் காஞ்சியை நோக்கி அனுப்பினான். ஏற்கெனவே கோல்கொண்டா சுல்தானிடம் சிக்கியிருந்த காஞ்சிக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக மொகலாயப் படையெடுப்பு திகழ்ந்தது.

அவுரங்கசீப்பின் படைகள் முதலில் பூந்தமல்லியை நோக்கி வந்தன. அப்போது காஞ்சியின் சுபேதாராக பாத்கான் என்பவர் நியமிக்கப்பட்டு அவர் செங்கல்பட்டில் தனது தலைமையகத்தை வைத்திருந்தார். முகலாயப் படைகள் பூந்தமல்லியைக் கைப்பற்றித் தங்கள் கொடியினை பூந்தமல்லிக் கோட்டையின் உச்சியில் ஏற்றினர்.

சத்ரபதி சிவாஜி தனது மகன் சம்பாஜியை செஞ்சிக் கோட்டையில் தங்க வைத்திருந்தார். அவர் மராட்டிய படைகளைத் திரட்டிக் கொண்டு செங்கல்பட்டை நோக்கி வந்து முகலாயர்களின் முன்னேற்றத்தைத் தடுத்தார். சம்பாஜியின் தளபதி சந்தோஜிராயன் என்பவர் முகலாயர்களை எதிர்கொண்டார். காஞ்சியைக் காப்பாற்ற சந்தோஜி ராயன் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. இரண்டாயிரம் குதிரை வீரர்கள் மற்றும் ஐந்தாயிரம் காலாட்படை வீரர்கள் இருந்தும், சந்தோஜியால் வெல்ல முடியவில்லை. இவர்களது போரினால் காஞ்சி அழிவுகளைச் சந்தித்தது.

கி.பி. 1688-இல் வரதராஜ பெருமாள், காமாட்சி அம்மன் மற்றும் ஏகாம்பர நாதர் விக்கிரகங்கள் சிலைகள் தெற்கே எடுத்துச் செல்லப்பட்டன.

கி.பி.1689-ல் சம்பாஜியை கைது செய்த அவுரங்கசீப் அவரை சித்ரவதை செய்து கொன்றார். சம்பாஜியின் மகன் ராஜாராம் செஞ்சியின் அரசனாகப் பதவி ஏற்றான். ஒரே படையெடுப்பில் முகாலயர் பீஜப்பூர், கோல்கொண்டா மற்றும் காஞ்சியைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து மதுரை மற்றும் மைசூர் ராஜ்யங்களைக் குறிவைத்தான் அவுரங்கசீப். செஞ்சி, மதுரை, மைசூர் என்று அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றி சூல்பிகர் கான் என்கிற தளபதியை கர்னாடிக் பிரதேச நவாபாக அறிவித்தான். அவனுக்குப் பிறகு தோத்கான் நவாபாகப் பதவி வகித்தான். தோத்கான் ஆற்காட்டைத் தலைநகராக மாற்றினான். கி.பி.1710-ல் அவனது தலைமை அதிகாரி சயீத் மூசாபார்சதத் உல்லாகான் என்பான் பதவியேற்க, அவரது தளபதியாக ராஜா தோடர்மால் திகழ்ந்தார்.

# 49. வார்த்தெடுக்கப்பட்டவன் புறப்பட்டான்

**கி.**பி.1688-

கோல்கொண்டா உபதளபதி பஸ்லுல்லாஹ்வின் கடுமையான ஆட்சியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த காஞ்சிக்குப் பேரதிர்ச்சி கொடுக்கும் தகவல் ஒன்று காற்றில் கசிந்து வந்தது. கொதிக்கும் எண்ணெய் கொப்பரையில் விழுந்து தவித்துக் கொண்டிருந்தவன், தீயில் விழுந்தால் எங்ஙனம் இருக்கும். அப்படி ஒரு செய்தி காஞ்சி மக்களுக்குக் கிடைத்தது.

தக்ஷிணத்தில் உள்ள ஆலய விக்கிரகங்களைக் குறிவைத்தான் மொகலாய மன்னன் அவுரங்கசீப். குறிப்பாகக் காஞ்சி ஆலயத்தில் அதிசயமிக்க ஒரு அத்திமர சிலை இருப்பதாக அவன் அறிய, காஞ்சியை நோக்கிப் பெரும்படையை அனுப்பினான்.

கோல்கொண்டா முஸ்லிம்களோ ஷியா பிரிவினைச் சேர்ந்தவர்கள். பீஜப்பூர் முஸ்லிம்களோ சன்னி பிரிவைச் சேர்ந்தவர்கள். இருவருக்கும் அடிக்கடி போர் மூண்டு கொண்டிருக்க, இந்த நிலையில் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போன்று, அவுரங்கசீப்பின் படைகள் காஞ்சியை நோக்கி வருவதை அறிந்ததும், கோல்கொண்டா உபதளபதி ஆலய அதிகாரிகளை அழைத்தான்.

“எங்களைப் போல ஆபரணங்களை மட்டும் குறிவைப்பவர்கள் அல்ல முகலாயர்கள். உங்கள் விக்கிரகங்களைக் குறிவைத்துள்ளனர். என்னால் அவர்களுக்கு எதிராக ஒன்றும் செய்ய இயலாது. உங்கள் ஆலயங்களையும், விக்கிரகங்களையும் நீங்கள்தான்

பாதுகாத்துக் கொள்ள வேண்டும்” என்று தனது கைகளைக் கழுவிவிட்டான்.

அன்றாடம் கோயில்களிலிருந்து வரி மற்றும் திறைகளை வசூலித்துக் கொண்டிருப்பவன், போர் என்றதும் தனது பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதைக் கண்டு ஆலய அதிகாரிகள் திகைத்தனர்.

வரதராஜர் ஆலயத்தின் அதிகாரி அம்பி* சுந்தரராகவர் பட்டர்களை அவசரமாக அழைத்தார்.

“முகலாயப் படைகள் நமது ஆலயத்திற்குக் குறிவைத்து வருகின்றன. கோல்கொண்டா ஆட்சியாளர்கள் எங்களிடம் உதவியை எதிர்பார்க்காதீர்கள் என்று கூறிவிட்டார்கள். எனவே வேறு வழியில்லை. மேனா பல்லக்கு ஒன்றை உடனே தயார் செய்யுங்கள். தேவப்பெருமாளை பல்லக்கில் சுமந்து கொண்டு தெற்கே செல்வோம். முகலாயப் படைகள் காஞ்சியைவிட்டு நீங்கியதும் திரும்பி வருவோம்!” என்றார்.

“இதென்ன சோதனை!” ஒரு வயதான பட்டர் கண்ணீர் உகுத்தார்.

“ஏற்கெனவே ஆதி அத்திவரதனை பிரிந்து ஸ்ரீவரத நாராயணனை அத்திவரதனாக ஆராதனை செய்து வருகிறோம். இந்த நிலையில் உற்சவர் தேவப்பெரு மாளையும் விட்டுப் பிரிந்து நாங்கள் எப்படி இருப்போம்?”

இன்னும் பல பட்டர்களும் புலம்ப, அவர்களை அம்பி சுந்தரராகவர் அடக்கினார்.

* அம்பி : அமராவதியை காதலித்த அம்பிகாபதியை சோழ மன்னன் கொலை செய்ய, அதனால் மனம் வெறுத்த கவியரசர் கம்பர் காஞ்சியில் வந்து தங்குகிறார். தனது மகன் அம்பிகாபதியின் நினைவாக தான் வசித்த கிராமத்திற்கு அம்பிகாபதி என்று பெயரிடுகிறார்! காஞ்சி - திருப்புட்குழி சாலையில் இன்றும் அம்பி என்கிற பெயரில் இந்த கிராமம் இருக்கிறது.

"அழுது புலம்ப நேரமில்லை. மொகலாயப் படைகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. நாம் இன்றிரவே தெற்கே பயணமாகிறோம்" - என்ற அதிகாரி, பதினைந்து பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்தார்.

ஒரு கோயில் அதிகாரி, இரண்டு பட்டர்கள், பிரபந்தம் சொல்ல ஒருவர், ஒரு பரிசாரகர், ஒரு மடைப்பள்ளி சமையல்காரர், காவலுக்கு நால்வர், சிவிகையைச் சுமந்து செல்ல நால்வர், தீப்பந்தம் ஏந்திட ஒருவன் என்று பதினைந்து பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. குழுவின் தலைவராகத் தன்னையே அறிவித்துக் கொண்ட அம்பி சுந்தரர் அன்று இரவே புறப்பட வேண்டும் என்று குழு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

பிரபந்தம் கூறுவதற்குக் கூரம் கோபாலச்சார்யன் என்பவரும், பட்டர்கள் மணவாளனும், வாசுதேவனும் புறப்படுவதற்கு தயாராயினர்.

கதவுகளுடன் கூடிய பெட்டி பல்லாக்கு சன்னிதிக்கு வந்தது. ஸ்ரீதேவியும், பூதேவியும் சிவிகையில் எதிர்பக்கமாக வைக்கப்பட, தேவப்பெருமாள் என்கிற வரதராஜர் அவர்களை நோக்கி நின்றார். ஆபரணங்கள், புஷ்பங்கள் என்று எவ்வித அலங்காரங்களும் கிடையாது.

மதுசூதன், மாயவன், சிங்கன், தாடாளன் என்கிற நான்கு கட்டுமஸ்தான இளைஞர்கள் கையில் வாட்களுடனும் தடிகளுடனும், காவலுக்கு நிற்க, நான்கு சிவிகை தாங்கிகள் "எச்சரிக்கை!" என்று கூறிவிட்டு சிவிகையைச் சுமந்து ஆலயத்தின் வாயிலை நோக்கிச் செல்ல, மக்கள் கூட்டம் அலைமோதியது.

"தேவப்பெருமாளே.. வரதா! இப்போது சென்றால் எப்போது வருவீர்கள்?" - அத்தியூர் வாசிகள் கண்ணீரும் கம்பலையுமாக வரதனை வழியனுப்பினர்.

"காஞ்சியில் எவ்வளவோ குழப்பங்களும், போர்களும் நிகழ்ந்த போது கூட நீங்கள் கிளம்பியதில்லையே.

இப்போது ஏன் எங்களைவிட்டு செல்கிறீர்கள்?" - பெண்கள் கதறினர்.

தேவப்பெருமாள் வரதன் பதில் கூறாமல் சிவிகையில் உள்ளே எட்டிப்பார்த்தவர்களை நோக்கிப் புன்னகையுடன் விடைபெற்றுக் கொண்டிருந்தான்.

மொகலாயர்களுக்குப் பயந்தா அவன் போகிறான்?

இல்லையே..

அவன் எதற்காக காஞ்சியைவிட்டுப் போகிறான்?

நினைவிருக்கிறதா? காஞ்சியைவிட்டு நீங்கும் இராமானுஜர் திருக்கச்சி நம்பியிடம் கேட்டாரே. 'அத்திமலையான் எங்கிருக்கிறான்.. அவனை மீட்பது எப்போது?' என்று கேட்டு, வரதனின் பதிலைக் கேட்டிருந்தார் அல்லவா!

அப்போது வரதன் கூறியது நினைவிருக்கிறதா?

'வார்த்தெடுக்கப்பட்டவன் சென்று வேர்விட்டவனை மீட்டு வருவான்.'

வார்த்தெடுத்த சிலை தேவப்பெருமாள் அல்லவா?

காஞ்சியில் வேர்விட்டவன் தேவ உடும்பர அத்தி சிலையன் அல்லவா?

அதற்குத்தான் இதோ.. வார்த்தெடுக்கப்பட்டவன் புறப்பட்டுவிட்டான். அவன் சென்று வேர்விட்டவனைக் காஞ்சிக்கு அழைத்து வரப்போகிறான்.

"வரதா.. வரதா!" என்று மக்கள் கூட்டம் சோகத்துடன் அலைமோத, அதில் மிதந்தபடி தெற்கே சென்றான், தேவப்பெருமாள் என்கிற வரதராஜன்.

கூட்டத்தினரின் கவனமெல்லாம் வரதர் செல்லும் சிவிகையின் மீதே படிந்திருக்க, அவரது சிவிகையின் பின்பாக மற்றொரு மேனா பல்லக்கு ஊர்ந்து சென்றது.

*அதைக் கவனித்த மக்கள் திகைத்தனர்.*

*"இந்தச் சிவிகையில் இருப்பது யார்? பெருந்தேவி தாயாரா?"*

*"படிதாண்டா பத்தினி என்று வெளியே வந்திருக் கிறார்? கரியமாணிக்கப் பெருமாள் இதில் செல்கிறார். எழுமால் கோயில்களில் பிரதானப் பெருமாள்! மிகவும் புராதனப் பெருமாளாயிற்றே. அவரையும் பாதுகாக்க வேண்டியது நம் கடமை அல்லவா?" - சிவிகைக்குக் காவலாகச் சென்ற தாடாளன் கூறினான்.*

*'வரதனும், கரியமாணிக்கப் பெருமாளும் காஞ்சியை விட்டுப் புறப்படுகின்றனர்!' - செய்தி பரவ, அவர்களுக்குப் பிரியாவிடை கொடுப்பதற்காகக் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.*

*எங்கு செல்கிறான் என்பது அவனுக்குத்தான் தெரியும்.*

# 50. அத்தனைத் தேடும் ஆத்தான்

கி.பி.1688-ல் முகலாயப் படையெடுப்புக்கு பயந்து உற்சவர் தேவப்பெருமாள் என்கிற வரதராஜரை பல்லக்கில் வைத்து தெற்கே எடுத்துச் சென்றனர், கோயில் பட்டர்களும், அதிகாரிகளும். பெருமாள் எங்கே சென்றார் என்பது இரகசியமாக இருந்தது. இடத்தைத் தெரிவித்தால், முகலாயப் படைகளுக்குத் தகவல் தெரிந்துவிடும் என்கிற அச்சம் காரணமாக இருக்கலாம்.

அத்திவரதர், தேவப்பெருமாள் இருவருமே இல்லாத தால் ஆலயம் பொலிவிழந்து காணப்பட்டது. முகலாயப் படைகளின் நடமாட்டம் அதிகமாக இருந்ததால், ஆலயத்தின் கதவுகள் மூடியே கிடந்தன. யாருக்கும் தெரியாமல் திட்டி வாசல் வழியாக உள்ளே புகும் பக்தர்கள், தாங்கள் சமைத்து இரகசியமாக எடுத்துச் சென்ற அன்னத்தை ஸ்ரீவரவரத நாராயணனுக்கு நிவேதம் செய்துவிட்டு, போன சுவடு தெரியாமல் வந்து விடுவார்கள்.

வரதர் புறப்பட்டுச் சென்று வருடங்கள் ஆகிவிட்டன. ஆலயம் கவனிப்பாரற்று புதர்களும், செடிகொடிகளும் மண்டிக் கிடந்தது. கோபுரங்கள் பூச்சு உதிர்ந்து செப்பனிடப்படாமல் கிலமாக அழுது வடிந்து கொண்டிருந்தன.

ஆலயத்திற்கு எப்போது சென்றாலும், அது பூட்டியே இருக்கும். எப்படி இருந்த பல்லவர்களின் ஆலயம் இந்த இழிநிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. மனம் உடைந்து போனார்கள் காஞ்சி மக்கள்.

*கி.பி.1704-ல் முகலாய மன்னன் அவுரங்கசீப் மரணமடைந்தான். இதனால் முகலாயப் படைகள் சிதற, காஞ்சிபுரம் கர்னாடிக் ஆட்சியாளர்களின் பொறுப்புக்கு வந்தது. சற்றே ஆலயங்கள் சுறுசுறுப்பு அடைந்தன.*

*அவுரங்கசீப் இறந்த ஐந்தாம் நாள், வரதராஜ ஆலயத்தின் முன்பாக இருந்த சந்நிதித் தெருவில் ஒரு பெரிய மாளிகையின் முன்பாக ஒரு இரதம் வந்து நின்றது. அதிலிருந்து தலைப்பாகை கட்டிய ஒரு பெரியவரும், ஒரு கட்டழகு காளையும் இறங்கினர்.*

*மாளிகையின் வாயிலில் அமர்ந்திருந்த வைணவர்கள் சிலர் தேரில் வந்து இறங்கிய அந்த இருவரையும் மலைத்துப் போய்ப் பார்த்தனர். பிறகு உள்ளே ஓடிச்சென்று தங்களது ஆசானை அழைத்தனர்.*

*அந்த மாளிகையின் பெயர் ஆத்தான் திருமாளிகை. வைணவ ஜீயர் ஸ்ரீமத் பரமஹம்ச பரிவ்ராஜகாச்சார்யா ஆத்தான் ஜீயர் என்பது அவருடைய பெயர். துறவியாவதற்கு முன்பாக அவரது பெயர் ஸ்ரீநிவாஸாச்சாரியார். கோல்கொண்டா சுல்தான் இப்ராஹிம் குல்லின் ஆலோசகர்களாக இருந்த மாதண்ணா மற்றும் அக்கண்ணா ஆகியோர்களுக்கு ஆசான். தனது சீடர்களால்தான் உக்ரோதயம் களவு போனது என்பதை அறிந்ததும் அவர்களை வெறுத்து ஒதுக்கிவிட்டுக் காஞ்சியில் தனது மடத்தை நிறுவி யிருந்தார்.*

*"ராஜா தோடர்மால்* தங்களை நாடி வந்திருக்கிறார்"- சீடர்கள் கூற, ஆத்தான் ஜீயர் பரபரப்புடன் எழுந்து வாயிலுக்கு விரைந்தார்.*

---

* ராஜா தோடர்மால் நாயுடு. ஆத்தான் ஜீயரின் சீடர். அவரது குடும்பத்தினர் ஆத்தான் ஸ்வாமியிடம்தான் சங்கு சக்கர, திருவிலச்சினை வைத்துக் கொள்வார்கள். நாயுடு குலத்தைச் சேர்ந்த ராஜா தோடர்மால் மற்றும் அவரது மனைவியின் சிலை காஞ்சி ஆலயத்தில் உள்ளது. சதத் உலா கான்

வெண்பட்டுத் தலைப்பாகை, அதே வண்ணத்தில் பட்டு வேட்டியை கச்சமாகக் கட்டி, அதன் மேல் வெள்ளையர்கள் போடும் நீண்ட குப்பாயம் ஒன்றை அணிந்திருந்தார். அந்தக் குப்பாயத்தில் தங்கச் சங்கிலி ஒன்று ஊசலாடிக் கொண்டிருந்தது. கையில் ஒரு வெள்ளித் தடியை ஏந்தியிருந்தார், தோடர்மால்.

அவருடன் வந்த குமரன் மிகவும் கம்பீரமாக இருந்தான். சுருள்சுருளான தலைமுடி அலைபாய, பட்டுவேட்டி, வெண்பட்டு அங்கவஸ்திரம் புஜத்தில் வங்கி, கைகளில் ஸ்வர்ண கடா, ஒரு காலில் ஸ்வர்ண தண்டை என்று மன்மதனை போன்று நின்றான். தோள்கள் பறந்து விரிந்து போர்க்கலைகளில் அவன் சமர்த்தன் என்பதைப் புலப்படுத்தியது.

"ஜீயர் ஸ்வாமிக்கும் வந்தனங்கள்" என்று ராஜா தோடர்மால் அவரை பணிய, ஆத்தான் ஜீயரும் அவரை நோக்கிக் கைகுவித்தார்.

"உள்ளே வாருங்கள்!" என்று அவர்களை வரவேற்று உபசரித்த ஆத்தான் ஜீயர், அவர்களுக்கு அருந்துவதற்கு எலுமிச்சைப் பானகமும் சர்க்கரைப் பொங்கலும் அளித்தார்.

---

என்கிற கர்னாடிக் நவாப்பின் தளபதி ராஜா தோடர்மால் செஞ்சியைக் கைப்பற்றியதில் பெரும் பங்காற்றியவர். தமிழ்நாடு, கர்நாடக, மற்றும் ஆந்திரப் பகுதிகளை ஆங்கிலத்தில் கர்னாடிக் என்று கூறினார்கள். கர்னாடிக் என்கிற சொல்லே கரை நாடு என்கிற தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றியது.

செப்பேடு ஒன்று (I.E.S 1636 (A.D. 1714-15), ஆத்தான் ஜீயர் தோடர்மாலின் குரு என்கிறது. பெருந்தேவி தாயார் சந்நிதி அருகில் இருவரும் எப்போது தேவப்பெருமாள் உற்சவரை உடையார்பாளைய மன்னர்கள் வசமிருந்து மீட்டு வந்தனர் என்பதை விவரிக்கிறது.

"பொருத்தமாகத்தான் சர்க்கரைப் பொங்கலை அளிக்கின்றீர், ஜீயரே! இன்று எனது வாழ்வில் முக்கியமான நாள்!" - ராஜா தோடர்மால் கூறினார்.

"என்ன விஷயம், தோடர்மால்?" - ஆத்தான் ஜீயர் கேட்டார்.

"புதிய நவாப் சதத் உல்லாகான் என்னைத் தளபதியாக நியமித்திருக்கிறார். காஞ்சிக்கு நல்லாட்சியை வழங்க வேண்டும் என்று விருப்பப்படுகிறார். எனது மகன் வீரராம மல்லரையும் நான் முன்பு வகித்த தலைமை அதிகாரிப் பதவியை ஏற்கும்படி வற்புறுத்துகிறார். ஆனால் நான் மறுத்துவிட்டேன். அவனை வைத்து நமது காஞ்சி கோயில்களைப் பழையபடி பொலிவுடன் விளங்க வைக்க யோசித்துக் கொண்டிருக்கிறேன்." - ராஜா தோடர்மால் கூறினார்.

"அற்புதமான எண்ணம். உண்மையில் தேவராஜனின் மூடிய ஆலயத்தைப் பார்க்கும் போதெல்லாம் மனது சங்கடப்படுகிறது. அத்திவரதனும் ஆலயத்தில் இல்லை. தேவப்பெருமாளும் இல்லை. ஆலயமே சூன்யமாக இருக்கிறது. அத்தியூர் மக்கள் நடைபிணங்களாக வாழ்கின்றனர். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது என்று சான்றோர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் கோயிலை எங்கே இவர்கள் பாதுகாக்கின்றனர்? தெய்வ நம்பிக்கை என்பதே அரசியலுக்குத் தேவை இல்லாத ஒரு விஷயமாகத்தானே கருதுகின்றனர்."- ஆத்தான் ஜீயர் மனவேதனையுடன் கூறினார்.

"இப்போது தேவப்பெருமாள் எங்கே இருக்கிறார், தெரியுமா?" - ராஜா தோடர்மால் கேட்டார்.

"தெரியவில்லை. உடையார்பாளையம் ராஜ்யத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள்? திருவரங்கம் செல்லப் போவதாகக் கூறிவிட்டுத்தான் புறப்பட்டார்கள். ஆனால் திருவரங்கம் செல்லவில்லை. எனது சீடர்கள் தேடிக்

கொண்டுதான் இருக்கின்றனர்." - ஆத்தான் ஜீயர் கூறினார்.

"தேவப்பெருமாள் வெளியேறி இருபது வருடங்கள் ஆகிவிட்டிருக்கும் அல்லவா?"

"சரியாக வரும் பங்குனி உத்திரம் அன்று இருபத்தி இரண்டு வருடங்கள் பூர்த்தி ஆகிவிடும். ஆனால் வரும் வைகாசி ஹஸ்தம் பிரம்மோத்சவம் நடைபெற உள்ள நிலையில் இந்த வருடம் புதிய விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து அதற்குப் பிரம்மோத்சவத்தை நடத்த உள்ளோம். உற்சவம் என்பதே மக்களின் உற்சாகத்திற்குத் தானே. துவண்டு கிடக்கும் மக்களின் உள்ளத்தை உற்சாகப்படுத்த இந்த வருடம் பிரம்மோத்சவம் நடத்த உள்ளோம். நீரும் அவசியம் அதில் கலந்து கொள்ள வேண்டும்."

"அவசியம் கலந்து கொள்கிறேன்" என்றவர், பின்னால் நின்றிருந்த தனது மகனை அழைத்தார்.

"வீரராமா! ஜீயரிடம் ஆசி பெற்றுக் கொள்!" தந்தை கூறியவுடன் அவரது காலில் பணிந்தான்.

"நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும், கீர்த்தியும் பெற்று வாழ்வாயாக!" ஜீயர் வாழ்த்தினார்.

"ஜீயர் சுவாமி, எனது மகனுக்கு உமது கையால் சங்கு சக்கர முத்திரைகளை வைக்க வேண்டும். அவனை ஆலயத் திருப்பணிகளில் ஈடுபட வைக்கப் போகிறேன் என்பதால் உடனே அது அவசியமாகிறது." - ராஜா தோடர்மால் கூறினார்.

"அதற்கென்ன தோடர்மால் அவர்களே. நான் தேவராஜாப்பெருமாளைத் தேடி தெற்கே செல்லலாம் என்று இருக்கிறேன். அதற்குள் வீரராமாவுக்குத் திருவிலச்சினையைப் பதிய வைக்கிறேன்." - ஆத்தான் ஜீயர் கூறினார்.

"அப்படியென்றால் நான் செய்யப் போகும் முதல் ஆலயப் பணியாகத் தேவப்பெருமாளை மீண்டும் காஞ்சிக்கு அழைத்து வருகிறேன். ஸ்வாமி! நானும் தங்களுடன் வருவதற்கு ஆட்சேபணை உண்டா?"-வீரராமன் கேட்டான்.

"ஆஹா! விசுவாமித்திரன் தசரதனை கேட்டது போன்று நானும் கேட்கிறேன், தோடர்மால். உமது மகன் வீரராமாவை தேவப்பெருமாளை மீண்டும் காஞ்சிக்கு எழுந்தருளச் செய்யும் பணியில் ஈடுபடுத்தப் போகிறேன்."-ஆத்தான் ஜீயர் கூறினார்.

"அதற்காகத்தான் அவனை உம்மிடம் அழைத்து வந்தேன். இனி அவனது பொறுப்பு உங்களது!" என்று ராஜா தோடர்மால் கூற, ஆத்தான் ஜீயர், வீரராமனின் சிரசில் கை வைத்து ஆசீர்வதித்தார்.

# 51. புகலிடம் தேடும் பரமன்

திருக்கச்சி ரங்கப்பா உடையார் தனது அடர்த்தியான மீசையை வருடியபடி தன் முன்பாக நின்ற ஏழுமலை வேங்கடவன் ஆலய அர்ச்சகர், சாரங்க பட்டரைப் பார்த்தார். உடையார்பாளைய அரண்மனையின்* அந்த விசாலமான வரவேற்பு அறை பெருமாள்மலை ஆலயத்தைக் காட்டிலும் பிரம்மாண்டமாக இருப்பதைக் கண்ட சாரங்கருக்கு வியர்த்தது. தான் அங்கே வந்தது தப்போ என்று நினைக்கத் துவங்கியிருந்தார். ஆனால் உடையாரிடம் தனது பிரச்னையைச் சொல்லியே தீரவேண்டும் என்பதற்காக வந்திருந்தார்.

"என்ன விஷயம் பட்டர்! பெருமாள்மலைக் காட்டிலிருந்து உடையார்பாளையம் வரை நடைபோட்டு வந்திருக்கிறீர் என்றால் விஷயம் முக்கியமானதாக இருக்க வேண்டும்!" என்று பட்டரை உறுத்துப் பார்த்தார்.

"ஆம் மன்னரே! கடந்த இரண்டு வருடங்களாக நமது ஆலயத்தில் பல பிரச்னைகள். இதுநாள்வரை நான் அமைதி காத்தேன். ஆனால் இப்போது சற்று பயமாக இருப்பதால் தங்களைக் காண வந்துள்ளேன்." - பட்டர் கூறினார்.

---

* உடையார்பாளைய அரண்மனை அரியலூரில் உள்ளது. இருபத்து ஐந்து ஏக்கர் பரப்பளவில் இருக்கும் அரண்மனை இப்போது இடிபாடுகளுடன் காட்சி தருகிறது. ஐரோப்பா நாட்டுச் சாண்ட்லேர்ஸ், அலங்கார விளக்குகள், வசதியான சோபாக்கள் என்று பல பொருட்கள் அப்படியே பாழடைந்து கிடப்பது விந்தைதான்.

சாரங்க பட்டர் பீடிகையுடன் பேசுவது திருக்கச்சி ரங்கப்பருக்கு விந்தையாக இருந்தது. வழக்கமாக அனாவசியச் சொற்களை உபயோகிக்கவே மாட்டாதவர், இன்று தயங்கி நிற்கிறாரே.

"ஆலயத்தில் மூன்று பெருமாள்கள் இருக்கின்றனர். ஒண்ட வந்த பெருமாள் ஊர்ப் பெருமாளை ஓட்டு கிறார்." - பட்டர் கூறியதும் விஷயம் புரிந்துவிட்டது, திருக்கச்சி ரங்கப்பருக்கு.

பெருமாள்மலையில் புகலிடத்தைத் தேடிக்கொண் டிருக்கும் கச்சி தேவப்பெருமாள் மற்றும் கரிய மாணிக்கப் பெருமாள்களை பாரமாக நினைக்கிறார், பட்டர். தேவப் பெருமாள் வந்திருப்பதால், ஏழுமலை வேங்கடவனுக்குக் கீர்த்தி குறைந்துவிட்டதாக நினைக்கிறார்.

ரங்கப்பா உடையார் கடகடவென்று சிரித்தார்.

"பட்டரே! நானும் காஞ்சிக்குத் தொடர்புடையவன் தான். அதற்காகத்தான் பெருமாள்மலையில் இடம் கொடுத்தேன். காஞ்சியிலிருந்து வந்த தேவப்பெருமாள் திருவரங்கத்திற்குச் செல்ல, அவர்கள் பெருமாளை ஊருக்குள் அனுமதிக்க மறுத்ததால், திருவெள்ளறை சென்றார். அங்கும் அவருக்கு வரவேற்பு கிடைக்க வில்லை. அந்தப் பெருமாளை முகலாயர்கள் தேடுவதால் தங்களுக்கும் பாதுகாப்புக் குறைவு ஏற்படுமோ என்று அவர்கள் பயந்தார்கள். அவர்களுக்குப் பழமலைராயன் மலையில் இடம் கொடுத்தேன். பழமலைராயன் ஆலயத்தின் கடுமையான பூஜை முறைகளைக் கண்டதும், தேவப்பெருமாளின் பரிவாரங்கள் அங்கிருந்து வெளியேறி பவள மலையில் ஒளிந்து கொண்டார்கள். அங்கு கள்வர் பயம். இந்த ஐந்து வருடங்களாக இங்கும் அங்கும் திரிந்து கொண்டிருக்கிறார்களே என்று நான்தான் உங்களைப் பெருமாள்மலைக் கோயிலில் இடம் கொடுக்கச் சொன்னேன். கடந்த இரண்டு வருடங்களாகப் பிரச்னை

இல்லை. இப்போது திடீர் என்று என்ன வந்தது?" - ரங்கப்பா உடையார் கடுகடுத்தார்.

"வேங்கடவன் கோயிலாக இருந்தாலும், முதல் ஆராதனை தேவப்பெருமாளுக்கும், இரண்டாவது ஆராதனை கரியமாணிக்கப் பெருமாளுக்கும், கடைசியாகத்தான் நமது திருவேங்கடவனுக்கும் ஆராதனை நடக்கிறது. அடியார்களும் தங்களது காணிக்கைகளை தேவப்பெருமாளுக்குத்தான் தருகின்றனர்."

ரங்கப்பா உடையார் மீண்டும் தனது மீசையை வருடினார். பெரிய கோயில்களான திருவரங்கமும், திருவெள்ளறையுமே, தேவப்பெருமாளை தங்கள் ஆலயத்தினுள் அனுமதிப்பதற்கு யோசனை செய்யும் போது, காட்டுமலை ஆலயமான ஏழுமலை வேங்கடவனை ஆராதனை செய்யும் பட்டருக்குப் பிரச்னை வரத்தானே செய்யும்?

"இதெல்லாம் ஒரு காரணமா பட்டரே? இருவருமே மலையங்கள்தான்? அதில் ஒருவர் உயர்ந்தவர், மற்றவர் தாழ்ந்தவர் என்றெல்லாம் ஏன் நினைக்க வேண்டும்?"- ரங்கப்பா உடையார் கூறினார்.

சாரங்க பட்டர் தனது கடைசி அஸ்திரத்தை பிரயோகித்தார். இதற்கு நிச்சயம் உடையாரால் சமாதானம் சொல்ல முடியாது.

"உங்களுக்கு ஒரு இரகசியத்தைச் சொல்கிறேன். உமக்குத்தான் எனது மைத்துனன், திருக்கடல்மல்லை ஆலயத்தில் ஆராதனை செய்கிறான் என்பது தெரியுமே.. அவனது ஆலயத்திற்குப் பாண்டிச்சேரி அரசாங்க அதிகாரிகள் அதிகம் வருகின்றனர். அவன் மூலம் நான் கேள்விப்பட்ட தகவலைச் சொல்லத்தான் நான் வந்திருக்கிறேன். பாண்டிச்சேரியில் பிரெஞ்சு கவர்னர் ஜெனரல் ஜோசப் டூப்ளே, சந்தாசாகேப் மற்றும் தக்காண மன்னன் முசாபர் சாங் மூவரும் ஓர் உடன்படிக்கை

கையெழுத்திட்டு இருக்கின்றனர். அதன்படி ஆங்கிலே யரை ஆதரிக்கும் உங்கள் உடையார் பாளையத்தைக் கைப்பற்ற நினைக்கிறார்கள் பிரெஞ்சு ஆட்சியாளர்கள். இந்த சமயத்தில் நீங்கள் ஆங்கிலேயர் பக்கம் சாயாமல் நடுநிலையில் இருப்பது நலம் என்று ஓர் அதிகாரி தெரிவிக்கச் சொன்னார். அதனைச் சொல்லத்தான் வந்தேன்." - பட்டர் கூறியதும், ரங்கப்பா உடையார் பதறி எழுந்தார்.

"உண்மையாகவா பட்டரே?" - உடையாரின் முகத்தில் வியர்வை அரும்பியது.

"ஆம்! அதனால்தான் சந்தா சாஹேப் ஆட்களால் நமது பெருமாள்மலைக்கு ஆபத்து நேரக்கூடாது என்று தான் நான் தேவப்பெருமாளையும், கரிய மாணிக்கரையும் பெருமாள்மலையில் இருந்து வெளியேற்றச் சொல் கிறேன்." - சாரங்கபட்டர் கூறியதும், ரங்கப்பா உடையார் தனது முகத்தில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

"அப்படியே செய்யலாம், பட்டரே! உடனே நான் தேவப்பெருமாளையும், கரியமாணிக்கரையும், பானை மலைக்கு அனுப்பிவிடுகிறேன்." - ரங்கப்பா உடையார் கூறினார்.

# 52. வீரராம மலை

அம்பி சுந்தரராகவர் கவலை தோய்ந்த முகத்துடன் வருவதைப் பார்த்து வாசுதேவ பட்டர் கேட்டார்.

"என்ன ராகவரே! கவலையுடன் காணப்படுகிறீரே?"

"இன்றா நேற்றா? முகலாயப் படைகள் காஞ்சிக்கு வந்த நாளில் இருந்த இதே முகம்தான் எனக்கு உள்ளது. ஒன்றுமில்லை சுவாமி. நாம் இங்கிருந்து புறப்பட வேண்டிய தருணம் வந்தாகிவிட்டது."

"ஏன்?" வாசுதேவர் அதிர்ந்தார்.

"தெரியவில்லை! உடையார் ரங்கப்பரின் உத்தரவு. உடனடியாக தேவப்பெருமாளையும், கரியமாணிக்கப் பெருமாளையும் இங்கிருந்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டு பச்சைமலைக்கு உச்சியில் உள்ள பானை மலைக்குப் போக வேண்டும் என்று உத்தரவு. இன்னும் எவ்வளவு நாட்கள்தான் நாம் அல்லாட வேண்டுமோ தெரியவில்லை." - சுந்தரராகவர் அலுத்துக் கொண்டார்.

"ராகவரே! பேசாமல் நாம் மீண்டும் காஞ்சிக்கே சென்றால் என்ன? இப்போது நிலைமை எப்படி இருக்கிறதாம்?" - வாசுதேவர் கேட்டார்.

"இன்னும் போர் நிலை ஓயவில்லை. ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சு நாட்டுக்கும் நமது காஞ்சியைச் சுற்றி அடிக்கடி தகராறுகள் மூளுகின்றன. இப்போது நாம் காஞ்சிக்குப் போவது உசிதம் அல்ல. சந்தா சாஹேப் படைகள் வேறு காஞ்சியைக் குறிவைக்கின்றனவாம்."

"இப்படியே போய்க் கொண்டிருந்தால் நம் கதி என்ன? நமது குழாமில் உங்களையும், என்னையும் தவிர

அனைவரும் இன்னும் கட்டை பிரம்மச்சாரிகளாகவே தான் உள்ளனர். அவர்களுக்கென்று தனிப்பட்ட வாழ்வே இல்லை. தேவப்பெருமாளுக்காக அனைத்தை யும் துறந்துவிட்டனர். பாவம்!" - வாசுதேவர் கூறியதும் உருகிப் போனார், சுந்தரராகவர்.

"உண்மை பட்டரே. இனியும் தேவப்பெருமாளை சுமந்து கொண்டு அனாதைகளாகத் திரியக் கூடாது. நான் நாளையே காஞ்சிக்குப் புறப்படுகிறேன். இப்போதுள்ள ஆட்சியாளரின் தளபதி ஆத்தான் ஜீயரின் சீடர்களாம். அவர்களைக் கொண்டு தேவப்பெருமாளுக்கு ஏதாவது நல்ல வழி பிறக்குமா என்று கேட்டு வருகிறேன். நாளை நாம் பச்சைமலை உச்சியில் உள்ள பானை மலைக்குப் போகிறோம். தயாராக இருங்கள்." - சுந்தரராகவர் கூறினார்.

மறுநாள்-

ரங்கப்பா உடையாரின் உத்தரவுப்படி, தேவப் பெருமாளின் பரிவாரம், பச்சைமலைக்குப் புறப்பட்டது. பிற்பகலில் பச்சைமலையின் உச்சியை அடைந்தவர்கள், வெள்ளாற்றின் மறுபக்கம், குன்றின் அடியில் இருந்த குகையைக் கண்டனர். இராமானுஜர் முன்பொரு காலத்தில் தங்கிய அதே இடம்.

தேவப்பெருமாளையும், கரியமாணிக்கரையும் அந்தக் குகையில் எழுந்தருளச் செய்தனர். உடனேயே, சுந்தர ராகவர் காஞ்சிக்குப் புறப்பட்டுவிட்டார்.

"நான் காஞ்சிக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வரும்வரையில் எச்சரிக்கையுடன் இருங்கள். நான் நல்ல செய்தியுடன் விரைவில் வருகிறேன். தேவப்பெருமாள் காஞ்சிக்குத் திரும்புவான்." - அம்பி சுந்தரராகவர் கூறிவிட்டுச் சென்றார்.

பட்டர்கள் அமர்ந்து அந்தச் சூழ்நிலையை இரசித்துக் கொண்டிருந்தனர்.

"இந்த இடம் எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது. பட்டரே! அந்தக் குன்றைப் பாருங்களேன். பானை மாதிரியே இருக்கிறது!" என்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு எப்படித் தெரியும், காஞ்சியின் வித்து அதனுள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது?

அந்த மலையுச்சியின் ரம்மியமான சூழ்நிலை சற்றே அவர்களது வேதனைகளை ஆற்றிக் கொண்டிருந்தது.

காஞ்சியில் ஆத்தான் ஜீயர் மாளிகையினுள் நுழைந்தார், அம்பி சுந்தரராகவர்.

"யார்?" - ஜீயர் குழப்பத்துடன் அவரை பார்த்தார்.

"ஜீயர் ஸ்வாமி! நான்தான் அம்பி சுந்தரராகவன். தேவப்பெருமாள் ஆலய நிர்வாகி. சரியாக இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகப் பெருமாளுடன் உடையார்பாளையம் காட்டிற்குச் சென்றேன். இப்போது தங்களைக் காண வந்திருக்கிறேன். தேவப்பெருமாளும், கரியமாணிக்கப் பெருமாளும் நலமாக உள்ளனர். பச்சைமலைக் காட்டின் உச்சியில் தங்கியிருக்கிறார்கள். காஞ்சியில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களை மீண்டும் காஞ்சிக்கு எழுந்தருளச் செய்ய வேண்டும். தியாகமண்டபத்தில்* வசிப்பவன், நிறையத் தியாகங்களைச் செய்துவிட்டான்."

'பொலபொல' வென்று கண்ணீர்விட்டார், ஆத்தான் ஜீயர்.

"கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போன்று நீர் வந்து தகவலைச் சொல்கின்றீர். தேவப்பெருமாளை திருப்பி அழைத்து வரத்தான் நாங்கள் அல்லும்பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது எனது சீடன் ஆட்சியாளரின் தளபதியாக இருக்கிறார் என்கிற போது, தேவப்பெருமாளுக்கு என்ன ஆபத்து நேர

* காஞ்சி ஆலயத்திற்குத் 'தியாக மண்டபம்' என்று ஒரு பெயர் உண்டு.

முடியும்? இன்றே புறப்பட்டு பச்சைமலைக்குச் செல்வோம். எனது தேவராஜனைக் காணத் துடிக்கிறேன்" - ஆத்தான் ஜீயர் கதறினார்.

சுந்தரராகவர், ஜீயர், வீரராமன் மற்றும் சீடர்களின் பரிவாரம் பச்சைமலையை நோக்கிச் சென்றது.

மலை ஏறியதும் ஜீயர் தடாரென்று பெருமாளின் முன்பாக விழுந்து நமஸ்கரித்தார்.

"அவ்வளவு பிரம்மாண்ட ஆலயத்தை வைத்துக் கொண்டு இந்தச் சின்னஞ்சிறிய குகையில் வசிக்கின்றீரே?" - அழுது கொண்டே இருந்தார், ஆத்தான் ஜீயர்.

"இனியும் தாமதிக்கக்கூடாது. என்னுடன் நீரும் வாருங்கள். உடையாரைச் சந்தித்து நாம் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பெருமாளை காஞ்சிக்கு எழுந்தருளச் செய்வோம்!" என்றதும் பரிவாரமாக உடையாரைச் சந்திக்க உடையார்பாளையம் புறப்பட்டனர்.

"நான் பெருமாளுக்கு காவலாக இங்கேயே இருக்கிறேன். இவ்வளவு காலமாக நீங்கள் காவல் புரிந்தீர்கள். இப்போது நீங்கள் உறங்கச் செல்லுங்கள்!"- வழக்கமாகக் காவல் புரியும் காவலர்களிடம் வீரராமா கூறினான்.

அனைவரும் உறங்கச் சென்றுவிட, அந்த இரவு வேளையில் நிசப்தமாக இருந்தது. தனது வாளை ஓரமாக வைத்துவிட்டு இரண்டு பெருமாள்களையும் வெறித்துக் கொண்டே இருந்தான், வீரராமன்.

தனியாக ஒரு குகையில் தேவப்பெருமாளுடன் இருப்பது ஒரு புது அனுபவமாக இருந்தது. தேவப் பெருமாள் மற்றும் கரியமாணிக்கப் பெருமாள் இருவருமே ஒரே உயரமும் ஆக்ரதியும் கொண் டிருந்தனர்.

இரவு படர, அங்கே நிலவிய அமைதியை இரசித்துக் கொண்டிருந்த வேளையில் தண்டை ஒலி கேட்க, திகைப்புடன் குகையின் வாயிலைக் கவனித்தான்.

ஒரு மலைவாசி சிறுவன் நின்றிருந்தான். நெற்றி முழுவதும் குங்குமத்தை அப்பி இருந்தான். கழுத்தில் பலவித மாலைகள் அணிந்திருந்தான்.

"யாரப்பா நீ?" வீரராமா கேட்டான்.

"பழமலைராயன் கோயிலில் இருந்து வருகிறேன். ராத்திரி பூஜை செய்யப் போகிறேன். அதற்கு முன்பாக இங்கே ஸ்வாமியை தரிசிக்க வந்திருக்கிறேன்." - அந்தச் சிறுவன் கூறினான்.

"அங்கிருந்தே தரிசனம் செய்து கொள்!"-சந்தேகத்துடன் கூறினான் வீரராமன்.

"இல்லை. நான் இந்த ஸ்வாமியை தரிசனம் செய்ய வரவில்லை. உள்ளே இருக்கும் ஸ்வாமியைத்தான் நான் தரிசிக்க வேண்டும்" என்றவன், வீரராமனை லட்சியம் செய்யாமல் குகையின் உள்ளே நுழைந்து அங்கிருந்த பாறையை நகர்த்தி உள்ள தவழ்ந்து சென்றான்.

வீரராமன் திகைப்புடன் அந்தச் சிறுவன் சென்ற துவாரத்தை உறுத்துப் பார்த்தான். நீண்ட இடைவேளைக்குப் பிறகு, மீண்டும் தண்டை ஒலி கேட்க, அந்தச் சிறுவன் அந்தத் துவாரத்தின் வழியாகவே வெளியே வந்து வீரராமனை லட்சியம் செய்யாமல் குகையைவிட்டு வெளியே சென்றான். அந்தச் சிறுவனின் தண்டை ஒலியைக் கேட்டு எழுந்து வந்த தாடாளன், வீரராமனை பார்த்தான்.

"யார் வந்தார்கள்? ஏதாவது பிரச்னையா?" என்று கேட்டான்.

"சற்று இங்கேயே இரு? நான் இதோ வருகிறேன்.." என்றவன் குகையின் முடிவில் இருந்த பாறையை

நகர்த்திவிட்டு உள்ளே ஊர்ந்து சென்றான். அப்படியே சிறிது தொலைவு சென்றவன் ஒரு சமவெளி வருவதைக் கண்டு எழுந்தான். தான் குன்றின் உள்ளே இருப்பதை யூகித்தான். அந்தச் சிறுவன் உள்ளே விளக்கை ஏற்றி இருக்க வேண்டும். ஒரு சிறிய அகல் விளக்கு ஒளிர்ந்துக் கொண்டிருந்தது. அந்தக் குன்றின் இருள் சூழ்ந்த உள்பகுதியில் அந்தச் சிறு அகல்விளக்கு ஒரு பெரிய நிழலினை உருவாக்கி இருந்தது. அது ஒரு திருமால் சிலையின் நிழல். தான் காண்பதுதான் அத்திமலைத் தேவனின் தேவ உடும்பர சிலை என்பதை அவன் அறியவில்லை. சிலையை நெருங்கிச் சென்றவன், அதன் திருவடியில் இருந்த ஓலையைக் கவனித்தான். சற்றே கிலமாக இருந்தாலும் அவனால் அந்தச் சுவடியை வாசிக்க முடிந்தது.

மறுநாள் உடையாரைச் சந்தித்துவிட்டு வந்த ஆத்தான் ஜீயர், அம்பி சுந்தரராகவர், பட்டர்கள், மற்ற குழாத்தினர் யாவரும் அத்திமலைத்தேவனைக் கண்டு ஸ்தம்பித்துப் போய் நின்றனர். பானைமலை உச்சியில் உணர்ச்சி பிரவாகம் பெருக்கோடியது. காளை என்கிற நந்தி சின்னத்தை கொண்ட பல்லவத்தின் எல்லையும் புலி சின்னம் கொண்ட சோழத்தின் எல்லையும் சந்திக்கும் இடத்தில் இருந்த பச்சைமலையின் உச்சியில் பானை மலையில் கிடைத்துவிட்டார் அத்திவரதர்.

வார்த்தெடுக்கப்பட்டவன், வேர்விட்டவனை மீட்டுவிட்டான்.

திருக்கச்சி நம்பி இராமானுஜரிடம் அன்றொரு நாள் கூறிய செய்தி இன்று பலித்துவிட்டது.

அங்கிருந்த அனைவரும் ஆற்று நீரில் விளையாடித் தங்கள் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.

வீரராமன் தலைமையில் முதியவர்களைத் தவிர மற்றவர்கள் குன்றின் மீதேறி பானைமலையின் வாயைத் திறந்தனர்.

*தனது ஆட்களின் உதவியுடன் அத்திமலையானின் சிலையைக் கயிற்றில் கட்டி மேலே இழுத்து அதனை இருபது பேர் சுமந்து பத்திரமாகக் குன்றிலிருந்து இறக்கினார்கள். அத்திமலைத்தேவனின் சிலையைத் துடைத்துக் குகையின் முன்பாக நிறுத்தினர்.*

*"இந்த நாள் நமது வாழ்க்கையில் மிக முக்கியமான நாள். தேவப்பெருமாள் அத்திமலைத்தேவனை மீட்ட நாள்!" - ஜீயர் கூறினார்.*

*அன்று இரவு தீயை மூட்டி அனைவரும் பரிசாரகர் சமைத்த உணவை ருசித்துக் கொண்டிருந்த நேரம். யாருமே எதிர்பார்க்காத வகையில் பத்துப் பதினைந்து கள்வர்கள் திடீரென்று தோன்றி விக்கிரகங்களை நோக்கிச் செல்ல, வீரராமா தலைமையில் அனைவரும் அவர்களுடன் மோத, அனைவரையும் விரட்டி அடித்த வீரராமா, ஒருவனை மட்டும் சிறைபடுத்தினான்.*

*"நீ யார்?" வீரராமா கேட்க, அந்த மனிதன் தயக்கத்துடன் பதிலளித்தான்.*

*கணவாய் மலை உச்சியில் சந்தா சாகேப் வெள்ளையர்களுக்கு எதிராகப் படைகளைத் திரட்டிக் கொண்டிருக்கிறான். போருக்குச் செல்வம் தேவைப்பட்டதால், இங்கே தங்கியிருந்தவர்களிடம் பொக்கிஷங்களைக் கொள்ளையடிக்க வந்தோம்." அந்த மனிதன் கூறினான்.*

*"வீரராமா! அத்திமலையானை நீதான் மீட்டெடுத்தாய். சந்தா சாகேப் ஆட்களிடம் இருந்து பெருமாளைக் காப்பாற்றினாய். உன்னைச் சீடனாக அடைந்ததில் நான் மிகப் பெருமை அடைகிறேன். இந்தப் பானை மலையை இனி நாம் *வீரராம மலை என்று அழைக்க வேண்டும்!"- ஆத்தான் ஜீயர் கூற, அனைவரும் கரவொலி எழுப்பினர்.*

---

* இன்றும் பச்சைமலை உச்சியில், பானை மலையைப் பிளந்து வெள்ளாறு மற்றும் கள்ளாற்றின் குறுக்காகக் கட்டப்பட்ட அணையை வீரராம அணை என்று அழைக்கிறார்கள்.

## 53. பொலிக.. பொலிக

**தே**வப்பெருமாளையும் அத்திவரதரையும், கரிய மாணிக்கப் பெருமாளையும் காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளச் செய்ய ஏற்பாடுகளில் பரிவாரத்தார் ஈடுபட்டிருந்த வேளை..

திடீரென்று-

திருக்கச்சி ரங்கப்ப உடையார் தனது படைகளுடன் பாளைமலையின் குகையைச் சூழ்ந்து கொண்டார்.

"பெருமாளின் மூர்த்தங்கள் உடையார்பாளையத்துக்கு உரிமையானது. அவற்றைத் தர முடியாது" என்று போருக்கு வர, வீரராமாவின் வீரத்திற்கு மற்றொரு விருந்து கிடைத்தது. ஒருவாறாக உடையாரை அடக்கி அவரது மார்பில் தனது வாளை வைக்க, ஆத்தான் ஜீயர் குறுக்கிட்டார்.

"வேண்டாம், வீரராமா! இத்தனை காலம் நமது தேவப்பெருமாளை பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்தவர். பெருமாளை பிரியப்போகிறோமே என்கிற வருத்தத்தில் நம்முடன் மோதுகிறார். அவரை மன்னித்துவிடு.." ஜீயர் கூற, உடையார் கண்கலங்க ஜீயரைப் பணிந்தார்.

"உண்மை சுவாமி! தேவப்பெருமாளைவிட்டு எப்படி நான் பிரிந்திருப்பேன். அவனுடன் ஒன்றிப் பழகி விட்டேன். எனது கோரிக்கை ஒன்றைத் தாங்கள் நிறைவேற்ற வேண்டும்" - ஜீயரை நோக்கி இறைஞ்சினார், உடையார்.

"என்ன அது உடையார் அவர்களே?" - ஆத்தான் ஜீயர் கேட்டார்.

"தேவப்பெருமாளைத்தான் நீங்கள் எடுத்துச் செல்கிறீர்கள். *கரியமாணிக்கப் பெருமாளையாவது எனக்குத் தாருங்கள். நான் இங்கே அவனுக்கு ஆலயம் எழுப்பி, அவனை தேவப்பெருமாளாகத் தொழுகிறேன்."

"கரியமாணிக்கப் பெருமாளை உங்களுக்குத் தருகிறேன். நீங்கள் ஆலயம் கட்டி அவனைக் கொண்டாடுங்கள்" என்றார் ஆத்தான் ஜீயர்.

ஜீயர் பட்டர்களைப் பார்க்க, அவர்கள் கரிய மாணிக்கப் பெருமாள் மற்றும் அவரது ஸ்ரீதேவி பூதேவி களைச் சிவிகை ஒன்றில் ஏற்றி உடையாருக்கு அளிக்க அவர் உடையார்பாளையத்திற்கு எடுத்துச் சென்றார்.

"கி.பி.550-ல் சிம்மவர்மனின் ஆட்சியில் அத்தி மலையைவிட்டு வெளியேறிய அத்திவரதர், கி.பி.1710-ல் மீண்டும் தனது இருப்பிடத்திற்குத் திரும்புகிறார். எனவே அவனது வருகையைக் கோலாகலமாகக் கொண்டாட வேண்டும்." - பரிஜனத்தார் ஏகோபித்த குரலில் கூற, ஆத்தான் ஜீயரும் தலையசைத்த போதுதான், அங்கே பிரசன்னமானார் ராஜா தோடர்மால்.

அத்திவரதனையும், தேவப்பெருமாளையும் தரிசனம் செய்துவிட்டு அனைவரோடு தனது மகிழ்ச்சியைக் பகிர்ந்துக் கொண்டிருந்த போதுதான், வீரராமா அத்திவரதரின் வருகையை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப் போவதை தனது தந்தையிடம் கூறினான்.

* திருச்சியின் நுழைவாயிலில் திருக்கச்சி ரங்கப்ப உடையார் கரியமாணிக்கம் என்கிற ஒரு கிராமத்தில் கரியமாணிக்கப் பெருமாளுக்கு ஆலயம் கட்டத் துவங்கினார். ஆனால் அதற்குள் பிரெஞ்சு, சந்தா சாகேப் படைகள் உடையார் பாளையத்தைக் கைப்பற்றிய டுப்ளே, ஆங்கிலேயரை ஆதரித்ததற்காக உடையாரைக் கடுமையாகத் தண்டித்து உடையார்பாளையத்தை நாசம் செய்தான். இன்று அரியலூரில் உடையார்பாளைய அரண்மனை இடிபாடுகளுடன் காட்சி தருகின்றது. கரியமாணிக்கப் பெருமாள் என்ன ஆனார் என்று தெரியவில்லை.

"அவசியம்தானா என்று யோசித்துப் பாருங்கள்!"- ராஜா தோடர்மால் கூற, அனைவரும் வியப்புடன் அவரை நோக்கினர்.

"மன்னராட்சியிலேயே அவரைப் பாதுகாக்க முடியவில்லை. இப்போது கலியின் கோர ஆட்டத்தில் தெய்வ நம்பிக்கைகளே நசித்து வரும் வேளையில், இம்மாதிரி பொக்கிஷங்களை பிராபல்யப்படுத்தி அதற்கு ஆபத்தை உண்டாக்குவானேன். அரசியல் காரணங்களுக்காகத்தானே அத்திமலைத்தேவன் நமது கையைவிட்டு நழுவிச் சென்றான். இனி அவனைப் பத்திரமாகப் பாதுகாப்போம். அவனது பெருமைகளை அன்றாடம் பேசத் தேவையில்லை. எப்போது அவன் நாட்டுக்குத் தேவைப்படுகிறானோ அப்போது அவனை வெளியே எடுத்து ஆராதிப்போம். மற்ற சமயங்களில் அவனை ஏகாந்தத்தில் விட்டுவிடுவோம். அவனும் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாக ஏகாந்தத்தில்தானே கிடக்கிறான்." - ராஜா தோடர்மால் கூற, அவரது கூற்றில் உள்ள நியாயத்தை அனைவரும் உணர்ந்தனர்.

"தோடர்மால் கூறியதை நான் ஆமோதிக்கிறேன். அத்திமலைத்தேவன் இனி ஏகாந்தத்தில் இருப்பான். நாற்பது வருடங்களுக்கு ஒரு முறை அவனை வெளியே எடுத்து ஆராதிப்போம். ஆயிரம் பிறைகள் என்றால் எண்பது வருடங்கள். நாம் ஐநூறு பிறைகள் முடிந்ததும் அவனை எடுத்து ஆராதிப்போம். ஸ்ரீவர வரத நாராயணனே இனி நிரந்தர அத்திவரதன்."-ஆத்தான் ஜீயர் அறிவித்தார்.

★ ★ ★

**கா**ஞ்சி வரதரின் ஆலயத்தில் கொடி ஏறி பிரம்மோத்சவம் துவங்கி இருந்தது. ஆத்தான் ஜீயரும் மற்ற அதிகாரிகளும் பிரதிஷ்டை செய்திருந்த புதிய தேவப் பெருமாளுக்குக் காப்பு கட்டிக் கொடி ஏற்றி இருந்தார்கள். உற்சவத்தின் இரண்டாம் நாள் வைபவத்தின் போது வீதி

புறப்பாடு செல்வதற்காகப் புதிய வரதர் புறப்பட்ட போது, ஒரு கொடி ஏந்திய குதிரை வீரன் ஆலயத்தினுள் பிரவேசித்தான்.

“இருபத்து இரண்டு வருடங்களுக்கு முன்பாகப் புறப்பட்டுச் சென்ற தேவப்பெருமாள் மீண்டு வந்து கொண்டிருக்கிறார்!”-அந்தக் குதிரை வீரன் கூறியதும் தான் தாமதம். எங்கும் பேரானந்தக் கூச்சல். ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டு கதறத் துவங்க, புதிய வரதரை அவசரமாகக் கண்ணாடி அறையினுள் எழுந்தருளச் செய்தனர்.

தேவப்பெருமாள் வருகிறார் என்று எங்கும் ஒரே பேச்சு. குதூகலம். வீதிகளில் பெண்கள் தண்ணீரை இறைத்து கோலம் போட ஆண்கள் அவசரமாக மாவிலையைப் பறித்துத் தோரணம் கட்டினார்கள்.

இரவு பதினோரு மணியளவில், காஞ்சிக்குள் நுழைந்தார் தேவப்பெருமாள். தனது கோயிலை நோக்கி ராஜநடை போட்டுக் கொண்டு வந்தார். மக்கள் ஆனந்தக் கண்ணீருடன் அவரை வரவேற்க, ஆத்தான் ஜீயர் பூரண கும்பத்துடன் சிவிகையினுள் நோக்கினார்.

ஜீயர் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனார்.

தேவப்பெருமாள் சிவிகையில் புன்னகைத்தபடி இருக்க, அவன் எதிரே இரண்டு பூதேவிகள். ஸ்ரீதேவி இடக்கையில் தாமரையுடன் வலது புறத்தில் நிற்பாள். பூதேவி வலதுகையில் தாமரையுடன் இடதுபுறம் நிற்பாள். ஆனால் சிவிகையில் இருக்கும் இரு தேவிகளுமே வலது கையில் தாமரைகளுடன் நிற்கின்றனர். ஒருவேளை திருக்கச்சி ரங்கப்ப உடையார் கேட்டு வாங்கிச் சென்ற கரியமாணிக்கப் பெருமாளுக்கு இரண்டு ஸ்ரீதேவிகளும் சென்றுவிட்டனரா? எப்படியோ இது வரதனின் திருவுள்ளம்!

பெருமாளுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. புதிய வரதருக்கு ஏற்றப்பட்ட கொடி

இறக்கப்பட்டு, அந்த விக்ரகம் கஜானாவில் வைக்கப் பட்டது. மீண்டும் தேவராஜன் தனது கொலு மண்டபத்தில் கோலோச்சத் தொடங்கினான்.

புதிதாகக் கொடி ஏற்றப்பட்டுப் பத்து நாளைக்குப் பிரம்மோத்சவம் நடந்தது. இப்போதும் ஒவ்வொரு வருட பிரம்மோத்சவத்தின் போதும், இரண்டாம் நாள் இரவு உடையார்பாளைய உற்சவம் நடைபெறுகிறது.

அது சரி! அத்திமலைத்தேவனின் சிலை எங்கே! சிவிகையில் தேவப்பெருமாள் வந்த போது அனைவரும் அவரையே கவனித்துக் கொண்டிருக்க, சிவிகையைத் தொடர்ந்து வந்த வில்வண்டியில் பத்தடி நீளத்துக்கு ஒரு மரப்பெட்டகம் வைக்கப்பட்டிருந்ததை யாரும் கவனிக்கவில்லை. அதன் மீது பட்டுப்பீதாம்பரங்களும், வேட்டிகளும், புஷ்ப மாலைகளும் சாற்றப்பட்டிருந்தன. வரதனின் வஸ்திரங்களும், புஷ்பங்களும் செல்கின்றன என்று பலரும் நினைத்திருந்தனர்.

பிரம்மோத்சவம் முடிந்ததும் ஒரு நல்ல நாளில், நடுநிசியில் அனந்தசரஸில் அமைக்கப்பட்ட தொட்டியில் எழுந்தருளப்பட்டார், அத்திமலைத்தேவன்.

தொடர்ந்து காஞ்சி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மூன்று கர்னாடிக் போர்கள் நடந்தன. அத்திமலையான் ஆலயத்திற்கு வந்திருந்த ஆங்கிலேய வைஸ்ராய் ராபர்ட் கிளைவ் விடம் அத்திமலையானை பற்றிய தகவல்களைக் கூற, அனந்தசரஸ் கரையில் நின்று மனதினுள் வேண்டிக் கொண்டான். சந்தா சாகேப்பை தோற்கடித்தால் தான் அத்திமலையானுக்கு மகரகண்டிகை ஒன்றைச் சாற்றுவதற்காக வேண்டிக் கொள்ள, விரைவிலே அந்தப் போரின் முடிவு அவனுக்கு சாதகமாக முடிந்தது. அத்திமலைத்தேவனுக்குத் தனது கையால் மகரகண்டிகை ஒன்றைப் பரிசளித்தான், ராபர்ட் கிளைவ். ஸ்ரீதளமணிக்கு மாற்றாக அவனுக்கு மகரகண்டிகையை ஆங்கிலேயர்கள் வழங்கியதாக எடுத்துக் கொள்ளலாம்.

அனந்தசரஸின் நீரின் அடியில் அத்திமலைத்தேவனின் தேவ உடும்பர பிரதிமையை வைத்த வேளையில், நடுநிசியில் கரிய வானில் நிறைய மேகப்பொதிகள் தென்பட்டன. அதன் பின்பாக நின்று, அத்திமலைத் தேவன் பத்திரமாக அனந்தசரஸில் துயில் கொள்வதைப் பல நல்ல உள்ளங்கள் கண்டு கொண்டிருக்க வேண்டும்.

சாணக்கியன், சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், புஷ்யமித்ரா, சிம்மவர்மன், சிம்மவிஷ்ணு, ஜெயவர்மன், நவரத்ன பல்லவி, ராஜஸ்ரீ, ராஜவர்மன், மகேந்திரன், நரசிம்மவர்மன், உதயசந்திரன் பார்த்திப பல்லவன், கல்பலதா என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

கைப்பற்ற நினைத்தவர்கள், காக்க நினைத்தவர்கள், அவனைக் காத்தவர்கள், அவனால் அழிக்கப்பட்ட வர்கள் என்று பலர் வந்தனர், இருந்தனர், போயினர். சிலர் வென்றனர், சிலர் தோற்றனர், சிலர் ஏமாந்தனர், சிலர் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

எப்படி இருந்தாலும், ஆயர்பாடிக் காலம் தொடங்கி இன்றைய காலம் வரையில் வெற்றி கொண்டவன் ஒருவனே..

அவன்தான் அத்திமலைத்தேவன்.

குணம்குன்றத்தில், வசவசமுத்திர கோயிலில், பிறகு கடலடியில் வாசம், அதன் பிறகு பிரவாள மாளிகையின் புகைபோக்கி, அங்கிருந்து பச்சைமலையின் உச்சியில் உள்ள பானைமலையின் உள்ளே என்று ஆயிரத்தி இருநூறு ஆண்டுகளில் பல இடங்களில் சிறைபட்டு விட்டான்.

இனியாவது அவனை அமைதியாக விட்டுவிடுவோம்.

அனந்தசரஸின் நீரின் அடியில் அவன் நிம்மதியாகத் துயில் கொள்ளட்டும்.

அத்திமலைத்தேவனின் பயணம் இனிதே முடிந்தது.

## எ. (மன)நிறைவுப் பகுதி

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளைக் கடந்த நீண்ட சரித்திரப் பயணம் இனிதே முடிந்தது.

தேவ உடும்பர அத்திமரத்தின் கதை.

இது ஒரு கதையல்ல! நிஜமே..

ஆதாரங்கள் உள்ளன. கண்களின் முன்னால் காட்சிகளும் உள்ளன. அனைத்தும் சரித்திரங்கள்..! நிகழ்ந்தவை உண்மையே. நாம்தான் அவற்றை நுகரும் சக்தியை இழந்துவிட்டோம்.

பல்லவன் கல்லிலே சிலை வடித்தான்.. சிற்பங்களை ஆலயத் தூண்களில் பொறித்தான். அந்த அற்புதச் சிலைகளை இயந்திரங்களால் துளைத்து இரும்புக் கம்பிகளை நுழைத்துச் சிறப்பு தரிசன வரிசைகளைத் தயார் செய்யும் ஆட்சியாளர்கள் ஒருபுறம்..

மல்லை சிற்பங்களின் பெருமைகளை அறியாமல் 'ஐ லவ் யு சங்கீதா' என்று வினோத்தும், 'வினோத் எனது உயிர்' என்று சங்கீதாவும் இளம் காதலர்களாகக் கிறுக்கி எழுதும் நிலையில், சரித்திரங்களை நுகர்வதற்கு யார் இருக்கின்றார்கள்?

சரித்திரம் படைக்கிறோம் என்று மார்தட்டும் இன்றைய தலைவர்கள், சரித்திரம் எனும் ஆழ்ந்த — பயனுள்ள கருப்பொருளை மக்களின் மனதில் இருந்து துடைத்து எறிந்துவிட்டு, எந்த சரித்திரத்தில் இடம்பெறப் போகிறார்கள்..? தெரியவில்லை!

நம்மிடையே வாழ்ந்த தலைவர்களின் சிலைகள் அன்றாடம் மானபங்கம் செய்யப்படுகின்றன. சிலை

களின் தலை உடைபடுவதும், இரும்பு வளையங்களில் தலைவர்களின் சிலைகள் சிறைபடுவதும் அன்றாடம் காணும் நிகழ்வுகள்.

மன்னன் இராஜராஜ சோழன் எங்கள் நிலங்களை அபகரித்தான் என்று வாய்கூசாமல் பொய் உரைக்கப் புறப்பட்டிருக்கும் சிலர்..

தலைவர்களின் மெரினா சமாதிகளை அன்றாடம் பூக்களால் அலங்கரித்துப் பாதுகாப்பு செய்யும் அரசுகள், சேர, சோழ பாண்டிய, பல்லவ நினைவுச் சின்னங்களைப் பற்றிக் கவலைப்படாமல் அலட்சியம் காட்டி வருகின்றன.

இத்தகைய வருங்காலத்தைத் தீர்க்கதரிசனத்துடன் உணர்ந்த நம் பெரியோர்கள், வருமுன் காப்போம் என்கிற அடிப்படையில் எடுத்த முடிவுதான், மிகவும் ஆற்றல் மிக்கப் பெருமை வாய்ந்த, புராணக் காலத்துப் பெருமை களைக் கொண்டிருக்கும் அத்திவரதனின் சிலையை நீரின் அடியில் வைத்துப் பாதுகாத்து வருவது.

மழையை உண்டாக்கும் மகத்துவத்தைக் கொண்ட அந்தச் சிலையை 2019 வெளியே எடுத்த வேளை, அத்தி மழை பொழிந்தது..

அஸ்வத்தாமா காலம் தொடங்கி இன்றைய காலம் வரையில் அந்தப் பிரதிமையின் தொடர் பயணத்தை விவரித்துவிட்டேன்.

நந்தர்கள், சதவாகனர்கள், மௌரியர்கள், குப்தர்கள், பல்லவர்கள், களப்பரர், சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள், சாளுக்கியர்கள், கங்கர்கள், கலிங்கர்கள், கோல் கொண்டா, பீஜப்பூர், சுல்தானியர்கள், மராட்டியர்கள், ஆங்கிலேயர் என்று பல பெரிய சாம்ராஜ்யங்களையும், சிறிய சாம்ராஜ்யங்களையும் துருவி அலசி ஆதாரங் களைத் தேடி, காஞ்சி என்கிற ஒப்பற்ற நகரத்துடன் அவர்களுக்குரிய தொடர்புகளை இணைத்த போது, அனைவரது தேவையும் தேவ உடும்பர மரச்சிலையாக

இருந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்கியது.

எந்த ஒரு சரித்திர நாயகனையோ நாயகியையோ சுத்தசத்வமாகக் காட்டி, அவரை எனது கதா நாயகனாகவோ, கதாநாயகியாவோ நான் காட்ட வில்லை. சம்பவங்களை அப்படியே காட்டினேன். எனவே உங்கள் மனதில் கதாநாயகர்களாக உலா வருபவர்கள், எனது புதினத்தில் வில்லனாக வந்திருந்தால் தவறு நான் செய்யவில்லை. நீங்கள்தான் செய்திருக் கிறீர்கள். காரணம் எனது அத்திமலைத்தேவனின் நாயகன் சரித்திர சம்பவங்கள்தான். நாயகி, நான் கொடுத்திருக்கும் ஆதார குறிப்புகள்தான்.

1979-ல் அத்திவரதர் வெளியே வந்த போது நான் துவங்கிய இந்த அஸ்வமேத யாகத்தை இன்று முழுத் திருப்தியுடன் நிறைவு செய்துவிட்டேன்.

எத்தனை பாத்திரங்கள்..! எத்தனை குணாதிசயங்கள்..! எத்தனை பிரம்மிக்கவைக்கும் நிகழ்வுகள்..!

அஸ்வத்தாமா உபபாண்டவர்களைத் தீயிட்டுக் கொளுத்தி, அவர்களைக் கொன்ற வினைப்பயன், கடைசி இரு பல்லவர்களான, பல்லவ பார்த்திபேந்திரன் மற்றும் கல்பலதா தீயில் கருகி மாண்டதை அவன் பார்க்க நேர்ந்தது.

போதி என்கிற வடநாட்டு தேவ உடும்பர மரம் அசோகனின் மனைவி திஸ்ஸரக்காவினால் அழிக்கப் பட்டதற்கும், அது அரசமரத்தில் பின்னர் வளர்க்கப் பட்டதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

பெரும்பாலானோர் என்னைக் கேட்ட கேள்வி, சாணக்கியன் காஞ்சியில் பிறந்தான் என்பதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள் என்று?

இது என்ன பெரிய வித்தை? கட்சிகளின் சின்னங்களைப் பார்த்ததும் அவற்றின் தலைவர்கள் நமது நினைவில் வருவதில்லையா?

அதேபோன்று, சாணக்கியனின் திறமைகளுடன் ஒரு சிறுவன் அத்தியூர் வேகவதி ஆற்றங் கரையில் உள்ள விஷ்ணு காஞ்சியில் வசித்திருக்கிறான். அவனது பெயர் விஷ்ணுகுப்தன்.

அவனது தந்தையும் தாயும் குருகுலம் நடத்தியவர்கள். தான் ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்க வேண்டும் என்று கனவு கண்டவன். கௌடில்யன், சாணக்கியன் போன்ற பெயர்கள் அவன் புகழ் பெற்ற பிறகு வழங்கப்பட்ட பெயர்கள்தான். தென்னகப் பகுதியில் வசித்தவர்களுக்கு உரிய அறிவுக் கூர்மையுடன் திகழ்ந்த அவன், இங்கிருந்து சென்றுதான் வடநாட்டைக் கலக்கி காட்டு வாசியான சந்திரகுப்தனை அஸ்வமேதம் செய்வித்து மன்னனாக உயர்த்தினான். அவன் செய்த தவறு, தெற்கே உள்ள தேவ உடும்பர சிலையைப் பற்றி வடநாட்டு மன்னர்களுக்கு எடுத்துரைத்ததுதான். அதனால்தான் அசோகர், சமுத்ரகுப்தர், புலிகேசி ஆகிய வடபுல மன்னர்களின் கவனம் காஞ்சியின் மீது படர்ந்தது.

அதற்கு முன் இருந்த தமிழ் இலக்கியங்கள் எல்லாம், திருமால், சிவன், தேவியைப் பற்றியே போற்றிக் கொண்டிருந்தன. அசோகன் காலத்தில்தான் புத்த மதமும், களப்பரர் காலத்தில் சாக்கியமும் தென்பகுதியில் நுழைந்தன.

அசோகர், ஹர்ஷர், புலிகேசி ஆகியோரின் குணங்களை நமது சரித்திரம் வேறு மாதிரியாகத்தான் எனக்குப் போதித்திருந்தது. நமது சரித்திரத் தலைவர்களைப் பற்றி மொத்தமாக பத்து மதிப்பெண்கள் வினா அல்லது ஐந்து மதிப்பெண்கள் வினா அளவில்தான் கேள்விகள் கேட்கப்பட்டு அதற்குத் தேவையான பாடங்களை மட்டுமே மாணவர்களுக்கு போதிக்கின்றனர்.

அசோகர் மற்றும் ஹர்ஷரின் சரித்திரத்தை ஆழமாகத் துருவி ஆய்வு செய்த போது எனக்குக் கிடைத்தது பெரிய அதிர்ச்சி. பெண்ணாசை மிக்க அசோகர் கலிங்கத்தில்

கோரத்தாண்டவம் ஆடியிருக்கிறார். அசோகர் மரம் நட்டார் என்றுதான் படித்திருக்கிறேன். தனது பெண்ணாசையால் போதி மரம் அழிவதற்கே அவர் காரணமாக இருந்தார் என்பதை அறிந்துகொண்டேன்.

புலிகேசி மாவீரன்! அவன் பெயரைக் கேவலமாகச் சித்தரித்திருக்கும் தமிழ்த் திரைப்பட உலகிற்கு எனது கண்டனங்கள்.

எத்தனையோ கதாபாத்திரங்கள் நமது அத்திமலைத் தேவன் புதினத்தில் உலவினாலும், நம்மால் மறக்க முடியாத பாத்திரங்கள் இவை.

முதல் பாகத்தில், சாணக்கியன், சந்திரகுப்தன், அவன் மனைவி துர்தரா, மற்றும் புஷ்யமித்ரா.

இரண்டாம் பாகத்தில், கரிகாலன், இளந்திரையன், சமுத்ரகுப்தன்.

மூன்றாம் பாகத்தில், ஜெயவர்மன், ராஜவர்மன், ராஜஸ்ரீ, பிரக்ஞுதாரா.

நான்காம் பாகத்தில், உதயசந்திரன்.

என்று வாசகர்கள் தங்களது தேர்வினை எனக்குத் தெரிவித்தார்கள்.

பல்லவத்தினுள் யாரும் இவ்வளவு ஆழமாகப் பயணித்ததில்லை என்று அனைவருமே ஒருமனதாகக் கூறினார்கள். நான் வழங்கிய ஆதாரக் குறிப்புகளையே தனிப் புத்தகமாகப் போட வேண்டும் என்று பலரும் யோசனை கூறினார்கள்.

சம்பவங்களை தொய்வில்லாமல் தொடர்ந்து தந்திருக்கின்றீர்கள். சரித்திரக் கதை என்றாலே, தனிநபர் துதி, இயற்கை வர்ணனை, ஒரு மன்னனின் வீரத்தைப் போற்றுவது, போர் வர்ணனைகள், கதாநாயகியரின் மேனியையும் இயற்கையையும் ஒப்பிடுவது என்று பக்கங்களை நிரப்புபவர்கள் இடையே, மேலே மேலே

சரித்திரச் சம்பவங்களை மட்டும் அடுக்கிக்கொண்டே கதையை உருவாக்கியுள்ள விதம் எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று பலரும் கூறினர்.

ஆக அத்திமலையானை சென்ற 2018 ஜூலையில் வெளியே எடுத்து பதினெட்டு மாத காலம் ஆ பனுடன் உறவாடிவிட்டு, இதோ டிசம்பர் 2019 அவனை மீண்டும் அனந்தசரஸ் குளத்தில் பத்திரமாக வைத்துவிட்டேன்.

இந்தப் புதினம் வெற்றியை அடைந்தது என்று வானதி பதிப்பகத்தார் கூறினார்கள். அடுத்த பாகம் எப்போது என்று எங்கள் டெலிபோன் ஆபரேட்டருக்குப் பதில் சொல்லி மாளவில்லை என்றார் டாக்டர் வானதி இராமநாதன்.

லைப்ரரிக்குச் சென்றால் எனக்கு நல்ல வரவேற்பு. குறிப்பாக நான் மூன்றாம் கிளாஸ் படிக்கும் போதிலிருந்து கோபாலபுரம் ஈஸ்வரி லைப்ரரியில் மெம்பர். பல புத்தகங்களைத் தொலைத்து அதன் உரிமையாளரிடம் வசவு வாங்கியிருக்கிறேன். இன்று அவரது வாயால், 'உங்கள் அத்திமலைத்தேவன் பிரமாதம்..' என்கிற கருத்தைக் கேட்கும் போது காலம் எனக்கு எப்படிப்பட்ட வாய்ப்பினை வழங்கியிருக்கிறது என்பதை உணர்கிறேன்.

எனது தாய் கமலா சடகோபன் அவர்கள்தான் எனது புதினங்களைப் படித்து முதலில் கருத்து கூறுவார். அதன் பிறகே நான் வானதிக்கு அனுப்புவேன். இப்போது அவர் இல்லாத நிலையில் வானதி பதிப்பகம்தான் எனது தாய்.

எனக்குப் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், சரித்திரப் புத்தகமே படிக்காத எனது தந்தை, சித்ராலயா கோபு எனது நாவல்களைப் படித்திருக்கிறார் என்பது! ஐந்து பாகங்களையும் படித்து எனக்கு வாழ்த்தும், ஆசியும் கூறினார் என்றால் நான் மிகப் பெரிய பாக்கியத்தைப் பெற்றுள்ளேன்.

'இம்மாதிரி எழுதுவது மிகவும் கஷ்டம்' என்றும் கூறினார்.

அடுத்தபடியாக நான் நன்றி கூற விரும்புவது, டாக்டர் வானதி இராமநாதன் அவர்களுக்கு. அத்திமலைத்தேவன் எழுதப்போகிறேன் என்றதுமே, 'சபாஷ்!' என்று கூறி தனது ஒத்துழைப்பை நல்க ஆரம்பித்தவர், அத்திவரதர் தரிசனத்திற்காக வரிசையில் நின்ற மக்களிடையே, அத்தி மலைத்தேவனைப் பற்றிய புத்தக விளம்பர நோட்டீசு களைத் தந்தார்.

வானதியின் ஒவ்வொரு ஊழியருக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்புத்தம்பி திரு. சரவணனுக்கும் மிக்க நன்றி.

நண்பர் திரு. சுந்தர் கிருஷ்ணன் அவர்களுக்கும் விசேட நன்றி. சரித்திரத்தை சுவாசிப்பவர் அவர். எனக்கு நல்கிய ஆதரவை வார்த்தைகளால் கூற முடியாது.

எனது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் சிறப்பு நன்றி. அருகில் காபி வைத்துவிட்டுச் செல்வார் எனது மனைவி. ஏடு படிந்து ஆறிப்போய் அது அப்படியே இருக்கும்.

'அப்பா! போயிட்டு வரேன்..' என்று சொல்லிவிட்டுச் செல்வங்கள் சென்றிருப்பார்கள். 'காலையில் சொல்லா மலேயே போய்விட்டீர்களே..?' என்று அவர்களுடன் மல்லுக்கு நிற்பேன். உறவினர்கள் போன் செய்வார்கள். 'ம்ம்..' என்று அஸ்வாரஸ்யமாகப் பதில் கூற, 'என்ன அத்திமலைத்தேவன் எழுதிக் கொண்டிருந்தாயா?' என்று கேட்பார்கள்.

அத்திமலைத்தேவன் புதினத்தில் எவ்வளவு ஆழ்ந்து போயிருந்தேன் என்றால், எனது மைத்துனனின் குழந்தை என்னிடம் வந்து ஒரு சாக்லெட்டை நீட்டி, 'அங்கிள், பேப்பரை பிரிச்சுக் கொடு' என்று கேட்க, புதினத்தின் தாக்கத்தில், பேப்பரைப் பிரித்து அந்தச் சாக்லெட்டை

எனது வாயில் போட்டுக் கொண்டுவிட்டேன். அழும் அந்தக் குழந்தையை சமாதானப்படுத்த வேறு சாக்லெட் வாங்க வேண்டியிருந்தது. அழும் குழந்தைக்கு நான் எழுதும் அத்திமலைத்தேவனையா படித்துக் காட்ட முடியும்..?

பன்னிரண்டு பாகங்கள் வரை என்னால் எழுதியிருக்க முடியும். ஆனால் ஐந்து போதும். எதையுமே இழுத்து வைத்து அதன் செல்வாக்கைக் கெடுக்கக் கூடாது என்பதில் நம்பிக்கை உடையவன்.

இறுதியாக..

வாசகர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். புதிய நட்புகள் கிடைத்துள்ளன. அவர்கள் வீட்டு திருமணங்கள், விசேடங்கள் அனைத்திற்கும் அழைக்கப் படுகிறேன்.

முகநூல், ட்வீட்டர் என்று அன்றாடம் பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

அத்திமலைத்தேவன் முழு வெற்றிக்கு காரணமான அத்திவரதனின் பொற்பாதங்களில் எனது ஐந்து பாகங்களையும் வைத்து நன்றி கூறுகிறேன்.

அவன் 2059-ல் வெளியே வரும்போது நான் இருக்க மாட்டேன். ஆனால் நான் எழுதிய அத்திமலைத்தேவன் என்கிற இந்த ஐந்து பாகங்களைக் கொண்ட புதினம் அவனது புகழை அப்போது பாடிக்கொண்டிருக்கும்.

அனைவருக்கும் கோடானு கோடி நன்றி.

மீண்டும் சந்திப்போம் என்கிற உறுதியுடன்..

விடைபெறும்..

'காலச்சக்கரம்' **நரசிம்மா.**

## எ. அத்தியோலைகள்
## அத்திமலைத்தேவனைப் பற்றி இவர்கள்..

**அத்திமலைத்தேவன் தொடர் சரித்திர புதினத்திற்கு எழுத்தாளர் இந்திரா சௌந்தரராஜன் அவர்களின் வாழ்த்துரை:**

நரசிம்மன், உங்களின் இம்முயற்சி அசாதாரணமானது. இன்று வரலாறு எழுத குறிப்பாக உண்மை தோய்ந்த வரலாறு எழுத வாய்ப்புகள் இல்லாத நிலை. இம்மட்டில் கல்கி, சாண்டில்யன் காலம் பொற்காலம். நம் வாரிசுகளும் வாசிப்பைவிடச் செல்போனின் காசிப்புகளைக் கட்டி அழுவதில் கவனமாயுள்ளனர். இவ்வேளையில் வானதியோடு சேர்ந்து வளர்நதியாய் அத்திமலைத்தேவன் வலம் வருவதாய் உணர்கிறேன். வரலாற்றுப் பிரியனாய் மனதார வாழ்த்துகிறேன்.

மிக்க நன்றி,
**இந்திரா சௌந்தரராஜன்**

**தி இந்து ஆங்கில நாளிதழ்**

Athimalai Devan is an apt prelude to the re-emergence of the deity from the temple tank in Kanchipuram

Historical is not new to 'Kalachakra' Narasimha. Author of Sankadara, the absorbing sequel to 'Ponniyin Selvan,' and Panchanarayana Kottam, he handles the genre of thriller with ease. In short, his novels keep you riveted. Narasimha's latest, Athimalai Devan, a Vanathi publication, is a historical thriller, which combines facts, faith and fiction. In Kanchipuram is the temple of Varadar. The deity made of fig tree and hence the name Athi Varadar, is immersed in Anantasaras, the temple tank. He is brought out once in 40 years, pujas done for 45 days and

restored to his water bed. Legend has it that he came out of the Yaga fire, which Brahma conducted, and hence to cool him. He is preserved in water. It is also said that during invasions, the figure was damaged and hence left to rest in water.

The author is not convinced by either. What is the significance of the ritual? Why is He made to disappear under water? Narasimha wishes to unravel the mystery and Athimalai Devan is an effort in that direction. The novel is a timely venture because in July, Athi Varadar is going to be retrieved from the tank, after four decades - an event, devotees are eagerly waiting for. Incidentally, the author was witness to the previous festival in 1979 and is looking forward to his visit in July - this time round, he hopes to be armed with facts, a result of intense research.

Interesting web

With the unique ritual as the backdrop, Narasimha has woven an interesting web of history and huge dollops of spiritual beliefs. And this is only the beginning because he promises to come back with sequels by July. At the centre of Part 1 is none other than Kautilya, better known as Chanakya - the creator of Artha Sastra- the brilliant statesman, who redefined political wisdom. But what has he got to do with Kanchi's Varadar? For those who have read about him in school history books as the guide and philosopher of Chandra Gupta Maurya, the book gives an introduction - to his beginning.

Child Vishnuguptan is the son of Vedic scholar Kanchanagupta in Kanchipuram. Bright and inquisitive, he absorbs lessons in no time. Seeing his teeth formation, an astrologer predicts that he would grow up to be an emperor and this upsets his mother. 'Will my son go away from me?' So deep is his affection for his mother that the boy picks up a stone and breaks his teeth. The deformed face works against his favour for a long time inviting ridicule but he counters jibes with his deadly wit.

The young boy realises that there is something mysterious about the deity Devadi Deva. He is made of the wood of the fig tree and there is a secret, which his parents know and will not reveal and to know which his father is summoned by a local chieftain. Here begins the long and adventurous political career of Vishnugupta, who neutralises the enemy to save his parents. But eventually losing them, the boy sets out with pieces of the divine fig tree as his weapon. He faces scorn, humiliation and

defeat before becoming a king-maker. He achieves his goals with clinical precision and ruthlessness. The story travels across landscapes, touching many cultures, Time all along galloping with blurring speed.

So where does that leave Chanakya? The volume closes with an aged statesman, mind as nimble as ever, on the brink. Filled with twists and turns, the racy flow does not give the reader time to look for that thin line, which separates fact from fiction. As the author says in his preface, there are so many versions about Chanakya's life and a little bit from each has been adapted with telling effect.

The other main character is the fig tree, referred to variously as Kanchanam, Poovarasam and Deva Udumbaram. Its divine qualities make several people look for its location, which invites disaster and destruction. Athimalai Devan, Part One whets the appetite for the sequels.

Publisher: Vanathi Pathipakam, 23, Deendayalu Street, T. Nagar, Chennai 600017. Contact: 24342810 and 24310769. Price ₹ 425

**தினமலர் நாளிதழ்**

*அத்திமலைத்தேவனின் முதல் இரு பாகங்களின் விமர்சனம் இன்றைய தினமலரில்! அத்திவரதர் வெளிவந்திருக்கும் தருணத்தில் பொருத்தமாக வெளியிடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளது தினமலர். சரித்திரமும், அரசியலும், ஆன்மிகமும், மர்மங்களும் கலந்த ஒரு விறுவிறுப்பான கதை என்றும் கூறியுள்ளது தினமலர்.*

**லட்சுமிநரசிம்மன் ஸ்ரீதர், பெங்களூரு.**

Thanks to T A Narasimhan Anna for his wonderful series Atthimalai Thevan, which has given fountain of Knowledge to a layman like me. A must read book of History lovers, incidentally i am B A graduate pushed into field of IT and Medical Device research. As a student of political science i have distinction in subject during graduation.

Anna has revealed the mystery of Our Field Marshall of Administration and trend setter for present day Management Guru s Nativity (none other than the CHANAKYA), how he lost his tooth. Then his connection with Lord Athigiri Varadhan (TAN anna s five part book have been written after doing extensive research and painstaking journey Anna has undertaken to spots connected with the book.

Learnt a lot about Bhodgaya, the then Nanda Dynasty. How as a youth Koutilya established his Managerial skills, then as a Good HR personnel how he locates and trains his team to uproot the wicked Nanda Dynasty. We get the insight of Koutilya s managerial skills and how to achieve his goal by Sama Dhana Beda Dhandam policy.

Then he established the Maurya / Mourya Dynasty and he installs Chandra Gupta Maurya (i will not reveal how he does the namakarna of King Chandragupta and also Mourya Dynasty, thrill will go you buy and read).

You will be surprised to read Lord of Kanchi sitting in Kanchi is showering his blessings on his true bhaktha like Koutilya whenever Koutilya approches HIM. It is Lords Padadhuli (Suspense) which is the base foundation of at then established Kingdom of Mourya Dynasty.

Just the indirect rule of Koutilya has started. It reminds me of present day politicians following Chankyas management rules. Not going to discuss about politics which prevailed before. But however politicians stand

Own your book and enjoy reading it. It is available in Vanathi Pathipakam situated at T Nagar, Chennai (On line purchasing facility is not available) or try to other online purchasing options.

I want you all to buy the book and overtake me in writing teaser for this book.

*ஸ்ரீதர் கார்மேகம் விறுவிறுப்புக்கு குறைவில்லை மிக அருமை.*

Muralitharan saamavedham.

Finished 4th part as usual! amazing. What a style of writing. Udayayachandran characteristion was amazing. How many sacrifices for saving the lord and how many traitors. Can't waif for the 5th and final part. Sad it's going to end with the next part. TAN bookai taan taan endru padithuvitten.

**மல்லிகா குரு**

டியர் சார்,

உங்களின் அனைத்துப் புத்தகங்களையும் வாங்கிப் படித்துவிட்டோம். 'சூப்பராக இருக்கிறது' என சொல்வது க்ளீஷே போல இருப்பதால் வேறு எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. அதிலும் குறிப்பாக அத்திமலைத்தேவனைப் படிக்க வியப்பாக இருக்கிறது. எத்தனை நேரம் ஒதுக்கி உங்களைத் தயார்படுத்திக் கொண்டீர்களோ? எத்தனை வருட ஆராய்ச்சியோ? அவைகளைச் சீராக்கி எப்படித்தான் எழுதினீர்களோ? மலைப்பாக இருக்கிறது. அதிலுள்ள விஷயங்களை மனதில் வைக்கவே சிரமமாக இருக்கிறது. அதற்காகவே மறுபடியும், மறுபடியும் படிக்க வேண்டியுள்ளது.

அத்திவரதர் உங்களுக்கு நீண்ட ஆயுளைத் தரட்டும்.

அன்புடன்,

**மல்லிகா குரு,** 5ஏ, சாமினாதன் தெரு,

மேற்கு மாம்பலம், சென்னை. 600033

9841620362.

**RANGARAJAN RAMANUJAM**

Superb writing Sir.. magadham, chozham, pallavam, chalukyam, gangam nu.. you are taking us to a time travel across centuries.. with Tamil puzzles and solutions, historical evidences& references nu.. idhu oru full meals Sir.. thangal pani thoivindri thodara Vaazhthukkal.

## KUMARASAMY C S

ஐயா, நமஸ்காரம்.

அடியேன் தங்களின் அத்திமலைத்தேவன் படித்துக் கொண்டு இருக்கிறேன்.

அருமை. படிக்கப் படிக்கப் புதுமையான தகவல்கள்.

இதுவரை என்னைக் கவர்ந்த பகுதிகள்.

1. கரிகால் பெருவளத்தான் கல்லணையைக் கட்ட ஆரம்பிக்க உறுதுணையாக இருந்த எறும்புகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள்.

2. பெருமழையை நிறுத்த வேண்டி அத்திமலைத்தேவனிடம் வேண்டியவுடன் அவர் உடனடியாகச் செவி சாய்த்து அருளியது.

3. மழை வரும்பொழுது நீரை சேமித்து வைக்க அணை கட்டுவது மாதிரி இறைவன் அருள் மழை பொழியும் பொழுது அவற்றைத் தேக்கி வைக்க ஆலயங்களைக் கட்ட வேண்டும் என்ற விஷயம்.

4. இளந்திரையனும் கரிகாலனும் உரையாடும் இடங்கள்.

மேலும் பல பல விஷயங்கள். குறிப்பாக ஜிமிக்கி என்று பெயர் மருவியது.

வாழ்த்துக்கள் ஐயா..

**செந்தில் வடிவு**

அத்தி வரதனை தரிசிக்கமாட்டேன் என்று பிடிவாதமாக இருந்த என்னை அத்திமலைத்தேவன் நான்கு பாகங்களைப் படித்துவிட்டு காஞ்சி ஆலயத்திற்குச் சென்று குளக்கரையில் அமர்ந்து அத்திவரதனை உணர்ச்சியுடன் தொழுதேன்.

**செந்தில் வடிவு,** கல்லூரி பேராசிரியை
விழுப்புரம்

## SARAVANA KUMAR

பல்லவத்தின் ஜெயவர்மனாகப் பிறந்திருக்கமாட்டோமா என மனம் ஏங்குவதைத் தவிர்க்க முடியவில்லை. வீரத்தில் ஜொலித்த அவன், போதி தர்மாவாக மாறி ஆன்மிகத்திலும் தன்னிகரற்று விளங்கியவன். பல்லவத்தையும், அத்தி வரதனையும் காக்கவே அவன் பௌத்தத்தைத் தழுவித் துறவி ஆனான். ‘அத்திமலைத்தேவன்’ நாவலின் இரண்டாம் பாகத்தின் இறுதியிலும், மூன்றாம் பாகத்திலும் இதைப் பற்றிக் கூறியிருக்கிறார் அதன் ஆசிரியர் காலச்சக்கரம் நரசிம்மா.

ஜெயவர்மன், போதி தர்மாவாக மாறிவிட்டதை அறிந்த அவன் மனைவி சாயாதேவி தற்கொலை செய்துகொள்வதைப் படிக்கும் இடத்தில் என் கண்கள் கலங்கிப் போனது உண்மையிலும் உண்மை.

பல்லவத்தில்தான் எத்தனை மர்மங்கள், துன்பங்கள். வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த அவர்கள் எதிர்நோக்கிய சோதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

ஜெயவர்மன் என்கிற போதி தர்மாவுடன் காணாமல் போகும் அத்தி வரதரை, அதன் பிறகு அரசாண்ட அவரின் பெயரன் நரசிம்ம பல்லவன் பெரும் முயற்சிகளுக்குப் பிறகு கண்டு பிடிக்கிறான். ஆனால் வரதர் மீண்டும் மாயமாகி விடுவதோடு நாவலின் 3-ம் பாகம் நிறைவடைகிறது.

உண்மையில், இது புனையப்பட்ட கதை அல்ல.. வரலாறு. அத்திவரதனை அறிய முற்படும் ஒவ்வொருவரும் படித்துப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம்.

வியாழன் அன்று வெளியான புத்தகத்தை அன்றைக்கே வாங்கி வந்து படிக்க ஆரம்பித்தேன். இரண்டு நாட்களாக 200 சொச்சம் பக்கங்களை முடித்துவிட்டு, இன்றைக்கு விடுமுறை என்பதால் மீதி இருந்த 500க்கும் மேற்பட்ட பக்கங்களிலும் ஆழ்ந்து அனுபவித்துவிட்டேன். எழுத்துப் பணி, அலுவலகத்தின் சில வேலைகள் மற்றும் சொந்த வேலைகள் என வரிசைகட்டி நின்றவைகளை, தயவுதாட்சண்யமின்றி ஒதுக்கி வைத்துவிட்டு

முழு மூச்சாக நாவலை முடித்தேன். இடையில் நிறுத்த மனமே இல்லை. அத்தனை விறுவிறுப்பு.

நானும் ஆன்மிகத் தொடர்கள் எழுதியவனே. அந்த வகையில் சொல்ல வேண்டுமென்றால், நம் மனதை அப்போதைய காலகட்டத்திற்கு எடுத்துச் சென்றால் மட்டுமே எழுத்துகள் சரளமாக வரும் என்பதை நான் அறிவேன். இதைப் போல நாவலாசிரியர் தனது உள்ளத்தைக் கி.மு.வில் வைத்துத் தற்போது வரை அத்தி வரதனுடனே பயணம் செய்யும் பாக்கியசாலியே ஆவார்.

## முகநூல் விமர்சனம்
## T. V. VENKATESH, TRIPLICANE

அற்புதமான, விறுவிறுப்பான பாகம் 2. மற்ற பாகங்கள் இன்னும் விறுவிறுப்பாக · இருக்கும் என்றே தோன்றுகிறது. இதுவரை தெரிந்திராத சில வரலாற்று உண்மைகள் (மற்றோருக்குத் தெரிந்திருக்கலாம், எனக்குத் தெரிந்திருக்கவில்லை), ஆச்சரியம். குறிப்பாக, பல்லவ இளந்திரையனும், கரிகால் சோழனும் சகோதரர்கள், இருவரும் சேர்ந்தே அத்தியூரை விரிவுபடுத்தினார்கள் என்பது, கம்போடியாவில் தேவராஜ மார்க்கம் பற்றியது, இவை அனைத்தும் வரலாற்றுக் குறிப்புகளுடன் எழுதியிருப்பது, சந்தேகமின்றித் தெளிவாக்குகிறது..

சரியான சமயத்தில் ஒரிஜினல் அத்திவரதர் காணாமல் போயிருப்பது கதையில் ஆர்வத்தைத் தூண்டுகிறது..

மொத்தத்தில் இந்த இரண்டாம் பாகத்தை, சில நிர்ப்பந்தங்கள் உட்பட, நான் மெதுவாகப் படித்ததும் நல்லதுக்கே என்று தோன்றுகிறது.. அடுத்த பாகம் உடனே வெளிவந்துவிடுமே.. காத்திருக்க வேண்டாம்.

## P. N. MANI MUMBAI

Dear Kalachakkram Narasimmaa,

I have read all your books and your writing is different from other famous authors. I am totally impressed. You have dealt with various topics with great clarity and indepth study. I have informed Vanathi Pathipagam to send your books whenever they are published. Wishing you thebest and blessings.

**அனந்தலட்சுமி (வயது 98) ஆத்தூர்.**

*அனந்தலட்சுமி என்கிற 98 வயது மூதாட்டி, நல்ல கண்பார்வையுடன் தனது காரியங்களைத் தானே ஆற்றிக் கொள்கிறார். தீபாவளி அன்று அலைபேசியில் அழைத்து அத்திமலைத்தேவனைப் பாராட்டி எனக்கு ஆசி வழங்கினார். இந்த வயதில் அத்திமலைத்தேவன் பாகங்களை ஒரே மூச்சில் படித்துவிட்டேன் என்று மகள் பத்மாவதி மூலம் எனது அலைபேசிக்கு போன் செய்தார்.*

*தஞ்சை குழந்தைவேலு என்கிற முதிய விவசாயி தனது வயதைக் கருத்தில் கொண்டு, கடைசி இரு பாகங்களைப் படித்துவிட வேண்டும் என்கிற அவசரத்தில் இருக்கிறார். விரைவில் வெளியிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.*

*இம்மாதிரி வாசகர்களுக்கு என்னால் என்ன கூற முடியும்? தலையல்லால் கைமாறிலனே.*

'காலச்சக்கரம்' **நரசிம்மா.**

## ஐ. சென்று வா அத்திமலைத்தேவா!

*(ஆகஸ்ட் 17, 2019, அத்திவரதர் தனது அனந்தசரஸ் பொய்கையில் உள்ள இருப்பிடத்திற்கு மீண்டும் எழுந்தருளப்பட்ட அன்று, முகநூல், வாட்ஸப், ட்விட்டர் மற்றும் ஊடகங்களில் பரபரப்பாகப் பதிவிடப்பட்ட நான் எழுதிய வழியனுப்பு செய்தி)*

**சென்று வாரும் அத்திமலைத்தேவனே!**
**நெஞ்சங்களை யெல்லாம் அள்ளிக் கொண்டு,**
**நீர்மஞ்சத்தில் நித்திரை செய்வீராக!**
**அனந்தசரசை 48 நாள் கடைந்ததற்கே**
**நாடு தாங்கவில்லையே.**
**பாற்கடலை மீண்டும் கடைந்தால்?**
**குளத்தைக் கடைந்ததால் நீ வெளிவந்தாய்..**
**குளம் கடையப்பட்ட அதே நேரத்தில்**
**மனித மனங்களும் கடையப்பட்டு**
**ஆழத்தில் இருந்த பக்தியும் வெளிப்பட்டது!**
**வேரறுப்பேன் என்று வெறுத்தவனும் வந்தான்.**
**கோட்பாடில்லா கொடியவரும் வந்தனர்.**
**பேட்டை தாதாவும் வந்தான்.**
**தள்ளாடும் தாத்தாவும் வந்தார்.**
**கலைத்துறையும் வந்தது.**
**ரகளைத்துறையும் வந்தது.**
**சுக ஜனனமும் உன் சந்நிதியில் நிகழ்ந்தது.**
**மரணமும் உன் எல்லையில் நடந்தது.**
**முதல் தீர்த்தக்காரரும், டாஸ்மாக் தீர்த்தக்காரரும்**
**ஒரே வரிசையில் நின்றனர்.**
**'அத்தி.. அத்தி' என்று உலகம் முழுவதும்**
**இத்திக்கில் திரும்பி நோக்க வைத்துவிட்டு**

**கண்வளர இதோ புறப்பட்டுவிட்டாய்!**
**உன்னைக் கண்டவர் குதூகலிக்க,**
**காணாதவர் கலங்கி நிற்கின்றனர்.**
**தண்ணீரின் அடியில் இருந்து நீ அன்றாடம்**
**அவர்களை நோக்கப் போகின்றாய்**
**என்பதை அறியாதவரே கலங்குவர்..**

மௌரியம், குப்தம், சதவாகனம், பல்லவம், வாதாபி, சோழம், பாண்டியம், சேரம், சாளுக்கியம், கங்கம், ஹோய்சளம், முகலாயம், கோல்கொண்டா, விஜயநகரம், ஆங்கிலப் பேரரசு என்று ஆயர்பாடி காலம் முதல் எடப்பாடி காலம் வரை அனைத்தையும் பார்த்துவிட்டாய்.

மாற்றங்கள் அனைத்தையும் சந்தித்துவிட்டு, இன்று காஷ்மீர் மாற்றத்தையும் செய்துவிட்டு, மீண்டும் நீரடியில் சென்று புதுக்கணக்கை துவக்கப் போகிறாய்

**சென்று வா.. அத்திமலைத்தேவா!**
**பிழைத்துக் கிடக்க மாட்டேன்**
**என்பது தெரிந்திருந்தும்**
**சம்பிரதாய வார்த்தையைக் கூறுகிறேன்...**
**பிழைத்துக் கிடந்தால்**
**2059-ல் சந்திப்போம்!**

'காலச்சக்கரம்' **நரசிம்மா.**

**- நிறைவு -**





**காலச்சக்கரம் நரசிம்மா**
**என்கிற டி.ஏ.நரசிம்மன்,**

தி இந்து ஆங்கில நாளிதழில் நிர்வாக ஆசிரியராகப் பணிபுரிகிறார். அதற்கு முன்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் பணிபுரிந்தார். காலச்சக்கரம் என்கிற இவரது முதல் நாவல் பெரும் வரவேற்பினை பெற, அவரது பெயர் 'காலச்சக்கரம் நரசிம்மா' வாக மாறியது.

குமுதம், கலைமகள், அமுதசுரபி உள்பட பல பத்திரிகைகளில் சிறுகதைகளை எழுதியுள்ள காலச்சக்கரம் நரசிம்மா, ஆங்கில கட்டுரைகளையும், தொலைக்காட்சி தொடர்களையும் எழுதி உள்ளார். சன் டிவி, கலைஞர் டிவி, ஜெயா டிவி, வசந்த் டிவி மற்றும் தூர்தர்ஷனில் சின்னத்திரை தொடர்களையும் எழுதி வருகிறார். தொலைக்காட்சிகளில் அரசியல் கலந்துரையாடல்களில் பங்கு கொண்டிருக்கிறார்.

சங்கதாரா, பஞ்ச நாராயண கோட்டம், ரங்கராட்டினம், கர்ணபரம்பரை, அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா, குபேரவன காவல் போன்ற இவரது நாவல்களின் மூலம் தனக்கென்று ஒரு வாசகர் வட்டத்தையே கொண்டிருக்கிறார். அத்திமலைத்தேவன் இவரது ஒன்பதாவது நாவல். ஐந்து பாகங்களில் ஐந்தாம் பாகம் இது.

**சரித்திரம் + மர்மம், அரசியல் + மர்மம்,**
**ஆன்மிகம் + மர்மம், குடும்பம் + மர்மம், காதல் + மர்மம்**

என்கிற வரிசையில், அத்திமலைத்தேவன் சரித்திரம் + ஆன்மிகம் + அரசியல் + காதல் + மர்மம் என்று ஒரு பஞ்சாமிர்தமாக உங்களுக்கு சுவை தரப் போகிறது.

இவரது தந்தை திரைப்பட இயக்குனரும் திரைக்கதை வசனகர்த்தாவுமான சித்ராலயா கோபு. தாய் மறைந்த எழுத்தாளர் நாவலாசிரியர் கமலா சடகோபன். இவரது மகன் மற்றும் மகள் திரைப்படத்துறையில் பணிபுரிகின்றனர். மனைவி சுதா இவரது சரித்திர ஆராய்ச்சிகளுக்கு உதவி செய்து வருகிறார். குடும்பத்துடன் திருவான்மியூரில் வசித்து வருகிறார்.

வானதி பதிப்பகம்